
கல்கி
26.1.92
த்யசாயி
றப்பு
லர்



பாபா சொன்ன ஆன்மீகக் கதைகள்

●● ஸ்ரீராமன் இளவலோடும் சீதையோடும் வனவாசம் வருகிறான். மிகவும் ரம்யமான இடம் ஒன்றைத் தேடிப் பர்ண சாலை அமைக்க வேண்டும்.

''வேண்டிய எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டு உனக்கு விருப்பமான இடத்தில் கட்டு'' என்று தம்பிக்குச் சொன்னார் ராமன்.

பேரன லக்ஷ்மணனைக் காணவே இல்லை. எங்கே என்று தேடிக் கொண்டு போனாள் சீதை. அங்கே ஓர் இடத்தில் லக்ஷ்மணன் கண்ணீர் பெருக்கி அமர்ந்திருந்தான்.

பதறியவளாய் சீதாதேவி என்னவென்று விசாரித்தாள். ''என் இஷ்டப்படி இடம்பார்த்துக் கட்டு என்று சொல்லி விட்டாரே அண்ணா. எனக்கென்று என்ன விருப்பம் உண்டு தாயே? ஏன் அண்ணா என்னைப் பிரித்துப் பேசி விட்டார்?'' என்று கலங்கினானாம் லக்ஷ்மணன்.

சகோதரன் மீது கொண்ட உன்னதமான பக்திக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக் காட்டு ஏது?

●● கிருஷ்ண பரமாத்மா சயனத்தில் இருக்கும் போது அர்ஜுனன் வருகிறான். துரியோதனனும் வருகிறான். கால்புறம் நின்றவாறு அர்ஜுனன் கேட்கிறான். ''போர் வந்து விட்டது. கண்ணா நீதான் காப்பாற்ற வேண்டும்.''

கிருஷ்ண பகவான் பதிலே சொல்லவில்லை. துரியோதனன் கேட்கிறான். ''தருகிறேனே, என் மிகப் பெரிய சேனையெல்லாம் உனக்கே'' என்று அருளுகிறார்.


துரியோதனன் மகிழ்ந்து போன பிறகு அர்ஜுனன் பகவானைக் கேட்கிறான். ''ஸ்வாமி! என் கேள்விக்குப் பதில் தரவில்லையே?''

பகவான் சொன்னார். ''அர்ஜுனா! உனக்குத்தான் நானே இருக்கிறேனே.. நான் தான் எஞ்சின். மற்றதெல்லாம் கம்பார்ட்மெண்ட்ஸ் மாதிரி..''

சமகால உவமைகளோடு ஸ்வாமி சொல்கிற அழகுக்கு இது ஒரு துளி!

●● துரியோதனன் சபையில் துரோபதை அவமானத்துக்கு ஆட்படுகிறாள். துச்சாதனன் துகில் உரியும் போது பகவான் கண்ணனை அழைக்கிறாள் உதவிக்கு. ''துவாரகா நாதா பிருந்தாவன சஞ்சாரி'' என்றெல்லாம் கூப்பிடுகிறாள். கண்ணன் வரவேயில்லை.

'ஹிருதய வாஸி' என்று அவள் அழைத்த கணத்திலேயே கண்ணன் உதவிக்கு வந்து விடுகிறான்.



பகவான் கண்ணன் நம் இதயத்தில் இருப்பதையே பெரிதும் விரும்புகிறான் என்பது இதிலிருந்து தெரிகிறது. அவன் எங்கோ இருப்பதாக எண்ணி பூஜிக்காமல் இதயத்தில் இருத்திப் பூஜிக்க வேண்டும்.

– பகவான் ஸ்ரீ சத்ய ஸாயி பாபா உரையாடல்களின் போது சொன்ன இந்தக் கதைகளைச் சொன்னவர் ஸ்ரீசத்ய சாயி பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சம்பத்.



பிரதமரால் துவக்கப்பட்ட மருத்துவமனை...

பகவானின் அறுபத்தைந்தாவது பிறந்த நாளின் போது நவம்பர் 1990 இல் அறிவித்து விட்டார், 'அடுத்த ஆண்டுக்குள் இங்கு ஒரு முழு அளவிலான மருத்துவ மனை அமையப் போகிறது' என்று.

அண்மையில், பாரதப் பிரதமர் தலைமையில் இந்த மருத்துவமனை புட்டபர்த்தியில் தொடங்கி வைக்கப்பட்டு விட்டது! 'ஸூப்பர் ஸ்பெஷாலிட்டி' என்று மிகவும் உயர்ந்தரமானதாகக் கருதப்படுகிறது.

'சாதாரணமாக ஐந்து ஆண்டுகள் இராப் பகலாக உழைத்தால் கூட இவ்வளவு பெரிய மருத்துவமனையை உருவாக்குவது கடினம். ஓராண்டுக் காலத்தில் இதை நிறைவேற்ற முடிந்திருப்பது மனித முயற்சிகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது' என்கிறார் மேற்படி மருத்துவமனையின் உணவியல் துறைகளை ஏற்பாடு செய்து வடிவமைத்துக் கொடுத்துள்ள திருமதி மாயா மோகன்.

இருநூற்றைம்பது படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பவர் டெல்லி, அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திலிருந்த காஷ்மீரி டாக்டர் ஸஃபையா.

சென்னையின் கட்டடக் கலை நிபுணர் தாமஸ் ராஜனின் வரைபட நுட்பத் திறனில் உருவாகிய மருத்துவமனை இது. எல்லாத் துறைகளும் மிக நவீனமான கருவிகளால் நிரம்பியுள்ளன. லார்ஸன் அண் டியூப்ரோவின் ஒரு பிரிவான ஈ.ஸி.ஸி. இந்த மருத்துவமனையைக் கட்டிக் கொடுத்தது. இவ்வளவு பெரிய மருத்துவ மையத்தின் வரை படம் தயாரிக்க முப்பத்தாறு மணி நேரங்களே ஆனது என்பது ஒரு நம்ப முடியாத சாதனை.

அதே போல் திருமதி மாயா மோகனிடம் வந்து அவசர அவசரமாக உணவியல் திட்டங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கையை தாமஸ் ராஜன் கேட்ட போது அவரால் அவ்வளவு விரைவில் அதை முடித்துத் தர முடியும் என்று தோன்றவில்லை. வியப்பின் சிகரமான முறையில், அவர் தேடிய குறிப்புக்கள் எல்லாம் சிரமமின்றிக் கையில் கிடைக்க, அரை நாளுக்கும் குறைவான காலத்தில் அந்த மதிப்பீட்டு அறிக்கை தயாரானதாம்.

ஸ்பூன் முதல் பாய்லர் வரை உணவுத் துறைக்குத் தேவையான கருவிகள், சத்துணவுப் பொருள்கள் எல்லாவற்றையும் இரு

ஜாலம் போன்ற நிஜங்கள்!



பது நாள் அவகாசத்தில் வாங்கியாக வேண்டி யிருந்தது. போர்க்கால அடிப்படை என்கிற முறையில் எல்லாம் கிடைத்ததாம்.

தூறலைப் பொறுத்துக் கொண்டு அமர்ந்திருந்த பக்தர்களின் முன்னால் ஒரு தினம் ஸ்வாமியும் நனைந்து கொண்டே வந்து ஆசி நல்கினார்.

''இவர்களெல்லாம் சென்னையிலிருந்து வந்திருக்கிற டாக்டர்கள்'' என்று அறிமுகப்படுத்தப்பட்ட போது மாயா, தாம் டாக்டர் அல்ல, டயட்டீஷியன்தான் என்பதால் அசௌகரியமாக உணர்ந்தாராம். அதைப் புரிந்து கொண்ட மாதிரி பகவான் அவர் முன்னால் வந்து நின்று, ''ஆமாம்! நீயும் டாக்டர்தான் ஃபுட் டாக்டர்!'' என்றார்!

பல கோடி ரூபாய் செலவில் உருவான இந்த மருத்துவமனையின் ஒவ்வொரு துறையும் ஒன்றுக்கொன்று அதிகமான தொலைவில் உள்ளன என்பதால், மின்கலனில் இயங்கும் சிறு கார்கள் பொருள்களை எடுத்துச் செல்லப் பயன்படுகின்றன. உணவு தயாரிப்பில் எந்த நிலையிலும் கைபடாத முறையில் நீராவிச் சூட்டில் பக்குவப்படுத்துகிற முறை பின்பற்றப்படுகிறது.

உணவு, மருந்துகள், சர்ஜரி செலவுகள் எதுவுமே இல்லாமல், பாகுபாடற்று அனைவருக்கும் ஒரே சீராக இலவச மருத்துவ உதவியே தருவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். சாதாரணமாக இதய சர்ஜரிகளில் வால்வுகள் போன்றவற்றுக்கே பல ஆயிரம் ரூபாய் வேண்டும். அது லட்ச ரூபாய் ஆனாலும் இலவசம்தான் என்று சொல்லி விட்டாராம் ஸ்வாமி!

நவம்பரில் மருத்துவ மையம் தொடங்கி வைக்கப்பட்டபோதே நான் கைந்து பேர் இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். அவ்வளவு பேரும் வெற்றிகரமாகக் குணமடைந்திருக்கிறார்கள். டெல்லியின் அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்திலிருந்து டாக்டர் வேணுகோபால் தம் குழுவினருடன் வந்திருந்து இதைச் செய்திருக்கிறார்.

டயட் சார்ட்டுகள் தயாரித்து வைத்துக் கொண்டு, ஸ்வாமியின் ஆசி பெற்றால் நல்லது என எண்ணினாராம் மாயா.

எதிர்பாராமல் ஒரு செய்தி. ஸ்வாமியே மருத்துவ மையத்தைப் பார்வையிட வருகிறார் என்று சொல்கிறார்கள். அடுத்த பத்தாவது நிமிடத்தில் நேரே உணவியல் துறைக்கே வருகிறார். ''என்னம்மா? எல்லாம் சரியா?'' என்கிற போது சிலிர்த்துப் போய் டயட் சார்ட்டுகளைச் சமர்ப்பிக்கிறார். இயல்பான பிரசாதத் தூவலுடன் அவற்றை ஆசீர்வதித்துப் புன்னகை செய்கிறார் பகவான்.

மருத்துவ மையத்தில் இப்போதே ஏராளமான 92 மாடல் கருவிகளும் உயிர் காக்கும் கருவிகளும் வந்து குவியத் தொடங்கி விட்டன.

ஸ்வாமியிடம் ஓர் அயல் நாட்டுப் பெண்மணி வந்து ''ஐ வாண்ட் பீஸ்'' (எனக்கு அமைதி வேண்டும்) என்று கேட்டாராம். ஸ்வாமி சொன்னது, ''அதில் முதல் இரண்டு சொற்களை எடுத்து விடு, நான் என்கிற ஈகோவையும், தேவை என்கிற சுயநலத்தையும். அமைதி தானே வரும்.''

''பரிசுத்தமான அன்பும், அயராத உழைப்பும்தான் நிஜமான பக்தி என்பதை உணர வைக்கிறது பிரசாந்தி நிலையம்'' என்று சொல்கிறார் மாயா.

❑ விமானம் ஆகாயத்தில் பறப்பதற்குச் சக்கரம் வேண்டியதில்லை. ஆனால் விமானத்திற்குச் சக்கரம் இருக்கிறது இல்லையா? விமான தளத்தில் வந்திறங்கி பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு இந்தச் சக்கரங்களால் ஊர்ந்த பின்பே அது வானத்தில் பறக்கும்.

பரம ஞான நிலையில் பறக்கும் மகான்களும் இதே போல் நம்மிடம் வந்து நம்மை அழைத்துக் கொண்டு நம் வழியிலேயே சிறிது ஊர்ந்து சென்று காட்டவே சாஸ்திரங்களை அனுஷ்டிக்கிறார்கள். பிறகு நம்மையும் உயர்நிலைக்குத் தூக்கிச் செல்கிறார்கள்.

– பாபா பொன்மொழி



– எஸ். வர். எம்



☛ சென்னையில் பக்தர்களுக்கு ஆசி...

மானிட சேவையே மாதவ சேவை

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் அறுபதாவது ஆண்டு விழாவை எவ்விதமாகக் கொண்டாடலாம் என்று அனைத்து பக்தர்களும் ஓர் உலக மகா நாட்டினைக் கூட்டி விவாதித்தனர். ''மானிட சேவையே மாதவ சேவை'' என்று போதித்த பகவான் பாபாவிற்கு சேவை மூலமாகவே தங்கள் அன்பைக் காணிக்கையாகச் செலுத்த விரும்பினர். இந்தியா முழுதும் வெவ்வேறு மாகாணங்களில் 600 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அவ்விடம் வாழும் ஏழை மக்களுக்குத் தொண்டு செய்து அதையே பாபாவுக்கு அர்ப்பணம் செய்வதாக முடிவெடுககப்பட்டது. ஆனால் இந்த மகாநாட்டின் முடிவில் சொற்பொழிவாற்றிய பகவான் பாபா 600 கிராமங்களுக்குப் பதிலாக 6000 கிராமங்களைத் தத்து எடுத்து சேவையில் ஈடுபடலாம் என்றார்.

முதலில் மலைப்பாகத்தான் இருந்தது. ஆனால் கூடவே பாபாவின் அருள் இருக்க எதுதான் சாத்தியமற்றது என்ற நம்பிக்கையும் பிறந்தது. பாபா பக்தர்கள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பற்பல கிராமங்களைத் தேர்ந்தெடுத்துச் சேவையில் ஈடுபடலாயினர். தமிழ்நாட்டில் மட்டும் 300க்கும் அதிகமாக கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. சென்னையிலேயே 23 குடிசைப் பகுதிகள் தத்து எடுக்கப்பட்டன. இங்கெல்லாம் பல்வேறு சேவைப் பணிகள் நடைபெறுகின்றன. நன்கு தேர்ச்சி பெற்ற சேவாதளத் தொண்டர்கள் தமக்கென்று ஒதுக்கப்பட்ட பகுதிகளில் குடிசைவாழ் மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அதனை நேசமாக மாற்றிச் சேவை செய்து வருகிறார்கள்.

முக்கிய நோக்கம் என்னவெனில், இப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் பெற உதவி செய்வது, சிறுவர்களுக்குக் கல்வி பயில ஊக்கம் ஊட்டுவது, இளைஞர், முதியோர் என்ற

வேறுபாடு இன்றி, அனைவரும் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேறத் தக்க சூழ்நிலைகளை உருவாக்குவது; அடிப்படை மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பது போன்றவை.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா தன் பக்தர்களுக்குச் சில கடினமான நிபந்தனைகளும் விதித்துள்ளார். சேவாதளத் தொண்டர்கள் எக்காரணம் கொண்டும் யாரிடமிருந்தும் பொருளுதவி கோரிப் பெறுதலோ அல்லது அளிப்பதோ கூடாது. எந்தக் கிராமத்திலும் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அந்த ஊர் விவகாரங்களிலோ அல்லது அரசியலிலோ தலையிடக் கூடாது. தாங்கள் சேவைப் பணியில் ஈடுபட்டிருக்கும் போது அந்தக் கிராமத்து மக்களையும் அச் சேவைப் பணியில் ஈடுபடுத்துதல் அவசியம். எத்தகைய சேவைப் பணி ஆற்றினாலும் அங்கு வாழும் மக்கள் ஆன்மீக மறுமலர்ச்சி பெறச் செய்வதே முக்கிய குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த ஆன்மீக மறுமலர்ச்சி எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும்.

பகவான் பாபா, இந்த கிராம சேவையை அவ்வப்போது நேரில் சென்று ஊக்குவிப்பதுடன் அன்பே தெய்வம் என்றும் போதித்து வருகிறார். எந்தச் சேவையும் அன்பற்றதாக இருந்தால் அது தெய்வீகத் தன்மையற்றது என்பது அவர் உறுதி. எல்லா மதத்தினரையும் ஒன்று சேர்த்து, இத்தகைய சேவைப் பணியில் ஈடுபடுத்தி இருப்பது பகவான் பாபாவின் மகிமையாகும். ஸ்ரீசத்ய சாயி ஸேவா நிறுவனங்களின் சின்னத்தில் ஐந்து மதங்களையும் காண்பித்துள்ளது இத் தத்துவத்தைக் குறிக்கும்.



ஒரு சேரியை மேற்கோள்காட்டி அங்கு நடப்பனவற்றை விவரித்தால் 6000 கிராமங்களில் சாயி சேவை செயல்படும் முறை விளங்கும். சென்னை மாநகரில் தியாகராய நகரில் பாரதி நகர் குடிசைப் பகுதி பக்தர்களால் தத்தெடுக்கப்பட்டது. சாயித் தொண்டர்கள் முதன் முறையாக அங்கு சென்ற போது சுகாதாரத்திலும் கல்வியிலும் அவர்கள் மிகவும் பின்தங்கியிருந்தனர். ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படித்த குழந்தைகள் யாருமில்லை. அநேகர் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் செல்ல இயலாமல் கூலி வேலையில் ஈடுபட்டு வாழ்ந்து வருவதைக் காண முடிந்தது.

முதல் காரியமாக இங்கு இருந்த தேவி முத்துமாரி அம்மன் கோயிலைப் புதுப்பித்து விக்கிரகம் பிரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்டது. இந்த ஆலயமே இந்தப் பகுதியின் ஆன்மீகக் கேந்திரமாக, பஜனைப் பாடல்கள் கற்றுத் தரப்பட்டன. கோஷ்டி கானத்தில் மனங்கள் ஒன்றுபட்டன. மார்கழி மாதம் முப்பது நாட்களும் பெண்டிர் தனியே, பின் ஆடவர் தனியே நாம

☛ பிரசாந்தி நிலையத்தில் 'ஓணம்' பண்டிகை



சங்கீர்த்தனம் செய்து கொண்டு ஒவ்வொரு வீதியையும் சுற்றி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த வீதி பஜனை மற்ற மாதங்களில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறுகிறது. இதைத் தவிர பிரதி வெள்ளிக் கிழமை பெண்டிரும் பிரதி சனிக்கிழமை ஆடவரும் பஜனை நடத்து கிறார்கள். பாரதி நகரில் சிறுவர் முதல் முதி யோர் வரை ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது ''ஸாயிராம்'' என்று கூறியே வணக்கம் செலுத்துகிறார்கள்.

அந்தணர்களாகப் பிறந்தவர்கள் மட்டுமே காயத்ரி ஜபம் செய்யலாம், வேதம் ஓதலாம் என்ற நிலை மாறி இங்கு வாழும் பின்தங்கிய இனத்தைச் சார்ந்த சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து சீராக சரியான உச்சரிப் புடன் வேதம் கூறுவதைக் கேட்க மெய் சிலிர்க்கும். ஸாயி சேவாதளத் தொண் டர்கள் விடாமுயற்சியுடன் கல்வி போத னையில் ஈடுபட்டு அதற்கான பலனைக் கண்கூடாகக் காண்கிறார்கள். இந்த வருடம் இந்தச் சேரியில் இருந்து மூன்று மாண வர்கள் கல்லூரிக் கல்விக்கான தேர்ச்சி பெற்று, அறிவியல் படிப்பு படித்து வருவது குறிப்பிடத்தக்கது. மற்ற மாணவர்கள் பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளுக்கான கல்வி பயின்று வருகின்றார்கள்.

தேவி முத்துமாரியம்மன் ஆலயத்தின் பக்கத்தில் அமைந்திருக்கும் ஒரு சிறு மளிகை கடை நடத்துபவர் ஒரு கிறித்தவர். கடந்த ஆறு வருடங்களாக இக் கோயிலுக்கு இந்த அன்பர் உதவியால் இரவும் பகலும் மின்சக்தி கிடைத்து வருகிறது. மேலும் ஸாயி தொண்டர்களுக்குச் சேவைப் பணி யிலும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

ஆலயத்தை ஒட்டி உள்ள ஒரு டீக் கடையை ஒரு முகம்மதியர் விலைக்கு வாங்கினார். அவர் அங்கு ஒரு இறைச்சிக் கடை நடத்தத் திட்டமிட்டு இருந்தார். இச் சேரியில் வாழும் தாய்மார்கள் ஒன்றுகூடி இதற்கு ஆட்சேபணை தெரிவிக்க, இறைச் சிக் கடை வைப்பது என்ற நோக்கம் மாறி, தற்போது அங்கு இலவச மருத்துவமனை நடைபெற்று வருகிறது. இதனை நடத்து வது ஸாயி பக்தர்களே.

இவ்வாறு இங்கு மதங்களுக்கு அப் பாற்பட்டு மனிதாபிமானம் செயல்படு கிறது என்றால் பாபா போதிக்கும் அன்பு தான் அடிப்படை.


சேவா தளத் தொண்டர்களிடம் ''நிஜ மாகவே நீங்கள் எடுத்துக் கொண்ட முயற்சி யில் வெற்றியடைந்ததாக நீங்கள் கருது கிறீர்களா?'' என்று கேட்டுப் பாருங்கள்.

''ஏதேனும் ஒருநாள் சில மணி நேர மாகிலும் இப் பகுதிக்கு நீங்கள் விஜயம் செய்து இங்குள்ள மக்களுடன் பேசிப் பாருங்கள். சிறுவர் செய்யும் பஜனைகளில் கலந்து கொள்ளுங்கள். இதில் உங்களுக்குக் கிடைக்கும் அனுபவமே எங்கள் முயற்சி வெற்றியா தோல்வியா என்பதை உங்க ளுக்கு உணர்த்தும். நாங்கள் ஏதும் கூற வேண்டியதில்லை'' என்று பதில் கிடைக் கும்!

– வீ. ஸ்ரீநிவாசன்

மூன்று தெய்வங்கள் = ஒரு குரு

உடல் அளவிலேயே வளர்ச்சி பெற்ற ஒருவன், குருநாதரை அடைந்த பிறகுதான் உள்ளத்தில் வளர்ச்சியைப் பெறுகிறான். அவனுக்கு உள்ளத்தில் அறிவு விதையை ஊன்றி முழுமையான இரண்டாவது பிறப்பை அளிக்கும் பிரம்மா குருநாதர்தான்.



விதையை ஊன்றி விட்ட விவசாயி அத்துடன் நின்று விடுவதில்லை. படிப்படியாக அதன் வளர்ச்சியைக் கவனித்துக் கொள்கிறான். அது போன்று பாதுகாக்கும் தொழிலையும் கவ னிக்கும் குருநாதர் - விஷ்ணுவின் காத்தற் தொழிலையும் செய் கிறார்.

பயிரின் வளர்ச்சியில் குந்தகம் ஏற்படுத்தும் களைகளைப் பிடுங்கி எறிகிறான் விவசாயி. பயிரின் ஒரு பகுதியில் நோய் ஏற்பட்டால் அதை வெட்டி எறிந்து விடுகின்றான். இந்த அழிக்கும் தொழில் சிவனுக்கு உள்ளது. அதே போல மாணவனுக்குத் தீய சகவாசமும் கெட்ட பழக்கங்களும் ஏற்பட்டால் அதை அறவே நீக்கி அழிப்பவர் குரு. மூன்று தெய்வங்களின் தொழில்களையும் செய்பவராக விளங்குகிறார் குருநாதர்.

– சத்யசாயி

தொகுப்பு : சைதை ஆர். முரளி

A humble prayer
to the Lotus feet of
our Swami:

"In search of wealth in the world,
Thou art the only wealth,
I have found.
I sacrifice myself unto Thee.
In search of someone to be loved,
Thou art the only one beloved,
I have found.
I sacrifice myself unto Thee.
Nothing for me;
no matter whether the thing is good
or bad or indifferent,
I do not care for it.
I sacrifice all unto Thee.

"Swami Vivekananda'

நாட்டுக்கே வழிகாட்டும் சத்யசாயி பல்கலைக்கழகம்

சத்ய சாயி பல்கலைக் கழகத்தில் பிரதமர் ஆற்றிய பட்டமளிப்பு விழாச் சிறப்புரை...

பகவான் பாபா என் மீது அருள் பொழிய முடிவெடுத்ததே நான் இங்கு வரவழைக்கப்பட்டதற்குக் காரணமென நான் நம்புகிறேன். இந்தப் பட்டமளிப்பு விழா ஒரு வியாஜமே! பகவான் பாபாவின் அருள் எனக்கு மட்டுமின்றி இந்த நாட்டிற்கே தற்சமயத்தில் அத்தியாவசியத் தேவையாகும். இந்த ஸ்ரீ சத்தியசாயி பல்கலைக் கழகம் முறைசார்ந்த கல்வியுடன் ஆன்மீக கலாசார போதனைகளும் அளித்துவரும் ஒரு ஈடுஇணையற்ற முதல் தரமான கல்விக் கூடமென்பதில் ஐயமில்லை. இங்கு கற்றுத் தரப்படும் கல்வித் திட்டத்தில் ஆன்மீகமும் நீதி நெறி பற்றிய போதனைகளும் அடிப்படையாக இழையோடுகின்றன. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்ற ஐந்து மனித மேம்பாட்டுக் குணங்களை பாபா உணர்த்தி வருவதை ஆதாரமாகக் கொண்டு உலகின் எப்பாகத்தைச் சார்ந்தோருக்கும் உதவும் வகையில் இங்கு கல்வித் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குணமேம்பாடுகளே உலகின் பல முக்கிய மதங்களின் கோட்பாடுகளாக உள்ளதால் இது எல்லோரையும் ஒருங்கிணைக்கும் சக்தியாக விளங்குகிறது.

இங்கு சூழ்நிலை மிகவும் அமைதியாகவும், புனிதமாகவும், தூய்மையாகவும், ஆன்மீகப் பின்னணியுடன் ஒழுக்கச் சிறப்பு மிக்கதாகவும் உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ஆதிகாலத்தில் ரிஷிகள் தங்களது சீடர்களுக்குக் கல்வி கற்றுத் தந்தனர். அதனால்தான் நான் இங்கு இந்த விழாவில் கலந்து கொள்ள வந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முக்கிய குணப் பண்புகள் மறைந்து வருவதைப் பற்றி தேசாபிமானிகள் பலரும் கவலை கொண்டுள்ளனர். ஆகவே ஒற்றுமையுணர்வையும் நேர்மையையும் வளர்க்கும் கல்வி முறையே மனிதனின் முழுமையான ஆளுமையை வெளிக்காட்டுவதற்குத் தக்கதென யாவரும் ஒப்புக் கொள்வர். நமது பண்டைய கலாசாரத்தின் அடிப்படையே மனிதனின் முழுமையான ஆளுமையை வெளிக்காட்டுவதாகும்.

நமது கல்வித் திட்டம் பொதுவாக உலகெங்கும் ஒப்புக் கொள்ளப்பட்ட மனித மேம்பாட்டுக் குணங்களைக் குறிக்கோளாகக் கொண்டு தீட்டப்பட்டுள்ளதே. கல்வித் திட்டம் எவ்வளவு சிறப்பாக இருப்பினும் அதை நடைமுறையில் கடைப்பிடிக்காவிடில் அது வெறும் காகிதத் திட்டமாகவே இருந்து விடும்.

வகுப்பில் பாடம் நடத்துவதிலேயே குணமேம்பாட்டைப் பற்றி போதனை செய்வதை ஒரு பகுதியாகக் கொண்டு, வாயளவில் விளக்குவதில் பயனில்லை. இந்த குணமேம்பாட்டை அன்றாட வாழ்வில் ஆசிரியர்களும் மாணவர்களும் பின்பற்றுவதுதான் சரியான வழியாகும். இந்தக் குணமேம்பாட்டைச் சார்ந்த திட்டத்தில் போதிப்பதற்கும் பின்பற்றுவதற்கும் இடையே எவ்வித இடைவெளியும் இல்லாதிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்தாமே மனித மேம்பாட்டு குணத்தைக் கொண்டவராயிருந்தால்தானே மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருந்து, அவர்களும் அதைப் பின்பற்றச் செய்ய முடியும்! சாயிபாபா அவர்கள் ''கல்வி என்பது எழுத்தறிவு பெறுவது அல்ல!'' என்று கூறி வருகிறார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ராஜமுந்திரியில் பாபா அவர்கள் கூறியது எனக்கு ஞாபகம் வருகிறது. ''புஸ்தகத்தில் உள்ளதை மூளையில் ஏற்றி விட்டால் போதாது. அதனால் எந்தப் பயனும் இல்லை. புத்தகத்தில் உள்ளது போலவேதான் அதுவும். அதில் உள்ளதை நடைமுறையில் பின்பற்றுவதுதான் உண்மையான கல்வி அறிவு பெறுவது'' என்று கூறினார். இதுவே வாழ்க்கையைப் புனிதமாக்கும்.

பி.வி. நரசிம்மராவ்

விஞ்ஞான முன்னேற்றங்களும் உலக விஷய நாட்டங்களில் அதிகமாக ஈடுபட வைக்கும் சுகபோக சாதனங்களும் வாழ்க்கையின் புனிதத் துவத்தைப் பாழாக்கி விட்டன. 'Communication System' என்ற தொலைதூரத் தொடர்புச் சாதனங்களின் மூலம், உலகில் ஓர் இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செய்தி அனுப்பும் வசதிகள் பெருகி உள்ளன என்பது உண்மையே. ஆனால் அருகில் உள்ள அண்டை வீட்டாருடனும் சுற்றத்தாருடனும் நண்பர்களுடனும் கொண்டிருந்த பாச உணர்வும் பரிவும் இப்போது குறைந்து விட்டது துர்பாக்கியமே. இதைத் தடுத்து மக்களிடையே மனித மேம்பாட்டுக் குணங்கள் பெருகு

விஞ்ஞான போதனைகளுக்கான கருவிகள் மிகவும் நவீனமானவையும் மற்ற பல பல்கலைக் கழகங்களில் உள்ளவைகளை விடச் சிறந்தனவாயும், கம்ப்யூட்டர் மையம் நம் நாட்டில் உள்ள சிறந்த கல்விக் கூடங்களில் உள்ளவைகளுக்கு ஈடாகச் சிறப்பாக இருப்பதையும் பார்த்து வியப்புற்றேன். இவ்வளவு உயர்ந்த ரகமான விஞ்ஞான சாதனங்களுடன் உயர்மட்டக் கல்வி அளிக்கப் படுவதுடன் பாரம்பரிய பாரத கலாசாரமும் ஆன்மீகமும் போதிக்கப்படுவது ஓர் இலட்சிய பாடத் திட்டமாக விளங்குகிறது. இதனால் மாணவர்கள் பௌதிக, மானசிக, ஆன்மீக முன்னேற்றங்களை ஒருங்கே பெற வாய்ப்புள்ளது.



வதற்கு ஆவன செய்ய வேண்டியது இன்றைய நிலையில் அத்தியாவசியமாகும். இப் பணியை கல்விக் கூடங்களிலிருந்தே தொடங்க வேண்டும். பாரம்பரிய மதிப்பீடுகளும் (Traditional values) நவீன கல்வி அறிவும் (Modern knowledge) இணைந்ததொரு திட்டம் இன்றைய தேவை. டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ளதைப் போல் பாரம்பரிய மேன்மையுடன் கூடிய மதிப்பீடுகள் மரத்தின் ஆணிவேர் போன்றவை. வேரை வெட்டி விட்டால் மரம் வளர முடியாது. புதுமையான கல்வி அறிவு போதிப்பதுடன் பாரம்பரிய கலாசாரத்தையும் கட்டிக் காக்க வேண்டும்.

இந்தப் பணியை சத்தியசாயி பல்கலைக்கழகம் மிக அருமையாகச் செய்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இங்கே

பல்கலைக் கழகங்கள் அறிவை ஊட்டுவனவென்பது யாவரும் அறிந்ததே. ஆனால் உண்மையான அறிவு என்பது மெய்யறிவே. மகாத்மா காந்தி கூறியது போல் நல்லது எது தீயது எது என்று பகுத்தறியும் தன்மையை ஊட்டி, நல்லதைக் கடைப்பிடித்து, தீயதைத் தவிர்க்கும் நிலையை மாணவரிடையே ஏற்படுத்தாத கல்வித் திட்டத்தை கல்வித் திட்டமென்றே கூற முடியாது.

தற்போது இந்தியாவில் அரசியல், சமூக சூழ்நிலை, பண்டைய பாரம்பரிய கலாசாரத்தையும் வெகு காலமாகக் கடைப் பிடித்து வந்துள்ள குணமேம்பாட்டுக் கொள்கைகளையும் தகர்த்து விடுவதாகவே உள்ளது. இதை நாம் அன்றாடம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். பரஸ்பரத்

தோழமை உணர்வும், சகோதரத்துவ அன்பும், நாளுக்கு நாள் நம் நாட்டில் குலைந்து வருவதைக் காண்கிறோம். இந்த நிலையை நீடிக்க விடுவது நாட்டின் நல னுக்கு உகந்ததல்ல. நம் நாட்டின் பல் கலைக் கழகங்களில்தான் இதைத் தடுத்து நிறுத்தும் வகையில் சீர்திருத்தப் பணி துவங்க வேண்டும். இதைச் சொல்வது எளிது, செயலாக்குவது கடினம் என்பதை யும் நான் உணர்ந்துள்ளேன். இந்தியாவில் உலகிலேயே மிகப் பெரிய உயர்மட்டக் கல்விக் கூட அமைப்பு உள்ளது. உயர் மட்டக் கல்வி வசதிகள் மிக வேகமாக அதிகரித்து வந்துள்ளன. பல்கலைக் கழகங் களின் எண்ணிக்கை நம்நாடு சுதந்திர மடைவதற்கு முன் 20 ஆக இருந்தது. இன்று 177 ஆகப் பெருகி உள்ளது. கல்லூரிகள் 700 ஆக இருந்தது. இப்போது 7000 ஆகப் பெருகி உள்ளன. பட்டப் படிப்பு மாண வர்கள் இரண்டு லட்சத்திலிருந்து இன்று நாற்பத்தி இரண்டு லட்சமாகப் பெருகி உள்ளனர். இவ்வளவு பிரும்மாண்டமான அளவில் உள்ள உயர்மட்டக் கல்வித் திட் டத்தை இப்போதுள்ள மேம்பாடுகளில் லாத நிலையிலிருந்து முழுமையாக மனித மேம்பாட்டுக் குணங்களை வளர்க்கும் நிலையங்களாக மாற்ற வேண்டிய மகத் தான பொறுப்பு நமக்கு உள்ளது. இதைச் சாதிக்க எடுக்க வேண்டிய மகத்தான முயற்சி ஒரு சவால் என்பது உண்மையே. ஆனால் நமக்கு இந்த இருள் சூழ்ந்த கட்டத்தில், நம்பிக்கை ஒளி அளிக்க இந்த சத்திய சாயி பல்கலைக் கழகத்தின் உதாரணம் நம் கண்முன்னே உள்ளது. இதை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் இயக்கத்தின் அடிப் படையை நன்கு கண்டறிந்து, இதே போல் மற்ற கல்விக் கூடங்களையும் இயங்கச் செய்ய முயல வேண்டுமென்பது எனது அவா. இங்கு வந்துள்ள மனித வளத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கை நான் கேட்டுக் கொள்வது, இந்த கல்விக் கூடத்தின் வழிமுறைகளை நன்கு தெரிந்து கொண்டு, இதன் அடிப்படையில் கல்வித் திட்டத்தை மேம்பாடுள்ளதாக உருவாக்க வேண்டு மென்பதே. கல்விக் கூடங்களில் மாறுதல் செய்ய வேண்டியது அவசரத் தேவை. இதை எவ்வளவு துரிதமாகச் செய்கி றோமோ அவ்வளவுக்கு நாட்டு நலனும் சிரடையும்.

இரண்டு துறைகளில் சீர்திருத்தம் தேவை. இதை உடனேயே காலதாமத மின்றிச் செய்தல் வேண்டும். முதலாவது “Curriculum reform” பாடத் திட்ட சீர்திருத் தம். ஆன்மீகமும் அறிவிய லும் ஒருங் கிணைந்த திட்டமாக மேம் பாட்டு குணங் களை வளர்க்கும் போதனைகளுடன் உயர் மட்டக் கல்வித் திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

மாறுதல் செய்ய வேண்டிய மற்றொரு துறை (Examination system) பரீட்சைகள் நடத்தும் முறையே. நமது நாட்டில் தற் போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறை யில் தேர்வின் போது ஊழல்களும், தேர்வு எழுதும் இடங்களில் மாணவர்கள் காப்பி யடிப்பதும் ஆசிரியர்களை பயமுறுத்து வதும் பலாத்கார தாக்குதல்களும் நிகழ் கின்றன. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் கூட முன்பே கேள்வித் தாள்கள் வெளி வருவது போன்ற ஊழல்கள் நடைபெற் றுள்ளன. ஆசிரியர்கள் மதிப்பெண் போடு வதிலும் ஊழல்கள் நடைபெறுகின்றன. இவைகளைத் தடுக்க போலீஸாரின் துணையை நாடி போலீஸ் பாதுகாப்பு அளிப்பது சரியான வழி அல்ல. இந்த அவல நிலையைத் தடுத்து நிறுத்தத் தேர்வு முறையில் மாறுதல் ஏற்படுத்த வேண்டியது அவசியம். இப்படிப்பட்ட மாறுதல், விரை வில் செய்யாமற்போனால் கல்வித்தரக் குறைவும், மாணவர்களின் ஒழுக்கச் சீர் கேடும் தவிர்க்க முடியாமற் போய் விடும் அபாயம் உள்ளது.

நான் குறிப்பிட்டுள்ளது இரண்டு துறைகள் மட்டுமே. இவைகளில் சீர் திருத்தம் செய்து முன்னேற்றம் கண்டால் மற்ற துறைகளும் சீர்ப்படும் என்ற நம்பிக்கை உள்ளது.

இந்தப் புனிதக் கல்விக் கூடத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் மேலும் மேலும் சிறப்பாகப் பணியாற்றி, எல்லோ ருக்கும் எடுத்துக்காட்டாக வெற்றிகரமாகத் திகழ வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், மிகவும் பணிவுடன், இந்த கல்விக்கூடத்தின் வளர்ச் சியை ஆராய்ச்சி உணர்வுடன் பின்பற்றி, இதன் ஒளியையும் வழிமுறைகளையும் இந்தியாவின் மற்ற கல்விக் கூடங்களில் பின்பற்ற முயற்சிகளை மேற்கொள்ள உறுதி பூண்டுள்ளேன்.

ஜெய்ஹிந்த்!

சாயி சரணம் !

❑ நாம் மனத் துணிவைத் தேடிப் பெற வேண்டும். அதன் பிறகு பெற வேண்டியது போதும் என்ற மனம். அப்புறம் வேண்டியது ‘தன்னை’த் தியாகம் செய்தல். இறுதியாக வேண்டியது தன்னையே அறியும் பக்குவ நிலை.

– பாபா



☛ ப்ரசாந்தி நிலையத்தில் தேர்த் திருவிழா...



☛ வானக் காட்சியகம்

வெற்றிடத்தில் பிறந்
சுவர்க்கம்

வெற்றிடத்தில் கையை வீசி பகவான் 'உருவாக்கிக்' காட்டுகிற விபூதி, பதக்கங்கள், நவரத்தினங்கள், சிவலிங்க உருவங்கள் பற்றியெல்லாம் பலர் நிறையவே கூறக் கேட்டிருக்கிறோம். படித்திருக்கிறோம். பலர் நேரில் பார்த்தும் மெய் சிலிர்த்திருக்கிறார்கள்.

இந்த அற்புதங்களையெல்லாம் விட மிகப் பெரிய அற்புதம் ஒன்று உண்டு. அதனை புட்டபர்த்திக்குச் செல்லும் எல்லோருமே காணலாம். புதிதாக உருவாகியிருக்கும் பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள 'இலவச' மருத்துவமனையாகட்டும், ஒரு சிறு குன்றில் கம்பீரமாக நிற்கும் 65 அடி உயர அனுமன் உருவச் சிலை ஆகட்டும், கலை நுட்ப அழகுகளோடு கட்டப்பட்டுள்ள மண்டபங்கள், வித்யாகிரியின் மீது உருவாகியுள்ள கண்காட்சி மையம், பல்கலைக் கழக நிர்வாக அலுவலகம், ஊருக்கு வெளியே அமைந்துள்ள வானக் காட்சியகம் (Planetorium), கல்லூரிக் கட்டடங்கள், லட்சம் பேர் அமர்ந்து காணக்கூடிய ஆடிட்டோரியம் எல்லாவற்றையுமே கூட பகவான் ஓர் அருட்கை அசைப்பில் வெறும் சூனியத்திலிருந்து உருவாக்கித் தந்திருக்கிறாரோ என்று பிரமிக்க வைக்கிறது. ஆந்திர மாநிலத்தில் வறட்சிக்குப் பெயர் போன பகுதியில் சின்ன கிராமமான புட்டபர்த்தியை ஒரு சர்வதேச நகரமாக ஆக்கிக் காட்டியுள்ள தெய்வீக ஆற்றலுக்கு யாருமே தலைவணங்கித்தான் ஆக வேண்டும்.

பல்வேறு நாகரிகங்களின் கலப்பு இருப்பினும் இங்கே அமைதி அரசோச்சுகிறது. யாரும் ஒழுங்கு மீறுவதில்லை. தூய்மை இங்கே தெய்வமாகப் போற்றப்படுகிறது. யோகத்தில் அமர்ந்துள்ள சிவபெருமான், குழலூதும் கண்ணன், பகவான் இயேசு, ஜொராஷ்டியர் சிலைகள் அனைத்தும் சேர்ந்த ஓர் ஆன்மீக மையமாக இதை உருவாக்கியிருக்கிறார்கள்.

''நீ எந்த வகுப்பைச் சேர்ந்தவன் என்ற கேள்விக்கு எப்படிப் பதில் சொல்ல வேண்டும் தெரியுமா? 'நான் ஒழுக்கம் என்ற வகுப்பைச் சேர்ந்தவன், அன்பு மதமே என் மதம்' என்று பதில் கூறுங்கள்'' என்கிறார் பகவான் பாபா. இந்த மைய இழையோடுகிற கல்வி முறையும் ஸ்வாமியின் அருள் நோக்கால் உலகப் புகழ்பெற்று விளங்குகிறது.

பல்கலைக் கழக மதிப்புப் பெற்ற (DEEMED UNIVERSITY) 'ஸ்ரீ சத்யசாயி இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹையர் லர்னிங்' இங்கே நவீனக் கல்வி முறைகளோடு, பாரம்பரியம் மிக்க பெருமைகளையும் கைகோத்து இணைத்துக் கொண்டு பெருமித நடைபோடுகிறது.

வெறும் பாடப் புத்தகங்களை உருப் போடுவதோடு இங்கு கடமை முடிவதில்லை. வாரத்தில் ஆறு முழு வேலை நாட்கள். ஞாயிற்றுக் கிழமைகளிலும் சமூகப் பணி ஆன்மீகப் பணி என்று ஈடுபடுத்திக் கொண்டாக வேண்டும். மிகக் குறைவான விடுமுறை நாட்கள், மிகக் கடுமையான ஒழுங்கு முறைகள் என்பதே ஸ்ரீ சத்யசாயி கல்வி நிறுவனங்களின் அசைக்க முடியாத பலம்.

உடலுழைப்பும், உடல் ஆரோக்கியமும் கல்வியில் முதலிடம் பெறுகின்றன. உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் கல்வியும் ஆரோக்கியமானதாக இருக்க முடியும் என்று நம்புகிறார்கள். பெங்களூர்

ஒயிட் ஃபீல்டில் உள்ள ஆடவர் கல்லூரியும், அனந்தப்பூரில் உள்ள மகளிர் கல்லூரியும், புட்டபர்த்தியில் உள்ள கல்லூரியும் இணைந்தது இந்தப் பல்கலைக் கழகம்.

வழக்கமான பாடங்களைத் தவிர, விளையாட்டு, உடல்திறப் போட்டிகள், யோகாசனம், சவர்சமயப் பிரார்த்தனை, தியானம், நடத்தை முறை, சமுதாயப் பணி என்று பல துறைகளிலும் மாணவர்களுக்கு மதிப்பெண்கள் தரப்பட்டுத் தர நிர்ணயம் செய்யப்படுகிறது. இங்கு நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த கல்வி முறை (INTEGRATED EDUCATION) யின் ஒரு முக்கியமான அங்கம் இது. மத ஒற்றுமையும் சுய சார்புக் கல்வியும் முக்கியமாகக் கருதப்படுகின்றன.

விடுதி உணவுகளைத் தவிர வெளியில் சென்று பிஸ்கெட் போன்றவை வாங்குவது கூடத் தவறானது. கல்லூரிக்கும், பகவான் திருக்கோயிலுக்கும் குறிப்பிட்ட நேரங்களில் செல்வதைத் தவிர மாணவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

மாணவர்கள் வெளியில் வரும் போது கூடக் கும்பலாக வர முடியாது. இரண்டிரண்டு பேராக வரிசையில்தான் வந்து சென்றாக வேண்டும். ஆர்ப்பாட்டம், ஆரவாரம் என்பதே கிடையாது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பல்வேறு மதப் பிரிவுகளிலிருந்தும் வருகிற மாணவர்கள் அனைவரும் வளாகத்தில் நடைபெறும் விழாக்களிலும் விளையாட்டுக்களிலும் கலைநிகழ்ச்சிகளிலும் முழுமையாகப் பங்கேற்க வேண்டும்.

அறிவு என்பது உடம்புக்கு அப்பாற்பட்டது. அறிவு கத்தி முனைபோல் அமைய வேண்டும். ஆன்மீக உணர்வு அடிப்படையாக அமைய வேண்டும். உழைப்புக்குத் தகுந்த மதிப்புத் தர வேண்டும். குழு உணர்ச்சியோடு எந்தப் பணியிலும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்பனவெல்லாம் பிரசாந்தி நிலையக் கல்விக் கூடங்களின் கொள்கைகளாக இயங்குகின்றன.

மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் எதுவும் பெறப்படுவதில்லை. மூன்று கல்வி நிறுவனங்களுமே மாணவர்கள் தங்கியிருந்து படிக்கும் (BOARDING) கல்விக் கூடங்கள் என்பதால், உணவுக் கட்டணமாக மட்டும் ஆண்டுக்கு மூவாயிரம் வரை பெறுகிறார்கள்.

விடுதி வாழ்க்கையும் ஒருங்கிணைந்த கல்வி முறையோடு சேர்ந்தது. தினமும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளில் விடுதி மாணவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். அரட்டையடிப்பதும், வானொலிப் பெட்டிகளைப் பயன்படுத்துவதும் முழுமையாகத் தடுக்கப்பட்டு அமைதியான வாழ்க்கை வலியுறுத்தப்படுகிறது.

அரசிடமிருந்து எந்த நிதி உதவியையும் சத்யசாயி நிறுவனங்கள் பெறுவதில்லை. பல்கலைக் கழக மானிய உதவி மட்டும்

ராமகிருஷ்ணா மிஷன் மாணவன் என்ற முறையில் சிறு வயதிலிருந்தே நான் ஞானிகளையும், ரிஷிகளையும் மதிக்கக் கற்றுக் கொண்டிருந்தேன். முதன் முதலாகப் பகவான் பாபாவை நான் பார்த்த போது அவரிடம் இருந்த அசாதாரணமான தெய்வீக சக்தியை உணர்ந்தேன். அவர் ஏழைகளுக்குச் செய்யும் உதவிகளைக் கண்ட போதும், இதைப் பிறரிடம் ஊக்குவிப்பதை அறிந்த போதும் என் மனம் நிறைந்தது. அவர் கூறுவன எல்லாம் எளிமையாக இருந்தன. சுலபமாகப் பின்பற்ற முடியும் என்ற நம்பிக்கையை உருவாக்கின. மிகப் பெரிய தத்துவார்த்த விஷயங்களைக் கூட மிக இலகுவாக, அனைவரும் புரிந்து கொள்ளும் விதத்தில் சொன்னர். ஜாதி, மத பேதமின்றி அனைவரும் பின்பற்றலாம் என்பதை உணர்த்தினார். அவருடைய அருளுரைகள் அனைத்துக்கும் அடிப்படை : அன்பு. ''எல்லோருக்கும் சேவை செய், எல்லோரிடமும் அன்பு செலுத்து''; ''எப்போதும் உதவு, ஒருபோதும் வருந்தாதே'' என்ற அறிவுரைகள் என்னை ஈர்த்தன. ராணுவ அதிகாரியாக இருந்தபோதும் பிறகு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தலைவராகப் பதவி வகித்த போதும் என்னால் இயன்ற அளவில் சிறு சிறு உதவிகளைப் பலருக்கும் செய்து வந்தேன். ஓய்வு பெற்ற பிறகு என் நேரம் முழுவதையும் சாயி ஊழியராக, சமுதாய - ஆன்மிகப் பணி ஆற்றச் செலவிட முடிகிறது. இதனை என் பாக்கியமாகக் கருதுகிறேன்.

ஐ. நா. சபையின் அமைதிப் படையில் அங்கம் வகித்து ஆப்பிரிக்காவின் காங்கோ பகுதியில் இருந்தபோதும் சரி, இந்தியாவின் எல்லைப் புறங்களில் யுத்த முனையில் பல சந்தர்ப்பங்களில் இருந்த போதும் சரி, எனக்கு நேரவிருந்த பலவித ஆபத்துகளிலிருந்தும் என்னை மீட்டு வந்த இறையருள் சாயி வடிவத்தில் என்னுடன் இருந்ததாகவே கருதுகிறேன். எனக்கு மரண பயம் எப்போதுமே ஏற்பட்டதில்லை.

அதற்குக் காரணம், ஒருமுறை பகவானை நான் சந்தித்த போது அவர், ''நான் அருகிலிருக்க பயமேன்?'' என்று கேட்டதுதான்.

என் வாழ்க்கையிலும் என் குடும்பத்தினர் வாழ்விலும் அவர் பல அற்புதங்கள் நிகழ்த்தியிருக்கிறார். என் மகள்கள் இருவரையும் இரு வேறு சந்தர்ப்பங்களில் மரணத்தின் பிடியிலிருந்து மீட்டுக் கொடுத்திருக்கிறார். ''அவர்தான் மீட்டார்'' என்று எப்படி கூறுகிறேன் என்றால், அந்தச் சம்பவங்கள் நிகழ்ந்த பிறகு அவரை நேரில் சந்தித்த போது, நடந்த சம்பவங்களை - வந்த ஆபத்துக்களை - இம்மியும் பிசகாமல்



* சாயி சின்னம்

அற்புதங்களை வெல்லும் அற்புதம்

அவர் விவரித்தார். அவர்தான் மீட்டார் என்பதற்கு இதைவிட வேறு சான்று என்ன வேண்டும்? அவர் சர்வ வியாபி.

ஆனால் இந்த அற்புதங்களையெல்லாம் விட பெரிய அற்புதம் ஒன்று உண்டு. அதுதான் முக்கியம். அது என்னவெனில் பகவானை தரிசிப்பவர்களை அவர் அடியோடு எப்படி மாற்றி விடுகிறார் என்பதுதான். ஓர் உயர் ராணுவ அதிகாரி என்ற முறையில் நான் ஆணவத்துடனும் அதிகாரத்துடனும் சதா கோபத்துடனும் நடந்து கொள்வேன். ஆனால் பகவானைப் பார்த்த பிறகு நான் அடியோடு மாறிப் போனேன். அடக்கம் தன்னால் என்னிடம் வந்து சேர்ந்தது. முன்பு பரபரப்பாகக் காரியம் செய்வேன். இப்போது நிதானத்தைக் கடைப்பிடிக்கிறேன். ''அவசரம் கவலை தரும்; கவலை உடலுக்குத் தீமை விளைவிக்கும்'' என்று பாபா கூறியதை அடிக்கடி நினைவுகூர்வேன்.

''அயல் நாட்டினர் பலர் பாபாவைக் காண வருவது ஏன்?'' என்று என்னைப் பலர் கேட்கிறார்கள். என் பதில் என்னவெனில், ''அவர்களிடம் செல்வம் இருக்கிறது; ஆனால் மன அமைதியில்லை. அதை பாபாவிடம்தான் பெற முடிகிறது. அதற்காக வருகிறார்கள்'' என்பதுதான்.

பாபாவின் அருளுரைகள் சர்வதேசங்களுக்கும் ஏற்புடையன. உலக மதங்கள் அனைத்திலும் வேற்றுமையில் ஒற்றுமை காண்பவர் அவர். அதையே தமது சாயி சின்னமாகவும் கொண்டிருக்கிறார்.

எல்லாவற்றையும் விட முக்கியம், அவர், தாம் சொற்படி நடந்து காட்டுகிறவர். ''என் வாழ்க்கையேதான் நான் விடுக்கும் செய்தி'' என்பார்.

ராணுவத்தில் பணியாற்றிய எனக்கு, தண்டனை மூலம் ஒழுக்கத்தை வளர்ப்பது எப்படி என்று தெரியும். அன்பு மூலமும் அதனைச் சாதிக்க முடியும் என்று எனக்குக் கற்றுத் தந்தவர் பகவான் சத்யசாயிபாபா.

- மேஜர் ஜெனரல்
எஸ். பி. மகாதேவன்

பெற்றுக் கொள்கிறார்கள். ஒன்று முதல் பன்னிரண்டு வகுப்புக்கள் வரை பள்ளிகளும் நடைபெறுகின்றன. புட்டபர்த்தியின் கண்டிப்பான ஒழுங்கு முறைகளோடு ஜெய்ப்பூர், போபால், டெல்லி உட்படப் பல இடங்களில் தொடக்கப் பள்ளிகள் நடைபெறுகின்றன. ஹைதராபாதில் உள்ள உயர்நிலைப் பள்ளி மிகவும் பெரிய அளவில் சிறப்பாக இயங்குகிறது.

சுயக் கட்டுப்பாடும், சத்தியமும், அன்பும் சுற்றுப்புறத் தூய்மையும், மனமுவந்த உழைப்பும் எங்கு ஒன்றிணைந்து செயல்படுகிறதோ அது சுவர்க்கம் எனலாம். அந்த வகையில் புட்டபர்த்தி அனுபவம் ஒரு சுவர்க்க அனுபவத்தையே தருகிறது.

ஒரே மதம், அது அன்பு மதம்; ஒரே ஜாதி அது மனித ஜாதி!

பகவான் பாபா எந்த ஒரு புதிய மதத்தையும் நிறுவவோ போதிக்கவோ முயற்சி செய்யவில்லை. அவருடைய பணியின் முக்கி நோக்கங்கள் :

●● தனிநபருக்கு உதவுதல். இந்த உதவி மூன்று வகைப்பட்டது 1. அவனிடம் இயல்பாகவே உள்ள தெய்வத் தன்மையை அவனே உண உதவுதல். இறைவனுடன் இரண்டறக் கலப்பது என்ற இறுதி லட்சிய நோக்கிச் செல்ல உதவுதல் 2. தெய்வீகம் என்ப அன்பு, கடமையில் காட்ட படும் கச்சிதம் ஆகியவ றில் அடங்கும் என்பதா இவற்றை வாழ்க்கையி கடைப்பிடிக்க உதவுத 3. இதன் மூலமே வாழ்க் யில் மகிழ்ச்சி, அழகு, ஆகி வற்றை அனுபவிக்க செய்தல்.



●● எல்லாவி மான மனித உறவுகளும் பி வரும் அடிப்படைகளி இயங்க வேண்டும் என்ப உணர்த்துதல் : சத்யம், தர்மம், பிரேமை, சாந்தி, அஹிம்சை.

●● மதம் என்பதன் மெய்யான அடிப்படையினை உணர்த் வதன் மூலம் எல்லா மதத்தினருக்கும் தங்கள் தங்கள் மதக் கோ பாடுகளை மேலும் தீவிரமாகவும் மனப்பூர்வமாகவும் பின்பற் உதவுதல்.

●● இந்த லட்சியங்களையெல்லாம் அடைய பின்வரும் கோ பாடுகளை அனுசரிக்கும்படி கூறுகிறார் பாபா :

1. ஒரே மதம் அது அன்பு மதம்
   ஒரே ஜாதி அது மனித ஜாதி
   ஒரே மொழி அத இதய மொழி
   ஒரே கடவுள் அவர் சர்வ வியாபி.
2. எப்போதும் கடவுளை நினைத்து உலகின் சகல ஜீவரா களும் ஜடப் பொருள்களும் கூட அவனது பல்வேறு வடிவ களுள் ஒன்றே என்று உணர்தல்.
3. எல்லா மதங்களின் இடையேயும் உள்ள ஒற்றுமைகளை அடி கோடிட்டுக் காட்டி, எல்லா மதங்களும் அன்பின் அடிப்பை யில் உருவானவை என்பதைப் புரிந்து கொள்வது.
4. கடமையாற்றுவது என்பது இறைவனுக்குச் செய்யும் சேவ என்பதை உணர்ந்து செயல்படுவது.



5. வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்னைகள் அனைத்திலும் தெய்வீக அன்பு, கருணை, சகிப்புத் தன்மை, உதவுகிற இயல்பு ஆகியவற்றைக் கொணர்ந்து இவை மூலம் அந்தப் பிரச்னைகளைச் சந்தித்து வெற்றி காணல்.
6. எல்லாக் காரியங்களையும் தார்மீக அடிப்படையிலும், தெய்வ அன்பின் அடிப்படையிலும், பாபத்துக்கு அஞ்சும் அடிப்படையிலும் எடைபோட்டுச் செய்தல்.
7. வாழ்க்கையை நடத்தக் கடமையாற்றுவது தவிர ஆன்மீக, கல்வி, அல்லது சேவா மார்க்கத்திலும் மனத்தைச் செலுத்தி இதன் மூலம் தனி நபர்களுக்கோ சமுதாயத்துக்கோ உதவ முயற்சி மேற்கொள்ளுதல். இதனைத் திட்டமிட்டும் எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமலும் செய்தல். நம்மை யாரும் பாராட்ட வேண்டும் என்று கூட எதிர்பாராமல் இறைவனின் அன்பையும் அருளையும் பெற மட்டுமே செயலாற்றுதல்.

சேவையின் பரிமாணம்!

சாயி சேவா சமிதிகளும் (சங்கங்கள்) பஜனை மண்டலிகளும் இந்தியா முழுவதும் உள்ளன. மொத்தம் 5050. ஒரிஸ்ஸாவில்தான் மிக அதிகம் 1789. ஆந்திரா 683. மகாராஷ்டிரா 563. நாலாவதாகத் தமிழகம் 550.

ஆனால் இவர்களுடைய சேவையால் பயன்பெறும் மக்கள் தொகை என்று கணக்குப் பார்த்தால் மேற்கு வங்கம் பெருமையைத் தட்டிக் கொண்டு போகிறது. 90,000! இங்கு சமிதிகள் 149தான்.

நாய் விற்ற காசு குரைக்கும்!

வடக்கே இருந்து ஒரு பெருந்தனக்காரர் ஏராளப் பணத்தோடு வந்தார். பாபாவைச் சந்தித்து, தமது நன்கொடையாக அளிக்க விரும்பினார். செய்தி அறிந்த பாபா, ''அவர் நல்ல காரியம் செய்ய நினைப்பது எனக்கு மகிழ்ச்சியே; ஆனால் அந்தப் பணம் நமது வளாகத்துக்கு வேண்டாம்'' என்று கூறி விட்டார்!

பிரசாந்தி நிலைய, பல்கலைக் கழக நிர்வாகிகள் வியந்து திகைத்தனர். ''பல லட்சம் பணமாயிற்றே, நமக்குத் தேவையும் இருக்கிறதே'' என்று சந்தேகத்துடன் இழுத்தனர். பாபா உறுதியாகச் சொன்னார்: '' 'பாத்திரம் அறிந்து பிச்சை இடு' என்பார்கள்; 'பாத்திரம் அறிந்து பிச்சை எடு' என்பதும் பொருந்தும். அந்தப் பணம் நல்ல விதமாகச் சம்பாதிக்கப்பட்ட பணம் அல்ல என்று எனக்குத் தெரிகிறது; அது நமக்கு வேண்டாம்!''

ஆண்டவனை அடைய ஆரோக்கிய உடல்

உன்னுடைய உடலைக் கவனமாகப் பார்த்துக் கொள். ஒரு பலவீனமான உடலில் ஆண்டவன் பற்றிய நினைவுகள் எப்படி நிலைபெற முடியும்? உடலைக் கவனித்துப் பாதுகாக்கும் போது, அது எதற்காக ஏற்பட்டது என்பதையும் மறவாதே. ஒரு ரோட் இன்ஜின் நீராவியில் இயங்கலாம்; இன்னொன்று டீஸலில் இயங்கலாம். ஆனால் ரோட் இன்ஜின்களுடைய பணி ஒன்றே. சாலையைச் சமன்படுத்துதல். இதற்காக அவற்றை நன்கு பேணிப் பாதுகாக்க வேண்டும். அதே போல் மனித உடலில் நீ தோன்றியது இந்த பிறப்பு - இறப்பு சுழற்சியிலிருந்து மீண்டு இறைவனுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பதை நீ உணர்வதற்காகவே. எனவே அந்த நோக்கத்தை அடைய இந்த உடலை ஒரு கருவியாகக் கருதிச் செயலாற்று.

– பாபா

இந்தச் சிறப்பு மலருக்காகப் புட்டபர்த்திக்கு நேரில் சென்று தமது அனுபவங்களைச் சில கட்டுரைகளாக வடித்துத் தந்திருப்பவர் : சுப்ரபாலன்

பிரசாந்தி அனுபவங்கள்

பலமான சிபாரிசுக் கடிதங்களோடு சென்ற இந்த நிருபருக்கு எடுத்த எடுப்பி லேயே அதிர்ச்சிதான்!

''இங்கே யாருக்கும் ஸ்பெஷல் வர வேற்பு கிடையாது. எல்லா பக்தர்களையும் போல் நீங்களும் ஒரு பக்தராகச் சுற்றி வாருங்கள், பாருங்கள், பேசுங்கள், மனசில் பட்டதை எழுதுங்கள்'' என்று சொல்லி விட்டார் ரிஜிஸ்திரார்.

சிபாரிசு கடித உறையைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை! ஏமாற்றம் மட்டு மின்றி, கொஞ்சம் கோபத்துடனேயே அந்த அலுவலகத்தை விட்டு வெளியே வந்த இந்த நிருபரின் மனம், சாந்தி அடைந்து, ஆனந்த பரவசத்தில் திளைக்க அதிகபட்சம் இரண்டு மூன்று நிமிடங்களுக்கு மேலாகி யிராது. அப்படி என்ன அனுபவங்கள்? சொல்கிறேன்.

●● மரங்களின் நிழலில் வழுவழுப் பான ஒரு திறந்தவெளி மேடையில் அமர் கிறோம். நான்கைந்து பேர் - வெளிநாட் டவர்கள்தான். சில பெண்கள் நம் இந்தியப் பெண்களைப் போன்ற சேலைக் கட்டில்... ஒரே மகிழ்ச்சி, ஆரவாரமாகக் குழந்தை களுடன் வந்து அமர்ந்து கொள்கிறார்கள். ஒருவர் தொடங்க அனைவரும் கூட்டாகச் சேர்ந்து மூச்சுப் பிடித்துச் சில விநாடிகள் இடைவிடாமல் 'ஓ....ம்.' என்று ஒரே சுருதி யில் முழங்குகிறார்கள். ஓம் சாந்தி... சாந்தி சாந்தி : என்று வெகு அழகாகச் சொல்லி நிறைவு செய்து கொள்கிறார்கள்.

இன்னும் சில அயல்நாட்டுக் குழு வினர் ஸாயி பஜன் பாடல்களைப் பாடு கிறார்கள். ஆங்கிலம் கலந்த உச்சரிப்பில் தான். ஆனால் முழுமையான ஈடுபாட் டோடு பாடுகிற போது நமக்கு மெய்சிலிர்க் கிறது.

●● எதிரே யார் வந்தாலும் ''சாய் ராம்''தான்! சிற்றுண்டிச் சாலையில் உணவு பரிமாறுகிறவர், சாப்பிடுகிறவர், குப்பை வாருகிறவர் எல்லோருமே பேதமின்றி சாய் ராம் என்கிற ஒரே 'உறவு முறை'யில் இணைகிறார்கள். தள்ளு வண்டியில் சாமான்கள் கொண்டு போகிறவர்கள் கூட ''வழி வழி'' என்று கேட்பதில்லை; 'சாய் ராம்' என்றுதான் குரல் கொடுத்துக் கொண்டு போகிறார்கள். ஸ்வாமி யின் கோவிலுக்கு வருவ தற்கு ஆண்கள், பெண் கள் என்று தனித்தனி வழிகள். எழுதி வைத்த அறிவிப்பு ஏதும் கிடை யாது. ஆ யி னு ம் 'ஸ்கார்ஃப்' அ ணி ந் த சேவாதளத் தொண்டர் கள் ஆங்காங்கு நின்று கொண்டு, தவறான வழி யில் நாம் வந்து விடுகிற போதும் தி ரு ம் பு ம் போதும் ''சாய்ராம்'' என்று கை கூ ப் பி க்



☛ பிரசாந்தி நிலையப்



☛ கோ பூஜை

கேட்டுக் கொள்கிற பாங்கு இங்கு நிலவுகிற 'டிஸிப்ளின்' அன்பிலே உருவாகிறது என்பதை உணர்த்துகிறது.

●● பிரசாந்தி நிலையம் அருகில் உள்ள புட்டபர்த்தி பஸ் நிலையத்தை அக்டோபர் '90இல் தான் ஸ்வாமி திறந்து வைத்திருக்கிறார். கட்டட அமைப்பும், தூய்மையும், ஒழுங்கும் மற்ற பேருந்து நிலையங்களைப் பார்க்கிற போது நினைவுக்கு வரவே கூடாது. வந்தால் வாழ்க்கையே வெறுத்து விடும்! முயல்கள், சிம்பன்சிகள் ஆளுயரத்துக்குக் குப்பைக் கூடைகளுடன் நின்று கொண்டு ''யூஸ் மி'' என்று கேட்கும் கலையுணர்வு மிகுந்த ஒரு பேருந்து நிலையம்.

●● ஆயிரம் பேர் அமர்ந்து சாப்பிடக் கூடிய உணவுக் கூடமாகட்டும், மூன்று ரூபாய் தந்து விட்டுத் தங்க இடம் கிடைக்கிற 'கொட்டகை'களாகட்டும் - ஈ, கொசு இல்லாமல் எப்படிச் சமாளிக்கிறார்கள் என்பது வியப்புக்குரியதாகவே உள்ளது! ஆயிரக்கணக்கில், அவ்வளவு பேருக்கும் ஸ்டையின்லெஸ் ஸ்டீல் தட்டுக்களில் வேண்டும் அளவு போடுகிற சாப்பாட்டின் விலை நான்கு ரூபாய்தான். ஆனால் ஒரு கெடுபிடி உண்டு. 'எந்த உணவையும் வீணாக்காதீர்கள்' என்ற வேண்டுகோளுடனேதான் உணவு இடப்படுகிறது.

●● அடையா நெடுங்கதவு என்று சொல்ல வேண்டும். பிரசாந்தி நிலைய வளாகத்துக்குள் எந்த நேரமும் பக்தர்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள். காலை நாலரை மணிக்கே 'ஓம்கார' ஜபத்துக்காக பக்தர்கள் குளித்து முடித்து விட்டு வரிசையாக வந்து நுழைவாயிலில் அமர்ந்து கொள்கிறார்கள். ஓம்கார ஜபம் சரியாக ஐந்து மணிக்குத் தொடங்குகிறது. பிரசாந்தி நிலையத்தின் மைய மண்டபத்தில் போய் அமர்ந்து 'ஓம்'கார ஜபத்தில் ஈடுபடுகிற பேறு வெகு சிலருக்குத்தான். முதலில் வருகிறவர் முதலில் என்கிற கட்டுப்பாடு மீறாத ஒழுங்கில். அப்புறம் வருகிறவர்கள் வெளிப்புறம் சுற்றிலும் உள்ள கொட்டகைகளில் நின்று கொண்டு ஜபத்தில் இணைகிறார்கள். சற்று இருமல், தும்மல் இருந்தால் கூட மண்டபத்தை விட்டு



அன்பு என்ற கயிறு!

நான் ஸ்ரீலங்கா நாட்டினள். பௌத்த மதத்தைச் சேர்ந்தவள். பிரிட்டனில் வசித்து டாக்டராகப் பணியாற்றி வருகிறேன். இந்தியாவுக்கு வந்து சத்ய சாயி கண் சிகிச்சை முகாமில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்றேன்.

என்னை மிகவும் கவர்ந்த விஷயம் என்னவென்றால் மருத்துவ ரீதியில் எல்லாம் கச்சிதமாக நடந்தது என்பது மட்டுமல்ல; அதற்கும் மேலாக இதில் பங்கேற்ற அனைவரிடமும் இருந்த ஒற்றுமையும் ஒருவரோடு ஒருவர் பரிமாறிக் கொண்ட மகிழ்ச்சியுமாகும். இது சேவை புரிவோர், சேவையைப் பெறுவோர் ஆகிய இருதரப்பினரிடமும் வியாபித்திருந்தது. எல்லோரையும் அன்பு என்ற கயிறு பிணைத்ததாகத் தோன்றியது. இது பாபாவின் அருளால் நடக்கின்ற அற்புதமே என்று உணர்ந்தேன்.

- திருமதி (டாக்டர்) நிமலசேனா

வெளியேற்றி விடுகிறார்கள். துல்லியமான அமைதி நிலவுகிற போது, ஸ்வாமி உருவங்கள் உள்ள மேடை தவிர, மற்ற இடங்களில் விளக்குகளை அணைத்து விடுகிறார்கள். மூச்சை நன்றாக இழுத்து 'ஓ...ம்' என்று பத்து முறைகளுக்கு மேல் நீட்டி முழக்குகிற அனுபவம் எழுத்தில் தெரியாது. ஓம் கார ஜபம் முடிந்ததும் ஸ்வாமி பெயரில் அமைந்த சுப்ரபாதம் பாடப்படுகிறது. இந்த சுப்ரபாதம் உருவானது சுவையான கதை.

வேங்கடகிரி சமஸ்தானத்து ஆஸ்தான வித்வானாக விளங்கிய திருமலாச்சார் என்பவர் இயற்றியது இது. புட்டபர்த்தியின் மகிமை வெளியே அதிகம் பரவாத நாட்களில் எழுதப்பட்ட பாடல். அதில் ஒன்று ''ஸ்வாமி! உங்கள் மகிமையை உணர்ந்து அருள்பெற உலகம் முழுவதிலுமிருந்து எல்லாம் பக்த கோடிகள் வந்து கூடுகிறார்கள்'' என்பதாகப் பொருள் தருகிறது. அந்தப் பாடலை இயற்றிய கவி இன்றிருந்தால், பிரசாந்திக்கு வருகிறவர்களில் மிக அதிகமான வெளிநாட்டு அன்பர்களும் இடம்பெறுகிற வைபவத்தைக் கண்டு, தம் கவிக் கூற்றின் வலிமையை உணர்ந்து கொள்வார்.

ஓம்கார ஜபம் சுப்ரபாதம் நிறைவடைந்த பிறகு, வேத பாராயணங்களை ஓதிக் கொண்டு ஒரு சிறு குழுவும், தொடர்ந்து பெண்கள் அடங்கிய குழுவும், அதன்பின் ஆண்கள் குழுவும், விநாயகப் பெருமானைத் துதித்து விட்டுப் பிரசாந்தி ஆலயத்தை வலம் வருவார்கள், பஜனை முழக்கங்களோடு. இதற்கு நகர சங்கீர்த்தனம் என்று பெயர்.

வேதபாராயணக் குழுவுக்குத் தலைமையேற்று தினசரி வருகிறவருக்கு வயது நூறுக்கு மேல் - அவர் பெயர் காமாவதானி!

●● எந்தக் குளிர் மழையானாலென்ன, காலை ஆறரை மணிக்கு பிரசாந்தி நிலையத்துக்குள் திணியத் திணிய பக்த கோடிகள் போய் அமர்ந்து விழிகளை விரித்துக் காத்திருக்கிறார்கள். 'ஜ்யோதி ஸ்வரூபம்' மாதிரி பகவான் ஸ்வாமி மெல்ல நடந்து வருகிறார். கூட்டத்துக்குள் புகுந்து சுற்றிச் சுற்றி வருகிறார். பகவான் பக்தனை நாடிப் போய் அருள் பாலிப்பது என்கிற மரபை பிரசாந்தி நிலையம் தவிர வேறெங்கும் காண முடியாது. ஸ்வாமி பக்தர்கள் மீது மலர்களை வாரித் தூவிக் கொண்டே, அவர்கள் கற்றை கற்றையாகத் தருகிற கோரிக்கைக் கடிதங்களையும் தம் கைப்படப் பெற்றுக் கொள்கிறார். சில பாக்கியவான்களோடு கைகுலுக்குகிறார். தொட்டு ஆசீர்வதிக்கிறார். வெகு சிலருக்கு நேரில் அழைப்புத் தந்து பேசி அருளுகிறார். ஸ்வாமி மாலையிலும் தரிசனம் தருகிறார். ஓய்வாக இருக்கிற நேரங்களில் பக்தர்கள் சமர்ப்பித்த கடிதங்களை எல்லாம் ஒன்று விடாமல் படித்து விடுவாராம். கடி

தங்களில் ஸ்வாமியின் அருட்பார்வை படு கிறபோதே பக்தர்களின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்பட்டுப் பரிகாரம் கிடைத்து விடுகிறது என்று நம்புவதால் இந்த முறையீடு தரும் வழக்கம் இப்போது அதிகமாகி விட்டது. கோரிக்கைக் கடிதங் களை ஸ்வாமி வேறு யாரிடமும் தந்து விடுவதில்லை. தம் கையிலேயே வைத்துக் கொள்கிறார்!

●● சேவார்த்திகள் - மாதந்தோறும் ஒரு மாநிலத்திலிருந்து வருகிறார்கள். நாலு குழுக்களாகப் பிரிந்து வாரம் ஒரு குழு என்கிற கணக்கில் முறைவைத்துத் திருப் பணிக்கு அர்ப்பணித்துக் கொள்கிறார்கள். இந்த ஜனவரியில் கேரள மாநிலத்துக் காரர்களுக்கு அந்தப் பேறு கிடைத்திருக் கிறது.

●● பிரசாந்தி நிலைய வளாகத்துக் குள்ளேயே டாக்டர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், மற்ற அதிகாரிகள் அனை வருக்கும் குடியிருப்புக்கள் உண்டு. ஆனால் எவ்வளவு பெரிய மனிதராக இருப்பினும் 'இன்னார்' என்று அறிவிக்கும் பெயர்ப் பலகை கிடையாது. பதவிகளைத் துச்சம் என்று நினைக்கப் பண்ணிச் சமநிலையில் பணியாற்றத் தூண்டுகிற நடைமுறையா கவே இது விளங்குகிறது.

●● உரக்கப் பேசுதல், 'புகை' மூட் டம், புலால் உணவு, மயக்கும் மது என்கிற வேண்டாதவை எதுவுமே இந்த வளாகத் துள் நுழையக் கூடாது. நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் கூடுகிற அயல்நாட்டவர் கூட இதில் பெருமையோடு ஒழுங்கு காக்கிறார்கள்.

●● கண்களை உறுத்திய விஷயம், பாரதத்தின் தனிப்பெரும் சிறப்பான பிச்சைக்காரர்கள் எப்படியோ பிரஸாந்தி வளாகத்திலும் புகுந்து விட்டதுதான்! அது வும் கையில் கசங்கிப் போன ஸ்வாமி படத்தை வைத்துக் கொண்டு 'அம்மா தாயே' என்று இவர்கள் கூவியது வேதனை அளித்தது. திருப்பதி, திருத்தணி மாதிரி இவர்களின் 'அணிவகுப்பு' பெருகி சூழ்நிலையைப் பாழ்படுத்தி விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

நமக்குக் கருணை உண்டு. அந்த மனிதாபிமானம்தான் இப்படி இவர்கள் ஈனத் தொழில் நடத்துவதை வெறுக்கிறது. 'இதற்கு மாற்று என்ன? விடிவுகாலம் எப்போது?' என்று சிந்திக்க வைக்கிறது. விடை, 'அனைவருக்கும் கல்வி' என்ற இரு சொற்களில், அதுவும் சத்ய சாயி கல்வி நிறுவனங்கள் வழங்குகிற கல்வி முறை யில்தான் அடங்கியிருக்கிறது என்பதை உணர்கிறோம்.

புட்டபர்த்தியைச் சுற்றி மேம்பாட்டுப் பணிகள்

ஸ்வாமியின் அறுபதாம் பிறந்த நாளின் போது புட்டபர்த்தி சுற்றுவட்டாரத்தில் உள்ள தொண்ணூற்றோரு கிராமங்களுக்கும், மேம்பாட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. கோவில்கள் இல்லாதிருந்தால் புதிய கோவில், இருந்தால் பராமரிப்பு, பள்ளிகள் அமைப்பது, ஆழ்துளைக் கிணறு நிறுவுவது, சாலைகள் அமைப்பது.. என்று டிரஸ்ட் மூலம் செய்தார்கள்.

இந்தச் சாலைகள் அமைக்கும் பணியில் கல்லூரி மாணவர்கள் ஆண், பெண் பேதமின்றி இணைந்து ஈடுபட்டு வெற்றி கண்ட காட்சி மறக்க முடியாத அனுபவம் என்கிறார் சநாதன சாரதி ஆசிரியர் வி. கே. நரசிம்மன். பகவானின் அருமை பெருமைகளை முதன் முதலில் உணரும் பேறு பெற்றவர் புட்டபர்த்தி கர்ணத்தின் துணைவியார் சுப்பம்மா. ஸ்வாமி 60ம் பிறந்த நாளை ஒட்டி புட்டபர்த்தியில் சுப்பம்மாள் நகர் உருவானது. ஏழைகளுக்கு இலவசமாய் வீடுகள் கட்டி வழங்கப்பட்டது.



சுற்றுப்புற கிராமங்களில் வாழும் மக்களில் அறுபது பேரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொருவருக்கும், ஐயாயிரம் ரூபாய் மதிப்புள்ள காங்கேயம் பசுக்கள் வழங்கப்பட்டன.

ஓர் அரசு செய்கிற காரியங்களையெல்லாம் அமைதியாகச் செய்து முடித்து விடுகிற சத்ய சாயி டிரஸ்ட், அரசு செய்கிற இரு காரியங்களை மட்டும் செய்வதில்லை! ஒன்று, இதற்கெல்லாம் பப்ளிசிடி தேடுவது; இரண்டு, இதையெல்லாம் சுட்டிக்காட்டி வோட்டுக் கேட்பது!

பெங்களூர் கல்கி பிரதிநிதி வேங்கடாசலத்துக்கும் எனக்கும் அன்று பாபாவின் அருளுரைகளைக் கேட்கும் பாக்கியம் கிட்டியது. சின்னஞ்சிறு அறை. நெருக்கி அடித்துக் கொண்டு நாங்கள் ஒரு பத்துப் பதினைந்து பேர் அமர்ந்திருக்கிறோம். அதிலும் ஒரு பக்கம் பெண்கள் : எதிர்ப் பக்கம் ஆண்கள். ஒரு மூலையில் பாபா அமர்கின்ற ஆசனம். அதில், ''சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை'' என்ற மூல மந்திரச் சொற்கள் எழுதப்பட்டுள்ளன. அதில் வந்து அமர்கிறார் பாபா. ''என்ன மதராஸ்காரு, என்ன விசேஷம்?'' என்கிறார் என்னைப் பார்த்து.

''உங்கள் மணி விழாவையொட்டி கல்கி வாசகர்களுக்கு உங்கள் ஆசியும் செய்தியும் வேண்டும்'' என்று நான் கூறி முடிப்பதற்கு முன்பே, பாபா, ''ஸார்! இது ப்ரசாந்தி நிலையம், அமைதியாகப் பேசுங்கோ'' என்கிறார். புன்னகையுடன்! நானும் குரலைத் தாழ்த்திக் கொண்டு மீண்டும் அதே கோரிக்கையை அவர் முன் வைக்கிறேன். தலையாட்டி விட்டு அவர் என் பக்கத்திலுள்ள ஓர் இளைஞரைப் பார்க்கிறார்.

''எங்கிருந்து வருகிறாய்? என்ன செய்கிறாய்?''

அமெரிக்காவிலிருந்து வருகிறேன். கம்ப்யூட்டர் விஞ்ஞானி நான்'' என்கிறார் அந்த இந்தியர்.

''என்ன சம்பாத்தியம்?''

''மாதம் அறுபதாயிரம் ரூபாய்.''

''கேட்டுக் கொண்டாயா? என்பது போல் என்னைப் பார்க்கிறார் பாபா. ''பாருங்கோ. இத்தனை சம்பாதிக்கிறார். இங்கு வருகிறார்!''

எனக்குப் புரிகிறது. பணம் மனச்சாந்தி தராது. வாழ்க்கையின் குறிக்கோள் சம்பாத்தியமாக மட்டுமே இருந்தால் சந்தோஷம் இராது. பிறகு வேறென்ன தேவை?

''வீண் செலவு செய்யாதே'' என்கிறார் பாபா அந்த இளைஞரைப் பார்த்து.

''இல்லை.''

''பொய் சொல்லக் கூடாது.''

தலைகுனிகிறார் விஞ்ஞானி.

''பெற்றோருக்குப் பணம் அனுப்பு; நல்ல காரியங்களுக்குக் கொடு; செல்வம் ஆடம்பரத்தை வளர்க்கக் கூடாது. செல்வம் பெருக, அடக்கம் பெருக வேண்டும். நீ இளைஞன். அமெரிக்காவில் தனியாக இருக்கிறாய். நல்லொழுக்கத்தைக் கை விடாதே!''



உபதேசிக்கும் போதே இளைஞரிடம் கருணையும் பொங்குகிறது பாபாவுக்கு. அடுத்த கணம் பெரிய பெரிய ஸ்படிக மணிகளால் ஆன நீண்ட மாலை ஒன்று அவர் கரங்களில் தோன்றுகிறது. எங்கிருந்து எப்படி வந்தது? நாங்கள் வியப்படையக் கூட மறந்த ஒரு திகைப்பில் ஆழ்ந்து போகிறோம்.

''இங்கே வா.''

மண்டியிட்டு வணங்குகிறார் இளைஞர்.

''பிரார்த்தனை செய்வாயா?''

''செய்வேன்.''

''எப்போது?''

''நேரம் கிடைக்கும்போதெல்லாம்.''

''அப்படி செய்யக் கூடாது. எதையும்

மனிதாபிமானமே இவர் மதம்!





குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டும். நேரம் தவறாமை முக்கியம். ஒருநாள் காலை பத்து மணிக்கு ஒரு நாய்க்குச் சாதம் வைக்கிறாய். மூன்று நாள் இப்படி செய் தால் நாலாம் நாள் நாய் சரியாக மணி பத்தடித்ததும் அங்கு வந்து சேர்கிறது. அழைக்காமலே வருகிறது. நாய் வரும் போது பகவான் வரமாட்டாரா? நிச்சயம் வருவார்; நமக்கு அருள் புரிவார். ஆனால் கண்ட கண்ட நேரத்தில் கூப்பிட்டால் வர மாட்டார். காலம் தவறாமை முக்கியம். ஒரு நிமிஷத்தைக் கூட வீணடிக்கக் கூடாது. பக வானுடைய படைப்பிலே பார்! இயற் கையைக் கவனி. எல்லாம் காலம் தவறா மல் நியதிப்படி நடக்கிறதைக் காண்கிறாய், இல்லையா? காலம் தவறாமை இறைவ னுக்கு மிகவும் பிடித்தமான விஷயம் என் பதை இதிலிருந்தே கற்றுக் கொள்ள லாமே!''

அவர் கரங்களில் தவழ்ந்து விளை யாடிக் கொண்டிருந்த ஸ்படிக மாலை இப்போது இளைஞர் கழுத்தில் அணியப் பெற்று மார்பில் தொங்குகிறது. அதைச் சட்டைக்குள்ளே செருகி நெஞ்சோடு இருக்கத் தட்டிக் கொடுக்கிறார் பாபா.

இளைஞரிடம் ஆங்கிலத்தில் பேசிய பாபா, என்னிடம் தமிழில் பேசுகிறார். இன் னொருவரிடம் தெலுங்கில் ஏதோ மொழி கிறார், அப்படி பேசும்போதே இடையில், ''புரிகிறதா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்கிறார். எளிய சொற்களில் அமைந்த சில வாசகங்கள் புரிந்து போகின்றன. புரி யாத போது நான் தலையசைக்கவும் மீண்டும் தமிழில் அதையே கூறுகிறார். 'இவையெல்லாம்தான் கல்கி வாசகர் களுக்கு நீ கேட்ட செய்தி' என்று அந்தக் கருணையும், பார்வையும் உணர்த்து கின்றன.

ஒரு சமயம் சொன்னார்:

"Duty without love is deplorable; Duty with love is desirable. Love without duty is Divine."

முதல் இரண்டு அம்சங்களை எளிதி லேயே புரிந்து கொள்ள முடிந்தாலும் மூன் றாவது தெய்வீக விஷயத்தை எனக்குப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதென்ன கடமை இல்லாத அன்பு? கடமையைச் செய்யாமல் அன்பு மட்டுமே காட்டினால் போதுமா? இதுபற்றி பாபாவிடம் கேட் டேன். கருணையோடு விளக்கினார் :

''க ட மை ம்' என்ற உணர்வேயின்றி அதையே அன்புமயமாகிச் செய்து விடுவ தைத்தான் அப்படி குறிப்பிடுகிறேன். உதா ரணமாகத் தாய் குழந்தைக்குப் பாலூட்டு வது அவள் கடமைதான். ஆனால் கடமை என்று நினைத்து அவள் அதைச் செய்வ தில்லை. அன்பு மயமாகிப் பாலூட்டு கிறாள். தெய்வ நிலைக்கு உயர்கிறாள். அப்படி நமது கடமைகளையும் அன்புமய மாகிச் செய்யக்கூடுமானால் கடமை சுமை யாகத் தெரியாது. அந்தப் பரிபக்குவத்தை எய்தும் போது நாம் கடவுள் தன்மையை எய்தியவர்களாவோம். புரிகிறதா? கடமை உணர்வு வெளியே இருந்து உள்ளுக்குப் பாய்வது. அன்புணர்வு உள்ளேயிருந்து பிரவகிப்பது!''

இன்னொரு பொன்மொழியை உதிர்க் கிறார் பாபா :

''நேற்று என்பது நடந்து முடிந்து போன கதை. அதை எண்ணி ஏங்குவ தாலோ திருப்தி அடைந்து விடுவதாலோ ஒரு பிரயோஜனமும் இல்லை. நாளை என்ன நடக்கும் என்பது உனக்குத் தெரி யாது. எனவே அதைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருப்பதிலும் அர்த்த மில்லை. ஆனால் நாளை நல்ல விளைவு களை எதிர்நோக்கி இன்று நீ செயல்படு கிறாய் அல்லவா? இந்த நிகழ்காலம்தான் முக்கியம். எனவே இப்போது நீ என்ன செய்து கொண்டிருக்கிறாயோ அதனை முழுக் கவனத்துடன் அன்பு மயமாகிச் செய்!

''இந்த இளைஞர் மாதம் 60000 ரூபாய் வாங்குகிறார். அதற்கேற்ப இவர் உழைத் தாக வேண்டும். உழைப்பு குறைந்தால் இவர் சம்பாதிப்பவராயிருக்க மாட்டார்; தானம் பெற்றுக் கொண்டவராகி விடுகி றார்! ஒரு திருடன் சிறையிலிருந்து தப்பி விடலாம்; ஆனால் மனச் சாட்சியிடமிருந்து யார் தப்ப முடியும்?''

இப்படி அறநெறிகளை மனத்தில் தைக் கும்படி பாபா கூறி வரும்போதே அவர் வலக்கை விரல்களுக்கிடையில் ஒரு மோதி ரம் தோன்றி அதில் பதிக்கப் பெற்றுள்ள வைரம் பிரகாசமாக ஒளிர்கிறது. அது எப்படி எங்கிருந்து வந்தது? நமக்குப் புரி யாத, விளங்கிக் கொள்ள இயலாத விஷ யத்தை, அது காரணமாகவே மறுப்பதும் சந்தேகிப்பதும், பரிகசிப்பதும் தவறு என்ற கொள்கை உடையவன் நான். இப்போதும் என் மனத்தில் ஓடுகிற எண்ணங்களுக்கு விளக்கம் தருவது போல் பாபா பேசு கிறார்: ''இந்த மோதிரம் எப்படித் தோன் றியது? அந்த ஸ்படிக மணி மாலை எங்கி ருந்து வந்தது?' என்றெல்லாம் யோசித்து மனத்தைக் குழப்பிக் கொள்வது வீண் வேலை. இவை சங்கல்ப பலத்தினால் தோன்றுகின்றன. இதைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் சங்கல்ப பலம் உள்ள வர்களால்தான் முடியும். 'விவேகானந்த ரைப் புரிந்து கொள்ள விவேகம் வேண்டும்' என்று கூற வேண்டிய சந்தர்ப்பம் விவே கானந்தருக்கே இருந்திருக்கிறது.''

''இ ந் த அற்புதங்களையெல்லாம் விடப் பெரிய அற்புதம் நீங்கள் புட்டபர்த்தி யைக் கலைவாணியின் வாசஸ்தலமாக உரு மாற்றியிருப்பதும், வேறு பல மனிதாபி மானப் பணிகளை நிறைவேற்றி வைத் திருப்பதும்தான் என்று எனக்குத் தோன்று கிறது'' என்பதாக நான் கூறி முடிக்கு முன்னரே,

''நான் நிகழ்த்தும் அற்புதங்கள் எது வும் முக்கியமில்லை'' என்கிறார் பாபா. ''என் அன்பை நீ உணர்கிறாயா? அது தான் முக்கியம்! அந்த அன்புதான் நீ குறிப்பிடும் சாதனைகளையெல்லாம் நிறை வேற்றியது. அந்த அ ன் பு தா ன் நிலை யானது!''

இந்தக் கணத்தில் பாபா எனக்கும் பகவான் ஆனார். ''மாந்தருக்குள் ஒரு தெய்வம்'' என்று தாம் எழுதிய காந்திஜி யின் வாழ்க்கை வரலாற்றுக்குத் தலைப்புத் தந்தார் கல்கி. ''காந்தியைத் தெய்வமாக்க வேண்டுமா?'' என்று சிலர் கேட்கவும், ''காந்தியை மனிதர் என்போமானால், நம்மையெல்லாம் என்னவென்று கூறிக் கொள்வது?'' என்று திருப்பிக் கேட்டார் கல்கி. அந்த அர்த்தம் பொதிந்த மெலி தான நகைச்சுவை இப்போது எனக்கு நினைவு வர, பகவானை ஏறிட்டு நோக் கினேன்.

''ஏதாவது கே ட் க வேண்டுமா?'' என்று பகவான் வினவியவாறே மோதி ரத்தை எனக்கு அணிவித்தார். ''அளவு பார்க்கவில்லை; பொற்கொல்லரைத் தேட வில்லை. ரெடிமேட்!'' என்று கூறிச் சிரித் தார்.

''நீங்கள் செய்த உபதேசங்களின்படி நடக்க திடசித்தத்தை அருள வேண்டும்'' என்றேன்.

''க்ஷேமமாய் இருப்பாய்'' என்றார்.

அதையே கல்கி வாசகர்கள் அனைவ ருக்கும் பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் ஆசிகளாகச் சமர்ப்பிக்கிறேன். கல்கி வாச கர்களின் க்ஷேம நலனுடன், கல்கி ஸ்தாப னத்தின் க்ஷேம நலன் இரண்டறக் கலந் திருக்கும் ஒன்றல்லவா!

– கி. ராஜேந்திரன்

(கல்கி, 24.11.85)

''என்னை அலசிப் பார்க்க முயற்சி செய்யாதே; என்னைப் புரிந்து கொள்ளவும் முயற்சி செய்யாதே; என்னிடம் அன்பு செலுத்து, அதுதான் உனக்கு தெய்வீகத்தை உணர்த்தும்'' என்கிறார் பாபா.

அவருடைய பக்தர்கள் அவரை பகவான் என்றே அழைக்கிறார்கள். ஆனால் அவர் தம்மை சுவாமி என்றே கூறிக் கொள்கிறார். அது மட்டுமல்ல, ஒருமுறை என் மனைவி ஸீபா, ''சுவாமி நீங்கள் கடவுள் . உங்களால் இதைச் செய்ய முடியும்'' என்று கூறிய போது அவர் திரும்பச் சொன்னார் மிருதுவான குரலில் : ''நீயும் கடவுள்தான். ஆனால் அதை நீ இன்னும் உணரவில்லை.''

தமது பக்தர்கள் அனைவரிடமும் அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்

பாபாவும் இதையேதான் சொல்கிறார். எல்லா மதங்களையும் ஊடுருவிச் செல்லும் ஆன்மீக மின்சாரம் அவர். அனைத்துக்கும் பொதுவானது அடிப்படையானது அன்பு என்பதைக் கண்டு கொண்டு அதை போதிப்பவர்.

ஆந்திர மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் 1977-ல் சூறாவளி தாக்கிய போது பாபாவின் 52வது பிறந்த நாளை யொட்டி அவர் தரிசனத்துக்காக 25,000 பக்தர்கள் புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் குழுமியிருந்தனர். தமது பிறந்த நாள் உரையைத் தமது பக்தர்களுக்கு விடுக்கும் ஒரு வேண்டுகோளாக மாற்றி விட்டார் பாபா.

மனிதனுக்குச் சேவை புரிவதே மகேசனுக்குப் புரியும் சேவை!

களே என்பதை சுவாமி அடிக்கடி எடுத்துச் சொல்லி உணரச் செய்வார். நம்மால் உடனே அந்த நிலைக்கு உயர முடியா விட்டாலும் முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக சுவாமி கையாள்கிற முறை இது. ஒவ்வொரு பிரவசனத்தின் போதும் தெய்வாம்சத்தின் ஒரு பொறியையாவது நமது இதயத்தில் விதைக்க முயற்சி செய்வார்.

தம்மை நாடி வருவோரை 'பங்காரு' என்று அன்புடன் அழைப்பார் சுவாமி. தங்கமானவரே என்று அழைப்பதாகும் இது. 'மனிதன் தங்கம் போன்றவனே. உருக்கி வடிவமைத்து பாலிஷ் போட்டால் ஜொலிப்பான்' என்பார்.

'யாரையும் மட்டமாக எண்ணாதே; எல்லாரும் தெய்வாம்சம் பொருந்தியவர்களே, உன்னைப் போலவே!' என்பது பாபாவின் மற்றுமொரு அறிவுரை.

இஸ்லாமியனாகிய எனக்கு பாபாவின் அன்பும் அவர் விடுக்கும் செய்திகளும் ஏற்கத் தக்கனவாய் உள்ளன. ஸூஃபி எனப்படும் இஸ்லாமிய தத்துவ ஞானிகள் மனித குலத்தின் சகோதரத்துவத்தையே பேசுகிறார்கள். குறுகிய மதப் பிரிவுகளை உடைத்துக் கொண்டு போனால், சத்தியம் என்ற பேருண்மையே அனைத்துக்கும் அடிப்படை எனக் காண்போம் என்கின்றனர்.

''புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரில் சென்று உதவுங்கள்; புயல் நிவாரண நிதிக்கு நன்கொடையும் அளியுங்கள்'' என்றார். தமது சேவா தளத் தொண்டர்களை உடனடியாகக் கடற்கரையோரப் பகுதிகளுக்கு அனுப்பி விட்டார். சத்ய சாய் மத்திய அறக்கட்டளையிலிருந்து ஒரு லட்சம் நன்கொடை அறிவித்தார்.

ஐந்து நிமிஷங்களுக்குள் அங்கு கூடியிருந்த பக்தர்கள் எல்லோரும் நன்கொடைகளை அறிவிக்க அன்று மாலைக்குள் பத்து லட்சம் சேர்ந்து விட்டது! அதை விட முக்கியம் பலர் உடனே உதவிக்கரம் நீட்ட நேரில் செல்வதாகத் தீர்மானித்ததுதான்.

ஒரு மாத காலம் நீடித்த புயல் நிவாரணப் பணியில், சேவா தளத் தொண்டர்கள் பணம் பட்டுவாடா செய்தது தவிர, தினமும் பத்தாயிரம் பேருக்குச் சாப்பாடு போட்டனர். 2000 செட் புதிய சமையல் பாத்திரங்கள் விநியோகித்தனர். 4000 புடைவைகள், 4000 வேஷ்டிகள், 1000 குழந்தைகளுக்கான உடைகள் 500 கம்பளங்கள், 300 அரிக்கேன் விளக்குகள் விநியோகிக்கப் பட்டன.

தொண்டர்கள் இடுப்பளவு நீரில் இறங்கவும், பல மைல் நடக்கவும், அழுகி நாற்ற மெடுக்க ஆரம்பித்திருந்த உடல்களைத்



தூக்கி வந்து எரியூட்டி இறுதி மரியாதை செய்யவும், இடிந்த குடிசைகளைக் கட்டித் தரவும் தயங்கவில்லை. மருத்துவ உதவியும் பால், வைட்டமின் மாத்திரை விநியோக மும் செம்மையாக நடந்தன.

பாபா இத்துடன் திருப்தி அடைய வில்லை. இவ்வாறு புயல் மறுபடியும் தாக்கலாம் என்பதால் 1979 முடியுமுன்னர் ஐந்து சமுதாய மண்டபங்களை ஏழு லட்ச ரூபாய் செலவில் எழுப்பினார். குண்டூர், கிருஷ்ணா மாவட்டங்களில் இவை இன்

* ஸ்வாமியின் 50-வது பிறந்த நாளின் போது....

றைக்கு நிரந்தர பாதுகாப்பு முகாம்களாகத் திகழ்கின்றன. இயற்கை சோதிக்கும் சமயங் களில் இவை ஒவ்வொன்றிலும் ஒரே சம யத்தில் 2000 பேர் தங்கலாம்.

மனிதனுக்குச் சேவை புரிவதே மகேச னுக்குப் புரியும் சேவை என்பதுதான் தம்மிடம் வரும் பக்தர்களுக்குச் சாயி கூறும் முதல் அறிவுரை.

– எஸ். பஷிருத்தின்

'காயத்ரி' மகிமை!


''பஞ்ச பூதங்களை உள்ளடக்கிய ஓ, தெய்வீகத் தாயே! எங்கள் மனத்தில் இருள் கவிந்து கிடக்கிறது. தயவு செய்து இதனைத் தொலைதூரத்துக்கு நீக்கிவிட்டு, எங்கள் உள்ளத்தில் ஒளியைப் பாய்ச்சு.'' காயத்ரி மந்திரம் என்பது இதுவே. முதல் முதலான ஒரு சலனத்தால் எழுப்பப்பட்ட ஆதி ஒலியே ''ப்ரணவம்'' அல்லது 'ஓம்காரம்' ஆகும். அந்த ப்ரணவத்தின் விரிவடைந்த தோற்றமே காயத்ரி.

மந்திரத்தின் பொருள் போல் அதன் ஒலியும் மதிப்பு வாய்ந்தது. ஒலிக்கு அமைதி அளிக்கும் ஆற்றல் உண்டு. அது நாடிகளைச் சாந்தப்படுத்தி, அவற்றைத் தூங்க வைத்து விடுகிறது.

காயத்ரி தெளிவான புத்தி வேண்டுமெனக் கேட்கிறது. அந்த புத்தியில் உண்மை தோன்றிவிடுமல்லவா?

- பாபா

ஆன்மீக டாக்டரின் அன்பில் கட்டுண்ட சரீர டாக்டர்கள்!



☛ மேட்டுப்பாளையத்தில் தாய்-சேய் நலமுகாம்

மாணிக்கத்துக்கு வயது 22. தொடையில் கட்டி. புற்றுநோய் என்பது சீக்கிரமே புரிந்தது. ''தொடைக்கு மேல் இடுப்பு மட்டத்தில் உனது கால் முழுவதையும் நீக்கி விட வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோம்; இல்லாவிட்டால் உன் உயிருக்கே ஆபத்து'' என்று அதிர்ச்சி அளிக்காத விதமாக, சிறிது சிறிதாகக் கூறிப் புரிய வைத்தோம். ஆபரேஷனும் நடந்து முடிந்தது.

''ஒரு காலை இழந்து விட்ட என் எதிர்காலம் என்னாவது? என் குடும்பம் என்னாவது?'' என்று புலம்பினான். வாழ்க்கையிலேயே அவனுக்கு வெறுப்புத் தோன்றி விட்டது.

ஊன்றுகோல்கள் கொடுத்தோம். ''இவை, ''சாயி தாங்கு கோல்கள்''. உன்னைத் தாங்கிக் காப்பாற்றும்'' என்றோம். திடுமென்று அவனுக்கு ஏதோ உற்சாகம் வந்தது போலிருந்தது. அவற்றைப் பயன் படுத்திப் பார்த்தான். ''என்னை வீட்டுக்கு அனுப்பி விடுங்கள்; நான் பிழைத்துக் கொள்வேன்'' என்றான். ''என் குடும்பத்தை உழைத்துப் பாடுபட்டுக் காப்பாற்றுவேன்'' என்ற உறுதியோடு புறப்பட்டு விட்டான்.


இதுபோன்ற சாயி தாங்குகோல்களை சாயி பக்தர்கள் நன்கொடைகளாக வழங்குகின்றனர். ஊனமுற்றோருக்கு அவை விநியோகிக்கப்படுகின்றன, பகவானின் அருளாசிகளோடு.

☛ உலக ரத்ததான தினம்



நாங்கள் இரத்தத்தை ''அன்புத் திரவம்'' என்றுதான் அழைப்போம். எங்கள் ரத்ததான முகாம் நடக்கும் போது ரத்தத்தின் ஒவ்வொரு அணுவிலும் நாங்கள் இறை அருளை ஏற்றுகிறோம்! எப்படியெனில், இம் முகாம்கள் நடக்கும் போது பஜனையும் நடந்தவாறு இருக்கும். பகவான் நாமம் எங்கும் பரவி, விரவி நிற்கும் நிலையில், ரத்த தானம் செய்யப்படுவதால் அது யாரைச் சென்றடைகிறதோ அவருக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் கடைசி ஞாயிற்றுக் கிழமையன்று உலகெங்கும் உள்ள சாயி பக்தர்கள் ரத்ததானம் செய்கின்றனர். அன்று மட்டும் 7000 முகாம்களில் ரத்தம்

☛ அன்புத் திரவம்



சேமிக்கப்படுகிறது. இது தவிர, அவ்வப் போது யாருக்கேனும் ரத்தம் தேவை என்று கேள்விப்பட்டால் எந்த சாயி பக்தரும் தயங்காமல் ஓடுவார், தானம் செய்ய.

முன்பு, ''கண்ணில் பூ விழுந்து விட்டது'' என்பார்கள். ''காடராக்ட்'' என்றாலே இன்று அனைவருக்கும் தெரியும். எளிதான ஆபரேஷன் மூலம் இவர்கள் பார்வையைத் திரும்பப் பெற முடியும். கடந்த இருபது ஆண்டுகளாக சாயி பக்தர்கள் கண் சிகிச்சை முகாம் நடத்தி வருகிறார்கள். 1971ல் முதல் முகாமில் 48 நோயாளிகளுக்குச் சேவை புரிந்து, அவர்களில் ஆறு பேருக்கு மட்டுமே ஆபரேஷன் நடந்தது. இப்போது நடப்பனவோ, பிரும்மாண்ட முகாம்கள்! ஒரே நாளில் ஐயாயிரம் நோயாளிகள் வரை பரிசோதிக்கப்பட்டு 450 பேருக்கு ஆபரேஷன் நடந்திருக்கிறது. எண்பது சதவீத கண்சிகிச்சை முகாம்களில் மதுரை அரவிந்த் கண் ஆஸ்பத்திரி பங்கேற்று உதவியிருக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஐந்து லட்சம் நோயாளிகளுக்கும் அதிகமாகப் பரிசோதனைகளுக்கு உள்ளாகி அவர்களில் ஒரு லட்சத்து எட்டாயிரம் பேர் ஆபரேஷன் ஆகிப் பார்வை பெற்று மகிழ்ந்திருக்கின்றனர்.



☛ போலியோ முகாமில் சிகிச்சை பெற்ற 114-ம் நெ. சிறுவன்

போலியோ எனப்படும் இளம் பிள்ளைவாதத்தால் பாதிக்கப்படும் குழந்தைகள் இந்த நாட்டில் ஏராளம். இதற்காகப் போலியோ முகாம்கள் நடத்தியுள்ளோம். இந்த முகாம்களில் காலின் பலம் இழந்த சிறுவர் சிறுமியருக்கு எளிய ஆயுதச் சிகிச்சை செய்கிறோம். அதன் மூலம் பாதிக்கப்பட்ட காலை நிமிர்த்தி, நேராக்குகிறோம். பிறகு, ''காலிஃபர் ஷு'' எனப்படும் விசேஷ காலணியை மாட்டி, ஊனமுற்ற குழந்தையை நடக்க வைத்து விடுகிறோம். ''பழகப் பழக நன்றாக நடக்க வந்து விடும்'' என்று தைரியம் சொல்லி ஊக்குவிக்கிறோம். 'ஒன்றுக்கும் உதவாத குழந்தை' என்று கருதப்பட்ட நிலை மறைந்து, அந்தச் சிறுவன் (அல்லது சிறுமி) சமுதாயத்துக்குப் பயனுள்ளவனாக மாறுகிறான். இதுவரை 2500 குழந்தைகள் இந்தச் சேவையில் பயன் அடைந்துள்ளன. நெய்வேலியில் ஆண்டு தோறும் இந்தப் பணியைச் செய்கிறோம்.

☛ போலியோ முகாமில் தாய்-சேய்



எங்கள் பிரசாரத்தின் பயனாக ஏராளமான சாயி பக்தர்கள் கண்தானம் செய்வதாகத் தீர்மானித்து கண் வங்கி உள்ள நகர்களில் தங்கள் பெயர்களைப் பதிவு

செய்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் இறந்தால் அவர்கள் ஒவ்வொருவரின் விழித் திரைகளும் பார்வையற்ற இருவருக்குப் பார்வை அளிக்கும்.

''சாயி கிருபா'' என்ற பெயரில் சென்னையில் மட்டுமே நான்கு நிலையங்கள் உள்ளன. இங்கே நோயாளிகள் பரிசோதிக்கப்பட்டு மருந்து பெறுகின்றனர். சராசரியில் ஒரு நாளைக்கு 150 நோயாளிகள் இந்த மருத்துவ நிலையங்கள் ஒவ்வொன்றுக்கும் வருகின்றனர். இப்படி நாட்டில் எத்தனையோ சாயி கிருபாக்கள் உண்டு. பலவற்றில் ரத்தப் பரிசோதனை, இருதயப் பரிசோதனை (இ.ஸி.ஜி.) போன்றவற்றுக்கும் வசதி உண்டு.

இதுவரை 186 கிராமப்புற மருத்துவ முகாம்கள் நடத்தியிருக்கிறோம். இவற்றால் 16,770 நோயாளிகள் 1991ம் ஆண்டில் மட்டும் பயன் அடைந்துள்ளனர். பல் சிகிச்சை முகாம், புற்றுநோய் கண்டுபிடிப்பு முகாம், இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் முகாம் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

மனிதர்களுக்கு மட்டுமின்றி வாயில்லா ஜீவன்களுக்கும் பணியாற்றுகிறோம். 1991ல் மட்டும் இவ்வாறு மூன்று முகாம்கள் நடத்தி 2400 மாடுகளுக்குச் சிகிச்சை அளித்தோம்.

சிகிச்சை அளித்தால் போதாது. நோய்த் தடுப்பு நடவடிக்கை வேண்டும் என்பார் பகவான் பாபா. இதற்கும் பாடுபடுகிறோம். மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறோம். ஆரோக்கியம், சுகாதாரம் முதலியன கற்றுத் தருகிறோம்.

எங்களுடன் சேர்ந்திருந்து பணியாற்றும் நூற்றுக்கணக்கான டாக்டர்கள், மருத்துவ நிபுணர்கள், சேவாதள ஊழியர்கள் ஆகிய அனைவருக்கும் ஒரு விஷயத்தில் ஆழமான நம்பிக்கை. அது, ''உதவும் கரங்கள் பிரார்த்தனை செய்யும் உதடுகளை விடப் புனிதமானவை'' என்ற பாபாவின் பொன்மொழிதான்.

– டாக்டர். எம். விஜய்குமார்

சென்னையின் பெருமையும் பாபாவின் மகிமையும்

பஜனை மண்டலிகளாக ஆரம்பம். அவற்றை சேவா நிறுவனங்களாக இணைத்தார் பாபா. இறையுணர்வோடு மனிதாபிமானப் பணிகளிலும் ஈடுபடச் செய்தார். அது 1963.

சென்னையில்தான் இந்த மாற்றம் நிகழ்ந்தது என்பது தமிழகத்துக்குப் பெருமை.

இன்று உலகெங்கும் 120 நாடுகளில் 3000க்கு மேலான மையங்களுடன் இந்தியாவின் மூலை முடுக்கு கிராமங்களிலும் பரவியுள்ளன, சத்திய சாயி சேவா நிறுவனங்கள் என்பது பகவானின் மகிமை.

ஆன்மீகப் பணி, கல்விப் பணி, சுகாதரப் பணி, மருத்துவப் பணி, இவை தவிர ஏழை எளியோருக்கு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் சாயி சேவா நிறுவனங்கள் முயற்சி மேற்கொள்கின்றன. எல்லாவற்றையும் தொண்டர்கள் செய்து விடுவது அல்ல நோக்கம். மக்களை ஊக்குவித்து, அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்ள வழிகாட்ட வேண்டும். மிகப் பெரிய பதவிகளில் இருப்பவர்கள் கூட சாயி தள தொண்டர்களாகத் துப்புரவுப் பணியில் ஈடுபடும் போது மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள். சாயி சேவா நிறுவனம் தத்து எடுத்துக் கொண்ட கிராமம் தூய்மையும் புனிதமும் அடைகிறது.

வாசகர் வட்டம் அல்லது 'ஸ்டடி சர்க்கிள்' வாரம் ஒருமுறை கூடி பாபாவின் கருத்துக்களைப் படித்துப் பரிமாறிக் கொள்வதுடன் ராமாயணம், பாரதம், பைபிள், குரான் போன்ற நூல்களில் இருந்தும் அவரவரும் தமக்குப் பிடித்தமான ஒரு பகுதியைப் பிறருக்குப் படித்துக் காட்டி விளக்கலாம்.

– கே. எஸ். ஸ்ரீனிவாசராகவன்

ஒளிந்து கொண்டிருந்த கிராமம் ஒளிர்கிறது!

பிரசாந்தி நிலையம் என்பது பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவதரித்த இடம். புட்டபர்த்தி என்ற பெயரில் முன்பு ஒருவருக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டிருந்த கிராமம் இன்று ஒரு மாபெரும் ஆன்மீகக் கேந்திரமாக மட்டுமின்றி கல்வி கேந்திரமாகவும் விளங்குகிறது.

இங்கு சத்யசாயி டிரஸ்ட் வெளியீடுகளாக 17 இந்திய மொழிகளில் பாபா எழுதிய அல்லது பாபாவைப் பற்றிய நூல்கள் கிடைக்கின்றன. 22 அயல்நாட்டு மொழிகளில். தவிர, பார்வையற்றவர்களுக்காக பிரெய்ல் மொழியிலும்.



REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka


KALKI 27.12.91
ரூ. 3.00
கல்கி
பொன்விழா ஆண்டு
இந்த இதழுடன்
காலண்டர் பரிசுகள்!
பி.ஜே.பி.:
எழுச்சிகளும்
பின்னடைவுகளும்...



பணம் சேமிக்க புதிய வழி
இப்பொழுது
ஃபாரெக்ஸ் வாங்கும்
போது ரூ.4/-
சேமியுங்கள்.
பாலுடன் கூடிய ஃபாரெக்ஸ் ஸீரியல் 400 கிராம் ரீஃபில் பேக் வாங்கும் பொழுது ரூ. 4/- மிச்சமாகிறது. நான்கு மாதங்களிலிருந்து உங்களுடைய குழந்தைக்குப் பாலுடன் கூடிய ஃபாரெக்ஸ் ஸீரிய்லின் ருசிமிகு நற்பயன்களை வழங்கி, அவன் நன்கு வளர்வதைப் பார்த்து மகிழுங்கள்.
Farex®
CEREAL WITH MILK
TASTIER, CREAMIER
Rs.4/- LESS than the tin pack
டின் பேக் விலையைவிட ரூ.4 குறைவு
A tastier way to grow
ஃபாரெக்ஸ்
சுவையுடன் வளரும் வழி.



கல்கி
12.1.92
பொங்கல்
சிறப்பிதழில்
டான் கலிலியோ
பரபரப்பான மர்மத் தொடர் ஆரம்பம்
எழுதுபவர் : குமுதம் மர்ம நாவல் போட்டியில் ரு. 7500/- முதல் பரிசு பெற்ற
பத்மா ரவிசங்கர்
மற்றும் பல புதுமையான அம்சங்கள்
அதிக பக்கங்கள்; அதே விலை



☛ ஸ்ரீநகருக்குப் புறப்பட்ட ரதம்

ஏகதா யாத்திரை எதற்காக?

முக்கடலும் சங்கமிக்கும் கன்யா குமரி. ஊரே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பா. ஜ. க. வின் கொடி, தோரணங்கள், ஸ்பீக்கர்களில் 'வந்தே மாதரம்', 'ஜெய் ஸ்ரீராம்!'

தனது 15,000 கி.மீ. ஏகதா யாத்திரையைத் துவக்குவதற்கு முன்னர், காலை ஐந்து மணிக்கெல்லாம் சரிகை வேட்டி, சரிகை அங்கவஸ்திரம், நெற்றியில் குங்குமப் பொட்டு மற்றும் குடும்ப சகிதம் பகவதி அம்மனின் அருளை வேண்டி அவளது சந்நிதியில் நின்றார் பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் முரளி மனோஹர் ஜோஷி.

பிறகு விவேகானந்தர் பாறையில் உள்ள தியான மண்டபத்தின் உள்ளே உறுதி மொழி எடுத்துக் கொண்டார் : ''எங்களைத் தியாகம் செய்தாவது நாட்டு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்போம் என்று இந்தத் தருணத்தில் சூளுரைக்கிறோம்.''

இந்த உறுதிமொழிக்குப் பிறகு, விஸ்வ ஹிந்து பரிஷத் ஏற்பாடு செய்திருந்த யாகத்திலும் கலந்து கொண்டார்.

யாத்திரை துவக்க விழா மேடை, கடற்கரையை ஒட்டிப் போடப்பட்டிருந்தது. மேல்கூரை இல்லாமல் போடப்பட்ட மேடை. அதில் ஆதிசங்கரர், சுப்பிரமணிய பாரதி, படேல் போன்ற ஞானிகள், பெரியோர்கள் படங்கள்.

மேடையில் நான்கு சிறு கலசங்களில் நாட்டின் புண்ணிய நதிகளிலிருந்து எடுத்து வரப்பட்ட புனித நீர் மற்றும், மகான்கள், ஞானிகள் அவதரித்த புண்ணிய பூமியிலிருந்து எடுத்து வரப்பட்ட மண் வைக்கப்பட்டிருந்தது. இரண்டு ரதங்கள் மேடைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. வெள்ளை வண்ண ரதம், காஷ்மீர் படகு வீடு மாடலில் அமைக்கப்பட்டிருந்தது. எல்லாம் குஜராத் மாநில கட்சிச் செயலாளர் நரேந்திர மோடியின் ஏற்பாடு. சிவப்பு வண்ணத் தொப்பி அணிந்து கொண்டு ஜெய்ஸ்ரீராம் கோஷம் போடும் தொண்டர்கள். ரதத் துக்குச் சாரதி ஒரு சீக்கிய இளைஞர்!

சுமார் ஐயாயிரம் பேர் கொண்ட கூட்டம், ஜுர வேகத்தில் 'வந்தே மாதரம், ஜெய் ஸ்ரீராம் ஓம் காளி, ஜெய் காளி' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தது.

மேடையில் தலைவர்களுக்கு இடையில் பச்சை சபாரியில் சோ. அடிக்கும்



வெயிலைத் தாங்க முடியாமல், அடிக்கடி மேடையின் பின்புறத்தில் போய் நின்று கொண்டார்

"ராமர் ஹிந்துக்களுக்கு மட்டும் சொந்தமானவரல்ல; அவர் இந்தியக் கலாசாரத்தைப் பிரதிபலிப்பவர். இந்திய தேசியத்தைப் பிரதிபலிப்பவர். இந்த ரதயாத்திரையால் கலவரம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அத்வானி சென்றபோது ஏற்பட்டதா?'' என்று கேட்டார் துணைத் தலைவர் சிக்கந்தர் பக்த்.

''1990ல் நான் சென்ற யாத்திரை போலி மதச்சார்பின்மையை எதிர்த்தது; இப்போது ஜோஷி அவர்கள் செல்லும் யாத்திரை, பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்து. பாரத அன்னையின் காலைத் தொட்டு ஆசி வாங்கிக் கிளம்புவது போல கன்யாகுமரியில் இருந்து ஜோஷி கிளம்புகிறார். தேசம் இன்னொருமுறை பிரிவினைக்குள்ளாவதை நாங்கள் அனுமதிக்கவே முடியாது'' என்று முழங்கினார் அத்வானி.

ஸ்ரீநகரில் உள்ள லால் சௌக்கில் ஏற்ற வேண்டிய தேசியக் கொடியைப் பகத்சிங், ராஜகுரு சகோதரர்களும், 1965-ல் உயிர்நீத்த 'பரம் வீர்சக்ர' விருது பெற்ற அப்துல் ஹமீதின் மகன்களும் ஜோஷியிடம் வழங்கினார்கள். பின்னர் ஜோஷியின் உரைக்குப் பிறகு அத்வானி ரதத்துக்கு முன்னால் தேங்காய் உடைக்க, ரதம் ஸ்ரீநகரை நோக்கிக் கிளம்பியது. எல்லாம் திட்டமிட்டபடி நடந்தால், வரும் ஜனவரி 26-ம் தேதி அங்கு தேசியக் கொடியேற்றப்படும்.

ஜோஷியின் ரதத்துக்குப் பின்னால் நூற்றுக்கணக்கான கார்கள், வேன்கள், லாரிகள். மெள்ள மெள்ளத் தன் யாத்திரையைத் தொடர்ந்தது ரதம். ஊருக்கு ஊர் திரளான மக்கள் கூடி ஜோஷி மீது மலர் வீசினார்கள். சுசீந்திரம் அருகே உள்ள பாலத்தில், போக்குவரத்து நெரிசலில் நின்று கொண்டிருந்த உள்ளூர்க்காரரான கேசவன் என்பவரிடம், ''யாத்திரையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டோம்.

''தேசபக்தி, தெய்வபக்தி இரண்டும் குறைந்துவிட்ட இந்த நாளில் இதுபோன்ற யாத்திரைகள் மிகவும் அவசியம்'' என்றார் அவர்.

கிறிஸ்துவ மக்கள் அதிகம் உள்ள பகுதிகளில், மக்கள் தெருவுக்குக் கூட வராமல் வீட்டுக்குள்ளேயே இருந்து கொண்டு பார்த்தார்கள். பத்மனாபபுரத்தில் கடை வைத்திருக்கும் முஸ்லீம் தோழரிடம் யாத்திரை பற்றிக் கேட்டோம். புன்னகையைப் பதிலாக்கினார். அந்தச் சமயம் பார்த்து ஊர்வல வேன் ஒன்றிலிருந்து முஸ்லீம் சமூகத்தைச் சிறுமைப்படுத்தும் கோஷம் பலமாகக் கேட்டது. நாம் மேலும் அவரிடம் கேள்வி எதுவும் கேட்காமல் இடத்தைக் காலி செய்தோம்!

மார்த்தாண்டம் அருகே பாரத அன்னையைப் போன்று மேக்-அப் போட்டு, ஒரு பெண்ணை உயரத்

☛ ஏற்ற வேண்டிய தேசியக் கொடியைப் பெறும் ஜோஷி



ஆச்சர்யப் பரிசு!

இந்த இதழின் மையப் பக்கத்தில் புத்தாண்டுப் பரிசாக நான்கு காலண்டர்கள் இணைத்திருக்கிறோம்.

ஒன்றை நீங்கள் வைத்துக் கொண்டு மற்ற மூன்றையும் கல்கி வாங்கிப் படிக்காத உங்கள் நண்பர்களுக்குப் புத்தாண்டு அன்பளிப்பாய் வழங்கலாம். அப்படியே கல்கியின் சிறப்பு பற்றி நாலு வார்த்தை கூறி, அவர்களையும் கல்கி வாங்கச் செய்யலாமே. மறக்காமல் பொங்கல் சிறப்பிதழ் குறித்தும் சொல்லி வையுங்கள்! என்ன, சரிதானா?

- ஆசிரியர்

தில் நிறுத்தியிருந்தார்கள். தத்ரூபம். தமிழக எல்லையான களியக்காவிளையில், நல்ல கூட்டம். ''நான் இந்த யாத்திரையை மேற்கொள்ளலாமா?'' என்றார் ஜோஷி. ''கொள்ளலாம்'' -என்றது கூட்டம். ஜோஷியின் சிறு சிறு உரைகளை எழுச்சியுடன் மொழி பெயர்த்தவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி.

தமிழ்நாட்டை விட கேரளாவில் அலங்காரமான வரவேற்பு வளைவுகள். யாத்திரையில் வந்தவர்களும் சரி, ஆங்காங்கே வந்த கூட்டங்களிலும் சரி; பளிச்செனப் பட்டது இளைஞர்களின் முகங்கள் தான். நெற்றியில் சந்தனம், குங்குமம் வைத்து 'ஜெய்ஸ்ரீராம்' சொல்லும் இளைஞர்கள்!

முரளி மனோஹர் ஜோஷியை ஓய்வற்ற அவரது நிகழ்ச்சி நிரலினிடையே சில நிமிஷங்கள் நமக்காக ஒதுக்கச் சொல்லி, இந்த ''ஏகதா யாத்திரை எதற்காக?'' என்று கேட்டோம்.

''நாட்டின் பல பகுதிகளிலும் பயங்கரவாதமும், பிரிவினைவாதமும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கின்றன. போகிற போக்கைப் பார்த்தால் காஷ்மீர் நம் கையை விட்டுப் போய் விடும் போலிருக்கிறது. இந்த நிலையைத் தவிர்க்கவே, எனது யாத்திரை. யாரையும் எதிர்த்து நடத்தப்படுவதல்ல இது. சுதந்திரம் பெற்றதிலிருந்து 75,000 கோடி ரூபாயை காஷ்மீரில் நாம் கொட்டியிருக்கிறோம். இதனால் விளைந்த பயன் என்ன? அரசியல்வாதிகளின் விளையாட்டினால் அந்த மக்கள் நம்மிடம் இருந்து விலகிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் லட்சக்கணக்கான இந்து குடும்பங்கள் காஷ்மீரிலிருந்து விரட்டப்பட்டிருக்கின்றன. அவர்கள் அகதிகளாக டெல்லியிலும், வேறு பல இடங்களிலும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு செய்தது என்ன? ஸ்ரீநகரில் லால்சௌக் என்ற இடத்தில் காஷ்மீர் தீவிரவாத அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள், ''எவனொருவன் தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்தானோ அவன் வந்து இந்தியக் கொடியை ஏற்றிப் பத்து லட்சம் வெகுமதி வாங்கிக் கொண்டு போகலாம்'' என்று எழுதியிருக்கிறார்கள். என்ன தைரியம் அவர்களுக்கு? என்னுடைய யாத்திரை இவர்களுக்கு ஒரு பாடமாக அமையும்'' என்றார் ஜோஷி.

''யாத்திரை செல்லும் வழியில் 'டென்ஷன்' உண்டாகும் என்ற குற்றச்சாட்டு பற்றி?''

''டென்ஷன் மற்ற, கட்சித் தலைவர்களுக்குத் தானே தவிர, யாத்திரை போகும் வழியில் கிடையாது. தேச ஒற்றுமைக்காகப் போகும் யாத்திரை பற்றி, அனைத்துக் கட்சிக் கூட்டம் போட்டுத் தடை செய்வது பற்றிப் பேசுகிறார்கள். அங்கேயாவது, பயங்கரவாதத்தையும், பிரிவினை வாதத்தையும் தடுப்பது பற்றிப் பேசியிருக்கலாம்.''

''நீங்கள் கைது செய்யப்பட்டாலோ அல்லது அரசு ஏதேனும் உறுதிமொழி கொடுத்தாலோ யாத்திரை நின்றுவிடுமா?''

''எந்தக் காரணத்தைக் கொண்டும் யாத்திரை நிற்காது.''


''ஸோமநாத் அயோத்தி யாத்திரையை மேற்கொண்ட அத்வானியை விட அதிகப் புகழ் பெற வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நீங்கள் யாத்திரை துவங்கியிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டு பற்றி?''

''நல்ல கற்பனை!''

பி. ஜே. பி. தொடர்பான கட்டுரைகளை சேகரித்துத் தொகுத்தவர் : ப்ரியன்


படங்கள் : ராஜன்

அட்டை வண்ணப்படம் : டி. ராமமூர்த்தி



... பருகுவீர் பரிபூரண உணவை

ஆம், பருகுவீர் காம்ப்ளான். உங்கள் உடலுக்குத தேவையான அனைத்து 23 இன்றியமையாத ஊட்டச்சத்துக்களும் விஞ்ஞான ரீதியில் திட்டமிட்ட விகிதங்களில் அடங்கியுள்ள திட்டமிட்ட பரிபூரண உணவாகும் காம்ப்ளான்.



23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட
விகிதங்களில்

பால் சேர்க்கத்
தேவையில்லை

காம்ப்ளான்[R]

திட்டமிட்ட பரிபூரண உணவு.



GX/20/202 TAM R

பா. ஜ. க.

சிறந்த கொள்கைகளும் வோட்டு வாங்கும் தந்திரங்களும்

"மசூதியை இடிப்போம்; கோயிலைக் கட்டுவோம்'' என்றெல்லாம் சூளுரை உரைத்து, ரத யாத்திரை சென்று இந்திய மக்களின் மத உணர்வைத் தூண்டி விட்டு வாக்குகளை அறுவடை செய்தாகி விட்டது. ஆனால் உத்தரப் பிரதேசத்தில் ஆளும் கட்சியாக வந்த பிறகும் ஒன்றும் நடக்கக் காணோம். பா. ஜ. க. தலைவர்களுக்கு நன்றாகவே தெரியும், ''வேகத்தில் ஏதேனும் செய்து விட்டால் தங்களது அரசே தாங்காது'' என்று. அதனால்தானோ என்னவோ பிரச்னைக்கு 'ஸ்பீட் பிரேக்கர்' போடுகிறார்கள். ஆனால் ஹிந்து தீவிரவாத அமைப்பான விஸ்வ ஹிந்து பரிஷத் ஒத்துக் கொள்ளுமா? அது அழுத்தம் கொடுக்கவே, பாப்ரி மசூதியைச் சுற்றி உள்ள 2.77 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியது, உ. பி. அரசு. இந்த சலசலப்பின் விளைவாக, நவம்பரில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ப.லமாக வெற்றிக் கொடி நாட்டலாம் என்று பா. ஜ. க. கருதியது. ஆனால் கடுமையான ஏமாற்றம். இருப்பதைத் தக்கவைத்துக் கொள்வதே பெரும்பாடு ஆகி விட்டது.

1952 தேர்தலில், பதிவான வாக்குகளில் 3.1 சதவீதம் வாங்கிய ஜனசங்கம் (பா.ஜ. க. வின் பூர்வீகப் பெயர்) ஒவ்வொரு தேர்தலிலும் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டு கடைசியாக 1971 தேர்தலில், 7.4 சதவீதம் வாங்கியது. பின்னர் 1977 மற்றும் 1980ம் ஆண்டு தேர்தல்களில் ஒன்றுபட்ட ஜனதா கட்சியின் அங்கமாக இருந்து, 1980க்குப் பிறகு பாரதிய ஜனதா கட்சியை ஆரம்பித்தனர். 1984-ம் ஆண்டு நடந்த தேர்தலில், இந்திராகாந்தி அனுதாப அலை இருந்தாலும், 71-ல் வாங்கிய அதே 7.4 சதவீதம் வாக்கு வாங்கியது பா. ஜ. க. தன்னுடைய வோட்டு வங்கியைக் கட்டுக் குலையாமல் ஜனசங்கம் வைத்திருந்தது என்பது இதிலிருந்து தெரியவரும். 1989, மற்றும் 1991-ல் நடந்த தேர்தல்கள் பா.ஜ.க. வுக்கு ஒரு புதிய திருப்பத்தைத் தேடிக் கொடுத்தன. ஜனதா - தளமும், பா. ஜ. க. வும் பல தொகுதிகளில் வோட்டுக்கள் சிதையாவண்ணம் உடன்பாடு செய்து கொண்டன. 1986-ல் பாப்ரி மஸ்ஜித் கதவுகள் திறக்கப்பட்டதால் விளைந்த ஹிந்து உணர்வுகளைத் தட்டி எழுப்பி, வோட்டுக்களாக மாற்றியது பா. ஜ. க. 1991 தேர்தல் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஸோமநாத்திலிருந்து அயோத்திக்கு தாமரைச் சின்னம் போட்ட ரதத்துடன் அத்வானி ஊர்வலம் சென்றபோதே அனைவருக்கும் புரிந்து விட்டது. பின்னர் வந்த தேர்தலில் எதிர்பார்த்தபடி வெற்றிகளை அள்ளிக் குவித்தது. 1984-ல் இரண்டு இடங்களைப் பெற்றிருந்தது, 1989-ல் 86 ஆக உயர்ந்து, இன்று, பாராளுமன்றத்தில் பா. ஜ. க. வின் பலம் 119.

மக்களின் மத, பக்தி உணர்வுகளைத் தூண்டித்தான் பா. ஜ. க. வோட்டு வங்கியில் செல்வாக்கை அதிகரிக்க வேண்டுமா? அந்த கட்சிக்குக் கொள்கைகள் இல்லையா? அவைகளைச் சொல்லி வோட்டுக் கேட்கக் கூடாதா? ஹிந்து ராஜ்யத்தை



ஸ்தாபிப்போம் என்று சொல்லித்தான் மக்களிடையே பிரபலமாக வேண்டுமா?


பா. ஜ. க. வை ஆரம்பித்தபோதே அதன் ஐந்து ஆதாரக் கோட்பாடுகளாக, தேசியம் - தேசிய ஒருமைப்பாடு, ஜன நாயகம், சீரான மதச்சார்பின்மை, காந்திய சோஷலிஸம், அரசியலில் தூய்மை ஆகியவை வகுக்கப்பட்டன. பல நல்ல கொள்கைக் குறிப்புகள், இதன் செயல் திட்டத்தில் உள்ளன. இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் வேலை கொடுப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்று கட்சி சொல்கிறது. இட ஒதுக்கீடு விஷயத்தில் விடுபட்டுப் போன பிற்படுத்தப்பட்ட மக்களையும் சேர்த்துக் கொண்டு, பொருளாதார அளவுகோலை வைக்க வேண்டும் என்கிறது கட்சி. அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம், மைனாரிட்டி கமிஷனுக்குப் பதிலாக அனைவருக்கும் பொதுவாக மனித உரிமை கமிஷன், காஷ்மீருக்குத் தனி அந்தஸ்தைக் கொடுக்கும் அரசியல் சட்டம் 370ஐ நீக்குவது என்று, பல நோக்கங்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக கட்சி வலியுறுத்துவது காந்திய சோஷலிஸம். ''பொருளாதாரத்தின் மையமாக மனிதன் இருக்க வேண்டும். இயந்திரம் அல்ல'' என்ற தீனதயாள் உபாத்யாயாவின் கருத்துத்தான் கட்சியின் கருத்தும்.

அதற்காக நவீனப்படுத்தலுக்கு பா. ஜ. க. எதிரி அல்ல. நாட்டின் பாதுகாப்பு, அணு ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி போன்றவற்றில் நாம் நவீனப்படுத்துதலைத் தயங்காமல் புகுத்த வேண்டும் என்பது கட்சியின் கருத்து.

இவை தவிர, பெண்களுக்கு, தொழிலாளர்களுக்கு, மற்றும் விவசாயிகளுக்கும் பல நல்ல திட்டங்கள் உண்டு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, சிறந்த கொள்கைகளை வைத்துக் கொண்டிருந்தும் அவற்றை விளக்கிச் சொல்லி பாமர மக்களிடம் வோட்டு வாங்க முடியவில்லை. அதற்காகத்தான் மத உணர்வுகளைத் தூண்டுகிறது. இதுதான் இந்தியாவின் துரதிர்ஷ்டம். இங்கே நல்லன விலை போகாது. தந்திரம் செய்தாக வேண்டியிருக்கிறது.

''அயோத்தி பிரச்னையைக் கண்டிப்பாகத் தீர்ப்போம்'' என்று பா. ஜ. க. சொன்னாலும் அந்தக் குரலில் உறுதி இல்லை. ''மசூதியும் கோயிலும் பக்கம், பக்கம் இருக்கலாமே!'' என்று ஜே. பி. மாத்தூரிடம் சொன்ன போது, ''ஓ, இருக்கலாமே!'' என்றார்.

''சரி. உடனே பக்கத்தில் கோயிலைக் கட்ட வேண்டியதுதானே'' என்ற போது, ''மசூதி இருக்கும் இடத்தில் கோயிலைக் கட்டலாம் என்றிருக்கிறோம்'' என்கிறார்.



''அப்படியானால் மசூதியை இடிக்க வேண்டிவருமே, அங்கேதானே பிரச்னை'' என்று நாம் சொன்னால், ''அதுதான் முடிவான தீர்வாக இருக்கும்'' என்கிறார்.

ஆனால் பா.ஜ.க. இப்போது ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டு விட்டது. ''அதாவது ஆட்சியைப் பிடிக்கத்தான் அயோத்தியைப் பயன்படுத்த வேண்டுமே தவிர, இழக்க அல்ல. ராமர் அலையை அடுத்த தேர்தல் வரை தக்கவைத்துக் கொண்டிருப்பது முடியாத காரியம் என்பதும் அதற்குப் புரிந்து விட்டது. அவசரப்பட்டு எதையாவது செய்யப் போய், மத்திய அரசின் நடவடிக்கைக்கு ஆளாகக் கூடாது என்பதிலும் பா.ஜ.க. தெளிவாக இருக்கிறது!

ஆகவேதான் இந்தச் சூழலில் வேறு ஆயுதத்தைக் கையில் எடுப்போம்; அதை வைத்து மத்தியில் ஆட்சியைப் பிடிப்போம் என்று முடிவு செய்துதான், ஏகதா யாத்திரையை ஆரம்பித்து இருக்கிறது.

''ராமன் இந்திய மக்களுக்குப் பொதுவானவன், அவன், கலாசாரத்தின் சின்னம்'' என்றெல்லாம் சொல்லிக் காவிக் கொடியைத் தூக்கிப் பிடித்துக் களத்தில் வெற்றி கொண்டது போல, பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றை எதிர்த்து நடக்கும் ஒருமைப்பாட்டு யாத்திரை என்று சொல்லி, சகல மக்களின் ஆதரவையும் பெற்று விடலாம் என்று கருதுகிறது கட்சி! அதைவிட இது எவ்வளவோ மேல்!

பி.ஜே.பி. முதல்வர்கள்— ஓர் அறிமுகம்

பா.ஜ.க. முதல்வர்களிலேயே இன்றைக்கு மிகவும் சங்கடமான நிலையில் இருப்பவர் உ.பி. முதல்வர் கல்யாண்சிங் தான். பதவியேற்றவுடன், ''நான் பாபர் மசூதியை இடிக்க மாட்டேன்; ஆனால் ராமர் கோயிலைக் கட்டியே தீருவேன்'' என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு இன்று அந்த கட்சியிலும், இயக்கத்திலும் உள்ள தீவிரமானவர்களின் கிடுக்கிப்பிடியில் மாட்டிக் கொண்டு விழிக்கிறார், இந்த முதல்வர். இந்து மத தீவிரவாதிகளின் வேகமான செயல்பாட்டினால் தமது அரசுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சுகிறார்.


அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் கல்யாண் சிங், 1977 ல் ஒன்று பட்ட ஜனதா கட்சி மந்திரி சபையில் சுகாதார அமைச்சராக இருந்து நல்ல பெயர் தட்டிக் கொண்டு போனவர். அப்போது மாநிலத்தின் ஒரு பகுதியில், மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களால் மக்கள் பலர் மடிந்த போது, இவர் மிக விரைவாகச் செயல்பட்டு, வெளி நாட்டிலிருந்து தடுப்பு மருந்துகளைத் தருவித்து, நோயைக் கட்டுப் படுத்தினார். அது போலவே டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டும் என்பதற்காக நகரங்களில் பணியாற்றிய பல டாக்டர்களை கிராமப் பகுதிகளுக்கு டிரான்ஸ்பர் செய்தார். இதனால் பாதிக்கப்பட்ட பல டாக்டர்கள் பெரிய இடங்களில் சிபாரிசு பிடித்து வந்த போதும் கல்யாண் சிங் மசியவில்லை. இதன் காரணமாக அப்போது மத்தியில் சுகாதார அமைச்சராக இருந்த ராஜ் நராராயணனுக்கும் இவருக்கும் மோதல் கூட நேர்ந்தது!

1962 ல் ஜனசங்கத்தில் (பா.ஜ.க.வின் முந்தைய பெயர்) இணைந்தவர் இவர். மிகவும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர். எமர்ஜென்ஸியில் இருபது மாதங்கள் 'உள்ளே' இருந்தவர்.




☛ சாந்த குமார்


☛ கல்யாண்சிங்



ராஜஸ்தான் மாநில பா.ஜ.க. முதல்வர் பைரான் சிங் ஷெகாவட் அரசியல் நெளிவு, சுளிவுகள் அறிந்தவர். 1977 - ல் ஜனதா கட்சி முதல்வராக இருந்தவர். அப்போது இவர் அறிமுகப்படுத்திய 'அந்த்யோதயா', திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது. எளிய மக்களும் ஷெகாவட்டை அணுக முடியும். தம் வீட்டுக் கதவுகள், எப்போதும் மக்களுக்காகத் திறந்தே வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இவரது ஆணை. ஆனால் இவரது ஆட்சியில், பா.ஜ.க. தொண்டர்கள் சட்டத்தைக் கையிலெடுத்துக் கொள்வதை இவரால் தடுக்க முடியவில்லை. அதே

☛ ஷெகாவட்







☛ பட்வா

போல கட்சியில் உள்ள கோஷ்டிச் சண்டைகளையும் கட்டுப்படுத்த இயலாத நிலையில் இருக்கிறார். ''எல்லா மத மக்களும் என்னை விரும்புகிறார்கள். முஸ்லீம்கள் அதிகம் வாழும் தொகுதியில், எனக் கெதிராக ஒரு முஸ்லீமே நின்றால் கூட போட்டியில் நான் ஜெயிப்பேன்'' என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் ஷெகாவட்.

மத்தியப் பிரதேச முதல்வர் சுந்தர்லால் பட்வா கொஞ்சம் ஷோக்கு பேர்வழி. யாரும் இவரை எளிதில் நெருங்க முடியாது. உட் கட்சிச் சண்டைகளால் இவரது அரசு அவ்வப்போது ஸ்தம்பித்து நிற்கும். சகல தரப்புகளையும் சந்தோஷப்படுத்தும் நோக்கில் மந்திரி பதவிகள் கொடுத்தாலும் சண்டைகள் ஓய்வதாக இல்லை. இவரது



☛ வாஜ்பாய



☛ ஜே.பி. மாத்தூர்

பி.ஜே.பி.யைத் தாங்கும் பிரம்மச்சாரி படை

ஆர். எஸ். எஸ். இயக்கத்துக்கும் பி. ஜே. பி.க்கும் உள்ள தொடர்பு அனைவரும் அறிந்ததே! பி. ஜே. பி. யில் இன்று பொறுப்பில் இருப்பவர்கள் பெரும் பாலோர் ஆர். எஸ். எஸ். இயக்கத்திலிருந்து கட்சிப் பணி ஆற்ற அனுப்பப் பட்டிருப்பவர்கள்தான். இதைத் தவிர ஆர். எஸ். எஸ்.ஸின் நம்பிக்கையைப் பெற்று பொறுப்பில் இருப்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். பொதுவாக ஆர். எஸ். எஸ். ஸில் பிரசாரக் ஆக இருந்து வந்து கட்சிப் பணி ஆற்றுபவர்கள் பிரம்மச்சாரிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. கணக்கெடுத்துப் பார்த்தால் ஒரு பிரம்மச்சாரி படை கட்சியை வழிநடத்திக் கொண்டிருப்பது புரியவரும்.

கட்சியின் துணைத் தலைவர் சுந்தர் சிங் பண்டாரி, செயலாளர்கள் கிஷன்லால் சர்மா, ஜே. பி. மாத்தூர் மற்றும் இரண்டு முறை தலைவராக இருந்த வாஜ்பாயி உட்பட அனைவரும் பிரம்மச்சாரிகள்தாம். இந்த லிஸ்டில் சேர்ந்திருப்பவர் கோபிந்த் ஆசார்யா. இவர் முன்னோர்கள் திண்டிவனத்தைச் சேர்ந்தவர்களாம். ஆனால் குடும்பம் வடக்கே போய்ச் செட்டிலாகி விட்டது. இன்று பி. ஜே. பி.யின் 'சிந்தனைச் சிற்பி' என்று வர்ணிக்கப் படுபவர். 'ஆசார்' என்று கட்சிக்காரர் களால் அன்புடன் அழைக்கப்படும் கோபிந்த் ஆசார்யா, ஜே. பி.யின் 'முழுப் புரட்சி' இயக்கத்தில் தம்மை முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்டு, எமர்ஜென்ஸியில் சிறையில் இருந்தவர். பா. ஜ. க. வின் மாணவர் அமைப்பான ஏ. பி. வி. பி. யின் தலைவராக இருந்தவர். இன்று கட்சியின் வளர்ச்சிக்குத் தேவையான உத்திகளை உருவாக்குவதில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு.

ஆர். எஸ். எஸ். இயக்கத்தோடு தொடர்பு இருந்தாலும் குடும்பஸ்தர்களாக இருந்து கட்சியை வளர்ப்பவர்களில், அத்வானி, முரளி மனோஹர் ஜோஷி, சிக்கந்தர் பக்த் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர, பொருளாதார விஷயங்களில் ஆலோசனை சொல்ல ஜெய்துபாஷியும், கட்சி அறிவிப்புகள், கொள்கைக் குறிப்புக்கள் தயாரிப்பதற்கு கே. ஆர். மல்கானியும் உதவுகிறார்கள். 'பி. ஜே. பி. டுடே' என்று வர இருக்கும் ஒரு பத்திரிகைக்கும் மல்கானி பொறுப்பேற்க இருக்கிறார்.


ஆட்சியில் விழாக்களுக்கும் வாண வேடிக்கைகளுக்கும் பஞ்சமே இல்லை. மாநில அரசின் விமானத்தைச் சகட்டு மேனிக்குப் பயன்படுத்துபவர். ''பட்வா ரயில் போக்குவரத்து என்ற ஒன்று இருப்பதையே மறந்து விட்டவர்'' என்று எதிர்க் கட்சியினர் கிண்டலாகச் சொல்லிக் காட்டுகிறார்கள். ஆட்சியில் பெரிய அளவில் ஊழல்கள் எதுவும் இல்லாவிட்டாலும், இவரது சகோதரர் சம்பத்லால் பட்வா செய்யும் அதிகார துஷ்பிரயோகங்கள் நிறையவே விமர்சனத்துக்கு உள்ளாகின்றன.

ஹிமாசலப் பிரதேசத்தின் முதல்வர் சாந்த குமார், ஒரு சிறந்த இந்திக் கவிஞர். நல்ல மேடைப் பேச்சாளர். இந்தி தெரியாதவர்கள் கூட, இவரது பேச்சை ரசிக்கலாம். அந்த அளவுக்குக் கவிதை நடையும், ஏற்ற இறக்கமும் இருக்கும்.

ஹி.பி. மாநிலத்தில் ஜனசங்கத்தையும், பின்னர் பா.ஜ.கட்சியையும் ஒற்றை ஆளாக நின்று வளர்த்தவர். ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தில் 'பிரசாரக்'காக இருந்தவர். ''ஹி.பி. யின் பொருளாதார அடிப்படையே ஆப்பிள், வியாபாரம் தான்'' என்று சொல்லிக் கொண்டே உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த மான்யத்தை (Support Price) க் குறைத்ததனால் விவசாயிகளின் வயிற்றெரிச்சலுக்கு ஆளானவர். ''வீட்டுக்கு ஒரு குழாய் கனெக்ஷன் கொடுப்போம்'' (குடிதண்ணீர்தான்) என்று வாக்குறுதி கொடுத்து விட்டு, இன்று ''நிதி நிலை சரியில்லையே'' என்று கையைப் பிசைந்து கொண்டு நிற்பவரும் இவர்தான்.

''முக்கியமான நேரங்களில் மாநிலத்தில் இல்லாமல் வெளிநாட்டில் இருந்து கொண்டு 'ரிமோட்' முறையில் ஆட்சியை இயக்குவார்'' என்று எதிர்க் கட்சிக்காரர்கள் குறை கூறுகிறார்கள். ஆப்பிள் உற்பத்தியாளர்களின் போராட்டத்தின் போதும், மண்டல் எதிர்ப்புக் கிளர்ச்சியின் போதும், வெளி நாட்டில் இருக்கும்படி நேர்ந்து விட்டதால்தான் சாந்த குமாருக்கு இப்படிப் பட்டதோர் அவப்பெயர்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கம் மகாத்மா காந்தி கொலையின் பின் விளைவாக 1949 ல் தடை செய்யப்பட்டது. தடை நீங்கிய போது, இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து பேசி ''எதிர்காலத்திலும் இயக்கத்துக்கு அடிக்கடி தடை விதிக்கும் நிலை வரலாம் ஆகையால், ஆர்.எஸ்.எஸ். இலட்சியங்களை மக்களிடையே பிரதிபலிக்க ஒரு வெகுஜன அரசியல் கட்சியை ஆரம்பிக்க வேண்டும்'' என்று முடிவெடுத்தார்கள். அந்த அடிப்படையில்தான் 1951 ல் பாரதிய ஜனசங்க கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. 1977 - 80 கால கட்டத்தில் பழைய காங்கிரஸ், லோக்தளம் ஆகிய கட்சிகளோடு இணைந்து ஜனதா என்ற ஒரே கட்சியில் ஐக்கியமானது ஜன சங்கம். 1980 ல் தேர்தல் தோல்விக்குப் பிறகு ஜனதாவில் இருந்த ஜனசங்கத்தினர் வெளியே வந்து பாரதிய ஜனதா கட்சியைத் துவங்கினர். இதுதான் சுருக்கமான வரலாறு.



☛ தீனதயாள் உபாத்யாயா

பி.ஜே.பி.: முகர்ஜி முதல் ஜோஷி வரை!

ஜனசங்கத்திலும் சரி, பா.ஜ.க.விலும் சரி டாக்டர் ஸ்யாமப்பிரஸாத் முகர்ஜி, பிரேம் நாத், டோக்ரா, கோஷ், தீனதயாள் உபாத்யாயா, பால்ராஜ் மதோக், வாஜ்பாய், அத்வானி, போன்றவர்கள் தலைமைப் பொறுப்பில் பணியாற்றி இருந்தாலும் டாக்டர் ஸ்யாமப் பிரஸாத் முகர்ஜி, தீன தயாள் உபாத்யாயா இருவரும்தான் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள்.

டாக்டர் முகர்ஜி ஜனசங்கத்தின் முதல் தலைவர். அரசியல் சட்டம் 370 ன் படி காஷ்மீருக்கு ஏகப்பட்ட சலுகைகளை நேரு அரசு வழங்கிய போது, ''இது தவறு, இந்த நிலை நீடித்தால், கால வெள்ளத்தில் காஷ்மீர் நம் கையை விட்டுப் போய் விடும்'' என்று அன்றே சத்யாகிரகத்தில் இறங்கியவர். இவரைக் கைது செய்து ஸ்ரீநகர் ஜெயிலில் அடைத்தது ஷேக் அப்துல்லா அரசு. சிறையில் மர்மமான முறையில் இவர் மரணமடைந்தார். இதனால் நாட்டின் வட பகுதியில் பெரும் கலவரம் ஏற்பட்டது. இவரது மரணத்திற்குப் பின்னர் தான், காஷ்மீருக்குத் தனிக் கொடி, தனிப் பிரதமர் போன்றவற்றை ரத்து செய்தது மத்திய அரசு.

இவரைப் போலவே மர்மமான முறையில் 1968 ல் மரணமடைந்தவர் தீனதயாள் உபாத்யாயா. லக்னோவிலிருந்து பீஹார் மாநிலத்திற்குள் பிரயாணம் செய்கையில், 'மொகல்சராய்' என்ற இடத்தில், ரயிலில், கொலை செய்யப்பட்டு இறந்தார். கட்சியின் ஆதார கோட்பாடுகளுள் ஒன்றான காந்திய சோஷலிஸம் இவர் வகுத்தது தான்.

வாஜ்பாய் தலைவராக வந்த போது, கட்சி மேலும் வளர்ச்சியடைந்தது. வாஜ்பாய் சிறந்த மேடைப் பேச்சாளர். பேச்சில் மென்மையான நகைச்சுவை இழையோடிக் கொண்டிருக்கும். பத்திரிகையாளர்களிடம், சரளமாகப் பேசிவிட்டுப் பின்னர் மாட்டிக் கொண்டு விழிப்பவர். அப்படி ஒரு முறை பேசும் போது, ''இந்தியாவில் முஸ்லீம்களே இல்லை என்ற நிலை வருகிறது என வைத்துக் கொள்ளுங்கள். அப்போது கூட எங்கள் கட்சிக்காரன் கற்பனையாக முஸ்லீம்களை உண்டாக்கிப் போராடுவான்'' என்றார்.

வாஜ்பாயின் இந்த கமெண்டால் மற்ற தலைவர்கள் சங்கடப்பட்டுப் போனார்கள். ஜனசங்கத்திலும், பா.ஜ.க. வில் இருமுறையும், தலைவராக இருந்திருக்கிறார் இவர். ஆனால் தற்போது வேகமாகச் செயல்பட


முடியாமல் அவதிப்படுகிறார். காரணம் உடல் நிலை தான்.

வோட்டு வங்கியில் கட்சியின் செல்வாக்கை வளர்த்தவர், 'அயோத்தி வீரர்' அத்வானி என்றால் மிகையாகாது. சரியான தேர்தல் சமயமாகப் பார்த்து ஸோமநாத்திலிருந்து அயோத்திக்கு யாத்திரை கிளம்பினாரே - அது ஒன்றே போதும், இவர் சாணக்கியத்தைச் சொல்ல. இவரது குடும்பம் 1949-ல் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தது. அடிப்படையில் ஒரு ஆர். எஸ். எஸ்.. மாவட்டத் தலைவர் பொறுப்பிலிருந்து, படிப்படியாக உயர்ந்தவர். கட்சியின் பத்திரிகையான 'ஆர்கனைசர்'ன் ஆசிரியராக இருந்தவர். கட்சியின் சட்ட திட்டப்படி ஒருவர் இருமுறை தான் தலைமைப் பொறுப்பில் இருக்க முடியும். இந்த நிலை இல்லாமலிருந்தால் அத்வானியே இன்னமும் தொடர்ந்திருப்பார்.

கடைசியாக இப்போது வந்துள்ள டாக்டர் முரளி மனோகர் ஜோஷி உ. பி. யில் அல்மோரா மலைப் பகுதியைச் சேர்ந்தவர். எப்போதும் சரிகைத் துண்டும், வேஷ்டியும், நெற்றியில் சிந்தூரமுமாகக் காட்சியளிப்பவர். பேராசிரியர். வி.பி. சிங் இவரது மாணவர்தான். இந்தியில் பல விஞ்ஞான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். கட்சியின் தலைவராகி, முழு நேர அரசியல்வாதி ஆகி விட்டாலும், பல்கலைக் கழகத்திலும் தொடர்ந்து சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கிறார். இது ஒரு பிரச்னையாக சமீபத்தில் வெடித்தது. தமது ஏகதா யாத்திரையின் மூலம் காஷ்மீரில் மட்டுமின்றி - செங்கோட்டையிலும் கொடியேற்றும் வாய்ப்பு தமது கட்சிக்குக் கிடைக்கும் என்ற திடமான நம்பிக்கையில் செயல்பட ஆரம்பித்திருக்கிறார்.

பொன் விழா ஆண்டு ; தங்க நகைப் பரிசுத் திட்டம் - 12

வீட்டைக் கட்டிப் பார்!



தை பிறக்கப் போகிறது. கல்யாண சீசன் களை கட்டி விடும். கூடவே, ''வீட்டைக் கட்டிப் பார்; கல்யாணத்தைப் பண்ணிப் பார்'' என்ற பழமொழி நினைவு வருகிறது. முதலில் வீடு கட்டிய அனுபவத்தை எடுத்துக் கொள்வோமே. உங்களுக்கு அல்லது உங்கள் நண்பருக்கு வீடு கட்டுகையில் அல்லது (ஃபிளாட்) வாங்குகையில் ஏற்பட்ட அனுபவத்தைச் சுவைபடத் தபால் கார்டில் அல்லது அதிகபட்சம் இன்லாண்டில் எழுதுங்கள். ஒரு சூப்பர் அனுபவத்துக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்க நகை பரிசு. பிரசுரம் ஆகும் இதர துணுக்குகளுக்குச் சன்மானம். ''வீடு கட்டிய அனுபவம்'' என்று தலைப்புத் தந்து, ''கல்கி காரியாலயம், சென்னை - 32'' என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பக் கடைசி தேதி 6.1.92

(பொன் விழாக் கவிதைப் போட்டியில் ரு 250 முதல் பரிசு பெறும் புதுக் கவிதை!)



பூமியின் பரப்பளவை விட
எனது
ஆசையின் பரப்பளவு
அதிகம் என்பது
அவனுக்குத் தெரிந்திருந்தால்
இரண்டடியில்
அளந்து விட்டு
மூன்றாமடிக்கு
என்னை அளந்திருப்பான்!

நிறைவேறாத
ஆசைகள்
கனவாகச் சஞ்சரிக்கும்!
கொஞ்சம்
கற்பனை இருக்குமெனில்
கவிதையாய்ச் சஞ்சலிக்கும்!

ஆன்மாவின்
நெடிய யாத்திரையில்
எண்ணிலாக் காட்சிகள்...

இதய வானில்
இன்ப முகில்கள்
தாலாட்டும் போது
கால முட்களின்
கவலைக் கீறல்
பள்ளி ஆசிரியர்
தேர்வுத் தாள் திருத்தும்
பணிக் கையாய் விழுகிறது!

தன்னைத்தானே
உணராததால்
தலைகால் தெரியாத
தத்துவக் குப்பைகள்
சேமிக்கப்படுகின்றன!

சிருஷ்டிக்குள்ளே
நடத்தும்
சிலம்பாட்டத்தில்தான்
எத்தனை மகிழ்ச்சி!

வெற்றி
மனிதனை
விழுங்குகிறது ;
தோல்வி
சிந்திக்க வைக்கிறது!

இரண்டையும்
கண்டு
நகைக்கத் தெரிந்தால்
ஞான வெளியில்
நாட்டியம் ஆடலாம்!

– தத்துவபித்தன்

(ரூ. 250 முதல் பரிசு பெறும் மரபுக் கவிதை அடுத்த இதழில்)

காதலெனும் வானவில்

1

"மீரா! மீரா! மீரா!"

சமுத்திர அலையாய்க் குரல்கள் எழுந்தன. நாடி நரம்பெல்லாம் ஜுர வேகம் பற்றிக் கொண்டது. கண்ணுக்கு நேர் மேலாகப் பறந்த பந்தை நோக்கி அவள் விரைந்தாள். மந்திரக்கோல் பட்டது போல் கால்கள் ஜிவ்வென்று மேலே எழும்பின. வானைத் தொட்டு விடும் நீளத்துக்குக் கைகள் நீண்டன. கையில் சிக்கிய பந்தைக் கூடையில் போட்டதும் மறுபடி ஓர் அலை ஓசை எழுந்தது.

"ஜெ யி ச் சு ட் டோ ம்! ஜெயிச்சுட்டோம்!"

பந்தை வீசிய வேகத்துடன் காலைத் தரையில் பதித்த தருணத்தில் கணுக்காலில் சுரீரென்று வலித்தது. அவள் சட்டென்று காலை மடக்கித் தரையில் குத்திட்டு அமர்ந்தாள். வெட்டி எடுத்து விட வேண்டும் போல் சொடுக்கிய வலியில் முகத்தை முழங்கால்களில் புதைத்துக் கொண்ட போது கண்களில் நீர் ததும்பிற்று. சுற்றிலும் பெண்கள் 'ஹோ! ஹோ!' என்று உற்சாக ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் அடிபட்டுத் தரையில் அமர்ந்திருக்கும் தன்னை நினைத்து அவளுக்குப் பாவமாக இருந்தது. ஜெயித்தால் எல்லாரும் இன்று ஐஸ்க்ரீம் பார்லருக்குச் செல்வதாகத் திட்டம் போட்டிருந்தார்கள்.

மீரா ஆத்திரம் தீர "டாமிட்!" என்றாள்.

உலுக்கப்பட்டது போல் கண்கள் திறந்தன. கண்ணுக்கு நேராக அறை ஜன்னலும் ஜன்னலுக்கு அடுத்த சுவரில் மெடோனாவின் ப்ளோ அப்பும் இருந்தன. போர்வைக்கடியில் கால்கள் பத்திரமாக இருந்தன. கனவு. எப்படி நிஜம் போலக் கனவு வருகிறது என்று ஆச்சரியமாக இருந்தது. கனவில் அனுபவித்த வேகமும், வெற்றிக் களிப்பும் பிறகு வலியும் சத்தியமான உணர்வுகளாகத் தோன்றின - ஐஸ்க்ரீம் சாப்பிட முடியவில்லை என்கிற ஏமாற்றமும் உள்பட. இந்த மாதிரி அவளுக்கு எத்தனையோ கனவுகள் வருகின்றன. நிஜம் போல. சில சமயம் எது கனவு, எது நிஜம் என்று கூடப் புரியாத குழப்பம் ஏற்படும். 'நீயும் உன் கனாவும்' என்று அம்மா சிரிப்பாள். "உங்க அத்தைப் பாட்டியைக் கொண்டிருக்கே இதிலே" என்பாள்.

அத்தைப் பாட்டியை மீரா சென்ற வருஷம்தான் சந்திக்க நேர்ந்தது. படுசுவாரஸ்யமான மனுஷி. கும்பகோணத்துக்கு அருகில் ஏதோ கிராமத்தில் இருக்கிறாள். ஒன்பது கெஜப் புடைவையில் அம்மா வைத்திருந்த ஏதோ தமிழ் சினிமா காசெட்டில் வரும் ஒரு நடிகை போல் இருப்பாள். எடுத்த எடுப்பிலேயே 'என்னை அத்தைன்னு கூப்பிட்டாப் போறும். அத்தைப் பாட்டின்னு நீட்டி முழக்க வேண்டியதில்லே' என்றாள். ஆனால் அவள் பேசும் விஷயமெல்லாம்



வாஸந்தி

நீட்டி முழக்கிக் கொண்டு தனித் தனிக் கதைகள் போல் இருக்கும். அவளுடைய கனவுகளே ஆரம்பமும் முடிவும் கொண்ட கதைகளாக இருக்கும். ஆச்சரியங்கள் நிறைந்ததாக, அற்புதங்கள் நிறைந்ததாக. ''நேத்து ஒரு கனாக் கண்டேன்'' என்று ஆரம்பிப்பாள்.

ஆரம்பத்தில் அத்தையின் சாகஸக் கனவுகளையெல்லாம் மீரா வாயைப் பிளந்தபடி கேட்பாள். அவள் சொல்லும் பாதி வார்த்தைகள் புரியாது. 'அப்படீன்னா அப்படீன்னா' என்று அம்மாவை நச்சரித்து ஆங்கில மொழிபெயர்ப்பில் புரிந்து கொள்ள வேண்டிவரும். இப்பவும் அத்தைப் பாட்டியின் கிராமிய சிலேடைகளும் உவமானங்களும் முழுசாக விளங்குவதில்லை. ஆனால் அவளுடைய கனவுகளை இப்பொழுது கேட்க நேர்ந்தால் முடிவு எப்படி இருக்கும் என்று ஊகிக்கக் கூடிய அளவுக்குத் தேர்ச்சி ஏற்பட்டு விட்டது.

அத்தைப் பாட்டியிடம் வேறு ஒரு வசீகரம் இருந்தது. தாத்தாவுடன் அவள் இருக்கும் போது தெரியும் வசீகரம். பாட்டிக்கு எழுபது வயது. தாத்தாவுக்கு எழுபத்தி ஐந்து. எங்கு சென்றாலும் இருவரும் சேர்ந்தே போவார்கள். பாட்டி இல்லா விட்டால் தாத்தாவுக்குப் பொழுது போகாது. காப்பி குடிக்கக் கூட ரசிக்காது. அவர்கள் பேசாத பேச்சு கிடையாது. அரசியலிலிருந்து ஆன்மீகம் வரை - அலுக்காமல் சலிக்காமல். காரசாரமாகச் சண்டையும் போடுவார்கள். இந்த வயதில் சின்னப் பெண்ணைப் போல தாத்தா கோபித்துக் கொண்டார் என்று பாட்டி கண்ணீர் விடுவாள். அன்று நிச்சயம் கனவில் ஈச்வரன் வருவார்.

அமெரிக்காவிலிருந்து குடிபெயர்ந்து இந்தியாவுக்கு வந்த புதிதில் மீராவுக்கு ஏற்பட்ட ஆச்சரியங்களில் முக்கியமான ஆச்சரியம் இந்த ஜோடி. நியூயார்க்கில் அவர்கள்



வீட்டுக்கு அருகில் ஒரு பூங்கா இருக்கும். அதைக் கடந்து தினமும் பள்ளிக்குச் செல்லும் போது அங்கங்கே இருக்கும் பெஞ்சுகளில் வயதானவர்கள் தனித்தனியாக அமர்ந்து சூன்யத்தை வெறித்தபடி வெயில் காய்ந்து கொண்டிருப்பார்கள். உலர்ந்த சருகுகள் போல் ஒளியே இல்லாத அந்த முகங்களைப் பார்க்க மீராவுக்கு பயமாக இருக்கும். அடிவயிற்றில் சொல்லத் தெரியாத சங்கடம் ஏற்படும். இந்தியாவுக்குத் திரும்ப வேண்டும் என்று அப்பா திடீரென்று ஏன் முடிவு செய்தார் என்று இதுவரை தெளிவாகத் தெரியாவிட்டாலும் இந்தியச் சூழலுடன் சமரசம் செய்து கொள்ள அவளும் அவளுடைய தம்பி மகேஷும் சிரமப்பட்ட நேரங்களில், அமெரிக்கக் கிழவர்களுக்கு ஏற்படும் கதி தனக்கும் ஏற்படக் கூடாது என்றுதான் அப்பா வந்து விட்டாரோ என்று சம்சயம் ஏற்படும். அத்தைப் பாட்டியையும், தாத்தாவையும் பார்த்த போது அப்பாவிடம், 'தெ லுக் லைக் ஸன்ஷைன்' என்றது இன்னும் ஞாபகம் இருக்கிறது. இப்பவும் அப்படித்தான் இருக்கிறார்கள், சூரிய வெளிச்சம் போல. அந்தப் பிரகாசத்துக்கு என்ன காரணம் என்று புரியவில்லை. நியூயார்க்கில் இருக்கும் அவளுடைய சினேகிதன் எரிக் பேக்கருக்கு அவர்களைப் பற்றி எழுதினாள். 'அறுபது வருஷமாயிற்று கல்யாணமாகி. சேர்ந்து இருக்கிறார்கள்' என்று தெரிவித்ததற்கு, ''என்னுடைய மூதாதையரிலும் ஓரிரண்டு தம்பதிகள் அப்படி இருந்திருக்கிறார்களாம்'' என்று அவன் வேலை மெனக்கெட்டுத் தன்னுடைய குடும்ப விருக்ஷத்தின் கிளைகளை வரைந்து அனுப்பினான். அதிலும் முப்பது வருஷங்களை யாரும் தாண்டியிருக்கவில்லை.

பாட்டிக்கு உடனடியாக இன்று கண்ட கனவைப் பற்றிச் சொல்ல வேண்டும் போல் இருந்தது. அமெரிக்காவாக இருந்தால் நினைத்த நேரத்தில் நியூயார்க்கிலிருந்து லாஸ் ஏஞ்ஜல்ஸ்ஸில் இருக்கும் மாமாவுடன் பேச முடிந்தது. இங்கு மெட்ராசிலிருந்து கும்பகோணத்துக்கு ஃபோன் செய்ய முடியாது. லைன் அனேகமாகக் கிடைக்காது என்பதோடு இந்திய மண்ணில் அப்பா எஸ். டி. டி. செலவைப் பற்றிப் புலம்புவது ஏதோ கலாசார சம்பந்தமானது என்று தோன்றிற்று.

கனவுகளுக்கு விளக்கம் சொல்வதில் ஃப்ராய்டுக்கு அடுத்தபடியாகப் பாட்டி ஒரு அத்தாரிட்டி என்று மீராவுக்கு எண்ணம்.

ஒருமுறை பாட்டியிடம் வருத்தத்துடன், ''ரொம்பக்கெட்ட கனாக் கண்டேன் அத்தே'' என்றாள். ''யாரோ செத்துப் போறாப்பலே இருக்கு. நான் அழறேன்.''

''அந்த மாதிரிக் கனாக் கண்டா ரொம்ப நல்லது வருதுன்னு அர்த்தம்'' என்று பாட்டி விசித்திரமான விளக்கம் கொடுத்தாள். இன்றைய கனவுக்குக் கூட அப்படிப்பட்ட விளக்கம் இருந்தாலும் இருக்கும். நல்லது வரும்.

மீராவுக்குச் சிரிப்பு வந்தது. நல்லது எந்த ரூபத்தில் வரும் என்று மெடோனாவின் உருவத்தைப் பார்த்தபடி ஹேஷ்யம் கணிப்பதில் சுகம் இருந்தது. கட்டுரைப் போட்டிக்கு அனுப்பிய கட்டுரைக்குப் பரிசு கிடைக்கலாம். சென்ற வாரம் முடிவடைந்த அரைப் பரீட்சையில் நல்ல மார்க் கிடைக்கலாம். திடீரென்று ஒரு நாடக விழா போடும் ஆசை ஹெட் மிஸ்ட்ரெஸ்ஸுக்கு வரலாம். நாடகத்திற்கு மீராவை விட்டால் யார் இருக்கிறார்கள்? ஆனால் இன்று எதைப் பற்றியும் தெரிய வராது. இன்று சனிக்கிழமை.

அமெரிக்காவில் சனி, ஞாயிறு என்றால் கொண்டாட்டமாக இருக்கும். அநேகமாக எல்லாருமாகச் சேர்ந்து எங்காவது வெளியூர் போவார்கள். அப்பா அமெரிக்க அப்பாக்கள் போல, கோடைக் காலங்களில் அரை டிராயரும் வெற்று மார்புமாகப் படகு ஓட்டுவார். அவளுடனும் மகேஷுடனும் நீச்சல் குளத்தில் நீந்துவார். அம்மாவும் அங்கு பாண்ட்டும் ஷர்ட்டும் போட்டவள்தான். அமெரிக்க இங்கிலீஷ் பேச முயன்றவள். டிபார்ட்மென்டல் ஸ்டோர்ஸில் வேலை பார்த்தாள். திடீரென்று மூட்டை கட்டிக் கொண்டு இந்தியாவுக்கு வந்து விடத் தீர்மானித்த போது, மகேஷ் வெகு நாட்களுக்கு ''வொய் டாட், வொய்?'' என்று துளைத்தான், 'இந்தியா தான் நம்ம தேசம்' என்று அப்பா திருப்பித் திருப்பிச் சொன்னதில் திருப்தி அடையாமல்!

மீரா நெடிய சோம்பல் முறித்தபடி எழுந்தாள். பள்ளிக்கூடம் இல்லையென்றாலும் பாட்டு, டான்ஸ் க்ளாஸ் உண்டு. ஹோம்வொர்க் செய்து முடிக்க வேண்டும்.



''நான் ஆபீஸ் கிளம்பிப் போகிறவரைக்கும் என் மனைவி எங்க அம்மா கூட சண்டையே போட மாட்டா...''

''உங்ககிட்ட உங்க மனைவிக்கு அவ்வளவு பயமா சார்...?''

''அட நீங்க வேற! அதுவரைக்கும் என்கூட சண்டை போடுவா!''

– சீர்காழி. வி. ரேவதி

மியூஸிக் ஸிஸ்டத்தில் ஒரு டேப்பைச் சுழல விட்டு அவள் மெடோனாவின் பாட்டுக்கு ஏற்ப உடம்பை அசைத்தபடி பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொண்டு மாடி பால்கனிக்கு வந்து நின்ற போது, மெட்ராஸ்காரர்களின் காலையில் பாதி முடிந்து விட்டது போலிருந்தது. தெரு மூலையில் ஒரு காலியான கார் ஷெட்டில் துணிக்கு இஸ்த்திரி போடும் முருகேசன் உருப்படிகளை வாங்கிக் கொள்ள மூன்றாவது வீட்டிற்குள் நுழைவதற்கு முன் அவளைப் பார்த்து லேசாகச் சிரித்து, ''ஸ்கூல் இல்லையா?'' என்றான், சௌக்கியமா என்பது போல.

அவள் 'இல்லை' என்று தலையாட்டிச் சிரித்தாள். இந்த இரண்டு வருஷத்தில் முருகேசன் மாறவேயில்லை என்று தோன்றிற்று. அவள்தான் மாறி விட்டாள். இப்பொழுது நினைத்தாலும் சிரிப்பு வந்தது. அமெரிக்காவிலிருந்து முந்தைய இரவுதான் வந்து இறங்கியிருந்தார்கள். மறுநாள் காலை அவள் இதே பால்கனியில் நின்று இதே மாதிரி வேடிக்கை பார்த்த போது இந்த முருகேசன் பக்கத்து வீட்டின் முன் நின்றிருந்தான். மீரா அவனைப் பார்த்து அமெரிக்க வழக்கத்தில் வலது கையைப் பெரிதாக ஆட்டி உற்சாகமாகச் சிரித்து ''ஹாய்!'' என்றாள். அவன் அதிர்ந்து போனான். தனக்குப் பின்னால் யாராவது நிற்கிறார்களா என்று திரும்பிப் பார்த்தான். மீரா மறுபடி கையை அசைத்து 'ஹாய்' என்றாள். பால்கனியில் நிற்கும் அவளைப் படுக்கையறையிலிருந்து பார்த்த அம்மா விருட்டென்று எழுந்து வந்தாள்.

''யாரைப் பார்த்துச் சிரிக்கிறே?'' என்றாள் சந்தேகத்துடன்.

''யாரோ தெரியாது. ஆனா விசித்திரம். பதிலுக்குச் சிரிக்க மாட்டேங்கறான்'' என்றாள் ஆங்கிலத்தில்.

அம்மா எட்டிப் பார்த்துப் பதறிப் போனாள். முருகேசனின் கையில் வைத்திருந்த துணி மூட்டையைப் பார்த்து, ''உள்ளே போடி'' என்று மீராவை அதட்டினாள். ''இந்த ஊர்லேயெல்லாம் இப்படி நடந்துக்கக் கூடாது. தப்பா நினைப்பா'' என்று தோளைப் பிடித்து இழுக்காத குறையாக உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

அம்மாவின் இந்தச் செய்கை முதல் அதிர்ச்சியாக இருந்தது. அதற்குப் பிறகு தினம் தினம் புதிய புதிய அதிர்ச்சிகள் ஏற்பட்டன. இது வேறு உலகம் என்று மண்டையிலடிப்பது போல அம்மாவும் அப்பாவும் பேச்சிலும் உடையிலும் மட்டும் மாறவில்லை; ஆளே மாறிப் போனார்கள். இப்படிப் பேசக் கூடாது அப்படி சிரிக்கக் கூடாது என்று நூறாயிரம் தடைகள். அவர்களே புரியாத ஏதோ ஒரு கலவரத்தில் இருப்பது போல் அவளுக்குத்



''ஹோட்டலிலே சாப்பிட்டுப் பழ கினதுனாலே நண்பன் வீட்டிலே மானம் போயிடுச்சா, எப்படி?''

''டிபன் சாப்பிட்டு முடிச்சதும் பழக்க தோஷத்திலே ஆட்டுரல் எங்கி ருக்குன்னு கேட்டுட்டேன்!''

- வீ. சோழன்

தோன்றும். வந்த ஒரு வருஷத்திற்கு இந்தியா சுத்தமாகப் பிடிக்கவில்லை. அம்மா அவளைப் பெண்கள் பள்ளியில் சேர்த்தது நிலைமையை இன்னும் மோசப் படுத்திற்று. பெண்கள் அவளை ஏதோ மியூ சியம் பொருளைப் போலப் பார்த்தார்கள். அவள் பேசும் அமெரிக்க ஆங்கிலத்தைக் கேட்டுத் தங்களுக்குள் குசுகுசுத்துச் சிரித் தார்கள். புரியாததால் பரிகசித்தார்கள். தினம் தினம் அவளும் மகேஷும் அமெரிக் காவுக்குத் திரும்பிப் போயிடலாம் என்று அழுவதும், சாப்பிடாமல் படுக்கப் போவ தும்... இப்பொழுது நினைத்துப் பார்க்கும் போது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மிகப் பெரியப் பிரச்னையாக இருந்திருக்கும் என்று புரிந்தது.

அப்பொழுதுதான் அத்தைப் பாட்டி யும் தாத்தாவும் கொஞ்ச நாள் அவர்களுடன் தங்க வந்தார்கள். ஏதோ ஒரு சாதுர்யமான தருணத்தில் அப்பாவுக்கு அவர்களை வர வழைக்கும் யோசனை ஏற்பட்டிருக்க வேண்டும். பிரச்னைக் குழந்தைகளைச் சமாளிக்க இங்கிலீஷ் தெரியாத அத்தையால் முடியும் என்று எப்படி நினைத்தாரோ தெரி யாது. உண்மையில் அவர்கள் மீராவையும் மகேஷையும் வசியம் பண்ண எந்த முயற்சி யும் எடுக்கவில்லை. புத்தி சொல்ல முனையவில்லை. இவர்கள்தான் அவர் களைப் பார்த்ததும் வசீகரிக்கப்பட்டார்கள். அவர்களது சளசள பேச்சையும் சிரிப்பை யும் சண்டையையும் புதிய கண்டுபிடிப்பு போல ரசித்தார்கள்; பாட்டியுடன் பேசு வதற்காகவே தமிழ் கற்றுக் கொண்டார்கள். அமெரிக்க சினேகிதர்களை விட்டுப் பிரிந்து வரும் போது வந்த அழுகை, தாத்தாவும் பாட்டியும் ஊருக்குக் கிளம்பும் போது மீண்டும் வந்தது.

தெருவைப் பார்த்தபடி நிற்கும் இந்தத் தருணத்திலும் அதை நினைத்துக் கண்ணில் நீர் கோப்பதைக் கண்டு அவளுக்குள் கூச்ச மேற்பட்டது. இந்த இரண்டு வருஷங்களில் வயது கூடிப் பதினேழாகிப் போனது மட்டு மில்லை. மனசு நிறையத் தெளிந்து விட்டது, சக தோழிகளுக்குப் புத்தி சொல் லும் 'தலைவி' ஆகும் அளவுக்கு. அமெ ரிக்க ஊட்டத்தால் சராசரி இந்தியப் பெண்ணை விட அதிக உயரமும் வளர்த்தி யும் இருப்பதால், மனமுதிர்ச்சியும் கொண் டவள் என்கிற நினைப்பில் டீச்சர்கள் அவளைத்தான் மானிட்டராக்குகிறார்கள். உண்மையிலேயே அவள் வகுப்பில் இருக் கும் சில பெண்கள் செய்யும் அசட்டுத் தனங்களைப் பார்க்கும் போது அத்தைப் பாட்டியின் ஸ்தானத்தில் தான் இருப்பது போலிருந்தது.

முருகேசன் பக்கத்து வீட்டிலிருந்து வெளிப்பட்டான். அவளை நிமிர்ந்து பார்த்து, ''துணி இருக்கா?'' என்றான்.

''இருக்கு'' என்று அவள் கட்டி வைத் திருந்த துணிகளை அள்ளிக் கொண்டு தட தடவென்று மாடிப் படியில் இறங்கி வாச லுக்கு வந்து ''பதினைஞ்சு உருப்படி'' என்று அவன் கையில் கொடுத்துக் கூடவே ''தாங்க்யூ'' என்றாள். அவன் ஒரு கூச்சப் புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டது அவளுக்கு உற்சாகமாக இருந்தது. வீட்டிற் குள் நுழைந்ததும், எதிர்ப்பட்ட அம்மா விடம் ''முருகேசன் இஸ் ஸோ க்யூட்'' என் றாள். ''அவன்தான் என் பெஸ்ட் ஃப்ரெண்ட்.''

''பக்கத்து வீட்டு மாமி எதிரே இப்படி உளறி வைக்காதே'' என்றாள் அம்மா.

அம்மாவுடன் ஒரு விவாதத்துக்குத் தயாரான போது, டெலிபோன் ஒலிக்க, அவள் தாவிச் சென்று எடுத்த போது, மறு முனையில் அவள் வகுப்பில் படிக்கும் மீனாட்சியின் குரல் சன்னமாக ஒலித்தது.

மீரா உற்சாகமாக ''ஹாய்!'' என்றாள். ''என்ன நியூஸ் காலங்கார்த்தாலே?''

''குட் நியூஸ்!'' என்று மீனாட்சி ரகசியக் குரலில் சொன்னாள். ''இன்னிக்கு எனக்கு ஒரு பார்ட்டிக்கு அழைப்பு வந்திருக்கு.''

''யார்கிட்டேர்ந்து?''

''எம்.ஸி.ஸியிலே படிக்கிறவன்.''

''போகப் போறியா?'' என்றாள் மீரா ஜாக்கிரதையாக.

''ஆமாம்'' என்றாள் மீனாட்சி மீண்டும் ரகசியக் குரலில். ''உன்னோட வெளியிலே போறதா அம்மாகிட்டச் சொல்லியிருக் கேன். நீ குட்டை உடைச்சுடாதே.''

மீரா பதில் சொல்வதற்குள் மீனாட்சி போனைக் கீழே வைத்தாள். கையில் இருந்த ரிசீவரைப் பார்த்து மீரா, ''டாமிட்'' என்றாள், அம்மா எதிரில் நிற்பதை மறந்து.

(தொடரும்)

க்யூ


பி.உதயக்குமார்

காட்சி - 1

(எல்லோரும் க்யூவில் நின்று கொண்டிருக்கிறார்கள். ஒருவன் ரேஷன் க்யூவில் நிற்பவன் போல் கையில் மண்ணெண்ணெய் டின், பை இத்யாதிகள் இருப்பதைப் போல ஒரு பாவனையுடன் நிற்கிறான். மற்றவர்கள் அனைவரும் க்யூ நகரவே இல்லையே என்ற நிதானமற்ற பதற்றத்துடன் இங்கும் அங்கும் பார்த்தவாறு நிற்கின்றனர்.

காலம் காலமாக க்யூவில் நின்று நின்று மக்களுக்கு எதனால் க்யூவில் நிற்கிறோம் என்ற காரணங்களும் மறந்து போகின்றன. எல்லோருமே ஒரே காரணத்திற்காக நிற்பது போலவும், அது என்ன காரணம் என்று தெரியாமல் நிற்பது போலவும் தோன்றுகிறது.

இந் நாடகத்தில் எவருக்குமே முகங்களில்லை. பெயர்களில்லை. இந் நாடகத்தைப் படிக்கும், பார்க்கும் ஒவ்வொருவர் சாயலையுமே இதன் கேரக்டர்கள் கொண்டிருக்கின்றன.)



நபர் 1 : ஒரு மணி நேரமா நிக்கறேன். க்யூ நகர்ற மாதிரியே தெரியலையே...

நபர் 2 : நான் ரெண்டு மணி நேரமா நிக்கறேன்... நின்ன இடத்திலேயே நின்னுக்கிட்டிருக்கேன்...

நபர் 3 : நீங்களாவது பரவாயில்ல... நான் கார்த்தால இருந்து ஒரே இடத்தில நின்னுக்கிட்டிருக்கேன்...

நபர் 1 : தாத்தா நீ எத்தினி நாளா நின்னுக்கிட்டிருக்கே...?

நபர் 4 : நானு.. தொண்ணூத்தியெட்டு வருஷமா நின்னுக்கிட்டிருக்கேன்... (எல்லோரும் கேலியாகச் சிரிக்கின்றனர்.)

நபர் 2 : தொண்ணூத்தியெட்டு வருஷமா நின்னுக்கிட்டிருக்காராம்...

(அப்போது ஒருவன் வேகமாக வருகிறான். அவன் கையில் மண்ணெண்ணெய் டின் இருப்பது போன்ற ஒரு பாவனை.)

ஒருவன் : இது மண்ணெண்ணெய் க்யூ தானே...?

நபர் 1 : இது மண்ணெண்ணெய் க்யூ இல்லே.. பாமாயில் க்யூ.

நபர் 2 : பாமாயில் க்யூவாம். திருப்பதி லட்டு தர்றாங்க. அதான் நிக்கறோம்.

நபர் 3 : திருப்பதி லட்டு தர்றாங்களா... குட்டுதான் தருவாங்க. பசு மாட்டோட கன்லல புர்ச்சித் தலைவர் தெரியறாராம்... அவரைப் பார்த்துட்டுப் போலான்னு தான் கொக்காலடியிலிருந்து வந்திருக்கேன்...

நபர் 4 : பசு மாட்டோட கன்லயா..... புர்ச்சித்தலைவரா... ஏன்யா எருமமாடு.. வெயில்ல சுத்தாதனு எத்தினிவாட்டி சொன்னேன்..? வெயில்ல சுத்தினா இப்படித்தான் ஸ்க்ரூ கழண்டுக்கும்.. ஸார் இது பலான பலான படம்... நீங்க பார்த்தா டீஸன்ட்டான ஆளு மாதிரி தெரியறீங்க... மண்ணெண்ணெய் க்யூதானே வேணும்? அந்த தாத்தாகிட்டே கேளுங்க. சொல்லுவார்.

ஒருவன் : தாத்தா இது பாமாயில் க்யூவா, திருப்பதி லட்டு க்யூவா, புர்ச்சித் தலைவர் க்யூவா, இல்ல சினிமா க்யூவா?

தாத்தா : உனக்கு என்ன க்யூ வேணும்...?

ஒருவன் : எனக்கு மண்ணெண்ணெய் க்யூ வேணும்.

தாத்தா : இதான் மண்ணெண்ணெய் க்யூ.

ஒருவன் : இதான் மண்ணெண்ணெய் க்யூவா? ஒவ்வொருத்தன் ஒவ்வொண்ணு சொல்றான்...

தாத்தா : அவனவன் ஆயிரம் சொல்லுவான். உனக்கென்ன? உனக்குத் தேவை மண்ணெண்ணெய்தானே...? க்யூவில நில்லு. கிடைக்கும்.

(ஒருவன் ஆரம்பமும் முடிவும் தெரியாத அந்த க்யூவை பார்க்கிறான். பிறகு சோர்ந்து போய்த் தாத்தாவைப் பார்க்கிறான்.)

ஒருவன் : என்ன தாத்தா இந்த க்யூவிலயா நிக்கச் சொல்றீங்க? எங்க ஆரம்பிக்குது, எங்க முடியுதுன்னே தெரியலையே...?

தாத்தா : அதான் எனக்கும் தெரியலை. க்யூவில முதல்ல நிக்க ஆரம்பிச்சப்ப நானும் உன்ன மாதிரிதான் க்யூவில நிக்கறதுக்குக் காரணங்கள் சொல்லிக்கிட்டேன். ஸ்கூல் அட்மிஷன், காலேஜ் அட்மிஷன், சினிமா, மண்ணெண்ணெய், பாமாயில்... இப்படி... ஆனா இப்பல்லாம் என்னை நானே ஏமாத்திக்கிறதில்லே. க்யூவில நிக்கறதுக்குக் காரணங்கள்லாம் தேவையில்லைங்கிற முடிவுக்கு வந்திட்டேன். ஏதோ நிக்கறோம்... அவ்வளவுதான்...

ஒருவன் : தாத்தா எனக்கு ஏற்கெனவே தலைவலி. வீட்டில அம்மா மண்ணெண்ணெய் வாங்கிட்டு வரச் சொன்னாங்க. முடியாதுன்னேன், கேக்கலை. சரின்னு ரேஷன் கார்டை எடுத்துக்கிட்டு இங்கே வந்தேன். சிக்கிரமா வாங்கிக் கொடுத்திட்டு நான் வரதராஜா காலேஜுக்குப் போகணும்.

தாத்தா : அங்கதான் படிக்கிறியா தம்பி?

ஒருவன் : இல்ல தாத்தா இனிமேதான் சேரணும். நூத்துக்குத் தொண்ணூறு மார்க் வாங்கியிருக்கேன். மார்க் குறைச்சல்னு மெடிக்கல் காலேஜ்ல சீட் தரலை. மார்க் அதிகம்னு ஆர்ட்ஸ் காலேஜ்ல சீட் தரலை. இதான் கடைசி சான்ஸ். நான் இன்னிக்கு கரெக்டான டயத்திற்கு காலேஜ் இண்டர்வ்யூவுக்குப் போயே தீரணும்.

தாத்தா : இந்த க்யூ எப்போ நகர்ந்து, எப்போ மண்ணெண்ணெய் வாங்கி, நீ எப்போ காலேஜுக்குப் போறது? நீ பேசாம வீட்டுக்குப் போ தம்பி.

(ஒருவன் அதுதான் சரி என்பது போல் வீட்டுக்குப் போகக் கிளம்புகிறான். அப்போது தாத்தாவிற்கு முன்பு நிற்பவன், 'ஒருவ'னிடம் கேட்கிறான்.)

நபர் 1 : வரதராஜா காலேஜ்ல அட்மிஷன் வேணுமா?

('ஒருவன்' ஆமெனத் தலையசைக்கிறான்.)

நபர் 1 : வாங்க நான் சேர்த்து விடறேன்.

(பல சந்து பொந்துகளின் ஊடே அழைத்துச் சென்று, முடிவில் ஒரு க்யூவிற்கு வந்து சேருகிறார்கள்.)

நபர் 1 : இந்த க்யூவில நில்லு. அட்மிஷன் கிடைக்கும்.

ஒருவன் : இது ரேஷன் க்யூ மாதிரியே இருக்கே?

நபர் 2 : ஏன்யா என் மூஞ்சியப் பார்த்தா ரேஷன் க்யூவில நிக்கிற மாதிரியா தெரியுது...? 86 மார்க் வாங்கியிருக்கேன். பி.காம். சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 3 : 87 மார்க் வாங்கியிருக்கேன். கெமிஸ்ட்ரி சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 4 : 88 மார்க் வாங்கியிருக்கேன். ஃபிசிக்ஸ் சீட்டுக்காக நிக்கறேன்.

நபர் 5 : 89 மார்க் வாங்கியிருக்கேன். மாத்ஸ் சீட்டுக்காக நிக்கறேன்.

('ஒருவனு'ம் க்யூவில் நிற்க ஆரம்பிக்கிறான். ஓர் அறையில் இண்டர்வ்யூ நடந்து கொண்டிருக்கிறது.)

காட்சி - 2

பிரின்ஸிபால் : உன் பேரு?

நபர் 1 : ஏ. தணிகாசலம்.

பிரின்ஸி : எவ்வளவு தர்றே?

('அஞ்சாயிரம்' என்று ஐந்து விரல்களைக் காட்டுகிறான். பிரின்ஸிபால் கையை நீட்ட, கையில் திணிக்கிறான். அவற்றை எண்ணியவாறே...)

பிரின்ஸி : என்ன ஸீட்?

நபர் 1 : பி.காம்.

பிரின்ஸி : நாளைக்கே வந்து ஜாயின் பண்ணிடு. நெக்ஸ்ட்.


(அடுத்தவன் உள்ளே வருகிறான்)

பிரின்ஸி : உன் பேரு?

நபர் 2 : பி. தணிகாசலம்.

பிரின்ஸி : எவ்வளவு தர்றே?

(நான்கு விரல்களைக் காட்டுகிறான். பிரின்ஸிபால் கையை நீட்ட, கையில் திணிக்கிறான். அவற்றை எண்ணிய



மனைவி : போஸ்ட்மேனை ஏங்க இப்படி திட்டுறீங்க?

எழுத்தாளர் : பின்னே... திரும்பி வர்ற என் கதையைக் கொண்டு வந்து 'சார் வேஸ்ட்'ங்கிறான்!

- வேலூர் கோவி. செந்தில்

வாறே...)

பிரின்ஸி : என்ன ஸீட்?

நபர் 2 : பி.எஸ்.சி. கெமிஸ்ட்ரி.

பிரின்ஸி : போ. போ! நான் பார்த்துக் கறேன். நெக்ஸ்ட்?

(அடுத்தவன் உள்ளே வருகிறான்)

பிரின்ஸி : உன் பேரு?

ஒருவன் : எனக்கே தெரியாது.

பிரின்ஸி : என். கே. தெரியாது...? புதுமை யான பேரா இருக்கே! எவ்வளவு தர்றே?

ஒருவன் : என்கிட்டே பத்து ரூபாதான் இருக்கு.

பிரின்ஸி : அ து க் கு மேல நயாபைசா இல்லியா?

ஒருவன் : சி க ரெ ட் வாங்க எட்டணா இருக்கு.

பிரின்ஸி : சரி சரி! அந்த பத்து ரூபாயையும் அந்த எட்டணாவையும் இந்த கவர்ல போடு.

(அவன் அப்படியே செய்ய ஒரு அரு வருப்பான பொருளைத் தூக்குவது போல் தூக்கித் தன் மேஜை டிராயரில் போட்டுக் கொள்கிறார்.)

பிரின்ஸி : என்ன ஸீட்?

ஒருவன் : பி. ஏ. இங்கிலீஷ். தமிழ் மீடியம்.

பிரின்ஸி : பி. ஏ. இங்கிலீஷ், தமிழ் மீடி யமா? போயிக்கோ... நான் பார்த்துக் கறேன். நெக்ஸ்ட்.

(இப்படி... தொ ட ர் ந் து கொண்டே போகிறது)

காட்சி - 3

(பரீட்சை ஹாலில் எல்லோரும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஒ ரு வ ரை ப் பார்த்து ஒருவர் காப்பி அடிக்கிறார்கள். பிட் அடிக்கிறார்கள்)

நபர் 1 : ஏய், நீ ஃபிசிக்ஸ். நான் கெமிஸ்ட்ரி. என்னைப் பார்த்துக் காப்பி அடிக்கிறாயே.

நபர் 2 : பேப்பரைப் பார்த்தா மார்க் போட றாங்க? நீ ஏன் கவலைப்படறே?

(ஒருவரைப் பார்த்து... ஒருவரைப் பார்த் தது... ஒருவரைப் பார்த்து... ஒருவரைப் பார்தது... ஒருவர் எழுதுகிறார்கள்.)

காட்சி - 4

(எல்லோரும் வேலைக்காக க்யூவில் நின்று கொண்டிருக்கின்றனர்.)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

தாத்தா : நான் அந்தக் காலத்து எஸ். எஸ். எல். சி.

தலைவர் : டான்ஸ் ஆடத் தெரியுமா?

(தாத்தா தலையாட்டுகிறார்.)



''திரும்பத் திரும்ப கூப்பிடறீங்களே... எத்தனை தடவை சொல்றது 'ராங் நெம்பர்'னு?''

''அதான் 'ராங் நெம்பர்'னு தெரியு தில்லே... ஏன் எடுக்கிறீங்க...?''

- அ. தெய்வசிகாமணி

தலைவர் : எங்கே ஆடு பார்க்கலாம்.

(தாத்தா தை தை என்று ஆடுகிறார்.)

தலைவர் : சரி, உனக்கு ப்யூன் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 1 : பி. ஏ. எகனாமிக்ஸ்.

தலைவர் : லஞ்சம் கொடுக்கல் வாங்கல் பழக்கம் உண்டா?

(தலையாட்டுகிறார்)

தலைவர் : எங்கே, கொடு பார்க்கலாம்.

(கொடுக்கிறார்)

தலைவர் : சரி உனக்கு கிளார்க் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே...?

நபர் 2 : டைப்ரைட்டிங் ஹையர், இங்கி லீஷ், தமிழ் ரெண்டுமே ஃபெயில்.

தலைவர் : டைப் அடிக்கத் தெரியுமா?

நபர் 2 : ஏதோ பார்த்து நிதானமாச் செய் வேங்க.

தலைவர் : தூங்கத் தெரியுமா?

நபர் 2 : ம்...

தலைவர் : தூங்கு

(தூங்க ஆரம்பித்துக் குறட்டை விட...)

தலைவர் : ஏய் ஏய் ஏய்... எந்திரி... உனக்கு டைப்பிஸ்ட் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 3 : பி.யு.சி.

தலைவர் : தலையாட்டத் தெரியுமா?

(அவர் தலையாட்ட ஆரம்பித்து பொம்மலாட்ட பொம்மை மாதிரி ஆட)

தலைவர் : சரி உனக்கு மானேஜர் வேலை. நெக்ஸ்ட்.

(அடுத்தவர் உள்ளே வருகிறார்)

தலைவர் : என்ன படிச்சிருக்கே?

நபர் 4 : பி.ஏ.

தலைவர் : உனக்கு நடிக்கத் தெரியுமா?
(அவர் தலையாட்ட)
தலைவர் : நடி பார்க்கலாம்.
(நடித்துக் காட்ட)
தலைவர் : நீ என்னை விட நல்லா நடிக்கிறே...
(அவர் பெருமிதத்துடன் புன்னகை செய்ய...)
தலைவர்: அதனால என் பதவிக்கே ஆபத்து. உனக்கு வேலை இல்லே.. நெக்ஸ்ட்.

காட்சி - 5

(ஆஃபீசில் எல்லோரும் 'வேலை' செய்து கொண்டிருக்கின்றனர். பியூன் டான்ஸ் ஆட, டைப்பிஸ்ட் தூங்க, கிளார்க் லஞ்சம் வாங்க, வேலை 'ஜரூ ராக' நடந்து கொண்டிருக்கிறது.

தலைவர் அவ் வழியாக வர, கிளார்க் கையை ஏந்தியவாறு...)

க்ளார்க் : ஐயா.. பிரமோஷன் ஏதாச்சும் இருந்தாப் போடுங்க ஐயா... நாலு வருஷம் ஆச்சு ஐயா வேலைல சேர்ந்து...
தலைவர் : பிரமோஷன்லாம் ஒண்ணும் இல்லே. போ போ...
கிளார்க் : பொண்டாட்டி தொந்தரவில உயிர் போகுது ஐயா. கொஞ்சூண்டு பிரமோஷன் போடுங்க ஐயா.
தலைவர் : அதெல்லாம் இல்லே. போ போ.
எல்லோரும் : ஐயா... ப்ரமோஷன் இருந்தாப் போடுங்க ஐயா.
தலைவர் : சரி சரி எல்லோரும் க்யூவில நில்லுங்க.
(எல்லோரும் க்யூ வில் நிற்கிறார்கள்)
நபர் 1 : க்யூவில யார் முதல்ல வந்தாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி. நான்தான் முதல்ல வந்தேன்.

''உரிமைக்காகப் போராடி அதில் வெற்றியும் அடைஞ்சேன்!''

''அடடே எங்கே?''

''ஹோட்டல்ல! காசில்லாமல் காப்பி சாப்பிட்டதுக்கு மாவாட்ட முடியாது... மேஜைதான் துடைப்பேன்னு ஒரேடியாச் சாதிச்சுட்டேன்!''

- வேதபுரி எஸ். ரமேஷ்



நபர் 2 : நான்தான்...
நபர் 3 : நான்தான்...
நபர் 4 : யார் நல்லாத் தலையாட்டறாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.
(எல்லோரும் தலையாட்ட ஆரம்பிக்கிறார்கள். பொம்மலாட்ட பொம்மை மாதிரி ஆட ஆரம்பிக்கிறார்கள்.)
நபர் 2 : யார் நல்லா எருமை மாடு மாதிரி கத்தறாங்களோ அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.
(எல்லோரும் எருமை மாடு மாதிரி கத்துகிறார்கள். ஒருவன் ஆடு மாதிரி கத்த எல்லோரும் ஆடு மாதிரி கத்துகிறார்கள். ஒருவன் 'கொக்கரக்கோ' என்று கூவ எல்லோரும் கூவுகிறார்கள்)
தலைவர் : சைலன்ஸ், சைலன்ஸ்... யார் நல்லா அசடு வழியறாங்களோ... அவங்களுக்குத்தான் மானேஜர் பதவி.
(எல்லோரும் ஒட்டுமொத்தமாக அசடு வழிய, மிகச் சிறப்பாக அசடு வழியும் பியூன் தாத்தாவிற்கு மானேஜர் பதவி கிடைக்கிறது. எல்லோரும் தாத்தாவைத் தூக்கி வைத்துக் கொண்டு பாட்டுப் பாடி ஆடுகிறார்கள்)

காட்சி - 6

(ஒரு பள்ளியில் எல்.கே.ஜி. அட்மிஷனுக்கான இண்டர்வ்யூ நடந்து கொண்டிருக்கிறது.)
ஹெட்மாஸ்டர் : தலையைச் சுத்தி மூக்கைத் தொடு பார்க்கலாம்...
அப்பா : குழந்தைக்கு இன்னும் எட்டலை. நீங்கதான் கொஞ்சம் தயவு பண்ணணும்.
ஹெட்மாஸ்டர் : நான் குழந்தையைச் சொல்லலை. உங்களைத் தொடச் சொன்னேன்.
(அப்பா ஹெட்மாஸ்டரின் மூக்கைத் தொட...)
ஹெட்மாஸ்டர் : என் மூக்கை இல்ல சார்... உங்க மூக்கை.
(அப்பா குண்டாயிருப்பதால் எவ்வளவு முயற்சி செய்தும் முடியாமல் போகிறது)
ஹெட்மாஸ்டர் : நீங்க கிராஜுவேட்னு சொன்னீங்க... ஆஃப்ட்ரால் உங்க மூக்கைத் தொட முடியலையே... சரி போனாப் போவுது... ஏபிசிடி சொல்லுங்க...
அப்பா : நானா... ஏ, பி, சி, டி...
ஹெட்மாஸ்டர் : ஏ பி சி டி முழுசாச் சொல்லுங்க.
அப்பா : முழுசாத்தானே சொன்னேன். ஏ பி சி டி.
ஹெட்மாஸ்டர் : முழுசாச் சொல்லுங்கோ.

"டாக்டர்! பல்ல போகும் போதெல்லாம் ஒரே தூக்கமா வருது டாக்டர்..."

"கொஞ்ச நேரம் அப்படியே சாய்ஞ்சி படுத்துக்க வேண்டியது தானே..."

"நான் படுத்துக்கிட்டா பல்லை யாரு டாக்டர் ஒட்டறது?"

– செங்குன்றம் ரமேஷ்ராம்



அப்பா : முழுசா?

ஹெட்மாஸ்டர் : அட, ஏபிசிடிக்கு அப்புறம் சொல்லுங்க, ஈ, எஃப், ஜி. எச்...

(ஹெட் மாஸ்டர் சொல்லச் சொல்ல அப்பாவும் கூடவே ஒருவழியாகச் சொல்லி முடிக்கிறார்)

ஹெட்மாஸ்டர் : என்னது.. குழந்தைக்குச் சொல்லித் தரதா இல்லை உங்களுக்குச் சொல்லித் தர்றதா...?

அப்பா : அதில்லை சார். படிச்சு முப்பது வருஷம் ஆச்சா... அதான் மறந்து போச்சு...

ஹெட்மாஸ்டர் : அதெப்படி சார் மறக்கும்? உங்களுக்கு.... சாரி, உங்க பையனுக்கு எப்படி எல்.கே.ஜி. சீட் தர்றது?

(அப்பா மினிஸ்டர் ரெகமண்டேஷனை நீட்டுகிறார்.)

ஹெட்மாஸ்டர் : சரி சரி... மினிஸ்டர் ரெகமண்டேஷன் வெச்சிருக்கறதால அஞ்சாயிரம் ரூபா டொனேஷன் கட்டிட்டுக் குழந்தையச் சேருங்கோ, போங்கோ.

காட்சி – 7

(வீட்டில் அம்மா சமைக்கிறாள். துணி துவைக்கிறாள். பாத்திரம் துலக்குகிறாள். அப்பா உட்கார்ந்து டி.வி. பார்த்துப் புத்தகங்கள் படித்துப் பொழுதுபோக்குகிறார்)

அப்பா : வீட்டைப் பார்த்துக்க. நான் போய் மண்ணெண்ணெய் வாங்கிண்டு வந்திடறேன்!

(கிளம்புகிறார்)

காட்சி – 8

ஒருவன் : இது மண்ணெண்ணெய் க்யூ தானே...?

நபர் 1 : இது பாமாயில் க்யூ...

நபர் 2 : பாமாயில் க்யூவாம்... திருப்பதி லட்டு தர்றாங்க. அதான் நிக்கறோம்.

நபர் 3 : திருப்பதி லட்டு தர்றாங்களா...? குட்டுதான் தருவாங்க. பசு மாட்டோட கன்ல புர்ச்சித் தலைவர் தெரியறாராம். அவரப் பார்த்துட்டுப் போலாம்னுதான் கொக்காலடியிலிருந்து வந்திருக்கேன்.

ஒருவன் : இதே இடம்... இதே க்யூ... இதே ஜனங்க... பத்து வருஷத்துக்கு முந்தி.. தாத்தா நீ கூட 98 வருஷமா நிக்கறேன்னு சொல்லலை...?

தாத்தா : நான் மட்டுமா நிக்கறேன்? நீயுந்தான் நிக்கறே. இந்த ஊரு உலகம் எல்லாமேதான் நிக்குது. விலகி விலகிப் போனாலும் மறுபடியும் மறுபடியும் இந்த க்யூவுக்குத்தானே நாம எல்லோரும் வந்து சேரணும்?

ஒருவன் : இந்த க்யூவ விட்டு விலகவே முடியாதா?

தாத்தா : நீயுந்தான் இந்த க்யூவ விட்டு விலகிப் போக முயற்சி பண்ணினே. முடிஞ்சுதா? காலேஜ் க்யூவுக்குப் போனே. அப்புறம் ஆஃபீஸ் க்யூ, அப்புறம் ப்ரமோஷன் க்யூ, அப்புறம் கல்யாண க்யூ, அப்புறம் குழந்தையோட ஸ்கூல் அட்மிஷன் க்யூ.. அப்புறம்? மறுபடியும் காலேஜ், ஆஃபீஸ், ப்ரமோஷன், கல்யாணம், குழந்தை... ரேஷன் க்யூ, சினிமா க்யூன்னு வேற வேற பேரு சொல்லிக் கூப்பிடறோமே தவிர எல்லா க்யூவும் ஒண்ணுதான். ஒரே க்யூவில ஒரே இடத்திலதான் நாம் எப்பவுமே நின்னுக்கிட்டிருக்கோம். க்யூ நகர்ற மாதிரி சில சமயங்கள்ல தோணும். அது சும்மா... ஒரு பிரமை..."

ஒருவன் : இந்த க்யூவ விட்டு விலகறதுக்கு வேற வழியே கிடையாதா? பார்வையாளர்களே... நீங்களாவது சொல்லுங்க. இது என்ன க்யூ? இவங்கள்லாம் எதுக்கு நிக்கறாங்க? இந்த க்யூ நகரவே நகராதா? இந்த க்யூவ விட்டுத் தப்பிக்கவே முடியாதா?

அனைவரும் : இந்த க்யூவ விட்டுத் தப்பிக்கவே முடியாதா?

(எல்லோரும் அப்படியே உறைந்து போய் நிற்கிறார்கள்)

(திரை)

வாஸந்தி

2

"தத்தை தாஹா தித்தைத் தாஹா -
திதிதை திதிதை திதிதை திதிதை - "

ஜுர வேகத்தில் தாளக் கட்டை அடித்த அதே கதியுடன் டான்ஸ் டீச்சரின் முகமும் கண்களும் எதிரில் ஆடிக் கொண்டிருந்த மாணவிகளின் மேல் சுழன்றன. டீச்சரின் பார்வையிலிருந்து எதுவும் தப்பாது. சொல் கட்டின் ஏற்ற இறக்கத்திலிருந்தே அவருடைய அதிருப்தியும் திருப்தியும் தெரியும். கட்டையை அடிக்கும் வீச்சிலேயே மாணவிகள் புரிந்து கொள்ளலாம். ''தாளம் நழுவுது. வேகம் வேகம் அசமஞ்சங்களா வேகம்!'' வெகு அபூர்வமாகத்தான் சபாஷ் கிடைக்கும். அதுவும் ஏதோ சலுகை காட்டுவது போல.

இது இந்தியக் கஞ்சத்தனம் என்று மீரா புரிந்து கொண்டு வெகு நாட்கள் ஆகின்றன. டீச்சரின் திட்டுக்களும் அதட்டல்களுமே ஒரு வகையான பாராட்டுக்கள் என்று நினைக்குமளவுக்கு விவேகம் வந்துவிட்டது.

கட்டை ஆவேசத்துடன் பேசிற்று.

''தை திதித்தை - தைதை திதித்தை -
தைதைதை திதித்தை - தாம்!''

''மாணவிகள் மூச்சு வாங்க நின்ற போது லலிதாங்கி தனது மை தீட்டிய விழிகளை விரித்து ''மீரா!'' என்றாள் உரத்த குரலில்.

''எஸ் மேம்?'' என்றாள் மீரா கலவரத்துடன் - இடுப்பிலிருந்த கையைத் தூக்கி நெற்றியிலிருந்த வியர்வையைத் துடைப்பதா, வேண்டாமா என்று யோசனையுடன்.

''தை திதித்தை பண்ணும் போது கையை நல்லா வட்டமா வீசு! காத்து லேந்து எத்தையோ பிடுங்கற மாதிரி இருக்கு நீ செய்யறது!''

மீரா சிரித்தாள். பின்னால் நிற்கும் மாணவிகளும் சிரித்தார்கள்.

''சிரிக்காதீங்க!'' என்றாள் லலிதாங்கி கடுப்புடன். ''பொழுதுபோக்குக்காக யாராவது இங்க வந்திங்கன்னா தயவு செய்து நின்னுக்கிடுங்க. சிரத்தையாக் கத்துக் கிட்டாத்தான் இந்தக் கலைக்கு நீங்க மரியாதை கொடுத்ததா அர்த்தம். தத்தைத் தாஹா எத்தனை பேர் சரியாப் பண்ணறீங்க? முழங்காலை மடிக்காம லாம்ப் போஸ்ட் மாதிரி நிக்கிறீங்க. பண்ணுங்க மறுபடி - தத்தைத் தா ஹா-!''

ஆவேசமாக லலிதாங்கி தொடங்க, மாணவிகள் பாதிப் பேர் ரோசத்துடன், பாதிப் பேர் அலுப்புடன் தொடர்ந்தார்கள். டான்ஸ் டீச்சரின் விமர்சனத்துக்கு உள்ளானது ஏதும் புதிதில்லையானாலும் மீராவுக்கு அவமானமாக இருந்தது. என்றாவது ஒரு சபாஷ் வாங்கி விட முடிந்தால் அது அவள் வாழ்வில் ஒரு பொன்னாள் என்று ரொமான்டிக்காக நினைக்கத் தோன்றிற்று.

இந்திய கலாசாரம் குழந்தைகளுக்குத் தெரிய வேண்டும் என்கிற அப்பாவின் பிடிவாதத்தில் நியூயார்க்கில் ஒரு பரத நாட்டியப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி செய்தாள். அங்கு கிடைத்த பயிற்சிக்கும் இங்கு கிடைப்பதற்கும் சம்பந்தமேயில்லை என்று தோன்றிற்று. அமெரிக்காவில் கற்றுக் கொடுத்த ஷாலினி அமெரிக்கனைப் போலவே பேசுவாள். அடிக்கடி 'க்ரேட்' 'ஃபைன்' 'குட்' என்ற வார்த்தைகள்தான் பிரயோகிப்பாள். அமெரிக்க மாணவிகளுக்கு அவளிடம் தேவதா விசுவாசம். பரதநாட்டியத்தைக் கரை கண்டுவிட்டதான தன்னம்பிக்கையை மாணவிகளிடம் ஏற்படுத்துவதில் ஷாலினி சாமர்த்தியசாலி. ட்ரிம்மாக இருப்பாள். வருஷத்துக்கு ஒருமுறை இந்தியாவுக்குச் சென்று வருமளவுக்குச் சொந்த சம்பாத்தியம். திரும்பி வரும் போது புதிய ட்ரெஸ்ஸுகளும் நகைகளும் இருக்கும்.

சென்னைக்கு வந்ததும் அக்கம்பக்கத்தில் அம்மா விசாரித்து மீராவை லலிதாங்கியிடம் வந்து சேர்த்த போது, மீராவின் நெஞ்சு நிமிர்ந்தே இருந்தது, இரண்டு வருஷப் பயிற்சி உள்ளவள், என்று. அலா

காதலெனும் சோலையிலே

ரிப்பை ஆடிக் காண்பி, எந்த ஜதிஸ்வரம் தெரியும் என்றெல்லாம் லலிதாங்கி கேட்க வில்லை. உன் குரு யார் என்று கூடக் கேட்கவில்லை. 'உன் பழைய பயிற்சியைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆரம்பத்திலேந்து தொடங்கணும். தையா-தைலேந்து'' என்றாள் நிர்தாட்சண்யமாக.

தன்னுடைய அமெரிக்க இங்கிலீஷ் தான் லலிதாங்கியின் அலட்சியத்துக்குக் காரணம் என்று மீராவுக்கு அன்று தோன்றிற்று. ஆனால் நாளும் கிழமையும் முகூர்த்தமும் பார்த்துக் கண்ணை மூடிய நிலையில் கைகூப்பிப் பிரார்த்தித்து, பிறகு தையா-தை ஹா- என்று லலிதாங்கி கம்பீரத்துடன் பாடத்தைத் துவங்கிய போது மீராவுக்கு உடம்பு சிலிர்த்துப் போயிற்று. தெய்வ சன்னிதானத்தில் நுழைந்தது போலிருந்தது. லலிதாங்கியை மீராவுக்கு அந்த க்ஷணமே பிடித்துப் போயிற்று.

சென்ற வாரம்...

மீராவுக்குப் பதினேழு வயது. இரண்டு வருஷங்கள் முன்பு வரை அவளும், தம்பி மகேஷும் பெற்றோருடன் அமெரிக்காவில் வாழ்ந்தார்கள். திடீரென்று இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்து விட அப்பா ஏன் முடிவு செய்தார் என்று அவளுக்குத் தெரியாது. இந்தியச் சூழலில் இருந்த கட்டு திட்டங்கள் புரியாமல், அதனுடன் சமரசம் செய்து கொள்ள முடியாமல் அவளும் மகேஷும் தடுமாறிய போது, வாழ்க்கையில் மீண்டும் பிரகாசம் காட்டியவர்கள் கிராமத்திலிருந்து வந்த அத்தைப் பாட்டியும் தாத்தாவும். அந்த வயோதிகத்தில் அவர்களிடையே இருந்த பரஸ்பர நெருக்கம் மீராவுக்கு இந்தியாவில் ஏற்பட்ட ஆச்சரியங்களுள் ஒன்று. பள்ளியில் அவள்தான் மானிட்டர். சில தோழிகளின் அசட்டுத்தனங்களைப் பார்க்கும் போது அத்தைப் பாட்டியின் வயது தனக்கு ஆகி விட்டது போலத் தோன்றும். அன்று சனிக்கிழமை. அவள் வகுப்பில் படிக்கும் மீனாட்சி ஃபோன் செய்கிறாள், தான் ஒரு பையனுடன் விருந்துக்குப் போவதாக. 'உன் வீட்டுக்கு வருவதாக அம்மாவிடம் சொல்லியிருக்கிறேன். நீ குட்டை உடைக்கக் கூடாது' என்கிறாள்.

பயிற்சி முடிந்தது ஒரு வழியாக. எல்லாரும் வரிசையாக வந்து லலிதாங்கியின் முன் நின்று நிலத்தைத் தொட்டு வணங்கினார்கள்.

வகுப்பு முடிந்த உற்சாகத்தில் பெண்கள் எல்லாரும் சளசளவென்று பேசியபடி சலங்கையை அவிழ்த்துச் செருப்புக்குள்



காலை நுழைத்தார்கள். சல்வாருக்கு மேல் பயிற்சிக்காகப் புடைவை அணிந்த பெரிய பெண்கள் அதைக் களைந்து உடுப்பை மாற்றிக் கொண்டு வந்தார்கள். மீராவின் வீட்டுக்கு அருகில் வசிக்கும் நந்தினி தயாராவதற்காக மீரா அங்கிருந்த படிக்கட்டில் அமர்ந்து காத்திருந்தாள்.

நந்தினி படு ஸ்லோ. தினமும் வகுப்பு முடிந்து கிளம்புவதற்குள் மீராவின் பொறுமை நழுவிப் போகும். அந்தக் காத்திருக்கும் நேரத்தில் படிக்கவென்றே புத்தகம் ஏதாவது கொண்டு வருவது வழக்கம். இன்று கிளம்பும் அவசரத்தில் மறந்து விட்டது. நந்தினி ஸ்லோ மட்டு மில்லை. படு பயந்தாங்கொள்ளி. நிஜமா கவே பயப்படுகிறாளா அல்லது அப்படி நடிக்கிறாளா என்று கூட சில சமயம் மீராவுக்குச் சந்தேகம் வரும். அவளுடைய அம்மா நிஜமாகப் பயப்படுபவள். மீரா வின் துணை கிடைத்த காரணத்தால்தான் நந்தினியால் வகுப்பில் சேர முடிந்தது என்று மீராவுக்குத் தெரியும். மீரா வகுப்புக்குச் செல்ல முடியாத அன்று நந்தினிக்கும் பாடம் போகும். நந்தினியின் அம்மாவின் பயம் ரொம்பவும் விசித்திர மானது என்று தோன்றும். ''ஏன் ஆன்ட்டி, அவளைத் தனியா அனுப்பக் கூடாது?'' என்ற கேள்விக்கு, ''எங்க வீட்டிலே அப்படியெல்லாம் அனுப்பிச்சு வழக்க மில்லே'' என்ற பதில்தான் விளக்கமாக வரும். அந்த பதில் மீராவை அதிகமாகக் குழப்பும். நந்தினிக்கு அவளுடைய வயது தான் என்றாலும் அவளை ரட்சிக்கும் பொறுப்பு தன்னுடையது என்கிற எண் ணம் அவளைக் கட்டுப்படுத்தி வருகிறது. நந்தினியின் நிதானமும் மாறவில்லை, அவளுடைய அம்மாவின் பெருமை கலந்த பயமும் போகவில்லை.

''கமலா, எங்கிட்ட நீ எதையும் ஒளிக்கக் கூடாது. நிஜத்தைச் சொல்லு'' என்ற லலிதாங்கியின் குரல் கேட்டு மீரா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவ ளுக்கு முதுகைக் காட்டியபடி சற்று எட்டி லலிதாங்கி நின்றிருந்தாள். அவள் எதிரில் சீனியர் வகுப்பில் இருக்கும் கமலா ராகவன் மௌனமாக நின்றிருந்தாள். பதில் ஏதாவது சொன்னாளா என்று தெரிய வில்லை.

''போன கிளாசுக்கு வராத போது எனக்குக் கவலையாப் போச்சு. அதுக்கு முந்தின கிளாசுக்கும் நீ வரல்லே. காரண மும் சொல்லலே. ஏன் கமலா, கிளாசுக்கு வரல்லேன்னு உங்கம்மாவை எதேச்சை யாக் கேட்டேன். நல்லா இருக்காளே, கிளாசுக்கு வரல்லியான்னு அதிர்ந்து போய்க் கேக்கறாங்க. கிளாசுக்குப் போறதா வீட்டிலே சொல்லிட்டு வேற எங்கேயோ போறே போலிருக்கு.''

மீரா தன்னையே யாரோ அந்தக் கேள்வி கேட்டது போல தலையைக் குனிந்து கொண்டாள், கமலாவின் முகத் தில் தோன்றக்கூடிய சங்கடத்தைப் பார்க்கத் தென்பு இல்லாமல். அவளுடைய பதிலைக் கேட்பதில் லலிதாங்கிக்கும் ஆர்வமில்லை என்று தோன்றிற்று.

''நீ ரொம்ப நல்ல ஸ்டுடன்ட். உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. எனக்குப் பெருமையளிக்கிற மாதிரி வருவேன்னு நா நினைச்சுக்கிட்டிருக்கேன். உனக்கு நாட்டி யத்திலே இன்ட்ரெஸ்ட் போயிட்டுதுன்னா வர்றதை நிறுத்திக்கோ. அனாவசியமாப் பொய் சொல்லி என்னைச் சங்கடத்திலே மாட்டி வைக்காதே.''

அதற்கும் கமலா பதில் சொன்னதாகத் தெரியவில்லை. மீரா மெல்லத் தலை நிமிர்ந்த போது, லலிதாங்கி விருவிரு வென்று வாசலுக்குச் சென்று விட்டாள். கமலா சற்று நேரம் அவள் செல்வதை மௌனமாகப் பார்த்து விட்டு இடுப்பில் கட்டியிருந்த சேலைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

மீராவுக்குச் சட்டென்று மீனாட்சியின் நினைவு வந்தது. எத்தனை குண்டு தைரி யம் அவளுக்கு என்று இப்பொழுது கோபம் வந்தது. மீனாட்சி ஒரு லூஸ் என்று மீராவுக்கு எண்ணம். படிப்பு ஏறவில் லையா, அல்லது வீம்புக்காக படிப்பில் நாட்டமில்லாதவளாக இருக்கிறாளா என்று தெரியாது. அசட்டுப் பிசட்டென்று பெருமையடித்துக் கொள்ளும் வழக்கம் உண்டு. வெளுப்பாக இருப்பதால் தான் ரொம்ப அழகு என்ற எண்ணம் அவளுக்கு. தெருவில் செல்லும் இளைஞர்கள் எல்லாம் தன் மேல் காதல் கொண் டுள்ளதாகக் கற்பித்துக் கொள்வாள். அது தினம் தினம் வகுப்பில் ஒரு புதிய காதல் கதையாகப் பரிணமிக்கும். சரியான கிறுக்கு என்று மற்ற பெண்கள்பரிகசிப்பதைப் பற்றி அவளுக்கு அக்கறையில்லை. ''போர டிக்காதே மீனாட்சி'' என்று ஒருமுறை மீரா சொன்னதற்கு ''ஏன் உனக்குப் பொறா மையா இருக்கா?'' என்று கேட்ட புத்தி சாலிப் பெண்.

இன்றைக்கு என்ன தில்லுமுல்லு செய்யப் புறப்பட்டாள் என்று புரிய வில்லை. ''உன் வீட்டுக்குப் போறதா என் அம்மாகிட்ட சொல்லியிருக்கேன். என் காலை வாரி விடாதே.''

அந்த நினைப்பில் மறுபடி ஏற்பட்ட எரிச்சலில் மீரா, ''டாமிட்'' என்றாள்.

''என்ன ஆச்சு உனக்கு?'' என்று காலை யில் அம்மா கேட்ட அதே கேள்வியை

கான்ஸ்டபிள் : சார், சார், கேடி ஒருத்தன் மாட்டியிருக்கான் சார்...!
இன்ஸ்பெக்டர் : அப்படியா...? என்ன குற்றம் செஞ்சான்?
கான்ஸ்டபிள் : அதை இனிமேல் தான் சார் கண்டுபிடிக்கணும்...!
- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



இப்பொழுது எதிரில் நின்ற நந்தினி கேட்டாள்.

''உனக்கு மீனாட்சியைத் தெரியுமோ?'' என்றாள் மீரா, மீனாட்சியை இன்னும் மனத்திலிருந்து ஒதுக்க முடியாமல்.

''எந்த மீனாட்சி? எப்பப் பார்த்தாலும் ஹிந்தி சினிமாப் பாட்டை முணுமுணுத்துக்கிட்டு இருப்பாளே அவளா, உன் செக்ஷன்லே இருக்கறவதானே?''

''ஆமாம்,'' என்று மீரா சிரித்தாள். ''பாட்டு மாத்திரம் இல்லே. அவளுடைய ஹீரோ கூட ஹிந்தி ஸ்டார்தான். ஆமீர் கான்! போட்டோவை எப்பவும் புத்தகத்துக்கு நடுவிலே வச்சிக்கிட்டிருப்பா!''

''தூ!'' என்று நந்தினி முகத்தைச் சுளித்தது மீராவுக்கு அதிக தமாஷாக இருந்தது.

''ரொம்பத் தெரியாது. அந்த மாதிரி இருக்கிற பெண்கள்கிட்டேந்து நா ஒதுங்கி இருந்துடறது. எனக்கு பயம்.''

மீரா சிரித்தாள்.

''என்ன பயம்?'' என்று நந்தினியைக் கிண்டினாள்.

''அவங்க சகவாசமெல்லாம் நல்ல சகவாசமில்லேன்னு எங்க அம்மா கண்டிச்சுச் சொல்லுவாங்க. மீனாட்சியோட நா பழகறேன்னா எங்கம்மா என்னை ஸ்கூல்லேந்து எடுத்தாலும் எடுத்துடுவாங்க.''

''மீனாட்சியைப் பத்தி உங்கம்மாவுக்கு எப்படித் தெரியும்?''

''ஓ, அவங்க குடும்பம் பூராத் தெரியுமில்லே?''

மீரா யோசனையுடன் நடந்தாள். 'என்ன தெரியும்?' என்று மேற்கொண்டு கேட்பது அநாகரிகம் என்று தோன்றிற்று.

நந்தினி சுற்றுமுற்றும் பார்த்தபடி, ''அவங்க அம்மாவே ஒரு மாதிரின்னு சொல்வாங்க'' என்றாள் ரகசியக் குரலில்.

மீராவுக்குச் சங்கடமாகப் போயிற்று. மீனாட்சியைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தது தன்னுடைய தவறு என்று ஓர் அவமான உணர்வு ஏற்பட்டது.

''ப்ளீஸ் இதைப் பத்தியெல்லாம் நாம பேசாம இருக்கிறது நல்லது. நமக்கென்ன அதைப் பத்தி?'' என்றாள் சட்டென்று.

''அது சரி, நமக்கென்ன வந்தது?'' என்றாள் நந்தினி, சாதுவான முகபாவத்தோடு. நீ கேட்டதாலே சொன்னேன்.''

மீனாட்சியின் அம்மாவைப் பற்றி நான் எங்கே விவரம் கேட்டேன் என்று திருப்பிக் கேட்க மீராவுக்கு அலுப்பாக இருந்தது.

இன்று காலை மீனாட்சி என்ன சொன்னாள் என்று அம்மாவிடம் சொல்ல முடியவில்லை. சொல்வதற்குள் வாசலில் யாரோ கூப்பிட அம்மா அதை கவனிக்கச் சென்று பிறகு மறந்து போனாள்.

நட்டநடுத் தெருவில் தங்களை மறந்த பேச்சில் நடக்கும் போது பின்னால் ஒலித்த ஹார்ன் ஒலியில் இருவரும் சட்டென்று ஒதுங்கினார்கள். டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்த லலிதாங்கி, ''என்ன பேச்சு அப்படி?'' என்றாள்.

''நீங்க காலை ஒடிச்சுக்கிட்டா நா எப்படி என் பிழைப்பை நடத்தறது?'' என்று சிரித்தாள். அவளை அப்படி ஓர் உல்லாசமான நிலையில் மீரா பார்த்ததில்லை. அவள் சிரிக்கும் போது, ரொம்பவும் அழகாகத் தோன்றினாள். பக்கத்தில் லேசாகத் தலை நரைத்த ஓர் ஆண் அமர்ந்திருந்தார். அவரும் அவர்களைப் பார்த்துச் சிரித்தார்.

கார் சென்றதும் நந்தினி ''யார் அந்த ஆள்?'' என்றாள்.

''யாருக்குத் தெரியும். மேம் உடைய பாய் ஃப்ரெண்டா இருக்கலாம்,'' என்று மீரா சிரித்தாள்.

''ச்சீ இந்த வயசிலா?'' என்ற நந்தினியின் பேச்சு மீராவுக்குத் தமாஷாக இருந்தது.

''ஏன் இருக்கக் கூடாது?''

''சீ!''

இந்த நந்தினியுடன் பேசி ஏதும் பிரயோஜனமில்லை என்று திடீரென்று மீராவுக்கு அலுப்பு ஏற்பட்டது. வீடும் வந்து விட்டது.

படியேறி உள்ளே சென்ற போது மீனாட்சியின் அம்மா வரவேற்பறையில் அமர்ந்திருப்பது தெரிந்தது.

(தொடரும்)

பொன்விழா ஆண்டு | பொன்நகைப் பரிசுத் திட்டம் - 6

பலன் தந்த பழமொழி

அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம்!

என் நண்பருக்குக் கால்நடைத் தீவனக் கடையில் வேலை. ஒருநாள் சந்தித்த போது தனக்கு இரண்டாவதாகவும் பெண் பிறந்திருப்பதாகவும் ''அவிட்டம் ஆகாது'' என்று குடும்பத்தினர் கூறுவதாகவும் சொன்னார். ''அவிட்ட நட்சத்திரம் மிக நல்லது'' என்று நான் ஆறுதல் கூறி, ''அவிட்டத்தில் பெண் பிறந்தால் தவிட்டுப் பானையெல்லாம் தங்கம்'' என்ற பழமொழியையும் உதிர்த்து வைத்தேன்! ஆஞ்சநேயரை தரிசித்து அமைதி பெறுமாறு சொன்னேன்.



நான்கு ஆண்டுகள் சென்றுதான் அவரை மீண்டும் பார்க்க முடிந்தது. ''ஸார் என்னைத் தெரிகிறதா?'' என்றார். வளமை அவரிடமும் அவர் மனைவி, குழந்தையிடமும் நன்றாகவே தெரிந்தது.

மேலும் விசாரிக்க அவர் கூறியது என்னை வியப்பில் ஆழ்த்தியது : தவிட்டு எண்ணெய் ஆலைகள்; ஒருவித கனரக பிஸ்கட் தயாரிப்புத் தொழிலகம் ஆகியவற்றுக்குத் தவிடு சப்ளை தேவை என்று ராணிப்பேட்டை நண்பர் ஒருவர் மூலமாகக் கேள்விப்பட்டாராம். இவருக்குக் கால்நடைத் தீவனத்தில் இருந்த அனுபவம் கைகொடுக்க, சிறந்த ரக தவிடு சப்ளை செய்து நல்ல பெயரெடுத்தாராம். தவிடு மொத்த வியாபாரத்தில் கொழித்து, அசோக் நகர் வீட்டு வசதி வாரியத்தில் இரட்டை வீட்டில் ஒன்றும் வாங்கி விட்டாராம்!

''நீங்க சொன்ன பழமொழிதான் சார் என்னை ஊக்குவித்தது. அவசியம் வீட்டுக்கு வாங்க'' என்றார். ''ஆஞ்சநேயர் அருள்'' என்று கூறி விடைபெற்றேன்.

சென்னை - 4, எம். துரை.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு பெறுபவர் :

எம். துரை,
25, ராக்கியப்ப முதலி தெரு,
சென்னை -- 600 004.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

சில ஆண்டுகளுக்கு முன்னர், என் தாய் கொடிய புற்றுநோய்க்கு ஆளான போது, என் தாயின் சிகிச்சைக்குத் தேவையான பணமில்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்ட நேரம். எங்களுக்கு மிக நெருங்கிய உறவினர் ஒருவர் வசதியான நிலையிலிருந்தார். ஆனால் எங்கள் இரு குடும்பங்களுக்குமிடையே பல ஆண்டுகளாகப் பகையும் மனக் கசப்பும் இருந்து வந்த காரணத்தால், பண உதவி கேட்டு அவர்




☛ எதிரி யார்?



☛ தைரியசாலிதான்!



☛ மீண்டும்...



☛ ... அழைப்பு!

? தி. மு. க. வுக்கு அடுத்த தேர்தலில் என்ன குழந்தை?

! கருத்தரிக்கட்டும், முதலில்!

● அனுராதா, ஈரோடு.

? இந்த ஆண்டு தீபாவளி எப்படி இருந்தது?

! ''காசு இல்லை'', ''பணம் இல்லை'', ''விலைவாசி உயர்வு'' என்று பேச்சு அடிபட்டது. ஆனால் ஜவுளிக் கடைகளில் கூட்டம் திமிலோகப்பட்டது. பட்டாசுச் சத்தம் (குறிப்பாக தௌஸண்ட் வாலா) செவிப் பறையைக் கிழித்தது. 'ஆசியா வாழ் ஆதி வாசி ஒருவன், உப்புக்குப் பதில் உணவில் ஸால்ட் பீட்டர் என்ற தாது உப்பைப் பயன் படுத்த, அது கை தவறுதலாக அடுப்பு நெருப்பில் விழ, வெடிச் சத்தம் எழ, பட்டாசு பிறந்தது'' என்ற புதிய செய்தி கிடைத்தது. சொன்னவர், ரசாயனப் பேராசிரியர் ஏ. என். எஸ். மூர்த்தி, ஐ.ஐ.டி., டில்லி.

● எம். சந்திரசேகர், மேட்டு மகாதானபுரம் ❏

? போயஸ் தோட்டத்துத் தொலைக்காட்சியில் எரிபொருள் சிக்கனம் பற்றிய செய்திப் படம் காட்டப்பட்டதா?

! எல்லா டீவிக்களிலும் ஒரே மாதிரிதான் படங்கள் காட்டப்படுகின்றன. பார்க்கப் படுகிறதா என்பதுதான் சந்தேகம்!

● பாலசுப்பிரமணியன், செங்குன்றம்.

? 'தன்னை வெற்றி பெறச் செய்தால் தனது தொகுதியைத் துபாய் ஆக மாற்றிக் காட்டுவேன்' என்று கூறி வெற்றி பெற்ற மணிசங்கர அய்யர் தற்போது தமது தொகுதி மக்களைத் துபாய்க்குக் கொண்டு செல்ல முயற்சி செய்கிறாரா?

! ராஜீவ் இருந்திருந்தால், வெற்றி பெற்றிருந்தால், ஆட்சி அமைத்திருந்தால், மணி மந்திரியாகியிருப்பார். மாயூரத்தைத் துபாய் ஆக்க முடியாவிட்டாலும் கொஞ்சமேனும் முன்னேற்றியிருப்பார். இப்போது எல்லா நம்பிக்கையும் போச்சு அந்தத் தொகுதி மக்களுக்கு. அய்யர் மறுபடி கிண்டல் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார்.

● ஈ. டி.விஜயகுமார், ஈரோடு.


? சமீபத்தில் தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய செய்தி?

! இந்தியாவில் அதற்குப் பஞ்சமே கிடையாது. முதல் தடவையாக இப்போது ஸி.பி.ஐ., தனது அதிகாரி ஒருவரையே இலக்காக்கி ரெய்டுகள் நடத்தி, நாலு கோடி ரூபாய் சொத்துக்களை அம்பலத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது! ஓ. பி. சர்மா என்ற இவரது இல்லங்கள், மற்றும் இவரது உறவினர்களின் வீடுகள் மொத்தம் பத்தொன்பதில் ரெய்டுகள் நடந்தன! வங்கி லாக்கர்கள் பல உடைக்கப்பட்டதில் 11 லட்சம் பணமும் மூன்று கிலோ தங்க நகைகளும் கிடைத்தன! பெரிய வேடிக்கை என்னவென்றால் ஓ. பி. சர்மா வீர தீரச் செயல்களுக்காக ஜனாதிபதி பதக்கம் பெற்றவர்! பத்து லட்சம் லஞ்சம் பெறும்போது கண்ணி வைத்துப் பிடிக்கப்பட்டார்! வேலியே பயிரை மேய்வதற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் கிடைக்குமா?

☛ தில்லுமுல்லு !



☛ துபாயாக மாற்றுவாரா?



❏ ரூ 25 பரிசு பெறுபவர்:
எம். சந்திரசேகர்,
மேட்டு மகாதானபுரம் (அஞ்சல்)
குளித்தலை (வட்டம்) 639 105

3

திரும்பித் தெருவுக்குப் போய் விடலாமா என்று மீரா ஒரு வினாடி யோசித்தாள். தெருவில் எத்தனை நேரம் நிற்க முடியும்? பக்கத்தில் நந்தினியின் வீடுதான் அவள் செல்லக்கூடிய வீடு. நந்தினியின் அம்மாவைச் சந்திப்பதை விட மீனாட்சியின் அம்மாவை எதிர்கொள்வது மேல் என்று தோன்றிற்று. எதையாவது சொல்லிக் கழண்டு கொள்ள வேணும் என்று துரிதமாக யோசித்தபடி அவள் வரவேற்பறைக்குள் நுழைந்து அங்கு உட்கார்ந்திருப்பவர் பக்கமே திரும்பாமல் கிடுகிடுவென்று மாடிப்படிகளில் ஏற ஆரம்பித்தாள்.

''மீரா!'' - அம்மா கூப்பிடவும் திரும்ப வேண்டியதாயிற்று.

''ஸாரிம்மா நான் பார்க்கல்லே!'' என்று மீனாட்சியின் அம்மாவைப் பார்த்துப் புன்னகைத்து ''ஹல்லோ ஆன்ட்டி!'' என்றாள். ''மீனாட்சி வரல்லியா?''

அந்தம்மாளின் முகம் குழம்பிப் போனதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அம்மா சங்கடத்துடன் மீராவிடம், ''இங்க வர்றதாச் சொல்லிட்டுக் காலையிலே வீட்டை விட்டுப் பத்து மணிக்கே மீனாட்சி போயிட்டாளாம்'' என்றாள்.

மீனாட்சியை மனசுக்குள் திட்டியபடி மீரா சுலபமாகச் சிரித்தாள்.

''வழியிலே யார் வீட்டிலேயாவது நுழைஞ்சிருப்பா. யாராவது பேசக் கிடைச்சாங்கன்னா விட மாட்டா. என்னை மறந்தே போயிருப்பா. தன்னாலே சாயங்காலம் வீட்டுக்கு வந்து சேருவா.''

மீனாட்சியின் அம்மா, மிஸஸ் செல்லப்பனின் முகத்தில் சற்று இளக்கம் தெரிந்தது. டான்ஸ் வகுப்பில் இவளைப் பற்றி நந்தினி சொன்னது மீராவுக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஒரு புதிய சுவாரஸ்யத்துடன் அவளைப் பார்க்கும் போது அமெரிக்க பாணியில் 'வாவ்' என்று தனக்குள் சொல்லத் தோன்றிற்று. உடம்பு 'சிக்' கென்று இருந்தது மட்டுமல்ல, உடை அணிந்திருந்த விதம் கவர்ச்சியாக இருந்தது. புருவங்கள் அழகாக 'ட்வீஸ்' செய்யப் பட்டிருந்தன. நோஞ்சான் நந்தினியின் அம்மாவும் ஒரு நோஞ்சான். பொறாமையினாலேயே இவளைப் பற்றி அப்படிச் சொல்கிறாளோ என்னவோ.

''இன்னும் ரொம்ப விவரம் தெரியாத பொண்ணா, இருக்கா அவ'' என்றாள் மிஸஸ் செல்லப்பன். ''எனக்கும் நேரமே கிடைக்க மாட்டேங்குது.''

''வேலைக்குப் போறீங்களா?'' என்றாள் அம்மா.

''ஆமாம்மா. ரெடிமேட் டிரெஸ் கடை வெச்சிருக்கேன் பனகல் பார்க்லே.... தெரியாது?''

பதிலை எதிர்பார்க்காமல் அவள் சுறுசுறுப்பாகத் தன் கைப் பையைத் திறந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து அம்மாவிடம் நீட்டுவதைப் பார்த்து, மீரா ''ஸீ யூ ஆன்ட்டி!'' என்று கையசைத்தாள். ''கவலைப்படாதீங்க மீனாட்சியைப் பத்தி. தன்னாலே வந்து சேருவா, நீங்க ஏன் தேடறீங்க?''

''தேடல்லே. இந்தப் பக்கமா வந்தேன். இருந்தாள்னா அழைச்சிட்டுப் போகலாமேன்னு வந்தேன். நா கிளம்பறேன்.''

'மீனாட்சி க்ளாஸிலே எப்படி இருக்கா, யார் அவளுடைய சினேகிதிங்க' என்றெல்லாம் நல்ல வேளையாக மிஸஸ் செல்லப்பன் கேட்கவில்லை. வெளியில் இருந்த காரில் ஏறி அவள் கிளம்பும் வரை காத்திருந்து, மீரா இரண்டே எட்டில் கீழே இறங்கினாள்.

''அந்த ஆன்ட்டியை எதுக்காக நான் வர வரைக்கும் உட்கார்த்தி வெச்சே?'' என்றாள் அம்மாவிடம்.

'ட்வீஸ்' செய்யப்படாத தன் புருவங்களை அம்மா வியப்புடன் உயர்த்தினாள்.

''உன்னைப் பார்த்துட்டுத்தான் போகணும்னு உட்கார்ந்திருக்கிறவளை நான் எப்படிப் போங்கன்னு சொல்றது? ஏன் என்ன விஷயம்?''

''ஏன்னா, எனக்குப் பொய் சொல்ல வேண்டி வந்தது. ஐ ஹேட் இட்!''

''ஏன், எதுக்குப் பொய் சொன்னே?'' என்றாள் அம்மா அதிர்ந்து. இந்த வீட்டில் பொய் சொல்வது கொலை குற்றத்துக்குச் சமானம்.

''என்ன செய்யட்டும்? காலையிலே மீனாட்சி போன் பண்ணினா. எங்கேயோ போறாளாம். 'அம்மாகிட்ட உன் வீட்டுக்கு வர்றதா சொல்லப் போறேன், என்னைக் காட்டிக் குடுத்துடாதே'ன்னா.''

அம்மாவின் மூளை துரிதமாக இயங்குவது யோசனை நிறைந்த அவளது பார்வையில் தெரிந்தது.

''நீ ஏன் எங்கிட்ட இதைப் பத்திச்



சொல்லல்லே?''

''நான் சொல்ல நினைச்ச போது நீ உன் க்ரேட் ஃப்ரெண்டோட பெரிய டயலாக்லே இருந்தே.''

''யாரது க்ரேட் ஃப்ரெண்ட்?''

''கறிகாய்க்காரன் பொன்னுசாமி.''

மீனாட்சியைப் பற்றின கவலையையும் மீறி அம்மா சிரித்தாள். பிறகு முகத்தை நேராக வைத்துக் கொண்டு கேட்டாள்.

''அந்தப் பொண்ணு எங்கே போயிருக்குன்னு தெரியுமா?''

''எங்கே போயிருக்கான்னு தெரியாது. ஆனா ஒரு பையனோடு போயிருக்கான்னு தெரியும்.''

அம்மா கண்களை அகல விரித்தாள். ஆனால் சாதாரணமாகச் சொன்னாள். ''வீட்டிலே சொல்லாம ஏன் போறா?''

''அதான் எனக்குப் புரியல்லே.'' என்றாள் மீரா கோபத்துடன், ''அது சரியான லூஸ். எல்லாத்துக்கும் பொய் சொல்லும். வீட்டுக்குத் தெரியாம சுத்தறது பெரிய அட்வெஞ்ச்சர்னு நினைக்கிறா போலிருக்கு. பாய் ஃப்ரெண்டோடப் போறேன்னு ஏன் சொல்லக் கூடாது? அவ அம்மாவுக்கே பாய் ஃப்ரெண்ட் இருக்கலாம்!''

அம்மாவின் அதரங்களில் லேசாகப் புன்னகை விரிய ஆரம்பித்தது, சட்டென்று

வானவில்

வாஸந்தி

ஞாபகம் வந்தது போல சுருங்கிற்று.

''இந்த மாதிரி உளர்றதை வீட்டுக்குள்ளே மட்டும் வெச்சுக்கோ!'' என்றாள் லேசான அதட்டலாக.

''ஏன் இருக்கக் கடாதா?'' என்றாள் மீரா விடாப்பிடியாக. ''நீ கூட நந்தினி அம்மா மாதிரி ஆயிண்டு வர்றே.''

அவள் அம்மாவின் பதிலுக்குக் காத்திராமல் மாடிப் படிகளைத் தாவி ஏறித் தன் அறைக்குச் சென்றாள். செருப்பைக் கழற்றி கவனமாக அதன் இடத்தில் வைத்துவிட்டு, தொம்மென்று படுக்கையில் எகிறி விழுந்த போது உற்சாகமாச் சிரிப்பு வந்தது.

திங்கட்கிழமை மீனாட்சியை ஸ்கூலில் பார்த்ததும் முதல் வேலையாகச் சொல்ல வேண்டும் - உன் தில்லுமுல்லு வேலைகளை உன்னோடு வெச்சுக்கோ என்னையும் இதில் இழுக்காதே. என்னாலே உனக்காகப் பொய் சொல்ல முடியாது.

சட்டென்று, டான்ஸ் கிளாஸில் பார்க்கும் கமலாவின் நினைவு வந்தது. அவள் மீனாட்சியை விட வயதில் பெரியவள். அற்புதமாக டான்ஸ் ஆடுவாள். அசைவுகளில் ஒரு சின்னத் தொய்வு இருக்காது. பளிச்சென்று கம்பீரமாக இருப்பாள். அளவாகப் பேசுவாள். அச்சுப்பிச்சு மீனாட்சிக்கும் அவளுக்கும் சம்பந்தமே இல்லை. யூனிவர்ஸிட்டியில் படிப்பவள். அவளும் வீட்டுக்குச் சொல்லாமல் என்னவோ செய்கிறாள். காட்! ஏன் இப்படிச் செய்கிறார்கள்? இவர்களுக்கெல்லாம் ஏதோ ப்ராப்ளம் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

''**மீ**ரா!'' என்று அம்மா கீழிருந்து குரல் கொடுத்தாள். ''மத்தியானம் பாட்டு கிளாஸ் இருக்கு மறந்துடாதே!''

''மறக்கல்லே!'' என்று மீரா படுக்கையிலிருந்தபடியே பதில் சொன்னாள்.

''அப்பா லஞ்ச்சுக்கு வர்றதுக்குள்ளே ப்ராக்டிஸ் பண்ணி முடிச்சுடு.''

''ஓகே!'' என்ற போது அப்பாவின் ஞாபகத்தில் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது. மணி பன்னிரண்டு. அப்பா ஒரு மணிக்கு வந்து விடுவார், இன்று சனிக்கிழமை என்பதால்.

இப்படித்தான் ஒரு ச னி க் கி ழ மை ம அப்பா வரும் சமயத்தில் அவள் புதிதாக வாங்கிய சுருதிப் பெட்டியுடன் உட்கார்ந்து ''வர வீணா ம்ருது பாணி'' என்று தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள். அப்பாவுக்கு அன்று சாப்பாடே உள்ளே இறங்கவில்லை. ''இவளுக்குப் பாட்டுக் கத்துக் கொடுக்க வே ண் டி ய து அவசியமா சுஜாதா?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தார் அன்று முழுவதும். ''அவளை ஏன் சிரமப்படுத்தறே?''

பாட்டு ட் டி யூ ஷ ன் நிறுத்தப்படவில்லை. ஆனால் அப்பா வருவதற்கு முன் ப்ராக்டிஸ் பண்ணி முடித்து விடுகிறபடி அம்மா கவனித்துக் கொண்டாள். அதனால் மீராவுக்கு ஏதும் பிரச்னையாயிருக்கவில்லை. பாட்டுக் கிளாசுக்குப் போவது உற்சாகமாக இருந்தது. அப்பாவின் ஏமாற்றத்தை நினைத்துச் சிரிப்பு வந்தது. பாடினால் எம்.எஸ். மாதிரி பாட வேண்டும் என்று எதிர்பார்க்கிறாரோ...?

''அப்படியெல்லாம் அசட்டுத்தனமா நான் எதிர்பார்க்கல்லே'' என்றார் அவளைப் பெற்றவர். ''அட்லீஸ்ட் அபஸ்வரம் இல்லாம பாட முயற்சி பண்ணு.''

அதற்கும் பெரிசாகச் சிரிப்பு வந்தது.

சத்தியத்துக்குக் கட்டுப்பட்டது போல அவள் எழுந்து அரைமணி நேரம் பாட்டுப் பயிற்சி செய்தாள் இடையில் மஹேஷ் 'நான் படிக்கணும்' என்று அவள் அறைக் கதவை ஓங்கி அறைந்து சாத்தி விட்டுப் போனதையும் லட்சியம் செய்யாமல்.

அன்று மதிய உணவிற்கு அப்பா சாப்பிட வரவில்லை. வேறு எங்கோ போவதாக டெலிபோன் செய்தார். அவருக்காகக் காத்திருந்த மூவரும் சுரத்தில்லாமல் டீ.வி. நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தபடி சாப்பிட்டார்கள்.

''அம்மா அத்தைப் பாட்டி தாத்தாவை இங்கே வரச் சொல்லு!'' என்றான் மஹேஷ் திடீரென்று.

''என்னடா, திடீர்னு?'' எ ன் ற ா ள் அம்மா.


''போரடிக்கிறது!'' எ ன் று மஹேஷ் சிணுங்கினான். பாட்டி தாத்தா வந்தா ஜாலி. நிறைய கதை சொல்லுவா.''

''கதை இல்லேன்னாலும் கனவாவது

''என்ன சார் இது, இந்தத் 'தலைவர்' சிலை படுத்தமாதிரி இருக்கு...?''

''அதுவா, அவர் மந்தவங்க கால்ல விழுந்தே.... அரசியலிலே பெரிய ஆளா வந்தாராம்!''

- ஆர்.வசந்தகுமார்



"அமைச்சரவையிலேர்ந்து அந்த மூத்த அமைச்சரை எதுக்காக நீக்கிட்டாங்களாம்?"

"ஜனாதிபதி நம்ம ஊருக்கு வந்தப்போ, முதல்வரை மட்டும் விசாரிக்காமே... அந்த அமைச்சரையும் பார்த்து எப்படியிருக்கீங்கன்னு விசாரிச்சுட்டாராம்!"

- ப. விஜயபாலன்



இருக்கும். உனக்கு என்னிக்காவது அத்தனை சுவாரஸ்யமா கனா வருதா?" என்றாள் மீரா அம்மாவிடம்.

அப்பா லஞ்சுக்கு வராமல் அம்மாவுடைய ஹாஸ்ய ரசனை குறைந்திருந்தது. அவள் பேச்சைக் கவனிக்காதவள் போல் பேசினாள்.

"பாட்டி தாத்தா இப்ப இங்கே வர மாட்டா. பம்பாய்க்குப் போயிருக்கா."

"பம்பாயிலே யாரு இருக்கிறது?"

"பாட்டியுடைய பிள்ளை."

"யாரது?" என்றாள் மீரா வியப்புடன். "நான் பார்த்திருக்கேனா?"

"நானே பார்த்ததில்லே" என் றா ள் அம்மா.

"ஏன்?"

"எனக்கும் உங்க அப்பாவுக்கும் கல்யாணம் ஆகும்போதே அவர் வீட்டை விட்டுத் தனியா போயிட்டார்."

"ஏன்?"

"பாட்டி தாத்தாவுக்கு இஷ்டமில்லாத ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துண்டார்."

"அவர் இஷ்டப்பட்டுதானே செய்துண்டார்?"

"ஆமாம். ஆனா அவ வேற ஜாதிப் பொண்ணுன்னு பாட்டி தாத்தா சம்மதம் கொடுக்கல்லே."

"அம்மா, வாட் இஸ் ஜாதி?" என்ற மஹேஷை மீரா எரிச்சலுடன் பார்த்து, "அதைப் பத்தி அவனுக்கு அப்புறமாச் சொல்லு" என்றாள் அம்மாவிடம். "இப்ப எதுக்கு பாட்டியும் தாத்தாவும் பம்பாய்க்குப் போயிருக்கா? பிள்ளைகிட்ட சமாதானமாயிட்டதா?"

"ஆயிட்டதுன்னுதான் தோணறது" என்றாள் அம்மா பட்டுக் கொள்ளாமல்.

"நீ என்னவோ மறைக்கிற மாதிரி இருக்கு எனக்கு."

"எனக்கே சரியாத் தெரியாத போது என்னத்தைச் சொல்ல முடியும்?" என்றாள் அம்மா. "வம்புக்கு நிக்காதே, ப டி ப் பு வேலையை முடிச்சுட்டுப் பாட்டுக் கிளாசுக்குப் போ."

"இது ஒண்ணும் வம்பு இல்லே!" என்று சொல்லியபடி மீரா எழுந்தாள். இப்போது அம்மாவிடம் விவரம் கேட்கவும் நேரமில்லை.

ஹோம்வொர்க் செ ய் யு ம் போது இடையிடையில் பாட்டியின் முகம் நோட்புக்கின் நடுவில் நின்றது, பழைய இந்திய சினிமாக் காட்சி மாதிரி. பாட்டி தனக்கு ஒரு பிள்ளை இருப்பதாகத் தவறிக் கூடச் சொன்னதில்லை. பாட்டியும் தாத்தாவும் ஒருத்தரைச் சார்ந்து மற்றவர் இருப்பதைப் பார்க்கும் போது குழந்தைகள் இல்லாததால் தான் அப்படி இருக்கிறார்கள் என்று அவள் நினைத்திருக்கிறாள். இப்பொழுது அதற்கு வேறு காரணம் இருப்பதாகத் தோன்றிற்று. வியப்பாக இருந்தது. வேறு ஜாதிப் பெண் என்பதால் இஷ்டப்படவில்லை என்பதைத் தாத்தா பாட்டியின் சுவாபாவிக உற்சாகத்துடன் சம்பந்தப்படுத்திப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. அவர்களால் எ ப் ப டி அப்படிப்பட்ட காரணத்துக்காகப் பெற்ற பிள்ளையை நிராகரிக்க முடிந்தது? இந்தியாவுக்கு வந்த பின் இப்படிப்பட்ட ம னி த முரண்பாடுகளை அவள் கண்டிருந்தாலும், அன்பே உருவான அத்தைப் பாட்டியும் தாத்தாவும் அப்படி நடந்து கொண்டார்கள் என்பதைக் கேட்டு மனத்தில் அதிர்வு ஏற்பட்டது. பாட்டியின் பிள்ளை எ ப் ப டி இருப்பார் என்று யோசனை செய்வது சுவாரஸ்யமாக இருந்தது. கதாநாயக புருஷனாக இருந்திருக்க வேண்டும். ஒரு பெண்ணுக்காக சாம்ராஜ்யத்தைத் துறந்த எட்வர்ட் மன்னர் மாதிரி. ஆனால் அந்த எட்வர்டின் மு க த் தை போட்டோவில் பார்க்கும் போது கதாநாயகன் போல் தோன்றவில்லை. ஏதோ சோகம் தெரிந்தது. அவசரப்பட்டு முடியைத் துறந்தது தேவையில்லை என்று நினைத்தது போல -

பிள்ளையோடு இப்போது சமாதானமாகி விட்டது என்றால் எப்படி ஆயிற்று? அம்மா தனக்கே தெரியாது என்கிறாள். நம்ப முடியவில்லை. பின்னால் அவளே சொல்வாள் என்று நினைத்தபடி மீரா பாட்டு வகுப்புக்குக் கிளம்பினாள். கீழே அம்மா மஹேஷுக்கு ஜாதி அமைப்பைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

வேதாகமக் கல்லூரி தேவையா?

ஆட்களை அடையாளம் காட்ட இன்று பயன்படுவன, விரல் ரேகை, மச்சங்கள், பச்சை குத்திக் கொள்வது முதலியன. தீ விபத்து அல்லது யுத்தம் போன்ற சந்தர்ப்பங்களில் இவையும் அழிந்து போக வாய்ப்புண்டு. ஆளை அடையாளம் காண முடியாமல் போகிறது. இந்த பிரச்னைக்கு ஒரு புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார் டாக்டர் பரமேச்வரன் - பல் மருத்துவக் கல்லூரி பேராசிரியர்.

சரித்திர காலத்துக்கு முற்பட்ட அகழ்வாராய்ச்சியில் கூட பற்கள் மட்டுமே சிதைவுறாமல் பத்திரமாக உள்ளன. உடல் வளர்ச்சியின் போது இங்கு கால்ஷியம் சத்து கூடுவதே காரணம். எனவே சிறிய பிளாஸ்டிக் அல்லது ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் தகட்டில் அடையாள எண்ணைப் பொறித்து, மேல் வரிசைப் பல்லின் உட்புறம் பதித்து விடலாம். பிறகு தேவைப்பட்டால் இன்னார் என்று அடையாளம் காண்பது எளிது. இதற்கு 'டெண்டி கார்ட்' என்று பெயராம். சாப்பிடும் போதோ பல் துலக்கும்போதோ உறுத்தலே இராதாம்!

● ● ●

ரவீந்திரநாத் தாகூர் காலமாகி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இதனால் ஒரு பிரச்னை! காப்பிரைட் சட்டப்படி ஓர் எழுத்தாளரின் படைப்புக்கள் ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு தேச உடைமை ஆகிவிடும். அதாவது தாகூரின் படைப்புக்களை யார் வேணுமானாலும் பிரசுரித்துக் கொள்ளலாம். ராயல்டி கிடையாது! இதனால் விசுவபாரதி பல்கலைக் கழகத்துக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்படும் என்பதால் பயந்து போய் அவர்கள் ஜோதி பாசுவை அணுக, அவரும் கவலைப்பட்டு இதைத் தடுக்க சட்டம் நிறைவேற்றலாமா என்று யோசிக்கிறாராம்.

''கூடாது; இப்படி தாகூருக்குச் செய்தால் மற்றவர்களும் கேட்பார்கள். மோசமான முன்னுதாரணம் ஆகும்'' என்பது மறு தரப்பு வாதம்.

வேதம் புதிது திரைப்படத்துக்குக் கதை வசனம் எழுதிய கண்ணன், தாகூரின் படைப்புக்கள் நாட்டுடமையாக வேண்டும் என்று விசுவபாரதிக்கு எழுதிப் பார்த்தார். பதில் இல்லை. வழக்குத் தொடுத்தார். 'கண்ணனுக்குப் பல்கலைக் கழகம் நவம்பர் 30க்குள் பதில் சொல்லியாக வேண்டும்'' என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது!

● ● ●


வி. எஸ். ராகவனின் டீவி தொடர் வேதவாக்கு பார்த்தவர்களுக்கு அதற்காக ஒரு பாராட்டு விழா சென்னையில் நடந்தது என்பது புதிய செய்தியாக இருக்கலாம். அப்போது பேசிய டி. எஸ். பாலகிருஷ்ண சாஸ்திரிகள் சொன்னார் : ''போலந்து பேராசிரியர் ஒருவர் சாமவேதத்தை மியூஸிகல் நோட்ஸ் போட்டுப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். அவர்களுக்கு இருக்கும் அக்கறை நமக்கு இல்லையே!''

''வேதாகமக் கல்லூரி ஆரம்பிக்கப் போவதாக முதல்வர் சொல்கிறார். அரசு இந்தக் கல்லூரி நிறுவுவது தேவையில்லாதது. ஏற்கெனவே எத்தனையோ வேத பாட சாலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு மான்யம் அளித்தாலே போதுமே?'' என்று கூறியவர் சோ.

☛ கண்ணன்



☛ வி. எஸ். ராகவன்



தொகுப்பு : எஸ். வி. என்.

காதலெனும் வானவில்

4

தினமும் 'டாண்' என்று வந்து விடும் எட்டரை மணி பஸ் இன்னும் வரவில்லை. கவலையுடன் கைக் கடிகாரத்தையும் தெருக்கோடியையும் மாற்றி மாற்றிப் பார்த்து மீராவுக்குச் சோர்ந்து போயிற்று. 'விர்விர்ரென்று' ஒரு ஆடம்பர வீர்யத்துடன் அவளைத் தாண்டியபடி அந்த ஹோண்டா பைக் இதோடு ஐந்து முறை சென்று விட்டது. ஹோண்டாக்காரனுடைய தைரியம் இப்படி எரிச்சல் ஊட்டுவதுடன் சரி என்று அவளுக்குத் தெரியும். விரலைக் காட்டி நிறுத்தி, 'ஓ.கே. கமான் எனக்கு லிஃப்ட் கொடு' என்றால் தலை மறைவாகி விடுவான் என்று அவளுக்கு அனுபவத்தில் தெரியும்.

மீண்டும் 'விர்'ரென்று வேகத்துடன் அவன் அவள் பக்கமே திரும்பாமல் பறந்தான். 'ரோக்' என்று அவள் தனக்குள் சபித்தாள். அந்த விநாடிப் போதில் காற்றில் பறந்த அவனது தலை மயிரும் கழுத்தில் அணிந்திருந்த கறுப்புக் கயிறும், நீல ஜீன்ஸின் மேல் அணிந்த சிவப்பு டீ ஷர்ட்டும் தெரிந்தன. பஸ் இன்னும் ஐந்து நிமிஷங்களுக்குள் வரவில்லையென்றால் விரலை அசைத்து அவனை நிறுத்துவது என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

பஸ் வரவில்லை. பஸ் ஸ்டாப்பில் அவளைப் போலவே பொறுமை நழுவிப் போன இரண்டு ஆண்கள் நின்றிருந்தார்கள். அவள் நடுத் தெருவுக்குச் சென்று இடது கையை நீட்டித் தொலைவில் வந்த பைக்கைப் பார்த்துக் கட்டை விரலை நிமிர்த்தி நின்றாள். மெள்ள மெள்ள வண்டி அருகில் நின்ற போது, அவள் நினைத்ததை விட அந்த முகம் அசடாக இருந்ததைப் போல் தோன்றிற்று. அவள் பேசுவதற்காக அவன் ஆர்வத்துடன் காத்திருந்தான். அவள் எந்த உணர்ச்சியையும் காண்பிக்காமல், "இதப் பார், உன்னுடைய நம்பரை நோட் பண்ணிக்கிட்டிருக்கேன். மறுபடி இப்படிக் காதைக் கிழிக்கிற மாதிரி இந்தப் பக்கம் போனே, போலீசுக்கு ரிப்போர்ட் பண்ணுவேன் பப்ளிக் நியூஸென்ஸுன்னு!" என்று விட்டு மீண்டும் ஸ்டாப்புக்கு வந்தாள்.

அவன் ஏதோ அடிக்குரலில் சபித்தபடி கிளம்பிப் போனதை அவள் கண்டு கொள்ளாமல் நின்றாள். எதேச்சையாக நிமிர்ந்த போது பஸ் ஸ்டாப்பில் நின்ற இரு ஆண்கள் அவளைப் பார்த்துச் சபாஷ் என்பது போல் புன்சிரிப்பு காண்பித்தார்கள்.

அவர்கள் ஏதும் பேச ஆரம்பிக்கு முன் நல்ல வேளையாக பஸ் வந்தது. அவள் ஜன்னல் ஓரமாக இருந்த காலி இடத்தில் அமர்ந்து கொண்டாள்.

பல்லவன் பஸ்ஸில் பள்ளிக்குச் சென்று வருவது அவளுக்கும் மஹேஷுக்கும் இப்போது பழகி விட்டது. இந்தியாவில், அமெரிக்காவில் வைத்துக் கொண்டது போல், இரண்டு கார்கள் வைத்துக் கொள்ள முடியாது என்று அப்பா தெளிவாக்கியிருந்தார். இப்பொழுது அங்கிருந்தால் அவளுடைய உபயோகத்திற்கென்று எரிக்பேக்கர் வைத்திருப்பது போல ஒரு தனி வண்டி இருந்திருக்கும். ஆனால் இங்கு பஸ்ஸில் செல்வது ஒன்றும் தொந்திரவாக இருக்கவில்லை. பலதரப்பட்ட மனிதர்களைத் தினம் சந்திப்பதும் பொது இடம் என்ற கூச்சமில்லாமல் சளசளவென்று அவர்கள் அந்தரங்கமான விஷயங்களை உரத்துப் பேசுவது காதில் விழுவதும் சுவாரஸ்யமான விஷயங்கள். எத்தனை பேசுகிறார்கள் என்று முதலில் பிரமிப்பு ஏற்பட்டது. இப்போது பேச்சு சப்தம் கேட்காவிட்டால் வினோதமாக இருக்கிறது. அந்த சப்தத்திலேயே படிக்கும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. கையில் கொண்டு வந்திருந்த புத்தகத்தைப் பிரித்து அதில் ஆழ்ந்து போகையில் எல்லாச் சப்தங்களும், ஹோண்டா பைக் உள்பட, பிரக்ஞையிலிருந்து விலகிக் கொண்டன.

"தங்கச்சி, இறங்கல்லியா?" என்ற கண்டக்டரின் குரல் கேட்டு அவள் விருட்டென்று எழுந்தாள். இறங்குவதற்கு முன்

வாஸந்தி

கண்டக்டரைப் பார்த்து 'தாங்க்யூ' என்றாள்.

பள்ளியை அடைந்த போது பிரார்த்தனைக் கூட்டம் கூட முடிந்து விட்டது. தலைமை ஆசிரியையின் அறையிலிருந்து வெளிப்பட்ட அவளது வகுப்பு ஆசிரியை மைதிலி ஜெயராமன்,

''ஏன் மீரா இவ்வளவு லேட்?'' என்றாள்.

''ஸாரி மேம். பஸ் இன்னிக்கு லேட்.''

''போயிட்டுப் போவுது. அட்டென்டென்ஸ் ரெஜிஸ்டர் கொண்டு வா, சீக்கிரம்.''

''ஓகே மேம்'' என்று மீரா விரைந்தாள். தலைமை ஆசிரியையின் அறைக்கு அடுத்த அறையிலிருந்து ரெஜிஸ்டரை எடுக்கும் போது லேசாகத் திறந்திருந்த கதவின் இடைவெளி வழியே உள்ளே மீனாட்சி நிற்பது தெரிந்தது. என்ன விசாரணை நடக்கிறதோ என்று கவலையுடன் மீரா வகுப்புக்கு விரைந்தாள்.

அட்டெண்டென்ஸ் எடுத்து முடிக்கும் சமயத்தில் மீனாட்சி வந்து சேர்ந்தாள். மைதிலி கடுப்புடன் 'போய் உட்கார்' என்றதிலிருந்து மைதிலிக்கு அவள் மேல் மிகுந்த கோபம் என்று தெரிந்தது. மீனாட்சி எதுவுமே நடக்காதது போல ஒருவித அலட்சியத்துடன் தனது இருப்பிடத்தில் அமர்ந்து கொண்டாள். அமர்வதற்கு முன் மீராவின் பக்கம் திரும்பிப் புன்னகை செய்தாள். மீரா அவசரமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பாடம் நடத்த ஆரம்பித்ததுமே மைதிலி அதில் ஒன்றிப் போனாள். ஆனால் பாடத்தை முடித்ததும் கேள்வி கேட்கும் போது வேண்டுமென்றே மீனாட்சியைக் கேள்வி கேட்டு அவளைச் சங்கடத்துக்குள்ளாக்குவது போல் தோன்றிற்று. மீனாட்சிக்கு எந்தச் சங்கடமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. வாயை மூடிக் கொண்டு அவள் நின்றது மீராவுக்கு அவமானமாக இருந்தது.

''மீனாட்சி, நீயெல்லாம் எதுக்கு ஸ்கூலுக்கு வர்றே?'' என்றாள் மைதிலி கோபத்துடன். ''உங்க அப்பாவுடைய பணத்தை வேஸ்ட் பண்றது மட்டுமில்லே, எங்க நேரத்தையும் விரயம் பண்ணறே. இவ்வளவு நேரம் நான் பாடம் நடத்தும் போது உன் கவனம் எங்கேயிருந்தது?''

மீனாட்சி வாயே திறக்காமல் கல்லுளி மங்கத்தனத்துடன் நின்றாள். மைதிலி சோர்ந்து மற்றவர்களிடம் கவனத்தைத் திருப்பினாள். வகுப்பு முடிந்து மைதிலி கிளம்பிச் சென்றதும் மீனாட்சி சிரித்தபடியே மீராவின் அருகில் வந்து,

''ஹாய்!'' என்றாள். ''எங்கம்மா சரியான போர். என்னைத் தேடிக்கிட்டு உங்க வீட்டுக்கு வந்துட்டாங்களாமே!''

பகபகவென்று அவள் சிரிப்பதைப் பார்த்து மீராவுக்கு எரிச்சலாக வந்தது.

''லுக் மீனாட்சி. இனிமே இந்த மாதிரி வம்புலே என்னை மாட்டி வைக்காதே. எனக்குப் பொய் சொல்லிப் பழக்கமில்லே. உங்கம்மாவைப் பார்த்ததும் நா நிஜம்மாவே நர்வஸ்ஸாப் போயிட்டேன்.''

மீனாட்சி பக்கென்று சிரித்தாள்.

''சீச்சீ, எங்கம்மா பாவம், அவங்க கடையை விட்டா வேற ஒண்ணும் தெரியாது. எல்லாத்தையும் நம்பிடுவாங்க. நீ பயப்பட வேண்டியதில்லே.''

''அதனாலே?'' என்றாள் மீரா எரிச்சலுடன். ''நீ என்ன வேணா பொய் சொல்லு. எனக்கும் அதுக்கும் சம்பந்தமில்லே. என்னை அதிலே மாட்டாதே. அடுத்த முறை நான் பொய் சொல்ல மாட்டேன். நிஜத்தைச் சொல்லிடுவேன்.''

மீனாட்சி அவள் முகவாயைப் பிடித்தாள். ''ஏய், கோவிச்சுக்காதே. இனிமே உன் பெயரைச் சொல்ல மாட்டேன்.''

''தாங்க்யூ'' என்றாள் மீரா விறைப்புடன். மீனாட்சி குனிந்து ரகசியக் குரலில், ''நேத்து நா எங்கே போனேன்னு உனக்குத் தெரிய வேண்டாமா?'' என்றாள்.

''வேண்டாம்'' என்றாள் மீரா விறைப்பு குறையாமல்.

''உனக்குப் பொறாமை.''

''ஓ.கே. ஆமாம், பொறாமை.''

''இன்னொரு விஷயம் கேட்டால் இன்னும் பொறாமைப்படுவே'' என்றாள் மீனாட்சி அசராமல். மீரா எழுந்திருக்க யத்தனிக்கையில் அவள் காதருகில், ''ஐ ஆம் இன் லவ்'' என்று கிசுகிசுத்தாள். என் முகத்திலே புதுசா பிரகாசம் தெரியலே?''

மீராவுக்குச் சிரிப்பு வந்தது. ''ஒண்ணும் தெரியல்லே. அசடுதான் வழியுது வழக்கம் போல.'' மீனாட்சி நிச்சயம் ரோசம் கெட்டவள். அதற்கும் சிரித்தாள். பிறகு மீண்டும் குனிந்து, ''பொறாமைப் படாதேடி இவளே'' என்றாள். ''உன் இங்கிலீஷ் பாதிப் பேருக்குப் புரியறதில்லே. அதனாலேதான் உன்னை விருந்துக்குக் கூப்பிடறதில்லே!''

சுருக்கென்ற கோபத்துடன் மீரா நிமிர்ந்தாள். ''மீனாட்சி! நீ உன் இடத்துக்குப் போ. எனக்கு இதிலே இன்ட்ரெஸ்ட் இல்லே. மேம் சொன்னதை ஞாபகம் வெச்சுக்கோ.''

சட்டென்று மீனாட்சியின் முகம் மாறி

யது. ''எங்கப்பாவுடைய பணம் வீணாச் சுன்னா அவங்களுக்கு என்ன கவலை?'' என்றாள் அடிக்குரலில். ''சொந்த வாழ்க் கையிலே ஏமாற்றம் அவங்களுக்கு. யார் மேலப் பாயலாம்னு பார்க்கறாங்க.''

மீரா அதிர்ச்சியுடன் அவளைப் பார்த் தாள்.

''இப்படி நீ பேசறது ரொம்பத் தப்பு மீனாட்சி. இந்தக் கிளாசுக்கு நா மானிட் டர். எச். எம்.கிட்டே இதைப் பத்திப் புகார் பண்ணுவேன்'' என்றாள்.

''ஏய், அப்படியெல்லாம் செஞ்சு டாதே. ஒரு பேச்சுக்குச் சொன்னேன்'' என்று மீனாட்சி நழுவினாள்.

''இவளைக் கட்டி வெச்சு உதைக் கணும்'' என்று மீராவுக்கு ஆத்திரம் வந்தது. இன்று காலை இவள் ஏற்கெனவே எச்.எம். அறைக்கு அழைக்கப்பட்டிருக் கிறாள் என்று நினைவுக்கு வந்தது. இத் தனை மரியாதைக்குறைவாக எப்படிப் பேசுகிறாள் என்று ஆத்திரம் வந்தது. மைதிலி ஜெயராமன் அற்புதமான ஆசிரியை. இந்தப் பள்ளியில் சேர்ந்த புதிதில் கலாசார வித்யாசத்தினால் திண்டா டிய போது மைதிலிதான் அவளுடைய சங்கடங்களைப் புரிந்து கொண்டு அனுசர ணையாக நடந்து கொண்டாள். அவளு டைய சொந்த வாழ்வில் என்ன ஆயிற்று என்று தெரியாது. விவாகரத்தானவள்





''என்னோட கதைக்கு அந்தப் பத்திரிகை ஆபீஸில் தனி மதிப்பு.''

''அப்படியா?''

''ஆமாம். அதைப் போடறதுக் குன்னே அங்கே தனியா ஒரு குப்பைக் கூடை வச்சிருக்காங்கன்னா பார்த்துக் கோயேன்!''

- ஆலத்தம்பாடி ராஜகோபால்

என்று தெரியும். அதை ஏதோ மிகப் பெரிய விஷயம் போல் அவள் வகுப்புப் பெண்கள் பேசுவது இங்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகியும் மீராவுக்குப் புரியவில்லை.

ஸ்போர்ட்ஸ் டீச்சர் நாகமணி விசிலைப் பலக்க ஊத, மீரா தன்னுடைய டீம் பெண்களுடன் கூடைப் பந்தாட்ட மைதானத்துக்கு விரைந்தாள்.

மறுபடி நாகமணி விசில் ஊத, ஆட்டம் தொடர்ந்தது. மீரா ஆவேசமாகப் பந்தைத் துரத்திப் பிடித்து, 'மீரா, மீரா' என்று ஆரவாரம் எழ, கையைத் தூக்கி அண்ணாந்து வீசி கூடைக்குள் விழ்த்தி யதும் 'ஹே ஹே' என்ற ஆரவாரம் எழுந் தது.

''மீரா!''

அவள் திரும்பிப் பார்த்தாள். மைதிலி ஜெயராமன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஷூவை அவசரமாக அணிந்து அவளருகில் ''எஸ் மேம்?'' என்று விரைந்த போது,

''நாளைக்கு ஒரு ரேடியோ ப்ரோக்ரா முக்காக ஒரு அழைப்பு வந்திருக்கு. மூணு பள்ளிக்கூடங்க நடுவிலே விவாதம். நீ பங்கெடுத்துக்கறியா?'' என்றாள்.

''நாளைக்கேவா? எப்படி மேம்? தயார் செய்துக்க வேணாம்? எதைப் பத்தி விவாதம்?''

''மதச்சார்பின்மையைப் பற்றி. நான் ஹெல்ப் செய்யறேன். இன்னிக்கு இங்கி ருந்து டான்ஸ் க்ளாஸ் பாட்டுக் கிளாசுன்னு எங்கேயும் போக வேண்டாமே?''

''வேண்டாம்.''

''அப்படீன்னா எங்கூட என் வீட்டுக்கு வா. எங்கிட்ட ஒரு நல்ல புத்தகம் இருக்கு அதைப் படிச்சுக் குறிச்சு வெச்சுக்கோ நானும் சில குறிப்புகள் தர்றேன். வீட்டுக்கு ஃபோன் பண்ணிச் சொல்லிடு. நான் உன்னைக் கொண்டு விடறேன்னு.''

மீரா உற்சாகத்துடன் ''ஓ.கே. மேம். தாங்க்யூ மேம்'' என்றாள்.

பள்ளி அலுவலக அறைக்குச் சென்று வீட்டுக்கு போன் செய்து விஷயத்தைச் சொன்ன போது, அம்மா சந்தோஷத்துடன் ''குட்'' என்றாள். ''டீச்சரே கொண்டு விடட்டும். நோ தாங்க்யூன்னு தனியா இருட்டிலே கிளம்பிடாதே'' என்று சேர்த் துக் கொண்டாள். நியூயார்க்கில் பயந்த மாதிரியே மெட்ராசிலும் அம்மா ஏன் பயப் படுகிறாள் என்று புரியவில்லை. கேட் டால், 'எல்லா ஊரும் கெட்டுக் கிடக்கு'' என்கிறாள்.

மைதிலி ஜெயராமனுடன் பயணம் செய்த போது ஒரு ஆசிரியை என்கிற பந்தா வைக் காண்பிக்காமல், ஒரு தோழியைப் போல் மைதிலி பழகியது மெல்லிய வியப்பை ஏற்படுத்தியது. மைதிலி வசதி உள்ளவளாகவே தென்பட்டாள். சொந்தக் கார் வைத்திருந்தாள். ஆழ்வார்ப்பேட்டை யில் சின்னத் தோட்டம் கொண்ட தனி வீடாக இருந்தது. வாசலில் வண்டி நின்ற தும் வராந்தாவில் உட்கார்ந்திருந்த இளை ஞன் எழுந்தான். வண்டியிலிருந்து இறங் கிய மீராவை, எந்தச் சலனமுமில்லாமல் பார்த்தபடி. கறுப்புக் கண்ணாடி அணிந் திருந்ததில் அவளைப் பார்க்கிறானா என்று அவளுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. இருந்தும், ''ஹலோ!'' என்றாள்.

''ஹலோ!'' என்று அவன் சிரித்தான்.

மைதிலி விரைந்து வந்து ''ஹரி, இவள் என் ஸ்டுடெண்ட் மீரா'' என்றாள். ''மீரா இவன் என் மகன் ஹரி.''

ஹரி மீண்டும் ''ஹலோ'' என்றான். அவன் வேறு எங்கோ பார்த்தபடி சொல் வது போல் இருந்தது மீராவுக்கு. மைதிலி வீட்டிற்குள் சென்றிருந்தாள்.

''உட்காருங்க'' என்றான் அவன் பரி வுடன். ''உள்ளேந்து சேர் கொண்டு வர் றேன்'' என்று நகர்ந்தவனிடம் ''வேண் டாம் இங்கேயே இருக்கே?'' என்றாள் மீரா மெல்லிய வியப்புடன்.

''அப்ப சரி. உக்காருங்க'' என்றான் அவன் புன்சிரிப்புடன்.

(தொடரும்)

வட்டி விகிதம் உயர்கிறது; விலைவாசியும் ஏறுகிறது!

சமீபத்தில் மத்திய அரசு வட்டி விகிதங்களை அதிகரித்து அறிவிப்புச் செய்ததிலிருந்து, பல பெரிய நிறுவனங்கள் தாங்கள் வழங்கவிருக்கும் டிபன்சர் கடன் பத்திரங்களுக்கு 17 சதம் வட்டி தரத் தீர்மானித்துள்ளன. இரண்டு நிறுவனங்கள் ஏற்கெனவே தங்கள் திட்டத்தை வெளியிட்டும் உள்ளன. அவை,

ஸவுத் இண்டியா விஸ்கோஸ்
ரிலையன்ஸ் இண்டஸ்டிரி

ஆகியன. இரண்டும் நன்கு வேரூன்றியுள்ள நிறுவனங்கள். இவர்கள் முன்னோடியாக விளங்க, வேறு பல நிறுவனங்களும் 17 சதம் வட்டிக்கு டிபன்சர்கள் வழங்குவதாகக் கூறிக் கொண்டு மார்க்கெட்டுக்கு வரும் என்று கருதப்படுகிறது. உபரிநிதி உள்ள மக்கள் இந்த டிபன்சர்களில் முதலீடு செய்வது பற்றி யோசிக்கலாம்.

இது ஒருபுறமிருக்க, 'திடும்மென்று வட்டி விகிதம் உயர்வானேன்? உயர, அரசு அனுமதிப்பானேன்?' என்ற கேள்விகள் எழுகின்றன. பல்வேறு வங்கிகள், நிதி நிறுவனங்களின் வட்டி விகிதங்களை மத்திய அரசும் ரிஸர்வ் வங்கியும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. தவிர, அரசாங்கமே தனது அபிவிருத்திப் பணிகளுக்காக மக்களிடம் கடன் வாங்குகிறது. இவற்றை 'அரசுக் கடன் பத்திரங்கள்' என்கிறோம். இவ்வாறு இன்று வரை மத்திய, மாநில அரசுகள் கடன் வாங்கியுள்ள மொத்த தொகை 1,80,000 கோடி! நோக்கம் என்னவெனில், இந்தக் கடனை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுத்தி, பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்தால், கடனை வட்டியுடன் மக்களுக்கு எளிதில் திருப்பித் தந்து விடலாம் என்பது. நீர்ப்பாசனம், அணை கட்டுதல், சாலை அமைத்தல், மின் உற்பத்தி போன்றவை இதில் அடங்கும். இவ்வாறு ஆண்டுதோறும் மத்திய மாநில அரசுகள் சுமார் 10,000 கோடி வரை மக்களிடம் கடன் வாங்குகின்றன. ஆனால் சிக்கல் என்னவெனில், பொருளாதாரம் எதிர்பார்த்த வேகத்தில் வளர்ச்சி அடையாததால், அரசாங்கங்கள் இப்போது பெறும் கடன்களில் பெரும் பகுதி, கடந்த காலக் கடன்களைத் திருப்பித் தரவும் வட்டி தரவுமே சரியாய்ப் போய் விடுகிறது! அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தக் கடன்களில் சிறு பகுதியே மிஞ்சுகிறது!

எனவே அரசு, மக்களிடம் சேமிப்பு உணர்வை ஊக்குவித்து, சேமிப்பை மேலும் பெருகச் செய்ய வேண்டியிருக்கிறது. பல்வேறு அரசு, தனியார் நிறுவனங்களின் அனாவசியச் செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் கோரிக்கை விடுக்கிறது.

விலைவாசி உயர ஒரு காரணம், உற்பத்தியாகும் பொருள்கள் குறைவாகவும் பணப் புழக்கம் அதிகமாகவும் இருப்பதுதான். ஆதலால், பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தி, அந்தப் பணத்தைச் சேமிப்பாக மாற்ற அரசு எண்ணுகிறது. மக்கள் சேமிக்க வேண்டுமென்றால் வட்டி விகிதம் கவர்ச்சிகரமாக அமைய வேண்டும். இதனால்தான் தற்போது அரசு வட்டி விகிதங்களை அதிகரித்துள்ளது. 15-20 ஆண்டுகளுக்கு முன் அரசு கடன் பத்திரங்கள் 6 அல்லது 7 சதம் வட்டிதான் அளித்தன. இது படிப்படியாக உயர்ந்து, தற்போது 12 சதம் அறிவித்துள்ளது அரசு!

இதையொட்டி வங்கியில் டெபாஸிட் செய்யப்படும் வைப்பு நிதிக்கும் வட்டி விகிதம் உயர்த்தப்பட்டுள்ளது. தனியார் துறையில் நடக்கும் நிதி நிறுவனங்களும் 14 லிருந்து 15 சதமாக வட்டியை உயர்த்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இதனாலெல்லாம் உடனடியாகப் பணவீக்கம் குறைந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஒருவேளை நீண்ட கால நோக்கில் சாத்தியமாகலாம். ஆனால் உடனடி விளைவு என்ன என்று பார்த்தால், சேமிப்பு செய்யும் மக்களுக்குக் கூடுதல் வட்டி தரும் வங்கிகள், தொழில் துறைக்கு வழங்கும் கடனின் வட்டி விகிதத்தையும் அதிகரிக்கின்றன. இதனால் உற்பத்திச் செலவு கூடுதலாக, பண்டங்களின் விலை மேலும் உயரவே உடனடி வாய்ப்பு! ஆக அரசின் நோக்கம் நிறைவேறுமா? சந்தேகம்தான்.

– வி. கோபாலன்



காதலெனும் வானவில்

வாஸந்தி



5

அந்தச் சிரிப்பும் பளிச்சென்ற அந்த முகமும் இவன் ரொம்ப நல்லவன் என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தின. தினம் தினம் அவள் சந்திக்கும் மனிதர்களிட மிருந்து அவன் எந்த வகையிலோ வித்தி யாசமாகத் தெரிந்தான்.

''எந்தக் கிளாசிலே படிக்கிறீங்க?'' என்றான் புன்னகை மாறாமல்.

''பன்னிரெண்டாவது. ப்ளீஸ், வாங்க போங்கன்னு கூப்பிட வேண்டாம்.''

''ஓ.கே.'' என்று அவன் சிரித்தான்.

''என்னையும் வா, போன்னுதான் சொல்லணும்.''

'ஓ.கே.' என்றபடி அவனை அவள் ஆராய்ந்தாள். அவளை விட ஐந்து ஆறு வயது பெரியவனாக இருப்பான். அவன் பேசும் போது தவழ்ந்த புன்னகையும் முகத் தில் காட்டிய மரியாதையோ, ஆர்வமோ நூதனமாகத் தோன்றின.

''என்ன சப்ஜெக்ட் எடுத்துக்கிட் டிருக்கே?''

''பயாலஜி. டாக்டருக்குப் படிக்க ணும்னு ஆசை.''

''குட்!'' அவன் அவளை ஆசீர்வதிப் பது போல் புன்னகை செய்தான்.

''நீ?'' என்றாள் அவள் ஆர்வத்துடன். ''படிக்கிறியா, வேலை பார்க்கிறியா?''

''படிக்கிறேன்'' என்றான் அதே புன் னகையுடன்.

''என்ன சப்ஜெக்ட்?''

''தத்துவம். ஃபிலாஸபி.''

''ஃபிலாஸபியா?'' என்று அவள் வியப்புடன் சிரித்தாள்.

''என்ன செய்யப் போறே?''

''டீச்சராப் போவேன். புத்தகங்கள் எழுதுவேன். ஏன், தத்துவம் நல்ல சப் ஜெக்டா உனக்குத் தோணலியா?''

''அதெல்லாம் இல்லே!'' என்று அவள் சிரித்தாள். தத்துவம்னா வயசான வங்க படிக்கிறதுன்னு எனக்கு எண்ணம்.''

''நானும் வயசானவன், பிறக்கும் போதே.''

அது ஏதோ ஹாஸ்யம் போல் அவன் சிரித்தான். அவன் ஏன் சிரிக்கிறான் என்று புரியாமல் அவள் லேசான புன்னகையுடன் அமர்ந்திருந்தாள்.

''வானவில் பார்த்திருக்கியா?''

அவள் விழித்தாள். அது என்ன வார்த்தை என்று தெரியவில்லை. ஆரோ வில் மாதிரி தொனித்தது.

''வானவில்னா?''

''நீ என்ன இங்கிலீஷ்காரியா?''

''இல்லே அமெரிக்கன்!''

''அப்படின்னா உனக்குப் புரியாது.''

''எது புரியாது?'

''தத்துவம்!''

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''தத்துவம் புரியாட்டாப் போறது. வானவில்னா என்ன?''

அவன் தனது வரிசைப் பற்களைக் காட்டிச் சிரித்தான்.

''வானவில்லேதான் தத்துவமே இருக்கு.''

''போர் அடிக்காதே!'' என்றாள் அவள் பொறுமையில்லாமல். ''நீ சொல்லாட்டா மேம்கிட்டக் கேட்டுக்கறேன்.''

''நீ தெரிஞ்சுக்கணும் என்கிற அவ சியமில்லே'' என்றான் அவன் மீண்டும் பரி காசமாக. ''நீ டாக்டராப் போகப் போறே. அமெரிக்காவிலே போய் தொழில் நடத்தி னாலும் நடத்துவே. உனக்கெல்லாம் வான வில்லைப் பார்க்க எப்படியும் அவகாசம் இருக்காது!''

மைதிலி ஜெயராமன் தேநீர்க் கோப் பைகள் கொண்ட டிரேயை ஏந்தியபடி வரு வதைக் கண்டு, மீரா சட்டென்று எழுந்து விரைந்து அவளிடமிருந்து டிரேயை வாங்கிக் கொண்டாள்.

''வானவில்னா என்ன மேம்?'' என்றாள் ரகசியக் குரலில்.

''சொல்லாதேம்மா!'' என்றான் ஹரி பலக்க.

''சரி வேண்டாம், யாரும் சொல்ல வேண்டாம்'' என்றாள் மீரா பொய்க் கோபத்துடன். ''நானே தெரிஞ்சுக்கறேன்.''

''ஆ, அதுதான் நல்லது. நான் கூட நிறைய விஷயங்களை நானாத்தான் கத்துக் கிட்டேன்.''

ஹரி வாய் விட்டுச் சிரித்தான். மைதிலி ஏதும் சொல்லாமல் புன்னகையுடன் அவ னிடம் டீயையும் பிஸ்கெட்டையும் நீட்டி னாள்.

''ஹரி உனக்கு டீ வேணுமா?''

''வேணும்.''

மைதிலி அவன் பக்கமாகக் கோப் பையை நகர்த்தி, ''வெச்சிருக்கேன், எடுத் துக்கோ'' என்றாள்.

அவன் டீயை எடுத்துக் கொள்ளாமல் ''வானவில்னா ரெயின்போன்னு அர்த் தம்!'' என்றான் நிதானமாக.

''ஓ!'' என்று அவள் கூச்சத்துடன் மைதிலியைப் பார்த்துச் சிரித்தாள்.

''அதைப் பத்தி என்ன இப்போ?'' என் றாள் மைதிலி.

ஹரி சிரித்துக் கொண்டே பேசினான். ''ஃபிலாஸபியெல்லாம் ஒரு பாடமான்னு மீரா கேட்டா!''

''ஐய்யோ பொய்'' என்ற மீராவை லட் சியம் செய்யாமல் தொடர்ந்தான். ''தத்து வம் இல்லாத விஷயமே இல்லேன் னேன்.''

''பெரிய தத்துவம்!'' என்றாள் மீரா ரோசத்துடன். ''எனக்கு ஒண்ணும் தெரி யல்லே.''

''இவளுக்கு எல்லாம் புட்டுப் புட்டுச்





அரசியல்வாதிக்கு
இட ஒதுக்கீடு

மதுரை மாநகராட்சிக்கென்று ஒரு ஸ்பெஷல் அளவுகோல் இருக்கிறது. அதன்படி மதுரை நகருக்குள் வைக்கப்படும் சினிமாக்காரர்களின் கட்-அவுட்கள் இருபதடி உயரத்திற்குமேல் இருக்கக் கூடாது. அதற்குமேல் வைத்தால் கடுமையான நடவடிக்கை தான். ஆனால், இதெல்லாம் அரசியல்வாதிகளின் கட்-அவுட்களுக்குக் கிடையாது. ஆமாம்; அரசியல்வாதி களுக்கு மட்டும் சிறப்பு இட ஒதுக்கீடு!

சொன்னாத்தான் புரியும் போலிருக்கு. ரெயின்போவிலே எத்தனை நிறம் இருக்கு?''

''ஏழு.''

''அப்படின்னு நீ சொல்றே. எனக்கு ஒரே ஒரு நிறம்தான் தெரிகிறது.''

''அதைப் பார்க்காம கண்ணை மூடிக் கிட்டா அப்படித்தான் தெரியும்!''

அவன் சிரித்தான்.

''எக்ஸாக்ட்லி. உண்மையிலே அங்கே இருக்கிறது ஒண்ணுதான். ஏழு இருக்கிறதா நாம நினைக்கிறது ஒரு பாவனை. நீ அமெரிக்கன், நா இந்தியன் இன்னொருத்தன் நீக்ரோன்னு மனுஷ ஜாதியைப் பிரிச்சுப் பார்க்கிற மாதிரி - ஹிந்து, கிருஸ்துவன், முஸ்லிம்னு பிரிச்சுச் சொல்ற மாதிரி - அடிப்படையிலே இருக்கிற விஷயம் ஒண்ணுதான்.''

மீரா வியப்புடன் அவனைப் பார்த்தாள். இவன் மைதிலியின் தாத்தாவாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. மைதிலி மீராவைப் பார்த்துச் சிரித்தாள்.

''மீரா நாளைக்கு உன் விவாதத்துக்கு இந்தப் பாயிண்டையும் எடுத்துக்கலாம்.''

''எதைப் பத்தின விவாதம்?'' என்றான் ஹரி.

''மதச்சார்பின்மை - செக்குலரிஸம்.''

''எங்க இருக்கு அது?''

''என்ன மேம் சொல்றான் இவன்?''

மைதிலி சிரித்தாள்.

''நீ அவனோடு பேச உட்கார்ந்தா குழம்பித்தான் போவே. நீ உள்ளே என் ரூமுக்கு வா, புஸ்தகம் தர்றேன்''

டீ கோப்பையைக் கீழே வைத்து விட்டு மீரா எழுந்தாள். ஹரி புன்னகையுடனேயே அமர்ந்திருந்தான்.

''ஹரி, நீ டீயைக் குடி ஆறிப் போகுது'' என்றாள் மைதிலி.

''ஆறிப் போனதும் சூடானதும் எல்லாம் ஒண்ணுதான் ஞானிகளுக்கு'' என்றாள் மீரா.

ஹரி மீண்டும் வாய் விட்டுச் சிரித்தான். மைதிலியைப் பின்தொடர்ந்து உள்ளே செல்லும் போது மீரா அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவன் டீ கோப்பை வைக்கப்பட்டிருந்த மேஜையைக் கையால் ஒருமுறை தடவி விட்டுக் கோப்பையைக் கையில் எடுத்துக் கொண்டான் குருடனைப் போல -

மைகாட். மீரா அதிர்ந்து நின்றாள். இதை ஏன் முதலிலேயே நான் கண்டு கொள்ளவில்லை!

உடனடியாக அவனிடம் சென்று அவன் நிலையைப் புரிந்து கொள்ளாமல் தான் பேசியதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் போலிருந்தது. கண்ணில் நீர் துளிர்க்கும் நிலையில் 'வா மீரா' என்ற மைதிலியின் குரலுக்குப் பணிந்து, அவள் உள்ளே சென்றாள்.

''சொந்த வாழ்க்கையிலே இருக்கிற ஏமாற்றத்தினாலே யார் மேல பாயலாம்னு பார்க்கறாங்க'' என்று மீனாட்சி சொன்னது ஞாபகம் வந்தது. மீனாட்சி பழிக்கிற அளவுக்கு நிச்சயம் மைதிலி கோபக்காரி இல்லை. இவள் விவாகரத்தானவள் என்று மட்டும்தான் மற்ற பெண்கள் சொல்லித் தெரியும். பையனுக்குப் பார்வை கிடையாது என்று யாரும் சொன்னதில்லை. எத்தனை முட்டாள் நான் - பார்த்ததும் புரிந்து கொள்ளக்கூடிய சூட்சமம் இல்லாதவள் -

''என்ன யோசனை மீரா?''

''ஒண்ணுமில்லே மேம், சொல்லுங்க கேட்டுக்கிட்டிருக்கேன்.''

மைதிலி தன் பேச்சைத் தொடர்ந்தாள். பேசியபடியே ஏதோ புத்தகத்தைத் தேடி எடுத்தாள். ''இதையும் வெச்சுக்கோ. 'செக்குலரிஸம்' என்கிற தலைப்பிலே இருக்கிற பகுதியை மட்டும் படி. மனசிலே விஷயம் தெளிவாப் பதிஞ்சு போன பிறகு பேசறது

கலபம். நாளைக்கு இயல்பாப் பேசு. எழுதி வெச்சு அதைப் பார்த்துப் பார்த்துப் பேசக் கூடாது'' என்றவள், ''வா நான் உன்னை உன் வீட்டிலே ட்ராப் செய்யறேன்'' என்றாள்.

'வேண்டாம்' என்று சொல்ல நினைத்து, அம்மா சொன்னது நினைவுக்கு வந்ததில், ''சரி'' என்றாள். ''உங்களுக்குச் சிரமமில்லையே?''

''என்ன சிரமம்?'' என்று மைதிலி அவள் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினாள். வாசல் வராந்தாவில் ஹரியைக் காணவில்லை.

''ஹரி, நான் மீராவை ட்ராப் பண்ணிட்டு வர்றேன், கதவைத் தாழ்ப்பாள் போட்டுக்கோ'' என்று மைதிலி குரல் கொடுத்தாள்.

''சரி'' என்று ஹரி உள்ளேயிருந்து பதில் சொன்னான்.

''பை ஹரி!'' என்றாள் மீரா உற்சாகமாக. ''நா மறுபடி வருவேன் ஃபிலாஸபி பேச.''

''வா! முதல்லே தமிழ் பேசு. அப்புறம்தான் மற்ற விஷயம்!''

மீரா சிரித்தாள்.

''ஓ.கே. பை!''

''பை!''

அவன் வெளியில் வருவான் என்று எதிர்பார்த்தாள். அவன் வரவில்லை.

''வா. நாம் போகலாம். அவன் ஏதாவது வேலையாயிருப்பான்'' என்று மைதிலி வெளிக் கதவை இழுத்து மூடி, ''கதவைச் சாத்திக்கோ ஹரி'' என்று மறுபடி குரல் கொடுத்துக் கிளம்பினாள்.

வண்டி சற்று தூரம் சென்றதும் கேட்பதா வேண்டாமா என்று தயங்கியபடி ''ஹரிக்குக் கண் தெரியாதா மேம்?'' என்றாள் மீரா.

''தெரியாது'' என்றாள் மைதிலி சாதாரணமாக. ''பிறந்ததிலேர்ந்து.''

''ஓ மைகாட்! நான் சரியான முட்டாள். நான் ஏதேதோ இண்டலாப் பேசினேன் அவன் நார்மலானவன் என்கிற நினைப்பிலே.''

''அவன் நார்மலானவன்தான் மீரா. அதிலே சந்தேகமென்ன?'' என்று மைதிலி சொன்னது வியப்பை அளித்தது.

''கண் தெரியல்லேங்கறது ரொம்பப் பெரிய சோகம் மேம். பெரிய இழப்பு.''

''இழப்புதான். ஆனா அதோட வாழப் பழகிண்டிருக்கான். தன் வேலையைத் தானே செய்வான். தான் ஒரு அங்கஹீனமுள்ளவன் என்கிறதைக் கூட ஒப்புக்க மாட்டான். தான் ஒரு கையாலாகாதவன் என்கிற எண்ணம் அவனுக்கு வரக் கூடாதுன்னு நானும் ரொம்பக் கவனமாக இருக்கேன்.''

அவள் எதிரில் எதையும் உளறி வைக்காதே என்று மைதிலி மறைமுகமாகச் சொல்வது போல் இருந்தது.

''நான் அவனோடு பேச வரலாமா மேம்?''

''வாயேன்! ஆனா 'ஐயோ பாவம்' என்கிற கருணை உணர்வோடு பேசக் கூடாது. அவனை ஒரு நார்மல் மனுஷனா நினைச்சுப் பேசறதுன்னா வா.''

'சரி' என்று தலையாட்டிய போது, இவளால் எப்படி அப்படி நடந்து கொள்ள முடிகிறது என்று வியப்பாக இருந்தது.

''அவன்கிட்ட குறையிருக்கிறதை நீ கண்டுபிடிக்காம போனதே எனக்கு சந்தோஷமா இருக்கு. அவனுக்காக நீ வருத்தப்பட வேண்டியதில்லே. ஹி இஸ் கொய்ட் ஓ.கே. நா வருத்தப்படறதெல்லாம் மீனாட்சி மாதிரி, கையும் காலும் பார்வையும் நல்லா இருக்கிறவங்க திமிர் பிடிச்சு வாழ்க்கையை நாசம் பண்ணிக்கிறாங்களே. அவங்களைப் பத்தித்தான்.''

மீனாட்சியைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்று கேட்பது அநாகரிகமான கேள்வி என்று அவள் பேசாமலிருந்தாள்.

''ஒரு நாளைக்கு மீனாட்சியுடைய அம்மாவைப் போய்ப் பார்த்துட்டு வரணும்னு நினைக்கக்கிட்டிருக்கேன். வீட்டிலே இவளை கவனிக்க யாருக்குமே நேரமில்லை போலிருக்கு. உனக்கு அவங்களைப் பத்தித் தெரியுமா?''

''தெரியாது மேம்.''

ஹரியைப் பற்றின கவலையை விட மீனாட்சியைப் பற்றி மைதிலி அதிகமாகக் கவலைப்படுவது விநோதமாக இருந்தது.

''ஹி இஸ் கொய்ட் ஓகே.''

எப்படி? அவன் பிற்காலத்தில் என்ன செய்யப் போகிறான்? மைதிலிக்குப் பிறகு யார் பார்த்துக் கொள்வார்கள்? அவளுக்கு நினைக்க நினைக்கக் கண்ணில் நீர் தளும்பிற்று. மனசு முழுவதும் வியாபித்து யாரிடமாவது தனது பரிதவிப்பை வெளியிட வேண்டும் போல் இருந்தது.

வீட்டில், ஹோம்வொர்க்கில் ஆழ்ந்திருந்த மகேஷ் அம்மாவும் அப்பாவும் ஏதோ சங்கீதக் கச்சேரிக்குப் போயிருப்பதாகச் சொன்னான். அவள் தன் அறைக்குச் சென்று உடையைக் கூட கழற்றாமல் எரிக் பேக்கருக்குக் கடிதம் எழுத அமர்ந்தாள்.

''எனக்கு இன்று ஒரு புதிய சிநேகிதன் கிடைத்தான்.''

(தொடரும்)

பேண்ட் பாக்கெட்டில் ஒரு சிகரெட் பேக்கட்!

அருள்நம்பி

"என்னங்க இந்த அநியாயத்தைப் பார்த்திங்களா?" என்று பதறியவாறே வந்தாள் சிவகாமி.

வெளி வராந்தாவில் தம் மகள் அபிராமியுடன் கேரம் விளையாடிக் கொண்டிருந்த செல்லமுத்து, குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்.

சிவகாமியின் கையில் சிகரெட் பேக்கட். "இது நம்ம கோபி பேண்ட் பாக்கெட்டிலே இருந்திச்சுங்க."

அவர் அந்த சிகரெட் பேக்கட்டைக் கையில் வாங்கி, உள் உறையை இழுத்துப் பார்த்தார். அதில் நாலு சிகரெட்டுகள் இருந்தன.

"நம்ம கோபிதான் சிகரெட் பிடிக்கிறான்னு நினைக்கிறேன். அவன் வந்ததும் கண்டிங்க."

"வரட்டும் கேட்கிறேன். எனக்கென்னவோ அவன் சிகரெட் பிடிப்பானான்னு சந்தேகமா இருக்கு!"

"கையும் களவுமாப் பிடிபட்டிருக்கான். அப்புறம் என்னங்க சந்தேகம்? இதை முளையிலேயே கிள்ளி எறியணும். ரெண்டு தட்டுத் தட்டிக் கேளுங்க."

"அடிச்சுக் கேட்கிற வயசா இது? பிளஸ் டு படிக்கிறான்."

"அப்ப அப்படியே விட்டிடலாம் கிறீங்களா?"

"நமக்குத் தெரியாம அவன் சிகரெட் பிடிச்சா என்ன செய்வே? எதையும் பக்குவமாச் சொல்லித் திருத்தணும். பருவம் அப்படி!"

"என்ன பருவமோ..."

"நீ அவன்கிட்ட எதுவும் கேட்காதே. சந்தர்ப்பம் வர்ற போது நானே கேட்கிறேன்."

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை.

கோபியைத் தம் அறைக்குக் கூப்பிட்டார் செல்லமுத்து.

ஏதாவது முக்கியமான விஷயம் இருந்தால்தான் அவர் கூப்பிடுவார் என்று கோபிக்குத் தெரியும்.

"உட்கார்."

உட்கார்ந்தான்.

அவன் படிப்பைப் பற்றிக் கேட்டார்.



நண்பர்களை விசாரித்தார். பின் சுற்றி வளைத்து விஷயத்திற்கு வந்தார்.

"நேற்று உன் பேண்டைத் துவைக்க எடுக்கிற போது பாக்கெட்டிலே சிகரெட் பெட்டி இருந்ததா அம்மா சொன்னா. நான் அவன் சிகரெட் பிடிக்க மாட்டான்; ஃப்ரண்ட்ஸ் யாராவது வம்பிலே மாட்டி விட வச்சிருப்பாங்கன்னு சொன்னேன். என் ஊகம் சரிதானா கோபி?" மகனை ஏறிட்டார்.

"ஆ... ஆமாப்பா. அந்தக் கணேஷ்..."

"எனக்குத் தெரியும்; நீ நல்ல பையன். அந்தக் கணேஷ் சிகரெட் பிடிப்பானோ?"

"ஆமாப்பா."

"சிகரெட் பிடிக்கிறவங்க எல்லாம்

கெட்டவங்கன்னு நான் சொல்ல வரலே. ஹெல்த் பாயிண்டிலே பார்க்கிற போது அது வெரி ஹார்ம்புல். உனக்குத்தான் தெரியுமே அதிலே என்ன விஷ சத்து இருக்கு?''

''நிகோடின்.''

''வெரிகுட். என் அப்பா - உன் தாத்தா செயின் ஸ்மோக்கர். அவருக்கு நுரையீரல் புற்றுநோய் வந்து பென்ஷன் வாங்காமலே இறந்திட்டார். நீ தாத்தாவைப் பார்த்திருக்கியா?''

''வராந்தாவிலே உட்கார்ந்து சதா லொக் லொக்குனு இருமிண்டிருப்பாரே...''

''சரியா ஞாபகம் வச்சிருக்கே. புகை பிடிக்கிறவங்களுக்கு முகத்திலே சுருக்கங்கள் விழுந்து, இளமையிலேயே முதுமை ஆகி விடுகிறார்கள் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எழுதின ஆர்டிகிள் இதிலே இருக்கு. படிச்சுப் பார். உன் ஃப்ரண்ட் - அதான் உன் பாக்கெட்டிலே சிகரெட் பெட்டியை வச்சானே அவனையும் படிச்சுப் பார்க்கச் சொல்லு...''

''சரிப்பா.''

''இளமையிலே ஒரு பழக்கத்துக்கு அடிமை ஆகிட்டா சாகிற வரை அதைவிட முடியாதுன்னு சொல்லுவாங்க. தமிழிலே கூட இதுக்கு ஒரு பழமொழி இருக்கே... எங்கே சொல் பார்க்கலாம்...''

''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்...''

''கரெக்ட். இன்னொரு விஷயம் கோபி. தினமும் ஒரு பேக்கட் சிகரெட் வீதம் ஐந்து வருஷம் தொடர்ந்து பிடிச்சா அவங்களுக்கு 'பெனைல் ஆர்டரியோபஸ்க் லெரோஸிஸ்' என்ற நோய் வருதாம். அது என்ன நோய் தெரியுமா?''

''தெரியலைப்பா.''

''அதுதான் ஆண்மைக் குறைவு. இதை நான் சொல்லலேப்பா, பாஸ்டன் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளருங்க சொல்றாங்க. என்னடா அப்பா இவ்வளவு தூரம் சொல்றாரே நம் மேலே சந்தேகப்படுறாரோன்னு நினைக்காதே. நீ தங்கமான பையன். இதை எல்லாம் உன் நண்பன் கணேஷ்கிட்டச் சொல்லணும், அதுக்குத்தான்.''

''கண்டிப்பாச் சொல்றேன்.''

''சிகரெட் பிடிக்கிறதாலே தங்களுக்கு ஒரு சமுதாய அந்தஸ்து கிடைக்கிறதுன்னு சில இளைஞர்கள் நினைக்கிறாங்க. இது மாபெரும் தவறு. சமீபத்திலே பெண்களிடம் ஒரு சர்வே பண்ணினாங்க. அதிலே 90 சதவீதம் பெண்கள், புகைக்கும் ஆண்களை விரும்புறதில்லேன்னு தெரிஞ்சது... சரி, அந்த கணேஷ் ஃபாதர் என்ன தொழில் பண்றார்?''

''தெரியலைப்பா.''

''ஒருதரம் அவனை நம்ம வீட்டுக்குக் கூட்டி வா!''

''கூட்டி வர்றேன்.''

''சரி நீ போ. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு.''

இனிமேல் சிகரெட் பிடிப்பதில்லை என்ற சத்தியப் பிரமாணத்துடன் கோபி அந்த அறையை விட்டு வெளியேறினான்.

தம் உபதேசத்தைக் கேட்ட தம் மகன் இனி கண்டிப்பாகத் திருந்தி விடுவான் என்று நினைத்தார் அந்தக் கல்லூரிப் பேராசிரியர்.

'A' யைத் தாண்டிய 'B' படங்கள்!

மதுரையில் சில தியேட்டர்களில் 'A'யைத் தாண்டிய 'B'(lue) படங்களை ஒரு வேண்டுதல் போல் தொடர்ந்து காட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்டத்தால் அத்தனை சுலபமாக நடவடிக்கை எடுக்க முடிவதில்லையாம். இருப்பினும் மதுரை முத்து உயிரோடிருந்த காலத்தில், அதுமாதிரியான தியேட்டர்காரர்கள் சட்டத்திலுள்ள ஓட்டைகளின் வழியாகத் தப்பித்து விடுகிறார்கள் என்பதையுணர்ந்து, அந்தந்தத் தியேட் டர்களுக்குத் தமது ஆட்களை அனுப்பிக் கொஞ்சம் 'தடாலடியாக' அறிவுரை செய்வார் என்பதால், அப்போதெல்லாம் இது மாதிரியான படங்கள் மதுரை நகருக்குள் நுழைந்ததேயில்லையாம்.



ஈ. வி. சரோஜா

நீண்ட சொர்க்கம் வாழ்வில் திருப்பு முனை!

'அகல் விளக்கு' திரைப்பட ஷூட்டிங்கின் முதல் ஷெட்யூல் முடிந்து இரண்டாவதை ஆரம்பிக்க முடியாமல் ஏற்பட்ட சிக்கல் -

ஈ.வி. சரோஜா கருவுற்றதுதான்!

அவருக்குக் குழந்தை பிறக்கும் வரை - ஏன் அதற்குப் பின்னரும் கூட சில மாதங்கள் - காத்திருக்க வேண்டுமே, என்ன செய்வது?

மதுரம் பிக்சர்ஸ் நிர்வாகிகள் யோசித்து, அந்தப் படத்தை அப்படியே நிறுத்தி வைத்து விட்டு வேறு ஒரு படம் எடுக்க ஆரம்பிப்பது என்று தீர்மானித்தனர். அப்படி இரண்டாவது படம் எடுக்கும் போது, டி. ஆர். ரகுநாத்தை டைரக்ட் செய்யச் சொல்வது என்றும் அவர்கள் ஏற்கெனவே தீர்மானித்து, அவரிடம் பேசியும் இருந்தனர்.

எனவே நான் மறுபடியும் கதை - வசனம் மட்டும் எழுதித் தர வேண்டிய நிலைக்கு உள்ளானேன். மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டு எழுதவும் செய்தேன்.

மதுரம் பிக்சர்ஸார் என் கதை - வசனத்தைப் படித்துப் பார்த்தார்கள். அதில் நடிக்க ஜெமினியையும் பத்மினியையும் 'புக்' பண்ணுவதுதான் பொருத்தமாயிருக்கும் என்ற எங்கள் யோசனையையும் ஏற்றார்கள்.

அவ்வாறே செய்து விட்டு டி.ஆர்.ரகுநாத்துக்குத் தகவல் தெரிவித்தார்கள். ஆனால் ரகுநாத், அப் படத்தில் எஸ். எஸ். ஆர். தான் நடிக்க வேண்டும் என்று விரும்பினார்!

இந்தக் குழப்பத்தினிடையில் ஷூட்டிங் தினங்கள் முடிவாகி, அந்தத் தேதியும் வந்து விட்டது! பிற்பகல் கால்ஷீட்.

ஷூட்டிங்குக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. நானும் கிருஷ்ணமூர்த்தியும் செட்டில் இருந்தோம். நேரமாகிக் கொண்டிருந்ததேயொழிய, ரகுநாத்தோ அவரது யூனிட்காரர்களோ வரவில்லை. டென்ஷன்...

இரண்டு மணியிருக்கும். ரகுநாத்திடமிருந்து தகவல் வந்தது. "குழப்பமான சூழ்நிலையில் இந்தப் படத்தை டைரக்ட் செய்ய ரகுநாத் விரும்பவில்லை" என்பது தான் செய்தி.

"என்ன கிருஷ்ணமூர்த்தி, கடைசி நிமிஷத்தில் இப்படியாகி விட்டதே" என்றேன் அதிர்ச்சியை மறைக்க முடியாமல்.

மதுரம் பிக்சர்ஸ் நிர்வாகிகள் கையைப் பிசைந்து கொண்டு நின்றனர். "ஷூட்டிங்கை கேன்ஸல் செய்வதா, தொடர்வதா? தொடர்வது என்றால் யார் டைரக்ட் செய்வது?" - கேள்விகள் விசுவரூபமெடுத்தன.

மதுரம் பிக்சர்ஸ் எங்களுக்கு ஒரு சகோதர நிறுவனம் போல என்று ஏற்கெனவே சொன்னேன், நினைவிருக்கிறதல்லவா? அதனால் கிருஷ்ணமூர்த்தி தமக்கும் பொறுப்பு இருப்பதாக எண்ணினார். "ஸ்ரீதர் நீயே டைரக்ட் செய்து விடு" என்றார்.

"என்னது!" என்று நான் மறுபடியும் அதிர்ச்சி அடைந்து கேட்டேன்.

"ஆமாம் ஸ்ரீதர், ஆர்டிஸ்ட்டுங்க வந்துக்கிட்டிருக்காங்க. கால்ஷீட் வேஸ்ட் ஆகக் கூடாதுன்னா இதுதான் வழி."

"ஒரு பெரிய டைரக்டர் வேண்டாம் என்று விலகி விட்ட நிலையில் அந்த இடத்தில் அதிக அனுபவம் இல்லாத நான் புகுவது சரியாய் இருக்குமா? இண்டஸ்டிரி ஒப்புக் கொள்ளுமா? மக்கள் ஏற்பார்களா?"

"அவ்வளவெல்லாம் யோசிக்க இப்போ நேரமில்லே. மதுரம் பிக்சர்ஸுக்கு ஏற்கெனவே ஒரு படம் முதல் ஷெட்யூலோடு நின்று போனதில் நஷ்டம். இப்போ மறுபடி நஷ்டம் ஏற்பட நாம் அனுமதிக்கக் கூடாது."

"அது சரி, ஆனா என்னோட நிலையையும் யோசிக்கணும் இல்லையா?"

"கமான் ஸ்ரீதர், யூ கேன் டு இட்! யூ கேன் ரைஸ் அப் டு தி அகேஷன்!" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

அந்தச் சொற்கள் மந்திரம் மாதிரி வேலை செய்தன. "ஒகே! ஐ வில் டைரக்ட் திஸ் ஃபிலிம்" என்றேன்.

ஒரு மணி நேரத்துக்குள் என் யூனிட்டைச் சேர்ந்தவர்கள் தயாராகி விட்டனர். மேக்-அப் போட்டாகி விட்டது. மூன்று

டைரக்டர் ஸ்ரீதர்

வடக்கு வாசல் :

பன்னாட்டுப் பொருட்காட்சியிலும் ஜெ.படங்கள்!



தில்லியில் வருடாந்திரச் சடங்கான பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி நவம்பர் 14 முதல் 24 வரை இந்த வருடமும். மக்கள் லட்சக்கணக்கில் போய் சோலே பட்டுரேயும், சமோஸாவும் சாப்பிட்டு விட்டுப் பெரிய பலூன்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்தார்கள். பண வசதியைப் பொறுத்து முப்பத்தாறாயிரம் ரூபாய் கொடுத்து அலங்காரத் தேக்குக் கட்டில் கூட வாங்கலாம். மற்றபடி இங்கே பன்னாட்டு வர்த்தகம் மட்டும் நடப்பதில்லை என்பது விஷயமறிந்தவரின் வருத்தம்.

இதில் தமிழ்நாடு பெவிலியன் வெளியே பிரம்மாண்ட பொங்கற்பானையுடனும் உள்ளே வழக்கமான அம்சங்களுடனும் காட்சி தந்தது. முந்நூறுக்கும் அதிக விலையிலும் காஞ்சி காட்டன் புடைவைகளை இவ்வூர் மகளிர் அள்ளிக் கொண்டு போனார்கள். கவரிங் நகைகளுக்கும் அதே அளவில் வரவேற்பு. ஒரே ஒரு எம்.ஜி.ஆர். படமும் நிறைய ஜெ. படங்களும் இருந்தன. ஜெ. படத்தைக் காட்டி உள்ளூரில் வோட்டு வாங்கலாம்; பன்னாட்டு வர்த்தகத்தைப் பெருக்க முடியுமா என்ன?

ஒய்வுபெற்ற 'மாஜிக்'

'மாஜிக் ஜான்ஸன்' - அதிபர் ஜார்ஜ் புஷ் முதல் வாண்டுகள் வரை இந்தக் கூடைப்பந்தாட்ட வீரரின் விசிறிகள். களத்தில் இவர் இறங்கினால் இவர் கைக்குப் பந்து எப்போது வருகிறது, கூடைக்குள் எப்படி விழுகிறது என்பதே தெரியாது. அத்தனை சாகஸம். அதனால் வந்ததுதான் இவர் பெயரில் 'மாஜிக்'.

காலணி முதல் குளிர்பானம் வரையிலான விளம்பரங்களில் நடிப்பதன் மூலமும் வருடம் சுமார் ஐம்பது மில்லியன் டாலர் சம்பாதித்து வந்தார். இப்படிப் புகழின் சிகரத்திலிருக்கும் போது தமது ஒய்வை அறிவித்து விட்டார். காரணம்: AIDS.

எய்ட்ஸ் வியாதி இவரைத் தாக்கி விடவில்லை இன்னும். ஆனால் ரத்தத்தில் எய்ட்ஸ் நோயை உண்டாக்கும் எச். ஐ. வி. வைரஸ் கிருமிகள் இருப்பதாக டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

டெலிவிஷன் திரையில் மிகத் திடமான முகத்துடன் தோன்றிய ஜான்ஸன், ''இனிமேல் மக்களிடையே எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு ஏற்படப் பாடுபடுவேன்'' என்று அறிவித்திருக்கிறார்.

ஆனால் இவர் ஒய்வுபெற்ற செய்தியே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருப்பது உண்மை. ''ஜான்ஸனை இந்தக் கிருமிகள் தாக்குமானால், நாம் எம் மாத்திரம்!'' என்கிறார்கள் இளைஞர்கள்.

வெள்ளித் திரையில் நேரு

நேருவின் வாழ்க்கை முழு நீளத் திரைப்படமாக உருவாகி, கடந்த நவம்பர் 14 அன்று தில்லியில் காண்பிக்கப்பட்டது. 'நேரு- தி ஜுவல் ஆப் இண்டியா'' என்ற தலைப்பில் ஆங்கிலம் மற்றும் இந்தியில் இதைத் தயாரித்திருப்பவர் கிரண்குமார்.

பிரபல மேடை நடிகர் பிரதாப் ஷர்மா நேருவாக நடித்திருக்கும் இந்தப் படம் ஆட்டன்பரோ எடுத்த 'காந்தி' ஏற்படுத்திய பாதிப்பின் விளைவு.

திரையரங்குகளில் வெளியாவதோடு, டெலிவிஷனிலும் காண்பிக்கப்படுமாம். மிக அதிகச் செலவில் எடுக்கப்பட்டுள்ள (எவ்வளவென்று சொல்ல மாட்டாராம்!) இப் படத்தை அதற்குள்ளேயே பல வெளிநாட்டு டீ.வி. நிலையங்கள் விலைக்கு வாங்கியிருக்கின்றனவாம்.

- இமயவரம்பன்

காதலெனும் வானவில்

6

ரேடியோ நிகழ்ச்சி முடிந்து அது ஒலிபரப்பும் ஆகி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன. அந்த நிகழ்ச்சி நடந்தவிதமே படு தமாஷ். திடீரென்று அழைக்கப்பட்டதால் மாணவ, மாணவிகள் சற்றுத் தடுமாற் றத்துடன் நடந்து கொண்டார்கள். புத்தகத்திலிருந்து குறிப்பெழுதிக் கொண்டு வந்து, அதைப் பார்த்து, அவர்கள் பேசினது ஏதோ வேஷம் போட்டு நடிப்பது போல் தோன்றிற்று மீராவுக்கு.

மைதிலியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவளாய் அவள் மட்டும் கையில் குறிப்பு ஏதும் வைத்துக் கொள்ளாமல் பேசினாள். மற்றவர்களுடைய விவாதம் அலுப்பைத் தந்த போது, திடீரென்று இடையில் புகுந்து, ''வானவில்லில் எத்தனை நிறங்கள்?'' என்றாள். அவர்கள் விழித்து, இது என்ன பிதற்றல் என்பது போல் அவளைப் பார்த்துப் பதில் அளித்ததையும் அவள் தொடர்ந்து அன்று ஹரி சொன்னதைக் கிளிப்பிள்ளை மாதிரி அவர்களுக்கு எடுத்துச் சொன்னதையும் நினைத்து நினைத்துப் பிறகு சிரிப்பு வந்தது. இதை ஹரியிடம் சென்று சொல்ல வேண்டும் என்று நினைக்கையில் நிகழ்ச்சியைக் கேட்டு விட்டு அவனே அவளுக்கு டெலிபோன் செய்தான்.

''உனக்குச் சுயமா யோசனை செய்யத் தெரியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனா இப்படி மத்தவங்க பேச்சையும் உருப் போடுவேன்னு தெரியாது'' என்றான்.

அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். ''நீ பேசறதெல்லாம் அப்படி மேதாவித்தனமா இருக்கும் போது, நா காப்பி அடிக்காம எப்படி இருக்கிறது?''

''யாருடீ அது?'' என்று அம்மா அவள் பேசி முடித்ததும் கேட்டாள்.

இன்னும் அடங்காத சிரிப்புடன் மீரா பதில் சொன்னாள்.

''எங்க மேம் மைதிலி ஜெயராமனுடைய பிள்ளை. பிலாஸஃபி எம். ஏ. படிக்கிறான். ஹி இஸ் ஸோ க்யூட்!''

வாஸந்தி

''உனக்கு எல்லாரும் க்யூட்!'' என்றாள் அம்மா சுவாரஸ்யமில்லாமல். ''முருகேசனையும் க்யூட்ங்கறே!''

''ஆமாம் அவனும்தான். இஸ்திரி போடறவனா இருந்தா என்ன குறைஞ்சு போனான்? அம்மா, அமெரிக்காவிலே நீ இப்படிப் பேசிண்டிருக்கல்லே!''

''அமெரிக்கா வேற தேசம். அங்கே இருக்கிற சமூகம் வேற.''

''எல்லாரும் மனுஷங்கதான். நா அமெரிக்கன்; நீ இந்தியன்; இவன் நீக்ரோன்னு வித்தியாசப்படுத்திச் சொல்ற தெல்லாம் கூட உன் பாவனையினாலே.''

இதுவும் ஹரியின் வார்த்தைகள் என்று நினைவு வந்து அவள் நிறுத்தினாள்.

அம்மா விஷயத்தை மறந்து சிரித்தாள். ''இப்படியெல்லாம் தமிழிலே பேச எங்கே கத்துண்டே?''

''அந்த ஹரியை ஒருநாள் போய்ப் பாரு. நீயும் இப்படிப் பேச ஆரம்பிப்பே.''

''நா எதுக்குப் போய்ப் பார்க்கணும்? அவனை இங்கே வரச் சொல்லு'' என்ற அம்மாவின் குரலில் அளவுக்கு அதிகமான ஆர்வம் தலைகாட்டிற்று.

''அவனை வரச் சொல்றது அத்தனை சுலபமில்லே. யாராவது அழைச்சிண்டு வரணும். அவனுக்குக் கண் தெரியாது.''

''அடப் பாவமே!'' என்றாள் அம்மா அதிர்ந்து. ''அவனா எம். ஏ. படிக்கிறான்?''

''ஆமாம், ஆனா பாவம்னு சொல்றது அவனுக்கும் பிடிக்காது; அவன் அம்மாவுக்கும் பிடிக்காது. அவனைப் பார்த்தியானா குருடன்னே தோணாது. நானே எதேச்சையாத்தான் கண்டுபிடிச்சேன்.''

அன்றைய தினத்தின் நினைவு மீண்டும் மீண்டும் வந்தது. முக்கியமாக அவனது நிலையைப் புரிந்து கொள்ளாமல், தான் நடந்து கொண்ட விதத்தை நினைத்து, செய்த பரிகாசத்தை நினைத்து வெட்கமேற்பட்டது. குற்ற உணர்வு வதைத்தது. ஆனால் மறுபடி ஹரியுடன் பேசும் போது அதற்கான வருத்தத்தை அவள் தெரிவிக்க

வில்லை. தெரிவிப்பது அதிக முட்டாள் தனம் என்று தோன்றிற்று. உண்மையில் அவனுடன் பேசும் போது, அவனது சிரிப் பையும் ஹாஸ்ய உணர்வையும் பார்க்கும் போது, அவன் அங்கஹீனமானவன் என் கிற எண்ணமே தோன்றுவதில்லை.

இப்பொழுது டா ன் ஸ் வகுப்புக்குச் செல்வதற்காக நந்தினியை அழைக்க, அவள் வீட்டை நோக்கி நடக்கையில் மீண்டும் ஹரியின் நினைவு வந்தது. இன்று காலை அவன் ஃபோன் செய்து, ''வீட் டுக்கு வாயேன்'' என்றான்.

''இன்னிக்கு டான்ஸ் கிளாஸ் இருக்கே'' என்றதற்கு, ''என்ன கத்துக்கறே இப்ப?'' என்றான். இவனுக்கு எப்படி விளக்குவது என் கி ற அனுமானத்துடன் ''இன்னும் அலாரிப்புதான்'' என்றாள். ''அலாரிப்பை நல்லா ஆடத் தெரிஞ்சா மத்ததெல்லாம் சுல பமா வரும். எல்லாத்துக்கும் வேண்டிய அடிப்படை ஞானம் மாதிரி'' என்றான்.

இவன் எப்படி இப்படிப்பட்ட வியாக்கி யானங்கள் கொடுக்கிறான் என்று அவளுக் குச் சிரிப்பு வந்தது.

''நீ ஒரு தாத்தா'' என்றாள்.

அ வ ன் சிரித் தா ன், ''நான்தான் சொ ன் னே னே, எனக்குப் பிறக்கும் போதே வயசா யிட்டதுன்னு.''

பிறகு மீ ண் டு ம் சிரித்தான். ''வயசா யிட்டதே த வி ர நி றை ய ஆசைகள் உண்டு. எனக்கு ஒரு நாளைக்கு அ ந் த அலாரிப்பை ஆடிக் காண்பி.''

''ஓ.கே.!'' என் றாள் அவள் உற்சாக மாக. ஆடினால் நீ எப்படிப் பார்ப்பாய் என்று கே ட் க வி ல் லை. இப் போது யோசித்துப் பார்க்கும் போ து அந்தக் கே ள் வி மனத்தில் எழவே யில்லை எ ன் ப து ஆச்சரியமாக இருந் தது. பார்க்க முடியா விட்டாலும் அ வ ன் ரசிப்பான் எ ன் று தோ ன் றி ற் று.

நீலமும் பச்சையும் மஞ்சளும் எப்படி யிருக்கும் என்று தெரியாமலேயே வான வில்லை அவன் மனக்கண்ணில் பார்ப்பது போல. ஆகாசத்துக்கும் பூமிக்கும் வித்தி யாசம் தெரியாதவன் - காதையும் மூக்கை யும் வைத்துக் கொண்டே உலகத்தை அளக் கிறான் என்று தோன்றிற்று. கண்ணை மூடிக் கொண்டு லலிதாங்கி ''தாளம் போச்சு'' ''முழங்கை இறங்குது'' என்பது போல அவனும் சொன்னால் ஆச்சரியப்படு வதற்கில்லை.

வகுப்புக்குக் கிளம்பத் தயாராகாமல் நந்தினி உட்கார்ந்திருந்தாள்.

''டான்ஸ் கிளாசுக்கு இனிமே போக வேண்டாம்ங்கறாங்க அம்மா'' என்றாள்.

''ஏன்?''

நந்தினி குரலைத் தாழ்த்திக் கொண்டு சொன்னாள்.

''வரப் போகிற பரீட்சைக்கு இப்பவே தொட்டுப் படிக்கணுமாம். நே ர த் தை வேஸ்ட் பண்ணக் கூடாதாம்.''



இதற்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல் மீரா சிரித்தாள்.

''வாரத்திலே மொத்தம் மூணு மணி நேரம்தானே?'' என்றாள் அதே கிசுகிசுத்த குரலில்.

''யார் சொல்றது அவுங்களுக்கு? சொன்னாலும் ஏத்துக்க மாட்டாங்க. அவுங்க புடிச்ச புடியை விட மாட்டாங்க.''

நந்தினி மிகுந்த வெறுப்புடன் பேசுவது போல் இருந்தது. படிப்பில் இவள் சுமார் தான். ஆனால் நாட்டியத்தில் ஆர்வம் உள்ளவள். சந்தோஷமாக ஆடுபவள். வாரத்தில் கிடைக்கும் மூன்று மணி நேர சந்தோஷத்தை நிராகரிப்பதனால் இவள் படிப்பில் அதிக கவனம் காட்டி விடப் போகிறாளா? இவள் பேசும் விதத்தைப் பார்த்தால் இருக்கும் கவனமும் போய் விடும் என்று தோன்றிற்று.

''எப்படியாவது சரிக்கட்டிப் பாரு'' என்று மெல்லச் சொன்னாள். ''பரீட்சைக் காக மீரா எந்த க்ளாஸையும் நிறுத்தல லேன்னு சொல்லு.''

''அதைச் சொன்னா நான்தான் மாட்டிக் குவேன்!'' என்று நந்தினி சிரித் தாள். ''மீரா மாதிரி நீ கிளாசிலே ஃபஸ்ட் வர்றியாம் பாங்க.''

''வகுப்புக்கு நேரமாகி விட்டது'' என்று மீரா கிளம்பிய போது தோட்டத்தில் நந்தி னியின் அம்மா ஹோஸ் பைப்பைப் பிடித்துக் கொண்டு நீர் பாய்ச்சிக் கொண் டிருந்தாள்.

''டான்ஸ் கிளாசுக்குத்தானே, நந்தினி வர மாட்டா'' என்றாள்.

''ஏன் ஆன்ட்டி? பரீட்சைக்காகவா?''

''அதுவும் ஒரு காரணம்தான்.''

வேறு என்ன காரணம் என்கிற குழப்பத் துடன் மீரா தயங்கி நிற்கையில், ''உங்க டான்ஸ் டீச்சரைப் பத்தி என்னவோ கேள் விப்பட்டேன். ஒண்ணும் பிடிக்கல்லே. எதுக்கு அந்த மாதிரி இடத்துக்கெல்லாம் அனுப்பணும்னு தோணிப் போச்சு'' என்றாள் அவள்.

மீரா அதிர்ந்து போனாள்.

''லலிதாங்கி டீச்சரைப் பத்தியா? ரொம்ப நல்லவங்களாச்சே? கொஞ்சம் ஸ்ட்ரிக்டா இருப்பாங்க; அவ்வளவுதான்.''

''ஆமாம், அவ ஸ்ட்ரிக்டும் அவளும்! சொந்த வாழ்க்கையிலே லூஸுன்னு சொல் லிக்கிறாங்க.''

அவளுடைய சொந்த வாழ்க்கை எப்படி யிருந்தால் நமக்கென்ன என்று கேட்க நினைத்துக் கேட்காமல் ''எனக்கு அதெல் லாம் தெரியாது ஆன்ட்டி'' என்று விரைந்து நடந்தாள்.

நந்தினியின் அம்மாவை இனிமேல் சந்திக்கவே கூடாது என்று கோபம் வந்தது. ஊரில் இருக்கும் பெண்களையெல்லாம் பழிப்பதைத் தவிர இவளுக்கு வேறு வேலை கிடையாது என்று தோன்றிற்று. இப்படிப்பட்ட அம்மாவுடன் எப்படி நந்தினி காலம் தள்ளுகிறாள் என்று ஆச்சரி யமாக இருந்தது.

லலிதாங்கியைக் குறை சொல்வது தெய்வ நிந்தனைக்கு ஒப்பானது. நாட்டியத் திற்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவள். அதைப் பற்றியே எப்பவும் சிந்தனை, பேச்சு, ஆராய்ச்சி என்று வாழ்பவள். அவளைப் பற்றி அவதூறு சொல்ல வேண்டுமென்றால் எத்தனை சின்னத்தனம் இருக்க வேண்டும் என்று ஆத்திரம் வந்தது. அவளிடம் அதிகமாகத் திட்டு வாங்கும் மாணவிகளின் முணு முணுப்பை அவள் கேட்டிருக்கிறாள். ''சபாஷ்னு ஒரு நாளாவது வாயிலே வருதா? காதல்லே தோல்வி கண்ட ஏமாத் தத்தை நம்ம மேலே காட்டறாங்க.''

இந்த விஷயமே அவர்களது கற்பனை யாக இருக்கலாம். ஏன் தோல்வி அடைந் தது என்று யாருக்கும் தெரியாது. கல்யா ணம் செய்து கொள்ளாமல் தனியாக இருப்பதால் இவர்களாகக் கட்டி விட்ட கதை இது என்று மீரா நினைத்துக் கொள் வாள். அன்று யாரோ ஓர் ஆண் அவள் பக்கத்தில் வண்டியில் அமர்ந்திருந்ததும், அவளுடைய பாய் ஃப்ரெண்டாக இருக்க லாம் என்று, தான் வேடிக்கைக்குச் சொன் னதும் இப்பொழுது நினைவுக்கு வந்தது.

''சொந்த வாழ்க்கையிலே லூஸ்னு சொல்லிக்கிறாங்க.'' இது ரொம்பவும் விஷமத்தனமான, மோசமான பேச்சு என்று மீராவுக்கு மறுபடி கோபம் வந்தது. டீச்ச ருக்கு ஒரு சினேகிதர் இருந்தால் இவளுக்கு என்ன வந்தது? நந்தினியை எப்படி அது பாதிக்கும்? பாதிக்கும் என்று நினைப்பதே கேவலம் என்று யோசித்தபடி டான்ஸ் வகுப்புக்குள் நுழைந்த போது, லலிதாங்கி கட்டையைத் தட்டத் துவங்கியிருந்தாள். அவளருகில் அன்று வண்டியில் உட்கார்ந் திருந்த தலைநரைத்த ஆண் புன்னகையுடன் அமர்ந்து இருந்தார். மீரா லலிதாங்கியின் முன் மண்டியிட்டு வணங்கி, மற்ற மாணவி களுடன் சேர்ந்து கொண்டாள்.

லலிதாங்கியின் முகத்தில் இன்று ஆச்ச ரியகரமான மாறுதல் தெரிந்தது. இன்றும் கை ஆவேசமாகத் தட்டிற்று. ஆனால் அதில் ஓர் உற்சாகம் துள்ளுவதாகத் தோன்றிற்று. சொல் கட்டில் வழக்கமாகத் தென்படும் எரிச்சலும் பொறுமையின்மை யும் இன்று இல்லை. நிறைவோ, சந்தோஷமோ தொனித்தது. அவளுடைய

சந்தோஷம் மாணவிகளையும் தொற்றிக் கொண்டது போல், கிட்டத்தட்ட எந்தத் தப்பும் செய்யாமல் பயிற்சி நடந்தது.

''என்ன, இன்னிக்கு, என் கண்ணே பட்டுடும் போலேயிருக்கே?'' என்று லலிதாங்கி மாணவிகளைப் பார்த்துச் சொல்லி விட்டு நண்பர் பக்கம் திரும்பி ஒய்யாரமாகச் சிரித்தாள்.

பயிற்சி தொடர்ந்த போது லலிதாங்கி இடையிடையே அவரைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரிப்பதும் பதிலுக்கு அவர் தலையசைப்பதும் ஒரு மௌன சம்பாஷணை போல் இருந்தது. டீச்சர் இன்று நிச்சயம் புதிய பிறவி எடுத்திருந்தாள் என்பதில் மீராவுக்குச் சந்தேகம் இல்லை. உள்ளுக்குள் இருந்து வெளிப்பட்ட பிரகாசம் போல் இருந்தது. அவளை சந்தோஷப்படுத்திற்று. லலிதாங்கிக்கு இந்த மனிதரிடம் நிறைய அன்பிருக்க வேண்டும், இப்படிப்பட்ட ரசாயன மாறுதல் ஏற்படுவதற்கு. அமெரிக்க விவேகத்துடன் மீரா தனக்குள் சொல்லிக் கொண்டாள். ''ஷி இஸ் இன் லவ்.''

'சீச்சீ, இந்த வயசிலா!' என்று அன்று நந்தினி முகத்தைச் சுளித்தது நினைவுக்கு வந்தது. நந்தினியின் பேச்சுக்கு அவள் அம்மாதான் காரணம் என்று தோன்றிற்று. பத்து வருஷங்கள் கழித்து நந்தினி அவள் அம்மாவைப் போலவே மற்ற பெண்களைப் பற்றிச் சரடு திரிக்கப் போகிறாள் என்கிற கற்பனையே பயங்கரமாக இருந்தது.

பயிற்சி முடிந்து எல்லாரும் கிளம்பத் தயாராகும் போது மாணவிகள் சதங்கையைக் கழற்றும் சாக்கில் குனிந்தபடி தங்களுக்குள் குசுகுசுத்துச் சிரிப்பது மீராவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. இன்று நந்தினிக்காகக் காத்திருக்க வேண்டியிராததால் ஷூ அணிந்தவுடன் வேகமாக வெளியேறி நடந்தாள்.

''மீரா!''

லலிதாங்கியின் குரல் கேட்டு அவள் திரும்பினாள். லலிதாங்கி தன்னுடைய நண்பருடன் நின்றிருந்தாள். மீராவைப் பார்த்து அவர், ''ஹலோ!'' என்றார். ''நியூயார்க்லே இருந்த ஸ்ரீனிவாசனுடைய பெண்ணா நீ?''

''ஆமாம்'' என்றாள் மீரா வியப்புடன்.

''என் பெயர் நாகராஜன். வாஷிங்டனில் இருக்கிறேன். உங்கப்பாவை நன்றாகத் தெரியும். எப்படியிருக்கான் ஸ்ரீனி? இந்தியாவில் சந்தோஷமாக இருக்கிறான் என்று நினைக்கிறேன்'' என்றார் அமெரிக்க ஆங்கிலத்தில்.



"எந்த ஊர் போனாலும் எது சீப்பாக் கிடைக்குதோ, அதை வாங்கிக்கிட்டு வந்துடுவேன்!"

"வேதாரண்யம் போனீங்க போலிருக்கே...!"

"ஊம்... இந்த ஏ. கே. 47 எல்லாம் அங்க வாங்கினதுதான்!"

- வேதபுரி எஸ். ரமேஷ்

''ஓ ஷ்யூர்!'' என்றாள் அவள் தனது வழக்கமான உற்சாகத்துடன். ''வீட்டுக்கு வந்து பாருங்க. ஆளே மாறிப் போயிட்டார். வீட்டிலே இருக்கும் போது விபூதியும் பூஜையுமா அமர்க்களப்படுத்தறார். அமெரிக்காவை மறந்துட்டார்னு நினைக்கிறேன்.''

புன்னகையுடன் கேட்ட நாகராஜன் லலிதாங்கியைப் பார்த்தார். அந்தப் பார்வையில் ஏதோ சங்கேதம் இருந்தது போல் இருந்தது.

''அப்படியா?'' என்றார் மீராவிடம். ''நீ மறந்துட்டியா?''

''இல்லே, என்னாலே மறக்க முடியல்லே'' என்று அவள் சிரித்தாள். ''எதுக்கு மறக்கணும்? அப்பா கூட மறக்க முயற்சி பண்ற மாதிரிதான் இருக்கு.''

நடராஜன் மீண்டும் லலிதாங்கியைப் பார்த்து சங்கேதமாகச் சிரித்தார். அருகில் வந்து மீராவின் தோளை அணைத்து, ''சுலபமா மறக்க முடியாதுதான்'' என்றார். ''உங்கப்பாவை விட உனக்கு அதிக கஷ்டமா இருக்கும். ஆனா போகப் போக அட்ஜெஸ்ட் ஆயிடும். உனக்காகத்தான் ஸ்ரீனி இந்தியாவுக்கு வந்தான்.''

ரொம்ப நிச்சயமாக அவர் அப்படிச் சொல்வது திகைப்பை ஏற்படுத்திற்று. எதிர்பாராத திக்கிலிருந்து தாக்கப்பட்டது போல். தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''எனக்கு அதைப் பத்தித் தெரியாது. நீங்க வீட்டுக்கு வாங்க'' என்று சொல்லி விட்டு நடக்கும் போது, குருட்டு நிலை என்பது இப்படித்தான் இருக்கும் என்று தோன்றிற்று.

(தொடரும்)



மனிதாபிமானம் மறக்காத போலீஸ் அதிகாரி
படம்: கோபலி
உண்மைக்கதை: ஜலி
அண்மையில் காலம் சென்ற துரை, சென்னை போலீஸ் கமிஷனராக இருந்தபோது...
உங்களை அண்ணனா நினைச்சு வந்தேன். காப்பாத்துங்க!
என்னம்மா, சொல்லு!
என் புருஷன் என்னை விட்டுப் போய் ரொம்பக் காலமாச்சு, இப்ப என் மகளையும் காணலை...
என்ன வயசு? யார் மேல சந்தேகம்?
இருபது வயசு... வீட்டாண்ட இருக்கிற ஒரு ஆட்டோ டிரைவரோட ஓடிப் போயிருக்கிறதா நினைக்கிறேன்..
துரை அவளை அனுப்பிவிட்டு...
இன்ஸ்பெக்டர், இன்னும் இரண்டு நாளில் அந்த ரெண்டு பேரையும் கண்டு பிடிச்சாகணும்.
எஸ், ஸார்!
மறுநாளே செங்கல்பட்டில் பிடிபட்டு, சென்னைக்கு அழைத்துவரப் பட்டனர்... இருவரிடமும் தனித்தனியே பேசினார் துரை.


பெண்ணின் தாய் அழைத்து வரப்பட்டாள்.
கண்ணே, வந்து சேர்ந்தியா... பாவி, அவன் நல்லா இருப்பானா?
இதை பாரும்மா, போலீஸ் அதிகாரிங்கற முறையிலே என் கடமை முடிஞ்சது... ஆனா என்னை அண்ணன்னு அழைச்சுக்கிட்டு ஆரம்பத்திலே வந்தீங்க; அதனாலே சொல்றேன்...
உங்க பொண்ணை பலவந்தப்படுத்தப் படலை! விரும்பித்தான் இவனோட போயிருக்கா. அவ மேஜர் பொண்ணு வேற. ரெண்டு பேரிடமும் தனித் தனியே பேசினேன். காதலிக்கிறாங்க!
ஐயோ! அப்ப என் கதி? நான் அனாதை ஆயிட்டேனே!
இல்லே! உங்களை வைச்சுக் காப்பாத்தத் தயார்னு இவன் சொல்றான். வேறு மதம்கிறதை மறந்துடுங்க!
மறுநாள்...
ஓடிப்போன உங்க மகளுக்கு மறுபடி கல்யாணம் ஆகுமா? சுற்று வட்டாரத்தில் பேச மாட்டாங்களா?
யோசிச்சு நாளைக்குச் சொல்றோங்க!
நல்ல முடிவுக்கு வந்துட்டீங்க போல...
ஆமாங்க, ரிஜிஸ்தர் திருமணம். ஊரைக் கூட்டி ஒரு விருந்து... நீங்களும் வரணும்.
கண்டிப்பா வரேன்!


ராஜ்கபூரின் கோரிக்கை

தமக்கு உடம்பு சரியில்லை என்று கூறி எங்கள் ஷூட்டிங்கை ஒத்திப் போடச் செய்த சரோஜாதேவி அன்றைய தினம் ஓய்வாகப் படுத்திருக்கவில்லை. தேவர் ஃபிலிம்ஸ் படப்பிடிப்பில் கலந்து கொண்டு நடித்தார்! அங்கே கால்ஷீட் கொடுப்பதற்காகத்தான் இங்கே எங்களிடம் உண்மைக்குப் புறம்பாகப் பேசியிருக்கிறார் என்பது தெரியவந்த போது, எனக்குக் கோபம் வந்தது.

''எங்களுக்குக் கொடுத்த தேதியில் இன்னொருவருக்கு நடித்துக் கொடுத்தது தவறு; உண்மைக் காரணத்தைச் சொல்லாமல் ஏமாற்றப் பார்த்தது அதை விடப் பெரிய தவறு. இதனால்தான் ஹிந்தி கல்யாணப் பரிசில் உங்களை ஹீரோயின் ஆக நான் போடப் போவதில்லை'' என்றேன்.

சரோஜாதேவிக்கு அதிர்ச்சி. அருமையான வாய்ப்பு கைநழுவிப் போனதில் வருத்தம்.

சரோஜாதேவிக்குப் பதில் வைஜயந்தி மாலாவை 'புக்' பண்ணினோம். ஹீரோ ராஜ்கபூர் என்று முன்னமேயே சொன்னேன். அவரை நிச்சயம் பண்ணு முன்னர் பல பெயர்கள் அடிபட்டன என்றும் கூறினேன். அந்தப் பெயர்களில் ஒன்று ராஜேந்திர குமார். அப்போது அவர் பிரபலமாகி வந்த நேரம். எங்கள் யூனிட்டில் சிலர் அவர் பெயரை பலமாகச் சிபாரிசு செய்ய, அவர் நடித்த படம் ஒன்றைப் பார்த்து விட்டு வந்தேன். அவர் நடிப்பில் திலீப் குமார் சாயல் ரொம்ப இருப்பதாக எனக்குப் பட்டது. அதனால் வேண்டாம் என்று ஒதுக்கினேன். (பின்னால் இதே ராஜேந்திரகுமாரை வைத்து நான் வேறு ஒரு இந்திப் படம் எடுத்தேன் என்பது வேறு விஷயம்!) இதன் பிறகுதான் ராஜ்கபூர் 'புக்' ஆனார். வைஜயந்தியும், ராஜ்கபூரும் நடித்து வெற்றிகரமாக ஓடிய கல்யாணப் பரிசின் ஹிந்தி வடிவத்துக்கு டைட்டில் : ''நஸ்ரானா''. அதன் சூப்பர் சக்ஸஸ் எனக்கு ஃபிலிம் ஃபேர் அவார்டையும் பெற்றுத் தந்தது.



சரோஜாதேவி ''நஸ்ரானா''வில் நடிக்கவில்லையே தவிர, அவருக்கு ஹிந்தி பட வாய்ப்புக் கிட்டாமல் போய் விடவில்லை. சீக்கிரமே டைரக்டர் பிரசாத் எடுத்த ''சசுராவ்'' என்ற படத்தின் மூலம் ஹிந்தியில் அறிமுகமானார்.

அதன்பின் என்னைப் பார்க்கும் போதெல்லாம், ''நீங்க ''நஸ்ரானா''வில் எனக்கு சான்ஸ் கொடுக்காட்டி என்ன? எப்படியோ ஹிந்தி சினிமாவுக்கு நானும் வந்துட்டேன் பார்த்தீங்களா?'' என்பார்.

நானும், ''ரொம்ப சந்தோஷம். நீங்க இந்த ஃபீல்டுக்கும் வரணும்கிறதுதான் என் ஆசையும். அது உங்களுக்கே தெரியும். ஆனா என் மூலமா வர முடியாதபடிக்குச் சில காரியங்கள் நடந்து விட்டன. அவை என்ன என்பதும் உங்களுக்கே தெரியும்'' என்பேன்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், எங்களிடையே மன வேற்றுமை ஏற்பட்

டைரக்டர் ஸ்ரீதர்



காதலெனும் வானவில்

பகபகவென்று உணர்வலைகள் பொங்கிப் பொங்கி எழுந்தன. நல்ல வசதியான வாழ்க்கையை உதறிவிட்டு இந்தியாவுக்குத் திரும்ப உத்தேசித்ததற்கு அவள்தான் காரணம் என்பது படு அபத்தமாகத் தோன்றிற்று. இந்தியாவை மறக்க முடியாததால் அப்பா திரும்பி வந்திருக்கலாம். அவளுக்கும் அதற்கும் என்ன சம்பந்தமிருக்க முடியும்?

நாகராஜன் தெரியாமல் பேசுகிறார் என்று மீரா நினைத்துக் கொண்டாள். அவளுக்கும் மஹேஷுக்கும் எந்தப் பிரச்னையும் இருந்ததில்லை. அமெரிக்க குழந்தைகளுக்கும் தங்களுக்கும் இடையே எந்த வித்தியாசத்தையும் உணர்ந்ததில்லை. படிப்பில் மோசமில்லை-நிறைய சினேகிதர்கள். நல்ல சினேகிதர்கள். எரிக் பேக்கரைப் போல ஒரு நண்பன் எங்கே கிடைப்பான்? வாரா வாரம் இப்பவும் கடிதம் எழுதுகிறான் - 'உன்னை ரொம்ப மிஸ் பண்ணுகிறேன் எப்பொழுது அமெரிக்கா வருவாய்' என்று அவன் கடிதத்தைப் படிக்கும் போதெல்லாம் கண்ணில் நீர் தளும்புகிறது; அமெரிக்காவுக்குக் கிளம்பிப் போய் விட வேண்டும் போல் இருக்கிறது. மேல் படிப்பு படிக்க அங்குதான் செல்ல வேண்டும் என்று உறுதி ஏற்படுகிறது. நாகராஜன் சொன்னதில் ஏதேனும் உண்மை இருக்குமானால் அமெரிக்காவுக்குச் சென்று படிக்க அப்பாவின் சம்மதம் கிடைக்காது. இங்கு திரும்பியதும் அப்பாவும் ஒன்றும் சுலபமாக இந்திய வாழ்வுடன் ஒன்றிவிடவில்லை. தன்னை ஒரு இந்தியன் என்று அடையாளம் காட்டிக் கொள்ளச் சற்று அதிகமாகவே சிரமப்படுகிறார் என்று அவள் பரிதாபப்பட்டதுண்டு.

வாஸந்தி 7



"திரௌபதி மானபங்கத்தைப் பற்றி இன்று நடக்கப் போற காலட்சேபத்திற்கு லேடீஸ் கூட்டம் நிறைய வரும்னு எப்படி சொல்றே?"

"காலட்சேபத்தை ஸ்பான்சர் செய்யப் போறது கிமல் சில்க்ஸாம். துகிலுரியும் கட்டத்தின் போது பாகவதர் ஒவ்வொரு புடைவையின் கலர், டிசைன், தரத்தை விஸ்தாரமாக வர்ணிக்கப் போகிறாராம்!"

- ஜம்புநாத்

வீட்டை அடைந்தபோது அப்பா ஆபீஸிலிருந்து வந்து விட்டிருந்தார். வேஷ்டி அணிந்து ஹிந்துவில் தன்னை மறைத்துக் கொண்டிருந்தார். டேப்பில் கே.வி. நாராயணஸ்வாமி கரஹரப்பிரியாவில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்.

''ஹாய் டாட்!''

ஹிந்துவைக் கீழே இறக்கி, ''வாம்மா'' என்றார் ஸ்ரீனிவாசன் புன்னகையுடன். ''டான்ஸ் க்ளாஸ் போயிருந்தியா?''

''என்ன சீக்கிரம் வந்துட்டியே?'' என்ற அம்மாவைப் பார்த்து ''ஆமாம், நந்தினி வராததாலே சீக்கிரம் கிளம்பிட்டேன்,'' என்றாள். நந்தினியைப் பற்றி அறிந்திருந்த அம்மா சிரித்து, அப்பாவைப் பார்த்து ''அந்தப் பெண் பாவம் ரொம்ப நிதானம்'' என்று விட்டு ''நீ பாலைக் குடி'' என்றாள் மீராவிடம்.

சமையலறைக்குச் சென்று டம்ப்ளரில் பாலை எடுத்துக் கொள்ளும்போது, கூடத்திலிருந்து ''நந்தினி ஏன் வரல்லே?'' என்றாள் அம்மா.

மீரா பால் டம்ப்ளருடன் கூடத்துக்கு வந்து அவர்கள் எதிரில் அமர்ந்து கொண்டாள். ''அதைப் பத்தி அப்புறம் சொல்றேன். அப்பா, வாஷிங்டன்லே நாகராஜன்னு ஒருத்தரை உங்களுக்குத் தெரியுமா?'' என்றாள்.

''ஆமாம். எதுக்குக் கேக்கறே?''

''இன்னிக்கு அவரைப் பார்த்தேன் லலிதாங்கியோட. 'சீனிவாசனுடைய பெண்ணா, எனக்கு ஸ்ரீனியை நல்லாத் தெரியும்'னார்.''

''இந்தியாவுக்கு வந்திருக்கானா?'' என்று அப்பா புன்னகை செய்தார். ''லலிதாங்கியை அவனுக்குத் தெரியுமா?''

''லலிதாங்கியுடைய பாய்ஃப்ரெண்ட் அவர்.''

''உளறாதேடி மீரா'' என்றாள் அம்மா. பிறகு அப்பாவைப் பார்த்துப் புகார் சொல்லும் விதத்தில் ''இவளுக்கு இதேதான் வேலை'' என்றாள். ''பேச்சிலே விவஸ்தையே இல்லாம போச்சு. முருகேசன் இவளுக்கு பாய்ஃப்ரெண்ட். பொன்னுச்சாமி எனக்கு பாய்ஃப்ரெண்ட், அன்னிக்கு அந்த மீனாட்சியுடைய அம்மா வந்திருக்கா, அவளுக்கும் -''

அதற்குள் மீராவுடன் சேர்ந்து கொண்டு அப்பாவும் பெரிதாகச் சிரித்தார். மீரா சிரித்துக் கொண்டே சொன்னாள்:

''ஏன் இருக்கக்கூடாதா? ஆனா அதெல்லாம் தமாஷுக்குச் சொன்னது. இந்த நாகராஜன் லலிதாங்கிக்கு பாய் ஃப்ரெண்ட் என்கிறது நிஜம்.''

''எப்படித் தெரியும்? அவ உங்கிட்டச் சொன்னாளா?'' என்றாள் அம்மா பரிகாசமாக.

''அதெல்லாம் சொல்லணுமா என்ன? அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கற பார்வையிலேயே தெரியறது, லவ் பண்றது. லலிதாங்கியை இவ்வளவு சந்தோஷமா நான் பார்த்ததேயில்லே. இன்னிக்கு யாருமே திட்டு வாங்கல் லேன்னா பார்த்துக்கோ!''

அப்பா யோசனையுடன் பார்க்க, அம்மா சிரித்தாள்.

''லலிதாங்கிக்கு நாற்பது வயசு இருக்காது?''

''ஏம்மா, நாற்பது வயசுக்கு முந்திதான் காதலிக்கணுமா?''

அம்மா அவளுக்குப் பதில் சொல்லாமல் சீனிவாசனிடம் மெல்லிய குரலில் கேட்டாள். ''அந்த நாகராஜனுடைய வைஃப் செத்துப் போயிட்டா இல்லே?''

ஆமாம் என்பதுபோல் அப்பா தலையை அசைத்தார். ''இந்த லலிதாங்கி எப்படி ஃப்ரெண்டானா?'' என்று சிரித்தார். ''அவனுக்கு டான்ஸ், பாட்டு இதிலெல்லாம் இன்ட்ரெஸ்ட் உண்டுன்னு எனக்குத் தெரியாது. அவனை நம்ப வீட்டுக்கு வரச் சொன்னியா?''

''சொன்னேன், ரொம்ப அபத்தமா அவர் பேசினாலும்.''

அப்பா சினேகிதமாகச் சிரித்தார். ''என்ன சொன்னான்?''

''ஸ்ரீனி இந்தியாவிலே சந்தோஷமா இருக்கானா? உனக்காகத்தான் அமெரிக்காவை விட்டுக் கிளம்பினான்னு சொன்னார்.''

திரை விழுந்தது போல் அம்மாவும் அப்பாவும் மௌனமானது வினோதமாக இருந்தது. கையிலிருந்த பால் டம்ப்ளரைச் சமையலறை 'ஸிங்கில்' போட்டுவிட்டு மீண்டும் அவர்கள் எதிரில் அமர்ந்து சிரிக்காமல் நேரிடையாகக் கேட்டாள்.

''ஏம்பா அவர் சொன்னது நிஜமா?''

கார்பெட்டைத் தீவிரமாகப் பார்த்துக்

கொண்டிருந்த ஸ்ரீனிவாசன் நிமிர்ந்து ''இன்னும் வேற என்ன சொன்னான்?'' என்றார்.

''வேற ஒண்ணும் சொல்லலலே. அவர் சொன்ன காரணம் சரியா?''

''எஸ் அண்ட் நோ!'' என்றார் அப்பா பலவீனமான புன்னகையுடன்.

''அப்படின்னா? இந்தியாவுக்காக நீங்க ஏங்கிப் போனதனாலேதான் வந்தோம்னு நா நினைச்சேன்.....''

''அதுவும் உண்மைதான்'' என்றார் அவர் சங்கடத்துடன். ''இந்தியாதான் நமக்குப் பாதுகாப்பானதுன்னு எனக்கு அங்கே தோணிப் போச்சு.''

''எனக்குப் புரியல்லே, நீங்க பேசறது'' என்று அவள் முணுமுணுத்தாள்.

அம்மா பேசாமல் ஒரு பார்வையாளர் போல் அமர்ந்திருந்தாள்.

''உனக்குப் புரியறது கஷ்டம்'' என்றார் அப்பா சோகமாக. ''நீ அங்கேயே பிறந்து வளர்ந்தவள் - மனசளவிலே இப்பவும் அமெரிக்கன். அமெரிக்காவிலே இருக்கிற வாழ்க்கை முறையைப் பத்தி உனக்கு ஒரு குழப்பமும் இருக்காது. நான்தான் குழம்பிப் போனேன். பயந்தேன், நான் பயந்தது தப்பா சரியான்னு புரியல்லே, இங்கே கிளம்பி வந்தது முட்டாள்தனம்னு இங்க வந்த புதுசிலே ரொம்பத் தவிச்சேன். இப்பக் குழப்பமில்லே, தவிப்பில்லே.''

அவர் இத்தனை உணர்ச்சி வசப்பட்டுப் பேசி அவள் பார்த்ததில்லை. மனத்தளவில் இவர் உண்மையிலேயே ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும் என்ற உணர்வு அவளை ஆச்சரியப்படுத்திற்று.

''இப்பவும் எனக்குப் புரியல்லே அமெரிக்காவைவிட்டு நாம ஏன் வந்தோம்னு.''

அப்பா கையிலிருந்த ஹிந்துவைப் பார்த்தபடி ஒவ்வொரு வார்த்தையையும் அளந்து பேசுவது போல் பேசினார்.

''அந்தக் கலாசாரத்தைக் கண்டு பயந்து போனேன். அதுதான் காரணம்.''

நாகராஜனின் பேச்சை விட இது அபத்தமாகத் தோன்றிற்று. ''நாகராஜன் நான்தான் காரணம்னு சொன்னார்.''

''ஒரு விதத்திலே அவன் சொன்னது சரிதான். உனக்காகத்தான் கிளம்ப முடிவு செஞ்சேன். உனக்கு வயசு ஏற ஏற அந்தக் கலாசாரத்திலேந்து உன்னைக் காப்பாத்தணும்னு தோணிப்போச்சு.''


அவள் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தாள். இப்படிப்பட்ட எண்ணங்கள் இவருக்கு இருக்கும் என்று அவள் நினைத்ததில்லை. காட்! இவருக்கும் நந்தினியின் அம்மாவுக்கும் வித்தியாசமில்லை!

அவளுக்குக் குபீரென்று அடிவயிற்றிலிருந்து துக்கமும் கோபமும் சுருண்டு எழுந்தன. ஒரே விநாடியில் அவளுடைய நம்பிக்கையைத் தகர்த்ததுபோல் இருந்தது. அவள் விருட்டென்று எழுந்தாள். சுபாவமான அவசரத்துடன், ''உங்க பயமும் முடிவும் சுயநலமானது. நியாயமில்லாதது. நீங்க வளர்ந்ததுக்கும் எனக்கும் சம்பந்தமில்லே. என்னுடைய வாழ்க்கையைப் பற்றி நீங்க தீர்மானிக்க முடியாது. இந்தப் ப்ளஸ்டூ பரீட்சை முடிஞ்சதும் நான் அமெரிக்கா போயிடுவேன். நீங்க என்னைத் தடுக்க முடியாது!''

''நில்லு மீரா, நா சொல்றதை நிதானமாக் கேளு!''

அவள் நாலே எட்டில் மாடிப் படிகளைக் கடந்து தன் அறைக்குச் சென்று கதவைப் படீரென்று சாத்தி கட்டிலில் குப்புறப் படுத்தாள். அழுகை வெடித்தது. பிரவாகமாய்க் கண்ணீர்ப் பெருகிற்று. மிக மோசமாக ஏமாற்றப்பட்டது போல் தோன்றிற்று.

மெல்ல மெல்ல அழுகையும் கோபமும் குறைந்ததும் அவள் தீவிரமான யோசனையில் ஆழ்ந்தாள். 'வயது ஏற ஏற பயம் தோண ஆரம்பிச்சது.' எதைக்கண்டு பயம்? அவள் டேட்டிங் போக ஆரம்பிப்பாள் என்றா? எரிக் பேக்கரைக் கண்டு பயமா? அமெரிக்கப் பையன்களுடன் டேட்டிங்



- ஜம்புநாத்



''சீசன்லே வித்துவான்கள் நடத்தப் போற பட்டி மன்றத்தை ஒரு சபாவில் ஏற்பாடு செய்யப் போறாங்கன்னு சொன்னியே தலைப்பு என்ன?''

''வித்துவான்களுக்கு அதிகம் எரிச்சல் ஊட்டுவது சபையோரின் பேச்சா அல்லது குறட்டையா?''

- ஜம்புநாத்

செல்ல நிறைய இந்திய அப்பா அம்மாக்கள் சம்மதிப்பதில்லை என்று அவளுக்குத் தெரியும். அதற்காகக் குடி பெயர்ந்து இங்கு வருவது எத்தனை அபத்தம்! தன் மேல் அப்பாவுக்கு நம்பிக் கையில்லை என்ற நினைப்பு அவளைத் துக்கப் படுத்திற்று. இதற்காகவே நான் அமெரிக்காவுக்குத் திரும்பிப் போவேன் என்று வீம்பு எழுந்தது. அவள் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு ஹோம்வர்க் செய்து முடிக்கவும், பாடங்களைப் படிக்க வும் அமர்ந்தாள். இரவுச் சாப்பாட்டுக்காக அம்மாவும் அப்பாவும் பல முறை கூப்பிட் டும் சாப்பிடப் போகாமல் கதவைத் தாளிட்டுக் கொண்டு படுத்தாள்.

தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத் திருக்கையில் மகாபாரதப் பாத்திரங்கள் போல் இதுவரை அவள் இங்கு சந்தித் திருப்பவர்கள் எல்லாரும் நினைவுக்கு வந்தார்கள். இந்தச் சூழல் எந்த வகையில் பாதுகாப்பானது என்று அவளுக்குப் புரிய வில்லை. கல்யாணமாகாதவளையும் ஏசுகி றார்கள். விவாகரத்தானவளையும் ஏசுகி றார்கள், வம்பு பேசும் பெரியவர்களின் கண்ணில் மண்ணைத் தூவும் இளைஞர்கள் - பொய்கள், ஏமாற்றல்கள் - வர்க்க வித்தி யாசங்கள், ஜாதிவித்தியாசங்கள். முரு கேசனை ஒரு நாள் சோபாவில் உட்கார்த் திப் பேசினதற்கு அம்மா குய்யோ முறையோ என்று கத்தினாள். திடீரென்று அத்தைப் பாட்டி தாத்தாவின் நினைவு வந்தது. சூர்ய வெளிச்சம் போல் இருப்ப வர்கள் கூட மகன் காதலித்த பெண்ணை வேறு ஜாதி என்பதால் ஏற்கவில்லை. எத்தனைக் கருணையற்ற சமூகம் இது - இது எப்படிப் பாதுகாப்பான இடம்? இன்றைய மனநிலையில் எல்லாம் வெறுத்தது. அரை குறையாக வந்த தூக்கத்தில் கனவுகள் சிதறல்களாக வந்தன. காதல் செய்ய அனு மதிக்காத இடம் அது; இங்கே வந்து விடு என்றான் எரிக். காதல் என்பதும் வெறுப்பு என்பதும் ஒரே மனத்தின் பாவனைகள் என்றான் ஹரி. சொர்க்கம் என்பதும் நரகம் என்பதும் மனத்தின் பாவனைகள் என்பது போல......

கதவை யாரோ விடாமல் தட்டியதில் அவளுக்கு விழிப்பு ஏற்பட்டது. வெயில் நீளமாக அறையில் நுழைந்திருந்தது. தூக் கம் கலையாமலேயே கதவைத் திறந்த போது அப்பா நின்றிருப்பதைப் பார்த்ததும் முந்தைய மாலையின் ஞாபகம் வந்தது.

''குட்மார்னிங் கண்ணம்மா!'' என்றபடி அவள் பதிலை எதிர்பார்க்காமல் அவர் உள்ளே நுழைந்தார். ''நேத்து நான் உன்னை 'அப்செட்' பண்ணிட்டேன், ஸாரி.'' என் றார். ''எனக்கு என் நிலையைச் சரியா விளக்கத் தெரியல்லே. அதுதான் பிரச்னை. என்னிக்காவது என்னை நீ புரிஞ்சுப்பே.....''

''அப்பா ப்ளீஸ், அதைப்பத்திப் பேச வேண்டாம்.''

அவர் அவளை ஆற்றாமையுடன் பார்த் தார். ''இன்னிக்குப் பேச வேண்டாம்னா சரி, பேசல்லே. ஆனா இப்படி சாப்பிடாம உடம்பைக் கெடுத்துக்காதே.''

அவள் பதில் சொல்லாமல் பாத்ரூமுக் குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண் டாள். அப்பா இப்படி வந்து மன்னிப்புக் கேட்டது மனசுக்கு மெல்லிய சமாதா னத்தைக் கொடுத்தது. ஆனால் இன்று எந்த சொற்பொழிவையும் கேட்கும் மனநிலை யில் அவள் இல்லை.

இன்று ஞாயிற்றுக்கிழமை. வீட்டிலிருப் பதைவிட வெளியில் செல்வது மேல் என்று தோன்றியவுடன், பல்தேய்த்து உடனே குளித்துத் தயாராகி கீழே வந்தாள். அப்பா பூஜை அறையில் இருந்தார். சாப்பாட்டு மேஜை மேல் இருந்த இட்டிலி சட்டினியை எடுத்துச் சாப்பிட்டு, சமையலில் ஈடுபட் டிருந்த அம்மாவிடம் ''நா ஹரியைப் பார்க்கப் போறேன்'' என்றுவிட்டு வெளி யேறினாள். மனசு திடீரென்று எதிலும் ஒட்டாமல் மோனத்தில் ஆழ்ந்து விட்ட தாகத் தோன்றிற்று.

ஆழ்வார்பேட்டையில் ஹரியின் வீட்டை அடைந்தபோது அவன் அன்று மாதிரியே வராந்தாவில் அமர்ந்திருந்தான். அருகில் சென்றதும் ''மீராவா?'' என்றான்.

''எப்படித் தெரிஞ்சுது?'' என்றாள் அவள் வியப்புடன்.

''உன் வாசனை'' என்று அவன் சிரித் தான். ''உன் அமெரிக்க வாசனை.''

(தொடரும்)

வைதேகி வந்தாச்சு

...ரு வகையில் இயக்குனர் ராதா...தி பெறுவது பாராட்டு, தம்முடைய ஒவ்வொரு படத்திலும் ஒரு புதிய கதாநாயகனை அறிமுகப்படுத்துவதன் மூலம்.

ஆனால் -

இந்தப் படத்தைப் பொறுத்தவரையில் பாராட்டு அத்தோடு நின்று விடுகிறது.

புது நடிகர் சரவணன். பொறுப்பைச் சுமப்பதற்கேற்ற வலுவான தோள்கள் இ ரு ந் து ம், பாத்திரப் படைப்பு அவரைக் கைவிட்டு விடுகிறது. இத்தகைய சப்பாணிப் பாத்திரத்தை ஏற்கெனவே வெளுத்துக் கட்டியிருப்பவர் கமல். கதாசிரியரின் பலவீனம் சரவணனின் முயற்சிகளை ஆக்கியிருப்பது - விழலுக்கிறைத்த நீர்.

கதாநாயகி அர்ச்சனா. குணசித்திர நடிப்புக்காக இருமுறை தேசிய விருது பெற்றவர். பொருத்தமில்லாத ஒரு 'கமர்ஷியல்' பாத்திரத்தை ஏற்கப் போய், அதனால் ஏற்படுவது ஏமாற்றம். அதுவும் உச்சகட்டக் காட்சியில் பாடிக் கொண்டே அவர் மருத்துவமனைக்குள் நுழைய முயற்சிப்பதும், போலீசார் அவரைப் பிடித்து வெளியே தள்ளுவதும், கொட்டும் மழையில் அவர் தெருவில் போய் விழுவதும், திரும்ப எழுந்து பாடிக் கொண்டே உள்ளே நுழைய முயற்சிப்பதும், இதுவே தொடர்ந்து இடம்பெற்று பாடல் முடிவதற்குள் ஏற்பட்டு விடுவது அலுப்பு.



நம்ப முடியாத நிகழ்ச்சிகள் படம் முழுவதும்.

என்றாலும், ரசிக்கும்படியான ஒரு கட்டம் - கல்யாணம் என்றால் என்னவென்றே தெரியாத சரவணன் அர்ச்சனாவை மணந்தபின், அந்தத் திருமண உறவை நிறைவு செய்யும் வழிவகைகளை ஒவ்வொன்றாக சன்முகசுந்தரி அவருக்கு எடுத்துச் சொல்ல, அதை அவர் வெகுளித்தனத்தோடு கேட்டுக் கொள்ளும் இடத்தில் கையாளப்பட்டிருப்பது நாசுக்கு மட்டுமல்ல. மெலிதான நகைச்சுவையும் கூட.

படத்தின் பிரதான அம்சம் இசை. பத்து பாடல்கள். சற்று அதிகம் என்றாலும் இசையமைப்பின் நேர்த்தி ஈடு கட்டி விடுகிறது.

'சாமஜவர' பாடலுக்கு, கனவுக் காட்சியாக, ஒரு சாஸ்திரிய நாட்டியம். ஒரு கோயிலின் பிராகாரத்தில். அந்த உடையை அ ணி வி த் து விடுவதாலேயே அது பரதநாட்டியம் ஆகி விடுமா?

செந்திலின் பாத்திரப் படைப்பும் சரி, அதற்குத் தந்துள்ள முடிவும் சரி... கேலிக்கூத்து!

- சி. ஆர். கே.

8



இலேசான பிரமிப்புடன் நடந்து அவனருகில் இருந்த பிரம்பு நாற்காலியில், அவள் அமர்ந்தாள். பளிங்கு போல் இருந்த அந்த 'நெற்றிக்குப் பின்னால்' எங்கோ இவனுக்கு ஒரு சூட்சுமப் பார்வை இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. காரணம் புரியாத நெகிழ்ச்சியை அவளுள் ஏற்படுத்தியது.

''அப்படியொரு வாசனை எனக்கிருக்கிறதா இதுவரை யாரும் சொன்னதில்லே,'' என்று சிரித்தாள்.

''எனக்கு வித்தியாசமாத் தெரியுது'' என்றான் அவன் சாதாரணமாக. ''செர்ரி ப்ளாஸம் வாசனை. அமெரிக்க ஷாம்பூவிலேதான் இத்தனை நேரம் அது வாசனை அடிக்கும். உனக்கு சோப்பும் ஷாம்பூவும் இன்னும் அங்கேந்துதான் வருதா?''

அவள் சிரித்தாள். ''வரல்லே. கொண்டு வந்ததே இன்னும் இருக்கு. இந்திய சோப்பும் ஷம்பூவும் உபயோகிச்சா ஒத்துக்குமோ ஒத்துக்காதோன்னு பயந்து ஏகமா கொண்டு வந்திருக்கோம். உனக்கு இந்த வாசனை பிடிச்சா உனக்கும் ஒரு பாட்டில் கொண்டு தரேன்.''

''வேண்டாம் தாங்க்ஸ்'' என்றான் அவன். அவசரமாகக் கூடவே சிரித்து ''அப்புறம் இது உன் வாசனைன்னு சொல்ல முடியாம போகும்'' என்றான்.

அவன் சிரித்துக் கொண்டே பேசினாலும் ஒரு இயலாமை தொனிப்பதாக அவள் நினைத்துக் கொண்டாள். தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களை எப்படி மோப்ப சக்தியினால் மட்டும் கிரகித்துக் கொள்வது சாத்தியம்?

''மேம் இல்லையா?''

''அம்மா எங்கேயோ போயிருக்காங்க. அவங்களைப் பார்க்கத்தான் வந்தியா?''

''இல்லே, உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்.''

அவன் முகத்தில் வெளிப்படையாகச் சந்தோஷம் தெரிந்தது.

காதலெனும் வானலைல்

வாஸந்தி

''ஓ? தாங்க்ஸ்'' என்ற போது குரல் நெகிழ்ந்தது. ''இதைக் கொண்டாட வேண்டாமா?'' என்று அவன் சுறுசுறுப்பாக எழுந்தான். ''என்ன சாப்பிடறே, போர்ன்வீடாவா, காப்பியா?''

''வேண்டாம் வேண்டாம். உக்காரு'' என்று அவள் பதற்றத்துடன் அவனுடைய கையைப் பிடித்தாள்.

''என்ன அப்படி பயப்படறே?'' என்று அவன் பலமாகச் சிரித்தான். ''அப்படி ஒன்ணும் மோசமா இருக்காது.''

அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

''ஓ. கே. அப்ப நானும் ஹெல்ப் பண்ணுவேன்.''

''சரிதான். போர்ன்வீடா கலந்தது நீதான்னு சொல்லிக்கவா, அன்னிக்கு வானவில்னா என்னன்னு உன் சொந்த சரக்கு போல ரேடியோவிலே பேசினியே?''

அவள் சிரித்தாள்.

''இல்லேல்லே. நீயே வெச்சுக்க எல்லா பெருமையும். நீ செய்யறதை நான் பார்க்கலாமா?''

''வேண்டாம்'' என்றான் புன்னகையுடன். தோளைப் பற்றியிருந்த அவள் கையைத் தட்டி, ''என்னாலே முடியும், அதை நீ நம்பணும்'' என்றான் மெல்லிய குரலில்.

''ஓ.கே.'' என்றாள் அவள் தோற்றுப் போன உணர்வுடன். அவன் உள்நோக்கி நகர்ந்த போது, ''எனக்கு ஜில்லுனுதான் போர்ன்வீடா பிடிக்கும்'' என்று குரல் கொடுத்தாள்.

அவன் திரும்பி வரும் வரை கவலையாயிருந்தது. அவனால் எப்படி காப்பியெல்லாம் போட முடியும் என்று புரியவில்லை. நெருப்பில் கையைச் சுட்டுக் கொள்ள மாட்டானா? வெந்நீரை மேலே கொட்டிக் கொண்டால்? கண்ணாடி தம்ப்ளர் காலில் விழுந்தால்? 'என்னாலே முடியும்' நிதானமாகக் கர்வத்துடன் சொன்னான். இந்த நிலை வருவதற்கு முன் அவன் பலமுறை விழுந்து, அடிபட்டு, மனசு வெறுத்துப் போயிருக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். தன் நிலையைக் கண்டு இவனுக்குப் பச்சாதாபமில்லை. குறையிருப்பவன் போல் பேசுவது கூட இல்லை. பார்வையிருப்பவர்களிடம் தென்படாத சூட்சுமமும் உற்சாகமுமாய் எப்படி இருக்கிறான்?

காலடி ஓசை கேட்டு அவள் நிமிர்ந்தாள். இரண்டு பெரிய மெலமன் தம்ளர்களில் மேலே ஐஸ் கட்டி மிதக்க அவன் அவற்றை டிரேயில் ஏந்தியபடி ஜாக்கிரதையாக நடந்து வருவதைப் பார்த்து வியந்து போனாள். எழுந்து ''க்ரேட்'' என்று டிரேயை வாங்கிக் கொள்ளும் போது இனம் புரியாமல் துக்கம் நெஞ்சை அழுத்திக் கண்கள் பனித்தன.

''எப்படியிருக்குன்னு குடிச்சுப் பார்த்துச் சொல்லு'' என்று புன்னகைத்துத் தனது நாற்காலிக்கு இலேசாகத் தடுமாறி அவன் செல்லும் போது அவனைப் பிடித்து உட்கார வைக்க நினைத்தவள், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

உண்மையிலேயே போர்ன்வீடா மிக ருசியாக இருந்தது.

''பிரமாதம்!'' என்றாள் அவள் உற்சாகமாக.

''எனக்கே இப்படிச் செய்யத் தெரியாது.''

''தாங்க்யூ'' என்று அவன் தன்னுடைய தம்ப்ளருக்காக மேஜையைத் தடவினான்.

''ஓ ஸாரி'' என்று அவனருகில் அவள் அதை நகர்த்தினாள். அவன் அதை எடுத்து ''உம் குட்'' என்று சிலாகித்தபடி அருந்துவதைக் கண்டு அவளுக்கு இன்று சிரிப்பு வரவில்லை. கனிவு ஏற்பட்டது. திரும்பத் திரும்ப பிரமிப்பாக இருந்தது. இருட்டிலேயே இருப்பவனுக்கு உலகம் எப்படி இருக்கும்? மனிதர்கள் எப்படிப்பட்ட உருவமாய்த் தோன்றுவார்கள்? நாம் கண்ணால் பார்க்கும் வடிவங்களின் ஆதாரத்தின் மேல் தான் கற்பனைகள் உருவாகின்றன. இவனுடைய கற்பனைகளுக்கு எப்படிப்பட்ட உருவம் இருக்கும்? எத்தனையோ கேள்விகள் இவனைக் கேட்க வேண்டும் போல் இருந்தது. கேட்டால் தனது அங்கஹீனத்தைச் சுட்டிக்காட்டுவதாக அவன் நினைக்கப் போகிறானே என்று தயக்கமாக இருந்தது. 'தனக்கு அங்கஹீனம் இருப்பதாக ஒத்துக்கக் கூட மாட்டான்' என்று அன்று மைதிலி சொன்னது நினைவுக்கு வந்தது.

''என்ன, பேச்சையே காணும்?'' என்றான் அவன் காலித் தம்ப்ளரை மேஜை

மேல் வைத்து, ''டான்ஸ் கிளாசுக்குப் போயிருந்தியா நேத்து?''

''போயிருந்தேனே!'' என்னும் போது பகபகவென்று நேற்றைய ஞாபகங்கள் எல்லாம் பிரவாகமாக வந்தன. நேற்று அனுபவித்த கோபமும் ஏமாற்றமும் மீண்டும் அவளைத் தாக்கின.

''அலாரிப்பு ஆடிக் காண்பிக்கிறியா?'' அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அந்த நிமிஷத்தில் அவனுடைய கேள்வி அவளுக்கு மகா அபத்தமாகத் தோன்றிற்று. தன்னை மட்டும் இவன் ஏமாற்றிக் கொள்ளவில்லை என்னையும் ஏமாற்றுகிறான். தாம் தித்தாம் தைத்தத்தை என்று நான் கையையும் காலையும் அசைப்பது இவனுக்கு எப்படிப் புரியும்? நாட்டியம் என்பது கண்களால் அல்லவா அனுபவிக்கப்பட வேண்டும்?

என்ன பதில் சொல்வது என்ற தயக்கத்துடன் அவள் மௌனமாக அமர்ந்திருக்கையில் ''உனக்கு என்னைப் பத்திச் சந்தேகமா இருக்கு இல்லே?'' என்றான் ஹரி. ''இந்தக் குருட்டுப் பய எதிரே ஆடினாத்தான் இவனுக்கு என்ன தெரியப் போறதுன்னு நினைக்கிறே!''

அவள் சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். 'குருட்டுப் பய' என்று அவன் சொன்ன போது அது ரொம்பக் கொடூரமான வார்த்தையாய்த் தொனித்தது. எதையும் மறைத்துப் பேசும் வழக்கமில்லாததால், ''சந்தேகம் வந்தது. ஆமாம்,'' என்றாள். ''பார்த்து அனுபவிக்க வேண்டிய விஷயத்தை உன்னாலே அனுபவிக்க முடியுமா என்கிற சங்கடத்தினாலே.''

''நீ சங்கடப்பட வேண்டியதில்லே'' என்றான் அவன் சாதாரணமாக. ''ரசனை என்கிறது உன் அளவுகோல்படி இருக்கணும்னு நீ நினைக்கிறே. என் ரசனைக்கு அளவு கிடையாது. வரம்பு கிடையாது - ஆகாசத்துக்கு வரம்பு இல்லாத மாதிரி - தைத்தத்தைன்னா உனக்கு நாலைஞ்சு அடவுகளைத்தான் திருப்பித் திருப்பிப் போட முடியும். எனக்குள்ளே ஆயிரமாயிரம் அடவுகள் தோணும். எனக்குக் கண்ணில்லேங்கறதை மட்டும் நீ பார்க்கறே. அதைத் தவிர எனக்கு எல்லாம் இருக்கே? கண் எனக்கு வெளியிலேதான் திறக்கல்லே உள்ளுக்குள்ளே திறந்திருக்கு.''

தான் சொல்வதையெல்லாம் இவள் புரிந்து கொள்வாளா என்கிற ஆதங்கத்துடன் அவன் பேசுவது போல் இருந்தது. அவள் உணர்ச்சிவசப்பட்டுப் போனாள். தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''ஞானக்கண்ணா?''

''இருக்கலாம்!'' என்று அவன் சிரித்தான். ''தமிழ் வார்த்தைன்னா அது?''

''எங்க பாட்டி சொல்ற கதையிலே அநேகமா அந்த வார்த்தை அடிபடும். இப்பத்தான் அதோட அர்த்தம் புரிகிறது. எனக்கு விளங்காத விஷயமெல்லாம் உனக்கு விளங்கலாம்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்றான் அவன் கூச்சத்துடன். ''என்னைக் கண்டு நீ ரொம்ப சங்கடப்பட வேண்டியதில்லேன்னு சொல்றேன் அவ்வளவுதான்.''

''ஓ.கே. ஆடிக் காண்பிக்கிறேன்'' என்று அவள் உற்சாகமாக எழுந்தாள். ''உள்ளே வந்து உட்காரு'' என்று அவன் தோளைப் பற்றினாள். ''இங்கே திறந்த வராந்தாவிலே ஆடினா தெருவெல்லாம் வேடிக்கைப் பார்க்கும். பார்த்தா எனக்கு ஒண்ணுமில்லே. என்னுடைய கவனம் சிதறிப் போகும். அது எனக்குப் பிடிக்காது.''

''ஆ, அது உண்மைதான்'' என்று அவன் எழுந்தான். ''எனக்கு அந்தக் கஷ்டம் எதுவும் கிடையாது.''

இருவரும் கைகோத்தபடி நடந்த போது அவளுக்கு எரிக்கின் நினைவு வந்தது. அவனைப் போல் ஹரியும் ஒரு நல்ல சினேகிதன் என்று சந்தோஷம் ஏற்பட்டது. ஆனால் எரிக்கும் அவளும் ஒரே வயது. அவனுடன் சேர்ந்து மரம் ஏறினதும் சைக்கிள் ஓட்டியதும் பனிக்கட்டியில் சறுக்கியதும் உற்சாகமான அனுபவங்கள். இருவருக்கும் வகுப்பில் ஒரே ஐக்யூ. அவனுக்கும் அவளுக்கும் கிட்டத்தட்ட எப்பவும் ஒரே க்ரேட். ஹரியுடன் பேசும் போது ஏற்படும் உற்சாகம் வித்தியாசமானது. தோழன் என்கிற உருவத்துக்குள் இவன் ஒரு ஆசான் என்கிற பிரமிப்பு ஏற்படுகிறது. இவனுடைய அங்கஹீனமே இவனுடைய

''அந்த அதிகாரியைப் பிணைக்கைதியா கடத்தி வந்தது ரொம்ப தப்பாப் போச்சு.''

''ஏன்?''

''விட்டுடலாம்னு பார்த்தாலும் 'சம்திங்' தந்தாத்தான் இந்த இடத்தை விட்டு நகருவேன்னு அடம் பிடிக்கறார்!''

– அகத்தியான்பள்ளி ராம்ஜி



ப்ளஸ் பாயின்ட் என்று அவளுக்கு விசித்திர மாகத் தோன்றிற்று.

நடுக்கூடம் அவனுடைய சௌகர்யத்துக்காகவே அதிக அடைசலில்லாமல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கிருந்த நாற்காலிகளை ஓரமாக ஒதுக்கி விட்டு அவனை உட்கார வைத்து நிலத்தைத் தொட்டு வணங்கி அவள் ஆரம்பித்தாள்.

மெல்லிய குரலில் 'தாம்தித்தாம் தைத் தத்தை' என்று ஆரம்பித்த போது ஹரி உற்சாகத்துடன் நிமிர்ந்து தாளம் போட்டான். அவள் ஆடிக் கொண்டு போகையில் அவன் முகத்தில் தெரிந்த சந்தோஷம் நம்ப முடியாததாக இருந்தது. 'தை திதித்தை' அடவைப் பிடிக்கும் போது 'சபாஷ்' என்றான். அவனுக்குப் பார்வை இல்லை என்பதே மறந்து போயிற்று. அவள் அலாரிப்பை முடித்தவுடன் அவன் கையைத் தட்டி 'ரொம்ப நல்லா ஆடறே மீரா' என்று சொன்னது மிக இயல்பான மகிழ்ச்சியை அளித்தது. முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு அவள் அவனருகில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்தபடி 'தாங்க்யூ ஹரி' என்றாள். நாட்டியம் ஆடி இத்தனை சந்தோஷம் என்றும் ஏற்பட்டதில்லை என்று தோன்றிற்று.

''ஆடிக் காட்டினதுக்கு ரொம்ப தாங்க்ஸ்'' என்றான் ஹரி. ''நா நிஜமாகவே ரசிச்சேன்.''

''எனக்குத் தெரியும்.''

அவன் சிறிது மௌனத்துக்குப் பிறகு ''நீ ரொம்ப நல்ல பெண் மீரா!'' என்றான். அவள் வியப்புடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஐ ஆம் நாட் ஸோ ஷ்யூர்! நேத்து ராத்திரி எங்கப்பாவோட பெரிய சண்டை போட்டேன். இன்னிக்குக் காலையிலே அவர் சமாதானமாப் பேச வந்தார். பேச முடியாதுன்னு சொல்லிட்டு இங்க வந்துட்டேன். இங்கே வந்த போது மூடு அவுட்டா யிருந்தது.''

''இப்ப மூடு திரும்ப வந்துட்டதா?''

''ஓ யெஸ்!''

''இப்பச் சொல்லு ஏன் சண்டை போட்டே?''

சொன்னால் இவனுக்குப் புரியுமா என்ற தயக்கமில்லாமல் அவள் விலாவாரியாக நடந்தவற்றையும் அதன் பின்னணியையும் சொன்னாள். சொல்லும் போது மீண்டும் துக்கம் ஏற்பட்டது.

''எங்கப்பா அம்மா மேல இருந்த நம்பிக்கையே எனக்குப் போயிட்டது!'' என்றாள் கோபமாக. ''அங்கேயிருந்து இளம் பறதுக்கு முந்தி எங்கிட்டப் பேசியிருக்கலாம். பேசல்லே. இப்ப சொல்றது அதிர்ச்சி தருது. என்னை ஏமாத்தின மாதிரி



''ஹலோ... எப்ப ஃபோன் பண்ணினாலும் ராங் நம்பராவே கிடைக்குது சார்... கொஞ்சம் வந்து பார்க்கறீங்களா...?''

''ஏதோ, ராங் நம்பராவது கிடைக்குதேன்னு சந்தோஷப்படறதை விட்டுட்டு... நீங்க வேற...''

- சீர்காழி. வி. ரேவதி

இருக்கு.''

அவன் சற்று நேரத்துக்கு எதுவும் பேசவில்லை. ''உன்னுடைய கோபம் எனக்குப் புரிகிறது'' என்றான் மெல்ல. ''ஆனா அவங்க உன்னை ஏமாத்தினதா நான் நினைக்கல்லே.''

''எனக்கு அப்படித்தான் தோணுது. நீ ஃபிலாஸபி பேசாதே.''

''தத்துவம் இல்லே இது வெறும் தர்க்கம் என்று அவன் சிரித்தான். ''உன்னை ஏமாத்தி அவங்களுக்கு என்ன ஆகணும்?''

அவள் பேசாமல் யோசனையில் ஆழ்ந்தாள். ''எனக்குப் புரியல்லே'' என்றாள் மெள்ள.

''உங்கப்பாவுக்கு வேறு பல பயங்கள் இருந்திருக்கலாம்.''

''எனக்கு இதுவரை எதுவும் சொன்னதில்லே.''

''மனசிலே இருக்கிற எல்லாத்தையும் சொல்லிட முடியாது மீரா. நமக்குள்ள சில அந்தரங்கங்கள் இருக்கும்.''

''நான் எல்லாத்தையும் சொல்லிடுவேன்.''

அவன் சிரித்தான்.

''உன்னாலே கூட நினைக்கிறதையெல்லாம் சொல்லிட முடியாது. மத்தவங்களுக்குச் சங்கடம் கொடுக்கக்கூடிய விஷயங்களை நீ வெளிப்படையா சொல்லுவியா?''

அவள் பேசவில்லை. அவன் சிநேகிதமாக அவளுடைய கையைப் பற்றினான்.

''உங்கப்பா தன் அந்தரங்கங்களை எல்லாம் உங்கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லே. அவர் சொல்லாததாலே உன் மேல அவங்களுக்கு நம்பிக்கை இல்லேன்னு அர்த்தமில்லே. ஒரு முடிவு எடுக்க ஒரே காரணம் எப்பவும் இருக்க முடியாது. பல காரணங்கள் பின்னணியிலே இருக்கும். அதைப் புரிஞ்சுக்கணும் - தெரிஞ்சுக்க ஆசைப்படக் கூடாது.''

''இனிமே நீதான் எனக்குக் குரு'' என்று அவள் விளையாட்டாகச் சொல்ல நினைக்கையில்,

''நானும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக்கேன். புரிஞ்சுக்காததனாலே'' என்றான் அவன் புன்னகை மாறாமல்.

(தொடரும்)

வங்கிகளுக்கும் உண்டு வேதனைகள்!

வங்கியில் நீங்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தால் கிடைக்கும் வட்டி 5 சதம். வைப்பு நிதி என்று சில ஆண்டுகளுக்குத் தொடாமல் இருந்தால் கிடைக்கும் வட்டி அதிகபட்சமாகப் 13 சதம். ஆனால் அதே வங்கி, தொழில்துறைக்குக் கடன் தரும் போது 25 சதம் வரை வட்டி வசூலிக்கிறது.

''இவ்வளவு அதிகமாக வங்கிகள் வட்டி வாங்கும்போது, நமக்கு இன்னும் கொஞ்சம் கூடுதல் வட்டி கொடுத்தால் என்ன?'' என்று வங்கியில் பணம் போட்டு வைக்கும் சராசரி மனிதன் எண்ணுகிறான்.

வட்டிவிகிதங்களை அரசுதான் நிர்ணயிக்கிறது என்பது ஒரு புறமிருக்க, வங்கிகள் எந்த அளவுக்குக் கடன் தரலாம் என்பதையும் அரசுதான் நிர்ணயிக்கிறது! வங்கிகளில் மக்கள் போட்டு வைக்கும் பணத்தையெல்லாம் அவை கடனாக வழங்கிவிட முடியாது. அந்தப் பணத்தில் 56 சதம் அப்படியே உறைந்து போகுமாறு அரசு செய்து விடுகிறது. எப்படி?

வங்கிகளில் மக்கள் போட்டு வைக்கும் மொத்தப் பணத்தில் 38 சதவீதத்தை அரசாங்கக் கடன் பத்திரங்களில் வங்கிகள் முதலீடு செய்யவேண்டும் என்று ஒரு விதிமுறை உள்ளது. இந்த விதியை வங்கிகள் மீற முடியாது. அதே சமயம், ஆண்டுதோறும் தான் அறிவிக்கும் கடன் பத்திரங்களுக்குப் பணம் திரட்டுவது இதன் மூலம் அரசுக்கு எளிதாகிறது. மக்கள் வங்கிகளில் சேமிக்கும் தொகை, ஆண்டுதோறும் 20 சதம் அதிகரித்து வருவதால், ஆண்டுதோறும் அரசு கடன் பெறுவதும் சுலபமாகிறது.

இது தவிர இன்னுமொரு கட்டுப்பாடும் வங்கிகளுக்கு உண்டு. அதாவது வங்கியில் மக்கள் போட்டு வைக்கும் மொத்தப் பணத்தில் பதினைந்து சதவீதத்தை ரிஸர்வ் வங்கியில் காப்பு நிதியாக வங்கிகள் வைத்திருக்க வேண்டும். இதையும் தவிர மேலும் ஒரு விதிமுறையும் அரசு சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளது. அதாவது 1991 மே மாதம் 3 ம் தேதியன்று வங்கிகளில் போடப்பட்டுள்ள மொத்த டெபாசிட்கள் எவ்வளவு என்று நிர்ணயித்து, அதற்கு மேல் கூடுதலாகும் டெபாசிட்களில் பத்து சதவீதத்தைக் கணக்கிட்டு, அதையும் ரிசர்வ் வங்கியில் காப்பு நிதியாகக் கொடுத்து வைக்க வேண்டும். இதையும் சேர்த்தால் வங்கிகளின் கைவசம் உள்ள பணத்தில் கிட்டத்தட்ட 56 சதம் ரிசர்வ் வங்கியிடமும் அரசிடமும் போய் விடுகிறது. இந்த கட்டாயக் கொள்முதலுக்கு எஸ்.எல்.ஆர். என்று பெயர். (Statutory Liquidity Ratio). ஆகக் கூடி வங்கிகளிடம் கடன் தருவதற்கு மிச்சமிருப்பது 44 சதமே. இந்த 44 சதத்திலிருந்துதான் அவர்கள் தொழில்துறைக்கும் வியாபாரத்துக்கும் கடன் தந்து லாபம் காண வேண்டும். இது காரணமாகத்தான் வங்கிகளில் கடன் பெறுவதும் சமீபகாலமாகத் தொழில் வர்த்தகத் துறைக்குச் சிரமமாகி வருகிறது.

வங்கிகள், ரிசர்வ் வங்கியிலும் அரசிடமும் போட்டு வைக்கும் 56 சதம் பணத்துக்கு வட்டி உண்டு. ஆனால் இது கிட்டத்தட்ட பத்து சதம் தான். வங்கிகள் மக்களுக்கு வைப்பு நிதி மீது தரும் வட்டியோ இதைவிடவும் அதிகம். இதனாலெல்லாம் தான், வங்கிகள் தொழில் வர்த்தகத் துறையினரிடம் மிக அதிகமாக வட்டி வசூலித்து, சேமிப்புச் செய்யும் மக்களுக்கு ஒப்புநோக்க மிகக் குறைந்த அளவில் வட்டி தருகின்றன.

வங்கிகளில் கடன் வாங்க எண்ணும் தொழிலதிபர்களும் வியாபாரிகளும் வங்கிகளை ரொம்பவும் நெருக்கும் போது, வங்கிகளும் கடன் வாங்கி இவர்களுக்குக் கடன் தருகின்றன! இதனை Inter-bank market என்பர். இன்ஷுயூரன்ஸ் நிறுவனங்கள், மற்றும் பல நிதி நிறுவனங்கள் வசம், உபரிப்பணம் இருந்தால், இப்படி வங்கிகளுக்குக் கடன் தருவார்கள். ஆனால் இதற்கு வட்டி விகிதம் மிகவும் அதிகம்!

இந்தியாவில் இன்றைய நிலையில், கடன் தர வங்கிகளிடம் பணம் இல்லை. இதனால் தொழில்-வர்த்தகத் துறை மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. சமீபத்தில் தொழில் வர்த்தக சங்கம் அரசிடம் எஸ்.எல்.ஆர் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு வலிமையான விதத்தில் முறையிட்டுள்ளது. அப்போதுதான் தொழில் துறைக்கு அதிக நிதி வசதி கிடைத்து, பொருளாதாரம், செழிக்க முடியும் என்பதால், சர்வதேச நிதி நிறுவனமும் இதனை நமது அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளது.

இந்தச் சிபாரிசை ஏற்காது போனால் சர்வ தேச நிதி நிறுவனத்தினிடம் இந்திய அரசு கடன் பெறுவது சாத்தியமின்றிப் போகக்கூடும் என்பதால், இந்திய அரசு இதற்கு ஓரளவு சம்மதிக்கும் என்றும் தோன்றுகிறது.

- வி. கோபாலன்

ஒருவர் : ஆபீஸ் வேலைக்கு ஆள் தேவைன்னு விளம்பரம் போடலாம்தான். அதுக்காக இப்படியா...?

இன்னொருவர் : எப்படி...?

ஒருவர் : தூக்கத்தில் குறட்டை விடும் பழக்கம் இல்லாதவர்க்கு முன்னுரிமை அளிக்கப்படும்னு போட்டிருக்கே!

- டி. அருள்ராஜ்



பொருத்தமற்ற இறுக்கம். டாண் டாண் என்று பேசுகிறவளா, இப்படி?

இந்த இறுக்கம், என்னை மேலும் அவ மதிப்பது போல உணர்ந்தேன். உள்ளுக்குள் உஷ்ணம்.

''நான் கேக்குறேன்லே? ஏன் படம் போடலே?''

அதே மௌனம்.

''கையை நீட்டு!'' கடுமையாகிப் போன என் குரல், எனக்கே அந்நியமாக - வேற்றுக் குரலாக-

மேஜையிலிருந்த குச்சி என் கைக்கு வந்தது. சுளீர், சுளீர், சுளீர். மூன்று மின் னல். மூன்று இடிகளாக அந்தப் பூவின் உள்ளங்கையில்.

எல்லாப் பிள்ளைகளும் அவளைப் பரி தாபமாய் பார்க்க, அவள் கண்களில் ஈரத் துளி. சின்ன உதடு நடுங்கி விம்மியது.

''போ... அங்கே மண்டி போடு.''

வெயிலில் தகித்த மணலை என் கை காட்டியது.

அவள் மண்டி போட்டாள். வெயிலில் ஒற்றையாய் - வெட்ட வெளியில்... கண்ணீர் சிந்தும் ஓவியமாக, சிறுமி பார்வதி.

வெளியில் போவோர், வருவோர் முகங்களிலெல்லாம் வெளிப்படையான ஏளனத் தொனி...

எல்லாவற்றையும் ஒரு சுற்று நடுக்கத் துடன் பார்த்து விட்டு, வெட்டுண்ட தலை யாகத் தொங்கப் போட்டவள்தான், அப்பு றம் நிமிரவேயில்லை.

அவமானத்தில் புழுங்கி, வெந்து, உள் ளுக்குள்ளேயே செத்துப் போனாளோ... பள்ளி வட்டத்தைத் தாண்டிய அந்நியர் களின் பரிகாசத்துக்குரிய ஜந்துவாகி விட் டோமே என்று நொந்து போனாளோ...

எனக்குள் ஒரு முள். உறுத்தல். கொஞ் சம் அத்துமீறி விட்டேனோ... குற்றம் செய்து விட்டேனோ...

நான் பயந்தது சரியாகி விட்டது.

மறுநாளிலிருந்து பார்வதி பள்ளிக்கு வரவேயில்லை. பதைத்துப் போய் நானே வீடு தேடி விசாரித்தேன். தாய் அப்புத் தாய்தான் எதிர்கொண்டாள்.

''நானும் எம்புட்டோ சொல்லிப் பார்த் துட்டேன்யா. ஒரேயடியா பிடிவாதமாச் சாதிக்கிறா. என்ன காரணம்னு வாயைத் திறந்தும் சொல்ல மாட்டேங்கிறா. 'போகலே, போகலே'ன்னு ஒரே பதில் தான். நா என்ன செய்ய முடியும்யா?''

ரேணுகா மாதிரி பூத்து - காய்த்து - கனிந்து - இயல்பாக வளர்ந்து பரிணாமம் பெற்றிருக்க வேண்டிய பார்வதி. படிப் பைப் பாதியில் முடித்துக் கொண்டாள்.

குடிகாரனுக்கு வாழ்க்கைப்பட்டு, நரக வாழ்க்கையில் வெந்து, சுபாவம் மாறி, ஊமைக் கறுப்பாகி...

இந்தச் சீரழிவில் என் பங்கும் உண் டல்லவா!

ஒரு பெண்ணின் கல்விப் பாதையை - அறிந்தோ, அறியாமலோ - பிடுங்கிக் கொண்ட நான் - வாழ்க்கையில் அவள் சீரழிவதற்குக் காரணமான நான் - 'பெண் கல்வி' பற்றிப் பேசலாமா? பேசுவதற்கு யோக்யதை உண்டா? பேசுவதற்கு இய லுமா? பேசினால்... மனச்சாட்சி என்னை மதிக்குமா? காறித் துப்பாதா? குற்ற உணர்வில் மனம் பதறியது.

போன வாரம்தான், ஊர்ப் பஞ்சா யத்தில் அவள் திருமண உறவு ரத்தாகி, வாழாவெட்டியானாள்.

சரி... நாளை நான் கூட்டத்திற்குப் போகணுமா? போகிற தகுதி இருக்கிறதா? இருக்கிறது!

பெண் கல்வியை ஊக்குவித்து நான் பேசுவதே கூட... என் தவறுக்கான பரி காரம்தானே!

இன்று நான் பேசப் போவதே.. ரேணு காவையும் - பார்வதியையும் பற்றித்தான். ஆனால், ஒரு விஷயம்.

பார்வதி போன்ற பூக்கள் உதிர்வுக்கு - அறிந்தோ, அறியாமலோ - காரணமாக இருந்து விட்ட நிஜத்தை பகிரங்கமாக ஒப்புக் கொள்வதுதான், என் உரையின் முன்னுரை.

அதில் உறுதியாக இருந்தேன்.

9

அவனுடைய கை மிருதுவாக லேசான கதகதப்புடன் இருந்தது. மிக நெருக்கமான உணர்வை ஏற்படுத்திற்று, இருவருடைய எண்ணங்களும் சங்கமித்தது போல. அவனைப் பார்க்கும் போதும் அவன் பேச்சைக் கேட்கும்போதும் அவளுள் பிரவாகமாக எழுவது வெறும் கருணை உணர்வு இல்லை என்று அவள் உணர்ந்தாள். இது சினேகிதம். ஆத்மார்த்தமான சினேகிதம். இந்தியாவுக்கு வந்த பிறகு முதல் முறையாக ஏற்பட்டிருப்பது. இப்படி இவன் கையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் போது, இவனது 'ஞானக்கண்' பார்வையைக் கண்டு பிரமிக்கும் போது, இவன் ஆதியும் அந்தமுமில்லாத காலத்தின் பிரதிநிதி என்று அவளுக்கு விசித்திரமாகத் தோன்றிற்று. நேற்று, இன்று, நாளை என்ற வித்தியாசம் தெரியாத உலகத்தில் இருப்பவனுக்கு, அந்தமில்லை. அந்தகன் என்று இவனைச் சொல்வது எத்தனை பெரிய பொய்!

வெகு நேர மௌனத்திற்குப் பிறகு ஞாபகம் வந்தவனாய், ''ரொம்பக் கஷ்டப்பட்டேன்'' என்றான் புன்னகையுடன். ''அதாவது மத்தவங்களுக்கு எப்படிப்பட்ட கஷ்டங்கள் இருக்கும்னு புரியாததாலே. அவங்க பேசற பேச்சிலேந்துதான் நான் உன் அர்த்தங்களைப் புரிஞ்சுக்க முடியும். த்வனியிலேந்து துக்கமா, சந்தோஷமா, கோபமான்னு இந்தக் காதை மட்டும் வெச்சு கிரகிக்கணும். காது கூர்மையாகிறதுக்கு ரொம்ப நாளாச்சு!''

இவன் பேசுவதெல்லாம் அவளுள் ஏற்படுத்திய நெகிழ்ச்சியை மறைக்க, அவள் விளையாட்டாக அவனுடைய இரண்டு காதுகளையும் தொட்டு அசைத்தாள்.

''அப்ப உனக்கு இருக்கறது ஞானக் கண் இல்லே. ஞானக் காது'' என்று அவள் சிரித்த போது, அவனும் கூடச் சிரித்தான்.

''என்ன கஷ்டப்பட்டே சொல்லு'' என்றாள், அவள் அவன் கையைப் பற்றியபடி.

அவன் உணர்ச்சிவசப்பட்ட நிலையிலும் மெல்லிய புன்னகையுடன், ''எங்க அம்மாவும் அப்பாவும் சட்டபூர்வமாய்ப் பிரிஞ்சவங்க'' என்றான்.

''கேள்விப்பட்டிருக்கேன்'' என்றாள் அவள் மெள்ள.

''அவங்க பிரிஞ்சதுக்கு நான்தான் காரணம்னு எனக்கு ரொம்ப நாள் கழிச்சுத்தான் புரிஞ்சுது. இப்பவும் அம்மா அந்தக் காரணத்தை ஒப்புக்க மாட்டாங்க. அப்பாவுக்கு வேற ஒரு பெண்ணோடு உறவு ஏற்பட்டதனாலேதான் பிரிஞ்சேம்பாங்க. ஆனா உண்மையில நான்தான் காரணம்னு எனக்குத் தெரியும். அது தெரியறதுக்கு முந்தி எனக்கு அப்பா மேல கோபம் வரும், அம்மாவுக்கு அப்பாவோட சினேகிதமாப் பேசத் தெரியல்லேன்னு கோபம் வரும்.''

''நீதான் காரணம்னு எப்படிச் சொல்றே?''

''தங்கள் குழந்தை நார்மல் இல்லேங்கற எண்ணம் ரெண்டு பேருக்குமே ரொம்பப்



பெரிய மன அழுத்தத்தைக் கொடுத்திருக் கும்னு எனக்குத் தெரியுது. பிறந்ததிலேர்ந்து நான் இப்படியே இருக்கறதனாலே எனக்கு இதுதான் நார்மல். அதனாலேதான் அவங்க ஏன் சண்டை போடறாங்கன்னு புரியல்லே. என்னாலே ஏற்பட்ட ஏமாற்றத்தினாலே, ரெண்டு பேரும் ஒருத்தர் மேல மற் றொருத்தர் தப்புச் - சொன்னாங்க. கார ணங்களைத் தேடிப் பிடிச்சுச் சண்டை போட்டாங்க. அப்பல்லாம் நா 'ஓ'ன்னு கத்துவேன். சாப்பிடாம அழுவேன். எனக்கு அஞ்சு வயசுதான் அப்ப. கடைசியிலே அம்மா விவாகரத்து வாங்கிக்கிட்டாங் கன்னு எனக்கு மெள்ளத்தான் தெரிஞ்சுது. 'தனி வீட்டுக்குப் போறோம்'னு இந்த வீட்டுக்குக் கூட்டிட்டு வந்ததிலேர்ந்து அம்மா நிம்மதியா இருக்கற மாதிரி இருக்கு. அப்பா வேற ஒரு பொம்பளை சினேகிதத்தை நாடிப் போனதும் தன்னு டைய ஏமாற்றத்தை மறக்கத்தான்னு எனக்குப் பிறகு புரிஞ்சுது.''

மீராவுக்குக் கண்ணில் நீர் நிறைந் திருந்தது. அவன் ஒரு மூன்றாம் மனித னைப் போல எட்ட நின்று தன்னையே பார்ப்பது நெகிழ்ச்சி ஏற்படுத்தியது.

ஹரி திடீர் என்று சிரித்தான். ''எனக்குக் கண் இல்லேங்கறது எனக்குப் பெரிய குறையா இல்லேன்னாலும், நா மத்தவங் களுக்குப் பெரிய நியூசென்ஸ் என்கிறதும் எனக்கு மெள்ளத்தான் புரிஞ்சுது. ஆனா அம்மா ஒரு க்ரேட் லேடி. எனக்கு அந்த மாதிரி ஒரு எண்ணம் வராம பார்த்துக்

காதலெனும் வளையில்



கிட்டாங்க. நீ எனக்குச் சுமையில்லே. இப்பத்தான் நா சந்தோஷமா இருக்கேன்னு திருப்பித் திருப்பிச் சொல்றது மட்டு மில்லே, என் வேலையை நானே கவனிச் சுக்கும்படி செஞ்சது அவங்கதான். அவங்க இல்லேன்னாலும் இப்ப என்னாலே சமா ளிக்க முடியும்.''

ஹரியின் முகத்தில் ஒரு நிறைவான மந்தகாசம் தெரிந்தது. அவள் கையைக் குலுக்கியபடி, ''இந்த மாதிரி பெண்களை அமெரிக்காவிலே பார்த்திருக்கியா?'' என் றான்.

அவளுக்குச் சட்டென்று சொல்லத் தெரியவில்லை. அவளுக்குத் தெரிந்திருந்த நண்பர்களின் வீடுகளில் இப்படிப்பட்ட சூழலை அவள் சந்தித்ததில்லை. மைதிலி தன் வாழ்க்கையையே இவனுக்காக அர்ப் பணித்து விட்டது போல் இருந்தது.

''நா பார்த்ததில்லே'' என்றாள் அவள் மெல்ல. ''நா பார்க்காததாலே அங்க இருக்க மாட்டாங்கன்னு அர்த்தமில்லே.''

ஹரி ஒன்றும் சொல்லாமல் சூன்யத் தைப் பார்த்துப் புன்னகை செய்தான். இவன் வேறு எதையோ நினைத்துப் புன்னகை செய்கிறான் என்று தோன்றிற்று.

''நா எவ்வளவோ தடவை சொல்லி யாச்சு'' என்று அவன் தொடர்ந்தான். ''என்னைக் குருடங்க இல்லம் எதிலே யாவது சேர்த்துடு, நீ யாரையாவது கல்யா ணம் செய்துக்கன்னு. தனக்கு அப்படிப்

பட்ட உறவு தேவைப்படல்லேங்கறாங்க. இந்த மாதிரி ஒரு மனோபாவத்தை நீ அங்கே பார்க்க முடியாது. இங்கே நூத்துக்குத் தொண்ணூறு பெண்கள் அப்படித்தான் இருப்பாங்க. இருக்கறது மட்டுமில்லே, சமூகமும் அவங்ககிட்டேந்து இதைத்தான் எதிர்பார்க்கும்!''

இவன் எப்படி இதையெல்லாம் அறிந்து வைத்திருக்கிறான் என்று அவள் வியந்தாள். மைதிலிக்கும் இவன் சுமையாகத் தோன்றியிருந்தால், இவனுடைய நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது.

''என்ன பேசாமே இருக்கே?''

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''இனிமே நீதான் என் குருன்னு கால்லே விழலாமான்னு பார்க்கறேன்.''

அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

''குரு ஸ்தானத்திலே இருக்கறவன் வழி காட்டறவன். குருட்டுப் பயலை குருவா ஏத்துக்கறது பெரிய ஜோக்தான்.''

''இனிமே குருட்டுப் பயல் என்கிற வார்த்தையைச் சொன்னா நா இங்கே வர மாட்டேன்!''

அவன் உணர்ச்சிவசப்பட்டவன் போல் மௌனமானான். ''இல்லே சொல்ல மாட்டேன்'' என்றான் மெள்ள. ''உனக்கு ரொம்பச் சீக்கிரம் கோபம் வருது. உங்கப்பாக்கிட்டக் கூட இப்படித்தான் வந்திருக்கும்.''

''என் கோபத்துக்குக் காரணமில்லேன்னு நினைக்கிறியா?''

''இல்லேன்னு சொல்லல்லே. நீ ஒரு பிரச்னையைக் குறுகிய கண்ணோட்டத்தோடு பார்க்கக் கூடாது. எல்லாத்தையும் ஒருத்தர் சொல்லல்லேன்னு ஆத்திரப்படக் கூடாது.''

''புரியுது குரு!'' என்று அவள் சிரித்தாள். ''நேத்து இருந்த கோபம் எனக்கு இப்ப இல்லே.''

''குட்! அவர் பேச வரும் போது முறைக்காதே'' என்று அவன் அவள் காதைத் தேடித் திருகினான்.

''மாட்டேன்'' என்று அவள் தோப்புக் கரணம் போட்டாள்.

வீட்டிற்குக் கிளம்பும் போது உண்மையிலேயே மனசு லேசாகியிருந்தது. 'எப்ப என்னை குருன்னு ஏத்துக்கிட்டியோ, அடிக்கடி வா. உன் அஞ்ஞானத்தைப் போக்கறேன்' என்ற ஹரி சொன்னதை நினைத்துச் சிரிப்பு வந்தது. இவனுடைய ஹாஸ்ய உணர்வுக்குக் காரணமே மைதிலிதான் என்றால் பள்ளித் தோழிகள் நம்பக் கூட மாட்டார்கள். தன்னுடைய சிரிப்பையும் மைதிலி இவனுக்கு அர்ப்பணம் செய்திருப்பாள் என்று தோன்றிற்று.

வீட்டை அடைந்ததும் அவள் நேராகத் தந்தையைத் தேடிக் கொண்டு சென்றாள். தோட்டத்தில் மல்லிகைப் பாத்தியைக் கொத்திக் கொண்டிருந்தவரின் எதிரில் நின்று ''ஹாய் டாட்'' என்றாள். அவர் தலை நிமிர்ந்து ''ஹாய்'' என்று சிரித்தார். மெட்ராஸ் வெயிலில் முகம் சிவந்து நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. தோட்ட வேலைக்கு இங்கு ஆள் இருந்தும் ஞாயிற்றுக் கிழமைகளில் இவர் சில அமெரிக்க வழக்கங்களை அனுசரிப்பது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

''வெளியிலே போனியா என்ன?'' என்றார் இயல்பாக.

''ஆமாம். சொல்லிட்டுப் போனேனே, அதாவது ஒரு ஜெனரல் அனௌன்ஸ்மெண்ட் கொடுத்துட்டுப் போனேன்'' என்று அவள் சிரித்தாள்.

''கோபத்தோட!''

''இப்ப எனக்குக் கோபமில்லேன்னு சொல்லத்தான் வந்தேன்.''

அப்பா அவளைச் சடக்கென்று நிமிர்ந்து பார்த்தார். பிறகு மெல்ல எழுந்து அவளது தோளை ஒரு கையால் அணைத்து அழுத்தினார்.

''நீ ஒரு நல்ல பெண்ணுன்னு எனக்குத் தெரியும்.''

அவள் அவர் மூக்கைச் செல்லமாக நிமிண்டி, ''நீங்களும் ஒண்ணும் மோசமில்லே'' என்று சிரித்தாள். ''எங்கிட்ட எல்லா விஷயத்தையும் சொல்லாமப் போனாலும்!''

சட்டென்று அவர் முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு, ''ஒரு நாளைக்குச் சாவகாசமாப் பேசுவோம்'' என்றார். ''அவசரமில்லே. உன் பரீட்சையிலே நீ முழு கவனத்தையும் திருப்பணும். அதுக்கப்புறம் மேல் படிப்புக்கு அமெரிக்கா போகணும்னு நினைச்சியானா எனக்கு எதுவும் ஆட்சேபம் இல்லேம்மா.''

இது தாற்காலிக சமாதானத்துக்காக இவர் சொல்வதாகத் தோன்றவில்லை. தன்னால் நிறைவேற்ற முடியாத எதையும் அப்பா சொன்னதில்லை. நேற்று இரவெல்லாம் அவளது கோபத்தை நினைத்துப் பார்த்து இப்படிப்பட்ட முடிவிற்கு இவர் வந்திருக்கலாம் என்று தோன்றிற்று.

''ஓ தாங்க்யூ டாட்!'' என்று அவர் கையைப் பிடித்து, ''நேத்து நா கோபமாய்ப் பேசினதுக்காக ஸாரி'' என்றாள்.

''நீ கோபப்பட்டதிலே தப்பே இல்லே'' என்று சிரித்து, அப்பா மீண்டும் மண்ணைக் கிளற உட்கார்ந்தார். ''உன் இடத்திலே நா இருந்திருந்தா எனக்கும் கோபம் வந்திருக்கும்.''

வீட்டிற்குள்ளிருந்து மஹேஷின் குரல் கேட்டது. ''மீரா! போன்!''

''ஸீ யூ டாட்!'' என்றபடி அவள் உள்ளே ஓடினாள். நேற்றைய மனநிலை முழுவதும் மாறி பழைய உற்சாகம் அவளைத்



- ப. கோபுராஜ்

தொற்றிக் கொள்ள, காத்திருந்த ரிசீவரில் ''ஹல்லோ'' என்றாள் மூச்சிரைக்க.

''மீராவா?'' என்றது குரல். ''நா மீனாட்சியுடைய அம்மா பேசறேன்மா, மிஸஸ் செல்லப்பன்.''

''ஓ? ஹல்லோ ஆன்ட்டி!'' என்றாள் மீரா வியப்புடன்.

''மீரா, உனக்குத் தொந்திரவு இல்லேன்னா இன்னிக்கு எங்க வீட்டுக்கு வர முடியுமா, உன்னோடு கொஞ்சம் பேசணும்'' என்றாள் மிஸஸ் செல்லப்பன்.

''எதைப் பத்தி ஆன்ட்டி?'' என்றாள் மீரா குழப்பத்துடன்.

''நீ நேரிலே வாயேன், பேசலாம். நா கார் அனுப்பறேன். அரைமணி நேரம் டைம் கொடு போதும்.''

தன்னை விட வயதில் மூத்த ஒரு பெண்மணி கிட்டத்தட்டக் கெஞ்சும் குரலில் அப்படிப் பேசுவது கூச்சத்தை ஏற்படுத்திற்று.

''கார் எதுக்கு, உங்க அட்ரெஸ் சொல்லுங்க, சைக்கிள்லே வரேன்.''

''வேண்டாம்மா. வண்டி அனுப்பறது ஒண்ணும் கஷ்டமில்லே. மூணு மணிக்கு அனுப்பட்டுமா?''

தன் கைக் கடிகாரத்தைப் பார்த்து, ''ஓ. கே. தாங்க்யூ ஆன்ட்டி!'' என்றாள்.

''உனக்கு நான்தான்மா தாங்க்ஸ் சொல்லணும்'' என்று மிஸஸ் செல்லப்பன் போனைத் துண்டித்த போது, மீராவின் குழப்பம் அதிகமாயிற்று.

அம்மாவுக்கும் மகளுக்கும் இடையே என்னவோ தகராறு ஆகியிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ஒரு வெளி ஆள், அவளை விட வயதில் சின்னவள் வந்து சமரசம் செய்யும் அளவுக்கு மிஸஸ் செல்லப்பன் பலவீனமானவளா? மீனாட்சி என்ன புதிய தில்லுமுல்லு செய்தாளோ என்று எரிச்சல் ஏற்பட்டது. அல்லது அன்று அவளுக்காகத்தான் பொய் சொல்லி மழுப்பியதை அந்தம்மாள் கண்டுபிடித்து, 'ஏன் மறைச்சே'. என்று கேள்வி கேட்கலாம். மீராவுக்கு வெலவெலத்துக் குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் கூசிப் போயிற்று. 'உங்க மகதான் என்னை அப்படிச் சொல்ல வெச்சா' என்று சொல்வதும் நாகரிகமாக இருக்காது. என்னைக் காட்டிக் குடுத்தியா என்பாள் மீனாட்சி. இனிமேல் மிஸஸ் செல்லப்பனிடமிருந்து எப்படித் தப்பிப்பது?

அம்மாவிடம் சென்று தன் கவலையைத் தெரிவித்த போது, அம்மாவும் கவலைப்பட்டாள் மிஸஸ் செல்லப்பனுக்காக. ''நீ தப்பிக்கிறது முக்கியமில்லே, மீனாட்சியைப் பத்தி உனக்கு என்ன விஷயம் தெரியுமோ அதை அந்தம்மாகிட்ட சொல்றது நல்லது'' என்றாள்.

''எனக்கு நிஜமாவே ஒண்ணும் தெரியாது, அவ ஒரு அசடு என்கிறதைத் தவிர.''

''அவ உங்கிட்ட எதுவும் சொன்னதில்லையா?'' என்றாள் அம்மா நம்பாமல்.

''சொல்ல வருவா. நா காதிலே போட்டுண்டதில்லே. பாய் ஃப்ரெண்டுகளைப் பத்திப் பேசுவா. பாய் ஃப்ரெண்ட் இருந்தா என்ன தப்பு? அவ பொய் சொல்லி இரகசியமா நடந்துக்கறதுதான் முட்டாள்தனம். அவளுக்கு வேற எதிலேயும் சிரத்தையும் இல்லே. அதனாலே எனக்கும் அவளுக்கும் பொதுவான விஷயங்களே இல்லே. நா இன்னிக்கு வரேன்னு அந்த ஆன்ட்டிகிட்ட ஒப்புத்துக்கிட்டது தப்பு.''

''விஷயம் இல்லாம கார் அனுப்பி ஒருத்தி உன்னை வரச் சொல்வாளா?'' என்ற அம்மாவின் கேள்வி குழப்பத்தை அதிகரித்தது.


மூன்று மணிக்குச் சரியாக வந்து நின்ற காரில் ஏறி மீனாட்சியின் வீட்டை அடைந்த போது மிஸஸ் செல்லப்பன் தனியாக அமர்ந்திருந்தாள். ''மீனாட்சி வெளியிலே போயிருக்கா'' என்று சிரித்து, கூல்ட்ரிங்க் கொண்டு வந்து கொடுத்து உபசரித்துக் குசலம் விசாரித்து மீராவின் பொறுமை நழுவும் சமயத்தில், ''அந்த மைதிலி ஜயராமன் எப்படிப்பட்டவங்கன்னு சொல்லு'' என்றாள்.

ஒரு வினாடி அவளுடைய குரலிலிருந்த படபடப்பைக் கண்டு திகைத்து, 'காட்! மீனாட்சியை விட இவள் மோசம்' என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

(தொடரும்)

"பக்கத்து வீட்டு கோபால்ராமைப் பாருங்க. ஏதோ காண்ட்ராக்ட் பிஸினஸாம். வீட்ல எல்லாமே ஆடம்பரமா இருக்கு."

ஆசைக் கனவுகள்



வாழ்க்கை என்றால் அதில் முன்னேற்றம் வேண்டும். அந்த முன்னேற்றத்தின் மூலம் வசதியும் சொகுசும் பெருக வேண்டும். பிரபாவதி இப்படித்தான் நினைத்தாள்.

ஆபீஸிலிருந்து களைப்புடன் திரும்பிய கணவனுக்குக் காப்பி போட்டுக் கொடுத்தவள், அவனுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். கவலையோடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

''பாவம். தினமும் நீங்க வேர்வை வழியக் களைச்சுப் போயி வர்றதைப் பார்க்கும் போது மனசுக்குச் சங்கடமா இருக்கு. ஒரு ஸ்கூட்டர் வாங்கிக்கிட்டா எவ்வளவு நல்லா இருக்கும்?''

''வாங்கிறலாம் பிரபா. நேரம் வரட்டும்.''

''ரொம்ப நாளா இதையே தான் சொல்லிக்கிட்டிருக்கீங்க. நமக்குக் கல்யாணம் ஆயி நாலு வருஷம் ஆயிடுச்சு. ஒண்ணுமே பிரயோஜனம் இல்லை.''

அவன் காப்பியைப் பருகியபடி அமைதியாய்ப் பார்த்தான்.

''ஏன் பிரபா அப்படிச் சொல்ற? உனக்கு என்ன குறை வைச்சேன். பூ வாங்கித் தர்றதில்லையா புடைவை வாங்கித் தர்றதில்லையா? ஏதாச்சும் குறை வைச்சிருக்கேனா?''

அவளது தோளை இறுகப் பிடித்து அமுத்தினான். அவள் உதறிக் கொண்டு பொய்க் கோபத்துடன் பார்த்தாள்.

''சும்மா இருங்க. ஏதாச்சும் கேட்டா இப்படி நைஸ் பண்ணி மழுப்பிட வேண்டியது. நம்ம குழந்தைக்கு அடுத்த தை மாசத்தோட மூணு வருஷம் முடியப்போவுது. அவளை நல்ல ஸ்கூல்ல சேர்க்கணும்.''

''சேர்த்திடுவோம். அதைக் கூட நான் செய்யலேன்னா எப்படி?''

''அதில்லைங்க. நாம வாழ்க்கையில முன்னேறணும் இல்லையா?''

''முன்னேறிக்கிட்டுத்தானே இருக்கோம். உன்னைக் கல்யாணம் பண்ணிக்கும் போது, எல்.டி.ஸி.யா இருந்தேன். இப்ப யு.டி.ஸியா மாறியிருக்கேன். இது முன்னேற்றம் இல்லையா?''

''இதெல்லாம் என்னங்க பெரிய முன்னேற்றம். சம்பளத்துல ஐம்பதோ நூறோதான் அதிகமாக் கிடைக்கும். பக்கத்து வீட்டு கோபால் ராமைப் பாருங்க. ஏதோ கான்ட்ராக்ட் பிஸினஸாம். வீட்ல எல்லாமே ஆடம்பரமா இருக்கு.''

''பிரபா நீ ஒண்ணு புரிஞ்சுக்கணும். அன்பான வாழ்க்கையில இருக்கிற ஆனந்தம் வேற எதிலியுமே இருக்காது.''

அவள் அதிருப்தியாய் முகத்தைச் சுழித்தாள்.

''நீங்க ஏன்தான் இப்படியெல்லாம் பேசறீங்களோ தெரியலை.''

அவள் எழுந்து சென்றதும் சுரேந்தர் சிந்தித்துப் பார்த்தான். பிரபாவதி நீண்ட நாளாகவே ஏன் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஒரு வேளை அவளது ஆசை நியாயமானதுதானோ? மற்றவர்களைப் போல தன் கணவனும் முன்னேற வேண்டும் என்று நினைக்கிறாளோ?

குழந்தையுடன் சரிசமமாய் விளையாடிக் கொண்டிருந்தவன், மனைவி வந்ததும் கவனம் கலைந்தான். பிரபாவதி கையில் அன்றைய தினசரி இருந்தது. அதில் வெளியாகியிருந்த ஒரு குறிப்பிட்ட விளம்பரத்தை ஆவலாய்க் காட்டினாள்.

''இந்த 'ஆபர்சூனிடி' காலத்தைப் பாருங்களேன். எதுக்கோ டிஸ்ட்ரிபியூட்டர் தேவையாம். நீங்க ஏன் இதுக்கு முயற்சி செய்யக் கூடாது?''



மது/மனோ



''மன்னரைப் புகழ்ந்து நான் பாடிய பாடல்கள் அவருக்குப் பிடிக்கவில்லை அமைச்சரே!''

''ஏன்? ஏதாவது சொற்குற்றம், பொருள் குற்றம் இருந்ததா?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அவருக்குப் புதுக்கவிதைகள்தான் பிடிக்குமாம்!''

அவன் சீரியஸாய் அந்த விளம்பரத்தைப் பார்த்தான். புதிதாய் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஒரு காஸ்மாடிக்ஸ் நிறுவனம் அப்படி கேட்டிருந்தது.

''இதுக்கு டிஸ்ட்ரிபியூஷன் எடுக்கிறதுன்னா ரிஸ்கான விஷயம் பிரபா. புது கம்பெனியா இருக்கு. புராடக்ட் வேற எந்த அளவுக்கு மார்கெட்ல மூவ் ஆகும்னு சொல்ல முடியாது. அதுவும் ஒரு லட்ச ரூபாய் டெபாஸிட் கட்டணுமாம். இதெல்லாம் ஆகிற காரியமா?''

''மனசு வைச்சா எல்லாம் நடக்கும். நம்பிக்கையா இறங்கணும்.''

''அது சரி பணத்துக்கு வழி?''

''என்னுடைய நகையெல்லாம் வீட்ல தூங்கிக்கிட்டுத்தானே இருக்கு. இந்த வீட்டையும் அடகு வைக்கலாம்.''

அவன் சில விநாடிகள் மௌனித்தான். பிறகு நிமிர்ந்தான். ''இந்த கம்பெனி தயாரிக்கிற அத்தனையும் பெண்களுக்கான ஐட்டங்கள். அவனவன் எதைப் பத்தியெல்லாமோ கவலைப் பட்டுக்கிட்டிருக்கும் போது இதை யார் வாங்கு வாங்கன்னு தோணுது.''

''உங்களுக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான். இந்தக் காலத்துல எந்த விலைவாசி ஏறினாலும் இதை மட்டும் பெண்கள் வாங்காம இருக்கமாட்டாங்க. நானும் ஒரு பெண் என்பதால சொல்றேன்.''

சுரேந்தர் விடுவிடுவென்று காரியத்தில் இறங்கினான். மறுநாளே பம்பாய்க்குப் பயணமானான். கம்பெனி நிர்வாகியைச் சந்தித்து, அப்போதே ஒரு இருபதாயிரம் ரூபாயைக் கொடுத்து அக்ரிமெண்ட் எழுதிக் கொண்டான்.

அடுத்த வாரமே சரக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சுரேந்தர் தன் வீட்டின் ஸ்டோர் ரூமை சிறிது காலத்திற்குக் கோடவுனாய் மாற்றினான்.

ஆரம்பத்தில் வியாபாரம் டல்லடித்தது. ஆனால் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்ததும் வாடிக்கையாளர் ஒவ்வொருவராய்த் தேடி வந்தார்கள். சீக்கிரத்திலேயே வியாபாரம் பெருகியது. அதன் பிறகு வியாபார ஸ்தலத்தை வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டி வந்தது.

சுரேந்தர் ஐந்து ஆட்களை வேலைக்கு வைத்துக் கொண்டான். எண்ணி இரண்டே வருடங்களில் அவனது வியாபாரம் பல மடங்கு பெருகியது. கூடவே அவனது அந்தஸ்தும் வசதியும் பெருகியது.

ஆடம்பரமாய் ஒரு வீட்டைக் கட்டினான். வீட்டிற்கு ஒரு காரும் அலுவலகத்திற்கு ஒரு காரும் வாங்கினான்: வீட்டு வேலைக்கும் இரண்டு ஆள் வைத்தான். பிரபாவிற்கு இப்போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. தினமும் வீடியோவில் இரண்டு சினிமா பார்த்து வந்தாள்.

ஆனால் இவையெல்லாம் நீண்ட நாட்களுக்கு நீடிக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல மனத்தில் ஏதோ வெறுமை உண்டாயிற்று. சுரேந்தர் நிச்சயம் முன்புபோல் இல்லை என்பதை மட்டும் அவளால் உணர முடிந்தது.

அவன் அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது மாலை ஆறு மணிக்கே வீடு திரும்பி விடுவான். குழந்தையுடனும் தன்னுடனும் கொஞ்சி விட்டு, அவள் சமைத்த உணவை ரசித்துச் சாப்பிடுவான். அதெல்லாம் இப்போது மாறி விட்டது. அவன் வீடு திரும்பவே இரவு பத்து அல்லது பதினோரு மணி ஆகிவிடுகிறது. ஒப்புக்கு அவளுடன் ஓரிரு வார்த்தைகள் பேசி விட்டு, ஏதேதோ பைல்களை எடுத்துப் புரட்ட ஆரம்பித்து விடுகிறான். பிறகு தொலை பேசியை எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்து விடுகிறான். விடிகாலை ஐந்து மணிக்கு அவசர அவசரமாய் எழுந்து எங்கோ புறப்பட்டு விடுகிறான். அவளது வாழ்க்கையே ஏதோ மாயாஜாலம் போல இருந்தது.

மதியம் மூன்றுமணி ஆகியும் சாப்பிடப் பிரியமின்றி கூடத்தில் அப்படியும் இப்படியும் உலவிக் கொண்டிருந்தாள். குழந்தை கரடி பொம்மையுடன் உள்ளே விளையாடிக் கொண்டிருந்தது.

பிரபாவதி கண்ணாடியின் முன் நின்று தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். சரியான தூக்கமின்றி, உணவின்றி உடல் மெலிந்து போயிருந்தது.

இப்படி எத்தனை நாளுக்கு இந்த வறண்ட வாழ்க்கையைச் சகித்துக் கொண்

டிருக்க முடியும்? இந்த வாழ்க்கையில்தான் என்ன அர்த்தம் இருக்கிறது.

தன்னையும் அறியாமல் அவள் கண்கள் கலங்கின. கூடத்திற்கு வந்து காலண்டரைப் பார்த்தாள். சுரேந்தர் பிஸினஸ் டூர் விஷயமாக வெளியூர் சென்று பத்து நாட்களுக்கு மேல் ஆகியிருந்தன.

ஒரு வாரத்தில் திரும்பி வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனவன் இன்னும் ஏன் வரவில்லை என்று கவலையாக இருந்தது. இருப்புக் கொள்ளாமல் தொலை பேசி ரிஸீவரை எடுத்து ஆபீஸுக்கு போன் செய்தாள். ஒரு சேல்ஸ் அஸிஸ்டென்ட் பதிலளித்தாள்.

''சாரோட புரேகிராம் எல்லாம் எனக்கு டிடெய்லா தெரியாதும்மா. அவரோட என் கேஜ்மென்ட் எல்லாம் இங்கே சந்தியா அம்மாதான் கவனிச்சுக்கிட்டிருக்காங்க. அவங்களும் ஐயாவோட டூர் போயிருக்காங்க. இப்ப அநேகமா அவங்க கோயம் புத்தூர்ல இருக்கலாம். எதுக்கும் நீங்க போன் பண்ணிப் பாருங்கம்மா.''

அவளுக்கு மனசு படபடத்தது. வியர்த்தது. நடுக்கமாகக் கூட இருந்தது.

சந்தியா என்னும் பெண்ணுடன் தன் கணவர் இவ்வளவு நெருக்கமாய் இருப்பதை இப்போதுதான் கேள்விப்படுகிறாள். அவசர அவசரமாய் அந்த சேல்ஸ் அஸிஸ் டென்ட் கொடுத்த எண்ணுக்குப் போன் செய்தாள்.

''ஹலோ குமரி என்டர்பிரைஸஸ் தானே?''

''ஆமா.''

''அங்கே மிஸ்டர் சுரேந்தர் வந்திருக்காங்களா? நான் அவரோட ஒய்ப் பேசறேன்.''

''இருக்கார் மேடம். கொஞ்சம் லைன்ல இருங்க.'' சற்று நேர இடைவெளிக்குப் பிறகு குரல் வந்தது.

''ஹலோ சுரேந்தர் ஹியர்.''

''நான் பிரபா பேசறேங்க. பத்து நாள் ஆகியும் நீங்க வராம இருக்கிறது எனக்கு பயமா இருக்குங்க.''

''பிஸினஸ்னா அப்படித்தான் இருக்கும். எந்த நேரத்துல வேலை முடியும்னு சொல்ல முடியாது. சரி என்ன விஷயம்?''

''சீக்கிரமா வீட்டுக்கு வாங்க ப்ளீஸ்! நீங்க இல்லாம என்னால இங்கே இருக்க முடியலை. ஒவ்வொரு நேரமும் வெறுப்பா இருக்கு.''

''அதுக்காக பிஸினஸை முடிக்காம வந்துட முடியுமா? அநாவசியமா இது வரைக்கும் போன் பண்ணித் தொல்லை கொடுக்கறியே.''

''ஏங்க இப்படி கோபப்படறீங்க?''

''இத பார் பிரபா! பிஸினஸ் பார்ட்டி எனக்காகக் காத்துக்கிட்டிருக்கு. கண்டதைப் பேசி நேரத்தை வீணடிக்காதே!''

''நீங்க ரொம்ப மாறிட்டீங்க. முன்னே மாதிரி இல்லை.''

''ஆமா. நான் மாறிட்டேன். அதுக்கு இப்ப என்ன செய்யச் சொல்ற?''

''உங்களை யார் அப்படி மாத்தினதுன்னு எனக்கு நல்லாத் தெரியும்.''

''போனை வைச்சுடறேன்.''

''ப்ளீஸ் ஒரு நிமிஷம்! நீங்க முன்னால ஆபீஸ்ல சாதாரண கிளார்க்கா வேலை செஞ்சிக்கிட்டிருந்தப்போ என்னையும் குழந்தையையும் அன்பா ஆசையாக் கவனிச்சுக்கிட்டிருந்தீங்க. ஆனா இப்ப நீங்க அடியோட மாறிட்டீங்க. நான் இங்கே செத்தேனா பிழைச்சேனான்னு கூடக் கண்டுக்க மாட்டேன்றீங்க. குழந்தையக் கூட பார்க்கணும்னு உங்களுக்குத் தோணலை. எனக்கு இந்த வாழ்க்கையே வெறுத்துப் போச்சுங்க. தயவு செய்து நான் சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. எனக்கு இந்த ஆடம்பர வாழ்க்கை வேண்டாம். எனக்கு நீங்கதான் வேணும். தினமும் நீங்க அன்பா வாங்கிக்கிட்டு வர்ற ஒரு முழ மல்லிகைப்பூவே போதும். சரின்னு சொல்லுங்க. ப்ளீஸ்!''

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிரபாவதி கேவிக் கேவி அழுதாள்.

ரேடியோவில் செய்தி வாசிக்கும் பெண்ணுக்கு...



டி. வி. யில் செய்தி வாசிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன்...

கருத்து : ஜோன்ஸ்

50 போட்டிக் கவிதை



குளிர் நெருப்பைக் கூப்பிட்டேன்!

தேன்முட்டும் பூக்களினால் தேர்நெய்து வந்தவளே;
வான்சொட்டும் பனிபோல விரல்தொட்ட இளையவளே;
நான்மட்டும் படிப்பதற்கு நயனத்தில் கதையெழுது!
ஏன்தொட்டால் துவளுகிறாய்; இதழ்களிலே கவியெழுது!


தோட்டத்துப் பூக்களெல்லாம் தேவதைக்கு மாலைதர;
பாட்டுக்குள் கற்பனைகள் பைங்கிளிக்குப் போதைதர;
தீட்டுகிற ஓவியங்கள் தூயவளின் பார்வைபட;
கூட்டுக்குள் குடியேற, கோகிலமே... என்றுவர?

சித்திரமே நமக்காகச் சொர்க்கம்பார் மண்ணுக்குள்;
முத்தத்தின் அமுதருந்தி மோனசுகம் நெஞ்சுக்குள்;
கத்திமுனைக் கூர்மையடி கன்னிகையுன் கண்ணுக்குள்
வித்தைகளைத் தொடங்குகிறேன் வாலிபமே எண்ணிக்கொள்!

கணைதொடுத்துக் கணைதொடுத்துக் காமனுக்கும் கைவலிக்கும்;
அணையுடைத்து அணையுடைத்து ஆசைமனம் அலையடிக்கும்;
துணைகிடைத்த மோகத்தில் தோகையவள் உயிர்துடிக்கும்!
இணைபடைத்த மஞ்சத்தில் இளமைக்குப் பரிசளிக்கும்!

இதழ்விரிந்த தாமரையின் இளநெஞ்சில் வண்டாகி
கதைபயின்ற போதையிலே கலைஞானம் உண்டாகி
எதைநுகர்ந்த வேளையிலும் இனியவளின் நினைவாகி
விதிமறந்து மயங்கிடுவேன் வஞ்சியுடன் விளையாடி!

- மரபின்மைந்தன்.



இவளைப் பற்றி என்ன நினைப்பது என்று மீராவுக்கு சுத்தமாகப் புரியவில்லை. மைதிலியைப் பற்றி வம்பு பேச வேலை மெனக்கெட்டுக் காரை அனுப்பித் தன்னை வரவழைத்திருக்கிறாள் என்கிற எண்ணம் ரொம்பக் குழந்தைத்தனமாகத் தோன்றிற்று.

''எப்படிப்பட்டவங்கன்னா என்ன அர்த்தத்திலே நீங்க கேக்கிறீங்கன்னு புரியல்லே,'' என்றாள் தன் திகைப்பை மறைத்துக் கொண்டு. ''எங்க ஸ்கூல்லே இருக்கிற நல்ல டீச்சர்கள்லே அவங்க ஒருத்தர். அதைத்தவிர ரொம்ப நல்லவங்க.''

''நல்லவங்கன்னா..... எப்படிச் சொல்றே?'' என்றாள் மிஸஸ் செல்லப்பன்.

எதற்காக இவள் இப்படிப்பட்ட கேள்விகளைத் தன்னிடம் கேட்கிறாள் என்கிற எரிச்சலுடன், ''அப்படித்தான் எனக்குப் படுது'' என்றாள். ''இங்கே வந்த புதுசிலே நான் ரொம்பத் திண்டாடிப் போன போது அவங்கதான் எங்கிட்ட சினேகிதம் காட்டி சமாளிக்க உதவினாங்க. ஸ்டுடென்ட்ஸ்கிட்ட உண்மையான அக்கறை உண்டு அவங்களுக்கு.''

மிஸஸ் செல்லப்பன் லேசாகச் சிரித்தாள். ''உங்கிட்ட பிரியம் காட்டினதுக்கு வேற காரணம் இருக்கும். வெளிநாட்டிலே இருந்து வந்தவங்ககிட்ட சில பேருக்குத் தனிப்பட்டப் பிரியம் ஏற்படும்.''

''அப்படிப்பட்டவங்க இல்லே அவங்க நிச்சியமா,'' என்றாள் மீரா ரோசத்துடன். ''எனக்குத் தெரிஞ்சவரை அவங்க நல்லவங்க. பாசாங்குத்தனமில்லே, தைரியசாலி.''

மிஸஸ் செல்லப்பன் பதில் ஏதும் சொல்லாமல் தன் கையிலிருந்த கூல் ட்ரிங்க் கிளாஸை ஆழ்ந்து பார்த்தாள்.

''எதுக்குக் கேக்கறீங்க ஆன்ட்டி?''

''எனக்குத் தெரியணும்'' என்றாள் மிஸஸ் செல்லப்பன், அதுதான் அதற்கு விடை என்பது போல. ''அவ ஒரு நார்மல் மனுஷி இல்லேன்னு எனக்குத் தோணுது. சொந்த வாழ்க்கையிலே ஏதோ ஏமாற்றமாமே?''

தன்னுடைய அந்தரங்கத்தில் இவள் தலையிடுவது போல் மீராவுக்குக் கூச்சமேற்பட்டது. தனது சொந்த ஏமாற்றங்களைப் பற்றின நினைவுகூட மைதிலிக்குக் கிடையாது என்றால் இவள் நம்பப்போவதில்லை. நினைவு இல்லாதது மட்டுமில்லை, அவற்றை ஏமாற்றங்களாகக் கருதக்கூட இல்லை என்பது இவளுக்கு எப்படி விளங்கும்?

''அவங்க சொந்த வாழ்க்கையைப் பத்தி எனக்குத் தெரியாது. தெரிஞ்சுக்கணும்னு எனக்கு ஆர்வமும் இல்லே'' என்றாள் மெல்லிய குரலில். ''அவங்க நார்மல் இல்லேன்னு எப்படிச் சொல்றீங்க?''

''சில பெண்களைக்கண்டா அவங்களுக்குக் காரணமில்லாம கோபம் வருதுன்னு கேள்விப்படறேன். மீனாட்சியைக் கண்டா அவங்களுக்கு என்னவோ பிடிக்கிறதேயில்லே. எப்பப்பார்த்தாலும் புகார்தான். அதுவும் ஒரு சின்னப் பொண்ணு என்கிற எண்ணமில்லாதவங்க போல், ஒரு வெறுப்போட புகார் செய்யறதை என்னாலே புரிஞ்சுக்க முடியல்லே. அவ கொஞ்சம் விளையாட்டுப் பெண். படிப்

காதலெனும் வானில்

பிலே அக்கறையில்லே. அதுக்கென்ன செய்ய முடியும்? நல்லாப் படிக்கிறதில்லே என்கிற கோபத்திலே அவ குணமே சரியில்லேன்னெல்லாம் சொல்றது நல்லாவா இருக்கு? என் குழந்தையைப் பத்தி எனக்குத் தெரியாதா?''

மீரா பேசாமல் அமர்ந்திருந்தாள். இவள் யாரை ஆழம் பார்க்கிறாள் என்று புரியவில்லை. மீனாட்சியைப் பத்தி என்ன சொன்னாங்க என்று கேட்பது அநாகரிகம் என்று தோன்றிற்று.

''ஹெட் மிஸ்ட்ரெஸ் என்னைக் கூப்பிட்டனுப்பிச்சு மகளைக் கொஞ்சம் கண்டிச்சு வெய்யுங்கங்கறாங்க. இதுவா, 'ஓ'ன்னு அழுது. மைதிலி மேடமுக்கு என்னைக் கண்டா பிடிக்காது. அவங்கதான் கதை கட்டி விடறாங்கங்குது!''

மீராவுக்குச் சிரிப்பு வந்தது. ''கதை கட்டறதனாலே அவங்களுக்கு என்ன லாபம்?''

மிஸஸ் செல்லப்பனின் முகத்தில் கோபம் படர்ந்தது. மெல்லிய கோடிட்ட புருவங்கள் எரிச்சலுடன் சுருங்கின.

''அதிலே ஏதோ வக்கிர திருப்தி கிடைக்கிறது அவங்களுக்கு! அதுக்கு ஏதாவது மனோதத்வ காரணம் இருக்கும். மனசுக்குள்ள இருக்கிற ஏமாற்றத்தை யார் மேலேயாவது காட்டுவாங்க. அதுக்கு வகையா மீனாட்சி அகப்பட்டுக்கிட்டா.''

மைதிலியின் மேல் இவள் சுமத்தும் குற்றம் அபாண்டமானதாகப் பட்டது. மீனாட்சியைப் பற்றி உனக்கு என்ன தெரியும் என்று கேட்காததிலிருந்து மகளிடம் பூரண நம்பிக்கை இருக்கும் என்று தோன்றிற்று. அல்லது தெரிந்து கொள்ள விரும்பாத கோழைத்தனமாக இருக்கலாம்.

''ஸாரி ஆன்ட்டி'' என்றாள் மீரா நிதானமாக. ''மைதிலி மேமைப்பத்தி உங்களுக்குத் தெரியாததாலே இப்படியெல்லாம் நினைக்கிறீங்க. அவங்க கொஞ்சம் டிஸிப்ளின் எதிர்பார்க்கறவங்க. அது ஒண்ணும் தப்பில்லையே?''

மிஸஸ் செல்லப்பன் மறுபடி புருவங்களை நெரித்துப் பார்த்தாள். ''என்ன டிஸிப்ளின்? ஸ்கூலுக்குள்ள ஒண்ணும் வம்பு செய்யறதில்லேன்னு சொல்றாங்க. படிப்பிலே கவனம் குறைவுதான். இல்லேங்கல்லே. டியூஷன் வைக்கிறது அவளுக்குப் பிடிக்கல்லே. எனக்கும் அவங்க அப்பாவுக்கும் நேரமில்லே. ஏதோ பாஸ் பண்ணினா போதும்னு இருக்கோம். அதுக்குப் பிறகு என் கடையிலே வெச்சுக்குவேன். ஸ்கூலுக்கு வெளியிலே அவளுக்கு சினேகிதம் இருக்கா பாருங்கங்கறாங்க. அவ போறதெல்லாம் உன்னைப் போல இருக்கிற சினேகிதங்க வீட்டுக்கு. சினிமா, பார்ட்டின்னு சினேகிதிங்களோட போறா. இதெயெல்லாம் கண்டிக்க முடியுமா என்ன? நீ அமெரிக்காவிலே வளர்ந்தவ. எல்லாத்துக்கும் உங்க அம்மா கண்டிச்சா உனக்குப் பிடிக்குமா?''

''பிடிக்காது'' என்று மீரா தலையசைத்தாள். ''ஆனா வீட்டிலே சில அடிப்படையான ரூல்ஸ் உண்டு. அதை எல்லாரும் கடைப்பிடிக்கணும்'' என்றாள் சிரித்தபடி. ''பொய் சொல்லக்கூடாது. எதையும் யார்கிட்டேந்தும் மறைக்கக்கூடாது. அவங்கவங்க வேலையை அவங்கவங்க செய்யணும். நேரத்தைக் கடைப் பிடிக்கணும். என்கிறா மாதிரி இது எல்லாருக்கும் பொதுவானது.''

மிஸஸ் செல்லப்பன் யோசனையுடன் அவளைப் பார்த்தாள். மீனாட்சியைப் பற்றி விவரமாகக் கேட்கத் தயங்குகிறாள் என்று மீரா நினைத்தாள். திடீரென்று மீராவுக்கு மிகவும் சோர்ந்து போயிற்று. இவளது குழப்பத்தைப் போக்கும் சக்தி தனக்கு இல்லை என்று தோன்றிற்று.

''ஆன்ட்டி எனக்கு நேரமாயிட்டது, நான் கிளம்பணும்'' என்று எழுந்தாள். ''மைதிலி மேமைப் பத்தி நீங்க தப்பா நினைக்கிறீங்க. வேணும்னு யாரும் சொல்ல மாட்டாங்க. ஆனா கொஞ்சம் சொன்ன விவரம் தப்பாவும் இருக்கலாம். நீங்க மீனாட்சியோட அதிக நேரம் செல



வழிக்கணும்.''

''எங்கேம்மா நேரம் கிடைக்குது?'' என்றாள் மிஸஸ் செல்லப்பன், லேசான பெருமிதத்துடன். ''அவங்க சொல்றதை யெல்லாம் நான் நம்பல்லே. நம்ம பொண்ணுகிட்ட நமக்கு நம்பிக்கை இல்லேன்னா வேற யாருக்கு நம்பிக்கை இருக்கும்?''

தனது அலுப்பைக் காண்பிக்காமல், மீரா லேசாகப் புன்னகை செய்து கிளம்ப யத்தனித்தபோது வாசலில் பார்வையைப் பதித்திருந்த மிஸஸ் செல்லப்பனின் முகத்தில் சட்டென்று ஒரு பிரகாசம் தென்பட்டது. போர்டிகோவில் ஒரு பென்ஸ் வண்டி ஓசைப்படாமல் வந்து நின்றது. அதிலிருந்து சினிமாவில் அப்பா வேஷம் போடுபவர் போன்ற உருவத்துடன், வெள்ளை ஸஃபாரி ஸூட், வெள்ளை ஷூ, காதோரத்தில் மட்டும் நரை என்ற அலங்காரத்துடன் ஓர் ஆண் இறங்கி தூரத்திலேயே மிஸஸ் செல்லப்பனைப் பார்த்து மந்தகாஸத்துடன் முன்னேறி வந்தார்.

''நா வரேன் ஆன்ட்டி'' என்ற மீராவின் குரலைக் கேட்டு ஒரு புதிய மலர்ச்சியுடன் மீனாட்சியின் அம்மா திரும்பி, ''ரொம்ப தாங்க்ஸ்மா வந்ததுக்கு.'' டிரைவரைக் கூப்பிட்டு, ''இந்தப் பாப்பாவைக் காருக்கு அழைச்சிட்டுப்போ'' என்றதில் அவசரம் தொனித்தது. பிறகு மீராவை முழுசாக மறந்து போனாள். வந்தவர் மீனாட்சியின் அப்பா இல்லை என்று மீரா புரிந்து கொண்டாள். அப்பாவாக இருந்திருந்தால் மிஸஸ் செல்லப்பன் அறிமுகப் படுத்தியிருப்பாள். வேலைக்காரி டிரைவரைப் பார்த்து சூசகமாகச் சிரித்தாள். ''ஐயா எப்ப வர்றாங்க பம்பாயிலேந்து?'' என்றாள்.

அவன் உதட்டைப் பிதுக்கிச் சிரித்தான். காரில் அமர்ந்து வீட்டை நோக்கிச் செல்லும்போது, ''நம்ம பொண்ணை நாம நம்பல்லேன்னா வேற யாரு நம்புவாங்க?'' என்று மீனாட்சியின் அம்மா சொன்னது மீராவுக்கு நினைவுக்கு வந்தது. மீனாட்சியின் அப்பாவும் மனைவியைப் பற்றி இதே மாதிரியான நம்பிக்கையுடன் இருப்பார் என்று தோன்றிற்று. மீரா தன்னை மறந்து, ''இட் இஸ் எ க்ரேஸி ஹவுஸ்'' என்றாள்.

''என்னம்மா சொன்னீங்க?'' என்று டிரைவர் திரும்பியபோது, ''ஒண்ணுமில்லே'' என்று சிரித்தாள்.

மிஸஸ் செல்லப்பன் எதற்காகத் தன்னை வரவழைத்தாள் என்று சரியாக விளங்கவில்லை. தான் ரொம்ப நவீனப் போக்குடையவள் என்று தெரிவிக்கவா? அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவள் மீனாட்சியின் சுதந்திரப்போக்குக்கு ஆதரவாகப் பேசுவாள் என்று நினைத்திருப்பாள். அல்லது உண்மையிலேயே மைதிலி ஜயராமனைப் பற்றி ஏதேனும் வம்பு அறிவதற்காக இருக்கலாம்.

என்ன காரணமாக இருந்தாலும் இந்த சந்திப்பு ஒரு பெரிய தோல்வி என்று மீரா நினைத்துக் கொண்டாள். மீனாட்சியின் அம்மாவைப் பற்றி மனத்தில் ஏற்கெனவே உருவாகியிருந்த அபிப்பிராயம் மாறவில்லை. ஆனால் இப்பொழுது ஒரு விஷயம் தெளிவாயிற்று. மீனாட்சி பொறுப்பில்லாமல், இலக்கில்லாமல் வாழ்வதற்கு, ஒரு முன்னோடி அவள் வீட்டிலேயே இருக்கிறது. காட், குழந்தைகளுடன் நேரம் ஒதுக்க முடியாதவர்கள் குழந்தைகளை ஏன் பெறுகிறார்கள்? மீனாட்சி, அவள் அம்மா, அப்பா, மூவருமே கண்ணாமூச்சி விளையாட்டு ஆடுவதில் தேர்ந்தவர்கள் என்று தோன்றிற்று. ஒருவர் மற்றவரை ஏமாற்றிக் கொண்டு, ஏமாற்றப்படுவதை கண்ணில் படாததுபோல் நடித்துக் கொண்டு -

இதைப் பற்றி எரிக்கிற்கு எழுத வேண்டும் என்று தோன்றிற்று. எரிக்கின் அம்மாவுக்கு வேறு ஓர் ஆண் சிநேகம் ஏற்பட்டபோது, அவனுடைய தந்தை அவளை விவாகரத்து செய்தார். ''அவர்கள் பிரிந்து போனது எனக்கு வருத்தமாக இருந்தாலும் அவர்களுக்கு வேறு வழியில்லை என்று

எனக்குத் தெரியும்'' என்றான் எரிக் பதி னான்கு வயதில்.

''தொடர்ந்து அவர்கள் சேர்ந்து வாழ் வதில் ஏதும் அர்த்தமில்லை.'' ரொம்ப விவேகமாகப் பேசினாலும் அம்மாவின் பிரிவைத்தாங்க அவன் ரொம்பக் கஷ்டப் பட்டான். இப்போது அவன் எழுதும் கடி தங்களில் அவன் தெளிந்து விட்டது தெரி கிறது.

எது சரி எது தப்பு என்று புரியாத குழப்பம் மீராவை ஆட்கொண்டது. ஆனால் வீட்டு மனிதர்களிடையேயே வேஷம் போடுவது மிகக் கேவலமான விஷயம் என்று நிச்சியமாகத் தோன்றிற்று. தன்னுடைய பலவீனத்தை மறைக்க மைதிலியின் மேல் பழியைப் போட நினைக்கும் மிஸஸ் செல்லப்பன் நல்ல கொள்கைகளே இல்லாதவள் என்று கோபம் வந்தது. மைதிலியைப் பற்றி அவ ளுக்கு என்ன தெரியும்?

அம்மாவிடம் எல்லாவற்றையும் விவர மாகச் சொல்வது தமாஷாக இருக்கும். அம்மாவிடம் எதைப் பற்றி வேண்டுமா னாலும் கூச்சமில்லாமல் பேசலாம். அமெ ரிக்க அம்மாக்கள் போல் அதிர்ச்சி அடை யாமல் கண் சொடுக்காமல் கேட்பாள். அதிர்ச்சி தரும்படியாக இதுவரை ஏதும் நடக்கவில்லை என்பது வேறு விஷயம். அம்மாவும் அப்பாவும் ''மேட்ஃபர் ஈச் அதர்'' போட்டிக்குச் சென்றால் நிச்சயம் முதல் பரிசு கிடைக்கும். இத்தனைக்கும் காதல் கல்யாணம் இல்லை. பெரியவர்கள் பார்த்து நிச்சயித்த கல்யாணம். அம்மாவின் வெறும் போட்டோவைப் பார்த்து, அது வும் மிக மோசமான போட்டோ - அப்பா சரியென்றதை மீராவால் இன்னும் நம்ப முடியவில்லை, ''வெல் - இந்தியாவில் எல்லாம் அப்படித்தான்!'' என்று அப்பா எரிக்குக்கு விளக்கினார். ''கம்ப்யூட்டர்கள் மாதிரி ஜோசியர்கள் சொல்வார்கள் காம்பினேஷன் சரியாயிருக்கிறதா என்று. நம் அதிர்ஷ்டம் சரியாக இருந்தால் சரியாக அமையும். நான் அதிர்ஷ்டம் செய்தவன்.'' அவளும் எரிக்கும் ஏதோ சாகஸக் கதையைக் கேட்டதுபோல் அமர்ந்திருக்க, அம்மா சின்னப் பெண்ணைப் போல முகம் சிவந்தாள். ஹரியின் அப்பா, அம்மா கல்யாணமும் அப்படித்தான் நடந்திருக்க வேண்டும். ஜோசியர்கள் கணக்குத் தப்பாகியிருக்கும். அவளுக்குத் திடீரென்று அத்தை பாட்டி தாத்தாவின் நினைவு வந்தது. அவர்களுடைய பிள்ளை தானாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டது அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்பது விசித்திரமாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு பிடிவாதத்தை அவர்களுடன் சம்பந்தப் படுத்திப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. வேறு ஜாதிப் பெண் என்று அம்மா

ஈரோடு நகரில் அனைத்திந்திய சந்தை!



"ஒரே நாளில் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வியாபாரம் நடக்கும்" என்று சொல்லப்படுவது ஈரோடு துணிச் சந்தை.

சாதாரண நூல் சேலைகள், பாலியஸ்டர் லுங்கிகள், பெட்ஷீட்கள் போன்றவை சுமார் முப்பது முப்பத்தைந்து ரூபாய்க்கே இங்கு கிடைக்கும் என்பதால், இந்தியா முழுவதிலுமிருந்து வருகிறார்கள் வியாபாரிகள்.

மொத்தமாகத் துணிச்சந்தை என்றாலும் பனியன் சந்தை தனி. மற்ற துணிகளுக்கான சந்தை தனி. இரண்டும் அடுத்தடுத்த நாட்களில். வெளியூர்களிலிருந்து வருகிற வியாபாரிகள், முதல் நாள் வாங்கும் துணிகளை எந்த இடத்தில் வைத்துவிட்டு அடுத்த சந்தைக்குப் போவது? அந்தக் கவலையெல்லாம் ஈரோட்டில் இல்லை. இரண்டு நாள், மூன்று நாள் வாடகைக்கென்று பலரும் தங்கள் வீடுகளிலுள்ள சில அறைகளைத் (கோடவுனாக) தருகிறார்கள்.

ஆரம்பத்தில் சாதாரணச் சந்தையாக இருந்த இது, அனைத்திந்திய வியாபாரிகளையும் கவருகிற சந்தையாக எப்படி மாறியது?

''ஈரோட்டையும் சேலத்தையும் இணைப்பதற்காக ஈரோட்டை ஒட்டி ஓடும் காவிரியில் (காமராஜர் காலத்தில்) பாலம் கட்டப்பட்ட பிறகுதான் போக்குவரத்து சுலபமானது. அதன் பிறகுதான் ஈரோடு ஒரு வியாபார மையம் என்கிற அளவுக்கு வளர ஆரம்பித்தது'' என்கிறார் கைத்தறித் துணிச் சந்தையின் ஒரு கோடியில் கதர்க் கடை வைத்திருக்கும் தியாகி திருப்பூர்க் குமரனின் இளைய சகோதரர் ஆறுமுகம்.

– விசுவம்

காரணம் சொன்னாள். இப்பொழுது அவர்களுடன் சேர்ந்து இருக்கிறார்கள் என்றால் சமாதானமாகி விட்டார்கள் என்று அர்த்தம்.

வீட்டை அடைந்தபோது வரவேற்பறையில் ஏகக் குரல்கள் கேட்டன. அப்பாவின் நண்பர்கள் யாராவது வந்திருப்பார்கள் என்கிற நினைப்புடன் அவள் டிரைவருக்கு நன்றி சொல்லிவிட்டு வீட்டிற்குள் நுழைந்து பொதுவாக அங்கு அமர்ந்திருப்பவர்களைப் பார்த்து 'ஹலோ' சொல்ல வாயைத் திறந்த போது ஆச்சரியத்தில் விழிகள் அகன்றன. அத்தைப் பாட்டி, தாத்தாவுடன் ஒரு தம்பதியும் உட்கார்ந்திருந்தார்கள்.

''ஹாய் அத்தே!'' என்று அவள் விரைந்து பாட்டியை அணைத்துக் கொண்டாள். ''இப்பத்தான் உங்களைப் பத்தி நினைச்சேன்.'' பிறகு கண்ணைச் சிமிட்டி - ''நிஜமாத்தான். கனா இல்லே'' என்று சிரித்தாள்.

அங்கு உட்கார்ந்திருந்த புதியவர்களைப் பார்த்து, ''நான்தான் மீரா'' என்று கையை நீட்டினாள்.

''நான் வெங்கடேஷ் - யசோதா'' என்று இருவரும் அவள் கையைக் குலுக்கினார்கள். யசோதா மிருதுவாக அழகாக இருந்தாள்.

''உன்னைப் பத்தி அத்தை நிறைய சொல்வார்'' என்று மென்மையாகச் சிரித்தாள்.

இவளை எப்படி பாட்டி தாத்தாவுக்குப் பிடிக்காமல் இருந்தது என்று மீராவுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் அவர்களுக்குப் பிடிக்காததற்குக் காரணம் வேறு என்று ஞாபகம் வந்தது. ஹரியைப் போல் பார்வையே இல்லாமலிருந்தால் எல்லாருக்கும் ஞானக்கண் சுலபமாகத் திறக்கும் என்று அந்த நிமிஷத்தில் தோன்றிற்று.

(தொடரும்)



☛ பாதைபோடும் மாணவர்கள்.....

பர்கூரில் உள்ள குட்டையூர் வீரப்பன் நடமாடும் பகுதி. அங்கே சத்துணவு மையமும், பள்ளிக்கூடமும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். மூன்று விவசாயக் கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கிறோம். பயிர்த் தொழிலுக்கான விவசாயக் கடன் வாங்கிக் கொடுத்திருக்கிறோம்....''

கல்லூரி நூலகத்திலிருந்து பத்திரி

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மாணவர்கள் கேட்கும் சிக்கலான கேள்வி!

கல்லூரி வளாகத்தில் ஒரு காதல் கவிதை கேட்கிறது. நீங்களும் கேளுங்கள் :

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மாணவர்கள் கிருஷ்ணசாமியும், சிவகுமாரும் பாடுகிறார்கள் :

''அன்ன நடையழகி,
அலங்கார உடை யழகி!
பின்னல் சடையழகி - கண்ணம்மா
புறப்படம்மா தேர் பார்க்க!''

''மதன வடிவழகா,
மாமோகச் சொல்லழகா!
வண்ண உருவழகா - என் மச்சானே,
வரமாட்டேன் தேரு பார்க்க!''

நொச்சிப்பாளையம், தேவர்மலை என்று சுற்று வட்டாரத்தில் எங்கே கிராமியப் பாடல்கள் கேட்டாலும், மளமள வென்று நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்துக் கொண்டு சேகரித்து வரும் இந்த மாணவர்கள், வெளியூர்களில் மாணவர் முகாம்களில் பாடிக் காட்டுவதும் உண்டு!

என்.சி.சி. யாகட்டும், என்.எஸ்.எஸ். ஆகட்டும், ரத்த தானமாகட்டும், சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மாணவர்களுக்கு செம குஷி. ''செய்தி வரும் - இத்தனை பாட்டில் ரத்தம் தேவை என்று. உடனே ஓடிப் போய்த் தருவோம்!'' என்கிறார்கள் மாணவர்கள்.

பர்கூர் மலைக் கிராமங்களில் முகாமிட்டு (வீரப்பன் கையில் சிக்காமல்) அப்பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் அமைத்துக் கொடுத்த பெருமை இவர்களுக்கு உண்டு.

''தாளாடி, பர்கூர், கடம்பூர் பகுதிகளில் பத்து நாட்கள் தொடர்ந்து முகாம்கள் நடத்தியிருக்கிறோம். அரசாங்க அலுவலர்களின் காலடி படாத இடங்கள்... போக்குவரத்து வசதி இல்லாத பகுதி. அதிலும்

கைகள் எடுத்துச் சென்று, விழியிழந்தோர் பள்ளி மாணவர்க்குப் படித்துக் காட்டுவது; வாரம் ஒரு முறை பத்து மாணவர்கள் சென்று அவர்களது உறவினருக்குக் கடிதம் எழுத உதவுவது; செங்கோடன்பாளையத்தில் உடல் ஊனமுற்றோர் பள்ளியில் ஃபிஸியோதெரபி செய்வதில் பிஸியாக இருப்பது - எல்லாமே இந்த மாணவர்களுக்கு சர்வசகஜம்.

தேவர் மலையில் பத்து நாள் வகுப்பு: 'ஏன் கல்வி கற்க வேணும்?' என்ற தலைப்பில். கல்வி கற்பது அவசியம் என்று வலியுறுத்த மாணவர் ஊர்வலம்!

''இதை எல்லாம் யார் வற்புறுத்தலிலாவது செய்தீர்களா? இல்லை....''

''எங்களுக்கே இன்டரஸ்டிங்காக இருக்கிறது!''

மலையிலுள்ள ஒன்னகரை, தம்மரெட்டி, செங்குளம் பகுதி மக்களுக்கு ரேஷன் கார்டுகளே வழங்கப்படவில்லை. இருபது கிலோ மீட்டர் நடந்து போய், ரேஷன் கார்டு கொண்டு போய்க் கொடுத்த போது, ஆச்சரியப்பட்டுப் போய் மாணவர்களைப் பார்த்தார்கள் அந்த மக்கள்.

என்.எஸ்.எஸ். நாட்டு நலப் ப[illegible]கா முக்குப் பிறகு அணைக்கரைப் ப[illegible]ல் தொழுநோய் குறைந்திருக்கிறது [illegible]கிறார்கள் மாணவர்கள்.

ஒவ்வொரு வருடமும் பதினைந்து கிலோ மீட்டர் வரை பாதை அமைக்கிறார்கள்.

இந்த மாணவர்கள், அரசுக்குக் கேட்கும் ஒரே கேள்வி : ''மலைவாழ் மக்களின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தை என்ன செய்கிறீர்கள்?''

சிக்கய்ய நாயக்கர் கல்லூரி மாணவர்கள் கேட்பதில் நியாயம் உண்டு.

- சித்தார்த்

காதலெனும் வானலை

முன்கதைச் சுருக்கம் :

மீரா அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த பெண். அவளை அமெரிக்கக் 'கலாசாரத்தி லிருந்து' காப்பாற்ற வேண்டும் என்று எண்ணி மீராவின் பெற்றோர் இந்தியாவுக்குக் குடிபெயர் கின்றனர்.

கலாசார மாற்றத்தால் திணறும் மீராவைப் புரிந்து கொண்டு உதவுபவர் ஆசிரியை மைதிலி ஜெயராமன்.

தன்னைக் குறித்த பயம்தான் தன் பெற் றோரை இந்தியாவுக்குக் குடிபெயரச் செய்தது எனத் தன் தந்தையின் நண்பர் மூலம் அறிந்து மீரா அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறாள். தன் பெற்றோருக்குத் தன்பேரில் நம்பிக்கை இல்லையா...? என்று கோபித்துக் கொண்டு அப்பாவிடம் சண்டை பிடிக்கிறாள்.

இந்தியாவில் மீரா பெறும் அனுபவங்கள் இந்நாடுதான் பாதுகாப்பானது என்பதாக அவ ளுக்கு உணர்த்தவில்லை. ஏன், ஆதர்சத் தம்பதி களாகத் தென்படும் அத்தைப் பாட்டியும் தாத்தா வும் கூடத் தங்கள் மகன் வேற்று ஜாதிப் பெண்ணைக் காதலித்து மணந்ததை ஏற்றுக் கொள்ளவில்லையே! அன்பே இல்லாத இந்தச் சமூகத்தைப் பாதுகாப்பானது என்று எண்ணு கிறாரே அப்பா...!

மீராவின் குழப்பங்களைப் புரிந்து கொள் ளும் இனிய நண்பனாக அமைகிறான் மைதிலி ஜெயராமனின் மகன் ஹரி. கண் பார்வையற்றவ னானாலும் தீர்க்கமாகச் சிந்திப்பவன்.

ஒருநாள் வகுப்புத் தோழி மீனாட்சியின் அம்மா மிஸஸ் செல்லப்பன் மீராவை உடனே வரச் சொல்லி அழைத்து, தன் மகளைப் பற்றி ஆசிரியை மைதிலி புகார் செய்வதைக் குறித்து அங்க லாய்க்கிறாள். மீனாட்சி யோக்கியமானவள் என்று சாதிக்கிறாள். ஆனால் அவ்வீட்டில் நடக்கும் சம்ப வங்கள் மிஸஸ் செல்லப்பன் யோக்கியமானவள் அல்ல என்று மீராவுக்கு உணர்த்துகின்றன.

ஒருவித அதிர்ச்சியுடன் அவள் வீடு திரும்ப, அத்தைப் பாட்டியும் தாத்தாவும் தங்கள் மகன் மருமகளுடன் அங்கு வந்துள்ளதைப் பார்க்கிறாள். மருமகள் யசோதாவைப் பார்த்து, 'இவளையா முதலில் ஏற்க மறுத்தார்கள்?' என்று வியக்கிறாள் மீரா.

11

"உங்க பாட்டியை நான் தப்புச் சொல்லமாட்டேன்'' என்றாள் யசோதா. ''பழமையிலே ஊறினவர்கள், வெளிக் காற்றுப் படாமல் வளர்ந்தவர்கள் அப்படித் தான் இருப்பார்கள்.''

யசோதா சரளமான ஆங்கிலத்தில் பேசி னாள். பேசியபடியே பரபரவென்று இஸ்திரி போடும் போது அவளுடைய வெண்மையான கையில் ஒரு ஒற்றைத் தங்க வளையல் மேலும் கீழும் நகர்ந்து, ஜன்னல் வழியே விழுந்த சூரிய வெளிச்சம் பட்ட தில் வர்ண ஜாலம் காட்டிற்று.

இவள் பேசும்போது தான் இடையில் புகுந்து பேசுவது அபஸ்வரமாக ஒலிக்கும் என்று மீராவுக்குத் தோன்றிற்று. இந்த இரண்டு நாட்களில் யசோதாவுக்கும் அவ ளுக்கும் இடையே ஏற்பட்டுப்போன நெருக்கம் அதிசயமானது. யசோதா அவளை விட பத்துப் பன்னிரண்டு வயது மூத்தவள். ஆனால் சம வயதுக்காரியுடன் பேசுவது போல் இருந்தது. யசோதாவின் தாய்மொழி மராத்தி என்பதால் அவள் மிகத் தயக்கத்துடனேயே, அதுவும் ஆங்கிலம் வராத அத்தைப் பாட்டியுடன் மட்டுமே தமிழ் பேசினாள்.

இஸ்திரி போட்ட ரவிக்கையை லாகவ மாக மடித்து மறுபடி அதன் மேல் ஒரு இழுப்பு இழுத்து, யசோதா மீராவைப் பார்த்து இலேசாகச் சிரித்தாள்.

''உனக்குப் புரிஞ்சுக்கறது கஷ்டம். இங்கே வளர்ந்தவங்களுக்குக் கடந்த காலத்தை மறக்கறது சுலபமில்லே. கடந்த காலம்னா, எத்தனையோ காலமா நாம சுமந்து வர்ற சரித்திரம், எண்ணம், நம்பிக் கைகள் - சட்டையை அவிழ்க்கிற மாதிரி அவிழ்க்க முடியாது. அவிழ்க்கப் பார்த் தோம்னா நிர்வாணமா நடுத்தெருவிலே தனியா நிற்கிற மாதிரி இருக்கும். அதுக்குத் துணிச்சல் வேணும். துணிச்சல் இருக்கிற வங்களுக்கும் பல தருணங்கள்லே தனிமைப்படுத்தபட்டுப் போனோம்ங்கற ஏக்கம் ஏற்படும்.''

மீரா யசோதவைச் சுவாரஸ்யத்துடன்

வாஸந்தி

பார்த்தாள். தனக்குத் தெரியாத உலகத்தைச் சேர்ந்தவள் இவள் என்று தோன்றிற்று.

''உங்களுக்கு அப்படிப்பட்ட ஏக்கம் இருந்ததா யசோதா?'' என்றாள் உத்வேகத்துடன்.

''ஆமாம்'' என்றாள் யசோதா, ''என்னைவிட வெங்கடேஷ் அதிகமாக் கஷ்டப்பட்டார். ஆசாரமான குடும்பத்திலே ரொம்பப் பாசமா வளர்ந்தவர். காதல் வசப்பட்டிருக்கும்போது அதுதான் ரொம்பவும் முக்கியமாத் தோணும். ஆனா அந்தக் காரணத்துக்காகப் பெத்தவங்களாலே நிராகரிக்கப் படும்போது கொஞ்ச காலத்துக்குக் கோபம் இருக்கும். பிறகு துக்கம் ஏற்படும். கடைசியிலே ஒரு குற்ற உணர்வு கூடத் தோணும். இந்தியச் சூழல்லே ஆணும் பெண்ணும் பிரியப்பட்டா மட்டும் போதாது. எல்லாருடைய சம்மதமும் இருந்தாத்தான் டென்ஷன் இல்லாம இருக்கும்.''

இவள் மறைமுகமாகத் தனக்கு உபதேசம் செய்கிறளோ என்று மீரா நினைத்தாள். ''எல்லார் சம்மதத்தையும் கேட்டுக் கொண்டா காதல் பிறக்கும்?''

''அதுதான் பிரச்னை, நமக்கே தெரியாமதான் அது பிறக்கும்,'' என்று யசோதா சிரித்தாள்.

இப்பொழுது அவள் ஒரு காவியத தலைவிபோல மீராவுக்குத் தோன்றினாள். 'உம், மேலே!' என்பது போல அவளைப் பார்த்து நகைத்தாள்.

''வெங்கடேஷும் நானும் ரொம்ப உக்கிரமா மேடையிலே விவாதம் செய்து கொண்டிருந்தபோது எங்கள் காதல் பிறந்தது.''

யசோதாவின் முகத்தில் திடீரென்று ஒரு மென்மை படர்ந்தது. பத்து வருஷங்கள் சர சரவென்று உதிர்ந்து போனது போல், ''நான் வேற பாஷை பேசறவள்னோ, வேற ஜாதின்னோ மனசிலே தோணவேயில்லே. கல்யாணம் செய்துக்கணும்னு தீர்மானிக்கும் போதுதான் அதெல்லாம் ஞாபகம் வந்தது. ஓ, அதுக்கப்புறம் நகர்ந்த நாட்கள் ரொம்ப கஷ்டமானவை, பெரியவங்க எதிர்ப்புனாலே.''

''பாட்டியும் தாத்தாவும் அப்படி நடந்திண்டதை என்னாலே நம்பமுடியல்லே.''

''நான்தான் சொன்னேனே, அவங்களுடைய நம்பிக்கை அது. அதைக் கேள்வி கேக்க எனக்கு உரிமையில்லை.''

''இப்ப எப்படி சமாதானமாச்சு?''

''இப்பவும் சமாதான மாயிட்டாங்களான்னு எனக்குத் தெரியாது. ஆனா இப்ப விரோதம் இல்லேன்னு நினைக்கிறேன்.''

விரோதம் என்ற வார்த்தை மிகவும் கடுமையானது என்று மீரா நினைத்துக் கொண்டாள். நம்ப இயலாமல் தலையசைத்துச் சிரித்தாள். ''விரோதம் எதுக்கு? 'காதலர்களை உலகமெல்லாம் காதலிக்கும்'னு ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கார்.''

''காதலர்களுடைய குடும்பங்களைத் தவிர!'' என்றாள் யசோதா புன்னகையுடன்.

மீரா பேசாமல் யசோதாவைச் சற்று நேரம் கவனித்தாள். யசோதா பேசும்போது கண்களில் ஒரு அசாதாரணப் பிரகாசம் தெரிந்தது. யாரையும் கவரக்கூடிய வசீகரம் இருந்தது. வெங்கடேஷ் இவளிடம் காதல் கொண்டதில் ஏதும் வியப்பில்லை என்று தோன்றிற்று. இவளை நேரில் காணாமலேயே இவளுடைய ஜாதிக்காகவும் மொழிக்காகவும் வெங்கடேஷின் பெற்றோர்கள் நிராகரித்தது, இப்பவும் விளங்காதது மட்டுமில்லை அநியாயமாகப் பட்டது.

''இதனாலே உங்க ரெண்டு பேருக்கும் தாத்தா பாட்டிகிட்ட விரோதம் ஏற்பட்டதா?''

''விரோதமில்லே, வருத்தம். அவங்களுடைய சினேகிதம் வேணும்னு நா ஆசைப்பட்டேன். அவங்களுக்கு அதிருப்தியைக் கொடுத்துட்டோம் என்கிறது மனசுக்குள்ளே எப்பவும் ஊசி முனைக்குத்தல் போல இருக்கும். கொஞ்சம் விட்டுக் கொடுத்தா என்னன்னு தோணும். சின்ன வயசிலேயே என் அம்மா இறந்து போனார். அம்மாவுடைய பிரியம் எல்லாம் எனக்கு ஞாபகம் கூட இல்லே. அது ஒரு அனுபவ சூன்யம்னு தோணும். வெங்கடேஷ் எப்பவாவது அவங்க அம்மாவைப் பத்திப் பேசுவார். அவருக்குள்ளே இருக்கிற அந்த ஞாப



கம் ஆழமானது; சந்தோஷமானது என்று புரியும்போது எனக்கும் ஏக்கமா இருக்கும்.''

''வேடிக்கை, யசோதா!'' என்றாள் சினேகிதமாக. ''உங்களுடைய காதலுக்குத் தாத்தாவும் பாட்டியும் எதிர்ப்புக்காட்டினது அவங்களுடைய இயல்புக்கு விரோதம். அவங்க ரெண்டு பேருக்கும் நடுவிலே இருக்கிற நெருக்கத்தைப் பார்த்து நான் ரொம்ப ஆச்சரியப்படுவேன். கல்யாண மாகி ஐம்பது வருஷமாச்சாம். இப்பவும் அவங்களால் ஒருத்தரை விட்டு ஒருத்தர் இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.''

''ஆமாம், ரொம்ப நெருக்கம்.... வாழ்க்கை நிறைய முரண்பாடுகள் கொண்டது மீரா!''

தன்னிடம் பேசும் இந்தப் பேச்சையெல்லாம் இவள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த வேறு பெண்களிடம் பேசியிருக்க மாட்டாள் என்று மீரா நினைத்துக் கொண்டாள். வேறு கலாசாரத்தைச் சேர்ந்த மூன்றாம் மனுஷி என்கிற எண்ணத்தினாலேயே மற்றவர்களிடம் சொல்ல முடியாததைத் தன்னிடம் சொல்கிறாள்.

''எப்படியோ, மறுபடி இப்பத் தொடர்பு ஏற்பட்டுப் போச்சே, அது சந்தோஷமான விஷயம். எப்படி ஏற்பட்டது?''

''மூணு மாசத்துக்கு முந்தி வெங்கடேஷுக்கு டைபாய்டு ஜுரம் வந்திருந்தது. ஜுர வேகத்திலே ஒரு நாள் அம்மாவைப் பார்க்கணும்; அப்பாவைப் பார்க்கணும்னு அனத்திக்கிட்டே இருந்தார். அப்ப இவர்களுக்குத் தந்தி அடிச்சேன். வரமாட்டார்களோன்னு கவலையா இருந்தது. வரோம்னு பதில் வந்ததும், நீ நம்ப மாட்டே, வாழ்க்கையிலே எனக்குக் கிடைச்ச ரொம்ப பெரிய வெற்றி போல சந்தோஷமேற்பட்டது. அவங்க வந்த சந்தோஷத்திலேயே வெங்கடேஷுக்குச் சீக்கிரம் குணமாயிட்டதுன்னு நினைக்கறேன்.''

மீராவின் கண்களில் நிறைந்திருந்த நீரைக் கண்டு யசோதா மெல்லச் சிரித்து அவள் கன்னத்தைத் தட்டினாள், சமாதானமாக. ''இப்ப ஒண்ணும் பிரச்னையில்லே.''



தென்னிந்திய கோவில்களைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் இரண்டே நாட்களில் கிளம்பிச் சென்ற போது மீராவுக்கு ஏமாற்றமாக இருந்தது. அத்தைப் பாட்டியும் தாத்தாவும் கூட கிராமத்துக்குக் கூடவே கிளம்பி விட்டார்கள். 'மூணு மாசமா வீடு பூட்டியிருக்கு, வெங்குட்டுவும் யசோதாவும் அங்க வர்றதுக்குள்ளே வீட்டைத் துப்புரவாக்கி வெக்கணும்' என்று பாட்டி அவசரப்பட்டாள்.' பாட்டியுடன் விரிவாகப் பேசச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போனது மீராவுக்கு வருத்தமாக இருந்தது. பாட்டியிடம் எக்கச்சக்கமான கேள்வி எதையும் கேட்டுச் சங்கடப்படுத்தக் கூடாது என்று அம்மா வேறு மிகக் கண்டிப்புடன் சொல்லியிருந்தது அவளைக் கட்டுப் படுத்தியது. இருந்த போதிலும் பாட்டியைத் தனியாகச் சந்திக்க நேர்ந்த சொற்ப நேரத்தில் ''யசோதா ரொம்ப நல்ல பொண்ணு பாட்டி'' என்றாள்.

''நல்ல பொண்ணுதான். யார் இல்லேங்கறது? என்ற பாட்டியின் குரலில் ஒரு ஆற்றாமை இழையோடிற்று.


''அதுதான் பாக்கி எல்லாத்தையும் விட முக்கியம் பாட்டி - இல்லையோ?''

பாட்டி சடக்கென்று திரும்பி அவளைத் தீர்க்கமாகப் பார்த்தாள்.

''முக்கியம்தான். ஆனா அதைவிட முக்கியமானதுன்னு சில விஷயங்களை எத்தனையோ காலமா நம்பிண்டு வந்திருக்கோம்டி குழந்தை - அதையெல்லாம் மாத்திக்க முடியல்லே. என்ன செய்யட்டும்?''

பாட்டியே அதற்காக வருத்தப்படுகிறாள் என்று தோன்றிற்று. இது மூர்க்கத்தனம் இல்லை, ஒரு இயலாமை என்பது போல தொனித்தது. ஆனால் பாட்டி சமையலறையில் இருக்கும் போதோ சாப்பிடும் போதோ யசோதா அருகில் வரவில்லை என்பதை மீரா கவனித்தாள். யசோதா தொட்டதைப் பாட்டி சாப்பிடமாட்டாள் என்கிற உண்மை தெரிந்தபோது மீண்டும் மீண்டும் மனசு அதிர்ந்தது, தனக்கே நேர்ந்த அவமானம் போல்.

'சமாதானமாகி விட்டார்களான்னு



● ஈரோடு நகரில் ஒரு ஓட்டலின் பெயர் மாமன் உணவு விடுதி.

● ஒரு டிராவல்ஸின் பெயர் : குரங்கு டிராவல்ஸ்.

● ஒரு தெருவின் பெயர் : பாவாடை தெரு

● ஓடும் பஸ் ஒன்றின் பெயர் : காகம்

- ஈரோடு அனுராதா

தெரியாது' என்று யசோதா சொன்னதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

அவர்கள் கிளம்பிச் சென்ற இரண்டு மூன்று நாட்களுக்கு, 'அவ தொட்டா என்ன, அவ சமைச்சதைச் சாப்பிட்டா என்ன', என்ற கேள்விகளால் அம்மாவைத் துளைத்து எடுத்ததில், அம்மாவுக்குக் கோபம் வந்தது. அம்மா பேச விரும்பாத விஷயம் அது என்று மீரா நினைத்துக் கொண்டாள். 'இதுக்கெல்லாம் சமூக, சரித்திர காரணங்கள் இருக்கு' என்றாள், அம்மா கடைசியில் நிதானமாக. ''கவலைப் படாதே. சமூகம் வேகமா மாறிண்டிருக்கு. முன்னே இருந்த ஜாதிக்கட்டுப்பாடெல்லாம் இப்போ ரொம்பக் குறைஞ்சு போச்சு, அத்தை இந்த அளவுக்கு மாறினதே பெரிய விஷயம்னு எடுத்துக்கோ.''

மீராவுக்குச் சமாதானமாகவில்லை. பாட்டியின் மாறுதல் உணர்வு பூர்வமாய் வந்தது. அறிவு பூர்வமாய் வராத வரையில் அவள் மாறி விட்டதாக எடுத்துக் கொள்ள முடியாது என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஆனால் அம்மாவின் பொறுமை நழுவிப் போயிருந்ததைக் கண்டு வாயை மூடிக் கொண்டாள்.

''நா வேற ஜாதிக்காரனைக் காதலிச்சா நீ என்ன செய்வே?'' என்றாள் சற்றுப் பொறுத்து.

அம்மா சட்டென்று நிமிர்ந்தபோது கண்களில் திகைப்புத் தெரிந்தது. மீரா சிரித்தாள்.

''யாரும் இன்னும் அகப்படல்லே எனக்கு, அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்ததுன்னு வெச்சுக்கோ, பாட்டி மாதிரி நடந்துப்பியா?''

''பாட்டி மாதிரி நான் ஏன் நடந்துக்கணும்? பாட்டி பதினாறு வருஷம் அமெரிக்காவிலே இருந்தாளா?''

மேற்கொண்டு விவாதத்தை வளர்த்த இஷ்டமில்லாமல் அம்மா சாதுர்யமாகப் பேச்சை மாற்றினாள். அன்று அப்பா அரை குறையாகத் தான் அமெரிக்கக் கலாசாரத்தைக் கண்டு பயந்து போனதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது. அது என்ன பயம் என்று இதுவரை அவளுக்குப் புரியவில்லை. அமெரிக்கனை அவள் காதலித்தால் என்ன செய்வது என்று அவர் பயந்திருந்தால் இவர்களுக்கும் பாட்டிக்கும் அதிக வித்தியாசமில்லை என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

தன் மனக்குழப்பங்களையெல்லாம் ஹரி புரிந்து கொள்வான் என்று அவளுக்கு வினோதமாகத் தோன்றிற்று. அவனுடன் பேசினால் தெளிவு ஏற்படலாம்.

ஆனால் அதற்கடுத்த நாட்களில் மாற்றி மாற்றி வகுப்பில் திடீர் பரீட்சைகள் வைக்கப்பட்டதால் வேறு சிந்தனைக்கே இடமில்லாமல் போயிற்று.

வெள்ளிக்கிழமை மாலை பரீட்சையெல்லாம் முடிந்து போன நிம்மதியுடன் ஒரு பாட்டை முணுமுணுத்தபடி அவள் பஸ் நிலையத்தை நோக்கிச் சாவகாசமாக நடந்த போது, அவளைத் தாண்டிச் சென்ற ஒரு கார் சற்று நின்று பின்னால் நகர்ந்து வந்தது. பின் ஸீட்டில் மீனாட்சி அமர்ந்திருந்தாள். முன் ஸீட்டில் இரண்டு இளைஞர்கள் அமர்ந்திருந்தனர்.

''ஹாய்!'' என்றாள் மீரா பொதுவாக.

''ஏறிக்கோ'' என்றாள் மீனாட்சி. ''உன்னை இறக்கிவிடறோம்!''

''ஓ.கே, தாங்க்ஸ்!'' என்று மீரா ஏறிக் கொண்டாள்.

மீனாட்சி அவர்களை 'சங்கர், மணி' என்று அறிமுகப்படுத்தினாள். அவர்கள் யார் என்று சொல்லவில்லை. மீனாட்சியிடம் இதுவரை தான் அவளுடைய வீட்டுக்குச் சென்று அவளுடைய அம்மாவுடன் பேசியதைப் பற்றிச் சொல்லவில்லை என்று மீராவுக்கு ஞாபகம் வந்தது. ஆனால் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை என்றும் தோன்றிற்று.

''சங்கர், பார்ட்டிக்கு ஒரு பார்ட்னர் வேணும்னு சொல்லிக்கிட்டிருந்தியே, மீராவைக் கூப்பிட்டுக்கயேன்'' என்றாள் மீனாட்சி.

''என்ன பார்ட்டி?'' என்றாள் மீரா வியந்து.

முன்னால் இருந்தவன் அவளைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்து, ''ஒரு கெட்டுகெதர் பார்ட்டி'' என்றான். ''நாளைக்கு உன்னாலே வர முடியுமா?''

அவனுடைய முகம் பரிச்சயமானதாகத் தோன்றிற்று. ஆனால் யார் என்று நினைவு வரவில்லை.

''நாளைக்குச் சாயங்காலம் டான்ஸ் கிளாஸ் இருக்கே?'' என்றாள்.

''காலையிலேதான் பார்ட்டி'' என்றான் அவன்.

(தொடரும்)



சென்னை - 600 027, 375) வி. முத்துஸ்வாமி, சென்னை - 600 075, 376) சௌதா கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 600 002, 377) சி. வி. நாராயணசாமி, சென்னை - 600 007, 378) பி. நிர்மலா பிரபாகர், சென்னை - 600 023, 379) பா. ரேவதி பாலசுப்ரமணியன், சென்னை - 600 071, 380) ரேவதி கிருஷ்ணா, சென்னை - 600 061, 381) மீனாக்ஷிரமணி, சென்னை - 600 033, 382) எஸ். முத்துஸ்வாமி, சென்னை - 600 033, 383) வி. சீனிவாசன், சென்னை - 600 024, 384) வெ. கணேசன், சென்னை - 600 045, 385) பி. ஈ. டி. நடராஜன், சென்னை - 600 011, 386) கோமதி சுயம்பிரகாசம், சென்னை - 600 033, 387) அ. இராமசாமி, சென்னை - 600 004, 388) எஸ். ஆருவமுதன், சென்னை - 600 014, 389) ப. வெங்கடலட்சுமி, சென்னை - 600 048, 390) கே. வி. அலமேலு, சென்னை - 5, 391) அல்லி சபேசன், சென்னை - 600 014, 392) எஸ். ரெங்கநாதன், சென்னை - 600 053, 393) விஜயலக்ஷ்மி, சென்னை - 600 053, 394) வி. ஆனந்த், சென்னை - 600 013, 395) டாக்டர். செ. தெய்வச்சிலை, சென்னை - 600 056, 396) ஆர். மோகன், சென்னை - 600 007, 397) ந. ரா. சுவாமினாதன், சென்னை - 600 015, 398) பி. கலாவதி, சென்னை - 600 053, 399) து. சந்தானலட்சுமி, சென்னை - 600 030, 400) டி. ஐ. பாலாஜி, சென்னை - 600 033, 401) ஜி. மணி, சென்னை - 600 109, 402) மா. பெருமாள், சென்னை - 600 114, 403) எஸ். அன்பரசி, சென்னை - 600 057, 404) எல். ஆர். சுந்தரராஜன், சென்னை - 600 028, 405) பத்மா முத்துப்பிள்ளை, சென்னை - 600 083, 406) ஆர். என். லக்ஷ்மணன், சென்னை - 600 053, 407) வரலக்ஷ்மி சுப்ரமணியன், சென்னை - 600 033, 408) இ. தாமஸ் அம்மாள், சென்னை - 71, 409) கீதா வரதராஜன், சென்னை - 600 019, 410) சைதை ஆர். முரளி, சென்னை - 600 015, 411) என். பாலசுப்பிரமணியன், சென்னை - 600 101, 412) எஸ். எஸ். கணேசன், சென்னை - 600 020, 413) ஏ. ஞானவேலு, சென்னை - 600 087, 414) வி. சுந்தரிபாய், சென்னை - 600 087, 415) ஆர். உஷா, சென்னை - 600 004, 416) பி. ஸ்ரீராம், சென்னை - 600 087, 417) டி. தணிகாசலம், சென்னை - 600 086, 418) கணபதி சுப்ரமணியம், சென்னை - 600 059, 419) ஜி. பாரதி ராஜ், சென்னை - 600 033, 420) பி. அர்ஜுனன், சென்னை - 600 044, 421) அகிலா முரளீதரன், சென்னை - 600 075, 422) சரஸ்வதி வேலு, சென்னை - 600 049, 423) எஸ். பாலசுப்பிரமணியம், சென்னை - 600 078, 424) ஆர். வான்மதி, சென்னை - 600 034, 425) கே. நடராசன், சென்னை - 21, 426) ல. கவிதா, சென்னை - 600 101, 427) ஈ. மனோகரன், சென்னை - 600 075, 428) எம். நடராஜு, சென்னை - 600 015, 429) மீனா கிருஷ்ணன், சென்னை - 600 101, 430) சாவித்திரி சுவாமிநாதன், சென்னை - 600 114, 431) லக்ஷ்மி கிருஷ்ணன், சென்னை - 600 004, 432) ஆர். கிருஷ்ணகுமார், சென்னை - 600 005, 433) எம். டி. பி. ராஜராஜேஸ்வரன், சென்னை - 600 102, 434) டி. பதிபூரணம், சென்னை - 600 049, 435) கே. ஜனார்த்தனன், சென்னை - 600 028, 436) ஆர். பாஸ்கர், சென்னை - 600 054, 437) எஸ். முருகவள்ளி, சென்னை - 600 023, 438) சாந்தா ராஜகோபாலன், சென்னை - 600 004, 439) ஜி. வெங்கடாசலம், சென்னை - 600 035, 440) சகுந்தலா சக்ரபாணி, சென்னை - 600 031, 441) சு. கிருஷ்ணசுவாமி, சென்னை - 600 087, 442) மு. சுப்பிரமணிய பிள்ளை, சென்னை - 600 078, 443) ஆர். லக்ஷ்மி நாராயணன், சென்னை - 600 042, 444) வனஜா கிருஷ்ணமூர்த்தி, சென்னை - 600 004, 445) எழில் அண்ணாமலை, சென்னை — 600 101, 446) வி. ஆர். சேஷாத்ரி, சென்னை - 600 090, 447) பத்மா சுந்தரம், சென்னை - 600 092, 448) உஷா திருமலை, சென்னை - 600 044, 449) ஆர். சாந்தி, நங்கநல்லூர், 450) சு. கோபி, சென்னை - 600 109, 451) டி. வி. பிரேமா, சென்னை - 600 005, 452) ஆ. சண்முகசுந்தரம், சென்னை - 600 114, 453) சந்திரா ஜகதீசன், சென்னை - 600 044, 454) எஸ். அங்குராஜன், சென்னை - 600 021, 455) எஸ். தனுஷ்கோடி, சென்னை - 600 024, 456) ஜி. மகாலட்சுமி, சென்னை - 600 084, 457) எஸ். செல்லப்பா, சென்னை - 600 050, 458) எஸ். எஸ். ராகவன், சென்னை - 600 044, 459) குழந்தை செல்லம், சென்னை - 600 013, 460) சி. வீரராகவன், சென்னை - 600 032, 461) கே. திரிவேணி, சென்னை - 600 004, 462) ஏ. வெங்கட்ராமன், சென்னை - 600 020, 463) க. சந்திரசேகரன், சென்னை - 600 004, 464) எஸ். நளினி ராமநாதன், சென்னை - 600 017, 465) எஸ். ரெங்கன், சென்னை - 600 102, 466) ந. ஜெயராமன், சென்னை - 600 078, 467) மு. அ. வசந்தகுமாரி, சென்னை - 600 020, 468) ஏ. விஜயலக்ஷ்மி, சென்னை - 600 005, 469) ஜெ. அம்சா, சென்னை - 600 004, 470) நாகை. மனோகரன், சென்னை - 602 013, 471) டி. ஜி. ஸ்ரீசைலன், சென்னை - 600 044, 472) பாலசுப்ரமணியன், சென்னை - 600 052, 473) வி. கௌசல்யா, சென்னை - 600 041, 474) என். விஜயலக்ஷ்மி, சென்னை - 600 028, 475) வி. சுந்தரேசன், சென்னை - 600 053, 476) வி. பாரதி, சென்னை - 600 045, 477) வசந்தா பத்மனாபன், சென்னை - 600 004, 478) கோ. கணபதி, சென்னை - 600 053, 479) எம். லக்ஷ்மி, சென்னை - 600 002, 480) சி. லோகநாதன், சென்னை - 600 116, 481) வி. சிவானந்தம், சென்னை - 600 075, 482) ரெ. இராமச்சந்திரன், சென்னை - 600 015, 483) ஏ. வி. ஸ்ரீனிவாசன், சென்னை - 600 044, 484) வி. ஜே. நடராசன், சென்னை - 600 015, 485) என். சுப்ரமணியன், சென்னை - 600 078, 486) உஷா முகுந்தன், சென்னை - 600 033, 487) எஸ். சீதாலக்ஷ்மி, சென்னை - 600 035, 488) பி. மங்களா கௌரி, சென்னை - 600 073, 489) எம். திலகவதி, சென்னை - 600 057, 490) ஆர். பாலசுப்ரமணியம், சென்னை - 600 064, 491) சி. இராதாகிருஷ்ணன், சென்னை - 600 045, 492) வே. வரதராஜன், சென்னை - 600 035, 493) பி. ஜே. பாக்கியலக்ஷ்மி, சென்னை - 600 080, 494) தங்கம் சிவசங்கரன், சென்னை - 600 078, 495) டி. கே. சீனிவாசன், சென்னை - 600 018, 496) ரா. புவனேஸ்வரி, சென்னை - 600 021, 497) எஸ். விஸ்வநாதன், சென்னை - 600 032, 498) ஏ. சுப்ரமணிய ஐயர், சென்னை - 600 001, 499) டாக்டர். ஆர். சுப்ரமணியன், புளியங்குடி - 627 855, 500) இரா. சுந்தரேசன், சிதம்பரம் - 608 701.

■

புயல் நாணல்

ஆஸ்பெஸ்டாஸ் கூரையில் மழை நடனமாடிக் கொண்டிருந்தது.

யுவராஜ் தீக்குச்சியை உரசி மெழுகு வர்த்தியைப் பற்ற வைத்தான். அவன் மூச்சுக்கேற்ப ஜோதி புரண்டு எழுந்தது.

அவன் அந்தக் கத்தியை எடுத்தான். கூரான முனை மாலையில்தான் தீட்டப் பட்ட பளபளப்போடு மின்னியது. அதைப் புகைப்படத்தின் கீழ் வைத்தான்.

சாயம் போன போட்டோவில் லலிதா சிரித்தாள். சிரிக்கும் போது கண்ணோரங் களில் சுருக்கங்கள். மூக்கின் இருபுறமும் பெரிய பிராக்கெட் வளைவுகள். ரகசியப் படாத மேல் ஈறுகள்.


யுவராஜுக்கு அவள் சிரிப்பை மறுபடியும் பார்க்க வேண்டும் போல் இருந்தது.

அந்த ஒற்றை அறை யில் சிலேட்டுப் பலகை அளவு இருந்த ஜன்னல் வழியே சாரல் உள்ளே தெறித்துக் கொண் டிருந்தது. சுவரோரமாகப் போடப்பட்ட மரக்கட் டிலில், நரம்புகள் உரிந்த பாயை நனைத்துக் கொண்டிருந்தது.

அந்தக் கட்டில் அவ னைப் பொறுத்த வரை இனிமேல் விறகுதான். இந்தக் கட்டிலில் உட் கார்ந்துதானே லலிதா அன்றைக்கு...

சுடருக்குக் கீழே மெழுகு சொட்டியது. கன் னங்களில் கண்ணீர் சொட் டியது.

ஜன்னல் வழியே காற்று சீறியது. மெழுகுச் சுடரை மிரட்டியது. கூரையிலிருந்து தொங்கிய உயிரில்லாத மின்சார



பல்பு தூளி ஆடியது. பணம் கட்டவில்லை என்று மின்சாரம் நிறுத்தப்பட்டுவிட்டது.

காற்று சும்மா இல்லாமல் சுவரில் சாய்த்து நிறுத்திய ஓவியப் பலகையை உந்தித் தள்ளியது.

லலிதா இருந்தால் பதறியிருப்பாள். அவனைத் தள்ளிக் கொண்டு ஓடி, அதை நிமிர்த்தி, அதற்கொரு முத்தம் கொடுத்திருப்பாள். அவன் அலட்சியம் செய்தான்.

முனை உடைந்த மேஜையில் இருந்த வர்ணங்களில், தூரிகைகளில் லலிதா சிரித்தாள். தூரிகையின் இளம் ஆட்டு முடிகளைத் தொட்டு வருடிய போது, லலிதாவையே ஸ்பரிசித்த உணர்வு.

பார்வை அங்கேயே நின்றிருக்கலாம். ஏனோ தடுக்கிக் கீழே விழுந்தது. எட்டாய் மடித்த அன்றைய தினசரியின் பழுப்பு நியூஸ்ப்ரிண்ட்டில் ரகுவீரின் முகம் அச்சாகியிருந்தது. செய்தித்தாளின் மசியில் அந்த முகம் மசமசத்துப் போயிருந்தாலும் ரகுவீரிடம் ஒரு வெற்றிச் சிரிப்பு இருப்பதாக யுவராஜுக்குத் தோன்றியது. போட்டோவிடம் ஆசீர்வாதம் பெற்ற கத்தியைக் கையில் எடுத்தான்.

''லலிதா... ரகுவீர் என்னை ஏமாற்றி விட்டான், தெரியுமா?''

அவள் எந்த பதிலும் சொல்லப் போவதில்லை என்று தெரிந்திருந்தும், அந்த செய்தித்தாளை எடுத்து அவள் முகத்துக்கு நேரே நீட்டினான். ''படித்துப் பார், லலிதா...'' கத்தி முனையால் வரிகளைச் சுட்டிக்காட்டினான்.

பெங்களூரில் ரகுவீரின் ஓவியக் கண்காட்சியைக் கவர்னர் திறந்து வைத்தார். மொத்தம் இருபத்தேழு ஓவியங்கள். ஐந்து நாள் கண்காட்சி. சென்ற முறை ரகுவீரின் தங்கக் கொலுசு என்ற ஓவியம் இருபத்திரண்டாயிரம் ரூபாய்க்கு ஏலம் போனது நினைவிருக்கலாம். இந்த வருடம், மண்ணில் வந்த மஞ்சள் நிலா என்ற ஓவியத்தை வாங்க ஏற்கெனவே ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலும், ஒரு மூன்றடுக்கு தியேட்டர் காம்ப்ளெக்ஸும் போட்டியிடுவதாகத் தெரிகிறது. கண்காட்சியின் கடைசி நாளன்று ஏலத்தில் அந்த ஓவியத்திற்கு முப்பது, முப்பத்தைந்தாயிரம் வரை கிடைக்கலாம் என்று பேசப்படுகிறது. இந்த ஓவியம் குறித்து ரகுவீர் பேசிய போது...

''நீ என்னடா பேசுவது? உனக்கு அந்த ஓவியத்தைப் பற்றி என்னடா தெரியும்? மண்ணில் வந்த மஞ்சள் நிலா என்று கொச்சையாகத் தலைப்பு வைத்ததிலேயே உன் அருகதை புரிந்து போய் விட்டதே... நாயே, முப்பதாயிரமா எதிர்பார்க்கிறாய்? என்னிடம் அன்றைக்கு என்னடா சொன்னாய்?''

ஆத்திரம் திறந்த சோடா போல் குமுறிக் கொண்டு வந்தது. தூரிகை பிடித்த விரல்கள் செய்தித்தாள் புகைப்படத்தைக் குறுக்கில் கிழித்தன. கத்தியால் குத்திச் சிதைத்தன. நான் ஏன் ரகுவீரைச் சந்தித்தேன்?

சில கூரான பென்சில்களையும், கறுப்பு மசி பேனாக்களையும், வரைந்த நோட் புத்தகங்களையும், கடல் கடலாய் நம்பிக்கையையும் சுமந்து கொண்டு நகரத்தில் பிரவேசித்த போது, யுவராஜ் கனவையும் கட்டி இழுத்து வந்திருந்தான்.

லலிதா அவனுடைய இளம் மனைவி. சிவந்து ஒளிரும் மேனி. நீண்ட பிரகாசமான விழிகள். உதட்டோரம் ஒரு மின்னல். குடைந்தெடுத்த அளவுகள்.

வந்த முப்பது நாட்களுக்குள் நிலவைப் போல கையிருப்பு தேய்ந்து விட்டது. ஏறிய எத்தனையோ படிகளிலிருந்து ஏமாற்றத்துடன் இறங்கியாயிற்று.

''தப்புப் பண்ணிட்டேனா லலிதா? பத்திரிகை ஆபீஸ்லயும் சரி, சினிமாக் கம்பெனியிலயும் சரி, 'இப்ப ஆள் வேண்டாங்கன்'னு தான் மூஞ்சில கதவைச் சாத்தறாங்க. என்னத்தைப் பெரிசா சாதிக்கப் போறேன்னு நெனைச்சு உன்னையும் இழுத்திட்டு வந்தேன்?''

''ப்ச்சு. அவங்கதான் அதிர்ஷ்டமில்லாதவங்க...''

''அப்படி சொல்லாத லலிதா. என் ட்ராயிங்கையெல்லாம் புரட்டிப் பார்த்துட்டு, கல்லு மாதிரி முகத்தை வச்சுக்கிட்டுத் திருப்பித் தர்றாங்க... அவங்களைத் திருப்திப்படுத்தற மாதிரி என்னால வரைய முடியலைதானே?''

''உண்மையான கலைஞன் யாருக்காகவும் வரையறதில்லே ராஜா. ஒன், டூ, த்ரீ சொல்றதுக்காக வெயிட் பண்ணி கடகடன்னு வரையறது இல்ல ஓவியம். அது வரையறவனோட ஆத்மா. பாக்கறவன் அந்த ஆத்மால எச்சில் துப்பிட்டுக் கூடப் போலாம். அதுக்காக அசிங்கப்பட்டதா நெனைச்சுரக் கூடாது. மத்தவங்களுக்காக நீங்க உங்க பாஷையை மாத்திக்க முடியாது. உங்ககிட்ட இருக்கற நெருப்பை ஒண்ணரையணாவுக்கும் ரெண்டணாவுக்கும் விக்க வேண்டாம் ராஜா...''

ஒண்ணரையணா, ரெண்டணா என்று எந்த ஜுரத்தில் சொன்னாளோ லலிதா? நான்கு நாள் கழித்து, வரைந்ததெல்லாம் நடைபாதைக்கு வந்து விட்டது. மும்முர

சுபா

மான ஒரு கடைச் சந்தியில் அவனுடைய உழைப்புகள், காற்றில் பறக்காமல் இருக்க ரோடோரம் பொறுக்கிய கற்களுக்குக் கீழ் பரப்பப்பட்டன. ரகுவீரை அங்கேதான் சந்தித்தான் யுவராஜ்.

''எல்லாவற்றையும் பொறுக்கு. ஏறு என் ஸ்கூட்டரில்''

ரகுவீருக்குத் தனி வீடு இருந்தது. கால் வழுக்கும் தரை. மெஷினால் சுத்தம் செய்த சோஃபா. சுவரை அலங்கரிக்கும் வர்ண ஓவியங்கள்.

''உக்காரு. உன் பேரென்ன?''

சொன்னான். பேரை. ஊரை. புறப்பட்டு வந்ததை. இருட்டிக் கொண்டு வரும் எதிர்காலத்தை.

''முட்டாள். வெறும் ட்ராயிங்கை வச்சுக்கிட்டு வயித்தை ரொப்பிடலாம்னு வந்தியா? ஏதாவது ஆபீஸ்ல குமாஸ்தா வேலை தேடிக்கோ. பொழுது இருந்தா வரைஞ்சு மாட்டிக்கோ - என்ன மாதிரி.''

''தெரிஞ்ச தொழிலுக்கே எவனும் வேலை தரலை...''

''படம்லாம் பரவாயில்ல... ரசிக்கறதுக்கு என்னை மாதிரி இன்னொரு ஓவியனாலத்தான் முடியும். உன்னப் பாத்தாப் பாவமாயிருக்கு. நானே மொத்தமா வாங்கிக்கறேன். என்ன விலை சொல்றே?''

நெகிழ்ந்து விட்டது. ''நீங்க என்ன கொடுத்தாலும் சரி.''

முப்பத்திரண்டு ஓவியங்களுக்கு இருநூறு ரூபாய் கைமாறிற்று.

''இன்னும் வரைஞ்சு எடுத்திட்டு வா.. அங்க இங்க அலையாத. நேர என்கிட்ட கொண்டா. நான் மொத்தமா வாங்கிக்கறேன்... ஆனா... ஆனா ஒவ்வொரு படத்துக்கும் கீழ் மொத்தையா உன் கையெழுத்துப் போடற பாரு, அதை விட்டுரு... கையெழுத்து நான் போட்டுக்கறேன்...''

''அதெப்படிங்கய்யா...?''

''இதுவரைக்கும் மூணு தடவை அவார்டு வாங்கியிருக்கேன். தனியா ஒரு ஓவியப் பள்ளியே நடத்தறேன். ஆறு எக்ஸிபிஷன் வச்சிருக்கேன். இனிமேதான் இந்த ரகுவீர் பாப்புலராகணும்னில்ல. உன் ஓவியத்துல ஒரு புது டைமன்ஷன் இருக்கு. ஒரு வெரைட்டி இருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கு. வரைஞ்சு வரைஞ்சு எனக்குன்னு ஒரு ஸ்டைல் ஏற்பட்டுப் போச்சு. அதை உடைக்கறதுக்காகத்தான் உன்கிட்ட கேட்டேன்... மாட்டேன்றியா, எனக்கு எந்த நஷ்டமுமில்ல.''

''அதுக்கில்லீங்க...''

''இத பாரு... காசுக்கு விக்க வந்தப்புறம் அது இல்லீங்க, இது வேண்டாங்கன்னுல்லாம் பேச முடியாது... பிடிக்கலையா, ரூபாயைத் திருப்பிக் கொடு. உன் கிறுக்கலையெல்லாம் எடுத்துக்கிட்டு நடையைக் கட்டு...''

வயிறு இதயத்தை வென்றது.

லலிதாவுக்கு முதலில் பிடிக்கவில்லை.

''எதுக்காக நீங்க கஷ்டப்பட்டு வரைஞ்சதை அந்த ஆளு பேர் போட்டு விக்கணும்? அந்த ஆளு பார்வையே சரியில்ல ராஜா... வக்கிரமான கண்ணு...''

''அவனுக்கு வியாபாரம் தெரிஞ்சிருக்கு லலிதா. எனக்கு வரைய மட்டும்தான் தெரியும்...''

அப்புறம் லலிதா ஒன்றும் சொல்வதில்லை. சொன்னால் அவனுடைய மிருதுவான இதயத்தில் குண்டுசி இறங்கி விடுமோ என்ற யோசனையாயிருக்கலாம். அவனுடைய கையாலாகத்தனத்தைக் குத்திக்காட்டுவதாக நினைத்துவிடப் போகிறானே என்று மௌனமாயிருந்திருக்கலாம்.

ஜோடிப் புறா. மலையோர அருவி. வண்டி இழுக்கும் கூலிக்காரன். கிலுகிலுப்பைக்குச் சிரிக்கும் குழந்தை. சுடரான பார்வையோடு பூனைக்குட்டி. நீரில் மிதக்கும் நிலா. படகு நிழல் காதலர்கள்.

வரைய வரைய உண்டியல் நிரம்பியது.

''எத்தனை நாளைக்கு இதையே வரைஞ்சிட்டிருப்ப, யுவராஜ்? போர்ட்ரெய்ட் வரைவியா?''


''யாரைங்க?''

''நான் போட்டோ கொண்டு தரேன். லைஃப் சைஸுக்கு வரையணும். ஆயில் பெயிண்டிங். கேன்வாஸ், ஆர்ட் போர்டு, ஜெர்மனில தயாரிச்ச ஹாக் பிரஷ், லண்டன்ல தயாரான வின்ஸன் அண்ட் நியூட்டன் கலர் ட்யூப்ஸ் எல்லாம் என் செலவுல தரேன்... என்ன சொல்றே?''

''வாடகையை இருநூறுலேர்ந்து போன மாசம் இருபத்தஞ்சு ரூபா ஏத்திட்டாங்க... அரிசி பருப்பு வெலையெல்லாம் கட்டுப்படியாகல...''

''காசு அதிகமா வேணுமா?''

ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் ஒற்றை



❑ மாதக் கடைசி பார்த்து நம் வீட்டிலுள்ள ''டிரான்சிஸ்டர் செல்'' பவர் குறைந்து ஒலி மிகவும் சன்னமாக இருக்கிறது. என்ன செய்வது? செல்களை நான்கு மணி நேரம் வெய்யிலில் காயவைத்து மீண்டும் உபயோகித்துப் பாருங்கள். ஓரிரு நாள் தாக்குப்பிடிக்கும்.

- ஜி. நிர்மலா


நரசூஸ் அளிக்கும்
புத்தாண்டு, பொங்கல்
வெகுமதிகள்!
கேட்டீங்களா சேதியை? நரசூஸ் காபி வெகுமதி கொடுக்கறாங்களாமே!
பேஷ், பேஷ்! ரொம்ப நல்ல செய்தி!
வெகுமதிகள்:
• 35 கிலோவிற்கு எவர்சில்வர் பிளேட்.
• 10 கிலோவிற்கு எவர்சில்வர் டபரா செட்.
• 6 கிலோவிற்கு எவர்சில்வர் டம்ளர்.
• 2 கிலோவிற்கு துணிப்பை.
• ½ கிலோவிற்கு எவர்சில்வர் ஸ்பூன்.
ஜீவனுள்ள ஒரே காபி
நரசூஸ் காபி
நரசூஸ் காபி கம்பெனி
மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசூஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று, வெகுமதிகளைப் பெறுங்கள். 30.12.91 முதல் 1.2.92 -ல் முடியும் விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.
அப்படியா! இதோ போறேன்!
நரசூஸ் காபி வாங்க!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசூஸ் காபி
நரசூஸ் காபி கம்பெனி
சேலம் 636 007
கிளைகள்: தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலும்.
ADWAVE/NCC/4341

யறை வீடும், சில அலுமினியப் பாத்திரங் களும், ஒரு பழைய மரக்கட்டிலும், வேய்ந்த பாய்களும், நான்கு மாற்றுடை களும் கௌரவமான வாழ்க்கைக்குப் போதுமானவையாய் இருந்தன. லலிதா வுக்கு அந்த புதுப் பிரச்னை வரும் வரை.

ஒரு வெள்ளிக்கிழமை விடியலில் அடுப்படியில் அறுத்த துணி போல் விழுந் தாள்.

''அனீமிக்காக இருக்காங்க.'' மாத் திரைகள்.

மூன்று நாட்களுக்குள் புதிய திருப்பம். வரைந்து கொண்டிருந்தவன் தோளில் தட்டித் திருப்பினாள்.

''இப்ப மட்டும் என் கண்ணு வழியாக உங்களால பாக்க முடிஞ்சுதுன்னா, ரஷ்யா, அமெரிக்கால்லாம் கூட உங்க ஓவியத்துக்கு ஏக டிமாண்ட் வந்துடும்.''

''உன் கண்ணுலயா? என்ன சொல்ற லலிதா?''

''இப்ப உங்களைப் பாக்கறப்பவே ரெண்டா தெரியறீங்க. ஒருத்தர் இதோ பக்கத்துல. இன்னொருத்தர் ஒரடி பின்னால தள்ளி. எல்லாருக்கும் த்ரீ டைமன்ஷன்ல தான் தெரியும். எனக்கு ஆறு டைமன்ஷன்ல பார்வை தெரியுது, ராஜா...''

''என்ன லலிதா, சிரிச்சுக்கிட்டே சொல்ற? நாளைக்கு கண் டாக்டர்கிட்ட போலாம்...''

கண் டாக்டர் நியூரோ ஸ்பெஷ லிஸ்டைப் போய் உடனே பார்க்கும்படி கைகாட்டினார். கன்ஸல்டேஷனுக்கு நூறு ரூபாய் என்றதும் முதல் தடவை காட்டாம லேயே வந்து விட்டார்கள். ரகுவீரிடம் கெஞ்சி அட்வான்ஸ் வாங்கி நியூரோ ஸ்பெஷலிஸ்ட் தரிசனம் கிடைத்த போது,

''காம்ப்ளிகேடட் கேஸா இருக்கு. ஒரு சி. டி. ஸ்கேன் எடுக்கணும்...''

''அப்படீன்னா?''

''மூளையை ஸ்கேன் பண்ணணும். ப்ளெயின் ஸ்கேன் போதாது. ஒரு கான்ட் ராஸ்ட் ஸ்கேன் எடுத்திட்டு வாங்க.. ரொம்ப டிலே பண்ணாதீங்க..''

''எவ்வளவு ஆகுமுங்க?''

''என்ன ஆயிரத்தைநூறு, ஆயிரத்து அறுநூறு ரூபா ஆகும்... என்ன பண்றது? ஏழைங்களுக்குத்தான் ஏரோப்ளேன்ல வியாதி வருது...''

வீட்டிற்கு வந்ததும் லலிதா உதட்டைச் சுழித்தாள். ''கிழத்துக்குக் காசு ஆசை.. ஆயிரத்தைக் கொண்டா, ரெண்டாயிரத் தைக் கொண்டான்னு... அதும் மூஞ்சைப் பாத்தா டாக்டர் மாதிரியா இருக்கு?''

''லலிதா இது வெளையாடற சமா சாரமில்ல...''

''யாரு இப்ப வெளையாடினாங்க? எங்கம்மாவுக்குக் கூட அப்பப்ப இப்படி இருக்கும்... சுக்கு மிளகைத் தட்டிப் போட்டு கஷாயம் வச்சுக் குடிச்சா ரெண்டு நாள்ல சரியாப் போயிடும்...'

இரண்டு நாள் கழித்து அவனைப் பின் புறமிருந்து வந்து கட்டிக் கொண்டாள். ''சரியாப் போயிடுச்சு ராஜா. சத்தியமா சரியாப் போயிடுச்சு...''

அவளை நம்பியது தப்பு. இரண்டு வாரம் தள்ளி ஒரு நாள் சுவர் எங்கு இருக்கிறது, வாசல் எங்கிருக்கிறது என்று புரியாமல் போய் அவள் முட்டி நின்ற போது, பொய் வெடித்து விட்டது.

''லலிதா!'' வாழ்நாளில் அவன் அப்படி இரைந்தது இல்லை. ''இந்த துப்புக் கெட்டவனோட வாழறதை விட செத்துப் போயிடலாம்னு முடிவு பண் ணிட்டே இல்லே?''

அவன் இதயத்தைக் குறுக்கில் கிழித்து விட்டோமோ என்ற பதைப்பு. ஐயையோ, நிஜமாகவே இவனைத் தனியனாகத் தவிக்க விட்டு விட்டுப் போய் விடுவோமோ என்ற அச்சம். அவன் மடியில் அழுதாள்.

''ஸ்கேன் பண்ணிப் பாத்துரலா முங்க...''

'ரெண்டாயிரம். யூ மீன் டு தவு ஸண்ட்ஸ்!'

ரகுவீரின் கண்கள் பலூன் பலூனாக விரிந்தன.


''வெளையாடறியா, யுவராஜ்? உன் படத்துக்கு அவ்வளவு காசு எவன் கொடுப் பான்?''

''என் பெண்டாட்டி உசிரு உங்க கைல இருக்குங்க...''

''இதப் பாரு நீ போடற பூனையையும், நாயையும் பத்து ரூபா கொடுத்து வாங்கினா அதிகம்...''

''இல்லீங்க... நீங்கதான் எப்படியாவது காப்பாத்தணும்...''

''அப்ப ஒண்ணு செய்யி... லைஃப்



சைஸ் ந்யூட் போர்ட்ரைட் வ ரை ஞ் சு கொண்டா.. எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் கிட்ட பேசிப் பாக்கலாம்...''

''ந்யூடா?''

''பச்சையா சொன்னாத்தான் புரியுமா? நிர்வாணப் படம். உ ன் னை ன வரைஞ்சு கொண்டு வந்துராத.. பொம்பிளைப் படம்...''

''ஐயையோ...!''

''தொழிலுய்யா... போ... செய்யி...''

அன்றைக்கு மாலைதான் மின்சாரம் மறுக்கப்பட்டது.

மெழுகுவர்த்தி வெளிச்சத்தில், குட்டி ஜன்னலுக்கும் ஒரு திரை போடப்பட்டு இந்தக் கட்டிலில்...

மூன்று மாலை நேரங்கள் செலவாயின.

திரையை விலக்கி ஓவியத்தைப் பார்த்ததும் அறையப்பட்டது போல் நின்று விட்டான் ரகுவீர்.

''மூஞ்சி பூரா கூந்தலை வச்சு மறைச்சிட்டியேய்யா... யாருய்யா இது இப்படி ஒரு உடம்போட?''

''ரெண்டாயிரம் தரேன்னீங்க...''

''ரெண்டாயிரமா! அவ்வளவு பணம் எவன்யா கொடுப்பான் இந்தப் படத்துக்கு? முன்னூறு ரூபா வாங்கிக்க...''

''முன்னூறு ரூபாயா!''

''சரி, உனக்காக ஐந்நூறு ரூபா.. அது தான் லிமிட்.. மஞ்சள் வெளிச்சத்துல வரைஞ்சிருக்க பாரு.. அதுதான் ஹைலைட். ஓவியத்துக்குப் பேர் கூட வச்சுட்டேன்.. மண்ணில் வந்த மஞ்சள் நிலா. ஆங்கிள் சூப்பரா செலக்ட் பண்ணியிருக்கே...''

''கொ றை ஞ் ச து ரெண்டாயிரம் வேணுங்க...''

''உன் கைல வேலை இருக்கு... அப்புறம் ஏன்யா பஞ்சப்பாட்டுப் பாடற? போ.. இன்னும் மூணு நாலு படம் இதே பொண்ணை வேற வேற கோணத்துல வரைஞ்சு எடுத்திட்டு வா... ஒரு படத்துக்கு ஐந்நூறு ரூபா...''

அழுகை பீறிட்டது. ''அழாதீங்க ராஜா... எனக்காகத்தானே இந்த அவமானம்?''

இரண்டாவது ஓவியத்தின் குறை கர்ப்பத்தில், ராத்திரி ஒன்பது மணிக்கு லலிதா கட்டிலில் சுருண்டு விழுந்தாள்.

ஏற்கெனவே வாங்கிய ஐந்நூறு ரூபாயில் ஆஸ்பத்திரி, அவசர டாக்டர், ரூம் வாடகை, எமர்ஜன்ஸி மருந்து எல்லாவற்றிற்கும் போக கடைசியில் அவள் படத்திற்கு ஒரு பூமாலை வாங்கிப் போடத்தான் மிச்சம் இருந்தது.

உறக்கமில்லாமல், ரிசர்வேஷன் செய்யாத ரயில் பெட்டியில் டிக்கெட் இல்லாமல் இரவு முழுக்க உட்கார்ந்து வந்திருந்த போதும், இளங்காலையின் குளிரில் பெங்களூர்க் கூட்டத்தில் கலந்த போது யுவராஜ் சற்றும் களைப்பாக உணரவில்லை.

பாக்கெட்டில் இருந்த கத்தியை மட்டும் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

கண்காட்சிக் கூடத்தின் விற்பனை ஹால் முற்றிலும் குளிர்வசதி செய்யப்பட்டிருந்தது.

ஏலம் மிக மும்முரமாய்ப் போய்க் கொண்டிருந்தது.

மூன்றாவது வரிசையில் ரகுவீரின் பார்வையில் படாத மூலையில், யுவராஜ் துடிக்கும் இதயத்தோடு, முடுக்கப்பட்ட, வேகத்தை அடக்கிய ஸ்ப்ரிங் போலக் காத்திருந்தான். வலது கை கத்தியின் கைப்பிடியில் பதிந்திருந்தது.

''அடுத்தது நீங்கள் எல்லோரும் ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் மண்ணில் வந்த மஞ்சள் நிலா'' அறிவிப்பாளரின் நாடக பாணி உச்சரிப்பு.

ரகுவீர் எழுந்தான். ஓவியத்தை மூடிய திரையை விலக்கலானான்.

நாற்காலி சப்தத்தோடு பின்னால் கவிழ, யுவராஜ் எழுந்தான். முன் இரு வரிசைகளையும் கலைத்துப் பாய்ந்தான்.

ரகுவீர் அரண்டு தற்காப்பாக முகத்திற்குக் குறுக்கே இரண்டு கைகளையும் தூக்கினான்.


யுவராஜ் அவனை இடதுகையால் ஒதுக்கித் தள்ளினான்.

கத்தியை வலுவாகப் பற்றினான். பாய்ச்சினான்.

கேன்வாஸ் பொத்துக் கொண்டது. சர்ர்ர்ர்ர்.... கிழிந்தது. சர்ர்ர்ர். இன்னொரு பகுதி கிழிந்தது.

அவனுடைய புஜங்கள் பின்புறமிருந்து பற்றப்பட்டு அவன் இழுக்கப்படுமுன் மண்ணில் வந்த மஞ்சள் நிலா துண்டம் துண்டமாகக் காற்றில் பறந்தது.

- ஆர். ரகோத்தமன்



காதலெனும் வானவில்

12

வெகு நாள் கழித்து இன்று ஒரு கனவு வந்தது. இது கனவு என்கிற பிரக்ஞையும் கூடவே இருந்தது விசித்திரமாக இருந்தது. கனவின் கதாபாத்திரமாய் இருக்கும் தன்னையே பார்வையாளராய் பார்ப்பது போல. கண்ணைக் கட்டிய நிலையில் வளைந்து வளைந்து செல்லும் ஒரு இடத்தின் மையத்தில் நிற்பது போல் இருந்தது. கையைத் துழாவித் துழாவித் திண்டாடிய படி நகருவதைக் கண்டு திகைப்பு ஏற்பட்டது. சுற்றிலும் கும்மிருட்டு. மனித சஞ்சாரமேயில்லாதது போன்ற அந்த மயான மௌனம் பீதியளித்தது.

குப்பென்று மீராவுக்கு உடம்பு வியர்த்தது. கண் விழித்ததும் பளிச்சென்ற சூரிய வெளிச்சம் அறைக்குள் நுழைந்திருந்ததைக் கண்டு தெம்பும் ஏற்பட்டது. ஓ, காட், கனவு! கனவில் ஏற்பட்ட தடுமாற்றமும், கலவரமும் இன்னமும் நிஜமான அனுபவங்களாய்த் தோன்றின. பார்வை இல்லாதவர்களின் நித்திய அனுபவம் போல. ஹரிக்கு இப்படித்தான் இருக்கும். அவன் வீட்டின் வாசலுக்கு அப்பால் இருக்கும் உலகம் இந்தக் கனவில் வந்த திசை புரியாத அந்தகாரமாகக் கலவரத்தைக் கொடுக்கும். நாபியிலிருந்து ஒரு துக்கம் எழுந்து கண்களில் நீர் திரையிட்டது.

''மீரா!''

அம்மாவின் குரலுக்குப் பதில் சொல்லும் மனநிலையில் இல்லாமல் அவள் குப்புறப்படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அம்மாவின் குரல் படியேறி அருகில் கேட்டது.

''எழுந்திருக்கல்லியா? பத்து மணிக்கு ஏதோ பார்ட்டிக்குப் போகணும்னு சொன்னியே?'' மணி எட்டரை ஆச்சு.''

''ஓ. எழுந்திருக்கறேன்'' என்றாள் மீரா அலுப்புடன். பிறகு முகத்தைத் திருப்பி, ''அந்தப் பார்ட்டிக்குப் போகணுமான்னு இருக்கு'' என்றாள்.

''போயிட்டு வாயேன்'' என்றாள். அம்மா சிநேகிதமாக. ''பரீட்சைக்குப் படிச்சு, சோர்ந்து போயிருக்கே. கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணின மாதிரி இருக்கும்.''

மீரா உற்சாகமில்லாமல் எழுந்திருந்தாள். நேற்று மீனாட்சியின் அழைப்பை ஏற்றுக் கொண்டது முட்டாள்தனம் என்று தோன்றிற்று. அவளுடைய சிநேகிதர்கள் யார், எப்படிப்பட்ட பார்ட்டி என்று ஒன்றும் தெரியாது. அந்த சங்கரை இதற்கு முன் எங்கே பார்த்திருக்கிறோம் என்று இப்பவும் ஞாபகம் வரவில்லை. ஏதாவது ஒரு திருமணக் கூட்டத்தில் சந்தித்திருக்கலாம். அல்லது சந்தித்திருப்பதாக நினைப்பதே அவளது கற்பனையாகவும் இருக்கலாம்.

நேற்றைய இளக்கமான மனநிலையில் மீனாட்சி பார்ட்டிக்கு அழைத்த போது, அவளுடன் நெருக்கமான சிநேகிதம் இல்லாமல் போனாலும், மறுக்க முடியாமல் போயிற்று. 'நா வந்து கூட்டிட்டுப் போறேன்' என்று மீனாட்சி சொல்லியிருந்தாள்.

இப்போது குளியலறையில் கண்ணாடியைப் பார்த்தபடி பல் தேய்க்கும் போது தனது பிம்பத்தைப் பார்த்து 'நீ ஒரு முட்டாள்' என்றாள் மீரா பலக்க. இப்பவும் மீனாட்சிக்கு டெலிபோன் செய்து, 'நா வரல்லே மூடில்லே' என்று சொல்லலாம். ஆனால் அதற்கு அவள் வேறு அர்த்தம் கற்பித்துக் கொள்வாள். பத்தாம் பசலி என்று நினைக்கலாம் 'பார்ட்டியிலே என்ன செய்வீங்க' என்று கேட்ட போது, 'பாட்டி மாதிரி இவ கேள்வி கேக்கறதைப் பாரேன்!' என்று மீனாட்சி சிரித்தாள். ''அமெரிக்காவிலேதான் பார்ட்டி உண்டுன்னு நினைச்சியா?''

அமெரிக்காவில் இருந்தவரை அவளுக்கு டேட்டிங் செல்ல வயதாகியிருக்கவில்லை. அவள் சென்றதெல்லாம் பிறந்த நாள் விருந்துகள், கோடைக்கால காம்ப் விருந்துகள். விளையாட்டும் பாட்டும் ஆட்டமும் சாப்பாடுமாகப் பொழுது பறக்கும். சாதாரணமாக அம்மாக்கள் கொண்டு விடுவார்கள். பிறகு அழைத்துச் செல்வார்கள். மீனாட்சி நேற்றும் எங்கம்மா கிட்டே சொல்லாதே என்றாள். இவள் ஏன் இதை இத்தனை மறைக்க வேண்டும் என்று

தெரிந்து கொள்வதற்காகவேனும் போய் வர வேண்டும் என்ற உள்ளார்ந்த ஆர்வம் தான் தன்னை உந்தியிருக்க வேண்டும் என்று மீரா நினைத்துக் கொண்டாள். சாதாரணமான தருணத்தில் சுய பிரக்ஞையுடன், சங்கர் போன்ற முன்பின் தெரியாத ஒருத்தனுடன் நிச்சயம் பார்ட்டிக்குச் செல்லத் தோன்றியிருக்காது. மெட்ராஸில் கார் ஓட்டிச் செல்லும் காலேஜ் மாணவன் பணக்கார இனத்தைச் சேர்ந்தவன். முக்கியமாக அவர்கள் மீனாட்சியின் நண்பர்கள். அதை நான் மறக்கக் கூடாது என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவள் குளித்துத் தயாராகிக் கீழே இறங்கிய போது அப்பா அலுவலகத்திற்குக் கிளம்பிப் போயிருந்தார். மகேஷ் நண்பர்களுடன் நீச்சலுக்குக் கிளம்பியிருந்தான். அம்மாவுடன் காலை ஆகாரத்தைச் சாப்பிடுகையில், ''அந்த முட்டாள் மீனாட்சி

வாஸந்தி

கிட்டே நா வரேன்னு சொல்லியே இருக்கக் கூடாது'' என்று மறுபடி முணுமுணுத்த போது அம்மா சிரித்தாள்.

''அந்தப் பெண்கிட்டே நீ இன்னும் கொஞ்சம் கருணையோடு நடந்துக்கோ. போகப் பிடிக்கல்லேன்னா அடுத்த தடவை போகாதே. அவ்வளவுதானே?''

சொன்னபடிக்கு மீனாட்சி நேரம் பிசகாமல் வந்து நின்றாள். வாசலிலேயே நின்று 'வா, வா, நேரமாச்சு' என்று மெல்லிய குரலில் சொன்னதோடு, ''உங்கம்மா கிட்டே என்ன சொன்னே?'' என்றது விநோதமாக இருந்தது.

''ஏன், பார்ட்டிக்குப் போகப் போறேன்னு சொன்னேன்! ஏன் மறைக்கணும்?'' என்றாள் மீரா.

மீனாட்சி தலையைக் குனிந்து நடந்தபடி ''மறைக்க வேண்டி வருது இங்கே'' என்றாள். ''பார்ட்டிக்குப் போறோம்னா



அம்மாக்கள் விட மாட்டாங்க. உங்கம்மா அமெரிக்காவிலே இருந்ததாலே இதிலெல்லாம் ஒண்ணும் தப்பில்லேன்னு புரிஞ்சுக்குவாங்க.''

''எதிலே தப்பில்லேன்னு...?''

''பாய்ஸ்ஸோட போறதிலே''

'உங்கம்மா தப்பா நினைக்கிறாங்களா?''

''ஐய்யோ ஆமாம்'' என்று மீனாட்சி சிரித்தாள். ''அதனாலேதான் வேற ஏதாவது சொல்லி டபாய்க்க வேண்டியிருக்கு.''

''நீ பொய் சொல்றேன்னு உங்கம்மாவுக்குத் தெரியாதா?''

''தெரிஞ்சிருக்கலாம். ஆனா தூண்டித் துருவிக் கேட்க மாட்டாங்க. கேட்க தைரியம் கிடையாது. ஏன்னா நா திருப்பிக் கேட்டுடுவேனே, உனக்கு மட்டும் பாய் ஃப்ரெண்ட்ஸ் இல்லையான்னு?''

மீரா சங்கடத்துடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு நடந்தாள். எந்த பலவீனமான தருணத்தில் இவளுடன் செல்ல ஒப்புக் கொண்டோம் என்றிருந்தது. ஆட்டோவைப் பிடித்துப் பயணம் செய்யும் போது மிகுந்த விவேகத்துடன் பேசுவது போன்ற பாவனையுடன் மீனாட்சி சொன்னாள்.

''அம்மாக்களுக்கே நிஜத்தைக் கேட்க விருப்பமில்லேன்னு நா நினைக்கறேன். ஒரு சின்ன பொய்யினாலே நமக்கும் ஒண்ணும் நஷ்டமில்லே!''

இவளுடைய சிந்தனையில் ஏதோ அடிப்படைக் கோளாறு இருக்க வேண்டும் என்று மீராவுக்குச் சலிப்பு ஏற்பட்டது.

''எனக்கு நிஜத்தைச் சொல்றதிலே ஒண்ணும் பிரச்னையில்லே மீனாட்சி.''

''நீ அதிர்ஷ்டம் செஞ்சவ மீரா'' என்று மீனாட்சி பெருமூச்சு விட்டது நாடகத்தனமாகத் தோன்றிற்று. இவளும், இவளுடைய அம்மாவும் அப்பாவும் ஒரு நிரந்தர பாசாங்கு விளையாட்டு விளையாடுவது போல இருந்தது.

☐ நாம் உண்ணும் பொருட்கள் சீரணமாக எத்தனை மணி நேரம் எடுத்துக் கொள்கின்றன என்பதை அமெரிக்க டாக்டர் வில்லியம் பொமெண்ட் கண்டுபிடித்துள்ளார் :

சாதம் - 1 மணி நேரம்
பால் - 2 மணி நேரம்
பருப்பு - $2\frac{1}{2}$ மணி நேரம்
நெய் அல்லது வேகவைத்த முட்டை - $3\frac{1}{2}$ மணி நேரம்
கோழி இறைச்சி - 4 மணி நேரம்
பன்றி மற்றும் மாட்டு இறைச்சி - 5 மணி நேரம்

- சைதை ஆர். முரளி



''அதனாலேதான் பாரு, வீட்டிலே டிரெஸ் செய்துக்காமே கையிலே டிரஸ் எடுத்துக்கிட்டு வந்திருக்கேன்'' என்று மீனாட்சி கைப்பையைக் காண்பித்தாள்.

மீரா பதில் ஏதும் சொல்லாமல் வெட்ட வெளியில் பார்வையைப் பதித்தாள். ஒரு நண்பனின் வீட்டில் நடக்கும் விருந்துக்குச் செல்வதில் எதற்கு இத்தனை ரகசியம் என்று புரியவில்லை.

அது சாதாரண வீடு இல்லை. பெரிய பங்களாவாக இருந்தது. ஐந்து பெண்களும் மணியுடன் சேர்த்து ஆறு ஏழு பையன்களும் இருந்தார்கள். பெண்கள் பகட்டாக உடை உடுத்தியிருந்ததை மீரா கவனித்தாள். மீனாட்சி அவளை எல்லாருக்கும் அறிமுகம் செய்து விட்டு, ''டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன்'' என்று உள்பக்கம் சென்றாள். பெரியவர்கள் யாரும் கண்ணில்படவில்லை. இவர்கள் எல்லாரும் எப்படி இத்தனை பெரிய குரலில் பேசிச் சிரிக்கிறார்கள் என்று மீராவுக்கு வியப்பு ஏற்பட்டது. அவள் மணியிடம் ''உங்க அப்பா அம்மா வீட்டிலே இல்லையா?'' என்றாள்.

''அவங்க இருந்தா பார்ட்டி எப்படி நடத்த முடியும்?'' என்றான் அவன் பதிலுக்கு. ''ஊட்டிக்குப் போயிருக்காங்க. நம்பளைத் தவிர இங்கே யாரும் இல்லே. கவலைப்படாதே.''

'அவர்கள் இருந்தாலும் நான் எதற்குக் கவலைப்படணும்' என்ற கேள்வியை அவள் கேட்காமல் பேசாமலிருந்தாள். ஹோட்டலிலிருந்து வரவழைத்தவை போல அட்டைப் பெட்டிகளில் சாப்பாடு மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தது. காஸெட் ப்ளேயரில் இரண்டு பெண்களும் பையன்களும் ஏதோ காஸட்டுகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சங்கர் எங்கே என்று கேட்க நினைத்த சமயத்தில் வாசலில் ஒரு ஹோண்டா பைக் வந்து நின்றது. பிடரி மயிர் பறக்கக் கறுப்புக் கண்ணாடியுடன் பைக்கின் மேல் சங்கர் அமர்ந்திருந்ததைப் பார்த்ததும் மீராவுக்குச் சடாரென்று நினைவுக்கு வந்தது. கடவுளே, அந்தப் போக்கிரியா இவன் என்று அதிர்ச்சியேற்பட்டது. இவனை எப்படி அடையாளம் கண்டுகொள்ளாமல் போனேன் என்று தன்னையே அவள் சபித்துக் கொண்டாள். இவனும் மீனாட்சியும் சேர்ந்து தனக்கு லிஃப்ட் கொடுத்ததும் விருந்துக்கு அழைத்ததும் முன்னேற்பாடான திட்டமாக இருக்க வேண்டும். எப்படி வகையாக மாட்டிக் கொண்டோம் என்ற ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவள் நின்றாள்.

சங்கர் சினிமா ஹீரோவைப் போல்

''வர வர நம்ம வீட்டு வேலைக்காரிக்குத் திமிர் அதிகமாகிக்கிட்டே வருதுங்க!''

''ஏன், அப்படிச் சொல்றே?''

''நம்ம ஃபிரிஜ் வாங்கி இருக்கிறதை எல்லா வீட்டுக்கும் சொன்னியாடின்னு கேட்டதுக்கு, 'ஒரு வீட்டுக்கு ஐந்து ரூபாய் வீதம் தந்தாதான் சொல்வேன்'னு சொல்றா!''

- குடந்தை எல். ராம்பிரபு



உள்ளே நுழைந்தான். லாகவமாகக் கறுப்புக் கண்ணாடியை அவிழ்த்தபடி அவளைப் பார்த்து ''ஹலோ!'' என்று சிரித்தான். ''நீ வந்தது எனக்குச் சந்தோஷம். வர மாட்டியோன்னு நினைச்சேன்.''

''நீதான் என்னை பஸ் ஸ்டாண்டிலே தொந்திரவு பண்ணின பைக்குக்காரன்னு ஞாபகம் இருந்திருந்தா நா வந்திருக்க மாட்டேன்'' என்றாள் அவள் சிரித்துக் கொண்டு.

அவன் பலமாகச் சிரித்தான்.

''இப்பத்தான் ஞாபகம் வந்ததா?'' என்று மறுபடி சிரித்தான். ''சேச்சே, இத்தனைச் சின்னத் தப்புக்கெல்லாம் அப்படி தண்டிக்கலாமா? அப்புறம் பையனும் பெண்ணும் சந்திக்கிறது எப்படி?''

மணியும் வேறு சினேகிதர்களும் அவனை உள்ளே அழைத்ததில் அவன் மீராவின் தோளில் கையை வைத்து ''அப்புறம் பேசலாம்'' என்று சொல்லி விட்டு விரைந்தான்.

அவனது பார்வையும் பேச்சும் மீராவுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அதில் செயற்கைத்தனம் தெரிந்தது. இங்கு யாருமே இயல்பாக இல்லை என்று தோன்றிற்று. எல்லாரும் மிகையாகப் பேசினார்கள், மிகையாகச் சிரித்தார்கள். உடையை மாற்றிக் கொண்டு வந்த மீனாட்சி பிறவியே மாறிப் போனது போல நடந்து கொண்டது நம்ப முடியாததாக இருந்தது. பேச்சும் பார்வையும் சிரிப்பும் மாறிப் போயின. சினிமாவில் வரும் கவர்ச்சி நடிகை போல. மணியும் தானும் காதலர்கள் என்று பகிரங்கப்படுத்தும் ஆர்வத்துடன் அவள் நடந்து கொண்டது மீராவுக்கு அருவருப்பாக இருந்தது.

சங்கரும் அவனுடைய நண்பர்களும், ''வாங்க பார்ட்டியை ஆரம்பிக்கலாம்'' என்று கண்ணாடி டம்ப்ளரும் பாட்டில்களும் கொண்ட டிரேயை ஏந்தியபடி வந்தார்கள். விஸ்கியும் ரம்மும் இருந்ததை மீரா கவனித்தாள். கூடவே மிக பலக்க டேப்பில் துரித கதியில் வாத்திய இசை கேட்டது. விஸ்கியும் சோடாவும் லாகவமாகக் கலந்து ஆண்கள் எடுத்துக் கொண்டு பெண்களுக்கும் வழங்கிய போது இரண்டு மூன்று பெண்கள் மறுக்காமல் வாங்கிக் கொண்டார்கள். மீரா மறுத்த போது சங்கர் ஆச்சரியத்துடன் புருவத்தை உயர்த்தினான். ''நிஜம்மா குடிக்க மாட்டியா, இல்லே இந்தியாவிலே வேஷம் போடறியா?'' என்றான்.

''எனக்கு வேஷம் போட வேண்டிய அவசியமில்லே'' என்று அவள் சொன்னது அவனுக்குப் புரிந்திருக்காது என்று அவள் நினைத்துக் கொண்டாள். சமோசா, வடை கொண்ட அட்டைப் பெட்டிகள் திறக்கப்பட்டன. மென்றபடியே பாட்டிற்கு ஏற்ப உடம்பை அசைத்து எல்லாரும் கையிலிருந்த பானத்தையும் உறிஞ்சினார்கள். ஏதோ கனவுலகத்தில் இருப்பவளைப் போல மீனாட்சி மணியுடன் ஒட்டி நின்றிருந்தாள். மணிதான் குடிக்கும் கிளாஸையே அவளிடமும் நீட்டிக் கொண்டிருந்தான்.

தன்னைச் சுற்றிலும் இருப்பவர்களைப் பார்க்கும் போது இதிலெல்லாம் ஒட்டாமல் இருக்கும் வெளியாள் தான் ஒருத்திதான் என்று மீராவுக்குத் தோன்றிற்று. உண்மையில் வெளியில் இருக்கும் உலகத்திற்கும் இதற்கும் ஏதும் சம்பந்தமிருந்ததாகத் தெரியவில்லை. மீனாட்சி கூட இங்கு வேறு பிறவி. வெளியில் அசட்டுப் பெண்ணாகத் தோன்றுபவள் இங்கு அதி சாமர்த்தியசாலி போல நடந்து கொண்டாள். இரண்டு மூன்று கிளாஸ் பானமும் வடையும் சமோசாவும் காலியானதும் சங்கர் அவளருகில் வந்து இடையைப் பற்றி ''எல்லாரும் உள்ளே போய் டான்ஸ் ஆடலாம்'' என்றான். எல்லாரும் பெரிய ஆரவாரத்துடன் அடுத்தாற்போல் இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

அறைக் கதவு மூடப்பட்டது. விளக்கு அணைக்கப்பட்டு, ஜன்னல்கள் மூடித் திரையிட்டிருந்த அந்த அறையில் சட்டென்று இருள் சூழ்ந்தது. கையைத் துழாவி மீரா இருட்டில் தடுமாறிய போது கப்பென்று அடிவயிற்றில் பயம் கவ்விற்று.

(தொடரும்)

எங்கள் இருபதாவது திருமண நாள் என்றாலும் அந்த ஆண்டு எனக்குச் சுவாரஸ்யமில்லாமல் இருந்தது. காரணம், கணவர் கடந்த ஒரு வருட காலமாக வெளிநாட்டில் இருந்து வந்ததுதான். எனக்குப் பிடித்த பரிசு வாங்கிக் கொள்ளுமாறு கணவர் அனுப்பிய காசோலையைக் காசாக்கி, பர்ஸில் வைத்துக் கொண்டு காலையில் கோயிலுக்குப் போனேன். காமாட்சி தரிசனம் செய்யும் போது எப்போதும் கணவர் நேரில் அளிக்கும் பரிசை உணர்ந்த மகிழ்ச்சியை நினைத்துக் கொண்டேன். அந்த மகிழ்ச்சியை இன்று வேறு யாருக்காவது அளித்தால் என்ன என்று தோன்றியது. என் வீட்டில் ஒரு வருஷமாக வேலை செய்யும் கலாவின் நினைவு வந்தது. ஒரு ஜோடி அழகிய வெள்ளிக் கொலுசு வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். பரிசைப் பெற்ற அவள் முகத்தில் தெரிந்த வியப்பு! கண்களில் பொங்கிய மகிழ்ச்சி! பேச்சு வராத நன்றியுணர்வு! - என் உள்ளம் நிறைந்தது. தகுதியறிந்து பரிசு வழங்கும் இன்பத்தை நான் முதன் முதலாக

மறக்க முடியாத முதல் பரிசு!



வழங்கிய நகைப் பரிசிலேயே உணர்ந்தேன். அந்தத் திருமண நாள் சோர்வில் ஆரம்பித்தாலும் மிக மகிழ்ச்சியான நாளாக மாறியது.

கோவை, மாதவி பிரபாகரன்.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகைப் பரிசு பெறுபவர் :

திருமதி மாதவி பிரபாகரன்,
11/20 D, விவேகானந்தர் தெரு,
பி. என். புதூர்,
கோவை - 641 041.


உயிரின் உயிர்

உயிர்த் தோழி ராஜி. பத்தாவது படிக்கும் போது அவள் பிறந்த நாள் பரிசாக ஒயிட் மெடலில் பச்சைக் கல் பதித்த ஒரு ஹேர் கிளிப் பரிசளித்தேன். அந்த நாளில் விலை ஏழு ரூபாய். திருமணத்துக்குப் பிறகு நாங்கள் பிரிந்து வேறு வேறு மாநிலங்கள் சென்று விட்டோம். இரண்டு வருஷங்களுக்கு முன் சென்னை வந்திருந்த போது, 'ராஜி ஒரு விபத்தில் இறந்து போனாள்' என்ற செய்தி அறிந்து திடுக்கிட்டேன். அவள் காலமாகி நீண்ட காலமாகி விட்டாலும் அவள் வீட்டுக்குப் போக வேண்டும் என்று மனம் உந்தியது. போன போது அவள் மகளுக்கு அன்று பிறந்த தினம் என்று அறிந்தேன். என் துயரை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அடக்கிக் கொண்டேன். 'வெறும் கையோடு வந்து விட்டோமே, பணமாவது தரலாம்' என்று எண்ணி, குழந்தையை அழைத்து உச்சி முகரப் போனால், நான் ராஜிக்கு அளித்த பரிசு அவள் தலையை அலங்கரித்துக் கொண்டிருந்தது! ''பிறந்த நாளும் அதுவுமா எல்லாத்தையும் விட்டுட்டு, பிடிவாதம் பிடித்து இதுதான் வேணும் என்று ராஜி பீரோவிலிருந்து எடுத்துப் போட்டிண்டிருக்கா, பாரும்மா'' என்று ராஜியின் மாமியார் கூற, நான் உடைந்து போனேன்.

நாஸிக், பி. உமா.

மனம் உடைந்தது

என் சம்பாத்தியத்தில் நான் வாங்கிய


96 PAGES OF FUN FOR YOUR CHILD!
GOKULAM
1992
IN THE FEBRUARY ISSUE :

காதலெல்லாம் 13

வானவில்

இப்படிப்பட்ட மையிருட்டு எப்படி சாத்தியமாயிற்று என்று மீராவுக்குப் புரிய வில்லை.

இயல்பான இருட்டு இல்லை. கண்ணை இறுகக் கட்டிப் போட்ட சூன்யம் இது. மிகப் பிரயாசைப்பட்டுக் கண்களைக் கொட்டிப் பார்த்தாள். உள்ளங்கை கூடத் தெரியவில்லை. இதனிடையில் பெண் களின் கிச்சு மூச்சுக் கத்தல்கள், சிணுங் கல்கள், சிரிப்புகள் கலவரத்தை அதிகப் படுத்தின. யாருடைய கையோ அவளு டைய இடையைப் பற்றி இழுத்தது. அவள் சரேலென்று தன்னை விடுவித்துக் கொண்டு, ''லைட் லைட், விளக்கைப் போடுங்க!'' என்று கத்தினாள். யாரோ சிரித் தார்கள். அவளுக்கு மகாக் கோபம் வந்தது. இதென்ன குரூரமான விளையாட்டு என்று ஆத்திரத்துடன் மீண்டும் உரத்த குரலில் ''டாமிட்! விளக்கைப் போடுங்க!'' என்று கத்தினாள்.

''ரிலாக்ஸ்!'' என்று யர்ரோ கிசுகிசுத் தார்கள். மற்றவர்கள் கோரஸ்ஸாக ''ரிலாக்ஸ்'' என்று ராகமாக இழுத்தார்கள். அதைத் தொடர்ந்து பெரிய சிரிப்பு வெடித் தது.

''அமெரிக்கன் பயப்படுது'' என்று ஒரு பெண் கிசுகிசுக்க, ''அமெரிக்கன் இல்லே யார், அமிஞ்சிக்கரை!'' என்று இன்னொ ருத்தி பதிலளிக்க மறுபடி பெரிய சிரிப்பு வெடித்தது.

இவர்களுடைய பரிகாசத்தைப் புரிந்து கொள்ள இயலாமல் அவளுக்குக் கண்ணில் நீர் ததும்பப் பார்த்தது. திடீரென்று ஒரு சுழல் விளக்கின் வெளிச்சம் சிறிது பரவி, சுழன்று சுழன்று விலகிற்று. பார்வையை அதிகக் குருடாக்கியது. கூடவே செவிடாக் கும் ஒலியுடன் மேற்கத்திய பாட்டு ஒலித் தது.

பெரிய ஆவேசக் கரகோஷத்துடன் எல் லோரும் நாட்டியமாடத் தொடங்கினார் கள். தானும் அவர்களுடன் சேர்ந்து ஆடு வதை மீரா உணர்ந்தாள். அந்த வெறி யாட்டத்தில் தான் தனித்து நிற்க முடியாது என்று தோன்றிற்று. அவளுக்கு ஜோடி யாக சங்கர் இருந்ததை வேறு சமயத்தில் நிச்சயமாக சகித்துக் கொண்டிருக்க முடி யாது என்று அவள் நினைத்துக் கொண்டாள். அங்கிருக் கும் இருட்டைப் பயன்படுத்திக் கொண்டு அவன் ஏதாவது விஷமம் செய்யப் பார்க்கலாம் என்று அவள் எச்ச ரிக்கையுடன் இருந்தாள்.

மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சரியாகப் புலப்படவில்லை. மற்ற பெண்களிடமிருந்து இப்போது ஒலி ஏதும் வரவில்லை. நாட்டியத்தில் ஆழ்ந்து போயி ருக்க வேண்டும். பாட்டுக்கு முடிவே இல் லாதது போல் தொடர்ந்து இசைத்துக் கொண்டேயிருந்தது. கால்கள் துவண்டு போகும் நிலையில், ''இனிமே என்னாலே ஆட முடியாது, சோர்ந்து போயிட்டேன்'' என்று இருளில் சரியாகப் புலப்படாத சங்கரின் முகத்தைப் பார்த்துச் சொன்னாள்.

''ஓ.கே. பேபி'' என்றான் அவன் செயற்கை உச்சரிப்பில். ''கொஞ்சம் ஓய் வெடுத்துக்கலாம் வா,'' என்று அவள் இடையைப் பற்றினான்.

''எனக்குக் கண்ணே தெரியல்லே, எப்படி வெளியிலே போறது?'' என்றாள் அவள் பீதியுடன்.

''நான்தான் உன் கூட இருக்கேனே, ஏன் பயப்படறே?'' என்று அவன் மிக நெருக்கமான குரலில் சொன்னான்.

அவனுடைய இறுக்கமான பிடியில் நடக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளா கிப் போன எரிச்சலில், ''ஏன் இப்படி இருட்டடிக்கிறாங்க'' என்று அவள் கேட்ட தும், ''உஷ்,'' என்று அவன் அவள் வாயை அடக்கினான். ''அசட்டுப் பிசட்டுன்னு கேள்வி கேட்கக் கூடாது. இருட்டிலேதான் த்ரில் கிடைக்கும்.''

அவள் பதில் ஏதும் சொல்லாமல் அவனுடன் நடந்தாள், வெளிச்சம் தெரிகிற வரை வாயைத் திறக்கக் கூடாது என்று. அவன் மிக ஜாக்கிரதையாக ஒரு கதவைத் திறந்து விசுக்கென்று அவளை வெளியே இழுத்து மீண்டும் கதவைச் சாத்தினான்.

வெளிச்சத்தைக் கண்டு கண்கள் கூசினா லும் சட்டென்று ஒரு நிம்மதி ஏற்பட்டது.

''இப்படிப்பட்ட ஒரு பைத்தியக்கார சூழல்லே நான் மாட்டிக்கிட்டதில்லே''

என்று அவள் சிரித்தாள். ''என்ன இருட்டு அது! த்ரில் ஒன்னும் ஏற்படல்லே எனக்கு. திகில்தான் ஏற்பட்டது.''

பெரிய ஹாஸ்யத்தைக் கேட்டது போல் அவன் சிரித்தான்.

''இனிமே அந்த இருட்டுக்கு அழைச்சிட்டுப் போக மாட்டேன் கவலைப் படாதே'' என்றான் அவன் கனிவான குரலில். ''த்ரில்லுக்கு எத்தனையோ வழிகள் இருக்கு.''

''முதல்லே வெளியிலே போறதுக்கு வழியைச் சொல்லு'' என்று அவள் சுற்றிலும் பார்வையைத் திருப்பிய போதுதான், அது ஒரு படுக்கையறை என்பதையும் கதவு தாழ்ப்பாள் போட்டிருப்பதையும் கவனித்தாள்.

''ஏய், என்ன விஷயம், கதவு ஏன் சாத்தியிருக்கு?'' என்று அவள் தன் கலவரத்தை மறைத்துக் கொண்டு வேகமாகப் பேசியபடி தாழ்ப்பாளைத் திறக்கச் செல்கையில் அவன் குறுக்கே வந்து புன்னகையுடன் நின்றது, சமீபத்தில் பார்த்த ஒரு ஹிந்தி சினிமாக் காட்சியை ஞாபகப்படுத்திற்று. அந்தக் காட்சியைப் பார்க்கத் தென்பில்லாமல், தான் கண் ணைப் பொத்திக் கொண்டு அன்று அமர்ந்ததும் நினைவுக்கு வந்தது.

''ப்ளீஸ் வழி விடு. எனக்கு வெளியிலே போகணும்'' என்றாள் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

வாஸந்தி

''போகலாம், போகலாம்'' என்று அவன் புன்னகையுடன் தலையாட்டினான். ''என்ன அவசரம்? இனிமையாப் பொழுதைக் கழிக்க இங்கே வந்திருக்கோம். இப்படி அவசரப்படறியே!''

அவன் இயல்பாக சினேகிதனைப் போல் பேசினான். நாம்தான் இவனது சாதாரணச் செய்கைகளை விபரீதமாக எடுத்துக் கொள்கிறோமோ என்று அவளுள் தயக்கமேற்பட்டது.

தாழ்ப்பாள் போடப்பட்ட கதவைச் சங்கடத்துடன் பார்த்தபடி, ''வெளியிலே உக்காந்து பேசலாம்'' என்றாள் அவள். ''எனக்கு மூடின கதவுகள் பிடிக்காது.''

''கொஞ்ச நேரத்திலே திறந்துடறேன் பிராமிஸ்'' என்று அவன் சிரித்தான் நல்ல பிள்ளையைப் போல. ''உங்கிட்ட பேசணும்.'' அவன் பேசிய விதம் வேடிக்கையாக இருந்தது. இவன் அசடன், பொல்லாதவன் இல்லை என்று தோன்றிற்று.

''என்ன பேசணும்?''

''நிறையப் பேசணும்!'' என்றான் அவன் புன்னகை மாறாமல். ''ஆனா இந்தக் கதவுமேல சாஞ்சிண்டு பேச முடியாது.''

அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''ஓ. கே. உக்காந்து பேசுவோம்!''



''ஆ, இப்பத்தான் புத்திசாலித்தனமாப் பேசறே. வா.''

அவளுடைய தோளைப் பற்றி அறைக்குள் அவன் நடத்திய போது, அங்கு கட்டிலைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை.

''இங்கதான் உக்காரணும். உக்காரு.''

அவன் உட்கார்ந்ததும் அவளும் உட்கார்ந்தாள்.

''உம், சொல்லு!''

அவன் சிரித்தான். ''மீனாட்சி சொல்ற மாதிரி நீ ஒரு போர்தான். இங்கே பார்ட்டிக்கு வர்றவங்களுக்கு ஒரு விதிமுறை உண்டு. ரொம்பக் கேள்வி கேட்கக் கூடாது. எல்லாத்துக்கும் உற்சாகமாத் தயாராயிருக்கணும், சிலதுங்க அழுதுரும். நீ அமெரிக்காவிலே வளர்ந்தவ. நீ அப்படி இருக்க மாட்டேன்னு தெரியும், எனக்கு.''

இவன் எதற்கு இப்படிச் சுற்றி வளைக்கிறான் என்று அவளுக்கு அலுப்பாக இருந்தது. அவன் செல்லமாக



''வரதட்சணையா ஒரு கார் கேட்டாங்க. சரின்னுட்டோம். இப்ப என்னடான்னா அதை நிறுத்தறதுக்கு போர்ட்டிகோவோட ஒரு பங்களா வேணுமாம்!''
- ஞா. ஞானமுத்து

அவளுடைய முன்னெற்றிச் சுருளைப் பின்னால் தள்ளித் தலையைக் கோதினான். அவன் செய்து முடித்திருந்த பிரசங்கத்தால் அவள் பேசாமல் இருந்தாள். பிறகு அவன் அவள் கன்னத்தைத் தடவி, ''நீ ரொம்ப நல்லாயிருக்கே'' என்றான்.

''ஓ. கே. தாங்க்யூ'' என்று அவள் விருக்கென்று எழுந்தாள்.

''உக்காரு,'' என்று அவன் இழுத்து உட்கார்த்தினான். ''உன்னை சாப்பிட்டுட மாட்டேன். காதல் செய்யறவங்க ராட்சஸர்கள் இல்லே. உன் மேல எனக்கிருக்கிற ஆசையை நான் காட்டறது தப்பில்லே.''

அவன் சரேலென்று அவளை அழுத்திப் பிடித்துச் சாய்த்து அவளுடைய அதரங்களில் தன் அதரங்களைப் பதித்தான். அவள் அதிர்ந்து காலையும், கையையும் உதறி உதைக்க உதைக்க, மிருக பலத்துடன் அவனுடைய பிடி இறுகிற்று. மூளை சிதறிப் போனது போல அவளுள் ஓர் உணர்வு ஏற்பட்டு நாடி நரம்பெல்லாம் ஜ்வாலையாய்ப் பற்றி எரிந்தன. ஏதோ ஒரு அசுர பலத்துடன் அவனிடமிருந்து திமிறி ஒரே பாய்ச்சலில் தாழ்ப்பாளைத் திறந்து வெளியே ஓடினாள். நடுக்கூடம் வெறிச்சென்றிருந்தது. அதைத் தாண்டி வாசலுக்குச் செல்லும் வழி நல்லவேளையாகப் புலப்பட்டது. சங்கர் தன்னைத் தொடருகிறானா என்று பார்க்கக் கூட அவள் தயங்கி நிற்காமல் தலைதெறிக்க வாசல் கதவைத் திறந்து கொண்டு, வீட்டின் விசாலமான தோட்டத்தைக் கடந்து வெளி கேட்டை அடைந்ததும் வெகு வேகமாகப் படபடத்த மார்பை அழுத்திப் பிடித்து நின்றாள். பின்னால் திரும்பிப் பார்த்த போது, வீடு கம்மென்றிருந்தது. அடி வயிற்றிலிருந்து கோபமும் அவமானமும் பொங்கியெழுந்தன.

கால்கள் வெடவெடவென்று நடுங்குவதை அப்பொழுதுதான் உணர்ந்தாள். ஒரு மிக மிக அபத்தமான சூழலில் தானாக மாட்டிக் கொண்டதாக அவளுக்குத் தன் மீதே எரிச்சலும் வெறுப்பும் ஏற்பட்டன.

''நீ அமெரிக்காவிலே வளர்ந்தவ. நீ அப்படி இருக்க மாட்டேன்னு எனக்குத் தெரியும்!''

அவன் என்ன அர்த்தத்தில் சொன்னான் என்று அவளுக்கு விளங்கவில்லை. அங்கே வளர்ந்ததால் மானம் கெட்டவளாக இருப்பேன் என்று நினைத்தானா? ரோக், ஸ்கவுண்ட்ரல் என்று வாய் விட்டுத் திட்டி, ஞாபகத்துக்கு வந்த எல்லாக் கெட்ட வார்த்தைகளையும் பிரயோகித்தபடி நடக்கும் போது தொடையெல்லாம் நெறிகட்டிக் கொண்டது போல் வலித்தன. அவனுடைய அசுரப்பிடி நினைவுக்கு வரும்போதெல்லாம் நெஞ்சு நடுங்கிற்று. அமெரிக்காவாக இருந்தால் கோர்ட்டுக்கு இழுத்திருப்பேன். நஷ்டஈடு வாங்கியிருப்பேன். இஷ்டமில்லாதவளை பலவந்தப்படுத்தினா அது க்ரிமினல் குற்றம். 'சிலது அழுதுறும்.'' எத்தனை திமிருடன் சொல்கிறான்! ''ஆசையைக் காட்டறதிலே தப்பில்லே என்று நியாயப்படுத்துகிறான்.''

மீராவுக்கு எல்லார் மீதும் கோபம் வந்தது. மீனாட்சி தன்னை மிகக் கேவலமாக அவமானப்படுத்தி விட்டது போல் இருந்தது. ஆனால் மீனாட்சி ஒரு கிறுக்கு. நேரில் நான் வந்து பார்த்தால் அவள் கட்சியில் சேர்ந்து கொள்வேன் என்று நினைத்திருக்கலாம்.

பஸ் நிலையத்தை நோக்கி நடக்கும் போது மீண்டும் அந்த இருட்டு ஞாபகத்துக்கு வந்தது. 'இருட்டிலேதான் 'த்ரில்' இருக்கும்'. ஆக, தில்லுமுல்லு செய்வதற்கே இவர்கள் கூடுகிறார்கள். இவர்கள் ஆரோக்கியமானவர்கள் இல்லை. மனநோய் கொண்டவர்கள். அசிங்கமான சிந்தனைகளைத் தவிர இவர்களுக்கு வேறு எதுவும் இருக்காது என்று தோன்றிற்று. இவர்களுடைய கும்பலில் நான் எப்படிச் சேர்ந்தேன்?

இவர்களைப் பற்றி யாரிடமாவது புகார் செய்தால் ஏதாவது லாபமிருக்குமா என்று புரியவில்லை. பொய் சொல்வது அசிங்கம் என்கிற உணர்வில்லாமல் காரியங்களை நடத்தும் சாமர்த்தியம் உள்ளவர்களை யார் திருத்த முடியும்?

திடீரென்று தனக்கு வயது கூடி விட்டது போல் அவளுக்கு விசித்திரமாகத் தோன்றிற்று. மீனாட்சியின் அம்மாவிடம் இன்று கண்ட உண்மைகளைச் சொன்னால் அவள் ஒருக்கால் நம்பக் கூட மாட்டாள். அப்படியே நம்பினாலும் மிஸஸ் செல்லப்பன் என்ன செய்வாள் என்று ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது. தனது கடையில் பெண்ணை அமர்த்துவாள். அல்லது ஒரு பணக்கார பிசினெஸ்மேனுக்கு மணம் முடித்து வைப்பாள். சில வருஷங்களில் மீனாட்சியும் அவளுடைய அம்மாவைப்

போல் இரட்டை வாழ்வு வாழ்ந்தால் ஆச்ச ரியப்படுவதற்கில்லை.

வீட்டிற்குச் சென்று அம்மாவிடம் நடந்த விஷயம் முழுவதையும் சொல்ல வேண்டும் போல் இருந்தது. பஸ்ஸுக் காகக் காத்திருந்த நேரத்தில் நல்லவேளை யாக மீனாட்சியும் அவளுடைய நண்பர் களும் அவளைத் தேடிக் கொண்டு வர வில்லை. ஆழ்வார்ப்பேட்டை பஸ் வந்தது. அவள் யோசனை செய்யாமல் ஏறிக் கொண்டாள். ஆழ்வார்ப்பேட்டை யில் இறங்கி, ஹரியின் வீட்டை நோக்கி நடந்த போது இன்று காலை பார்ட்டிக்குச் செல்லாமல் நேராக இங்கு வந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று.

வெளித் தாழ்வாரத்தில் இன்று ஹரி யைக் காணவில்லை. வீட்டுக் கதவு சாத்தி யிருந்தது. அழைப்பு மணியை அடித்ததும் கதவைத் திறக்க வந்த மைதிலி, ''வா, வா,'' என்றாள் சந்தோஷமாக. ''ஹரி இப்பத்தான் உன்னைப் பத்தி விசாரிச்சிக்கிட்டிருந் தான்.''

''ஹரி எங்கே?''

''படுத்திட்டிருக்கான். அவனுக்குக் கொஞ்சம் ஜுரம்.''

''ஓ!'' என்றாள் மீரா கவலையுடன். ''அப்படீன்னா நா அவனைத் தொந்திரவு பண்ணலே.''

''தொந்திரவு இல்லே, மீரா, உள்ளே வா'' என்ற ஹரியின் குரலைக் கேட்டு மைதிலி மீராவைப் பார்த்துச் சிரித்தாள்.

''ரொம்ப ஜுரமா மேம்?''

''நேத்திக்கு இருந்தது; இன்னிக்கு இறங்கிட்டது. கொஞ்ச நேரம் பேசிட்டுப் போ. அவனுக்கும் படுத்துக்கிட்டே இருக் கறது அலுத்துப் போச்சு.''

அவள் உள்ளே சென்ற போது ஹரி அவளை எதிர்பார்த்துத் தலைமாட்டில் தலையணையை நிறுத்திச் சாய்ந்து உட் கார்ந்திருந்தான். நினைவாகக் கண்ணாடி யையும் மாட்டிக் கொண்டிருந்ததை மீரா கவனித்தாள்.

''ஹாய் ஹரி, ஜுரம் எப்படி வந்தது உனக்கு?'' என்று மீரா சீண்டினாள்.

''நா கூப்பிடாமயே வந்த ஜுரம் அது'' என்று ஹரி சிரித்தான். ''ஜுரம் வரணும்னு நா வேண்டல்லே. ஆனா மீரா இப்ப வந்தா எவ்வளவு நல்லா இருக்கும்னு அரை மணி நேரமா ரொம்பத் தீவிரமா நினைச்சேன். நீ வந்து நிக்கறே! டெலிபதியிலே உனக்கும் நம்பிக்கை உண்டா?''

''நீ சொல்றதைப் பார்த்தா நம்பிக்கை வரும் போல இருக்கு. எங்கேயோ போயிட்டு வீட்டுக்குத் திரும்பணும்னு பஸ் ஸுக்குக் காத்திருந்தேன். ஆழ்வார்ப் பேட்டை பஸ் வந்தது. ஏறி வந்துட்டேன்!''

''குட்! அப்ப என் பிரார்த்தனைக்குப் பலன் இருந்ததுன்னுதான் சொல்லணும்.''

''இப்படிப்பட்ட விஷயத்துக் கெல்லாம் பிரார்த்தனையா?''

''அதைத் தவிர எனக்கு வேற ஒண் ணும் செய்ய முடியாது மீரா'' என்றான் அவன் புன்னகை மாறாமல். ''உன்னைப் பார்க்கணும்னா நானா கிளம்பி வந்துட முடியாது.''

அவள் கரைந்து நின்றாள். ஏதோ ஒரு திமிர்ப் பிடித்த தருணத்தில்தான் மீனாட்சி யுடன் அப்படிப்பட்ட இடத்திற்குச் செல்லத் தனக்குத் தோன்றியிருக்க வேண் டும் என்று கூச்சமேற்பட்டது.

''உனக்கு வர முடியல்லேன்னா என்ன? நா வருவேன் ஹரி'' என்றாள் அவ னுடைய கைகளைப் பற்றியபடி.

''நான் நினைச்சாலே வந்துடுவே!'' என்று அவன் சிரித்தான்.

(தொடரும்)



''ரேஷன் கார்டு மனு சம்பந்தமா சந்தேகம் கேட்டு ஒரு லெட்டர் வந்திருக்கு!''

''என்னவாம்?''

''மாத வருமானம்கறது லஞ்சத்தைச் சேர்த்தா சேர்க்காமலான்னுதான்!''

- எஸ். ரமேஷ்

''நல்ல விறுவிறுப்பான கதை, இனிய பாடல்கள் இருந்தும் படத்திற்குக் கூட்டம் வராததற்கு டைட்டில்தான் காரணம்னு நினைக்கிறேன்.''

''டைட்டில் என்ன?''

''வந்தா வாங்க வராட்டிப் போங்க!''

- எஸ். சுந்தர்ராஜ்



ரிக்ஷா மாமா

இயக்குனர் பி. வாசு அவர்களுக்கு,

தங்களுடைய 'ரிக்ஷா மாமா' படம் பார்த்தேன். படம் படு விறுவிறுப்பு. திரைக் கதை அமைக்கும் தங்கள் திறமை நிகழ்ச்சிகளைப் பிரவாகமாக முட்டி மோதி ஓடச் செய்து, குறைகள் நெஞ்சில் பதிய அவகாசம் இல்லாமல் செய்து விடுகிறது. அந்த வகையில் பாராட்டுக்கள். ஆனால்...

படம் பார்த்து வெளியே வந்தபின், நிதானமாக அசைபோடும் போதுதான் நிறைகளும் குறைகளும் இனம் பிரிந்து தெரிகின்றன.

கதை மாந்தர்கள் ஒவ்வொருவருமே ஏற்கெனவே பல படங்களில் அமைக்கப்பட்ட பாத்திரப் படைப்புகள். பண்பும் பாசமும் இரக்கமும் இனிமையும் கொண்ட ரிக்ஷாக்காரன், அவன் மீது காதல் கொள்ளும் பணக்காரப் பெண், பிடிவாதமும் முரட்டுத்தனமும் கொண்ட அவள் தந்தை, அந்த ரிக்ஷாக்காரனின் வாழ்க்கையில் குறுக்கிடும் - பிளாக் மார்க்கெட் டிக்கெட் விற்கும் - அந்தப் பெண், பணக்காரனை பிளாக்மெயில் செய்து தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியும் வில்லன்... பலமுறை பார்த்துப் பார்த்து அலுத்துப் போன - தமிழ் சினிமாவின் கதை வறட்சியை வலியுறுத்தும் பாத்திரப் படைப்புகள்.

இருந்தாலும் ஓர் ஆறுதல். படத்தின் வெற்றிக்குத் தாங்கள் கிராமத்து மண் வாசனை என்கிற பெயரில் அமைக்கப்படும் அபத்தமான சூழலையும் அம்மன் கோயில் தீமிதியையும் நம்பவில்லை.

நெகிழவைக்கும் பாத்திரங்கள் இரண்டு. அன்புக்கு ஏங்கித் தவிக்கும் குழந்தை பேபி ஸ்ரீதேவி. திருஷ்டி சுற்றிப் போட வேண்டும். தமிழ்த் திரைக்கு இன்னுமொரு நட்சத்திர வாரிசு அறிமுகம். மற்றது, அமைச்சர் நாகேஷ். மிக மிக நயமான, இயல்பான வெளிப்பாடுகள்.

அதென்ன சார், ராதாரவிக்கு 'சந்திரலேகா' காலத்துப் பாணி உடை! 1992க்குக் கொஞ்சமும் பொருந்தவில்லையே! இது தான் இப்படியென்றால், குழந்தை ஸ்ரீதேவியைக் கயிற்றைக் கட்டித் தண்ணீர்த் தொட்டியினுள் தொங்க விட்டுக் குழாய்களைத் திறந்து விட்டு அவளை மூழ்கடிக்க அவர் முயலுவதும், அவள் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போகும் சத்யராஜ் சோக கீதமிழைக்க, அவர் குரலைக் கேட்டு அந்தக் குழந்தை 'ரிக்ஷா மாமா' என்று கூவித் தன்னுடைய இருப்பிடத்தை வெளிப்படுத்துவதும் அதைவிட 'ஹைதர்' காலம்.

பாடல்கள் ஓகோ என்றால் 'ரீரிகார்டிங்' ஓகோகோ. படப்பிடிப்பும் அப்படியே.

படம்... பழைய கள் - புதிய மொந்தை.

இப்படிக்கு,

திரைப்பட ரசிகன்.

– சி. ஆர். கே.



14

அவனது பேச்சிலும் புன்னகையிலும் இருந்த அமானுஷ்ய வசீகரத்தில் மனசும் தேகமும் உருகி நின்றன. இது வெறும் பச்சாத்தாபம் இல்லை என்று அவள் உணர்ந்தாள். சோர்வு மிகுந்த நீண்ட பயணத்துக்குப் பின் இளைப்பாற இடம் கிடைத்தது போல ஒரு விநோதமான நன்றி உணர்வு அவளை ஆட்கொண்டது. சற்று முன் அவள் சந்தித்த உலகம் உண்மைக்குப் புறம்பானது. புத்தி பேதலித்த ஒரு சிறு பான்மையினரின் அகங்காரக் கும்பல். எதிரில் இருக்கும் இந்தப் பார்வையற்றவன்தான் நிஜம். கண்களைப் பொருத்துவதற்கு முன் மனுஷனைப் பற்றின கடவுளின் எதிர்பார்ப்பின் வடிவம் இவன். இவனது தூய்மைதான் நம்மை ஈர்க்கிறது....

''உட்காரு மீரா.''

கட்டிலிலேயே அவள் அமர முற்படுகையில், ''கட்டில்லே வேண்டாம், என்னுடைய ஜுரம் உனக்கு வரக்கூடாது. நாற்காலியிலே உட்காரு....'' என்று அவன் சொன்னபோது சங்கரின் நினைவு வந்தது. சங்கரும் பார்வையற்றவனாக இருந்திருந்

காதலெனும் வானவில்

தால் அவனுடைய குணமே வேறாகியிருக்கும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். கட்டிலுக்கு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து, அவனுடைய கைகளை அவள் மீண்டும் பற்றிச் சிரித்தாள்.

''வந்தா என்ன? நீ ரெண்டு நாள் படுத்திருக்கிறமாதிரி நானும் படுத்துட்டுப் போறேன்.''

''வேண்டாம் வேண்டாம். உனக்கு உடம்புக்கு வரக் கூடாது'' என்றான் அவன் தீவிரமாக. ''அப்புறம் உன்னை இன்னும் ஒரு வாரத்துக்கு என்னாலே சந்திக்க முடியாது. ஏற்கெனவே பரீட்சைன்னு பத்து நாளா இந்தப் பக்கம் நீ வரல்லே.''

கறுப்புக்கண்ணாடிக்குப் பின்னால் அந்த ஒளியற்ற கண்கள் எப்படி இருக்கும் என்று அவள் யோசித்தாள். சாதாரணமாகக் கண் செய்யும் வேலையை இவனுடைய அதரங்கள் செய்வதாகத் தோன்றிற்று. சந்தோஷம், துயரம், பரிகாசம், அன்பு எல்லாவற்றையும் சிறு சிறு அசைவுகளில், மாறாத அந்தப் புன்னகையில் அவன் துல்லியமாக வெளிப்படுத்துவது விந்தை என்று அவள் அதிசயித்தாள். ஆனால் இன்று இவனிடம் ஒரு மாறுதல் இருந்தது. வழக்கமான தன்னம்பிக்கையும் ஆசானைப் போன்ற தத்துவப் பேச்சும் இல்லை.

''பரீட்சையின் போது நீ வரணும்னு நா எதிர்பார்க்கல்லே'' என்றான், அவன் அவசரமாக. ''என்னை நீ பார்க்க வர்றது ஒரு கட்டாயம் என்கிற எண்ணம் கூட உனக்கு இருக்கக்கூடாது.''

அவன் உணர்ச்சிவசப்படுவதன் காரணம் விளங்காமல், அவள் திகைத்தாள்.

''ஏ, ஹரி, கமான்'' என்று அவன் கையை சிநேகிதமாகத் தட்டினாள். ''நீ என்னுடைய சிநேகிதன். உன்னைப் பார்க்கணும்னு நானா சந்தோஷமா வர்றேன். கட்டாயம்னு எதுக்குத் தோணணும்?''

''குருட்டுப் பய பாவம்னு -''

''ஷட் அப் ஹரி. நீ பார்வையில்லாதவன் என்கிற எண்ணமே எனக்கு இருக்கிறதில்லே.''

அவன் உணர்ச்சி வசப்பட்டுப் போனது, பதில் ஏதும் சொல்லாமல் உதட்டைக் கடித்தபடி குனிந்த தலையுடன் அமர்ந்திருந்ததில் தெரிந்தது. 'நன்றி' என்று சொல்வது போல் அவன் அவள் கைமேல் தன் கையை அழுத்திக் காண்பித்தான். கண் கலங்குகிறான் என்று தோன்றிற்று.

''ஹரி, என்ன ஆச்சு உனக்கு இன்னிக்கு?'' என்றாள் மென்மையாக. ''கண் இல்லேங்கறது எனக்குப் பெரிய குறையாத் தெரியல்லேன்னு சொல்லுவியே?''

அவன் தலை குனிந்த நிலையிலேயே தனக்குள் முணு முணுத்துக் கொள்வது போல் சொன்னான்.

''உடம்பு ஆரோக்கியமா இருக்கும் போது தன்னம்பிக்கை இருக்கு. உடம்பு பலவீனமாப் போனா மனசும் பலவீனமாயிடுது. பார்வை இல்லாதவனுக்கு உடம்பு சரியில்லாம போனா ரொம்ப பயங்கரம் மீரா.

உனக்கு வேடிக்கையா இருக்கும். இருட்டுன்னா என்னன்னு அப்பத்தான் எனக்குத் தெரியுது. அம்மா ஸ்கூலுக்குப் போயிருந்த சமயத்திலே எனக்கு ரொம்ப ஜுரம். எத்தனை பயந்து போனேன்னு உனக்கு நா எப்படிச் சொல்வேன்?''

மீராவிற்குக் கண்களில் நீர் நிறைந்து போயிற்று.

''நானும் பயந்து போவேன் ஹரி'' என்றாள் அவள் சற்றுச் சமாதானமாக ''அமெரிக்காவிலே ஒரு முறை ஜுரம் வந்தது. நா செத்துப் போயிடுவேன்னு பயந்தேன்.''

அவனுடைய அதரங்களில் ஆச்சரியகரமாகப் புன்னகை அரும்பிற்று. ஆசானைப் போன்ற பாவனை தெரிந்தது.

''சாவைப் பத்தி எனக்கு பயமில்லை. பார்வை உள்ளவங்களுக்கு இருக்கிற பயம் எனக்கு இல்லே. சாவு என்கிறது உங்களுக்கெல்லாம் திசை தெரியாத இருட்டு மாதிரி. எனக்கு எந்த வித்தியாசமும் இல்லே. ஒரு இருட்டிலேந்து இன்னொரு இருட்டு - ஒரு வேளை அது இன்னும் சுவாரஸ்யமா இருக்கலாம். யாருக்கும் நா பாரமில்லே என்கிற நிம்மதியினாலே -''

''ஹரி. ப்ளீஸ் இப்படியெல்லாம் பேசாதே. யாரும் உன்னை பாரமா நினைக்கல்லே.''

''அப்படி நினைக்கல்லேங்கறது கூட ஒரு சுமை மீரா.''

''யூ மஸ்ட் பீ க்ரேஸி ஹரி!'' என்றாள் அவள் உத்வேகத்துடன். ''ப்ரியம் என்கிறது உனக்குச் சுமையா? எனக்கு உன் மேல் ப்ரியம் இருக்கிறதனாலேதான் நா வரேன். உன்னோடு பேசும் போது எனக்கு சந்தோஷம் ஏற்படறது. இல்லேன்னா வீட்டுக்குப் போகணும்னு நினைச்சவ இங்க எதுக்கு வரணும்? நீ செஞ்ச பிரார்த்தனையினாலேன்னு சொல்லாதே.''

அவன் அதரங்களில் மீண்டும் புன்னகை விரிந்தது.

''தீவிரமான எண்ணமும் பிரார்த்தனையும் ஒண்ணுதான் மீரா. எண்ணங்களுக்குச் சக்தி உண்டு. குருட்டு ராஜா திருதராஷ்ட்ரன் பீமனை அணைச்ச போது என்ன ஆச்சு தெரியுமா?''

''தெரியும்! நீ திருதராஷ்ட்ரன் இல்லே; கிருஷ்ணாவதாரம். ஹரி.''

ஹரி வாய் விட்டுச் சிரித்தான்.

''நான் உன் சன்னிதிக்கு வந்திருக்கிறவ'' என்றாள் மீரா தொடர்ந்து.

ஹரி கைகொட்டிச் சிரித்து



''பலே! உன் பக்தியை மெச்சினோம் மீரா!'' என்று அபய ஹஸ்தம் காட்டியதும் இருவரும் பெரிதாகச் சிரித்தார்கள்.

''தமிழ்லே நிறைய முன்னேறிட்டே'' என்று அவன் சிலாகித்தபோது, ''எல்லாம் உங்க ஆசி சுவாமி'' என்றாள் அவள் வினயத்துடன்.

அவன் மீண்டும் பெரிதாகச் சிரித்தான்.

''மீரா!'' என்று உள்ளேயிருந்து மைதிலியின் குரல் கேட்டது. ''உங்க ரெண்டு பேருக்கும் போர்ன்விடா கலந்திருக்கேன் எடுத்திட்டுப் போ.''

''இதோ வரேன்'' என்று மீரா துள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள்.

வாஸந்தி

மைதிலி தயாராக வைத்திருந்த டிரேயை ''தாங்க்யூ மேம்'' என்று வாங்கிக் கொள்கையில், மைதிலி அவள் தோளை அன்புடன் அழுத்தினாள்.

''நீ வந்தது எனக்கு ரொம்ப சந்தோஷம் மீரா. ரெண்டு நாளா ஹரி ரொம்பச் சோர்வா இருந்தான்.''

''எனக்கு நீங்க போன் பண்ணியிருக் கலாம் மேம். அல்லது ஸ்கூல்லே சொல்லி யிருக்கலாம். நேத்தே எனக்குப் பரீட்சை முடிஞ்சுடுத்தே!''

''அப்படி நா சொல்றதை ஹரி விரும்ப மாட்டான் மீரா.''

''எனக்குப் புரியறது'' என்று மீரா நடந் தாள். இன்றைய பார்ட்டியைப் பற்றி மைதிலியிடம் பிறகு சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். பார்ட்டி யின் நினைவு மீண்டும் ஓர் அவமான உணர்வை ஏற்படுத்திற்று. போர்ன் விடாவை அவளிடமிருந்து வாங்கிக் கொள் ளும்போது, ''இன்னிக்கு சனிக்கிழமை ஆச்சே, டான்ஸ் கிளாஸ் இல்லே?'' என் றான் ஹரி.

''இருக்கு, பரீட்சை சமயமானதாலே சாயங்கால கிளாஸ் இன்னிக்கு.''

''காலையிலே நீ போனது டான்ஸ் கிளாசில்லையா?''

''இல்லே.''

இவனிடம் அதைப்பற்றிப் பேசுவது அவசியமில்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள். இவன் அதிர்ந்து போவான், அல்லது புரியாமல் தவிப்பான். இவ னுடைய அறிவு, புத்தகங்களிலிருந்தும் அவனைச் சுற்றி இருக்கும் குறுகிய வட்டத்து உலகத்து ஓசைகளின் கிரகிப்பி லிருந்தும் வளர்ந்தது. சங்கருடைய உலகத் தின் மெத்தனமும் அகங்காரமும் இவ னுக்குப் புரியாது. அந்த அநாகரிகத்தை இவன் தெரிந்து கொள்ளாமல் இருப்பது நல்லது.

''நா இங்க இருக்கேன்னு அம்மாவுக்கு போன் பண்ணிச் சொல்லணும்'' என்று அவள் அப்பொழுதுதான் நினைவு வந்தவ ளாய் எழுந்தாள். ஹரியின் வீட்டிலிருந்து பேசுவதாகச் சொன்னதும் அம்மா ஆச்ச ரியப்பட்டாள். ''பார்ட்டி முடிஞ்சுடுத்தா?'' என்றாள். ''இல்லே. நா கிளம்பிட்டேன். எனக்கு அங்க ஒண்ணும் பிடிக்கல்லே. நேரிலே சொல்றேன். நா இங்கேயிருந்தே டான்ஸ் கிளாஸுக்குப் போயிட்டு வரேன்மா. இஸ் இட் ஓ. கே?''

''ஓ.கே. ஜாக்கிரதையா போயிட்டு வா'' என்றாள் அம்மா வழக்கம்போல. மீரா வுக்குச் சிரிப்பு வந்தது. இன்று ஒரு 'ரேப் சீனிலிருந்து தப்பிச்சேன்' என்று அம்மா விடம் சொல்லும்போது, அவளுடைய முகம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்வது சுவாரஸ்யமாக இருந்தது.

ஹரியுடனும் மைதிலியுடனும் மேலும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பும்போது ''மறுபடி எப்ப வருவே?'' என்றான் ஹரி.

அவள் மைதிலியைப் பார்த்து சமிக் ஞையுடன் சிரித்து, ''அடுத்த சனிக் கிழமை'' என்றாள். ''தினமும் வரணும்னு நா ஆசைப்பட்டாலும், மேம் உதைப் பாங்க, ஒரு மாசத்திலே பெரிய பரீட்சை வருது'' என்று சிரித்தாள்.

''உண்மைதான்'' என்றாள் மைதிலி. ''ஸ்கூலுக்கு நல்ல பெயர் கொண்டு வரு வேன்னு உன்னைத்தான் நம்பியிருக் கோம்.''

''இதுவும் ஒரு சுமை, இல்லே ஹரி?''

ஹரியின் சிரிப்பு வெகு நேரத்துக்கு அவளைத் தொடர்ந்து வந்தது. டான்ஸ் வகுப்புக்கு பஸ்ஸில் பயணம் செய்யும் போது ''ரொம்ப பயந்து போனேன்'' என்ற அவனது வார்த்தைகளின் நினைவு மீண்டும் மீண்டும் வந்து சங்கடப்படுத்தியது.

எதற்கு? நான்தான் பயப்படுகிறேன். குழம்பிப் போகிறேன். பார்வையில்லா தவர்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள். எனக்கு ஏற்படும் அதிர்ச்சிகள் உனக்கு ஏற்படாது. பேதங்கள் அற்ற - கறுப்பு வெளுப்பு வித்தி யாசமில்லாத உலகம் உன்னுடையது. வேடிக்கை - உன்னுடைய உலகத்தில்தான் வெளிச்சம் இருக்கிறது. அதில் ஒரு தத்து வம் அடங்கியிருக்கிறது.

அடுத்த சான்ஸ் குஷ்பூவுக்கு?



❑ மதுரை அனுப்பானடி பகுதியில் பார்த்த ஒரு ரிக்ஷா வண்டியின் பின்புறம் எழுதப்பட்டிருந்த வாசகம் "புரட்சித் தலைவி குஷ்பூ துணை!"

காலம் அப்படி இருக்கு!

- கே. சகுந்தலா



பிச்சையிடுவதில் புதுமை!


பிச்சை எடுக்கும் நபர் காசு சேர்ந்ததும் சினிமா, மது, போதைப் பொருள் என்று தேடிப் போவது சர்வ சகஜமாக நடப்பதுதான். இதைத் தடுக்க ஒரு யோசனையைக் கையாள்கிறார்கள், அமெரிக்காவிலுள்ள பெர்க்கிலி மக்கள். 25 சென்ட் மதிப்புள்ள சீட்டுகளை வாங்கி வழங்குகிறார்கள். எங்கு வேண்டுமானாலும் உணவுக்காக மட்டுமே இதை மாற்ற முடியும். மற்ற விஷயங்களுக்குச் செல்லாது என்று அதிலேயே அச்சிடப்பட்டிருக்கும்!

- பு. விஜயலஷ்மி

ஆதாரம் : பிஸினஸ் இண்டியா

◆

செல்லோ! சௌக்கியமா?



☐ பம்பாய் நகரத்தில், டெலிபோன் உள்ள இல்லங்களில் தலைவிகள், பகல் முழுவதும் டெலிபோன் மணி அடிக்கும்போதெல்லாம் 'ஹலோ' என்பதற்கு பதில் 'செல்லோ' என்று கூறினார்கள். ஏன்? பிரபல செல்லோ தெர்மல் (cello) சாதன தயாரிப்பாளர்கள் திடீரென தங்கள் விருப்பப்படி டெலிபோன் நம்பர்களைச் சுழற்றுவார்கள்; யார் 'செல்லோ' என்று பதிலளிக்கிறார்களோ அவர்களுக்குப் பரிசு அளிப்பதாக அறிவித்திருந்தார்கள். அதன் விளைவுதான் இது!

நன்றி : பிசினஸ் வர்ல்ட்

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்

அடுத்த முறை ஹரியைச் சந்திக்கும் போது இதைச் சொல்ல வேண்டும் என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

லலிதாங்கியின் வீட்டிற்கருகில் இறங்கி நடந்தபோது காலையில் ஏற்பட்ட அனுபவம் எல்லாம் நினைவில் மெல்ல மழுங்கிப் போயிற்று.

லலிதாங்கி தனியாக அமர்ந்திருந்தாள். மீராவைக் கண்டதும் சுவரில் இருந்த கடிகாரத்தைப் பார்த்துவிட்டு ''என்ன சீக்கிரம் வந்திருக்கே?'' என்றாள்.

முக்கால் மணி நேரம் தான் முன்னதாக வந்திருந்தது மீராவுக்கும் வியப்பாக இருந்தது.

''நேரத்தைச் சரியாக் கவனிக்காம வந்துட்டேன். அப்புறமா வரட்டுமா?''

''வேண்டாம் வேண்டாம் உக்காரு'' என்றாள் லலிதாங்கி உற்சாகமாக. இத்தனை பிரகாசமாக அவள் என்றும் இருந்ததில்லை என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

''மேம், நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க!''

லலிதாங்கி சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்துச் சிரித்த போது, பத்து வருஷங்கள் உதிர்ந்தன.

''என்ன இன்னிக்குப் புதுசாப் பார்க்கறாப்பலே சொல்றே?''

''ஆமாம். இந்த அழகு புதுசாத் தெரியறது.''

லலிதாங்கி நாணங்கலந்த கலகலத்த சிரிப்புச் சிரித்தாள்.

''உனக்குப் பதினேழு வயசுதான்னு நம்ப முடியல்லே'' என்று அருகில் வந்து அவளுடைய கன்னத்தை நிமிட்டினாள். ''நாகராஜன் சொல்வாங்க, அமெரிக்கக் குழந்தைங்க பத்து வயசிலேயே முத்தப் பாவற்காயாப் பேசும்னு.''

அப்படியென்றால் என்ன என்று கேட்க நினைக்கையிலேயே ஊகமாய் அர்த்தம் புரிந்து புன்னகையுடன் மீரா கேட்டாள்.

''அந்த அங்கிள் எங்கே மேம்? வீட்டுக்கு வரேன்னு சொன்னார். வரவேயில்லே.''

''அவங்க மறுநாளே மதுரைக்குப் போகவேண்டி வந்துட்டது கண்ணு!'' என்ற லலிதாங்கியின் குரலில் புதிதாக நெருக்கம் தெரிந்தது.

''அந்த அங்கிளுக்கு உங்கமேல ரொம்பப் பிரியம்னு நினைக்கிறேன்'' என்றாள் மீரா தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலாமல்.

லலிதாங்கி திடுக்கிட்டு அவளைப் பார்த்தாள். பிறகு பக்கென்று சிரித்தாள்.

''கடவுளே, இந்த ஊர்ப் பெண் எவளுக்கும் எங்கிட்ட இப்படிப் பேசத் துணிச்சல் இருக்காது!''

(தொடரும்)

வடசென்னை ரவுண்ட் அப் :

"நார்த் மெட்ராஸ்ல இருக்கிறவங்களை மனுஷங்களா யாரும் நினைக்கிறதாத் தெரியல்லே! ஏதோ ஆடு - மாடு மாதிரி கால்நடைகள் வசிக்கிற இடம்னுதான் அரசாங்கமும் சரி, கார்ப்பரேஷனும் சரி - நினைச்சுக்கிட்டிருக்கிற மாதிரி தோணுது!"

வட சென்னையை அலசப் புறப்பட்ட இரண்டாம் நாள் காலையிலிருந்து மாலை வரை பல இடங்களையும், பலதரப்பட்ட மக்களையும் பார்த்து, பேசி விட்டுக் கிளம்பிய போது, பாண்டியன் என்ற வட சென்னைவாசி முத்தாய்ப்பாகச் சொன்ன வார்த்தைகள் இவை. அந்தப் பகுதியின் நிலைமையை இதைவிடத் துல்லியமாகச் சொல்ல முடியாது என்கிற மாதிரிதான் நாம் பார்த்த இடங்களும் இருந்தன.

கட்டை வண்டிகள் எல்லாம் வழிநெடுக ஆக்ரமித்துக் கொண்டிருக்கின்றன. இங்கே வேலை செய்கிற வேலையாட்கள் வேறு இடம் தேடிப் போவதில்லை - டாய்லெட்டுக்கு; வசதியாகத் தெருவே இருக்கிறதே! இதை எல்லாம் வளைந்தும் நெளிந்தும் தாண்டியும் சர்க்கஸ் நடை நடந்துதான் தெருவில் போக வேண்டும். பழைய சட்டக் கல்லூரி மாணவர் விடுதியை அம்போ என்று விட்டு வைத்திருக்கிறார்கள்.

இதையொட்டி இருக்கும் கச்சாலீசுவர அக்ரகாரத் தெருவுக்குள் நுழையும்போதே மூக்கைப் பிடித்துக் கொண்டுதான் நுழைய வேண்டும். கோயில் சுவரும், குளமும் பப்ளிக் டாய்லெட்தான்.

இரண்டு தலைமுறைகளாக இங்கே குடியிருந்து வரும் லட்சுமிசுந்தரேசன் சொன்னார் : "எங்கள் வீட்டுக் குழாயில்


வடக்கு வாடுகிறது



கச்சாலீஸ்வரர் கோயில் குளம் : பப்ளிக் டாய்லெட்!

"வீட்டுச் சிறை"

இரும்பு வியாபார கேந்திரமான செம்புதாஸ் தெரு வழியாக, அவ்வளவு எளிதாக யாரும் நடந்து வந்து விட முடியாது. இரவு, பகல் இரும்புச் சாமான்கள் சாலையை முக்கால் பகுதி அடைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. லாரிகள்,



லட்சுமி சுந்தரேச

உண்டு. இது குழந்தைக்கு மேலும் மனச் சோர்வை (Mental depression) ஏற்படுத்தும்.

● இரவு ஏழு மணிக்குப் பிறகு நீர் அல்லது திரவ உணவுகளைக் (ஹார்லிக்ஸ், பூஸ்ட் போன்றவை) கொடுக்காதீர்கள். இந்த நிபந்தனை குழந்தைக்கு உறங்கும் நேரத்தில் ("Spinctre Control") கட்டுப்பாடு ஏற்படும் வரையில்தான். பிறகு தாராள மாகக் கொடுக்கலாம்.

● இருட்டில் பயங்கலந்த கற்பனை கள் கனவுகளாக உருவெடுக்கும் போது குழந்தை சிறுநீர் கழித்து விடும். வெளிச்சம் பயத்தைப் போக்கும். ஒரு ஜீரோ வாட் பல்பை எப்போதும் படுக்கை அறையில் எரிய விடுங்கள்.

● நள்ளிரவில் நீங்கள் குறட்டை விட்டுத் தூங்கினாலும் சிரமம் பாராமல் எழுந்து, ஒருமுறை குழந்தையை எழுப்பி டாய்லெட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள்.

● இரவில் படுக்கையில் சிறுநீர் கழித்திருந்தால், குழந்தையையே அந்தப் படுக்கை விரிப்பைத் துவைக்கச் சொல் லுங்கள். குழந்தையால் அது முடியாது எனில், நீங்கள் துவைக்கையில் உதவச் செய்யுங்கள். சிறுநீரின் வாடை அவனது எச்சரிக்கை உணர்வைத் தூண்டுவதுடன், தண்டனையும் உண்டு என்பதை அவனுக்கு உணர்த்தும். குழந்தை ஈரப்படுத்திய துணியை வேலையாட்களைக் கொண்டு துவைக்கச் செய்தால் அவர்கள் இரக்க மின்றிக் கேலி பேசக்கூடும். இதுவும் தவிர்க்கப்படுகிறது.

● ஒருநாள் படுக்கையை ஈரப்படுத் தாமல் இருந்தால் மறுநாள் காலையில் குழந்தையைத் தட்டிக் கொடுத்து, 'Good Morning' சொல்லி, முன்பே வாங்கி வைத் திருந்த பரிசுப் பொருள் ஒன்றைக் கொடுத்து அவனை வானளாவப் புகழுங்கள். 'ஹீரோ' அந்தஸ்தைப் பெற்ற பெருமையில் மேலும் எச்சரிக்கையுடன் நம்மையே எழுப்பி பாத் ரூமுக்கு அழைத்துச் செல்வான். ஒரு வாரம் தொடர்ந்து வெற்றி பெற்ற குழந்தைக்குப் பெரிய பரிசுப் பொருளைக் கொடுத்து அவனைப் பெருமைப்படுத்துங்கள்.

● **மருந்துகள்** : AMITRIPTYLINE Hcl. (AMILINE-TORRENT) என்ற மருந்து டாக்டர் பிரிஸ்கிரிப்ஷனில் கிடைக்கும். அதிகப் பிரச்னை உள்ள குழந்தைகளுக்கு (5-7 வயது) 25 மி.கி. மாத்திரை ஒன்று, படுக்குமுன், அதாவது இரவு எட்டு மணி அளவில் கொடுக்கவும். தொடர்ந்து 4 நாட்கள் கொடுத்த பிறகு, மேற்கொண்டும் பிரச்னை தொடர்ந்தால், 10 மி.கி. மாத்திரை ஒன்று முன்போல கொடுக்கலாம். ஒரு வாரத்தில் எல்லாம் சரியாகி விடும்.

ஆனால் டாக்டரின் அனுமதியின்றி மருந்துகள் கொடுக்கக் கூடாது. இதில் மிக வும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

- குழந்தை நல மருத்துவர் டாக்டர் **ஜே. கே. சங்கர்** கூறக் கேட்டுத் தொகுத் தவர் : டாக்டர் **ஜே. ஆர். கிருஷ்ண மூர்த்தி.**



ஒரு கோடீஸ்வரன், ஒரு தீபாவளி...

இரா. முருகன்

சுந்தரம்தான் ஜெயித்தான். நான் கோனார் என்றேன். அவன் ராஜு என்றான். வந்தது ராஜுதான். 'தீபாவளிக்கு மூன்று நாள் லீவு' சர்க்குலரை எடுத்து வந்த போது இன்னும் ஒரு பீரியட்தான் பாக்கி.

'தோத்தியாடா?' சுந்தரம் கண்ணால் கேட்டான். கோபாலன் சார் பட்டாசுக் கடையில் உதிரி வெடி வாங்கித் தர வேண்டுமென்று பந்தயம். தீபாவளி சமயத்தில் பந்தயத்தில் தோற்பது கூட ஒரு சந்தோஷம்தான். கோபாலன் சார் கடையில் பட்டாசு அடுக்குகிற மாதிரி.

மாதா பிதா குரு தெய்வம். பட்டாசுக் கடை வைக்கிற வாத்தியார் இஷ்ட தெய்வம். கோபாலன் சார் தீபாவளிக்கு ஒரு வாரம் முன்னால் பள்ளிக்கூடத்துக்கு லீவு போட்டு விடுவார். அவர் வீட்டுத் திண்ணையில் 'அகிலாண்டம் பட்டாசு ஸ்டால்' போர்ட் ஏறும். அகிலாண்டம்மாள், ஒய்ப் ஆப் கோபாலன் என்று எழுதிய கள்ளிப் பெட்டிகள் சிவகாசியிலிருந்து லாரியில் வந்து இறங்கும். நாங்கள் சாயந்திரம் விளையாடப் போகாமல் 'இங்கே புகை பிடிக்கக் கூடாது' என்று கண்டிக்கிற அட்டைகள் எழுதுவோம். வாளியில் மண் நிறைப்போம். விலைப்பட்டியலைப் போட்டி போட்டுக் கொண்டு மனப்பாடம் செய்வோம்.

தீபாவளி, கோபாலன் சார் பட்டாசுக் கடை திறப்பதில் தொடங்குகிறது. ஊரிலிருக்கிற மூன்று சவுண்ட் சர்வீஸுகளும் 'ரோஜா மலரே ராஜகுமாரி' என்று இசைத்தட்டில் அழைத்து புரட்டா ஸ்டால், பேன்சி ஸ்டோர், துணிக்கடை, மளிகை விளம்பரங்களை வர்த்தக ஒலிபரப்பாக்குவதில் பரபரப்படைகின்றன. அவ்வப்போது போடுகிற தூறல் கூடப் பட்டாசு வாசத்தையும் பட்சண வாடையையும் பரப்ப...

அடுத்த எலக்ஷனில் அறிஞர் அண்ணா தான் வருவார் என்று பட்டாசுக் கடையில் பேசிக் கொண்டார்கள். அடுத்த தீபாவளிக்கு இந்தி நஹி!

கோபாலன் சார் கடையில் எனக்கு முன்னால் சுந்தரம் வந்திருந்தான். பட்டாசு வெடிக்கிற குரங்கை வெளிச் சுவரில் ஒட்டப் பசை தடவிக் கொண்டிருந்தார்கள்.

ரிக்ஷா நிற்கிற சப்தம். முதலில் குடை. கம்பளிப் போர்வை போர்த்திக் கொண்டு கோடீஸ்வரன் வாத்தியார் மந்திரவாதி போல உள்ளே உட்கார்ந்திருக்கிறது தெரிகிறது. ''கோபாலா, கடை ஆரம்பிச்சாச்சா, சபாஷ்...''

பையன்கள் எல்லாம் ஆளுக்கொரு திசையில் சிதறி ஓடியிருந்தார்கள். நான் மாட்டிக் கொண்டேன்.

''கோபாலா, நல்ல ஜுரம். டாக்டர் கிட்டே போறேன். பாங்குக்காரர் பிள்ளையைக் கொஞ்சம் கூட அனுப்பி வையேன்... அப்பா எங்கேடா இப்போ? மெட்றாஸா கல்கத்தாவா?...'' நான் உறைந்து போயிருந்தேன்.

கோடீஸ்வரன் சரியான நச்சு. மாதத்தில் நாலு நாள் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி... ரிக்ஷாவைப் பிடி. கூட ஒரு பையனையும். ஊரில் நாலு டாக்டர். எல்லோரையும் போய்ப் பார். ஒவ்வொருத்தரும் கொடுக்கிற பச்சை சிவப்பு மருந்தை சர்பத் மாதிரி குடி. ஒருத்தர் கொடுத்த பிரிஸ்கிரிப்ஷனை இன்னொருத்தரிடம் காட்டி 'இது இதுக்குத்தானா' என்று விசாரி 'தம்பி, தோளைக் கொடு... எறங்க முடியலே.'


டியூஷனுக்கு யாரும் போகாத வாத்தியார் இவராகத்தான் இருக்கும்.

''ராமு கொஞ்சம் சார் கூட போய்ட்டு வந்துடு. சார் சீக்கிரம் விட்டுடுவார்.'' அது கோடீஸ்வரனுக்கும் விடப்பட்ட கோரிக்கைதான். வியாபாரம் சூடுபிடிக்கிற நேரத்தில் சேல்ஸ்மேனை இழக்க யாருக்கு மனம் வரும்?

வேண்டா வெறுப்போடு ரிக்ஷாவில் உட்கார்ந்தேன்.

சின்னதாகத் தூறல் போட்டுக் கொண்டிருந்தது. வடக்குவாடி. சக்கர வண்டியில் காகிதப் பூ ஒட்டி கங்கா தியேட்டரில் 'தீபா

வளி ரிலீஸ் நவராத்திரி' என்று எழுதிக் கொண்டிருந்தார்கள். ''மதுரையில் ரிலீஸாகி நாலு மாசமாறது. இவங்களுக்கு இப்பத்தான் ரிலீஸாம்'' ரிக்ஷாக்கார நாச்சியப்பன் சொன்னான். ''என்ன சொல்லு... எங்க வீட்டுப் பிள்ளையாகுமா?'' ரிக்ஷா உள்ளே அண்ணா சிரிக்கிற படம். 'அண்ணா, இந்தியை விரட்டற மாதிரி இந்தக் கோடீஸ்வரன் வாத்தியார் விஷயத்திலும் ஒரு வழி பண்ணக் கூடாதா?'



''ராமசுப்பிரமணியன் டாக்டர் வீட்டுலே நிறுத்துப்பா.'' கோடீஸ்வரன் வாத்தியார் சொன்னார். சீட் விளிம்பில் தொற்றிக் கொண்டாற் போல உட்கார்ந்திருந்தார்.

தேரடிப் பிள்ளையார் கோயிலைக் கடந்து பக்கத்துச் சந்தில் திரும்பினால் டாக்டர் வீடுதான். இவரை விட்டு விட்டுப் பிய்த்துக் கொள்ள வேண்டும்.

கோவில் திண்ணையில் பிரமை பிடித்த மாதிரி ஒருத்தர். சுற்றி நான்கைந்து பேர். ''வா, கிளம்பு...'' விதவிதமான குரல்கள். மனிதன் அசையக் காணோம். மலங்க மலங்க விழித்துக் கொண்டு இரண்டு குழந்தைகள் கூடவே நின்றன.

''எலக்ட்ரிசிட்டி போர்ட்காரர் சார். கனாவுலே புள்ளையார் வந்து எங்கிட்டே வான்னராம். நேத்திலேருந்து உட்கார்ந்துட்டிருக்கார். யார் கூப்பிட்டாலும் எழுந்திருக்கலே.'' - நாச்சியப்பன் சொன்னான்.

'இத்தனை பெரியவர்களாக இருக்கிறார்கள். குண்டுக் கட்டாகத் தூக்கிப் போக வேண்டியதுதானே பாவம் அந்தக் குழந்தைகள். தீபாவளி சமயத்தில் அப்பா இப்படி ஒரு வினோதமான பிரகிருதி ஆகியிருக்க வேண்டாம். பிள்ளையாரும்தான் இன்னும் நாலு நாள் கழித்துச் சாவகாசமாகக் கனவில் வந்திருக்கலாம். அதை விட உபயோகமாக என்றால் இந்தக் கோடீஸ்வரன் கனவில் வந்திருக்கலாம்.'

டாக்டர் அறைக்குள் கோடீஸ்வரன் சார் சப்தம். பெஞ்சில் உட்கார்ந்து கொண்டேன். வெளியே பட்டாசு வெடிக்கிற சப்தம். 'ஒய்யாங்...'' ஏராப்ளேன் வாணம் சீறி எங்கோ விழுகிறது. அது கோடீஸ்வரன் சார் தலையில் விழ.

''சார், உங்களுக்கு ஹெல்த் ஒரு அப்சஷனாப் போச்சு.'' டாக்டர் சொல்லிக் கொண்டிருக்கிறார். ''போதாக்குறைக்கு இங்கே பிராக்டிஸ் பண்ற நாலு பேரும் உங்க ஸ்டுடண்டா வேறே போய்ட்டோம். அதுக்காக, ஒரு காய்ச்சல், தலைவலின்னா எல்லாரையும் பார்க்கணும்னு இல்லையே சார்... நான் கொடுத்தா என்ன, கண்ணுக்கினியான் கொடுத்தா என்ன, கார்த்திகேயன் கொடுத்தா என்ன... ஒருத்தர் மருந்து சாப்பிட்டாலே நிச்சயம் குணமாயிடும்...''

''இல்லேப்பா... நான் உங்கிட்டே மட்டும்தான் வந்தேன்.''

''முதல்லயே எங்கிட்டயா சார்?''

''அதெல்லாம் இல்லப்பா.. ரெண்டு நாள் முன்னாடி கார்த்திகேயன்கிட்டே பேசிக்கிட்டிருந்தேன். இது இதப்பாரு... வச்சுக்குங்க சார்னான்... இன்னும் சாப்பிடலை... இது வந்து...''

''சார் நான் அதைப் பார்க்காமலேயே பேர் சொல்லட்டா... திங்கள் கிழமை வந்த மெடிக்கல் ரெப்ரஸெண்டேடிவ் எங்க எல்லோரையும் பார்த்துட்டுத்தான் சார் போனார். இந்த சாம்பிள்தானே... சரியா...?''

டாக்டர் பிள்ளை போலிருக்கிறது. ஒரு சின்னப் பையன் உள்ளேயிருந்து வந்தான்.

''உங்க அப்பாவா?'' உள்ளே கை காண்பித்துக் கேட்டான்.

''எங்க வாத்தியார்.''

அவன் என்னிடம் மேலே பேசப் பிடிக்காமல் வெளி வாசலுக்குப் போய் விட்டான். பள்ளிக்கூடம் இல்லாவிட்டாலும் வாத்தியார்களுடன் சுற்றுகிற பையன்களை யாரால்தான் சகித்துக் கொள்ள முடியும்?

''அடுத்த வருஷம் ரிடையர் ஆகப் போறேம்பா. அப்புறம் கிராமத்துலே போய் செட்டில் ஆக வேண்டியதுதான். பிள்ளையா குட்டியா?''

அப்பாடா, அடுத்த வருடம் இந்தக் கோடீஸ்வரன் சார் நமக்கு வரப் போவதில்லை. அண்ணா தயவில் இந்தி பண்டிட்டும். உலகம் திடீரென்று பிரகாசமானது. டாக்டர் பையன் வாசலில் பூச்சட்டி வைத்துக் கொண்டிருந்தான்.

''உங்க கிட்டே வாங்க மாட்டேன் சார். அப்பா அம்மாக்கு மருந்து கொடுத்தா காசு வாங்குவாங்களா?''

வாத்தியார் வெளியே வந்தார். ''ஏறிக் கோப்பா... இந்தா மருந்து பாட்டில். பத்திரமா வச்சுக்க. வாங்கிக்கறேன்.''

அவர் வாயில் மருந்து நெடி அடித்தது. கண்ணில் சின்ன சந்தோஷம்.

''கார்த்திகேயன் டாக்டர் வீடு போகணுமா சார்?''

நான் நாச்சியப்பனை எரித்து விடுவது போல் பார்த்தேன். ''வேண்டாம்ப்பா... நேரே வீடுதான். அப்புறம் தம்பியை கோபாலன் சார் கடையிலே எறக்கி விட்டுடு.''

சுபாஷ் ப ஜா ரி ல் ஏகப்பட்ட விளக்குகள். முருகன் ஜவுளி வாசலில் வழியோடு போகிறவர்களை வருந்தி வருந்தி அழைத்துக் கொண்டு நிற்கிறார்கள். ஒருவன் ரிக்ஷாவுக்குள் கைவிட்டு நோட்டிசைத் திணித்தான். ''மலிவான விலையில் டெர்லின்... கிரேப் மெடிரியல்....''

எல்லோரிடமும் டெர்லின் ச ட் டை இருக்கிறது. பெரும்பாலும் சந்தன நிறத்தில். இந்த வருடமும் என் டெரிலின் கோரிக்கை வீட்டுப் பெரியவர்களால் உறுதியாக நிராகரிக்கப்பட்டது. டெர்லின் போன பிறவியில் புண்ணியம் செய்தவர்களுக்கு. எனக்கு வேண்டிய துணிகளை பட்டா பட்டா டிசைன்களில் அசட்டு நீல, மஞ்சள் நிறங்களில் சப்ளை செய்யவே மூக்கையா செட்டியார் அவதாரம் எடுத்து இருக்கிறார். முழங்காலுக்கு மேலே வழிகிற டிராயரும் முழங்கைக்குக் கீழே தழைகிற சட்டையும் தைத்துக் கொடுக்கவே குருசாமி டெய்லர் இருக்கிறார். போன வாரமே கொளகொளவென்று தைத்து அம்மா ரவிக்கைகளோடு பிரிமனை மாதிரிச் சுற்றிக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போய்விட்டார். ''ஏதாவது மாத்தணும்னா இப்ப எடுத்து வந்துடாதீங்க. ஏகப்பட்ட துணி கிடக்கு. தீபாவளிக்கு அப்புறம் தாங்க'' - இது அம்மாவுக்கு. என் துணிகள் குருசாமியிடம் திரும்பப் போவதே இல்லை.

''என்ன தம்பி, தீபாவளிக்குத் துணி எல்லாம் எடுத்தாச்சா?'' கோடீஸ்வரன் சார் கேட்டார்.

''எடுத்துட்டாங்க சார். நீங்க எடுத்துட்டீங்களா சார்?''

காதிகடையில் தான் எல்லா வாத்தியார்களும் தீபாவளி சமயம் தென்படுவார்கள். ''ஜி.ஓ. வந்திருக்கு''. ஜி.ஓ என்றால் கவர்மெண்ட் ஆர்டர் என்று சுந்தரம் சொன்னான். தீபாவளிக்குக் கதர் சட்டைதான் போடவேண்டும் என்று ஏதாவது வாத்தியார்களை மிரட்டுகிற உத்தரவாக இருக்கும்.

''நான் தீபாவளி எல்லாம் கொண்டாடறுதில்லேப்பா.''

ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தேன். ராபர்ட் சார் இப்படிச் சொல்லியிருந்தால் ஆச்சரியமில்லை. அல்லது வக்கில் ரங்கனாத அய்யரின் பிள்ளைகள். அவர்கள் வீட்டுக் கூடத்தில் தாடிக்காரர்கள் படம் மாட்டி இருப்பார்கள். ஒருத்தர் மார்க்ஸ் இன்னொருத்தர் பெயர் வேறு ஏதோ. அந்தப் பிள்ளைகள் தீபாவளி கொண்டாடுவதில்லை. இருப்பதில் பழைய சட்டையாகப் போட்டுக் கொண்டு தீபாவளியன்று காலையில், பட்டாசும் புதுத்துணியும் மணக்கும் தெரு நெடுக மெல்ல நடந்து போவதைத் தவறாமல் செய்வார்கள்.



300 லிட்டர் பதனீர் தரும் பனை!

❑ அண்மையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதிக பதனீர் தரவல்ல பனை இரகம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளது. மானாவாரியில் வறட்சியைத் தாங்கி வளரும் வல்லமை கொண்டது. இந்தப் பனை மரம் ஆண்டொன்றுக்கு 300 லிட்டர் பதனீர் தரும். சாதாரண நாட்டுரகப்பனை ஒன்றிலிருந்து 150 முதல் 200 லிட்டர் பதனீர்தான் கிடைக்கும்.

- ஆதாரம் : இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல் : ரமா ராமநாதன்

வாத்தியாரும் அப்படியா? இல்லை, அவர் வீட்டில் யாராவது இறந்து போய்.. அது இன்னும் கஷ்டம். யாரும் எழுப்பாமல் வெடிச்சப்தம் கேட்டு எழுந்து பல்கூடத் தேய்க்கத் தோன்றாமல் திண்ணையில் உட்கார்ந்து பக்கத்து வீடுகளில் பரபரப்பை ஏக்கத்தோடு பார்த்து......

கோடீஸ்வரன் சார் வீடு. பக்கத்து வீட்டில் எல்லாம் பிரகாசமாக விளக்கெரிய இவர் வாசல் மட்டும் இருளோ என்று கிடந்தது.

வாத்தியார் வாசலில் ஒரு நிமிஷம் நின்றார். கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார். என்னை மறந்து விட்டார். ''போகலாம்''. நாச்சியப்பன் கிளம்பினான். ''ரயில் சவாரி வர்ற நேரம்.''

பத்தடி போயிருந்தபோதுதான் கையைப் பார்த்தேன். மருந்து! வாத்தியார் மறந்துவிட்டார். கண்டு கொள்ளாமல் விட்டுவிடலாமா? வேண்டாம், எல்லோரும் தீபாவளி கொண்டாடும்போது இவர் மட்டும் முக்கி முனகிக் கொண்டு ஜுரத்தில்.... அதைவிடக் கொடுமை என் வீட்டுக்கே வந்து விடக்கூடும் அவர்.

நான் ரிக்ஷாவிலிருந்து குதித்தேன். ''நீ போய்க்கோ நாச்சியப்பா.'' நாகனேரி மடத்துச் சந்து வழியாக ஓடினேன். வாத்தியார் வீட்டுக்கு குறுக்குவழி.

கோடீஸ்வரன் சார் வீட்டுக் கதவு அடைத்துத்தான் கிடந்தது. தள்ளினேன். திறந்து கொண்டது.

மங்கலான வெளிச்சம். வாத்தியார் எதையோ ஆற்றி எடுத்து டம்ளரில் ஊற்றுகிறார். கூடத்தின் கோடியில் கசங்கின படுக்கை, கட்டில். ஜமுக்காளம் வழிந்து தரையில் கிடக்கிறது. நடையில் சிறுநீர் வாடை. கட்டிலில் ஒருக்களித்துப் படுத்துத் தலையில் மடேர் மடேர் என்று அடித்துக் கொண்டிருந்த எலும்பு உருவம் அவர் மனைவியாக இருக்க வேண்டும்.

''போகணும்னு நெனச்சாலும் உசிரு போக மாட்டேங்குதே... துன்பம் தாங்க முடியல்லீங்க... நீங்க படற கஷ்டம் இன்னும் வேதனை.... வேண்டாங்க... எதுவுமே வேண்டாம்.. நான் போயிடறேன். இருந்து இருந்து உங்களுக்கு என்ன சுகத்தைக் கொடுத்தேன்... பாவி... போகணும்னு வேண்டிக்குங்க. சீக்கிரம் போயிடணும்... புத்து அரிக்க இன்னும் பாக்கி என்ன இருக்கு... நாளை எண்ணிக்கிட்டு... போயிடறேங்க.''

''சும்மா புலம்பிட்டிருந்தா எப்படி? போகணும்னு நினச்சாப் போக முடியுமா? வேளை வரவரைக்கும் இருந்துதான் ஆகணும். உன்னாலே எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை. பள்ளிக்கூடத்துலே பாடம் நடத்தற மாதிரி உனக்குச் செய்யறதும் எனக்குப் பிரியமான வேலைதான். இப்ப நான் கிடந்து துடிச்சுக்கிட்டிருந்தா, நீ செய்ய மாட்டியா என்ன? நீ பாரு.... அடுத்த தீபாவளிக்கு நீ எழுந்திருச்சு நடமாடத்தான் போறே... அது வரைக்கும் உனக்கு சிச்ருஷை செய்ய எனக்குச் சக்தி வேணும். அதான் எனக்கு ஒரு காய்ச்சல், தலை வலின்னு வந்தாலும் ஓடிப்போய் எல்லா டாக்டரையும் பார்த்து... தப்புக் கணக்குதான்... ஒருத்தர்கிட்டே நாலுநாள்லே குணமாறது நாலுபேர் கிட்டே இன்னும் சீக்கிரம் குணமாகாதான்னு நப்பாசைதான். நான் படுக்கக் கூடாது. அதான் முக்கியம். பிள்ளை குட்டியா இருக்கு நம்மைப் பாத்துக்க? நாமதான்... நமக்கு நாமே தான்.'' வாத்தியார் குரல் உடைந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தேன். ஓரமாக மேஜை தெரிந்தது. மேலே நாலு அடுக்காக காம்போசிஷன் நோட்டுக்கள். மருந்து பாட்டிலை மேஜை மீது வைத்தேன். கூப்பிடலாமா? வேண்டாம்.

வெளியே வந்தேன். சில்வண்டு இறைந்தது. பையன்கள் பக்கத்துத் திண்ணையில் பாம்பு மாத்திரை கொளுத்திய புகை.

பீய்ஸ் பீய்ஸ் என்று விசிலோடு எங்கேயோ இங்க்லீஷ் நியூஸ் ரேடியோவில். ஒன்பது மணி. பத்து மணிக்கு கோபாலன் சார் திண்ணைக் கடையை எடுத்து வைத்துவிடுவார். இன்னும் இரண்டு நாள்தான் கடை.

தீபாவளி காலையில் புதுச்சட்டையில் கரிபூசிக் கொண்டு சுந்தரம் ஓடிவந்தான்.

''கோடீஸ்வரன் சார் வீட்டுலே ஒரே கூட்டம்டா... வாத்தியார் வீட்டு அம்மா போய்ட்டாங்களாம்.''

தீபாவளி அன்று யாராவது இறந்து போவார்களா? யாராவது அழுவார்களா? தெரியாது.

அப்படியே நின்று கொண்டிருந்தேன். மழை பெய்ய ஆரம்பித்திருந்தது.

37 ம் பக்கப் புதிர் விடைகள் :

1) ஜப்பான் 2) இந்தோனேஷியா 3) சிங்கப்பூர் 4) ஃபிலிபைன்ஸ் 5) தென் ஆப்பிரிக்கா 6) ஹாலந்து 7) அமெரிக்கா 8) ஹவாய் (அமெரிக்கா) 9) அலாஸ்கா (அமெரிக்கா).

காதலெனும்

15

அவளுடைய சிரிப்பைப் பார்த்ததும் தான் அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசிவிட்டதாக மீராவுக்குக் கூச்சமேற்பட்டது.

''ஸாரி மேம்'' என்றாள் மன்னிப்புக் கேட்கும் குரலில். ''வம்புப் பேச்சுக்காக நான் சொல்லலே. உங்க ரெண்டு பேரையும் சேர்ந்து சந்தோஷமாப் பார்க்கும் போது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது.''

''உம்?'' என்று மகிழ்ச்சியுடன் லலிதாங்கி புருவங்களை வளைத்தாள். ''இருபது வருஷம் கழிச்சு மறுபடியும் சந்திச்சோம். சந்தோஷமா இருக்காதா?''

மீராவுக்கு ஏமாற்றமாக இருந்தது. இதற்கு மேல் இவர்களிடையே ஏதும் விஷயம் இல்லையென்றால் தன்னுடைய பார்வையும் கணிப்பும் கோளாறு என்று வருத்தமேற்பட்டது.

''ஓ, ஸாரி மேம்'' என்று அவள் முணுமுணுத்தது லலிதாங்கிக்குக் காதில் விழவில்லை என்று தோன்றிற்று. லலிதாங்கி ஏதோ பாட்டை முனகியபடி உள்ளே சென்று, ஒரு சின்னத் தட்டை எடுத்து வந்து அவளிடம் நீட்டினாள். தட்டில் இரண்டு



ஜாங்கிரிகள் இருந்தன. புன்னகையுடன், ''எடுத்துக்க'' என்றாள்.

''சொன்ன வாய்க்குச் சர்க்கரை கொடுக்கணும்னு சொல்வாங்க. சர்க்கரைக்குப் பதிலா ஜாங்கிரி.''

அவள் என்ன சொல்கிறாள் என்று விளங்காமலே மீரா ஒன்றை எடுத்துத் ''தாங்க்யூ'' என்றாள். அவள் தின்று முடிக்கிறவரை காத்திருந்து லலிதாங்கி ஒரு வெட்கச் சிரிப்புடன் சொன்னாள்.

''நானும் நாகராஜனும் கல்யாணம் செய்துக்கப் போறோம் மீரா.''

மீரா மகிழ்ச்சியுடன் கண்களை விரித்தாள். ''வாவ், க்ரேட்! கங்க்ராசுலேஷன்ஸ்

வானவில்

மேம்!'' என்று லலிதாங்கியின் கையைக் குலுக்கினாள்.

லலிதாங்கியின் முகத்தில் இலேசாகத் தயக்கம் தெரிந்தது. ஆசிரியை என்கிற கம்பீர அங்கியைக் கழற்றி வைத்து விட்டவள் போல ஒரு பலவீனம் தெரிந்தது.

''மனசுக்குள்ளே ஏதோ படபடப்பு இருக்கு மீரா. இருபது வருஷத்துக்கு முந்தியே ஆகியிருக்க வேண்டிய கல்யாணம் இது. இத்தனை வயசுக்கப்புறம் அந்த ஆளையே செஞ்சுக்கப் போறேன்னு சொல்றது உறவுக்காரங்களுக்கு இளப்பமா இருக்கு.''

மீராவுக்கு இலேசான திகைப்பு ஏற்பட்டது. லலிதாங்கி தனது பீடத்திலிருந்து இறங்கி, சம வயதுக்காரியுடன் பேசுவது போன்ற நெகிழ்ச்சியுடன் தன்னிடம் பேசுவது நம்ப முடியாததாக இருந்தது. இவளுக்கு நெருங்கியவர்கள் யாருமில்லை என்ற பச்சாதாபம் எழுந்தது.

ஆதியும் அந்தமும் புரியாமலே, ''உறவுக்காரங்க என்ன சொன்னா என்ன மேம்?'' என்றாள் உத்வேகத்துடன். ''இது உங்க வாழ்க்கை! ஆனா, 'காட்'! இருபது வருஷமா ஒருத்தருக்காகக்காத்திருந்தீங்கங்கறது நம்ப முடியல்லே!''

லலிதாங்கி கூச்சத்துடன் சிரித்தாள். ''சினிமாக் கதை மாதிரி இல்லே?''

''இப்பல்லாம் சினிமாவிலே கூட எந்தப் பெண்ணும் காத்திருக்கறதில்லே.''

''நான் ஒரு லூஸ் கேஸ்தான்'' என்று லலிதாங்கி சிரித்தாள் சிநேகிதமாக. பிறகு சிரிக்காமல் தலையைக் குனிந்தபடி சொன்னாள். ''காத்திருந்தேன்னு சொல்ல முடியாது. நாகராஜனைக் கல்யாணம் செய்துக்க முடியாம போனதுக்கப்புறம், வேற யாரையும் கல்யாணம் செய்துக்கணும்னு தோணல்லே.''

மீரா பெரிய பிரமிப்புடன் மௌனமானாள். 'இப்படிப்பட்ட பெண்களை நீ அமெரிக்காவிலே பார்த்திருக்கியோ' என்று ஹரி முன்பு சொன்னது நினைவுக்கு வந்தது.

லலிதாங்கி தொடர்ந்து பேசிக்கொண்டு போகையில், அவள் வாஸ்தவத்தில் தனக்குள் எழும் சந்தேகங்களுக்குத் தானே பதில் தேடும் முயற்சியில் இருக்கிறாள் என்று தோன்றிற்று.

''உன்னை ஏமாத்திட்டு வேற ஒருத்தியைக் கல்யாணம் செய்துக்கிட்டுத் தலைமறைவாப் போனவனையா இப்பக் கல்யாணம் செய்துக்கப் போறேன்னு கேக்கறாங்க! நாகராஜன் என்னை ஏமாத்தினதா நான் நினைக்கல்லே. அவருக்கு எத்தனையோ நிர்ப்பந்தங்கள், பாவம். அப்பா அம்மாவை எதிர்த்துக்கிட்டுப் போக முடியல்லே. நா நாட்டியம் ஆடறவ. வேற ஜாதி. 'உனக்குக் கீழ ரெண்டு தங்கச்சிங்க இருக்காங்க. அவங்களுக்குக் கல்யாணமாக வேண்டாமா'ன்னாங்க பெரியவங்க. அப்பல்லாம் காதலுக்காக எதிர்த்துக்கிட்டுப் போறது ரொம்ப அபூர்வம். இப்பப் பாரு, இங்க கிளாசுக்கு வருவாளே கமலா, வீட்டிலே சொல்லாம யாரோடியோ போய் ரெஜிஸ்டர் கல்யாணம் பண்ணிக்கிட்டாளாம். அப்படியெல்லாம் இருபது வருஷம் முந்திப் பண்ண எங்க ரெண்டு பேருக்கும் துணிச்சல் இருக்கல்லே.''

கமலாவைப் பற்றிக் கேள்விப்பட்டு மீராவுக்குத் தாங்கவில்லை.

''கமலா, வீட்டுக்குத் தெரியாம ஏன் செஞ்சா?''

''அவங்க வீட்டிலே இஷ்டப்படல்லே. அந்தப் பையன் ஏழை போல!''

மீராவுக்கு இத்தகைய விளக்கம் ரொம்ப விசித்திரமாக இருந்தது. திகைப்பு நீங்காமல் தலையசைத்து, ''எனக்குப் புரியல்லே மேம்!'' என்றாள். ''அது அவளுடைய வாழ்க்கை. பெரியவங்க ஏன் தலையிடணும்?''

மகா அபத்தமான கேள்வி கேட்டது போல லலிதாங்கி அவளைப் பார்த்தாள்.

''இது அமெரிக்கா இல்லே கண்ணு. இங்கே பெரியவங்களை ஒதுக்கி வெச்சிட

வாஸந்தி

முடியாது. அதைத் தவிர சமூகத்திலே பல லெவல்கள் இருக்கு. ஒண்ணுக்கொண்ணு சேர விரும்பாமெ -''

''அதுதான் எல்லாத்தையும் விட முக்கியமான காரணம்னு படுது மேம்.''

லலிதாங்கி சிரித்தாள்.

''நீ ஒரு முற்றின பாவக்காதான்! அதான் நா உங்கிட்ட இதையெல்லாம் பேசிக்கிட்டிருக்கேன்.''

இன்னும் கமலாவைப் பற்றின சிந்தனையில் இருந்த மீரா, பேசாமல் அமர்ந்திருந்தாள்.

மீண்டும் என் கதைக்கு வருகிறேன் என்கிற ஆயத்தங்களுடன் லலிதாங்கி தொடர்ந்தாள்.

''நாகராஜன் மறுபடியும் வருவார். இத்தனை வருஷம் கழிச்சு என்னைக் கல்யாணம் செய்துக்கறேன்னு சொல்வார்னு நான் சத்தியமா நினைக்கல்லே.''

லலிதாங்கியின் முகத்தில் ஏற்பட்டுப் போன மாறுதல் அதிசயமாக இருந்தது. ஆவேசத்துடன் கட்டையைத் தட்டி 'வேகம் அசமஞ்சங்களா! வேகம்' என்று அதட்டும் ப்ரக்ருதி இல்லை இது. இவள் சதையும் ரத்தமும் உள்ள சாதாரண மனுஷி. இருபது வருஷங்கள் தன்னுள் ஏக்கங்களைப் புதைத்து வைத்திருந்தவள். வேறு ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு கம்பி நீட்டிய காதலனைக் கண்ணகியைப் போல் கரம் நீட்டி இப்பொழுது ஏற்றுக் கொண்டிருப்பவள். இவளுடைய ஆவேசமெல்லாம் கட்டையைத் தட்டி நட்டுவாங்கம் சொல்லியே கரைந்து போயிருக்க வேண்டும்.

''யார் நினைச்சாங்க, நாகராஜனுடைய மனைவி இறந்து, கடைசியிலே அவர் எங்கிட்டயே யாசகம் கேக்கறது போல வந்து நிப்பார்னு!''

மீரா பேசவேயில்லை. இடையில் நழுவிப் போன இருபது ஆண்டுகளைப் பற்றின நினைவே இவளுக்கு இல்லை என்று தோன்றிற்று.

''அவர் கேட்டதும் நீ ஒப்புத்துக்கிட்டியான்னு என் தங்கச்சி பழிக்கிறா. ரோசங்கெட்டவங்கறா. எனக்கொண்ணும் அப்படியெல்லாம் தோணல்லே. அவரோட இருக்கும் போது எனக்குச் சந்தோஷமா இருக்கு. ரோசப்பட்டு நா எதுக்கு அதைப் பாழாக்கிக்கணும்? அவவ நல்லபடியா கல்யாணம் கட்டிக்கிட்டுச் சௌகர்யமா இருக்கா. எனக்கு நாற்பத்தி மூணு வயசிலே வாழ்க்கை அமைஞ்சா இவங்களுக்கு என்னங்கறேன்?''

மீராவுக்கு மிதமிஞ்சிய பச்சாதாபம் ஏற்பட்டது. இவளுக்கு ரோசம் தேவையற்றது. இந்த வீட்டில் தனியாக அமர்ந்து கட்டையைத் தட்டி நட்டுவாங்கம் செய்து இவள் அலுத்துப் போனவள். ஒரேயடியாய் இவள் நாட்டியத்துக்குக் கும்பிடு போட்டால் ஆச்சரியமில்லை.

அவள் சட்டென்று ஞாபகம் வந்தவளாய்க் கேட்டாள்.

''கல்யாணம் ஆன பிறகு அமெரிக்கா போய் விடுவீங்களா மேம்?''

''ஆமாம் கண்ணு. அங்கே இருக்கிற சௌகரியத்தைப் பார்த்து அங்கேயும் கிளாஸ் ஆரம்பிப்பேன். இந்தத் தொழிலையும் சுலபமா மறக்க முடியாது.''

மாணவிகள் வர ஆரம்பித்து விட்டார்கள். வழக்கம் போல் வகுப்பு துவங்கி விட்டது. கட்டை இன்று வீர்யமே இல்லாமல் ஒலித்தது. மனத்தளவில் லலிதாங்கி இப்பொழுதே மாணவிகளிடமிருந்து கழண்டு கொண்டு விட்டது போலிருந்தது. வகுப்பு முடிந்ததும், லலிதாங்கி மாணவிகளிடம் சொன்னாள். ''அநேகமா அடுத்த கிளாஸ்தான் நா எடுக்கற கடைசி கிளாஸா இருக்கும் பிள்ளைங்களா.''

''ஏன் மேம்? ஏன்?'' என்று மாணவிகள் கேட்க ஆரம்பித்ததும் மீரா கிளம்பித் தெருவுக்கு வந்தாள். லலிதாங்கியிடம் இனிமேல் நாட்டியம் பயில முடியாது என்பது வருத்தமாக இருந்தது.

'இப்படிப்பட்ட பெண்களை நீ அமெரிக்காவிலே பார்த்திருக்கியா?' ஹரி கேட்டது மீண்டும் நினைவுக்கு வந்தது.

ஒப்பிட்டுப் பார்ப்பது முட்டாள்தனம்





''வர வர லீவு போடறதுக்கு இன்ன தான் காரணம் எழுதறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லாமப் போச்சு''

''ஏன் ஸார், கோபப்படறீங்க?''

''பின்ன, என்னய்யா, சார்க் மாநாட்டுக்குப் போகணும்னு காரணம் காட்டியா லீவு லெட்டர் எழுதறது....?''

- ஆர். அப்துல் சலாம்

என்று தோன்றிற்று. அது வேறு உலகம். 'காட்'! இங்கு இன்னும் எத்தனை வருஷங்கள் இருந்தாலும் எனக்கு இங்கிருக்கும் முரண்பாடுகள் விளங்கப் போவதில்லை.

விளங்கலாம். ஆனால் மனசு ஏற்காது என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள். வீடு நோக்கிச் செல்லும் போது இன்று திடீரென்று தனக்கு வயதாகிப் போனது போல் இருந்தது. எதையும் கேள்வி கேட்டு, எடை போட்டு லாபமில்லை என்று சோர்வு ஏற்பட்டது. எந்தக் கேள்விக்கும் ஒரே பதில் இல்லை. சாவு எனக்கு அஸ்தமனம் என்றால், தனக்கு அது வெளிச்சமாக இருக்கலாம் என்கிறான் ஹரி. 'ஒரு இருட்டிலிருந்து இன்னொரு இருட்டு...' ஏன் இன்று அவன் அப்படிப் பேசினான்?

திசை தெரியாத இருட்டு. இன்று பார்ட்டியில் உணர்ந்த இருட்டும் அடிவயிற்றில் கப்பிய பயமும் மீண்டும் நினைவுக்கு வர, உடம்பு நடுங்கியது. சங்கரிடமிருந்து, மூர்க்கமாகத் தன்னை விலக்கிக் கொண்டு வெளியேற முடியாமல் போயிருந்தால் என்ன ஆகியிருக்கும்...!

''சிலதுங்க அழுதுரும்'' என்று அலட்சியத்துடன், அலுப்புடன் அவன் சொன்னான். 'அனாவசியமாக ஃபஸ் செய்யும் அசட்டுப் பெண்கள்' என்பது போல. அவனுடைய மிருகத்தனமான பிடியும் பலமும் முகத்தின் விகாரமும் புதிதாக நினைவுக்கு வந்து அதிர்ச்சியைத் தந்தன.

''அழுதுரும்'' அவ்வளவுதானா? வெறும் அழுவதுடன் முடிந்து போகுமா இத்தனை பெரிய குற்றம்?

அவளால் நம்ப முடியவில்லை. அமெரிக்காவில் டீ.வி.யில் அடிக்கடி 'ரேப்' கேஸ்களைப் பற்றிச் செய்தி வரும். புயல் கிளம்பும். விசாரணைகளைக் காட்டுவார்கள். 'ரேப்பு'ன்னா என்ன என்று அம்மாவையும் டீச்சர்களையும் விளக்கம் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் அவளும் மகேஷும். மனுஷத்தனம் அற்ற குரூரம், கொலைக் குற்றத்துக்குச் சமானம் என்று விளக்கம் பெற்றிருக்கிறார்கள்.

'இப்படிக் கூச்சல் போடுபவர்களிடையேதான் குரூரமும் அதிகம்' என்று அப்பா அமெரிக்கச் சமூகத்தை அம்மாவிடம் விமர்சித்தது இப்போது திடீரென்று ஞாபகம் வந்தது.

இன்றைய அனுபவத்தை அவரிடம் சொன்னால் நம்பக் கூட மாட்டார். மிஸஸ் செல்லப்பன் நம்பாதது போல. நம்பினாலும் 'இனிமே அப்படிப்பட்ட பார்ட்டிகளுக்குப் போகாதே' என்பதோடு பிரச்னை முடிந்ததாக நினைப்பார்.

*மீ*ரா வீட்டை அடைந்த போது மகேஷ் அப்பாவும் அம்மாவும் சனீச்வரன் கோவிலுக்குப் போயிருப்பதாக அமெரிக்க உச்சரிப்பு மாறாத ஆங்கிலத்தில் சொன்னான்.

அவள் சோர்வுடன் படியேறித் தன் அறைக்குச் சென்றாள். அம்மாவும் அப்பாவும் கோவிலுக்குப் போய் என்ன வேண்டுகிறார்கள் என்று அவளுக்கு எரிச்சல் வந்தது.

திடீரென்று துக்கம் குமுறிக் கொண்டு வந்தது. உடுப்பைக் கூட மாற்றாமல் கட்டிலில் குப்புறப்படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்ததும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அணை உடைந்தது போல, பிரளயம் மூண்டது போல், கண்ணீர் பிரவாகமாய்ப் பெருகிற்று. அதை நிறுத்த ஏதும் பிரயாசைப்படாமல் அழுவதன் சுகத்தில் அவள் லயித்துப் போனாள்.

'*மீ*ரா' என்ற அம்மாவின் குரல் படியேறி வந்தது. அவள் சட்டென்று எழுந்து குளியலறைக்குச் சென்று முகத்தைக் குளிர்ந்த நீரில் வேகமாகக் கழுவி முகத்தைத் துடைத்துக் கொண்டு வரும் போது அம்மாவும் அப்பாவும் அறைக்குள் நின்றிருந்தார்கள்.

''என்னது, அழுதியா என்ன?'' என்றாள் அம்மா அதிர்ச்சியுடன்.

மீரா சிரிக்க முயன்ற போது மீண்டும் அழுகை வெடித்தது. ''என்னம்மா, என்ன ஆச்சு?'' என்று அப்பா அருகில் வந்ததும் அவருடைய மார்பில் முகத்தைப் புதைத்து அவள் அழ ஆரம்பித்தாள்.

''எனக்கு இங்கே பிடிக்கவே இல்லே. ஹரி மட்டும் இல்லேன்னா இந்தியா வெறுத்துப் போயிருக்கும்.''

''யாரும்மா அது, ஹரி?''

''அதான், அந்தக் குருட்டுப் பையன்'' என்று அம்மா சொன்னது இன்று மீராவைக் கோபப்படுத்திற்று.

(தொடரும்)



புனலாய் மாறிய

சுரேந்திரன் மிகவும் வேதனைப் பட்டான்.

'கல்யாணத்திற்கு முன்பு வரை எவ்வளவு ஜாலியாக இருந்தேன்! சுதந்திரமாய் எங்கு வேணுமானாலும் போனேனே. கேள்வி கேட்பார் கிடையாதே. இப்ப என்னடான்னா இந்த சுமதியைக் கல்யாணம் செஞ்சுக்கிட்ட பிறகு நிலைமை தலைகீழாய் மாறி விட்டதே. பெண்டாட்டி வேலைக்குப் போகாமல் இருந்தால் இது வந்திருக்குமா?

சுரேந்திரன் தன்து ஒன்பது மாத மகன் விக்ரமை பாத்ரூமில் வைத்துத் தொடை, இடுப்புக்குக் கீழ் சுத்தப்படுத்தினான். விக்ரம் அழுது கொண்டே இருந்தான். தொட்டிலில் அவனைப் படுக்கப் போட்டான். அவனுக்கு வயிற்றுப்போக்கு. தரையில் மலம் சிதறிப் போய்த் திட்டுகளாய்க் கிடந்தது. சுரேந்திரன் கழுவித் துடைத்தான். கைகளைச் சுத்தம் செய்து கொண்டான்.

'சுமதி ஆபீஸ் போகிற வரைக்கும் நல்லாதானே இருந்தான். இப்ப ஏன் திடீர்னு இப்படி? இதை எடுக்கிறது, கழுவி விடறது எல்லாமே பொம்பளைங்க வேலை. என் தலையெழுத்து. இப்ப நான் செய்யுறேன். சே, என்ன அசிங்கம். இதுவா வாழ்க்கை?'

சுரேந்திரன் மனம் வெறுத்தான்.

சுமதிக்கு ஆபீஸில் ஆடிட் பார்ட்டி வந்திருந்தது. ஒரு வாரமாகக் காலையில எட்டு மணிக்குப் போய் விட்டு ராத்திரி எட்டு மணிக்குத்தான் வருகிறாள். சமையல் மட்டும் செய்து விட்டுப் போவாள். சுரேந்திரன்தான் ரமாவைக் குளிப்பாட்டி, இட்டிலி ஊட்டி, டிரஸ் செய்து யு.கே.ஜி. கிளாஸில் அவளைக் கொண்டு விட்டு வரவேணும். பிறகு விக்ரமைக் கவனிக்க வேண்டும். மத்தியானம் ரமாவுக்கு இவன் தான் சாதம் ஊட்டி விடப் போக வேண்டும். சுமதி பழக்கப்படுத்தி இருந்தாள். இவன் அம்மாவும் கிராமத்துக்குப் போய் விட்ட நிலையில் ரொம்ப திண்டாட்டமாகி விட்டது. சுரேந்திரன் தன் ஆபீஸுக்கு லீவு போட்டு விட்டான். ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது. சுமதிக்கு இன்னும் மூன்று நாள் டைட் ஒர்க்காம்.

ஹேமலதா

'அட! மறந்தே போயிட்டேனே. வந்தா கோபிப்பாளே!'

பாத்ரூம் பக்கம் போனான் சுரேந்திரன். அங்கே மூலையில் சுமதி துவைத்து வைத்திருந்த அவள் சேலை, ஜாக்கெட், உள் பாவாடை மற்றும் விக்ரமின் துணிகள் பக்கெட்டில் இருந்தன. கொடியில் காயப் போடச் சொல்லி விட்டுப் போயிருந்தாள்.

'பேசாம இதையெல்லாம் அவளே செஞ்சுட்டுப் போயிருக்கலாமில்ல. பிள்ளையை வேற பாட்டி மாதிரி நான்தான் கவனிக்கிறேன்' - வெறுப்பாகத் துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருந்தான். வீட்டருகே தெருவில் நடந்து போனவர்கள் இவனை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டு, குசுகுசுவெனப் பேசுவதையும் கவனித்தான். தன் கௌரவத்தையே கொடியில் தான் காயப் போட்டு விட்டாற்போல் துடித்தான்.

'வரட்டும் அவள்.'

தொட்டிலில் விக்ரம் இன்னும் அழுது கொண்டிருந்தான். எவ்வளவு ஆட்டியும் அவன் தூங்கவில்லை. அவனைத் தூக்கினான். அப்படியே கைகளில் மறுபடியும் பிசுபிசுப்பு. சுரேந்திரனுக்கு வெறுப்பு உச்சத்



தில் ஏறியது. ஏனென்றால் இது மாதிரி அவன் தன் மகனைச் சுத்தம் செய்தோ, துடைத்து விட்டோ சிறிதும் இதுவரை அனுபவப்படவில்லை. விக்ரமை அவன் கொஞ்சி மட்டுமே பழக்கப்பட்டவன்.

'இனியும் சும்மா இருக்கக் கூடாது. சுமதியை வரச் சொல்லி விட வேண்டியதுதான். பிள்ளையைக் கவனிக்க இனி நம்மால முடியாது.' - மகனின் அழுகை அவனை இம்சைபடுத்தியது. விக்ரமை பாத்ரூமுக்குக் கொண்டு போய் முரட்டுத்தனமாகச் சுத்தம் செய்தான்.

விக்ரமின் அழுகையும் கூடியது. மீதியிருந்த பாலைக் குடிக்க வைத்தான். விக்ரம் மெதுவாகக் கண் அயர்ந்தான். இதுதான் சமயம் என வேகமாக போன் செய்ய ஓடினான். விக்ரம் சதா அழுது கொண்டிருப்பதாயும் உடம்பு சரியில்லை என்றும் உடனே லீவு போட்டு வரும்படியும் சுமதியிடம் பேசினான்.

பதிலுக்கு அவள் சத்தம் பெரிதாய் போனில் வெடித்தது.

''என்னங்க சொல்றீங்க? நான் எப்படி வர முடியும்? விவரம் புரியாம பேசறீங்களே? ஆடிட் பார்ட்டி இப்ப என் மூஞ்சிக்கு நேரா உக்காந்து இருக்காங்க. என் நெலமை உங்களுக்குத் தெரியாதா? அறிவு இல்லாம பேசாதீங்க. கொஞ்சம் சமாளிங்க!''

டக்கென்று போனை வைத்து விட்டாள்.

சுரேந்திரனுக்குச் சூடு ஏறியது. ரத்தம் கொதித்தது. அவமானம் பிய்த்துத் தின்றது.

எவ்வளவு கேவலமாய்ப் பேசி விட்டாள்?! வரட்டும் அவள். நேரில் பார்த்து... சுரேந்திரன் மனம் பூராவும் நெருப்பு அலைகள் வீசின.

அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

'நீ வேலைக்குப் போறதினாலதானே இப்படி 'சீப்'பா என்னைப் பேசுற; மதிக்கிற. வீட்லயும் பொம்பள மாதிரி நான் வேலை செய்யிறேன். நாளைக்கு உன் வேலையை ராஜினாமா செய்ய வைக்கிறேன். அப்புறம் பாப்பம் உன் திமிரை. ஆம்பளைன்னா அவ்வளவு இள்ளுக் கீரையாப் போயிட்டேனா?'

இரவு ஒன்பது மணிக்குத்தான் சுமதி வீடு திரும்பினாள். பூகம்பத்தை வாய் வழியாகக் கொப்பளித்து விட சுரேந்திரன் துடித்தான். அக்னிப் பார்வை அலைகளை முன் செலுத்தியபடியே அவளை நெருங்கினான்.

அருகில் வந்ததும் முதலில் சுமதி சொன்னாள்.

''என்னை மன்னிச்சிடுங்க. நான் அப்படிப் பேசியிருக்கவே கூடாது. தப்பு என் மேலதான். ஒரே டென்ஷன்ல இருந்தேன். அதான் அப்படி. நாளைக்கிலேர்ந்து நான் ஃப்ரீதான். ஆடிட் ஓவர். பத்து நாள் லீவு சொல்லிட்டேன். இவ்வளவு நாள் பொறுமையா வீட்டைக் கவனிச்ச உங்களை நினைச்சாலே பெருமையா இருக்கு. நான் நினைக்காத வாழ்க்கை இலக்கணத்தை நீங்கதான் எனக்குக் கத்துக் குடுத்திருக்கீங்க. வீட்ல முன்பு ஒரு சிறு துரும்பு கூட அசைக்க மாட்டீங்க. இப்ப என்னடான்னா ஆண்மைக்கே உதாரணம் காட்டிட்டீங்க!''

சுரேந்திரனின் மனக் காயங்கள் மறைந்தே போயின. வெடிக்கும் ரத்த நாளங்கள் ஒடுங்கின. அவளை நெஞ்சோடு இதமாக அணைத்துக் கொண்டான். சுமதி கண்களில் நீர் முட்டியது. அவன் துடைத்தான்.

நம்மில் யாவர்க்கும் வெளிச்சமாய் ஒரு மறுபக்கமும் உண்டு. அதை நம்மால், நாமாகவே தரிசிக்க முடியாது.

மகாமகத்துக்கு முன்னேற்பாடுகள்



டிப்ஸ், டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ். டிப்ஸ்.

பெட்ரோல் மிச்சப்பட...பேச்சு பயன்தர...

வாகனங்களின் சீரான ஓட்டத்துக்கு...

1. வாகனங்களை நல்ல நிலையில் பராமரிப்பது சீரான ஓட்டத்துக்கு மட்டுமின்றி எரிபொருள் சிக்கனத்துக்கும் உதவும்.

2. சுத்தமான எரிபொருள், தரமான மசகு எண்ணெய் (Lubrication) பயன்படுத்த வேண்டும்.

3. Spark Plug, carburator அடிக்கடி சுத்தம் செய்து வைத்துக் கொள்ளவும்.

4. வாகன தயாரிப்பாளர்கள் பரிந்துரைக்கும் வேகத்தில் வாகனத்தைச் செலுத்துவது நல்லது.

5. டயர்களில் காற்றழுத்தத்தைச் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

6. Brake, clutch சரியான முறையில் பராமரிப்பது அவசியம்.

7. சரியான டயர்களைப் பயன்படுத்துவதும் பரிந்துரைத்த அளவுக்கு மேல் சுமைகளை (pay load) ஏற்றாமல் இருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

8. அளவுக்கு அதிகமான வேகம்



ஆபத்தானது மட்டுமல்ல, எரிபொருள் விரயத்துக்கும் காரணமாகும்.

- பாண்டிச்சேரி, ஆர். குமார்.

மேடைப் பேச்சாளர்களுக்கு

1. நம்மை என்ன தலைப்பில் பேசச் சொல்கிறார்கள் என்றும், எவ்வளவு நேரம் பேச வேண்டுமென்றும் தெரிந்து கொள்ளுங்கள்.

2. பேச வேண்டியதைச் சிறிய குறிப்பு எடுத்துச் செல்வது அவசியம். குறிப்புகள் கையடக்க காகிதத்தில் இருக்க வேண்டுமே ஒழிய, பார்த்துப் படிக்குமளவில் இருக்கக் கூடாது.

3. நாம் யாருக்கு எதிரில் பேசப் போகிறோம் என்பது முக்கியம். பாமர மக்களிடம் பேசும் போது அவர்கள் பாஷையில்தான் பேச வேண்டும். படித்தவர் மத்தியில் உரையாற்றும் போது விஷயங்கள் ஆழமாக இருத்தல் அவசியம்.

4. குட்டிக் குட்டிக் கதைகளைச் சுவையாகச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே நன்கு பிரபலமான கதைகளைச் சொல்வது, கேட்பவர்களைச் சலிப்படையச் செய்யும்.


5. நமது கருத்துக்களை மொத்தமாகத் திணிக்கக் கூடாது. பேச்சின் ஊடே அவைகளைத் தெளிக்க வேண்டும். கேட்பவர்களைக் கவர உதாரணங்களை எடுத்துக் காட்ட வேண்டும்.

6. மிகவும் முக்கியம்... குறிப்பிட்ட நேரத்திற்குள் முடிக்க வேண்டும். மைக் கிடைத்து விட்டதே என 'வளவள'வென்று அறுக்கக் கூடாது.

- மதுரை - 1, ப. வெங்கடேஷ்.

கல்லாப் பெட்டிக்கு முன் ஈக்களாக மொய்த்துக் கொண்டு நின்றிருந்த மனிதத் தலைகளைச் 'சட்'டென்று அவன் நிமிர்ந்து பார்த்ததும் சுண்டி விடப்பட்ட வீணையின் தந்தியாய் அதிர்ந்து போனான்.

அதே நடுவகிடுத் தலைக்கேசம். ஆயினும் முன்னைவிடப் பரவலாக நரை சிதறியிருந்தது இப்போது. அதே நெட்டை நெடு தேகம். அதே வாதாம் இலைக் காதுமடல்கள். அதே குண்டு மாங்காய் மூக்கு. அதே பூனைப் பார்வை. அதே போல மணிக்கட்டு வரை



பிழைத் திருத்தம்

போர்த்தியிருக்கும் துப்பாக்கிக் குழல் சட்டை. அதே போல தும்பபைப் பூ வேட்டி அதே -

''சார் நீங்க....?''

அவருக்கும் அதே அதிர்ச்சிதான். ஆயினும் சட்டென்று அடையாளம் கண்டு கொண்டார் அவனை.

''நீ வரதராஜனில்லை?''

''ஆமாம் சார்.... நீங்க என்ன சார் இங்க....?''

''பையனுக்கு இங்கதாம்பா ட்ரான்ஸ்ஃபர் ஆகியிருக்கு.... ஒரு மாசமாகுது.''

''சுகமாயிருக்கிங்கல்ல சார்?''

''நல்ல சுகம்... நீ எப்படி?''

''இருக்கேன் சார் - இந்தக் கடையைக் கவனிச்சிக்கிட்டு.''

பார்வையால் கடையை அலசினார் அவர். அத்துவானக் குகைபோல் உள்ளே இருள் கவிந்து நீண்டிருந்தது. அடுக்கி வைக்கப்பட்டிருந்த சாக்கு மூட்டைகள் உள்ளே தென்பட்டன. தரையில் வாய் மடக்கி வைக்கப்பட்டிருந்த மூட்டைகளி லிருந்து அரிசி பருப்பு வகைகள் பற்கள் காட்டிச் சிரித்தன. நாலைந்து இள வட் டங்கள் சரக்குகளை அவிழ்ப்பதும் அள்ளு



வதும் நிறுத்து வாடிக்கையாளர்களிடம் கொட்டுவதுமாய்ச் சுழன்று கொண்டிருந் தனர். மூக்கைச் சுரண்டலாய் அழுத்திய மசாலா சாமான்களின் நெடி.

வரதராஜன் கூட முன்னைப் போல வற்றலாயில்லாமல் இப்போது நல்ல உப்பலாயிருந்ததைக் கணித்துக் கொண்டார் அவர். 'எத்தனை வருஷங்களாகிறது இவ னைப் பிரிந்து?' அவருக்கு யோசிக்கத் தோன்றியது. 'ஐந்து வருஷங்கள் ஆகி யிருக்குமா? காலச் சக்கரத்தின் நிலை கொள்ளாத சுழற்சியில் எல்லாமே விதம் விதமாகத்தான் பரிணமித்துப் போகின் றன.'

''சீட்டைக் குடுங்க சார்.... பில் போடு றேன்.''

சட்டைப் பைக்குள் கிடந்த தாளை எடுத்துத் தந்தார் அவனிடம்.

''வீட்டுல வேற யாரும் இல்லியா சார்? நீங்க கடைக்கு வந்திருக்கிறீங்க?''

''எல்லோரும் அவசரச் சோலியாய் இருக்காங்க... பேரன் சின்னப் பையன்.... அதுதான் நான் வரவேண்டியது ஆயி டுச்சு.... அதுக்கென்ன..... சும்மாத்தானே வீட்டுல அடஞ்சு கெடக்கிறேன்....''

''எப்போ சார் ரிடையர் ஆனீங்க?''

''ரெண்டு வருஷமாச்சுப்பா...''

அவர் தந்த சீட்டுக்கே பில் போட்டுக் கொண்டிருந்தான் அவன். ஆயினும் அவ னின் கோரமான கடந்தகால நினைவலை கள் குமிழியிட்டுக் கொந்தளித்துக் கொண் டிருந்தன. மாணவப் பருவத்திற்கேயுரிய மமதையுடன் செயல்பட்ட காலம் அது.....

ஒன்பதாம் வகுப்பு என்பது கயிற்றின் மேல் நடக்கும் அபாய சர்க்கஸ் என்பது வரதராஜனுக்குத் தெரிந்திருந்தது. சம நிலைத் தவறினால் குப்புறத் தள்ளி விடும். அடுத்த வகுப்பு அரசாங்கப் பரீட்சை ஆன தால் ஒன்பதிலிருந்து அலசிப் பொறுக்கியே நபர்களைக் கடத்துவார்கள். கண்டிப்பு கொடிகட்டிப் பறக்கும் ஒன்பதிலே.

சதாசிவம் சார் கொஞ்சம் தாராளம் தான் என்றாலும் மாணவர்களுக்குச் சுதந் திரம் இருக்கிற அளவில் கட்டுப்பாடும் ஒழுக்கமும் தேவை என்பார். சிரிப்பும் கும்மாளமுமான சந்தோஷ சம்பாஷணைக் கிடையே கழுத்தில் செருகியதுபோல சீரிய ஸாகக் கேள்விகள் கேட்பார். பதில் தந்தால் பங்கமில்லை...

பதில் சொல்லாதவர்கள் பையன் களாய் இருந்தால், ''வாடா மாங்கொட்ட மூதி....'' என்று நிஷ்டூரமாய்த் தலையில் குட்டுக்கள் இறங்கும். மனிதருக்கு இருப் பதென்ன கையா அல்லது இரும்பு உலக் கையா என்பது மாதிரி தேகம் பதறிப் போகும்.

''நீங்கள்லாம் ஏண்டா பள்ளிக் கூடத் துக்கு வர்றீங்க? நாலு மாடுகளைப் பத்திக் கிட்டுப் போனாலாவது வீட்டுக்குப் பிர

யோஜனப்படும். வந்திட்டானுவ... டவுசரும் சட்டையும் போட்டுக்கிட்டு. தலைகளைப் பாரேன் - குருவி கூடு கட்டின மாதிரி.... தலையில மட்டும் இப்படி ஸ்டைல் பண்ணத் தெரியுதுல... படிப்பிலயும் பண்ண வேண்டியதுதானடா ஸ்டைலு.... மாங்கொட்ட மூதிகளா...''

சிமெண்டுத் தரையில் கண்ணாடி கிளாஸை உருட்டி விட்டதுபோல பெண்கள் பகுதியிலிருந்து சிரிப்பு உதிரும்.

''நீ சொல்லும்மா.... 144ன் வர்க்க மூலம் என்ன?''

பதிலைத் தேடி மனசுக்குள் துழாவும் பெண்ணின் கண்கள், விடை கிடைக்காத தோல்வியில் வெட்கப்பட்டுத் தாழும்.

''சிரிச்சயில்ல? சொல்லு.''

மீண்டும் தலை குனிவு.

''உனக்கே தெரியாது... நீ அவனைப் பார்த்துச் சிரிக்கிற? நீயெல்லாம் எதுக்குத் தான் பள்ளிக்கூடத்துக்கு வரியோ? வீட்டுல இருந்தா அம்மாவோட சுமையாவது குறையுமில்ல?''

அவமானத்தால் பெண்வர்க்கம் முழுதும் உதடுகள் அழுத்த, ஆண்வர்க்கம் டெஸ்க் தட்டி ஆரவாரிக்கும். பேச்சோடு பேச்சாக வாசற்பக்கம் நகர்ந்து போய் தன் சட்டைப் பைக்குள் கைவிட்டுப் பொடி டப்பி எடுத்து ஒரு சிட்டிகை 'சிர்ர்'ரென்று மூக்கிற்குள் உறிஞ்சிக் கொண்டு வருவார் சதாசிவம் சார். மாணவ மாணவியர் ஒருவரோடு ஒருவர் காதுகளில் ரகசியம் துப்புவார்கள்.

''என்னல மாங்கொட்ட மூதி? அவன் காதுல எதை ஊதுற?''


பிடிபட்ட மாணவன் தயக்கத்தோடு எழுந்து நிற்பான். அஷ்ட கோணலாய்த் தேகம் நெளிப்பான். சொல்லலாமா வேண்டாமா என்று உதடுவரை வார்த்தைகளை இழுத்து மீண்டும் உள்ளுக்குள் தள்ளி விடுவான். சில சமயங்களில் சடக்கென்று உதடு தாண்டி வெளிவந்து விழும் பதில் : ''ஒரு 'பொடி' விஷயம் சார்....''

அவன் 'பொடி'யில் அழுத்தம் வைத்துச் சொன்ன வஞ்சம் அவருக்குப் புரிந்திருக்காது. புரிந்து கொண்ட மாணவக் கூட்டம் கெக்கலிப்பு விட்டுச் சிரிக்கும். அவரோ எதுவோ 'சின்ன விஷயம்' என்றே நினைத்துச் சமாதானம் ஆகிப் போவார்.

அன்று ஏனோ சமாதானமாகிப் போகாமல் வரதராஜன் சொன்ன 'பொடி' விஷயத்தில் உஷாராகிக் கொண்டார் அவர்.

''என்னடா பொடி விஷயம்? படுவா ராஸ்கல்... நான் பொடி உறிஞ்சிறதத் தானடா அப்படிச் சொன்ன? கிண்டலா பண்ணுறே?''

ரௌத்திரம் பொங்கிற்று வாத்தியாரின்



விழிகளில். அக்கினி தாண்டவம் ஆடிற்று. மூடி முழிப்பதற்குள் வரதராஜனைப் புரட்டி எடுத்து விட்டார் குச்சியால்.

வகுப்பறையே ஸ்தம்பித்து நின்று விட்டது. அடுத்த வகுப்பு மாணவர்களெல்லாம் வெளிவந்து வேடிக்கைப் பார்க்கத் துவங்கி விட்டனர். வரதராஜனுக்கோ நிமிஷங்கள் நெருப்பில் தகித்தன.

''என்னய்யா பெரிய வாத்தியாரு நீ? எங்களுக்கு அட்வைஸ் சொல்ல வேண்டிய நீயே எங்க முன்னால நின்னு பொடி உறிஞ்சினா சிரிப்பு வருமா, வராதா?'' எதிர்த்துப் பேசி விட்டான்.

தலைமையாசிரியர் விடுப்பில் போயிருந்ததால் சீனியரான சதாசிவம் சார்தான் அப்போது தற்காலிகத் தலைமை ஆசிரியராகப் பொறுப்பிலிருந்தார்.

எந்திரகதியாய் ஆபீஸ் அறைக்குள் ஓடிப் போனார் அவர். சற்றைக்கெல்லாம் கையில் வரதராஜனின் டி.ஸி.யோடு வெளியே வந்து கோபமாய் அவன் முன்னே நின்று விசிறியெறிந்தார்.


''போடா, ராஸ்கல்... ஒனக்கு இங்கே சீட் கிடையாது... கெட் அவுட்.'' சிங்கமாய்க் கர்ஜித்தார்.

வரதராஜனுக்குள்ளும் ஆவேசம் கொழுந்துவிட்டது. புத்தகக் கட்டுக்களைக் கூட எடுத்துக் கொள்ளாமல் விறைப்பாய் வெளியேறிப் போனான். அப்பாவிடமும் அம்மாவிடமும் சொல்லிக் கொள்ளாமல் மதுரைக்கு வண்டியேறினான். வீட்டுப் பீரோவுக்குள் ஒளிந்திருந்த பணத்தில் நூறு ரூபாய் மதுரையில் சித்தப்பாவின் வீடு வரை வர வகை செய்தது.

ஆரம்பத்தில் அவனைத் தன் ஸ்டோரில் கையாளாகத்தான் போட்டுக் கொண்டார் சித்தப்பா. நம்பிக்கை உறுதியானதும் அந்த ஸ்டோரின் கணக்குப் பிள்ளை ஆனான்.

இருநூற்றிப் பத்து குடுங்க சார்!''

பில் போட்டு முடித்திருந்தான் வரதராஜன். அவனிடம் எடுத்துத் தந்தார் அவர்.



மூன்று முழு நூறு ரூபாய் நோட்டுக்கள்.

பணத்தை எண்ணிக் கல்லாப் பெட்டிக்குள் போட்டுக் கொண்டு மீதிப் பணத்தை அவரிடம் தந்தான். அதே வேகத்தில் உள் நோக்கித் திரும்பி அழைப்பு விடுத்தான்.

''டேய் சுந்தரம்... சாருக்கு இந்த பில்லுக்குப் போட்டுக் குடுத்துட்டு சாமான்களை எல்லாம் வீட்டுல கொண்டு எறக்கிட்டு வந்திருடா.''

சுந்தரம் ஓடிவந்தான். பில்லை வாங்கிக் கொண்டு, ''சரிங்க....'' என்றவாறே உள் நோக்கித் திரும்பிப் போனான்.

''எதுக்குப்பா சிரமம்? நானே ரிக்ஷா, பிடிச்சிப் போறேன்.'' அவர் சங்கடப் பட்டார்.

''பரவாயில்ல சார்..... கடைவண்டி சும்மாத்தான் நிக்குது.''

கூட்டத்தை விலக்கிக் கொண்டு சாவதானமாய் வெளிவந்தார் அவர். கவனமெல்லாம் கையில் வைத்திருந்த மீதிப் பணத்தை எண்ணுவதிலே திரும்பியிருந்தது.

சகஜமாய் அடுத்தவரிடம் 'சிட்டு' வாங்கிப் பில் போடத் துவங்கினான் வரதராஜன். அவ்வப்போது வாசலருகே நின்றிருந்த ஆசிரியரின் மேலேயும் கடைக் கண்ணால் மேய்ந்து கொண்டான். மனிதர் பழையதை இதற்குள் மறந்து போயிருப்பாரா? அல்லது மறந்து போனதுபோல பாசாங்கு செய்கிறாரா?

திடீரெனத் தன்முன்னே சார் வந்து நின்றதும் ஏறிட்டான். ''என்ன சார்?''

''இந்தா.... இந்தப் பணத்தை எண்ணு...''

கையில் வைத்திருந்த மீதிப் பணத்தை அவனிடம் தந்தார் அவசரமாக. பில் போடுவதை நிறுத்திவிட்டுப் பணத்தை வாங்கி எண்ணினான் அவன். ஐந்தும் பத்துமாய்த் தொண்ணூற்றைந்து இருந்தது. மீண்டும் எண்ணினான். அதே தொண்ணூற்றைந்து தான்.

''ஆமா சார்... அஞ்சு ரூபாய் அதிகமாய் இருக்கு....'' அசடு வழிந்தான் அவரை நோக்கி. அவசரத்தில் நின்றிருந்த வாடிக்கையாளர்கள் அவனைப் பார்த்து அடி உதட்டில் சிரித்துக் கொண்டிருந்தனர்.

அஞ்சு ரூபாயை எடுத்துக் கொண்டு மீதியை அவரின் கையில் தந்தான். ''உங்களைத் திடீர்னு பார்த்த பதற்றத்துல கணக்குல கோட்டை விட்டுட்டேன் சார்.'' வழியில்லாமல் பல் விரித்துக் கொண்டான்.

''எந்த நேரத்திலும் கணக்குல கரெக்டா இருக்கணும்பா.... இப்படி அஞ்சு அஞ்சு ரூபாயாய் விட்டுட்டேனா கடை எப்படி நடக்கும்? கணக்குல நீ இன்னும் ஜீரோதான் போலிருக்கு?''

கலகலவெனச் சிரிப்புப் பொங்கிற்று அவரிடம். 'இவ்வளவுதானா நீ' என்கிற மாதிரியான ஏளனச் சிரிப்பு.

''அதெல்லாம் இல்ல சார்.'' மீண்டும் பற்களைக் காட்டிக் கொண்டான்.

''ஆமாம்பா.... கணக்குல கரெக்டா இரு... இல்லைன்னா என்னைத்தான் எல்லோரும் ஏசிக் கொட்டுவானுங்க - 'யாருடா இவருக்குக் கணக்குச் சொல்லித் தந்த வாத்தியாரு'ன்னு.'' மீண்டும் கலகலத்துக் கொண்டார்.

அவரின் பெருந்தன்மையை நினைத்த போது அவனுக்குள் சிலாகிப்பாயிருந்தது. ஐம்பது காசு அதிகமாகக் கிடைத்தாலே அமைதியாகச் சுருட்டிக் கொண்டு நழுவுகிற மனிதர்களிடையே ஐந்து ரூபாயை அதிகமென்று தருகிற அவரின் நேர்மை அவனுக்குள் சிலிர்ப்பைத் தந்தது. 'கணக்கில் நீ இன்னும் ஜீரோதான் போலிருக்கு?' என்று அவர் விசாரமாய்க் கேட்டதை மனசுக்குள் இழுத்துப் பார்த்தான். பழையதை அவர் இன்னும் மறக்காதிருந்த மகாத்மியம் புரிந்தது அவனுக்கு.

''பழையதை இன்னும் மறக்கலைன்னு நெனைக்கிறேன்... என்ன சார்?'' இதழ் கடையில் புன்னகை உதிர்த்துக் கொண்டே கேட்டான். மனசுக்குள் நெருடல் இருந்தது அவனிடம்.

''அதெப்படிப்பா மறக்க முடியும்? அதை மறந்திருந்தா பொடியையில்ல நினைக்க வேண்டி வரும்?''

''புரியலை சார்?''

''இப்போ நான் பொடி உறிஞ்சிறது இல்ல.... தெரியுமா உனக்கு? உன்னைப் பள்ளிக்கூடத்திலயிருந்து து ர த் தி ப் பு ட் டேன். ஆனால், நீ சொன்னது ச ரி தா ன்... வாத்தியார் சுத்தமாயிருந்தால்ல பையன்களோட அழுக்கைத் துடைக்க முடியும்..''

வரதராஜனின் விழி விளிம்புகளில் நீர் கட்டி நின்றிருந்தது. சதாசிவம் சாரின் கண்களிலும்தான்.

16

"குருட்டுப் பையன், குருட்டுப் பையன்னு ஏன் எப்பவும் சொல்றே?" என்றாள் மீரா எரிச்சலுடன். "குருடாயிருக்கிறது அவன் தப்பா?"

அம்மா திகைப்புடன் அவளைப் பார்த்தாள். "உனக்கு ஏண்டி இப்படிக் கோபம் வருது? நா வேற எப்படி அவனை அடையாளம் சொல்ல முடியும்?"

"ஏன்? மைதிலி மேம்முடைய பையன்னு சொல்ல முடியாதா?"

அம்மா ஆற்றாமையுடன் அப்பாவைப் பார்த்தாள், நியாயம் கேட்கும் பாவனையில். அப்பா மீராவின் முதுகைத் தட்டினார்.

"ரிலாக்ஸ் மீரா" என்றார் மென்மையாக. "மீரா சொல்றது சரிதான் சுஜாதா" என்றார் மெல்லிய கண்டிப்புடன். "ஊனத்தை அடையாளம் காட்டறது தப்புதான்."

"ஸாரி" என்றாள் அம்மா உடனடியாக, பிரச்னையைத் தீர்க்கும் அவசரத்துடன். "என்ன ஆச்சு சொல்லு இன்னிக்கு? பார்ட்டியிலே என்ன நடந்தது?"

அம்மாவுக்குச் சூட்சுமம் அதிகம் என்று அந்த நிலையிலும் மீராவுக்கு மெல்லிய சந்தோஷம் ஏற்பட்டது. அப்பாவிடமிருந்து மெல்ல விலகி அவள் சோர்வுடன் கட்டிலில் அமர்ந்து தலையைக் குனிந்தபடி "வெறும் அசிங்கம்!" என்றாள் ஆங்கிலத்தில். "இத்தனை அசிங்கமா இங்கே இருக்கும்னு நா நினைக்கல்லே!"

அப்பா ஏதும் பேசாமல் அவளைத் தீவிர யோசனையுடன் பார்த்தபடி நின்றார்.

"ஏன் என்ன விஷயம்? அந்த மீனாட்சிதானே அழைச்சிண்டு போனா?" என்றாள் அம்மா நிதானம் இழக்காமல்.

"ஆமாம். நா போயிருக்கக் கூடாது. காலையிலே எழுந்திருக்கும்போதே தெரியும் என்னவோ இன்னிக்குக் கெட்ட அனுபவம் ஏற்படப் போறதுன்னு."

அப்பாவைப் போலவே அம்மாவும் பேசாமல் யோசனையுடன் அவளைப் பார்த்தாள்.

"கெட்ட சொப்பனம் வந்தது" என்று மீரா தீவிரமான முகத்தோடு சொல்லும் போது அப்பாவின் முகத்தில் மிக லேசாகப் புன்னகைக் கோடு தோன்றி மறைந்தது.

"என்ன நடந்தது சொல்லும்மா" என்றார் அனுதாபத்துடன்.

அங்கு நடந்ததையெல்லாம் மீண்டும் நினைவுகூர்ந்து விவரிக்கும் போது மீண்டும் அவமானம் ஏற்பட்டது. கண்களில் நீர் தளும்பிற்று. அவள் முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

அம்மா அப்பா இருவருமே அவள் தோளை அணைப்பதை அவள் உணர்ந்த போது ஆறுதலாக இருந்தும் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது.

"யார் அந்த ராஸ்கல்? எந்த இடம் அது? அட்ரெஸ் சொல்லு விசாரிக்கிறேன்" என்றார் அப்பா படபடப்புடன்.

"இந்த ஊர்லேயெல்லாம் இப்படி நடக்கிறது என்கிற விஷயம் நம்பும்படியா இருக்கோ?" என்றாள் அம்மா துயரமும் கோபமுமாக.

"அதனாலதான் வீட்டுக்குத் தெரியாம நடக்கிறது!" என்றாள் மீரா. "அந்த மீனாட்சி அத்தனை பொய் சொல்றதுக்கு இதுதான் காரணம்."

"அந்த மிஸஸ் செல்லப்பன்கிட்ட விவரமாச் சொல்லணும்!"

"ஒண்ணும் பிரயோஜனமிருக்காது" என்றாள் மீரா அலுப்புடன். "அந்த ஆன்ட்டிக்கு இதைப் பத்தியெல்லாம் தெரியாம இருக்காதுன்னு நினைக்கிறேன். மீனாட்சியே சொல்றா. எங்கம்மா என்னைக் கேட்க பயப்படுவாங்க. ஏன்னா நா அவங்க நடத்தையைப் பத்தித் திருப்பிக் கேட்பேன்ங்கறா."

"என்ன இது ஒரே அசிங்கமாயிருக்கும் போலேயிருக்கே?" என்றார் அப்பா அப்பாவியாக.

"நீ ஏன் அந்த மாதிரி பெண்களோட போறே?" என்றார் மெல்லிய கோபத்துடன்.

"அவ எனக்கு நெருக்கமான சினேகிதி இல்லே. அவ ஒரு முட்டாள்னு ஒதுங்கியே இருப்பேன். இன்னிக்குப் பார்ட்டிக்கு வான்னு ரொம்பக் கட்டாயப்படுத்தினான்னு போனேன். பரீட்சை முடிஞ்சு போச்சு. கொஞ்சம் ஜாலியா இருக்க

லாம்னு. அப்பா, எனக்கு இங்க கொஞ்சமும் பிடிக்கல்லே. திரும்பி அமெரிக்காவுக்குப் போயிடலாம் போல இருக்கு.''

''இந்த ஒரு சம்பவத்தினாலே உனக்கு இந்தியா வெறுத்துப் போச்சா?'' என்றார் அப்பா உத்வேகத்துடன். ''இதைவிட பயங்கர விஷயங்கள் அமெரிக்காவிலே நடக்கிறது. நீ பதினைஞ்சு வயசு வரை பார்த்த அமெரிக்காதான் நிஜம்னு நினைக்காதே மீரா. அதோடு இந்த இரண்டு வருஷ அனுபவத்தை வெச்சு இந்தியாவை எடை போடாதே.''

அப்பாவின் குரலில் மெல்லிய கோபத்துடன் ஆதங்கம் இழையோடிற்று. நீ எப்பொழுது புரிந்து கொள்வாய் என்கிற மாதிரி.

''இங்கே எல்லாத்தையும் மூடி மூடி வைக்கிறது எனக்குப் பிடிக்கல்லே'' என்றாள் அவள் ஆத்திரத்துடன். ''எத்தனையோ விஷயங்கள் பிடிக்கல்லே. எனக்குப் புரியல்லே டாட்! பாதி விஷயங்கள் புரியல்லே. இன்னிக்கு லலிதாங்கி மேம் சொன்ன மாதிரி ஏகப்பட்ட 'லெவெல்ஸ்' இருக்கு இங்கே. ஒண்ணோடு ஒண்ணு சேர மாட்டேங்குது. கறுப்பு வெள்ளை விரோதம் எனக்குப் புரியறது. இங்கே இருக்கிற விரோதங்கள் புரியல்லே. யாருமே நார்மலா இல்லேன்னு ஆத்திரம் வருது. இந்தக் கூட்டத்திலே நார்மலா இருக்கிற ஒரே ஒரு சினேகிதன் ஹரிதான். அதனாலேதான்





''ஏன்தான் தனிக் கட்சி ஆரம்பிச் சோமோன்னு இருக்கு!''
''ஏங்க?''
''கட்சியில் தனியா இருக்கப் பயமா இருக்குதே!''
- ஞா. ஞானமுத்து

அவன் வீட்டுக்கு அடிக்கடி போறேன். நீங்க அவனைப் பார்க்கணும் டாட்.''

அப்பா அவளை ஏதோ தீவிர யோசனையுடன் பார்த்தார். அம்மா மௌனமாகத் தன்னுள் ஆழ்ந்த யோசனையுடன் நின்றிருந்தாள். சட்டென்று சுயப்பிரக்ஞை அடைந்தவர் போல் அப்பா அவளைப் பார்த்துச் சிரித்தார்.

''கண்டிப்பாப் பார்க்க வரேம்மா'' என்றார் கனிவுடன். ''சின்னப் பையனா?''

''இல்லே. என்னை விட நாலைஞ்சு வயசுப் பெரியவன். எம்.ஏ. ஃபிலாஸஃபி படிக்கிறான். ரொம்ப உற்சாகமா இருப்பான். கண்ணாலே பார்க்காமயே எல்லா விஷயத்தையும் கிரகிச்சுப்பான். அவன் தான் எனக்கு இப்ப ஃப்ரெண்ட், ஃபிலாஸபர் அண்டு கைடு.''

அப்பாவும் அம்மாவும் சில வினாடிகள் ஒரு வினோதமான மௌனத்தில் இருந்தார்கள். அவள் அதைச் சட்டை செய்யாமல் பேசிக் கொண்டு போனாள்.

''வேடிக்கை தெரியுமோ? அவனோடு பேசும் போது அவனுக்குப் பார்வையில் லேங்கற எண்ணமே எனக்கு ஏற்படற தில்லே. இன்னிக்குப் பாவம் அவனுக்கு ஜுரம். என்னைப் பார்க்கணும்னு அவனுக்கு ரொம்ப ஆசையா இருந்ததாம். நா அவன் வீட்டுக்குப் போகிறதாவே இருக்கல்லே. நம்ம வீட்டுக்கு வரணும்னு பஸ்ஸுக்காகக் காத்திருந்தேன். ஆழ்வார் பேட்டை பஸ் வந்தது. நேர அவன் வீட்டுக்குப் போனேன். அவனோடு பேசின பிறகுதான் மனசிலே இருந்த கோபமும் துக்கமும் சமாதானமாச்சு. இத்தனைக்கும் பார்ட்டியைப் பத்தி அவன்கிட்டப் பேசவேயில்லே.''

''உம் குட்'' என்றார் அப்பா நிதானமாக. ''அவனுடைய அப்பா என்ன செய்யறார்?''

''அவனுக்கு அப்பா இல்லே. அதாவது அவங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் விவாகரத்து ஆயிட்டது.''

''ஓ!''

அந்த 'ஓ'வில் ஏதேதோ அர்த்தங்கள் இருப்பது போல் மீராவுக்குத் தோன்றிற்று. காரணம் புரியாமல் எரிச்சல் ஏற்பட்டது. அம்மாவும் பேசாமல் நின்றது விசித்திரமாக இருந்தது. அவள் அழுததன் காரணத்தையே மறந்து இவர்கள் வேறு ஏதோ திசையில் போகிறார்கள். காட், எப்படி மாறி விட்டார்கள்!

''வேற யாருமே ஃப்ரெண்ட்ஸ் இல்லையா உனக்கு?'' என்றார் அப்பா.

''இல்லே'' என்று அவள் பலமாகத் தலையசைத்தாள். ''அமெரிக்காவிலே எரிக் இருந்தான். இங்கே ஹரி.''

அம்மா சிரிப்பதைப் பார்த்து மீராவும் சிரித்தாள். ''என்னை ராங்கிக்காரின்னு என் வகுப்புப் பெண்கள் சில பேர் சொல்லுவாங்க. எனக்கு அதைப் பத்திக் கவலையில்லே. என்னை விட வயசானவங்களோடதான் இங்கே என்னாலே பேச முடியறது. யசோதாவும் நானும் எத்தனை நெருக்கமாப் போனோம்! லலிதாங்கி மேம் கூட இன்னிக்கு என்கிட்ட தன் கதையைச் சொல்ல ஆரம்பிச்சா! அம்மா, இனிமே டான்ஸ் கிளாஸ் கிடையாது.''

''ஏன்?''

''மேமுக்குக் கல்யாணம்!''

''யாரு?'' என்றாள் அம்மா கண்களை மலர்த்தி.

''அந்த நாகராஜனுக்கும் அவளுக்குமா?''

''ஆமாம்'' என்று மீரா சிரித்தாள். ''அந்த மாதிரியான ஒரு காதல் கதையை நீ கேட்டிருக்க மாட்டே.''

லலிதாங்கியின் கதையைச் சொன்னதும் அங்கிருந்த இறுக்கம் சற்று குறைந்தது போல் இருந்தது. அப்பாவின் முகத்திலும் புன்னகை படர்ந்திருந்தது.

''நாகராஜனுக்கு இப்படி ஒரு பழைய சரித்திரம் இருந்ததே யாருக்கும் தெரியாது. அவனுக்கு டான்ஸ்லே இன்டரெஸ்ட் உண்டுன்னும் தெரியாது.''

''டான்ஸ் ஆடறவ மேல காதல்னா டான்ஸ்லே இன்ட்ரெஸ்ட் இருக்கும்னு யார் சொன்னது?'' என்று அம்மா சிரித்த போது லலிதாங்கியை நினைத்து மீராவுக்குப் பாவமாக இருந்தது.

''இந்த ரெண்டு வருஷத்திலே இந்தியாவைப் பத்தி நா எடை போட்டது சரியோ தப்போ தெரியாது, ஒன்று மட்டும் நிச்சயமாத் தெரிகிறது. இங்கே காதலிச்சுக் கல்யாணம் செய்துக்கறது அத்தனை சுலபமில்லே. இது எனக்கு ரொம்பப் பெரிய ஆச்சரியமாயிருக்கு.''

''சிக்கல்கள் இருக்கத்தான் இருக்கும்'' என்றார் அப்பா நிதானமாக. ''குடும்பம்



என்கிறது இங்கே தனி மனுஷனை விட முக்கியமானது.

''எனக்கு இதையெல்லாம் புரிஞ்சுக்க முடியல்லே'' என்றாள் அவள் ஆயாசத்துடன். ''எனக்கு நீங்களும் அம்மாவும் முக்கியம்தான். ஆனா என்னுடைய வாழ்க்கை எனக்குச் சொந்தமானது. நா இஷ்டப்பட்டவனை நா கல்யாணம் செய்துக்க எனக்குச் சுதந்திரம் வேணும். பெரியவங்க தடுத்ததாலே இருபது வருஷம் காத்திருந்து வாலிபம் எல்லாம் போய் ஒருத்தனைக் கல்யாணம் செய்துக்கறது எத்தனை அநியாயம்? யசோதா வெங்கடேஷ் கதையையே எடுத்துக்குங்க. அவங்க ஏதோ குற்றம் பண்ண மாதிரி பாட்டியும் தாத்தாவும் ஒதுக்கி வெச்சது எந்தவிதத்திலே நியாயம்?''

''இதப் பார், அவர்களுக்கும் உனக்கும் சம்பந்தமில்லே. நீயேன் இதைப் பத்தியெல்லாம் நினைச்சுக் கவலைப்படறே?''

''எனக்குக் குழப்பமா இருக்கு. கவலைப்படாம இருக்க முடியல்லே.''

''அது அசட்டுத்தனம்'' என்றார் அப்பா பொறுமையில்லாமல். ''உனக்கு இன்னும் சின்ன வயசு. வேண்டாத விஷயங்களைப் பத்தி வீணா மனசைக் குழப்பிக்காதே. பரீட்சை நெருங்கிண்டிருக்கு. நன்றாய்ப் படி. அமெரிக்கா போய்ப் படிக்கணும்னா படி. இப்ப படிப்பு முக்கியம்.''

அதாவது காதல் கத்தரிக்காய் விவகாரத்தில் இப்பொழுது சிக்கிக் கொள்ளாதே என்கிறார்.

அவள் பதில் ஏதும் சொல்லாமல் அமர்ந்திருந்தாள். தன்னுடைய மனக் குழப்பங்களை இவர் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்று அவளுக்கு வருத்தமாக இருந்தது. அம்மாவுக்குப் புரிந்த அளவு கூட இவருக்குப் புரியாது என்று தோன்றிற்று.

அவர் அவளுடைய முதுகைச் சிநேகிதமாக அணைத்தார்.

''நீ இன்னும் இங்கே முழுக்க ஸெட்டில் ஆகல்லேன்னு எனக்குத் தெரியும். போகப் போக உனக்குத் தெளிவு ஏற்படும். எல்லா இடத்திலேயும் நல்லதும் உண்டு கெட்டதும் உண்டு. இங்கே தெரிஞ்சுக்க வேண்டிய விஷயம் எத்தனையோ இன்னும் இருக்கு. இன்னிக்கு உனக்கு ஏற்பட்ட அனுபவம் மோசமானதுதான். எச்சரிக்கையா இருன்னுதான் நான் சொல்ல முடியும். அந்தப் பசங்களைப் பத்தி நான் விசாரிக்கறேன். குட், தப்பிச்சு வந்தியே! ஆண்டவனுடைய அருள்தான்.''

''ரப்பிஷ்! என்னுடைய சொந்த சாமர்த்தியம்னு உங்களுக்குத் தோணல்லே?''

''ஓ.கே. உன் சாமர்த்தியம்'' என்று அப்பா சிரித்தார். ''இனிமே அதைப் பத்தியே நினைச்சிண்டிருக்காதே. அது ஒரு மைனாரிட்டி க்ரூப்.''

வாசலில் யாரோ வந்திருக்கும் அரவம் கேட்டு அம்மா கீழே சென்றிருந்தாள். ''அப்புறம் இன்னொரு விஷயம் மீரா'' என்றார் அவர் மெல்லிய தயக்கத்துடன்.

''அந்த ஹரியைத் தவிர வேற நல்ல சிநேகிதங்களை நீ ஏற்படுத்திக்கணும்.''

''ஏன்?''

''அவன் ரொம்ப நல்ல பையனா, கெட்டிக்காரப் பையனா இருக்கலாம். ஆனா அங்கஹீனமானவன். அப்படிப்பட்டவனோட மட்டுமே நெருக்கமான சிநேகிதம் நாளடைவிலே பாரமாப் போகலாம்.''

''போகாது'' என்றாள் அவள் வேகத்துடன். தனக்கு ஏன் கோபம் வருகிறது என்று புரியாமல். ''என்னைப் பொறுத்த வரை அவன் அங்கஹீனமானவன் இல்லே. ஹி இஸ் நார்மல். உண்மையிலே நமக்கெல்லாம் இல்லாத ஒரு பார்வை அவனுக்கு இருக்கு.''

அப்பா சில விநாடிகள் அவளை ஆழ்ந்து பார்த்தார். பிறகு லேசாகப் பெருமூச்சு விட்டபடி எழுந்தார்.

''இருக்கலாம். ஒரு நாளைக்கு அவனைப் பார்க்க நானும் வரேன். இப்ப உனக்குப் படிப்பு முக்கியம். அதிலே கவனம் செலுத்து.''

''அப்பாவின் பெருமூச்சும் பார்வையும் வெகு நேரத்துக்கு அன்று மனத்தை அலைக்கழித்தன. இரவு படுக்கப் போகு முன் திடீரென்று தோன்றிற்று. யசோதாவைப் பார்க்காமலே அத்தைப் பாட்டிக்குப் பிடிக்காமல் போனது போல ஹரியைப் பார்க்காமலே அப்பாவுக்கு அவனைப் பிடிக்காமல் போய் விட்டது.

(தொடரும்)



❑ ''நாடு திட்டமிட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறதா, அல்லது திசை தெரியாமல் போய்க் கொண்டிருக்கிறதா?'' என்பது பற்றிப் பட்டிமன்றத்தில் விவாதம் நடந்தது. நடுவர் திரு. சித்சபேசன் வழங்கிய தீர்ப்பு:

''நாடு திட்டமிட்டு, திசை தெரியாமல் போய்க் கொண்டு இருக்கிறது!''


- அ. ஷண்முகசுந்தரம்

நல்ல அம்மாவுக்கு
நல்லாத் தெரியுமே!

அம்மாவுக்குத் தெரியுமே ....




வளரும் பிள்ளைகளுக்கு வலிமை தரும் புரதச்சத்துடைய உணவு தான் தேவையென்று. வலிமை தரும் உணவுக்கு சோயாதான் சரியான மூலமென்றும் அம்மாவுக்குத் தெரியும். அதனால்தான், அவரின் தினசரி சமையலில் ''விகர்'' தவிர்க்க முடியாததாகி விடுகிறது. சமையலில் 10-15% ''விகர்'' கலந்தால் போதும். மொத்த உணவுமே சத்துணவாகிறது.



சப்பாத்தி, பூரி, இட்லி தோசை போன்றவற்றுக்கு மட்டுமின்றி ஜிலேபி, பக்கோடா போன்றவற்றுக்கும் ''விகர்'' உன்னதமான கலவையாகத் திகழ்கிறது.

''விகர்''
ஒவ்வொருவருக்கும் உகந்த உணவு

விளையாட்டு வீரர்களுக்கு, ''விகர்'', வலிமையை சேமித்து வெற்றியினைத் தருகிறது.



தாய்மை நிலையிலுள்ள பாவையருக்கு, ஊட்டச்சத்து மிகுந்த உணவாய்த் திகழ்கிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு உணவு முறையை சமப்படுத்தி உறுதுணை புரிகிறது.

சக்தி சோயாஸின் ''விகர்''

ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தின் தொழில் நுட்ப உதவியோடு, தரமுயர்ந்த சோயாபீனில் தயாராகி வருகிறது ''விகர்''

உன்னதமான உணவுக்கலவை



100%
சைவ உணவு
50%
புரதச்சத்து



விகர் அம்மா... நல்ல அம்மா!

சக்தியின் தயாரிப்பு

SAS 13 92

காதலெனும் வானவில்

17

காலையில் கண் விழித்த போது, நேற்று நடந்ததெல்லாம் கனவாக இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. நிஜம் போலவே கனவு வருவது போல, கனவு போலவே நிஜம். ஆனால் இது கனவாக இருக்க முடியாது. அவமான உணர்வு வியாபித்தது.

''மறக்க முயற்சி பண்ணு'' என்றார் அப்பா நேற்று. அது சுலபம் என்று தோன்றவில்லை. கண்ணை மூடினாலும் பளிச்சென்று சினிமாக் காட்சி போல் தெரிந்தது. அந்த இருட்டும், சிரிப்பும், அசட்டுப் பிசட்டு செயற்கைப் பேச்சும் அவள் விரட்ட விரட்ட எதிரில் நின்றன. இதையெல்லாம் தன்னால் ஏன் ஹரியிடம் சொல்ல முடியவில்லை என்று அவளுக்கு இப்போது புரிந்தது. அவன் அதிர்ந்து போவான் என்கிற தயக்கம் மட்டும் இல்லை. இப்படிப்பட்ட விஷயங்களில் தன்னால் அவளுக்கு எந்த வகையிலும் உதவ முடியாது என்கிற வருத்தம் அவனுக்கு ஏற்படலாம். அப்பா சொன்னது போல் தனது தோழமை என்பதே ஒரு பிரயோஜனமற்ற சுமை என்கிற எண்ணம் ஏற்பட்டுப் போகலாம்.

''வேறு நல்ல சினேகிதங்களை ஏற்படுத்திக்கோ.''

திடீரென்று சொன்ன வார்த்தைகளாகத் தெரியவில்லை. அடி மனத்தில் ஊறப் போட்டு யோசித்து, இதுதான் தருணம் என்று வெளிப்பட்ட வாக்கியம் அது. அப்பா இப்படியெல்லாம் நினைக்கக்கூடியவர் என்பதே வினோதமாக இருந்தது.

அவள் சோர்வுடன் எழுந்து பல் தேய்க்கச் செல்லும் போது, அப்பாவின் கண்களில் நிழலாடிய கவலையும் பேச்சில் இருந்த தயக்கமும் நினைவு வந்து, மெல்லிய சஞ்சலத்தை ஏற்படுத்தின. அவர்தான் ஏதோ பாரத்தைச் சுமப்பவர் போல் இருந்தது. 'கமான் டாட், உங்க மனசிலே என்னதான் இருக்கு, சொல்லுங்களேன்!' என்று பட்டென்று கேட்க முடியவில்லை இப்போது. வெளியில் சொல்ல முடியாத எத்தனையோ அந்த ரங்கங்கள் ஒவ்வொருத்தருள்ளும் இருக்கும் என்று இன்று புரிகிறது. எல்லாவற்றையும் வெளியிலே கொட்டுங்கள் என்று சொல்லும் அதிகாரம் கூட, எனக்கு இல்லை என்று அவள் நினைத்துக் கொண்டாள். சூட்சுமத்தைப் புரிந்து கொள்ள நினைப்பது முட்டாள்தனம் என்று ஒருநாள் ஹரி சொன்னான். ஆனால் பல விஷயங்கள் சூட்சுமமாக உணரப்பட வேண்டும். அதுவும் அந்தரங்கமான உணர்வுகளாகப் பதுக்கப்பட வேண்டும்.

'ஒரு நாளைக்கு எல்லாம் சொல்றேன்.'

முன்பாக இருந்தால், 'அவுட் வித் இட் டாட்' என்று வற்புறுத்தியிருப்பாள். இப்பொழுது அவர் என்ன சொல்வாரோ என்று பயமாக இருந்தது. சொல்லாமல் இருந்தால் நல்லது என்று தோன்றிற்று.

'வேறு நல்ல சினேகிதங்கள்' - அவளுக்குச் சிரிப்பு வந்தது. அவள் வகுப்புத் தோழிகள் எல்லாரும் அவள் வயதினராக இருந்தாலும், மனத்தளவில் பத்து வருஷங்களின் இடைவெளி இருந்ததாக அவள் நினைத்துக் கொண்டாள். நல்ல பெண்கள் சாதுப் பெண்கள் - நிறைய இருந்தார்கள். ஆனால் யாருடனும் அறிவுபூர்வமான நெருக்கம் ஏற்படவில்லை. அறிவார்ந்த நெருக்கத்திலிருந்துதான் உணர்வுபூர்வமான நெருக்கம் ஏற்பட முடியும் என்று தோன்றிற்று. அப்பாவுக்கு என்னுடைய அவஸ்தை புரியாது. ஹரியுடைய தோழமை ஏற்பட்டது உணர்வுரீதியாக எனக்கு நல்லது என்று அவருக்குத் தெரியாது. நேற்று நேர்ந்த அனுபவத்தில் நான் உடைந்து போயிருப்பேன். நேராக அங்கிருந்து அவனிடம் சென்றதில், மனசுக்கு ஏற்பட்ட சமாதானத்துக்கு என்ன விளக்கம் என்று தெரியவில்லை. அவனிடம் எதுவும் சொல்லாமலே கிடைத்த நிம்மதி அது. மௌனமாக அதிர்வுகளைத் தாங்கிக் கொள்ளும் ஷாக் அப்ஸார்பர் போன்றவன் அவன். நமது ஞானிகள் எல்லாம் அப்படிப்பட்ட ஷாக் அப்ஸார்பர்கள் என்று ஒருநாள் சொன்னான். அவனே ஒரு ஞானியாக

வாஸந்தி

இருக்க வேண்டும் என்று அவள் சிரித்துக் கொண்டாள்.

டெலிபோன் ஒலிப்பது கேட்டது. சற்று பொறுத்து, கீழேயிருந்து அப்பாவின் குரல் கேட்டது.

''மீரா, உனக்கு ஃபோன்!''

அவள் தடதடவென்று மாடிப் படிகளைக் கடக்கும் போது, அடித் தொடையின் வலியில் முகம் சுளித்தது.

''ஏம்மா?'' என்றார் அப்பா அவளைக் கூர்ந்து பார்த்தபடி.

''ஒண்ணுமில்லையே!'' என்று அவள் போனை எடுத்தாள். மறுமுனையில் ஹரியின் குரலைக் கேட்டு ''ஹாய்'' என்றாள் சந்தோஷத்துடன். ''இப்பத்தான் உன்னைப் பத்தி நினைச்சேன்.''

''சாத்தானைப் பத்தி நினைச்சா உடனே வந்து நிக்கும்பாங்க. அல்லது குரலாவது கேட்கும்!''

''சாதாரணக் குரல் இல்லே. அசரீரி'' என்று அவள் சிரித்தாள். ''இப்பத்தான் நீ ஒரு ஞானின்னு நினைச்சேன்.''

''அப்படின்னா ஆபத்து. மறக்கப்பட வேண்டிய கேஸ்னு அர்த்தம்.''

''சீ! எல்லாத்துக்கும் ஏதாவது குதர்க்க அர்த்தம் செய்துக்குவே நீ!''

அப்பா எங்கிருந்தோ தன்னைக் கவனிப்பது போல் இருந்தது. அவள் சுழன்று திரும்பிய போது அவர் எழுந்து உள்பக்கம் செல்வது தெரிந்தது.

நழுவிப் போன கவனத்தைத் திருப்பி, ''இப்ப எப்படியிருக்கே ஹரி, ஜுரம் இருக்கா?'' என்றாள்.

''இல்லே. எப்போதும் போல இருக்கேன். நேத்து நீ வந்தது எனக்கு ரொம்ப உபகாரமா இருந்தது மீரா! எத்தனை சந்தோஷம் ஏற்பட்டதுன்னு சொல்லத்தான் இப்ப போன் செய்யறேன்.''

''இந்தா பாலைக் குடிச்சுட்டுப் பேசு...'' என்று அம்மா நடுவில் பால் தம்ளரை நீட்டிய போது, அவள் மறுக்க முடியாமல் வாங்கிக் கொண்டாள்.

''இப்பத்தான் எழுந்திருந்தியா?'' என்றான் ஹரி. ''நா அப்புறம் பேசறேன். நீ போய் பாலைக் குடி.''

இவன் செவிகளை வைத்துக் கொண்டு ஊரை விற்று விட்டு வருவான் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''பாலைக் குடிச்சுண்டுதான் பேசறேன்'' என்று அவள் சிரித்தாள். ''அம்மா கொண்டு வந்து கொடுத்துட்டாங்க.''

''நீ இத்தனை உதவாக்கரைன்னு



எனக்குத் தெரியாது'' என்றான் அவன் பரிகாசமாக. ''நீ உன் வேலையைப் பாரு. அப்புறம் பேசறேன்'' என்று அவன் உடனடியாக டெலிபோனைத் துண்டித்தது, அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மாவின் குறுக்கீட்டை இவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. சுர்ரென்று எல்லார் மேலும் ஆத்திரம் வந்தது.

''நா வந்து பாலைக் குடிக்க மாட்டேனா?'' என்றாள் சமையலறையில் நின்றி

ருந்த அம்மாவைப் பார்த்துக் கோபமாக. ''நா பேசி முடிக்கிறதுக்குள்ளே உனக்கு என்ன அவசரம்? நடுவிலே வந்து நீட்ட ணுமா?''

''நீ அந்தப் பிள்ளையோட பேசி முடிக் கிறதுக்குள்ளே சாப்பாட்டு நேரம் வந்து ரும்.''

அவள் திடீரென்று கத்தினாள். ''உனக் கும் அப்பாவுக்கும் நா ஹரியோட சினே கமா இருக்கறது பிடிக்கல்லே. உங்க ரெண்டு பேர் பேச்சிலேயும் எனக்குப் புரி யறது.''

''நீயா ஏதாவது கற்பனை பண்ணிக் காதே மீரா'' என்றாள் அம்மா சற்று உயர்ந்த குரலில்.

''நா முட்டாள் இல்லே!'' என்று மீரா மறுபடி கத்தினாள். ''எனக்கு எல்லாம் புரியறது. என்னை விட சீக்கிரமா ஹரிக்குப் புரிஞ்சு போச்சு. அவன் போன் செய்யறது உனக்குப் பிடிக்கல்லேன்னு நீ நடுவிலே புகுந்து பாலை நீட்டினதிலேயே தெரிஞ் சுண்டு போனை வெச்சுட்டான். அவன் அங்கஹீனமானவன் என்கிற கருணை கூட உங்களுக்கு இல்லே. அவனுடைய சினேகி தத்தாலே எனக்கு எந்தவித லாபமுமில்லே, தொல்லைதான் ஏற்படும்னு நீ நினைக் கிறே. லாப நஷ்டத்தைக் கணக்குப் பண்ணித்தான் நீங்க ரெண்டு பேரும் மத்த வங்ககிட்டப் பழகறீங்க போலிருக்கு. எனக்கு இருக்கற ஒரே சினேகிதன் இவன். அந்த சினேகிதத்தாலே கிடைக்கற சந்தோஷம்தான் என்னுடைய லாபம்.''

அவளுக்கு ஆத்திரமும் கோபமும் பொங்கிப் பொங்கி எழுந்தன. அப்பா கை யில் நியூஸ் பேப்பருடன் வந்து நின்றார். எத்தனை இங்கிதமில்லாதவர்களாகப் போய் விட்டார்கள் இவர்கள் என்று அவ ளுக்கு ஆச்சரியமும் துயரமும் ஏற்பட்டன.

''நேத்து நா ஒரு போக்கிரிக் கும்பல் கிட்ட மாட்டிண்டதைப் பத்தி நீங்க கவ லைப்பட்டதை விட நா ஹரியோட பழக றதைப் பத்தி அதிகமாக் கவலைப்படற மாதிரி இருக்கு. எத்தனை மடத்தனம் இது!''

''ஆமாம், கவலையாத்தான் இருக்கு!'' என்றாள் அம்மாவும் குரலை உயர்த்தி. ''அவனைத் தவிர வேற யாரும் உனக்குச் சினேகிதமில்லாம இருக்கறது கவலையா யிருக்கு.''

''அவன் ஒருத்தனாவது இருக்கா னேன்னு நீ சந்தோஷம்னா படணும்? சினேகிதத்தைக் கடையிலே வாங்க முடி யும்னாச் சொல்லு, வாங்கிட்டு வரேன்!''


''சுஜாதா, எதுக்கு நீயும் இப்படிக் கோபப்படறே?'' என்றார் அப்பா அம்மா வைப் பார்த்து. ''நேத்து நடந்த விஷயத்தைப் பத்திக் கவலை மட்டும் இல்லே, அதிர்ச்சியாயிருந்தது எங்களுக்கு'' என்றார் மீராவிடம். ''உன்னை நினைச்சுப் பெருமையாவும் இருக்கு. ஹரியோட சினேகமாயிரு. கூடவே வேற நல்ல சினேகி தமும் வெச்சுக்கோன்னுதான் சொல்றோம். உல்லாசமா இருக்க வேண்டிய வயசு உனக்கு. அவனோடு மட்டும் பொழுதைக் கழிச்சியானா உன் உலகம் ரொம்பக் குறுகிப் போகும்.''


ஹரியைப் பற்றி இவர்களிடம் மேற் கொண்டு பேசுவதோ விளக்குவதோ பிரயோஜனமில்லை என்று அவளுக்கு அலுப்பு ஏற்பட்டது. இவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

''உங்க உலகம்தான் குறுகிப் போச்சு'' என்று முணுமுணுத்தபடி அவள் கிடுகிடு வென்று மாடிப் படியேறித் தன் அறைக்குச் சென்றாள். வேண்டாத விஷயத்திற்கு இவர்கள் குழம்புவதாக எரிச்சல் ஏற்பட்டது. வெகு நாள் கழித்து அவள் எரிக் கிற்கு நீண்ட கடிதம் எழுதினாள். ஹரி யிடம் சொல்ல முடியாத விஷயங்களை அவனிடம் தயக்கமில்லாமல் சொல்ல வந்தது. தனக்கு நேர்ந்த அனுபவங்களை எட்டி நின்று ஹாஸ்ய உணர்வுடன் விவ ரிக்க முடிந்தது. எரிக் மட்டுமே தன்னைப் புரிந்து கொள்ளக்கூடியவன் என்கிற உணர்வு கடிதத்தை முடித்ததும் ஏற்பட்டது. சென்ற கடிதத்தில் அவன் ஹரியைப் பற்றி

❒ *லக்னோவிலுள்ள ஒரு நர்சரி பள்ளியில் ஒரே வகுப்பில் ஆறு ஜோடி இரட்டையர்கள் படிக்கிறார்கள். நாலு ஜோடி இரட்டையர் ஒரே வகுப்பில் படிப்பதுதான் கின்னல் புக் சாதனையாக இன்றுவரை உள்ளது. இனி அந்த இடத்தை இந்த ஆறு ஜோடி இரட்டையர் பிடித்துக் கொள்வார்கள்.*

- எஸ். எஸ். மணி





''கல்யாணத்தைப் பழனியிலே வெச்சுக்கணும்னு நான் சொன்னேன். என்னுடைய காதலி திருத்தணியிலே வெச்சுக்கணும்னு சொன்னா. கடைசியிலே ஒருவழியா பிரச்னையைத் தீர்த்துக்கிட் டோம்!''

''எப்படி?''

''என்னோட கல்யாணத்தைப் பழனியிலும் அவளோட திரு மணத்தைத் திருத்தணியிலும் வெச்சுக்கறதுன்னு தீர்மானம் பண்ணிட்டோம்!''

மிகவும் உற்சாகத்தோடு விசாரித்திருந்தாள். கறுப்பு வெளுப்பு வித்தியாசமில்லாத உலகத்தில் இருப்பவன் ரொம்பவும் தூய்மையானவனாக இருப்பான் என்று எழுதியிருந்தான். அந்த சிநேகிதத்தினால் இப்பொழுது வீட்டில் ஏற்பட்டிருக்கும் சர்ச்சையைப் பற்றி எழுதும் போது, அவளுக்குக் கூச்சமாக இருந்தது, பெற்றோர்கள் கஞ்சர்கள் என்று சொல்ல வேண்டி வந்தது போல.

அவளது எல்லாக் கோபங்களும் சமாதானமாகிப் போவது போல், இன்றைய கோபமும் சமாதானமாகி விட்டது. இரவு அவள் தூங்கி விட்டாள் என்கிற எண்ணத்துடன், அப்பா அவளுடைய கட்டிலில் அமர்ந்து, இருளில் அவளுடைய தலையைக் கோதி விட்டு நகர்ந்த போது, மனசு நெகிழ்ந்து போயிற்று. அவரை முழுமையாகத் தான் புரிந்து கொள்ளவில்லை என்று முதல் முறையாகத் தோன்றிற்று.

மறுநாள் வழக்கம் போல் பஸ்ஸைப் பிடித்து, பள்ளிக்கூடத்துக்கருகில் இறங்கி நடக்கும் போது, தெருவின் எதிர்த்த திசையில் நாலைந்து பையன்கள் விசில் அடித்தார்கள். அவளுக்கு முன்னால் நடந்த இரண்டு பெண்கள் பயந்து நடையை வேகமாக்கினார்கள்.

''நிதானமாப் போங்க, ஏன் பயப்படறீங்க?'' என்ற மீராவின் குரல் கேட்டுத் திரும்பினார்கள். எட்டாம் வகுப்பு மாணவிகள்.

''அந்தப் பையன்கள் ரொம்ப மோசம். தினமும் இப்படித்தான் தொந்திரவு பண்றாங்க'' என்றாள் ஒருத்தி, மருள மருள விழித்தபடி.

''நீங்க பயந்தீங்கன்னா அவங்க எகிறுவாங்க'' என்று அவளை ஒரு கையால் அணைத்தபடி மீரா நடந்தாள். ''நாம தைரியமாயிருந்தா எவனும் வாலாட்ட முடியாது.'' இவளுக்கும் ஒருநாள் தனக்கு அன்று ஏற்பட்ட அனுபவம் ஏற்படலாம் என்ற எண்ணத்தில் கனிவு சுரந்தது. தப்பிக்கும் தைரியம் இவளுக்கு இருக்குமா என்பது சந்தேகம்!

ரெஜிஸ்தரை எடுத்துக் கொண்டு வகுப்பிற்குள் நுழைந்த போது, இன்னும் மணி அடிக்காததால் வகுப்பில் யாருமில்லை. புத்தகக் கட்டைத் தன் மேஜையில் வைத்துவிட்டு நிமிரும் போதுதான், தொலைவில் மீனாட்சி மேஜையில் தலையைக் கவிழ்த்து அமர்ந்திருப்பது தெரிந்தது. அழுகிறாள் என்று தோன்றிற்று. அவளுடன் இனி பேசவே கூடாது என்ற வைராக்கியத்தை மறந்து, மீரா அவளருகில் சென்றாள்.

(தொடரும்)



''கோஷ்டிச் சண்டை இருக்கறது தான்... அதுக்காக இப்படியா?''

''ஏன்.. என்ன ஆச்சு?''

''தலைவர் பிறந்த நாளை முனு சாமி கோஷ்டி வர்ற 27ம் தேதியும் வடிவேல் கோஷ்டி அடுத்த மாதம் 8ம் தேதியும் கொண்டாடப் போறாங்களாம்!''

- கிருஷ்ணராஜகோபால்



''சிக்கனத்தைக் கருதி நாமும் வாங்கும் சம்பளத்தில் பத்து சதவீதம் குறைத்துக் கொள்ளணும்னு தீர்மானம் போட்டிருக்கீங்களே, கட்டுபடியாகுமா?''

''பதிலுக்கு வாங்குகிற லஞ்சத்திலே பத்து சதவீதம் அதிகப்படுத்திட்டாப் போச்சு!''

- குமார்



''எதிரொலி நிகழ்ச்சியில் ஞாயிற்றுக் கிழமை என்ன படம்னு சொல்லும் போது, சிரிச்சுக்கிட்டே சொல்றாங்களே, ஏன்?''

''அவ்வளவு பழைய படம்னு நினைக்கும் போது, அவுங்களுக்கே சிரிப்பு வந்துடுதாம்!''

- வி. ரேவதி

ஃபாஷன் பக்கம் :

'தூள்' கிளப்பும் துப்பட்டா!

சல்வார் கமீஸ் கொஞ்சம் பழசாகிவிட்டதா? பளிச்சென்று ஒரு சிஃபான் 'துப்பட்டா'வை வாங்கி, அதோடு அணியலாம். பழைய களை மறைந்தே போகும்!


- ஒரு தோளில் மட்டும் தொங்க விடுவது;
- இரு தோள்களிலும் பரவ விடுவது;
- கழுத்தைச் சுற்றி 'காஷுவலாக' முடிந்து கொள்வது;
- தோளிலிருந்து சரியவிட்டு, பக்க வாட்டில் தூளி போல் முடிச்சிட்டுக் கொள்வது;
- தலையில் ரிப்பனைப் போல் ஒரு முனையைக் கட்டி, மறு முனையைத் தோளில் துவள விடுவது (படம்) என 'துப்பட்டா' அணியும் விதத்தில் கற்பனை மிக்க வேறுபாடுகள்.

புடைவைகளில் எத்தனை வகை உண்டோ, அத்தனை வகை, துப்பட்டாவிலும் இருக்கிறது... லேட்டஸ்டாக - அப்பாவின் அங்க வஸ்திரங்களைத் துப்பட்டாவுக்காக அபகரிக்கிறார்கள் பெண்கள்.

பளிச்சென்ற பச்சை, சிவப்பு பாந்தினி சல்வார் கமீஸ்களுடன் இந்த அங்கவஸ்திர துப்பட்டாக்கள் அழகாகவே உள்ளன.

வண்ணப்படங்கள் : யோகா
படத்தில் : ப்ரியா, பூர்ணிமா
நன்றி : நாயுடு ஹால்





ஜிட்டாவிடம் சிவசங்கரனை முதலில் கூட்டிப் போனது சுப்ரமணியன்தான். தாமிரபரணி ஓடுகிற கரை ஓரம், சுலோசனா முதலியார் பாலத்துக்கு வலப்புறம் உள்ள மண்டபத்துக்குள் நுழையும் நிமிஷம், மனசு பரபரத்தது. ஜிட்டா எப்படி இருப்பார்? எல்லா சாமியார் போலவும் காவி உடை, நீண்ட தாடியுடனா?

''இவர சாமியார், ரிஷி, ஞானினு என்னவெல்லாமோ சொல்றாங்க சிவா. இவர் அதெல்லாமானு தெரியலை. ஆனா சத்யமா மனுஷனுக்கு மேல. அந்தக் கண்ணு, பேசுற தத்துவம் இதெல்லாம் லேசில்லை. சத்யமா மனுஷத்தனமும் இல்லை. அதுக்கும் மேலே. தெய்வமுமில்லை. இடைல ஏதோ ஒண்ணு. பாலம் மாதிரி, கடவுளுக்கும் நமக்கும் நடுவுல கயிற்றுப் பாலம் பின்னுற மாதிரி. நீ கட்டாயம் இவரைப் பார்க்கணும், மனக் கிலேசம் போயிரும் சிவா. பஞ்சு மாதிரி பறந்திடும்.''

மணிக்கு இப்படி நிறைய ஈடுபாடுகள் உண்டு. அதனாலோ என்னவோ இன்னும் இவனுக்குக் கல்யாணமாகவில்லை என்று தோன்றும். வாரந்தோறும் நெல்லையப்பர் கோவில், மாசம் ஒரு தடவை சிவசக்தியில் படம். எப்போதாவது நண்பர்களுடன் ஆரியாஸில் இரவு சாப்பாடு. இது போக இசை, நாடகம், தத்துவம், புத்தகங்கள் என்று எக்கச்சக்கமான பொழுது போக்குகள். இதனால்தான் இவனால் பரபரப்பு இல்லாமல், எந்தவிதமான கவலையும் மனசில் ஒட்டிக் கொள்ளாமல் இருக்க முடிகிறதா? சிவசங்கரன் நெற்றியை ஒற்றை விரலால் அமுத்தி விட்டுக் கொண்டான்.

தப்புச் செய்து விட்டேனா? இருபத்தேழு வயசில் சிவப்பாய் கண் முன்னால் பெண்ணைக் காட்டினதும் ''சரி'' என்று வெட்கமாய்ச் சிரித்துக் கல்யாணம் செய்து கொண்டது தவறா? முதலில் அலுப்பாயில்லை. வரவர மீரா, குழந்தைகள் எல்லாமே அலுத்துப் போயிற்று, காப்பிப் பொடி நூறு கிராம், ஆறு சோப் என்று ராணி ஸ்டோரில் மளிகைக் கடை லிஸ்டுடன் நிற்பது தவிர, வேறு ஒன்றுமே வாழ்க்கை இல்லையா என்று மனசு அடித்துக் கொண்டது.

''ஏன் டல்லாருக்கீங்க.... அசதியாருக்கா?''

''இல்ல மீரா.''

''இப்பல்லாம் முன்ன மாதிரி இல்ல நீங்க. எப்பவாச்சும்தான் சிரிச்சுப் பேசுறீங்க. கலகலப்பாருக்கீங்க. எதாச்சும் வருத்துதா?''

''ம்ஹூம்.''

''பின்ன ஏன் இப்படி?''

'தெரியலை மீரா.''

''ஜிட்டாவுக்குத் தெரியும்'' என்றான் சுப்ரமணியன். ''அவர் என்ன என்று வைத்தியர் மாதிரி மனசின் குறையைச் சரியாக சொல்லி விடுவார்'' என்றான்.

சனிக்கிழமை ஆபீஸ் முடிந்ததும் கிளம்பினார்கள். சுப்ரமணி லெஷ்மி விலாஸில் கால் கிலோ அல்வா வாங்கிக் கொண்டான்.

''நடந்திடலாமா சிவா?''

''ம்.''

நடக்கும்போது தான் மீரா ஒரு ஜோடி ஹேர்பின் கேட்டது ஞாபகம் வந்தது. சுப்ரமணி, அல்வா வாங்கும்போது, எதிர் வரிசை சிவாஜி ஸ்டோரில் வாங்கியிருக்கலாம்.

மண்டபம் தாண்டிப் போனதும் ஓங்கிக் காற்றடித்தது. சிவசங்கரன் வேட்டியை இழுத்துக் கால்முட்டுக்குள் இழுத்து விட்டுக் கொண்டான். மண்டபம் நெருங்க நெருங்க, மணி சொன்ன மாதிரி மனசில் ஈரம் படர்ந்தது. நீரின் குளிர்ச்சியைச் சுமந்து கொண்டு, வேஷ்டி தழுவிக் காற்று முட்டியது. இது தான் வேறு உலகமா? இருபத்தேழு வயசில் மீராவைப் பார்த்ததும் படர்ந்த ஈரம்; முதல் குழந்தையைப் பார்க்க லெஷ்மி நர்சிங் ஹோமுக்குள் நுழைந்த போது படர்ந்த ஈரம்; அம்மா செத்துப்

தமயந்தி

போன போது பழசு நினைத்துப் படர்ந்த ஈரம்; எப்பவாவது கிராமத்துக் குப் போய் அப்பாவைப் பார்க்கும் போது மனசில் படர்கிற ஈரம்....

அது வேறு. இது அலையாய் அடிக்கிறது. அங்குசம் வைத்துப் பின் மண்டையில் அடித்துப் புத்தியைக் கிளப்புகிறது. உள்ளே நுழைந்ததும் கதவு மூடிக் கொண்டது. சாம்பிராணி ம ண ம். சுத்தம் பரம சுத்தம். ஏதோ ஒரு மஞ்சள் துணி யில் சுப்ரமணியன் பவ்ய மாய் உட்கார்ந்து கொண் டான். 'நீயும் உட்கார்' என்று கண் காட்டினான். பைக்குள்ளிருந்து பாக்கு, வெற்றிலை, கற்கண்டு, பழம், அல்வா எ டு த் து ஜிட்டா முன்னாலிருந்த தட்டில் வைத்தான்.



''நமஸ்காரம்.''

''ம்ம்....''

''இவன் சிவசங்கரன், கூட வேலை பார்க்கிறான். மனசு சரியில்லைன்னான். அதான் கூட்டி வந்தேன்.''

ஜிட்டா சிவசங்கரனைத் திரும்பிக் கூர்மையாகப் பார்த்தார்.

''கிலேசம் உன் கண்ணில் தெரியுது. மனசு என்பது காற்று மாதிரி, சகலம் வழி யாகவும் ஊடுருவும். பரவும். புலப்படும். உனக்குக் கண்ணில் தெரியுது. மனசில் சுருக்கம் இருப்பது தெரியுது. உன்னையே நீ கேட்டுக் கொள். உன் மனம் காற்றா? நெருப்பா? தகிக்கிறதா? சிலவேளை சுடு கிறதா? விட்டுவிட்டு ஓடிவிட வேண்டும் என்று எரிகிறதா? மனசைக் கழற்றி வைக் கிற ஆசை வரும். கழற்றிவிட்டு எங்காவது மரணித்தவன் போல இருக்கச் சுகமாயிருக் கும். இருந்திருக்கிறாயா?''

அந்தப் பெரிய கண்கள் சிவாவை ஊடுருவின. சிசங்கரன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். நெஞ்சு படபடத் தது. இதுதான் சிவசங்கரா உன் குறை. உன் வியாதி. உன் கிலேசம். உன் துக்கம். உன் மனசை உரி. பாம்புச்சட்டை மாதிரி உரித்து விட்டுப் போ. தள்ளிப் போ. படுத்துக் கொள். இப்போது நீ யாருமில்லை. யாருக்கும் சொந்தமில்லை. உனக்குப் பெயர் கிடையாது. நீ அஃறிணையு மில்லை. உயர்திணையுமில்லை. நீ காற்று, நெருப்பு, மழை நீர். சோவென்று பெய்வாய். நெருப்பாய்க் காய்வாய். காற் றாய் வீசுவாய். எல்லா மூலைக்கும் உன் னால் பரவ முடியும். இதுதான் உன் நிஜப் பிரமை.

சட்டென்று கழற்றின மனசு விழித்துக் கொண்டது. அங்கும் இங்கும் தேடிற்று. பொருட்காட்சியில் தொலைந்த குழந்தை யாய் மிரண்டது. காற்றாய், நெருப்பாய், நீராய்ப் பரந்து விரிந்து கிடந்ததைப் பார்த்து ஒட்டிக் கொண்டது. சிவசங்கரா ஏன் என்னை விட்டுப் போனாய் என்று புலம்பி ஈஷிக் கொண்டது.

''இந்த பரிச்சயம்தான் வாழ்க்கை சிவ சங்கரா. நீ தேடுவது, தொலைந்து விட்ட தாக நினைத்தது. உன் வாழ்க்கை உன்னி டம் தான். நீயே அலைபாய விட்டு விட் டாய். தேடு, கிடைக்கும். மிரளாதே, எங்கா வது உறக்கத்தில் இருக்கும். எழுப்பு, போ. உன் வேதனை கிலேசம் சகலமும் அகன்று போகும். போ. தெளிவோடு வா.''

சிவசங்கரன் மனசு லேசாக, சாஷ் டாங்கமாக நமஸ்கரித்தான். அலைபாய்ந் தது சட்டென்று அடங்கியது. சுவர் சுவராய் முட்டித் தேடியது இடம் கண்டு சேர்ந்து கொண்டது. ஜிட்டா விபூதி பூசி விட்டார். கதவு தள்ளிக் கொண்டு காற்று நுழைந்தது. மேலெல்லாம் ஈரமாய் வீ சி வி ட் டு ப் போனது.

சுப்ரமணியன் எழுந்து கொண்டான். ''வா.''

கதவைத் திறந்து அவன் பின்னால் நடந்தபோது தொண்டையில் கனமாய் ஏதோ சிக்கிற்று. அழுகை.

பெருமாள்புரத்தில் இறங்கின போது இருட்டியிருந்தது. செந்தில் முருகன் ஸ்டோர்ஸில் மீராவுக்கு மறக்காமல் ஹேர்-பின் வாங்கிக் கொண்டு நடந்தான். வீட்டு வாசல் நடையில் புதுஜோடி செருப்புக் கிடந்தது. உற்றுப் பார்த்ததில் அப்பாவுடைய செருப்பு. அறுவடை முடிந்து வந்திருக்கிறார் போலும். இன்னும் இரண்டு மாதம் மீரா அரிசி, வத்தல் என்று நச்சரிக்க மாட்டாள். அப்பாடா......

பழையபடி அன்றாடக் கவலைகள். வீட்டு வாசலில் செருப்பைக் கழற்றும் போது மாட்டிக் கொள்ளும் கவலைகள். இதில் எங்கே தொலைந்த மனசைத் தேட? அலைபாய விட்ட காற்றைத் தேட? எல்லாம் மாயம். மனசு மாயம். வாழ்க்கை மாயம். அரிசியும் புளியும் நிதர்சனம். ஸ்கூல் பீஸ் நிதர்சனம்.

''வாடா... எங்க போயிட்டே? பேரக் குழந்தையும் சந்தோஷமும் சூழ்ந்த அப்பா. காப்பித் தம்ளருடன் மீரா.

''மணியோட ஆத்துப்பாலம் வரைக்கும் போயிருந்தேன்.''

''என்ன திடீர்னு?''

''சும்மா.''

சொல்லலாமா? வேண்டாம். புரியாது இவர்களுக்கு . அந்த உலகம் வேறு. ஆம்ஸ்ட்ராங் பார்த்த நிலவுலகம் மாதிரி பரவசமானது. கடவுள் என்கிற புரியாத புதிரை மனிதனோடு இணைக்கிற கயிற்றுப் பாலம். பின்கட்டில் நெல்மூட்டைகள், புளி, வற்றல், எல்லாம் அடுக்கப்பட்டிருந்தன. அடுப்பில் பருப்பும் முருங்கைக் காயும் வேகிற வாசம் அடித்தது. புதுச் சமையலாய் இருக்கும்.

தாழ்வாரத்தில் யாரோ படுத்திருந்தது தென்பட்டது. யாரது? திரும்ப உள்ளே வந்து மீராவிடம் கேட்டான்.

''யாரு மீரா பின்னால?''

''அப்பா கூட்டிட்டு வந்திருக்கார். வயல்ல வேலை செஞ்ச பொம்பளையாம். புருஷங்காரன் இங்கிருக்கானாம். விட்டுட்டு ஊர் விட்டு இங்க வந்துட்டான் போல. அஞ்சு புள்ளைங்களாம், பாவம். புருஷனைப் பார்த்துக் கூட்டிப் போக வந்திருக்கு . நாளைக்கிக் காலைல பார்த்துக்கலாம்னுருக்கார் அப்பா.''

அப்பா வாசல் நடையில் நின்று கவனித்துக் கொண்டிருந்தார்.

''யாரு லெஷ்மியைக் கேட்டியாடா? பாவம். ஆம்பிளை பொசுக்குனு குடும்

பத்தை அறுத்த மாதிரி, பொம்பளை விட முடியுதா? ஆயிரம் யோசனை, எல்லாத் துக்கும் மேலே பாசம்.''

''அவனுக்கு என்ன கஷ்டமோ? இவ மேல வருத்தமோ என்னமோ? நமக் கென்ன தெரியும்?''

''கஷ்டம்னா... ஓடிட வேண்டியது தானா? அதான் வழியா? அப்ப முதல்ல யோசிச்சிருக்கணும், கல்யாணத்தோட முடிச்சுப் போடுறதுக்கு முன்னால நினைச் சிருக்கணும். அஞ்சு பிள்ளை பெறும்போது தேவையானு நினைச்சிருக்கணும். ஓடி யிருக்கணும்னா அதுக்கு முன்னால போயி ருக்கணும். மத்த ஜீவன்ங்க கஷ்டப்பட் டிருக்காது. உலகத்துல கஷ்டம்னு எல்லா ரும் ஓடிட்டா எதுக்கு மஷனுன்? எதுக்குக் கடவுள் சிவசங்கரா?''

சமையலறை மங்கின பல்ப் வெளிச் சத்தில் அப்பா நிழலும் வெளிச்சமுமாய்த் தெரிந்தார்.

''விட்டுடாம இருக்கறதும் வாழ்க்கை தான் சிவசங்கரா. அதுவும் கஷ்டம் தான். புரிஞ்சிக்கணும். இல்லைனா - விட ணும்னா காலை நீருக்குள்ள விடுறதுக்கு முன்னயே விலகிக்கணும். பாதி ஆத்துல திரும்பறது நம்பி வந்தவர்களை முங்க விடுறது அத விட பாவமில்லையா? கஷ்டமோ நஷ்டமோ அந்தக் கரை சேர்றது வாழ்க்கை இல்லையா?''

சிவசங்கரன் திரும்பி அந்தப் பெண்ணைப் பார்த்தான். ஒடுங்கிப் போய் படுத்துக் கிடந்தாள். தூங்கவில்லை என்று முதுகின் ஏற்ற இறக்கம் சொல்லிற்று. திடீரென்று அந்தப் பெண் மறைந்து மீரா அப்படி இழுத்துப்பிடித்து ஒடுங்கினாற் போல கிடக்கிற மாதிரி தோன்றியது. சடாரென்று உடம்பை உதறிக் கொண் டான்.

''இவ புருஷன் என்ன பண்றான் இங்க?''

''ஆத்துப்பாலம் கிட்ட உள்ள சைக்கிள் கடை ஏதோ ஒண்ணுல உறவுக்காரங்க இருக்காங்களாம். அவங்களுக்குத் தெரியு மாம். காவி கட்டிக்கிட்டான்னு பேச்சு. காலைல தேடணும். பாவம் யாருமில்லாத பொண்ணு.''

அப்பா மேல் நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டார். ''ஈஸ்வரா' என்றார். மனசு மிரண்டு போய் அப்பாவிடம், மீராவிடம் ஒட்டிக் கொண்டது.

''பாவம் இல்லீங்க... எங்கிருக்கானோ அந்தப் பாவி?''

எங்கே இருக்கிறானோ என்பதை விட அவன் ஜிட்டாவாய் இருக்கக் கூடாது என்று மனசு ஏனோ வேண்டிக் கொண்டது.

காதலெனும் வானவில்

18

ஓசைப்படுத்தாமல் குலுங்கும் அந்த முதுகைப் பார்க்கையில் அது கட்டுப்படுத்த முடியாத அந்தரங்கமான துக்கம் என்று மீராவுக்குத் தோன்றிற்று. இதுநாள் வரை மீனாட்சி மேல் இருந்த கோபம் கிட்டத்தட்ட மறந்து போன நிலையில் அவள் முதுகைத் தொட்டு, ''ஏய் என்ன ஆச்சு உனக்கு?'' என்றாள் மீரா வியப்புடன். ''யாரோ செத்துப் போன மாதிரி அழறே?''

மீண்டும் மீனாட்சியின் கண்களில் மளக்கென்று நீர் நிறைந்தது. கன்னங்களில் வழிந்து இறங்கிற்று.

''செத்துப் போன மாதிரிதான் இருக்கு. தற்கொலை பண்ணிக்கணும் போல இருக்கு.''

''சீச்சீ, என்ன உளர்றே?'' என்றாள் மீரா திடுக்கிட்டு. ''யாராவது திட்டினாங்களா? திட்டினா கொஞ்ச நேரத்துக்குக் கஷ்டமாத்தான் இருக்கும். ஏன் திட்டறாங்கன்னு யோசிச்சுப் பாரு. இதுக்கெல்லாம் தற்கொலை பண்ணிக்கணும்னு கிளம்பினா'' -

''யாரும் திட்டல்லே'' என்றாள் மீனாட்சி.

மீரா ஏமாற்றத்துடன், ''பின்னே எதுக்கு இந்த அழுகை?'' என்றாள். ''முந்தா நேத்து அத்தனை சந்தோஷமா இருந்தே?''

மீனாட்சி சற்று நேரம் மௌனமாக இருந்தாள், தனது உணர்ச்சிகளை ரொம்பவும் கஷ்டப்பட்டு அமுக்கப் பார்த்தவள் மாதிரி.

மீராவைச் சந்தேகத்துடன் நிமிர்ந்து பார்த்து, ''உனக்குப் புரியாது மீரா'' என்றாள் சோகத்துடன்.

''என்ன புரியாது?''

''என் துக்கம். காதல் என்கிறதை அனுபவிச்சவங்களுக்குத்தான் புரியும். நீ யாரையாவது காதலிக்கிறியா?''

'காட், இதுதானா' என்று தனக்குள் ஏற்பட்ட சலிப்பை மறைத்துக் கொண்டு, மீரா லேசாகச் சொன்னாள், ''நா எல்லாரையும் காதலிக்கிறேன் மீனாட்சி. உலகத்தையே நேசிக்கிறேன்.''

''சரி, விடு'' என்றாள் மீனாட்சி விரக்தியுடன். ''உங்கிட்ட இதைப் பத்திப் பேசிப் பிரயோஜனமில்லே. உனக்குப் புரியாது. நா சொல்ற விஷயம் வேறே. அது ஒரு மகத்தான அனுபவம்னு நா சொன்னா நீ சிரிப்பே. என்னுடைய துக்கத்தைக் கண்டு அனுதாபம் வராது.''

''ஓ.கே. எனக்குப் புரியாதுன்னே வெச்சுக்குவோம். ஆனா என்ன விஷயம்னு சொல்லு. என்னாலே உதவ முடியுமான்னு பார்க்கறேன். நேத்துக்கும் இன்னிக்கும் என்ன வித்தியாசம் நேர்ந்து போச்சு?''

''நிறைய வித்தியாசம்'' என்று சினிமாக் கதாநாயகிகளைப் போல் மீனாட்சி நீண்ட பெருமூச்சு விட்டாள். ''நா மணியை ரொம்பக் காதலிக்கிறேன் மீரா. என் உலகமே அவன்தான்னு நினைச்சுக்கிட்டிருக்கேன்.''

எந்த நிமிஷமும் மணி அடிக்கலாம் என்கிற கவனத்துடன், ''ஓ.கே. ஃபைன்'' என்றாள் மீரா. ''உங்க அம்மா அப்பாவுக்கு அது பிடிக்கல்லியா?''

மீனாட்சி சோகத்துடன் தலையசைத்தாள். ''இன்னும் அந்த கட்டத்துக்கெல்லாம் வரவேயில்லே.''

''பின்னே, இப்ப என்ன பிரச்னை?''

''மணியேதான் பிரச்னை. அவன் எங்கிட்டேந்து விலகிப் போற மாதிரி இருக்கு.''

மீரா வியப்புடன் மீனாட்சியைப் பார்த்தாள். அன்றும் மணி இவளுடன் பசை போல் ஒட்டிக் கொண்டு நின்றதும் கூச்சமில்லாமல் எல்லார் முன்னிலையிலும் சல்லாபித்ததும் கண்ணில் நின்றது.

''என்னாலே நம்ப முடியல்லே மீனாட்சி. அவன் ஏதாவது சொன்னானா?''

''திட்டவட்டமாச் சொல்லல்லே. ஆனா எனக்குப் புரியறது. என் மேல எரிச்சல் படறான். உன் பிரியமே எனக்குச் சுமையாப் போயிடும் போல இருக்குங்கறான். அதுக்கு என்ன அர்த்தம் மீரா?''

மீரா சங்கடத்துடன் அவளைப் பார்த்தாள். நொறுங்கிப் போனவளைப் போல் இருக்கும் அவளைக் கண்டு மெல்லிய பரிதாபம் ஏற்பட்டது.

''எனக்குத் தெரியல்லே மீனாட்சி'' என்றாள் மெல்ல. ''கொஞ்ச நாள் விட்டுப் பிடி. உன் மேல உண்மையான பிரியம் இருந்தாத் தன்னாலே புரிஞ்சுக்குவான், உன்னைக் கஷ்டப்படுத்திட்டோம்னு. அவனுக்கு அன்னிக்கு ஏதாவது ப்ராப்ளம் இருந்திருக்கும்.''

மீனாட்சியின் முகத்தில் மெல்லிய பிரகாசம் தோன்றுவதைக் கண்டு மீராவுக்கு

அதிகப் பரிதாபம் ஏற்பட்டது. அவளுடைய கைகளைத் தோழமையுடன் அழுத்தி மீனாட்சி உத்வேகத்துடன் சொன்னாள்.

''அப்படி இருக்கும்னு நினைக்கிறியா? அவன் என்னை நிராகரிச்சுட்டான்னா நா செத்துருவேன் மீரா!''

மறுபடி மளுக்கென்று கண்களில் நீர் நிறைவதைக் கண்டு மீரா திடுக்கிட்டாள். இன்று தென்படும் மீனாட்சி அவளுக்குப் பரிச்சயமில்லாதவள் என்று தோன்றிற்று.



''உஷ். மீனாட்சி ஏன் இப்படி அழறே? உற்சாகமாக இரு. உண்மையான பிரியம் இருந்தா நிராகரிப்பானா? தன்னாலே நாளைக்கு 'ஸாரி'ன்னு வருவான் பாரு. அழறது பலவீனம் மீனாட்சி.''

மீனாட்சி நிமிர்ந்து உட்கார்ந்து, கண்ணைத் துடைத்து, மூக்கைச் சிந்தி, அவளைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

''பலவீனம்தான், ஒத்துக்கறேன். அவன் நழுவிப் போயிடுவானோ என்கிற நினைப்பே என்னைக் கொன்னுட்ட மாதிரி இருக்கு.''

'' 'மாதிரி' தானே இருக்கு?'' என்று மீரா அவள் தோளை சினேகிதமாகத் தட்டினாள். ''நீயா அழுது சாவுமணி அடிக்காதே'' என்றாள் ஆங்கிலத்தில். ''கொஞ்ச நாளைக்கு அதைப் பத்தி 'யோசனை பண்ணாமே இரு. பரீட்சைக்குப் படிக்க ஆரம்பி.''

''நீ சுலபமாச் சொல்லிட்டே'' என்றாள் மீனாட்சி துயரம் தொனிக்கும் குரலில். ''மனசை முழுசா நிறைஞ்சிருக்கிறதை ஒதுக்கிட்டு, ஒண்ணுமே நடக்காத மாதிரி இருக்கறது எத்தனை கஷ்டம்னு உனக்குத் தெரியுமா?'' அன்று தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லலாமா என்று யோசிக்கையில்,

மணியின் ஓசை பலமாக ஒலிக்க, ''கஷ்டமாத்தான் இருக்கும்'' என்றாள் மீரா அவசரமாக. ''கஷ்டப்படாம எதுவும் இந்த உலகத்திலே கிடைக்காதுன்னு நா நினைக்கறேன் மீனாட்சி. காதல் உள்பட. எழுந்திரு. பிரார்த்தனைக்கு வா. மனசிலே தெளிவு வரும்.''

தன் நாவிலிருந்து எப்படிப்பட்ட பொன் மொழிகள் வருகின்றன என்று நினைத்து அவளுக்குச் சிரிப்பு வந்தது.

''முகத்தைக் கழுவிண்டு வா'' என்று அவள் பிரார்த்தனைக் கூடத்தை நோக்கிச் செல்கையில், மீனாட்சி மிக மெதுவாக எழுந்திருந்தாள். அவளுடைய அழுகையும் பேச்சும் இன்று திகைப்பை ஏற்படுத்தின. அசட்டு மீனாட்சி இன்று அவளுக்கு ஆசானாகிப் போனது விசித்திரம். 'உனக்குப் புரியாது' என்கிறாள் ஒரே வீச்சில். எப்படிப்பட்ட மகத்தான அனுபவம்னு புரியாது. மீனாட்சி எதைக் குறிக்கிறாள் என்று தெரியவில்லை. காதல் என்பதன் வியாக்கியானம் விளங்கவில்லை. மகத்தான அனுபவங்கள் மகத்தான துக்கத்தை விளைவிக்கும் என்று அவள் நம்புவது போல் இருந்தது. ஆனால் அவளுடைய துக்கம் உண்மையானதாகத் தோன்றிற்று. பட்டாம்பூச்சியைப் போல எதிலும் புத்தி லயிக்காமல் வளைய வரும் மீனாட்சிக்குள் இப்படிப்பட்ட ஆழ்ந்த அபிமானங்கள் இருப்பது வியப்பை அளித்தது.

பிரார்த்தனை முடிந்து வகுப்புக்குத் திரும்பி அட்டெண்டென்ஸ் எடுக்கும் போதுதான் மீனாட்சி வகுப்பில் இல்லை

என்று தெரிந்தது.

''மீனாட்சி எங்கே?'' என்று ஆசிரியை இரண்டாம் முறை குரல் எழுப்பியதும்தான் ஞாபகம் வந்தது போல ''அவளுக்கு உடம்பு சரியில்லேன்னு படுத்திருக்கா'' என்று யாரோ பின்னாலிருந்து சொன்னார்கள்.

வகுப்புத் துவங்கி சிறிது நேரத்தில் மீரா மீனாட்சியை முழுவதும் மறந்து போனாள். மதிய உணவு நேரத்தின் போது நினைவு வந்தது. வகுப்பிற்கு அதுவரை மீனாட்சி திரும்பியிருக்கவில்லை. தோழிகள் யாருக்கும் தெரியவில்லை. 'க்ளாஸைக் கட் பண்ணணும்னு வேணும்னே படுத்திருப்பா' என்று முகம் சுளித்தார்கள். மீனாட்சியை நினைத்து, மீராவுக்குத் திடீரென்று பச்சாதாபம் ஏற்பட்டது. அவளுக்கு நெருக்கமானவர்கள் யாருமில்லை என்று தோன்றிற்று. அவளுடைய செலவில் சாப்பிட்டுக் கும்மாளமடிக்கப் பெண்களும் அவளை உபயோகித்தார்கள்; கேலி செய்தார்கள். அவளுடைய தனிமை உணர்வுக்கு மணியின் சினேகிதம் மருந்தாக இருந்திருக்கலாம். அதனாலேயே அவன் மீது ஆக்ரோஷமான பிடிமானம் ஏற்பட்டிருக்கலாம். அவளுடைய அசட்டுத்தன பெருமைகள் கூட ஒரு கவசமாக இருக்கும். 'எங்கேம்மா நேரம் இருக்கு?' என்று தோளைக் குலுக்கும் அவளுடைய அம்மாவுக்கோ, பிஸினஸ் டூரில் இருக்கும் அப்பாவுக்கோ அவளுடைய தனிமை பற்றித் தெரிய வராது, ஏதாவது குரூரமான அதிர்ச்சி ஏற்படும் வரை.

அன்றைய விருந்தைப் பற்றி மீனாட்சி தன்னிடம் எதுவுமே கேட்காதது வினோதமாக இருந்தது. தானும் அன்று அங்கு இருந்ததை மறக்கும் அளவுக்கு அவளுள் ஏதோ சஞ்சலம் ஏற்பட்டிருக்க வேண்டும். சங்கர் ஏதும் சொல்லியிருக்க மாட்டான். அல்லது பஸ் ஸ்டாப்பில் 'நான்தான் மீராவைக் கொண்டு விட்டேன்' என்று புளுகியிருப்பான். இப்படிப்பட்ட பையன்களுடன் சுத்துவதோடு ஒரு பெண் 'காதல்' வேறு கொள்ள வேண்டுமானால் 'காதல்' என்கிற வார்த்தைக்கு அர்த்தமில்லை. 'உன் பிரியமே எனக்குச் சுமையாப் போச்சு' என்பவனிடம் இவள் யாசிக்கிறாள். 'நிராகரித்தால் செத்துருவேன்'. காட், என்ன பிதற்றல்!

''யாரைத் தேடறே மீரா?'' என்ற மைதிலியின் குரலைக் கேட்டு மீரா திரும்பினாள்.

''மீனாட்சி எங்கே மேம்? உடம்பு சரியில்லேன்னு இங்கே படுத்திருக்கறதாச் சொன்னாங்களே?''

மைதிலியின் முகத்தில் இப்பவும் கடுமை படர்ந்தது, மீராவுக்கு வருத்தமாக இருந்தது.

''வீட்டுக்குப் போயிட்டா,'' என்றாள்,

'அனுப்பி விட்டோம்' என்கிற த்வனியில்.

''தனியாவா?'' என்றாள் மீரா கவலையுடன்.

''இல்லே. அவங்க அம்மாவுக்கு போன் பண்ணி வரச் சொன்னோம்.''

மைதிலியுடன் சமீப காலமாக நெருக்கமான பழக்கம் ஏற்பட்டிருந்தும் மீனாட்சியைப் பற்றி விளக்கமாகப் பேசத் தயக்கமாக இருந்தது.

''குட்!'' என்றாள் மெல்ல. ''இன்னிக்கு அவ ரொம்ப அப்ஸெட்டாகியிருந்தா.''

''வயசுக்குத் தகுந்த மாதிரி இருந்தா எந்த அப்செட்டும் ஏற்படாது. வயசுக்கு மீறின விஷயத்திலே புத்தி போச்சுன்னா கோளாறுதான்.''

மைதிலியின் முகம் கடுமையாகத் தெரிந்தாலும் குரலில் துயரம் தொனித்தது. ''அவங்க அம்மா, அப்பாவுக்கு இவளை கவனிக்க நேரமில்லே. என்ன செய்ய முடியும்?''

மேற்கொண்டு மீனாட்சியைப் பற்றிப் பேசுவதற்கு மீராவுக்குக் கூச்சமாக இருந்தது. அன்று சென்று வந்த பார்ட்டியைப் பற்றிக் கூட இவளிடம் பேச முடியாது என்று தோன்றிற்று. மீனாட்சியின் அம்மாவிடம் சொல்வதிலும் ஏதும் அர்த்தமிருக்காது என்ற திடீர்ச் சோர்வுடன் அவள் பேச்சை மாற்றும் எண்ணத்துடன், ''ஹரி இப்ப எப்படி இருக்கான் மேம்?'' என்றாள்.

''இப்பத் தேவலை மீரா, தாங்க்ஸ்'' என்றாள் மைதிலி. ''பழைய நிலைக்கு வந்துட்டான். பரீட்சைக்குத் தயார் செய்ய ஆரம்பிச்சுட்டியா நீ?''

''இன்னிலேர்ந்து ஆரம்பிப்பேன் மேம்'' என்றாள் மீரா மெல்லிய வியப்புடன்.

''குட். கவனமாப் படி. இப்பப் படிப்புதான் முக்கியம். பாக்கி எல்லாம் இரண்டாம் பட்சம். டான்ஸ், பாட்டு கிளாஸ் கூட கொஞ்ச நாளைக்கு நிறுத்தி வைக்கலாம்.''

''இனிமே டான்ஸ் கிளாஸ் இருக்காது. மேம் அமெரிக்கா போறாங்க'' என்று மீரா சிரித்தாள். ''பாட்டு வாத்தியார் காசி யாத்திரை போயிருக்கார்.''

''நல்லதாப் போச்சு'' என்றாள் மைதிலி லேசாக. பிறகு எதேச்சையாகச் சொல்வது போல், ''ஹரிக்கும் பரீட்சை வருது. அதனாலே, மீரா, பரீட்சையெல்லாம் முடியற வரைக்கும் நீ வீட்டுக்கு வராம இருக்கறது நல்லது.''

மீரா திகைப்புடன் மைதிலியைப் பார்த்தாள். மைதிலி சமாதானமாக அவளுடைய தோளில் கை வைத்து, ''ஒண்ணுமில்லே, பரீட்சை சமயத்திலே கவனம் சிதறக் கூடாதுன்னு சொன்னேன்'' என்றாள்.

(தொடரும்)

உயிர்ப் பலி

'நானே தற்கொலை செய்து கொண்டு இதோ எதிரே படுத்துக் கிடக்கிறேனா?'

நந்தினிக்கு உடம்பு சிலிர்த்தது.


அத்தனை நெருக்கம் ஜெயாவுக்கும் அவளுக்குமிடையே. சிநேகிதிகள். அடுத்தடுத்த வீடுகளில் வாழ்பவர்கள். வாழ்ந்தவர்கள்.

இப்போது ஜெயா வாழவில்லை. இருபத்தெட்டு வயதில் முடிந்து போய் விட்டாள். தானே தன்னை முடித்துக் கொண்டாள். மொட்டை மாடியிலிருந்து குதித்து. ஒற்றைக் கோடாய்க் கூந்தலுக்குள்ளிருந்து வலது கன்னம் வழியே இறங்கிய ரத்தக் கோடு. நேற்றிரவே நேர்ந்த கோடாதலால் இப்போது காலை ஆறு மணிக்குக் காய்ந்து போயிருந்தது. ஒரு பழுப்புத் தடயம். அவ்வளவுதான். இதுவா உயிரைக் குடித்தது? உறையிலிட்ட கத்திபோல் அப்படி ஒரு கொலைத்திறமா இதனுள்?

ஜெயாவின் முகம் அமைதியாக இருந்தது. இது நிச்சயம் மரணத்தின் அமைதிதான், ஜெயாவின் அமைதியல்ல. ஜெயாவுக்கு அமைதி கிடைக்கவில்லை. அதனால்தான் இந்த முடிவுக்கு வந்தாள்.

'ஜெயா, என் தோழி, இப்படி ஒரு எண்ணமிருப்பதாய் என்னிடம் கோடி காட்டியிருக்கக் கூடாதா? உனக்கும் சாவுக்குமிடையே குறுக்குச் சுவராய் நின்றிருப்பேனே!'

''கொஞ்ச காலமாவே ஜெயா ரொம்பச் சோர்ந்து போயிருந்தா. தனியாத் தனியாப் போய் நின்னு பெருமூச்சு விடுவா. ஆனா இப்படி யோசிச்சுண்டிருந்தாள்னு நினைக்கவே இல்லையே!'' என்று ஜெயாவின் தந்தை சுப்ரமணியமும் அவர் மனைவியும் அரற்றினார்கள். ஆனால் விடியற்காலையில்தான். நந்தினி ஒருத்தி மட்டும் பதறி ஓடி வந்த போது மட்டும்தான். ஜெயாவைப் பற்றிய எதுவும் நந்தினியிடமிருந்து ரகசியமில்லை. ''இனியும் எனக்கு வரன் பார்த்து அல்லல்படாதீர்கள். நான் போகிறேன்'' என்று பெற்றோருக்கு ஜெயா எழுதி வைத்திருந்த துண்டுக் காகிதத்தை அவர்களைத் தவிர நந்தினி மட்டும்தான் படித்தாள். பிறகு பெற்றோர் அக் காகிதத்தைக் கிழித்துப் போட்டு விட்டார்கள். துன்பம் மனசைப் பிளக்கும் போது கூட, எச்சரிக்கை உணர்வு போகவில்லை. விபத்தாக மொட்டை மாடியிலிருந்து விழுந்ததாய் இருக்க வேண்டும். தற்கொலை என்றால் வம்பு.



ஆர். சூடாமணி

போலீஸ், போஸ்ட்மார்ட்டம்... டாக்டர் சர்டிபிகேட் கிடைப்பது கூடக் கஷ்டமாகி விடும்.

எனவே இப்போது அறையில் வந்து கொண்டிருந்த கூட்டம் கேட்பதற்காக, ''மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவர் ரொம் பக் குட்டைன்னு எத்தனை நாளாச் சொல் லிண்டிருந்தோம்... உசத்திக் கட்டுன்னா பாவி வீட்டுக்காரர் காதிலேயே போட்டுக் கலே. வீடு மாத்திடணும்னு கூட யோசிச் சோம்... கொடியில் காஞ்ச துணி களை எடுக்கப் போன பொண்ணு இப்படி அநி யாயமாய் அந்தச் சுவத்தில் காலிடறிக் குடை சாய்ஞ்சு...'' என்று உரத்த குரலில் மாற்றி மாற்றிப் பெற்றோரின் இந்த விளக்கம்.

'இவள் என்னுடன் பி. ஏ. வரை ஒன்றாய்ப் படித்தாள். பிறகு பெற்றோர் கல்வியை நிறுத்த, சந்தோஷமாய் நின்று கொண்டாள். நான் எம்.காம் தேறி வங்கி வேலையில் அமர்ந்த பிறகும் நாங்கள் நெருங்கிய தோழிகள்தான். ஆனால் என்



னிடம் எப்போதும் பரிதாபம்தான் ஜெயா வுக்கு. ''நீ உத்தியோகம் பண்ணி என்னடி பிரயோஜனம் நந்து? கல்யாணத்தைப் பத்தி யோசிக்க மாட்டேங்கிறியே?'' என்ற அங்கலாய்ப்பில் பெற்றோர் அவளிடம் ஊன்றியிருந்த மரபு சார்ந்த மதிப்புக ளனைத்தும் பேசின. திரு மணம்தான் ஒரு பெண்ணின் வாழ்க்கைக் குறிக்கோள் என்றார்கள் அவர்கள். எனவே என் ஜெயா திருமணத்துக்காகவே காத்தி ருந்தாள்.

வரன்கள் வராமலில்லை. பெண் பார்க் கும் படலங்கள் தொடர்ந்து நடந்தன. ஆவல், அலங்காரம், மாப்பிள்ளைப் பையன் (வருங்காலக் கணவனோ?) எதிர் பார்ப்பு, ஏமாற்றம், கண்ணீர், சமாதானம், மீண்டும் ஆவல்... இந்த வட்டம்தான் திரும்பத் திரும்ப.

வரதட்சிணை கொட்டிக் கொடுக்க வசதியில்லை. எனவே திருமணமும் இல்லை.

ஒரு சமயம் சோர்வு மிகுந்து ஜெயா அவளிடம் கூறினாள் :

''நான் கல்யாணமாகிப் போகாட்டா என் தங்கைகளுக்கு லைன் எப்படி கிளிய ராகும் நந்து?''

''ஏண்டி, நீ படிச்சவதானா? லைனாம் கிளியராம். கல்யாணம் ஆற போது ஆகட் டும். உனக்காக மட்டும்னு தாலி கட்ட ஒரு வன் வரபோது அது ஆகும். அப்போத்தான் அது கல்யாணம். உனக்குத் தன்மானம் இல்லே? பணத்தைக் கொடுத்து ஒரு புரு ஷனைச் சம்பாதிக்கிறதை விடக் கன்னி யாவே இருப்பேன்னு சொல்லத் துப்பு இல்லே?'' என்று நந்தினி ஆத்திரமாய்க் கத்தினாள்.

இவ்விதச் சிந்தனை ஏதோ அன்னிய

மொழி போல் ஒலித்திருக்க வேண்டும். ஜெயா குழப்பத்துடன் வெறித்தாள். எவ்வளவு அழகிய முகம்! ஆனால் அந்த அழகு அங்குமிங்குமாய் உட்கார இடம் தேடி அலைவது போல் ஓர் அமைதியின்மை, அந்த முகத்தில் தெரிந்தது.

'கல்யாணக் கனவுகள் இரவில் கண்டு, கல்யாண நினைவுகளுடன் ஒவ்வொரு விடியலும் கண்விழித்தாய். இப்போது கண்மூடி விட்டாய் - நிரந்தரமாக. என்னால் நம்பவே முடியவில்லையேடி ஜெயா! ஒன்றாய்ப் படித்தோம், ஒன்றாய்ப் பழகினோம், பல இரவுகள் ஒருவர் வீட்டில் மற்றவர் தங்கி, ஒரே தலையணையில் தலை வைத்துத் தூங்கினோம். இப்போது நான் இன்னும் மூச்சு விட்டுக் கொண்டிருக்க, நீ மூச்சை முடித்துக் கொண்டாய். என்னால் நம்பத்தான் முடியவில்லை. என் கைக்குள் உன் கை சில்லிட்டுக் கொண்டிருக்கும் இந் நேரத்திலும் என்னால் நம்ப முடியவில்லை. உயிரை விடுமுன் உன் மனம் என்ன பாடுபட்டதோ? அது எத்தகைய நிராசை? எத்தகைய தனிமை? உயிரோடு இருப்பவர்களுக்கு அது புரியத்தான் முடியுமா? உன்னுள் இப்படி ஒரு சோகச் சுமையா என் தோழியே?'

பெற்றோரின் கதறல்களிடையே ஜெயாவின் உடல் உலகினின்று மறைந்தது.

இனி தம் இரண்டாவது மகள் ஸ்வாதிக்கு வரன் பார்க்க வேண்டியதுதான் என்று அடுத்த ஆண்டு சுப்ரமணியம் பேச ஆரம்பித்த போது, நந்தினி கவலையுடன் அவரிடம் சொன்னாள் :

''அதெல்லாம் சரிதான் மாமா, ஆனா கொஞ்சம் ஜாக்கிரதையாச் செய்யுங்கோ. ஸ்வாதியாவது நன்னாயிருக்க வேணுமில்லையா?''

''நானும் அதுக்குத்தான் சொல்றேன். மாசி பிறந்தா அவளுக்கு இருபத்து மூணு முடியறது. இந்தத் தடவை காலங்கடத்த மாட்டேம்மா நந்து! நல்ல வரன் வரப்போ, எவ்வளவு கேட்டாலும் கடனோ உடனோ வாங்கிக் கேட்டதைக் கொடுத்துக் கல்யாணத்தை நடத்திடுவேன்.''

''எதுக்கு மாமா? வரதட்சிணை கொடுத்துத்தான் கல்யாணம் பண்ணணுமா?''

''கல்யாணமே அப்போத்தானேம்மா நடக்கும்? இன்னித் தேதியில் அதை ஒரு விதியாவேதானே எல்லோரும் கடைப்

பிடிக்கறா? மீற முடியுமா?'''

''ஏன் முடியாது? இதுவும் என்ன, கொலை செய்யக் கூடாது, கொள்ளை அடிக்கக் கூடாது, பொய் சொல்லக் கூடாது என்கிறாப் போல், தர்ம அடிப்படையிலான விதியா மீற முடியாதுன்னு சொல்றதுக்கு? வரதட்சிணை வெறும் சமூகப் பழக்கம்தானே மாமா? சமூகப் பழக்கங்கள் சமூகத்துக்குச் சமூகம், அதிலேயே காலத்துக்குக் காலம், மாறுகிற விஷயம்தானே? மீறக் கூடாத புனிதம் அதில் என்ன இருக்கு?''

''இந்த மாதிரி விதண்டாவாதம் பண்றதனால்தான் முப்பது வயசை நெருங்கற போதும் உனக்குக் கல்யாணமாகலே.''

''இருந்தாலும் சௌக்யமா, சந்தோஷமாய்த்தான் இருக்கேன்!'' நந்தினி சிரித்தாள். பிறகு, ''இன்னும் உங்களுக்கு ரமா வேற இருக்கா. இந்த ரெண்டு பெண்களுக்காகவும் வரதட்சிணைக்குன்னு கடன் வாங்கி ஏழைமையில் முழுகிட்டா அப்புறம் உங்களுக்கும் மாமிக்கும் என்ன கதி மாமா?''

''பெண்களைப் பெத்தவள் அதைப் பத்தியெல்லாம் கவலைப்பட்டா முடியுமா? உன் வேலையப் பார்த்துண்டு போ.''

'இவரிடம் பேசிப் பயனில்லை. மனசை மூடிக் கொள்பவர்கள் கண்ணற்றவர்களை விட அதிக இருட்டில் வாழ்கிறார்கள்.

'ஜெயா...! அந்த இறுதி முகம் என் கண்ணுக்குள் நிற்கிறது. திருமண எதிர்பார்ப்பில் தோற்று, வரதட்சிணையால் வெல்லப்பட்டு, உயிரை மாய்த்துக் கொண்ட என் ஜெயா. அவ்வளவுதானா அவள்? பி.எஸ்ஸி.யில் கணக்கில் எப்போதும் முதல். மேலே எம். எஸ்ஸி. மாத்ஸ் போயிருக்கலாமோ? பல சமயம் மழையில் நனைந்து நான் ''குளிர்கிறது, வாடி சீக்கிரம்'' என்று ஓடி வந்த போது அவள் நின்று ''மேலே பாரேன் நந்து! மழைக்கும் வெயிலுக்கும் நடுவில் ஒரு ஏழுவர்ண அதிசயம்!'' என்று கைகொட்டிப் பூரித்திருக்கிறாள். அந்தச் சில்லிட்ட சடலத்தினுள் ஒரு கணித மேதை அல்லது ஒரு கலை வித்தகி சிறைப்பட்டிருந்தாளா? அதைக் கண்டுபிடிக்க வாய்ப்பளிக்காமல் கல்யாணம் கல்யாணம் என்று மூளைச் சலவை செய்து சாவுக்கு விரட்டி விட்டார்களே!

'ஜெயா! உன் த ங் கை யை யாவது காப்பாற்றுவேனா கொலைகாரர்களிடமிருந்து?'

''நந்துக்கா, நீங்களும் கூட இருக்

கணும். எனக்கு நர்வஸ்ஸாயிருக்கு.''

''ஏன், என்ன விஷயம் ஸ்வாதி?''

''நாளை சாயங்காலம் என்னைப் பெண் பார்க்க ஒரு பார்ட்டி வருது.''

ஸ்வாதி தயக்கத்துடன் அவள் முகத்தைப் பார்த்தாள். நான்கு நாட்கள் முன்பு, ''நீயும் பி.ஏ. படிச்சவள்தான். ஏதானும் செக்ரடேரியல் கோர்ஸ் பண்ணு. வேலைக்கு முயற்சி செய். நானும் விசாரிக்கறேன், என்றெல்லாம் அறிவுறுத்தியிருந்த நந்தினி அக்கா இந்தக் கல்யாணப் பேச்சுக்கு என்ன சொல்வாளோ?''

நந்தினி மலர்ச்சியுடன் பேசினாள்; ''ரொம்ப நல்லது ஸ்வாதி. நான் கட்டாயம் உன் கூட இருக்கேன். பையனை உனக்குப் பிடிச்சிருந்து, வரதட்சிணை அது இதுன்னு பணம் பிடுங்காத குடும்பமாயும் இருந்தா சந்தோஷமாய்க் கல்யாணம் பண்ணிக்கோ. என் ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் உண்டு.''

''வரதட்சிணை கேட்டால்?''

நந்தினி அவளை உன்னிப்பாய் நோக்கினாள். பதில் சொல்லவில்லை. ஸ்வாதியின் கண்கள் தாழ்ந்தன.

''வரதட்சிணை தரல்லேன்னா... கல்யாணம் எப்படிக்கா ஆகும்?''

''இப்படி எல்லாரும் கேக்கறதால்தான் வரதட்சிணைப் பழக்கம் ஒழிய மாட்டேங்கறது.''

''கல்யாணம் முக்கியமில்லேன்னு சொல்றேளா?''

''முக்கியம்தாம்பா. ஆனா எத்தனை முக்கியமாய் இருந்தாலும் அது வாழ்க்கையின் ஒரு பகுதி மட்டும்தானே? முழு வாழ்க்கை இல்லையே!''

''பெண்ணுன்னா கல்யாணம் பண்ணித்தான் ஆகணும்னு எங்கப்பா அம்மா சொல்றா.''

''நிறையப் பேரோட அப்பா அம்மா அப்படித்தான் சொல்றா. ஆனா நமக்கு சுயபுத்தி இருக்கில்லையா? யோசிச்சுப் பாரு. பெண்ணுன்னாலே கல்யாணம், கல்யாணம்னாலே வரதட்சிணை அப்படின்னு ஒரு சங்கிலியை விடாப்பிடியாய்ப் பிடிச்சுண்டிருக்கறதால்தானே எத்தனையோ பெண்களின் வாழ்க்கை பாழாப் போறது? பெண் சிசுக் கொலை, பெண் கருக் கொலை என்றெல்லாம் நடக்கறது? நாம் பெண்களாயிருந்துண்டு இதை எதிர்க்காம இருக்கலாமா?''

நந்தினி ஜன்னல் வழியே வெட்ட வெளியை வெறித்தாள்.

''நம்ம ஜெயா கூட அந்த மூடநம்பிக்கைக்குத்தானே தன்னைப் பலிகொடுத்துண்டா? எந்த ஆம்பிளை இப்படிப்பட்ட ஓர் உயிர்ப் பலிக்குத் தகுதியானவன்?''

குரல் உடைந்து மேஜை மேல் முகம் கவிழ்த்துக் கொண்டவளைப் பார்த்துக் கொண்டே ஸ்வாதி வெகு நேரம் நின்றிருந்தாள்.

அத்தனை பேர் முன்னால் எழுந்து நின்று ''எனக்கு இந்தச் சம்பந்தம் பிடிக்கலை'' என்று ஸ்வாதி தெளிவாக அறிவித்த போது, எரிமலைகள் மௌனமாய் வெடித்தன.

அதிர்ச்சி யுகம் கடந்தது. மீண்டும் பேச்சு வரப் பெற்ற போது, சுப்ரமணியம் கர்ஜித்தார்; ''பிடிக்கும் பிடிக்காதுன்னு சொல்ற அளவுக்குப் பெரிய மனுஷியாய்ட்டியாடி நீ?''

''அவா கொடுத்த நீள லிஸ்டை நீங்களும்தானேப்பா பார்த்தேள்? ஒழுங்கான கல்யாணம்னா பண்ணிக்கறேன். வியாபாரக் கல்யாணம் எனக்கு வேணாம்.''

வந்திருந்த அத்தனை பேரும் முகம் சிவக்க எழுந்தார்கள். ''ரொம்ப நன்னாயிருக்கு பெண்ணை வளர்த்திருக்கற லட்சணம்!'' போகத் தொடங்கினார்கள்.

''ஸார் ஸார், போகாதீங்கோ, அவ குழந்தை, ஏதோ தெரியாத்தனமா... அம்மா, கொஞ்சம் நில்லுங்கோ...''

போய் விட்டார்கள்.

சுப்ரமணியம் கனலாக நந்தினியின் பக்கம் திரும்பினார். ''உன் போதனையா?''

''இல்லே மாமா. ஸ்வாதிக்குள்ளேர்ந்து ஸ்வாதிதான் பேசறா.''

''முதல் பையனுக்கே இவள்... ஜெயாவை எத்தனை பேர் வந்து பார்த்தா! ஒரு தடவையாவது இப்படிப் பேசியிருப்பாளா? வரதட்சிணைப் பழக்கம் தப்புன்னு யாருக்குத் தெரியாது? ஆனாலும் குழந்தை தன்னையே அழிச்சுண்டாளே தவிர...''

''அழிய வேண்டியது அந்தப் பழக்கம் மாமா! பெண்ணில்லை.''

''இப்போ வாய மூடிண்டு எழுந்து போறயா இல்லையா?''

''ஏன், நந்து சொல்றதில் என்ன தப்பு?''

சுப்ரமணியம் அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தார். பேசியது அவர் மனைவி. இது நாள் வரை அவரை எதிர்த்து ஒரு வார்த்தை பேசி அறியாதவள்.

அவர் மலைத்து மௌனமானார்.

நந்தினி அமைதி கொண்டாள். இரு தலைமுறைப் பெண்கள் தலை உயர்த்தி விட்டார்கள்.

'ஜெயா, என் தோழி, உன் மரணம் வீண் போகவில்லை.'

விடியலைப் படையுங்கள் தோழர்களே

“தனியொரு மனிதருக்கு ணவில்லை - எனில்
இச் செகத்தினை அழித்திடுவோம்”
என்ற பாரதியின் பாட்டு வரிகளைக்
கத்தாத கட்சிக் கொடிகளே இல்லை!
ஆனால் எந்தக் கட்சியாவது - அந்தப்
பாட்டு வரிகளை வாழ்க்கை நெறியாக்க
கொள்கை தீபம் ஏற்றி இருக்கிறதா?


காலம் மாறிக் கொண்டே இருக்கின்றது
கட்சிகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன
ஆனால், அந்தக் கனவு வரிகளுக்குச்
செயல் வடிவம் கொடுக்க யார் சிந்தித்தார்?
அந்தக் கட்சிகள் ஏழ்மையில் இருப்போரின்
ஏக்கங்களைத் தங்களுக்குச்
சாதகமாக்கிக் கொண்டு
முன்னேறிக் கொண்டிருக்கின்றன!

இந்த இருள் சூழ்ந்த உலகில் - தனியொரு
மெழுகுவர்த்தி சாதிக்கப் போவது ஒன்றுமில்லை!
மனித மனங்களிலெல்லாம் ‘சிந்தனைத் தீ’
பற்றி எரிய வேண்டும்!
அந்தக் கூட்டுச் சுடரில்தான்
ஒரு கோடி உண்மைகள் புலனாகும்!

வெட்ட வெளிச்சத்தில் வேடிக்கை பார்க்கிறோம்
இருளில் - கூரையின்கீழ்
ஒரு கோடியில் சுருங்கிக் கிடக்கிறோம்!
இந்தக் கண்களுக்கு அதுவா வேலை?
வெட்ட வெளிச்சத்தில்
வேதனைப் படுவோரை
வெட்கிக் காண வேண்டும்!
இருளானவுடன்
கூரையின் அடியில்
ஒரு கோடி எண்ணங்கள் உதயமாக வேண்டும்!

அந்த எண்ணங்களின் உதயத்தில் - ஒரு
சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும்!

- இரா. ஸ்ரீகிருஷ்ணன்



காதலெனும் வானவில்

19

"படிப்பிலே கவனம் செலுத்து" என்று கடந்த ஒன்றரை மாதங்களாக அம்மாவும் அப்பாவும் மைதிலியும் மறைமுகமாகச் சொல்லி வருகிறார்கள். அதை அவர்கள் சொல்ல வேண்டியதன் அவசியமென்ன என்று சில சமயங்களில் மீராவுக்குக் கோபம் வரும். ஹரியுடன் தனக்கு இருக்கும் தோழமையைக் கண்டு இவர்கள் எல்லாருமே பயப்படுவதுதான் உண்மைக் காரணம் என்று பலமான சந்தேகம் ஏற்படும். மைதிலியும் ஏன் பயப்படுகிறாள்? சினேகிதர்களே இல்லாத தன் மகனுக்கு ஒரு சினேகிதி கிடைத்திருப்பது சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டாமோ?

மைதிலி அன்று சூசகமாகச் சொன்ன பிறகு ஹரியைக் காணப் போகாதது மட்டுமில்லை, அவனுடன் போனில் கூடப் பேசவில்லை. எவ்வளவோ முறை, பேச வேண்டும் என்று நினைத்து, மைதிலியின் வார்த்தைகள் ஞாபகம் வந்து, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறாள். அவனிடமும் தன்னிடம் சொன்ன அதே வார்த்தைகளை மைதிலி சொல்லியிருக்க வேண்டும். அவன் ஃபோனே செய்யவில்லை. பரீட்சைக்கான தயாரிப்பில் ஆழ்ந்திருந்தது மட்டும் அதற்குக் காரணமாக இருக்க முடியாது. அவனுக்குச் சூட்சுமம் அதிகம். அதனாலேயே அவனுக்குப் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று அவளுக்கு விசனம் ஏற்பட்டது. ஆனால் மைதிலியின் சொல்லுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் அவளைக் கட்டிப் போட்டது. ஹரிக்கும் இது இறுதி யாண்டு என்பதால் மைதிலி செய்த எச்ச ரிக்கையில் உண்மையில் ஏதும் விபரீத அர்த்தம் இல்லாமலும் இருக்கலாம் என்று அவள் அடிக்கடி தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள்.

காலையில் கண் விழித்ததும் நாளையிலிருந்து பரீட்சை ஆரம்பமாகும் என்ற எண்ணம் உற்சாகத்தைக் கொடுத்தது. இனிமேல் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது எதுவுமே இல்லை என்கிற தெம்பு ஏற்பட்டு ஒரு வாரத்துக்கு மேல் ஆகியிருந்தது. "சண்டைக்குத் தயாரா இருக்கற ஸோல்ஜர் மாதிரி இருக்கேன்" என்று நேற்று அம்மாவிடம் சொன்னபோது அம்மா திருப்தியுடன் சிரித்தாள். "அதுக்குத் 'தினவு'ன்னு ஒரு வார்த்தை தமிழ்லே இருக்கு" என்றாள். 'அப்படீன்னா' என்று கேட்கும் மனநிலையில் இல்லாமல் தனது டயரியில் அந்த வார்த்தையை மீரா எழுதிக் கொண்டாள். பிறகு ஹரியிடம் விளக்கம் கேட்க வேண்டும் என்று.

கட்டிலை விட்டு இறங்கும் போது இரண்டு தோள்களும் வலித்தன. 'தினவு' என்பது தோளில் இருக்கும் என்று அம்மா சொன்னதாக நினைவு. தனக்குள் சிரித்தபடி முண்டா தட்டும் போர் வீரனைப் போல் இரண்டு தோள்பட்டைகளையும் அவள் மாறி மாறித் தட்டிக் கொண்டபோது சுரீரென்று நெற்றிப்பொட்டு வலித்தது. எச்சிலை விழுங்க முடியாமல் தொண்டையில் ஒரு பந்து அமர்ந்திருந்தது. அவள் பதைப்புடன் நெற்றியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டாள். லேசாகச் சுட்டது. "ஓ, நோ," என்ற பிரலாபத்துடன் அவசரமாகத் தெர்மாமீட்டரைத் தேடி நாக்குக்கடியில் வைத்துக் கண்ணை மூடிக் கொண்டாள். 'காட்! ஜுரம் கிரம் வந்து விடக் கூடாது.'

வந்திருந்தது. நூறு டிகிரி என்று தெர்மாமீட்டர் காட்டிற்று. அவளுடைய நாபியிலிருந்து துக்கம் பீறிட்டுக் கொண்டு அழுகையாய் வெடித்தது. தலையணையைக் குத்தி 'இட் இஸ் நாட் ஃபேர்!' என்றாள் பலக்க. அறைக்குள் எட்டிப் பார்த்த மஹேஷ், "அம்மா, மீரா அழறா!" என்று கத்தினான்.

மறு விநாடி அம்மா எதிரில் நின்றாள். "என்ன மீரா, எதுக்கு, எதுக்கு அழறே?" என்றதற்கு மீரா அவளுடைய இடையைப் பிடித்துக் கொண்டு அழுதாள். "எனக்கு அதிர்ஷ்டமேயில்லே. பரீட்சை எப்படி



செய்வேன்னு தெரியல்லே, ஜுரம் வந்திருக்கு. நூறு டிகிரி.''

அம்மா நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். ''அடக் கடவுளே'' என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள், மீராவின் முதுகை வருடி, ''கவலைப்படாதே'' என்றாள் இதமாக. ''நூறுதானே, மாத்திரை தரேன் சரியாப் போயிடும். இன்னிக்கு முழுக்க ரெஸ்ட் எடுத்துக்கோ.''

''சரியாயிடுமா?'' என்றாள் மீரா நம்பிக்கையில்லாமல், ''இப்பன்னு ஏம்மா ஜுரம் வரணும்?''

''குழந்தை மாதிரி பேசாதே'' என்று சொன்னாலும் அம்மாவின் முகத்தில் கவலை தெரிந்தது. ''நம்ம தைரியத்தைச் சோதிக்கிற மாதிரி இப்படியெல்லாம் வரும்தான்'' என்று விளக்கினாள். ''கலங்கிடக் கூடாது, நான் பிரார்த்தனை பண்றேன்.''

''வெறும் பிரார்த்தனையை நம்பிண்டு நான் இருக்க முடியாது. அடுத்த தெருவிலே ஒரு நர்சிங்ஹோம் இருக்கு. டாக்டர்கிட்ட காண்பிச்சு மருந்து வாங்கிக்கிறேன்.'' ''சரி காண்பி'' என்றாள் அம்மா. ''எப்படிப் போவே? அப்பா கார் எடுத்துண்டு போயிட்டாரே?''

''நா சைக்கிள்லே போறேன். அடுத்த தெருதானே.''

வாஸந்தி



''எங்க ஏரியாவிலே பயங்கர துணிகரத் திருட்டு அடிக்கடி நடக்குது சார்.''

''டாக்டரை இங்கேயே வரச் சொல்றேனே.''

''வேண்டாம், உடம்பு ஒண்ணும் அத்தனை மோசமில்லே. இப்ப அதிக ஜாக்கிரதையா இருக்கணும்னுதான் போறேன்.''

அவள் பல் விளக்கித் தயாராகிக் கீழே வந்ததும் அம்மா சூடான காப்பியுடன் தலைவலி மாத்திரை ஒன்றையும் கொடுத்தாள். பிறகு பூஜை அறையிலிருந்து விபூதி சம்புடத்தை எடுத்து வந்து நெற்றியில் இட்டு, ''சுவாமி! நீயே துணை'' என்றாள்.

''பரீட்சைக்குப் போகும் போதுதானே இதைச் செய்வே?'' என்றான் மஹேஷ்.

மீரா அம்மாவைப் பார்த்துப் புன்னகைத்து, ''ஜுரம் என்கிறது கூட ஒரு பரீட்சை'' என்று கூறி விட்டு சைக்கிளைக் கிளப்பியபோது, ''மெள்ளப் போ'' என்றாள் அம்மா கவலையுடன்.

தெரு முனையைக் கடக்கும்போது நெற்றியில் இருந்த விபூதி மூக்கில் உதிர்ந்தது. அம்மாவின் நம்பிக்கை அவளையும் தொற்றிக் கொண்டது போலிருந்தது. 'சுவாமி நீயே துணை. நான் பரீட்சையை நல்லாச் செய்யணுங்கறதிலே உனக்கு அக்கறையில்லையா?'

சுவாமிக்கு இதையெல்லாம் ஞாபகப் படுத்த வேண்டி வருவது விசித்திரம் என்று தோன்றியது. ''உன்னைப் படைச்சப்புறம் கடவுளுடைய ட்யூட்டி முடிஞ்சது'' என்றான் ஹரி ஒரு நாள். ''நீ குருடோ முடமோ, கெட்டிக்காரியோ, மக்கோ, நீயா சமாளிச்சுக்கணும்.''

அப்படித்தான் அவன் சமாளிக்கிறான் என்று அவள் நினைத்துக் கொண்டாள். வெறும் பிரார்த்தனையினால் கண் வந்து விடாது என்று அவனுக்குத் தெரியும். ''என்னாலே முடியும் நீ அதை நம்பணும்.''

நர்சிங்ஹோமில் அவளுக்கு முன்னால் நான்கு பேர் வந்து காத்திருந்தார்கள். மூன்று டாக்டர்கள் நடத்தும் நர்சிங்ஹோம் என்பது மூன்று டாக்டர்களின் பெயர்ப் பலகை கொண்ட தனித் தனி அறைகளிலிருந்து தெரிந்தது. அவள் தன்னுடைய முறைக்காகக் காத்திருந்தபோது, ஓர் அறையின் கதவைத் திறந்து கொண்டு ஒரு நர்ஸ் வெளிப்பட்டாள். திறந்த இடைவெளியில அறைக்குள் மீனாட்சி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கதவுக்கு முதுகைக் காட்டியபடி அவளுடைய அம்மா அமர்ந்திருந்தாள். கண் இமைக்கும் நேரத்திலும் அவளுடைய நேர்த்தியான அலங்காரம் கண்ணில் பட்டது.

அன்று உடம்பு சரியில்லை என்று வீட்டிற்குக் கிளம்பிப் போன மீனாட்சி பிறகு பள்ளிக்கு வரவேயில்லை. பள்ளியிலிருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டதாகப் பராபரியாகக் காதில் விழுந்தது. மைதிலி அதைப் பற்றிப் பேச மறுத்தாள். பரீட்சை எழுதுவாளா என்றும் தெரியாது. மீனாட்சியின் வீட்டிற்கு இரண்டு முறை டெலிபோன் செய்த போது அவள் படுத்திருப்பதாய் வேலைக்காரி சொன்னாள். மீனாட்சிக்கு நிஜமாகவே ஏதோ உடல் கோளாறாக இருக்க வேண்டும் என்று பச்சாத்தாபம் ஏற்பட்டது. ''செத்துரலாம் போல இருக்கு'' என்று அன்று அவள் அழுதது ஞாபகம் வந்தது. மணியைப் பற்றி மிஸஸ் செல்லப்பனுக்குத் தெரிய வந்திருக்குமா?

அவளுடைய பெயர் கூப்பிடப்பட்டதும் மீரா எழுந்தாள். டாக்டர் தொண்டையைப் பரிசோதித்துவிட்டு மருந்தெழுதிக் கொடுத்தார். ''இன்னிச் சாயந்திரத்துக்குள்ளே சரியாயிடுவே டோன்ட் வொர்ரி'' என்று உற்சாகப்படுத்தினார். அவள் மருந்தை வாங்கிக் கொண்டு வெளியில் வந்த போது ஒரு ஓரமாக நாற்காலியில் மிஸஸ் செல்லப்பன் அமர்ந்திருந்தாள். முகத்தில் கலவரம் பதிந்திருந்தது. மீரா அவள் அருகில் சென்று மெல்ல ''ஹலோ ஆன்ட்டி!'' என்றாள். தூக்கி வாரிப் போட்டவளாய் மிஸஸ் செல்லப்பன் சுழன்று திரும்பியது வினோதமாக இருந்தது.

''ஓ நீயா?'' என்று அரை குறையாகச் சிரித்தாள். ''என்ன, உடம்பு சரியில்லையா?'' என்றாள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு.

''ஆமாம் லேசா ஜுரம், நாளைக்குப் பரீட்சைங்கறதனாலே பயந்துகிட்டு டாக்டர்டே ஓடி வந்தேன்,'' என்றாள் மீரா மெல்லிய புன்னகையுடன். ''மீனாட்சிக்கு



"மிகக் குறுகிய காலத்தில் நான் மிகப் பெரிய பதவி உயர்வினைப் பெற்றதற்கு அதிர்ஷ்டம் தான் காரணம் என்று மற்றவர்கள் சொல் கிறார்கள். ஆனால்... ஒரு மனிதனின் முன்னேற்றத்திற்கு அதிர்ஷ்டம் மட்டுமே காரணமாக அமைந்துவிடுவதில்லை என்பதே என் கருத்து"

சில வருடங்களுக்கு முன் நான் ஒரு பிரபல வர்த்தக நிறுவனத்தில் சாதாரண குமாஸ்தாவாகச் சேர்ந்தேன்.

நான் பணிபுரியும் நிறுவனத்தில் நல்ல திறமையுடையவர்களுக்குத் தகுந்த வேலைவாய்ப்புகள் இருப்பதை அறிந்து, உயர்பதவியினைப் பெற ஆர்வமுடன் செயலாற்றினேன்.

ஆனால்... உயர்பதவிகளைப் பெற ஆங்கிலத்தில் போதிய புலமை பெற்றிருப்பது அவசியம் என்பதை நாளடைவில் புரிந்துகொண்டேன்.

"நமக்குத்தான் ஆங்கிலத்தில் தொடர்ந்து நாலு வார்த்தை கூடப் பேச வராதே" என்று எனது முயற்சியை நான் கைவிட்டுவிடவில்லை.

ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டு, பல புத்தகங்களை வாங்கிப் படித்தேன். ஆனால் இம் மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாமல் கலங்கிக் கொண்டிருந்தேன்.

திசை தெரியாமல் நடுக்கடலில் தத் தளிக்கும் படகோட்டிக்கு கலங்கரை விளக்கம் தென்பட்டதைப் போல, விவேகானந்தா கல்வி நிலையத்தின் ஆங்கிலப் பயிற்சி பற்றிய விளம்பரம் என் கண்ணில் பட்டது.

முயற்சி செய்பவர்களுக்குத் தெய்வம் வலிய வந்து உதவும் என்ற குறளிற்கேற்ப, ஆங்கில மொழியில் புலமை பெற வேண்டும் என்ற எனது முயற்சி வெற்றி பெற விவேகானந்தா கல்வி நிலையத்தின் தபால் முறைப் பயிற்சி பெரிதும் உதவியது.

இப் பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது எந்தச் சூழ்நிலையிலும் தயக்கமின்றி ஆங்கிலத்தில் மிகச் சரள மாகப் பேச முடிகிறது. இதனால் உயர்பதவி என்னைத் தேடி வந்துள்ளது.

எனவே எனது வெற்றியின் ரகசியம் விவேகானந்தா கல்வி நிலையத்தின் ஆங்கிலப் பயிற்சி தான் என்பதில் மிகையேதும் இல்லை அல்லவா?

கீழ்க்கண்ட முகவரியில் நீங்களும் தொடர்பு கொண்டு பயன் பெறலாமே!

விவேகானந்தா கல்வி நிலையம்,
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு."

உடம்பு சரியில்லையா ஆன்டி?''

''ஆமாம், கொஞ்ச நாளா உடம்பு சரியில்லே,'' என்றாள் மிஸஸ் செல்லப்பன் தன்னுடைய சாயம் பூசின நகங்களைப் பார்த்தபடி. ''இப்பப் பாத்தா வயத்திலே கட்டிங்கறாங்க. அவசரமா ஆபரேஷன் பண்ணணுமாம். உள்ளே அழச்சிட்டுப் போயிருக்காங்க.''

''ஐய்யய்யோ!'' என்றாள் மீரா கண்களை அகல விரித்து. ''முந்தியே கண்டு பிடிக்கல்லியா?''

ஒரு விநாடி அவளை நிமிர்ந்து பார்த்து மிஸஸ் செல்லப்பன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''கண்டு பிடிக்கல்லே, என்ன செய்யறது?'' என்றாள் ஆற்றாமையுடன்.

மீரா அவளுடைய தோளைப் பற்றி, ''நல்லா ஆயிடுவா ஆன்டி, கவலைப் படாதீங்க,'' என்றாள். ''பரீட்சை முடிஞ்சதும் நா அவளை வந்து பார்க்கறேன்.''

''தாங்க்ஸ்மா'' என்று மிஸஸ் செல்லப்பன் மீண்டும் தலை நிமிர்ந்து அவள் கையைப் பற்றிய போது கண்கள் லேசாகக் கலங்கியிருந்தன.

வீட்டிற்குச் சென்று மீனாட்சியைப் பற்றி அம்மாவிடம் சொன்னதும், ''வயத்திலே கட்டியா, என்ன கூத்து?'' என்று அம்மா கண்களை அகல விரித்தாள்.

''இப்ப அவளைப் பத்தியே நினைச்சிண்டிருக்காதே. மருந்தைச் சாப்பிட்டுக் கொஞ்சம் தூங்கு. நாளைக்குப் பரீட்சை எழுதியாகணும்.''

மீனாட்சியை அம்மா ரொம்பவும் அவசரமாக ஒதுக்கிவிட்டது போல் இருந்தது. ஆனால் பரீட்சையின் ஞாபகப்படுத்தலில் மீராவுக்கே மீனாட்சியைப் பற்றி மறந்து போயிற்று. டாக்டர் சொன்னதுபோல் அன்று மாலை காய்ச்சல் இறங்கிவிட்டது. பலவீனம் ஏற்பட்டுவிடும் என்கிற முன் ஜாக்கிரதையுடன் அம்மா ஜூஸும் ஹார்லிக்ஸுமாக உபசரித்ததில் உடம்பு மீண்டும் பழைய நிலைக்குச் சீக்கிரமாகத் திரும்பி விட்டது. பரீட்சைகளை உற்சாகமாகச் செய்ய முடிந்தது. அவளுடைய சௌகர்யத்துக்காக அப்பா தினமும் அவளைப் பரீட்சை மையத்தில் இறக்கிவிட்டுப் பிறகு அழைத்துச் சென்றார்.

இன்று கடைசி பரீட்சை. மாலையில் அழைத்துச் செல்ல வரவேண்டியதில்லை என்று அவள் காலையில் அப்பாவிடம் சொல்லியிருந்தாள். பரீட்சைக் கூடத்தை விட்டு வெளியே வரும்போது கைகளை உயரத் தூக்கி சந்தோஷ ஆரவாரம் செய்ய வேண்டும் போல் இருந்தது. வகுப்புத் தோழிகளின் முகங்கள் அத்தனை சுரத்தாகத் தெரியாததால் தனக்குள் ஒரு பாட்டை முணு முணுத்தபடி நடந்தாள். சட்டென்று ஹரியின் நினைவு வந்தது. அவன் ஒருத்தனே தன்னுடைய மன நிலையைப் புரிந்து கொள்வான் என்று தோன்றிற்று. எத்தனை நாட்களாகி விட்டன அவனைப் பார்த்து என்று மெல்லிய ஏக்கம் அவளை ஆட்கொண்டது. உடனடியாக அவனைப் பார்க்க வேண்டும் என்று தோன்றிய ஆவலை அவள் அடக்கிக் கொண்டாள். அவனுக்குப் பரீட்சை முடிந்து விட்டதா என்று விசாரிக்காமல் போகக்கூடாது என்று தயக்கம் ஏற்பட்டது.

''ஏ, மீரா!'' என்ற குரல் கேட்டு அவள் திரும்பினாள். நந்தினி மூச்சிறைக்க ஓடி வந்து அவளுடன் சேர்ந்து கொண்டாள்.


''பரீட்சையெல்லாம் எப்படிப் பண்ணே?'' என்றாள் மீரா சிநேகிதமாக.

''எல்லாம் முடிஞ்சு போச்சு விடு, இனிமே அதைப் பத்திப் பேசி மூடைக் கெடுத்துக்கக் கூடாது'', என்று நந்தினி சிரித்தாள். ''வீட்டுக்குப் போய் இன்னிக்கு நல்ல தூக்கம் போடணும். நாளையிலேந்து தினம் ஒரு சினிமா, நீ என்ன செய்யப் போறே?''

''மொதல்லே மீனாட்சியைப் போய்ப் பார்க்கப் போறேன், பாவம் அவளுக்கு ஏதோ ஆப்ரேஷன் ஆச்சாம்.''

''ஆப்ரேஷன் என்ன, கர்ப்பத்தைக் கலைச்சாங்க!'' என்றாள் நந்தினி பரிகாசம் தொனிக்கும் குரலில்.

(தொடரும்)



''மதியனுக்கு ஆனைக் கட்டிக்கிட்டு சோறுபோட்டு வர்றபோது... ஏதுகுன்னு கட்டிக்கிட்டு வாங்லையா....''

''ஏன், என்ன ஆச்சு?''

''மற்ற எல்லாரும் விலைவாசி உயர்வு ஒழிக...ன்னு கோஷம் போடும்போது இவர் மட்டும், 'கர்நாடகா ஒழிக... பங்காரப்பா.... ஒழிக...'ன்னு சத்தமாசோ....''

- ராஜி ராதா



செண்பகத் தோட்டம்

முழுக்க முழுக்க இயக்குனரின் படம். வழக்கமான ஒரு கிராமியக் கதைக்கு அழுத்தமான அணுகுமுறையின் மூலம் விறுவிறுப்புச் சேர்த்திருப்பவர் இயக்குனர் மனோபாலா.

அவருக்குத் துணை அறிமுக இசையமைப்பாளர் சிற்பி. ஏழு பாடல்கள். சுவைக்குக் குறைவில்லை. அவருக்கு ஒரு சின்ன அப்ளாஸ்.

கதையின் மையம் காந்திமதி. அவர் வாழ்க்கையின் திருப்புமுனையாக நடந்து விட்ட ஒரு நிகழ்ச்சியின் விளைவாக அளிக்கப்பட்ட தண்டனையைச் சிறையிலும் மனநோய் விடுதியிலும் கழித்து விட்டுத் திரும்பவும் கிராமத்துக்கு வரும் அவர், உண்மையை நிரூபிக்கவும் முடியாமல், அதை உள்ளுக்குள்ளேயே விழுங்கி வைத்திருக்கவும் இயலாமல் தவித்து, தன்னைத் தவறாகக் கணித்து விட்ட மகனே ஆவேசத் துடன் தாக்க வரும் போது அரிவாளை அவரே அவன் முன் போட்டுத் தன்னைக் கொன்று விடும்படி அழைப்பு விடுப்பது உச்சம்.

மகன் செல்வா. ஒரு கட்டம் வரையில் கல்மிஷம் இல்லாத சிரிப்பு, விளையாட்டு, வேடிக்கை, காதல், ஊடல், தாயைப் பற்றிய அந்தப் பயங்கர ரகசியத்தைத் தெரிந்து கொண்ட பின் அவை அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் அவரை ஆக்ரமித்துக் கொள்ளும் ஆக்ரோஷம்... அண்ணனுக்குத் தம்பி சோடையில்லை.

வில்லன் பண்ணையார் கே. பிரபாகரன். 'ஸ்டாண்டர்டைஸ்' செய்துவிட்ட வெல்வெட் சிரிப்பு - உள்ளுக்குள் தேக்கி வைத்துள்ள நாக விஷம். பழகப் பழகப் பாலும் புளிக்கும். மாறுதல் தேவை.

வித்தியாச செந்தில். வழக்கத்திலிருந்து அவ்வாறு மாறுபட்டிருப்பதே தனி சுவை. பின்னணியில் அழகு சேர்ப்பது குற்றால அருவி மட்டுமல்ல. பாலகுமாரனின் வசனமும்தான்.

- சி. ஆர். கே.

20

மீரா அதிர்ச்சியுடன், ''சேச்சே, இருக்காது'' என்றாள். ''அவங்க அம்மாவை நான் நர்சிங் ஹோமிலே பார்த்தேன். வயிற்றிலே கட்டின்னாங்க!''

''சரியான மக்கு நீ!'' என்று நந்தினி சிரித்தாள். ''உங்கிட்ட பின்னே வேற எப்படிச் சொல்வாங்க?''

மீரா பதில் சொல்லாமல் மௌனமாக நடந்தாள். நந்தினி இந்த விஷயத்தை ரொம்பவும் சந்தோஷமாகச் சொல்வதுபோல் இருந்தது.

''மீனாட்சியை நினைச்சு எனக்குப் பாவமா இருக்கு நந்தினி!''

''எதுக்குப் பாவமா இருக்கணும்?'' என்றாள் நந்தினி ஆவேசத்துடன். ''அவளா கேட்டுக்கிட்டு வாங்கிக்கிட்டது தானே? அவளுடைய நடத்தையே சரியில்லேன்னு எல்லாருக்கும் தெரியும், அவங்க அம்மாவைத் தவிர.''

அதனால்தான் பாவம் என்று மீரா நினைத்துக் கொண்டாள்.

நந்தினி இன்னும் ரகசியக் குரலில் ''அவங்க அம்மாவே சரியில்லேன்னு சொல்றாங்க. இவ பின்னே வேற எப்படி இருப்பா?'' என்றாள். ''ஆனா டாக்டர் கிட்ட ஒ ரே ய டி யா சாதிக்கிறாங்களாம் பொண்ணு அப்படியெல்லாம் போகக் கூடியவ இல்லே, இது கர்ப்பம்னு தன்னாலே நம்ப முடியலே கட்டியாத்தான் இருக்கும்ங்கறாங்களாம், எப்படி?''

நந்தினியின் இடத்தில் அவளுடைய அம்மா நிற்பதுபோல் இருந்தது. கூடு விட்டுக் கூடு பாய்வது என்பது அத்தைப் பாட்டியின் கதைகளில் வரும். நந்தினியின் அம்மாவிற்கு அப்படிப்பட்ட சாமர்த்தியம் இருக்கும் என்று தோன்றிற்று.


''உனக்கெப்படி இதெல்லாம் தெரியும் நந்தினி?''

''அந்த டாக்டர் எனக்கு அத்தையாகணும்!'' என்றாள் நந்தினி பெருமையுடன். ''ஆனா அத்தை இந்த விஷயத்தைச் சொன்னாங்களோ இல்லையோ எங்க அம்மாவுக்கு இன்னும் அதிகமா பயம் ஏற்பட்டுப் போச்சு. இங்கே போகாதே அங்க போகாதேன்னு ஏக முட்டுக்கட்டை இப்ப. என்னைப் 'பாக்' பண்ணி அனுப்பிச்சுடணும்னு தீவிரமாயிட்டாங்க.''

''அப்படின்னா?''

நந்தினி வெட்கத்துடன் சிரித்தாள். ''கல்யாணம் பண்ணிடப் போறாங்களாம்.''

மீரா சடக்கென்று திரும்பினாள். ''இத்தனை சீக்கிரமா? என்ன வயசு உனக்கு?''



காதலெனும் வானவில்

''பதினெட்டு, எங்கம்மாவுக்குப் பதினைஞ்சு வயசிலே கல்யாணம்.''

''மேலே படிக்கப் போறதில்லையா நீ?''

'''கல்யாணம் செய்துகிட்டு, புருஷன் படின்னு சொன்னா படி' அப்படினு எங்க அம்மா சொல்றாங்க.''

எத்தனை விசித்திரமான சமாதானம் என்று நினைத்து மீராவுக்குச் சிரிப்பு வந்தது.

''உனக்கே கல்யாணம் பண்ணிக்கணும்னு விருப்பம் இருக்கற மாதிரி இருக்கு.''

''ஓரளவுக்கு உண்மைதான்'' என்றாள் நந்தினி. ''பின்னே என்ன மீரா, எப்பப் பார்த்தாலும் இங்கே போகாதே அங்கே

போகாதே, இதை படிக்காதே அதைப் பார்க்காதேன்னு தடை போட்டுக்கிட்டே இருக்காங்க வீட்டிலே. எப்படாப்பா இந்த வீட்டை விட்டுக் கிளம்பப் போறோம்னு ஆயிட்டது எனக்கு. கல்யாணமானா கொஞ்சம் சுதந்திரம் இருக்கும்.''

''யாரைக் கல்யாணம் பண்ணிக்கிற துன்னு தீர்மானம் பண்ணிட்டியா?''

''ஐய்யய்யோ, நானா? எங்கம்மா யாரைத் தீர்மானிக்கிறாங்களோ அவன் தான்.''

மீரா அனுதாபத்துடன் நந்தினியைக் கூர்ந்து பார்த்தாள்.

''முன்னே பின்னே தெரியாதவனையா?''

''ஆமாம், பின்னே?'' என்று நந்தினி இயல்பாகச் சிரித்தாள்.

''எந்த ஆளோடையும் பழகறதுக்கு சான்ஸ் இல்லேங்கறதை விடு, அப்படிப் பட்ட வம்பிலேயெல்லாம் மாட்டிக்கிட்டேன்னா மீனாட்சியுடைய அம்மா மாதிரியெல்லாம் இருக்க மாட்டாங்க எங்க அம்மா. முதுகுத் தோலை உறிச்சிடுவாங்க.''

''எனக்கு இதையெல்லாம் புரிஞ்சுக்க முடியல்லே நந்தினி!'' என்றாள் மீரா குழப்பத்துடன்.

''நீ அமெரிக்காவிலே வளர்ந்தவ. அதனாலேதான் மீனாட்சி செஞ்சது தப்பில்லேங்கறே!''

''நா அப்படியெல்லாம் எதுவும் சொல்லல்லே நந்தினி!'' என்றாள் மீரா அவசரமாக. ''மீனாட்சி ஏமாந்து போனதுக்கு எத்தனையோ காரணம் இருக்குன்னு நா நினைக்கிறேன்.''

''என்ன காரணம், திமிர் என்கிறதைத் தவிர!''

மீரா பதில் ஏதும் சொல்லவில்லை, 'அவன் என்னை நிராகரிச்சா நா செத்துருவேன்' என்று அன்று மீனாட்சி அழுதது கண்ணில் நின்றது.

''அவ நிஜமாகவே ஒருத்தனை ரொம்பக் காதலிச்சா நந்தினி!''

''ஆமாம் பெரிய காதல்! இப்பப்பாரு அடுத்த வருஷமே அவங்க அம்மா பார்த்து வைக்கிற ஒரு பணக்காரனைச் சந்தோஷமா கல்யாணம் செய்துப்பா, நான் பந்தயம் கட்டறேன்!''

''செய்துக்கலாம். ஆனா சந்தோஷமா செஞ்சுப்பாளான்னு எனக்குத் தெரியாது.''

''எனக்குத் தெரியும் நிச்சயமா''

நந்தினிக்குத் தன்னைவிட இருபது வயது அதிகம் என்று மீராவுக்குத் தோன்றிற்று.

''ஆனா அவளுடைய பழைய சரித்திரம் தெரிஞ்சு போச்சுன்னா புருஷன் சந்தோஷமா இருப்பானான்னு தெரியாது'' என்று ஹாஸ்யம்போல் நந்தினி சொல்லிச் சிரித்தது அதிர்ச்சியைத் தந்தது.

''கல்யாணத்துக்கு முந்தி எல்லாத்



தையும் மறைச்சுடுவாங்கன்னு நினைக்கிறியா?''

''பின்னே?'' என்றாள் நந்தினி சவால் விடுவதைப் போல. ''கர்ப்பமானவள்னு தெரிஞ்சா எவன் கல்யாணம் செய்துப்பான்?''

நந்தினி சொல்வதெல்லாம் இன்று அதிர்ச்சியைத் தந்தது. இப்படிப்பட்ட கோணத்தில் தன்னால் சிந்தித்திருக்க முடியாது என்று தோன்றிற்று.

''ஆனா நீ சொல்றமாதிரி, மறைக்கிறது இன்னும் ஆபத்திலே முடியலாம் நந்தினி.''

''ஆபத்து வரும்போது சமாளிக்கிறது மீனாட்சியுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது. அவ அம்மாவை வெச்சுப் பார்த்தம்னா இவளும் சமாளிச்சுக்குவான்னுதான் தோணுது.''

நந்தினி பக பகவென்று சிரிக்கும்

போது மீராவுக்கும் சிரிப்பு வந்தது.

''நீ இத்தனைப் பொல்லாதவள்னு எனக்குத் தெரியாது நந்தினி!''

''இது பொல்லாத்தனம் இல்லே. ஞானம்! உன்னுடைய அமெரிக்க மூளைக்கு இதெல்லாம் விளங்கறதுக்கு ரொம்ப நாள் ஆகும். அங்கெல்லாம் இப்படி இல்லே, இல்லே?''

''ஏமாத்தல் என்கிறது எல்லா ஊர்லேயும் இருக்கும்தான்'' என்றாள் மீரா தீவிரமான யோசனையுடன். ''ஆனா அங்க இங்கே இருக்கிற மாதிரி பயங்கள் இல்லே. அதுவே வேற உலகம் போல இருக்கு நந்தினி. முன்னே பின்னே தெரியாத ஆளை எப்படிக் கல்யாணம் செய்துக்க முடியும்னு எனக்கு இன்னும் புரியல்லே.''

''தெரிஞ்சவனையே நீ செய்துக்கோ மீரா!'' என்று நந்தினி சிரித்தாள்.

''எனக்கு எங்கம்மா பார்க்கிற ஆளு போதும். தெரிஞ்சவன்னு நாம பழகற ஆள் மீனாட்சியை ஏமாத்தினவன் மாதிரி இருந்தான்னா?''

''மீனாட்சி ஒரு அசடு நந்தினி. அதை அந்த மணி உபயோகிச்சுக்கிட்டான்.''

''அட, பெயரெல்லாம் உனக்குத் தெரியுமா?''

சட்டென்று மீரா உஷாரானாள்.

''ஒரு நாள் எனக்கு அவனை மீனாட்சி அறிமுகப் படுத்தினாள்.''

லலிதாங்கியின் நினைவு மீராவுக்கு எதிர்பாராமல் வந்தது. அவள் சமீபத்தில் கல்யாணம் செய்து கொண்டு அமெரிக்கா சென்றதைப் பற்றி நந்தினிக்குத் தெரியுமா என்று கேட்க நினைக்கையில் அவர்கள் ஏற வேண்டிய பஸ் வந்து நின்றது. பஸ்ஸில் இடம் பிடித்து உட்கார்ந்தபோது வேறு வேறு இடத்தில் அமரும்படி ஆயிற்று.

லலிதாங்கியும் நாகராஜனும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு அம்மாவையும் அப்பாவையும் பார்க்க வந்திருந்தார்கள். லலிதாங்கியின் முகத்தில் தெரிந்த சந்தோஷத்தை நினைத்து மீராவுக்கு இப்பவும் பிரமிப்பேற்பட்டது. காதல் என்பது பரிபூரண ஆனந்தம் என்றால், அதை லலிதாங்கி உணர்ந்தவள் என்று தோன்றிற்று. வயது என்பதன் பிரக்ஞையே நழுவிப் போனதுபோல் இருந்தது. ஆனால் உள்ளே அம்மாவிடம் மஞ்சள் குங்குமம் வாங்கிக் கொள்ளும்போது குரல் தழு தழுக்கச் சொன்ன வார்த்தைகள் மறக்க முடியாதவை. ''எனக்கு இப்ப சரீர சுகம் என்கிறது முக்கியமில்லே சுஜாதா, தோழமைதான் முக்கியம். இதை என் தங்கைகளே புரிஞ்சுக்க மாட்டேங்கறாங்க.''

நந்தினியின் அம்மாவும் புரிந்து கொள்ளாத வர்க்கத்தைச் சேர்ந்தவள், என்று மீரா நினைத்துக் கொண்டாள். அவளைப் போலவே நந்தினியும் பேசினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அம்மா பிறகு சொன்னது போல, சரீர சுகம்தான் முக்கியம் என்று லலிதாங்கி நினைத்திருப்பாளானால் அவளுடைய கதை என்றோ வேறு மாதிரி இருந்திருக்கும்.

''பரீட்சை முடிஞ்சதும் டான்ஸை மறுபடி ஆரம்பிச்சுடு கண்ணு'' என்று ஆதங்கத்துடன் சொன்னாள். ''வெறும் படிப்பு மட்டும் மனுஷனுக்குப் பத்தாது. இப்படிப்பட்ட கலையெல்லாம் கத்துக்கறது மனசை டிஸிப்பிளின் படுத்தும். யோக நிலை அது. அனுபவத்திலே சொல்றேன்'' என்ற போது, முதல் நாள் அவளிடம் பாடம் கற்கத் துவங்கியதும் உடம்பும் மனசும் சிலிர்த்து நின்ற மாதிரி இப்பவும் சிலிர்த்தது. இப்படிப்பட்ட ஒரு ஆசிரியை கிளம்பிப் போகிறாளே என்று துக்கம் ஏற்பட்டது.

''அமெரிக்காவுக்கு நீ வந்தியானா தெரியப்படுத்து'' என்று உச்சி முகர்ந்து கண்ணில் நீர் மல்கச் சொல்லிவிட்டு லலிதாங்கி நகர்ந்த போது, தோழமை ஒன்றுக்காக மட்டுமே அவள் இந்த இடத்தை விட்டுக் கிளம்புவதாக மீராவுக்குத் தோன்றிற்று.

அமெரிக்க வெளியில் லலிதாங்கியை இருத்திப் பார்ப்பது கஷ்டமாக இருந்தது. 'லலிதாங்கி மேமின் காதல்தான் உண்மை



- சீர்காழி. வி. ரேவதி

யானது' என்று நந்தினியிடம் சொன்னால் அதற்கும் அவள் பரிகாசமாகச் சொல்லலாம் - ''சீச்சி, இத்தனை வயசு கழிச்சா?''

இதற்கெல்லாம் வயது வரம்பு உண்டு என்று நினைப்பதே மீராவுக்கு அபத்தமாகப் பட்டது. 'சீச்சி' என்று அதை ஏதோ அசிங்கம் போல் ஒதுக்குவது வேடிக்கையாக இருந்தது. எரிக்கிற்கும் இப்படிப்பட்ட இந்திய மனக்கூச்சங்களைப் புரிந்து கொள்ள முடியாது என்று அவள் நினைத்துக் கொண்டாள். அவனிடமிருந்து கடிதம் வந்து வெகு நாட்களாகி விட்டன. காதலி கிடைத்திருப்பாள் என்று அவள் தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டாள். எரிக் நல்ல மனசுடையவன். பொறுமையும் கண்யமும் மிக்கவன். காதலியைச் சந்தோஷமாக வைப்பான்.

''உன்னுடைய 'ஸ்டெடி டேட்' யார்?'' என்று அவன் சென்ற கடிதத்தில் கேட்டிருந்தான்.

நான் இன்னும் டேட்டிங்கே ஆரம்பிக்கவில்லை என்றால் அவன் ஆச்சரியப் படுவான். எனக்கு இருப்பது ஒரே சிநேகிதன். நான் எப்படி இருக்கிறேன் என்று கூட பார்க்கும் சக்தி அற்றவன். 'டேட்' செய்ய முடியாதவன்....

நந்தினி இறங்கிச் சென்று விட்டாள். அடுத்த ஸ்டாப்பிங்கில் இறங்கி மீரா நடக்க ஆரம்பித்தாள். அவளுக்கு முன்னால் வெள்ளைத் தடியை நீட்டிக் கொண்டு சென்று கொண்டிருந்த ஆளைக் கண்டு திடுக்கிட்டாள்.

ஒரு பக்கமாக, உத்தேசமான நோக்கில் ஹரி நடந்து கொண்டிருந்தான். குபீரென்று அவளுள் பிரவாகமாய்ச் சந்தோஷம் பரவிற்று. 'ஹரி!' என்று கூவ நினைத்த சமயத்தில் அவன் எதிரில் வந்த ஆளிடம் ''35 ம் நம்பர் எங்கேயிருக்குன்னு சொல்ல முடியுமா?'' என்றான். அவளுடைய வீட்டு நம்பர்.

''35 ம் நம்பர்....'' என்று அந்த ஆள் தெருவில் பார்வையைச் சுழற்றுகையில் அவள் சமிக்ஞையில் 'நான் சொல்கிறேன் இவன் எனக்குத் தெரிந்தவன்' என்று தெரிவித்தாள்.

''நான் காண்பிக்கிறேன்'' என்று அவள் ஹரியின் கையைப் பற்றியதும், ஹரியின் முகத்தில் சட்டென்று ஒரு பிரகாசம் படர்ந்தது.

''மீரா!'' என்றான் சந்தோஷத்துடன். ''எனக்குத் தெரியும் நீ எப்படியோ இப்ப வந்து நிப்பேன்னு!''


''எப்படி?'' என்று அவள் சிரித்தாள்.

''பிரியம் என்கிறதுக்கு அப்படிப்பட்ட சக்தி உண்டு மீரா!'' என்றான் அவன் பரவசத்துடன்.

அவளுக்குச் சிலிர்த்துப் போயிற்று.

(தொடரும்)

அருள்வாக்கு




எல்லா ஸ்வாமிக்கும் தநுஸ் உண்டு. அந்த தனுஸுக்கு என்று ஒரு தனிப் பெயரும் உண்டு. பரமசிவன் கையில் வைத்திருக்கிற தனுஸுக்குப் 'பிநாகம்' என்று பெயர். அதனால் அவருக்கே 'பிநாகபாணி' என்று ஒரு பேர்.

மஹாவிஷ்ணுவுக்குச் 'சா ர ங் க பா ணி' என்று ஒரு பேர் சொல்கிறார்கள். 'சார்ங்கம்' என்பது மஹாவிஷ்ணுவின் கையில் இருக்கப்பட்ட வில். விஷ்ணு ஸஹஸ்ரநாம கடைசி ஸ்லோகத்திலும் சார்ங்கத்தைச் சேர்த்து ஐந்து ஆயுதங்களே சொல்லியிருக்கிறது. 'தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்' நன்றாக வர்ஷிக்கட்டுமென்று ஆண்டாள் திருப்பாவையில் பாடியிருக்கிறாள்.

ஸாக்ஷாத் பராசக்தியும் ராஜராஜேச்வரியாக இருக்கும் போது இக்ஷுதனுஸ் என்பதாகக் கரும்பு வில் வைத்துக் கொண்டிருக்கிறாள். மன்மதனுக்கும் இதுவேதான் ஆயுதம்.

தனுஸுக்கு இப்படி விசேஷமிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலே, இத்தனை தெய்வங்களாயும் ஆயிருக்கிற நிர்க்குணப் பிரம்ம வஸ்துவை அடைவதற்கும் உபநிஷத்திலேயே தநுர்வித்தை அப்யாஸத்தைத்தான் உபமானமாய்ச் சொல்லியிருக்கிறது. சிஷ்யனைப் பார்த்து குரு, 'ஸௌம்யா! உபநிஷத்திலேயிருக்கிற மிகப் பெரிய அஸ்திரமான, மஹாஸ்த்ரமான வில்லை எடுத்துக் கொண்டு, அதிலே உபாஸனையாலே நன்றாகச் சாணை தீட்டி கூராயிருக்கிற அம்பைப் பூட்டி, அக்ஷரமான குறியை நோக்கி, அதுவாகவே ஆகி விடும் பாவனையோடு விடு' என்பதாகச் சொல்லியிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



பாலம்

மனமொத்த மாறுதல்...?

காய்தே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி தலைமை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன். சென்னை நகரைச் சுற்றி, 50 கிலோ மீட்டர் வரை பணி புரியும் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் யாரும் மனமொத்த மாறுதல் மூலம் திருத்துறைப்பூண்டி வர விரும்பினால் தொடர்பு கொள்ளவும்.

- எஸ். கந்தசாமி,
தலைமை ஆசிரியர்,
ஊ. ஒ. ந. பள்ளி,
விளக்குடி (போஸ்டு)
திருத்துறைப்பூண்டி - 614 715.

நூல்கள் வெளியிட....

கிறிஸ்துவ மதம் சம்பந்தமாகக் கருத்துச் செறிவுள்ள கட்டுரைகள் - குறிப்புக்கள் பலவற்றை வைத்துள்ளேன். ஒரு நல்ல நண்பர் - பொருள் வசதியுள்ளவர் கிடைத்திடின் அவருடன் இணைந்து அவற்றை வெளியிடல் நன்று என்று எண்ணுகிறேன். அத்தகு நண்பர் ஒருவரைப் 'பாலம்' மூலம் தேடுகிறேன்.

- டீ. ஜெயப்பிரகாஷ்,
தொலைபேசி இணைப்பகம்,
பொள்ளாச்சி - 642 001

விதவைக்கு மறுவாழ்வு

துரதிர்ஷ்டவசமாக வி த வை ய ா கி விட்ட ஒரு பெண்ணுக்கு மறுவாழ்வு தர உறுதி பூண்டிருக்கிறேன். ஜாதி - மதம் - பொருளாதார நிலை இவை பார்க்கப் போவதில்லை. சுமாரான அழகில் எனது 23 வயதை விடக் குறைந்த வயதினரை மணக்க விரும்புகிறேன். எளிய முறையில் பதிவுத் திருமணம்.

- ஈதொர். சத்சித் அனந்தராஜ்,
45, தேர்முட்டி,
காரமடை,
கோவை - 641 104.

இலவச சேவை

வருமான வரி கணக்கா? விற்பனை வரி கணக்கா? இலவச சேவைக்கு அணுகவும் :

- வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
A. P. 1265, 77வது தெரு,
செக்டார் 12,
கே. கே. நகர்,
சென்னை - 600 078.

வாய்ப்புத் தேடுகிறேன்!

1977 -ம் ஆண்டு ஐ.டி.ஐ. வார்ப்பியல் பிரிவில் (Moulding) தேர்ச்சி பெற்று, 1979 ம் ஆண்டு அப்ரென்டிஸ் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தமிழகத்திலேயே முதல் மாணவனாகத் திகழ்ந்தேன். என்றாலும் என் திறமைக்கேற்ற வேலை இன்னும் கிடைக்காமல் சைக்கிள் உதிரிபாக விற்பனைக் கடையில் வேலை பார்க்கிறேன். 35 வயது இளைஞனான எனக்கு வாய்ப்புத் தருவார் உண்டா?

- தி. நடராஜன்,
83/1, முனியப்ப நாயக்கன் தெரு,
பெரம்பூர்,
சென்னை - 600 011.

யந்திர, மந்திரப் பிரயோகங்கள்

ஷண்மத தெய்வங்கள் மற்றும் ஸ்ரீவித்யா பற்றிய யந்திர, மந்திர, தந்திரப் பிரயோகங்கள், துதிகள் அறிய ஆவல். மூலகிரந்தங்கள், பாஷ்யங்கள் படிக்க, குறிப்பெடுக்க, சாதனை புரிய விருப்பம். கிரந்தங்கள் தம் வசம் உள்ளவர்களும் சந்தேக விளக்கம் தரக்கூடியவர்களும் தொடர்பு கொண்டால் பேருதவியாய் இருக்கும்.

- டி. பி. சுப்பிரமணியன்,
115, லோகநாதன் சாலை,
கிருஷ்ணாபுரம்,
அம்பத்தூர்,
சென்னை - 600 053.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்காது.)

பெரிய கவுண்டர் பொண்ணு

கதை என்னவோ ரொம்பவும் சாதாரணம்.

செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருந்த காலத்தில் தன் ஏழைச் சகோதரனிடம், அவன் மகளைத் தன் மகனுக்கு மணம் செய்து கொள்வதாய் வாக்களிக்கிறார் மனோரமா. காலத்தின் சுழற்சியில், மனோரமா வாழ்க்கையின் அடித்தளத்துக்குப் போய் விட, சகோதரன் ஜெய்கணேஷ் உச்சத்தில். மாறி விட்ட சூழ்நிலையில் ஜெய்கணேஷ் அந்த வாக்குறுதியைத் துடைத்து அப்பால் போட்டு விட, மனோரமா மட்டும், பாவம், அதனை நிறைவேற்ற வேண்டும் என்று துடியாய்த் துடிக்கிறார். கல்வியறிவு இல்லாத சரத்குமாருக்கும் (மனோரமாவின் மகன்) கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றுள்ள கௌதமிக்கும் (ஜெய்கணேஷின் மகள்) கல்யாணம் எப்படி நடக்கிறது என்பது திரைக்கதை.

தொடக்கத்தில் குழப்பங்கள் இருந்தாலும் போகப் போக விறுவிறுப்புக் கூடுகிறது. ஒரு சாதாரணக் கதையை உட்கார்ந்து பார்க்கும்படி செய்வது இயக்குனர் மணிவாசகத்தின் கைவண்ணம்.

கல்விச் செருக்குடன் கம்பீர நடை பயிலும் கௌதமி -

தொட்டதுக்கெல்லாம் சிலிர்த்து எழுந்து அடிதடியில் இறங்கும் சரத்குமார் -

தன்னுடைய சமூக அந்தஸ்து ஒன்றையே முன் நிறுத்தி ஒவ்வொன்றையும் அணுகும் புதுப் பணக்காரர் ஜெய்கணேஷ் -

காலம் மாறியும் பழைமையை மறக்காத வடிவுக்கரசி -

இப்படிப் பலரும் பாத்திரமுணர்ந்து செயல்பட்டிருந்தாலும் - பளிச்சென்று முன்னே நிற்பவர் மனோரமாதான்.

மூச்சுத் திணறுமளவுக்குக் கிராமிய மணம்.

- சி. ஆர். கே.



காதலென்னும் வானவில்

''டெலிபதின்னு சொல்வாங்க இல்லே?'' என்று மீரா சந்தோஷமாகச் சிரித்தாள். ''பஸ்ஸிலே வரும்போது உன்னைப் பத்தித்தான் நினைச்சிட்டு வந்தேன் ஹரி. பரீட்சை முடிஞ்சு போச்சா?''

''முடிஞ்சு ரெண்டு நாள் ஆச்சு'' என்றான் அவன் புன்னகையுடன். ''உனக்கு இன்னிக்கு முடியும்னு தெரியும், அதான் கிளம்பி வந்தேன்.''

''இந்த ஸ்டாப்பிலே இறங்கணும்னு உனக்கு எப்படித் தெரிஞ்சுது?'' என்றாள் அவள் வியப்புடன்.

''வாய் இருக்கே.'' - சிரித்தான்.

''நீ வந்தது எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமோ?''

அவன் அவள் பக்கமாகத் திரும்பி, மெல்லிய புன்னகையுடன் சொன்னான் : ''உன் குரல்லேந்து எனக்கு அது புரியுது. நீ ரொம்ப அழகானவ மீரா!''

அவள் கூச்சத்துடன் சிரித்தாள். ''எப்படிச் சொல்றே?'' என்றாள்.

''அழகுங்கறது பார்க்கறவன் கண்ணுலே இருக்குன்னு சொல்வாங்க. எனக்கு மனசாலேதான் கணிக்க முடியும். உன் நாட்டியத்தைக் கற்பனை பண்ற மாதிரி உன்னைக் கற்பனை பண்ண முடியும்.''

''குட்! அப்ப நா நிஜத்திலே இருக்கறதை விட உன் கற்பனையிலே ரொம்ப அழகாயிருப்பேன்!''

அவன் சட்டென்று நின்று அவளுடைய கையைத் தனது இன்னொரு கையால் அழுத்தினான்.

''அது வெறும் கற்பனையில்லே. அதுதான் நிஜம். பாசாங்குத்தனமில்லாத மனசு உனக்கு. குருடனுக்கு வேறு எதுவும் அழகா இருக்க முடியாது மீரா!''

எதையோ நிரூபிக்க விரும்புபவன் போல் அவன் வேகத்துடன் பேசினான். அன்று சங்கர் அவள் கன்னத்தைத் தொட்டு 'நீ ரொம்ப நல்லா இருக்கே' என்று சொன்னது திடீரென்று ஞாபகம் வந்து, மீண்டும் அவமானப்படுத்திற்று.

''குருடன் கிருடன்னு சொல்லாதே. நல்ல சினேகிதமெல்லாம் மனசைத்தான் பார்க்கும். உருவத்தைப் பார்க்காது, கண் இருந்தாலும்'' என்றாள் அவள் மெல்ல. ''உனக்குக் கண் இல்லேங்கறதே எனக்கு நினைவு இருக்கிறதில்லே. நீ ஏன் திரும்பத் திரும்ப ஞாபகப்படுத்தறே?''

அவன் ஏதோ யோசனையில் ஆழ்ந்து மெல்லச் சொன்னான். ''உனக்கு ஞாபகம் இருக்கணும் மீரா. எனக்கு நீ ஞாபகப் படுத்தக் கூடாதே தவிர, உனக்கு இருக்கணும்.''

வாஸந்தி

இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்க நிமிர்ந்தபோது, வீடு வந்து விட்டதை உணர்ந்தாள்.

காம்பவுண்டுக்குள் ஒரு கார் நின்றிருந்தது. பின் கண்ணாடியில் இருந்த சிவப்புக் குறியிலிருந்து டாக்டரின் வண்டி என்று தெரிந்தது. மஹேஷ் வராந்தாவில் இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருந் தான். அவர்களைக் கண்டதும், ஹரியை ஒரு பார்வை பார்த்து, வழக்கம் போல் 'ஹாய்' என்று சினேகிதமாகச் சொல்லாமல் அவளிடம், ''மீரா, அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லே. டாக்டர் வந்திருக்கார்'' என்றான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''உடம்பு சரியில்லையா? கார்த்தாலே என்னை ட்ராப் பண்ணாரே ஸ்கூல்லே? ஜுரமா?''

டாக்டர் வரும்படி திடீரென்று என்ன வந்தது என்று அவளுக்குத் திகைப்பாக இருந்தது.

''எனக்குத் தெரியாது'' என்றான் மஹேஷ் மெல்லிய கலவரத்துடன். ''நீ போய்க் கேளு.''

ஹரி அவளுடைய கையைத் தொட்டு, ''நா இன்னொரு நாளைக்கு வரேன் மீரா. நீ போய் உங்கப்பாவைக் கவனி'' என்றான்.

''பரவாயில்லே நீ வா. கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாம். அப்பாவுக்கு லேசா ஜுரம்னாலும் அம்மா பயந்து டாக்டரைக் கூப்பிடுவாங்க. காலையிலே அப்பாவுக்கு ஒண்ணுமே இருக்கல்லே.''

ஹரியின் கையைப் பிடித்து அவள் அழைத்து வருவதைக் கவனித்த மஹேஷ் 'அவனுக்குக் கண் தெரியாதா?' என்று அவள் காதருகில் கிசுகிசுத்தான். 'தெரியாது' என்று பொருள்படும்படி அவள் தலையாட்டினாள். மஹேஷ் சட்டென்று நகர்ந்து ஹரியின் இன்னொரு கையைப் பிடித்து சோபாவில் அமர்த்தியது அவளுக்குச் சந்தோஷத்தை அளித்தது.

''இங்கே வேண்டாம் மஹேஷ். என்னுடைய ரூமுக்கு அழைச்சிண்டு போ. ப்ளீஸ்'' என்றாள். ''இந்தா என் பையையும் என் மேஜைமேல வெச்சிடு. நா

அப்பாவைப் பார்த்துட்டு வரேன்'' என்று அவனிடம் தன் பையைக் கொடுத்தாள்.

ஹரியின் முகத்தில் தெரிந்த சங்கடத்தைக் கண்டு அவன் தோளைத் தட்டி ''ரிலாக்ஸ் ஹரி, நான் இப்ப வந்துடுவேன்'' என்றாள். ''பாட்டு ஏதாவது போடு மஹேஷ்!'' மாடிப் படியில் அவர்கள் ஏறுவதைக் கவனித்து, அவள் கீழே இருந்த பெரிய பெட்ரூமுக்கு விரைந்தாள்.

டாக்டர் குனிந்து அப்பாவைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அப்பாவின் முகம் தெரிவதற்கு முன் அம்மாவைக் கண்டு 'திக்'கென்றது. காலையிலிருந்து மாலைப் போதுக்குள் பத்து வயது கூடியிருந்தது. பீதியின் எல்லையில் தன்னை மிகவும் சிரமப்பட்டு நிதானப்படுத்திக் கொள்பவள் போல் தெரிந்த அவளருகில் விரைந்து மீரா அவள் தோளைத் தொட்டு ''என்னம்மா?'' என்றாள்.

அம்மாவின் கண்களில் 'குபுக்'கென்று நீர் நிறைந்தது. உதட்டைப் பிதுக்கி கையை விரித்தாள்.

''ரிலாக்ஸ்மா'' என்றாள் மீரா மெல்லிய குரலில். ''அதான் டாக்டர் வந்திருக்காரே. ஒண்ணுமிருக்காது'' என்று கிசுகிசுத்தாள். கண்ணை மூடிய நிலையில் படுத்திருந்த அப்பாவைப் பார்த்து, மனசு அதிர்ந்து போயிற்று. காலையில் ஸ்கூலில் இறக்கிவிடும்போது அவள் கையைக் குலுக்கி 'பெஸ்ட் ஆஃப் லக்' சொன்னவரா இவர் என்று பதைக்கையில் நல்லவேளையாக அப்பா கண்களைத் திறந்தார். ஜீவனெல்லாம் வற்றிப்போன பார்வையுடன் கண்களைச் சுழற்றிப் பார்த்தார். மீராவிடம் சற்றுத் தயங்கி பிறகு அம்மாவைப் பார்த்து, ''ஐ வில் பி ஆல் ரைட் சுஜாதா; தைரிய மாயிரு'' என்றார் மிகமெல்ல.

அம்மா கண்களைத் துடைத்துக் கொண்டு, சிரிக்க முயன்றாள். மீராவுக்கு அப்பாவைப் பார்க்க இனம் புரியாமல் கலவரம் ஏற்பட்டது. அவருடைய கையைப் பிடித்து, ''டாட், என்ன ஆச்சு உங்களுக்கு?'' என்றாள்.


டாக்டர் யாருக்கோ டெலிபோன் செய்து கொண்டிருந்தார்.

அப்பா லேசாகப் புன் னகை செய்து, ''ஒண்ணுமில்லே. ஐ ஆம் ஆல் ரைட்'' என்ற போது, அவரே அதை நம்பவில்லை என்கிற பயம் அவளுக்கு ஏற்பட்டது.

டாக்டர் பரபரப்புடன் வந்து, ''ஆஸ்பத்திரிக்குத் தகவல் கொடுத் தாச்சு, கிளம்பலாம் மிஸஸ் ஸ்ரீனிவாசன்'' என்றார்.

மீரா திடுக்கிட்டு எல் லாரையும் மாறி மாறிப் பார்த்தாள். அம்மா என்ன செய்வதென்று புரியாதவள் போல் குழப்பத்துடன் தடுமாறுவதை உணர முடிந்தது. பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''ஆஸ்பத்திரியிலே தங்க வேண் டியிருக்குமா டாக்டர்?'' என்றாள் அம்மா.

''அதைப் பத்தி அப்புறம் யோசிக்கலாம், நீங்க இப்பக் கிளம்புங்க'' என்று துரிதப்படுத்தியதிலிருந்து நேரத்தைக் கடத்தக் கூடாது என்று அவர் அவசரப்படுவது புரிந்தது.



அடிவயிற்றில் மீராவுக்குக் 'கப்'பென்று பயம் கவ்விற்று. அம்மா அவசரமாகச் சாமி படத்துக்கு முன் விளக்கேற்றி, கண்மூடிப் பிரார்த்தித்து, விபூதிச் சம்புடத்தை எடுத்துக் கொண்டு அப்பாவிடம் விரையும் போது, மாடியிலிருந்து மெடோனாவின் பாட்டுக் கேட்டது. அம்மா திகிலடைந்தவள் போல அவளைப் பார்த்து, ''யாரு டேப் போடறது?'' என்றாள். அந்தத் தருணத்தில் பாட்டுச் சத்தம் வருவது அபத்தமானது என்ற உணர்வுடன், ''ஹரி வந்திருக்கான்'', என்றாள்.

''அப்பா வுக்கு உடம்பு சரியில் லேன்னு எனக்குத் தெரியாது. மஹேஷைப் போடச் சொன் னேன்.''

''ஹரியா? இன்னிக்குன்னு அவனை வேறு கூட்டிண்டு வந்தியா?''

அம்மா பேசிக் கொண்டே அப்பா இருந்த அறைக்குச் சென்றாள். அப்பாவின் நெற்றியில் விபூதி இடும்போது அம்மா வின் விரல்கள் நடுங்கின. ''நா அழைச் சிண்டு வரல்லே. அவனா வந்தான்'' என் றாள் மெல்லிய குரலில். அது காதில் விழுந்ததாக அம்மா காண்பித்துக் கொள்ள வில்லை. மீரா அப்பா எழுந்திருக்க உதவி னாள். டாக்டரும் அம்மாவுமாக அப்பா வைக் காருக்கு நடத்துகையில், காரின் கதவைத் திறந்து வைத்து நின்றாள்.

''நானும் வரேன்மா ஆஸ்பத்திரிக்கு'' என்றாள்.

அம்மா ஒரு விநாடி தயங்கினாள், 'வா' என்று சொல்ல விரும்பியவள் போல. டாக்டர் ஏகப் பரபரப்பில் இருந்தார்.

''எல்லாரும் வரவேண்டிய அவசிய மில்லே. அம்மா வந்தாப் போதும்,'' என்று வண்டியைக் கிளப்பும் போது, மீராவுக்குப் பயமும் துக்கமும் அடிவயிற்றிலிருந்து அலை அலையாக எழுந்து, நெஞ்சை அடைத்தது. காரின் ஜன்னல் வழியாகக் குனிந்து, அப்பாவின் கையைத் தொட்டு, ''ஆல்தி பெஸ்ட் டாட்'' என்ற போது, கண்ணில் நீர் நிறைந்தது. பதில் சொல்லக் கூடத் திராணியில்லாமல் அப்பா தலையசைத் தார்.

கார் கிளம்பிச் சென்றதும் திடீரென்று ஒரு பலவீனம் அவளை ஆட்கொண்டது. காலையில் நன்றாயிருந்த அப்பாவுக்குத் திடீரென்று இப்படி எப்படி மோசமாகிப் போகும் என்று புரியவில்லை. ஹார்ட் அட்டாக்காக இருக்கும் என்று தோற்றிற்று. பிழைப்பாரா என்று திகில் ஏற்பட்டது.

வாயிற் கதவைச் சாத்தி, அம்மா அப்பா வின் படுக்கையறையை ஒட்டியி ருந்த குளியலறைக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டாள். அப்பாவின் ஆஃப்டர் ஷேவ் லோஷ னைப் பார்த்துக் கண்கள் கலங்கின. 'அசடு, அசடு, அப்பா வந்துவிடுவார்' என்று சமா தானப்படுத்திக் கொண்டாள். முகத்தை அழுத்தித் துடைத் துக் கொள்கையில் 'நல்ல வேளை, ஹரி யாலே என்னைப் பார்க்க முடியாது' என்று நிம்மதியேற்பட்டது.

சமையலறைக்குச் சென்று பாலைச் சுட வைத்து மூன்று போர்ன்விடா கலந்து, டிரேயில் வைத்து மேலே எடுத்துக் கொண்டு போனதும் தீவிர யோசனை யுடன் அமர்ந்திருப்பவனைப் போலத் தெரிந்த ஹரி நிமிர்ந்து, ''உன் அப்பாவுக்கு என்ன மீரா?'' என்றான்.

ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்த மஹேஷ் திரும்பி, ''மீரா வந்தது எப்படித்

தெரிஞ்சது?'' என்றான்.

ஹரி புன்னகையுடன், ''எனக்கு ஞானக்கண் இருக்கு, மீராவைக் கேளு சொல்லுவா'', என்றான்.

''அப்படின்னா?'' என்ற மஹேஷுக்குப் பதில் சொல்லத் தென்பில்லாமல், ''அதை அப்புறம் சொல்றேன். இந்தா போர்ன்விடா எடுத்துக்கோ,'' என்று அவனிடம் நீட்டி, ஒரு கிளாஸை ''ஹரி எடுத்துக்கோ'', என்று அவன் கையைப் பிடித்துக் கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்டு, ''உங்க அப்பாவுக்கு எப்படி இருக்கு?'' என்றான்.

''அப்பாவை ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டுப் போயிருக்காங்க'' என்றாள் அவள் மெல்லிய குரலில்.

''ஆஸ்பத்திரிக்கா? ஏன்?''

''தெரியல்லே ஹரி. யாரும் ஒண்ணும் சொல்லல்லே சரியா. ஆஸ்பத்திரிக்கு எனக் கும் போகணும்னு இருந்தது -''

''என்னாலே நின்னுட்டியா?''

''இல்லே இல்லே. டாக்டர் வேண்டாம்னு தடுத்திட்டார். மஹேஷ் வேற வீட்டிலே தனியா இருப்பான். மஹேஷ், அப்பாவுக்கு என்ன ஆச்சு தெரியுமா?''

''தெரியாது'' என்ற மஹேஷின் வட்ட விழிகளில் நீர் நிறைந்திருந்தது. ''நான் விளையாடிட்டு வீட்டுக்கு வந்தபோது டாக் டர் வந்திருந்தார்.''

அவள் மஹேஷுக்கு அருகில் சென்று அமர்ந்து, அவனை அணைத்துக் கொண்டாள். பேசுவதற்கு எதுவுமே இல்லாமற் போனது போல் மூவரும் மௌனமாக போர்ன்விடாவைக் குடித்தார்கள். அவள் எழுந்து, சோர்வுடன் பாட்டை நிறுத்தினாள்.

''உங்க அப்பா நல்லா ஆயிடுவாங்க மீரா, கவலைப்படாதே'' என்றான் ஹரி.

அவள் பதில் சொல்ல முடியாமல் அமர்ந்திருந்தாள். மஹேஷ் அருகில் இல்லாவிட்டால் இவனிடம் ஒரு குரல் அழுதிருக்கலாம் என்று தோன்றிற்று. இவன் புரிந்து கொள்வான்.

இந்த ஊர் டாக்டர்கள் எப்படியோ? ஆஸ்பத்திரி நன்றாக இருக்குமோ? என்று அவளுக்குக் கவலையேற்பட்டது. மஹேஷுக்கு எதிரில் இந்தக் கேள்வி கேட்டால் அவன் கலவரப்பட்டுப் போவான் என்று பேசாமல் இருந்தாள்.

''நம்பிக்கை வை மீரா'' என்று ஹரி சொன்னான் - ஏதோ அசரீரி வாக்கு போல.

''நம்பிக்கையைப் போல நமக்கு பலம் தர்றது எதுவுமே இல்லே.''

அவளுக்கு இன்னும் பலவீனப்பட்டு அழுகை வெடித்தது. ஹரி சட்டென்று நகர்ந்து அவளுடைய தோளைப் பற்றினான்.

''அழாதே மீரா. நீ அழுதா எனக்குத் தாங்காது'' என்றான்.

(தொடரும்)



"உஸ், எழுந்திருங்க. அத்தையும், மாமாவும் பூஜைக்கு ரெடி ஆயிட்டாங்க. குழந்தைகள் கூட புதுசு உடுத்திக்கிட்டுக் காத்திருக்காங்க. வருஷப் பொறப்பன்னைக்கு இப்படி எட்டு மணி வரைக்கும் தூங்கறீங்களே'' என்று உலுக்கினாள் லக்ஷ்மி.

''எப்பவோ ஒருநாள் லீவு வருது. கொஞ்சம் தூங்கலான்னா விடமாட்டியே. வருஷா வருஷம் கொண்டாடறதுதானே. என்னை விட்டுட்டு நீங்க மட்டும் கொண்டாடுங்க. நான் கொஞ்சநேரம் தூங்கறேன்,'' என்றான் மனோகர் தலையணையைக் கட்டிக் கொண்டு.

''வருஷப் பிறப்பன்னைக்கு அந்த மாதிரியெல்லாம் பேசாதீங்க. சட்டுனு கண்ணைத் தொறக்காம, என் கையைப் பிடிச்சுக்கிட்டு எந்திரிச்சு பூஜை ரூம் வரைக்கும் வாங்க. மொதல்மொதல்லே கண்ணிலே படற பொருளோட பாதிப்புதான் வருஷம் பூராவும் இருக்குமாம்,'' என்று அவன் கண்களைப் பொத்தியவாறு அழைத்துச் சென்று, பூஜையறையில் நிறுத்தி, கண்களைத் திறக்கச் சொன்னாள். பெரிய கண்ணாடிமுன் பலவிதமான பொருட்கள் படைக்கப்பட்டிருந்தன. ஜ க ஜ க வெ ன ஜொலிக்கும் தங்க நகைகளும், காசுகளும் நோட்டுகளும் ஒரு தட்டில். தாம்பாளத்தில் எல்லோருடைய புதுத் துணிகள். இன்னொரு தட்டில் இனிப்பும், பழங்களும். 'ஹா' என்று மயங்குவது போல நடித்த மனோகர், ''இதெல்லாம் மொதல்லே பார்த்தா என்ன, உன்னோட மொகத்திலே முழிச்சா என்ன, ரெண்டுமே லக்ஷ்மி தானே' என்று சொல்லவும், குப்பென்று முகம் சிவந்தது லக்ஷ்மிக்கு. ''போங்க... சட்னு பல்தேய்ச்சுட்டு, குளிச்சுட்டு வாங்க!'' என்று பொய்யாய்க் கணவனை விரட்டினாள்.


லக்ஷ்மிக்கு அதிசயமாக இருந்தது. அழகான, அருமையான கணவன், மணி மணியாய் இரண்டு குழந்தைகள், பெற்றோருக்கும் மேலாய்ப் பாசத்தைச் சொரியும் அத்தையும் மாமாவும். நினைக்க நினைக்க நெஞ்சு பூரித்தது அவளுக்கு. நகரின் பெரிய ஜவுளிக்கடையான லக்ஷ்மி டெக்ஸ்டைல்ஸ், உரிமையாளரின் ஒரே பெண்தான் லக்ஷ்மி. பெற்றோரும் சரி, அவள் அண்ணன் பிரகாசமும் சரி அவள் மேல் உயிரையே வைத்திருந்தனர்.

செல்வச் செழிப்பு, இனிமையாய்ப் பழகும் குணம் எல்லாம் இருந்தும், பெரிய குறை ஒன்றிருந்தது லக்ஷ்மியிடம், அ தா வ து அவளுடைய நிறம். 'கரி' நிறம் என்றோ 'காக்கை' நிறம் என்றோ விளையாட்டுக்குச் சொல்வார்கள் அல்லவா, அப்படியொரு கறுப்பு நிறம் அவளுக்கு. மற்றபடி பார்க்க லட்சணமாய், களையாய் இருந்தாள். என்னதான் பணத்தை இட்டு ஈடு கட்ட முயன்றாலும் இந்தக் காலத்து வாலிபர்கள் தாங்கள் அழகாக இல்லாவிட்டாலும், தங்களுக்கு வரும் மனைவி அழகாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களே. இந்த மாதிரி நான்கு சம்பந்தம் தட்டிப் போயிற்று. பயந்து போன லக்ஷ்மியின் பெற்றோர், தீவிரமாய்த் தேடத் தொடங்கிய போது கிடைத்தவன்தான் மனோகர்.

மனோகர் லக்ஷ்மிக்கு நேர் எதிர். 'எலுமிச்சை நிறம்' என்று பெண்களுக்கு உவமையாகச் சொல்லும் இளம் மஞ்சள் நிறம் அவனின் தனிச்சொத்து. ஆறடி உயரமும், அளவான பருமனும், யாரையும் திரும்பிப் பார்க்க வைக்கும்.

மனோகர் குடும்பம் வந்து லக்ஷ்மியைப் பெண் பார்த்த போது யாருக்குமே நம்பிக்கையில்லை. மனோகருக்கு லக்ஷ்மியைப் பார்த்ததுமே ஷாக்காக இருந்தது. பெண் பார்க்கும் படலம் முடிந்ததும், யாருக்கும் என்ன பேசுவதென்றே புரியவி ல் லை. வீ ட் டு க் கு வந்து கலந்து ஆலோசிக்கலாம் என்று அ ம் ம ா விடம் மெல்லிய குரலில் கூறிவிட்டான் மனோகர்.

வீட்டுக்கு வ ந் த து ம், முகம் சிவந்தான். அப்பா



பொருத்தம்

மெல்லிய குரலில் ஆரம்பித்தார். ''பாரு மனோகர்.... தரகன் சொன்னான், பொண்ணு கொஞ்சம் கறுப்புன்னு. ஆனா கொஞ்சம் கறுப்பில்லை. அட்டக்கரி. அதுவும் உன்னோட ஒப்பிட்டா இந்த வித்தியாசம் தூக்கலாத் தெரியும். இது மைனஸ் பாயின்ட். சரி, பிளஸ் பாயின்ட் என்னென்னன்னு பார்ப்போம். மொதலாவது பொண்ணு ரொம்பவும் அடக்கம். படிப்பும் இருக்கு. மேலும், உன்னோட சம்பளத்தை மட்டுமே நம்பிக்கிட்டு நான், உங்க அம்மா, ரெண்டு பொண்ணுக எல்லாரும் இருக்கோம். வரதட்சணைன்னு இல்லாமே நம்ம ரெண்டு பொண்ணுக பேர்லேயும் லட்ச ரூபாய் போடறதா பொண்ணோட அப்பா சொல்லியிருக்கார்,'' என்றதுமே ஆவேசம் கிளம்பியது மனோகருக்கு.

''ரெண்டு லட்ச ரூபாய்க்காக அந்தக் காக்கா கழுத்துலே தாலி கட்ட முடியாது'' என்றான் வெறுப்புடன்.

அம்மாவுக்கு ஆவேசம் வந்துவிட்டது, ''நிறுத்துடா. ஏதோ நீ கொஞ்சம் பாக்கற மாதிரி இருக்கேன்னா, மத்தவங்களை மட்டந் தட்டிப் பேசறதா? பொண்ணுடா நானும். இன்னொரு பொண்ணை அவமானம் பண்ணினா சகிக்க மாட்டேன். உன்னோட தங்கச்சிகளை எவனாவது மட்டமாப் பேசினா கேட்டுகிட்டுச் சும்மா விட்டுடுவியா நீ? கறுப்புங்கறது ஒரு கலர், அவ்வளவுதான். அது மட்டம்னு யார் சொன்னா. எல்லாம் பாக்கற பார்வையிலே இருக்கு. பணத்தை வேணா வேண்டாம்னு சொல்லிடு. பொண்ணு தங்கம்டா. அவளை வேண்டாங்காதே'', என்றாள் உணர்ச்சிப் பெருக்குடன்.


குடும்பமே தனித் தனியாய் யோசித்தனர். கூடி விவாதித்தனர். பின், மனோகர் தன் தீர்மானத்தை வெளியிட்டான்.. ''லக்ஷ்மியை நான் முழு மனசோட ஏத்துக்கறேன். வரதட்சணை வேண்டாம்,'' என்றான்.

லக்ஷ்மியின் குடும்பத்தினருக்கு விஷயத்தைக் கேள்விப்பட்டவுடன் மயக்கமே வந்துவிட்டது. என்ன தடுத்தும் கேளாமல், மனோகரின் தங்கைகள் நித்யா, கல்யாணி பேர்களில் ஆளுக்கு லட்சம் ரூபாய் போட்டு விட்டுத்தான் நிச்சயத்திற்குத் தேதியே குறித்தனர். மிகவும் சிறப்பாக நடந்தது கல்யாணம்.

லக்ஷ்மியைத் தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாக அந்த நிமிடம் முதலே நினைக்கத் தொடங்கி விட்டனர். நித்யாவும், கல்யாணியும் தங்களுக்குத் திருமணமாகிக் கிளம்பும்போது லக்ஷ்மியைப் பிரிய முடியாமல் அழுதனர். பத்து வருடங்களில் அவள் அந்த வீட்டு மருமகள் என்பது மறந்து போய், மகளாகவே நினைக்கத் தொடங்கியிருந்தனர் மனோகரின் அப்பா கணபதியும், அம்மா பூரணியும்.

வருஷப் பிறப்பன்று 'விஷுக்கனி' என்று மலையாளத்தவர்கள் செய்வது போல் செய்யும் பழக்கம் லக்ஷ்மியின் தாய் வீட்டில் இருந்தது. அதே மாதிரி செய்யத் தடையொன்றும் சொல்லவில்லை மனோகர் குடும்பத்தினர். அதனால், அந்தப் பண்டிகை மட்டும் தடபுடலாய் நடக்கிறது இந்தப் பத்து வருடங்களாய்.

''என்னம்மா, நான் குளிச்சுட்டு வர்றதுக்குள்ளே நீங்க கனவுலோகத்துக்குப் போயிட்டீங்களா?'' என்று மனோகர்



சி. எஸ். சித்ரா

கிண்டலாகக் கேட்க, வெட்கத்துடன் எழுந்தாள் லக்ஷ்மி. குழந்தைகள் காலையிலேயே புதிது உடுத்திக் கொண்டு விட்டதால், தனக்கும், தன் கணவனுக்குமான துணிகளைத் தாம்பாளத்திலிருந்து எடுத்துக் கொண்டு தங்கள் அறையை நோக்கி நடந்தாள் லக்ஷ்மி. அப்போது கதவு தட்டும் சத்தம் கேட்டது. துணிகளை சோபாவின் மேல் வைத்துவிட்டுக் கதவைத் திறந்தாள்.

ஓர் இளம் பெண், வயது இருபது இருக்கலாம். எல்லாப் பெண்களின் அழகையும் கடன் வாங்கிப் பெற்றவள் போல் பேரழகுடன் நின்றிருந்தாள். அவள் தோளில் ஒரு பேக்கும், கையில் சூட்கேஸும் கனத்தன.

''பக்கத்து வீட்லே சுசீலாவும், அவங்க அம்மாவும் எங்கே? நான் திருச்சியிலிருந்து வர்றேன். வர்றதா ஒரு வாரம் முன்னாலேயே லெட்டர் போட்டிருந்தேன்...'' என்றாள் அந்தப் பெண் தயக்கத்துடன்.

''அடடா, சுசீலாவோட தாத்தா செத்துப்போனதா டெலகிராம் வந்ததுன்னு அம்மாவும், பொண்ணும் கிளம்பிப்போய் ரண்டு நாளாச்சு'' என்றாள் லக்ஷ்மி.

''அந்தப் பொண்ணை உள்ளே கூப்பிடு லக்ஷ்மி. வருஷப் பிறப்பன்னைக்கு வந்திருக்கு. வாட்டப்பட வேண்டாம். நாங்களும் புள்ளைகுட்டி உள்ள குடும்பம் தாம்மா. நீ உள்ளே வா. எங்க வீட்லே இரு சுசீலா வர்ற வரைக்கும்'' என்றாள் பூரணி.

தயக்கத்தோடு உள்ளே நுழைந்த அவளைக் கைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்று, எல்லாருக்கும் அறிமுகப்படுத்தினாள் லக்ஷ்மி. பூஜையின் போதும், அதன் பிறகு சாப்பாட்டின் போதும், அவர்களுள் ஒருத்தியாய் இணைந்து கொண்டாள் அவள்.

கணபதி மெல்ல அவளை விசாரிக்கத் தொடங்கினார். ''உம்பேரு என்னம்மா? என்ன விஷயமா இந்த ஊருக்கு வந்தே?'' என்றார்.

''எம் பேரு விஜயா. திருச்சி சொந்த ஊரு. சுசீலா குடும்பம் மொதல்லே எங்க வீட்டுப் பக்கத்திலேதான் குடியிருந்தாங்க. ரொம்பவும் குளோஸ் ப்ரெண்ட்ஸ் நாங்க. ஸ்கூல் பைனல் வரைக்கும் ஒண்ணாப் படிச்சோம். அப்புறம், அவங்க அப்பாவுக்கு ட்ரான்ஸ்பர் ஆயிட்டதுன்னு அவ இங்கே வந்துட்டா. எனக்கு பாங்க்லே வேலை கெடச்சிருக்கு. கோயமுத்தூர்னு சொன்னதுமே சுசீலா ஞாபகம்தான் வந்தது. வர்றதா லெட்டர் போட்டுட்டுக் கிளம்பி வந்துட்டேன். ஹாஸ்டல்லே தங்கலாம்னு உத்தேசம். சுசீலா எப்ப வருவாளோ தெரியலையே?'' என்றாள் கவலையுடன்.

''அட அதைப் பத்திக் கவலைப் படா தேம்மா. எந்த பாங்க்லே வேலை கெடச்சிருக்கு?'' என்றார் கணபதி.

''ஐ.ஓ.பி. ஆர்.எஸ். புரம் ப்ரான்ஞ்ச்'' என்றாள் விஜயா.

''அட, ரொம்ப நல்லதாப் போச்சு. எங்க வீட்டுக்காரருக்குக் கூட அதே ப்ரான்ஞ்ச்லேதான் வேலை. நீங்க ஒண்ணும் கவலைப் படாதீங்க. நாளைக்கு அவரையே கூட்டிட்டுப் போகச் சொல்றேன். லேடீஸ் ஹாஸ்டலுக்கும் எங்க அண்ணாகிட்ட சொல்லி ட்ரை பண்ணச் சொல்றேன்'' என்றாள் லக்ஷ்மி.

விஜயாவுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. முன்பின் பார்த்திராதவர்கள், எல்லாரும் எப்படி உதவி செய்கிறார்கள் என்று அதிசயப்பட்டுப் போனாள்.

கல்யாணமான இந்தப் பத்து வருடங்களாய் மனோகர் எந்த அழகிய பெண்ணைப் பார்த்தாலும் சலனப்படவில்லை. ஆனால் சின்ன மலர் போல இருக்கும் விஜயாவைப் பார்த்ததும், அவன் மனத்தில் மெல்லிய ஏக்கம் வந்தது. அவனையும் அறியாமல், விஜயாவையும், லக்ஷ்மியையும் ஒப்பிட்டுப் பார்த்தது மனம். 'நன்றி கெட்ட மனமே, விஜயா சின்னப் பெண். நான் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை. இனிமையான சுபாவம் கொண்டவள் என் மனைவி லக்ஷ்மி' என்று அதை அப்போதைக்கு அடக்கி வைத்தான்.

ஆனால், அடுத்தநாள் இருவரும் ஒன்றாக ஆபீசுக்குச் செல்லும் பொழுது யாரோ ஒருவர், 'ஆஹா, என்ன அற்புதமான ஜோடி' என்றதும் மனம் பரவசப் பட்டது. ஆனால் மேலுக்கு,''தப்பா நெனச்சுக்காதீங்க. சேர்ந்து போனாலே ஜோடின்னு விவஸ்தையில்லாம பேசறாங்க ஜனங்க'', என்றான் ஒப்புக்கு, விஜயாவிடம். பாங்கிலும் சரி, அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பார்த்தவுடன், ஓரிருவர் வாய்விட்டே ஜோடிப் பொருத்தத்தைக் கூறினர்.

சங்கடத்தோடு விலகிய மனோகர், மாலை அவளை பஸ்ஸேற்றித் தனியாய் அனுப்பிவிட்டு, தான் நேரம் கழித்தே திரும்பினான். நல்லவேளை, சுசீலா அன்று திரும்பி விடவே, அவர்கள் வீட்டுக்குச் சென்று விட்டாள் விஜயா. பிரகாசம் ஒரே வாரத்தில் லேடீஸ் ஹாஸ்டலில் இடம் ஏற்பாடு செய்து தந்து விட்டான், விஜயாவுக்கு. விஜயா, அடிக்கடி வருவதாகக் கூறி விட்டு, நன்றியுடன் கிளம்பி விட்டாள். ஆனால் பாங்கில் இருவரும் தினமும் பார்த்துக் கொண்டே ஆக வேண்டியிருந்தது.

வேலையில் என்ன சந்தேகம் என்றாலும், அவனிடமே ஓடிவந்தாள் விஜயா. என்ன உதவி வேண்டுமானாலும் அவனிடமே கேட்டாள். விகல்பமில்லாமல் பழகினாள் அவனுடன்.

மனசுக்குள் சைத்தான் புகுந்து விட்டது மனோகருக்கு. வலியப் போய் அவளுடன் சிரித்துப் பேசத் தொடங்கினான். மாலையில் வீட்டுக்கு வந்ததுமே, லக்ஷ்மியைப் பார்த்தாலே எரிச்சல் வந்தது. காரணமேயில்லாமல் அவளிடம் சிடுசிடுக்கத் தொடங்கினான். குழந்தைகளிடமும் எரிந்து விழுந்தான். லக்ஷ்மியை அழைத்துக் கொண்டு வெளியே செல்லவே வெட்கப்பட்டான். அவளுடன் முகம் பார்த்துப் பேசுவதையும் நிறுத்தியபோது, ஓராண்டு கழிந்திருந்தது.



இன்ஸ்பெக்டர் : ஏன்யா இவனைப் பிடிச்சிட்டு வந்தே?

கான்ஸ்டபிள் : போலீஸ் வேடம் போட்டுக்கிட்டு, திருட்டுத்தனமா மாமூல் வசூல் பண்றான் சார்!

- ராஜாசிங் ஜெயக்குமார்

புத்தாண்டு அன்று, வழக்கம்போல் எல்லாம் எடுத்து வைத்துவிட்டுக் கணவனை எழுப்பினாள் லக்ஷ்மி. ஒரு வருடமாய்க் கணவனின் போக்குக்குக் காரணம் புரியாமல் குழம்பியிருந்தாள் அவள். இன்று சரியாகிவிடும், நாளை சரியாகிவிடும் என்று தினமும் எதிர் பார்த்து ஏமாந்தாள். புத்தாண்டாவது குதூகலத்தைக் கொண்டுவராதா என்ற ஆசையுடன், கணவனைத் துயிலெழுப்பினாள்.

''என்ன கேடுகெட்டுப் போச்சு இப்போ. உன் தரித்திர மூஞ்சியிலேதானே தினமும் முழிக்கறேன். என்னை நிம்மதியாத் தூங்க விடு. இன்னொரு தடவை 'சித்திரக்கனி பாரு'ன்னு சொன்னே கன்னம் பழுத்துடும். போ, இங்கேயிருந்து'' என்று கத்தினான் மனோகர்.

பத்துவருடமாய்ப் பாசத்தைப் பொழிந்த கணவன், ஒருவருடமாய் நெருப்பாய்த் தகிக்கிறான். ஆனாலும், படபடவென்று வார்த்தைகளைக் கொட்டுவது இதுவே முதல் முறை என்பதால் அழுகையை அடக்கிக் கொண்டு வெளியேறினாள் லக்ஷ்மி.

காரணம் கேட்ட பெற்றோரிடம் ''மனசு சரியில்லை'' என்று ஒரே வார்த்தையில் சொல்லி விட்டுக் குப்புறக் கவிழ்ந்து கொண்டான். 'லக்ஷ்மியைத் தான் திருமணம் செய்து கொள்ளாமலிருந்திருந்தால், விஜயா போன்ற அழகி தன் மனைவியாக வாய்த்திருப்பாள்', என்ற எண்ணம்தான் தன் மன வேறுபாட்டுக்குக் காரணம் என்று வாய்விட்டுச் சொல்ல முடியுமா!

விஜயா வந்திருப்பாள் போலும் சுசீலாவின் வீட்டுக்கு. மனோகரின் படுக்கையறையை ஒட்டியே சுசீலாவின் வீட்டு டிராயிங் ரூம் இருந்ததால் அவர்கள் பேசுவது தெளிவாகக் காதில் விழுந்தது.

விஜயா சொன்னாள், ''சுசீ, எனக்கு மாப்பிள்ளை பார்த்திருக்கறதா அப்பா லெட்டர் போட்டிருக்கார். இந்த சண்டே ஊருக்குப் போறேன். அநேகமா இந்தத் தடவை நான் போகும்போது நிச்சயம் பண்ணிடுவாங்கன்னு நினைக்கறேன்.''

''ஹேய், கன்கிராட்ஸ். ஆனா, மாப்பிள்ளை உனக்கு ஏத்தமாதிரி அழகா இருக்காரான்னு பார்த்துட்டுச் சரின்னு சொல்லு'' என்றாள் சுசீலா.

''என்னடி, படிச்ச பொண்ணான நீயே இப்படிப் பேசறே? அழகு எத்தனை நாளைக்கு நிலைச்சு நிக்கும். வயசான பிறகு எல்லாரும் அழகோடவா இருக்கப் போறோம். அழகா மட்டும் இருந்து குணம் சரியா அமையலேன்னா ஆயுசு பூராவும் அந்த மாதிரி ஆளோட குடும்பம் நடத்தறது எத்தனை கஷ்டம். இதோ, உன் பக்கத்து வீட்டு மனோகர் ஸார் இருக்காரே அவரு ரியலி எ ஜென்டில்மேன். அழகைப் பாக்காம குணத்துக்காக லக்ஷ்மி அக்காவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டிருக்காரே. அந்த மாதிரி வாழ்க்கைதான் நான் வேண்டறது'' என்றாள் விஜயா.

அதற்கு மேல் அவர்கள் பேசியது காதில் விழவில்லை, மனோகருக்கு. குணவதியான லக்ஷ்மியை மணந்து கொள்ளாமல், அழகான, குணம் சரியில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் தன் வாழ்க்கை, தன் பெற்றோர், தங்கைகள் கதி என்ன ஆயிருக்கும் என்ற கேள்விகள் மனத்தை அரித்தன.

''லக்ஷ்மி நான் சித்திரைக்கனி பாக்கணும். வந்து கூட்டிட்டுப் போ'' என்று இனிமையான குரலில் கணவன் அழைப்பதைக் கேட்டு லக்ஷ்மி மட்டுமல்ல, கணபதியும் பூரணியும் கூட ஆனந்த அதிர்ச்சி அடைந்தனர்.



☛ உடல்நலத்தைக் கெடுக்காத தின்பண்டங்கள் விற்பனை

என்ற உறுதியும், தென்பும் ஏற்பட்டன!'' என்று பின்னணியை விளக்குகிறார் ராஜன்.

முதலில் காட்பாடியில்தான் ஆரம்பித்தாராம். பிறகு நவம்பர் 81-ல், பரமக்குடியில். அதற்கடுத்தபடி கோவையில். குடும்பத்தில் சாதகமான சூழ்நிலை இருந்ததால், சம்பளம் பற்றி எல்லாம் கவலைப்படவில்லை இவர்.

ராஜனின் நோக்கம் எல்லாம், கிராமப்புறப் பெண்கள்/தாழ்த்தப்பட்ட மக்கள்/ கிராம ஏழைகளின் முன்னேற்றம்தான்!

அன்றாட நல வாழ்க்கைக்குத் தேவையான நூல்கள் வெளியிடுகிறார் ராஜன். மூலிகைத் தோட்டத்தைப் பராமரிக்கிறார். மருந்துகள் தயாரிக்கிறார். மக்கள் 'ஞானப் பந்தி' நடத்துகிறார்.

அது என்ன ஞானப் பந்தி?

''கிராமவாசிகளைக் கூட்டி, அவர்களைப் பேச விடுவதுதான் அது! 70 சதவிகித கிராம - நோய்களுக்கு மூலிகைகளே போதுமே! அவர்களுக்குத் தெரியும் சாதாரண மூலிகைகள் எல்லாம். இது குப்பைமேனி, இது ஆடாதொடை, இது தூதுவளை என்று லகுவில் சொல்லி விடுவார்கள். ஒரு பாடனி மாணவர் கூட இத்தனை சுலபமாக அடையாளம் கண்டு சொல்ல முடியாது! இத்தனை மூலிகைகளைப் புறக்கணித்து விட்டு எதற்காக ஆங்கில மருந்துகளை நாடி ஓட வேண்டும்? எனவே, மருந்தில்லாத மருத்துவம், விலையில்லாத மருத்துவம் கொண்டு வரப் பார்க்கிறோம். இங்கே காட்பாடியில் முதலில் மூலிகைத் தோட்டம் வைத்தோம். பிறகு சோளிங்கரில். முன்பு கோயில்கள் முன்பு மூலிகைச் செடிகள் போடுவார்கள். வளர்ந்து பயன்தரும். இந்த மூலிகைகளே 70 சத நோய்களைத் தீர்த்து விடும். இப்போதுதான் இல்லையே!'' என்கிறார் ராஜன் ஆதங்கத்தோடு.



☛ ஆர். டி. ராஜன்

ரத்த அழுத்தமா? நீரிழிவா? எல்லாவற்றுக்கும் மருந்துகள் வைத்திருக்கிறார். எல்லாமே மூலிகைகளிலிருந்து! பயிற்சி பெற்ற பெண்கள் தயாரிக்கிறார்கள்.

'சோலையோடு இணைந்த கிராம ஏழைப் பணியாளர் சங்கம், மகளிர் சங்கங்களின் தொகுப்பான 'உமா சங்கம்' இவற்றில் பணிபுரியும் பெண்கள், சுற்று வட்டாரத்திலுள்ள இருநூறு கிராமங்களுக்குச் சென்று, அங்குள்ள பெண்களுக்கு ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் பயிற்சி, செயற்கை வைரங்களைப் பட்டை தீட்டும் பயிற்சி, மூலிகைகளிலிருந்து மருந்துகள் தயாரிக்கும் பயிற்சி, அச்சகப் பயிற்சி, விவசாயப் பயிற்சி என்று ஏராளமான பயிற்சிகளைத் தந்து அவர்களைச் சொந்தக் காலில் நிற்கச் செய்கிறார்கள்.

சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 350 குழந்தைகள் பீடித் தொழிலில் அடகு வைக்கப்பட்டிருக்கிற கொடுமையைச் சொல்லி நொந்து கொள்ளும் ராஜன், அவர்களை மீட்கவும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார். ''நான்கு வயதுக் குழந்தை முதல் கல்யாணமான பெண் குழந்தைகள் கூட அடமானமாக இருக்கிறார்கள்!'' என்றபோது, அதிர்ச்சியாக இருந்தது.

உடலுக்கு நலன் அளிக்கும் பயறு வகைகள் சிலவற்றில் முறுக்கு, தேன் குழல், ஏன் - மிக்ஸர் கூடச் செய்து விற்பனைக்கு வைத்திருக்கிறார். (ராகியில் தேன் குழல் - முறுக்கு நறுக் நறுக்கென்று இருந்தது!) இதன் விற்பனையைக் கவனித்துக் கொள்ளும் எம். பி. ஏ. பட்டதாரிப் பெண்மணி ஸ்ரீமதி குமாரி ரமணய்யா, ஒவ்வொன்றின் பயனையும் விளக்கும் போது, 'அட இனி எதுக்கடா அரிசி முறுக்கும், ரவா லட்டுவும்?' என்று கூட ஒதுக்கி விடத் தூண்டும்!

- சித்தார்த்

22 காதலெனும் வானவில்

ஹரி கிளம்பிச் சென்று வெகு நேரத்துக்குத் தோள்பட்டையில் அவன் கை பதிந்திருந்தது போல் இருந்தது. பார்வையற்ற இவன் தனக்கு இத்தனை ஆப்தமாகிப் போனது விந்தை என்று மீரா நினைத்துக் கொண்டாள். ஆனால் இவன் வந்திருக்கிறான் என்று தெரிந்த உடனேயே அம்மா அந்த நெருக்கடியான நிலையிலும் எரிச்சல் பட்டாள். மஹேஷ் மட்டுமே ஹரியை சகஜமாக எடுத்துக் கொண்டான். பஸ் ஸ்டாப்புக்குக் கூடச் சென்று பஸ்ஸில் ஏற்றிவிட்டு வந்தான்.

ஆஸ்பத்திரியிலிருந்து போன் வரும் என்று அவள் காத்திருந்தாள். சமைக்கப் பிடிக்காமல், மஹேஷ் பசிப்பதாகச் சொன்னதும் இருவரும் ப்ரெட்டை டோஸ்ட் செய்து பாலைக் குடித்தார்கள். எந்த ஆஸ்பத்திரி என்று கூடக் கேட்டுக் கொள்ளாமல் போனது மடத்தனம் என்று தன்னையே பல முறை சபித்துக் கொண்டு, திடீரென்று தோன்றிய யோசனையில், கும்பகோணத்துக்கு அத்தைப் பாட்டியின் நம்பருக்கு எஸ்.டி.டி. செய்தாள்.

பாட்டிதான் போன் எடுத்தாள். ''மெட்ராசிலேந்து மீரா பேசறேன்'' என்றதுமே பாட்டி பதறிப் போனாள், ''என்னடி குழந்தை, யாருக்காவது உடம்பு சரியில்லையா?'' என்றாள் தீர்க்க தரிசியைப் போல. பாட்டிக்கு உரத்த குரலில் ''அப்பாவிற்கு உடம்பு சரியாயில்லே. ஆஸ்பத்திரியிலே இருக்கார். நீங்களும் தாத்தாவும் வாங்கோ ப்ளீஸ்'' என்பதற்குள் தொண்டை அடைத்து மேலே பேச முடியாமல் போயிற்று.

''வரோம்டி குழந்தை, நாளைக்கே புறப்பட்டு வரோம்'' என்று பாட்டி சொன்னதும் கண்களிலிருந்து நீர் வழிந்தது. ஆண்டவனின் கருணைகளில் பாட்டி என்பதும் ஒன்று என்று மனசு நெகிழ்ந்தது. என்ன உடம்பு என்று கூட பாட்டி கேட்கவில்லை. தாத்தாவைக் கேட்டுச் சொல்றேன் என்று தயங்கவில்லை.

''பாட்டி, தாத்தா வராளா, ஹைய்யா!'' என்ற மஹேஷைப் பார்த்து இன்றைக்குச் சிரிக்கத் தோன்றவில்லை. கனிவு சுரந்தது. அவளுக்கும் அவனுக்கும் எட்டு வயது வித்தியாசம். இன்று குழந்தையாகத் தோன்றினான். 'தூக்கம் வந்தா தூங்கு மஹேஷ்' என்றதும் சோபாவிலேயே சுருண்டு படுத்தான்.

போன் ஒலித்ததும் அவள் உடனடியாகப் பதற்றத்துடன் எடுத்தாள். 'மீரா' என்ற அம்மாவின் குரல் கேட்டதும், ''உம் சொல்லு'' என்றாள் அவசரமாக. ''அப்பா எப்படியிருக்கார்?''

''இப்பத் தூங்கறார் மீரா'' என்ற குரல் தழதழத்துப் போயிற்று. ''இன்டென்ஸிவ் கேர் யூனிட்லே இருக்கார். கார்த்தாலெக்குள்ளே கொஞ்சம் ஸ்டேபில் ஆயிடும்னு டாக்டர் சொல்றார். நீ கவலைப்படாதே.'' அம்மா அழுகிறாள் என்று தோன்றிற்று. மீராவுக்கும் அழுகை வந்தது.

''நீ ஏன் இத்தனை நேரம் போன் பண்ணலே?'' என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க. ''நா பயந்து செத்துட்டேன். அத்தைப் பாட்டிக்கு போன் பண்ணினேன். நாளைக்கே கிளம்பி வரோம்னு சொன்னா.

''போன் பண்ணியா? வயசானவங்களை ஏன் மீரா கலவரப் படுத்தணும்? சரி, வந்தா நல்லதுதான், வீட்டிலே உங்களுக்குத் துணையா இருக்கும்.''

''இப்ப நமக்கெல்லாம் மாரல் சப்போர்ட் வேணும். அவங்க வந்தா தைரியமா இருக்கும் போல இருக்கு. அம்மா, அப்பாவுக்கு என்ன உடம்பு?''

''மைல்ட் ஹார்ட் அட்டாக்னு டாக்டர் சொல்றார்.''

அடிவயிற்றில் பயம் கவ்வ, ''அம்மா டாக்டர் நல்ல டாக்டராம்மா?'' என்றாள்.

''இந்த ஊரிலியே உசத்தியான வைத்தியம் இங்கே. எல்லா டாக்டர்களும் நல்ல படிப்புப் படிச்சவங்கதான். பகவான் அனுக்கிரகம் இருந்தா நல்லபடியா இருக்கும். பிரார்த்தனையைத் தவிர, எனக்கு வேற எதிலேயும் இப்ப நம்பிக்கையில்லே.''

இது ரொம்பவும் பலவீனமான வாதம் என்று மீராவுக்குத் தோன்றிற்று. அமெரிக்காவை விட்டு நாம் வந்திருக்கக் கூடாது என்று சொல்ல வேண்டும் போல் இருந்தது. அங்கிருக்கும் வைத்திய வசதி இங்கிருக்குமா என்று மனசு பதைத்தது. ஆனால் இப்போது இந்தக் கேள்வி கேட்டு ஒண்ணும் லாபமில்லை என்ற சோர்வு அவளை ஆட்கொண்டது. பகவான் அம்மாவுக்கு இந்தியாவில் அதிக நெருக்கம் காண்பித்தார் என்று தோன்றிற்று.

''பரீட்சை எப்படிப் பண்ணினே?'' என்றாள் அம்மா திடீரென்று ஞாபகம் வந்ததுபோல.

''ரொம்ப நன்றாய்ப் பண்ணினேன்.''

''குட்! அந்தப் பையன் போயிட்டானா?''

''எந்தப் பையன், ஹரியா? அப்பவே போயிட்டானே?'' என்றாள் மீரா வியப்புடன். ''அவனாத்தான் என்னைப் பார்க்கணும்னு பஸ்லே வந்தான், உனக்கு ஏன் கோபம் வந்தது?''

''கோபமா?''

''ஓ.கே. எரிச்சல்.''


''ஸாரி. அப்ப நா ரொம்ப அப்ஸெட் ஆகியிருந்தேன் மீரா.''

''எனக்குப் புரியறது. நா எப்ப அப்பாவைப் பார்க்க வரட்டும்?''

''கார்த்தாலே. டிரைவர் வந்த உடனே வா. அப்பாவுடைய ப்ரஷ், டுத் பேஸ்ட், ஒரு மாத்து உடுப்பு எல்லாம் கொண்டுவா. ஏதாவது சாப்பிட்டுட்டு வா. நீ இங்கேயே இருக்க வேண்டியிருக்கும். நா வீட்டுக்குப் போய் மத்தியானம் வரேன்.''

''ஃபைன். நீ எங்களைப் பத்திக் கவலைப்படாதே அம்மா. தைர்யமாயிரு. அப்பாவுக்குச் சரியாயிடும்.''

அம்மா சற்று நிதானித்து, ''பகவான் இருக்கார்'' என்றாள்.



''மாடி, கீழ்க் கதவையெல்லாம் சரியாத் தாழ்ப்பாள் போட்டுக்கணும் மீரா. ரொம்ப நேரமா போன் பண்ண முயற்சி பண்றேன். என்னவோ லைனே கிடைக்கல்லே.''

மறுபடி மறுபடி 'ஜாக்கிரதை ஜாக்கிரதை' என்று சொல்லி விட்டு அம்மா போனை வைத்தபோது, மனசின் பாரம் சற்று குறைந்து போனது போல் இருந்தது. ஆனால் அப்பா இன்டென்ஸிவ் கேரில் இருக்கிறார் என்பது வயிற்றைக் கலக்கிற்று. ஆண்டவனே இந்த ஊர் டாக்டர்கள் அப்பாவைச் சரியாக் கவனிக்கணுமே என்றிருந்தது. பகவான் அனுக்கிரகம் வேணும் என்கிறாள் அம்மா. நம்பிக்கை வேண்டும் என்கிறான் ஹரி. இரண்டும் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்று தோன்றிற்று. இரண்டின் தாத்பர்யமும் விளங்காமல் குழம்பிப் போயிற்று.

மாடிக் கதவையெல்லாம் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, உடுப்பை மாற்றிக் கொண்டு, கீழே வந்து, எல்லாக் கதவுகளையும் பரிசோதித்துவிட்டு

வாஸந்தி

மஹேஷைக் கீழே இருந்த அப்பா, அம்மாவின் படுக்கை மீது கிடத்தினாள். விளக்கை அணைத்து அவன் அருகில் படுத்ததும் தலையணையில் அப்பாவின் வாசனை வந்தது.

தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலாமல் தலையணையில் முகம் புதைத்து விசும்பினாள். ''ஒரு நாளைக்கு உன்னோடு நிறையப் பேசணும்மா'' என்று அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. பேசுவதற்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடுமோ என்று பயம் ஏற்பட்டது. எத்தனையோ ரகசியங்களை அவர் மனசில் பதுக்கியிருப்பார் என்று தோன்றிற்று. அதுவே ஹார்ட் அட்டாக்காகப் பரிணமித்திருக்கும். என்னைப் பற்றி நிறையக் கனவுகளை வைத்திருப்பவர். என் சக்திக்கு உட்பட்டதை நிறைவேற்றுவேன். சாமி அவரைக் காப்பாத்து....

காலையில் அழைப்பு மணி பலமாக ஒலித்ததும் அலறி அடித்துக் கொண்டு எழுந்தபோது அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லை என்று ஞாபகம் வந்தது. ஓடிச்சென்று வாசற் கதவைத் திறந்தாள். வீட்டு வேலை செய்யும் அம்புஜமும் பால் காரச் சிறுவனும் நின்றிருந்தார்கள்.

''அம்மா வீட்டிலே இல்லையா?'' என்றபடி உள்ளே நுழைந்த அம்புஜத்திடம் ''இல்லே'' என்று மட்டும் சொல்லி விட்டு எத்தனை பாக்கெட் பால் வாங்குவது என்று புரியாமல், சிறுவன் கொடுத்ததை வாங்கி ஃப்ரிஜ்ஜில் வைத்து, முகம் கழுவச் சென்றாள். காலையிலேயே தயாராகி ஆஸ்பத்திரிக்குக் கிளம்ப வேண்டும் என், கிற பரபரப்புடன் சமையலறைக்குச் சென்று, பாலைக் காய்ச்சி, மஹேஷை எழுப்பிப் பல் துலக்கச் சொல்லும் போது, இன்று தனக்குத் திடீரென்று ஒரு பொறுப்பு வந்து விட்டதை உணர முடிந்தது. அம்புஜத்தைத் துரிதப்படுத்தி, வேலையை முடிக்க வைத்து, மஹேஷையும் தயாராக் கிக் காலை உணவை இருவரும் முடித்த போது, அந்தப் பொறுப்பு மிக இயல்பாக அவள் மேல் அமர்ந்தது போலிருந்தது.

அவள் எதிர்பார்த்ததை விட ஆஸ் பத்திரி துப்புரவாக இருந்தது. ''ரொம்ப பினைல்' என்று மஹேஷ் மூக்கைச் சுருக் கினான். அப்பாவைப் பற்றின கவலை அவ னது கண்களில் நிழலாடுவதைக் காலையில் கண்டு, அவனையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்து வர வேண்டியது அவசியம் என்று தோன்றிற்று. அமெரிக்காவை விட்டு வந்ததையே இன்னும் அவன் ஜீரணித்துக் கொள்ளவில்லை என்பதைத் தான் ஒருத் தியே புரிந்து கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள். காட், அப்பாவுக்கும் ஏதா வது ஆகிவிட்டால் தொலைந்தோம். அந்த எண்ணத்தை மனத்திலிருந்து அகற்றும் நோக்கத்தில் தலையை உசுப்பிக் கொண்டு, இன்டென்ஸிவ் கேர் யூனிட்டைத் தேடிக் கொண்டு போகையிலேயே எதிர்த்தாற் போல் அம்மா வந்தாள். இரவு முழுவதும் தூங்காத சோர்வு முகத்தில் தெரிந்தது. கண்களைச் சுற்றிப் புதிதாக ஒரு கரு வட்டம் தெரிந்தது.

''அப்பா எங்கே?'' என்று மஹேஷ் பீதியுடன் கேட்டான்.

அவனுடனேயே சேர்ந்து ''எப்படி இருக்கார்?'' என்றாள் மீரா.

''எனக்குச் சொல்லத் தெரியல்லே மீரா'' என்றாள் அம்மா துயரத்துடன். ஒரு கையால் மஹேஷை அணைத்து அவன் தலையை வருடி, ''ஸ்டேபிலா இருக்கார்' என்கிறார் டாக்டர்'' என்றாள். ''இப் படியே இருந்தா ஆபத்தில்லையாம். இப்பத் தூங்கறார். நீ இங்கேயே இரு. மத்தியானம் உனக்குச் சாப்பாடு எடுத் திண்டு வரேன். காலையிலே ஏதாவது சாப் பிட்டியோ?''

மஹேஷ் அப்பாவைத் தேடிக் கொண்டு லேசாகத் திறந்திருந்த ஒரு கதவின் வழியாகப் பார்ப்பதையும் அவன் முகம் கலவரப்பட்டுப் போனதையும் மீரா கவனித்தாள். விரைந்து அவனருகில் சென்றபோது, திறந்த கதவின் வழியாக அப்பா படுத்திருந்த கட்டில் தெரிந்தது. உடம்பு முழுவதும் ஒயர்கள் பொருத் தப்பட்டு பக்கத்தில் மானிட்டர் துள்ளிக் கொண்டிருந்தது. லேசாக உதடு பிரிய மூச்சு விட்டபடி அப்பா கண் மூடிப் படுத்திருந் தார். அவள் மஹேஷின் தோளில் கையை வைத்து, ''அப்பா தூங்கறார். இப்பத் தொந்தரவு செய்யக் கூடாது'' என்றாள் மெல்ல. ''நீ அவரைப் பார்க்க வந்தேன்னு நா சொல்றேன்.''

''இஸ் ஹி ஓ.கே?'' என்றான் அவன் சந்தேகத்தோடு.


''சரியாயிடுவார். நாளைக்கு நீ வரும் போது பேசுவார்'' என்று அவள் சமா தானப் படுத்தியும் கண்களில் சந்தேகம் நிழலாடிற்று.

அம்மாவும் மஹேஷும் சென்றதும் அவள் அப்பா படுத்திருந்த கட்டில் அரு கில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். யூனிட்டில் நிலவிய மௌ னம் பீதியளித்தது. ஏழெட்டு நோயாளிகள் அப்பாவைப் போலவே ஏக ஒயர்கள் சூழப் படுத்திருந்தார்கள். மானிட்டர்களில் தென் பட்ட சலனத்தைத் தவிர எந்தச் சலனமும் இல்லை. அவளைப் போல் அமர்ந்திருந்த வர்கள் கூட உறைந்து போனவர்கள் போல் இருந்தார்கள். பயம் என்பது ஒரு தத்ரூப மான விஷயம் என்று தோன்றிற்று. மரணம் என்பது புதிராக இருப்பதாலேயே மற்ற எல்லா பயங்களைவிட இது பயங்கரம் என்று தோன்றிற்று. 'மேலே சித்திரகுப்தன் கணக்கிலே நமக்கு எத்தனை நாள்னு எழுதியிருக்கோ அத்தனை நாள்தான் நாம ஜீவிக்க முடியும். ஒரு மணி நேரம் கூட இருக்கேனேன்னாலும் முடியாது' என்று ஒரு நாள் பாட்டி சொன்னபோது அது ஹாஸ்யம் போல் இருந்தது. இன்று பல விதப் பரிமாணங்களுடன் அச்சுறுத்திற்று. சித்திரகுப்தனின் ஏஜென்ட் எந்த நிமிஷ மும் இந்த யூனிட்டில் அமானுஷ்யமாய் நுழையலாம் என்று எல்லாரும் பயப் படுவது போல் இருந்தது.

அப்பா கண்ணைத் திறந்தார். அவள் விருக்கென்று எழுந்து, ''ஹாய், டாட்!'' என்று லேசாகப் புன்னகை செய்தாள்.

ரேஷன் கார்டு போலி; கண்டுபிடிப்பதே ஜோலி!

''நீங்கள் ரேஷன் கார்டு வைத்திருப்பவரா? அப்படியானால், உங்கள் ரேஷன் கார்டுக்காக ஒவ்வொரு மாதமும் அரசு அறுபது ரூபாயை மான்யமாக வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்!'' என்கிறார் வடார்க்காடு மாவட்ட வழங்கல் அதிகாரி தனவேல்.



''கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் வடார்க்காடு மாவட்டத்தில் 50,000 போலி ரேஷன் கார்டுகளைக் கண்டு பிடித்திருக்கிறோம். ஆக, இந்தப் போலி ரேஷன் கார்டுகளால் அரசுக்கு எவ்வளவு நஷ்டம் என்பதை நீங்களே கணக்குப் போட்டுப் பாருங்கள்!'' என்கிறார்.

''போலி ரேஷன் கார்டுகளே அரசியல்வாதிகளின் செல்வாக்கால்தான் வருகிறது என்கிற நிலையில், உங்களின் பணிக்குக் குறுக்கீடுகள் வருமே?'' என்று கேட்ட போது, ''ரேஷன் கடைகளில் ஒழுங்கீனங்கள் நடந்தால், அது ஆட்சியிலுள்ள உங்களுக்குத்தான் கெட்ட பெயரைச் சம்பாதித்துத் தரும்; அதனால் இதில் நீங்கள் தலையிடாமல் இருப்பதே நல்லது! என்று உண்மையை விளக்கும் போது, தப்பித் தவறிச் சிபாரிசுக்கு வரும் அரசியல்வாதிகளும் பூரண ஒத்துழைப்புத் தருகிறார்கள்!'' என்கிறார் தனவேல்.

அவரது உலர்ந்த அதரங்களில் மெலிதான புன்னகை மலர்ந்தது. ''ஹாய்! அம்மா எங்கே?'' என்றார் மெல்லிய குரலில்.

''அம்மா வீட்டுக்குப் போயிருக்கா. மத்தியானம் வருவா. அதுவரை நா இருப்பேன். ஹௌ ஆர் யூ டாட்?''

தன்னைச் சூழ்ந்திருந்த ஒயர்களையும், மானிட்டரையும் பார்த்து, பலவீனமாகச் சிரித்தார்.

''என்ன ஆச்சு உங்களுக்கு, திடீர்னு? முந்தா நாள் கூட தோட்டத்தைக் கொத்திண்டிருந்ததை நா பார்த்தேனே?''

''திடீர்னு வரல்லே'' என்றார் அவர் மெல்ல. ''எனக்கு இந்த மாதிரி அமெரிக்காவிலே ஒரு தடவை வந்தது.''

''எப்ப? எனக்குத் தெரியவே தெரியாதே?'' என்றாள் அவள் வியப்புடன்.

''நீங்கள் எல்லாம் இந்தியாவுக்கு வந்திருந்தபோது. நா தனியா இருந்தேன். இருபது நாள் ஆஸ்பத்திரியிலே இருந்தேன். யார் கிட்டயும் சொல்லல்லே. உங்கம்மாகிட்ட கூட மெள்ளத்தான் சொன்னேன்.''

''ஏன்?''

''பயந்துருவான்னுதான்... நானே பயந்து போனேன், தனியா இருந்ததாலே. நிஜம்மாவே திசை புரியாத இருட்டிலே இருக்கிற குருடன் மாதிரி இருந்தது.''

''உடனே எங்களை வரவழைக்கிறதுதானே?''

''அட்ரெஸ் புக் டெலிபோன் நம்பர் எல்லாம் வீட்டிலே இருந்தது. என் சினேகிதன் கான்டாக்ட் பண்ணப் பார்த்தான். நீங்கள்ளாம் ஊர் ஊராப் போனதாலே முடியல்லே. நானும் முயற்சி பண்ண வேண்டாம்னு சொல்லிட்டேன். ஆஸ்பத்திரியிலே ரொம்ப நல்ல கவனிப்பு இருந்தது.''

''அமெரிக்காவை விட்டு நீங்க வந்திருக்கக் கூடாது '' என்றாள் அவள் வருத்தத்துடன். ''அங்கே இருக்கிற வசதி இங்கே இருக்காது.''

''இங்கே இருக்கிற வசதி போதும்'' என்றார் அவர் பலவீனமாக. ''இங்கே இருட்டிலே நிற்கிற மாதிரி இல்லே. நம்ம மனுஷா நிறைய இருக்கா, ஓடி வந்து உதவி செய்ய.''

''பாட்டியும் தாத்தாவும் வரேன்னு சொன்னா. நேத்து நா போன் பண்ணினேன்.''

அவளை அவர் வியப்புடன் பார்த்துப் பிறகு கண்ணை மூடிக் கொண்டார். கண்களின் ஓரத்தில் கண்ணீர்த் துளி கட்டி நின்றது. அவள் அவர் கண்ணைத் தன் கைக்குட்டையால் துடைத்து, ''ரிலாக்ஸ் டாட்'' என்றாள். ''நீங்க அதிகம் பேசக் கூடாதுன்னு நினைக்கிறேன்.''

ஒரு முறை உடம்புக்கு வந்ததால் பயந்து கொண்டு இவர் இந்தியாவுக்கு மூட்டை கட்டிக் கொண்டு வந்தது இப்பவும் அவளுக்கு அபத்தமாகப் பட்டது.


''பேசறது சிரமமாயில்லே'' என்றார் அவர் மெள்ள. ''உங்கிட்ட நிறையப் பேசணும் மீரா. என்னைப் பேசவிடு.''

அவள் கவலையுடன் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

(தொடரும்)

வடார்க்காடு மாவட்ட கலெக்டர் ராமசுந்தரம், இப்போது அதிதீவிரமாக இறங்கியிருப்பது சிறுசேமிப்புக்கான குறியீட்டை அடைவதில்தான். ''கடந்த பத்தாண்டுகளாகவே இந்த மாவட்டம் சிறு சேமிப்புக்கான குறியீட்டை எட்டவில்லை. குறியீட்டை அடையும் ஒவ்வோர் ஆண்டும் அந்த மாவட்டத்திற்கு 75 லட்ச ரூபாய் கிடைக்கும். அந்த வகையில் பார்த்தால், கடந்த பத்தாண்டுகளில் இந்த மாவட்டத்திற்கு ஏழரைக் கோடி ரூபாய் நஷ்டம். அது கிடைத்திருந்தால் எவ்வளவோ பணிகளைச் செய்திருக்கலாமே! அதனால்தான் அதில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறேன்!'' என்கிறார் ராமசுந்தரம்.

அடுத்தது மக்களின் வாழ்க்கைத் தரம். ''இந்த மாவட்டத்தில் நடக்கும் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூலமாக அறுநூறு கோடி ரூபாய் அளவுக்கு அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால், அதில் முதலாளிகள்தான் பயனடைகிறார்களே



வித்தியாசமான

தவிர, அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் தரம் அப்படியேதான் இருக்கிறது என்பது ஆச்சரியமான விஷயம். இதற்கும் ஒரு வழி கண்டாக வேண்டும்!'' என்கிறார்.

''இதற்கெல்லாம் மூலகாரணம் எழுத்தறிவின்மை. இந்தக் குறை நீங்கும்போதுதான் தங்களைத் தாங்களே புரிந்துகொண்டு செயல்படுகிற ஆற்றல் மக்களுக்கு உருவாகும் என்பதால் அந்தத் திட்டத்திலும் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறோம்'' என்கிறார் கலெக்டர்.

''வேலூரிலுள்ள சில சினிமாத் தியேட்டர்களில் பணத்தை மட்டும் வாங்கிக் கொண்டு - டிக்கெட்டே கொடுக்காமல் மக்களை அனுமதித்துக் கொண்டிருந்ததைக் கடந்த தீபாவளியின் போது நீங்கள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்த பிறகு சரியாக நடந்ததாகவும், இப்போது மீண்டும் அந்த ஏமாற்று வேலை ஆரம்பமாகியிருப்பதாகவும் சொல்கிறார்களே?''

''அவ்வப்போது நாங்கள் சோதனையிட்டுக் கொண்டுதான் இருக்கிறோம். இருப்பினும் மக்களின் ஒத்துழைப்பில்லாமல் இதை முழுமையாக ஒழிக்க முடியாது. படித்தவர்கள் கூட தியேட்டரில் டிக்கெட் வேண்டுமென்று கேட்டுப் பெறாமல் அமைதியாகப் படம் பார்த்து விட்டு வந்தால் நாம் என்ன செய்ய முடியும்? ஆயினும் இப்போது பரவாயில்லை. டிக்கெட் கொடுக்காத சமயங்களில் ஒரு சிலர், 'டிக்கெட் கொடுக்கிறீர்களா, இல்லை கலெக்டருக்குப் போன் செய்யவா?' என்று கூடத் தியேட்டர்களில் கேட்பதாக அறிகிறேன். இந்த விழிப்புணர்ச்சியைத்தான் நான் எதிர்பார்க்கிறேன். எந்த நடவடிக்கைக்கும் முழுமையான பயன் ஏற்படச் செய்வது இந்த விழிப்புணர்ச்சிதான்!''

முஸ்லீம் மக்கள் அதிகமாக வாழும் மாவட்டம் இது என்பதால், மற்ற மாவட்டங்களை விட இங்கு பிறப்பு விகிதம் சற்று அதிகம் என்பதில் கலெக்டருக்குச் சற்று வருத்தம்தான். ஆனாலும் அந்த வருத்தம் அவரது சுறுசுறுப்புக்கு இடைஞ்சலாக இல்லை என்பதற்கு ஓர் உதாரணம், நெடுஞ்சாலை விஷயத்தில் அவர் காட்டிய சமயோசிதம்.

சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ் சாலை வேலூருக்குள் நுழையும் இடத்தில் ஒரு சிறு பாலம் அமைக்க வேண்டும். அதற்குச் சுமார் ஐந்து லட்சம் அளவுக்குத் தான் செலவு பிடிக்கும் என்றாலும், தங்களது திட்டத்தில் அப் பாலத்திற்கு அனுமதியில்லை என்று சொல்லிப் பாலம் கட்ட வேண்டிய இடத்தை அப்படியே போட்டு விட்டுப் போய் விட்டார்கள், நெடுஞ்சாலைத் துறையினர்.

அது பற்றித் தில்லிக்குத் தகவல் அனுப்பி விட்டால் உடனே நடந்து விடுமா என்ன? பாலம் இல்லாததால் போக்கு வரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. பார்த் தார் கலெக்டர். நகராட்சியிடமிருந்து சிமெண்ட் குழாய்களைக் கேட்டுப் பெற் றார். மாணவர்களைத் துணைக்கு அழைத் தார். அவ்வளவுதான். குழாய்களை அடுக்கி, அதன் மேல் ஜல்லியையும் மண்ணையும் போட்டு, இணைப்பின்றிக் கிடந்த நெடுஞ் சாலையைத் தாற்காலிகமாக இணைத்துப்

லெக்டர்!

போக்குவரத்துக்கு வழிசெய்து விட்டார்!

''இதற்குக் கூட மாணவர்கள்தான் அதிக அளவில் வந்து உதவினார்களே தவிர, பெரியவர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டி வரவில்லை என்பதுதான் சங்கட மாக இருக்கிறது'' என்கிறார்.

வடார்க்காடு மாவட்டத்தில் சுற்று லாத் தலங்கள் என்று பெரிதாக ஏதும் இல்லையென்றாலும் இருக்கிற இடங் களைப் பிரபலப்படுத்துவதில் ஆர்வம் காட்டுகிறார் கலெக்டர். ஏலகிரி மலை வாசஸ்தலம் தவிர, காவேரிப்பாக்கம் ஏரி யில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் துடன் இணைந்து உல்லாசப் படகுச் சவா ரிக்கான வசதிகள் செய்யப்பட்டு வருகின் றன. ''கூட்டத்தைப் பொறுத்து, அங்கே தங்குவதற்கான காட்டேஜ் வசதி போன் றவை படிப்படியாக அமைக்கப்படும்'' என்கிறார். இவை தவிர, வடார்க்காடு மாவட்டத்தில் பிக்னிக் செல்லுவதற்கு ஏற்ற இடமாக இருப்பது அம்ருதி நீர் வீழ்ச்சி.

வேலூருக்கு அருகிலுள்ள கரிகிரி கிராமத்தில், மெருகிட்ட மண்பாண்டம் செய்யும் ஒரு புராதனக் கலை அழியும் நிலையில் இருப்பதை எடுத்துச் சொன்ன போது, தம்மால் ஆனதைச் செய்வதாகக் கூறினார்.

இதே போல் பீடித் தொழிலாளர்களின் நிலை. அவர்கள் தங்கள் குழந்தைகளை ஆயிரம், இரண்டாயிரத்திற்கு பீடி முதலாளி களிடம் அடகுவைக்கும் நிலை இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதைக் குறிப் பிட்ட போது, ''பீடித் தொழிலாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் ஒருங்கிணைந்து பீடித் தொழிலை ஆரம்பித்தால் அவர்களுடைய பிரச்னைக்குத் தீர்வு கிடைக்குமென்று நம்பு கிறேன். அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகிறோம்'' என்றார்.

அப்புறம் இளைஞர்கள். ''சாதாரண மாக எல்லா இளைஞர்களுமே அரசாங்க வேலை கேட்டுத்தான் வருகிறார்கள். அது வும் பட்டப் படிப்புப் படித்து விட்டால் போதும், அதுவே ஒரு பெரிய தகுதி என்று வருகிறார்கள். அவர்களெல்லாம் ஏன் சுய தொழில் பற்றிச் சிந்திக்கக் கூடாது? எல் லோருக்கும் அரசு வேலை அல்லது நாற் காலி வேலை என்பது எப்படிச் சாத்தியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதே யில்லை. அவர்களுக்கெல்லாம் என் னையே ஓர் உதாரணமாகச் சொல்கிறேன்... நான் எம்.எஸ்ஸி. முடித்து விட்டுப் போதும் என்று நினைத்திருந்தால், எனக்கு வேலை கிடைத்திருக்குமா என்பது கூடச் சந்தேகம்தான். இதை உணர்ந்துதான் நான் ஐ.ஏ.எஸ். எழுதி வெற்றி பெற்றேன். ஆக வேலையின்மையின் தீர்வு முயற்சியும் தன்னம்பிக்கையும்தான்!'' என்கிறார்.


கலெக்டருக்குப் பொது மக்களிடம் தான் நல்ல பெயர் என்பதல்ல. சக ஊழி யர்களிடமும் நல்ல பெயர். காரணம், ஊழி யர்களெல்லாம் ஒன்று சேர்ந்து கூடும் 'ஆபீ ஸர்ஸ் கிளப்' என்பதை மாற்றி, 'எம்ப் ளாயீஸ் ரெக்ரியேஷன் சென்டர்' என்று பெயரிட்டு, அதில் அலுவலக உதவியாளர் வரை அனைவரையும் உறுப்பினராக்கி யிருக்கிறார். மாதத்தின் முதல் திங்கட் கிழமையன்று அனைவரும் ஒன்று கூடுகி றார்கள். அப்போது கலெக்டரும் அவரிடம் பணியாற்றும் பியூனும் ஒன்றாகப் பழகுகி றார்கள். கூச்சப்பட்டு விலகி நிற்பவர் களைக் கூடத் தம்மோடு சமமாகப் பழக வைக்கிறார்!

இதுவரை இருந்த எந்தக் கலெக்டரும் இப்படிப் பழகாததால் சக ஊழியர்களுக்கு ஏக மகிழ்ச்சி!


- இளங்கோவன்

எல்லாவற்றையும் விட மேலான பலம் ஆன்ம பலம்











- அறிவுக்கு தெய்வம் **விநாயகர்**
- ஆற்றலுக்குத் தெய்வம் **சுப்ரமணியர்**
- வித்தைக்குத் தெய்வம் **வாணி**
- செல்வத்துக்கு தெய்வம் **லக்ஷ்மி.**

இவர்களுக்கு எல்லாம் தெய்வமாக இருப்பவர் பரம்பொருள் அல்லது மஹாவிஷ்ணு.

செல்வமும் அறிவும், ஆற்றலும் நமக்குப் பலத்தைத் தருகின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலான பலம் ஆன்ம பலம் ஆகும். எனவே ஆன்ம பலத்தைத்தரும் மஹாவிஷ்ணு ஈஸ்வரருக்கும் ஈஸ்வரராக இருக்கின்றார்.

தர்மச்சக்கரம்

ஆன்ம பலம் பெற்ற நல்லோருக்கு கிராண்ட் ஸ்வீட் வாங்கி விநியோகியுங்கள்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை-600 020. போன்: 412557

காதலெனும் வானவில்

23

அப்பா பேசிக் கொண்டு போகப் போக அவளுள் வியப்பும் பரிதாபமும் ஏற்பட்டன. 'காட், எப்படிப்பட்ட மனச் சிக்கல்களில் இவர் தன்னை வருத்திக் கொண்டிருக்கிறார்' என்று தோன்றிற்று. இப்படிப்பட்ட பாவனைகள் இவருள் இருப்பதைத் தன்னால் எப்படி இத்தனை நாட்கள் தெரிந்து கொள்ள முடியவில்லை என்று ஆச்சரியமாக இருந்தது. ஆனால் இவருடைய உணர்வு நிலை வேறு. பிணைப்புகளும் ஈர்ப்புகளும் வேறு. அவளும் மஹேஷுும் அதில் சம்பந்தப் பட்டுப் போனதுதான் சோகம் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

நல்ல வேளையாக டாக்டர் உள்ளே வந்து பேசக் கூடாது என்று கண்டித்தார். ''ப்ளீஸ் பேச விடுங்கள், பிறகு எனக்குப் பேச முடியாமல் போகலாம்'' என்று அப்பா சொன்னது அவளை உலுக்கிற்று.

''வீணாக உணர்ச்சிவசப்படாதீர்கள். சரியாக ஆகக்கூடிய உடம்பை நீங்களாகக் கெடுத்துக் கொள்வீர்கள்'' என்று டாக்டர் சொன்ன பிறகே அப்பா அடங்கினார். இயலாமையுடன் கண்களை மூடிக் கொண்டார். அவரை அந்த நிலையில் பார்க்க அவளுக்கு ரொம்பவும் துக்கமாக இருந்தது. அவரை மெல்லத் தொட்டு மிருதுவாகச் சொன்னாள். ''யூ வில் பி ஆல் ரைட் டாட். நம்பிக்கை வையுங்கள்.'' திரும்பத் திரும்ப அதை ஒரு மந்திரம் போல் தான் சொல்லிக் கொண்டிருப்பதைக் கண்டு அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. மூளை ஸ்தம்பித்துப் போனது போல் இருந்தது. மரண பயத்தை வெல்வது அசாத்தியமான காரியம் என்று தோன்றிற்று. 'ஒரு இருட்டிலிருந்து இன்னொரு இருட்டு' என்று ஹரியைப் போல் லேசாக என்னால் நினைக்க முடியாது. பிரத்தியட்ச உலகத்தை அறிந்தவள் நான். நகமும் சதையும், அழுகையும் சிரிப்பும் எப்படியிருக்கிறது என்று அறிந்தவள். இதில் ஏற்படும் நெருக்கம் வேறு. அதனாலேயே மரணம் என்பது சூன்யத்தை ஏற்படுத்துகிறது - காலுக்கடியில் இருந்த ஆதாரம் நழுவுவது போல. பிரத்தியட்ச உலகம் ஏற்படுத்தும் தாக்கங்கள் ஆழமானவை. அனுபவங்கள் துல்லியமானவை.

அதனால்தான் அப்பா அதிகமாகத் துன்பப்பட்டிருக்கிறார். ''நா திடீர்னு செத்துப் போனா உங்கம்மா எப்படி சமாளிக்கப் போறான்னு பயந்து போனேன்'' என்றார் பழைய பயத்தை ஞாபகப்படுத்திக் கொண்டு. ''இரண்டு அதிபுத்திசாலியான குழந்தைகளை அமெரிக்காவிலே ஓர் இந்திய விதவை எப்படி வளர்க்கப் போறான்னு கவலைப்பட்டேன். அந்த கலா சாரத்திலே வளர்ற குழந்தைகள் அப்பா வுடைய கவனிப்பு இல்லாம, நாள் முழுவதும் வெளியிலே வேலை செஞ்சு வீட்டுக்குச் சோர்ந்து வர்ற அம்மா கிட்ட எந்த அளவுக்குக் கட்டுப் பட்டு இருப்பாங்கன்னு கவலைப் பட்டேன். உனக்கு அப்ப பதினைஞ்சு வயசு. பதினாறு பதினேழு வயசிலே உன் அமெரிக்க சினேகிதர்கள் வீட்டை விட்டுப் போகிற மாதிரி நீயும் கிளம்பிப் போயிட்டா சுஜாதா என்ன செய்வான்னு பயந்தேன். உன்னுடைய ஆதரவு அவளுக்கு என்னிக்கும் இருக்கணும்னு ஆசைப்பட்டேன் மீரா. இல்லேன்னா சுஜாதா நொறுங்கிப் போயிடுவா. உனக்கு அமெரிக்க சினேகிதர்கள்தான் அதிகம். உனக்கு இந்தியச் சூழல் தெரியணும், பாரம்பர்யம் தெரியணும், இல்லேன்னா நீ எங்ககிட்டேர்ந்து விலகிப் போயிடுவேன்னு எண்ணம் பதிஞ்சு போச்சு. நானும் இல்லேன்னா சுஜாதாவி னாலே அதை நிச்சயம் தாங்க முடியாது. அதனாலேதான் ரொம்பத் தீவிரமா யோசிச்சு இந்தியாவுக்கு வந்துடணும்னு முடிவு பண்ணினேன். இங்கேயும் கொஞ்ச நாளா...''

அதற்குள் டாக்டர் வந்து தடுத்ததில் அப்பா வாயை மூடிக் கொண்டார். மேற்கொண்டு என்ன சொல்ல வந்தார் என்று அவளுக்கு விளங்கவில்லை. மனத்திலிருந்ததைச் சொல்லி விட வேண்டும் என்று அவர் ஆத்திரப்பட்டது புதிராக இருந்தது. அவருடைய பயம் எதுவாக இருந்தாலும் அமெரிக்காவில் தோன்றிய பயம் போல் இதுவும் அர்த்தமற்றதாக இருக்கும் என்று

வாஸந்தி

சோர்வு ஏற்பட்டது. அவரது இத்தனை பயங்களுக்கும் பின்னால் இருப்பது அம்மாவின் மேல் இருக்கும் அவரது அசைக்க முடியாத பிரியம் என்பது நெகிழ்ச்சியை ஏற்படுத்திற்று.

அம்மாவுக்காக என்னவெல்லாம் செய்யச் சித்தமாக இருந்திருக்கிறார் இவர்! இவர் செய்ததெல்லாம் சரியா தப்பா என்று விவாதிக்கத் தனக்கு உரிமை கிடையாது என்று தோன்றிற்று. ஆனால் அம்மாவைப் பற்றிக் கவலைப்பட்ட அளவு தன்னைப் பற்றியும் மஹேஷைப் பற்றியும் கவலைப்படவில்லை என்று வருத்தம் ஏற்பட்டது. அமெரிக்காவில் குடும்பம் நடத்தத் தீர்மானித்த போதே உங்கள் குழந்தைகள் வித்தியாசமான சூழலில் வளருவார்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்! நான் பிறந்தது அமெரிக்காவில். இப்பவும் அமெரிக்க பிரஜை. இந்தியாவில் இன்னும் எனக்குப் பொருந்தவில்லை. என் எண்ணங்கள் ஒரு அமெரிக்க டீன் ஏஜரைப் போல் இருந்தால் அது என் குற்றமில்லை...'



அப்பா இன்னும் தூங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அவருடன் இத்தனை நேரம் பேசியது போல அவளுள் பிரமையேற்பட்டது. அப்பா இப்படிப்படுத்ததில் திடீரென்று அவளுக்குப் பத்து வயது கூடிவிட்டது போல் தோன்றிற்று. 'என்னைத் தான் இவர் மலை போல் நம்பிக் கொண்டிருக்கிறார்' என்ற பிரக்ஞை, சில மணி நேரப் போதில் சிந்தனைக் கோணத்தை வித்தியாசப்படுத்திற்று. நான் பொறுப்பில்லாமல் இருப்பேன் என்று எப்படி இவருக்குச் சந்தேகம் தோன்றிற்று என்று விசனம் ஏற்பட்டது. எனக்கு உங்களிருவரிடம் இருக்கும் நெருக்கம் இங்கு என் தோழிகளுக்குத் தங்கள் பெற்றோர்களிடம் இல்லை...

யாரோ மெலிதாக அழும் குரல் கேட்டது. அவள் திடுக்கிட்டு எழுந்து தடுப்பு ஸ்க்ரீனுக்கு அப்பால் பார்த்தாள். ஒரு படுக்கையைச் சுற்றி டாக்டர்களும் நர்சுகளும் நின்றிருந்தார்கள். கட்டிலின் விளிம்பைப் பிடித்தபடி ஒரு பெண், அம்மாவின்



❑ சென்னை அண்ணாநகரில், தள்ளுவண்டியில் தர்பூசணிப் பழங்களை விற்கும் ஒரு பெண், தர்பூசணித் துண்டங்களை குடைக் கொசுவலைக்குள் வைத்துச் சுகாதாரமாக வியாபாரம் செய்து வருகிறார். மற்ற தள்ளுவண்டி வியாபாரிகளும் இதே முறையைக் கையாளலாமே!

- கே. என். பாலகிருஷ்ணன்

வயசிருக்கும். நின்று தனக்குள் அழுது கொண்டிருந்தாள்.

மீரா கலவரத்துடன் தன் இடத்துக்கு வந்து உட்கார்ந்து கொண்டாள். அந்தப் பேஷண்ட் இறந்து விட்டார் என்று தோன்றிற்று. அப்பா இன்னும் கண் மூடிய நிலையில் படுத்திருந்தார். மானிட்டர் துள்ளிக் கொண்டிருந்ததில் மூச்சு இருக்கிறது என்று நிம்மதியேற்பட்டது. அழுகை மெல்ல மெல்ல தேய்ந்து ஓய்ந்தது. மீராவுக்கு எழுந்து பார்ப்பதற்குப் பயமாக இருந்தது. உட்கார்ந்த நிலையிலேயே கால்களைக் குத்திட்டு அமர்ந்து கொண்டு முகத்தை முழங்கால்களுக்குள் புதைத்துக் கொண்டாள். திடீரென்று மிக மிக ஆயாசமாக இருந்தது.

அப்பாவின் குரல் கேட்டது போல் அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அப்பா விழித்திருந்தார். அவள் அவசரமாக அவரருகில் சென்றாள். ''கூப்பிட்டீங்களாப்பா?'' என்றாள்.

''பரீட்சை எப்படிப் பண்ணே?'' என்றார் அவர் மிக மெதுவாக.

''ரொம்ப நன்றாய்ப் பண்ணினேன்'' என்றாள் அவள்.

அவர் அதரங்களில் மெல்லிய புன்னகை அரும்பிற்று.

''நன்றாய்ப் படி. நிறையப் படி.''

அவர் மீண்டும் கண்ணை மூடிக் கொண்டார் தனக்குள் ஆழ்ந்து போனவர் போல்.

''மெடிகல்லுக்காக அமெரிக்கன் யூனிவர்ஸிடிக்கு அப்ளிகேஷன் போட்டிருக்கியே, இடம் கிடைச்சா சேர்ந்துடு. பணம் இருக்கு. முயற்சி பண்ணா ஸ்காலர்ஷிப்பும் கிடைக்கும்'' என்றார் கண்ணைத் திறக்காமலே. அவளுக்குக் கலவரமாக இருந்தது. தனக்குத்தானே சமாதி கட்டிக் கொண்டு அதிலிருந்து இவர் பேசுவது போல் தோன்றிற்று.

''டாட். நீங்க எதுக்கு இதையெல்லாம் இப்பச் சொல்லணும்?'' என்றாள் பரிதவிப்புடன். ''வீட்டுக்கு வந்தப்புறம் சொல்லுங்களேன், யூ ஜஸ்ட் ரிலாக்ஸ் நௌ.''

''வீட்டுக்குப் போனேன்னா சரி. போகல்லேன்னா...?''

அவளுக்கு அழுகை வந்தது. இவர் நம்மைப் பயமுறுத்துகிறாரோ என்று கூடத் தோன்றிற்று.

''டாட் ப்ளீஸ். இப்படியெல்லாம் பேசாதீங்க.''

''ஸாரி கண்ணம்மா'' என்றார் அவர் கண்களைத் திறந்து. ''நான் தயாராயிருக்கேன் அவ்வளவுதான். உங்கிட்ட நான் இதைச் சொல்ல வேண்டியது அவசியம். படிப்பு முக்கியம் போல அம்மாவும் மஹேஷும் முக்கியம். மூத்த குழந்தையானதாலே உனக்குப் பொறுப்பு அதிகம். அதை நீ புரிஞ்சுக்கணும்.''

''இதையெல்லாம் எதுக்கு நீங்க சொல்றீங்க?'' என்றாள் அவள் அழுகை வெடிக்க.

''ஸாரி'' என்றார் அவர் மறுபடி கண்களை மூடிக் கொண்டு. ''நா சொல்றதைத் தப்பா நினைக்காதே. நீ உன் வாழ்க்கையைத் தியாகம் பண்ணணும்னு சொல்லல்லே. இந்திய குடும்பங்கள்லே ஒரு பிள்ளைக்கு எப்படி பொறுப்பு உண்டோ அதே போல உனக்கும் பொறுப்பு இருக்குங்கறதுக்காகச் சொன்னேன்.''

''நானும் அதை உணர்ந்திருக்கேன்...'' என்றாள் அவள் ரோசத்துடன். ''நான் ஒரு அசட்டு மீனாட்சியோ நந்தினியோ இல்லே, இப்பவே கல்யாணம் பண்ணிண்டு கிளம்பிப் போறேன்னு சொல்ல...''

அவர் அதரங்களில் புன்னகை மலர்ந்தது. 'என்னைப் பற்றி உங்களுக்கு ஏன் சந்தேகம்?' என்று கேட்க நினைத்தாள். ஆனால் அவர் மறுபடி தூங்கிப் போனார். இவர் ஏன் இப்படியெல்லாம் பேசினார் என்று அவளுக்கு வேதனையாக இருந்தது.

அம்மா குளித்து, குங்குமமும் விபூதியுமாகத் தூய்மை துலங்க வந்தாள். ஏற்கெனவே அவளில் ஏதோ கழண்டு போன மாதிரி மீராவுக்குத் தோன்றிற்று. கனிவு சுரந்தது.

''நீ வீட்டுக்குப் போயிடு. மஹேஷ் தனியா இருக்கான். பாட்டி தாத்தா வேற வருவா'' என்றாள் அம்மா அப்பாவைப் பற்றி விசாரித்து விட்டு. ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பும் போது மீராவுக்கு அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. ''அழாதே மீரா அழாதே. பகவான் இருக்கார்'' என்று அவள் முதுகைத் தட்டிய

அம்மாவுக்கும் கண்ணில் நீர் நிறைந்தது.

சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் போல் பாட்டியும் தாத்தாவும் மாலையிலேயே வந்து விட்டார்கள். அவர்களைப் பார்த்ததுமே அவளுக்குத் தெம்பு பிறந்தது. அவர்களது பேச்சின் கலகலப்பில் மரணத்தின் பயம் பதுங்கிக் கொண்டது - அரவம் கேட்டதும் பறந்து செல்லும் பட்சி போல. பாட்டி உடனடியாகக் குளித்து விளக்கேற்றினாள். கண்ணை மூடிப் பிரார்த்திக்கும் போது அண்டசராசரத்துக்கும் பிரார்த்திப்பவள் போலிருந்தது. மஞ்சள் துணியில் முடிந்து வைத்தாள். "பகவானே, சோதிக்காதே அப்பனே! எங்களுக்குத் தாங்க சக்தி இல்லே'' என்றாள் யாரோ நெருங்கிய பந்துவிடம் பேசுவது போல். அடுத்து நகர்ந்த நான்கு நாட்களும் பாட்டியும் தாத்தாவும் இருந்ததால்தான் சமாளிக்க முடிந்தது என்று மீராவுக்குத் தோன்றிற்று. நிஜமாகவே அந்தப் பகவான் இவர்களது சொல்லுக்குக் கட்டுப்பட்டு வந்து விடுவார் என்று நம்பிக்கை வந்தது. ஆனால் ஆண்டவன் எங்கோ தொலைவுக்குச் சென்றிருக்க வேண்டும். அப்பாவின் ஜீவன் எதிர்பாராத சிக்கலில் மாட்டிக் ,கொண்டு கோமாவில் சரிந்து ஐந்தாம் நாள் பிரிந்து போயிற்று...

காலடியில் நிலம் பிளந்து போனது போல் தடுமாற்றம் ஏற்பட்டது. தனது அறையின் தனிமையில் அவள் தலையணையைக் குத்தி ''இட் இஸ் நாட் ஃபேர்!'' என்று அமானுஷ்யமாய் நின்ற எதையோ மிகக் க்ரோதத்துடன் திட்டினாள். மஹேஷ் அவளுடைய இடையைப் பிடித்துக் கொண்டு அழும் போது தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அவனைச் சமாதானப்படுத்தினாள். 'அம்மாவும் மஹேஷும் உன் பொறுப்பு' என்று அப்பா எங்கிருந்தோ நினைவூட்டுவது போல் இருந்தது. மனசைக் கனமாக அழுத்திற்று.

அம்மாவிடம் ஆச்சரியகரமான ஒரு நிதானம் தென்பட்டது. அப்பா ஆஸ்பத்திரியில் இருந்தபோதே எல்லாக் கண்ணீரையும் சிந்தி விட்டாள் என்று தோன்றிற்று.

''இரண்டு வருஷமா என்னை இதுக்குத் தயார் பண்ணிண்டு வந்திருக்கார் அத்தே!'' என்று பாட்டியிடம் அவள் சொல்வதைக் கேட்கும் போது, தான் இதுநாள் வரை எதையும் கவனிக்காத ஜடமாய் இருந்திருப்பது மீராவுக்குக் கூச்சத்தை ஏற்படுத்திற்று.

பாட்டியும் தாத்தாவும்தான் இடிந்து போனார்கள். சில சமயம் கட்டுப்படுத்திக் கொள்ள இயலாமல் தேம்பி அழுதார்கள்.

டெலிபோனில் யார் யாருக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று அம்மா அவளிடம் சில பெயர்களைச் சொன்னாள்.

அவளுக்குச் சட்டென்று ஹரியின் ஞாபகம் வந்தது. தன்னுடைய துக்கத்தை அவனுடன் தான் பகிர்ந்து கொள்ள முடியும் என்று தோன்றிற்று. அவனுக்கு போன் செய்து செய்தியைச் சொன்ன போது அழுகை குமுறிக் கொண்டு வந்தது.

''அழாதே மீரா. ப்ளீஸ், அழாதே'' என்றான் அவன் கெஞ்சுபவன் போல். ''உன்னைச் சமாதானப்படுத்த எங்கிட்ட வார்த்தைகள் இல்லே.''

மேற்கொண்டு பேச முடியாமல் அவள் டெலிபோனைக் கீழே வைத்தாள்.

மறுநாள் காலையில் துக்கம் விசாரிக்க வந்த கூட்டத்தில் ஹரியும் மைதிலியும் வந்து நின்றதைப் பார்த்து மனசு நெகிழ்ந்தது. இருவரையும் அணைத்துக் கொண்டு மனசு விண்டு விட்டதைப் போல அழுத போது துக்கத்தின் எடை குறைந்தது போல் இருந்தது.

பம்பாயிலிருந்து யசோதாவும் வெங்கடேஷும் வந்தார்கள். பத்தாம் நாள் காரியம் முடிந்ததும் யசோதா அவளிடம் ஒரு கேள்வி கேட்டாள்.

''அந்தக் குருட்டுப் பையன் இருக்கானே, ஸாரி அவன் பெயர் தெரியாது எனக்கு. அவனோடு உனக்குச் சாதாரண சினேகிதம்தானே?''

இந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம் என்று மீரா திகைப்புடன் அவளைப் பார்த்தாள்.

(தொடரும்)

''இதென்ன புது மாதிரி இருக்கு? அந்தக் கேடி ''போலீஸைப் பிடிங்க... பிடிங்க''ன்னு கத்துறானே...?''

''மாமூல் கம்மியா இருக்குன்னு அவர் வாங்காமல் ஓடறார்; இவன், ''பிடிங்க பிடிங்க''ன்னு பணத்தை எடுத்துக்கிட்டு அவர் பின்னால ஓடறான்!''

– சீர்காழி வி. ரேவதி



தமயந்தி இவனைப் பார்த்து மெலி தாகச் சிரித்தாள்.

விஸ்வநாதனுக்கு அந்தச் சிரிப்பு சற்று தைர்யத்தை அளித்தது.

டிராயரை இழுத்து, புத்தகத்தின் நடுவி லிருந்து கடிதத்தை உருவினான். விரல்கள் மெலிதாக நடுங்கின. சற்று நேரம் உள்ளுக் குள் விவாதித்தான்.

'விஸ்வநாதா... இது வேண்டாம்'

'இல்லை. வேண்டும்.'

'இது தவறு.'

'காதலை வெளிப்படுத்துவது தவ றில்லை.'

'சரி தவறை நிர்ணயிப்பது நீயல்ல; தமயந்தி.'

'அதனால்தான் இக் கடிதம்.'

மீண்டுமொருமுறை தமயந்தி இவ னைப் பார்த்துச் சிரித்தாள்.

தடக்கென எழுந்தான். தமயந்தியின் அருகில் போனான்.

''என்ன விஸ்வநாதன்?''

கடிதத்தை அவளிடம் நீட்டினான். அவள் சற்றுத் தயக்கத்துக்குப் பின் வாங்கி னாள்.

''என்ன இது?''

''படிங்க... நிதானமா யோசிச்சுப் பதில் சொல்லுங்க...!''

வேகமாய் நடந்து ஸீட்டில் உட்கார்ந் தான்.

நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவள் கடிதத்தைப் பிரித்துக் கொண்டிருந்தாள். அவன் முகம் வியர்க்க ஆரம்பித்திருந்தது.



கர்சீப் எடுத்து முகம் துடைத்தான்.

தமயந்தி தடக்கென எழுந்தாள். இவனைத் தாண்டி நடந்து போய் டாய்லெட்டுக்குள் நுழைந்தாள்.

இவனுக்குள் சிலீரிட்டது.

ஐந்து நிமிடம் கழித்துத் திரும்பியவள் இவன் பக்கம் பார்க்காமலேயே தன் ஸீட்டில் போய் அமர்ந்தாள்.



லஞ்ச் டைம். அலுவலகம் நிசப்தமாயிருந்தது. விஸ்வநாதன் தனியனாய் அமர்ந்திருந்தான். சாப்பிடப் பிடிக்கவில்லை. 'இது பெரிய ஹிம்சை. முடிவு தெரியாமல் இதுவா, அதுவாவென அல்லாடுவது பெரிய வேதனைதான்.

மென்மையாய்க் காலடிச் சப்தம் கேட்டது. திரும்பாமலேயே இவனுக்குத் தெரிந்தது. தமயந்தி அவன் அருகில் வந்தாள். மடக்கு சேரை அவன் எதிரில் போட்டு அமர்ந்தாள். ஒற்றை நிமிடம் இவனை உற்றுப் பார்த்தாள். பின் தயக்கமாய் இவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஏன் விஸ்வநாதன் இப்படி செஞ்சீங்க?''

கேள்வி கஷ்டப்படுத்தியது.

''எனக்குப் பிடிச்சிருந்தது தமயந்தி. நேர்ல சொல்லத் தயக்கம். அதான் எழுதிட்டேன்...!''

''பேசத் தயங்குற விஷயத்தை எழுதாமலும் இருந்திருக்கலாமே...!''

விஸ்வநாதன் தலைகுனிந்தான்.

''தப்புன்னா விட்ருங்க தமயந்தி...!''

''தப்பில்லே...!''

''அப்ப சரியா?''

''அவசரப்படாதீங்க... நான் ஒண்ணு சொன்னா கேப்பீங்களா?''

''நிச்சயமா... தமு...!''

'தமயந்தி' குறுகி 'தமு'வாகியதை அவள் கவனித்தாள்.

''சாயங்காலம் எங்க வீட்டுக்கு வர்றீங்க என்னுடன்...!''

''ஏன்?''

''அங்கே சொல்றேன். வாங்க...!''

தயங்கினான்.

''பயப்படாதீங்க. வந்து என்னோட பேமிலியப் பாருங்க.''

''சரி.''

தமயந்தி வீடு ஒண்ணும் அவ்வளவு பெரிதில்லை. அடக்கமாய் இருந்தாலும் அழகாய் இருந்தது. தமயந்தியின் அம்மா மிக அழகாயிருந்தார். தமயந்தியின் மூன்று சகோதரிகளும் இவனிடம் சகஜமாய்ப் பேசினார்கள்.

பேச்சினிடையே தடக்கென தமயந்தி சொன்னாள்.

''அம்மா... விஸ்வநாதன் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்றாரு...!''


அம்மா இவனை உற்றுப் பார்த்தாள். தமயந்தியின் சகோதரிகள் மெல்ல எழுந்து நகர்ந்தார்கள். தமயந்தி அவசரமாய்த் தடுத்து நிறுத்தினாள்.

''தமயந்தி, இவருக்கு எல்லாத்தையும் சொல்லிடு!'' என்றாள் அம்மா.

தமயந்தியின் வீட்டிற்கு மிகப் பெரிய துக்கமிருந்தது. தந்தை மூர்க்கன். தாயின் அழகே அவளுக்கு எதிரி. ரசிக்க வேண்டிய கணவன் ஹிம்சைப்படுத்தினான்.

அவன் நல்ல கணவனுமில்லை. நல்ல தகப்பனுமில்லை. நாலும் பெண் குழந்

அருள்வாக்கு



சௌக்கிய அனுபோகம் அதிகமாக ஆக, ஞானம் வேண்டும் என்ற எண்ணம் குறைந்து கொண்டே போகிறது. இதனால்தான் லக்ஷ்மி இருக்கிற இடத்தில் சரஸ்வதி இருப்பதில்லை என்று பொதுவில் வசனம் வந்து விட்டது. இதற்கு வேடிக்கையாக ஒரு காரணம் தோன்றுகிறது. சாதாரணமாக மாமி யாரும் மாட்டுப் பெண்ணும் ஒரே இடத்தில் ஒத்து இருக்க மாட்டார்கள். மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் தகப்பனாரும் பிள்ளையும் ஆகி றார்கள் என்றால், அப்போது மஹாலக்ஷ்மியும் சரஸ்வதியும் மாமியார் - மாட்டுப் பெண் ஆகிறார்கள். இவர்கள் சேர்ந்து சௌ ஜன்யமாக இருக்க மாட்டார்களே! அத னால்தான் பொதுவில் லக்ஷ்மி கடாக்ஷம் இருக்கிற இடத்தில் சரஸ்வதி கடாக்ஷம் இருப்பதில்லை. அல்லது இதையே நல்லபடியாகவும் சொல்லலாம். மாமியாரிடம் உள்ள மகா மரியாதை காரணமாகவே அவள் இருக்கிற இடத்தில் தான் முந்திரிக் கொட்டை மாதிரி தெரியக் கூடாது என்று சரஸ்வதி ஒதுங்கிப் போவதாகவும் சொல்லலாம்.

இதெல்லாம் வேடிக்கையாகச் சொல்கிற பேச்சு. வாஸ்தவத்தில் இருக்கிறது ஒரு பரா சக்திதான். அவள்தான் எந்தெந்த சமயத்தில் எந்தெந்த விதமாக அநுக்கிரகம் செய்து பக்குவத்தைத் தர வேண்டுமோ அப்படிச் செய்வதற்காக மகாலக்ஷ்மியாக, சரஸ்வதி யாக, ஞானாம்பிகையாக வருகிறாள். ஏதோ ஒரு ரூபத்தில் பக்தி என்று வைத்து விட்டால் போதும். அப்புறம் நடக்க வேண்டியதை அவளே பார்த்துக், கொள்வாள். இந்த பக்திதான் நமக்குப் பெரிய செல்வம், அதுவே பெரிய லக்ஷ்மி.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச் சார்ய சுவாமிகள்.

தைகள். தமயந்திக்கு மூன்று வயதிருக்கும் போது அவள் தகப்பன் ஓடிப் போனான். மீண்டும் திரும்பவேயில்லை.

அவன் பார்த்த வேலையே அவன் அம்மாவுக்குக் கிடைத்தது.

ஒரு முப்பது வயதுப் பெண் நாலு பெண் குழந்தைகளுடன் யுத்தத்தில் குதித் தாள். எத்தனையோ ரணங்கள். குழந்தைகள் வளர்ந்தன.

பெரிய பெண் டீச்சர் உத்யோகத்திற்குப் போனாள். இரண்டாவது பெண் தமயந்தி. மூன்றாமவள் கல்லூரிக்கும், நான்காமவள் பள்ளிக்கும் போன போதுதான் டீச்சர் காதல் திருமணம் செய்து கொண்டாள்.

அம்மா முதலில் மறுத்தாலும் பின் சம்மதித்தாள். அம்மா மறுத்தது நியாயம் தான் என ஒரே வருடத்தில் தெரிந்து கொண்டார்கள்.

கதையில் வருவது போலவே நம்ப முடியாத நிகழ்ச்சிகள் இவர்கள் வாழ்வில் நடந்தன. ஒரு வருட அலைச்சலுக்குப் பின் அக்கா 'டைவர்ஸி' ஆனாள்.

தமயந்தி முடித்த போது அவள் அம்மா வின் கண்கள் லேசாய்க் கலங்கியிருந்தன. அவள் அக்கா எழுந்து போய் ஜன்னல் கம்பிகளைப் பற்றிக் கொண்டிருந்தாள்.

''ஏன்.. விஸ்வநாதன் எங்களுக்கு மட்டும் இப்படி நடக்கணும்.. நாங்க என்ன தப்பு செய்தோம்...?'' தமயந்தி ஆக்ரோஷ மாய்க் கேட்டாள்.

விஸ்வநாதன் மௌனமாயிருந்தான்.

''இப்ப சொல்லுங்க விஸ்வநாதன். நீங்க சொன்னவுடனே உங்களை எப்படி நான் கல்யாணம் பண்ணிக்க முடியும். இந்த ரெண்டு வருஷமாய் உங்களைப் பார்த் துட்டு வர்றேன். யு ஆர் எ ஜென்டில் மேன்.. ஐ லைக் யூ... ஆனால் என் பொறுப்புகளை மனப்பூர்வமாப் பகிர்ந்துக்க நீங்க தயாரா என்கிறது எனக்குத் தெரியாது...''

விஸ்வநாதன் தொடர்ந்து மௌனமா யிருந்தான்.

''உங்க பதிலை என்கிட்டே இப்ப, உடனே சொல்ல வேணாம் விஸ்வநாதன். யோசித்து நாளைக்குச் சொல்லுங்க. சொல்லக் கூட வேண்டாம்... சம்மதம்னா உங்க ஸ்கூட்டர் எடுத்துட்டு நாளை காலை ஆபீசுக்குப் போறப்ப எங்க வீட்டுக்கு வாங்க. சேர்ந்தே போகலாம். விருப்ப மில்லையென்றால் நேராப் போய்டுங்க...'' தமயந்தி தீர்க்கமாய்ச் சொன்னாள்.

மறுநாள்.

விஸ்வநாதன் மிகக் கவனமாய், தம யந்தியின் வீட்டைத் தவிர்த்து வெகு சீக்கிர மாகவே ஆபீசுக்குப் போனான்.

வாஸந்தி 24

யசோதாவும் வெங்கடேஷும் கிளம் பிப் போய்ப் பத்து நாட்கள் ஆகி விட்டன. ஆனால் அன்று யசோதா கேட்ட கேள்வி இப்பவும் மயான மௌனத்தில் உறங்கும் வீட்டின் மூலை முடுக்கிலிருந்தெல்லாம் திடும்மென்று அவளை நோக்கிப் பாய்வது போலிருந்தது. யசோதா வருவதற்கு முன்பே, இந்தச் சுவர்களுள் அது பதுங்கி யிருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ''இங்கேயும் கொஞ்ச நாளா...'' என்று மரண வாயிலில் தவித்து நின்ற அப்பாவின் வார்த்தைகளுக்குப் பின்னால் அது பைசாச மாக நின்றிருக்க வேண்டும்.

ஆத்மார்த்த தோழியின் நெருக்கத்துடன் யசோதா மிக மெல்லிய குரலில் கேட்டாள்.

''நீ அந்தப் பையனைக் காதலிக் கிறியா?''

ஒரு வினாடித் தடுமாறிப் போனாள் மீரா. பிறகு சமாளித்துக் கொண்டு, ''வாட் டூ யூ மீன்?'' என்றாள். ''நீங்க வெங்க டேஷைக் காதலிச்சுக் கல்யாணம் செய்து கொண்ட மாதிரியா?''

''வெல்...''

ஆமாம் என்று சொல்லத் தயங்கும் யசோதாவைக் கண்டு முன்பு போல் பகபகவென்று சிரிக்க முடியவில்லை. கடந்த பதினைந்து நாட்களில் அவளது பால்யம் உதிர்ந்து வாழ்வின் அடுத்த கட்டத் திற்குத் தள்ளப்பட்டது போல் ஒரு புதிய நிதானம் ஏற்பட்டிருந்தது.

''காட்! இல்லே'' என்று அவள் தலை யசைத்தாள்.

எனக்கு அவன் ரொம்ப நல்ல சினே கிதன். அமெரிக்காவிலே எரிக் எனக்குச் சினேகிதனா இருந்த மாதிரி. ஐ லவ் ஹரி. ஆனா நீங்க நினைக்கிற மாதிரி இல்லே.''

யசோதா மேற்கொண்டு அதைத் தொட ராமல் பேச்சின் திசையைத் திருப்பி விட்டாள். அவள் ஊருக்குக் கிளம்பிச் சென்ற பிறகுதான் அது அப்பாவித்தனமான கேள்வி இல்லை என்று புரிந்தது. அவள் மூலம் அம்மா தனது சந்தேகத்தைத் தெரி வித்தாள் என்று தோன்றிற்று. அப்பாவை வதைத்த கேள்வியாக அது இருந்திருக்க வேண்டும் என்று புரிந்து, மனசு அதிர்ந்தது. அவள் கண்ணை மூடும்போதெல்லாம் கண் சிமிழுக்குள் அப்பா நின்றார். ''ஸாரி கண்ணம்மா'' என்றார். ''ஒரு நாளைக்கு என்னைப் புரிஞ்சுப்பே.''

இப்போது புரிவது போல் இருந்தது. அப்பாவின் அபரிமிதமான அன்பும், தனது உடல்நிலையைப் பற்றின பயமும்தான் அப்படியெல்லாம் அவர் விபரீதமாகக் கவ லைப்பட்டதற்குக் காரணம் என்று விசன மேற்பட்டது. அப்பாவின் மறைவை அம்மா ஆச்சரியகரமான தைரியத்துடன் தாங்கிக் கொண்டது போல் இருந்தது. அவருடைய அன்பினால் கிடைத்த பலமோ அல்லது இந்திய தத்துவார்த்த சமாதானமோ காரணமாக இருக்கலாம். அப்பா கச்சித மாகத் தான் செய்ய நினைத்ததைச் செய்து விட்டார். அவருடைய அன்பான சுஜாதா வெள்ளைக்காரனின் தேசத்தில் தன்னந்தனி யாக 'பிராப்ளம்' குழந்தைகளைச் சமாளிக்க வேண்டியதில்லை. குழந்தைகளை வேரோடு பிடுங்கி இந்திய மண்ணில் நட்டாகி விட்டது. அதில் அவர்கள் துளிர்ப் பதும் துளிர்க்காததும் அவர்களின் பிரச்னை.

அப்பாவின் செய்கையை இத்தனைக் கடுமையாகத் தான் விமர்சிப்பது தவறு என்று மீரா அடிக்கடி தன்னைச் சமா தானப்படுத்திக் கொண்டாள். அவருடைய உடம்பு ஆரோக்கியமாக இருந்திருந்தால் இப்படிப்பட்ட ஏக்கங்களும் பயங்களும் தோன்றியிருக்காது. ஆனால் இந்தியா வந்த பிறகும் அந்த பயம் வேறுவிதமான பரிமா ணங்கள் எடுத்தது ஆச்சரியமாக இருந் தது. ஒரு அங்கஹீன மானவனைக் காத லித்து என்ன சிக்க லில் மாட்டிக் கொள் வாளோ என்ற பயம். ''அவனுடைய சினே கிதம் சுமையாகப் போகும்.'' அவனது அங்கஹீனத் தைப் பற்றின உணர்வே அவளுக்கு இல்லை என்பதுதான் அவருக்குக் கவலை அளித்திருக்கும். ஒரு இயல்பான அழகிய சினேகிதத்தைப் பற்றி இப்படிப்பட்ட கற் பனைகள் அவரை வதைத்தன என்று ஹரி அறிந்தால் அதிர்ந்து போவான் என்று அவளுக்குக் கூச்சமேற்பட்டது.

பயம் தெளியா மலே திடும்மென்று அப்பா, ''இனிமேல் நீ பொறுப்பெடுத்துக் கணும்'' என்று தமது

ஸ்தானத்தை அவளிடம் ஒப்படைத்து விட்டது போல் இருந்தது. அதை நினைத்துக் கவலை ஏற்பட்டது. ஆதாரா ஊன்று கோல்கள் என்று நினைத்தவையெல்லாம் எதிர்பாராமல் முறிந்து அந்தரத்தில் நிற்பது போல் இருந்தது.

"குழந்தை, எழுந்திருக்கல்லியா?" என்ற பாட்டியின் குரல் கேட்டு மீரா எழுந்தாள். பாட்டியும் தாத்தாவும் தாங்களாகவே இங்கு தங்கி விட்டார்கள். அவர்களால் கூட இந்த முறை அவளுடைய மனத்தளர்ச்சியைப் போக்க முடியவில்லை. டான்ஸ் வகுப்பும் பாட்டு வகுப்பும் இல்லாமல் வீட்டிலேயே முடங்கும்படி ஆயிற்று. பார்வையற்ற மாணவர்களுடன் ஹரியும் எங்கோ கோடைக்கால காம்ப்புக்குப் போயிருந்தான். இப்பொழுதெல்லாம் பாட்டு கேட்கக் கூட உற்சாகமில்லாமல் போயிற்று.

அவள் கீழே இறங்கியதும் "இன்னிக்கு உனக்கு ரிசல்ட் வருதில்லே?" என்று அம்மா ஞாபகப்படுத்தினாள். "ஸ்கூலுக்குப் போய் விசாரி. நாளைக்குத்தான் பேப்பர்லே வரும்." அவள் மௌனமாகத் தலையை ஆட்டிப் பால் தம்ப்ளரை வாங்கிக் கொண்டாள். பாட்டி பூஜை செய்யும் மணி ஓசை கேட்டது. அப்பா மணி அடிப்பது போல் பிரமையேற்பட்டது. பாலைக் குடிக்காமல் அவள் அமர்ந்திருப்பதைக் கண்டு அம்மா அவள் தோளில் கையை வைத்தாள்.

"கலகலப்பா இருக்க முயற்சி பண்ணு மீரா. நீ இப்படி இருக்கிறது எனக்கு அதிக துக்கத்தைக் கொடுக்கறது."

அம்மாவின் முகத்தைப் பார்க்கத் தெம்பில்லாமல் அவள் "ஸாரி" என்று முணுமுணுத்தபடி பாலைக் குடித்து, 'சிங்கி'ல் டம்ப்ளரைப் போடும் போது டெலிபோன் ஒலித்தது. ஹரியாக இருக்கும் என்ற நினைப்பு துளிர்த்துவிட்ட ஆவலுடன் அவள் விரைந்து எடுத்த போது "வாழ்த்துக்கள்" என்றான் ஹரி.

ானவில்

அவன் என்ன சொன்னான் என்று கவனிக்காமல், "ஏ, நீ எப்ப வந்தே?" என்றாள் சந்தோஷத்துடன்.



"இப்பத்தான். அம்மா ஸ்கூல்லேர்ந்து போன் பண்ணாங்க. இங்கிலீஷிலேயும் ஸயன்ஸ் க்ரூப்லேயும் ஆல் இந்தியா ஃபர்ஸ்ட் நீ!"

அவளால் நம்ப முடியவில்லை. சட்டென்று பழைய உற்சாகம் தொற்றிக் கொள்ள, தன்னை மறந்து "ஹே!" என்று உயரக் கையைத் தூக்கி ஆர்ப்பரித்தாள். டெலிபோன் வாயைப் பொத்தி அம்மாவுக்குச் செய்தி சொன்ன போது வெகு நாள் கழித்து அம்மாவின் முகம் விளக்கேற்றினதைப் போல் பிரகாசமாயிற்று.

"ஸ்கூலுக்குப் போகல்லியா நீ?" என்றான் ஹரி.

"இப்பப் போறேன். சாயங்காலம் உன்னை வந்து பார்க்கறேன் ஹரி" என்று போனை வைத்துவிட்டு அவள் தன்னைத்



''புருஷன் வீட்டுக்கு வந்த முதல் நாளே உனக்குக் கழுத்து சுளுக்கா... ஏண்டி?''

''என் மாமியார் மாதிரி, மோவா கட்டையைத் தோள் பட்டையில இடிச்சு நானும் பதிலுக்குக் காட்டினேன்... பழக்கம் இல்லாததால சுளுக்கு வந்துடுச்சுடி!''

- சீர்காழி வி. ரேவதி

தயார்ப்படுத்திக் கொள்ள விரையும் போது, ''சீனியுடைய ஆசீர்வாதம் குழந்தைகளை எப்பவும் ரட்சிக்கும் சுஜாதா'' என்று பாட்டி சொல்வது காதில் விழுந்தது. அறைக்குச் சென்றதும் அருவமாய்ப் போய் விட்ட அப்பாவிடம் முஷ்டியைத் தூக்கி ''டாட், ஐ ஹாவ் மேட் இட்' என்று சொல்கையில் கண்களில் நீர் முட்டிற்று.

பள்ளியில் அவளைக் கண்டதும் மாணவிகள் பெரிய ஆரவாரம் செய்தார்கள். மைதிலி மலர்ந்த முகத்துடன் அவளருகில் வந்து அணைத்துக் கொண்டாள்.

''உன்னாலே ஸ்கூலுக்குப் பெருமை மீரா...'' என்ற குரல் நெகிழ்ந்திருந்தது.

''உங்க உதவியில்லாம என்னாலே எதுவும் செஞ்சிருக்க முடியாது மேம்'' என்றாள் அவள் உண்மையாக. ''நா ரொம்பப் பெரிய தடுமாற்றத்திலே இருந்தேன். அதை நீங்கதான் புரிஞ்சுக்கிட்டீங்க.''

''நா இல்லேன்னா வேற யாராவது இருந்திருப்பாங்க'' என்றாள் மைதிலி, இலேசாக. ''காலேஜுக்கெல்லாம் அப்ளிகேஷன் போட ஆரம்பிக்கணும் மீரா. மேலே என்ன செய்யப் போறே?''

''மெடிகல்லுக்குச் சேரணும்னு ஆசை மேம்.''

''உனக்கு சீட் சுலபமாக் கிடைக்கும்'' என்றாள் மைதிலி. ''ஹரி தில்லிக்குப் போறான் மீரா. அங்கே ப்ளைண்ட் ஸ்கூல்லே வேலை கிடைச்சிருக்கு. எம். ஏ. ஃபஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணியிருக்கான்.''

''வாவ்!'' என்றாள் மீரா சந்தோஷமாக.

''எனக்குச் சொல்லவேயில்லையே அவன்! போய்க் காதைத் திருகறேன். தில்லியிலே தனியா அவனாலே இருக்க முடியுமா மேம்?''

''முடியும். பிளைண்ட் ஹாஸ்டல் இருக்கு. அவனைப் போல இருக்கிற மற்றவங்களோட அவன் நிறையப் பழகணும். இங்கே ரொம்பக் குறுகிய வட்டத்துக்குள்ளே அவன் பழகறான். அது அவனுக்கு நல்லதில்லே. யதார்த்த உலகத்தைப் புரிஞ்சுக்க முடியாம போயிடும்.''

''நோ மேம்!'' என்று மீரா சிரித்தாள்.

''அவன் ஒரு ஞானியைப் போலன்னா பேசறான்?''

மைதிலியின் அதரங்களில் மெல்லிய புன்னகை விரிந்தது. ''ஏட்டுச் சொரைக்காய் ஞானம் அது. உணர்ச்சிவசப்படும் போது பின்னுக்குப் போயிடும்.''

மீரா விளங்காமல் நிற்கையில் அவள் தோளைப் பற்றி மைதிலி மிருதுவாகச் சொன்னாள்.

''நீயும் இன்னும் பெரிய வட்டத்திலே பழகணும். பெரிய சாதனைகள் செய்யக் கூடிய திறமை உங்கிட்ட இருக்கு. உங்கப்பாவுக்கு உன்னைப் பற்றி நிறையக் கனவுகள் இருந்தது மீரா.''

வீட்டை நோக்கி பஸ்ஸில் செல்லும் போதும், இறங்கி வீட்டுக்கு நடக்கும் போதும் மைதிலியின் வார்த்தைகள் தொடர்ந்து வந்தன. அப்பா அவளைச் சந்தித்திருப்பார் என்று தோன்றிற்று. காட்! என்ன சொல்லியிருப்பார்? உன் மகனால் என் பெண்ணின் எதிர்காலம் பாழாகும் என்றா? அப்பாவின் கனவுகள், எதிர்பார்ப்புகள் எல்லாம் கர்ணனின் கவசகுண்டலங்களாய் அவளது தேகத்தின் அங்கமாகிப் போனது போல் இருந்தது. காற்றும் ஆகாசமும் வெப்பமும் அப்பா எங்கும் போய் விடவில்லை. இங்குதான் எங்கோ இருக்கிறார் என்ற பிரமையை ஏற்படுத்தின.

''மீரா!''

அவள் திரும்பினாள் மீனாட்சி. ஆளே மாறிப் போயிருந்தாள். ஹேர் ஸ்டைல் மாறியிருந்தது. உதட்டுச் சாயம் வயதைக் கூட்டிக் காண்பித்தது. எடுத்த எடுப்பில் ''உங்கப்பா இறந்து போயிட்டாங்களாமே, ஸோ ஸாரி மீரா'' என்றது மீராவுக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்திற்று. சிறிது மௌனத்திற்குப் பிறகு ''நீ எப்படியிருக்கே மீனாட்சி?'' என்றாள். ''உடம்பு சரியில்லேன்னு கேள்விப்பட்டேனே?''

மீனாட்சி தெருவைப் பார்த்தபடி பதில் சொன்னாள். ''இப்ப சரியாயிட்டது. ஐ ஆம் ஃபைன். இப்ப எங்க கடையிலே வேலை பார்க்கறேன்.''

''பரீட்சை எழுத மாட்டியா?''

''ப்ரைவேட்லே எழுதுவேன்.''

''மணியைப் பத்தின விஷயம் என்ன ஆச்சு?'' என்றாள் மீரா புன்னகையுடன்.

''அவனை மறந்தாச்சு'' என்று மீனாட்சி சிரித்தாள்.

'நா செத்துருவேன்' என்று அன்று அழுததையும் மறந்து போனாயா என்று மீரா தனக்குள் வியந்து கொண்டாள். நீதான் முட்டாள் என்று இவள் சிரிப்பது போல் இருந்தது. சிரிக்கும் போது மிஸஸ் செல்லப்பனின் சாயல் தெரிந்தது.

வீட்டிற்குத் திரும்பியதும் அமெரிக்க பல்கலைக் கழகத்திலிருந்து வந்த கடிதத்தை அம்மா புன்னகையுடன் காண்பித்தாள். அமெரிக்க பிரஜை என்று சலுகையினால் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருந்தது. அபூர்வமான உபகாரச் சம்பளத்துடன். குபீரென்று பொங்கிய உற்சாகம் உடனடியாக வடிந்தது. கடிதத்தை மீண்டும் உறையில் வைத்து, ''இப்ப எப்படிப் போவேன் உன்னை விட்டு விட்டு?'' என்றாள் மீரா.

''என்னைப் பற்றிக் கவலைப்படாதே'' என்றாள் அம்மா உறுதியான குரலில். ''நான் தெளிஞ்சுக்குவேன். இங்கே ஏதாவது ஸ்கூல்லே வேலை பார்க்கலாம்னு இருக்கேன். மஹேஷும் மெள்ள அட்ஜஸ்ட் ஆயிடுவான். உனக்குத்தான் ஒரு மாறுதல் வேணும் மீரா. 'சீட்' கிடைச்சது பெரிய விஷயம். அதைத் தவற விடக் கூடாது.''

அவள் இன்னமும் யோசனையில் ஆழ்ந்தாள். அம்மாவின் பேச்சு வியப்பை அளித்தது. ''பார்க்கலாம்'' என்று அவள் நகரும் போது அம்மா அவள் தோளை அணைத்து, ''சாகிறதுக்கு முந்தி அப்பாவுடைய மனசு தெளிஞ்சு போச்சு மீரா'' என்றாள். ''அமெரிக்க யூனிவர்ஸிடியிலே இடம் கிடைச்சா உன்னைக் கண்டிப்பா அனுப்பச் சொன்னார்.''

அதனாலேயே அம்மாவும் தெளிந்து விட்டாள் என்று மீராவுக்குத் தோன்றிற்று. அவர்களிடையே இருந்த உணர்வுபூர்வமான சங்கமம் பிரமிப்பை ஊட்டிற்று.

மாலை, ஆழ்வார்பேட்டையை நோக்கிச் செல்லும் போது எவ்வளவோ நாட்களாகக் கனன்று கொண்டிருந்த கோபங்களும் ஏமாற்றங்களும் அதிசயமாக மறைந்து, நன்றாக அலசிப் பிழிந்து உலர்த்திய வெள்ளைத் துணியாக இருந்தது மனசு. உறவுகளும், அவைதரும் சுகங்களும், அங்கு பொழியும் கருணை மழைகளும்தான் மானுடத்தை உய்யச் செய்யும் என்ற பிரக்ஞையில் மெழுகாய் உருகிற்று.


தனி நபரை விட குடும்பம் முக்கியம் என்றார் அப்பா. 'ஆனால் நான் உன்னை எந்தத் தியாகமும் செய்யச் சொல்லல்லே'- அப்பாவின் இந்த வாக்கியம் இப்போது குழப்பவில்லை.

'நான் மறக்க மாட்டேன் டாட்' என்றாள். மீண்டும் அமெரிக்கா செல்வது உற்சாகமாக இருந்தது. ஆனால் இந்தியாவுடன் அப்பா ஏற்படுத்தி விட்ட உறவை மறப்பது அசாத்தியமானது என்று அந்தக் கணம் நிச்சயமாயிற்று.

ஹரி வராந்தாவில் அமர்ந்திருந்தான். அவள் கேட்டைத் திறக்கும்போதே ''வா மீரா'' என்றான் பிரகாசமாக. அவள் நாலே எட்டில் அவனிடம் சென்று அவன் கையைப் பற்றினாள். ''உன்னைப் பார்க்க ரொம்ப சந்தோஷமா இருக்கு ஹரி'' என்றாள்.

''உன் குரலைக் கேட்டு எனக்குச் சந்தோஷம்'' என்று அவன் சிரித்தான். ''எப்ப ஸம்மர் காம்ப் முடியும்னு இருந்தது எனக்கு. தில்லி ப்ளைண்ட் ஸ்கூல்லே எனக்கு வேலை கிடைச்சிருக்கு மீரா!''

''தெரியும். நீ ஃபஸ்ட் கிளாஸிலே பாஸ் பண்ணதும் தெரியும். ஏன் முந்தியே சொல்லல்லே?'' என்று அவன் காதைத் திருகினாள். பிறகு ''போயிட்டுப் போறது, கையைக் குடு'' என்று கையைக் குலுக்கி



- சீர்காழி வி. ரேவதி

னாள்.

ஒன்றும் சொல்லாமல் அவன் சற்று நேரம் அவள் கையைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்தான் உணர்ச்சிவசப்பட்டவன் போல.

''தில்லியிலே இருக்கிற எந்த மெடிகல் காலேஜிலேயும் உனக்கு ஸீட் கிடைக்கும். அங்கே வந்துடேன் மீரா!'' என்றான்.

அவள் அவன் கையை வருடியபடி மெள்ளச் சொன்னாள். ''நான் அமெரிக்கா போறேன் ஹரி. அங்கே நல்ல யூனிவர்ஸிடியிலே இடம் கிடைச்சிருக்கு.''

அதிர்ந்து போனவனாய் ஹரி சில விநாடிகள் பேசாமல் இருந்தான்.

''ஏன் இந்தியா வெறுத்துப் போச்சா?''

அவன் குரலில் கோபமோ ஆதங்கமோ தொனித்தது.

''இல்லே'' என்றாள் அவள் மிருதுவாக. ''படிப்பு முடிஞ்சதும் வந்துடுவேன். அம்மாவும் மஹேஷும் இங்கேதான் இருப்பாங்க. அப்பா போன அதிர்ச்சியிலேர்ந்து நான் மீளணும் ஹரி. இங்கே இன்னும் எனக்குக் குழப்பமா இருக்கு. மெள்ளத்தான் தெளியும் போல இருக்கு. சில பேருக்குப் பக்குவம் வர நாளாகும். என்ன செய்யலாம்?''

''ஒண்ணும் செய்ய முடியாது'' என்றான் அவன் பரிகாசமாக. ஆனால் முகம் சுரத்தில்லாமல் இருந்தது.

''நான் உன்னை மிஸ் பண்ணுவேன் ஹரி'' என்றாள் மீரா. ''இந்தியா திரும்பியவுடன் உன்னைப் பார்க்க வருவேன். அதுக்குள்ளே உனக்கு தில்லியிலே யார் மேலேயாவது காதல் பிறந்து கல்யாணமாகியிருக்கும்'' அவன் சிரிக்கவில்லை. தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்தான். திடீரென்று சடசடவென்று மழை பெய்ய ஆரம்பித்தது. கூழாங் கல் போல் ஐஸ் கட்டிகள் விழுந்தன. அவனை உற்சாகப்படுத்தும் எண்ணத்துடன் ஒன்றை எடுத்து வந்து அவனது புறங்கையில் வைத்தாள். அவன் தனக்குள் பேசிக்கொள்பவனைப் போல் பேசினான்.

''எத்தனை தடவை காதல் பிறக்கும்? என்னுடைய காதல் வெளியிலே சொல்ல முடியாதது. சில பூக்கள் யாருக்கும் தெரியாமலே மலர்ந்து உதிர்ந்து போகிற மாதிரி...''

அவள் திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள். மலர்ந்து உதிர்ந்து போச்சா?'' என்றாள் மெள்ள சங்கடத்துடன்.

அவன் ஆமாம் என்று தலையசைத்தான்.

அவள் சற்று நேரம் சரம் சரமாய் விழும் மழைக் கம்பிகளைப் பார்த்தபடி நின்றாள். சட்டென்று மைதிலி சொன்னதெல்லாம் நினைவுக்கு வந்தது. மைதிலி ஒருத்திதான் தன்னை உணர்ந்து கொண்டவள் என்று பிரமிப்பு ஏற்பட்டது.

அவள் மெள்ள அவனருகில் வந்து மிதமிஞ்சிய வாஞ்சையுடன் அவன் கையைப் பற்றி நிதானமாகச் சொன்னாள்.

''மறுபடி பூக்கும். ஒரு தடவைதான் காதல் பிறக்கும் என்கிற சித்தாந்தத்திலே எனக்கு நம்பிக்கையில்லே. வேற நல்ல பெண் கிடைப்பா. உன்னைப் பூரணமாய்ப் புரிஞ்சுக்கிறவளா, காதலிக்கிற பக்குவம் உள்ளவளா - அதுக்கும் பக்குவம் வேணும் ஹரி!''

அவன் பதில் சொல்லவில்லை. பேச்சை மாற்றினான். மழை நின்றதும் அவள் கிளம்பினாள். ''நீ தில்லி போகிறதுக்கு முந்தி மறுபடி வருவேன். ஹரி ப்ளீஸ், உற்சாகமாயிரு'' என்றாள். அவன் கையை அசைத்தான். அவன் மெள்ளத் தெளிந்து கொள்வான் என்று பரிவுடன் நினைத்தபடி, கேட்டைத் தாண்டித் தெருவுக்கு வந்தபோது வானத்தில் பளிச்சென்று சூரிய வெளிச்சம் படர்ந்திருந்தது. தூரிகையால் தீட்டினது போல் வானவில் தெரிந்தது. அவனிடம் அதைப் பற்றிச் சொல்லலாமா என்று நினைத்து, பேசாமல் புன்னகையுடன் மீரா நடந்தாள்.

(முற்றும்)



☐ நாட்டில் சுமார் 20 கோடி டியூப் லைட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுக்குத் தற்போது புழக்கத்துக்கு வந்துள்ள எலக்ட்ரானிக் 'சோக்'குகளைப் (CHOKE) பயன்படுத்தினால் ஒரு நாளைக்கு (அதே ஒளியைப் பெற்று) ஒரு கோடியே இருபது லட்சம் யூனிட்டுகள் மிச்சப்படுத்த முடியும். நாட்டில் நீர் இறைக்க, சுமார் ஒரு கோடி பம்பு செட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஐ. எஸ். ஐ. முத்திரை பெற்றவைகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினால் ஒரு நாளைக்கு நாலரை கோடி யூனிட்டுகள் மிச்சமாகும்.

- அ. ஷண்முகசுந்தரம்




உங்களுக்குத் தேவை அதிக ஊட்டச்சத்துள்ள

புதிய காம்ப்ளான்® விட்டாமில்க்(T)

உங்களுக்குள் இன்னொரு புதிய உயிர், உங்கள குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முக்கிய நேரத்தில் உங்கள் ஆரோக்கியத்திற்கும், சிசுவின் வளர்ச்சிக்கும் போதுமான கூடுதல் ஊட்டசச்சத்துக்கள் தேவை.

காம்ப்ளான்–விட்டாமில்க் உங்களுக்கும், பிறக்கப்போகும் உங்கள் குழந்தைக்கும், தேவையான ஊட்டச்சத்துக்களையும் மற்றும் காம்ப்ளானின் எல்லா நற்பயன்களையும் கொண்டது. இதில் ஃபாலிக் ஆஸிடு, பால் புரதம் (22.2 கிராம்), வைட்டமின்கள் A, B_6 மற்றும் C, இரும்புச் சத்து, அயோடின், கால்ஷியம், ஸிங்க் மற்றும் மக்னீஷியம், தேவையான அளவில் அடங்கியுள்ளது.




தினமும் 2 கப்புகள்

ரெகுலர் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/V/P/91/R•TAM



டாலர் குவியலோ

1

துல்லிய நீல வானம். சிறகு விரித்த இரண்டு பழுப்புப் பறவைகள். தொலைவில் தொடுவானத்தில் மழுப்பலாக மரகத மலைகள். சுற்றிலும் வளமையான வயல்கள். ஒரு ஓரத்தில் உருக்கிய வெள்ளியாக ஓடை. ஒற்றையடிப் பாதையில் வைக்கோற் சுமையுடன் ஒரு பருவப் பெண் -

இத்தனையும் சித்திரமாகக் கான்வாஸில்! ஈடுபாட்டுடன் நான்கு மணி நேரம் மெனக்கெட்டு மெய் வருத்தம் பாராது கண்ட அற்புதம் அது.

ஈர பிரஷ்ஷை உதறிவிட்டுத் தான் வரைந்த ஓவியத்தைப் பெருமிதமாகப் பார்த்தான் பிரகாஷ். பொருத்தமாக 'கிராமத்து சொர்க்கம்' என்று தலைப்பிட்டிருந்தான்.

''டிராங்கிங் நல்லா வந்திருக்கு தம்பி!''

பின்னால் குரல் கேட்டுத் திரும்பினான் பிரகாஷ். பட்லர் பரமசிவம்.

''அது 'டிராங்கிங்' இல்லை பரமு. டிராயிங்! எங்கே சொல்லு பார்க்கலாம்...'' என்றவாறு வயதான பட்லரின் பஞ்சுத் தலையைக் கலைத்து விட்டான் விளையாட்டாக.

''விடுங்க தம்பி! அப்பா உங்களை அளைச்சுக்கிட்டு வரச் சொன்னாரு.''

''வர்றேன்னு சொல்லு பரமு.''

பட்லர் அகன்றதும் போர்டிலிருந்து பின் நீக்கி கான்வாஸை விடுவித்துக் கவனமாகச் சுருட்டிப் பத்திரப்படுத்தும் போது அவன் முகத்தில் ப்ரவசப் புன்சிரிப்பு.

இரண்டு நிமிட நடை தூரத்திலிருக்கிறது அப்பா ராஜசேகரின் அறை! ஆம். அவ்வளவு பெரிய மாளிகை இது.

பாட்டன் வழி வீட்டை வெகுவாக விரிவு படுத்திப் பணத்தால் இழைத்து இரசனையுடன் மாற்றியிருந்தார் ராஜசேகர்.

மெகா மாளிகை முழுவதும் இதமான சென்ட்ரல் ஏசி சிஸ்டம். ஆங்காங்கே அலங்கார சாண்டிலியர்கள். கால் புதைய வைக்கும் கார்ப்பெட். எல்லாம்... எல்லாம் அப்பாவின் செல்வச் செழிப்பைப் பறைசாற்றின.

''உட்காரு பிரகாஷ்.''

ஃபைலிலிருந்து கவனம் இம்மியும் பிசகாமல், சிறிதும் நிமிராமல் - அவன் ஓசையின்றிப் பிரவேசித்ததைக் கண்டுகொண்ட அப்பாவின் திறமையை வியந்த வண்ணம் எதிரில் போய் அமர்ந்தான்.

காத்திருந்தான்.

ஆழ்ந்திருக்கும் அப்பா ஃபைலில் கவனித்தான்.

வைப் பெருமிதத்துடன் கவனித்தான்.

அப்பா ராஜசேகருக்கு அறுபது வயது என்று சொல்ல முடியாத தோற்றம். சீராகச் சீவப்பட்ட நரைத்த தலை. அவ்வப்போது அளவான லிக்கர் உபயத்தில் ஒரு மாதிரி சிவப்பை எட்டியிருந்த கம்பீரமான முகத்தில் எடுப்பான நாசி; வினாடியில் எவரையும் எடை போட்டு விடும் கூரிய கண்கள்; வாரம் தவறாமல் ட்ரிம் செய்யப்படும் நறுக் மீசை. இன்னமும் தளராத கட்டுக் கோப்பான உடற்கட்டு.

அப்போது போன் ஒலித்தது. ராஜசேகர் எடுத்தார். எதிர்முனை பேசுவதை நிதான மாகச் செவி மடுத்தார். அரை நிமிட போல் நெற்றி நரம்பு முடிச்சிட, யோ னையில் ஆழ்ந்தார். பிறகு மளமளவென் ஆணைகள் பிறப்பித்தார். அவ்வளவுதா போனை வைத்துவிட்டு மீண்டும் பைலி ஆழ -

அப்பாவின் இந்த வேகம் பிரகா அசத்திற்று. ஆனால் அவர் பேசிய ஒன்றும் புரியவில்லை. 'சி' பாரம், மெட்டீரியல்ஸ், இன்வாய்ஸ் என்ற

பத்மா ரவிசங்கர்

வர்த்தகச் சொற்கள் மட்டும் அவனுக்குத் தட்டுப்பட்டன. அவர் மேசை மீது குவிந் திருந்த ஃபைல்கள் அவனை மலைக்க வைத்தன.

ஈடுபாடு பூராவும் ஓவியத்தில் நிலைக் கையில் அப்பாவின் விரிவான பிஸினஸ், தொழிற்சாலைகள் பற்றி என்றுமே தெரிந்து கொள்ள அவன் விரும்பியதில்லை.

சந்தர்ப்பமும் வாய்த்ததில்லை: சின்னு விற்கு - அப்படித்தான் அம்மா அவனைச் செல்லமாக அழைப்பாள் - சிறு வயதிலேயே சென்னைத் தொடர்பு விட்டுப் போய் விட்டது. அம்மாவின் விருப்பத்தின் பேரில் ஐந்தாம் வகுப்பின் போது பிரகாஷை ஊட்டி போர்டிங் ஸ்கூல் ஒன்றில் சேர்த்து விட்டார்கள். சுதந்திரத் தைச் சுவாசித்து, உலகம் அறிந்து, முனைப் புடன் உயர் தரமான கல்வி பெற ஊட்டி உதவும் என்பது அவள் நம்பிக்கை.

எம். ஏ. வரலாறு படித்து முடித்தபோது பிரகாஷின் அம்மா அகாலமாக இறந்து போகவும் ஆறு மாதங்கள் வரை பித்துப் பிடித்தவன் போலிருந்தான். சமாதானம் செய்ய முடியாமல் ராஜசேகர் திகைத்துப் போயிருந்த சமயம் அது. இடைவிடாத ஓவியம்தான் மீள உதவியது.

பிறகு பிடிவாதமாகப் பிரகாஷ்



ஃபாரின் கிளம்பிவிட்டான். மூன்று வருடங்கள் தீராத ஓவியத் தாகமுடன் ஐரோப்பிய தலை நகரங்களில் சுற்றினான்.

அவன் வாழ்வின் அற்புதக் கணங்கள் அவை. லூவ்ர் ம்யூஸியத்தில் முறுவலிக்கும் மோனாலிசா. நாத்ர்தேமில் பதினோராம் நூற்றாண்டு வண்ணக் கண்ணாடி சன்னல்கள். அப்புறம் இம்ப்ரெஷனிஸ்ட் சித்திரச் சாலையில் டெகா, பால் கோகன், வான் காக், ரென்வார் ஆகியோரின் ஆரவார வண்ணத்தில் சி ந் தை த சிதறடித்த ஓவியங்கள்....

தற்போதும் அவனுக்குள் சிலிர்த்தது. அந்த உன்னதமான உற்சாக உலகச் சுற்றல் முடிந்து ஆறு மாதம் முன்புதான் சென்னை திரும்பி -

''பிரகாஷ்!'' என்ற அப்பாவின் சற்று அதட்டலான குரல் கேட்டு நினைவலைகளிலிருந்து விடுபட்டான்.



''என் பெண்ணுக்கு என் வீட்டுக்கே வந்து வயலின் சொல்லித் தர்றதுன்னா பீஸ் நூறு ரூபாய்; பெண்ணை உங்க வீட்டிற்கு அனுப்பிக் கத்துக்கச் சொல்றதுன்னா பீஸ் இருநூறுங்கறீங்களே, ஆச்சரியமா இருக்கே!''

''உங்க பெண்ணின் வாசிப்பை என் வீட்டில் உள்ளவர்கள் சகிச்சுக்கத்தான் சர்சார்ஜ் நூறு ரூபாய்!''

- கரம்

''இந்தா சாவி. அந்த அலமாரியைத் திற.''

சென்று திறந்த பிரகாஷ் பிரமித்தான். தலையணை தலையணையாக ஏதேதோ புத்தகங்கள் அலமாரி முழுவதும்.

''அதுல மஜூம்தாரின் 'டாக்ஸ் லா' வால்யூம் டு - ஓ சாரி. உனக்குத்தான் ஏதும் தெரியாதில்லை! மூணாவது தட்டுல நாலாவது புக் எடு. உன் பாஷைல 'இலைப் பச்சைக் கலர்ல' அட்டை இருக்கும் பாரு!''

அடுத்த ஐந்து நிமிடத்தில் மூன்று முறை தொலைபேசி தொந்தரவு செய்தது அவரை.

ஒருவாறு பைலை முடித்துவிட்டு நிமிர்ந்தார் ராஜசேகர். இருக்கையில் நன்கு சாய்ந்து கொண்டு பிரகாஷைக் கூர்மையாகப் பார்த்தார்.

''மூச்சு விடக் கூட நேரமில்லை பார்த்தியா பிரகாஷ்... எத்தனை ஃபைல்ஸ்? தினசரி தலைவலிகள்....'' என்றவர் சற்று மௌனம் விட்டு, ''அசந்து தூங்கறப்ப நடுநிசில போன் வரும்! பாக்டரி ஷிப்டுல தகறாரும்பாங்க. 'டாக்'குல ராமெட்டீரியல் மாட்டிக்கிச்சா, கூப்பிடு ராஜசேகரை.....''

அலுப்பையும் மீறி அவர் குரலில் ஒருவித பெருமித சரிகை இழையோடியதைக் கவனித்தான்.

''எனக்கும் அறுபது வயசாயிருச்சு பிரகாஷ். பிரஷர் ஏகமா ஏறுகிறது. யூ நோ ஒன் திங்? இப்பல்லாம் நடந்தா மூச்சு இரைக்குது!'' என்றவர் முறுவலித்துவிட்டு, ''இனி ஒய்வா ஒதுங்கி உன் கைல எல்லாப் பொறுப்ப்பயும் ஒப்படைச்சுடலாம்னு இருக்கேன்பா.''

பிரகாஷ் பதற்றமாக, ''ஐயையோ. உங்க ராட்சஸ பிஸினஸை என்னால கவனிக்க முடியாதுப்பா!''

''பயப்படாதே பிரகாஷ். ஓவர் நைட்டுல உன் தலைல சுமத்திடமாட்டேன். மெல்லக் கொஞ்சம் கொஞ்சமா செய்யலாம். எனக்கு உடல்ல வலு இருக்கிறப்பவே எல்லாம் கத்துத் தர்றேன் என்ன?''

''சாரி டாடி. எனக்கு இந்த பிஸினஸ் லைன்ல சுத்தமா விருப்பம் இல்லை!'' என்றான் உறுதியான குரலில்.

''அப்போ காலம் பூராவும் நீயே கஷ்டப்பட்டு சா வு ன் னு சொல்றியா பிரகாஷ்?'' என்றார் கடுப்பாக. ராஜசேகருக்குக் கோபத்தில் இலேசாக மூச்சு வாங்கியது.

''இல்லைப்பா! பிஸினஸை நிறுத்திருங்கன்னு சொல்ல வர்றேன். நீங்க சம்பாதிச்ச பணம் பல தலை முறைக்கு ஒரு பட்டாலியனே உட்கார்ந்து சாப்பிட்டாலும் கரையாது! அப்புறம் வீணா ஏன் கஷ்டப்படணும்? வைண்டப் ப்ளீஸ்.''

தாமதமாகத் தவமிருந்து பெற்ற தன் ஒரே வாரிசின் பொறுப்பின்மையில் வருத்தம் மிக, ''என் கிட்ட இரண்டு பாக்டரி இருக்கு. ஒரு சிட் பண்டு நடத்தறேன். மருந்து வாங்கி விற்க மூணு ஏஜன்சி வெச்சிருக்கேன். ரியல் எஸ்டேட், பிலிம் டிஸ்டிரிப்யூஷன் பார்க்கறேன். இன்னும் என் பிஸினஸ் பட்டியல் நிறைய இருக்கு பிரகாஷ். எல்லாம் என் அசுர உழைப்பின் பலன். என்னை நம்பி எத்தனை வயிறு இருக்கு தெரியுமா? அத்தனையும் பாதியில விட்டுட்டு வான்னு சொல்றியேப்பா....!'' என்றார் ராஜசேகர்.

❑ ஆல்பர்ட் வில்லியில் 1992 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள குளிர்காலப் போட்டிகளில் பங்கு பெறுபவர் ஆணா? பெண்ணா? எனக் கண்டுபிடிக்க அவர்களுடைய உமிழ்நீர் பரிசோதனைக்கு உள்ளாகுமாம்.

1966-ஆம் ஆண்டு ஆஸ்திரியாவைச் சேர்ந்த எரிகாஸ்னீகர் பனிச் சறுக்கில் தங்கப் பதக்கம் வென்றார். 22 ஆண்டுகள் கழித்து எரிகாஸ்னீகர் பெண் அல்ல ஆண் என்பது தெரியவந்தது.

- கே. வி. நாதன்



பிரகாஷ் மௌனமாக அவரையே பார்த்தான்.

''முந்தாநாள் ஒரு மந்திரி என்னை விருந்துக்குக் கூப்பிட்டார். ஒரு பிரபல பத்திரிகை என்னைப் பத்திக் கவர் ஸ்டோரி எழுத ஒரு வாரமாக் காத்திட்டிருக்கு. நாளை ஒரு எக்ஸிபிஷனுக்கு ரிப்பன் வெட்டறேன். என்னைச் சந்திக்க எல்லோரும் ஏன் அல்லாடறாங்க?

''பணம்! என் அபரிமித செல்வம்தான் காரணம் பிரகாஷ். கையில் காசு காணலைன்னா ஒரு நாயும் நம்மைச் சீந்தாது மை டியர் சன். எஸ்! பணம்தான் மரியாதை; மதிப்பு; பவர்; வாழ்க்கை; எல்லாம். பணத்தைப் பணத்தோட சேர்த்துப் பெருக்கிக்கிட்டே போகணும். அதனால பட்டுன்னு பதில் சொல்லாதே பிரகாஷ். அவசரமில்லை. நிதானமா யோசிச்சு நல்ல பதிலா பிறகு சொல்லு.''

''சாரி டாட்! எனக்கு பிஸினஸ் தெரியாது; பிடிக்காது; விருப்பமில்லை. என் வழியில என்னை நிம்மதியா இருக்க விடுங்க.''

''என்ன உன் வழி?'' என்றார் ஆயாசமாக.

கண்கள் கனவில் லயிக்க, ''ஓவியம்!'' என்றான்.

ஓவியத்தை ஒரு மோசமான வார்த்தையுடன் இணைத்து தன் வெறுப்பை வெளிப்படுத்த எழுந்த விருப்பத்தைப் பிரயாசையுடன் அடக்கிக் கொண்டார் ராஜசேகர். அனுபவமின்மையால் ஏதோ பிதற்றுகிறான். அவ்வளவு சுலபத்தில் நம்பிக்கை இழப்பவரல்ல அவர்......

அறைக்குத் திரும்பியதும் பிரகாஷ் தூரிகை தூக்கிக் கொண்டான். வானவில்லை வண்ணத்தில் வளைக்க விரும்புபவனுக்கு வர்த்தகமாம். என்ன ஒரு நான் சென்ஸ் இது! இருக்கும் கடலளவு செல்வம் போதாதா......

அவன் விருப்பத்திற்கேற்ப அனாயாசமாக பிரஷ் வளைந்தாலும் கவனம் வரைவதில் நிலைக்கவில்லை. திக்கென்று மனத்தில் கவலை சூழ்ந்து கொண்டு விட்டது.

கவலைக்குக் காரணம் சிந்துஜா; அவனின் ஆருயிர்க் காதலி. சிந்துஜா அசாதாரண அசத்தும் அழகிதான். ஆயினும் சமுதாயத்தில் ஒரு சாதாரணள். பணம் X பணம் செய்யும், ஸ்டேட்டஸ் பார்க்கும் தன் தந்தை, தங்கள் காதலை அங்கீகரிப்பாரா..... திருமணத்திற்கு ஒப்புக் கொள்வாரா....

அந்த மைதானத்தில் நடக்கவிருக்கும் பயங்கரத்தைப் பார்க்க அஞ்சியவன் போல் சூரியன் மேற்கில் அவசரமாகப் பதுங்கிக் கொண்டிருந்த சிவந்த அந்தி மாலை.

அ.உ.மு. கட்சியின் அ ர சி ய ல் 'கொள்கை' விளக்கப் (!?) பொதுக் கூட்டம் கன ஜோராக நடந்து கொண்டிருந்தது.

மைதானம் கொள்ளாத அளவு ஆரவார மக்கள் வெள்ளம். பத்தடிக்கு ஒரு குழல் விளக்கு; பிளிறும் ஸ்பீக்கர். வண்ண விளக்குகள் ஊடாட சரிகை சரங்கள் தொங்கப் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த மேடை. 'பேச்சாளர்கள்' எதுகை மோனையில் ஏற்றம் இறைத்துக் கொண்டிருக்க.....

ஆங்காங்கே லத்தி சுழற்றியபடி போலீஸார். தகதகத்த மேடையின் நடுநாயகமாகப் பிரதான இருக்கையில் பிரபல சினிமாக் கதாநாயகன் ஆனந்த் குமார். அடுத்ததாகக் கட்சியின் முக்கியப் புள்ளி குணமூர்த்தி. பின் இருக்கைகளில் ஏனையோர்.

பேச வந்த ஒரு வட்டம், ''கொள்கைச் செம்மலே! தங்கத் தலைவனே!'' என்று விளிக்க, கூட்டம் கரகோஷித்தது. இதே ரீதியில் கட்சிப் பிரமுகர்கள் சகட்டுமேனிக்கு ஆனந்தைப் புகழ்ந்து தள்ள -

'என்ன ஒரு அக்கிரமம்டா சாமி!' என்று தன் மனத்துக்குள் பொருமிக் கொண்டிருந்தார் குணமூர்த்தி. நேற்று வரை தன்னை அண்டியிருந்த பராரிகள் இவர்கள். ஹீரோ ஆனந்த்குமாரின் கவர்ச்சிப் புன்னகை அவருக்கு எரிச்சலூட்டியது. இன்று இங்கே அவன் தலைமை உரையாம். ராஸ்கல்! இவனுக்கு என்ன தெரியும்? அரிதாரம் பூசிக் கொண்டு ஆர்க் வெளிச்சத்தில் கையைக் காலை ஆட்டிவிட்டால் போதுமா? பொது வாழ்வில் எவ்வளவு ஏற்ற இறக்கங்கள் பார்த்திருப்போம் என்று நினைத்தார் குணமூர்த்தி.

சிராகத் திட்டமிட்டு முன்னேறி கட்சியில் நான்கு வருடங்களாக இரண்டாம் இடம் அவர்தான். வயதான தலைவருக்குப் பின் தான்தான் என்று கனவுடன் காத்திருந்தபோது கட்சியில் ஒரு மாதம் முன்பு இந்த நடிகனின் திடீர்ப் பிரவேசம்! தற்போது உள்ள இடமே ஆட்டம் கண்டு விட்டது.

ஆனால் குணமூர்த்தி ஒன்றும் ஏமாளியல்ல. கமுக்கமாக ஒரு இரண்டு மாங்காய்த் திட்டம் போட்டுவிட்டார். ஆ யி ற் று. ஆனந்த்குமாருக்கு ஆயுள் இன்னும் சில மணித் துளிகள்தான்.....

திரும்பவும் கட்சியில் அவர் மதிப்பு புதுப்பிக்கப்பட்டு விடும்; ஆனந்தின் இறப்பினால் வரும் அனுதாபம் கட்சிக்கும் வலு சேர்த்து விடும்; கொன்றது எதர்க்கட்சியா என்று சத்தாய்க்கும் மூன்றாவது மாங்காய் சான்சும் உண்டு.

எப்போது? எப்படி? எங்கிருந்து? இந்த மூன்று கேள்விகளும் மனத்தில் வலம் வர, குணமூர்த்தி நர்வசாக நாற்புறமும் தன் பார்வையைச் சுழற்றினார்.

ஆனால் அவர் கண்ணுக்கெட்டாத தூரத்தில் காத்திருந்தான் சோமையா.....

அந்த மைதானத்தின் விளிம்பில் உருவாகிக் கொண்டிருந்த ஃபிளாட்டுகளில் ஒன்றின் இரண்டாம் மாடியைத் தேர்ந்தெடுத்திருந்தான் சோமையா. ஏகாந்தமான இடம். சுற்றிலும் இருள். கீழே மயக்கப் படுத்தப்பட்ட வாட்ச்மேன். ஆக, ஒன்றும் பிரச்னையில்லை என்று திருப்தியானான் சோமையா. சாக்குப் பையிலிருந்து ஒரு பைனாகுலரையும் சக்தி வாய்ந்த ஒரு டெலஸ்கோப்பிக் ரைஃபிளையும் எடுத்தான். லைட்டரை உயிர்ப்பித்தான்.

இரண்டாம் மாடி ஜன்னல் வழியாகப் பைனாகுலரில் பார்த்தான் சோமையா. வாரி இறைத்திருந்த வண்ண பல்புகள் கண்ணைக் கூச வைத்தன. குணமூர்த்தி பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. அடுத்து 'இறுதியாக'ப் பேச இருப்பது ஆனந்த் குமார்தான். பைனாகுலரை வைத்து விட்டு ரைஃபிளை எடுத்தான்.

அதன் பேரலைத் தோளில் சாய்த்து வைத்து டெலஸ்கோப் லென்சில் ஒற்றைக் கண் பதித்துப் பார்த்தான்.

மைக் அருகில் ஆனந்த் வந்ததும் சட்டென்று சுட்டுவிட்டு சடுதியில் மாயமாகி விட வேண்டியதுதான். தப்புவது ஒன்றும் பிரச்னையில்லை. இருப்பினும் ஒரு முன்னெச்சரிக்கையாக சோமையாவின் இரு ஆட்கள் அ.உ.மு. கட்சிக் கரை வேட்டி அணிந்து கூட்டத்தில் கலந்திருக்கிறார்கள். பிரச்னை ஏதும் எதிர்ப்பட்டால் குழப்பம் விளைவிக்க ஒரு 'ஏற்பாட்டுடன்' இருவரும் வந்துள்ளார்கள். தனக்காகத் தன் ஆட்கள் உயிரையும் கொடுப்பார்கள் என்று பெருமிதமுடன் நினைத்தான்.

தன் சட்டையில் எம்பிராய்டரி செய்யப்பட்டிருந்த ஆக்ரோஷ சிங்கத் தலை இலச்சினையைப் பரவசமுடன் பார்த்துவிட்டு லைட்டரை அணைத்தான். சிலிர்ப்புடன் தலையைக் குலுக்கிக் கொண்டான் சோமையா. நோ! அம்மாதிரி சந்தர்ப்பம் என்றும் வராது. டான் கலிலியோ என்றுமே தோற்றதாகச் சரித்திரம் கிடையாது.... தந்திரமான திட்டத்தின் - துல்லிய செயல்பாட்டின் - மறு பெயர் டான் கலிலியோ. இதோ இப்போது அவன்.....

அவன் முறை வந்ததும் ஆனந்த் குமார் ஆர்வமாய் எழுந்து கொண்டான். கூட்டம் நானாவித ஒலி எழுப்பியது. 'நாளைய சி.எம். நான்தான்' என்ற உற்சாகக் கனவுடன் மைக்கை அடைந்தான்.

தோளில் ரைஃபிள் சார்த்தித் தயாரானான் சோமையா.

இதுவும் ஒரு பாத்திரம்; நடித்து வெளுக்க வேண்டியதுதான். தயங்காமல் தாராளமாகப் பொய் சொல்வது அரசியல் அரிச்சுவடி என்பதை நினைவில் நிறுத்திக் கொண்டு, ''என் உயிரினும் மேலான....'' என்று ஆரம்பித்தான் ஆனந்த்.

ரைஃபிளை ஆயத்தமாக்கிவிட்டான் சோமையா. உணர்ச்சி பாதிப்பேதுமின்றி இருந்தான்.

''உங்க அன்பு எனக்கு மெய் சிலிர்க்குது. உங்களை மகிழ்விக்க நடிச்சேன். உங்களுக்குத் தொண்டு செய்யவே இப்போ கட்சியில சேர்ந்திருக்கேன்!'' என்று ஆனந்த் தொடர,

லென்ஸ் அட்ஜஸ்ட் செய்ய நடிகன் ஆனந்த் குமாரின் நெற்றிப் புருவம் துல்லியமாக அருகாக வந்தது. க்ராஸ் ஹேரின் மையப் புள்ளி புருவத்தில் நிலைக்க....

''உங்களுக்காக என் உயிரையும் -''


சோமையா டிரிகரைச் சுண்டினான். புல்லட் புயலாய்ப் புறப்பட்டது....

(தொடரும்)

❑ ''எனது பெயருடன் டாக்டர் பட்டத்தையும் சேர்த்துப் பெருமைப்படுத்துவதை நான் விரும்பவில்லை. நான் எந்த விஷயத்தையும் பற்றி ஆராய்ச்சி பண்ணினதற்குப் பெற்ற பட்டங்கள் அல்ல இவை. பல்கலைக் கழகங்கள் அபிமானத்தின் மீது அளித்தவை. அதற்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டவனே தவிர, அதைப் பெருமையாகக் கொள்ள உரிமை உடையவன் அல்ல. குடும்பத்தில் எப்படி எல்லாமோ செல்லப் பெயரைச் சொல்லி அழைக்கலாம். ஆனால் அதை எல்லா இடத்திலும் மற்றவர்கள் கூறினால் எப்படிச் சரியாக இராதோ அதைப் போலவே இதுவும்!''

- சொன்னவர் மூதறிஞர் இராஜாஜி

- வி. பிரசன்னா



தொகையைக் கொண்டும் கோயில் திருப் பணியைத் தொடங்கினார்கள்.

ஒரு கட்டத்தில், திருப்பணிக்காக 50,000 செங்கற்கள் குன்றின் அடிவாரத்தில் வந்து இறங்கியிருந்தன. மேலே செல்ல சரி யான பாதை இல்லை; சத் சங்கத்தின் நிதி நிலைமையும் சுமார்தான். 'குன்றேறிச் செல்லும் அன்பர்கள் ஆளுக்கு ஒரு செங் கல்லை மேலே எடுத்துக் கொண்டு போய்ச் சேர்த்துத் திருப்பணியில் கலந்து கொள்ளலாம்' என்று அறிவிப்புப் பலகை எழுதி வைக்கப்பட்டது. சில நாட்களி லேயே 50,000 செங்கற்களும் மேலே சென்று விட்டன. திருப்பணியும் விரைவி லேயே வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவ் வாறு ஆத்மார்த்மாகக் கர சேவை செய்த தால் மகிழ்வுற்றது போல், குமரன் குன்றத் தில் கொலுவிருக்கும் சுவாமிநாத சுவாமி யின் முகத்தில் நிறைவான அருள் புன்னகை குடிகொண்டிருக்கிறது. சஷ்டி விழாவை யொட்டி சந்தனக் காப்பு தரித்து, கண்களை யும் மனத்தையும் குளிர்விக்கிறான் கந்தன்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என மனம் நிறையப் பிரார்த்தித்தபடி தரிசிக்கிறோம். சுற்றிலும் 'முருகா! முருகா! அரோகரா!' என்று உணர்ச்சிப் பெருக்கு டன் குரலெழுப்பும் பக்தர்கள்.

மூலவர் சன்னதி கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது. கமலத்தில் தோன் றிய குமரனின் சன்னதிப் பிராகாரத்தின் மேல் தளத்தில் எட்டு கமலங்கள் நேர்த்தி யாகச் செதுக்கப்பட்டுள்ளன. சன்னதி நுழைவாயிலில் தந்தைக்கு உபதேசம் செய் யும் முருகன் சிற்பத்தைக் காணலாம்.

சூரசம்ஹாரத்துக்கு முந்தைய தோற்றம் ஆதலால் இங்கு முருகன் மயில் வாகன னாக அன்றி ஐராவதத்தை வாகனமாகக் கொண்டிருக்கிறான். 'பிரணவ மந்திரம் எது?' என்று கேட்டுப் பால முருகன் எல்லா தேவர்களையும் பரிசோதிக்க, இந்தி ரன் உள்பட அனைவரும் விடை தெரியாது விழித்தனர். அதற்கு அபராதமாக இந்திர னின் வெள்ளை யானை ஐராவதத்தை முருகன் தனதாக்கிக் கொண்டான் என்று வரலாறு கூறப்படுகிறது.

ஆகம விதிகள்படியும் சிற்ப சாஸ் திரப்படியும் இந்த ஆலயத்தை வடிவமைத் தவர் ஜானகிரமண ஸ்தபதி. இவர் கணபதி ஸ்தபதியின் சகோதரர்.



☛ கீழிருந்து ஒரு தோற்றம்

குன்றின் அடிவாரத்தில் விநாயகர், நவக்கிரகஹங்கள், இடும்பன் சந்நதிகள். 108 படிகளுள் பாதியைக் கடந்ததும் மீனாட்சி, சுந்தரேசுவரருக்குத் தனித்தனிப் பிராகாரங்கள். ஈச்வரன் சன்னதியில் பிர திஷ்டையாகியுள்ள லிங்கம் காஞ்சிப் பெரி யவர் தேர்ந்தெடுத்து அனுப்பியது - கங்கை யில் உருண்டு, தேய்ந்து இயல்பாய் லிங்க வடிவு பெற்றுக் கரை சேர்ந்த பாண லிங்கம் அது, என்று சத்சங்கத்தார் விளக்கு கிறார்கள். மீனாட்சி, சுந்தரேசுவரர் சந்நிதி யிலிருந்து பார்த்தால் தொலைவில் திரி சூலம் கோவில் கோபுரம் தெரிகிறது.

108 படிகளையும் கடந்து குன்றின் உச்சியை அடைந்தால் 'இது தமிழ்நாட்டின் கதிர்காமமோ' என்று வியக்கத் தோன்று கிறது. அந்த 120 அடி உயரத்திலிருந்து குன் றத்தூர், திருநீர்மலைக் கோயில்கள் தெரி கின்றன. சுற்றிலும் பசுமையான சோலை களும் தடாகங்களும் தென்படுகின்றன. குமரன் குன்றத்தின் உச்சியிலேயே இயற் கையாக அமைந்துள்ள 'குமார தீர்த்தம்' என்ற தடாகம் 40 அடி நீர் மட்டத்துடன், பூஜை, அபிஷேக ஆராதனைகளுக்கு நீர் அளிக்கிறது.

சத்சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்கள் கல்யாண ராமனும் சச்சிதானந்தமும் கோயி லையும் நந்தவனத்தையும் சுற்றிக் காண்பிக் கிறார்கள். 'ஞானச் சோலைவனம்' என்ற பாந்தமான பெயருடன் அன்றாடம் புஷ்ப கைங்கரியம் செய்கிறது இந்த நந்தவனம்.

அழகையே பெயராகக் கொண்ட முருகனுக்குக் கொள்ளை அழகுடன் தன் னிறைவும் படைத்த இருப்பிடத்தை அடை யாளம் காட்டிய பரமாச்சாரியாளின் ஞான திருஷ்டியை நினைத்து வியக்கிறோம். சத்சங்கத்தாரின் பக்திப் பணி தொடர அந்த பால முருகனிடமே வேண்டிக் கொள் கிறோம். சந்தியா கால பூஜைக்கு மணி ஒலிக்கிறது. 'ஓம்' 'ஓம்' என்று பிரணவ நாதமாக அது நம் செவிகளில் பாய்கிறது.

– பானுமதி ராமச்சந்திரன்

படங்கள் : உத்ரா

முன்கதைச் சுருக்கம் :

சென்னையில் பெரிய தொழிலதிபர் ராஜசேகர். தமக்கு வயதாகி விட்டதென்று தம் ஒரே மகன் பிரகாஷை மெல்ல பிஸினஸ் பொறுப்பு ஏற்குமாறு வற்புறுத்துகிறார். திட்டமாக மறுத்துவிடும் பிரகாஷின் ஈடுபாடு முழுவதும் ஓவியத்தில். சிந்துஜா அவன் காதலி. அசத்தும் அழகி. ஆனால் சாதாரண குடும்பத்தில் பிறந்தவள். தீவிரப் பணப் பற்றுடைய அப்பா தங்கள் காதலை அங்கீகரிப்பாரா எனக் கவலையுறுகிறான். இதனிடையில் நகரில் ஓர் அரசியல் பொதுக் கூட்டத்தில் நடிகன் ஆனந்த் குமார் டெலஸ்கோப்பிக் ரைஃபிளால் தீர்க்கப்படுகிறான். அக் குற்றம் நிகழ்த்தியவன் சோமையா. அவன் சார்ந்திருக்கும் டான் கலிலியோ குழுவை ஏவியவர் குணமூர்த்தி. இனி...

2

ஸெல்லுலாய்டு நாயகன் ஆனந்த் குமார் கொடூரமாகக் கொல்லப்பட்ட அன்றிரவும், மறுநாளும் பஸ்களைக் கொளுத்தி, கண்ணில் பட்டதையெல்லாம் உடைத்து, மரபு மாறாமல் செம்மையாகத் 'துக்கம்' கொண்டாடப்பட்டது. தினசரிகளில் தீப்பொறி பறந்தது.

துல்லியமாகக் கொலை நிகழ்த்தப் பட்டிருந்ததில் போலீஸ் திசை தெரியாமல் திணறிப் போயிருந்தது.

ஆனந்த் இறந்த மூன்றாம் நாள் முன்னிரவு :

அ. உ. மு. கட்சியின் முக்கிய புள்ளி குணமூர்த்தி அழைப்பு மணி அழுத்தி விட்டுக் காத்திருந்தார். அந்தக் கட்டடத்திற்கு வெளியில் அவருக்கு வேறு ஆரோக்கிய முகம். எமகாதகன்.

இம்மாதிரி பல கட்டடங்கள் டான் கலிலியோ வைத்திருப்பதாகக் கேள்வி. திடீர் திடீரென்று இடம் மாறி விடுவார்களாம்.

கதவைத் திறந்தவன் சட்டைக்குள் காணப்பட்ட உப்பலான உறுத்தல் - துப்பாக்கி என்று உணர்ந்தார் குணமூர்த்தி.

எச்சில் மிடறு விழுங்கியபடி, ''நான்...'' என்று ஆரம்பித்தவரை, ''தெரியும்!'' என்று அவன் இடைவெட்டி ஹாலுக்கு இட்டுச் சென்றான்.

''வாங்க குணமூர்த்தி!'' என்று வரவேற்ற சோமையா பனியன் லுங்கியிலிருந்தான். அவன் முன் ஒரு டீப்பாய்; அதில் லிக்கர் ஆயத்தங்கள்....

பத்மா ரவிசங்கர்

''சரியான சமயம்தான் வந்திருக்கீங்க!''

குணமூர்த்தி அமர்ந்து கொண்டதும் தன் கையிலிருந்த ப்ரீப் கேஸை லேசாக உயர்த்தி, ''பணம் கொணாந்திருக்கேன் சோமையா'' என்றார்.

''இருக்கட்டும். முதல்ல ஸ்காட்ச் சாப்பிடுங்க.''

''வேணாம்பா...'' என்று தயங்கினார்.

''சாப்பிடுவீங்கல்ல?'' என்றவன் களுக்கென்று சிரித்தான். ''ஒரு அரசியல்வாதிகிட்ட என்ன அபத்தமாக் கேட்கறேன் பாருங்க!''

குணமூர்த்தி கண்டுகொள்ளாமல், ''ஆனந்த் கொலையைக் கச்சிதமாக முடிச்சதுக்கு தேங்க்ஸ்'' என்றார்.

டான் கலிலியோ

லிக்கர் சரிப்பதிலிருந்து நிமிர்ந்து அவரை ஊடுருவிப் பார்த்துச் சிக்கனமாகச் சிரித்தான் சோமையா. கோப்பை உரசி உற்சாகம் உரைத்து விட்டு மெல்லப் பருகினர்.

ஏதோ யோசனையுடன் பருகிய சோமையாவைக் கவனித்தார் குணமூர்த்தி. அவனுக்கு 45 வயதிருக்கும். தேர்ந்த கொலையாளி என்று சொல்ல அவன் பர்சனாலிட்டியில் விசேஷமாக ஏதுமில்லை. மிதமான உடல்வாகு. கன்னத்திலிருந்த ஒரு வெட்டுத் தழும்பு தவிர்த்து முரட்டுத்தனமற்ற சாதாரண முகம்தான்.

சோமையாவின் இந்த மேல்தோற்றத்தில் குணமூர்த்தி ஏமாறத் தயாராயில்லை. ஒரு விபரீத விருப்ப வினாடியில் திடுமென்று சிறுத்தையாக அவன் மாற முடியும் என்பதை உணர்ந்திருந்தார். அலைந்து கொண்டிருந்த அவன் கண்களில் ஒருவித பூனைத் தன்மையும், எச்சரிக்கையும் தெரிந்தது; ஆபத்து ஒளிர்ந்தது.

சோமையா தான் டான் கலிலியோவா? இருள் சாம்ராஜ்யத்தின் ரகசிய

ராஜா டான்கலிலியோ. சோமையாவிடம் ஜ்வலிக்கும் ஆபத்தும், கம்ப்யூட்டர் குற்ற மூளையும், ஏவலுக்கு விருப்பமுடன் காத்திருக்கும் ஆட்களும் 'அவன்தான், அவன்தான்' என்று பறை சாற்றின.

குணமூர்த்தி ஆவலை அடக்க முடியாமல், ''நீ... நீதான் டான்கலிலியோவா?'' என்றார்.

சட்டென்று சோமையாவின் கண்களில் பளிச்சிட்ட பெருமித போதைக்குக் காரணம் நிச்சயம் முதல் பெக் இல்லை.

ஒரே வினாடியில் இயல்பாகி விட்ட சோமையா, ''அனாவசியக் கேள்வி கேட்டா எனக்குப் பிடிக்காது'' என்றான் முரட்டுக் குரலில்.

'மீதித் தொகை' என்று அவர் கொடுத்த ப்ரீப்கேஸை உதவியாளன்வசம் ஒப்படைத்தான்.

''புழங்கின நோட்டுதானே?''

''ஆமா சோமையா. பொட்டி பிரிச்சுப் பார்க்கலையா?''

''தேவையில்லை!'' என்றான் அலட்சியமாக. ''எங்களை எவரும் ஏமாத்த நினைப்பாங்களா? அப்படி நினைக்கிறவங்க கதி என்ன ஆவது?''

அவன் சிரிப்பில் உள்ளுக்குள் நடுங்கினார். ஹாலில் மாட்டியிருந்த ஆக்ரோஷ சிங்கத் தலை ப்ளோ அப்பைச் சிறிது நேரம் வெறித்துப் பார்த்தார்.

''சுத்தமான வேலைதான். இருந்தும் உள்ளுக்குள்ள அடிச்சிக்குது. அந்த நடிகன் கொலையில பின்னால ஏதும் கண்டுபிடிச்சு போலீஸ் பிரச்னை பண்ணாதே?''

''எங்க திறமைக்கு ஒரு உதாரணம்



சொல்றேன் குணமூர்த்தி. நீங்க இப்ப என்னைச் சந்திக்க வந்தது ஒரு சிவப்பு மாருதி கார்ல. அதையும் ரெண்டு தெரு தள்ளி இருட்டுல நிறுத்திட்டு வந்திருக்கீங்க. யாரும் ட்ரேஸ் செய்யக் கூடாதுன்னு கார் நம்பர் பிளேட்டுல சேறு பூசி மறைச்சிருக்கீங்க. இந்தக் காரும் ஒரு நண்பருடையது. சரிதானா குணமூர்த்தி?''

வியப்பில் வாய் பிளந்த குணமூர்த்தி தலையசைத்து ஆமோதித்தார்.

''டானைப் பிடிக்க, இனி ஒருத்தன் பிறக்கணும்! வீணாக் கவலைப்படாம கிளம்புங்க.''

அவர் அகன்றதும் மறைவில் வாசல் காவல் காத்தவனை விளித்தான் சோமையா.

''என்ன பாஸ்?''

''இந்த விஸ்கி கப்பை டிரேயோட அலுங்காமத் தூக்கிப் பீரோவில பத்திரப் படுத்து!''

''எதுக்கு பாஸ்?''

''குணமூர்த்தி மாதிரியான அரசியல் வாதியை நம்ப முடியாது. இந்தக் கோப்பை ஒரு இன்ஷுரன்ஸ். பிற்பாடு ஒரு பிரச்னைன்னா நம்ம விருப்பத்துக்கு அவரை வளைக்கவும் முடியும்.''

''எப்படி பாஸ்?''

''முட்டாள்! அந்தக் கப்புல குணமூர்த்தியோட கைரேகை இருக்குடா! தேவைன்னா ஒரு எதிர்க் கட்சி ஆசாமியைத் தீர்த்துட்டு இந்தக் கப்பை அங்கே 'பிளாண்ட்' செய்துட்டுப் போலீசுக்குப் போன் போட்டா - ''

''அட! உங்களுக்கு நரி மூளை பாஸ்!''

எத்தனையாவது முறையாகவோ நேரம் பார்த்தான் பிரகாஷ். மதியம் 3.00. சட். சிந்துவைச் சந்திக்க இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கிறதே என்று நொந்து கொண்டான்.

சிந்துஜா காலையில் போன் செய்ததிலிருந்தே அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பாதி வரைந்திருந்த ஓவியத்தைக் கூட ஒதுக்கி வைத்துவிட்டான். காதலியைக் காணும் ஆசை முன்பு, ஓவியம் கூட இரண்டாம் பட்சம்தான். சிந்துஜாவை இரண்டு 'முழு' நாட்கள் பார்க்காமல் தவித்துப் போயிருந்தவனுக்குத் தற்போதுதான் முகத்தில் உயிர் வந்திருந்தது.

பிரகாஷ் நர்வஸாக நடை பயின்று ஹாலுக்கு வந்து அமர்ந்தான். இறைந்திருந்த தினசரிகளில் ஒன்று தேர்ந்தெடுத்துப் பிரித்தான்.

கொட்டை எழுத்துக் குற்றச் செய்திகள். அரசியல் ஆரவாரங்கள். சூடான சூளுரைகள். நெருக்கியடித்த சினிமா விளம்பரங்கள். ஒரு திரைக் காவியத்திற்கு வெற்றிகரமான பத்தாவது நாளாம்!

நாலாம் பக்கத்திலிருந்த 'கண்காட்சி' பற்றிய விளம்பரம் பார்த்ததும் அவன் முகத்தில் பரவசப் புன்முறுவல் அரும்பியது. மனம் சரசரவென்று பின்னுக்குத் தாவியது. அவனுடைய ஓவியக் 'கண்காட்சியில்தான்' முதன்முதல் சிந்துஜாவைச் சந்தித்தான்......

அவனுடைய ஓவியங்களுக்கு நல்ல வரவேற்பிருந்தது. நடைபெற்ற நான்கு நாட்களும் குறைவின்றிக் கூட்டம். சிலர் விரும்பி விலைக்கு வாங்கிச் சென்றனர். சிற்சிலர் நாடிய ஆர்வ குறிப்புகளுக்குப் பெருமிதமாகப் பதிலுரைத்தான்.

நான்காம் நாள் மதியம். காலரியில் அவ்வளவாகக் கூட்டமில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தில் ஒரு ஓரமாக ஒதுங்கித் தீவிர ரசனையுடன் பிரகாஷ் ஓவியம் வரைகையில் -

''ஏன் மிஸ்டர் நீங்க செஞ்சிருக்கிறது நியாயம்தானா?''

திடுமென்று ஒரு பெண் குரல் கோபமாக ஒலித்ததும் ஓவியத்திலிருந்து நிமிராமல் நிதானமாக, ''என்ன அநியாயம் செய்துட்டேன் மேடம்?'' என்றான்.

என் அனுமதி இல்லாம என்னைப் படமா வரைஞ்சு இப்படி பப்ளிக்கா டிஸ்ப்ளே செய்திருக்கிறது அநியாயமில்லையா?''

''உளறாதீங்க! உங்க படம் நான் வரைஞ்சேனா?'' என்று மனமின்றி நிமிர்ந்த பிரகாஷ் அதிர்ந்தான். அவனைப் பல ஆச்சரிய அம்புகள் ஒரு சேரத் தாக்கின. அசரவைத்தது அவள் அழகு. அவள் கோபமாக விசிறிக் காண்பித்த அவனது ஓவியத்தில்



''என்ன சார் இது? இவரு வேட்டி கட்டிக்கிட்டுச் சட்டையை 'இன்' பண்ணிட்டுப் போறார்?''

''அதான் சொன்னேனே, அவர் பழமைக்கும் புதுமைக்கும் பாலமா திகழறவர்னு!''

- சம்பத் குமாரி

'ஏறக்குறைய' ஆச்சரிய அச்சாக அவள்.... மை! மை!

பிரகாஷ் திணறலுடன், ''நான்... நான் உங்களை என் வாழ்நாளில் இப்போதான் முதன் முறையாப் பார்க்கிறேன் மிஸ்!'' என்றான்.

''பொய் சொல்லாதீங்க சார்! நீங்க சேலம் வந்திருக்கீங்க.''

மேலும் வெளியான விவரத்தில் வியந்தான். அவள் - பெயர் சிந்துஜாவாம் - பிறந்து வளர்ந்தது சேலம் நகரத்திலாம்; சென்னையை முதன் முறை மிதித்தது நேற்றுத்தானாம். இவனோ சேலம் சென்றதில்லை. பின் எப்படி இது சாத்தியம்?

அவன் அம்மா இறந்த இரண்டாம் மாதம் உதித்த ஓவியம் அது: 'மோனம்' என்ற தலைப்பில் - யோசனையில் ஆழ்ந்திருக்கும் ஓர் இளம் பெண்ணை, க்ளோசப்பில் தத்ரூபமாகக் கொண்டு வந்திருந்தான். தற்போது அப்பெண் எதிரில் உயிருடன்....! எப்படி சிந்துஜா என்ற இந்த தேவதையின் உருவம் அவன் கற்பனையில் உதயமாயிற்று?

விதியா? ஈ.எஸ்.பியா? ப்ரிய அம்மாவின் ஆவி அவனுள் புகுந்து....? அல்லது பூர்வ ஜென்மத் தொடர்பா? தற்செயல் என்று அவனால் ஒதுக்க முடியவில்லை. நிகழ்ந்தவை யாவற்றிலும் ஒரு தவிர்க்க இயலாத தன்மை இருப்பதாகப் பட்டது.

'இவள்தான்... இவள்தான்' என்று உள்ளுக்குள் ஒரு உற்சாகக் கூப்பாடு கிளம்ப, ஒரு வித 'வித்தயாச' உணர்வு.

அவள் விடை பெறுகையில் அன்புடன் என்று கையெழுத்திட்டு 'மோனம்' பரிசளித்தான். முகவரி பறிமாறி -

அன்றிரவு ஸ்டீரியோவில் வயலின் இசை இழைய உலகத்து உச்சியில் உலவுவதாக உணர்ந்தான்.

மறுநாள் சிந்துஜா ஹாஸ்டலுக்குச் சென்றான். அதற்குப் பிறகு பல சந்திப்புகள்......

'உன் அப்பா அம்மா சேலத்திலா?'

'என் இனிஷியல் 'அ'!'

'அப்படின்னா?'

'அனாதை சிந்துஜான்னு அர்த்தம்! என் பதினாலாவது வயசின்போது அப்பா அம்மாவை ஒரு பஸ் விபத்துல பறி கொடுத்துட்டேன். தாய் மாமா ஆதரவு காட்ட முன் வந்தார். ஆனா சில நாள்லயே அவர் 'பாசம்' என் உடம்பு மேலன்னுத் திட்டமா தெரிஞ்சப்போ வெளியே வந்துட்டேன். சேலம் கஸ்தூர்பா சமூக நல சங்கம் அரவணைச்சுக்கிட்டது. தொடர்ந்து படிச்சேன். ஸ்டாஃப் செலக்ஷன் பரீட்சை எழுதினேன். டிகிரி முடிஞ்ச சமயம் சரியா மெட்றாஸுக்கு ஏஜீஸ் ஆபீஸ்ல எல்.டி.சி. கிளார்க் போஸ்டிங் கிடைச்சுது. அதுக்காகச் சென்னை வந்தப்பதான் பொழுது போகாம உங்க ஓவிய -'

'இனி நீ அனாதையில்லை. உனக்குத் துணையா நான் -'

'நான் தகுதியில்லையோன்னு -'

'ஷட்டப். நீ என் அதிர்ஷ்டம் சிந்து!'

'ஏன் அப்படி பார்க்கறீங்க பிரகாஷ்?'

'உத்துப் பார்த்தா 'மோனம்' படத்துக்கும் உனக்கும் ஓரிரண்டு வித்தியாசம் தென் படுதும்மா. படத்துல கன்னத்துல மிளகு சைஸ் மச்சம் வரைஞ்சிருந்தேன். உனக்கு அது இல்லை. நேர்ல உன் உதடு இன்னும் திருத்தமா -'

'ஏய். எல்லை மீறாதே!'

●

'சிந்து டார்லிங்! என்ன சீரியஸா எழுதிக்கிட்டிருக்கே? ஸ்ரீராமஜயமா? புதுக் கவிதையா? ஆபீஸ் குறிப்பு ஏதேனுமா?'

'...........'

'புக்கை இப்படிக் கொடு... மைகாட்! நோட்புக் பூராவும் என் பெயர்! உனக்கு என்ன பைத்தியமா?'

'ஆமா. உங்க பேர்ல!'

●

கடிகாரம் இனிமையாக ஒலித்து '4.30' என்று அறிவிக்கவும் ப ழ ை ய பரவச நினைவுகளிலிருந்து விடுபட்டான். பரபரப்புடன் காரில் கிளம்பினான்.......

பிரகாஷும் சிந்துஜாவும் நட்சத்திர ஹோட்டலிலிருந்து வெளிப்பட்டனர். இருவரும் கைகோர்த்து உற்சாகமாகப் பேசியபடி செல்வதை ஒரு ஜோடி பூனைக் கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன.......

(தொடரும்)



''இங்கே புதுசா கட்டியிருக்கும் ரெஸ்டாரண்டுக்கு 'குப்ஸ் அன் கூல்ஸ்'னு அழகான பெயர் வைக்கணும்னு எப்படி உங்களுக்கு ஐடியா வந்தது?''

''இதைக் கட்டறதுக்கு முன்னாடி ரொம்ப வருஷமா இந்த இடத்துல குப்பையும் கூளமுமாய் இருந்தது. அதைத்தான் கொஞ்சம் சுருக்கி அப்படி ஸ்டைலாகப் பேர் வச்சேன்!''

- ஆர். ரகோத்தமன்

Deposits will be accepted at the following rates of interest and subject to the terms and conditions as indicated in the form of application of deposit available at the Administrative Office and other branch offices of the Company.

SOWBHAGYA VISHWAS

Deposit (Rs)	No. of Years	Amount on Maturity * (Rs)
5,260	20	1,00,000
8,238	15	75,000
11,467	10	50,000
11,973	5	25,000

* a) These maturity values are at current interest rates and period of deposit as per RBI guidelines and are subject to renewals on the due dates. Any change in the RBI guidelines will have the effect of increasing or decreasing the maturity values. b) The above maturity values are at 15% per annum compounded quarterly. c) Subject to tax deduction at source. d) As per RBI guidelines, for repayments before maturity, no interest will be paid up to 24 months and at 1% less than the contracted rate for over 24 months.

Information required to be specified as per Non-Banking Financial Companies (Reserve Bank) Directions 1977, and Non-Banking Financial Companies and Miscellaneous Non-Banking Companies (Advertisement) Rules 1977. are given below
(a) Name of the Company: THE INVESTMENT TRUST OF INDIA LIMITED. (b) Date of incorporation: 2nd August, 1946. (c) Business carried on by the Company and its subsidiaries with details of branches or units, if any: Business: Hire Purchase Financing, Investments, Leasing, Industrial Financing, Mortgage Financing etc. The Company has no subsidiaries. Branches: New Delhi, Bombay, Bangalore, Mysore, Hyderabad, Vizag, Nellore, Trivandum, Cochin, Kottayam, Calicut, Pondicherry, Tirunelveli, Trichy, Coimbatore, Nagercoil, Madurai, Salem, Erode, Thanjavur, Vellore, Dindigul, Tuticorin, Hubli, Rajkot. (d) Brief particulars of the management of the Company: The Company is managed by a Managing Director under the control and supervision of the Board of Directors

(e) Name, address & occupation of the Directors:

• Mr. H.C. KOTHARI, Chairman & Managing Director, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Madras-600 031. Industrialist. • Mr. G.K. SUNDARAM, "Rasakondalu" Circuit House Road, Coimbatore-641 018. Industrialist • Mr. A.L. MUDALIAR, "Avanti", 858, Poonamallee High Road, Kilpauk, Madras-600 010. Business Executive & Management Consultant • Mr. C. SRINIVASAN, 29, Broadway, Madras-600 108. Industrialist • Mr. N. SRINIVASAN, T-18, Sixth Avenue, Besant Nagar, Madras-600 090. Chartered Accountant • Mr G CHIDAMBAR, 101A, Janakpuri II St., Off Velachery Road, Madras-600 032. Former Managing Director, LIC. • Mr. B.H. KOTHARI, "Kothari Bagh", 11, Nungambakkam High Road, Mdras-600 034. Company Director • Mr. M.R. SHAH, A-23/24, Woodlands Apartments, Peddar Road, Bombay-400 026. Business.

(f) Profits of the Company before and after making provisions for tax for the three financial years immediately proceding the date of advertisement.				(g) Dividend declared by the Company in respect of the said year (Rupees in lakhs percentage)	
	Profit before depreciation and taxation (Rupees in lakhs)	Profit before taxation	Profit after taxation	Amount	Percentage
31.03.91	255.00	150.13	150.13	36.81	25%
31.03.90	199.90	87.90	72.90	36.81	25%
31.03.89	222.78	143.20	119.20	31.72	32%

LIABILITIES	31-3-91 (Rupees in lakhs)	31-3-1990	ASSETS	31-3-91 (Rupees in lakhs)	31-3-90
Share Capital	147 25	147 25	Fixed Assets	1175 73	912 64
Reserves & Surplus	444 05	325 53	Investments	68 41	63 76
Secured Loans	1663 15	1131 33	Current Assets		
Unsecured Loans	1816.28	1623 02	Loans and Advances	4182 87	3387 21
Current Liabilities	1262 84	1020 52	Miscellaneous		
Provisions	103.39	115 96	Expenditure	.9 95	nil
	5436 96	4363 61		5436 96	4363 61

Note: Contingent Liability not provided for: (i) On partly paid Shares and Debentures: Rs. 74,645 (ii) Sales tax on lease contracts under writ petitions: Rs. 13,09,286. (iii) Commitments in respect of contracts to be executed on capital account (since discharged): Rs. 40,21,615. (i) The amount which the Company can raise by way of deposits under Reserve Bank of India directions: Rs. 58.14 Crores. Aggregate of deposits actually held on the last day of the immediately preceding financial year, viz. 31.3.1991: Rs. 15.06 Crores (j) The Company has no overdue deposits other than unclaimed deposits. (k) It is hereby declared that (i) The Company has complied with the applicable provisions of the directions. (ii) The compliance with the directions does not imply that the repayment of deposits is guaranteed by the Reserve Bank of India and (iii) The deposits accepted by the Company are unsecured and rank pari passu with other unsecured liabilities. The above text of this advertisement has been approved by the Board of Directors on 9.5.1991.

(By Order of the Board)
For THE INVESTMENT TRUST OF INDIA LIMITED
V. Parthasarathy Secretary

Regd Office
"Kothari Buildings"
117, Nungambakkam High Road,
Madras-600 034

Note: A copy of this text duly signed by a majority of the Directors of the Company has been filed with Reserve Bank of India, Bangalore

Also available: Fixed, Cumulative and Recurring Deposit Schemes.

HC Kothari Group

NADU AND PONDICHERRY : • C/o. The Madras Safe Deposit Co. Ltd., 56, Germiah Road, Purasawalkam, **Madras** 600 007. Ph : 32398 • 47, n Street, **Madras** 600 001 Ph : 582431 • No 102, Rajaji Road (First Floor), Ram Nagar, **Coimbatore** 9 Ph 22929 • No 52, New Agraharam (Upstairs), 3 624 001. Ph . 7208 • 39-G, E.V. Nanjappa Road, I Floor, **Erode** 638 009 • 174-D, I Floor, North Veli Street **Madurai** 625 001 Ph 26545 • 532, d, Vettoorni Madam, **Nagercoil** 3. Ph : 6001 • Dr. Rajaram Garden I Floor, 116-C, Omalur Main Road, **Salem** 636 007 Ph 66682 • No.2609, South eet, I Floor, **Thanjavur** 613 009 Ph : 21972 • 33B/3, Promenade Road, II Floor, Cantonment, **Tiruchirapalli** 620 001 Ph 41435 • 10-F/2, Trivandrum anapal Buildings, Palayamkottai, **Tirunelveli** 627 002. Ph : 72864 • 6-E North Cotton Road, **Tuticorin** 628 001 Ph 24257. • No.67, Katpadi Road, **ellore** 632 004. Ph : 24886. • II Floor, 35, Thiruvalluvar Salai, **Pondicherry** 605 013. Ph : 26358.

LINTAS M ITI 13 2025

டான் கலிலியோ

3

மாலை 4:30. ரெயின்போ நகர் வங்கிக் கிளை திறந்து அரைமணியாகி விட்டது. வாடிக்கையாளர் வசதிக்காக இரு வேளை இயங்கும் பேங்க் அது.

உள்ளே அவ்வளவாக கஸ்டமரின்றி ஈயடித்தது. ஆயினும் வங்கியின் மானேஜர் நாராயணன் நர்வஸாக இருந்தார். இன்று தேதி 31. ஒவ்வொரு மாதத்தின் கடைசி தினமும் அவரை டென்ஷன் பற்றிக் கொள்ளும். மறுதினம் காலையில் பெரிய பணம் பட்டுவாடா ஆகும் வரை வயிற்றில் நெருப்புக் கட்டிக் கொள்வது மாதிரி.

ஊழியர் பட்டாளத்திற்குச் சம்பளம் கொடுக்க, ஒவ்வொரு முதல் தேதி காலையும் ரெயின்போ நகர எல்லையிலுள்ள கம்பெனி லட்சக்கணக்கில் அள்ளிச் சென்று விடும். போதாக்குறைக்கு கக்கத்தில் இந்து, கழுத்தில் ஸ்கார்ப் சகிதம், 'லொக் லொக்' என்று இருமும் காலனியின் கிழ மேளா வேறு. தங்கள் பென்ஷன் 'கொள்ளை' போகிற அவசரத்தில் காலையில் ஒட்டு மொத்தமாக 'ஓடி' வந்து விடும். அவர்களுக்கும் ஏராள முன் பணம் வாங்கி வைக்க வேண்டும்.

பிரதானக் கிளையிலிருந்து காலையிலேயே பணம் கொண்டு வந்தாகி விட்டது. இனி நாளை வரை தேவுடு காக்க வேண்டுமே என்று நொந்து கொண்டார் நாராயணன். அவர் அமர்ந்துள்ள இடத்திலிருந்தே கண்ணாடித் தடுப்புத் தாண்டி வாசல் தெரியும்.

ஸ்டுலில் அமர்ந்து சுவாரசியமாகக் காது குடையும் வாட்ச்மேனைப் பார்க்கையில் எரிச்சலானார். அவன் நிராயுத பாணி; நொந்து கொள்வதில் பயனில்லை. விஷயம் அறிந்து எவனாவது ஆயுதமுடன் வந்தால் போதும். வங்கி வால்ட்டைத் துப்புரவாக்கி விடலாம். இந்த சுலபமான டார்கெட்டை இதுவரை எவனும் முயற்சி செய்யாததே மூதாதையர் புண்ணியம்.

துப்பாக்கியுடன் எக்ஸ்சர்வீஸ் மேன் காவல் கேட்டுப் பார்த்துவிட்டார். ஹூம். மெத்தனமாயுள்ள நிர்வாகம். இந்த க்ரைம் யுகத்தில் தன் கவலை நியாயம் என்றே அவருக்குப் பட்டது. காலனியிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில்தான் ஒரு போலீஸ் ஸ்டேஷன் உள்ளது.

அவர் பாட்டுக்குத் திருச்சியின் பிரதானக் கிளையில் செங்கோலோச்சிக் கொண்டிருந்தார். சென்னையில் மனைவி, மக்கள் மற்றும் சுற்றம்... மாற்றல் கேட்ட பாழும் ஆசை. ஆனால் அவர் கண்டாரா ரெயின்போ நகரம் வரை சென்னை விரிந்து தொலைந்துள்ளது என்று...

எதேச்சையாக நிமிர்ந்த நாராயணன் அதிர்ந்தார்.

வாசலை ஒட்டி வந்து நின்ற ஒரு வேனிலிருந்து அவர்கள் அவசரமாகக் குதித்தனர். அவர்கள் முகமூடி அணிந்திருந்தனர்...

மெரீனா பீச் காற்று சிறலுடன் சிலுசிலுத்தது. அலைகள் ஆரவாரித்தன. தொலைவில் மூன்றாம் பிறைகளாய்க் கட்டு மரங்கள். மயக்கும் மஞ்சள் மாலை மங்குவதற்கு வெகு நேரமிருந்தது. சந்தடி வில(க்)கிய வழக்கமான இடம். மணலின் சூடு இதமாக இருந்தது.

ஊதாப் பூக்கள் இறைந்திருந்த சுடிதாரில் அப்சரஸாய் சிந்துஜா. அந்த உடை சென்ற மாதம் பிரகாஷ் பரிசளித்தது. பச்சையில் கறுப்புக் கட்ட காஷுவல் காட்டன் சட்டை, சந்தன நிற கார்டுராய் பேண்ட் அணிந்திருந்தான் அவன். சிந்துஜாவிற்குப் பிடித்த ஆடைகள் அவை.

சிந்துஜாவின் முகம் சோகம் சூழ்ந்து ஏனோ உம்மென்றிருந்தது.

''நான் லேட்டா வந்தேன்னு கோபமா டியர்? இனிமே லேட்டா வந்தா...'' என்று விவிதபாரதி விளம்பரப் பாணியில் சூழ்நிலையை நகைச்சுவையாக்க முயன்று தோற்றான்.

''ஏன் மூடு ஆஃப்? ஈஸ் சம் திங் ராங் டியர்?'' பதற்றமுடன் கேட்டான். மேலும் வற்புறுத்தியபின் சொன்னாள்.

''நேத்து இரவு ஒரு கெட்ட கனவு கண்டேன் பிரகாஷ். உங்களை விட்டுப் பிரிஞ்சுடற மாதிரி...! பலிச்சிருமோன்னு பயமா இருக்கு!'' என்றாள் தழுதழுப்புடன்.

பத்மா ரவிசங்கர்

''சே! இவ்வளவுதானா...''

''உங்கப்பா நம்ம மேரேஜுக்கு சம்மதிப்பாரா?''

''கவலையை விடு. அப்பாவை எப்படியும் சம்மதிக்க வைச்சிருவேன். நாளைக்கே முயற்சியில இறங்கறேன்'' என்றவன், பெருமூச்சு விட்டு விட்டு, ''ஒண்ணு உறுதியாத் தெரிஞ்சுக்க சிந்து. பணம்னு இல்லை; உலகத்தின் வேறு எந்த சக்தியும் கூட நம்மைப் பிரிக்க முடியாது; பிரிக்க அனுமதிக்க மாட்டேன்'' என்றான் உணர்ச்சியுடன். ''எங்கே பளிச்சுனு சிரி பார்க்கலாம்.''

''நாலு பேர்ல ஒருத்தன் எங்க வாட்ச்மேனை உள்ளே விரட்டிட்டு 'இன்று விடுமுறை' போர்டு மாட்டிட்டு ஸ்டூல்ல காவல் உட்கார்ந்துக்கிட்டான். உள்ளே வந்தவங்க துப்பாக்கியைத் தூக்கி மிரட்டி...''

''ஓ.கே. ஓ.கே. ஐ நோ. ஹாரிபிள் எக்ஸ்பீரியன்ஸாக இருந்திருக்கும். மாருதி வேன்னுதானே சொன்னீங்க? சிடி பூராவும் பிளாக் வெச்சிருக்கோம். துடிப்போட ஒயர்லஸ் காத்துக்கிட்டிருக்கு.''

அவள் புன்னகை செய்தது பரிதாபமாக இருந்தது.

''இன்னும் கனவு ஞாபகமாடியர்?''

சோகமாகத் தலையசைத்தாள்.

''மற சிந்து. கமான், சியர் அப்.''

''முடியலையே பிரகாஷ்.''

''ஏன் சிந்துஜா?''

''என்...'' அவள் திணறினாள். ''என் பேரண்ட்ஸை விபத்துல பறிகொடுக்கறதுக்கு முத நாளிரவும் இதே கெட்ட கனவு கண்டேன்!''

அவன் அகன்ற தோளில் முகம் புதைத்துக் கொண்டாள். அவள் உடம்பு நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

சற்று நேரத்தில் கவலையுடன் கிளம்பினர். தொலைவில் ஆபத்து கண் சிமிட்டிக் கொண்டிருந்தது....

''கொள்ளையிட எவ்வளவு நேரம் எடுத்துக்கிட்டாங்க மிஸ்டர் நாராயணன்?''

''பத்து நிமிடம்தான் சார். ஒரு ஃபிளாஷ்ல காரியம் முடிச்சிட்டுப் போயிட்டாங்க. அவனுங்களுக்கு எவ்விதத் தடுமாற்றமும் இல்லை. இதுக்கு முன்னேயே இங்கே வந்து வங்கியை நோட்டமிட்டிருப்பாங்க போல!''


''ஐசி. மொத்தம் எத்தனை பேர்?''

''நான்கு ஆசாமிகள். உல்லன் குல்லா மாதிரி பிரத்யேகமாத் தைச்சு முகமூடி அணிஞ்சிருந்தாங்க. இரண்டு ஆசாமி கையில கறுப்பா - இதோ இவ்வளவு நீளத்துல - துப்பாக்கி வெச்சிருந்தாங்க!''

''ஏ.கே. 47?''

''தெரியலை சார். பார்க்கப் பயமாயிருந்தது.''

''மேல சொல்லுங்க.''



''அவங்க பேங்கிலிருந்து கிளம்பி ஒரு மணி நேரமாகி இருக்கும் சார்.''

''இருக்கட்டும் மிஸ்டர் நாராயணன். போலீசைக் குறைச்சு மதிப்பிடாதீங்க.''

''ஆங்! ஒரு விஷயம் இப்போ ஞாபகம் வருதுங்க.''

''என்ன? என்ன?''

''நால்வர்ல தலைவன் மாதிரி இருந்தவன் தோள் புறத்தில் சட்டையில் சிறுசா சிங்கம் மாதிரி ஏதோ எம்பிராய்டரி எம்பிளம் சமாச்சாரம் சார்.''

''என்ன...! என்னய்யா அங்கே கிசுகிசுப்பு? ஓகே. இது டான் கலிலியோ ஜாப்! ஸோ வாட்?''

''அவன் அகப்படற ஜாதியில்லை சார்!''

''சேவ் யுவர் டங் யங் ஆபீசர். உங்க முன்னேற்றத்துக்கு உதவற மாதிரி நடந்துக்குங்க என்ன... இங்கேயே இருந்து மிச்ச பார்மாலிட்டிஸை முடிச்சுட்டுத் தீர விசாரிச்சிட்டு வந்து சேருங்க.''

''எஸ் சார்.''

''நாம கண்ட்ரோலைக் கவனிக்கலாம் வாங்க. மாருதி சிக்குதான்னு பார்ப்போம்.''

''நிச்சயம் அகப்படும் சார்.''

''ஆமாய்யா. அனேகமா எங்கிருந்தாவது திருடிக்கிட்டு வந்த வண்டியா இருக்கும் பாருங்க. சே. இன்னிக்கு சிவராத்திரி தான். ஹாவ்... பதினோரு மணியாச்சு. இந்நேரம் ஊரே உறங்கியிருக்கும். போலீஸ்காரன் பொண்டாட்டி எல்லாம் பாவம் பண்ணவங்கய்யா.''

''சார்! சார்!''

''என்னய்யா பதற்றமா ஓடி வர்றே?''

''மாருதி வேன் அகப்பட்டிருச்சு!''

''வாட்! எங்கேய்யா?''

''நம்ம ஆபீஸ்லருந்து பத்து பிளாக் தள்ளி. இருட்டுல நிறுத்தியிருக்காங்க.''

''கமிஷனர் ஆபீஸ் மூக்கடியில நிறுத்த என்ன ஒரு தெனாவட்டு, கிண்டல் பார்த்தீங்களாய்யா! ஹூம். நாளைக்குப் பேப்பர்க்காரனுக்கு வேட்டைதான்.''

''வேன் கண்ணாடில ஒரு சிங்கத் தலை ஸ்டிக்கரும் ஒட்டியிருக்காங்க. அவங்க குற்றத் திறமைக்கு பப்ளிசிடி போல!''

''ப்ளடி டான் கலிலியோ!''

இரண்டு நாட்கள் கழித்துத்தான் பிரகாஷால் தன் தந்தையைச் சந்திக்க முடிந்தது. அவருக்கு எப்போதுமே காலில் கஞ்சிதான். இந்த லட்சணத்தில் மகன் பிஸினஸ்ஸில் ஈடுபடவில்லையே என்ற குறை வேறு. நேரத்திற்கு அடிமையாக்கி விடும் இந்தப் பாழாய்ப்போன பிஸினஸ் யாருக்கு வேண்டும்?

''வாப்பா பிரகாஷ். உட்காரு'' என்று கனிவான குரலில் வரவேற்ற ராஜசேகர் புன்னகை செய்தார்.

இயல்பாக இல்லாமல் இருக்கையின் நுனியில் அமர்ந்தான். அப்பாவின் மேசை பைல் குவியலின்றிக் காலியாக இருப்பதைப் பார்த்து வியப்பானான்.

அவரின் கூரிய பார்வை தன்னை ஊடுருவுவதை உணர்ந்து, வார்த்தைகளுக்குச் சற்று தடுமாறிய பிரகாஷ், ''நான்... நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன் டாடி.''

ராஜசேகர், ''இஸிட்! வெரிகுட். நீ பிஸினஸ் பொறுப்பு ஏத்துப்பேன்னு நல்லாத் தெரியும் எனக்கு.'' என்றார் மலர்ச்சியுடன்.

''அதில்லை டாடி. இது வேறே'' என்றான் சங்கடமான குரலில்.

மௌனமாகப் பார்த்தார்.

சட்டென்று தயக்கத்தை விட்டொழித்து விட்டு பிரகாஷ், ''நான் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துக்க விரும்பறேன் டாடி'' என்றான். கேட்டதும் கொதிப்பார் என்று எதிர்பார்த்தான். மாறாக -

ராஜசேகர் முகத்தில் ஒரு அசாதாரண அமைதி வந்து விட, ''அந்தப் பொண்ணைப் பத்திச் சொல்லு'' என்றார்.

சொன்னான்.

''சுருக்கமா சிந்துஜா ஈஸ் கேர் ஆஃப் நத்திங்னு சொல்லலாம் இல்லையா?''

''இல்லைப்பா! ஷி மீன்ஸ் எவ்வரிதிங் டு மி!''

''இருக்கட்டும்! கேரளாவில மோகன் தாஸ்னு எனக்கு ஒரு சினேகிதர். அவருக்கு ஒரே மகள். அவருடைய சொத்து...''

''வேணாம்!'' என்று வேதனையுடன் இடைவெட்டி விட்டு, ''சிந்துஜா இல்லாம என்னால உயிர் வாழ முடியாது'' என்றான் உறுதியான குரலில்.


''ஐசி'' என்றார் யோசனையில் புருவம் முடிச்சிட. பின் எழுந்து சென்று ப்ரிட்ஜி

''கின்னஸில் இடம்பெற என்னதான் செய்யணும்னு விவஸ்தையே இல்லை...''

''ஏன் சார்...?''

''பின்ன என்ன சார் தொடர்ந்து 150வது நாளா பல் தேய்க்காம இருக்கானாம்!''

-எஸ். ராமசுப்பிரமணியன்



''இந்த ஆபீஸில் 'லஞ்சம்' தலை விரிச்சு ஆடுதுன்னு எப்படி சொல் றீங்க?''

''வாசல்ல பியூன் கவர் வித்துக் கிட்டு இருக்கிறதை வெச்சித்தான்!''

- குடந்தை எல். ராம்பிரபு



லிருந்த குளிர் குடிநீர்ப் பாட்டில் எடுத்துக் கடகடவென்று தொண்டையில் சரித்துக் கொண்டார்.

வயிற்றெரிச்சலை ஆற்றிக் கொள்கி றாரோ என்று நினைத்தான் பிரகாஷ்.

ராஜசேகர் மெல்ல அவன் அருகே வந் தார். ஆதரவாக அவன் தோள் பற்றி, அன்பு ததும்ப அவனைப் பார்த்தார். அவனுக்கு ஏதோ புரியவும் புல்லரித்துப் போய், ''அப்பா!'' என்று வியப்பில் விழி விரியக் கூவினான்.

''எஸ்!'' என்று அவர் கண்ணடித்து விட்டு, ''அந்தப் பொண்ணு பேரு என்ன - ஆங்... சிந்துஜா! சிந்துஜா மேல உயி ரையே வெச்சிருக்கேன்னு சொல்றே...''

குறுக்கிட்டுப் பெருமிதமாக, ''எஸ் டாட்!'' என்றான்.

''நீ என் ஒரே ஆசை வாரிசு. உன் விருப்பத்தை நிறைவேற்றாம இருக்க எனக்கு என்ன பைத்தியமா?''

உணர்ச்சியுடன், ''தாங்க்யூ! தாங்க்யூ வெரி மச் டாடி'' என்றவன் அவர் கை பற்றி உற்சாகமுடன் குலுக்கினான்.

''ஆசிர்வாதம் செய்ய என் கை இருக் கட்டும்பா!'' என்று சிரித்தார். பின் -

''யோசிச்சுப் பாரு பிரகாஷ். நீ சி.ஏ. படிக்கணும்னு விரும்பினேன் - கணக்கு வழக்குல சாமர்த்தியம் வரணும்னுட்டு. ஆனா நீ பிடிவாதமா ஹிஸ்டரின்னு சொன்னே. சரின்னேன். அப்புறம் பாரின் சுத்தணும்னு சொன்னே. ஒப்புக்கிட்டேன். ஓவியக் கண்காட்சிக்கு நச்சரிச்சே. ஏற்பாடு செய்து கொடுத்தேன். இப்போ திடீர்னு தி ரு ம ண ம் செய்துக்கவான்னு வந்து நிற்கிறே. வழக்கம் போல சம்மதிச்சுட் டேன். இப்படி உன் ஒவ்வொரு விருப் பத்தையும் மறுக்காம நிறைவேத்தறேன், இல்லையா... பதிலுக்கு என் ஒரே ஒரு விருப்பத்தை நீ நிறைவேற்றக் கூடாதா?''

''பிஸினஸ்தானே? சாரிப்பா! முடியா துன்னு வருத்தத்தோடதான் சொல்றேன். உங்க பிஸினஸ் எல்லையில்லாதது; சிக்க லானது. எனக்கு ஈடுபாடு இல்லை; திறமையுமில்லை. என்னால ஒரு பெட்டிக் கடையைக் கூட சரியா நிர்வகிக்க முடி யாது!''

''நான் இருக்கேனே பிரகாஷ். எல்லாம் மெல்ல சொல்லித் தர்றேன். பொறு மையாப் பழகிக்கலாம். நீ என் ரத்தம்டா பிரகாஷ். வராமப் போகாது.''

''ப்ளீஸ்...'' என்றான் ஏறக்குறைய கெஞ்சலாக.

''ஓ.கே. ஓ.கே'' என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டு விட்டு, ''இப்பத்தானே கல்யாணம்னு ஆரம்பிச்சிருக்கே. பொறுப் புத் தன்னால வரும். ஐ வில் வெயிட். சரி. அந்த சிந்துஜா போட்டோ ஏதும் வெச் சிருக்கியா?''

''இதோ!'' என்று பாக்கட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

''தயாராத்தான் வந்திருக்கே!'' என்று சிரித்தார் ராஜசேகர். சிந்துஜா அழகில் மலர்ந்தார். திருப்தியுடன் தலையசைத்தார். ''என் மருமக நல்ல அழகுதான். உனக்குப் பொருத்தம்தான்'' என்றவர் போனில் அவ சரமாக ஏதோ எண் சுழற்றினார். இரண்டு நிமிடம் போல் பேசி விட்டு வைத்தார்.

''பிரகாஷ் - மை டியர் சன் - உனக்கும் உன் அருமை சிந்துஜாவிற்கும் இன்னும் இருபது நாள்ல திருமணம்!'' என்று உற்சாக மாக அறிவித்தார்.

''அப்பா!'' என்றான் நம்ப இயலாமல்.

''நல்ல விஷயங்களைத் தள்ளிப் போடக் கூடாதுன்னு சொல்வாங்க.''

''ஏற்பாடுகள் செய்ய இருபது நாள் போதுமாப்பா?''

''நம்மகிட்ட ஒரு அற்புதமான விஷ யம் இருக்கு யங் ஃபெல்லோ.''

''என்ன அது?''

''பணம்! அதை விட்டெறிந்தால் மந்தி ரம் மாதிரி வேலை செய்யும். அதன் மகத் துவமே தனி.''

''போன் செய்து சிந்துவை சர்ப்ரைஸ் செய்யணும்.''

''பேசு. நான் வேணா காது பொத் திக்கட்டுமா?''

சிரித்தார்கள். அப்போது போன் ஒலித் தது. ராஜசேகர் எடுத்துக் கேட்டார். அவர் முகம் திடீரென்று கறுத்துச் சிறுத்து விட்டி ருந்தது. சோர்வுடன் போன் வைக்கையில் அவர் கரம் லேசாக நடுங்கிற்று.

''என்னாச்சுப்பா?'' என்றான் பிரகாஷ் பதற்றமாக.

''ஒரு கெட்ட செய்தி. எ பேட் நியூஸ் மை சன்!''

(தொடரும்)

"உங்களுக்கு எப்படி என்னைப் பிடித்தது?"

நவீனாவைப் பெண் பார்க்க வந்தவர்கள் தங்கள் சம்மதத்தை உடனேயே சொல்லி விட்டார்கள்.

''எங்களுக்குச் சம்மதம். உங்கள் பெண்ணையும் ஒருமுறைக்கு இருமுறை கேட்டுக் கொள்ளுங்கள். அவசரப்பட வேண்டாம்!'' எனக் கூறி விட்டுப் போனார்கள்.

பிள்ளை வீட்டார் நல்லவர்களாகத்



தெரிந்தார்கள். முன் நிபந்தனையாக எதுவுமே கேட்கவில்லை. ''உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்!'' என்று கூடச் சொல்லவில்லை. ''அவர்களுக்கு முடிந்தது அவர்களுக்கே தெரியாதா? நாம சொல்லித்தான் புரிந்து கொள்வார்களா?'' என் முன்பே ஹரி எச்சரித்திருந்தான்.

நவீனா அப்போதுதான் எம்.எஸ்ஸி., முடித்திருந்தாள். அவர்கள் வீட்டில் வரன் தேட முயற்சி செய்யு முன் தெரிந்தவர் சிபாரிசின் பேரில் இந்த வரன் தகைக்க குதிர்ந்தது.

ஹரி ஒரு எலக்ட்ரானிக் என்ஜினியர். எம். பி. ஏ. வேறு பாஸ் செய்திருந்தான். பிரபல தொலைக்காட்சிப் பெட்டி தயாரிக்கும் நிர்வாகத்தில் நல்ல பொறுப்பான வேலையில் இருந்தான்.

ஹரி வீட்டார் போன பிறகு நவீனாவிடம் அவள் அபிப்ராயத்தைக் கேட்டார்கள்.

''அவசரப்படாதே அம்மா... கல்யாணமாகி இருபத்து நான்கு வருஷங்கள் ஆகியும் அப்பாவை நீ புரிந்து கொள்ளவில்லை. உன்னையும் அவர் தெரிந்து கொண்டதாக விளங்கவில்லை. ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று தடவையாவது தகராறு வருகிறது. மோதிக் கொள்கிறீர்கள். வாக்குவாதம் செய்யாத நாள் கிடையாது. அந்த மனிதன் என்னைப் பார்த்தது ஐந்து நிமிஷம். அதற்குள் நான் அவருக்கு ஆயுட்கால அடிமையாக வேண்டுமா?''

''அனாவசியமாக எங்களை இழுக்காதே. நீ அந்தப் பையனிடம் சரணாகதி அடையவும் வேண்டாம்; விரட்டியடிக்கவும் வேண்டாம்! அவர்களுக்கு என்ன பதில் சொல்வது எனச் சொல், போதும்!''

''ஒரு இரண்டு நாள் - நாற்பத்தெட்டு மணி நேரம் அவகாசம் கொடுங்கள். என் பதிலைச் சொல்கிறேன்!'' என்றாள் நவீனா.

மறுநாள் மாலை ஐந்து மணி.

நவீனா தன்னைப் பார்த்து விட்டுப் போன ஹரியின் ஆபீஸ் வாசலில் காத்திருந்தாள்.

ஹரி புறப்பட்டு வந்தான். அவன் தன் ஸ்கூட்டரைக் கிளப்ப யத்தனித்த சமயம், பக்கத்தில் வந்த நவீனா ''ஹலோ!'' என்றாள்.

ஹரி ஆச்சரியப்பட்டுப் போனான். அவளை அவன் அங்கே எதிர்பார்க்கவில்லை.

''உங்களுடன் நான் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்.''

''ஓகே! அதற்காக நீங்கள் இத்தனை தூரம் சிரமப்பட்டிருக்க வேண்டாம்... நேற்றே உங்கள் வீட்டில் நீங்கள் சொல்லியிருந்தால்...''

''இல்லை... அங்கே பேச வேண்டாம்னுதான்... எல்லோருக்கும் அப்போது ரொம்ப டென்ஷன்.''

''நடு ரோடில் நின்று பேச வேண்டாமே... உங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால் இந்த ஸ்கூட்டரில்.''

''ஓ.கே.''

நவீனா பின்னால் ஏறி உட்கார்ந்தாள். அவன் படு ஜாக்கிரதையாக ஸ்கூட்டரைச் செலுத்தினான்.

பிரபலமான ஒரு ஹோட்டலின் தனி அறையில் அவர்கள் அமர்ந்தார்கள்.

இரண்டு சமோசாவிற்கும் காப்பிக்கும் ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருந்த சமயம் -

''சொல்லுங்கள், நவீனா!''

''எனக்கு எதையும் ஒளிவு மறைவு இல்லாமல் பேசத்தான் தெரியும். அதனால நீங்கள் என்னைத் தப்பாக....''

''நோ... நோ.. மனசை விட்டுக் கேளுங்கள்.''

''நேற்றைக்குத்தான் என்னை முதல் முதல் பார்த்தீர்கள். அதுவும் ஒரு ஐந்து நிமிஷம் மட்டும். வாழ்க்கை முழுவதும் என்னை உங்களுடன் இருத்திக் கொள்ள முடிவு செய்யும்படி என்னிடம் என்ன ஸ்பெஷாலிடி?''

''ஒன்றுமே இல்லை!'' எனச் சொன்னான் ஹரி.

''என்ன?'' என அதிர்ந்து போய்க் கேட்டாள் நவீனா. இப்படிப் ''பட்'' டெனப் பதில் வரும் என அவள் எதிர்பார்க்கவேயில்லை.

''ஆமாம். நீங்கள் ரொம்ப அழகாக இருக்கிறீர்கள் என நான் சொன்னால் நான் ஒரு பொய்யன். உங்கள் வீட்டுக் கண்ணாடியை நீங்கள் தினமும் பார்த்துக் கொள்கிறீர்கள்....''

நவீனாவிற்கு என்ன சொல்வது எனப்

ஜனனி

சார்மினார் சானல் :

●● தாசரி நாராயண ராவின் ''உதயம்'' தெலுங்குப் பத்திரிகையின் நிருபரான குலாம் ரசூல், சமீபத்தில் ''என்கௌண்டர்'' என்ற பெயரால் இங்கு கொல்லப்பட்டார். நக்சலைட்டுகள் மேல் போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அவர் கொல்லப்பட்டதாக போலீஸ் சொன்னது. ஆனால் குலாம் ரசூலையும், அவரின் நண்பர் ஒருவரையும் போலீஸ் அழைத்துச் சென்று கொன்றிருக்கிறார்கள். நகரின் ஒதுக்குப்புறத்தில் பிணங்களைப் போட்டு ''என்கௌண்டர்'' நாடகம் நடத்தப்பட்டதாகப் பத்திரிகையாளர்கள் கூறு கிறார்கள். ''என்கௌண்டர்'' நடந்த பின் பத்திரிகையாளர்கள் அங்கு செல்லவோ, புகைப்படம் எடுக்கவோ, செகந்திராபாத் காந்தி மருத்துவமனை மார்ச்சுவரியில் பிணத்தைப் பார்க்கவோ அனுமதிக்கப்படவில்லை. PWG உடன் தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டையும், சர்பஞ்ச் ஒருவர் கொல்லப்பட்டதற்கு உடந்தை என்றும் போலீஸும் முதலமைச்சரும் சொன்னார்கள். அப்படியானால் அவரை முன்பே கைது செய்ய வேண்டியதுதானே என்று பத்திரிகையாளர்கள் கேட்கிறார்கள்.

●● நக்சலைட்டுகளின் நினைவுக் கம்பமொன்று சமீபத்தில் வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. 1990ல், 6.5 லட்ச ரூபாய் செலவில் என்கௌண்டர்கள் என்ற பெயரில் பலி ஆனவர்களின் நினைவாகக் கட்டப்பட்டது அது. இதைத் தொடர்ந்து காந்தி, நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி சிலைகள் பல இடங்களில் தகர்க்கப்பட்டுள்ளன. மீண்டும் மர்மமான முறையில் சில நக்சலைட்டுகளின் நினைவுக் கம்பங்கள் தகர்ப்பு யுத்தம் தொடர்கிறது!

●● தானம் கொடுக்கிற மாட்டைச் சும்மா கூட ஏறெடுத்துப் பார்க்க மாட்டேன் என்கிற மாதிரி இருக்கிறது ஆந்திர அரசின் கதை. அரசாங்க ஆஸ்பத்திரிக்கென்று இரண்டு ஏக்கர் நிலத்தையும், பதினேழாயிரம் ரூபாயையும் கொடுப்பதாகவும், நிலத்தையும், பணத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் 1980-ல் ஆந்திர அரசுக்கு விண்ணப்பித் திருக்கிறார், சிவம்மா. இதுவரை நிலமும் ஏற்கப்படவில்லை; பணமும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. தமது ஆயுள் காலத்தில் தமது ஊரில் ஆஸ்பத்திரியைப் பார்க் கிற ஆசை நிறைவேறாது போலிருக்கிறது என்று ''லோக் அயுக்தாவில்'' வழக்குத் தொடுத் திருக்கிறார். அரசு இப்போதுதான் சரி என்று சொல்லி இருக்கிறது. தருமத் திற்கு வருகிற விஷயங்களில் கூட கோப்பு கள் நகரும்

கட்சித் தலைவனா கட்சித் திருடனா?

வேகம், இப்படி!

●● ஜனார்த்தனன் ரெட்டி சித்தூர் மாவட்டத்திற்குச் சமீபத்தில் சென்ற போது ஒரு தகவலைச் சொன்னார் : இதுவரை மாவட்ட அளவில் அவர் தந்த வாக்குறுதிகள் 304. நிறைவேற்றப்பட்ட வாக்குறுதிகள் 279. அரசியல்வாதிகள் தேர்தல் நேரத்தில் மட்டுமே வாக்குறுதிகளைத் தந்து விட்டு, பின் மறந்து போவார்கள் என்பது எவ்வளவு பொய்! கணக்கில் வைத்துக் கொண்டு மக்களுக்குத் தந்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். இதுவே கின்னஸ் சாதனைதான்!

●● நந்தியாவில் அதிக வாக்குகள் பெற்று கின்னஸ் சாதனை புரிந்திருக்கிற பிரதமர், தம் தொகுதிக்கு எதையாவது

புரியவில்லை. அவன் சொன்னதில் தப்பில்லை. பார்க்கப் பரவாயில்லை ரகம் தான். அழகு எனச் சொல்ல முடியாது தான்.''

''பெரிய பணக்கார, வசதியான இடமும் இல்லை!'' - தொடர்ந்தான் ஹரி.

''சரி.''

''படிப்பிலோ, பாட்டிலோ, உத்தியோகத்திலோ, எதிலுமே குறிப்பிடப்படும்படியாகப் பெரிதாக ஏதும் சாதித்து விடவில்லை.''

நவீனாவிற்குச் சற்றுக் கோபம் வந்தது.

''இத்தனை குறைகளை அடுக்குகிறீர்களே.. அப்படியிருந்தும் என்னைப் பிடித்திருப்பதாக எப்படிச் சொன்னீர்கள்?''


''ஒரே ஒரு பிளஸ் பாயிண்ட்.''


''அப்பாடி... பிழைத்தேன். ஒன்றாவது இருக்கிறதே!'' எனச் சிரித்தாள் நவீனா.

''உங்கள் குடும்பப் பின்னணி, உங்கள் அம்மா, அப்பா.''

''யூ மீன் - என் அப்பா, அம்மா?''

☛ டி.வி. டவர் இடமாற்றம்





☛ 304-ல் 279.

சாதிக்க ஆசைப்படுவது நல்லதுதான். ஆனால் மற்ற தொகுதிக்கானதைப் பிடுங்கிக் கொண்டு பிறரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டாம். அதிக சக்தியுள்ள டி.வி. டவர் ஒன்று கர்நூலில் அமைக்கப்பட இருந்தது. பிரதமர் அக்கறை கொண்டு அதை நந்தியாலுக்குச் சுலபமாக மாற்றிக் கொண்டார்.

●● பத்திரிகைகள் சில சமயம் அரசியல்வாதிகளின் சுயரூபத்தை சரியாகக் காட்டி விடுகின்றன. அதிக சர்க்குலேஷன் கொண்ட ஒரு ஆங்கில நாளிதழின் முதல் பக்கத்தில் வந்த செய்தியொன்று அதிர்ச்சியைத் தந்தது பலருக்கு : "Cong (I) leader sent a letter to the party thief...." chief என்பது தான் அப்படி அச்சாகி விட்டது!



☛ வன்முறைக்கு வெட்டு

●● தெலுங்குப் படங்களைப் பார்த்துத்தான் தமிழ்ப் படங்கள் வன்முறையைக் கற்றுக் கொண்டன. ஆனால் 'தளபதி' தெலுங்கு டப்பிங்கில் சென்சார் தகராறு. நிறைய வன்முறை என்று நிறைய இடங்களில் ஏகமாய் வெட்டி விட்டார்கள். ரஜினி ரசிகர்கள் சண்டைக் காட்சிகளை முழுமையாய் ரசிக்க முடியாமல் வருத்தப்படுகிறார்கள்.

- அப்பன்

''ஆமாம். அவர்கள் பழகிய விதம்... பார்வையில் தெரிந்த அந்நியோந்நியம் - ஒரு பாச உணர்வு - எனக்குப் பிடித்திருந்தது. நீங்கள் நல்ல சூழ்நிலையில் வளர்ந்திருக்கிறீர்கள் எனத் தெரிந்தது. இந்தச் சம்பந்தத்தால் என் குடும்பத்தில் எந்தப் பிரச்னையும் வராது என்ற நம்பிக்கை...''

நவீனா சிரித்தாள்.

''என் அப்பா, அம்மாவைப் பற்றி நீங்கள் போட்ட கணக்கு தப்பு. தினமும் சண்டை போடுவார்கள். எதிலுமே ஒத்துப் போக மாட்டார்கள். வாக்குவாதம்தான்...''

''செய்யட்டும். ஏன் செய்கிறார்கள்? ஒருவருக்கு மற்றவர் மேல் உள்ள உரிமையால்... பாசப் பிணைப்பு இல்லாமல் சண்டை போட்டிருந்தால் எப்பொழுதோ உங்கள் குடும்பம் சின்னாபின்னம் ஆகியிருக்கும்.''

நவீனாவிற்கு மெள்ளப் புரிய ஆரம்பித்தது. அவள் மௌனமாக இருந்தாள்.



4

பிரகாஷின் மகிழ்ச்சியைக் கெடுக்க வந்த போன் போலும். திரும்பவும் ''என்னாச்சுப்பா?'' என்றான் கவலையில்.

''நம்ம சிட் பண்டுக் கம்பெனியிலிருந்து பணம் கொள்ளை போயிருச்சாம்!''

''இவ்வளவுதானா? நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன் டாட்'' என்றான் நிம்மதியாக மூச்சு விடுதலை செய்து.

அந்தக் 'கமெண்ட்டில்' ராஜசேகர் முகம் மேலும் சிறுத்து விட, ''அப்படி அலட்சியமாச் சொல்லாதேப்பா. கஷ்டப் பட்டுச் சேர்த்த காசு. ஏழு லட்ச ரூபாயைத் தூக்கிட்டுப் போயிட்டாங்களாம். கொள்ளையடிச்சவன் யாரோ டான்கலிலியோவாம். ராஸ்கல். அவன் மட்டும் என் கைல கிடைச்சா....'' உக்கிரமாக உறுமினார்.

''அதுக்குப் போலீஸ் இருக்கு. உயிர் போற பிரச்னையா இது? ரிலாக்ஸ் டாட்'' என்றான் நிதானமுடன். ''எனக்கு உங்க மேல கவலை உண்டாகுது. இந்த வயசுல இவ்வளவு டென்ஷன் படலாமா? அதுவும் கேவலம் ஏழு லட்ச ரூபாய்க்காக. உங்க வசதிக்கு இது ஒரு சாதாரணத் தொகை. நாட் வொர்த் தி ஸ்டிரெயின் ரியலி...''

ராஜசேகர் பெருமூச்சு விட்டு விட்டு, ''உனக்குப் பணத்தின் அருமை தெரியலை பிரகாஷ். எனக்குப் பிறகு நான் சேர்த்த சொத்து அனைத்தையும் பொறுப்பில்லாம கரைச்சிருவியோன்னு கவலையாயிருக்கு மை சன்.''

அவன் அகன்ற பின் ராஜசேகர் வெகு நேரம் விசனமுடன் மோட்டு வளையை வெறித்துக் கொண்டிருந்தார்....

கிரைம் பிராஞ்ச் அஸிஸ்டண்ட் கமிஷனர் ஆஃப் போலீஸ் தேவதேவன் இளைஞர். துடிப்பானவர். திறமைசாலி. கூர்மையான பார்வை உடையவர்; புத்தி அதைவிடக் கூர்மை. உரம் வாய்ந்த உடல் உடையவர். நேர்மையான நெஞ்சாளர். நேரடித் தேர்வில் ஏசிபியாக உட்புகுந்தவர். டிபார்ட்மெண்டில் வெகு சீக்கிரத்தில் நல்ல பெயரை எடுத்திருந்தார்.

தற்சமயம் ஏசிபி தேவதேவன் குழப்பத்திலிருந்தார். எங்கிருந்து தொடங்குவது? எப்படிச் செய்யலாம்? தொடர்ந்த சிந்தனையில் 'டான் கலிலியோ' என்ற முகந் தெரியாத அந்த கிரிமினல் மேல் அவருக்கு 'அப்சஷன்' போலாகி விட்டது.

ஒரு 'விசேஷ' வேலையாக (வேட்டையாக) முதுமலைப் பக்கம் அனுப்பப்பட்டு, இரண்டு மாதம் கடின கேம்ப் முடிந்து, இன்று காலைதான் சென்னை திரும்பியிருந்தார். அவருக்குள்ள விடுப்பு உரிமையை ஏகாந்தமாக அனுபவிக்கலாம் என்று திட்டமிடுகையில் அவசர அழைப்பு - மேலிடத்திலிருந்து.

ஏதோ தலைபோகிற பிரச்னை போலும் என அவர் எண்ணிச் சென்றது சரிதான். டிஜிபி தலைமையில் டாப் பிராஸ் கூடியிருந்தது. அனைவரும் உயர் போலீஸ் அதிகாரிகள். தேவதேவன் விறைப்பானார். இவ்வளவு நாட்களாகப் பச்சையான மலைக்காட்டில் கஞ்சாக் கடத்தல்காரர்களைத் துரத்திப் பிடித்துக் கொண்டிருந்ததில் சென்னைக் குற்ற நிலவரம் தெரியாது போனதால் டிஜிபி உரையைக் கவனமுடன் செவிமடுத்தார்....

சென்ற மாதம் நடந்த நடிகர் ஆனந்த்குமார் கொலையில் உருப்படியாகத் துப்பு ஏதும் பெயரவில்லை. இருபது நாட்களுக்கு மேலாயிற்று ரெயின்போ நகர் பாங்க் கொள்ளை நடந்து. பிறகு தொழிலதிபர் ராஜசேகரின் சிட்பண்டில் ஏழு லட்சம் கொள்ளை. சென்ற வாரம் நிகழ்ந்த 'மூசா' நாட்டுத் தூதுவர் மர்ம மரணப் பின்னனி என்ன? கண்ணில் மண் தூவிய, கவனத்திற்கே வராத கடத்தல் சமாசாரங்கள். இன்னும் பைசலாகாத பல பழைய கேசுகள்...

சிங்க இலச்சினை முன்நிறுத்தி எல்லாக் குற்றங்களையும் நிகழ்த்துபவன் டான் கலிலியோ. போலீஸ் ரெக்கார்டுகளில் இதுவரை அவனைப் பற்றி

டான் கலிலியோ

பத்மா ரவிசங்கர்



கம்மென்றிருந்து விடுவது டிபார்ட்மெண்டிற்கு அழகல்ல. அதுவும் சமீப காலமாக அவன் குற்றங்கள் அதிகரித்து விட்டிருக்கின்றன. சமீபிக்கும் எலக்ஷன் மீது கண் வைத்துள்ள மந்திரி போட்டு வாட்டுகிறார். பத்திரிகைகள் எள்ளி நகையாடுகின்றன.

'அவமானமய்யா. அவமானம்' என்று சீறிச் சிவந்து சிறுத்த காவல் துறைத் தலைவர் முகம் தற்போதும் தேவதேவனுக்கு ஞாபகம் வந்தது.

கலந்தாலோசித்து இறுதியில் - துறையின் கீழ் மட்டத்தை எட்டாத - ஒரு சிறு குழு அமைக்க முடிவு செய்தார்கள். ஏனெனில் கலிலியோ விசுவாசிகள் இருக்கலாம் என்று அஞ்சப்பட்டது.

குழுவில் பிரதானமாக இருவர் : டிசிபி சண்முகநாதனும், ஏசிபி தேவதேவனும். வேறு கேஸ் எதிலும் பட்டுக் கொள்ளாமல் இருவரும் இடைவிடாது அமைதியாக விசாரணை செய்ய வேண்டுமாம். வேண்டிய உதவிகள், வசதிகள் தருவதாக உறுதியளிக்கப்பட்டது.

''என்னய்யா தீவிர யோசனை?'' என்று சிரித்தபடி டெபுடி கமிஷனர் சண்முகநாதன் உள்ளே வந்தார்.

''டான் கலிலியோ பத்தித்தான்.''

''ஓ...டானா?''

''ஒரு விவரமும் கைவசம் இல்லாம எப்படித் தேடறதுன்னு பிரமிப்பா இருக்கு சார்.''

''இவங்களுக்கு இதான் வேலை தேவா. அப்பப்போ புடிக்கறேன்னு கிளம்பு வாங்க. எல்லாம் கொஞ்ச நாள்தான். மெல்லப் புஸ்ஸ¬னு சுருதி இறங்கிடும். இருவது வருஷமாப் பார்க்கிறேனே...

ஒரு தகவலில்லை; கை ரேகையில்லை; புகைப்படமில்லை. அவ்வளவு துல்லியம், ரகசியம் அவன் செய்கைகளில். அவன் செய்யாத குற்றமில்லை. காமா சோமா க்ரைம் ஒன்றுமில்லை. அவ்வளவும் முழுமையான முத்திரைக் குற்றங்கள்...

குற்ற ஏவலுக்கு அவனை அந்தரங்கமாக அணுகுபவர்கள் நெருப்பில் புடம் போடப்பட்ட பின்னரே அனுமதிக்கப் படுவதாகக் கேள்வி. அப்படியும் அப்பேர் வழிகளைப் போலீஸ் மோப்பம் பிடிக்க முயன்றால் உத்தரவாதமாக அவர்கள் பிணம் மிதக்கும்.

அவர்கள் கூட டானைப் பார்த்திருப்பார்களா என்பது சந்தேகம்தான். கலிலியோவின் குற்ற ஏணியில் எத்தனை மட்டங்கள் இருக்கிறது? தெரியாது. அந்தக் குற்றக் குழுவில் நம்பிக்கையான நான் கைந்து திறமைசாலிகளே இருப்பர் என்பது டிஜிபியின் ஊகம்.

பலமுறை அவனைப் பிடிக்க மும்முரமாக முயன்று முடியாமல் சோர்ந்து போனது உண்மைதான். அதற்காகக்

தலைவர் புதுசா வந்திருக்கார். அந்த ஜோருலதான்.''

சொல்லும் டிசிபி சண்முநாதனைப் பார்த்தார் தேவதேவன். 50 வயது திடகாத்திரரான திறமைசாலிதான் டிசிபி. பாவம். முயன்று தோற்ற அலுப்பும் வெறுப்பும் தான் அவரை அப்படிப் பேசச் செய்கிறது.

ஆனால் தேவதேவன் விடப் போவதில்லை. சவாலும், சாகசமும் சூழ்ந்த ஏஸ் கிரிமினல் அவரை காந்தம் மாதிரி கவர்ந்து விட்டான். ''விரைவில் வருகிறேன் டான் கலிலியோ.''

காரை ஆரோக்கியமான வேகத்தில் செலுத்திக் கொண்டிருந்தான் பிரகாஷ். சற்று முன்னர்தான் தாம்பரம் தாண்டியிருந்தான். அவன் அருகாமையிலிருந்த சிந்துஜா புத்தம் புது மலராய், கழுத்தில் தாலி மஞ்சளாக மின்ன, அவனையே பெருமிதமாகப் பார்த்தபடி. பின்னணியில் ஸ்டீரியோவில் சன்னமாகக் கசிந்தபடி சமந்தா ஃபாக்ஸ்... டச் மீ!

அவனுக்கு எங்கோ மிதப்பது போன்றதொரு உணர்வு. உலகமே இனிமை பூசி சொர்க்கபுரியாகக் காட்சியளித்தது. காலை 8:00. சாலையில் போக்குவரத்து வெகுவாக மட்டுப்பட்டிருக்க, மெல்லத் திரும்பினான்.

இயற்கையின் இனிய இல்லற இரசாயனமும், மாறாத காதலும் மிக - திருமணம் முடிந்து இந்த இரண்டு நாட்களும் வேறொரு உலகம் சிருஷ்டித்து சிறகடித்து விட்டுத் தற்போது காரில் ஹனிமூன் பயணம். சிந்துஜாவிடத்தில் யாதொரு களைப்பும் காணோம். மாறாக அலாதியானதொரு மலர்ச்சியும், நிழலான வெட்கப் பூச்சும்.

''என்னங்க?'' என்று அழைத்தாள்.

''சே! பேச்சுல என்ன திடீர் மரியாதை?''

நமுட்டுச் சிரிப்புடன் சிந்துஜா, ''நீங்க யார்? கட்டிய கணவன்! பாருங்க தாலி மஞ்சள் ஈரம் கூட உலரலை. பேர் சொல்லிக் கூப்பிடலாமா? என்னங்க...'' என்றாள் மறுபடி.

''வெறுப்பேத்தாதே சிந்து.''

கண்களில் குறும்பு மின்ன, ''சரிங்க!'' என்றாள்.

''ஷட்டப்.''

''என்னங்க நாம இப்போ...''

அவன் பதில் சொல்லவில்லை.

''சரிடா பிரகாஷ்!''

சிரித்தார்கள்.

''இப்போவாவது சஸ்பென்ஸ் உடைச்சுச் சொல்லுங்க பிரகாஷ். இப்போ நாம எங்கே போறோம்?''

''கொ-டை-க்-கா-ன-ல்!'' என்றான் ஸ்டைல் உச்சரிப்பில்.

''மை காட். அவ்வளவு தூரமா கார்ல!'' என்ற சிந்துஜா தன் அழகான கருவிழிகளைப் படபடத்து விட்டு, ''டிரெயின்ல புக் பண்ணிப் போயிருக்கலாமேப்பா?''

''ஏன் பிளேன்ல மதுரை வரை போயிருக்கக் கூடாதா? காரணமாத்தான் கார் கண்ணே! பக்கத்துல ஸ்வீட் ஹார்ட்டைச் சீண்டிக்கிட்டுக் கார்ல நெடுந்தூரம் போறது இனிமையான ஹனிமூன் அனுபவமா இருக்கும்.''

''உதைப்பேன்'' என்று தன் சுட்டு விரலால் அபிநயித்தாள் சிந்துஜா.

''கார்னா நினைச்ச இடத்துல நிறுத்தலாம். சாப்பிடலாம். காரைப் பூட்டிட்டுக் காலாற நடக்கலாம். பசுமையான வயல்ல மெய்மறக்கலாம். அப்புறம் 'மூடு' வந்தா...''

''வந்தா?'' என்றாள் கன்னம் செம்மையாக.

''காரை ஒரு ஓரமா நிறுத்திடுவேன்.



☐ கேரள மாநிலம் கொச்சியைச் சேர்ந்த வின்சென்ட் டெலிஃபோன் இலாக்கா மீது வழக்குப் போட்டுள்ளார். காரணம், இவரை "டாக்டர்" என்று ஃபோன் புத்தகம் குறிப்பிடுவதுதான். ஆய்வு நடத்தி டாக்டர் பட்டம் பெற்ற இவர் வக்கீல் தொழில் நடத்தி வருகிறார். தவறைக் குறிப்பிட்டு ஏற்கெனவே எழுதியும், அடுத்த பதிப்பிலும் திருத்தப்படவில்லை. இவரை டாக்டர் என்று கருதிப் பலரும் நள்ளிரவில் கூட ஃபோன் செய்து சிரமப்படுத்துவதுடன் தாங்களும் ஏமாறுகிறார்கள். ஏன், தங்கள் வீட்டு மாடு அல்லது நாய்க்கு வைத்தியம் பார்க்குமாறு கூட அழைப்பு வருகிறதாம். ஒரே எரிச்சல் இவருக்கு!

- எஸ். எஸ். மணி

கறுப்புக் கண்ணாடியை மேலேத்திருவேன்...''

''அப்புறம்?''

''ஒரு அவசர முத்தச் சலுகை?''

''நத்திங் டுயிங்.''

பிரகாஷ் பிரமிப்பு வசப்பட்டிருந்தான். உண்மையில் இந்த ப்ரிய தேவதை அவனுடையவள்தான் என்பதை அவ்வப்போது தொட்டு உறுதி செய்து கொள்ள வேண்டியிருந்தது.

மாமண்டூரில் நிறுத்தினான். வெட்டிய இளநீர்ச் சுவையில் கவனமில்லாமல் பரஸ்பரம் பார்வையால் பருகிக் கொண்டார்கள்.

மீண்டும் கார் கிளம்பியது.

கடந்த சில நிமிடங்களாக அந்த லாரி தொந்தரவு செய்து கொண்டிருந்தது. வேகமாக விரையாமல் வழியும் விடாமல் நந்தி மாதிரி. பிரகாஷ் தொடர்ந்து ஹாரன் ஒலித்துப் பார்த்தது பலனளிக்கவில்லை. என்ன ஒரு அலட்சியம்... எருமைத்தனம்... அல்லது வேறு நோக்கம் ஏதேனுமோ...

சினத்தில் முகம் சிவக்க, ''ராஸ்கல்!'' என்றவன் வாகாகச் சாலையில் அகலம் வந்ததும் ஆக்ஸிலேட்டரை அபாய அளவு அழுத்தி லாரியைச் சடுதியில் தீற்றலாகக் கடந்தான்.

அவனுடைய கோபம் அவளுக்கு வியப்பளித்தது. இப்போதுதான் முதன்முறையாகப் பார்க்கிறாள். ''உங்களுக்குக் கோபம் கூட வருமா பிரகாஷ்?''

''ம்கூம்! லேசுல கோபம் வராதுதான். ஆனா வந்துருச்சுன்னா...'' என்று மர்மமாகச் சிரித்தான்.

சாண்ட்விச் சாப்பிட்டார்கள்.

சீட்டில் நன்கு சாய்ந்து கொண்டாள் சிந்துஜா. மெல்லக் கண் செருகிற்று.

சில நிமிடங்கள் கூடக் கண்ணசரவில்லை. பிரகாஷைப் பிரிவது போலத் திரும்பவும் அந்தக் கெட்ட கனவு வந்தது. திக்கென்று விழித்துக் கொண்டவள் பிரகாஷைப் பார்த்ததும் திடுக்கிட்டாள்.

அவர்கள் அப்போது மேல்மருவத்தூரை நெருங்கிக் கொண்டிருந்தார்கள்.

பிரகாஷ் முகம் லேசாக வியர்த்திருந்தது. அவன் விழிகள் ரியர் வ்யூ மிர்ரரில் நிலைத்திருந்தது. அவன் கை-முஷ்டி வெளுக்குமளவு-ஸ்டியரிங் வீலை இறுகப் பற்றியிருந்தது. ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்பது அவளுக்குப் புரிந்து விட்டது.

''என்னாச்சுப்பா?'' என்றாள் படபடப்பாக.

''நம்மை ஒரு கார் பின்தொடர்ந்துக்கிட்டிருக்கு!''

(தொடரும்)

சொந்தமே அந்நியமாய்...

"சாதனா... ஒனக்கே இது நல்லா இருக்கா?" கனகசபை கவலையோடு மகளைப் பார்த்தார்.

"எதுப்பா?" வெகு பவ்யமாய்க் கேட்டாள் சாதனா. அப்பாவின் முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனாலும் தன் உறுதியை விடத் தயாராக இல்லை.

"எல்லாருக்கும் உன்னைப் பிடிச்சிப் போச்சு! நாள் குறிக்க வேண்டியதுதான் பாக்கி! இந்த நேரத்திலே மாப்பிள்ளை கிட்டே தனியாப் பேசப் போறேன்னு சொல்றே...!" கனகசபை இழுத்தார்.

"அதுவும் என்ன கேட்கப் போறே... தெரியுமில்லே?" இதுவரை சும்மா இருந்த அலமேலு மகளைக் கண்களாலேயே எரித்தாள்.

"அதுதான்... வயித்தைக் கலக்குது... சாதனாக் கண்ணா!" கனகசபை கெஞ்சினார்.

"சாரிப்பா! என் முடிவை மாத்திக்கிற மாதிரி இல்லே!" பட்டென்று அடுக்களைக்குள் போய் விட்டாள்.

"ரொம்பச் செல்லம் கொடுத்து வளர்த்தீங்களே... படுங்க!" அலமேலுவும் விலகிக் கொண்டாள். தெய்வங்களைத் துணைக்குக் கூப்பிட்டபடி, ஹாலுக்கு வந்தார் கனகசபை.

கம்பீரமாய் உட்கார்ந்திருந்த தினேஷ், அவன் பக்கத்தில் இருந்த அமைதியே உருவான அவன் தந்தை, மங்கலம் ததும்பும் அவனுடைய தாயார் எல்லோரையும் தயக்கத்துடன் பார்த்தார். சாதனாவால் இந்த நல்ல வரன் தவறிப் போய் விடுமோ என்கிற ஏக்கம் வியர்க்க வைத்தது.

"என்னங்க... எதையோ சொல்லத் தயங்கிறாப் போல இருக்கு!" முறுவலோடு தினேஷ் முந்திக் கொண்டான்.

"வந்து... வந்து... சாதனா... ஒங்க கிட்டே தனியாப் பேசணுமாம்!" சொல்லி முடிப்பதற்குள் சொல்ல முடியாத தவிப்பு அவரை ஆக்ரமித்தது.

"வெரிகுட்! நான் ரெடி! இப்பவே... பேசலாமா? எங்கே?" அடுக்கிக் கொண்டே போன தினேஷை, அவஸ்தையுடன் பார்த்தார் கனகசபை.

'அதிலேதான் தம்பி ஆபத்திருக்கு!' என்று சொல்ல நினைத்தார். அடக்கிக் கொண்டார்.

"பேஷா... பேசட்டும்! நாளைக்கு ஒண்ணா வாழப் போறவங்கதானே?" தினேஷின் தந்தை வரவேற்றார். சந்தோஷமாய்த் தலையாட்டினாள் அவனுடைய அம்மா!

"ஒரு நிமிஷம்!" உள்ளே ஓடினார். சில

தங்க. சிவராசன்



நொடிகள் கழித்து, தினேஷை சாதனாவின் அறைக்கு அழைத்துச் சென்றார். வெளியே தவிப்போடு நின்ற அலமேலு பக்கத்தில் நின்று கொண்டார். இருவர் உதடுகளும் வேகமாய்ப் பிரார்த்தித்தன.

அறையின் உள்ளே -

ஓரத்தில் டிரஸ்ஸிங் டேபிளை ஒட்டி நின்று கொண்டிருந்தாள் சாதனா. இதுவரை இருந்த ஆவேசமும், ஆத்திரமும் அவசர மாய் விலகி ஓடின. இதயம் தேவையில் லாமல் படபடத்தது. முகத்தில் வியர்வைத் துளிகள் விரைந்து வந்தன.

''ஹலோ!'' தினேஷ் வெகு இயல்பாய் உள்ளே வ ந் த ா ன். ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தவள், 'அந்தக் கேள்வி கேட்க வேண்டாமே!' என்று தன்னையே திட்டினாள்.

''ஹலோ! என்ன.. ஏதோ... தனியாப் பேசணும்னு சொல்லிட்டு... இப்படி நிக்க நீங்க... சாரி! எனக்குக் கால் வலிக்குது.. நான்... உட்கார்றேன்!'' சற்றுத் தள்ளியிருந்த சோபாவில் நிம்மதியாக உட்கார்ந்து கொண்டான்.

''ஓ...கே! நீங்க... பேசல்லேன்னா.. பரவாயில்லே! முதல்லே உட்காருங்க!'' கலகலப்பான அவனது பேச்சு! சொற்களில் எட்டிப் பார்த்த மரியாதை சாதனாவைத் திகைக்க வைத்தது. 'இவரா... அவ்வளவு கேவலமான நிபந்தனை போட்டிருப்பார்?' யார் கண்டது? மரியாதைக்கும் பேராசைக்



கும் விரோதம் இருக்கத் தேவையில்லையே!

''என்ன... உட்காரவும் போறதில்லையா?'' தினேஷ் கேட்டதும், ''வந்து... இவ்வளவு நாகரிகம் உள்ள நீங்களா?'' சாதனா துணிந்து, பாதிக் கிணற்றைத் தாண்டினாள்.

''நாகரிகம் உள்ள நீங்களா...'' என்று அவள் சொன்னதைத் திருப்பிச் சொன்ன தினேஷ், ''ப்ளீஸ்! கம்ப்ளீட்...'' என்றான். அவனது கேள்வியில் ஆர்வம் தெரிந்தது. குத்திக் கொண்ட புருவங்கள் 'இவள் என்ன குற்றப் பத்திரிகை படிக்கப் போகிறாள்?' என்று கூர்ந்து நோக்கின.

''யெஸ்! இவ்வளவு இங்கிதம் தெரிஞ்ச நீங்க... அப்படி ஒரு கண்டிஷன் போடலாமா?'' சாதனா மீண்டும் அதே நிலையில் நின்றாள்.

''என்ன கண்டிஷன்? தெளிவாச் சொல்லுங்க...' பிளீஸ்!'' குரலில் எரிச்சல் கொப்புளித்தது.

''வந்து... அறுபதாயிரம் கேஷா... வைச்சாத்தான் தாலி கட்டுவேன்னு...'' சாதனா முடிக்கவில்லை.

''ஓ.. அதைச் சொல்றீங்களா?'' என்றவன் கொஞ்சமும் கோபப்படாமல், ''அதை மட்டுந்தான் சொன்னாரா... உங்கப்பா?'' என்று கேட்டான்.

''ஏன்... இன்னொரு கண்டிஷன் இருக்கா...?''

''இருக்கே!''

''அது... என்ன... ஸ்கூட்டரா...? பங்களாவா?'' ஏளனத்தைத் தன் சொற்களில் ஏராளமாய்த் தோய்த்தாள் சாதனா. ஆனால் தினேஷ் அதிரவில்லை.

''இல்லை! இது வேறே! அதை உங்கப்பா மட்டுமில்லே... எந்தப் பெண் வீட்டாரும் ஏத்துக்க மாட்டாங்க!'' தினேஷ் முறுவலித்தான்.

''என்ன சொல்றீங்க?''

''யெஸ்! நான் போட்ட முதல் நிபந்தனையை உங்கப்பா மறைச்சிட்டாரு! ரெண்டாவதைச் சொல்லியிருக்காரு!''

''என்ன சொல்றீங்க?'' 'அப்பாவின் மீது தவறான குற்றச்சாட்டை வாசிக்கிறாரோ' என்ற தவிப்புடன் கேட்டாள் சாதனா.

''உண்மையைத்தான் சொல்றேன்! என்னுடைய முதல் நிபந்தனை கடைசிக் காலம் வரைக்கும் என் அப்பா, அம்மா என்னோட இருக்கணும்! இருப்பாங்க! தனிக் குடித்தனத்துக்கு நான் ஒத்துக்க மாட்டேன்னு சொன்னேன்... அதுக்கு உங்கப்பா என்ன சொன்னாரு... தெரியுமா? 'அதெப்படி.... உறுதி சொல்ல முடியும்? அவ... சின்னஞ் சிறிசு. அவளுக்கு ஆயிரம் ஆசைகள் இருக்

கும்! உங்க பெரியவங்களுக்கு ஒத்துப் போவாமப் போகும். அப்ப... தனிக்குடித் தனம் போகலாமில்லியா...?' என்று சொன்னார். அப்பத்தான்... நான் சொன்னேன்.... என் பெற்றோருக்காக அறுபதாயிரம் கொடுக்கணும்னு.... தப்பா?''

''உங்க... அப்பா, அம்மாவுக்காக என்னைப் பெத்தவங்களைப் பணம் கொடுக்கச் சொல்றது... தப்புத்தானே?''

''புரியுது! நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு!'' தினேஷ் தொடர்ந்தான்:

''எங்கப்பா... கிராமத்திலே விவசாயம் பண்றவர். அவரோட நான்கு பிள்ளைங்கள்லே... நான் கடைக்குட்டி... தெரியுமா?''

''தெரியுமே! மூத்தவர் ரிசர்வ் பேங்க்லே இருக்கார். ரெண்டாவது பிள்ளை காலேஜ் புரொபசர். மூணாவது பிள்ளை ஆடிட்டரா இருக்கார். நீங்க... என்ஜினியர்!''


''யெஸ்! கிராமத்து விவசாயியா இருந்தாலும் எங்கள் எல்லோரையும் நல்லாப் படிக்க வைச்சார். அதுக்காக... அவர் பட்ட கடன் நாற்பதினாயிரம்! முதல் அண்ணன் வேலைக்குப் போனதும் தன் பளு குறையும், கடன் அடையும்னு பாத்தாரு. அண்ணன் வேலைக்குப் போன மூணாவது மாசமே, பெரிய இடத்துச் சம்பந்தம் வந்தது. ஒரு பைசா வரதட்சணை வாங்காம... கல்யாணம் பண்ணார். கொஞ்ச நாள்லே... அண்ணி அவரைத் தனிக் குடித்தனம் பண்ண வெச்சுட்டாங்க. இன்னைக்கு மூணு கிரவுண்ட்லே அட்டகாசமான பங்களா... காரு... எல்லா வசதியும்! ஆனா எங்களுக்கு... அங்கே இடம் இல்லே. அதே வழியிலே ரெண்டாவது, மூணாவது அண்ணாக்களும் கம்பி நீட்டிட்டாங்க. எல்லாரும் நல்லா இருக்காங்க.

''ஆனா... அப்பா வாங்கின கடன் மட்டும் அவரைப் பிரியலே. இதோ.... நான் வேலைக்குப் போய் ரெண்டு மாசம் கூட ஆகலே! எனக்கு நிச்சயம் பண்றாரு. யோசிச்சிப் பாருங்க! பெண்களையே வருமானத்துக்காகக் கல்யாணம் பண்ணிக் கொடுக்காத அப்பா போல... எங்கப்பா நடக்கல்லே! நெனைச்சிருந்தா... முதல் அண்ணா கல்யாணத்தைத் தள்ளிப் போட்டுக் கடனை அடைச்சிருக்கலாம்! ஆனா... பிள்ளைக்கு நல்ல இடம், நல்ல வாழ்வு கிடைக்கறதைத் தடுக்கிற சுயநலம் அவர்கிட்டே இல்லே. அதனோட விளைவு அவர் கடனாளியா இருக்காரு. எல்லாத்தையும் விட கொடுமை, அவரோட சொந்த மகன்களே அவருக்கு அந்நியமா ஆயிட்டாங்க! அந்தத் தப்பை நான் செய்ய விரும்பல்லே. இப்பச் சொல்லுங்க! எங்கப்பா, அம்மா... நம்மோட இருக்கட்டும்; எனக்கு ஒரு பைசா வேணாம்! கட்டின புடைவையோட நீங்க வரலாம், கட்டிக்க நான் தயார்!''

தினேஷை மரியாதையுடன் பார்த்தாள் சாதனா.

''என்னை மன்னிச்சிடுங்க!'' என்றவள், ''நாமாவது அவங்களுக்கு நல்ல மகனா, மருமகளா நடப்போம்!'' என்று வெட்கத்துடன் சொன்னாள்.

தபால்பெட்டி பிறந்த கதை!



❑ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆப்ரிக்கா அருகில் சில போர்ச்சுகீசியக் கப்பல்கள் புயலில் சிக்குண்டு மூழ்கி விட்டன. அதில் தப்பிப் பிழைத்த ஒருவர் தங்களுக்கு நேர்ந்த கதி பற்றி ஒரு கடிதம் எழுதி, சுலபமாக அடையாளம் தெரிய தன் ஷூவை (காலணி) கடற்கரை அருகே ஒரு மரத்தில் தொங்க விட்டு அதில் கடிதத்தைப் போட்டு விட்டுச் சென்றார். பின்னர் வந்த மாலுமிகள் அதன் மூலம் தகவல் அறிந்தனர். நாளாவட்டத்தில் மாலுமிகள் தவிர, அவ்வூர் மக்களும் அதன் மூலமே தங்கள் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். உலகத்தின் முதல் தபால் பெட்டி பிறந்த கதை இதுதான்.

அம்மரம் இன்னும் அப்படியே உள்ளது. அதனடியில் உள்ள நவீன கான்கிரீட் அஞ்சல் பெட்டி பழைய சம்பவத்தின் நினைவுச் சின்னமாக 'ஷூ'வின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டுள்ளது.

ஆதாரம் : ''ஹிந்து''
தகவல் : அ. ஷண்முகசுந்தரம்

அமெரிக்காவில்.......

❑ புது மாடல் செருப்பு ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். குதிகாலைத் தட்டினால் அதில் ஒரு சுவிட்ச் 'ஆன்' ஆகிச் செருப்பு நுனியில் இணைந்துள்ள சக்தி வாய்ந்த டார்ச் லைட்டை இயக்குகிறது. இரவு நேரத்தில் அது கொடுக்கும் பிரகாசமான வெளிச்சத்தில் தட்டுத் தடுமாறாமல் நடக்கலாம்.


நன்றி : நியூஸ் வீக்

வடசென்னையில்


சில வசந்தங்கள்

தண்டையார்ப்பேட்டை பஸ் பணிமனைக்கு எதிரே, சேனியம்மன் கோயில் வீதியில் நுழைந்து, திருவள்ளுவர் நகர் செல்ல வழி கேட்டதும், ஒரு குறுகலான தெருவைக் காண்பித்தார்கள். குடிசைப் பகுதிக்குத்தான் கொண்டு செல்லுமோ என்று நினைத்தோம். ஆகா! திருவள்ளுவர் நகர் அடுக்கு மாடிக் கட்டடக் குடியிருப்பு, தென் சென்னைக் குடியிருப்பு மாதிரி பிரமிக்க வைத்தது. காம்பவுண்டுக்குள் நிறைய இடம். குழந்தைகள் எல்லோரும் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். குடியிருப்புகள் சரியான பராமரிப்புக் காரணமாகப் பளிச்சென்று இருந்தன. கீழ்த் தளத்தில், பச்சைப் பசேல் என்று காய்கறி, பூ, செடி-கொடிகள் பார்க்க ரம்மியமாக இருந்தன. தினமும் காலை 6 மணிக்கு, தேசியக் கொடி ஏற்றுகிறார்கள்!

''364 குடியிருப்புகள் இங்கே இருக்கின்றன. வருடா வருடம், எங்கள் குடியிருப்போர் சங்க நிர்வாகத் தேர்தலை அமைதியாக நடத்தி வருகிறோம். அரசியல் எங்களிடையே கிடையாது. அதே போல, தேர்தல் சமயத்திலும் சுவரொட்டிகள், பிரசாரம் என்று காலனிக்குள் எந்தவித வம்பு வழக்கும் அனுமதிப்பதில்லை. எலெக்ட்ரீஷியன், அக்கவுன்டென்ட், வாட்ச்மேன் எல்லாம் மாதாந்திரச் சம்பள அடிப்படையில் காலனிக்கென்றே வைத்திருக்கிறோம். குடிதண்ணீர் வசதிக்குப் பெரிய வாட்டர் டாங்க் இருக்கிறது...'' என்றார் செயலாளர் பாண்டியன்.



☛ தணிகைவேலு நடத்தும் ஜிம்னாஷியம்...



☛ அரு. சங்கர்

இவர்களுக்கு இருப்பது ஒரு நியாயமான குறை : ''வருகிற 'வழி, வழிப்பறிக்கு வசதியாக அமைந்திருக்கிறது. சோடியம் வேப்பர் விளக்கு அமைத்தால் நல்லது.''

'மிஸ்டர் இந்தியா' அண்ணாமலை

எண் 56, ஜி. ஏ. ரோடு மாடியில் ஒரு ஜிம்னாஷியம். தணிகைவேலு நடத்தி வருகிறார்.



ரொம்ப நாளைக்கு அப்புறம் திடீர் மூட் வந்து ஈகா தியேட்டரில் படம் பார்த்தேன். பாக்ய ராஜின் 'சுந்தரகாண்டம்!'

தப்புப் பண்ணாத மாணவி சிந்துஜாவுக்கு, லவ் லெட்டர் எழுதினதாத் தண்டனை வாங்கிக் கொடுத்திடறார் பாக்யராஜ். அது சவாலா தொடங்கி நிஜக் காதலா மாறிடுது. மாணவியை வாத்தியார் கல்யாணம் செய்துக்கறது தவறான மரபுன்னு சொல்லி, பலனில்லாம, அவசராவசரமாக பானுப்ரியாவைக் கல்யாணம் செய்திட்டு வந்திடறார். சிந்துஜா கவலைப்படறதில்லை. சவாலைத் தொடர்றார். வாயாடி மனைவிக்கும், வலுவில் காதலிக்கும் பெண்ணுக்கும் நடுவில், வால் மாட்டிக் கொண்ட வானரம் மாதிரி பாக்யராஜின் தவிப்பு, பிரச்னைகள், முடிவு. இதுதான் கதையின் உத்தேச சுருக்கம்.

தவிலில் தவில்தான் வாசிக்க முடியும். ஜலதரங்கம் வாசிக்க முடியுமா? பாக்யராஜ் வாசித்திருக்கிறார். காதல், பாசம், குறும்பு, வேகம், வீரம், விவேகம், நகைச்சுவை, நெகிழ்ச்சி எனக் கலந்துகட்டி கமர்ஷியலாகக் கச்சேரி பண்ணி இருக்கிறார். அதையும் வழக்கமான அத்துமீறல் இல்லாம, ஆபாசம் இல்லாம அடக்கின வாசிப்பு.

சொன்னா சாதாரண கேரக்டர்கள். ஆனா இவர் முடுக்கலில் ஜிவ்வுன்னு தனி விமானப் பயணம் மாதிரி சுத்தி வர்றாங்க.

சிந்துஜா : உயரம், துடித்து துடித்து நடை, கண்கள்ல சாட்சாத் பள்ளிக்கூட மாணவியின் குறும்பு, உதடுகள்ல விஷமம்னு வளைய வரார். புஸ்தகத்துல வச்ச மயில் தோகை மாதிரி இவருக்கு நெருக்க வசீகரம்னா, பானுப்ரியா ஒரு மிளகாய் பஜ்ஜி.

மிடுக்கு, அப்பாவித்தனம் என்று கலந்துகட்டி மையமாய்த் தலையாட்டுகிறாரே அதுதான் இவர் காரெக்டர். தேனில் நனைந்த இந்த மிளகாய் பஜ்ஜி அத்தனை நேர சிந்துஜாவின் ஆக்கிரமிப்பையும் 'ஒரு துளி' நொடிப்பில் சமன்படுத்தி விடுகிறது.

வகுப்பில் கலகலப்புக்கு, துக்கத்தில் ஆறுதலுக்கு என நல்ல சிச்சுவேஷன்கள் அமைந்துவிட்டிருப்பதால் சுமாரான பாடல்களை அதன் பரிமாணத்தையும் மீறிக் கூடுதலாய் ரசிக்க முடிகிறது.

உடன் படித்து இன்னும் மாணவனாகவே இருக்கும் அந்த குண்டுப் பையனின் அங்கலாய்ப்பு, பக்கத்து வீட்டு அய்யர் வாத்தியாரின் விளையாட்டுத்தனம் என நெய்யில்வறுத்த முந்திரி, படம் நெடுக. வழக்கமான தமிழ் கதாநாயகிகளுக்கு வரும் மூக்கில் ரத்தம் போன்ற சின்னச்சின்ன சம்பிரதாயக் குறைகளும் உண்டு. ஜன்னலில் எட்டிப் பார்க்கும்



தரிசனம் கேட்க, அவர் உள்ளே வந்து ஒரு சுழல் சுழன்று பூர்த்தி செய்வது அழகு.

'சுந்தரகாண்டம்' - தலைப்புக்குப் பக்கம்பக்கமாய் விளக்க வசனம் உண்டு. சுருக்க விளக்கம் : சுந்தர கமர்ஷியல் கவிதை!

ப்ரியமுடன்,

அம்பு

கூரியர் ஸர்வீஸ் பை : சுந்தர்ஜி

5

"காலைல பார்க்கலாம்'' என்று ஜீப்பிற்கு விடைகொடுத்து விட்டு ஏசிபி தேவதேவன் தன் வீட்டுக் கேட்டில் கை வைத்ததுமே வித்தியாசமாக உணர்ந்தார். பின்னங் கழுத்தில் கோழி இறகால் தடவு வது போல. அவருள் ஏதோ ஒரு எச்சரிக்கை ஆன்ட்டெனா விழித்துக் கொள்ள, சுற்றிலும் பார்த்தார்.

சுத்தமாகச் சந்தடி அடங்கி விட்டிருந்த குளிர் இரவு. நேரம் 11:00. ரொய்ய்ய்ங் என்ற சுவர்க் கோழி ரீங்கரிப்பில் அவ்வப் போது தவளை சங்கீதம் சேர்ந்து கொள்ளத் தோட்டத்தில் ஓசையின்றி நடந்தார்.

ஈரித்திருந்த மண் தரையில் ஆங்காங்கே காலடித் தடங்கள் தெளிவாகத் தென் பட்டன. ஆக, அன்னியர் யாரோ அத்து மீறியிருக்கிறார்கள். வீட்டைச் சுற்றி வலம் வந்தார். கதவுகளும், ஜன்னல்களும் சாத்திய படி இருக்க, வீடு பத்திரமாகத்தான் இருந் தது. ஏதேனும் நோட்டம் விட வந்திருப் பானோ? யார் அவன்? எதற்காக?

யோசனையுடன் வீட்டிற்குள் பிரவே சித்தார்.

11:30. தேவதேவன் படுக்கையில் படுத்த பத்தாவது நிமிடம் அந்த ஓசை அவருக்குத் தெளிவாகக் கேட்டது. சரசர. சரசர. எதையோ சுரண்டுவது போல. விட்டு விட்டுக் கேட்டது. அவருக்குள் சிலிர்த்தது. தலையணை அடியிலிருந்து கைத் துப் பாக்கி உருவிக் கொண்டார்.

வேட்டைக்கு வெளிச்சம் வசதி யில்லை. இருளில் பூனை மாதிரி மெல்ல நகர்ந்தார். முதலில் வீட்டுக்குள். பிறகு வாசற் கதவு சன்னமாகத் திறக்கையில் திடீ ரென்று ஓசை நின்று விட்டது.

குத்துச் செடி விலக்கிப் பார்த்தார். தென்னை மரத்தை அண்ணாந்து ஆராய்ந் தார். எங்கும் எவரும் இல்லை. என்ன ஒரு மாயம்... அதற்குள் எப்படி மறைந்திருக்க

டான் கலிலியோ

முடியும்? மேலும் சிறிது நேரம் வியர்த்த மாகத் தேடி விட்டு ஓய்ந்தார்.

வியப்பையும் மீறி அவரை அலுப்பு ஆக்ரமிக்கப் படுக்கையில் வீழ்ந்தார். டான் கலிலியோ அவருடைய வீட்டுக்குத் தீ வைக்கிறான். தேவதேவன் பதறுகிறார். அடேய். யாராவது காப்பாற்றுங்களேன். அதோ. ஃபயர் சர்வீஸ் எஞ்சின் மணி ஒலித்துக் கொண்டு -

திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். கனவா... நிஜமா... நிஜம்தான். அபாய மணியோசை. இல்லை. டெலிபோன் அடித் துக் கொண்டிருந்தது.

விளக்கைப் போட்டார். நேரம் இரண் டரைதான் ஆகியிருந்தது. இவ்வளவு அகாலத்தில் யார் போன் செய்வது? குழப் பமுடன் சென்று ரிசீவரை எடுத்தார்.

''ஹலாவ்... யாரு ஏசிபி தேவ தேவனா?''

''ஆமாம்'' என்றார் நிதானமாக. எதிர் முனையில் ஒலித்த குரல் மகா மென்மை யாயிருந்தது; நக்கல் தொனித்தது.

''விட்டுரு துரை!''

''வாட்?''

''டானைப் பிடிக்கிற முயற்சியை நிப்பாட்டிரு துரை. உன்னால முடியாது. புரியுதா? மீறி - ஒண்ணே காலணா மெட லுக்கு ஆசைப்பட்டு அசட்டுத்தனமா ஏதும் செய்தே... ம்கூம். வேணாம் விலகிரு துரை. டான் கலிலியோவோட சித்து விளை யாட்டை உன்னால தாங்க முடியாது!''

''நீ யாருடா ராஸ்கல்?''

எதிர்முனை சிரித்தது. தொடர்ந்து சிங்கம் ஆக்ரோஷமாய் உறுமும் ஒலி கேட் டது. அவ்வளவுதான். தொடர்பு துண்டிக் கப்பட்டது.

இரவு நிகழ்ந்தவை யாவும் டானின் மிரட்டல் முயற்சிகள் என்று அவருக்குத் தற் போது புரிந்தது. சிங்க உறுமலை டேப்பில் பதிவு செய்து... பாவம். வீணாய்ச் சிரமப் பட்டிருக்கிறான் டான். தனக்குள் சிரித்துக் கொண்டார். உயிருக்குப் பயந்த ஒரு சாதா ரணப் போலீஸ்காரன் என நினைத்து விட் டான் போலிருக்கிறது. தன்னுடைய நரம்புகள் இரும்பு இழைகள் என அவன் அறிய நியாயமில்லை...

காலையில் தேவதேவன் உற்சாக மாகக் கிளம்பி டிசிபி சண்முகநாதனைச் சந்தித்தார்.

''என்ன ஏசிபி எப்படி ப்ரொசீட் செய்யறதா உத்தேசம்? நம்ம ரெகார்டுகள் யூஸ்லெஸ். டானைப் பத்தி ஒரு தகவலும் தராது. ஒரு சோர்ஸும் இல்லாம -''

''நம்மகிட்டே ஒரு சோர்ஸ் இருக்கு சார்.''

''என்னய்யா அது?''

''கைதிகளை விசாரிக்கிறோம்! பாம் பின் கால் பாம்பறியும்!'' என்று தேவ தேவன் சிரித்தார்.

''வித்தியாசமான நல்ல மூவ்தான்'' என்றார் சண்முகநாதன் யோசனையுடன், ''பலிக்குமான்னு தெரியலையே தேவா. இவனுங்களுக்கு எந்த அளவு தெரிஞ் சிருக்கும்? தெரிஞ்சாலும் வாய் விடு வானுங்களா? மேலும், எவ்வளவு கன் விக்ட்ஸ்னு விசாரிப்பீங்க?'' என்று மலைத் தார்.

''எல்லாரும் தேவையில்லை சார். நேத்து நம்ம கம்ப்யூட்டரோட மெனக் கிட்டு ஷார்ட் லிஸ்ட் பண்ணிருக்கேன். பர்சனல் தகராறுல குற்றம் செய்தவங்க, பெட்டி தீவ்ஸ் இம்மாதிரி நிறைய ஆசாமி களை விலக்கிட்டேன். தேர்ந்தெடுத்த கிரி மினல்ஸை இன்னிக்குச் சந்திக்க ஜெயில் சூப்பிரண்ட்டு ஏற்பாடு செய்திருக்கார்.''

''ஸோ, சுறுசுறுப்பாத்தான் செய்ய றீங்க. ஆளுக்குப் பாதியாய்ப் பிரிச்சுக்கிட்டு விசாரிப்போம் தேவா'' என்று சண்முக நாதன் எழுந்து கொண்டார்.

ஒதுக்குப்புறமான தனியறை. காலை 9:30. அருகிலிருந்த உதவியாளன் குறிப்பு எடுக்கத் தயாராக, முதல் கைதியை உட் காரச் ,சொல்லி விட்டுப் பைல் பிரித்தார் தேவதேவன். வந்தவன் எண் 212. பெயர் மனோகராம். கடத்துவது அவன் தொழி லாம். பைலில் அவன் ஜாதகம் விலா வாரியாக விரிந்திருந்தது.

''டான் கலிலியோ பத்தித் தெரியுமா மனோகர்?''

''கில்லாடியான கிரிமினல் இங் னு கேள்விப்பட்டிருக்கேன் சார்'' என்றான் தயக்கமின்றி.

''அவனைப் பத்தி விவரம் வேணும் மனோ'' என்றார் ஸ்னேகமான குரலில்.

''எனக்கு ஒண்ணும் தெரியாதுங்களே. பார்த்தது கூடக் கிடையாது. டான் பெரிய லெவலுங்க!''

''பயப்டாதேய்யா. நான் உன்னை விசா ரிக்கிறது இரகசியம். வெளியே யாருக்கும் தெரியாது. உனக்குத் தெரிஞ்சதைத் தைரிய மாச் சொல்லு. பின்னால உனக்குத் தண்ட னைக் குறைப்பு வரை உதவலாம்.''

''புரியுதுங்க. ஆனா எனக்கு எதுவும் தெரியாது சார். என்னை நம்புங்க'' என் றான் கையைப் பிசைந்தபடி.

அடுத்து அழைக்கப்பட்டவன்

பத்மா ரவிசங்கர்

போதைப் பொட்டலம் விற்கும் விற் பன்னன்.

''டானா... அதாருங்க?'' என்று விழித்து விட்டு அவன் விடைபெற்றுக் கொண்டான்.

டான் கலிலியோ எங்கிருக்கிறான்? என்ன வயது? யாது அவன் இயற்பெயர்? அவனை வர்ணிக்க முடியுமா? அவன் கூட்டாளிகள், உதவியாளர்கள் யாரென்று தெரியுமா? அது என்ன சிங்க இலச்சினை?



வரிசையாக வந்த குற்றவாளிகளிடம் விசாரணையைத் தொடர்ந்தார்.

சில கைதிகள் (டான் பற்றிய) அச்சத்தில் அவசரமாகத் தெரியாதென்றனர். உண்மையிலேயே அறியாதவர்களும் இருந்தனர். போலீஸே தங்களை நாடி வந்த பெருமிதத்தில் பொய் அவிழ்த்தனர். எது உண்மை? எது பொய்? குழம்பினார் தேவதேவன். கிடைத்த தகவல்களும் எவ்வளவு முரண்பாடானவை...!

டான் கலிலியோ கறுப்பு சார். செவந்த புள்ளைங்க. முறுக்கு மீசை சாமி. சூப்பரான தாடி. யார் சொன்னதுங்க? குறுந்தாடிங்க. ஒன்றரைக் கண். ம்கூம். பூனைக் கண். வெட்டுத் தழும்பு உண்டு. தழும்பு இல்லைங்க. ஆனா மவனுக்கு மூக்குல மச்சம் இருக்கும். செம்பட்டைத் தலை முடி. அடுத்துப் பெயர்கள். முனுசாமி, ராபர்ட், ஆறுமுகம், சோமையா, யுவராஜ், பிரபாகர் என உதிர்ந்த பல பெயர்கள் அவரின் குழப்பத்தைப் பூர்த்தி செய்து மண்டையைப் பிய்த்துக் கொள்ள வைத்தன.

ஆயினும் அடுத்த நாளும் அலுக்காமல் விசாரணையைத் தொடர்ந்தார் தேவதேவன். வேடிக்கையாகவும் வேதனையாகவும் கைதிகள் முரண்பட - ஏசிபி சற்று சோர்ந்திருந்தார்.

மூன்றாம் நாள் மாலை அவருக்கு ஒரு நம்பிக்கைத் தகவல் கிடைத்தது. தன் வசம் டான் கலிலியோவின் புகைப்படம் இருப்பதாக ஒருவன் டெலிபோன் செய்யவும் பரபரப்பானார் தேவதேவன்...

இதயம் படபடக்க சிந்துஜாவும் பின்னால் திரும்பிப் பார்த்தாள். தொலைவில் ஒரு கறுப்புக் கார் தென்பட்டது.

''நம்மை அது பின்தொடருதுன்னு எப்படிச் சொல்றீங்க பிரகாஷ்?''

''ஓவிய அனுபவத்தினால விஷுவலான விஷயங்கள் சட்னு மனசுலப் பதிஞ்சிரும். லேசுல மறக்காது. காலையில் நாம கிளம்பின ஐந்தாவது நிமிஷம் இந்தக் கறுப்புக் காரைப் பார்த்தேன். அப்புறம் காஷுவலா மூணு தடவைக் கண்ல பட்டுது. இப்போ பத்து நிமிஷமா ஸ்டெடியாப் பின்னால ஒட்டிக்கிட்டிருக்கு! மேலும் உறுதி செய்யறேன் பாரு.''

சொல்லி விட்டுப் பிரகாஷ் காரின் வேகத்தை வெகுவாகக் குறைத்தான். அப்போதும் இரு கார்களுக்கு இடையிலிருந்த இடைவெளி நிலை நிறுத்தப்பட்டிருந்ததில் சிந்துஜா வியந்தாள். பிரகாஷ் சடாரென்று வேகம் கூட்டினான். பின்பற்றும் காரும்...

''இப்போ என்னப்பா செய்றது?'' என்றாள் கவலையுடன்.

''டோன்ட் ஒர்ரி டியர். கார் பயணம் ஏன்னு கேட்டல்ல.. நான் எக்ஸ்பர்ட் டிரைவர் சிந்து. ஓவியத்துக்கு அடுத்து எனக்குக் கொள்ளை ஆசை கார் ஓட்டறதுலதான். எப்படியாவது இவன் கண்ணுல மண் தூவிடுவோம்.''

''ஆமா. நாம கொடைக்கானல் போறது அவனுக்குத் தெரியக் கூடாதுப்பா.''

''வாய்ப்பா வர்ற ஊரு அச்சரபாக்கம். இங்கே டிரங்க் ரோடுல லெஃப்டுல கிளை பிரிஞ்சு ஊருக்குள்ளப் போயிட்டுத் திரும்பவும் வந்து ஜாயின் பண்ணிக்கும்.''

அவன் எதிர்பார்த்த சமயம் விரைவில் வாய்த்தது. முன்னால் மூன்று பஸ்கள் செல்வதைக் கவனித்தான். அதிர்ஷ்டம்தான் இது. ஒலி கொடுத்து வழி வாங்கி ஓவர்டேக் செய்து பஸ்களுக்கு முன்பாக வந்தான்.

அவற்றின் சௌகர்யமான மறைப்பில் பயணித்தவன் கிளைச் சாலையின் முகப்பு வந்ததும் விலகும் விருப்பம் விளக்கிட்டு அறிவித்து விட்டு, சட்டென்று ஓர் ஓரமாக ஒதுங்கிப் புளிய மர மறைவில் காரை நிறுத்தினான்.

சர்சர்ரென்று மூன்று பஸ்களும் சடுதியில் கடந்து ஜி.எஸ்.டி. ரோடில் விரைந்தன.

அந்த நிமிட முடிவில் வந்த கறுப்புக் கார் தயக்கமின்றிப் பிரதான டிரங்க் ரோடில் செவ்வனே செல்லவும் - அதன் நம்பரை மனத்தில் இருத்திக் கொண்டு விட்டு - சிரித்தான் பிரகாஷ்.

அவன் சிரிப்பில் பங்கு கொள்ளாமல் சிந்துஜா சீரியஸாக இருந்தாள்.


''என்னம்மா தீவிர யோசனை?'' என்றவாறு காரைக் கிளப்பிக் கிளைச் சாலையினுள் பிரவேசித்தான் பிரகாஷ்.

''நீங்க தற்காலிகமாத்தான் அவனை ஏமாத்தியிருக்கீங்க பிரகாஷ்.''

''உண்மைதான் சிந்து. ஆனா அதை யோசிக்காம இருப்பேனா? நம்ம மிஸ்டீரியஸ் ஃப்ரெண்டுக்கு உத்தரவாதமான உபத்ரவம் உண்டாக்க உபாயம் ஒண்ணு கைவசம் இருக்கு!''

தொலைவில் தொடர்ச்சியான குன்றுகள் தென்பட, வரிசையாக வந்த கடைகளில் சுறுசுறுப்புத் துலங்க அச்சரபாக்கம் பெரிய ஊர்தான் என்று பட்டது. 'ஆட்சீஸ்வரர் கோயில் செல்லும் வழி' என்ற அடையாள அம்பு அருகிலிருந்த ட்ரக் ஸ்டோரைப் பார்த்துக் காரை நிறுத்தினான்.

''இங்கே நான் போன் செய்யும் போது கடை ஆசாமிக் கவனத்தை நீ திசை திருப்பி



நன்றி : ஜெர்மன் டிரிப்யூன்

வெச்சுக்க.''

நல்லவேளையாக மருந்துக் கடை 'ஈயடித்தது.' பவ்யமாகத் தேவை விசாரித்த கடைச் சிப்பந்தியிடம் லோக்கல் எக்ஸ் சேஞ்ச் எண் கேட்டுக் கொண்டு டெலிபோன் சுழற்றினான் பிரகாஷ்.

எக்ஸ்சேஞ்சிலிருந்து ஊரின் போலீஸ் ஸ்டேஷன் தொலைபேசி எண் தெரிந்து கொண்டதும் இரண்டாம் முறையாக போன் நம்பர் சுழற்றினான். சுற்றிலும் யாருமில்லை. சில மருந்துகளுக்கு ஆர்டர் செய்யும் சாக்கில் சிப்பந்தியைக் கடையின் ஒரு ஓரத்திற்கு ஈர்த்திருந்தாள் சிந்துஜா.

குரலில் டெஸிபல் குறைத்து, ''ஹலோ... இன்ஸ்பெக்டர் ப்ளீஸ்'' என்றான் பிரகாஷ்.

''ஸ்பீக்கிங்''

''உங்களுக்கு ஒரு டிப்! கவனமாக் கேளுங்க இன்ஸ்பெக்டர்'' என்றவன் தங்களைப் பின்பற்றிய கார் நம்பர் சொல்லி அதை வர்ணித்து விட்டு, ''இந்தக் கார்ல ரகசியமாப் போதைப் பொருள் கடத்தல்! 'ஹஷ் ஹஷ்' ஹசிஷ், ப்ரௌன் ஷுகர் சமாச்சாரம். ஆல் வொர்த் ஏ ஃபார்ச்சூன் சார்.''

''மை காட்!'' இன்ஸ்பெக்டரின் குரலில் பதற்றம் தொற்றிக் கொண்டிருந்ததை அவனால் உணர முடிந்தது. ''இப்போ அந்தக் கார் எங்கேய்யா?''

''ஜி.எஸ்.டி. ரோடுல! சீக்கிரமாப் போய் மடக்குங்க. காரைத் தலைகீழாப் புரட்டுங்க.''

''ஹலோ... நீ யாருப்பா?''

''அது அவசியமா? நேரத்தை வேஸ்ட்டு செய்யாதீங்க'' என்று வைத்து விட்டான்.

போன் 'விஷயம்' பற்றிக் கேட்டதும் சிந்துஜா 'ஹுர்ர்ரே' என்று குதித்தாள். ஒரு ரெஸ்டாரெண்டில் அரைமணி போல் கழித்து விட்டுத் திரும்பவும் காரில் கிளம்பினார்கள்.

''யாருப்பா அவன்? எதுக்காக அவன் நம்மைப் பின்தொடர்ந்தான்?'' என்றாள் கவலையுடன்.

''சர்ச் மீ!'' என்று பெருமூச்சு விட்டான்.

''கண்ல பட்டதால இப்போ நமக்குத் தெரிஞ்சுது. ஆனா எவ்வளவு காலமா ஃபாலோ செய்யறானோ...''

''தெரியலையே சிந்து.''

வழியில் வேறு எந்த இடர்ப்பாடும் இல்லை. இருப்பினும் ஒரு முன்னெச்சரிக்கையாகக் கொடைக்கானல் செல்வதை ஒரு நாள் தள்ளிப் போடுவது என்று முடிவெடுத்தனர். பாதுகாப்பு மட்டும் காரணமில்லை; களைப்பாகவும் உணர்ந்தனர். மாலை திருச்சி அடைந்து ஒரு டீலக்ஸ் சூட் வாடகைக்கு எடுத்தனர்.

மறுநாள் காலை பதினோரு மணியளவில் கொடைக்கானல் சென்றடைந்தனர்.

ஹோட்டல் 'க்ரீன் வ்யூ' அமைந்திருந்த ரம்யமான சூழலில் லயித்து, ''ப்யூட்டிஃபுல்!'' என்றவள் மனத்தைப் பறிகொடுத்து விட்டு, ''கிடைக்குமாப்பா?'' என்றாள் ஏக்கமுடன்.

''அறைதானே? கேட்டுப் பார்ப்போம்...'' என்றான் காரை பார்க் ஸ்லாட்டில் செருகி விட்டு.

ஆனால் பிரகாஷ் தன் பெயர் சொன்னதும் ஃப்ரண்ட் ஆபீஸ் அறைச் சாவி எடுத்து நீட்ட, கோபமுடன் முறைத்தாள் சிந்துஜா.

''பொய்தானே?'' என்றாள் குற்றஞ் சாட்டும் குரலில்.

''லைஃபுல இம்மாதிரி சிறு சிறு சஸ்பென்ஸ்கள் சந்தோஷம் சிந்து. பத்து நாளைக்கு இங்கே ரிசர்வ் செய்திருக்கேன்.''

''நேற்று ஒருநாள் வேறு வேஸ்ட் ஆயிருச்சு. சே.''

சிறிய லக்கேஜ்தான் என்று பெல்பாய் புறக்கணித்து நடந்தனர்.

முதல் மாடியிலிருந்தது அவர்கள் அறை.

''இன்னும் என்ன சஸ்பென்ஸ் வெச்சிருக்கீர் கல்லுளி மங்கரே...'' என்று சிரித்த சிந்துஜா ஆர்வ அவசரமாய் அறையினுள் நுழைந்ததும் அலறினாள்.

பதற்றமாய் இரண்டெட்டில் உள்ளே சென்றான். அவள் நடுங்கும் விரல் சுட்டிக் காட்டிய திசையில் -

அலங்காரமான மேசை. மேசை மேல் இரத்தச் சிவப்பு ரோஜா பொக்கே. பொக்கேயுடன் இணைந்து ஒரு அட்டை. அட்டையில் 'வெல்கம்' எழுத்துக்கள். எழுத்துக்களுக்கு மேலே நீட்டப்பட்ட -

ஆக்ரோஷ சிங்கத் தலை இலச்சினை!

(தொடரும்)



மன்னன்

சாதாரண மன்னனில்லை
'சவாலே சமாளிக்கிற' மன்னன் :
தொழிலாளி ரஜினிக்கும், முதலாளி
விஜயசாந்திக்கும் மோதல் வந்து,
வலுத்து, வளர்ந்து, கல்யாணமென்கிற
திருப்பத்தை அடைந்து, உருமாறி
ஆணுக்குப் பெண் அடங்கி வாழ்தலே
சுகம் என்கிற பத்தாம்பசலி அறிவுரை
யுடன் சுபம்.

டியர் மிஸ்டர் வாசு,
நேரம் கேட்டதும் முதுகைத்
திருப்பி கடிகாரம், சொடக்கு போட்
டதும் மாஜிக் ரீதி மாற்றங்கள், ஆங்கில
வசனம், சண்டையிடுமுன் ஹாஸ்யம்
என வழக்கமான ரஜினி ஸ்பெஷல்
அவியலை விமரிசையாக வாரி வழங்கி
இருக்கிறீர்கள். ஆனால் பாருங்கள்,
இந்த ரகப் படங்கள் திகட்டத் துவங்
கும் விளிம்பில், உங்கள் 'மன்னன்'.
இழையோடி இருக்கும் 'அம்மா
பாசம்' - காட்சிகள்தான் கொஞ்சம்
மாறுதல்.

வரவர இளையராஜாவின் நல்ல
பாடல்கள் அமைவது ஜாக்பாட் மாதிரி
ஆகி விட்டது. ஓரிரண்டு பின்னணிக்
காட்சிகள் விதிவிலக்காய், வித்தியாச
மாய் அமைந்திருக்கின்றன!

வசனங்கள் : கொஞ்சம் கவனித்துப்
பார்த்தால் இன்றைய 'நாட்டு நடப்
புக்கு' எதிர்ச் சவாலாய் அமைந்
திருப்பது போல... எதற்கு வம்பு?
விமர்சனத்தில் சிண்டு முடிக்கிறார்
சுந்தர்ஜி எனக் கடித மழை வரும்.

படம் நெடுக நியமித்த விறு
விறுப்பு இருப்பதை ஒப்புக் கொள்ள
லாம்.

குஷ்பு ஒரு கேக் கட்டிடம்.

கவுண்டமணி - ரஜினி ஜோடி,
'மாமாவின் மரணம்' என்று ஆகாசப்
பொய் சொல்லி, தியேட்டருக்குப்
போவதும், ஏறிக் குதித்து முதல்
இரண்டு டிக்கெட் வாங்கி, பரிசு
கிடைக்கிற உற்சாகத்தில் துள்ளுவதும்,
பரிசளிக்க இருப்பவர் முதலாளியம்மா
எனத் தெரிந்து அசடு வழிவதும் சுவா
ரஸ்யமான கற்பனை.

எல்லாம் சரி.

கதையும், காட்சிகளும் ஆம்பிளை
சூப்பர் ஸ்டாருக்குப் பழுதில்லை.
ஆனால் விஜயசாந்தியின் அவசியமற்ற
அத்தனை முரட்டுத்தனம், தோதில்லா
மல், அவரை இறக்கி விட்ட மாதிரி
யல்லவா தோன்றுகிறது!

- சுந்தர்ஜி

6

சிந்துஜாவின் அலறலுக்குக் காரணம் விளங்காமல் விழித்தான் பிரகாஷ். ''ஒரு ஸ்டார் ஹோட்டல்ல மலர்க் கொத்தும், வாழ்த்து அட்டையும் வழக்கந்தான் சிந்து. இதுல பயப்பட என்ன இருக்கு?''

''நல்லாப் பாருங்க பிரகாஷ். அந்த சிங்கத் தலை! அப்புறம் சிம்பாலிக்கா சிவப்புப் பூ. அபாயம் அறிவுறுத்தற மாதிரி...''


''சில்லி!'' என்று சிரித்தான். ''சும்மா சீரியஸாகாதே சிந்து.''

''நீங்க பேப்பர்ல பார்க்கலையா? டான்கலிலியோ எம்பளம் சிங்கம் பிரகாஷ். இந்த ஹோட்டலின் சின்னம் சக்கரம். ரிசப்ஷன்ல பார்த்தேன். வரவேற்பு அட்டைக்குச் சிங்கம் தேர்ந்தெடுக்க அவசியமில்லை.''

''தென் இட் மஸ்ட் பி ஏ ஜோக் பை சம் ஹோட்டல் ஸ்டாஃப்!'' என்றான் சமாதானப்படுத்தும் குரலில்.

''இருக்காதுப்பா. நேத்து நம்மை யாரோ ஃபாலோ செய்தான். இப்ப இங்கே டானின் சிங்கம். சம்திங் சினிஸ்டர். எனக்குப் பயமாயிருக்கு பிரகாஷ்.''

நடுங்கிய மனைவியை இறுக்கமாக அணைத்துக் கொண்டான். ''வீணாப் பயப்படாதே டியர். டானோ அல்லது வேறு யாரோ கொடைக்கானல் வரை நம்மைத் துரத்தக் காரணம் ஏதுமில்லை. தவிரவும் நான்தான் எப்பவும் பக்கத்துல பாதுகாப்பா இருப்பேனே... அதனால கண்டதையும் கற்பனை செய்து ஹனிமூனை ஸ்பாயில் பண்ணிக்காதே.''



அட்டைக்கு விபரீத அர்த்தம் ஏதும் இருப்பதாக அவனுக்குப் படவில்லை. இருந்தாலும் சிந்துஜா கிடைத்தற்கரிய பொக்கிஷம். எச்சரிக்கையுடன் அவளைப்

பாதுகாப்பது என்று உறுதி செய்து கொண்டான். எஸ்.டி.டி. தொலைபேசித் தொடர்பு கொண்ட அப்பா ராஜசேகரிடம் தாங்கள் உற்சாகமாக இருப்பதாக அறிவித்தான்.

மதிய உணவு முடிந்த போது நேரம் 2.00. ''கம்மான் சிந்து. லெட்டஸ் என்ஜாய் நேச்சர்!''

சிந்துஜா சிரித்தது வசீகரமாயிருந்தது. மஞ்சள் சேலையும், சிவப்பு ஜாக்கெட்டும் அணிந்து, மெரூன் ஸ்டிக்கர் பொட்டு வைத்துக் கையில் ஒற்றைத் தங்க வளையல் துலங்க... எளிமையான அலங்காரம்தான். அப்படியும் அவள் அழகு அசத்திற்று. அவளுடைய தாழம்பூ நிறத்திற்கு, ஆதர்ச உடலமைப்பிற்கு எதுவும் எடுக்கும் என்று அவனுக்குத் தோன்றிற்று.

''என்ன பார்வை அலையுது? இளம்பலாமா அன்பரே...'' என்றாள் கிண்டலாக.

''வந்து... ஊர் சுத்தறதை ஒரு மணி நேரம் ஒத்தி வைச்சா என்ன டார்லிங்?''

''சும்மா இரு மேன்!'' என்றாள் கண்களில் காதல் சுடர்விட.

''உங்களுக்கு ரோயிங் தெரியுமா?''

''தெரியு-மாவா? நான் படிச்சு வளர்ந்தது ஊட்டிம்மா. மறந்துட்டியா?''

வாடகைக்கு அமர்த்திக் கொண்ட படகு மெதுவாக அசைந்தவாறு முன்னேறியது. பிரகாஷ் அனாயாசமாகவும் நிதானமாகவும் துடுப்புப் போட்டான்.

சிந்துஜா ஒரு கையால் தண்ணீரை அளைந்தாள். ஏரி சில்லென்றிருந்தது. சுற்றிலும் மரகதப் பச்சை. கம்மென்று ஒருவித மணம் நுகர முடிந்தது. உரைக்காத வெயில். காற்றில் இதமான குளிர். ஆங்காங்கே தென்படும் உல்லாச முகங்கள். தாலாட்டும் படகு. அன்பான கணவனின் அண்மை. மனத்தில் மகிழ்ச்சி மிக, சொர்க்கச் சூழலில் லயித்தாள்.

''என்ன ஒரு ரம்யமான சூழ்நிலைப்பா!''

''ஆமா சிந்து. கடவுள் நல்ல 'இரசனையான மூடுல' இருக்கிறப்போ படைச்ச கவிதைப் பிரதேசம் இது! தூரிகை தூக்கக் கை துறுதுறுக்குது.''

டான் கஸிஸியோ

பத்மா ரவிசங்கர்

வழியில் காரை நிறுத்தி ''வுல் பிளாசா'' என்ற கடையில் முழுக்கை ஸ்வெட்டர் வாங்கி அணிந்து கொண்டார்கள். அவனுக்கு வார்னிஷ் வர்ணம் தேர்ந்தெடுத்திருந்தாள். மயில் கழுத்து வண்ண ஸ்வெட்டர் அவளுக்கு மேலும் மிடுக்கு சேர்த்தது.

கொடைக்கானல் ஏரி அடைந்தனர். சாலை ஓரமாகக் காரை நிறுத்தி விட்டு இயற்கையை இரசித்தவாறு சற்று தூரம் நடந்து திரும்பலாம் என்று முடிவெடுத்தனர்.

கையில் பாட்டில்களுடன் அவசரமாக அணுகிய ஒரு பரட்டைத் தலை ''சாரு சுத்தமான தேன் வேணுமா?'' என்றான்.

''வேணாம்பா. ஐம்பது கிலோ தேன் கூடவே வருதுப்பா!'' என்று சிரித்தான்.

''ஏய்!'' என்று அவன் புஜத்தில் திருகினாள் சிந்துஜா. ''லேக் அழகா இருக்குதப்பா'' என்றாள்.

''போட்டிங் போகலாமா?''

''உங்களுக்கு எப்படி பிரகாஷ் டிராயிங்ல இன்ட்ரஸ்ட் வந்துச்சு?''


''அம்மாதான் காரணம். சின்னஞ்சிறு வயசுலேயே சுதந்திரமாக் கிறுக்க வைச்சு என்கரேஜ் செய்வாங்க. அம்மாவுக்குத் தினமுமே மார்கழித் திங்கள்தான். விஸ்தாரமான வாசல். மனம் லயிச்சு மணிக்கணக்கா கோலம் போடுவாங்க. பக்கத்துல இருந்து பார்த்துக்கிட்டிருப்பேன். அம்மாவோட கோல நோட் புக் இன்னமும் பத்திரமா வெச்சிருக்கேன். என் ஓவியம் கோலத்துலதான் ஆரம்பம்!''

காரில் ஏறிப் போய் அந்த இடத்தை அடைந்ததும், ''லஷ் ப்யூட்டி!'' என்று கூவினாள் சிந்துஜா.

''கோல்ஃப் மைதானம்.''

கண்ணுக்கெட்டிய தூரம் பசும்புல் கார்ப்பெட். கண்ணுக்குக் குளிர்ச்சியூட்டியது.

''இந்த மாதிரி மெத் மெத் புல் தரையில் கால் பதிய நடக்கறது பிடிக்கும்.''



''பெண்ணோட அப்பா, ரொம்ப முன்ஜாக்கிரதைப் பேர்வழியா இருப்பார்னு தோணுது.''

''எப்படி....?''

''அழைப்பிதழுக்குக் கீழே பின் குறிப்புல, 'தங்கள் செருப்புக்குத் தாங்களே பொறுப்பு'ன்னு எழுதியிருக்காரே!''

– சீர்காழி வி. ரேவதி

''சிந்துவுக்கு வேறு என்ன பிடிக்கும்?''

''என் பிரகாஷை!'' என்று அவனுடன் கைகோத்துக் கொண்டாள்.

அடுத்த மூன்று நாட்கள் சுதந்திரமாகச் சுற்றினர். கம்பீரமான பில்லர் ராக்ஸ். வெண்பட்டாய் இறங்கிய சில்வர் கேஸ்கேடு. அதல பாதாள தற்கொலை முனை. குறிஞ்சி ஆண்டவர் கோயில். ஒரு காமிரா வாங்கி கிளிக்கித் தள்ளினர். இன்பத்தில் திளைத்தனர்.

நான்காம் நாள் முன்னிரவு :

''ஒரு சின்ன வாக் போவோமா டியர்?''

ஹோட்டலை விட்டு இரவு வெளியில் செல்லச் சிந்துஜாவுக்கு விருப்பமில்லை. ஆயினும், அன்பானவனின் ஆசை அழைப்பைத் தட்ட முடியவில்லை அவளால்.

தோள்கள் உரசியவாறு மெல்ல நடந்தனர். பால் நிலவு அலம்பி விட்ட பசுமை. இந்த உலகமே அவர்களுக்குச் சொந்தம் போன்றதொரு தனிமை.

''ஸோ ப்யூட்டி ஃபுல்! அனுபவிக்க ஒருத்தன் கன்ல படறானாப் பாரு! பிட்டி. இந்த மாதிரி சூழ்நிலையை ஃபாரினர் விட்டு வைப்பானா?''

அவளால் இரசிக்க இயலவில்லை. ''போதும் பிரகாஷ். திரும்பிப் போகலாமே'' என்றாள் ஈனஸ்வரத்தில். சங்கடமாக உணர்ந்தாள். அவள் உள்ளுணர்வு சடாரென்று விழித்துக் கொள்ளக் காரணமாயிருந்த -

'அவன்' சற்று இடைவெளி விட்டு இருவரையும் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். அவன் கையில் முக்காலடி நீளக் கத்தி. அதன் கூர்மை பௌர்ணமி நிலா ஒளியில் பளபளத்தது.....

இரவு; ஜீப் தவிர்த்து ஆட்டோ பயணம்; போலீஸ் உடுப்பு விடுத்து மஃப்டி உடை; தற்போது மட்டமான இந்த அரையிருள் ரெஸ்டாரெண்ட்; அதில் குறுகலான மூன்றாவது கேபின்; நேரம் 8:25; எல்லாம்... எல்லாம் இம்மி பிசகாது அவன் சொல்படித்தான். ஆனால், போனில் பேசியபடி போட்டோவுடன் அவன் வருவானா? ஏசிபி தேவதேவன் பரபரப்பாக உணர்ந்தார்.

ஐந்தாவது நிமிடம் திடுதிப்பென்று அவன் பிரவேசித்தான்.

''வணக்கங்க'' என்றான் பவ்யமாக. ''ஒரு முன்னெச்சரிக்கைக்காக பாவம் உங்களைச் சிரமப்படுத்திட்டேன். விஷயம் தெரிஞ்சுதுன்னா என் தலையை டான் கும்பல் சீவிறும்!'' என்றான் நடுக்கமுடன்.

வந்தவன் தொள தொள பேண்ட், சட்டையில் இருந்தான். அவன் கண்களின் கீழ் கருவளையம். முகத்தில் ஓர் ஆயாசம் - வாழ்க்கையில் நிரம்ப அடிபட்டாற் போல. வயது 40 + இருக்கலாம். அமரச் சொன்னார். அசைவம் ஆர்டர் செய்தார். ''சொல்லுப்பா'' என்றார்.

''பதினைந்து வருஷம் முந்தி டானுக்கு வேலை செய்திருக்கேங்க...''

''அட! அவனைப் பார்த்திருக்கியாப்பா?''

''இல்லைங்கய்யா! ஒரு வருஷம் போல வேலை செய்திருப்பேன். திறமை பத்தலைன்னு விரட்டி விட்டுட்டாங்க. இல்லாடிக்கணக்கானவங்க முன்னேறப் பல படிகள் உண்டுங்க. நான் ரொம்பக் கீழ் மட்டங்க. கேள்வி கேட்காமச் சொன்னதைச் செய்வோம். யார் யாரோ வந்து வேலை வாங்குவாங்க. சிங்க இலச்சினைதான் எல்லாருக்கும் பொது; அதைத் தாங்கி வந்தா டானின் உத்தரவுங்க...''

''சரி. போட்டோ எப்படி கிடைச்சுது?''

''டானுக்குப் பல மறைவிடங்க. அதுல ஒரு வீட்டுப் பரண்லருந்து ஒரு சமயம் பொட்டி எடுத்துக்கிட்டு வரச் சொன்னாங்க.... போதை மருந்து கடத்த...''

''பெட்டி இருந்ததா?''

''ஊம். பரண்ல நிறைய தஸ்தாவேஜுங்களும் இறைஞ்சு கிடந்துச்சுங்க. ஏகமாகத் தூசு. நாலு நோட்டு புக்கு எடுத்தப்போ - இந்தப் போட்டோ கிடைச்சது! டான்தானோன்னு குறுகுறுன்னுச்சு. எடுத்து மறைச்சுக்கிட்டேன். இதுநாள்வரை என் பொட்டிக்குள்ள சும்மாத்தான் கிடந்துச்சு. நேத்து என் தம்பியை செயில்லப் பார்த்தப்போ விவரம் தெரிஞ்சுதுங்க. டானைப் பத்தி முந்தாநாள் அவன்கிட்டத் துருவினீங்களாமே.''

''யாரு உன் தம்பி?''

தம்பியின் பெயர் மற்றும் புரிந்த குற்றம் பற்றிச் சொல்லி விட்டு, ''சேர்மா

ளம் சரியில்லாம வயித்துப் பிளைப்புக்குத் தொழிலைத் தொட்டதுக்குத் தம்பி வருந் காத நாளில்லைங்க. ஐயாதான் அவனுக்கு நல்ல வழி காட்டணுமுங்க'' என்று கையெ டுத்துக் கும்பிட்டான்.

''பார்க்கறேன்பா. போட்டோ எங்கே?''

''கொணாந்திருக்கேங்க. ஆனா டான் தானான்னு உறுதியாச் சொல்ல முடியாது.''

ஆவலுடன் போட்டோவை வாங்கிப் பார்த்ததும் ஏசிபி ஏமாற்றமடைந்தார். போஸ்ட் கார்டு சைஸ் கலர் போட்டோ வில் - லாங் ஷாட்டில் - சற்று மழுப்பலான அவுட் ஆஃப் ஃபோகசில் ஒருவன் இடுப் பில் கை வைத்தபடி நின்று கொண் டிருந்தான். சவுக்கு மரப் பின்னணியில் எதையோ எதிர்பார்த்தபடி. யாரோ எதற்கோ படம் எடுத்திருக்கிறார்கள்...

ஒரு வினாடி வெறுப்புத் தட்டினாலும் இந்தத் துரும்பாவது கிடைத்ததே என்று ஆறுதலடைந்தார்.

வீட்டுக்குத் திரும்பிய பின்னும் உறக் கம் கொள்ளாமல் குழம்பிக் கொண் டிருந்தார் தேவதேவன். குழல் விளக்கு வெளிச்சத்தில் பூதக் கண்ணாடி தயவில் ன்னிப்பாகப் போட்டோவை ஆராய்ந் தார். ஹிப்பி போல் பரட்டையான செம் பட்டைத் தலைமுடியும், நீலநிற ஜீன்ஸும், சிவப்புச் சட்டையும் டான் வெளிநாட்டுக் காரனோ என்று எண்ண வைத்தது. அல்லது பிக் சமாச்சாரமா? 15 வருடங்களுக்கு முந்தைய டான் உருவம் தற்போது எப்படி இருக்குமோ?

அது சரி. போட்டோ ஆசாமி டான் தானா?

அப்புறம், அது என்ன கலிலியோ? இப்படி இருக்குமோ... கலிலியோ இத்தா லியப் பெயர். இத்தாலியிலிருந்து குடி பெயர்ந்த ஐந்து குடும்பங்கள்தான் அமெ ரிக்க மாஃபியா என்பர். அந்த மாஃபியா வுடன் தொடர்பு கொண்டவனா இந்த டான்? அ ல் ல து... சிற்சிலரை டான் டெலஸ்கோப்பிக் ரைஃபிளால் தீர்த்திருக் கிறான். டெலஸ்கோப்பைக் கண்டுபிடித் தவர் கலிலியோ. நன்றியறிதலாக... சே, அபத்தம்!

அல்லது டான் என்பவனே இல் லையோ? மித்! கலிலியோ என்று உரு வாக்கிய மாயையில் ஒரு குற்றக் கும்பல் குளிர் காய்கிறதோ? குழப்பம்டா சாமி.

மறுநாள் காலை. கைதிகள் அளித்த விவரங்களைப் பொறுமையாகக் கம்ப் யூட்டரில் புகட்டியதில், ஓரிரண்டு ஒற்று மைகள் தென்பட்டன. டானுக்குச் சிவப்புத் தலைமுடி என்று இரு கைதிகள் ஒத்துப் போயிருந்தனர். கிடைத்துள்ள போட்டோ வும் அதை உறுதி செய்கிறது. உதிர்த்த பல பெயர்களில் சோமையா என்ற பெயர் மூன்று முறை தட்டுப்பட்டது. போலீஸ் தலைமை ஒரு முடிவுக்கு வந்தது.

ஒரு ஆர்ட்டிஸ்டின் கற்பனையில் போட்டோவின் மழுப்பலான முகத்தைத் திருத்தி மார்பளவு க்ளோசப் கொண்டு வந்தார்கள். கிடைத்த உருவம் டான்தானா என்பது கடவுளுக்கே வெளிச்சம்.

'படத்திலிருப்பவன் பெயர் சோமையா. இவன் பிரபல.... இவனைப் பற்றித் துப்புக் கொடுப்பவர்களுக்கு....' என ஒரு பெரிய தொகை ரிவார்டு அறி வித்துப் பேப்பர்களில் தொடர் விளம்பரம் கொடுத்துப் பார்த்தார்கள். உருப்படியாய் ஒன்றும் இதுவரை பெயரவில்லை.

டான்கலிலியோவின் அடுத்த குற்றம் என்ன? இதிலாவது தடயம் தவற விடு வானா? தேவதேவன் எதிர்பார்க்காத இடத்தில் குற்றம் நிகழ்ந்தது -

கொடைக்கானலில்....!

(தொடரும்)

லாரி டிரைவர்கள் உஷார்!

☐ பெருகி வரும் லாரி விபத்துக்களைத் தடுக்க அமெரிக்கா வில் புதிய கருவியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக் கருவி மூலம் டிரைவர் வேகக் கட்டுப்பாட்டை மீறினாலோ, தூங்கி வழிந்தாலோ, எஞ்சின் கோளாறு ஏற்பட்டாலோ டிரைவரின் தோளுக்கு மேலாக அமைந்துள்ள டீவி கேமரா அதனைப் படம் பிடிக்க, பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் அந்த வண்டி யின் நிறுவனத்தின் கண்ட்ரோல் அறையிலுள்ள டீ.வி. திரையில் அக்காட்சி தெரியும். அங்கிருந்து ரேடியோ தொடர்பு கொண்டு, கட்டளை அனுப்பி உடனே தவறுகளைத் திருத்திவிட முடியும்.


- ஆதாரம் : பிஸினஸ் இந்தியா

தகவல் : வசந்தா சாரி



வியப்பிற்குரியது என்னவெனில், பசியுள்ள உங்கள் குழந்தை உலகில் சிறந்த குழந்தை உணவு அபரிமிதமாக இருப்பதை உறுதிப்படுத்துகிறது : அதுவே தாய்ப்பால்.

உங்கள் குழந்தையின் தேவைக்கேற்ப உங்கள் மார்பகம் ஈடு கொடுக்கிறது. உண்மையில், உங்கள் குழந்தையின் பசிப்புலம்பல்கள் சில வேளைகளில் பால் சுரக்கும் சுரப்பிகளைச் சுற்றியுள்ள தசை நார்களை சுருங்கச் செய்து பால் சுரப்பதை துவக்குகிறது. உங்கள் குழந்தை அதிகமாகப் பால் குடிப்பதினால் பால் சுரப்பதும் அதிகமாகிறது. மேலும் எவ்வளவு முறை உங்கள் குழந்தை பால் குடிக்கிறதோ, அவ்வளவு விரைவாக மீண்டும் சுரக்கச் செய்கிறது. ஆகையால் உங்கள் குழந்தை பசியினால் வாடினால், கவலைப்பட வேண்டாம். உங்களிடம் நிறைய பால் இருக்கிறது.



உண்மையில்
உலகில் சிறந்த
குழந்தை உணவு
உங்கள்
குழந்தையாலேயே
தயாரிக்கப்படுகிறது

நீங்கள் இதைவிடச் சிறந்ததை விரும்ப முடியாது. ஏனெனில், தாய்ப்பாலில் உங்கள் குழந்தையின் உடல் நலத்திற்கு தேவையான ஒவ்வொரு பொருளும், மறுமுறை, ஒவ்வொரு பொருளும் உள்ளது. மற்ற ஒரு மாற்று உணவும் இதன் இயற்கை புரதங்கள், தாதுக்கள் அல்லது சர்க்கரைக்கு ஈடாகாது. மற்றும் தாய்ப்பால் கொடுப்பதால் உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் இடையே மிக நெருக்கமான பிணைப்பு உண்டாகிறது. ஒரு உணர்ச்சி மயமான பிணைப்பு.

இவ்விணைப்பினால், உலகில் சிறந்த குழந்தை உணவிற்கு ஒருபோதும் குறைவு ஏற்படாது.

அமுல் இந்த அறிவுரையை ஒவ்வொரு இந்திய அன்னை மற்றும் அவள் குழந்தைக்கு அர்ப்பணிக்கிறது

காஷுவல் தோற்றத்துக்கு...



ஃபாஷன் பக்கம் :

ஸ்கர்ட், ஜீன்ஸ், பாண்ட், மிடி என்று எல்லாவித ஆடைகளுடனும் பேதமின்றி ஜோடி சேருவது டீ-ஷர்ட்!

கறுப்பு, வெள்ளை நிறங்களில் டீ-ஷர்ட் அணிவது ரொம்ப ஃபாஷன்; அவற்றில் மிட்டாய் வண்ணத்தில் வார்த்தைகள் அச்சிடப்பட்டிருப்பது ரொம்ப ரொம்ப ஃபாஷன். அந்த வார்த்தைகளின் அர்த்தம் விளங்காமல் இருப்பது அதனினும் ஃபாஷன்!

வண்ணப்படம் ; யோகா

டீ-ஷர்ட் அணிந்துள்ளவர்கள் : டீனா, கிரன், மீனா, சஜீதா

டான் கலிலியோ

7

அறைக்குத் திரும்பலாம் எனத் திரும்பவும் வற்புறுத்தினாள் சிந்துஜா. ஹோவென்றிருந்த அப் பிரதேசத்தின் அமைதி அவளை அச்சுறுத்தியது. அது என்ன ஓசை... காய்ந்த சருகுகள் மிதிபடுகிற மாதிரி. குளிரையும் மீறி வியர்த்தவாறு, ''ப்ளீஸ் பிரகாஷ்...'' என்றாள் கெஞ்சலாக.

''ஓ.கே. ஓ.கே.'' என்றவன் நாடக பாணியில் கை உயர்த்தி, ''நவ் அபௌட் டர்ன்!'' என்று சிரித்தவாறு சரேலென்று திரும்பினான்.

திரும்பியதும் அதிர்ந்தார்கள். பால் நிலவு ஒளியில் பத்தடி தொலைவில் யார்... யார் அவன்? எதற்காக அவன் கையில் கத்தி? நடப்பது நிஜந்தானா... ஐயோ! வீசுவதற்காக அவன் ஓங்குகிறானே...

உறைந்தது ஒரு வினாடிதான். மின்னல் விரைவில் பிரகாஷ் இயங்கினான். சிந்துஜாவின் இடையை முரட்டுத்தனமாகப் பற்றிப் பக்கவாட்டில் தரைநோக்கிப் பாய்ந்தான். அடுத்த நொடி முடிவில் -

பாய்ந்து வந்த கத்தி ஒரு மரத்தில் 'தக்' என்ற ஓசையுடன் குத்திட்டு நின்றது.

இனி எதிராளி நிராயுதபாணி. ''ராஸ்கல்!'' என்று ஆக்ரோஷமாய்க் கூவியபடி, விடுபட்ட ஸ்பிரிங் போல் தரையிலிருந்து எழும்பினான். ''கோழை! வீசிட்டு ஓடறான் பாரு... அவனைப் பிடிச்சு அவன் கையை முறிக்கணும்.''

''நோ! விட்டுருங்க பிரகாஷ்'' என்று அவனை இறுகப் பற்றி இழுத்துத் தடுத்தாள்.

தொலைவிலிருந்த குத்துச் செடிகளில் மறைந்து மறைந்து அவன் வேகமாகத் தன்னை விட்டு விலகுவதைப் பார்த்துப் பொறுமையிழந்த பிரகாஷ், ''அவன் தப்பிச்சுப் போறாம்மா!'' என்றான்.

''போகட்டும். ஆபத்தை வலியத் தேடிப் போகாதீங்கப்பா'' என்றாள் தவிப்புடன்.

''அவனைப் பிடிச்சு உலுக்கி, யாரு என்னன்னு உண்மையை வரவழைக்க வேணாமா?''

''வேண்டாம்!'' என்றாள் குரல் நடுங்க.

கத்தி வீசியவன் போயே போய் விட்டான். ''சே'' என்றான் வெறுப்புடன்.

''இப்ப எனக்குச் சந்தேகமில்லை சிந்து. யாரோ நமக்குக் குறி வெச்சிருக்காங்க! ஏன் சிந்துஜா?''

''..............''

''யாரும் நமக்குப் பகையில்லையே'' என்றான் மரத்தில் குத்திட்ட கத்தியை வெறித்தபடி. ''ஏன் நம்மைத் துரத்தறாங்க? யார் அவங்க? நீ சொன்ன மாதிரி டான் கலிலியோதான் காரணமா? என்ன அவன் நோக்கம்?'' வரிசையாக வந்த தன் கேள்விகளுக்கு சிந்துஜா பதில் ஏதும் சொல்லாதது சட்டென்று உறைக்க அவளைப் பார்த்தான்.

கலவரமானான். சிந்துஜாவின் கண்கள் தொலைவில் நிலைத்திருந்தது - அமானுடமாய். முகத்தில் பொடித்திருந்த வியர்வை முத்துக்கள் நிலவில் பளபளத்தன. வாய் ஏதோ முணுமுணுப்பது போல் ஓசையின்றி அவஸ்தையுடன் அசைய, அவள் தேகம் கட்டுப்பாடின்றி நடுங்கியது. எந்த நிமிடமும் விழுந்து விடுவாள் போல.

அவளை அவன் தாங்கிப் பிடித்துக் கொண்டதை அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சிந்துஜா வேறு ஒரு உலகத்தில் இருப்பது போலிருந்தாள். நடந்து முடிந்த பயங்கரத்தில் அவள் அதிர்ச்சி வசப்பட்டிருந்தது புரிந்தது.

''விழிச்சுக்க சிந்து. ரிலாக்ஸ் டியர். இனி ஆபத்தில்லைம்மா. இட்ஸ் ஆல் ஓவர்'' என்றான் மென்மையாக.

'டிரான்ஸ்' போன்ற நிலைமையிலிருந்து அவள் விடுபடாமல், ''ம். சீக்கிரம் ஒதுங்குங்க பிரகாஷ். கத்தி வேகமா வருது'' என்றாள்.

பிரமை தட்டிப் போயிருந்தவளை உக்கிரமாக உலுக்கி, ''சிந்துஜா!'' என்றான் அதட்டலாக.

சட்டென்று அவள் கண்களில் உயிர் துளிர்த்தது.

''ஆர் யூ ஆல்ரைட்? உனக்கு ஒண்ணும் ஆகலையே?''

''இல்லைப்பா'' என்று சோகமாகத் தலையசைத்து, சோகையாகப் புன்னகை செய்தாள்.

''ஹோட்டலுக்குத் திரும்பலாமா? உன்னால நடக்க முடியுமாடா?'' கவலையுடன் வினவினான்.

''முடியும்பா. எனக்கு ஒன்று மில்லை.''

பத்மா ரவிசங்கர்

அவளை அணைத்தவாறு அழைத்துச் சென்றான். குளிர் கூடியிருந்தது. ''குளிரை

விரட்டக் கையைக் காலை வீசி வேகமா நடக்கணும் தெரியுமா?'' என்றான் அவள் மனத்தைத் திசை திருப்பும் நோக்கமாக.

ஹோட்டல் 'க்ரீன் வ்யூ' நியான் சிமிட்டல், பனியில் மழுப்பலாகத் தெரிந்தது.

நேரம் 8:30. ஃப்ரண்ட் ஆபீஸின் சூரிய முயற்சி சர விளக்குகள் ஜகஜ்ஜோதியாக இருந்தன. இரசிக்கத்தான் ஆளில்லை.

''குளிருக்கு எல்லாரும் பார்ல போய் விழுந்து கிடப்பானுங்க சிந்து.''

கவுண்ட்டரைக் கடக்கையில் ''சார்!'' என்று அழைத்தான் ரிசப்ஷனிஸ்ட்.

''அரை அவர் முந்தி உங்களுக்கு ஒரு போன் வந்தது சார்.''

''யாராம்?''

''சொல்லலை சார். நீங்க வெளியே போயிருக்கீங்கன்னதும் லைன் டிஸ்கனெக்ட் ஆயிருச்சு. ஏன் சார் மேடம் ஒரு மாதிரி இருக்காங்க?'' என்றான் சிந்துஜாவைப் பார்த்தவாறு.

''ஒ... ஒண்ணுமில்லைப்பா.''

''உடம்பு சரியில்லையா சார்?''

''ஆமாம்பா.'' எரிச்சலுடன் பதிலுரைத்து விட்டு நகர்ந்தான். ரிசப்ஷனிஸ்டின் குரலில் அக்கறையை விட வம்பு சேகரிக்கும் தொனிதான் தென்பட்டாற்போல் பட்டது.

அறைக்கு வந்ததும் மின்சாரக் கணப்பின் கதகதப்பை அதிகரித்து விட்டு, ரூம் சர்வீஸை விளித்துப் பால் வரவழைத்தான்.

''சூடா பால் சாப்பிட்டுட்டு நிம்மதியாப் படு. காலையில எல்லாம் சரியாயிரும்'' என்றான் அவள் தலைமுடியை விரல்களால் கோதிவிட்டு.

''இல்லைப்பா. ஐ யாம் ஸ்கேர்டு. நீங்க மட்டும் தரையைப் பார்த்துப் பாயத் தாமதிச்சிருந்தா -'' அவள் குரல் தழுதழுத்தது. ''அந்தக் கத்தி உங்க மேல பாய்ஞ்சிருக்கும்.''

''மற சிந்து. ப்ளீஸ்.''

''உங்களுக்கு ஒண்ணு ஆகியிருந்தா இந்நேரம் ஒரு பள்ளத்தாக்குல விழுந்து உயிரைப் போக்கிக்கிட்டிருப்பேன்'' என்றாள் விம்மல் வெடிக்க.

அவனுள் வேதனை வெட்ட, ''அசட்டுத்தனமா உளறாதே சிந்து. வீ ஆர் ஸேஃப். சும்மா வொர்ரி பண்ணிக்காதே.''



நைட் லாம்ப் ஒளிரச் செய்து விட்டுக் கட்டிலில் வந்தமர்ந்தான்.

''அவன் யாருப்பா?''

''தெரியலையே சிந்து. நீ மட்டும் தடுக்காமலிருந்தா அவனைத் தேடிப் பிடித்து நசுக்கியிருப்பேன்!'' என்றான் பற்களைக் கடித்தவாறு.

இறுகியிருந்த கணவன் முகத்தைப் பார்க்கப் பயமாயிருந்தது அவளுக்கு. அவன் கண்கள் வினோதமாக ஜொலித்தன. இவனுக்குள் இன்னொரு இரும்புப் பக்கம் இருக்கும் போல...

''இனி இங்கே இருக்கற ஒவ்வொரு நிமிஷமும் ஆபத்து பிரகாஷ். நாளைக்கே மெட்ராஸ் திரும்பிடலாம்.''

சில வினாடிகள் யோசித்து விட்டு, ''சரிம்மா'' என்றான்.

''நாமா வலிய ஆபத்து தேடிக்கக் கூடாதுப்பா. சந்தடி செய்யாம கிளம்பிருவோம் என்ன?''

''சரி சிந்து. இப்ப நீ தூங்கு.''

'குட் நைட்' சொல்லிக் கொண்டார்கள்.

நேரம் 9:30. அவனை அணைத்தவாறு ஆழ்ந்து உறங்கும் சிந்துஜாவைப் பார்த்தான். நீலவிளக்கொளியில் முகத்தில் ஒரு வித குழந்தைத்தனம் தெரிந்தது. ஹூம். தன்னை நம்பி அவள் வாழ்க்கையையே ஒப்படைத்தவள். இவளைக் காப்பது தன் உயிர்க் கடமை. பரிவும், பாசமும் மிக, குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்ட போது, போன் ஒலித்தது. இந்நேரத்தில் யாராக இருக்கும்....

அவன் மேலிருந்த சிந்துவின் கையை விலக்கி விட்டு, எழுந்து சென்று, போனை எடுத்து ''ஹலோ'' என்றான்.

மறுமுனையில் மௌனம். யாரோ மூச்சு விடும் சப்தம் கேட்டது.

''ஹலோ....... ஹலோ....... யார் வேணும்?''

திடீரென்று சிங்கம் கர்ஜிக்கும் ஓசை கேட்டது. அவ்வளவுதான். தொடர்பு துண்டிக்கப்பட்டது.

பிரமிப்புடன் பிரகாஷ் கட்டிலுக்கு வந்தமர்ந்தான். சிங்க இலச்சினை பற்றி ஞாபகம் வந்தது. சிந்து சந்தேகப்பட்டது சரிதான். டான்கலிலியோ என்ற ராஸ்கல் தான். தன்னைப் பயமுறுத்தத்தான் இந்த அர்த்த ராத்திரி போன்...

பயத்திற்கு மாறாக ஆத்திரம் பீறிட்டது. தங்கள் ஹனிமூனில் குறுக்கிட்டு நிம்மதி கெடுத்த அவனை... சரி; எதற்காக டான் தன்னைப் பயமுறுத்த வேண்டும்?

மேலும் வளர்ந்த யோசனையில் நேரம் விரைந்து கொண்டிருந்தது. களைப்பில் கண்கள் தாமாக மூட -

திடீரென்று விழித்துக் கொண்டான் பிரகாஷ். டிஜிடல் கைக் கடிகாரம் அதிகாலை ஆறு என்றது. எப்போது கண்ணசந்தோம்... நன்றாகவே உறங்கி விட்டிருக்கிறோம்... எண்ணமிட்டவாறு சோம்பலுடன் ஸ்லோமோஷனில் புரண்டு மறுபுறம் திரும்பியவன் அதிர்ந்தான்.

பக்கத்தில் படுக்கையில் சிந்துஜாவைக் காணோம்!

அவன் அடிவயிற்றில் சிலீரென்று ஒரு பயக்கத்தி செருகிற்று. குபீரென்று எழுந்து கொண்டான். அவன் மூளையின் சிக்கலான ந்யூரான் சர்க்யூட்டுகளில் கலைடாஸ்கோப்பிக் குழப்பச் சிதறல்களாக எண்ணங்களும், பலவித உணர்ச்சிகளும்..

இல்லை! நீ நினைப்பது போலில்லை. வீணாய்ப் பதற்றப்படாதே பிரகாஷ். நேற்றைய இரவின் கத்தி சமாச்சாரம் உன்னைப் பாதித்திருக்கிறது. பாத்ரூம் கதவைத் திற. சிந்து சிரித்துக் கொண்டு வெளியே வருவாள் பார்!

அறையின் கோடி நோக்கி ஓடினான். *உங்க காதல் மழையில் நனைத்த பிறகு, இனி எனக்குக் கோயிலுக்குப் போக வேண்டாம் போலத் தோணுதுப்பா. நீங்க தான் என் தெய்வம். உங்க அன்புதான் என் வேதம்...*

பாழும் பாத்ரூமின் கதவு விரியத் திறந்திருந்தது. உள்ளே சிந்துஜா இல்லை. இல்லை. இல்லை! எங்கே? எங்கே? எங்கே? *ஹலோ என்னாச்சும்மா? திடீர்னு கண் கலங்கறே... ஓவர் சந்தோஷம்*



❑ நவீனமயமான மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துவதால் 'கடல் அப்பாவிகள்' எனக் கருதப்படும் டால்பின்கள் பெருமளவில் அழிந்து வருவதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கடல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆண்டொன்றுக்குச் சுமார் 16,000 டால்பின்கள் இவ்வகையில் பிடிக்கப்படுகின்றன. கடல் சுற்றுச் சூழல் இசைவுத் தன்மைக்கு இந்த நடவடிக்கையினால் குறிப்பிடத்தக்க அளவில் ஏதேனும் கேடு விளையுமா என்று தற்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இன்னொருபக்கம் சில நாடுகளில் டால்பின் இறைச்சிக்குப் பெருமளவில் கிராக்கி ஏற்பட்டு வருவதால் இந்த அப்பாவிகள் கொல்லப்படுவது அதிகரித்து விடுமோ என்று இயற்கை வல்லுநர்கள் அஞ்சுகிறார்கள்.

- தூவானம்

பிரகாஷ்! உங்க அன்பைத் தாங்க முடிய லைப்பா...

''என் சிந்து... என் சிந்து...'' அரற்றத் தொடங்கினான். உஷ்... நம்பிக்கை இழக் காதே முட்டாள். ரெஸ்டாரெண்டில் உன் கண்ணம்மா காலைக் காப்பிக்குக் காத்திருக் கும். நோ. ரூம் சர்வீஸ் விளிப்பதுதானே வழக்கம். அனாவசியமாய்த் தர்க்கம் செய் யாமல் ஒடு!

அறையின் வாசற் கதவு தாளிடப்படா மல் இருந்தது. ஆக, அவள் வெளியில் சென்றிருக்கிறாள். அல்லது அவளை... அவ சரமாகத் திறந்து வெளியில் ஓடினான். *வாழ்க்கைல அன்பை அதிகம் அனுபவிச்சு அறியாதவன் நான். இப்பத்தான் வசந்தம் வீச ஆரம்பிச்சிருக்கு...*

குளிர் மிகுந்த காலையில் ரெஸ்டா ரெண்ட்டில் யாருமில்லை. எங்கே என் உயிர்? பதற்றமானான். *உங்களை ரெண்டு நாளாப் பார்க்காம பித்துப் பிடிச்சாப்ல இருந்ததுப்பா. தவிச்சுப் போயிட்டேன்...*

ஃப்ரண்ட் ஆபீஸ் நோக்கிப் பாய்ந் தான். *பல்ல பிக்பாக்கட்டான ஐந்நூறு ரூபாய் பணத்துக்கா இவ்வளவு சோகம்? இல்லைப்பா, என் பர்ஸ்ல வேறொரு மதிப்பிட முடியாத பொருள் இருந்தது. என்ன அது? பல நாள் நான் பார்த்துப் பரவசமான உங்க போட்டோ...*

வரவேற்பு ஹாலில் நான்கைந்து பேர் தென்பட்டனர். இன்னமும் இருட்டு பிரியா திருப்பது வாசலில் தெரிந்தது. ''ஸார்!'' - நேற்றிரவு பார்த்த அந்த ரிசப்ஷனிஸ்டு அவனை அழைத்தான்.

பிரகாஷ் அருகே சென்றதும், ''மேடம் இப்போ எப்படி இருக்காங்க? நீங்க கூடப் போகலையா?'' என்றான்.

ஏதோ நெருடலாக உணர்ந்ததில் பதற்றமாகி, ''என்னய்யா சொல்றே? இப்ப அவ எங்கே இருக்கா?'' என்றான் முரட்டுத் தனமாக.

''நர்சிங் ஹோம் சார்!''

''என்னய்யா உளர்றே?'' என்று அவன் சட்டையைக் கொத்தாகப் பற்றிக் கொண் டான்.

முகம் வெளுத்த ரிசப்ஷனிஸ்டு சொல்லத் தொடங்கினான். அதிகாலை நாலே முக்கால் மணியளவில் பிரகாஷ் தன் அறையிலிருந்து மனைவிக்கு உடல்நிலை சீரியஸ் என்று இவனுக்கு போன் செய்தா னாம்; ஆம்புலன்ஸ் தருவிக்கச் சொன்னதன் பேரில் 'குட் ஹெல்த்' நர்சிங் ஹோமிற்கு இவன் போன் செய்தானாம். பத்து நிமி டங்களில் ஆம்புலன்ஸ் வந்ததாம். இவ னிடம் அறை எண் விசாரித்துக் கொண்டு சென்ற இரண்டு வெண் உடுப்பு ஊழியர்கள் இரண்டு நிமிடங்களில் மாடியிலிருந்து திரும்பினராம். அவர்கள் சுமந்து சென்ற ஸ்டிரெச்சரில் 'மயங்கி'க் கிடந்த மேடத் தைப் பார்த்தானாம்.

எல்லாம் தான் அசந்து உறங்கின பொழுதில்....

முன்னிரவு மேடம் சோர்ந்திருந்த தோற்றத்தை ரிசப்ஷனிஸ்டு நினைவு கூர்ந் தான் பரிதாபமாக.

பிரகாஷ் கண்களில் கனல் பறக்க, ''நீ ஏன் அவனுங்க கூட அறைக்குப் போகலை?'' என்று கேட்டான்.

''முடியலை சார். ஆம்புலன்ஸ் வந்த சமயம் பார்த்து ஒரு பேஜார் கஸ்டமர் செக்-இன் செய்ய வந்தாரு. வேண்டாத கேள்வியெல்லாம் கேட்டு வீணாத் தகராறு பண்ணிக்கிட்டிருந்தாரு.''

''அவரு அறை எடுத்துக்கிட்டாரா?''

''இல்லை. பிடிக்கலேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு.''

பிரகாஷுக்குப் புரிந்து விட்டது. என்ன ஒரு சதி... மேசையின் மேல் முஷ்டியால் ஓங்கித் தட்டி, ''கால் தி போலீஸ்!'' என்று நரம்பு புடைக்கக் கத்தினான்.

பத்தாவது நிமிடம் சென்னை லைன் கிடைத்தது. அவன் அப்பா ராஜசேகர் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தார்.

''காணாமப் போனது ராஜசேகரோட மருமகடா! நான் டி.ஜி.பி.யைப் போட்டு உலுக்கறேன். கவலைப்படாதே மை சன். இன்னிக்கு நைட் அங்கே வர்றேன்.''

அரை மணி கழித்து சிறு போலீஸ் படை வந்தது.

காலை எட்டு மணி போல டி.எஸ்.பி. சாமுவேல் வந்தார்.

மாலை சிந்துஜாவைக் கடத்தியவனிட மிருந்து போன் வந்தது....!

(தொடரும்)



''உங்க பையனுக்கு அரசியல் அறிவு அதிகமா?''

''ஏன் அப்படி கேட்கிறீங்க?''

''ஒரு பழமொழி சொல்லுடான்னு சொன்னா 'எதிர் கோஷ்டியைத் தாக்கிப் பேசினால் தன் கோஷ்டி தானே வளரும்'னு சொல்றான்!''

- எல். ராம் பிரபு

ஜென்ம பூமிகளும் தரிசனங்களும்

ஒரு சின்னச் சூரியனுக்கு மானுட வடிவம் கிடைத்திருக்கு மானால் இப்படித்தான் அமைந் திருக்குமோ!

சுவாமி ரமணானந்தாவைப் பார்க்கிறவர்கள் அனைவரும் இப்படித்தான் தங்களின் மனத் தையே கேட்டுக் கொள் வார்கள். பதிலும் கூட 'ஆம்' தான்.

முகத்தில் அப்படி ஒரு தேஜஸ்! பொன்னிற மேனி! கார்கால மேகத்திரள்கள் போல் ஜடா முடியும், தாடியும்; மார்பை மறைக்கின்ற உத்திராட்ச மணி மாலைகள்! ஆரஞ்சு வண்ணத்தில் இடுப்பிலே ஆடை. அதே வண்ணத்தில் உத்தரியம் ஒன்று முதுகை மறைத்தும், மார்பை மறைக்கா மலும் போடப்பட்டிருந்தது. புலித்தோல் மீது பத்மாசனக் கோலத்தில் அமர்ந்திருந் தார். இடது கையைத் தண்டம் தாங்கி யிருக்க, வலக்கரம் பக்தர்களை ஆசீர்வதிக்க உயர்ந்தும், பிரசாதங்களை வழங்கவுமாக இயங்கிக் கொண்டிருந்தது.

இத்தனை சின்ன வயதில் கூட இப் படிப்பட்ட சித்திகள் சித்திக்குமா?

சித்தித்திருக்கிறதே!

அவரது பார்வையின் வருடல் ஒன்றே போதுமாம், மனத்தின் பெரும்பான்மைத் துக்கத்தை அலம்பி விடுவதற்கு. நம்பிக் கைகள் போன்ற சஞ்சீவி மருந்துகள் எது வுமே கிடையாது.

இருவர் சந்தித்துக் கொள்கிற போது, அவர்களின் பேச்சில் பிரதான இடம் வகிப்பது ரமணானந்தா சுவாமிகளும், அவ ரின் ஆசிரமமும்தான். அங்கு போகிற வர்கள் சொல்லொணா அமைதி பெற்றுத் திரும்புகிறார்கள் என்பது அழுத்தம் பெற்ற நம்பிக்கையாயிற்று.

''இதோ பாரு ரெங்கம்மா, உனக்கு என்ன குறையோ, என்ன துக்கமோ தெரி யலே. கடப்பாறையை முழுங்கினவ போல திணறிக்கிட்டும், துக்கப்பட்டுக்கிட் டும் இருக்கே. வெளிப்படுத்தினாக் கொஞ் சம் ஆறும். வாயே திறக்க மாட்டேன்கிறே, போ. எனக்கு உன்னையும் உன் துக்கக் கோலத்தையும் பார்க்க ஆறலே. எல்லாரும் அந்த சாமியார் தரிசனம் பண்ணினாத் துக்கமெல்லாம் போயிடுதுன்னு சொல் றாங்க. போய்ட்டு வந்தப்புறம் துக்க நிவர்த்தியாகி மனசுல சந்தோஷத்தோட இருக்காங்களாம், சொல்றாங்க. நீயும் வா ரெங்கம்மா, போய்ட்டு வந்துறலாம், அப்ப வாச்சும் உன் முகத்துல களை வருதான்னு பார்க்கலாம்.''

உமா கல்யாணி

ரெங்கம்மா போட்டிருக்கிற வாய்ப்பூட் டுக்கு எங்கிருந்தும் சாவி கிடைத்து விட வில்லை.

கிட்டத்தட்டப் பத்தாண்டு காலமா கவே, இந்த ஊரின், இதே தெருவின், இதே வீட்டின் அங்கமாகிப் போனாள் ரெங் கம்மா. அவளின் துக்கம் தெரிகிற முகமும் இந்த வீதிக்கு மறக்க முடியாதது போல் பார்வைகளோடு ஒன்றிவிட்டது. அந்த முகம் அனுதாபத்தை வாங்கிக் கொள்ளுமே அல்லாது, எரிச்சலூட்டுகிற விதமாயும் இராது.

இப்போதைய இந்த முகம் கூட, அன்ன பூரணியிடமிருந்து அனுதாபத்தையே பெற் றது. ஓர் ஒற்றைச் சொல்லினைக்கூட உதிர்த்திராத போதும், அவள் தன்னுடைய துக்க நிவர்த்தி வேண்டி, சுவாமிகளின் கருணைமிகு பார்வையில் படவும், தரிச னம் பண்ணிக் கொள்ளவும் இசைவாள் என்கிற நம்பிக்கையோடு அன்னபூரணி இருந்தாள்.

'என்னோட துக்கம் எதுனாலியும் நிவர்த்தியாயிற முடியாது!' என்கிற பார் வையில் பார்த்தாள் ரெங்கம்மா.

எனினும் அன்னபூரணி விட்டு விடுவ தாக இல்லை.

''இதுல என்ன கஷ்டம்ன்னு நினைக் கிறே ரெங்கம்மா? வேணாம். மனசுல நம்பிக்கையே வேணாம். இத்தனை தூரம் சொல்றேன்ல்ல, அதுக்காக வாச்சும், அன்ன பூரணி அத்தை சொல்றதுக்காகவாச்சும் போய்ட்டு வருவம்ன்னு முடிவு பண்ணு ரெங்கம்மா.''

அன்னபூர்ணி இந்தத் தெருவுக்கே அத்தைதான். அதனால் அவள் தன்னைக் குறிப்பிடுகிற போது கூட வெறுமனே தனது பெயரை மட்டும் சொல்லிக் கொண் டிராமல், 'அத்தை' என்கிற வாலையும் ஒட்ட வைத்துக் கொண்டே சொல்லிக் கொள்வாள்.

ரெங்கம்மாவின் தலை மெதுவாக, ஒப்புதலுடன் அசைந்தது.

''சரி அத்தை, போய்ட்டுத்தான் வருவமே'' என்றாள் ரெங்கம்மா அரைமனதாக.

நீளமான கியூ நிதானமாகவே நகர்ந்து கொண்டிருந்தது. போய்த் தரிசனம் பண்ணி விட்டுத் திரும்பியிருந்தவர்களின் முகங்களில் அலாதியான ஜ்வலிப்பு! நிறைவும், சந்தோஷமும் போட்டி போட்டு மின்னுகின்ற ஜ்வலிப்பு!

அபூர்வமான அமைதியை வழங்கிக் கொண்டிருந்தது போன்று தெரிந்தது ரெங்கம்மாவிற்கு.

அடுத்து அவளின் முறைதான்.

அந்தச் சின்னச் சூரியனைத் தரிசிக்கிற பரவசமுடன் அருகாகப் போய் நின்றாள்.

சுவாமிகளின் பார்வை ரெங்கம்மாவை வருடிய அதே கணத்தில், சட்டென்று அவரிடம் மின்னலாய் ஓர் அதிர்வு. மறுகணமே அதனை மறைத்துக் கொண்டு இயல்பு நிலை. அருட் சொரியலாய் ஒரு பிரமாதப் புன்னகை! நிறையப் பேசத் துடித்த இதழ்கள் அடங்கிக் கொண்டாற் போல ஓர் உணர்வும் கூட.

முதலில் ரெங்கம்மாவும்கூட இயல்பாகவே சுவாமியை ஏறிட்டாள். அருட்பார்வையை ஏற்றாள். அப்புறம் அவரின் அந்த விழிகளை நேருக்கு நேராய்ப் பார்க்கையில் தான், எதிர் பாராத திடுக்கிடு இதயப் பரப்பினுள் உற்பத்தியாயிற்று.



அவரின் ஜடா முடி, தாடி, அப்புறம் இந்தத் தூய்மையான காவியுடைகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, ஒரு பத்து வயதைக் குறைத்து, சாதாரண உடைக்குக் கொணர்ந்து பார்க்கையில்,

பார்க்கையில்.......,

அந்த இருபது வயது ரமணன்தான் சிரித்த முகத்துடனும், ரௌத்கார பாவமுடனும், கொதிநிலை மனோபாவமுடனும், பொங்குகிற பாலில் நீர்த்துளிகள் விழுந்து அடங்கிக் கொண்ட தோற்றமுடனும் தென்பட்டான்.

ரமணனா?

ரமணனேதானா?

என்னோட ரமணனே தானா?

'ஆமாம், ஆமாம், ஆமாம்' என்கிற அழுத்தமான பதிலுக்கு எந்த மூலையிலிருந்தும் பதில் இல்லை.

இந்த சுவாமி ரமணானந்தா என்னோட ரமணன் தானா?

'தக்'கென்று சந்தோஷ அலைகளின் குபீர் ஆர்ப்பரிப்பு!

அத்தனை காலத் தேடல் பயனுடையதாகி, ஒரு புதையலே கிடைத்து விட்டாற் போன்ற பேரானந்தம்.

இப்போது பேசமுடியுமா?

உறவு கொண்டாட முடியுமா?

இதோ பிரசாதம் வழங்கப் போகிறார். வழங்கினால் விடை தந்த மாதிரிதான். அ ப் பு ற ம் நிற்கவே அனுமதியில்லை. பிறகு பேசவோ, உறவு கூறவோ இயலுமா?

''துளசி வனத்திலிருந்து காற்றிலே பறந்து வந்த துளசி விதைகள், குப்பை மேட்டில் போய் விழுந்தாலும், முளைக்கும். வளரும். துளசிதளத்தின் தூய்மையோடும், வீர்யத்தோடும் இருக்கும். மாலை கட்ற இடத்துக்கு வந்துட்டா, பகவானுக்கு மாலையாகவும் கட்டப் பெறும். சார்த்தப் பெறும். இதுதான் துளசி தளத்தோட மகிமை.''

சொல்லிக் கொண்டே துளசி தளங்களை வழங்கிவிட்டுப் புன்னகையைப் படரவிட்டார்.

இனி நிற்க முடியாது.

ந க ர் ந் து விடவேண்டியது தான்.

துளசி தளங்களை விழியொற்றிச் சேவித்துக் கொண்டு, விழி நீர் பெருக நகரலானாள் ரெங்கம்மா.

''விரதுக்கு நிறைய யோசிச்சியே ரெங்கம்மா. இங்க வந்து தரிசனம் பண்ணின பிறகு மனசு நிறைஞ்சு போச்சுல்ல! உன்னோட கவலையிலே பாதியாச்சும் போயிருக்கணுமே?''

அன்னபூரணி கேட்டாள் சந்தோஷிக்கிற குரலில்.

''பாதி என்ன முழுக்கவலையுமே போயிடுச்சு. இப்ப நான் ரொம்பச் சந்தோஷமாவே திரும்பி வர்றேன் அன்னபூரணி அத்தை'' என்ற ரெங்கத்தின் குரல் முழுவதும் சந்தோஷத்துள்ளல்கள்.

''பார்த்தயில்ல! நான் சொன்னேன்ல! சுவாமியோட மகிமையே மகிமை! இத்தனை சின்னவயசிலே எத்தனை தேஜஸ் பாரு! பிரம்மச்சர்ய தேஜஸ் ஒளியாம் ரெங்கம்மா அது! ஒண்ணொண்ணு லோ.... லோன்னு அலைஞ்சு சீரழியுதுக பெரிய வயசுல கூட! ஆனா.... நம்ம சுவாமிகள் இளம் வயசுல கூட, மனசை ஒடுக்கி, தபஸ் இருந்து, உலகப் பாவங்கள் மன்னிக்கப் படணும்கிறதுக்காக... தன்னையே ஒடுக்கிக்கிறதுன்னா, லேசுப்பட்ட காரியமா?''

குறுவாளைக் கூராய்த் தீட்டி நட்ட நடு நெஞ்சினிலே 'விசு'க் கென்று பாய்ச்சினால் எப்படியிருக்கும்?

ரெங்கம்மா அப்படி உணர்ந்தாள்.

ஆனாலும் சமாளித்துச் சிரித்தாள்.

ரமணனைப் பார்த்த சந்தோஷமும் நிறைவும், அன்னபூரணி அத்தையின் தாக்குதலால் குற்றுயிரும் குலையுயிருமாய்ச் சிதைந்தன.

அ தொ ன் று ம் வேண்டுமென்றே தொடுக்கப் பெற்ற தாக்குதல் இல்லை. வெறும் தற்செயல். சுவாமிகளின் பிரம்மச்சர்யப் பெருமையைச் சொல்வதற்காக, 'கிழடுகளின் அலைச்சலையும், மேய்தலையும்' ஒப்பிட்டுச் சொல்லப்பெற்றது.

அவ்வளவுதான்.

ஆனால்.... அதுவே..., ரெங்கம்மாவைத் தாக்கி விட்ட பெரிய ஆயுதமாய் இப்போது நின்றது.

ஊழிக்காலத்தின் புயல் எப்படியிருக்கும்?

இதோ..., இந்த இருபது வயது ரமணனைப் போலத்தான் இருக்க வேண்டும்.

அத்தனை ரௌத்ரம்! அத்தனை ஆவேசம்!

''நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா அம்மா?''

கூராகப் பார்வையை வீசி, நேராய் வகிர்கிறது போன்ற கேள்வி.

மௌனமாய் நின்றாள் ரெங்கம்மா.

பின்னே, பதில் சொல்கிற மாதிரியான கேள்வியையா கேட்கிறான்? பதில் சொல்கிற மாதிரியான செயலா அவளுடையதும்?

''நீ இப்படி மௌனமாய் இருந்தேன்னா அதுக்கு என்ன அர்த்தம்? உண்மைதான்கிறியா, இல்லேன்னு மறுக்கிறியா?''

மறுபடியும் மௌனம்.

மறுப்பதற்குத் தென்பற்ற பலவீன மௌனம்.

''ஏன் இப்படிச் செய்தே?''

இதற்குப் பெற்ற மகனிடம் என்ன பதிலைக் கூற முடியும்? சொல்ல முடிகிற காரணமா அது?

நாற்பது வயதாகியும் அடங்கிப் போகாத உணர்வுகளை ஜீரணம் பண்ண முடியாமல், விதவையான தான், வழுக்கிட்டேன்னு சொல்ல முடியுமா?

''நாலுபேர் என்னைச் சுட்டிப் பேசுற மாதிரி மரியாதை கெட்டதனமா நடந்து... இப்ப என்னைத் தலை குனிய வச்சிட்டியே. உன்னை அம்மான்னு கூப்பிடவே எனக்கு முடியலே. எதுவுமே தப்புன்னு தெரிஞ்சப்புறம், உணர்ந்தப்புறம் வல்லமையை

பாலம்

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி, தோல்விக்கோ இதர பிரச்னைகளுக்கோ கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்காது.)

கோ-கோ பயிரிட.....

என் விஜயவாடா நண்பர் ஒருவர் தமது நிலத்தில் கோ-கோ பயிரிட விரும்பு கிறார். கோ-கோ விதைகள் தமிழ்நாட்டில் எங்கு கிடைக்கும், எத்தனை கிலோ வழங்குவார்கள், ஏதாவது பிரச்னைகள் உண்டா? என்ற தகவல்களைத் தெரிவித் தால் - நான் என் நண்பருக்குத் தெரியப் படுத்த உதவியாக இருக்கும். மொழிகளைக் கடந்த நட்பு மேலும் வளர உதவியாக இருக்கும்.

- சி. சுதாகரன்
211, அரிஅரன் பஜார் தெரு
பொன்னேரி - 601 204.

அன்னையின் அழகிய படம்

என்னிடம் 8" X 10" அளவுள்ள தங்க வர்ணப் பின்னணியுடன் கூடிய, அன்னை

வேளாங்கன்னி மாதாவின் அழகான படம் உள்ளது. விருப்பமுள்ளோர் என்னிடம் தொடர்பு கொண்டால், அவர்கள் செலவில் அனுப்புகிறேன்.

- பாலு
யூனியன் வங்கி
வடகரை - 627 812
திருநெல்வேலி மாவட்டம்.

எங்கே இருக்கிறாய் நண்பா?

1964-67 ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்டம் பாபநாசம் அரசு பள்ளியில் என்னுடன் ஒரே பெஞ்சில் உட்கார்ந்து பயின்ற நண்பர் சீத்தாராமன் என்பவரை 25 ஆண்டுகள் ஆகியும் மறக்க முடியவில்லை. நாங்கள் இருவரும் கல்கியின் பாலம் மூலம் தொடர்பு கொள்ள இறைவன் அருள் புரிய வேண்டும்.

- அ. கந்தவேல்
திருவேடகம் மேற்கு
மதுரை மாவட்டம்
- 624 217

ரெடிமேட் ஆவல்!

B.Sc., P.G.D.C.A. படித்துள்ள எனக்கு, ரெடிமேட் டிரஸ் டிஸைன் செய்வதில் மிகவும் ஈடுபாடு. ஆனால் கிராமத்தில் எனக்கு அதற்கேற்ற சூழல் இல்லை. எனக்குக் கைகொடுப்போரை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

- நூபா. E. B. சிவா,
கே. பரமத்தி - 639 111
கரூர் தாலுக்கா
திருச்சி மாவட்டம்.



அறிவுரைக்கு எழுதுங்கள்

Food & Nutritious Course ல் தேறியிருக்கிறேன். உணவின் மூலம் பருமனைக் குறைக்க விரும்புவோர், பல நோய்களைக் கட்டுப்படுத்த விரும்புவோர், மற்றும் உணவில் போஷாக்கு பற்றிய அறிவுரைக்கும் எழுதலாம். மனோ தத்துவத்தில் degreeயும், counselling ல் டிப்ளமாவும் செய்துள்ளேன். பிரச்னைகளுக்கும் அறிவுரைக்கும் வாசகர்கள் எழுதலாம்.

- ரேவதி. ஜி.
C-7, ஹரிநகர் கிளாக் டவர்,
புதுடில்லி - 110 064

மனசுல இருத்தித் தடுக்கணும்; நிறுத்தணும்.''

'தெரியும்டா. ஆனா... முடியலியே?'

''முடியாதுன்னு நினைக்கிறியா? முடியணும். முடியும். சேலஞ்! இப்ப உன் வயது நாற்பது. என் வயசு இருபது. இந்த இருபதுல சாதனை பண்றேன் பார்க்கிறியா? மனசை அடக்கி, ஒடுக்கி ஞானியாயிடுறேன் பார்க்கிறியா? ஒரு சபலபுத்திக் காரியோட மகன், சபலங்களை வெல்வான், பார்க்கிறியா? நீ செஞ்ச தப்புக்கு அவன் தண்டனை ஏத்துக்குவான் பார்க்கிறியா? உன்னைக் காறி உமிழ்ந்தவங்களே, உன் மகனைத் தொட்டு வணங்குறாப்ல ஆக்கிடறேன் பார்க்கிறியா?''

''வேணாம்.... உன்னாலே அதுமாதிரி எல்லாம் முடியாது. இருபது வயசை வெல்றதா? வேணாம்டா விஷப்பரீட்சை.''

''பரீட்சை எழுதிட்டு வந்தப்புறம் சொல்லு, முடிஞ்சுதா, பாஸ் பண்ணினேனா..., இல்லியான்னு.''

''நில்லுடா....''

நிற்கவில்லை அவன்.

இன்று பார்க்கிறாள்! வெற்றி பெற்ற மகனைப் பார்க்கிறாள். தன் நிமித்தம், வாழ வேண்டிய வயதில் ஒடுக்கிக் கொண்ட மகனைப் பார்க்கிறாள்.

அன்றைக்கே மனதினுள் காவியும் உடுத்துக் கொண்டாள். வருவான் வருவான் என்று காத்திருந்து களைத்து, ஊர் ஊராய் அலைந்து... கடைசியில் இங்கேயே நிரந்தரமாகத் தங்கி.... இப்போது காண முடிந்திருக்கிறது.

''என்ன ரெங்கம்மா இது? திடீர்னு காவிப் புடைவை கட்ட ஆரம்பிச்சிட்டே...?''

வியப்போடு கேட்ட அன்னபூரணிக்கு, மௌனமான புன்னகையே பதிலாயிற்று.

''சுவாமியின் மகிமையே ஜாஸ்திதான். அவங்கவங்க மனசைத் தான் மாற்றிக் கொண்டாங்கன்னா, நீ மனசோட சேர்த்து டிரஸ்ஸையுமில்லா மாற்றிக் கொண்டிருக்கே. எப்படியோ, சுவாமி தரிசனம் உன் துக்கத்தைப் போக்கி, போற வழிக்குப் புண்ணியம் தேடிக்கோன்னு பண்ணிடுச்சே, அது போறும்'' என்றாள் அன்னபூரணி.

இப்போதும் மௌனப் புன்னகையே பதில்.

பொன்விழா போட்டிக் கவிதை



ஞானம் பிறந்தது

பாலைப் பருகிடும்
  பால வயதினில்
    பாவம் அறிய வில்லை - ஒரு
பச்சைக் குழந்தையாய்ப்
  பாடம் படிக்கையில்
    பாதை தவற வில்லை.

வாலைப் பருவத்து
  வண்ணக் கனவினில்
    வாழ்க்கை புரிய வில்லை - தினம்
வாடும் நிலையினில்
  வாழ்வு தொடர்கையில்
    வாதம் குறைய வில்லை.


காலம் கடந்துநல்
  ஞானம் பிறக்கையில்
    கண்கள் திறக்கவில்லை - இந்தக்
கண்கள் மலர்ந்தபின்
  காணும் பொழுதினிற்
    காட்சி புரிய வில்லை.

ஞாலந் தனில் மன
  ஆசை நரைத்ததும்
    ஞானம் பிறந்த தம்மா! - இந்த
ஞானம் பிறந்தபின்
  காலம் முதிர்ந்திட
    வாழ்வு புரியு தம்மா!

- 'இளவல்' ஹரிஹரன்

பொன்விழா
போட்டிக் கவிதை

ஞாபகங்கள்



எல்லாம் நீ மறந்திருப்பாய்....
ஒருநாள்
உன் தலையிலிருந்த
ரோஜாவைப் பிடுங்கி
தெருவில் எறிந்தேன்...
நீ அழுது புரண்டாய்
தெரு ரெண்டுபட்டது
உன் அம்மாவும் என் அம்மாவும்
அடித்துக் கொண்டார்கள்.

எல்லாம் நீ மறந்திருப்பாய்...

பிறகொரு நாள்
தோட்டத்தில் மலர்ந்த
ரோஜாவை எடுத்து
உன் கூந்தலில் சூட்டினேன்
நீ அழவுமில்லை, புரளவுமில்லை
ஆனாலும் கூட
உன் அப்பாவும்
என் அப்பாவும்
அடித்துக் கொண்டார்கள்
தெரு ரெண்டுபட்டது.

எல்லாம் நீ மறந்திருப்பாய்....

காலம் தலைகீழாய்த்
தடம் புரண்டது...
நான் மனைவிக்காக
மல்லிகை வாங்கக் கற்றுக் கொண்டேன்
உனக்காக உன் கணவன்
''ரோஜா'' வாங்கும் அதே கடையில்!...

எல்லாம் நாம் மறந்து விட்டோம்....

நேற்று...
என் மகள் அழுது புரண்டாள்
உன் மகன்
ரோஜாவைப் பிடுங்கி
தெருவில் வீசியதற்காக.
என் மனைவியும்
உன் கணவனும்
அடித்துக் கொண்டார்கள்
தெரு ரெண்டு பட்டது.
நானும் நீயும்
விட்டேத்தியாய்
வேடிக்கை மட்டும் பார்த்தோம்.
நாம் என்ன எல்லாமுமா
மறந்து விட்டோம்?

- ராஜாராம்
(அறிமுக எழுத்தாளர்)



சந்தேகக் கோடு

''உம் பேர் என்னம்மா?'' அம்மா கேட்டாள்.

''சுகந்தி.''

உதடு பிரிந்து பளீரிட்ட பற்களும், இனிமையான குரலும்... நான் மனப்பூர்வமாகச் சம்மதம் சொல்லிவிட்டேன். அப்பா, அம்மாவிற்கும் சுகந்தியைப் பிடித்து விட்டது.

அப்பொழுதே நாங்கள் சம்மதம் தெரிவித்து, பேசி முடிவு செய்து, சென்ற வாரம் நிச்சயதார்த்தமும் நடந்துவிட்டது. அடுத்த மாதம் பதினெட்டாம் தேதி திருமணம்.

சுகந்தியைப் பார்த்துவிட்டு வந்ததிலிருந்து நான் அவள் நினைவிலேயே லயித்துக் கொண்டிருந்தேன். அவளைப் பற்றிய கனவுகளும், எதிர்பார்ப்புகளும் மனத்துக்குள் நிறைந்திருக்க, திருமண தினத்தை நோக்கி நான் ஆவலாய்க் காத்திருக்கும் இந்த நேரத்தில் இப்படியொரு கடிதம் தலையில் பாராங்கல்லாய் வந்து இறங்கியிருந்தது. என்னுடைய சந்தோஷமெல்லாம் இதைப் படித்த விநாடியே காணாமல் போய்விட்டது.

என்ன செய்வதென்று தெரியவில்லை எனக்கு. கல் விழுந்த குளமாய் மனத்துக்குள் குழப்ப அலைகள். காரணம் இன்று காலையில் என் பெயருக்கு வந்திருந்த மொட்டைக் கடிதம்.

அன்புள்ள நண்பர் கௌதமிற்கு,

நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகும் சுகந்தியைப் பற்றிய ஒரு சுவாரஸ்யமான உண்மையைச் சொல்லவே இந்தக்கடிதம். சுகந்தியும், அவளுடன் பணிபுரியும் சுரேஷும் தீவிரமாகக் காதலித்துக் கொண்டிருந்தார்கள். இருவரின் தொடர்பும் எல்லை மீறிப் போனது. அதன்பின் சுரேஷ் கைகழுவிவிட்டான். இப்பொழுது பாவம் நீங்கள் மாட்டிக் கொண்டீர்கள். வழுக்கி விழுந்த பெண்களுக்கு இது போன்று மறுவாழ்வு கிடைப்பது அவசியம். உங்களின் திருமணத்திற்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
நலன் விரும்பி.

கடிதமும், 'கவரி'ன் மேல் இருந்த என் முகவரியும் 'டைப்' செய்யப்பட்டிருந்தன. தபால் முத்திரை, கடிதம் உள்ளூரிலேயே 'போஸ்ட்' செய்யப்பட்டிருந்ததைத் தெரிவித்தது.

ஒரு மாதத்திற்கு முன்தான் நான், அப்பா, அம்மா மூவரும் போய்ச் சுகந்தியைப் பெண் பார்த்து வந்தோம். டிபன் தட்டைக் கையில் ஏந்தியவாறு நடந்துவந்த அவளின் அழகு, முதல் பார்வையிலேயே என்னை வீழ்த்திவிட்டது.

சிவப்பு நிறம், செதுக்கி வைத்தாற் போன்ற உடற்கட்டு, அளவான உயரம். டிபனை நீட்டும் பொழுது என்னைப் பார்த்த அவளின் முகத்தை நன்றாகப் பார்த்தேன். சிரிக்கின்ற கண்களும், கூர்மையான நாசியும், செழுமையான கன்னமும், ரோஜா இதழ்களைச் சேர்த்து வைத்தாற் போல உதடும்.....

யார் எழுதியது? இதில் இருக்கும் விஷயம் உண்மையாக இருக்குமா?

அலுவலகத்தில் இருக்க முடியாமல் அரைநாள் விடுமுறை சொல்லிவிட்டு மதியம் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

''ஏம்ப்பா கௌதம் சீக்கிரமாவே வந்துட்ட?'' அம்மா கேட்டாள்.

''மனசு சரியில்லேம்மா'' என உண்மையைச் சொல்லாமல் ''உடம்பு சரியில்லேம்மா. அதான் வந்துட்டேன்'' என்றேன்.

''என்னாச்சி?''

''லேசாத் தலைவலி. என் 'ரூம்'ல போய்ப் படுத்துக்கறேன். தூங்கினாச் சரியாயிடும்!'' ஆனால் நான் தூங்காமல் யோசித்தேன்.

'சுகந்தி வேறு ஒருவனைக் காதலித்தாளா....? அதுவும் எல்லை மீறிய காதலா....? அதை மறைத்து விட்டு என்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்திருக்கிறாளா?''

உதாதிபன்

'அவள் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே! கள்ளங் கபடம் இல்லாமல்.....'

'முகத்தில் கள்ளங் கபடம் இல்லாமல் இருக்கலாம். உள்ளத்தில்....?'

இரண்டுவிதமாக எனக்குள் தர்க்கித்துக் கொண்டேன். உண்மையிலேயே தலைவலி வரும்போல இருந்தது.

இந்தக் குழப்பத்திற்கு என்ன முடிவு? உள்ளுக்குள்ளேயே போட்டு மருகுவதை விட இதைப் பற்றி நேரடியாகச் சுகந்தி யிடம் கேட்டு விடுவதென முடிவு செய் தேன்.

மாலை நான்கு மணிக்குமேல் எழுந்து முகம் கழுவி உடைமாற்றிக் கொண்டு, சுகந்தி பணிபுரியும் அலுவலகத்தை அடைந்து, அவளின் வருகைக்காக வெளியே காத்திருந்தேன்.

சிறிது நேரத்தில் தோளில் 'லெதர்-பேக்'குடன் வந்தாள், என்னைப் பார்த்ததும் ஆச்சரியமாகிப் புன்னகை செய்தாள்.

''உங்கிட்ட கொஞ்சம் தனியாப் பேசணும்!'' என்றேன். இருவரும் எதிர்த்தாற் போல் இருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

சுகந்தி என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''இன்னைக்குக் காலையில எனக்கு ஒரு 'லெட்டர்' வந்தது. யார் அனுப்பி



னாங்க, என்னன்னு தெரியல!''

பாக்கெட்டில் இருந்து எடுத்து நீட்டினேன்.

அவள் அதை வாங்கிப் படித்தாள். நான் எதிர்பார்த்தது போல, அவளுடைய முகத்தில் அதிர்ச்சியோ, சலனமோ இல்லை. மெலிதாய்ச் சிரித்தாள்.

''எங்க ஆபீஸ்ல சுரேஷ்-ன்னு ஒருத்தன் வேலை செய்துக்கிட்டிருக்கறது உண்மை. என்மேல அவனுக்கு ஒருவிதக் காதலோ, ஈடுபாடோ.... இருக்கறதும் உண்மை. மத்ததெல்லாம் பொய். எனக்கு அவனைக் கண்டாலே பிடிக்காது. ஆனாலும் அடிக்கடி வந்து தொந்தரவு பண்ணிக்கிட்டேயிருப்பான். நான் எவ்வளவு சொல்லியும் அவன் மாறல. ஒருநாள் அத்துமீறி நடந்துக்க முயற்சி பண்ணினான். அவனை அறைஞ்சிட்டேன். 'என்னை அவமானப் படுத்திட்டயில்லே. இதுக்கு நீ அனுபவிப்பே. வேற யாரை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு பார்க்கறேன்'னு சவால் விட்டான். கல்யாணத்தை நிறுத்தி, பழி வாங்கறதுக்காக அந்த சுரேஷ் பண்ணின வேலையாத்தானிருக்கும் இது.''

''லீவ் இட்! இந்த 'லெட்டரை' அப்பவே கிழிச்சுப் போட்டிருப்பேன். இருந்தாலும் உங்கிட்டயும் கேட்டுட்டா நமக்குள்ள எந்தவித ஒளிவு மறைவும் இருக்காதுங்கற எண்ணத்திலதான் வந்தேன். மத்தபடி என்னைத் தப்பா நினைச்சுக்காதே!'' என்றேன்.

''சேச்சே... நீங்க நேரடியா வந்து கேட்டதுக்கு நான் சந்தோஷப்படறேன். எந்த விஷயத்தையும் மனசுக்குள்ளேயே போட்டுப் புழுங்கறதைவிட வெளிப்படையாப் பேசிடறதுதான் நல்லது, எனக்கும் அதுதான் பிடிக்கும்.''

காப்பி வந்தது, குடித்தோம்.

திரும்பிவரும் பொழுது என் குழப்பம் தெளிந்து விட்டாற்போல இருந்தது. என்றாலும் இரவு படுக்கையில் சாய்ந்து தூங்கும் முன் யோசித்த பொழுது வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

'சுகந்தி சொன்னது உண்மையாக இருக்குமா? நேரடியாகக் கேட்டால் எந்தப் பெண்தான் தன் கடந்த காலக் களங்கத்தை ஒத்துக் கொள்வாள்? கடிதத்தைப் படித்தும் எவ்விதச் சலனமுமில்லாமல் சிரித்தாளே... வெளிப்படையான நடிப்பாயிருக்குமோ....?'

மீண்டும் சஞ்சலங்கள், சந்தேகங்கள்... மனித மனம்!

மறுநாள்,

அலுவலகத்தில் என் கவலையை என் முகத்தில் படித்துவிட்டு, ''கௌதம்....

''**எ**ங்கள் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் படித்துப் பெற்ற பி.எட். பட்டத்தைக் கேரளாவில் அங்கீகரிக்க மறுத்து விட்டார்கள். எங்கள் பல்கலைக்கழகத்தில் தரப் போகும் எல்லாப் பட்டங்களுக்கும் இதுதான் கதி என்றால், எங்கள் பல்கலைக் கழகத்தின் கீழ்வரும் நாற்பத்தெட்டுக் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரின் எதிர்காலமும் என்னாகுமோ என்று இப்போதே அடிவயிற்றைக் கலக்குகிறது, சார்!'' என்று நெல்லை நகருக்குள் நாம் நுழைந்தவுடனேயே சம்பந்தப்பட்ட மாணவ, மாணவியர் வந்து முறையிட்ட போது, நமக்கே அதிர்ச்சியாக இருந்தது.

''உங்கள் பல்கலைக் கழகத்தில் கொடுக்கப்பட்ட பி.எட். பட்டத்தைக் கேரளாவில் ஏன் அங்கீகரிக்க மறுத்தார்கள்?''

''காரணம், எங்கள் பல்கலைக் கழகத்தைப் பல்கலைக் கழக மானியக் குழு இன்னமும் அங்கீகரிக்கவில்லை என்பதுதான்!''

கடந்த செப்டெம்பர் 1990-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகத்தை இன்னமும் ஏன் பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகரிக்கவில்லை? அதற்குக் காரணம் இருக்கிறது!

ஒரு பல்கலைக் கழகம் புதிதாகத் துவங்கப்படுகிறது என்றால், அதற்கான கட்டட வசதி, நூலகம், ஆய்வுக் கூடங்கள், ஹாஸ்டல் வசதி மற்றும் விளையாட்டு மைதானம் போன்ற அடிப்படை வசதிகளெல்லாம் கட்டாயம் இருக்க வேண்டும். அவையும் ஏனோதானோவென்று இல்லாமல், சுமார் மூன்று கோடி ரூபாய் மதிப்புக்காவது, இருக்க வேண்டும். கூடவே, அப்பல்கலைக் கழகத்தில் பத்துத் துறைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றில் நூறு ஆசிரியர்களாவது நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் பல்கலைக் கழக மானியக் குழு அதை அங்கீகரிக்கும்.

இவையெல்லாம் மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்துக்குச் சுத்தமாகக் கிடையாது. கம்ப்யூட்டரில் முதுகலை அறிவியல் பட்டப் படிப்பெல்லாம் ஆரம்பித்ததே தவிர, கம்ப்யூட்டரே கிடையாது. ஆசிரியர்களும் போதுமான அளவுக்கு நியமிக்கப்படவில்லை.

''எம். ஏ. ஆங்கில இலக்கியத்தில் ஒரேயொரு மாணவருக்குச் சொல்லிக் கொடுக்க நான்கு ஆசிரியர்கள்; எம். ஏ. வரலாறு படிக்கும் ஒன்பது மாணவர்களுக்கு நான்கு ஆசிரியர்கள் என்றாலும் மற்ற அறிவியல் துறைகளில் போதிக்கப் போதுமான ஆசிரியர்கள் இல்லை. மொத்த ஆசிரியர்களின்

எண்ணிக்கையே பதி னான்குதான். ஆனால், ஆசிரியரல்லாத நிர்வாக ஊழியர்களின் எண்ணிக் கையோ முப்பத்தெட்டு! இந்த நிலையில் நாங்கள் என்ன படித்திருப்போம் என்பதைச் சுலபமாகப் புரிந்து கொள்ளலாம்!'' என்றார்கள் மாணவர்கள்.

''இத்தனை எதற்கு சார்? பல்கலைக் கழகத்துக் கென்று ஒரு கட்டடம் கூட இல்லையே. இப்போதைக் குத் தாலூகா ஆபீஸ் கட்ட டத்தில்தான் பல்கலைக் கழக ஆபீஸ் இயங்கிக் கொண்டிருக்கிறது. மற்ற படி வகுப்பறைகள், திரு நெல்வேலி - பாளையங்



☛ இங்குதான் இயங்குகிறது மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்...

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் கின்னஸ்ஸில் இடம் பெறுமா?

கோட்டையில் எங்கெங்கு காலியான கட்டடங்கள் இருக்கின்றனவோ அங்கெல் லாம் நடக்கின்றன. இதன் காரணமாகத் தான் எம்.எஸ்ஸி. கம்ப்யூட்டர் படிப்புக் காக வாங்கப்பட்ட மிக மிகச் சாதாரண - ஆரம்ப நிலைக் கம்ப்யூட்டர்களைக் கூட நாங்கள் பல மாதங்கள் வரை பயன்படுத்த முடியாமலே போனது. இதைவிடக் கேவலம், எங்கள் முதல் துணைவேந்தர் ஓய்வு பெற்று ஆறு மாதங்களுக்கு மேலாகியும், அடுத்த துணைவேந்தரைக் கூட அரசு இன்னும் நியமிக்காததுதான்!''

இவையெல்லாம் தெரியாமலா, தமிழக அரசு ஒரு பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தது? நெல்லைக்கு அருகிலுள்ள அபிஷேகப்பட்டியில் பல்கலைக் கழகத்துக் கான நிலமும் ஆரம்ப வேலைகளுக்காக 2.87 கோடி ரூபாயும் அரசு ஒதுக்கத்தான் செய்தது.

ஆனால், அந்த நிலத்தைப் பெறு வதில் கல்வித் துறைக்கும் கால்நடைப் பராமரிப்புத் துறைக்கும் தகராறு. இரண்டு துறைகளுமே தத்தமது நிலைகளில் உறுதி காட்டுவதால், பாதிக்கப்பட்டிருப்பவர்கள் பல்கலைக் கழக மாணவ, மாணவியர்!

இன்னொரு விஷயமும் பரவலாகப் பேசப்படுகிறது. 'பல்கலைக் கழகத்தை ஆரம்பித்தது, அப்போதைய முதல்வர் கருணாநிதி என்பதால், இந்தச் சிக்கலைத் தீர்ப்பதில் இன்றைய முதல்வருக்கு ஆர்வம் இல்லை' என்பதுதான் அது.

இதே நிலை நீடித்தால், இந்தப் பல்கலைக் கழகத்தின் கீழ் பயிலும் நாற்பத் தெட்டு கல்லூரி மாணவ, மாணவியரின் பட்டங்கள், மற்ற பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்படாத நிலை ஏற்பட்டு, 'மனோன்மணீயம் சுந்தரனார் பெயரில் தமிழக அரசே ஒரு போலி பல்கலைக் கழகத்தை நடத்துகிறது' என்று கின்னஸில் இடம்பெறும் வாய்ப்பிருக்கிறது.

- பிரின்ஸ்

ஸ்வரம் பாடும் குழந்தை!



பாளையங்கோட்டையிலுள்ள மூன்றரை வயது அனுஷா, அழகாக ஸ்வரம் பாடுகிறாள். வயலினிலோ, ஹார்மோனியத்திலோ ராகத்தை வாசித்தால், அதன் ஸ்வரத்தைப் பிசகாமல் கூடவே ஒப்பிக்கிறாள். இதை இரண்டு வயதிலிருந்தே செய்து வருகிறாளாம் அனுஷா. எப்படி?

''இவளுடைய பாட்டி - என் அம்மா, இசை வகுப்பு நடத்துகிறார். அதைத் தொட்டில் குழந்தையாக இருக்கும்போதே கேட்டுக் கேட்டுத்தான் இப்படி ஸ்வரம் பாட ஆரம்பித்திருக்கிறாள் என்று கருதுகிறோம். இவளுடைய புத்திசாலித்தனம் எங்களுக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அளித்தாலும் இப்போது நாங்கள் ஏதும் இவளுக்கு இசை வகுப்புகள் நடத்துவதில்லை. அது இவளுடைய வயதுக்கு மிகவும் அதிகப்படியான சுமை என்று, இவளுடைய வளர்ச்சிக்காகக் காத்திருக்கிறோம்'' என்கிறார் அனுஷாவின் தாய் ரெஜினா.

'என்



ப்ரியமானவளே...'

ஜெயலலிதா, தமது வீட்டு வாசலுக்கு வரும் போது கூட, அவர் வீட்டு

ஏன்டா ஒரு மாதிரியாயிருக்கே. எனி ப்ராப்ளம்?'' என்று கேட்டான் அர்விந்த். நெருங்கிய நண்பன்.

'இவனிடம் சொல்லலாமா... சொன்னால்தான் மனத்தில் உள்ள அழுத்தம் குறையும்.'

''ஆமா அர்விந்த் ஒரு பிரச்னை'' என அவனைத் தனியே அழைத்துப் போய் கடிதத்தைக் காட்டிச் சொன்னேன். நேற்று மாலை சுகந்தியைச் சந்தித்ததையும் சொன்னேன்.

''அவங்கதான் இது பொய்னு சொல்லிட்டாங்களே, அப்புறம் ஏன் வீணா 'வொர்ரி' பண்ணிக்கறே?'' என்றான் அர்விந்த்.

''உங்கிட்ட வெளிப்படையாச் சொல்றேன் அர்விந்த். சுகந்தி பொய் சொல்லியிருக்கலாமோன்னு சந்தேகப்படறேன். சம்பந்தப்பட்ட சுரேஷையே பார்த்து இதைப் பற்றிக் கேட்டுடலாமான்னு யோசிக்கறேன்.''

''நோ... நோ.... உண்மையோ, பொய்யோ அவன் இந்த 'லெட்டர்'ல இருக்கிறதைத்தான் சொல்வான்.''

''அப்ப வேற யார் மூலமாவது உண்மையைத் தெரிஞ்சுக்கணும்.''

''உன்னோட 'வுட்பி' எங்க வேலை பார்க்கறாங்க?''

சொன்னேன்.

''அப்படியா... அங்கதான் என்னோட ப்ரண்ட் நாராயணன்னு ஒருத்தன் இருக்கான். அவனை விசாரிச்சிடலாம் விடு!''

''எப்ப?'' என்றேன்.

''இன்னிக்குச் சாயந்திரமே!''

மாலை ஆறுமணிக்கு நான், அர்விந்த், நாராயணன் மூவரும் அர்விந்த்தின் அறையில். நாங்கள் விஷயத்தைச் சொன்னதும் ''சுகந்தியா... அவங்க ரொம்ப நல்ல 'டைப்'பாச்சே. சுரேஷ்தான் அவங்ககிட்ட வீணா வம்பிழுத்துக்கிட்டிருப்பான். ஒரு நாள் அவன் ஏடாகூடமா நடக்கப் போய் அவங்க அவனை அறைஞ்சிட்டாங்க. இப்படியிருக்கறப்ப ரெண்டு பேரும் காதலிச்சாங்கன்னு சொல்றது சுத்த 'ஹம்பக்''' என்றான் நாராயணன்.

எனக்கு மூச்சுத் திணறலில் இருந்து விடுபட்டது போல இருந்தது, உள்ளத்தில் மறுபடியும் சந்தோஷம் வந்து ஒட்டிக்கொண்டது. இரண்டு நாட்களாக எத்தனை

வாட்ச்மேன் 'வாசலுக்கு வருகை தரும் புரட்சித் தலைவியே வருக! வருக!' என்று போஸ்டர் அடித்து ஒட்டினாலும் ஒட்டுவார் என்று சிலர் கேலி பேசு கிறார்கள். அவர்களெல்லாம் நெல்லை நகருக்குச் சென்று, அங்குள்ள சில போஸ்டர்களைப் பார்த்தால், என்ன சொல்வார்களோ தெரியவில்லை. 'என் ப்ரியமானவளே, நீ பத்தாம் வகுப்பு பாஸ் செய்ததற்கு வாழ்த்துகிறேன்!' இப்படியொரு போஸ்டர் கூட நெல்லையில் ஒட்டப் பட்டதாம்! ஆக, நெல்லைவாசிகள் தங்கள் காதலைக் கூடக் கடிதத்தில் அல்லாமல், போஸ்டர் அடித்துத்தான் சொல்லுவார்கள் போல!



ஆஷ் துரை சமாதி

நெல்லை கலெக்டரான ஆஷ் துரையை வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றது எல்லாருக்கும் தெரியும். சுட்டுக் கொல்லப்பட்ட ஆஷ் துரையின் உடல் எங்கு அடக்கமானது?

பாளையங்கோட்டையிலுள்ள இங்கிலிஷ் சர்ச் சாலையிலுள்ள, குளோரிண்டா சர்ச் வளாகத்திலிருக்கும் கல்லறை (cemetery) யில் தான் ஆஷ்துரையின் உடல் புதைக்கப்பட்டிருக்கிறது. அவருடைய சக அலுவலர்களால் எழுப்பப்பட்ட சமாதியில், 1911 ம் ஆண்டு ஜூன் மாதம் 17 ம் தேதி 'அரசியல் கொலையாளி' ஒருவனால் சுட்டுக் கொல்லப்பட்டதாகப் பொறிக்கப் பட்டுள்ளது! இப்போதும் இங்கிலாந்திலிருந்து வரும் சிலர், அவர் சமாதிக்கு மெழுகுவர்த்தி ஏற்றிவைத்து அஞ்சலி செய்வதாகச் சொல்கிறார்கள்.

கவலை, எத்தனை தவிப்பு!

அன்று இரவு நான் நிம்மதியாகத் தூங்கினேன். கனவு வந்தது. கனவில் சுகந்தி வந்தாள்.

அடுத்த நாள், மதியம் இரண்டு மணியிருக்கும்.

ப்யூன் வந்து ''சார்.... உங்களைப் பார்க்க சுகந்தின்னு ஒரு 'மேடம்' வந்திருக்காங்க!'' என்றான்.

இனிய அதிர்ச்சியுடன் நான் வெளியே வந்து, காத்திருந்த அவளை நெருங்கி, 'ஹலோ!'' என்றேன்.

''எனக்காக ஒரு பத்து நிமிஷம் ஒதுக்க முடியுமா... ஒரு முக்கியமான விஷயம் பேசணும்.....'' என்றாள்.

இருவரும் அலுவலக முகப்பில் இருந்த வேப்பமரத்தை அடைந்தோம்.

''என்ன சுகந்தி?''

''நான் சொல்றதைக் கேட்டு கோபப் படாதீங்க. எனக்கு உங்களைத் திருமணம் செய்துக்க விருப்பமில்ல... திருமண ஏற்பாட்டை நிறுத்திடலாம்.''

ஆயிரம் 'வாட்ஸ்' மின்சாரம் தாக்கிய அதிர்ச்சியில் ''ஏன் சுகந்தி?'' என்றேன்.

''நீங்க அந்த 'லெட்டரை'க் கொண்டு வந்து காட்டி, எங்கிட்டயே அதைப் பத்திக் கேட்டதுக்காக உங்களை நான் தப்பா நினைக்கல, சொல்லப் போனா சந்தோஷப் பட்டேன். ஆனா நான் சொன்ன பதிலை நம்பாம, மத்தவங்ககிட்ட விசாரிச்சிருக்கிங்க. எப்படியோ எனக்கு இது தெரிய வந்துடிச்சி. என்னோட வார்த்தையில நம்பிக்கையில்லாம, நான் பொய் சொல்லியிருப்பேனோன்னு சந்தேகப்பட்டு, எப்ப என்னைப் பத்தி மூணாவது மனுஷர்கிட்ட விசாரிச்சீங்களோ... அப்பவே எல்லாம் முடிஞ்சி போச்சி. நாளைக்கு இன்னொருத்தன் வந்து 'அந்த லெட்டர்'ல இருக்கறது உண்மைன்னு சொன்னா மறுபடியும் உங்களுக்குச் சந்தேகம் வரும். வீணான அவஸ்தைகள் உருவாகும். இல்லற வாழ்க்கைக்கு ஆதாரமே ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒருத்தர் மேல ஒருத்தருக்கு இருக்கிற நம்பிக்கைதான். அப்படிப்பட்ட அடிப்படை நம்பிக்கையே இல்லாம அமையற இல்லறம் சந்தோஷமா இருக்காதுங்க. என்னை மன்னிச்சிடுங்க... குட் பை!''

சொல்லிவிட்டு சுகந்தி 'விடு விடு' வெனப் போய்விட்டாள்.

நான் பொடிப் பொடியாய் உதிர்ந்தேன்.

டான் கலிலியோ

8

'க்ரீன் வ்யூ' வாசலில் இரண்டு கான்ஸ்டபிள்கள் பாரா பார்க்க -

ஹோட்டலினுள்ளே டி. எஸ். பி சாமுவேல் மராத்தன் முயற்சியாகப் பல சுற்றுக்களில் விசாரித்துக் கொண்டிருந்தார். டான்கலிலியோ பற்றி பிரகாஷ் பிரஸ்தாபித்ததும் சாமுவேல் சற்றும் தாமதியாமல், சென்னை டிஜிபி அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு விட்டார். நாளைக் காலையில் ஏசிபி தேவதேவன் வருகிறாராம்.

முந்தின இரவு, கத்தி ஆசாமியைப் பார்த்த இடத்திற்கு, பிரகாஷ் அவரை அழைத்துச் சென்றான். எதிர்பார்த்தபடி கத்தி மாயமாகி விட்டிருந்தது. தாக்கியவன் தரையில் தடயம் தவற விடவில்லை என்பதும் தெளிவாகியது.

'குட் ஹெல்த்' நர்சிங் ஹோமிற்குச் சென்று விசாரித்தார் சாமுவேல். காலை 4:45 அளவில் வேன் வேண்டி, போன் வந்ததை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் ஆம்புலன்ஸை ஆஸ்பத்திரி அனுப்பவில்லையாம். ஏன்? ஆம்புலன்ஸ் வேன் வேண்டாமென்று 'ஹோட்டலிலிருந்து' இரண்டு நிமிடம் கழித்து மற்றொரு போன் கால் வந்ததாம். 'பேஷண்ட்' இறந்து விட்டதாகக் காரணம் சொல்லப்பட்டதாம்.

சே. என்ன ஒரு சாதுர்யமான துல்லியத் திட்டம்! அதிகாலையில், அனைவரும் அசந்த குளிர் வேளையில், ஆம்புலன்ஸ் ஆசாமிகளாகக் கடத்தல்காரர்கள் வந்து, சிந்துஜாவை மயக்கப்படுத்திக் கொண்டு செல்கையில், மற்றொருவன் கஸ்டமர் 'போர்வையில்' வீண் தகராறு புரிந்து, ரிசப்ஷனிஸ்டின் கவனத்தைக் கவர்ந்து நகரவொட்டாமல் செய்ய...

''அவ காணாம போனதுக்கு நான்தான் சார் காரணம்! கதவு தட்டின சப்தம் கூடத் தெரியாம தூங்கின் நான், பாவி. இப்ப இழந்துட்டுத் தவிக்கிறேன்'' என்றான் கண்ணீர் மல்க.

''வருத்தப்படாதீங்க பிரகாஷ்!'' அவன் மனம் படும் பாட்டை அவரால் புரிந்து கொள்ள முடிந்தது. ''இவ்வளவு தூரம் துணிஞ்சு செய்யறவனுங்களுக்கு - நீங்க எழுந்திருந்தாலும் - உங்களைச் சமாளிச்சுச் சாய்க்கிறது ஒண்ணும் பெரிய காரியமில்லை.''

மேலும் விசாரணை தொடர்ந்தது. நேரம் விரைந்து கொண்டிருந்தது.

பிரகாஷ் பித்துப் பிடித்தாற்போல் தன் அறையில் முடங்கியிருந்தான். தவித்தான். எங்கே இருக்கிறாள் என் கண்மணி? பாவிகளிடம் என்ன பாடுபடுகிறாளோ? பயந்த சுபாவம்டா அவளுக்கு... என் செல்லத்தை ஒன்றும் செய்துடாதீங்க...

'இந்த பில்லர் ராக் எவ்வளவு மெஜஸ்டிக் பாருங்க பிரகாஷ் - உங்களை மாதிரி டவரிங்....'

'ஆ... ஐஸ்!'

'அந்த உயரமான பாறைல நம்ம பெயர்களைப் பொறிக்க முடிஞ்சா எவ்வளவு நல்லா இருக்கும்.... இந்தப் பாறை மாதிரிதான் நம்ம காதலும்... உறுதியானது; அழிவில்லாதது.'

'என்ன திடீர்னு சிரிக்கிறே சிந்து?'

'நேத்து கோக்கர்ஸ் வாக்ல 'நடந்தது' நினைப்பு வந்ததுப்பா.'

'எஸ். அந்தக் குழந்தை தன் அம்மா கிட்டருந்து உன்கிட்டத் தாவியது ஆச்சரியம்தான்.'

'கொள்ளை அழகுப்பா அது. அந்த மாதிரி குழந்தை ரெண்டு பெத்துக்கணும். அதுங்களுக்கு விதம்விதமா டிரெஸ் செய்து அழகு பார்க்கணும். காமிக்ஸ் படிச்சுக் கதை சொல்லி, ஹைடு அண்டு சீக் விளையாடணும். விஷமம் செய்தா அப்பாகிட்டச் சொல்லிருவேன்னு பயமுறுத்தணும். அப்புறம் -'

கனவும் காதலும் கலந்த கணங்கள் அவை... ஹூம்.. எப்போது திரும்புவாய் சிந்து? விரைவாய் வா சிந்து. ஆயிரம் ஆண்டுகள் ஆரோக்யமாய் வாழலாம் வா. ப்சு. உன்னை எங்கே என்று தேடுவேன்?

அவனுள் தாங்க இயலாத வேதனை வெட்ட, விளக்குக் கூடப் போடாமல் அறை இருளினுள் வெகுநேரம் உட்கார்ந்திருந்தான்.

போன் ஒலித்தது. சிந்துஜா கிடைத்து விட்டாளோ.. போலீஸ் போன் செய்கிறதோ... பாய்ந்து சென்று ரிசீவரை எடுத்தான்.

''ஹலோ... பிரகாசா? சிந்துஜா பற்றி ஒரு மெசேஜ் சொல்லணும்'' என்றது ஒரு குரல் மென்மையாக.

பத்மா ரவிசங்கர்

''எஸ்'' என்றான் நடுக்கமுடன்.

''உன் அறை போன் சேஃப் இல்லை. போலீஸ்காரனுங்க 'டாப்' செய்திருக்கலாம். ரிசப்ஷன்ல சிவப்பு போன்ல இப்ப பேசறேன். அது ஆப்பரேட்டர் தொடாத டைரக்ட் லைன்.''

ஓடினான். அடைந்தான். ஒலித்தது. எடுத்தான். கேட்டான்.

''நீ யாருடா ராஸ்கல் பேசறது?'' சிவப்புப் போனிற்கு நீளமான ஒயர் இருக்கவே ரிசப்ஷனின் ஒரு மூலைக்கு ஒதுங்கியிருந்தான்.

''நான்தாம்பா சிந்துவைக் கடத்தினவன் பேசறேன்!''

பிரகாஷ் வெகுண்டு சரமாரியான திராவக வார்த்தைகளால் அவனை அர்ச்சித்து முடித்ததும், ''மனைவி பேர்ல என்ன பாசம்பா உனக்கு!'' என்றது எதிர்முனை எகத்தாளமாய்.

''அடேய்! உனக்கு என்னடா வேணும்? அவளை... அவளை...''

''இதுவரை ஏதும் செய்யலை! நான் சொல்ற மாதிரி நீ நடந்துக்கிட்டா உன் சிந்துஜா பூக்கணக்காத் திரும்பி வந்துருவா.''

''என்ன செய்யணும் சொல்லு'' என்றான் படபடப்பாக. உணர்ச்சியில் பற்களைக் கடித்தான்.

''சொல்றேன். அதுக்கு முன்னே ஒரு சின்ன டெமான்ஸ்டிரேஷன்! உன் ஆருயிரின் குரல் கேட்க வேணாமா?''

சில நொடிகள் அல்லது சில யுகங்கள் மறுமுனையில் மௌனம். பிரகாஷ் மூச்சைப் பிடித்துக் கொண்டான்.

''பிரகாஷ்! பிரகாஷ்... எனக்கு... எனக்குப் பயமாயிருக்குப்பா... அப்பப்போ மயக்கப்படுத்தி இருட்டுல அடைச்சு வெச்சு... உங்களைத் திரும்பப் பார்ப்பேனா...''

அலறலில் ஆரம்பித்து தீனமாக கேவலில் முடிந்த குரல். பிரகாஷின் உதிரம் உறைந்தது; கரம் நடுங்கியது.

''ப்ரூஃப் ஓகேவாப்பா துரை?'' என்றான் அந்த மென் குரலோன்.

''அவ மேல ஒரு சிறு கீறல் விழுந்தாக் கூட....'' ஆவேசமான கோபத்தில் மூச்சு வாங்கிற்று அவனுக்கு. ''யூ வோண்ட் கெட்டவே வித்திட். உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் உன்னைத் தேடிப் பிடித்து நசுக்கிருவேன்!''

''வீர சபதம் முடிஞ்சுதா?'' அவன் குரலில் அலட்டலில்லாத அலட்சியம். ''ஆல் ரைட். இப்ப பிஸினஸ் பேசுவமா? பத்து லட்ச ரூபா கொடுத்துரு. உன் சிந்துஜாவை விடுதலை செய்துடறேன்!''

கேவலம் பத்து லட்ச ரூபாய்க்காகவா... அவனால் நம்ப முடியவில்லை. சட்டென்று தன்னுள் நிம்மதி பரவுவதை உணர்ந்தான். அப்பாவிற்கு இது ஒரு சாதாரணத் தொகை. நிச்சயம் மறுக்க மாட்டார். இந்தத் தொகையை அந்த அற்பனிடம் வீசிவிட்டால் ஆபத்து நீங்கி விடும்; சிந்து வந்து விடுவாள். தயக்கமின்றிச் சம்மதம் தெரிவித்தான்.

''ஆங். அதுதான் புத்திசாலித்தனம்! சொன்னபடி கேளு துரை. சம்சாரத்தை சேதாரமில்லாம சேர்த்துடறேன், என்ன?''

''பணத்தை எங்கே கொண்டு வந்து தரணும்?'' என்றான் அமைதியாக.

''நாளை மறுநாள் - அதாவது புதன் கிழமை நைட்டு ஏழு மணிக்குப் பொட்டி எடுத்துக்கிட்டுத் தனியா வரணும் துரை'' என்றவன், எங்கே எப்படி என்று மேலும் விவரம் அளித்து விட்டு இறுதியில், ''ராங் பண்ணாம பணத்தை வைச்சுட்டுப் போனா சிந்துஜா விடுதலை. மீறி இந்த விஷயத்தைப் போலீஸ்மவனுங்க கிட்டச் சொல்லி டிரிக்ஸ் காமிச்சே, அவ உடம்புலருந்து உயிர் விடுதலையாயிரும்! சாக்கி



ரதை'' என்ற எச்சரிக்கையுடன் வைத்து விட்டான்.

இரவு ஏழரை மணி அளவில் கதவு தட்டப்பட்டது. அப்பா!

இறுகிய முகத்துடன் ராஜசேகர் அறைக்குள் பிரவேசித்தார். இரண்டு சூட்கேஸ்களைச் சுமந்து வந்த பையனை அனுப்பிய பின் அறைக் கதவைத் தாளிட்டார். திரும்பினார். மகனைக் கூர்ந்து பார்த்தார்.

''நம்ம பாதையில குறுக்கிடற அந்தக் கலிலியோவைக் கூசாம வெட்டணும்டா!'' என்று கடுப்பாகத் தன்னை மறந்து வெடித்தவர், சட்டென்று இறுக்கம் தளர, அவன் அருகே வந்தார். ஆதரவாக அவன் தோள் பற்றினார். பரிவுடன் நோக்கினார்.

''வழியில டிஎஸ்பியைப் பார்த்து விவரம் கேட்டுட்டுத்தான் வர்றேன். கவலைப்படாதே பிரகாஷ். கண்டுபிடிச்சுருவாங்க. தேவதேவன்னு ஒரு துடிப்பான ஆபீஸரை அனுப்பறதா டிஜிபி சொல்லியிருக்கார்.''

''தேவையில்லைப்பா!'' என்றவன் பத்து லட்சம் கேட்கப்பட்ட விவரம் சொன்னான்.

''நெனைச்சேன்'' என்றார் ராஜசேகர். ''பணத்துக்காகத்தான் இருக்கும்னுட்டு, நம்ம செஸ்டுலருந்து இருபது லட்ச ரூபா கேஷ் கொண்டு வந்திருக்கேன் மை சன்!'' என்று தான் கொணர்ந்த இரு சூட்கேஸ்களையும் சுட்டிக் காட்டினார்.

தன் சோகத்தையும் மீறி அவருடைய முன்யோசனையில் வியந்தான்.

''நமக்கு வேற வழியில்லைப்பா. அவன் கேட்ட மாதிரி பத்து லட்சம் கொடுத்துட்டு நம்ம பொண்ணை மீட்டுக்க வேண்டியதுதான்'' என்றவர் கண்களை மூடிக் கொண்டார்.

''களைப்பா டாடி?''

''ஊம். சரியான நரக நாளப்பா. பாக்டரில சிக்கல். ஒரு ஏஜன்சி காண்ட்ராக்ட் சரியாப் படியலை. ஈவினிங் வரை போராடிட்டு ஃப்ளைட் பிடிச்சு மதுரை வந்து - அங்கிருந்து டாக்சி பிடிச்சு ஓடோடி வர்றேன்'' என்றார் ஆயாசமாக மூச்சு விட்டு.

''படுத்து ரெஸ்ட் எடுங்க. காலைல பேசிக்கலாம்'' என்றான். தந்தைக்கு உதவியாகத் தான் விளங்காத போது, தொல்லை மட்டும் தருவதா என்று அவனுள் ஓர் உறுத்தல்.

செவ்வாய் காலை ஒன்பது மணிக்கு ஆஜரான ஏசிபி தேவதேவன் முகத்தில் திறமை சுடர் விட்டதைக் கவனித்தான் பிரகாஷ். உடன் சாமுவேல்.

அனைவருக்கும் காப்பி வரவழைக்கப்பட்டது. ஏசிபி நேரடியாக விஷயத்துக்கு வந்தார்.

பிரகாஷின் கண்களை ஊடுருவிப் பார்த்தவாறு கேட்டார் : ''அந்த கிட்நாப்பர் ரான்சம் கேட்டுப் போன் செய்தானா மிஸ்டர் பிரகாஷ்?''

''இல்லை சார்!'' என்றான் சற்று

திருநெல்வேலி அல்வா:

சுவையின் ரகசியம்

திருநெல்வேலி என்றதுமே பலருக்கும் பளிச்சென நினைவுக்கு வருவது அல்வாதான்! அதற்கு மட்டும் என்ன அப்படியொரு சிறப்பு? ''எல்லாம் தாமிரபரணித் தண்ணீரால் வருகிற சுவைதான்'' என்கிறார், பிஜ்லி சிங்.

திருநெல்வேலி பஸ்நிலையத்துக்கு அருகிலேயே திருநெல்வேலி அல்வா விற்கப்பட்டாலும், நெல்லையப்பர் கோயிலுக்கு எதிரிலுள்ள 'இருட்டுக் கடை அல்வா'தான் அல்வாவுக்கு ஒரு சிறப்பை உண்டாக்கிய கடை. அதை அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு துவங்கியவர் பிஜ்லி சிங்கின் அப்பா, கிருஷ்ணா சிங் என்பது ஆச்சரியமான விஷயம்!

பிஜ்லி சிங்கின் முன்னோர்கள் ராஜஸ்தானைச் சேர்ந்தவர்கள். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள். குறுநில மன்னர்களிடமும் ஜமீன்தார்களிடமும் காவல் வீரர்களாகப் பணியாற்றியவர்கள். மன்னர் பரம்பரை, ஜமீன்தார் முறைகளெல்லாம் படிப்படியாக மறையத் துவங்கியபோது, பிழைப்புத் தேடி பல்வேறு ஊர்களிலும் வந்து செட்டில் ஆனார்கள். அப்படி வந்து நெல்லையில் குடியேறியவர்கள்தான் பிஜ்லி சிங்கின் முன்னோர்கள்.

''என் தந்தையார் முதலில் இனிப்புக் கடை என்று பொதுவான கடையாகத்தான் ஆரம்பித்தார். அதில் அல்வா மட்டும் அனைவரிடமும் பிரபலமாகவே, கடையை மொத்தமும் அல்வாக் கடையாகவே மாற்றிவிட்டார்!''

''அல்வாவின் ருசிக்குத் தாமிரபரணித்



☛ இருட்டுக்கடை அல்வா; உள்ளே : பிஜ்லி சிங்

தண்ணீர்தான் முக்கிய காரணம் என்று எப்படிச் சொல்கிறீர்கள்?''

''அனுபவம்தான். அதனால்தான் வேறு ஊர்களில் செய்யப்படும் அல்வாக் களுக்கு இந்த ருசி வருவதில்லை.''

''அல்வாவுக்கு உபயோகிக்கும் பொருள்களில் ஏதேனும் சிறப்பு உண்டா?''

''சிவப்பு நிற சம்பாக் கோதுமையைப் பயன்படுத்துகிறோம். அதை கிரைண்டரில் அறைப்பதில்லை. கையாலேயே அரைக் கிறோம். சுத்தமான நெய்யையே பயன் படுத்துகிறோம்.''

''பக்குவம் பார்த்துச் செய்வது யார்?''

''என் மனைவி சுலோசனா பாய்தான். அதோடு நாங்கள் இன்று செய்யும் அல்வாவை இன்றே விற்பனை செய்வ தில்லை. அடுத்தநாள்தான் செய்கிறோம். இதுவும் எங்கள் கடை அல்வாவின் சுவைக்கு ஒரு காரணம்.''

''உங்கள் கடைக்கு 'இருட்டுக் கடை' என்று எப்படி பெயர் வந்தது?''

''நாங்கள் இன்னும் எங்கள் கடையில் வெறும் அறுபது வாட்ஸ் பல்ப் ஒன்றைத் தான் எரியவிடுகிறோம். என் தந்தையார் காலத்தில் பயன்படுத்திய அதே ஓலைப் பெட்டியைத்தான் இன்றைக்கும் கல்லாப் பெட்டியாகப் பயன்படுத்துகிறோம். சொல் லப் போனால் என் தந்தையார் யாரிடம் நெய் வாங்கினாரோ, அவருடைய மக னிடம்தான் நாங்கள் இப்போது நெய் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இதில் ஏதாவதொன்று மாறினாலும் சுவை மாறி விடுமோ என்கிற பயமும் செண்டிமென் டும்தான் காரணம்.''

''கடையை மாலை ஐந்து மணிக்கு மேல்தான் திறக்கறீர்கள்? ஏன் முழுநேர மும் விற்பனை செய்யக் கூடாது?''

''முழு நேரமும் விற்பனை செய்ய வேண்டுமென்றால் நிறையச் செய்ய வேண்டியதாகிவிடும். உற்பத்தி அதிகரிக்க வேண்டுமானால். அல்வாவின் செய்முறை களை நவீனமயமாக்க வேண்டும். நவீன மாக்கினால் இந்தச் சுவை போய்விடும்; பெயரும் போய்விடும். இந்த நவீன யுகத்திலும் எல்லாவற்றையும் கைப்பக்குவ மாகவே செய்வதால்தான், எங்கள் அல்வா அதே சுவையுடன் இருக்கிறது!'' என்றார் பிஜ்லி சிங்.

- ஆர். எஸ்.

அவசரமாக.

''சொல்லாதேன்னு மிரட்டினாங்களா? தைரியமாச் சொல்லுங்க.''

''இதுவரை தொடர்பு கொள்ளலை.''

''ஐ சி'' என்றார் யோசனையாக. ''ஆக, கடத்தினவனுடைய மோடிவ் இன் னமும் நமக்குத் தெரியலை இல்லையா?''

மையமாகத் தலையாட்டினான் பிரகாஷ், முகத்தில் உணர்ச்சி காண்பிக் காமல்.

''ஆல்ரைட். அச்சரபாக்கம் அருகே ஒரு கார் உங்களை ஃபாலோ செய்ததுன்னு

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication : Madras
2. Periodicity of Publication : Weekly
3. Name of printer : V. Murali
   Nationality : Indian
   Address : AA-117, Shanthi Colony, Anna Nagar, Madras - 600 040
4. Name of publisher : V. Vaidyanathan
   Nationality : Indian
   Address : 6-A, Warren Road, Mylapore, Madras - 600 004
5. Name of Editor : K. Rajendran
   Nationality : Indian
   Address : 1, Fifth Street, Lake Area, Nungambakkam, Madras - 600 034
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Bharathan Publications Private Limited, 84/1-C, Race Course Road, Guindy, Madras - 600 032.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. Vaidyanathan
Publisher

1.3.1992

டிஎஸ்பிகிட்டச் சொன்னீங்களாம். அந்தக் கார் நம்பர் தெரியுமா?''

பிரகாஷ் எச்சரிக்கையானான். அவனுக்கு அந்தக் கார் எண் ஞாபகத்தில் இருந்தது. ஆனால் சொல்லாமல் மறைப்பது உத்தமம் என முடிவு செய்தான். இந்தப் போலீஸ்காரர்களைத் தெரியாதா? மீட்கிறேன் என்று சொல்லி சொதப்பி விடுவார்கள். 'சிந்துஜா உயிருடன் திரும்ப வேண்டும். பத்து லட்சம் என்ற எளிய வழியைச் சிக்கலாக்கிக் கொள்ளக் கூடாது. கடத்தியவனின் கோபம் சம்பாதித்துக் கொள்ளக் கூடாது. ''நம்பர் ஞாபகமில்லை'' என்றான்.

''இட்ஸ் ஓகே பிரகாஷ். அச்சரபாக்கம் ஸ்டேஷன்ல குறிச்சிருக்காங்களான்னு விசாரிக்கிறேன்.''

சட். சரியான விடாக்கண்டன். இந்த விஷயத்தை நேற்றைய பதற்றத்தில் சாமுவேலிடம் சொன்னதற்காக நொந்து கொண்டான் பிரகாஷ்.

''சிங்க அட்டை மாத்திரம் வெச்சுக்கிட்டுக் கலிலியோதான் காரணம்னு சொல்ல முடியாது.''

''பின்னே?'' என்றார் ராஜசேகர் ஆத்திரமுடன். ''முதல்ல அவனைப் பிடிக்கிற வழியைப் பாருங்க ஏசிபி. என் சிட் பண்டைக் கொள்ளையடிச்சான். இப்போ என் குடும்பத்தையே கலக்கறான். ப்ளடி டான்கலிலியோ'' என்று உறுமினார்.

''ரிலாக்ஸ் டாட்!''

''பல கோணங்களையும் நாங்க பார்க்கணும் சார். வேறு யாரேனும் டான் பெயரைப் பயன்படுத்தலாமில்லையா? உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கா பிரகாஷ்?''

''இல்லை சார்.''

''ரிசப்ஷனிஸ்டு எப்படி சாமுவேல்?''

''சிம்ஸ் டு பி க்ளீன் தேவா. நர்சிங் ஹோம்ல போன் வந்ததை உறுதி செய்யறாங்களே...''

''இப்படி யோசியுங்க சாம். உண்மை தெரியறவரை நம்ம தொழில்ல எல்லாரையும் சந்தேகப்பட்டுக்கிட்டுத்தான் இருக்கணும்'' என்றார் தேவதேவன்.

மேலும் சில கேள்விகளுக்குப் பின் விடைபெறுமுன் தேவதேவன், ''அவங்க உங்களுக்கும் குறி வெச்சிருக்கலாம். எச்சரிக்கையாயிருங்க பிரகாஷ்'' என்றவர் அவசர உதவிக்கு அவரைத் தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண் தந்தார்.

அவர்கள் அகன்றதும் ராஜசேகர், ''இவங்களை நம்பறது வேஸ்ட் பிரகாஷ். விசாரணைங்கற பேர்ல வெட்டியாப் பொழுதை ஓட்டுவாங்க. புதன் கிழமைன்னு கிட்நாப்பர் கெடு வெச்சுட்டான். இந்த இரண்டு நாள்ல போலீஸால ஒண்ணும் கிழிச்சுற முடியாது. காதும் காதும் வெச்சாப்ல பணத்தைக் கொடுத்துட்டு சிந்துஜாவை மீட்கற வழியைப் பார்ப்போம்,'' என்றார்.

அன்று மாலை. ஒரு முன்னோட்டமாகச் செயல்பட்டுப் பார்ப்பது என்று கிளம்பினான் பிரகாஷ். ஹோட்டல் வாசலிலிருந்த பாரா போலீசார் இருவரும், இவனைக் கவனியாமல், எங்கோ பராக்குப் பார்த்தவாறு பேசிக் கொண்டிருந்ததைக் காணவும் சற்று உற்சாகம் அடைந்தான்.

பத்து நிமிடம் நடந்தபின், லேசாகக் கழுத்தைத் திருப்பி, வந்த வழியைப் பார்த்தான். அதிர்ந்தான்.

சற்றுத் தொலைவில் - பாரா பார்த்த கான்ஸ்டபிள்களில் ஒருவன் பிரகாஷைப் பின்தொடர்ந்தபடி.... தான் சந்தேகப்பட்டது சரிதான். எல்லாம் அந்த தேவதேவனின் வேலையாகத்தான் இருக்கும். அவரின் தந்திரம் புரிந்தது. ஆக, ஆபத்து காத்திருக்கிறது. கவலையானான். தர்ம சங்கடத்தில் தவித்தான்.

முதுகில் போலீஸ் வைத்துக் கொண்டு எப்படி 'இரகசியமாகப்' பணம் வைப்பது? நாளை எப்படி போலீசை - குறிப்பாக - தந்திரசாலி தேவதேவனைத் தவிர்ப்பது....

(தொடரும்)

வத்சலாவின் வேதனைகள்

ஆர்.கே.பத்மா



''தெரியுமா! ரங்கநாயகி அவ குடும்பத்தோட மறுபடியும் மஸ்கட்டுக்கே போயிடப் போறாளாம்'' என்றாள் என் மனைவி.

ஆபீசிலிருந்து திரும்பியதும் என் மனைவி தரும் அயிட்டங்கள் மூன்று. சூடாய் டிபன், காப்பி, வம்பு.

இன்றைக்கு வேர்க்கடலைப் பக்கோடாவுடன் சேர்த்து இந்த வம்பு.

''வத்சலாவுக்குத்தான் ஒண்ணுமே செய்யாம போறா. பாவம் வத்சலா. அவளை மலை போல நம்பிண்டிருந்தா'' என்றபடி காப்பியைப் பக்கத்தில் வைத்தாள்.

வத்சலா எங்கள் வீட்டில் குடியிருக்கிறாள். அவள் கணவர் சரியான குடிகாரர். மூன்று குழந்தைகள் வேறு. மிகவும் கஷ்ட ஜீவனம். எங்கள் வீட்டில் ராத்திரி மிகுந்த குழம்பு, ரசம் எல்லாம் கொடுத்து விடுவோம். அதுதான் அவர்களுக்குச் சாப்பாடு.

''ரங்கநாயகி இண்டியாவுக்கு வந்த நாள்லேந்து வத்சலா அவளைச் சுத்திச் சுத்தி வந்தாளே?'' என்றேன் பக்கோடாவை மென்றபடி. ரங்கநாயகி வத்சலாவின் மூத்த சகோதரி. ரங்கநாயகி, அவள் புருஷன் இருவருக்கும் மஸ்கட்டில் வேலை.

''எல்லாத்தையும் பாக் பண்ணிட்டாளாம் ரங்கநாயகி. ஒரு பழைய புடைவையைக் கூட வத்சலாவுக்குக் கொடுக்கலியாம். ஆயிரம் ஆயிரமா சம்பாதிச்சு என்ன பண்றது. கூடப் பிறந்தவாளுக்கு உதவற புத்தி இல்லாமப் போச்சே'' என்று நொடித்தாள் என் மனைவி.

''ரங்கநாயகி புருஷன் கோபாலன் என் கிளாஸ் மேட்தான். அவன் சரியான கஞ்சன். அவன் கிட்டேயிருந்து ஒத்தைக் காசு பெயராது.''

''ஆம்படையானை விடுங்கோ. இந்த ரங்கநாயகிக்கு மனசு வரலியே. புடைவை மட்டும் நூறு வச்சிண்டிருக்காளாம் பீரோவில. ஒரு ரெண்டு புடைவை, அட கட்டிப் பழசாப் போன புடைவை கொடுக்கலா

மோன்னோ தங்கைக்கு. இந்தக் குடிகாரனைக் கட்டிண்டு வத்சலாவுக்கு என்ன சுகம்? பாதி நாள் சாப்பாட்டுக்கே கஷ்டம். ரங்கநாயகி இங்கே வந்து ஒரு வருஷமாக எல்லாம் பாத்துண்டுதான் இருக்கா. என்ன பிரயோ ஜனம்?''

மாற்றி மாற்றிப் புலம்பத்தான் முடிந் தது எங்களால். ரங்கநாயகியைத் தவிர வேறு உறவு யாருமில்லை வத்சலாவுக்கு. இப் போது மஸ்கட்டுக்குப் போனால் மறுபடியும் ஐந்து வருஷமோ ஏழு வருஷமோ ஆகும் திரும்பி வருவதற்கு. எத்தனையோ செல்வ சுகத்தில் புரளுகிறார்கள் ரங்கநாயகியும், அவள் புருஷனும். வத்சலாவுக்கு ஏதேனும் உதவி செய்யக் கூடாதா?

அவர்களை நன்றாக நாலு கேள்வி கேட்க வேண்டும் என்று தோன்றியது. கோபாலன் என்னோடு பள்ளியில் படித்தவன். அந்த உரி மையில் வத்சலாவுக்கு ஏதேனும் செய் யும்படி வற்புறுத்தினால் என்ன?

செருப்பை மாட்டிக் கொண்டு அடுத்த தெருவில் இருந்த ரங்கநாயகியின் வீட்டுக்குச் சென்றேன்.

''அட நீயா... வா வா'' என்று வர வேற்றான் கோபாலன். ரங்கநாயகியும் பக்கத் தில் வந்து நின்றாள். அவள் கையிலும், கழுத் திலும் தங்கம் மினுமினுத்தது. தோடுகள் டாலடித்தன. பொதுவாய் ஆபீஸ், குழந்தை களின் படிப்பு என்று பேச்சு சுற்றி விட்டு யதேச்சையாய் வத்சலாவிடம் வந்து நின்றது. நான் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாது வத்சலா படும் கஷ்டங்களை அடுக்கினேன். அவர்களிருவரும் மஸ்கட்டிலிருந்து இந்தியா வுக்கு வருகிறார்கள் என்றதும் வத்சலா எத்


கொடுத்து வைத்த ஜீவன்கள்

❑ வளர்ப்பு மிருகங்களிடம் பாச உணர்வு மிக்க பிரிட்டிஷ் மக்கள், வெளியூர் செல்லும் போது அவற்றை விடுதிகளில் விட்டுச் செல்கிறார்கள்.

''ஒழுங்காக நடந்து கொள்ளும் நாய், பூனை, ஒராங்உடான்களுக்குக் கட்டணம் கிடையாது'' என்று அறிவிக்கிறார் மிருக நேய விடுதிக் காப்பாளர் ஒருவர்.

''மனிதர்களை விட நாய்கள் எவ்வளவோ தேவலை ஸார்! அவை சிகரெட் பிடித்தபடி தூங்கி, படுக்கையைப் பற்ற வைப்பதோ, பணிப் பெண்களிடம் தவறாக நடந்து கொள்வதோ கிடையாது!'' என்கிறார் ஒரு விடுதி மேலாளர்.

-Country life in Britain என்ற நூலிலிருந்து
தகவல் : கிருஷ்ணவேணி ரங்கனாதன்



தனை எதிர்பார்ப்புகளோடு காத்திருந்தாள் என்பதை விளக்கினேன்.

கோபாலன் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''அக்காவும், அத்திம்பேரும் ஏராளமான பணத்தோடு வரப் போறா. வந்து அவ குடும் பத்தையே சுவீகாரம் எடுத்துக்கப் போறான்னு நினைச்சாளா அவ?'' என்றான் கிண்டலாய்.

''கோபாலா... அப்படியெல்லாம் பேசாதே. அவ உன் மச்சினி. வாழ்க்கையில கஷ்டப்படறா. ஏதோ உன்னால முடிஞ்ச உதவியை நீ செய்யணும். அதான் தர்மம்'' என் றேன் கொஞ்சம் சூடாக.

''எது தர்மம்? ஒட்டுண்ணியாட்டம் இன் னொருத்தரை சார்ந்துண்டு குஷாலா வாழ ஆசைப்படறதா தர்மம்?'' என்றான் கோபாலன். தொடர்ந்து படபடத்தான்...

''நன்னாக் கேட்டுக்கோ. இன்னிக்கு நானும், என் மனைவியும் வெளி தேசத்துல போய் ஆயிரக்கணக்கில சம்பாதிக்கிறோம். வசதிகள் வந்திருக்கு. வாழ்க்கைத் தரம் உசந்திருக்கு. ஆனா, இதுக்கு நாங்க ஆரம்ப நாள்லே எத்தனை கஷ்டப்பட்டோம், எத்தனை பொறுமையா எங்க கஷ்டங்களைத் தாங்கிண்டு முன்னுக்கு வந்திருக்கோம்னு உனக்குத் தெரியுமா?'' என்றான் கோபமாக.

''சாதாரணமா, பெருக்கற வேலைக்கே மாசம் அஞ்சாயிரம் சம்பளம். வேலைக் காரிக்கு ஏழாயிரம் சம்பளம்னு எல்லாரும் ஆசை காட்டினதுல டைப்பிஸ்ட் வேலையை விட்டுட்டு இவர் துணிஞ்சு மஸ்கட்டுக்குப் போயிட்டார். போனதும்தான் தெரிஞ்சுது, தன்னை ஆதரிக்கறதுக்கு யாருமே இல் லைன்னு'' என்றபடி ரங்கநாயகி எங்களுக்கு நடுவில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''நன்னாக் கேட்டுக்கோ. இண்டியாவில இருந்த வேலையை ரிசைன் பண்ணிட்டு, கிடைச்ச பணத்துல ஏதோ தைரியத்துல அந்த நாட்டுல போய் நின்னேன். படிப்பும் பெரிசா கிடையாது. பாஷை தெரியாது, சாப்பாடு சரி யில்லை. என்ன திண்டாட்டம். ஹோட்டல்ல மாமிசம் சாப்பிட்ட தட்டைக் கழுவியிருக்

கேன். அந்த வேலைதான் கிடைச்சது. குளிர்ல செத்தே போயிடுவேன்னு நினைச்சேன்'' என்றான் கோபாலன் அந்த நாள் ஞாபகமாக.

''இங்கே என்னடான்னா சாப்பாட்டுக்கு எங்களுக்குக் கஷ்டம். எப்ப இவர்கிட்டேந்து தகவல் வரும்னு தவிச்சிண்டு நின்னேன் குழந்தைகளோட. இரண்டு வருஷம் கஷ்டம்தான். கடைசில இவருக்கு டைப்பிஸ்டு உத்தியோகம் கிடைச்சது. குழந்தைகளோட நானும் போய் இவரோட சேர்ந்தேன்.''

''மெதுவா இவளையும் ஒரு வேலையில சேத்துட்டேன். இவளும் நானும் இன்னிக்கு ஒரு பொஸிஷன்லே வந்திருக்கோம்னா எத்தனை சோதனை, எத்தனை சங்கடம் தாண்டி வந்திருப்போம்.''

''இப்பவும் அந்த பாலைவனத்துல வெயில், குளிர் பார்க்காம உழைக்கிறோம். உழைச்சு சேத்த சொத்து இது. குழந்தைகளுக்கு நல்ல படிப்பு, நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கணும்னு இத்தனையையும் சகிச்சிண்டிருக்கோம்.''

''அதுக்காக உன் மச்சினிக்கு உன்னாலான உபகாரம் செய்யக் கூடாதா?''

''செய்யறேன். அவ புருஷனுக்கு வேலை வாங்கித் தரேன். வரச் சொல்லுன்னேன். உழைக்கிறதுக்கு அவன் தயாரில்லை. ஏதோ ஏழு தலைமுறைக்குப் பணம் சேத்துட்ட மாதிரி சோம்பலா எப்போப் பாத்தாலும் குடிச்சுட்டு படுத்தே கிடக்கறான்.''

''பணமா ஏதாவது உபகாரம் பண்ணக் கூடாதா. ஒரு தர்மமா...''

''இல்லை. அந்த மாதிரி பணமா கொடுக்கறது தர்மம் இல்லை. அது அதர்மம்கிறேன் நான். நீ கொடுக்கற பணம் ஒரு குடிகாரனை மகா குடிகாரனாக்கிறது. ஒரு சோம்பேறியை நிரந்தர சோம்பேறியாக்கறது. எப்படி, எத்தனை நாளுக்கு நான் அந்தக் குடும்பத்தைக் காப்பாத்த முடியும்?'' என்றான் கோபாலன்.

''நாங்க வத்சலாவுக்கு எந்த உபகாரமும் செய்யக் கூடாது. இப்ப அவ புருஷன் ஏதோ ஓரளவுக்காவது உழைச்சு அவாளைக் கவனிச்சுக்கறான். நாங்க சப்போர்ட் பண்ண ஆரம்பிச்சா அக்காகிட்டேந்து கொண்டு வாடீன்னு தன் பொண்டாட்டிய மிரட்டி, எங்களண்டை பணம் பறிச்சுண்டு குடும்பத்தைப் பத்திக் கவலை இல்லாம முழு நேரக்குடிகாரனா ஆயிடுவான். இப்ப சொல்லுங்கோ. ஒரு குடிகாரனை வளரவிடறது தர்மமா?'' அடுக்கடுக்காய் ரங்கநாயகியும், கோபாலனும் கேள்விகளை எடுத்து வீச நான் வாயடைத்துப் போனேன்.

''அது சரி, வத்சலா உங்களுக்கு ஒழுங்கா வாடகை கொடுக்கிறாளா?''

''எ.... எங்கே... பாவம், அவளுக்குக் குடித்தனம் நடத்தறதே பெரிய கஷ்டமா இருக்கு, எனக்கு மாசம் முன்னூறு ரூபாய் எப்படி கொடுப்பா அவ?''

''எத்தனை மாசமா வாடகை கொடுக்கலை?''

''முதல்ல தாமதமா குடுத்தா, இப்ப கொஞ்சம் கொஞ்சமா சுத்தமா நின்னுபோச்சு. ஏறத்தாழ ஒரு வருஷமா வாடகையே வரலை.''


''பாத்தீங்களா. உங்க தருமசிந்தனை அவங்களை எங்கே கொண்டு போய் விட்டிருக்குன்னு. நீங்க வற்புறுத்திக் கேட்காததால வாடகையாக் கொடுக்க வேண்டிய பணம் எப்படியோ செலவாயிண்டிருக்கு.'' என்றாள் ரங்கநாயகி பளிச்சென்று. ''சினிமா அது இதுவென்று வத்சலா குழந்தைகளோடு எங்கேயாவது போய்க் கொண்டுதான் இருக்கா.... அந்தப் பணத்தைச் சேமிச்சுப் பாதி வாடகையாவது கொடுக்க ஏன் அவளுக்குத் தோணலை....?''

அவர்களிடம் விடை பெற்றுக் கிளம்பியபோது மனமாற்றம் எனக்கும் என் மனைவிக்கும்தான் அவசியம் என்று தோன்றியது.

''டாக்டர்! எனக்கு இன்னிக்கு பண்ணப் போற ஆபரேஷனைப் பத்தி ஒரு சந்தேகம்!''

''எனக்கே நிறைய சந்தேகம் இருக்கு! நீங்க வேற புதுசா சந்தேகம் எழுப்பிக் குழப்பாதீங்க!''

- ஞா. ஞானமுத்து



மட்டமான புத்தகத்தை விட மோசமான திருடன் கிடையாது - இத்தாலிய பழமொழி.

- மஞ்சுதேவன்

9

கணப்பை வெறித்தவாறு யோசித்தான் பிரகாஷ். விரைவில் உலகம் மறந்தது. இனி அவன் குறி ஆருயிர் மனைவியை மீட்பது மட்டுமே. எப்படி போலீஸ் தடையை மீறுவது? எப்படியாவது...!! முதலில் ஹோட்டல் வாசல் பாரா ஆசாமிகளுக்குத் தெரியாமல் பெட்டியுடன் வெளியே செல்ல வேண்டும்....

அப்புறம், அந்த ஏசிபி தேவதேவனை எப்படி சமாளிப்பது? அவன் கிளம்பும் சமயம் அவர் எங்கிருப்பார் என்று எப்படி அறிவது?

அவர் அவன் பார்வையில் இருக்க வேண்டும். பிறகு... பிறகு....

சட்டென்று அவன் மூளைக்குள் 'க்ளிக்' ஒலி கேட்டது.


திட்டம் ஒன்று புலனாகியது. காரில் கிளம்பினான். வாசல் தாண்டிச் சாலை முனை திரும்புவதற்குள் பாரா ஆசாமி ஒருவன் சடுதியில் பைக்கைக் கிளப்பி, தன்னைப் பின் தொடர்வதைக் கவனித்தான். தனக்குள் சிரித்துக் கொண்டான்.

முதலில் ஒரு ரெடிமேட் துணிக் கடைக்குச் சென்று காக்கி பேண்ட் வாங்கி பிளாஸ்டிக் கவரில் பார்சலாக்கிக் கொண்டு வெளியே வந்தான். தொலைவில் காத்திருந்த பாரா ஆசாமி இவனைக் கண்டதும் அவசரமாக சிகரட்டைத் தூர சுண்டிவிட்டுத் தன் பைக்கில் ஆரோகணித்தான். பார்க்காத மாதிரி காஷுவலாகக் காரை அடைந்து கிளப்பினான்.

ஒரு டிபார்ட்மென்டல் ஸ்டோரில் ஃபிளாஸ்க் ஒன்று வாங்கிப் பையினுள் போட்டுகொண்டான்.

அடுத்த நிறுத்தம் ஆஸ்பத்திரி...

களைப்பான போஸில் தலைவலித் தைலம் தேய்த்தவாறு சிறிது நேரம் எழிலான ஏரியை வெறித்திருந்துவிட்டுக் கிளம்பினான் பிரகாஷ்.



மாலை ஆறு.

''என்ன தயாராயிட்டியா பிரகாஷ்?'' - அப்பா கேட்டார்.

''ரெடிதான் டாட்.''

''குட். அவன் சொன்ன மாதிரி பணத்தைக் கமுக்கமா வெச்சுட்டு வந்துரு'' என்றவர் சட்டை எடுத்து அணிந்து கொண்டார்.

''எங்க கிளம்பிட்டீங்கப்பா?''

''மனசு சரியில்லைடா. என் மருமக என்ன பாடுபடறாளோன்னு கிடந்து அடிச்சிக்குது. பார்ல சித்த நேரம் உட்கார்ந்துட்டு வர்றேன்.''

இந்த சமயம் இவர் இங்கு இல்லாதிருப்பதும் நல்லதுதான் என்று நினைத்துக் கொண்டான். ''மெதுவாகவே வாங்கடாட்'' என்றான்.

''புரியுது பிரகாஷ். ஆல் தி பெஸ்ட்'' என்றவாறு கிளம்பினார்.

ரூம் சர்வீஸ் அழைத்து ப்ளாஸ்க்கில் காப்பி, இரண்டு கப்-சாசர் தருவித்துக் கொண்டான். நேரம் 6.30. ஏழரைக்குத்தான் கிளம்பவேண்டும். நிதானமாக இயங்கினான்.

அலமாரி ஹாங்கரில் மாட்டியிருந்த சட்டைப் பாக்கெட்டில் கைவிட்டான் பிர

கலிலியோ

காஷ். *'நீங்க சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கீங்க சார்!'*

காகிதப் பொட்டலம் வெளியே எடுத்தான். *'இதுல மூணு தினுசு மாத்திரை தேர்ந்தெடுத்துப் பொடி பண்ணியிருக்கேன். அம்சமா வேலை செய்யும்!'*

பிரித்த பொட்டலத்தில் வெளுத்த பழுப்பு நிறப் பொடி இரண்டு ஸ்பூன் அளவு இருந்தது. *'இது போதுங்க! பொடியைக் கலக்கிக் கொடுத்த அஞ்சாவது நிமிஷம் ஆசாமி சாமியாடத் தொடங்கிடுவான். பத்தாவது நிமிஷம் கண் செருகிரும். பதினைந்தாவது நிமிஷம் -'*

பிளாஸ்க் மூடி திறந்தான். ஆவி கிளம்ப மணத்த காப்பியினுள் பவுடரைக் கொட்டினான். *'பயப்படாதீங்க சார், மயக்கப்படுத் தும். சும்மா சொஸ்தமாத் தூங்குவாரு. அவ்வளவுதான். வேற ஒண்ணுஞ் செய்யாது. நீங்க சொன்ன ஒரு மணி நேரம் வரை மயக்கத்துக்கு கியாரண்டி!'*

திரும்பவும் மூடிவிட்டுக் காப்பி பிளாஸ்க்கை நன்றாகக் குலுக்கினான். *'எந்நேரமும் வந்திடுவாரு டாக்டர். ஜல்தியாப் பணத்தைக் கொடுத்துவிட்டு மூச்சு காட்டாமக் கிளம்பிருங்க.'*

காலையில் தான் நீட்டிய ஐந்நூறு ரூபாய்த் தாள்களைக் கண்டதும் கம்பவுண்டரின் கண்கள் ஆசையுடன் பிரத்யேகமாகப் பளபளத்ததை ஆயுளில் பிரகாஷ் மறக்கமாட்டான். பணத்தின் மகிமை பற்றி அப்பா சொன்னது உண்மைதான் என்று தற்போது அவனுக்குப் பட்டது. சடுதியில் துரோகம் இழைக்கத் தூண்டிய அதன் சக்தி....

பணம் என்ற அரிய சமாசாரம்தான் சிந்துவை விடுவிக்கவும் போகிறது.

காத்திருந்து ஆறே முக்காலானதும் தொலை பேசியில் ஏசிபி தேவதேவனை அழைத்தான்.

''உங்களை அவசரமாப் பார்க்கணும். சில தகவல்கள் இப்போ ஞாபகம் வந்திருக்கு சார்! என் மனைவியைக் கண்டுபிடிக்க உதவுமான்னு பாருங்க. இப்போ என் அறைக்கு வர முடியுமா சார்?''

''முடியுமாவாவது... காத்திட்டிருக்கேன்!'' - எதிர்முனையில் ஏ.சி.பி.

போனை வைத்து விட்டு அறையினுள் நர்வசாக நடை பயிலத் தொடங்கினான். குறித்த இடத்தில் பணம் வைத்ததும் காலை எட்டு மணிக்குச் சிந்து ஜாவை அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறான். தன் மனைவியை எப்போதடா பார்ப்போம் என்றிருந்தது. அவனின் ஒவ்வொரு அணுவும் ப்ரிய சிந்துவிற்காக ஏங்கித் துடித்தது.

'இட்ல் சர்ப்ரைசிங் சிந்து!'

'எதுப்பா? அறிவிக்காம நான் வந்ததா?'

'இல்லைம்மா. உன் ட்ரெஸ்... டாப்ஸ், மிடி டிராப்ஸ், பொட்டு, பூ எல்லாம் ஒரே மஞ்சள் மயம்! என்னாச்சு உனக்கு? மஞ்சள் நிறம் பிடிக்காதுன்னியே நேத்து?'

'பிடிக்காமத்தான் இருந்தது. ஆனா

பத்மா ரவிசங்கர்

உங்களுக்குப் பிடிக்கும்னு தெரிஞ்சதும் என் மனசு மாறிடுச்சு. இனிமே என் பிரகாஷுக்குப் பிடிச்ச எதுவும் எனக்குப் பிடிக்கும்.'

அவளின் ஆழமான காதல் நினைவில் அவன் மனம் விம்மியது. உனக்காக நான் எதுவும் செய்யலாம்.

கதவு தட்டப்படும்போது நேரம் 7.00. உள்ளே பிரவேசித்த ஏசிபி காக்கி உடுப்பிலிருந்தார். அவன் எதிரில் அமர்ந்து தொப்பி கழற்றி மடிமீது வைத்துக் கொண்டார். கையிலிருந்த 'பைக்' சாவியைப் பக்கத்திலிருந்த டீப்பாய் மேல் ஓசையின்றி வைத்தார்.

''ஜீப்புல வந்தீங்களா?''

''ம்கும். புல்லட். கர்டஸி: சாமுவேல்!'' என்று புன்னகை புரிந்தார்.

அவரின் ஒவ்வொரு சிறு அசைவிலும் துல்லிய நேர்த்தி, ஒழுங்கு.

''என்ன விஷயம் பிரகாஷ்?''

''சொல்றேன். அதுக்கு முன்னே காப்பி சாப்பிடுங்க'' என்றவன் அவர் தலையசைப்பிற்குக் காத்திராமல் பிளாஸ்க்கிலிருந்த காப்பியை இரு கப்புகளில் ஊற்றினான்.

''ரூம் சர்வீஸ் இருக்கையில் பிளாஸ்க்குல காப்பி வச்சிருக்கீங்க!'' என்று வியந்தவாறு ஒரு கோப்பையை வாங்கிக் கொண்டார் தேவதேவன்.

பிரகாஷ் படபடப்பை மறைத்துக் கொண்டு ''நான் ஒரு காப்பி பைத்தியம்! எப்பவும் பிளாஸ்குல ஸ்டாக் இருக்கும் சார்,'' என்றான்.

ஏசிபி சோபாவில் நன்றாகச் சாய்ந்து கொண்டு ''இப்ப சொல்லுங்க'' என்றவர் முதல் சிப் காப்பி பருகியபின் ''வெரி ஸ்ட்ராங்! இப்படிப் பருகினா உங்க உடம்புக்கு ஆகாது'' என்றார் அப்பாவியாக. ''காப்பி ஆறிடப் போகுது பிரகாஷ்.''

தேவதேவன் கோப்பையைக் காலி செய்து விட்டிருந்ததைப் பார்த்து மனசுக்குள் மகிழ்ந்து, ''இருக்கட்டும் சார். கொஞ்சம் ஆறின பிறகு குடிக்கிறேன்'' என்றான்.

''சரி. என்னமோ சொல்லணும் னீங்க?''

''சொல்றேன் சார்.... மூணு நாள் முன்னே சில்வர் கேஸ்கேடு போயிருந்தோம் சார். சிந்துஜாவுக்கு நீர் வீழ்ச்சின்னா ரொம்ப இஷ்டம். அங்கே நல்ல கூட்டம் இருந்ததாலே முதல்ல அவளைக் கவனிக்கலை நாங்க....'' சுவாரசியமாக ஆரம்பித்து ஆஸ்கார் பெற்றுத் தரும் நடிப்பு காண்பித்தான். காப்பியில் கலந்துள்ள மருந்து வேலை செய்ய ஐந்து நிமிடம் அவகாசம் தேவை.

இரண்டாம் நிமிடமே தேவதேவனிடம் தொடர்ச்சியாக கொட்டாவிகள் கிளம்பின. மூன்றாம் நிமிடம், ''கிட்டியா இருக்கு! வெழி சாழி....'' என்றார் குழறலாக. அடுத்த நிமிட முடிவில் கண்கள் தாமாகச் செருக, சடுதியில் உறக்க தேசம் சென்றுவிட்டார்.

பிரகாஷ் பரபரவென்று செயல்பட்டான். காலையில் வாங்கின காக்கிப் பேண்ட்டை எடுத்து அணிந்து கொண்டான். தேவதேவனின் காக்கி சட்டையைச் சிறிது சிரமப்பட்டுக் கழற்றியெடுத்து அணிந்து கொண்டான். ஏசிபி ஏறக்குறைய அவன் உயரம்தான். சட்டை சரியாக இருந்தது.

ஆழ்ந்த உறக்கம் அல்லது மயக்கத்திலிருந்த தேவதேவனைச் சோபாவிலேயே மெல்லச் சாய்த்துப் படுக்க வைத்தான்.

அவருடைய தொப்பியைத் தன் தலையில் பொருத்திக் கொண்டான். நிலைக் கண்ணாடி பிரதிபலித்த தன் உருவத்திற்கு உற்சாகமாக சல்யூட் வைத்து 'ஹலோ ஏசிபி' என்றான்.

ஹோட்டல் பார்க்கிங்கிலிருந்த புல்லட்டின் பில்லியனில் பணப் பெட்டியைப் பிணைத்துக் கட்டியபின் உதைத்துக் கிளப்பினான் பிரகாஷ்.

கேட்டிலிருந்த இரு கான்ஸ்டபிள்களும் பைக்கைக் கண்டதும் அதி அவசரமாக விறைப்புக்கு வந்து சல்யூட் அடித்தார்கள்.

குளிர் இருளில் புல்லட் விரைய பரபரப்பையும் மீறி அவனுள் ஒரு வித்தியாச உணர்வு ஊற்றெடுத்தது. போலீஸ் மூக்கடி

திருடன் : நீங்கதான் லஞ்சம் வாங்கி மாட்டிக்கிட்டு சஸ்பென்ஷன்ல இருக்கீங்களே, இப்ப ஏன் சார் மாமூல் கேக்கறீங்க?

போலீஸ் : சஸ்பென்ஷன்ல இருக்கும்போது பாதி சம்பளம் உண்டு... தெரியுமில்லே....? எடு, பாதி மாமூலை!

- சீர்காழி வி. ரேவதி



SASI / 13 / 92

யிலேயே நிகழ்த்தும் சாகசத்தில் ஒரு த்ரில் இருக்கத்தான் செய்கிறது. இந்நாள் வரை அனுபவித்தறியாத பரவசம் இது.....

இறக்கத்தில் ஐந்தாவது கிலோ மீட்டரில் ஆளரவமற்ற பிரதேசத்தில் சாத்தியிருந்த ஒரு பாழடைந்த கோயில் வாசலில் பெட்டி வைத்துவிட்டு அவசர அவசரமாக அவன் அறைக்குத் திரும்பியபோது -

தேவதேவன் விழித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் விழித்திருப்பார் போலும், களைப்பான கண்களால் இவன் உடுப்பைப் பார்த்தார். அவருக்கு விஷயம் புரிந்து விட்டது என்பது அவர் முகபாவத்திலேயே தெரிந்தது. அவன் சென்று திரும்ப அரைமணிதான் ஆகியிருந்தது. அதற்குள் அவர் தெளிந்துவிட்டிருந்தது ஆச்சரியம் தான்.

''சாரி சார். எனக்கு வேறு வழி தெரியலை... பத்து லட்சம் சுலபம் எனக்கு. போலீஸ் கிட்டச் சொன்னா சிந்துஜாவைக் கொன்னுருவேன்னு சொன்னான். நான் எப்படி ரிஸ்க் எடுக்க முடியும் சொல்லுங்க....?''

''தப்பு பண்ணிட்டிங்க பிரகாஷ்! நீங்க ஒரு செல்வந்தரோட மகன்; பொன் முட்டையிடும் வாத்து. பத்து லட்சத்தோட சிந்துஜாவை விட்டு விட டான் கலிலியோ ஒன்றும் முட்டாளில்லை. திரும்பத் திரும்ப அணுகுவான் பாருங்க.''

கோபப்படுவார் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக அவரின் ஸ்னேகமான குரல் பிரகாஷைக் குழப்பியது.

அவனைத் தம் உடையில் பார்த்ததும் தேவதேவனுக்கு முதலில் கோபம் வந்தது உண்மைதான். ஆயினும், அவன் மனைவி கடத்தப்பட்டுள்ளதை நினைத்துப் பார்த்து அடக்கிக் கொண்டார். மேலும் - சிந்துஜாவைக் கடத்தியவன்தான் அவர் குறி; குற்றவாளியைப் பிடிக்கப் பிரகாஷின் ஒத்துழைப்பும் தேவை என்று கணக்கிட்டார்.

''போலீஸை எப்பவும் குறைச்சு மதிப்பிடாதீங்க பிரகாஷ். சின்சியரா உங்களுக்கு உதவத்தான் நாங்க இருக்கோம். உங்களால அந்தக் கிரிமினலைத் தனியா ஹாண்டில் செய்ய முடியாது. ஸோ, அடுத்த தடவை அவன் தொடர்பு கொள்றப்போ எனக்கு இன்ஃபார்ம் பண்ண மறக்காதீங்க.''

பாரிலிருந்து விடுபட்டு பத்து மணி அளவில் வந்த ராஜசேகர் விஷயம் கேள்விப்பட்டு மகிழ்ச்சியாகி, ''இனி கவலையில்லைடா. காலையில சிந்துஜா வந்துருவா பாரு,'' என்றார்.

அப்போது போன் ஒலித்தது. எடுத்துக் கேட்டு விட்டு வைத்த ராஜசேகர் மேலும் பரவசமாகி, ''ஒரு முக்கியமான காண்ட்ராக்ட் படிஞ்சிருச்சுப்பா! எல்லாம் என் மருமக திரும்பற நேரம் பாரு! கையெ முத்திட நாளை அதிகாலையில நான் மெட்றாஸ் கிளம்பணும். அந்த ஃபாரினர் நாளைக்கே திரும்பிடறானாம்.''

படபடப்பு-பயம்-மகிழ்ச்சி-கவலை அனைத்து உணர்வுகளும் அதீதமாக இருந்ததில் இரவு முழுவதும் பிரகாஷுக்கு உறக்கம் வரவில்லை.

வியாழன் அதிகாலை ஆறுமணி அளவில் ராஜசேகர் கிளம்பினார். காண்ட்ராக்ட்

சுகமான

இமயத்தின் பாரமாய் அழுத்தும் சோகமான சுமைகள்...
(தொடக்கத்திலேயே தலைப்பை என்னதான் நியாயப்படுத்தினாலும்!)

அந்த அழுத்தத்தின் விளைவுகள் மகாமக நெரிசலாய் அந்தக் குடும்பத்தின் ஒவ்வொருவரையும் சூழ்ந்து மூச்சுத் திணறச் செய்ய -

அவர்களைக் காப்பாற்ற பார்த்திபன் எழுப்ப முயலும் பாதுகாப்புச் சுவர் விரிசல் கண்டு உடைந்து சிதற.....

துயரங்கள் - மேலும் துயரங்கள் என்று கதாசிரியர் அடுக்கடுக்காய்ச் சோகவலையைப் பின்னிக் கொண்டே போக, முடிவில் அதில் சிக்குண்டு திணறிப் போவது கதை மட்டுமல்ல - அவரும்தான். (கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் : பார்த்திபன்.)

இந்தச் சோகக் கோடையின் தீவிர வெப்பத்தை இனியும் தாங்க முடியாது என்று தோன்றும் தருணங்களில் எல்லாம் குளிர் தருவாய் இளைப்பாறுதலுக்கு வழிவகுத்துக் கொடுப்பவர்கள் :

1. கிளி கொஞ்சும் மழலைப் பேச்சுடன் தந்தச் சிலையாய் நடமாடும் பேபி ஸ்ரீதேவி ('ரிக்ஷா மாமா'வில் அறிமுகமான நட்சத்திர வாரிசு.)

2. 'உலகம் எக்கேடு கெட்டால் என்ன, எனக்கு என் காரியமே குறி' என்கிற ரீதியில் எல்ஐசி பாலிசியை எவர் தலையில் கட்டலாம் என மோபெட்டில் அலைந்து திரியும் ஷாலி. (மிளகாய் பஜ்ஜியாய் உறைக்கும் பளிச் பளிச் வசனங்கள்.)

சுமைகள்



3. பத்து வார்த்தைகளே பேசினாலும் படபடவெனப் பொரிந்து தள்ளும் பூர்ணம் விஸ்வநாதன். (வசனமே இல்லாமல் ஒரு கருத்தை எவ்வாறு வெளிப்படுத்தலாம் என்றும் அவர் நடித்துக் காட்டும் விதம் அட்டகாசம்.)

'ஆத்மா அமைதி இயக்கம்' என்கிற போர்வையில் நடமாடும் பயங்கரவாதிகள் கூட்டம், அவ்வப்போது பயன்படுத்தப்படும் ஏகே 47, உச்ச கட்டத்தில் ஓர் உயிரைப் பலி கொள்ள மனித குண்டு இத்யாதி அண்மைக்கால நாட்டு நடப்புகளின் பிரதிபலிப்புகள். இவற்றின் பின்னணியில் சூத்ரதாரியாக அமர்த்தல் நடைபோடுகிறவர் ராதாரவி. (மீண்டும் ஒரு 'அமரன்'?)

சென்னை நகரின் சந்தடி நிறைந்த போக்குவரத்து நெரிசல்களின் மத்தியில் இடம் பெறும் ஆடல், பாடல், ஓடல், சாடல் போன்றவை மசாலா ரசிகர்களுக்கு வேட்டை.

துயரங்களின் சுமையை வலியுறுத்த வேண்டும் என்பதற்காகவே நிகழ்ச்சிகளை மிகைப்படுத்திக் கொண்டே போய், அதன் தொடர்ச்சியாகக் கதாநாயகனுக்கு ரத்தப் புற்று நோயைப் புகுத்தி அவன் உயிருக்கு ஆறு மாத கெடுவிதித்து, வேறு வழியே இல்லாமல் ஒரு சோக முடிவுக்கு அடித்தளம் அமைத்துவிட்டதில் கதாசிரியர் விட்டிருப்பது கோட்டை.

– சி. ஆர். கே.

அவசரமென்றார். இவர்களின் ஹனி மூனின் குறுக்கே தாம் எதற்கு என்று சிரித்தார். மீதி இருந்த பத்து லட்சத்தில் ஒரு சில நோட்டுக் கட்டுகளை எடுத்துக் கொடுத்து, 'என்ஜாய் யுவர் செல்ஃப். பரிசு வாங்கிக் கொடுத்து மனைவியைச் சந்தோஷப் படுத்து' என்று கண்ணடித்தார். அவனுடைய காரை மறுத்துவிட்டு டாக்சி பிடித்துப் புறப்பட்டார்.

அவசரமாகக் குளித்து முடித்து சிந்துஜாவிற்குப் பிடித்த உடைகளை அணிந்து கொண்டு பரபரப்பாகக் காத்திருந்தான் பிரகாஷ். அவனுள் ஆயிரம் ஆர்வ ஒத்திகைகள்; ஆருயிர் வந்ததும்....

எட்டரையாகிவிட்டது. சிந்துஜா இன்னமும் வரவில்லை. படபடப்புத் தாங்காமல் ரிசப்ஷனுக்குச் சென்று வாசலையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் - வெகு நேரம்...

சிந்துஜா வரவே இல்லை. மாறாக, மாலை அவளைக் கடத்தியவனிடமிருந்து போன் வந்தது....!

(தொடரும்)

"ஏம்பா செல்வராஜ் இன்னிக்குக் கேண்டீன்ல சூடா என்ன போட்டுருக் கான்?" குருமூர்த்தி பியூன் செல்வராஜைக் கூப்பிட்டுக் கேட்டான்.

"மெது பக்கோடா சார்! வேணுமா? வாங்கியார்ட்டா?" செல்வராஜ் குருமூர்த்தியிடம் சொல்லிக் கொண்டிருந்தபோதே, பக்கத்து சீட்டில் உட்கார்ந்திருந்த அருணாசலத்திற்கு வாயில் சொற்ப டி.எம்.சி அளவு எச்சில் ஊறியது. அதை அடக்கு அடக்கு என்று அவருள் எச்சரிக்கை எழுந்தது. தனக்கும் ஒரு மெது பக்கோடா வாங்கிவரச் சொல்லி விடுவார்தான் அருணாசலம். இருந்தாலும் இந்தப் பாழாய்ப்போன பில் கிளார்க் ஜெயபாண்டியன் பார்வையில் அது பட்டுவிட்டால் என்ன செய்வது என்று பயந்தார்.

கடம் போன்று காத்திரமுடன் வழு வழுப்பாக அமைந்திருந்த அருணாசலத்தின் அடிவயிற்றிலிருந்து ஒரு ஆதங்கமான பெருமூச்சு வெளிவந்தது. இருபது நாட்களாக அவர் நாக்கு செத்துப் போயிருந்தது. எத்தனை உற்சாகமாக அதற்கு ஓயாமல் வேலை கொடுத்திருக்கிறார் அருணாசலம்! காலையில் டிபன் காப்பி சாப்பிட்ட வாயோடு ஆபீஸ் கிளம்பினாரானால், பஸ் ஸ்டாப் பெட்டிக் கடையில் ஒரு பலகை அளவு கடலை பர்பியை வாங்கிக் கொள்வார். பஸ்ஸின் இடிபாடுகள் நடுவே அவர் பல்லின் இடிபாடுகளில் பர்பி பாடு படும். ஆபீஸ் போனதும் டேபிள் டிராயரைத்திறந்து அதில் எப்போதும் ஸ்டாக் வைத்திருக்கும் பொன்னிற கோதுமையால் செய்யப்பட்ட மொறுமொறு பிஸ்கட் இரண்டுடன் வேலையை (வாயின்?) ஆரம்பிப்பார். உடனே பத்தரைமணிக்குத் தயிர் வடை அல்லது தனி வடையுடன் கேண்டீனில் டீ. திரும்பிப் பார்த்தால் டிபன் காரியர் சாப்பாடு; அதற்குத் தொட்டுக் கொள்ள அன்றைய காண்டீன் ஸ்பெஷல். மீதமுள்ள ஆபீஸ் நேரத்தில் மிக்சரும், பஜ்ஜியும் விழுங்கியிருந்தாலும் வீடு திரும்பும் போது ஆனந்தபவனில் நுழைந்து ஒரு அடை அவியல் சாப்பிடாவிட்டால் அருணாசலத்திற்குச் சரிப்படாது. இது போதாதென்று வீட்டுக்கு லேட்டா போனா, ஸ்வீட்டோட தான் போகணும் என்ற விளம்பர மந்திரத்தை விடேன் தொடேன் என்று கடைப்பிடிப்பார்.

வீட்டில், இவர் சங்கடப்படக்கூடாதே என்று சம்படங்களில் முறுக்கு, சீடை, சிப்ஸ் என்று அவருடைய சம்சாரம் அடைத்து வைத்திருந்தாலும் விடுமுறை நாட்களில் இதைச் செய் அதைச் செய் என்று அவளைச் சமையலறையிலேயே அடைத்து வைக்கும் நிலையை உண்டாக்கிவிடுவார் அருணாசலம்.

இப்படி, நொறுங்கத் தின்றால் நூறு வயது என்பதை தவறாகப்புரிந்து கொண்டு, நொறுக்குத் தீனியை விடாமல் தின்று கொண்டிருந்தவர் சமீபகாலமாக இந்த நாயும் வாலை ஆட்டுமா என்பதுபோல் நாவை அடக்கி வாசித்துக் கொண்டிருந் தார். இதற்குக் காரணம் ஜெய பாண்டியனின் ஹார்ட் உபத்திரவம்.

ஜெய பாண்டியனின் ஹார்ட் உபத் திரவத்திற்கும் அருணாசலத்தின் பயத்திற்கும் சம்பந்தம் இருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் ஜெயபாண்டியனுக்கு 'மைல்ட் ஹார்ட் அட்டாக்' வந்தது. மருத்துவ விடுப்பிலிருந்துவிட்டு வேலைக்குச் சேர்ந்தவர் அருணாசலத்திடம் பீதியைக் கிளப்பினார்.

"யோவ் அருணாசலம், கொஞ்சம் தீனியைக் குறைச்சு சாப்பிடய்யா உன்னை மாதிரி தின்னு தின்னுதான் எனக்கு ஹார்ட் டிரபிள் வந்தது. கண்ட கண்ட ஆயில்ல செய்றதையெல்லாம் தின்னதாலதான்

அருணாசலத்தின் அச்சம்!

அகிலா கார்த்திகேயன்

வேகமாய் நடந்து பிடித்து நிறுத்தினான்.

''அனிதா என்னாச்சு உனக்கு? பேசாம போறியே?''

''எங்கூட பேசாதீங்க அங்கிள்...''

ஒரு நிமிடம் துவண்டு போனான் முருகேசன்.

''ஏம்மா?''

''மம்மி உங்களோட போறதைப் பாத் தாங்களாம். ஒரே திட்டு நேத்திக்கி...''

அனிதா தன்பாட்டுக்கு நடந்து கொண் டிருந்தாள். முருகேசன் நின்று விட்டான்.

முருகேசனுக்குத் தனித் தீவில் ஒற்றை ஆளாய் நடப்பது போலிருந்தது. எப்படி இது? சொந்தம், சுற்றத்தையெல்லாம் எங்கோ விட்டு விட்டு சாப்பாட்டுக்கும், சம்பாத்தியத் துக்கும் நாயாய் அலைந்து தன்னை நிலை நிறுத்திக் கொள்ளத் துடிக்கும் இளை ஞர்கள்... எல்லாமே தீவிரவாதிகளா? கெட்ட வர்களா? பாசம், அன்பு போன்ற சென்டி மென்டுக்கெல்லாம் இடம் கொடுக்கக் கூடாத கொரில்லாப் படையா? முருகேசனுக்குப் புரியவில்லை. தான் அதிகமாக எதிர்பார்க் கிறோமோ என்று தோன்றியது.

மனசு கனத்தது.

மானேஜரிடம் லீவ் கேட்க நாலைந்து முறை அலைந்து கடைசியில்...

''போன மாசம்தானே ஒரு நாள் லீவ் எடுத்தே?'' என்றார்.

முருகேசன் பேசவில்லை. எது பேசி னாலும் அது தன் மீதே திருப்பி விடப்படும் என்று அவனுக்கு அனுபவத்தில் தெரியும்.

''தஞ்சாவூர்தானே நீ?''

''ஆமாம் சார்! தஞ்சாவூர் பக்கம்... திருவையாறுன்னு...''

''அதெல்லாம் சரி! எவ்வளவு நேரம் ஆகும் போக...''

''எட்டு மணி நேரம்...''

''சரி! உனக்கு லீவு தரேன்... ஆனா அஞ்சு நாளில்லே... இன்னிக்கி சாயந்திரம் கிளம்பு... நாளைக்குக்காலையில ஊருக்குப்போயிடுவ இல்லையா... நாளைக்கு ஃபுல்லா வீட்ல இரு.. நைட் கிளம்பி காலையில வந்துரு... ஒரு நாள் லீவு போதுமில்ல... ஏன்னா 'டெஸ்பாட்சஸ்' இருக்கு... நீ இல்லாம முடியாது...''

வெறுப்பின் விளிம்பில் முருகேசனுக்கு இலேசாகக் கண்ணில் நீர் துளித்தது. பேசக் கூட தெம்பில்லை.

இவன் முகத்தில் என்ன படித்தாரோ என்ன தோன்றியதோ...

''இல்லைன்னா ஒண்ணு செய்யலாம்... தங்கையனைக் கூப்பிடு. அவர் மேனேஜ் பண்ணிப்பாரா கேளு... 'ஓகே'ன்னா நாலு நாளா எடுத்துக்க'' என்றார்.

தங்கையனைக் கேட்க,

''நோ ப்ராப்ளம்!'' என்றார்.

தங்கையனுக்குக் கோவில் கட்டிக் கும்பிடலாம் போல இருந்தது அவனுக்கு.

நாலு மணிக்கே மனசு இறக்கை கட்டிக் கொண்டது. சந்தோஷத்தில் கண்கள் விரியும் தங்கையும், அம்மாவும், அப்பாவும் கண் முன்னே... தங்கைக்கு ஒரு செட் டிரஸ்ஸும், அம்மாவுக்குப் புடைவையும் எடுத்துக் கொள்ள வேண்டும். பணம் போதுமா? தெரியவில்லை. சமாளித்துக் கொள்ளலாம். வந்தபின் காலை, இரவுச் சாப்பாட்டைக் கொஞ்சம் 'அட்ஜஸ்ட்' செய்து கொண்டால் போயிற்று.

ரூம் கதவு திறக்க, விசிறியடிக்கப்பட்ட கடிதம் மூலையில். தங்கையின் குண்டு குண் டான கையெழுத்தில்.

'...தெற்குத் தெரு ஆறுமுகத்திடம் அப்பா போன வருடம் கடன் வாங்கிய ஆயிரம் ரூபாயை அவர் கேட்டிருக்கிறார். நடுச் சாலை யில் நாகரீகமில்லாமல் அவர் திட்ட அப்பா வுக்குக் கோபம் வந்து தகராறாகி விட்டது. ஒரு வாரத்தில் திருப்பித் தருவதாக அப்பா சொல்லி விட்டார். ஐந்நூறு ரூபாய் புரட்டி விட்டார். மீதி ஐந்நூறு நீ அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும்...

பி. கு. : 'நீ ஊருக்கு வர வேண்டும்' என்று அலைந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டாமென்று அம்மா எழுதச் சொன் னார்கள்....'

சூட்கேசைப் பிரித்துக் துணிகளைக் கொடியில் போடத் துவங்கினான்.

❑ ஒரு புதிய கண்டுபிடிப்பு மார்க்கெட்டுக்கு வரவிருக்கிறது. வழி யில் எவரேனும் தாக்கித் திருடவோ, பலாத்காரம் செய்யவோ முயற்சி செய்தால், கைவசம் உள்ள ஒரு கார்டை மடக்கினால் போதும். எதிராளியை நோக்கி மடக்கப்படும்போது அதனுள் ஒரு காப்ஸ்யூலிலிருந்து துர் நாற்றம் மிக்க திரவம் அவன் மேல் பீய்ச்சி அடிக்கும். துர்நாற்றம் இரு வாரங்கள் முதல் ஒரு மாதம் வரை அந்த நபரின்மேல் வீசிக் கொண்டே இருக்கும். ஆள் அடை யாளம் காணப்படுவான்.!

ஆதாரம் : பிஸினஸ் இந்தியா
தகவல் : வசந்தா சாரி



10

பிரகாஷ் குழம்பியிருந்தான்; சினந்திருந்தான்; சோர்ந்திருந்தான்; துக்கத்திலிருந்தான்; வெறுத்திருந்தான். காத்திருந்து கண்கள் பூத்துப் போயின. சிந்துஜா செல்லம் வரவில்லை.

இடையில் ஒருமுறை தேவதேவன் வந்து விசாரித்து விட்டுச் சென்றார்.

இப்போது என்ன செய்வது? ஏன் அனுப்பவில்லை? இடையில் ஏதும் சிக்கலா? இந்தப் பரந்த உலகில் எங்கே என்று என் கண்மணியைத் தேடுவேன்?

சிந்துவைச் சந்தித்தது, பழகியது, காதலித்தது, ஸ்பரிசித்தது எல்லாம் நினைவில் வரிசையாக வந்து வாட்ட, தன் அறைக்கும் ரிசப்ஷனுக்குமாகக் காலையிலிருந்து அலைந்தவாறிருந்தான்.

துல்லியமாக மாலை ஆறுக்கு அடித்த அறை போனில் ரிசப்ஷனின் சிவப்பு போனுக்கு வருமாறு ஒற்றை வரி ஒலித்தது; ஓடினான்.

''உன் பணம் கிடைச்சுது துரை. ரொம்ப நன்றி.''

''நன்றி இருக்கட்டும். என் சிந்து எங்கேடா?''

''பத்திரமா இருக்கா துரை!''

''ராஸ்கல்!'' என்றான் ஆத்திரம் பொங்க. ''பணம் வெச்சதும் அனுப்பறேன்னு சொன்னியே...''

''இப்பவும் அதையேதான் சொல்றேன்!''

''வாட் டு யூ மீன்?'' என்றான் புருவம் சுருங்க.

''இன்னொரு பத்து லட்சம் வெட்டிரு துரை. 'உன்' சிந்துவை அனுப்பி வைக்கிறேன்.''

சிந்து சிக்கியுள்ள சதிச் சூழல் மனத்தைத் தாக்க, சட்டென்று அவனிடம் ஒரு தீர்மானம் தெரிந்தது; ஒருவித அச்சுறுத்தும் அசாதாரண அமைதி அவனிடம் நிலவியது. புயலுக்கு முன் வரும் அமைதி போல...

''யோசிக்காதே பிரகாஷ்... உனக்கு வேறு சாய்ஸ் இல்லை. பாரு உன் துரதிர்ஷ்டம் எனக்குப் பெருத்த பணமுடை. இந்த தபா பணத்தைக் குடுத்துரு; சிந்துஜாவை விடுவிச்சுடறேன்.''

''ஓ.கே.'' என்றான் மெல்லிய குரலில். அவனுடைய வழியில் செல்வது போல் சென்று... ''இப்ப மட்டும் விடுவிச்சுருவேன்னு என்ன கியாரண்டி?''

எதிர் முனையில் அவன் சிரித்து விட்டு, ''என் வார்த்தையை நீ நம்பித்தான் ஆகணும் துரை. என் மெர்சில நீ இருக்கே, புரியுதா? நான் சொல்றபடி கேட்டாத்தான் உன் சம்சாரத்தைத் திரும்ப நீ பார்க்க முடியும்!'' என்றான்.

''**இ**ந்த முறை பணம் எப்போ, எங்கே வைக்கணும்?''

''நாளை சொல்றேன் துரை. ஆங்! அப்புறம் இந்த விஷயத்தைப் போலீஸ் கிட்டே சொல்லிராதே. சொன்னேன்னு வச்சுக்க...'' (மௌனம்) ''உன் சிந்துவை உடனடியாகக் கொல்ல மாட்டேன். முதல் தவணையா அவளோட விரலை வெட்டி உனக்குப் பார்சல் அனுப்புவேன்! அப்புறம் தினம் ஒவ்வொரு அங்கமா-''

''போலீஸுக்குப் போக மாட்டேன்!'' என்றான். பற்களைக் கடித்தவாறு அறைக்குத் திரும்பினான்.

தேவதேவன் சொன்னது சரிதான்.

தன் சொத்து முழுவதையுமே கொடுத்தாலும் சிந்துஜாவைச் சதிகாரன் டான் திருப்பி அனுப்ப மாட்டான் என்று பிரகாஷுக்குத் தோன்றி விட்டது. ஆனால் இப்போதும் இந்த விஷயத்தை ஏசிபியிடம் சொல்வதில்லை என்று முடிவு செய்து கொண்டான். போலீஸுக்குத் தெரிந்தால், உத்தரவாதமாக உடனடியாக சிந்துவைத் தீர்த்து விடுவான் டான்... மேலும், போலீஸ் வழிகள் ஒரு வரைமுறைக்கு உட்பட்டவை. ஆனால் நான்...

மேசை மேலிருந்த போட்டோவில், உயிர்த் துடிப்புடன் சிரிக்கும் சிந்துஜாவைப் பார்த்தான். 'இனி உன்னை உயிருடன் பார்க்கவே முடியாதாடியர்?' துக்கத்தில்



அமிழ்ந்தது ஒரு கணம்தான். 'நோ!' - எரிமலையாக எண்ணங்கள் எழுந்தன.

அவனுடைய தாத்தா பிரிட்டிஷ் இன்ஸ்பெக்டர் துரையின் கை வெட்டியவர் என்று கேள்விப்பட்டிருக்கிறான். அவருடைய பரம்பரை நான். என் மனைவியை ஒருவன் கடத்துகிறான்... சவால் விடுகிறான்... என் கோபத்தின் சக்தி அறியாது என்னைச் சாமானியன் என நினைத்து விட்டான் போல... தூங்கும் புலியை இடறி விட்டு விட்டான் டான்...

பிரகாஷ் 'யார்' என்பதைக் கலிலியோவுக்குக் காட்டப் போகிறேன்... அசகாய நடிப்பிற்கு, சாதுர்யத்திற்கு, வீரத்திற்கு வேளை வந்து விட்டது. என் சிந்துவை மீட்பது உறுதி. உலகின் எந்த மூலையிலிருந்தாலும் அந்த டானைத் தேடி...

அவனுள் ஏதோ ஒரு ஆதிகால ஜீன் விழித்துக் கொள்ள, கட்டுக் கடங்காத ஆத்திர ஜுவாலையொன்று கிளம்பியது. உணர்ச்சிவசப்பட்டிருந்ததில் அவனுக்கு மூச்சிரைத்தது; கண்களில் ஆபத்து சுடர் விட்டது. யார் அவன்?

ஒரு பெல் பாய் அழைத்துப் பழைய தினசரிகள் தருவித்துக் கொண்டான். டான் பற்றிய செய்திகளைக் கவனமாக அலசினான். சோமையா என்ற பெயர் தாங்கிய டான் கலிலியோ புகைப்படத்தை இமைக்காமல் பார்த்தான். இவன்தான் என் எதிரி. சகலருக்கும் மண் தூவி ஏமாற்றிய டானுக்கு என் கையால்தான் முடிவு போல... குரூரமாகச் சிரித்துக் கொண்டான். 'வருகிறேன் டான் சோமையா...'

திட்டமிட்டான். தான் பணம் வைத்து விட்டு மறைந்து கொள்ள கொடைக்கானலின் மரங்களும், குத்துச் செடிகளும், இருளும் துணை செய்யும். ஆனால் பெட்டி எடுத்துப் போக சத்தியமாகச் சோமையா வர மாட்டான். வேறு யாரேனும் உதவியாளனாக இருக்கலாம். இருக்கட்டும். வருபவனைப் பின்பற்றி...

ஆனால் மறுநாள் - வெள்ளி - காலை வந்த போன், பிரகாஷின் திட்டத்தைத் தகர்த்து விட்டு அவனைக் குழப்பியது.

''என்ன துரை பணம் ரெடி பண்ணிட்டியா?''

''தயார்தான்'' என்றான் உணர்ச்சியில்லாத குரலில். ''புதன் இரவு வெச்ச அதே இடந்தானே?''

''இல்லை துரை! இங்கே இனி பாதுகாப்பு இல்லை. போலீஸ் விழிச்சுக்கிட்டிருக்கு. நாங்க இடத்தை மாத்திட்டோம். எங்கே பணம் வைக்கணும்னு போன்ல முடிவா சொல்றதுக்கில்லை. தவணை முறைல தகவல் வரும் துரை. நாளை நைட் கிளம்பு.''

''எங்கே?''

''மதுரை! உன்னை யாராச்சும் ஃபாலோ செய்யறாங்களான்னு முதல்ல உறுதி செய்துக்கணும் துரை!''

எதிராளியின் எச்சரிக்கையில் வியந்தான்.

''மதுரைல அறை எடுத்துத் தங்கு பிரகாஷ். சமயம் பார்த்து என் ஆள் உன்னைத் தொடர்பு கொள்வான். 'கழுகைக் காணோம்'னு எங்க ஆளு சொன்னதும் நீ 'விலகுது விபரீதம்'னு சொல்லணும். சங்கேத வார்த்தை! புரியுதா துரை?''

''ஊம். ஊம். போன் வச்சிடறேன்'' என்றான் அவசரமாக.


''என்னா துரை பதற்றம்?''

''டிஎஸ்பி சாமுவேல் என்னைப் பார்த்து வந்துக்கிட்டிருக்கார்!''

''நல்லது! அந்தப் பயம் இருக்கட்டும்!''

போன் வைத்து விட்டு நிதானமாகத் திரும்பினான். ''ஹலோ சார்'' என்று இயல்பாகப் புன்னகைத்தான்.

''என்ன காலங் காலையில போன்?''



பத்மா ரவிசங்கர்

''அப்பா!'' என்றான் பதற்றப்படாமல், ''எங்கே ஏசிபி?''

''அடடா! உங்களுக்கு விஷயம் தெரியாதா? நேத்து நைட் தேவதேவனுக்குத் திடீர்னு ஹார்ட் அட்டாக் ஆகி குட் ஹெல்த் நர்சிங் ஹோம்ல அட்மிட் செய்திருக்கோம்.''

''மை காட்!'' என்றான். ஒரு திறமைசாலியான, நல்ல மனிதருக்கு இவ்வாறு நேர்ந்ததில் வருத்தமும், முக்கியமான தடை திடீரென்று நீங்கியதில் மகிழ்ச்சியும் ஒருசேர உணர்ந்தான். ஏசிபியைக் கொடைக்கானல் குளிர் பாதித்துவிட்டதோ...

''இளைஞரு. திடகாத்திரரு. இருந்தும் பாருங்க. அட்டாக்கு'' என்றார் சாமுவேல் பெருமூச்சு விட்டு.

''மேல் தோற்றம் வச்சு நம்ப முடியாது போல!''

''இந்த டான் கலிலியோ கேஸ்ல சோறு தண்ணி இல்லாம ஓவரா ஸ்டிரெயின் பண்ணிக்கிட்டதால வந்த வினை. பாவம்... சரி, அது இருக்கட்டும். நான் வந்த விஷயமே வேறே. கிட்நாப் செய்தவங்க திரும்பவும் காண்டாக்ட் செய்தாங்களா?''

''இன்னும் இல்லை சார்!''

''ஏதும் மறைக்கலையே?''

''இல்லை. ஒரு தடவை பட்டது போதும் சார்.''

''உங்களைக் காக்க வெச்சு நர்வசாக்கிட்டுத் திடீர்னு போன் செய்வான் பாருங்க. 'மறக்காம' எனக்குத் தெரிவியுங்க; என்ன...''

''செய்யறேன் சார்'' என்றவன் கெஞ்சலான குரலில் ''எப்படியாவது என் மனைவியைக் கண்டுபிடிச்சுக் கொடுத்துருங்க'' என்றான் தன் நடிப்பைப் பூர்த்தி செய்து.

''ஷ்யூர்'' என்றவர் விரல் சொடுக்கி, ''சொல்ல மறந்துட்டேனே! ஹோட்டல் வாசல்ல பாரா பார்த்த கான்ஸ்டபிள் ஸுக்குக் கவனம் பத்தலைன்னு அவங்களை ஸ்டேஷனுக்கு அனுப்பிட்டுப் புதுசா ஒரு எஸ்.ஐ. போட்டிருக்கேன். மூணு பேருக்குச் சமானமானவரு; நம்பகமானவரு'' என்றார்.

பிரகாஷ் பிரேக்பஸ்டிற்குப் பிறகு கிளம்பினான். பின்பற்றிய புது ஆசாமியைக் கணித்தான். எஸ்.ஐ. நடுத்தர வயது. பெரிய புஸ்தி மீசைக்குப் பொருந்தாத மிதமான உடல்வாகு. அவர் இடுப்பிலிருந்த ரிவால்வரைக் கவனித்தான். நாளை இவரை...

'குட்ஹெல்த்' நர்சிங் ஹோமில் தனியறை அது. ஈசிஜி மானிட்டரில் பச்சை வரி ஓடி இதய ஆரோக்கியம் கண்காணிக்கத் தேவதேவன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார். அருகிலிருந்த நர்ஸ், அபாயக் கட்டம் தாண்டி விட்டதாகத் தெரிவித்தாள். கொண்டு சென்ற மலர்க் கொத்தை வைத்து விட்டுத் திரும்பினான் பிரகாஷ்.

மதியம் போன் செய்த ராஜசேகருக்கு ஓரளவு மட்டுமே விஷயம் சொன்னான். விசனமானார். வருவதாகச் சொன்னவரைத் தடுத்து விட்டான். சமாளித்துக் கொள்வானாம். இருக்கிற பணம் போதுமென்றான். மேலும் அவசியம் எனில் போன் செய்வானாம்.

மறுநாள் - சனி - இரவு 9:00. பிரகாஷ் ஏறக்குறையத் தயாராகி விட்டான். அணிந்திருந்த ஜெர்கினின் ஜிப் இழுத்து விட்டுக் கொண்டான். முன் தினம் வாங்கி வந்திருந்த பட்டன் கத்தி எடுத்து ஜீன்ஸ் பேண்ட் பாக்கெட்டினுள் போட்டுக் கொண்டான் ; அந்தச் சிறிய ஹாக்சா பிளேடை அணிந்திருந்த எலாஸ்டிக் கால் சாக்சினுள் செருகிக் கொண்டான். அவசரத்திற்கு உதவும் இரகசிய ஆயுதம் இந்த ஹாக்சா என்று நினைத்தான்.

தான் எடுத்திருப்பது பெரிய ரிஸ்க் என்பதை அவன் அறிந்திருந்தான். சிந்துவை மீட்பதற்குத் தன் உயிரைப் பணயம் வைத்துப் போராடுவது தவிர, தனக்கு வேறு வழி இல்லை.

'என் உயிரான சிந்து ஆபத்தில்...' என



– எஸ். முகம்மது யூசுப்



ஆசிரியர் : ஏண்டா! ஆற்றுக்கு அருகே வாழ்றே; நீச்சல் கற்றுக் கொள்ளாமல் இருக்கியே?

மாணவன் : இதிலென்ன சார் ஆச்சர்யம்? உங்களை எப்பவும் காற்றுச் சூழ்ந்திருக்கு; அதனால நீங்க பறக்கக் கற்றுக்கிட்டீங்களா என்ன?

– ஏ. ஆர். எம். இஸ்மாயில்

அவன் மனம் சதா உச்சாடனம் செய்ய, வலுவான அவன் உடல் முறுக்கேறிக் கொண்டது. தீட்டப்பட்ட மூளையுடன், உச்ச பட்ச எச்சரிக்கையுடன் புறப்பட்டான். புற்பாதையில் நடந்தான். எஸ்.ஐ.யை முடக்கிய பின்தான் கார் எடுக்க வேண்டும். அவன் கிளம்பிக் காரில் செல்வதை அவர் அறியக் கூடாது. முதலில் சப்-இன்ஸ்பெக்டரை இருட்டுக்கு இட்டுச் செல்ல வேண்டும். பிறகு... பிறகு...

ஹோட்டல் வாசலின் வரவேற்பு வளைவைக் காஷுவலாகக் கடந்தான். அவன் கைகள் பாக்கெட்டினுள். இரவு வாக் போல - நிதானமாக நடந்தான்.

நிலவு முகவரி தொலைத்திருந்ததில் பூரண இருள்; குளிர் மிகுந்திருந்தது. பிரதேசத்தின் மயான மௌனம் மீறி, பின்பற்றும் எஸ்.ஐ. யின் காலணி ஓசை கேட்டது. 'வரட்டும்'.

அரை கி.மீ. தூரம் நடந்திருப்பான். பாதையினின்று சரேலென்று விலகினான். அந்த மகா மர மறைவை நாடினான். காத்திருந்தான். காலணியோசை உரத்துக் கொண்டு வந்தது. எஸ்.ஐ. நெருங்குகிறார். இதோ... இப்போது...

''ஐயோ... யாராவது காப்பாத்துங்களேன்... ஆ'' பிரகாஷ் அலறினான்.

அடுத்த நொடி முடிவில், பதற்றமுடன் எட்டிப் பார்த்த சப்-இன்ஸ்பெக்டர் மீது பாய்ந்தான். மூர்க்கமான முஷ்டியால் மூன்று குத்துக்கள்.

இவனுடைய வலுவான ஆறடி உயர உடல்வாகிற்கு அவர் ஈடில்லை. என் ஆருயிர் மனைவியை மீட்பதிலிருந்து எவரும்... எவருமே என்னைத் தடுக்க முடியாது. மனத்திற்குள் வெறியுடன் சொல்லிக் கொண்டான். சடுதியில் மயங்கிச் சரிந்தவரிடமிருந்து ரிவால்வர் கவர்ந்து கொண்டான். எஸ்.ஐ. எழுந்திருக்க இன்னும் ஒரு மணி நேரமாகும். இது போதும் அவனுக்கு.

ஹோட்டல் திரும்பி, காரில் நோட்டுக் கட்டுக்கள் அடங்கிய பெட்டி வைத்து, கிளம்பி; கொடைக்கானலை விட்டு விரைவாய் விலகிக் கொண்டிருந்தான். இரவு; போக்குவரத்து அறவே அற்ற சாலை; இறக்கம். கார் இலகுவாய் வழுக்கிச் சென்றது.

கடைசி 'ᑎ' திரும்பியதும் அந்தத் தடையைப் பார்த்தான் பிரகாஷ். குறுகிய சாலையின் குறுக்காக ஒரு தள்ளு வண்டி. அதில் குவிந்திருந்த ஆப்பிள் பழங்கள். சாலையில் எவருமில்லை. சுற்றிலும் பார்த்தான்.

சற்றுத் தொலைவில் ஒரு பலா மரப் பக்கத்தில் ஒரு குடிசை தெரிந்தது. கார் ஹாரனை அழுக்கினான்.

மூன்றாம் முறை ஒலிக்கச் செய்த போது ஒரு முண்டாசுப் பெரியவர் ஓடோடி வந்து பதற்றமாகக் கும்பிட்டார்.

''மன்னிச்சுருங்க தம்பி. வண்டி டயருக்கு அடியில வச்சிருந்த கல்லு விலகிருச்சு போல! நாளை யாவாரத்துச் சரக்கு...'' என்று சொல்லி விட்டு வண்டியைத் தள்ளிக் கொண்டு போய் ஓரமாக ஒதுங்க, காரைக் கிளப்பி வேகமெடுத்தான்...

நடுநிசி தாண்டியும் மதுரை 'ஜேஜே' யென்று சந்தடியுடன் இருந்தது.

அமர்த்திக் கொண்ட அறை ஜன்னலிலிருந்து சரவிளக்கு மின்ன மீனாட்சியம்மன் கோயில் கோபுரம் தெரிந்தது. கொடை டிரிப் முடிந்ததும் மதுரை கோவில்கள் பார்க்க சிந்து ஆசைப்பட்டது அவன் நினைவுக்கு வந்தது. 'காத்திரு கண்ணே. விரைவில் உன்னை மீட்டு விடுகிறேன். பிறகு உன் விருப்பம் யாவையும் நிறைவேற்றுவதுதான் என் வாழ்வின் லட்சியம்...'

மதுரையில் மறுநாள் மதியம் வரை டான் தொடர்பு கொள்ளாதது மர்மமாயிருந்தது. குழம்பினான்.

மாலை லாட்ஜை விட்டு வெளியே வந்தான். நடைபாதையில் கடைகள் ஆக்ரமிக்க, சற்று நெரிசலாயிருந்தது. நடந்தான்.

''கழுகைக் காணோம்!''

திடீரென்று அவனருகில் ஒரு குரல் மென்மையாக ஒலித்தது.

படபடப்பான பிரகாஷ், ''விலகுது விப ரீதம்!'' எனக் கூறி, சரேலென்று நிமிர்ந்தான்.

(தொடரும்)

மாமூல் மாணிக்கம்

ஏட்டய்யா டியூட்டி ரிஜிஸ்டரில் கையெழுத்துப் போடும்போதே முடிவு செய்தார் - இன்றைக்கு ஒரு நூறு ரூபா யாவது மாமூல் வசூலித்து விடவேண்டு மென்று. ஒரு வாரமாக பஜார் பக்கம் செல்லவில்லை. எஸ்.பியும், டி.எஸ்.பியும் மாறி மாறி விசிட் வந்ததினால் ஸ்டேஷனி லேயே இருந்ததன் காரணமாக மாதக் கடைசி என்பதைக் காலையில் ருக்மணி செலவுக்குப் பணம் கேட்ட போதுதான் உணர்ந்தார்.

''மாணிக்கம்....'' எஸ்.ஐ. கூப்பிட் டார்.

''எஸ் ஸார்.''

''நாளைக்கு எட்டுகுடி திருவிழா... அந்த பிக்பாக்கெட் சேகரையும், முத்து வையும் கொண்டு வந்து ஸ்டேஷன்ல போடு.... என்ன....?''

''எஸ் ஸார்'' என்றுவிட்டு, லட்டியை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்.

சைக்கிளை ஸ்டாண்டிலிருந்து விடு வித்து மெதுவாகத் தள்ளினார்.

ஆர்ச் வளைவைத் தாண்டியதுமே சாலையோரத்தில் வரிசையாக உட்கார்ந் திருந்த காய்கறிக் கடைக்காரிகள் கண்ணில் பட... போணி செய்து விடலாம் என்று முடிவு செய்தார்.

சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு, லட்டியால்... சாலையை ஓங்கித் தட்டிக் கொண்டே கத்தினார்: ''ஏய்.... கடையத் தூக்கு.... எத்தினி தடவை சொல்லியிருக் கேன்.... ரோட்டோரத்துல கடை போடா தேன்னு....'' என்றபடி அந்த மளிகைக் கடை வாசலில் நின்று கொண்டார்.

எந்த கடைக்காரியுமே ஏட்டய்யாவின் கத்தலைப் பொருட்படுத்தவில்லை. மாறாக ஒவ்வொரு கடைக்காரியாக எழுந்து வந்து மறைவாக நின்ற ஏட்டய் யாவின் கைகளில் பணத்தைத் திணித்து விட்டுப் போனார்கள்.

ஏட்டய்யா பணத்தைப் பார்க்காம லேயே அது எத்தனை ரூபாய் என்பதை உணர்ந்தார். பத்து வருட எக்ஸ்பீரியன்ஸ்! பேங்க் கேஷியரைப் போல தடவிப் பார்த்ததுமே ஏட்டய்யாவால் பணத்தைத் தரம் பிரிக்க முடியும். கிழிந்த, செல்லாத நோட்டை யாராவது கொடுத்தால்... கை தன்னிச்சையாக அவர்கள் தலைமுடியைப் பிடிக்கும்!

எல்லாக் கடைக்காரிகளும் கப்பம் கட்டி விட்டார்களா என்று பார்த்தார். திருப்தியடைந்தவராகச் சைக்கிளை நகர்த்தி னார்.

நேதாஜி சாலையில் சைக்கிளில் மெதுவாக ஊர்ந்தார், கண்களை இருமருங் கிலும் அலையவிட்டவாறு.

ஏட்டய்யாவுக்குத் தான் இன்னும் ஏட்டாகவே இருப்பதில் வருத்தம் இலே சாக உண்டு. எவ்வளவு நாள்தான் தேடிப் போய் மாமூல் வாங்குவது. சப்-இன்ஸ் பெக்டராக இருந்தால் இந்த அலைச்சல் இல்லை. வீட்டைத் தேடி கவர் வரும். நான்கு லாட்ஜ்களிலிருந்து மாதம் பிறந்த தும் வரும் எட்டாயிரம்.... போதும்! சில் லறைத்தனமாக இப்படி அலைய வேண் டியதில்லை.

பஜனை மடச் சந்தை நெருங்கிய போதுதான் அவர்களைக் கவனித்தார் ஏட்டய்யா. சாராயம் விற்கும் கோவிந்த னும்... ரெங்கனும். உடன் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போட்டுவிட்டு அவர் களை நோக்கி நடந்தார். ஏட்டய்யா தங்களை நோக்கி வருவதைக் கண்டு பயப் படாமல், ''என்ன ஏட்டய்யா... சௌக் யமா?'' என்றனர் கோரஸாக.

ஏட்டய்யா நெளிந்தார்.

''ஏய்... ஏட்டய்யாவுக்கு ரெண்டு வடையும்.... ஒரு டீயும் கொண்டு வாடா....'' பேங்க் வாசலில் நின்றிருந்த டீ வண்டியைப் பார்த்து கோவிந்தன் கத்த....

''அதெல்லாம் வேணாம் கோவி.... (ஏட் டய்யா கோவிந்தனைச் செல்லமாக அப் படித்தான் அழைப்பார்) நான் போக ணும்... ஜோலியிருக்கு....'' என்றதும், கோவிந்தன் ரெங்கனைப் பார்த்தான். ரெங்கன் பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து ஏட்டய்யா சட்டைப்

திருவாரூர் பாபு

பையில் செருகினான்.

ஏட்டய்யாவுக்கு வெறும் பத்து ரூபாய் கொடுத்தது என்னவோ போல் இருந்தது.

''வியாபாரமெல்லாம் படுஜோரா நடக்குதுன்னு கேள்விப்பட்டேனே.....'' ஏட்டய்யா இழுத்தார்.

''ஜோரா நடக்குதுதான்... மாறி மாறித் தான் நீங்க வந்துர்றீங்களே.... அதுக்கே தினமும் நூறு, இருநூறு வேண்டியிருக்கு'' என்றான் கோவிந்தன் வெறுப்பாக.

''எனக்குத் திருப்தியில்ல ரெங்கா....'' ஏட்டய்யா மாமூல் போதாததை நாசூக்காகத் தெரிவித்தார்.

''எல்லாம் போதும்.... பிரச்னை பண்ணாத மாமூல் மாணிக்கம்..... அப்புறம் உங்க எஸ்.ஐக்கு வேலை போயிடும்.''

ஏட்டய்யாவை அந்த வார்த்தை சுருக் என்று தைத்தது. உடன் சைக்கிளை நகர்த்தினார்.

பாலத்தைத் தாண்டி அண்ணா சாலையில் நுழைந்தபோது, ரோட்டோரத்திலிருந்து குரல் வந்தது:

''ஏட்டய்யா... ஏட்டய்யா... மாமூல் ஏட்டய்யா...

நீட்டய்யா... நீட்டய்யா... உன் கையை நீட்டய்யா....''

''மாணிக்கம்... மாணிக்கம்.. மாமூல் மாணிக்கம்

காணிக்கை குடுத்தாக்க இளிக்கும் மாணிக்கம்''

ராகமாக எவனோ பாடினான். ஏட்டய்யா கண்டு கொள்ளாதமாதிரி சைக்கிளைச் செலுத்தினார். பட்டப்பகலில், யூனிஃபார்மில் பஜாரில் நுழைந்து மாமூல் வாங்கும் ஒரு போலீஸ்காரன்.... வெட்கம், மானம், ரோஷம் இவற்றையெல்லாம் துறந்துவிட வேண்டும் என்கிற அடிப்படைத் தகுதியை ஏட்டய்யா பெற்றிருந்





❑ குற்றாலத்தில் குற்றாலநாதருக்கும் அம்மனுக்கும் நாள்தோறும் சுக்குக் காப்பியை நைவேத்யம் செய்கிறார்கள். சுக்கு, மிளகு போட்டு கஷாயம் வைத்து இருவருக்கும் படைக்கிறார்கள். கோவிலுக்குப் பின்னால் இரவு பகல் எந் நேரமும் குற்றால அருவி கொட்டிக் கொண்டே இருக்கிறது. அது அப்பன் அம்மன் இருவர் தலையிலும் விழுவ தாக ஐதீகம். இப்படி எந் நேரமும் தலையில் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருப்பதால், இருவருக்கும் சளி, காய்ச்சல் என்று வந்து விடக் கூடாது அல்லவா! அதற்காகத்தான் சுக்குக் காப்பி!

- ஆ. ஜெயலட்சுமி

தார். ஆகவே அந்தப் பாட்டு அவரை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை.

ஏட்டய்யா நாகை சாலையில் நுழைந்த போது, எஸ்.ஐ. கொண்டு வரச் சொன்ன சேகரும், முத்துவும் கண்ணில் பட்டனர். உடன் சைக்கிளை ஓரங்கட்டி நிறுத்தி விட்டு, அவர்கள் கண்ணில் படாதவாறு மறைந்து சென்று சட்டைக் காலரைக் கொத் தாகப் பிடித்தார்.

''நடங்கடா ஸ்டேஷனுக்கு....''

''ஏ ட் ட ய் ய ா... சட்டையெல்லாம் பிடிச்சிக்கிட்டு.... பு து ச ா இருக்கு... விடுங்க ஏட்டய்யா...'' என்றதும் சட் டையை விட்டார்.

''எஸ்.ஐ. ஸ்டேஷனுக்குக் கொண்டு வரச் சொன்னானா...?'' என்றவர்கள் ஒரு இருபது ரூபாய் நோட்டை ஏட்டய்யா கை யில் திணிக்க... ஏட்டய்யா சந்தோஷத்தின் உச்சிக்கே போனார்.

''கண்டுக்காத ஏட்டய்யா... நாளைக்கு எட்டுகுடி திருவிழா.... மொத்தத்துல உனக் குப் பத்து பர்சன்ட்... என்ன...? எஸ்.ஐ. கிட்டே, 'வீட்டுக்குப் போனேன்... அவனுக இல்லேங்கன்னுடு!''

ஏட்டய்யா அவர்களுக்கு ச ல் யூ ட் வைக்கலாமா என்று யோசித்து, பிறகு வேண்டாமென முடிவு செய்து நகர்ந்தார்.

எல்லையம்மன் கீழ்வீதியில் நுழைந்த போது, விறகுக் கடை வாசலில் விறகு மலையாகக் குவிந்து கிடந்தது. சாலையில் விறகு சிதறிக் கிடக்க... ஏட்டய்யாவின் கட்மை நெஞ்சம் பதறியது. சைக்கிளை நிறுத்திவிட்டு, பாய்ந்தார்.

''ஏன்யா... எத்தனை தடவை சொல்லி யிருக்கேன்... நடுரோட்டுல விறகு இறக் காதேன்னு.... ம்....''

விறகுக் கடை முதலாளி, ''உள்ள வாங்க ஏட்டய்யா'' என்றதும் உள்ளே சென்றார். ஒரு ஐந்து ரூபாய்த் தாளை ஏட்டய்யா கையில் திணிக்க, ஏட்டய்யா நகர்ந்தார்.

சாலையில் விறகு கிடந்து போக்கு வரத்துத் தடைபட்டால், அதை டிராஃபிக் போலீஸ் அல்லவா கேட்கவேண்டும்... உனக்கென்ன... என்று கேட்கத் தைரியம் இல்லை. வேறு ஏதாவது கேஸில் மாட்ட வைத்து ஸ்டேஷனுக்கும் கோர்ட்டுக்குமாக அலைய வைத்து விடுவார்களோ என்கிற அச்சம்.

ஏட்டய்யா உற்சாகமாகச் சைக்கிளை மிதித்தார். மாசம் முப்பது கேஸ்களைப் பிடிக்க வேண்டும் என்கிற டார்கெட்டை ஒரு தடவை கூட எட்டாத ஏட்டய்யா வுக்குக் காலையில் இன்று எப்படியாவது ஒரு நூறு ரூபாயாவது வசூல் செய்து விட வேண்டும் என்று தான் போட்ட டார் கெட்டை இரண்டு மணி நேரத்தில் எட்டி விட்ட மகிழ்ச்சி, பிரவாகமாய் முகத்தில் தெரிந்தது.

வீட்டுக்குச் சென்று சாபிட்டுவிட்டு வர லாம் என்று சைக்கிளைத் திருப்பினார். கீழ்வீதி முனையைக் கடக்கும்போது, கூட்டத்தைக் கண்டு சைக்கிளை நிறுத்தி னார். மீன் வியாபாரம் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

ஏட்டய்யா லட்டியை உருவிக் கொண்டு கூட்டத்தை நோக்கிச் சென்றார்.

''ஏண்டா கசுமாலம்... உங்களுக்குத் தான் அங்க மார்கெட் கட்டிக் கொடுத் திருக்குல்ல.. இங்க என்னடா கூட்டம் போட்டுக்கிட்டு வியாபாரம்'' என்றபடி கூட்டத்தை நோக்கிப் பாய... கூட்டம் பின் வாங்கியதும், மீன் விற்பவர் ஓடி வந்தார்.

''ஏட்டய்யா நாலு நாளைக்குப் பிறகு இன்னிக்குத்தான் கடை போட்டிருக் கேன்... என்னை விட்டுடுங்க...''

ஏட்டய்யா அதிகாரமாகக் கேட்டார்.

''என்ன மீன் வச்சிருக்க....?''

''இறால்.. நண்டு... போத்தல்.... கிளங் கான் இருக்கு... ஐயாவுக்கு இறால் அரை கிலோ தரவா....?''

''வஞ்சிரம் இல்ல?'' ஏட்டய்யா கேட் டார்.

''இருக்கு... கிலோ அம்பது ரூபா.'' அவன் தயக்கமாகச் சொன்னான்.

''எனக்கு கிலோ வேணாம்... ஒரு நாலு மீன் கொடு....'' என்றவர், பக்கத்தில் கிடந்த பிளாஸ்டிக் பையை எடுத்து நாலு மீன்களை எடுத்துப் போட்டுக் கொண்டு

அவன் தவிப்பதை லட்சியம் செய்யாமல் நகர்ந்தார்.

ஏட்டய்யா வீட்டு வாசலில் சைக்கிளை நிறுத்தி ஸ்டாண்ட் போடும்போது ருக்மணி குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள்.

''என்னடி?''

''குழந்தை மண்ணெண்ணெயைக் குடிச்சிடுச்சுய்யா!''

அடுத்த விநாடி பளாரென்று ஒரு அறை விழுந்தது ருக்மணி கன்னத்தில்.

''ஏண்டி முண்டம் மண்ணெண்ணெயைக் குழந்தை எடுக்கிற மாதிரி வச்ச?'' என்றவர் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, சைக்கிளில் ஏறினார். ருக்மணி படபடப்பாய்ப் பின்னாலயே ஓடி வந்தாள்.

பத்து வருடங்களுக்குப் பிறகு பிறந்த குழந்தை என்பதால் ஏட்டய்யாவுக்குக் குழந்தை மீது பாசம் அதிகம்.

டாக்டர் வீட்டுக்கு முன் ஏகப்பட்ட கூட்டம். இரண்டு ரூபாய் பீஸ் வாங்கிக் கொண்டு, ஒரு ஊசி போட்டு, மாத்திரையும் கொடுக்கும் டாக்டர். அதனால் தான் இந்தக் கூட்டம்.

ஏட்டய்யா குழந்தையுடன் டாக்டரை நோக்கிப் பாய்ந்தார்.

''டாக்டர்... குழந்தை மண்ணெண்ணெயைக் குடிச்சிட்டுச்சு டாக்டர்!''

உடன், டாக்டர் குழந்தையை வாங்கி, படுக்க வைத்து, கண்ணைத் திறந்து பார்த்தார். வாயைத் திறந்து பார்த்தார்.

''எவ்வளவு குடிச்சது?''

''அரை பாட்டிலுங்க'' ருக்மணி பதில் சொன்னாள்.

''பயம் ஒண்ணும் இல்ல'' என்றவர், ஒரு ஊசியைப் போட்டுவிட்டு, குழந்தையை உள்ளே கொண்டு சென்றார்.

குடலைச் சுத்தம் செய்து, இன்னொரு ஊசி போட்டுவிட்டு, ''ப ய ப் ப ட வேணாம்... ஒரு மணி நேரம் கழிச்சித் தூக்கிட்டுப் போங்க....'' என்றார்.

ஏட்டய்யா பையில் கையைவிட்டுப் பணத்தை அள்ளி டாக்டரிடம் நீட்ட... டாக்டர் மறுத்தார்.

''நான் பீஸ் ரெண்டு ரூபாதான் வாங்குவேன்... அதுவும் உங்ககிட்ட வாங்க மாட்டேன்... ஏன்னா ஊரைக் காவல் காக்கிற போலீஸ்காரர் நீங்க.... ராத்திரி பகலுன்னு பார்க்காம ஊரைச் சுத்தறீங்க... உங்களுக்கு உதவி செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைச்சதே பெருமையா இருக்கு.....''

ஏட்டய்யா ஸ்தம்பித்துப் போய் நின்றார். யாரோ நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போல இருந்தது.

பட்டின் பளபளப்பு பாதி விலைக்கு!

தூய பட்டுப் புடைவைகளின் விலை எட்டாத உயரத்துக்குப் போய் விட்ட இந்தக் காலத்தில் சில்க் - காட்டன் சேலைகள் பிரபலமாகியுள்ளன.

தூய பட்டு (காஞ்சீபுரம் அல்லது ஆரணி), செயற்கைப் பட்டு, பாலியஸ்டர் பட்டு போன்ற ஏதாவது ஒன்றுடன் பருத்தி இழைகளையும் இணைத்து இப் புடைவைகள் நெய்யப்படுகின்றன. 57 சதவிகிதம் நூலிழை; 43 சதவிகிதம் பட்டு அல்லது பாலியஸ்டர் இழை என்ற விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படுகிறது.

தூய பட்டுப் புடைவைகளின் பாரம்பரிய நிறச் சேர்க்கை, வடிவமைப்பு இரண்டுமே இவற்றில் இருக்கும். விலை மட்டும் பட்டுச் சேலைகளை விட மிகக் குறைவு : சரிகை வேலைப்பாடு இன்றி, பட்டு நூலைக் கொண்டு எளிமையான வேலைப்பாடு செய்திருப்பின் 475 முதல் 650 ரூபாய் வரை விலை. சரிகை கொண்டு நகாசு நிரம்பிய வேலைப்பாடு செய்திருப்பின் 650 முதல் 2000 ரூபாய் வரை ஆகும்.

புடைவைகளுக்குப் பொருத்தமான சோளிகளுக்கான துணியும் அழகிய வடிவமைப்பில் புடைவையுடன் சேர்த்து நெய்யப்படுகிறது.

வெயில் காலத்திலும் உடுத்த இலகுவாக உள்ள இச் சேலைகள் இப்போது எல்லோரையும் கவர்கின்றன.

படங்கள் : யோகா
புடைவைகள், தகவல்கள்
உதவி : விபா
நியூ ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்
சென்னை - 28.



அதன் பிறகு கதகதப்பான வெயில் காலம் வந்தது. ஜீபா பெர்ரி பழம் கிடைப்ப தென்பது அரிதாகிவிட்டது. டேவிட் மூருக்கு மனசில் கவலை, ஏக்கம் அத்தனை யும் பெருக்கெடுத்தன.

ஜோஸ்வின் சில்வி ஒரு இரசாயனப் பொருளின் சென்ஸிடிவ் டெஸ்ட் பண்ணிக் கொண்டிருந்தாள். அவளது செய்முறை டேவிட் மூர் சொல்லிக் கொடுத்த மாதி ரியே இருந்தது.

டேவிட் மூர் கம்ப்யூட்டர் டேட்டா வைக் கண்காணித்துக் கொண்டிருந்தான். அவனது கவனம் அடிக்கொரு முறை ஜோஸ்வின் மீது திசை திரும்பியது.

பாதி வேலை முடிய இருப்பதற்குள் இடை வேளை வந்தது. எழ இருந்தவன் இனியதொரு சுகந்தம் நாசியில் ஏற, கவனம் கலைந்தான்.

எதிரே ஜோஸ்வின் சில்வி பிரகாசமாய் நின்றிருந்தாள். அவளது ஹேர்ஸ்டைல் அவள் முகத்திற்கு எடுப்பாய் இருந்தது.

''நான் உங்களுக்குத் தொல்லை தரு கிறேனா?''

''இல்லை. ப்ளீஸ் உட்காருங்கள்.''

அவள் உட்கார்ந்து நிதானமாய் ஆரம் பித்தாள்.

''நான் உங்களுக்கொரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவே இங்கு வந்தேன். இத்தனை நாளாக என் மனசில் இருந்ததை இனியும் நான் பூட்டிவைக்க விரும்ப வில்லை.

''எஸ்.''

''நீங்கள் என் மீது இத்தனை கால மாய்க் காட்டும் அன்பையும் அரவணைப் பையும் நான் பெரிதும் மதிக்கிறேன். இந்த செக்ஷனில் மொத்தம் ஏழெட்டு இளை ஞர்கள் இருக்கிறார்கள். இவர்கள் வேலை யில் சிறிதும் பொறுப்பற்று, என்னைக் காதலிக்கத் துடியாய்த் துடிக்கிறார்கள். இது மட்டுமின்றி நான் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மனசில் மூட நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு எனக்குத் தெரியாமல் ஜீபா பெர்ரி பழம் பறித்து வந்து பழரசத்தில் பிழிந்து கொடுக் கிறார்கள். இதை நான் அறவே வெறுக் கிறேன். என்னைப் பொறுத்தவரையில் இத்தனை அநாகரிகமான இளைஞர்களுக்கு மத்தியில், நீங்கள் மட்டும் உத்தமராக என் மனசுக்குப் படுகிறீர்கள். உங்கள் பண்புள்ள அடக்கமான செய்கை என்னைப் பெரிதும் கவர்கிறது. லெட்மி ஸே ஒப்பன்லி...... ஐ லவ் யு! லவ் யு ஸோ மச்!''

டேவிட் மூர் உறைந்து போய் உட் கார்ந்திருந்தான். திடீரென ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியில் மேனியெங்கும் சிலிர்த்து ஓடியது.

மாதம் ஒரு நகரம்

தஞ்சைக்கு வருகிறோம்



கல்கியின் 'மாதம் ஒரு நகரம்' என்ற திட்டத்தின் ஆறாவது நகரமாகத் தஞ்சை நகரத்தைத் தேர்ந்தெடுத்திருக் கிறோம்.

இம்மாதம் 28, 29, 30, 31 ஆகிய தேதிகளில் தஞ்சை நகரத்தில் தங்கி யிருந்து குறைகளையும் நிறைகளையும் அலசப் போகிறோம்.


எனவே, எங்களின் அலசலுக்கு உதவியாக, தஞ்சையிலுள்ள அனைவ ரும் தங்களூரிலுள்ள குறைகள், நிறை கள், அரசின் சாதனைகள், வேதனை கள், தனிமனிதச் சாதனையாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புகளின் செயல்பாடுகள்..... என்று பல்வேறு கோணங்களிலும் சுருக்கமாக எங்க ளுக்கு எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

தஞ்சைவாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத் திற்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 26.3.92.

குறுகிய காலமே இருப்பதால் *'மாதம் ஒரு நகரம் - தஞ்சை'* என்று உறையின்மேல் குறிப்பிட்டு உடனடி யாக எழுதியனுப்புங்கள்.

- ஆசிரியர்

11



சங்கேத வார்த்தை சொல்லிச் சமிக்ஞை செய்த ஆசாமி வெடவெடவென்றிருந்தான்; ரௌடிக்களை அவன் முகத்தில் வீசியது. அவனை நெருங்கி உரசினாற்போல் நின்று கொண்டான் பிரகாஷ்.

''மெசேஜ் என்ன சொல்லு....''

''இன்னிக்கு நைட் ஏழு மணிக்கு மதுரை ஜங்ஷன் வந்தா மேலும் தகவல் கிடைக்குமாம்!''

''ஐ சி. பெட்டி எடுத்துக்கிட்டு வரணுமா?''

''வேணாம்னு சொல்லச் சொன்னாங்க'' என்றான் அமர்த்தலாக. ''அவ்வளவுதான் தகவல்.''

கிளம்ப முயன்றவனின் புஜத்தைக் 'கப்' பென்று பற்றி எஃகுத்தனமாய் இறுக்கினான் பிரகாஷ்.

''இஸ்ஸ்.... வலிக்குது. விடு சார். நான் போகணும்.''

அவன் திமிறி விடுபட முயன்றது பலிக்கவில்லை. பிரகாஷின் பிடி அவ்வளவு உறுதியாய் இருந்தது.

''முரண்டு பிடிக்காம கூட வா!''

''வர முடியாது. என்னய்யா செய்வே?'' என்றான் முறைத்தவாறு.

''மதுரை ஜனங்கள், கண் முன்னால ஒரு அநியாயம்னா கோபத்துல கொதிச்சிருவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். அதனால - ''

அவன் விளங்காது விழித்தான்.

''நான் இப்போ 'திருடன்... திருடன்'னு உரக்கக் கூவப் போறேன்! நீ என்னை பிக்பாக்கட் செய்யறப்போ நான் உன்னைப் பிடிச்சுட்டேன்னு சொல்லப் போறேன். சுத்து வட்டாரத்துல என்ன ஒரு நெரிசல் பாரு.... அவ்வளவு பேரும் வந்து மொய்ச்சிருவாங்க. அப்புறம் உன் உடம்புல ஒரு எலும்பு கூடத் தேறாது....''

''வர்றேன்'' என்றான் ஈனஸ்வரத்தில்.

அறையை அடைந்ததும் வாசற் கதவைத் தாளிட்டான் பிரகாஷ்.

''உன் பேர் என்ன?''

''தனசேகர்'' என்றான் எச்சில் விழுங்கி.

அவனை மௌனமாக உற்றுப் பார்த்தான் பிரகாஷ். 'திடுதிப்'பென்று அவன் கன்னத்தில் ரப்பென்று அறைந்தான்.

'ஐயோ!' என்றான் தனசேகர் கதி கலங்கிப் போய்.

''டான் கலிலியோ யார்? அவன் எங்கிருக்கான்? சொல்லுடா நாயே!'' என்றான் உக்கிரமாகப் பார்த்தபடி.

''எனக்கு சத்தியமாத் தெரியாதுங்க. நீங்க சொல்ற பேரு கேள்விப்பட்டதில்லைங்க!''

பிரகாஷ் பட்டன் கத்தியின் பிளேடு விடுவித்தான். தனசேகரின் தோள் பற்றி முரட்டுத்தனமாக அவனை நெட்டித் தள்ளிக் கொண்டு போய்ச் சுவருடன் அழுந்த வைத்து, அசையவொட்டாமல் செய்தான். கூர்மையாகப் பளபளத்த கத்தியை அவன் தொண்டைக்கு அருகில் அபாயகரமாக நிறுத்தி, ''மடமடன்னு உண்மையைக் கக்கலைன்னா உன்னைக் கூசாமக் கூறு போட்டுருவேன். காணாம போனது என் மனைவிடா ராஸ்கல். ம்.... சொல்லு...''

தனசேகரின் கண்களில் அப்பட்டமாய்ப் பயம் தெரிந்தது; முகம் வியர்த்தது; குரல் குழறியது. சட்டென்று அவன் கழுத்திலிருந்து கத்தியை விலக்கினான் பிரகாஷ். 'சே! இந்தத் தொத்தல் லோக்கல் ரௌடியிடம் டான் பற்றி அறிய நினைத்தது மடத்தனம்.'

''சரி உன்னை யார்தான் அமர்த்தினது தனசேகர்?''

''தெரியாது சாரு! ஒரு ஆளு திடுதிப்புனு வந்தான். ஐநூறு ரூபா கொடுத்தான். உங்களைக் கை காண்பிச்சு, நான் சொல்ற மாதிரி சொல்றியான்னான். சுளுவான துட்டுன்னு ஒப்புக்கிட்டேன்.

மாலை 5:30. ஜங்ஷனில் அடுத்த சந்திப்பிற்கு நிறைய நேரம் இருந்தது. பட்டன் கத்தியைப் பத்திரப்படுத்தினான். பய விழிகளுடன் விடை பெற்றுக் கொண்ட தனசேகர் முகம், திரும்பவும் ஞாபகம் வந்தது. இவனுக்குள் ஆச்சரியம்... தூரிகையும் கையுமாக இருந்த நான் துப்பாக்கியும் கத்தியுமாக எப்படி மாறிவிட்டேன்.... காதலின் சக்தி இப்படிக் கூட மாற்றுமா!

அறையில் அடைந்திருப்பது வெறுப்புத் தட்டவே கிளம்பினான்.

வீதிகளில் அலைந்தான். ஏகமாகப் புழுதி. நெருக்கியடித்த கடைகள். அதிவேகப் பாண்டியன்கள். சூடான சுவரொட்டிகள். நாளைது 'நம்பிக்கை' நட்சத்திரங்களுக்கும் நற்பணி மன்றங்கள்.. ஓ... மதுரை! சட்டென்று கண் இருட்டிக் கொண்டு அத்தனையும் காணாமல் போய் அவனுடைய எண்ணத் திரையில் -

ஒரு கோன் ஐஸ்க்ரீம் கடை. தங்க ஆடையில் சிந்துஜா. அருகே வெண்மை உடையில் பிரகாஷ்.

'என்னப்பா ஃப்ளேவர்?'

'பைனாப்பிள் மேடம்.'

'ஒண்ணு கொடு.'

'எனக்கில்லையா சிந்து?'

'உண்டுப்பா.' சிந்து புன்னகை செய்கிறாள். 'இனி எதுவும் ஒண்ணுதான் வாங்குவேன்!'

பிரகாஷ் விழிக்கிறான்.

'பாதியாகப் பகிர்ந்து கொள்ளுதல் இன்பம் பிரகாஷ்!'

பின்னால் ஹாரன் ஒலிக்க சுய உணர்வு பெற்று நடந்தான். ஒரு ஜவுளிக் கடையின் பல வண்ண டிஸ்ப்ளே பட்டுப் புடைவைகளை சிந்துஜாவிற்கு மானசீகமாக அணிவித்து மகிழ்ந்தான். இருக்கட்டும். பிற்பாடு இந்தக் கடையையே வாங்கி அவளுக்குப் பரிசளித்து விடுகிறேன்....

ஒரு ரெஸ்டாரெண்டிலிருந்து வெளி வந்த போது தன்னை ஒருவன் அணுகுவது கண்டு நின்றான்.

''என்னங்க கேகே நகரு எப்பிடிப் போவணுங்க?''

கையை அனாவசியமாக ஆட்டிக் கேட்டவனைப் பார்த்தான் பிரகாஷ். அவன் காதில் மங்கிய சிவப்புக்கல் கடுக்கன். பம்மலான பரட்டைத் தலை. அழுக்கேறிப் பழுப்பாகிய 'வெள்ளை' வேட்டி சட்டை. தோளில் கசங்கிய துண்டு. கையில் கித்தான் பை. கிராமம் என்பது புரிந்தது.

''தெரியாதுப்பா'' என்றான்.

''ஆமுங்க. பஸ்லத்தாங்க வந்தேன்!'' என்று மண்டையை ஆட்டினான். திக்கென்று விழித்தான் பிரகாஷ்.


''கேகே நகருக்கு வழி சொல்லுங்க.''

''நான் ஊருக்குப் புதுசப்பா. வேற யாருகிட்டயாவது விசாரிச்சுக்க.''

அந்தக் கிராமத்தானின் முகத்தில் சட்டென்று வருத்தம் படர, ''உங்களண்டை விலாசம்தானுங்களே விசாரிச்சேன்..... அதுக்குப் போய் ஏசறீங்களே....!''

பத்மா ரவிசங்கர்

பிரகாஷுக்குப் புரிந்துவிட்டது. தனக்குத் தெரியாதென்பதைச் சிரமத்துடன் அபிநயித்து அறிவித்துவிட்டு, அவனை அனுப்பியபின் அடக்க முடியாமல் சிரித்தான். ஒரு காது கேளாதவன்; அதுவும் அப்பாவி



"எதுக்கு ஸார் ஆபீஸுக்கு டேப் ரிகார்டரைத் தூக்கிட்டுப் போறீங்க?"

"இருமல் சத்தத்தை ஐந்து நிமிஷத்துக்கு ஒருதரம் ரிகார்ட் பண்ணியிருக்கேன். பக்கத்து ரூம்ல இருக்கிற மானேஜருக்கு நான் தூங்காம முழிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்னு காட்டிக்கிடலாம் பாருங்க!"

- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

கிராமத்தான்; இந்த மாநகரில் விலாசம் விசாரிக்கத் தன்னை நாடியது வேடிக்கைதான். சிரித்ததில் கண்கள் கசிந்தன. சிந்துவைப் பிரிந்ததிலிருந்து இன்றுதான் முதன் முறையாகச் சிரிக்கிறோம் என்றும் அவனுக்குப் பட்டது.....

ஜங்ஷன் நோக்கிக் கிளம்பினான். எதற்காக இரயில் நிலையத்திற்கு அழைக்கிறான்... டிரெயினுக்கு டிக்கட் எடுத்துக் கொடுத்து வேறு எங்கேனும் அனுப்புகிறானோ? எனில், எந்த ஊர்? எந்த இரயில்? பாதகர்களே, எங்கேயடா என் கண்மணியைச் சிறை வைத்திருக்கிறீர்கள்....?

அரற்றத் தொடங்கிய மனத்தை அதட்டி அடக்கினான். ஆபத்தான சமயம் இது. உணர்ச்சி வசப்படுதல் உதவாது; அறிவு மழுங்கலாகாது. எச்சரிக்கை தேவை. யோசித்து வைத்துள்ள பாதையில்தான் இம்மி பிசகாமல் பயணம்....

6:45. இரயில் நிலையம் அடைந்ததும் அங்கு அழைத்த காரணம் புரிந்தது. நிலையத்தில் காத்திருந்த வண்டிகள்; புரளும் பார்சல்கள்; தள்ளு வண்டி வியாபாரங்கள்; நெரிசல்; இரைச்சல்; அதை மீறி ஸ்பீக்கரில் பிளிறிய வயலின். களேபரமான ஜங்ஷனில் கரைவது சுலபம்.

''கழுகைக் காணும்!''

பின்னால் வெகு அருகில் குரல் ஒலித்தது. பிரகாஷ் உடனே திரும்பவில்லை. கைக்கடியாரத்தில் நேரம் பார்த்தான். துல்லியமாக 7:00. சுற்றிலும் நோட்டமிட்டான். ம்கூம். எவரும் கவனிக்கவில்லை. அங்கிருந்த ஆயிரம் அவசர முகங்களில் பிரகாஷும் ஒருவன்.... காஷுவலாகத் திரும்பினான்.

இவனைக் குறிப்பாகப் பார்த்தபடி ஒரு போர்ட்டர்; அல்லது போர்ட்டர் உடுப்பு அணிந்துள்ள மற்றொரு ரௌடி. 'விலகுது விபரீதம்' என்றான்.

அவன் சுற்று முற்றும் பார்த்துவிட்டுத் தன் சிவப்புச் சட்டைக்குள் கைவிட்டு ஒரு கவர் எடுத்துக் கொடுத்தான்.

அந்தக் கவர் ஒட்டப்பட்டிருந்தது. மேலே எதுவும் எழுதப்படாமலிருந்தது. இதனுள் என்ன இருக்கும்....

''கவரை இ ங் கே பிரிக்காதே. ரூமுக்குப் போய் பார்க்கச் சொன்னாங்க.''

சொல்லிவிட்டு வேகமாக விலகினான் அந்த போர்ட்டர் உடையாளன். பிரகாஷ் தயங்கினான். இவனுக்காவது ஏதும் தெரிந்திருக்குமா....? மாலையில் வந்தவன் போல்தான் இவனும்... என்றே தோன்றியது.

அறைக்குத் திரும்பியதும் ஆர்வமுடன் கவரைப் பிரித்தான். 'உன்னை அழைத்துச் செல்ல ஏர்போர்ட்டில் எங்கள் கார் காத்திருக்கும்' என்ற தட்டச்சுக் குறிப்புடன் இணைந்திருந்தது ஒரு விமான டிக்கட்! நாளை அவன் சென்னை செல்ல... பிரகாஷுக்குத் தலை சுற்றியது.....

மெல்ல மெல்ல விழிப்புக் கண்டது. சிரமப்பட்டு எழுந்து உட்கார்ந்து விழித்தான் பிரகாஷ். 'எங்கிருக்கிறோம்?' என்று குழம்பினான்.

மூலையில் முளைத்துள்ள கலர் டெலிவிஷன்; பச்சை கார்ப்பெட். விஸ்தாரமான வால்போஸ்டர் படம் அலங்கரித்த சுவர். நான் எப்படி இங்கு.... என்னாயிற்று எனக்கு... பாரமாக உணர்ந்த தலையைப் பிடித்தவாறு எழுந்து, இணைந்திருந்த பாத்ரூமிற்குத் தள்ளாடியவாறு சென்று, குழாய் திறந்து குளிர்ந்த நீரை முகத்தில் அடித்துக் கொண்டதும் தெளிவு பெற்றான். ஞாபகம் துல்லியமாகியது. நேற்று இரவு ஏர் டிக்கட் கிடைத்ததும் ஒரு டிராவல் ஏஜன்சியிடம் சென்னை சேர்ப்பிக்குமாறுத் தன் காரை ஒப்படைத்ததும், இன்று கிளம்பி விமானம் மூலம் சென்னை அடைந்ததும், விமான நிலையத்தில் காத்திருந்த டான் காரில் ஏறி அமர்ந்ததும் பின் சீட்டிலிருந்த ஒருவன் திடீரென்று தன் மூக்கில் கர்ச்சீப் வைத்து அழுத்தியதும் ஞாபகம் வர -

அந்தக் கைக் குட்டையை மயக்க மருந்தில் தோய்த்திருக்க வேண்டும். இப்படித்தானே அன்று அதிகாலையில் என் சிந்துவையும் மயக்கப்படுத்திச் சாய்த்திருப்பார்கள்... இருக்கட்டும். இவர்களை......

பற்களைக் கடித்தவாறு கட்டிலுக்கு வந்து அமர்ந்ததும் திடுக்கிட்டான். திடுதிப்பென்று ஒளிரத் துவங்கிய அறை மூலை டி.வியில் ஒரு சிங்கம் தோன்றி கம்பீரமாக உலவியது. பிரகாஷ் உறைந்தபடி பார்த்

தான். சிங்கம் திரும்பியது. தன் முகம் டைட் க்ளோசப்பில் வந்ததும் கர்ஜித்து விட்டுச் சடுதியில் மறைந்தது.

இரண்டு வினாடிகள் கழித்து மறுபடி உயிர் பெற்ற டீவி திரையில் டான் கலிலியோ!

போலீஸாரைப் பல காலமாகத் திணற வைத்த - 'மாயாவி', 'கில்லாடி' என்றெல்லாம் தினசரிகளால் விவரிக்கப்பட்ட - எவர் கண்களுக்குமே புலப்படாத அண்டர் கிரௌண்டு கிரிமினல் டான் தற்போது எதிரில்... எதிரில்.... பிரகாஷ் இமைக்க மறந்து கவனித்தான்.

''வெல்கம் பிரகாஷ்!'' ***டான் குரல் கர கரவென்றிருந்தது.***

''உன்னுடைய இரண்டாவது தவணைக்கு நன்றி. ஆனா பாரு என்னை ஏமாத்தப் பார்க்கறே. கேட்ட தொகை இல்லே. என் பணமுடை லேசுல தீராது போல!'' ***டானுக்குப் பரட்டையான சிவப்புத் தலைமுடி - அவன் காதையும் நெற்றியையும் மறைத்தபடி.***

''உன் டாடி ராஜசேகர் கிட்ட செமத்தியான செல்வம்னு தகவல்.'' ***கலிலியோவின் கண்களில் நீலநிற காண்டாக்ட் லென்ஸ்.***

''ஒரே தவணைல பெருத்த பணமா வசூல் செய்துறலாம்னு திட்டம்'' ***கம்பளிப் பூச்சிகளாய்ப் புருவங்கள்.***

''அதற்கு சிந்துஜாவோட உன்னையும் சேர்த்துப் பிடித்தால்தான் வசதி'' ***செம்பட்டை நிறத்தில் புஸ்தி மீசை, புசுபுசு தாடி.***

''ராஜசேகரின் ஒரே ஆசை வாரிசு நீ -'' ***மெரூன் வண்ண முழுக்கை சட்டை - அதில் பொன்னிற சிங்க முகம் எம்பிராய்டரியாக.***

''பதறிக்கிட்டுப் பணத்தோட வர மாட்டாரா....'' ***காண்பவை யாவும் தன் உருவத்தை மறைத்து - அல்லது மாற்றிக் கொள்ள டான் எடுத்துள்ள பிரத்யேக முயற்சிகள் என்பது புரிந்தது.***

பின்னே, சுய உருவையா அந்நியனான, எதிரியான தன்னிடம் காட்டுவான்?

''ஆங்! மறந்துட்டேனே... உன் சம்சாரத்தைப் பார்க்கணும்னு துடிச்சுகிட்டிருப்பே! ஆரோக்யமாத்தான் இருக்கா. இப்ப டீவில பார்க்கிறியா?''

இதயம் படபடக்கக் கட்டிலின் முனைக்கு வந்து விட்டான்.

''ரிலாக்ஸ் பிரதர். கட்டில்ல நல்லா சாஞ்சுகிட்டே பார்க்கலாம் என்ன....''

உஷார் பிரகாஷ். டானால் உன்னைக் கவனிக்க முடிகிறது. ஸோ, இந்த அறையில் ஒரு காமெரா லென்ஸ் இருக்கிறது.....

டீவியில் மொத்தம் இரண்டு காட்சிகள்: ஒன்றில் இதே போன்ற ஒரு அறையில் சிந்துஜா உறங்கியபடி; இரண்டாவதில் சோகமாக எங்கோ வெறித்தபடி. பார்த்துக் கொண்டிருந்த பிரகாஷ் முகம் க்ரானைட்டாய் இறுகி இருக்க, அவன் தாடையில் ஒற்றை நரம்பு துடித்தது.

திரும்பவும் திரையில் வந்த டான், ''நல்ல பிள்ளையா நடந்துக்க. சிந்துஜா நலமா இருப்பா. தப்பிக்கணும்னு அசட்டுத்தனமாத் திட்டம் ஏதும் போடாதே. உன்னால முடியாது. நீ என் மாஸ்டர் பிளானோட துருப்புச் சீட்டுப்பா. உன்னைப் பாதுகாக்க பக்காவான ஏற்பாடு செய்திருக்கேன்.... இந்நேரம் போலீஸ் உன்னைத் தேடி அலைஞ்சிக்கிட்டிருக்கும். ஆனா போலீஸால உன்னை நான் சிறை வைத்திருக்கும் இடத்தை நிச்சயமாக் கண்டு பிடிக்க முடியாது. குட்டே பிரகாஷ்!''

அணைந்து போன டீவியை வெறித்தபடி உட்கார்ந்திருந்தான்.

டான் கலிலியோவின் முன் யோசனையில் வியந்தான். சூழ்ந்துள்ள ஆபத்து மலைக்க வைத்தது. எப்படி டான் கும்பலை எதிர்த்துச் சமாளிப்பது? எப்படி சிந்துவை மீட்பது? அப்புறம் எப்படித் தப்பிப்பது?

டிஜிடல் கைக் கடிகாரம் திங்கள் மாலை 6:00 என்று அறிவித்தது.

அப்போது அறை வாசற் கதவு வெளித் தாழ்ப்பாள் நீக்கப்படும் ஓசை கேட்டது! பரபரப்பாக உணர்ந்தான் பிரகாஷ்.......

(தொடரும்)

''பணம் சம்பாதிக்கிறதிலே அந்த அரசியல்வாதி எல்லாரையும் தூக்கிச் சாப்பிட்டுட்டாரு!''

''என்ன சொல்றீங்க?''

''பிளேன்ல கண்டக்டர் வேலை வாங்கித் தர்றேன்னு ஒருத்தர்கிட்டே ஐம்ப தாயிரம் ருபாய் வாங்கியிருக்கார்!''

- எஸ். முகம்மது யூசுப்



பொற்கிழி

மனத்திற்குள் மகிழ்ச்சியும் பெருமிதமும் பிரவாகமாகப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தாலும், அதைச் சற்றும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், சிறு புன்னகையுடன் அமைதியாக அடக்கவொடுக்கமாக மேடையில் அமர்ந்திருந்தார் வெங்கடாசலம். 'தியாகி' வெங்கடாசலம்! வண்ண வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையும், மைக் செட்டுகளும், நகரமெங்கும் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களும் அவர் காணாதவையல்ல. ஆயிரக்கணக்கான முறை கண்டவர்தான். ஆனால் அப்போதைக்கும், இப்போதைக்கும் ஒரு சிறு வித்தியாசம். அப்பொழுதெல்லாம், அவர் சாதாரணத் தொண்டர். இரவு முழுவதும் அலைந்து திரிந்து போஸ்டர் ஒட்டிவிட்டு, விழா நேரத்தில் மேடைக்கு எதிரே தரையில் சப்பணமிட்டு அமர்ந்து, தலைவர்களின் சொற்பொழிவை பக்திப் பரவசத்துடன் கேட்டவர். ஆனால் இன்று அவர்தான் விழா நாயகன். ஆம். அவருக்கு பாராட்டு விழா நடத்தி, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி அளிக்க ஏற்பாடு செய்திருந்தது பிரபல அரசியல் கட்சியான க.க.க.

ஒரு வாரத்திற்கு முன்பு க.க.க. வின் நகரப் பிரமுகர் ஒருவர் வெங்கடாசலத்தை அணுகி, அவருக்குப் பாராட்டு விழா நடத்தத் தங்கள் கட்சி விரும்புவதாகத் தெரிவித்த போது, வெங்கடாசலத்துக்கு என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. நயமாக மறுத்தார்.

''இப்படி ஊரைக் கூட்டி பாராட்டு விழா நடத்த வேண்டிய அவசியமே இல்லைங்க. நா ஒரு சாதாரணத் தொண்டன். ஏதோ என்னாலே முடிஞ்ச சேவை பண்ணியிருக்கேன். அவ்வளவுதான். எனக்கு எதுக்குங்க விழா, அது இதுன்னு?'' என்று மறுத்துப் பார்த்தார்.

ஆனால் வந்திருந்த பிரமுகர், ''அப்படியில்லீங்க. உங்க சேவையைப் பாராட்டி, தலைவர் கையாலே பொன்னாடை போர்த்தி... ஏதோ எங்களாலான ஒரு தொகையை உங்களுக்குப் பொற்கிழியாகத் தரலாம்ன்னு இருக்கோம். நீங்க மறுக்காம ஒத்துக்கணும்'' என்று மீண்டும் சொல்லவே, வெங்கடாசலத்தின் மனைவிக்கு ஒரு நப்பாசை.

சுதந்திரப் போராட்டத்தின்போதே, போலீஸ் தடியடி பட்டு, ஐந்து ஆண்டுகள் சிறையில் இருந்து, தேச சேவை செய்தவர் அவர். சுதந்திரத்திற்குப் பிறகும் அரசியலில் ஆர்வம் காட்டி, அவர்கள் காட்டிய வழியில் நடந்து, எதிர்ப்பட்ட துன்பங்களையும் இன்முகத்துடன் எதிர்கொண்டவர். தம்முடைய அதீதமான அரசியல் ஈடுபாடு காரணமாக அவரால் தன் குடும்ப நலனைக் கவனிக்க முடியாமற் போய் விட்டது. விளைவு முதுமையில் வறுமை. ஆகவே அந்தக் கட்சிப் பிரமுகர் 'பொற்கிழி' என்றதும் சபலம் ஏற்பட்டது அவர் மனைவிக்கு. வெங்கடாசலமும் விழாவிற்கு ஒப்புக் கொண்டார்.

வெங்கடாசலத்தின் மனைவி கனவுலகில் மிதக்க ஆரம்பித்து விட்டிருந்தாள். 'பெரிய அரசியல் கட்சியினர் நடத்தும் விழா. அவர்கள் நன்கொடை அளிப்பது என்றால் குறைந்த பட்சம் இருபதாயிரமாவது தேறாதா? என்று எண்ணியவள், முதலில் இந்தப் பழங்கால வீட்டைக் கொஞ்சம் சரிசெய்ய வேண்டும்' சுவரில் ஆங்காங்கே காரை பெயர்ந்து, மேலே பல இடங்களில் ஓடுகள் உடைந்து, தரை முழுவதும் குண்டும் குழியுமாக, குட்டிச்சுவராகத்தான் காட்சியளித்துக் கொண்டிருந்தது வீடு. வீட்டுரிப்பேருக்காகப் பத்தாயிரம் ரூபாயை ஒதுக்கி வைத்தாள், அவர் மனைவி. அடுத்து பெண்ணின் கல்யாணச் செலவுக்கு. குறைந்தது இரண்டு பவுன் நகைகள், நல்லதாக இரண்டு மூன்று புடைவைகள் என்று எடுத்து வைத்தால் பின்னால் உபயோகமாக இருக்குமே' என்று எடை போட்டது அவள் தாய் மனம். வெங்கடாசலத்தின் உள்ளத்திலும் அப்படியெல்லாம் ஆசைகள் அரும்பத் துவங்கியிருந்தன.

விழா மேடையிலும், எதிரே வந்து அமர்ந்திருந்த மக்கள் மீதும் பார்வையை ஓட விட்டார் வெங்கடாசலம்.

சித்யா ஸ்ரீனிவாசன்

அவருக்கு இடப்புறம், அந்தக் காலத்து ராஜாக்கள் பயன்படுத்திய சிம்மாசனம் போன்றதொரு அலங்கார இருக்கை தலைவருக்காகப் போடப்பட்டிருந்தது. அந்த ஆடம்பர இருக்கையின் முன் வெங்கடாசலமும் மற்றவர்களும் அமரப் போடப்பட்டிருந்த நாற்காலிகள், மிக மிகச் சிறியவையாகத் தோன்றின.

கூட்டத்தில் சலசலப்பு.

''தலைவர் வாழ்க!''

''அண்ணன் வாழ்க!''

''தியாகிக்கு விழாக் காண வரும் தியாகச் செம்மல் வாழ்க!''

என்ற பலமான கோஷங்களுக்கிடையே மேடையேறிய 'தலைவர்' யாரும் எதிர்பார்க்காத காரியம் ஒன்று செய்தார். மளமளவென மேடை ஏறியவர், நேரே வெங்கடாசலத்தின் முன்னால் குனிந்து அவர் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டார். அதிர்ந்து போனார் வெங்கடாசலம்.

''என்னங்க . இது! நா சாதாரண மனுஷன். நீங்க எவ்வளவு பெரிய கட்சியின் தலைவர். நீங்க போயி என் காலைத் தொடறதாவது...'' என்று சங்கடப்பட, சுற்றியிருந்த பத்திரிகையாளர்களையும், புகைப்படக்காரர்களையும் பார்த்துப் புன்னகை செய்த தலைவர் -



''எவ்வளவு அடக்கம் பார்த்தீங்களா? இதுதான் பண்பாடு. இதுதான் பெரிய மனிதத்தனம். இதுக்காகவே இவர் கால்லே எவ்வளவு தரம் வேணும்னாலும் விழலாம்'' என்றவாறே மீண்டும் வெங்கடாசலத்தின் முன்னால் குனிய, காமிராக்கள் பளிச்சிட்டன. ஒன்றும் பேச முடியாமல் அதிர்ந்து நின்றார் வெங்கடாசலம்.

அடுத்து, தன் தொண்டர்களிடம் சத்தம் போடத் துவங்கினார் தலைவர். ''ஏன்யா, உங்களுக்கெல்லாம் அறிவிருக்கா? இவ்வளவு பெரிய மனுஷனை சாதாரண சேர்லே உட்கார ஏற்பாடு பண்ணிட்டு, எனக்கு மட்டும் ஏன்யா அந்த பெரிய சேர்? அவரு முன்னாலே அதுலே உக்கார எனக்கு என்னய்யா தகுதி இருக்கு? அவரு அதுலே உக்காரட்டும். நா கீழே உக்கார்றேன். அதுதான் நியாயம்...'' என்று சொல்ல, மீண்டும் அதிர்ந்து போன வெங்கடாசலம், ''ஐயய்யோ, அதெல்லாம் தப்புங்க தலைவரே. நீங்கதான் அங்கே உக்காரணும். அதுதான் சரி'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்ள, தம் இருக்கையில் அமர்ந்து, 'ஜம்'மென்று கால் மேல் கால் போட்டுக் கொண்டார் தலைவர்.

விழா துவங்கியது.

நகரமன்றச் செயலாளர் ஆரம்பித்தார்.

''அண்ணனுக்கு ஆ யி ர ம் வேலைகள். மூச்சுவிடக் கூட நேரம் இருப்பதில்லை. ஆயிற்று... அடுத்த மாதம் தேர்தல்கள் வேறு வர உள்ளன. முழுமூச்சாக உழைக்க வேண்டிய நேரம். அவ்வளவு அலுவல்களுக்கிடையேயும் 'தி யா கி வெங்கடாசலத்துக்குப் பாராட்டு விழா நடத்த ஏற்பாடு செய்துள்ளோம். நீங்கள் வந்து கலந்து கொள்ள வேண்டும்' என்று சொன்னதும் மறுபேச்சின்றித் தம் மற்ற பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு, இங்கே வரச் சம்மதம் அளித்தார் தலைவர். அது அவர் பெருந்தன்மையைக் காட்டுகிறது. தியாகி வெங்கடாசலத்தின் பெருமையையும் காட்டுகிறது...'' என்று பேசி விட்டு அமர்ந்தார்.

அடுத்தவர், ''நா கூட பயந்தேனுங்க, என்னடா இது, பாராட்டு

தேடல்

101 ஆரம்பி

102 கம்ப்யூட்டரே நீ யார்? தேடு.

103 வீடு சுத்தமாக்கிடுவேன்
துணிமணிகள் துவைத்திடுவேன்
காலையிலே எழுப்பிடுவேன்
எங்கேஜ்மெண்ட் எடுத்துரைப்பேன்
கற்ற வித்தை காட்டவந்த
நான் உன் சேவகன்


104 இல்லையெனில் 105க்குப் போ.


105 மானிட்டர் திரையினிலே
எனது நெஞ்சினலைகளடா
உந்தன் மனமறிய நாளும்
டேப் யூனிட்டில் தேடுகிறேன்
மூத்தவர் சம்மதியில்
மைக்ரோ குட்டிகள்
பின்னர் செய்வோம்
காத்திருக்காமல் தா
கன்னத்தில் முத்தமொன்று!
நான் உன் காதலி.

106 இல்லையெனில் 107க்குப் போ

107 பால் வாங்கிப் பதப்படுத்தி
பாங்காய்க் கொடுத்திடுவேன்
உன் விருப்பம் உன்பருவம் இணங்
விந்தை விந்தையாகத் தோற்றங்கள்
கதைகள் வீடியோ விளையாட்டுகள்
ஆடாமல் ஓடாமல்
விண்ணுலக யுத்தத்தைத்
திரையினிலே நிகழ்த்திடுவேன்
நான் உன் தாய்.

108 இல்லை யெனில் 109க்குப் போ





109 சிந்திக்கும் திறனின்றி
உன்துணை கொண்டு
உன்னுடை முயற்சியால்
உன்னுடை பழகலால்
உன்மொழி கேட்பதால்
நான் உன் சீடனன்றோ?

110 இல்லையெனில் 111க்குப் போ

111 1 +1 = 2 என்றுனக்குப்
புரியாத பாடம் சொல்வேன்
ஆப்பிள் முதல் இன்சாட்வரை
பாங்காய் வடிவமைப்பேன்
சர்க்காரியா முதல் மாஃபியா வரை
உளவில் உதவுவேன்
நான் உன் சற்குரு.

112 இல்லையெனில் 113க்குப் போ

113 ஆயிரம் பேர் வேலை ½ விநாடியில்
பார்த்த விடத்திலெல்லாம்
பார்த்தீனிய விரவல்
மானிடர் வேலையெல்லாம்
கபளீகர விழுங்கல்
வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு
உலகமெல்லாம் வித்து
ICMB-க்கள் ஸ்கட்கள்
விரல் நுனிபட்டன் முத்தத்தில்
உலகமே நாகசாகி
நான் உன் யமன்.

114 ஆம் என்றால் 115க்குப் போ

115 நிறுத்து அச்சடி

116 கம்ப்யூட்டர் மனிதகுலத்தின் யமன்.

- நளினி சாஸ்திரி

விழான்னு பெரிசா ஆரம்பிச்சுட்டோமே; பணம் வசூலாகுமா, என்ன பண்ற துன்னு... ஆனா, வசூல் செய்யக் கிளம்பின உடனே, என் பயம் விட்டுப் போச்சுங்க. 'தியாகி வெங்கடாசலம்' அவர்களின் பெயரைச் சொன்ன உடனேயே தயங்காமல் எல்லோரும் நன்கொடை கொடுக்கத் தயா ராக இருந்தார்கள். அதுவும் அண்ணன் அவர்கள் விழாவில் கலந்து கொள்கிறார் என்றதும் நூறு இருநூறு எனக் குவிய ஆரம்பித்து விட்டது. அசந்து போய் விட்டேன். கணக்கு விஷயத்தில் அண்ணன் ரொம்பவும் கறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே வசூல் தொகையை இங்கேயே அறிவிக்கிறேன். மொத்தமாக ஐம்பதாயிரம் வசூலாகியுள்ளது. அண்ணன் அவர்கள் தன் பொன்னான கைகளால் இத் தொகையை தியாகி வெங்கடாசலம் அவர் களுக்கு அளிப்பார்'' என்று அறிவிக்க, கரகோஷம் வானைப் பிளந்தது.

''ஐம்பதாயிரம்!'' தியாகிக்கு மூச்சே ஒரு நிமிடம் நின்று, பிறகு வந்தது.

கூட்டத்தில் அமர்ந்திருந்த அவர் மனைவிக்கோ, மயக்கமே வந்து விட்டது. தன் இரு கரங்களையும் தலைக்கு மேலே தூக்கித் தலைவரையும், அறிவிப்பாளரை யும் வணங்கினாள் அந்தப் பெண்மணி.

தலைவர் பேச ஆரம்பித்தார்.

''மிக முக்கியமான பணிகள் பல இருந் தும், நான் இங்கே வந்துள்ளேன் என்று எனக்கு முன் பேசியவர்கள் சொன்னார்கள். உண்மைதான். ஆனால் என்னைப் பொறுத்தவரை, நான் சார்ந்துள்ள கட்சி யைப் பொறுத்தவரை, மற்ற பணிகளை விட, இதுபோன்ற விழாக்களில் கலந்து கொள்வதைத்தான் முக்கியமானதாக - எங்களுக்கு பெருமை அளிப்பதாக நினைக் கிறோம். என் கையால் பரிசைப் பெறுவது அவருக்குப் பெருமையல்ல. அது அவர் பெருந்தன்மை. ஆனால் எனக்குப் பெருமை. அவர் இன்னும் பல்லாண்டுகள் வாழ வேண்டும் என வாழ்த்தி, அவர் சேவைக்கு, அவர் செய்த தியாகங்களுக்குத் தலைவணங்கி, உங்கள் சார்பாக, அவ ருக்குப் பொன்னாடை போர்த்தி, இப் பொற்கிழியை அளிப்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்'' என்றபடி வெங்கடாசலத் துக்குப் பொன்னாடை போர்த்த, முதுகை நன்றாக வளைத்து, முழுவதுமாகக் குனிந்து அதை ஏற்றுக் கொண்டார் வெங்க டாசலம். அடுத்து அவர் கையில் அளிக்கப் பட்ட, பட்டுப் பை அவரை லேசாகத் திடுக்கிட வைத்தது.

மிகச் சிறிய பை அது. அதிலிருந்த பணம் ரூபாய் ஆயிரத்துக்கு மேல் இருக் காது என்று தோன்றியது அவருக்கு. அவர் முகத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்ட விழா அமைப்பாளர், ''மீதியை வீட்லே கொண்டாந்து கொடுப்பாங்க'' என்று வெங்கடாசலத்தின் செவிகளில் கிசு கிசுக்க, அமைதியானார் வெங்கடாசலம்.

விழா முடிந்து வீட்டையடைந்த வெங்கடாசலம் தம்பதியினருக்கு இருப்புக் கொள்ளவில்லை. விழா மேடையில் அவருக்கு அளிக்கப்பட்ட பட்டுப் பையில் ஆயிரத்தொரு ரூபாய் மட்டுமே இருந்தன. மீதியை விழா அமைப்பாளர் கொண்டு வருவார் எனக் காத்திருந்தனர். இரவு வெகு நேரமாகியும் அவர் வராமல் போகவே, 'அவர் நாளை காலையில் வருவார்' என்று தங்களைத் தாங்களே சமாதானப்படுத்திக் கொண்டு உறங்கினர்.

அவர்களை வெகுநேரம் காக்க வைத்து விட்டு, மறுநாள் மாலை ஆறு மணி சுமா ருக்கு வந்து சேர்ந்தார் விழா அமைப் பாளர்.

''அப்பப்பா. ஒரே பேஜார் போங்க. விழா நடத்தறதுன்னா எவ்ளோ கஷ்டமான சமாசாரம்... அடேயப்பா'' என்று பேச ஆரம்பித்தார் அவர்.

''தலைவருக்கு ப்ளேன் டிக்கெட் பர்ஸ்ட் கிளாஸுக்கு எடுத்தாச்சு. அவ ரோட பி. ஏ., சம்சாரம், பசங்க இவங்க ளுக்கு 'எகனாமி' க்ளாஸ்ல டிக்கெட் கிடைக்கலே. அதனாலே அவுங்களுக்கும் பர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் எடுக்க வேண்டி வந்துடுச்சு. அது மட்டும் பத்தாயிரம் ரூபாய் ஆயிடுச்சு'' என்றவர், ''அப்புறம் தலைவருக்கு ஏ. ஸி. கார்; அவரோட சம்சாரம், அவங்க அம்மா வீட்டுக்குப் போகணும்னு சொன்னாங்க. அவங்க ளுக்கு ஒரு ஏ.ஸி. கார். அவரோட பி.ஏ.க்கு ஒரு சாதாரண கார். இப்படி எவ்வளவு செலவு. தலைவர் தங்கின ஹோட்டல் பில்லே எவ்வளவு ஆயிடுச்சு தெரியுமா? அப்புறம் போஸ்டர், விழா மேடை, மைக் செட், 'லைட்'டுன்னு ஒரே செலவுதான் போங்க. எதுக்கெடுத்தாலும் ஆயிரக் கணக்குலேதான் செலவு... பாவம், எங்க கஷ்டத்தையெல்லாம் ஏன் உங்ககிட்டே சொல்லணும்? உங்க கணக்கைச் சொல்லிட றேன்...'' என்று அவர் விஷயத்துக்கு வந்ததும் சுறுசுறுப்பானார்கள் வெங்கடா சலமும் அவர் மனைவியும்.

''இதோ பாருங்க. மொத்த கலெக்ஷன் நாப்பத்தேழாயிரம்தான். ரவுண்டா இருக் கட்டுமேன்னு ஐம்பதாயிரம்னு சொன் னோம். அதுலே நான் சொன்ன செல வெல்லாம் போக மீதி ஆயிரத்து ஐந்நூறு தான். நேத்தே தலைவரு ஆயிரத்தொரு ரூபாய் கொடுத்துட்டாரு. இந்தாங்க மீதி ஐந்நூறு ரூபா'' என்றபடி ரூபாயை நீட்டி னார் அவர்.

பாஸ்கரன் ஏன் அப்படிச் செய்தான்?

"மேடம்... உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்.. பாஸ்கரன் என்று சொல்கிறார். ஐந்து நிமிஷம் பார்த்தால் கூடப் போதும் என்கிறார்!" எனச் சொன்னான் ஆபீஸ் பணியாள்.

பவானிக்கு எரிச்சலாக வந்தது. இவன் எதற்கு அவளைத் தேடி வர வேண்டும்! 'சம்பந்தம் பிடிக்கவில்லை!' எனச் சொல்லி அனுப்பியாகி விட்டது. புரிந்து கொண்டு ஒதுங்க வேண்டியதுதானே? மறுபடியும் வந்து பேச என்ன இருக்கிறது?

நான்கு நாட்கள் முன்புதான் பாஸ்கரன் அவளைப் பார்க்க வந்தான். முதல் பார்வையிலேயே பவானிக்கு அவனைப் பிடித்து விட்டது. பார்க்கக் கண்ணியமாகத் தெரிந்தான். பண்புடன் பழகினான். கனிவுடன் பேசினான்.

பவானி ஒரு பெரிய நிறுவனத்தில் ஒரு செக்ஷனுக்கு அதிகாரி. பாஸ்கரன் ஓர் இளம் எலக்டிரானிகல் என்ஜினியர். தொழிற்பேட்டையில் சொந்தமாக ஒரு பாக்டரி இருந்தது.

நல்ல குடும்பம் எனக் கேள்விப்பட்டிருந்தார்கள். பெண் பார்த்தவுடனேயே தங்களுக்குப் பிடித்து விட்டது எனப் பாஸ்கரன் வீட்டில் சொல்லி விட்டார்கள். சீர் செனத்தி எதையுமே கேட்கவில்லை. 'எல்லாமே உங்கள் விருப்பம்!' எனப் பெருந்தன்மையாகச் சொல்லி விட்டார்கள்.

இத்தனை நேரம் கல்யாணத்திற்கு முகூர்த்தம் பார்த்துச் சத்திரத்திற்கும் முன் பணம் கொடுத்திருப்பார்கள் - பாஸ்கரன் புறப்படும் சமயம் எதிரில் சியாமளா வந்திராவிட்டால்...

பவானியின் வீட்டுக்கு எதிர்வீடு சியாமளா. அவள் கணவன் அடிக்கடி சுற்றுப்பயணம் போகும் வேலை. மாதத்தில் இருபது நாட்கள் ஊரில் இருக்க மாட்டான். சியாமளாவிற்குப் பேச்சுத் துணை வேண்டும். அதற்காக அடிக்கடி பவானி வீடு வருவாள்.

பாஸ்கரனை அவள் ஏறிட்டுப் பார்த்த போது அவள் முகத்தில் தோன்றிய கடுமையையும் கோபத்தையும் கவனிக்கத் தவறவில்லை.

பாஸ்கரன் விடைபெற்றுக் கொண்டு போன பிறகு, பவானி அவளை விசாரித்தாள். "ஏன் சியாமளா! உனக்கு இவர்களைத் தெரியுமா?"

சியாமளா தயங்கினாள். "பவானி! ஒரு கல்யாணத்தை நடத்தி வைத்தால் புண்ணியம்! என்னால் ஒரு கல்யாணம் தட்டிப் போனால் அது ரொம்பத் தப்பும்மா!"

பவானி வற்புறுத்தினாள். "பரவாயில்லை எதுவாக இருந்தாலும் சொல். இன்னும் நாங்கள் ஏதும் நிச்சயம் செய்து விடவில்லை."

இரண்டு வருடங்களுக்கு முன்பு - இதே பாஸ்கரனுக்கும் சியாமளாவின் அத்தை பெண் நிர்மலாவுக்கும் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது.

கல்யாணத்திற்கு முதல் நாள் பாஸ்கரன் தன் குடும்பத்துடன் வந்து இறங்கினான். பெரிய கூட்டம் இல்லை. எண்ணிப் பத்தே பேர். கொஞ்சம் கூட படாடோபமோ அலட்டலோ இல்லை. ரொம்பக் கண்ணியமாகப் பழகினார்கள்.

நிர்மலா அவள் பெற்றோருக்கு ஒரே பெண். கல்யாணத்தைப் பெரிய அளவில் அமர்க்களமாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மாப்பிள்ளை அழைப்பு நல்லபடியாக முடிந்தது. "நல்ல பிள்ளை" என எல்லோரும் மெச்சும்படி பாஸ்கரன் நடந்து கொண்டான்.

கல்யாணத்தன்று காலை. மாப்பிள்ளை

ஜனனி

முகூர்த்தத்திற்குத் தயாராக இல்லை. குளிக்கக் கூட இல்லை.

நிர்மலாவின் தந்தை அவர்களைத் துரிதப்படுத்தப் போனார்.

பையனுடைய சிநேகிதர்கள் அவன் ஏமாந்து விட்டதாகச் சொல்கிறார்களாம். அவன் தோற்றந்திற்கும் யோக்கியதாம்சங்களுக்கும் இதைவிடப் பெரிய இடம் கிடைக்கும் என்றார்களாம். பெண் ஒன்றும் பெரிய ரதி இல்லை எனச் சொல்லிக் காட்டுகிறார்களாம்.

ஆகையால் ஒரு மாருதி கார் வாங்கத் தேவையான பணம் கொடுத்தால்தான் கல்யாணம் நடக்கும் என்றான் பாஸ்கரன்.

பெண்ணைப் பெற்றவர் நிலை குலைந்து போனார். அத்தனை பணத்திற்கு எங்கே போவார்?

பாஸ்கரன் வரதட்சணையே வேண்டாம் எனச் சொல்லியிருந்ததால் கல்யாணச் செலவுகளுக்குத் தாராளமாகக் கையிருப்பை அள்ளி விட்டிருந்தார்.

''உங்கள் இஷ்டம் போல் எது செய்தா



லும் போதும் எனச் சொன்னீர்களே!'' எனக் கேட்டார் அவர்.

''ஒரு பேச்சுக்கு அப்படிச் சொன்னேன். அதற்காக இப்படி ஒன்றுமே செய்யாமல் இருப்பீர்கள் எனக் கண்டோமா?''

''என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? முப்பது பவுன் நகை, பத்தாயிரம் ரூபாய், வெள்ளிப் பாத்திரம்.''

''அதெல்லாம் உங்கள் மகளுக்கு. எனக்கு என்ன கொடுத்தீர்கள்?''

பாஸ்கரனின் பெற்றோர் கூடப் பிள்ளையின் பேச்சை ரசிக்கவில்லை. பிள்ளையைத் தனியே கூட்டிப் போய்க் கண்டித்தனர்.

''என்னடா பாஸ்! இப்படி ஒரு பெரிய குண்டைத் திடீர்னு தூக்கிப் போடுகிறாய்? இத்தனை பெரிய தொகைக்கு அவர் எங்கே போவார், பாவம்! இத்தனை பேர் மத்தியில் நம்ம கௌரவம் என்ன ஆகிறது? உனக்கு என்ன ஆயிற்று?''

''கல்யாணம் எனக்கு. என்ன கேட்க வேண்டும், எப்போது கேட்க வேண்டும் என எனக்குத் தெரியும். இப்போது கேட்காவிட்டால் ஆறின கஞ்சி பழம் கஞ்சியான கதைதான். கார் வாங்கித் தருவதாக ஒப்புக் கொள்ளட்டும். தாலி கட்டுகிறேன். ஆனால் ஒன்று. அவர் பெண் நம்ம வீட்டிற்கு அந்தக் காரிலேதான் வர வேண்டும். அதுவரை அவர் வீட்டில் இருக்க வேண்டியதுதான்.''

நிர்மலாவின் தந்தை திகைத்துப் போனார். இப்போது இருக்கும் நிலையில் இன்னும் ஒரு வருஷத்திற்குள் அத்தனை தொகை புரட்டுவது சிரமம். கல்யாணம் செய்து கொடுத்துப் பெண்ணை வீட்டில் இருத்திக் கொள்வதா?

பாஸ்கரனின் தாயார் கூடப் பிள்ளையின் மனத்தை மாற்ற முயன்று தோற்றுப் போனாள்.

''நீ பேசாமல் இரும்மா... எல்லாம் இவர் சமாளித்துப் பணம் தருவார். இத்தனை தூரம் வந்து கல்யாணம் நின்று போனால் எத்தனை அவமானம் என்பது அவருக்குத் தெரியாதா? இந்தக் கல்யாணம் நின்று போனால் அப்புறம் எவன் இவர் பெண்ணைக் கட்டுவான். காலம் பூராவும் கன்னியாகவே இருக்க வேண்டியதுதான்.''

நிர்மலாவின் தந்தையின் காதுகளில் இது விழ, அவர் தன் நிதானத்தை இழந்தார்.

''என்னடா சொன்னே?'' என அவர் பாஸ்கரன் சட்டையைப் பிடிக்கப் போய் ஏக அமளி. இரு பக்கமும் பேச்சும் ஏச்சும் கிளம்ப, பாஸ்கரன் பெற்றோர் அடுத்த அரை மணியில் பந்தலை விட்டு வெளியேறினார்கள்.

சியாமளா சொன்னதையெல்லாம் கேட்ட பவானிக்கு ஆத்திரம் பீறிட்டது. இந்த அயோக்கியனைக் கல்யாணம் செய்து கொண்டு எப்படிக் குடித்தனம் நடத்துவது? நாளைக்கு அவள் கல்யாணத்தின் போதும் இதே போல் ஒரு பிரச்னையை அவன் எழுப்பினால்... அவள் அப்பா மானஸ்தர். தாங்க மாட்டார். உயிரையே கூட விட்டு விடுவார்.

மறுநாள் அவள் அப்பா பாஸ்கரனின் வீட்டுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டார். ''பெண்ணிற்கு இஷ்டம் இல்லை'' எனச் சொல்லிச் சம்பந்தத்தை முறித்தார்.

அந்தப் பாஸ்கரன்தான் பவானியைப் பார்க்க அவள் அலுவலகம் தேடி வந்திருந்தான்.

''என்ன?'' என வெறுப்புடன் கேட்டபடி அவன் எதிரில் வந்து நின்றாள் பவானி.

''ஒரே ஒரு நிமிஷம். ஒரே ஒரு கேள்வி. அன்று நான் உங்களைப் பெண் பார்க்க வந்த போது உங்கள் வீட்டில் இந்தக் கல்யாணத்தில் எல்லோருக்கும் பிடித்தம் இருந்தது. திடீரென்று மனம் மாறக் காரணம்?''

''இதற்குக் காரணம் என்று ஒன்றும் தனியாக இல்லை. ஈடுபாடு இல்லை.. அவ்வளவுதான்.''

''இல்லை. நாங்கள் விடைபெற்றுக் கொண்டு போன சமயம் கூட உங்கள் முகம் சம்மதத்தைத்தான் சொல்லியது. நான் போன பிறகு ஏதோ நடந்து...''

பவானிக்குக் கோபம் வந்தது. இவனிடம் என்ன பயம்? சியாமளா சொன்னது அத்தனையையும் கடகடவென்று ஒப்பித்தாள்.

''இப்போது என்ன சொல்கிறீர்கள்? இதெல்லாம் பொய் என்றா?''

''இல்லை. நூற்றுக்கு நூறு அது உண்மை. இதைவிட மோசமாகத்தான் நான் பேசினேன்.''

''இப்படிச் சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை?''

''துளிக்கூட இல்லை. பெருமைப்படுகிறேன். நாங்கள் கல்யாணப் பந்தலை விட்டுப் போன பிறகு என்ன நடந்தது என உங்கள் தோழி சொன்னார்களா?''

''உம். சொன்னாள். 'எவன் தாலி கட்டுவான்' எனச் சவால் விட்டுப் போனீர்களே. அதைப் பொறுக்க முடியாத பவானியின் அப்பா, தன் தங்கை மகன் சேகருக்கு நிர்மலாவை அதே முகூர்த்தத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார்.''

''நான் அப்படிக் கத்தாவிட்டால் அந்தக் கல்யாணம் நடந்திருக்குமா? நிர்மலாவும் சேகரும் ஒருவரையொருவர் விரும்பினார்கள். சேகர் சாதாரண வேலையில் இருந்தான். வருமானம் கம்மி. நிர்மலாவின் பேச்சை மதிக்காமல் என்னுடன்

கல்யாணம் செய்யத் தீர்மானித்து ஏற்பாடு களையும் துவங்கி விட்டார்கள். கல்யாணத்திற்கு முதல் நாள் இரவு தூக்கம் பிடிக்காமல் சத்திரத்தின் பின்புறம் உலவிக் கொண்டிருந்த சமயம், வெறிபிடித்தவள் போல கிணற்றை நோக்கி ஓடிய நிர்மலாவைத் தடுத்து நிறுத்தியவன்தான் நான். அப்போதுதான் எனக்கு எல்லாம் புரிந்தது. அவள் விருப்பப்பட்ட பையனுடன் அவளைச் சேர்த்து வைக்க எனக்குத் தெரிந்த வழிதான் அந்த நாடகம்.''

''இதெல்லாம் என்னை நம்பச் சொல்கிறீர்களா'' என இகழ்ச்சியுடன் கேட்டாள் பவானி.

''வேண்டாம். நம் கல்யாணம் நடக்காமல் போனால் கூட வருத்தம் இல்லை. உங்களைப் போன்ற நல்லவர்கள் மனத்தில் என்னைப் பற்றி ஒரு கெட்ட அபிப்பிராயம் உருவாவதை நான் விரும்பவில்லை. என் நிலையை விளக்கிப் போகத்தான் வந்தேன்.. காது கொடுத்துக் கேட்டதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். வருகிறேன்.''

பாஸ்கரன் போய் விட்டான்.

பாஸ்கரன் தன்னிடம் சொன்னதை சியாமளாவிடம் விவரித்தாள் பவானி.

''அப்படியும் இருக்கலாம். பவானி.. எதற்கும் நான் நிர்மலாவை விசாரிக்கிறேன்'' எனச் சொன்ன சியாமளா அன்றே கடிதம் எழுதினாள்.

பதில் பவானி பெயருக்கு வந்தது.

அன்புள்ள சகோதரி,

பாஸ்கரன் உங்களிடம் சொன்னது அத்தனையும் உண்மை.

நான் இன்று சந்தோஷமாக, இல்வாழ்க்கையில் ஈடுபடக் காரணம் அந்த நல்மனம் படைத்தவர்தான்.

என் அப்பாவின் ஆத்திரத்தைக் கிளப்பி, அதே பந்தலில் என் கழுத்தில் சேகர் தாலி கட்ட வேண்டுமென்பதற்காக, தன் கண்ணியத்தையும், மதிப்பையும் விட்டுக் கொடுத்து, ரொம்பவும் மோசமாகப் பேசினார். அவர் அப்பா, அம்மாவே அவரை உதாசீனப்படுத்தும் அளவிற்கு அவர் போனார். எனக்காக - என் வாழ்க்கை சிறக்க.

இத்தனை நாள் யாரிடமும் இந்த உண்மையைக் கூறாத அவர் உங்களைத் தேடி வந்து சொல்லி இருக்கிறார் என்றால், உங்களை அவர் எத்தனை தூரம் நேசிக்கிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

எனக்குக் கூடப் பிறந்த அண்ணன் யாரும் இல்லை. சகோதரி, என் உடன் பிறவாத சகோதரரான அவர் மனம் வாடச் செய்யாதீர்கள்.

அன்புடன்,
நிர்மலா.


ஒரு வாரம் கழித்து -

பாஸ்கரனின் அலுவலகம்.


''ஸார்! உங்களைப் பார்க்க ஒரு லேடி வந்திருக்காங்க. பவானின்னு சொல்றாங்க. ஒரு ஐந்து நிமிஷம் பார்த்துட்டுப் போறாங்களாம்.''

பாஸ்கரனும் புன்னகையுடன் நிமிர்ந்து, ''வரச் சொல்!'' என்றான்.

☛ நாமக்கட்டி பாக்கி



☛ வெளிப்படையா



தமிழக பட்ஜெட்

● சி. காந்திராஜ், செம்போடை

? 'அரசின் திட்டங்கள் மக்களைச் சென்ற டைகிறது எனக் கவனிக்க, அனைத் துக் கட்சியினர் அடங்கிய குழுவைத் தமிழக அரசு நியமிக்க வேண்டும்' என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறியிருப்பது பற்றி?

! நல்ல யோசனைகள் அரசால் ஏற்கப்படு வதில்லை.

● ஜி. பாலகிருஷ்ணன், சங்கரன்பந்தல்

? பொதுவாக தமிழக பட்ஜெட் எப்படி உள்ளது?

! புள்ளி விவரங்கள் பலவற்றில் முன் பின்னாக உள்ள முரண்பாட்டைக் கருணா நிதி எடுத்துக்காட்டியாகிவிட்டது. மளி கைச் சாமான் வரிக் குறைப்பு விஷயத்தில் அத்தியாவசியப் பண்டங்களுக்குச் சலுகை சைபர் என்பதை நுகர்வோர் பாதுகாப்புக் குழு வெட்ட வெளிச்சமாக்கி விட்டது. ஹோட்டல்கள் மீது வரி மூலம், இட்லி முதல் சாப்பாடு வரை அனைத்தின் விலை யையும் உயர்த்தியாகி விட்டது. வாகனங் களுக்கு வரி அதிகரிப்பு போக்கு வரத்துச் செலவைக் கூடுதலாக்கி, விலைவாசி உயர வழி வகுக்கும் என்பதை அந்தத் துறையில் உள்ளோர் கூறியாகி விட்டது. வரி விதிப்பு அம்சங்களையெல்லாம் மத்திய அரசு தன் னிடத்திலேயே வைத்திருப்பதால் மாநில அரசுக்கு வரி வசூல் வாய்ப்புக்களே குறைவு என்பதைப் பொருளாதார நிபுணர் கள் பேசியாகிவிட்டது. மது மீது வரி உயர்வு வழக்கமான அம்சம் என்று மதுப் பி ரி ய ர் க ள் அங்கலாய்த்தாகிவிட்டது. கவரிங் நகை வரி குறைப்பு உண்மையில் வரி உயர்வே என்று குமரி அனந்தன் குட்டை உடைத்தாகிவிட்டது. மிஞ்சுவது குங்குமம். அடுத்த பட்ஜெட்டுக்கு அமைச் ச ரு க் கு நாமக்கட்டியை நினைவூட்டுகி றோம்!

● ஆர். ரமேஷ், கம்பம்

? ஜாவித் மியான்தாத்தின் கிறுக்குத் தனமான சேஷ்டை எதைக் காட்டுகிறது?

! கிரிக்கெட்டை விட்டு விட்டு அவர் ஹை ஜம்ப் போட்டியில் கலந்து கொண் டாலும் பிரகாசிப்பார் என்பதை.

● கே.பி. சாரதி, வேலூர்

? நீங்கள் "கிணற்றுத் தவளை" என் கிறாரே கருணாநிதி?

! என்ன செய்ய, தலைவர்கள் தண் ணீர்ப் பூச்சிகளாக மாறிக் கிணற்றுக்குள் இருக்கும் தருணங்களில் அவர்களைக் கண்காணிக்க கிணற்றுத் தவளைகளாக நாமும் வடிவமெடுக்க வேண்டியிருக் கிறது.

● இரா. செந்தில்குமார், குத்தாலம்

? 'விடுதலைப்புலிகளை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று வெளிப்படையாகக் கூறியுள்ளாரே பண்ருட்டியார்?

! வெளிப்படையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விஷயம். தண்டிக்கப்பட வேண் டிய விஷயமாகவும் மாற விடுதலைப் புலி களைத் தேசத் துரோகிகளாக அறிவித்துத் தடை விதிக்கும் சட்டம் இங்கு இயற்றப் படுவது அவசியம்.

● மன்மதன் பிரகாஷ், புதுவை

? கோர்பச்சேவ் "பென்ஷன் போத வில்லை" என்று கூறியிருப்பது பற்றி?


! பதவியில் இருந்தபோது அவர் தவ றான வழிகளில் பணம் சம்பாதிக்க வில்லை என்பதைக் காட்டுகிறது.

● கே.பி. முத்துசாமி, காஞ்சிக்கோவில்

? மத்திய அரசின் பட்ஜெட்டைக் கண்டித் தும் குறை கூறியும் பேசும் எதிர்க் கட்சித் தலைவர்கள், பட்ஜெட் எந்த முறையில்

எப்படி உள்ளது?





போதவில்லை ☛ பிரபாகரனைப

நீங்கள் கேட்டவை - தராசு

அவன் உள்ளே பிரவேசித்ததும் அறையின் ஆட்டோமாடிக் வாசற்கதவு தானாகச் சாத்திக் கொண்டது. அவனுக்கு நடுத்தர வயதிருக்கும்; அவன் இடுப்பில் உறையில் துப்பாக்கி; கையில் ஒரு ட்ரே - அடர் நீலநிற பேண்ட், சட்டை அணிந்திருந்தான். சட்டையில் பொன்னிற சிங்க முகம் பிரகாசித்ததைக் கவனித்தான் பிரகாஷ். இதுதான் டான் அடியாட்களின் உடுப்பு போல...


''எங்கே என் சிந்து?'' என்றான் சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு.

அந்தச் சேவகன் ஓர் இயந்திரன். அழுத்தமான மௌனத்துடன் மூலையிலிருந்த டீப்பாயை இழுத்துப் போட்டான்.

''பதில் சொல்லுடா!''

டான் கலைஞா

12



டீப்பாய் மேல் ட்ரே வைத்தான்.

''டான் சோமையாவின் சாவு என் கைலதான்னு போய்ச் சொல்லுடா.''

ட்ரேயில் ஒரு பிளாஸ்டிக் பிளேட்டில் முந்திரி பக்கோடா, கப்பில் தேநீர். மனைவியைக் கடத்தியவனின் உபசரிப்பு ஆத்திரமூட்டியது. சூடான டீயை அவன் முகத்தில் விசிற வேண்டும் என்ற எண்ணத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான். ம்கூம். இன்னமும் சரியான சமயம் வாய்க்கவில்லை.

''சும்மா அலட்டிக்காதே தம்பி. உன் நன்மைக்காகச் சொல்றேன். கேட்டுக்க. இந்த மாளிகை ஒரு கோட்டை. பாஸுக்குத் தெரியாம ஒரு துரும்பு கூட வெளியேற முடியாது. அதனாலே தப்பிச்சுறலாம்னு அசட்டுத்தனமா முயற்சி ஏதும் செய்யாதே. அவ்வளவு ஏன்? இந்த அறையைக் கூட உன்னால தாண்ட முடியாது. வாசல்ல ஒரு ஆசாமி துப்பாக்கியோட காவல். உன்னைக் கூசாம சல்லடையாக்கிடுவான். நான் கொண்டு வர்றதைச் சாப்பிட்டுட்டு கம்முனு இரு, என்ன?''

அவன் போனதும் அமைதியாகச் சாப்பிடத் தொடங்கினான் பிரகாஷ். வீணாய்ப் பட்டினி கிடப்பதில் பயனில்லை. இந்தத் தடியர்களைச் சமாளிக்க ஒவ்வொரு அவுன்ஸ் சக்தியும் தேவைப்படும்.

உணவை முடித்து விட்டு எழுந்து சென்று ஜன்னல் அடைந்தான். கர்ட்டனை ஓரமாக ஒதுக்கினான். காற்று சிலுசிலுத்தது. பெரிய ஜன்னல்தான். நெருக்கமான டயமண்டு டிசைன் சூழ்ந்த கிரில் சட்டம் மகா உறுதியாக இருந்தது. சத்தியமாக ஜன்னல் வழியே குதித்து வெளியேற முடியாது.

வெளியே விரைவாய் மங்கும் மாலை. பிரதேசத்தின் எல்லை தெரியவில்லை. இருள் பிசாசுகளாய் மரங்கள். விஸ்தாரமான தோப்பின் - மறைவில் - மத்தியில் - மர்ம மாளிகை போலும். வெகு தொலைவில் உலவிய ஒரு காவலாளி. அவன் கையில் ஒரு ஏகே 47! அவனைப் பின் தொடர்ந்த ஓர் ஆக்ரோஷ டாபர்மேன். திகைத்தான். எப்படி சிந்துவுடன் தப்பிப்பது?

சாத்திய அறைக் கதவுக்கு அப்பால் ஒரு காவலன், துப்பாக்கி சகிதம். உணவு வழங்க வரும் ராஸ்கலிடமும் பாழாய்ப் போன ரிவால்வர். மயங்கிக் கிடந்த நிலையில் தன் வசமிருந்த அனைத்து ஆயுதங் களையும் பறிகொடுத்தாயிற்று; கால் சாக்ஸிலிருந்த ஹாக்சாவைக் கூட அறிந்து கொண்டு அகற்றியிருக்கிறார்கள், பாவிகள்...


உணவு எடுத்து வருபவன்தான் பிரகாஷின் முதல் குறி. கொஞ்சம் தந்திரமும், சிறு ஆயுதமும் இருந்தால் போதும். ஒரு ஸ்க்ரூ டிரைவர், உலோகத் தடி... இப்படி ஏதும் கிடைக்கும் என்ற நப்பாசையுடன் அறையை அலசிப் பார்த்தது வீணாயிற்று. பாத்ரூமில் ஒரு சவரப் பிளேடு கூடக் கிடைக்கவில்லை. சே! டானின் முன்னெச்சரிக்கை!

வேண்டிய அளவு அப்பாவிடமிருந்து பணம் கறந்ததும் சிந்துவையும், தன்னையும் தீர்த்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தன் உருவத்தையும் இருப்பிடத்தையும் பார்த்த ஒருவனைச் சுதந்திரமாக வெளியே அனுப்ப டான் ஒன்றும் முட்டாளில்லை. இந் நேரம் தன் தந்தையைத் தொடர்பு கொண்டிருப்பார்கள்... தன் வெடிக்கத் தருணம் பார்த்துக் கொண்டிருந்தது...

எதேச்சையாக அவன் பார்வை அறை மூலை டீவியில் பட்டதும் திடுக்கிடலுடன் நிமிர்ந்தான். இதை எப்படி மறந்தேன்? அறையில் ஒரு துரோக காமெராக் கண்ணை வைத்துக் கொண்டு தாக்குதல் நடத்தினால்... வேறு வினையே வேண்டாம். டான் ஆசாமிகள் அனைவரும் அவன் அறைக்கு வந்து அம்மி விடு வார்கள்...

அலமாரி, கட்டில், ஸ்விட்சு போர்டு, விட்டம் என ஒவ்வோர் இடமாக, நுணுக்கமாக ஆராய்ந்தான். எங்கே வைத்துத் தொலைத்திருக்கிறான் டான், காமிராக் கண்ணை?

எதிர்ச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த பிரும்மாண்ட வால் போஸ்டரை வெறித்தான். அந்த இயற்கைக் காட்சிப் போஸ்ட



சாவிற்குத் தேதி குறித்திருப்பார்கள்... விரைவில்... வெகுவிரைவில், அவன் ஏதாவது சாகஸம் செய்து எப்படியாவது சிந்துவுடன் தப்பிக்க வேண்டும்... இந்த மர்ம மாளிகையில் மற்றொரு அறையில் பிறிதொரு பிணைக் கைதியாக சிந்துஜா...

தவிப்பாக உணர்ந்தான். ஒரு வாரமாக உன்னைப் பார்க்காமல் பைத்தியம் பிடித்து விட்டது டியர். 'சிந்து... சிந்து...' என்று என் இதயம் துடிப்பது உனக்குக் கேட்கிறதா? பொறுத்துக் கொள் கண்ணம்மமா. சில சுவர்களும், சில இயந்திரத் துப்பாக்கிகளும் நம்மைப் பிரித்து விட முடியாது. இருக்கட்டும். நாளை இவர்களை... அவன் நரம்பு முறுக்கேறியது.

புதன் காலை. அமைதியாகக் குளித்தான்; உடுத்தான்; உண்டான். ஆனால் அவனுள் கனன்று கொண்டிருந்த ஒரு எரிமலை

ரில் பச்சையாகப் பரவிய புல்வெளியில் திமிறும் இரு வெண் புரவிகள்; சிறகு விரித்த சில பறவைகள்; வானத்தில் ஆங்காங்கே மேகத் தீற்றல்கள். அவனுடைய ஓவிய அறிவு அனிச்சைச் செயலாகப் போஸ்டரில் லயித்து ஆராய, சட்டென்று ஒரு குறை தென்பட்டது.

வெளிர் சாம்பல் நிறத்தில் தீற்றப்பட்ட மேகத் திட்டுக்களில் ஒரு துணுக்கு மேகத்திற்கு மட்டும் கறுப்புக் கலர் கொடுத்திருப்பது சரியில்லாமல் உறுத்தியது; பொருந்தவில்லை என்று பட்டது. மேலும் அதை உற்றுப் பார்க்கவும் சந்தேகம் தட்டியது.

பத்மா ரவிசங்கர்



> "மாப்பிள்ளை வாரப் பத்திரிகைகளுக்கு நிறைய வாசகர் கடிதம் எழுதுறவர்னு எதை வெச்சுச் சொல்றீங்க?"
> "அவர் தாலி கட்டினதும் மாப்பிள்ளைத் தோழர்கள் 'அட்டகாசம்', 'சிம்ப்ளி சூபர்ப்', 'தூள்' என்றெல்லாம் வாழ்த்தினாங்களே."
> - ஆம்பூர் பரந்தாமன்

எழுந்து போய் அதன் அருகே நின்றான் ஆறடி உயர பிரகாஷ். அவன் தலைக்கும் மேலாக ஓர் அடி உயரத்திலிருந்து அந்த மேகத் தீற்றல்கள்; அதில் கறுப்பாகக் காட்சியளித்தது மேகமே அல்ல.

மைகாட். மேக வடிவில் சுவரில் ஓட்டை! 'கண்டேன் காமெராவின் கண்ணை!' என்று கூவ வேண்டும் போலிருந்தது அவனுக்கு. ஐந்து நிமிடம் கழித்து மற்றொரு அதிர்ஷ்டம் அடித்தது.

வெளிச்சத்தில் வெளியே நிலைமை எப்படி எனப் பார்க்க விரும்பி ஜன்னலை அடைந்து திரைச் சீலையை ஒதுக்குவதற்காகக் கை வைத்ததும் திடீரென்று அவனுள் ஒரு ஐடியா மின்னல் வெட்டியது. ஆயுதமும் தயார்...'

தனக்கு உணவு வழங்கப்படுவதில் ஒரு துல்லிய நேர ஒழுங்கு இருந்ததைக் கவனித்திருந்தான். மாலை ஆறு மணி அளவில் தேநீர் வரும். அப்போதுதான்...

பிரகாஷ் கட்டிலில் படுத்துச் சிறிது நேரம் உறங்கி ஓய்வெடுத்தான் - அது அவசியம் என்று உணர்ந்து.

மாலை 5:15. எழுந்த போது புத்துணர்ச்சி உணர்ந்தான். முகம் கழுவித் தயாரானான். இன்னும் சில சாகஸ நிமிடங்கள் கழித்துச் சிந்துவின் விடுதலை... அவனுள்ளிருந்த அபரிமித சக்தியும், வெறியும் விடுபடத் துடித்தன. எந்த ராஸ்கல் என்னைத் தடுக்கிறான் பார்ப்போம்...

5:30 கர்ச்சீப் எடுத்துப் பந்து போல் சுருட்டி சுவர் ஓட்டையில் அடைத்துக் காமெரா லென்ஸை மூடினான். அடுத்துத் தன் கவனத்தைக் கட்டிலுக்குத் திருப்பினான். தலையணைகளை யோசனையுடன் நகர்த்தினான்; அடுக்கினான்; அமைத்தான்.

நிமிர்ந்த போது 5:40. கட்டிலில் ஓர் ஆள் - அதாவது 'பிரகாஷ்' முழுவதுமாகப் போர்த்திக் கொண்டு படுத்திருப்பது போலிருந்தது.

5:45. ஜன்னலிலிருந்து கர்ட்டனைக் கழற்றியதில் நான்கடி நீள ஸ்பிரிங் கிடைத்தது. உறுதியான ஸ்பிரிங். அருமையான ஆயுதம்தான்.

5:50. வாசல் கதவில் காதை வைத்துக் காத்திருந்தான்.

5:55. காலணி ஓசை கேட்டது. தொடர்ந்து காவலாளியுடன் அவன் பேசுவது முணுமுணுப்பாய்க் கேட்டது. அவசரமாக ஓடி பாத்ரூமிற்குள் புகுந்து கொண்டான்.

ஒருக்களித்துச் சாத்திய பாத்ரூம் கதவின் பின்னால் பிரகாஷ். அவன் கையில் சோம்பலாக வளைந்த நீள ஸ்பிரிங். கூர்மையாகக் கவனித்தான். கதவு மூடிக் கொள்ளும் ஒலி... பிரவேசிக்கிறான்... டீப்பாய் மீது ட்ரே வைக்கிறான்...

''ஏய் சோம்பேறி! எழுந்திரு. என்னய்யா அப்படி ஒரு தூக்கம்!'' - அடியாளின் குரலில் ஆச்சரியம் தொனிக்கிறது. இதோ... இப்போது...

கதவைச் சன்னமாகத் திறந்தான். இவனுக்கு முதுகு காட்டியபடி கட்டிலைப் பார்த்தவாறிருந்தான் அந்த டான் ஆள். தன்னுடைய, சிந்துவுடைய வாழ்வின் கடைசி சந்தர்ப்பம் இது...

இரண்டெட்டில் பாய்ந்து அவன் மீது மோதினான் பிரகாஷ். மின்னல் வேகத்தில் இயங்கினான். ஸ்பிரிங் கம்பியைச் சுழற்றி மாலை போல் அடியாளின் கழுத்திற்கு வீசினான்; இழுத்தான்; இரு கைகளாலும் இறுக்கினான். கட்டிலில் விழுந்திருந்தவன் மீது தன் உடல் பாரம் முழுவதையும் செலுத்தி அசைய விடாமல் செய்தான்.

சில வினாடிகளில் மூச்சுக் காற்றுக்கு ஏங்கித் தவித்து விட்டு அவன் துவளுவதைப் பார்த்ததும் அவசரமாக ஸ்பிரிங் தளர்த்திப் பிடி விலக்கினான். மயக்கம் தான். ஆனால் சுவாசம் சீரானதும் சில நொடிகளில் மயக்கம் தெளிந்து அவன் எழுந்து விடும் அபாயம் இருக்கிறது.

அவனிடமிருந்து கவர்ந்து கொண்ட துப்பாக்கியின் பின்புறத்தால் அவன் சோலார் ப்ளெக்ஸஸ்ஸில் அடித்தான். இனிக் கவலையில்லை. 'நான் எங்கிருக்கிறேன்' என்ற வசனமுடன் அவன் எழுந்து உட்கார ஒரு மணி நேரமாவது ஆகும்.... அவசரமாக அவன் ஆடை அவிழ்த்து...

கதவு திறந்து அடியாள் உடையில் கையில் துப்பாக்கியுடன் பிரகாஷ் வெளிப்பட, வாய் பிளந்தான் அந்தக் காவலாளி. சற்றும் அவகாசம் தராமல், ஆவேசமாய்த் தாக்கினான் பிரகாஷ். எகிறி, ஒரு ஃபுட்பாலர் பாணியில் முழங்காலை உயர்த்தி, அவன் முகவாய்க் கட்டையில் நச்சென்று அடித்தான்.

மயங்கிய காவலாளியை இழுத்து, அறையினுள் கிடத்தி விட்டுக் கிளம்பினான். மேலே ஒரு குழல் விளக்கு வெளிச்சம் சிந்த, அது ஒரு காரிடார். இரு பக்கமும் வரிசையாக இருண்ட அறைகள். பரபரப்பாகத் தேடினான். எதிலும் யாரும் இல்லை. எங்கே என் சிந்து...

அந்த மாளிகை விரிவடைந்து கொண்டே போவது போல் பிரமை தட்டிற்று. பிரகாஷ் சமயங்களில் மின்னலாய் ஓடினான்; மெதுவாய் நடந்தான்; நத்தையாய் நகர்ந்தான்; இருளில் பதுங்கினான். எதிர்பாராது எதிர்ப்பட்டவர்களில் இருவர் இவன் உடுப்பு கண்டு இவனைச் சட்டை செய்யாமலே சென்றனர்; சந்தேகம் கொண்டு பின்வந்த வேறொருவன் சடுதியில் சாய்க்கப்பட்டான்... தேடல் தொடர்ந்தது.

காதலின் சக்திதான் தன்னை விரட்டுகிறது என்பதில் அவனுக்கு ஐயமில்லை. இருப்பினும், கடந்த சில நிமிடங்களாகத் தான் நிகழ்த்தும் சாகஸமும், சமயோசிதமாகத் திட்டமிடும் தன் கிரிமினல் மூளையும் அவனை மிகவும் ஆச்சரியப்படுத்தின. இதெல்லாம் இவனுள் இயல்பு போலவும், இந் நாள் வரை உறங்கியிருந்த உணர்வுகள் போலவும் பிரகாஷுக்குத் தோன்றியது.

மாடியில் ஓர் அறை வாசலில் காவலாளியைப் பார்த்ததும் அவனுக்குள் சிலிர்ப்பு. இந்த அறையில்தான் சிந்துஜா இருக்க வேண்டும்...?

ஒரு தேர்ந்த 'பாலே' நடனமணி போல் நுனிக் கால் பதித்து, ஓசையின்றி நடந்து, அந்த அடியாளைப் பின்னால் அணுகினான்.

சரமாரியான சில குத்துக்களில் அவனைச் சாய்த்து, அவன் மீது அமர்ந்து கொண்டு, உருவிய துப்பாக்கியை அவன் நெற்றியில் பதித்து, ''சிந்துஜா இந்த ரூம்லதானே இருக்கா? சொல்லுடா நாயே! உன்னைக் கூசாமக் கொன்னுடுவேண்டா!'' என்றான் உறுமலாக.

பிரகாஷ் கண்களிலிருந்த கொலை வெறியைப் பார்த்துப் பயந்த அந்த அடியாள், ''ஆ... ஆமாங்க'' என்றான் முனகலாக.

''சாவி எடு!''

''டான் வெச்சிருக்காருங்க!''

''உன் டான் எங்கேடா இருக்கான்?''

''பக்கத்துலதான். காரிடார் கார்னர் ரூம்ல.''

சொன்னவன் தலையில் தட்டி மயக்கப்படுத்தி விட்டு எழுந்தான். யோசித்தான். துப்பாக்கியால் சுட்டு அந்தப் பூட்டை உடைத்து விடலாமா? வேண்டாம். ஓசை கேட்டு டான் ஓடி வந்து விடுவான். அவனுடன் காவலர்கள். அப்புறம் சிந்துவுடன் தப்பிப்பது நடவாத காரியம். டான் அறியாமல் அவனிடமிருந்து சாவி கிளப்பவும் முடியாது. கலிலியோவைத் தீர்த்து விட்டுத்தான் சாவி எடுத்து வர வேண்டும். தலைவனைத் தீர்த்தால்தான் தப்பிக்கும் சாத்தியக்கூறும் அதிகரிக்கும். ஆம். இந்தச் சிக்கல்கள் தீர அதுதான் சிறந்த வழி...

தீர்மானமுடன் நடந்து, இதயம் படபடக்க டான் அறைக் கதவை உள்ளுக்குத் தள்ளினான். ஓசையின்றித் திறந்ததும் பூனை போல் நுழைந்தான். அந்த அறை விசாலமாயிருந்தது. மத்தியில் அகல அலங்கார மேசை. அதன் பின்னே ஒரு சுழலும் நாற்காலி.

அதில் டான்கலிலியோ! இவனுக்கு முதுகு காண்பித்தபடி. 'டான் சோமையா... இன்றோடு உன் கதை முடிந்தது!' பற்களைக் கடித்தபடி பிரகாஷ் தயங்காமல் துப்பாக்கி உயர்த்தினான். டானுடைய செம்பட்டைத் தலைக்குக் குறி வைத்தான்.

''வெல்கம் மை சன்!''

சுழலும் நாற்காலி சுற்றித் திரும்பியது. பிரகாஷுக்குத் தலை சுற்றியது.

நாற்காலியில் அமர்ந்திருந்த ராஜசேகர் தம் தலையிலிருந்து சிவப்பு விக்கைக் கழற்றிக் கொண்டிருந்தார்...!

(தொடரும்)

''இந்த ஸ்டவ் நூறு ரூபாதான். அது ஆயிரம் ரூபா...!''

''அதுல என்ன அப்படி விசேஷம்...?''

''அது பற்ற வச்ச உடனே வெடிக்கும்!''

- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா



"தண்ணீர் வைக்கும் இந்த கூஜாவில் நான் செய்யப் போகும் மாஜிக்கைப் பாருங்கள்..." என்று அந்த கூஜாவைத் தலைகீழாகப் பிடிக்கிறார் வெங்கடேசன். அதன் பின்பகுதியில் தண்ணீரை ஊற்றி, கூஜாவை நேராகப் பிடிக்கத் தண்ணீர் சிறிதளவும் கீழ்ப்புறம் ஒழுகவில்லை!

"இனி இதிலுள்ள தண்ணீரை மேல் பகுதியிலுள்ள வாயின் வழியாகத்தான் எடுக்க முடியும். இதன் காரணமாகவே இதற்கு 'மாஜிக் பாட்' என்று பெயர். இது



☛ வெங்கடேசன்

ஒரு பாரம்பரியக் கலை அழிந்து கொண்டிருக்கிறது!

போன்ற வித்தியாசமான மண்பாண்டங்களைத் தயாரித்ததால்தான் எங்கள் மூதாதையர்களைச் செஞ்சி பகுதியிலிருந்து அழைத்து வந்து, இந்த கரிகிரி கிராமத்தில் குடியேற்றினார் அப்போது வேலூரை ஆண்ட நவாப். அதன் பிறகு எங்கள் மூதாதையர்கள் செய்து கொடுத்த மண்பாண்டங்கள்தான் நவாப்களின் அரண்மனையை அலங்கரித்தன... ம்... அதெல்லாம் பழைய காலம். எங்களின் இப்போதைய நிலை ரொம்பவும் பரிதாபகரமாகி விட்டது..." என்று பெருமூச்சு விடுகிறார் வெங்கடேசன்.

"நாங்கள் வெறும் மண்பாண்டக் கலைஞர்கள் மட்டுமல்ல. நாங்கள் செய்வது மெருகிட்ட மண்பாண்டங்கள்" என்று சாதாரண மண்பாண்டங்களுக்கும் தாங்கள் செய்யும் மண்பாண்டங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை விளக்குகிறார் அவர்.

"முதலில் நாங்களும் வழக்கம்போல் தான் மண்பாண்டங்களைச் செய்கிறோம்; சூளையிலிட்டுச் சுட்டு எடுக்கிறோம். அதன் பிறகு நாங்கள் சில இரசாயனப் பொருள்களைக் கொண்டு மெருகேற்றிப் பீங்கான் பாத்திரங்களைப் போல் வண்ணமயமானதாகவும், சாதாரண மண்பாத்திரங்களை விட உறுதியானதாகவும் செய்கிறோம். இப்படிப்பட்ட மெருகிட்ட மண்பாண்டங்களைச் செய்வது இந்தியாவிலேயே வேறெங்கும் கிடையாது. இங்கிருக்கும் ஐந்து குடும்பங்களான நாங்கள் மட்டும்தான்!" என்கிறார் வெங்கடேசன்.

"ராஜஸ்தான் போன்ற வடமாநிலங்களிலும் இதுபோன்ற மெருகிட்ட மண்பாண்டங்களைச் செய்கிறார்கள் போலிருக்கிறதே?" என்று நாம் கேட்ட போது, "அவை செராமிக்கில் செய்யப்படுபவை. நாங்கள் செய்வது முழுக்க முழுக்கக் களிமண்ணால் ஆன பாண்டங்கள்" என்று விளக்குகிறார் அவர்.

"எங்களின் இந்தச் சிறப்புக் கருதித்தான் அரசு எங்களுக்கு உதவி செய்தது. 'கரிகிரி மெருகிட்ட மண்பாண்டத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' என்று ஒரு சங்கத்தை ஆரம்பித்தோம். அரசு உதவியில் சங்கத்திற்குக் கட்டடமெல்லாம் கட்டி, எங்கள் பாண்டங்களைச் சுட்டெடுப்பதற்குப் பக்காவான சூளையெல்லாம் கட்டினோம். 28.8.59-ல் ஆர். வேங்கடராமன் அவர்கள் வந்து எங்கள் சங்கத்தைத் திறந்தும் வைத்தார். சுமார் இருபது ஆண்டுகள் எங்கள் சங்கமும் மிக நன்றாக இயங்கியது.

நான்தான் சங்கத்தின் செயலாளராக இருந்தேன்.

''அதன் பிறகு, எங்கள் தொழில், வெறும் கைத் தொழில்தான் என்று சொல்லி, 'இண்டஸ்ட்ரியல் அண்ட் காமர்ஸ்' துறையிலிருந்த எங்கள் சங்கத்தைக் கதர்த் துறைக்கு மாற்றினார்கள். அவ்வளவுதான்! கதர்த் துறை எங்களைக் கண்டுகொள்ளாததால் எங்கள் சங்கம் மூடப்பட்டு விட்டது. நீங்களே வந்து பாருங்கள்!'' என்று சொல்லிப் பாழடைந்து கொண்டிருந்த சங்கக் கட்டடத்தையும், சூளையையும் காட்டினார் வெங்கடேசன்.



☛ மாஜிக் பாட்டும் மற்ற மெருகிட்ட பாண்டங்களும்

''கதர்த் துறை உங்களைக் கண்டுகொள்ளாமல் விட்டதற்கு என்ன காரணம்? ஒருவேளை நீங்கள் செய்யும் மெருகிட்ட மண்பாண்டங்களுக்குக் கிராக்கி இல்லாமல் போனதாலோ?''

''கிடையவே கிடையாது. எங்களுடைய பாண்டங்களுக்கு இன்றைக்கு ஏக கிராக்கி. நாங்கள் செய்யும் மாஜிக் பாட், ஃபிளவர் வாஸ், கிருஷ்ணன் பொம்மை, ஆஷ்ட்ரே... என்று பல்வேறு விதமான பாண்டங்களும் கலைநயம் மிக்கவை. சென்னையிலுள்ள வி.டி.ஐ. நிறுவனத்தில் எங்கள் பாண்டங்கள் ஏராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. ஒன்று மட்டும் சொல்லலாம். நாங்கள் செய்பவை அலங்காரப் பொருள்கள் என்பதாலும் விலையும் நூற்றுக்கணக்கில் என்பதாலும் சாதாரண ஏழைகளால் வாங்க முடியாது. பணக்காரர்களால்தான் வாங்க முடியும்!''

''இந்த நிலையில் அரசு எப்படி உங்களை ஊக்குவிக்காமல் இருக்கிறது?''

''அதுதான் எங்களுக்கும் புரியவில்லை. இப்போது கூடப் பாருங்கள்... டெல்லியில் நடக்கவிருக்கும் அனைத்திந்திய கலைப்பொருள் கண்காட்சியில் கலந்து கொள்ளச் சொல்லி டெல்லியிலிருந்து கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதில் கலந்து கொள்வதற்காகத்தான் இப்போது நான் புதிய பாண்டங்களைச் செய்து கொண்டிருக்கிறேன். மேலும் பிரான்ஸிலுள்ளவர்கள் இதுபற்றிக் கேள்விப்பட்டு, அங்கு வந்து, இந்தக் கலைப் பொருள்களைச் செய்து காட்டச் சொல்லிக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.... இதோ பாருங்கள் கடிதம்... வி. டி. ஐ. தான் எனது வெளிநாட்டுப் பயணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஆனால், தமிழக அரசுதான் மனமிரங்க மாட்டேன் என்கிறது.''

உங்களுக்கு இவ்வளவு வாய்ப்புகள் இருந்த போது, எதற்காக அரசின் உதவியை எதிர்பார்க்க வேண்டும்?''

''வாய்ப்பு இருப்பது உண்மைதான். ஆனால் வசதி வேண்டாமா? உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். நடுத்தரமான மாஜிக்பாட்டுகள் நூறு செய்ய வேண்டுமானால், அதற்கு முதலீடாகச் சுமார் எட்டாயிரம் ரூபாயாவது தேவைப்படும். காரணம், மெருகூட்டலுக்குத் தேவைப்படும் கெமிகல்ஸ் எல்லாம் அத்தனை விலையுயர்ந்தவை! ஆனால், அரசு இதைக் கைத்தொழில் என்றுதான் கருதுகிறது. கடன் கேட்ட போது 'மூவாயிரம் ரூபாய்தான் தர முடியும்' என்று சொன்னார்கள். நான் அதை வேண்டாமென்று சொல்லி விட்டேன். அதை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியும்?'' என்ற வெங்கடேசன் மேலும் சில விஷயங்களைச் சொன்னார்.

''இப்போது நாங்கள் பயன்படுத்தும் சூளை சாதாரணமானது.

☛ மூடப்பட்ட சங்கத்துக்குள் பாழடைந்து கிடக்கும் பாண்டங்கள்.



இதில் 700 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் தான் பெற முடியும். ஆனால் பாழடைந்து கிடக்கும் எங்கள் சங்கத்தின் சூளையைப் பயன்படுத்தினால் 1200 டிகிரி சென்டி கிரேட் வெப்பம் பெற முடியும். அதில் சுடப்படும் பாண்டங்கள் இன்னும் மெரு கேறியவையாகவும், கெட்டியானவையாக வும் இருக்கும். ஆனால், அந்தச் சூளை யைப் பயன்படுத்த எங்களுக்கு நிலக்கரி தேவை. அதற்கு முதலீடு வேண்டுமே! அதற்குத்தான் அரசின் உதவி வேண்டும் என்கிறேன்...

''இந்தக் கலையைத் தெரிந்து வைத் திருப்பது இந்தியாவிலேயே எங்கள் ஐந்து குடும்பம் மட்டும்தான். அரசின் உதவி யேதும் இல்லாததால் எங்கள் பிள்ளைகள் இதில் ஆர்வம் காட்டாமல் இருக்கிறார் கள். ஆக, எங்களுக்குப் பிறகு இந்தக் கலையே மறைந்து போகவும் வாய்ப்பிருக் கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, அரசு எங்களுக்கு முழுமையாக உதவ முன்வந்தால், எங்களுடைய மெரு கிட்ட மண்பாண்டங்களை உலகளாவ ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணி யையும் பெற்றுத் தருவோம்!'' என்கிறார் வெங்கடேசன்.

ஆக, நமது பாரம்பரியம் மிக்க அரிய கலையொன்று அழிந்து கொண்டிருக்கிறது. அவசரமாகவும் அக்கறையுடனும் அரசு உதவினாலன்றி, அதைக் காப்பாற்ற முடி யாமல் போய் விடும். அது ஈடுகட்ட முடி யாத ஒரு கலாசார நஷ்டமாகி விடும்!

– பிரின்ஸ்

பாழடைந்து வரும் முத்துமண்டபம்!



வேலூரை ஒட்டியிருக்கும் பாலாற் றங்கரையில் அமைந்துள்ளது முத்து மண்ட பம். முத்துச் சிப்பி வடிவத்தில் கட்டப் பட்டுள்ளதால் இப் பெயர். எதற்காகக் கட்டப்பட்டது?


இலங்கையிலுள்ள கண்டியை ஆண்ட கடைசித் தமிழ் மன்னன் விக்கிரம ராஜ சிங்கன். அவரது ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அவரையும் சிறைப் பிடித்து வந்து வேலூர்க் கோட்டையில் வைத்தனர். தமது மூன்று பட்டத்து ராணி களோடும், நெருங்கிய உறவினர்களோடும் பதினேழு ஆண்டுகள் வேலூரில் சிறையி ருந்த விக்கிரமராஜ சிங்கனின் கல்லறை யையும், அவரது பட்டத்து ராணிகளின் கல் லறைகளையும் உள்ளடக்கிக் கட்டப் பட்டதுதான் முத்து மண்டபம்.

முழுக்க முழுக்க சலவைக் கற்களால் கட்டப்பட்ட இந்த முத்து மண்டபம், தி. மு. க. ஆட்சியில் கட்டப்பட்டதாலோ என்னவோ, இந்த அரசு அதைக் கண்டு கொள்ளாமலேயே விட்டு விட்டது. கூடிய சீக்கிரம், அது அப்பகுதி மக்களின் பொதுக் கழிப்பிடமாக மாறினாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை!

ஆற்காடு சாலையில் ஓர் அழகிய இடம்

ஆற்காடு சாலையில், 'நவாப் சமாதி' என்று பொதுவாக அழைக் கப்படும் காம்பவுண்டுக்குள் திப்பு சுல்தானின் பிள்ளைகள், மகள், மரு மகன், மற்றும் மந்திரிகளுக்கான சமாதிகள் உள்ளன. ஹைதர் அலி யின் இரண்டு மனைவியர் கல்லறை களும் இங்குதான் உள்ளன. சுதை யாலும் செங்கற்களாலும் பீஜப்பூர் கட்டடப் பாணியில் கட்டப்பட்ட இந்த நினைவுச் சின்னங்கள் அற்புத மான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. உள்ளே தென்னை மரங்களும் பூச்செடிகளுமாக இருப் பதால், கல்லறைகள் ஞாபகம் வரா மல் பூங்காவுக்குள் நுழைந்த மாதிரி இருக்கிறது. இதன் பராமரிப்புக்கு, இந்தக் காம்பவுண்டுக்கு வெளியி லுள்ள கடைகளின் வாடகை வரு மானம்தான் பயன்படுத்தப்படுகிற தாம். நிர்வாகப் பொறுப்பை ஒரு குழு ஏற்றுக் கொண்டு செம்மை யாகச் செய்கிறது.





சீமாச்சு வீட்டில் ஸ்டார் டி.வி.!

"கூடாது! கூடாது! கூடாது!" - கோர்ட் சிப்பந்தி கூவுகிறார்ப் போல் மும்முறை கூவினாள் பாரியாள். பட்டால்தான் தெரியும் புருஷனுக்கு! ஆணாகப் பிறந்தால் ஆசைப்படக் கூடாது. அப்படியே ஆசைப் பட்டாலும் வாக்குறுதி மட்டும் அளிக்கக் கூடாது.

பக்கத்துத் தெரு பாலு, "உலகத்தையே உன் பெட்ரூமினுள் கொண்டு வந்து காட்டு கிறேன். எந்த நேரத்தில் நீ 'டி.வி.'யை ஆன் செய்தாலும் படம் பார்த்துக் கொண்டிருக்க லாம்," என்ற போது மனத்திற்குள் பல வெள்ளைப் புடைவைகள் ஸ்லோமோஷனில் தம் தனனம் பாட ஆரம்பித்தன.

"இப்பத்தான் ஜெயராமன் வீட்ல கனெக்ஷன் கொடுத்துட்டு வரேன்."

- இதை பாலு சொன்ன மாத்திரத்தில், நம்ம வீட்டிலும் ஸ்டார் டி.வி. கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்ற வேகம் பிறந்தது.

பாலுவிடம் என் ஒப்புதலைக் கொடுப்பதற்கு முன்பாக வீட்டிலிருக்கும் மனைவியை... ஒரு துளி... அதிகமில்லை... ஒரு துளியாவது நினைத்திருக்க வேண்டும்.

இதைத்தான் ஆண் புத்தி அவசர புத்தின்னு சொல்லணும். ஒரு பக்கம் பாரியாள் - இன்னொரு பக்கம் பாட்டி!

"எனக்குப் பொழுதே போகலே. பல்லாங்குழி வாங்கிக் கொடுன்னு மாமாங்கமா நான் அழுதுண்டிருக்கேன். வாங்கிக் கொடுக்க வக்கில்ல. பெரிய்ய ஸடார் டி.வி.யாம். ஸடார் டி.வி." - நேரம் பார்த்து ஆரம்பித்து விட்டாள் பாட்டி.

"உனக்குப் பல்லாங்குழிக்கு ஏற்பாடு செய்தாச்சு. ஸடார் டி.வி.யோட அதுவும் வர்றது."

"என்னவோ பண்ணிக்கோ! ஏண்டா உங்க ஸடார் டி.வி.ல 'உலாவரும் ஒளிக் கதிர்' வருமா?"

"என்ன அப்படிக் கேட்டுட்டேள். ஸடார் டி.வி.ன்னாலே 'உலாவரும் ஒளிக் கதிர்' என்றுதான் அர்த்தம். ஹாங்காங்கிலிருந்து நம்ம வீட்டுக்கு ஒளிக்கதிரா உலா வர்றதுக்குப் பேர்தான் ஸடார் டி.வி."

"தோ பாருங்க! ஸடார் டி.வி.க்கு இந்த வீட்ல கனெக்ஷன் கொடுத்தா நம்ம கனெக்ஷன் கட் ஆயிடும்" - உக்கிரமாகச் சீறினாள் பாரியாள்.

"ஆஹா! ஒரே சமயத்துல ரெண்டு நல்ல விஷயம் நடக்கப் போறது. 'கஷ்டம் போய் கனெக்ஷன் வந்தது டும் டும் டும்' என்று கத்தணும் போலிருந்தது. ஆனாலும் என்னுடைய புருஷ லட்சணமான பயம் என் சந்தோஷத்தைச் சாம்பலாக்கியது.

இந்திய கிரிக்கெட் அணி மாதிரி வழக்கமான இன்னொரு தோல்விக்கு நான் தயாரான போதுதான், அந்த கழுத்துசுளுக்கும் திருப்பம் நிகழ்ந்தது.

"அத்திம்பேர்!" என்ற குரல் வந்த திசை யில் என் கழுத்து 90 டிகிரி ஆங்கிளில் திரும்ப, 'கை குடுங்கோ அத்திம்பேர்' என்று என் கையை ஒரு உலுக்கு உலுக்கினான். ஒன்றும் புரியாது முழித்துக் கொண்டிருந்த எங்களிடம், "ஹய்யா! இனிமே குஷால்தான். இனிமே உலகக் கோப்பை கிரிக்கெட் பந்தயங்களை அத்திம்பேர் தயவால் ஸடார் டி.வி.யில் பார்க்கலாம்."

- என்றுமே உபத்திரவம் என்று நான் நினைத்திருந்த என் மச்சான் எனக்கு இப்போது ஆபத்பாந்தவனாக வந்து சேர்ந்தான்.

தமிழ்வாணா

கூடப் பிறந்தவன் ஸடார் டீ.வி. பார்க்க வேண்டும் என்றவுடனே பாரியாள் அரசியல்வாதி கணக்காக அந்தர்பல்டி அடிக்க ஆரம்பித்தாள்.

''என்கிட்டே ஒண்ணும் கேக்காதீங்க. நீங்க சம்பாதிக்கிறீங்க. நீங்க பணம் கொடுக்கப் போறீங்க. ரெண்டாவது நா சொல்லி நீங்க கேட்கப் போறதில்லே.''

உடன்பிறந்தோன் பார்க்க வேண்டுமென்பதற்காகத் தன் முடிவை மாற்றிக் கொண்ட என் தர்மபத்தினி, இந்த வீட்டில் எல்லாம் என் இஷ்டப்படி நடக்கிறார் போல் ஒரு பிரமையை உண்டுபண்ணினாள்.

சினிமாவில், உச்சகட்டக் காட்சியில், எல்லாம் முடிந்தபின் குற்றவாளியை அரெஸ்ட் செய்ய வருகிற போலீஸ் மாதிரி எங்கள் வீட்டு வாசலில், ஜங்க்ஷன் பாக்ஸ், கேபிள் சகிதமாக இரண்டு பேர் வந்தனர். நொடியில் கனெக்ஷன் கொடுத்து விட்டு அட்வான்ஸ் பணம் ரூ 500, முதல் மாதத் தவணை ரூ 100 ஐ பெற்றுக் கொண்டு மறைந்து விட்டனர்.

ஸ்போர்ட்ஸ் சானலில் நடந்து கொண்டிருந்த பனிச்சறுக்கு விளையாட்டை நான் பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த போதுதான், அந்தப் பாழாய்ப் போன பவர்கட் வந்தது. அரை மணி கழித்து வந்த பவர், ஒரு கணத்தில் மின்னலாக மறைந்தது. எதிர் வீடு, பக்கத்து வீடு என்று ஒவ்வொரு வீடாகக் கரண்ட் வந்து கொண்டிருக்க எங்கள் வீட்டுக்கு மட்டும் கரண்ட் வருவதான தடயமே இல்லை. காத்து காத்து சோர்ந்ததுதான் மிச்சம். என்னையறியாது நான் கண் அயர்ந்த போது காது ஜவ்வு கிழிகிறார் போல் பெரும் சப்தம்.

''அடப்பாவி! கடங்காரா! நீ உருப்படுவியா'' என்று ஆவேசமாகக் கத்திக் கொண்டிருந்தாள் பாட்டி.

''அர்த்த ராத்திரியில் பிசாசு மாதிரி கத்தறியே? என்ன ஆச்சு உனக்கு?''

''ஆமாண்டா! இந்த பிசாசுகளைப் பார். என்னடா இது! துணிப் பஞ்சம் வந்த மாதிரி உடுத்திக்கிட்டுப் பேய் ஆட்டம் ஆடறதுகளே இந்தச் சனியன்கள். கண்றாவி! கண்றாவி!''

டீ.வி.யை அணைத்து விட்டுப் படுத்தவன் மறுநாள் விடியற்காலை மூன்று மணிக்கு மச்சினன் அண்ட் கம்பெனியினர் போட்ட சத்தத்தில் எழுந்து கிரிக்கெட் மாட்ச் பார்க்க உட்கார்ந்து விட்டேன். சிறிது நேரம் கூட பார்த்திருக்க மாட்டேன். உள்ளிருந்து பாரியாள், ''என்னங்க! கொஞ்சம் வர்றீங்களா?'' என்றாள்.

''என்ன வேணும்?''

''எக்ஸ்ட்ரா பால் வாங்கிண்டு வரணும்.''

''நல்ல மாட்ச் நடந்துண்டிருக்கும் போது தொந்தரவு செய்யாதே. நான் போக முடியாது.''

''போலேன்னா உங்களுக்குக் காப்பி கிடையாது.''

''நம்ம வழக்கமா வாங்கற பால் என்னாச்சு?''

''உங்க மச்சினன், மச்சினன் ப்ரெண்ட்சுக்குக் காப்பியா போச்சு.''

வேற வழியில்லாமல் அலுத்துக் கொண்டே ஆட்டோமாடிக் பால் பூத்தில் தூங்கி வழிந்து கொண்டிருந்த கூட்டத்திடையே நின்றிருந்தேன்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேர மாட்ச் பாழ். வீடு வந்ததும் குளித்து, காப்பி குடித்து, ஆபீஸ் கிளம்பத்தான் நேரமிருந்தது. என் செலவில் என் மச்சான் அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஆபீசில் நுழைந்ததுதான் தாமதம் மேனேஜர் உள்ளே கூப்பிட்டார்.

''குட்மார்னிங் சார்!''

''ம்ம்ம்.''

''என்ன சார் கூப்பிட்டீங்களா?''


''ஆமாம்! நம்ம மதுரை பிராஞ்ச்ல இன்னும் ஆடிட் முடிந்தபாடில்லை. நீ என்ன பண்றே. இன்னிக்கோ நாளைக்கோ மதுரை போய் ஆடிட் வேலையை முடித்து விட்டு மெதுவாக வா. ஒரு மாசம் ஆனாலும் பரவால்லை.''

WORLD CUP நடக்கற இந்த நேரத்துலயா டூர் அனுப்பணும். என் தலையெழுத்து!

''என்ன யோசிக்கிறே?''

''இல்ல சார்... இப்பத்தான்...''

''எனக்கு எல்லாம் புரியுது. கவலைப்படாதே. ரயில் டிக்கெட் கிடைக்கலேன்னா ப்ளேன்ல போ. ஓ.கே. ஆல் தி பெஸ்ட்!''



நான் எந்த வேளையில் ஸ்டார் டீ.வி. கனெக்ஷன் கொடுத்தேனோ தெரியவில்லை. எனக்கு ஒருநாள் அதை அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை. மதுரையில் ஆடிட் முடித்து வருவதற்கு இருபது நாள் ஆகி விட்டது. வந்தவுடன் நேராக டீ.வி.யை ஆன் செய்யப் போன போது, ''அய்யய்யோ! அங்கே போகாதீங்க'' என்று என் மனைவி கத்தினாள்.

''ஏன்?''

''டீ.வி. KNOB சரியில்லை. என் தம்பி சந்துரு வரட்டும். அவனுக்குத்தான் KNOB இல்லாமல் எப்படி ஆன் செய்யறதுன்னு தெரியும்.''

''அடப்பாவி! தரித்திரம் இந்த வீட்டுக்கு மாட்ச் பார்க்க வரேன்னு சொல்றப்பவே தெரியும், இந்த டீ.வி.க்குச் சனி பிடிச்சுடுத்துன்னு...''

''பாவம்! அவனை ஏன் அநாவசியமா கரிச்சுக் கொட்றீங்க. நீங்க வாங்கின டீ.வி. லட்சணம் அப்படி. நேத்திக்கு அவன் டீ.வி. போட போனப்ப KNOB கையோட வந்துடுத்து. அவன் வரட்டும்.

''ஏன்! வந்து மிச்ச மீதியையும் உடைச்சுட்டுப் போறதுக்கா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டு விட்டு டீ.வி. கம்பெனிக்கு போன் செய்து ரிப்பேர் விஷயத்தைச் சொன்னேன்...

''முதல்ல இங்கே நேர்ல வந்து நூறு ரூபாய் டெபாசிட் கட்டிட்டு 'கம்ப்ளெயின்ட்' ரெஜிஸ்டர் பண்ணிக்குங்க சார்...'' என்றது மறுமுனை.

போனை வைத்த கையோடு தலையில் கை வைத்துக் கொண்டு அப்படியே நான் சாய்ந்த போது, வாசலில் இருந்து, ''சார்'' என்ற குரல் வந்தது!

''உள்ளே வாங்க. யாரு நீங்க?''

''என்ன சார் மறந்துட்டீங்க! நாங்கதான் சார் ஸ்டார் டீ.வி. கனெக்ஷன் கொடுத்தோமே...''

''இப்ப என்ன வேணும் உங்களுக்கு?''

''இந்த மாசம் நீங்க கொடுக்க வேண்டிய நூறு ரூபாய்க்காக வந்திருக்கோம்...''

''..................''



தெற்குக் கொரியாவில் சாலை நெருக்கடி அபரிமிதமாகி விட்டது. ‘Traffic Hell’ என்று அந்த நாட்டவர்கள் அதற்குச் ‘செல்லப் பெயர்’ சூட்டியிருக்கிறார்கள்.

இந்த நரகத்திலிருந்து மக்களை விடுவிக்கச் சபதம் எடுத்துள்ளார் அதிபர் ரோ டே வூ (Roh Tae Woo) இதற்கான ஒரே வழி சூப்பர் ஃபாஸ்ட் ரயில் போக்குவரத்தை அறிமுகப்படுத்துவதுதான் என்று உணர்ந்து ஒரு திட்டமும் வகுத்திருக்கிறார். 8.3 பில்லியன் டாலர் செலவு பிடிக்கும் இந்த அதிவேக ரயில் திட்டம் 1999க்கு முன்னர் அமைக்கப்பட்டு விடும். இந்த ரயில்கள் மணிக்கு நானூறு கிலோ மீட்டர் வேகத்தில் ஓடக்கூடியவை. இவற்றில் பயணம் செய்வது சொகுசாகவும் இருக்கும்.

தென் கொரியாவின் இத் திட்டம்



☛ ஷின்கான்ஸென் - ஜப்பான்

அலுங்காமல் ஓடும் அதிவேக ரயில்கள்!

சில ஐரோப்பிய நாடுகளிலும் ஜப்பானிலும் எக்கச்சக்கப் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. காரணம், இந்த நாடுகளெல்லாம் இந்த ரயில் திட்டத்தைத் தென்கொரியாவில் அமைத்துத் தரும் கான்ட்ராக்டைப் பெற போட்டி போடுவதுதான்.


கான்ட்ராக்டை வழங்கும் இறுதி முடிவு தெ. கொரிய அதிப

☛ டி.ஜி.வி.
- பிரான்ஸ்




ருடையதாகவே இருக்கும். இதில் அரசியல் தலையீடு இருக்காது என்று சொல்லப்படுவதை யாரும் நம்பத் தயாராயில்லை. ஏற்றுமதிகளில் தங்கள் நாட்டுடன் கடுமையாகப் போட்டியிடும் ஜப்பானிடம் கான்ட்ராக்டைத் தர தென் கொரிய அரசுக்கு மனமில்லை.

ஃப்ரெஞ்சு கான்ட்ராக்ட் மலிவாகவும் அதன் ரயில்கள் மற்றவற்றை விட மிக வேகமாகவும் (மணிக்கு 513 கிலோ மீட்டர்) இருப்பதால் ஃப்ரான்ஸ் நாட்டின் TGV- train à grande Vitesse நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள்.



தென் கொரிய அதிபர் பாரிஸ் சென்றிருந்த போது TGV ரயிலில் சொகுசு சவாரி ஏற்பாடு செய்த பிரெஞ்சு அரசாங்கம், கடந்த அக்டோபரில், சில கொரிய பத்திரிகையாளர்களை அழைத்து பிரெஞ்சு அதிவேக ரயில் அமைப்பை



☛ ஐஸ் - ஜெர்மனி

விளக்கிக் காண்பிக்கவும் செய்தது. இதற்கான செலவில் ஒரு பகுதியை TGV நிறுவனமே ஏற்றது!

பல தென் கொரியர்கள், தங்களைப் போன்ற வளரும் நாட்டுக்குக் கட்டுப்படியாகாத கனவுத் திட்டம் இந்த சூப்பர் ரயில் ப்ராஜெக்ட் என்று குறைகூறியும் வருகிறார்கள். ஆனால் அதிபர் ரோ தம் முடிவில் பிடிவாதமாய் இருக்கிறார். தென் கொரியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் நாடு, ரயில் திட்டத்தை அமைத்துத் தருவதுடன் தொழில் நுட்பத்தையும் கற்றுத் தர வேண்டும் என்றும் அந்தத் தொழில் நுட்பத்தைப் பின்னர் தாங்கள் வேறு நாடுகளுக்கு விற்கவும் அனுமதிக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளார்.

ஆதாரம் : நியூஸ்வீக்

மௌனம் கலைத்த மயக்கம்

"அங்க்கிள்...!"

எழுதிக் கொண்டிருந்த நான் நிமிர்ந்து பார்த்தேன்.

எதிரில்... பக்கத்து வீட்டுப் பெண்...

"அடடே...! பாரதியா...? வாம்மா...!"

"உள்ளே வரலாமா அங்க்கிள்...?"

வழக்கமாகப் பனிச்சாரல் போல் ஜிலு ஜிலுவென்றிருக்கும் அவளுடைய குரல் வறண்டிருந்தது.

"என்னம்மா இது... கேள்வியே வித்தியாசமா இருக்கே...! இது உன் வீடு மாதிரி... சொந்த வீட்டுக்குள்ளே வர்றதுக்கும் போறதுக்கும் யாராவது பர்மிஷன் கேப்பாங்களா? அதிருக்கட்டும். இதுவரைக்கும் எத்தனை தடவை எங்கிட்ட பர்மிஷன் வாங்கிட்டு உள்ளே வந்திருக்கே...?"

எனது பதில் அவள் மனத்தில் மிருது வாய் ஒத்தடம் கொடுத்திருக்க வேண்டும். ஏதோ வலி குறைந்தவள் போல அவள் முகத்தில் ஒருவித இதம் படர்வது தெரிந்தது.

"என்னமோ... கேட்கத் தோணுச்சு... கேட்டேன்..."

அவள் தயங்கித் தயங்கி உள்ளே வந்தாள். இந்தத் தயக்கம்.. அவளுக்குப் பழக்கமில்லாத ஒன்று. அவளுக்குத் தெரிந்த நடை என்பது துள்ளலாய் ஓடுவதுதான். கூடவே இனிய சங்கீதமாய் வாய் ஏதாவது முணு முணுத்துக் கொண்டேயிருக்கும்.

இவையெல்லாம் அவளிடம் இப்போது சுத்தமாய்த் தொலைந்து போயிருந்தன.

நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன். கூடவே ஒரு நிம்மதியும் பூத்தது.

என் எதிரில் கிடந்த பிரம்பு நாற்காலியைக் கொஞ்சம் தொலைவில் தள்ளிப் போட்டுக் கொண்டு அதன் நுனியில் பட்டும் படாமலும் அமர்ந்து கொண்டாள் - ஏதோ நெருப்பில் உட்கார்ந்திருப்பது போல. இதுவும் வழக்கத்துக்கு மாறானதுதான்.

இந்த பிரம்பு நாற்காலியில் அவள் பல முறை உட்கார்ந்திருக்கிறாள். நாற்காலி முழுமையும் வியாபித்து நன்றாகச் சாய்ந்து அமர்ந்து, கால் மேல் கால் போட்டுக் கொண்டு மிகவும் ஒய்யாரமாய் அமர்ந்து கொள்வாள்... எழுதிக் கொண்டிருக்கும் என்னை எழுத விடாமல் வம்பளப்பாள். வாய் கலகலக்கும். கண்கள் பளபளக்கும். இவள் நிச்சயமாய்... அவள் இல்லை.

"பசங்க ரெண்டும் டியூஷனுக்கா அங்க்கிள்...?"

"ஆமாம்மா!"

"ஆன்ட்டி...?"

"கோவிலுக்கு..."

'நல்லவேளை...!' என்ற திருப்தி அவள் முகத்தில் ரகசியமாய்ப் பரவுவதை நுட்பமாய்க் கவனித்துக் கொண்டேன்.

சற்று நேரம் பொய்யான அமைதி.

"பஸ் ஸ்டாண்டிலிருந்து வீட்டுக்கு வரும் போது எங்க வீட்டு வழியாத்தானே வந்தீங்க அங்க்கிள்...?"

"ஆமா...!"

"எங்க வீட்டு வாசல்லே அப்பா பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊத்திக்கிட்டு இருந்தாரே... பார்க்கலை?"

"பார்த்தேனே...!"

மறுபடியும் அவளிடம் கொஞ்சம் மௌனம்...

"அவர்கிட்டே எதுவும் சொல்லத் தோணலையா?"

"எதைப் பத்தி...?"

அவள் சற்றுத் தடுமாறிப் போயிருக்க வேண்டும். நிதானித்தாள்.

"எதைப் பத்தியுமே...!" இதைச் சொல்லும் போது அவள் தலை தாழ்ந்திருந்தது.

"ஏதாவது இருந்தால்தானே சொல்றதுக்கு...!"

"நிஜமாவா...!"

சற்று நேரம் கனத்த மௌனம்... அதைக் கலைத்துக் கேட்டாள் :

"அங்க்கிள்... எம்மேலே உங்களுக்குக் கோபம்தானே...!"

நான் கடகடவெனச் சிரித்தேன்.

"பைத்தியம். உம்மேலே கோபப்பட யாராலேயும் முடியாதே.. அப்புறம் நான் மட்டும் எப்படிம்மா கோபப்பட முடியும்...?"

தாள்.



அங்க்கிள். எம்மேலே கோபப் படாமே.. ஒண்ணுமே நடக்காத மாதிரி... எங்கிட்ட எப்போதும் போல சிரிச்சுப் பேசறதைத்தான் என்னாலே தாங்கிக்க முடியலை அங்க்கிள்...!''

இப்படிச் சொன்னவளின் கண்களில் சடாரென்று ஈரத்தின் பளபளப்பு.

''டேய்... பாரதி... என்னடா இது...'' என் குரல் கரகரத்தது.

''அது மட்டுமில்லே... அங்க்கிள்... சாயங்காலம் பஸ்ஸிலே என்னை நீங்க அப்படிப் பார்த்ததும்

சொல்லி... இந்நேரம் வீடே பூகம்பமா மாறிப் போயிருக்கும்னு நினைச்சுக்கிட்டு பயந்துக்கிட்டே வந்தேன்...!''

''ஹூம்...?''

''அப்படி எதுவுமே நடக்கலையே...! அப்பா எப்போதும் போல் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊத்திக்கிட்டிருந்தார்... அம்மா காப்பி கொண்டாந்து கொடுத்தாங்க... ஆனா என்னாலதான் குடிக்க முடியலே...!''

''ஏன்..?''

அவள் என்னை ஒரு மாதிரி பார்த்தாள்.

உத்தமசோழன்





"சீக்கிரம் அந்த பஸ்ஸைத் துரத்திப் பிடிப்பா!"

"பஸ்லே ஏதாவது முக்கியமான பொருளைத் தவற விட்டுட்டீங்களா சார்?"

"இல்லே! அந்த கண்டக்டர் எனக்கு மீதி பத்து பைசா சில்லறை தரலே..."

''அங்கிள்... ஒண்ணுமே தெரியாத மாதிரி... எதுவுமே நடக்காத மாதிரி பேசி இப்படி சித்திரவதை பண்றதை விட...''

அவள் குரல் முற்றிலுமாக உடைந்து போனது. குனிந்து கொண்டு குலுங்கத் தொடங்கினாள்.

என் மனசு கரைந்து போனது. கொஞ்ச நேரம் அவள் அழட்டும் என்று காத்திருந்தேன்.

பின் எழுந்து, மெதுவாக அவள் தலையை வருடி ''ஏய்... என்னம்மா... எதுக்காக இப்படி அழறே...?'' என்றேன்.

''நான் செஞ்சது தப்புதான் அங்கிள்... சாயங்காலம் பஸ்ஸிலே அந்த ஆளோட நான் சிரிச்சுப் பேசிக்கிட்டிருந்ததைப் பார்த்தும் உங்களுக்கு ஏன் கோபம் வரலே அங்கிள்...?''

அதை நினைத்தால் இப்போது கூட என்னுள் கோபம் கொப்பளிக்கத்தான் செய்தது. இருந்தாலும் ரொம்பவும் இயல்பாகக் கேட்டேன்.

''எனக்கு ஏன் கோபம் வரணும்? நீ இஷ்டப்பட்டுத்தானே அவனோட பேசிக்கிட்டிருந்தே...?''

''ஓகோ..! அவன் என்ன என்னோட காலேஜ்ல படிக்கிறவனா? இல்லே அண்ணன் தம்பியா? இல்லே...''

''யாரும் இல்லைதான்...!''

''அவனைப் பத்தி உங்களுக்குத் தெரியும். வயசு முப்பத்தஞ்சு ஆகுது. கல்யாணம் ஆனவன். உங்க ஆபீஸ்லேதான் அவன் வேலை பார்க்கிறான்... இதெல்லாம் அவனே எங்கிட்ட சொன்னான்...''

தரையைப் பார்த்தபடியே சொன்னாள்.

''ரொம்ப சரி... எல்லாம் தெரிஞ்ச பிறகும் நீ அவன்கூட சந்தோஷமாப் பேசிக்கிட்டு வர்றப்போ எனக்கு எதுக்கம்மா கோபம் வரணும்...?''

''வாஸ்தவந்தான் அங்கிள்... எனக்கு ஏன் அப்படி புத்தி போச்சுன்னே தெரியலை. ஒரு பத்து நாளைக்கு முன்னாடி காலேஜிலிருந்து பஸ் ஏற ஓடி வர்றப்போ பஸ் புறப்பட்டுடிச்சு. நான் கையை ஆட்டியபடியே ஓடி வந்தேன். கொஞ்ச தூரம் போயி நின்னுடுச்சி... மறுபடியும் ஓடிப் போய் ஏறிக்கிட்டேன். ஏறியதும் எதிரே இவன்தான் நின்னான்... 'நான்தான் உங்களுக்காக பஸ்ஸை நிறுத்தி வைச்சேன்'னான். 'தாங்க்ஸ்'ன்னேன். 'தாங்க்ஸை இதோ என்னோட பாக்கெட்டிலே பத்திரமா வச்சுட்டேன்'னான். எனக்குச் சட்டென்று சிரிப்பு வந்துட்டுது. அவன் சடாருன்னு என்னருகே வந்து யாருக்கும் கேட்காத மாதிரி 'நிஜமாச் சொல்றேன். இவ்வளவு அற்புதமான சிரிப்பை இப்போதான் முதன் முதலா பாக்குறேன்'னான். எனக்கு ஒரு மாதிரியாயிடிச்சு... அப்புறம் நான் ஒண்ணும் பேசலை. அவனும் பேசலை. அத்தோட அன்னைக்கு நான் வீட்டுக்கு வந்துட்டேன்...''

''ஹூம்...?''

''மறுநாள் சாயங்காலம் நான் பஸ்ல ஏறினப்ப அவன் இருக்கிறானா என்று நானே தேடினேன். இருந்தான். என்னைப் பார்த்து லேசாகச் சிரித்தான். நானும் சிரித்தேன்.

''அப்புறம் தினமும் என்னோடு பேச்சுக் கொடுப்பான். அவனோடு பேசுவதில் எனக்கும் சந்தோஷமாகத்தான் இருந்தது. நேத்துதான் சொன்னான்.. 'இப்படி நீ ஒரு சீட்லே... நான் ஒரு சீட்லே உக்காந்துகிட்டுப் பேசறது ரொம்பக் கஷ்டமா இருக்கு... இப்படி என் பக்கத்திலேயே வந்து உக்காருன்னான்..' எனக்குத் தயக்கமா இருந்துச்சு... 'என்ன நீ.. ஏனிப்படி தயங்குறே...? காலேஜ்லே படிக்கிறவதானே நீ... சும்மா வா'ன்னு இலேசாக என் கையைப் பிடிச்சு இழுத்தான்... நானும் சட்டென்று உட்கார்ந்து விட்டேன். என்னென்னவோ பேசினான். நாளைக்கு வீட்டுக்குப் போகும் போது வேளாங்கன்னியிலே இறங்கிட்டு, மாதாவைக் கும்பிட்டுட்டு, கடற்கரையைச் சுத்திட்டுப் போவோம்னான்... நான் ஒண்ணுமே சொல்லலை...''

என் மௌனம் நீடித்தது.

'''என்ன பேசாம இருக்கிறே... பயமா இருக்கா...? என்ன நீ.. விவரம் புரியாத பொண்ணாயிருக்கே... இதெல்லாம் இந்தக் காலத்திலே ரொம்ப சர்வசாதாரணம்.. இந்த வயசுலே இப்படித்தான் சந்தோஷமா இருக்கணும்'னான். எனக்கு ஒண்ணும் சொல்லத் தெரியலே.. ஆசையாவும் இருந்துச்சு. பயமாவும் இருந்துச்சு...''

''....''

''அவன் முடிவாச் சொன்னான்... 'நாளைக்கு நாகப்பட்டினம் பஸ் ஸ்டாண்டிலே ரெடியா நிப்பேன். உனக்கும் சேத்து வேளாங்கன்னிக்கு டிக்கெட் எடுப்பேன். இரண்டு பேரும் அங்கே இறங்குறோம்...

அவன் இப்படி சொன்ன நேரத்தில்தான் நீங்க முன்புறம் இருந்து சடக்குன்னு எங்களைத் திரும்பிப் பாத்திங்க... எனக்குச் சப்தநாடியும் ஒடுங்கிப் போச்சு...''

''அப்படியா...! ஏன்..?''

''விளையாடறீங்களா அங்க்கிள்...! அவனைப் பார்த்துப் பழக ஆரம்பிச்ச இந்த பத்து நாள்லே கிளாஸ்லே என்ன சொல்லித் தந்தாங்கன்னே எனக்குத் தெரியாது. புஸ்தகத்தைத் திறந்தா அதுலே உள்ள வரிகளைக் கண் பார்க்குமே தவிர மனசு கிடந்து அலை பாயும்... ஏதோ ஒரு மயக்கத்திலே இருந்த மாதிரிதான் இருந்துச்சு இந்த பத்து நாளும்... ஆமாம், நிச்சயமா அது ஒரு மயக்கம்தான்...''

''இப்போ...?''

''மயக்கம் தெளிஞ்சு போச்சு அங்க்கிள்... இந்த வயசுலே மனசு இப்படித்தான் அலை பாயும்... சலனப்படும்.. நாமதான் ஜாக்ரதையாய் இருக்கணும்னு தோணுது.''

''சரி நாளைக்கு அவன்...?''

''கூப்பிடுவான்... வீட்டுக்குப் போயி ...ம் பொண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு போன்னு சிரிச்சுக்கிட்டே சொல்லிடுவேன்... ...ச்சயமா சலனப்பட மாட்டேன். பிராமிஸ் அங்க்கிள்...'' சட்டென்று எழுந்து என் கையில் அடித்தாள்.

என்னுள் குபுக்கென்று மகிழ்ச்சி பெருகிற்று.

''என்னை இந்தத் தடுமாற்றத்திலேருந்து காப்பாத்தினது என்ன தெரியுமில்லே... அன்னைக்கு நீங்க பாத்த அந்த நொடி நேரப் பார்வையும்... அப்புறம் ஒண்ணுமே நடக்கலைங்கிற மாதிரி காட்டின மௌனமும் தான்...!''

''அப்படியா...!''

என்னை ஒரு மாதிரி பொய்க் கோபத்துடன் பார்த்த அவள் சிறிது நேரம் அமைதியாய் இருந்து விட்டு பிறகு கேட்டாள்.


''அங்க்கிள்... எனக்கொரு சந்தேகம். பஸ்லே என்னை அவனோட சேர்ந்து பாத்தப் புறமும் எம்மேலே கோபப்படாம உங்களால எப்படி அங்க்கிள் இருக்க முடிஞ்சுது...? மழுப்பாம பதில் சொல்லணும்...!''

நான் நிதானமாகச் சொன்னேன்:

''ஓ... அதுவா...! என்னோட பாரதி இருக்காளே... அவ ரொம்ப புத்திசாலி. தப்பு எது சரி எதுன்னு டக்குன்னு புரிஞ்சுக்குவா.. அவளால ஒரு நாளும் தப்பு செய்ய முடியாதுன்னு எனக்குத் தெரியும். அதனால்தான் நான் அலட்டிக்கவேயில்லை. சரிம்மா நீ ரொம்ப களைப்பா இருக்கே. கொஞ்சம் இரு. உள்ளே போய் ஹார்லிக்ஸ் கொண்டாறேன்...''

எழுந்த என்னை, சட்டென்று தோளில் கை வைத்து அழுத்தி உட்கார வைத்து விட்டு ''நீங்க இருங்க அங்க்கிள்... உங்களுக்கும் சேர்த்து நானே கொண்டாறேன்'' என்று துள்ளியபடி உள்ளே ஓடினாள்.

டான்கலிலியோ



13

''அ... அப்பா... நீங்க...'' என்றான் பிரகாஷ். அதிர்ச்சியில் அவன் பேச்சிழந்து விட்டான்.

செம்பட்டைத் தாடியைப் பிய்த்து விட்டுப் புன்னகைத்த ராஜசேகர், ''நான்தான் டான்கலிலியோ!'' என்றார்.

பிரகாஷைப் பெருமிதமுடன் பார்த்தார் ராஜசேகர். அவன் கையில் அவரைக் குறி பார்த்த துப்பாக்கி; தன் ஆட்களுடன் கட்டிப் புரண்டதில் ஆடையில் தூசு; நெற்றியில் நீலம் பாய்ந்த புடைப்பு; ஆங்காங்கே சிராய்ப்பு. முகத்தில் தாள முடியாத மகிழ்ச்சி பிரதிபலிக்க எழுந்து மகன் அருகே வந்தார். பிரகாஷ் விழித்தான்.

சிலை போல் நின்றிருந்த அவனை ஆரத் தழுவி விட்டு, ''நீ சாதிச்சுட்டே பிரகாஷ்! எஸ். யூ ஹாவ் டன் இட்! நீ தேறிட்டே. திறமைசாலின்னு நிரூபிச்சுட்டே. டான்கலிலியோவாக அனைத்துத் தகுதிகளும் உன்கிட்ட இருக்கு என்றார்.''

''என்னப்பா சொல்றீங்க?''

''விளக்கமாச் சொல்றேன்'' அவனை அங்கிருந்த சோபாவில் அருகே அமர்த்திக் கொண்டார்.

''சிந்துவுக்கு ஒண்ணும் ஆகலையே?''

''நோ மை ஃபூல்! அவ மேல உள்ள உன் காதல்தான் என் திட்டம் நிறைவேற உதவிச்சு.''

''திட்டமா?''

''ஆமாம், பிரகாஷ்! உன்னை, டானாக விளங்கத் தகுதியுள்ளவனா மாற்ற நான் தீட்டிய திட்டம்!''

ராஜசேகர் பரவசமுடன் சில வினாடிகள் கண் மூடிவிட்டுத் திறந்தார். ''இது நாம பரம்பரையா செய்துக்கிட்டு வர்ற தொழில் பிரகாஷ்! அமெரிக்க மாஃபியா குடும்பங்கள் மாதிரி. இங்கே டான்கலிலியோ இஸ் ஸுப்ரீம்! கலிலியோ யார் என்பது உலகத்துக்குத் தெரியாமலே அதிரகசியமா இயங்கி வந்திருக்கோம். எல்லாம் நம்பிக்கையான ஆளுங்க. ஆனா உங்க அம்மாவுக்கு அரசல் புரசலா எப்படியோ ஏதோ தெரிஞ்சிருக்கும் போல. என் இன்ஃப்ளூயன்ஸ் உன் மேல படக்கூடாதுன்னு பிடிவாதமா உன்னை ஊட்டியில படிக்க வைச்சா. பொறுமையாக் காத்திருப்போம்னு முடிவு செஞ்சேன். உன் ஓவிய விருப்பத்துக்கு வளைஞ்சும் கொடுத்தேன்; பின்னால உன்னை வளைச்சுற முடியும்னு நம்பிக்கை இருந்தது. என் நம்பிக்கை பொய்யாகலே! பாரு, எத்தனை பேரை

அடிச்சு நொறுக்கிட்டு, எத்தனை தடைகளைக் கடந்து டானுடைய குகைக்குள்ளேயே நுழைஞ்சுட்டே!'' பெருமிதத்தில் பரவசமானார் ராஜசேகர். தொடர்ந்தார் :

''உன் விஷயத்துல வழிவழியா வந்த டான் 'செயின்' அறுந்துருமோன்னு இடையிலே பயம் வந்துருச்சு மை சன். பிஸினஸுக்கே பிடி கொடுக்காத நீ, மத்த மத்த விஷயங்களுக்கு எங்கே மசியப் போறேன்னு கவலையாயிருச்சு. ஆனா உன் கோபத்தின் சக்தி எனக்குத் தெரியும்; லேசுல கிளம்பாது; கிளம்பினாத் தணியாது. இது நம் பரம்பரைக் குணம். உன் கோபம் கிளப்ப ஒரு வழி தேடினேன். கிடைச்சுது.

''எந்த ஒரு மனுஷனும் தன் மனைவியைக் காணலைன்னா கொதிச்சுப் போயிருவான். அதுவும், சிந்துஜா மேல நீ அதீத அன்பு வெச்சிருந்தே...''

''சிந்து கடத்தல் 'நாடகம்' அரங்கேத்தினீங்களாக்கும்!'' என்றான் உணர்ச்சியற்ற குரலில்.

''எஸ் மை சன்!'' என்றார் மன்னிப்பு கோரும் குரலில். ''ஆனா ஒண்ணு. என் மருமக பேர்ல எனக்குப் பாசம் இல்லைன்னு மட்டும் நினைச்சுடாதேடா. ஒரு துரும்பு கூட அவ மேல படாம பாது காத்துக்கிட்டிருக்கேன்.''

அவன் முகத்தில் இறுக்கம் தளர்ந்ததைக் கவனித்து விட்டு மேலே தொடர்ந்தார் ராஜசேகர்.

''சிந்துவை நீ தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய நெருக்கடி நிலையை உருவாக்கினேன். அதன் மூலமா என்னுடைய இருட்டு உலகத்தை உனக்கு அறிமுகம் செய்யறது மட்டுமில்லே; அடுத்த டானாகப் பொறுப் பேற்க உனக்கு இது ஒரு கடும் பயிற்சியாகவும் அமையும்னு நினைச்சேன்.''

''ஐ. சி. சில சந்தேகங்கள் கேட்கலாமா?''

''கேளு பிரகாஷ்.'' அவர் முகத்தில் திருப்தியும் பெருமிதமும் பரவியிருந்தது.

''நீங்கதான் டான்கலிலியோ. ஓகே. அப்போ இந்த பிஸினஸ், தொழிற்சாலை விவகாரங்கள்...''

''அவ்வளவும் உண்மை. நான் ஒரு வி. ஐ. பி., பிஸினஸ் மேக்னேட், இதெல்லாம் டான்கலிலியோவுக்கு அத்யாவசியமான போர்வைகள். மேலும், டானாக நான் வெட்டுகிற பணத்தில் பெரும் பகுதியை வர்த்தகத்திற்குத் திசை திருப்பறேன். பிஸினஸ் எல்லையில்லாம கொழிச்சுக்கிட்டே போகுது. விளைவு - பணம்; மேலும் பணம். பவர்; மேலும் பவர்! டேய், அனுபவிச்சுப் பார்த்தாத்தாண்டா இதன் அருமை தெரியும்! அனுபவிக்கவும் போறே!''

''டான் சரி. அதென்ன கலிலியோ?''

''பரம்பரைப் பெயர். சிம்பாலிக்கா வெச்சது பிரகாஷ். லியோன்னா சிங்கம்; ராஜா. கலின்னா கலியுகம். இந்தக் கலி காலத்துல ஆட்சி செய்யறது, ஆட்டுவிக்கிறது எல்லாம் என் மாதிரி டான்கள்தான்!''

''அதான் சிங்க இலச்சினையா?''

ஆமென்று தலையசைத்தார் - புன்னகையுடன்.

''என்னைக் கத்தியால குத்த முயற்சி செய்த விபரீதம் ஏன் டாட்?''

''நீ வேகமா விலகலைன்னா உன்னைக் குத்தியிருக்க மாட்டான்! நீ விலகினதால் வீசினான் - மரத்திற்குக் குறி பார்த்து!'' சிரித்தார். ''உனக்கு நல்ல ரிஃப்ளெக்ஸ் இருக்குன்னு ரிப்போர்ட் பண்ணினான் அவன்! கத்தி சம்பவம், அதற்கும் முன்னால் கார் பின் தொடர்ந்தது எல்லாமே நான் சிந்திச்சு உருவாக்கின சோதனைகள் பிரகாஷ். நீ பயப்படறியான்னு பார்த்தேன்; எப்படி சமாளிக்கிறேன்னு தெரிஞ்சுக்க விரும்பினேன்.''

''உங்க சிட்பண்டை நீங்களே கொள்ளை அடிச்சுக்கிட்டீங்களே... அது ஏன்?''

ராஜசேகர் கலகலத்தார் : ''அது உன் தாத்தா வழி முறை பிரகாஷ். நாமே டானுடைய விக்டிம் மாதிரி அப்பப்போ போலீஸ் கண்களுக்குக் 'காண்பிச்சுக்கிற' உத்தி வழக்கந்தான். மேலும், நம்ம பணம் கொள்ளை போயிருச்சுன்னதும் உசுப்பேறுவியோன்னு எதிர்பார்த்தும்தான் செய்தேன்.''

''ஒரு பக்கம் பிஸினஸ் பார்த்துக்கிட்டு, இன்னொரு பக்கம் துப்பாக்கி தூக்கிக்கிட்டு... இரண்டும் எப்படி முடியுது டாட்?''

''நான் 'களத்துல' எப்பவும் இறங்கறதில்லை மை சன்; அவசியமில்லை. 'ப்ராஜக்டு' தேர்ந்தெடுத்து, பலதையும் யோசித்து ஆழ்ந்து அலசித் திட்டம் வகுத்துக் கொடுப்பேன். துடிப்பா நிறைவேற்றித் தர நம்பிக்கையான ஆளுங்க வெச்சிருக்கேன். இங்கேயும் ஒரு சிஸ்டம் - ரிவார்டு, பனிஷ்மெண்ட், ப்ரமோஷன் எல்லாம் உண்டு. என்கிட்ட சோமையான்னு ஒருத்தன் இருக்கான். அவன்தான் என் 'ஹிட்' மேன்! இருபது வருஷமா என்னோட இருக்கான். அசகாய சூரன். எங்கப்பாகிட்டே வேலை பார்த்த 'தளபதியை' விட இவன் சூப்பர்.''

பத்மா ரவிசங்கர்

சற்று மௌனம் நிலவியது.

''இந்தத் தொழிலிலுள்ள சவால், சாகஸம், பணம், பவர், செஸ் காய் நகர்த்தும் சாதுர்யம் எல்லாமாகச் சேரும் போது அது சுவர்க்கம்! மை சன், உன்னையும் இதன் பரவசச் சுவை ஈர்த்திருக்கும்னு நம்பறேன். 'டான் பரம்பரை நான்'னு நினைச்சுக் கர்வப்படு!

''இப்படி நினைச்சுப் பாருங்க டாட். அவசரப்பட்டு யார்னு தெரியாம நான் உங்களைச் சுட்டிருக்கலாமில்லையா?''

''சந்தோஷமா ஏத்துக்கிட்டிருப்பேன் பிரகாஷ்! இந்தத் தொழிலில் சாவு சகஜம்; உயிருக்கு எப்போதும் ஆபத்துத்தான். எவனாலேயோ என் மரணம் நிகழறதுக்குப் பதிலா உன்னை ஒரு டானாக உருவாக்குகிற முயற்சியில் உன் கையால் சாகறது பெருமை மை சன்!''

''அப்பா!'' அலறினான்; நடுங்கினான்.



''அவரு ரொம்பப் பழங்காலப் பேர் வழின்னு நீ சொன்னது சரிதான்!''
''என்ன ஆச்சு?''
''லஞ்சத்தை ஒப்பனாத் தராம கவர்ல வைச்சு டேபிளுக்கு அடில நீட்டறாரு!''
- கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா

'' என் ப்ரிய மகனுக்குத் துணிச்சலும் தகுதியும் வந்திருச்சுன்னு சந்தோஷத்துடன், அடுத்த டானாக ஆசை வாரிசை உருவாக்கிட்டேன்கிற திருப்தியுடன் கண்ணை மூடியிருப்பேன்.''

அந்தக் காட்சியை அவனால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை. நல்ல வேளை; அந்தப் பழி தனக்கு வராமல் தப்பித்தோமே என்று நினைத்து நிம்மதிப் பெருமூச்சு வெளிப்படுத்தினான்.

ராஜசேகர் தமது சட்டைக்குள் மறைந்திருந்த கழுத்துச் சங்கிலியை வெளியே இழுத்தார். சற்று நீளமான தங்கச் 'செயின்' அது; அதில் ஒரு சிங்கத் தலை லாக்கெட் தொங்கியது. அன்று வரை பிரகாஷ் பார்த்தே அறியாத அதை அவன் கழுத்தில் அணிவித்து விட்டுப் பரவசமாகப் பார்த்தார். பிரகாஷ் ஏதும் புரியாமல் விழித்தான்.

''பிரகாஷ், இதை உன் தாத்தா எனக்கு அணிவிச்ச போது எனக்கு இருபது வயசு தான். இது டான் கலிலியோவுக்கு உரிய செயின்.''

பிரகாஷ் இன்னமும் பிரமிப்பு விலகாமலிருந்தான். ஒருசில வினாடிகளில் ஒருவன் வாழ்க்கை எப்படி திசை திரும்பி விடுகிறது...!

''உனக்கு ஒரு முக்கிய பைல் காண்பிக்கணும்.''

ராஜசேகர் எழுந்து மேசையைச் சுற்றிக் கொண்டு போய்ச் சுழல் நாற்காலியில் அமர்ந்தார். குனிந்து மேசையின் இரண்டாம் இழுப்பறையைத் திறந்து ஒரு பைல் எடுத்தார்.

நிமிர்ந்தார்.

''இந்த ஃபைல்ல...'' என்று ஆரம்பித்த ராஜசேகரின் நெற்றிப் புருவ மத்தியில் திடீரென்று ஒரு இரத்தக் குமிழ் உற்பத்தியாக, துப்பாக்கி வெடித்த ஓசை கேட்டது!

பிரகாஷ் அதிர்ச்சியில் உறைந்து விட்டான். அப்பாவின் தலை சட்டென்று சரிய, மெல்லத் திகைப்பு நீங்கித் திரும்பினான்.

அறை வாசலில் விகாரமாக இளித்தபடி சோமையா! அவன் கையில் அழுக்குக் கறுப்பில் துப்பாக்கி.

''டாய்!'' என்று உரக்கக் கூவியபடி எழுந்திருக்க முயன்றான், பிரகாஷ்.

''அசையாதே பிரகாஷ்!'' என்று சொன்ன சோமையா முன்னால் துப்பாக்கி நீட்டியபடி நடந்து சற்றுத் தொலைவில் நின்று கொண்டான்.

''நான்தாம்பா சோமையா!'' என்றான் காஷுவலாக.

''அநியாயமா அவரைக் கொன்னுட்டியேடா பாவி! உன்னைப் பத்தி எவ்வளவு உயர்வாச் சொன்னார்... நீ ஒரு துரோகின்னு தெரியாம...''

''ஷட்டப்'' - மூர்க்கமாக உறுமினான் சோமையா. ''அவர் எனக்குச் செய்ததுக்குப் பேரு என்னவாம்... இருபது வருஷமா நாயா உழைச்சுப் படிப்படியா முன்னேறித்தான் இந்த இடம் வந்திருக்கேன். ஒரு டானுக்குத் தேவையான அத்தனைத் தகுதியும், திறமையும் என்கிட்ட இருக்கு. அடுத்து சாம்ராஜ்யத்தை எனக்குத் தருவார்னு நம்பியிருந்தேன். தூரிகையும் கையுமா எதிலேயும் பட்டுக் கொள்ளாம நீ இருந்தே. அதனால அடுத்த டான் நான்

தான்னு எவ்வளவு சந்தோஷமா, எதிர்பார்ப் போட இருந்தேன்...''

சோமையா உணர்ச்சிவசப்பட்டுப் பேசினாலும் அவன் துப்பாக்கி பிரகாஷை விட்டு இம்மியும் குறி விலகவில்லை.

''ஆனா பாஸ் குயுக்தியா செயல்பட்டுத் தன் வாரிசை இழுக்கத் திட்டமிட்டார். கொதிச்சுப் போயிட்டேன். பம்பாயிலே ஒரு டீல் முடிச்சுட்டுத் திரும்பி வந்ததும் விஷயம் தெரிஞ்சு உஷாராயிட்டேன். இந்த மாதிரி ஒரு க்ளைமாக்ஸை எதிர்பார்த்துப் பொறுமையாக் காத்துக்கிட்டிருந்தேன். இப்போ உன்னையும் தீர்த்துட்டா...'' வெறியுடன் சிரித்தான். ''இனி நான்தான் டான்! டான் சோமையா தி கிரேட்! கேட்கவே கிக்கா இருக்குல்ல... ஆல்ரைட். சாகத் தயாராகு மேன்!''

தனக்கும் அவனுக்கும் உள்ள இடைவெளி பத்தடியாவது இருக்கும் என்று கணக்கிட்டான் பிரகாஷ். பாய்ந்து தாக்க சத்தியமாக வாய்ப்பில்லை. மேலும், இவன் 'தேர்ந்தவன்' என்பது துப்பாக்கி பிடித்திருக்கும் நேர்த்தியிலேயே தெரிந்தது. 'அங்கே சுழல் நாற்காலியில் அகால மரணமடைந்திருக்கும் அப்பா. அழக்கூட அவகாசம் இல்லாமல், சாவின் விளம்பில் நான். என்ன ஒரு மோசமான சூழ்நிலை!' மூளை மரத்து விட்டாற்போலிருந்தது.

சோமையாவின் முகபாவத்திலிருந்தே அவன் தன்னைச் சுடத் தயாராகி விட்டான் என்பது தெரிந்தது. பிரகாஷ் முகம் இறுகிற்று. பயம் தெரியவில்லை. மரணம் எப்படி இருக்கும்? ஒரு வினாடி உச்சபட்ச வலியா? கண்களை இறுக மூடிக் கொள்ளலாமா...

கோலி சோடா திறந்தது போல் 'டுயிக்' என்று துப்பாக்கி வெடிக்கும் ஒலி கேட்டது. தொடர்ந்து 'ஆ' என்ற அலறல். ஏன் எனக்கு வலிக்கவில்லை? நான் இன்னும் சாகவில்லையா... பிரகாஷ் திகைத்தான்.

எதிரே இரத்தம் ஊறும் தன் தோளைப் பற்றியபடி சோமையா. அவன் பின்னே... துப்பாக்கி பிடித்தபடி...

ஏசிபி தேவதேவன்!

''நான்தான் சுட்டேன் பிரகாஷ்! தேங்க் காட். சரியான சமயத்துல நுழைஞ்சிருக்கேன். இந் நேரம் இந்த ராஸ்கல் உன்னைத் தீர்த்துருப்பான்...!''

''நீங்க... உங்களுக்கு ஹார்ட் அட்டாக்குன்னு...'' பிரகாஷ் திணறினான்.

''எனக்கும் நடிக்கத் தெரியும் பிரகாஷ்!'' ஏசிபி சிரித்தார்.

அறையினுள் பிரவேசித்த இரு போலீசார் தோளில் சுடப்பட்டிருந்த சோமையாவை விலங்கிட்டு அழைத்துச் செல்ல முற்பட, ''கிவ் ஹிம் சம் ஃபர்ஸ்ட் எய்ட்'' என்ற ஏசிபி திரும்பி, சேரில் சரிந்திருந்த ராஜசேகரைக் கண்டதும் துணுக்குற்று, ''இவர்.. இவர்...''

''எஸ்! ஹி ஈஸ் டெட்'' என்றான் பிரகாஷ் வறண்ட குரலில்.

''வெரி சாரி பிரகாஷ்!''

பிரகாஷ் அருகே சென்று இறந்து கிடந்த அப்பாவை இமைக்காமல் பார்த்தான். சற்று நேரம் முன் வரை துடிப்புடன் சிரித்துப் பாசமுடன் பார்த்து விட்டு... மெல்லக் கைநீட்டி அவர் தலையைத் தடவிக் கொடுத்தான். துளிர்த்த ஒரு சொட்டுக் கண்ணீரைச் சுண்டி விட்டு மெல்லத் திரும்பினான்.

''எப்படி இங்கேன்னு கண்டுபிடிச்சீங்க?''

''மேக் ஏ கெஸ்.''

''அச்சரபாக்கம் போலீஸ் ஸ்டேஷன் லேருந்து என்னைப் பின்பற்றின கார் நம்பர் வச்சு...''

''ராங். அது ஒரு போலி நம்பர் பிளேட்.''

''பின்னே?''

''சொல்றேன். டான் கலிலியோ நிகழ்த்திய குற்றங்களைப் பட்டியலிட்டுப் பார்த்துல கிட்நாப் கேஸ் எதுவுமில்லே. அதனாலேயே சந்தேகம் தட்டியது. உண்மையில் இது டான் வேலையா இருந்தா அனுபவக்



''வர வர எதெதுக்குப் பட்டிமன்றம் வைக்கிறதுன்னு விவஸ்தையே இல்லாம போயிடுச்சு!''

''ஏன்? என்னாச்சு!''

''மாவட்டத்திலேயே அதிக மாமூல் வாங்குவது... காவல் துறையா, வருவாய்த் துறையா'ன்னு பட்டிமன்றம் வச்சிருக்காங்களே!''

- சுவீட் ரவி

''ஜாதகம் பொருந்தித்தான் இருக்கு தரகரே. ஆனா, வழக்கமா இன்ஜினியர் மாப்பிள்ளைக்குக் கேட்கிற வரதட்சணையை விட இவருக்கு அதிகமாக் கேட்கிறாங்களே!''

''அதுக்கென்ன பண்றது, இவர் செல்ஃப் பைனான்ஸ் காலேஜில் படிச்சவராச்சுங்களே!''

- ஞா. ஞானமுத்து



குறைவால் தப்பு செய்வான்னு எதிர்பார்த்தோம். ஆனா கடத்தினது டான் என்பதாலே உஷாராகவும் செயல்பட்டோம். கொஞ்சம் முட்டாள்தனமாகவும், அஜாக்கிரதையாகவும் வேணும்னே நடந்துக்கிறதுன்னு முடிவு செய்தோம். அதே சமயம் எங்க பாவ்லா காரணமா டானுக்குச் சந்தேகமும் வரக் கூடாது. டான் ரிலாக்ஸ் ஆகணும்னுதான் எனக்கு அட்டாக்குன்னு ஆஸ்பத்திரியில சுருண்டுக்கிட்டேன்!''

புன்னகை சிந்திவிட்டுத் தொடர்ந்தார் :

''நீங்க அன்னிக்கு ராத்திரி யாருக்கும் தெரியாம கிளம்பறதா நினைச்சுக்கிட்டுப் புறப்பட்டீங்க. நாங்களும் அதுல ஒத்துழைச்சோம். உங்களைப் போலீஸ் பின்பற்றக் கூடாது; வழியில எந்த போலீஸ் ஸ்டேஷனுக்கும் தகவல் சொல்லக் கூடாதுன்னு முடிவு செய்தோம். வேறொரு வழிமுறை யோசிச்சேன். ராத்திரி மலை இறக்கத்துல சாலையின் குறுக்கே ஒரு வண்டியையும், முண்டாசுப் பெரியவரையும் பார்த்திருப்பீங்களே...''

வாய் பிளந்தான் பிரகாஷ்.

''அவர் ஒரு போலீஸ் அதிகாரி! குடிசைக்குள்ளே தனியான அலைவரிசைல வயர்லஸ் டிரான்ஸ்மிட்டர் வெச்சுக்கிட்டு நாலு நாளா அங்கே காத்துக்கிட்டிருந்தார். அப்புறம் மதுரை வீதியில விலாசம் விசாரிச்ச காது கேளாத கிராமத்தானும் ஒரு சி.ஐ.டி. ஆபீஸர்தான். இந்த மாதிரி வெவ்வேறு மாறு வேஷங்களிலே தொலைவிலேயிருந்துகிட்டே உங்க மேல கண் வைச்சு இங்கே டிரேஸ் செய்துட்டோம்!''

தேவதேவனின் திறமை அவனை வியக்க வைத்தது.

''ரெண்டு நாளாக் கண்காணிச்சுக் காத்திருந்தோம். மாளிகைக்குள்ளே நீங்களும், சிந்துஜாவும். ஷ-ட் அவுட்டுன்னு வந்தாப் பிரச்னை. கவலையாயிடுச்சு. வேற வழி இல்லைன்னு ஸ்டார்ம் பண்ணச் சொல்லி டிஜிபி உத்தரவிட்டதும் வளைச்சுக்கிட்டோம். டான் சாம்ராஜ்யம் ஓவராயிடுச்சு!'' என்றார். நிம்மதி பரவியது அவர் முகத்தில்.

''எல்லாரையும் முட்டாளாடிச்சுட்டீங்க ஏசிபி!''

''நான் சாதாரணம் பிரகாஷ். ஸூப்பர் ஸ்டார் உங்க அப்பாதான்! எத்தனை காலமா போலீஸ் டிபார்ட்மெண்ட் அத்தனை பேர் கண்ணிலும் மண் தூவியிருக்கார்!''

அப்போது துப்பாக்கி வெடித்த ஓசை கேட்க, பிரகாஷ் திகிலுடன் நிமிர்ந்தான்.

''பயப்படாதீங்க. சிந்துஜா அறைப் பூட்டை உடைக்கிறாங்க!'' என்று சிரித்தார் தேவதேவன்.

சில நாட்கள் சென்று ஒரு பொன் மாலைப் பொழுது. சிந்துஜா அருகே வந்தாள். பிரகாஷ் ஒரு தொழிலக ஃபைலிலிருந்து நிமிர்ந்தான். அவளிடத்தில் ஒரு அபூர்வ மலர்ச்சி. கன்னத்தோடு கன்னம் உரசினாள். மணத்தை உறிஞ்சினான்.

''உங்களுக்கு ஒரு இனிய அதிர்ச்சி டியர்.''

''என்ன சிந்து சொல்றே?''


''நமக்கு ஒரு வாரிசு உருவாகுது!''

''வ்வாட்!'' - கட்டி அணைத்தான்.

''ரெண்டு மாசம்!'' என்றாள் வெட்கமுடன்.

வெகுநேரம் கழித்து மெல்ல அவளை விடுவித்த பிரகாஷ், அன்புக் கிரக்கத்தில் அவள் கண்கள் மயங்கியிருக்க, மெல்ல வேறுபுறம் திரும்பினான். தன் கழுத்திலிருந்த பரம்பரைச் சிங்க இலச்சினைச் செயினை, வாரிசை எண்ணியபடியே தயக்கத்துடன் தடவிப் பார்த்தான் - இரகசியமாக.

- முற்றும் -



ஞாபக சக்தியைப் பெருக்குவது எப்படி?


உங்கள் ஞாபக சக்தியைக் கொஞ்சம் சோதித்துப் பாருங்கள். ந்தப் பட்டியலை ஐந்து நிமிடங்கள் படிக்கலாம். பிறகு கண்ணை டிக் கொண்டு, பட்டியலில் கொடுத்துள்ள பொருட்களை வரிசை றாமல் நினைவு கூருங்கள் :

1. தரைவிரிப்பு
2. காகிதம்
3. பாட்டில்
4. மெத்தை
5. மீன்
6. நாற்காலி
7. ஜன்னல்
8. டெலிபோன்
9. சிகரெட்
10. ஆணி
11. டைப்ரைட்டர்
12. ஷூ
13. ஒலிபெருக்கி
14. பேனா
15. டி.வி.
16. தட்டு
17. வளையம்
18. கார்
19. கூஜா
20. செங்கல்

...ஐந்தாறு பொருட்களுக்கு மேல் உங்களால் நினைவு வைத்துக் காள்ள முடியவில்லை அல்லவா...?

இப்போது கண்ணை மூடிக் கொண்டு மனத் திரையில் இப்படி ஒரு பனைக் காட்சியைக் காணுங்கள்.

மெத்தென்ற அழகான தரை விரிப்பு. அதன் மீது நீங்கள் க்கிறீர்கள். உங்கள் காலடியில் உள்ள விரிப்பு, திடீரென்று காகிதமாக றுகிறது. அதை எடுத்துச் சுருட்டி, ஒரு பாட்டிலில் திணித்து, ட்டிலைத் தூக்கி எறிகிறீர்கள். பாட்டில் ஒரு மெத்தையில் போய் ழுகிறது, அந்த மெத்தை ஒரு மீனாக மாறுகிறது. அந்த மீன் ஒரு ற்காலியில் அமர்ந்து உங்களைப் பார்த்துச் சிரிக்கிறது! நாற்காலி ஒரு ன்னலுக்கருகே இருக்கிறது. ஜன்னல் மீது ஒரு டெலிபோன் ருக்கிறது. டெலிபோனை எடுத்துப் பேச முற்படுகிறீர்கள். அப்போது வரிலிருந்து ஒரு சிகரெட் வெளிப்படுகிறது. சிகரெட்டை வாயில் வத்துப் புகைக்கப் பார்த்தால் அது நிறைய புகையிலைக்குப் பதில் ணிகள் இருக்கின்றன. ஆணிகளை எடுத்து வெளியே வீசினால் அவை ட்ப்ரைட்டரில் போய் விழுகின்றன. டைப்ரைட்டரை நெருங்கித் டினால் அதற்குள்ளிருந்து ஒரு பழைய ஷூ வெளிப்படுகிறது! நீங்கள் கயில் எடுத்ததும் அந்த ஷூ ஒரு ஒலிபெருக்கியாக மாறி விடுகிறது. லிபெருக்கிக்குள் 'ஹலோ' என்று கூறப் போக, அது ஒரு பேனாவாக மாறுகிறது. இந்த அதிசயப் பேனாவைக் கொண்டு நீங்கள் டி.வி. ரையில் கூட எழுதலாம். டி.வி.யின் மேல் ஒரு தட்டு இருக்கிறது. ந்தத் தட்டைக் கையிலெடுத்தால் அதன் நடுப்பகுதி நெகிழ்ந்து விழ,





உங்கள் கையில் டயர் வடிவ வளையம் மின்சுகிறது. அந்த வளையத்தி வழியே பாய்ந்து வருகிறது ஒரு கார். கார் மீது ஒரு கூஜா இருக்கிறது கூஜாவைத் திறந்து சரித்தால் அதற்குள்ளிருந்து வெளிப்படுகிறது ஒ செங்கல்!

— இந்தக் கற்பனைக் காட்சி மனத்திரையில் ஓடி முடிந்த பிற கண்களைத் திறவுங்கள். இப்போது பட்டியலின் ஒவ்வொரு பொருளா வரிசைப்படி நினைவுகூருங்கள். உங்களால் அனேகமாக எல்லா பொருட்களையும் நினைவுகூர முடிவதை உணர்வீர்கள்.

— சிறந்த ஞாபகசக்தியின் ரகசியமே கடவுள் நமக்கு அளித்துள்ள எட்டு அறிவுகளையும் நன்றாகப் பயன்படுத்தப் பழகிக் கொள்வதுதான் 'பகுத்தறிவைச் சேர்த்து மனிதனுக்கு ஆறறிவுதானே; ஏழாவது எட்டாவது அறிவுகள் என்ன?' என்கிறீர்களா...?

ஏழாவது அறிவு : கற்பனை; எட்டாவது அறிவு : நிஜத்தையும் கற்பனையையும் மனத்திரையில் வடிவமைத்து, மனக்கண்ணால் நோக்கும் சக்தி. இந்த இரண்டையும் பயன்படுத்தித்தான் ஆரம்பத்தில் தரப்பட்ட ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாத பொருள்களின் பட்டி யலை நினைவு வைத்துக் கொள்ள முடிகிறது.

மனித மூளையையும் இயல்புகளையும் ஆராய்ந்துள்ள விஞ்ஞா னிகள் poor memory மோசமான ஞாபக சக்தி என்பதாக ஒன்று கிடை யவே கிடையாது என்கிறார்கள். இந்த ஆற்றல் எல்லா மனிதர்களுக்கும் சமமான அளவில் இருக்கிறது. (மூளை வளர்ச்சி குன்றிய நபர்கள் தவிர) இதனைப் பயன்படுத்தும் முறையில் உள்ள மாறுதல்களாலும் குறை பாடுகளாலும்தான் மறதி ஏற்படுகிறது என்பதும் ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

மனித மூளை ஒரு 'ஸூப்பர் ஸூப்பர்' கம்ப்யூட்டரைப் போன்றது. ஒவ்வொரு வினாடியும் பத்து புதிய செய்திகளை அதனால் கிரஹித்துச் சேமித்துக் கொள்ள முடியும். இப்படியே வாழ்நாள் முழுவதும் சக்தி குன்றாமல் செயல்படும் திறன் படைத்ததுதான் மூளை. எனவே, 'வயதாகி விட்டதால் மறதி வந்துட்டுது' என்று சொல்லப்படுவதை நாம் ஏற்கவே முடியாது. வயதானவர்களுக்குச் சிரமம் தரக் கூடாது; ஓய்வு அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் சமூகமே அவர்களுடைய நினைவாற்றலை ஒடுக்கிக் கட்டிப் போடுகிறது.

கம்ப்யூட்டருள் நாம் சேமிக்கும் தகவல்களை அது நமக்குக் கேட்ட போதெல்லாம் தருகிறதல்லவா...? அதே போல் மனித மூளையும் தர வல்லதே. ஆனால் தகவலைச் சரியான முறையில் சேமிக்கத் தவறி விட்டு நாம் 'எனக்கு ஞாபக சக்தியே போதாது!' என்று இயற்கை ஆற்றல் மீது பழி போடுகிறோம். உண்மையில், மனிதன் தன் நினை வாற்றலின் ஒரு சதவிகிதத்தை மட்டுமே நடைமுறையில் உபயோகிக் கிறான்!



ஞாபக சக்தியை நன்கு உபயோகித்துப் பயன்பெற முதலில் தேவை positive அணுகுமுறை. 'ஐயோ! நான் மறந்துடுவேன்!' 'மறந்து தொலைக்காதே!' போன்ற வாக்கியப் பிரயோகங்களை முதலில் விட்டொழிக்க வேண்டும்.

பிறகு இதுநாள்வரை எதையெதை மறந்தோம், ஏன் மறந்தோம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும். இப்படி ஆராய்ந்து பார்த்தால், மறந்து போவதற்கான மூல காரணங்கள் சிலவற்றை நாம் அடையாளம் காண முடியும் :

●● தகவலை நாம் சரியாக மனத்தில் பதியவைத்துக் கொள்வ தில்லை - இதற்குக் காரணம் - அந்தச் சமயத்தில் நமக்கு அத் தகவல் முக்கியமானதாகத் தோன்றியிருக்காது. உதாரணமாக - ஒரு மரியா

தைக்கு 'உங்கள் பெயர் என்ன?' என்று புதிதாய்ச் சந்திக்கும் நபரிடம் கேட்போம். அவரும் சொல்லுவார். மனப்பூர்வமான ஈடுபாடு இல்லாத தால் அந்தப் பெயர் அதோடு மறந்து விடும். பின்னால் அந் நபரைச் சந்தித்தால் தர்மசங்கடம்!



சில சமயங்களில் முக்கியமான தகவல்களை, அவசியமாக நாம் கருதுவனவற்றைக் கேட்கும் போது கூட மனம் திசை திரும்பி விடும். வார்த்தைகள் காதில் விழும். ஆனால் தகவல் மனத்தில் பதியாது; அல்லது அரைகுறையாகப் பதியும்.

மனம் ஒரு காமெராவைப் போன்றது. அதை ஃபோகஸ் செய்து நிறுத்தாவிட்டால் அதில் பதியும் பிம்பங்கள் கலங்கலாகத்தான் இருக்கும். எனவே, நினைவு வைத்துக் கொள்ள விரும்பும் விஷயத்தின்பால் முழுக் கவனம் செலுத்தியே ஆக வேண்டும்.

வருஷத்துக்கு ஒருமுறை செய்யும் தீபாவளி லேகியத்தின் தயாரிப்பு முறையைப் புத்தகத்தைப் பார்த்துச் செய்யும் பெண்கள், அடுத்த ஒரு வருஷத்துக்கு அதைப் பற்றி நினைப்பதே இல்லை. அடுத்த தீபாவளியின் போது மீண்டும் புத்தகம் தேவைப்படுகிறது. சமையல் புத்தகம் கைவசம் இருப்பதால் இவ் விஷயத்தில் பிரச்னை இல்லை. ஆனால் நினைவில் மட்டுமே வைத்துக் கொள்ளக்கூடிய தகவல்களை, சம்பவங்களை, அடிக்கடி எண்ணிப் பார்க்காவிட்டால், அவை அடியோடு மறந்துதான் போகும்.

●● ஓர் அனுபவத்தில் மற்றொரு அனுபவம் தலையிடுவதால் முதல் அனுபவத்தை மறந்து போகிறோம்.

உதாரணமாக : மகிழ்ச்சியான நேரத்தில் ஒரு துக்க செய்தி வந்தால், அந்த மகிழ்ச்சி, அதற்கான காரணம் - எல்லாம் மறந்து போகின்றன.

●● நாம் புதிதாக அறியும் தகவல்களை நினைவில் நிறுத்திக் கொள்ள முயல்வதற்கு முன்னரும் பின்னரும் நாம் மனத்தை எதில் செலுத்தினோம் என்பதைப் பொறுத்தும் நினைவாற்றல் பாதிக்கப்படு கிறது.

உதாரணமாக - பிரச்னைகள் மிகுந்த இறுக்கமான வீட்டுச் சூழலில் வாழும் பல குழந்தைகளால் பள்ளிப் பாடங்களைச் சரியாக மனத்தில் நிறுத்திக் கொள்ள முடிவதில்லை.

●● ஒரு விஷயத்தை மறக்கக் கூடாது என்ற நமது மன உறுதி ஒருபுறம்; அதை நினைத்துப் பார்க்க விரும்பாத உள்மனம் மறுபுறம் - இவற்றுக்கிடையேயான போராட்டத்தின் விளைவாக மறதி ஏற்படுவ துண்டு.

உதாரணமாக : ஒரே நாளில் ஒரு விழாவுக்கு அழைப்பும் பல் டாக்ட ரிடம் அப்பாயின்ட்மென்டும் கிடைக்கின்றன. பல் டாக்டரிடம் போவது வேதனை தரும் என்பதால் அந்த அனுபவத்தை உள்மனம் மறக்க விரும்புகிறது. விழா அழைப்பு ஞாபகமிருக்கிறது!

நமது மறதி மேற்படி காரணங்களுள் எதனால் விளைந்தது என்று கண்டுபிடித்து விட்டால் காரணத்தைக் களைய விசேஷ முயற்சிகள் எடுக்கலாம்.

மறதிக்கு முதல் காரணமாகச் சொல்லப்பட்டது : மனம் ஒருமுகப் படாமை.



நம் காதில் விழுவனவற்றுள் பத்து சதவிகிதமும் பார்த்துக் கொண்டே கேட்பவற்றுள் நாற்பது சதவிகிதமும் நாம் நேரடியாக ஈடுபடுபவனவற்றுள் எண்பது சதவிகிதமும் நினைவில் நிற்கும் என்பது சில ஆராய்ச்சியாளர்களின் முடிவு.

ஆக நாம் காண்பன, கேட்பனவற்றையும் சீராக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமானால் அவற்றிலும் நமக்கு நேரடியான ஈடுபாடு இருப்பது நல்லது. கட்டுரையின் ஆரம்பத்தில் தந்த பட்டியலில் உள்ள

புண்ணிய காரியங்களை ஸங்கிராந்தியில் ஏன் அனுஷ்டிக்க வேண்டும்?

மேஷம் முதலிய பன்னிரெண்டு ராசிகளில் கிரமமாக மாதந்தோறும் சஞ்சரிக்கும் ஸூரிய பகவான், ஒரு ராசியிலிருந்து வேறு ராசிக்கு பிரவேசிக்கின்ற சமயம் ஸங்கரமணம் ஸங்கிராந்தி என்று சொல்லப்படுகிறது. அந்தப் புண்ணிய காலங்களில் செய்கிற ஸ்நானம், தானம், ஹவ்யம், கவ்யம், முதலிய புண்ணிய காரியங்களுக்கு ஏழு வருஷம் ஸூரியன் நல்ல பலன்களைக் கொடுக்கிறார். ஆகையால் புண்ணிய காரியங்களை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும்.

தேவலர்: ஸங்கராந்தி சமயம் ஸூக்ஷ்மமானது. நம்மால் அறிய முடியாதது. ஆகையால் ஸ்ங்கரமணத்திற்கு முன்பு முப்பது பின்பு முப்பது நாழிகைகள் புண்ணிய காலமாகும்.

ராசி	ஸங்கிரமணத்தின் நாமதேயம்	(ப்ருஹஸ்பதி வாக்குப்பலன்) புண்ணிய காலம்	புண்ணிய பலன்
மகரம்	உத்திராயணம்	பின் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
கும்பம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மீனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மேஷம்	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
ரிஷபம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
மிதுனம்	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கர்கடகம்	தக்ஷிணாயனம்	முன் இருபது நாழிகை	கோடி புண்ணியம்
சிம்மம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
கன்னி	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
துலா	விஷீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ண்ணியம்
விருச்சிகம்	விஷ்ணுபதீ	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்
தனுசு	ஷடசீதி	முன்பும், பின்பும் பத்து நாழிகை	ஆயிரம் புண்ணியம்

"ஸம்க்ஷேப தர்மசாஸ்திரம்

பொருட்களை நாமே கையாள்வதாகக் கற்பனை செய்த போது அவற்றை நினைவில் வைத்துக் கொள்வது எளிதாயிற்று அல்லவா!

மனம் ஒருமுகப்படுதல் என்பது நாம் அறிய விரும்பும் விஷயத்தில் நிலைத்த நீண்ட கவனம் செலுத்துவதால் விளைகிறது. கவனம் சிதறிப் போகாமல் நிலைத்து நிற்பது அவ்விஷயத்தில் நமக்குள்ள ஆர்வத்தைப் பொறுத்தது மட்டுமல்ல; பழக்கத்தையும் பயிற்சியையும் பொறுத்தது. செய்யும் வேலை எதுவானாலும் அதை முழுக் கவனத்துடன் செய்யும் பழக்கத்தைப் பயிற்சி மூலம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு கச்சிதமாகச் செய்ய வேண்டும் என்று எண்ணினால் ஆர்வம் உண்டாகி, மனமும் ஒருமுகப்படும்.

ஈடுபாடு இருந்தும் சில விஷயங்களை மறப்பானேன்...? உதாரண மாக, பலர் 'கார்' அல்லது ஸ்கூட்டர் சாவியைத் தேடாமல் ஒருநாள் கூட அலுவலகம் கிளம்புவதில்லை! 'மூக்குக் கண்ணாடியை எங்கே வைத்தேன், என்று வீட்டில் மேலும் கீழும் தேடி அலைவார்கள்....

இத்தகையவர்களிடம் உள்ள குறை மறதி அல்ல.- ஏனென்றால் இதே நபர்களால் 1940இல் நடந்த கிரிக்கெட் மாட்ச் ஸ்கோரையும், அலு வலக வேலைக்கு அவசியமான புள்ளி விவரங்களையும் சகட்டு மேனிக்கு உதிர்க்க முடியும். இவர்களிடம் உள்ள குறை ஆங்கிலத்தில் 'absent mindedness' என்று சொல்லப்படும் பிரக்ஞையின்மைதான்!

ஆனால் இந்தக் குறையை அவர்கள் உணர்ந்து, ஏற்று, தங்களை மாற்றிக் கொள்ள முயலும் வரை இவர்களுக்கு யாராலும் உதவ முடியாது.

இவர்கள் எப்படித் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்... ஆரம்ப கட்டமாக இவர்கள் தாங்கள் செய்வதை உணர்ந்து செய்ய வேண்டும். சாவி வைக்கும் இடத்தையும் சாவியையும் கண்ணால் பார்த்து மனத்தில்



பதித்துக் கொள்ள வேண்டும். 'நான் சாவியை மேஜை மேல் வை கிறேன்' என்று ஒருமுறை உரக்க சொல்லிக் கொள்ளலாம். அவ்வா செய்யும் போது, செயல், சொல் மற்றும் அதனுடன் சம்பந்தப்படு பொருள் ஆகிய மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தப்பட் மூளையில் பதிகின்றன.

ஒரு பொருளை ஒரே இடத்தில் எப்போதும் வைப்பது நல்லது அவ்வாறு வைப்பதற்கும் சரி, சில சமயங்களில் இடம்மாற்றி வைப் தற்கும் சரி, தகுந்த காரணம் இருக்க வேண்டும். காரணம் நினைவுக் வரும் போது வைத்த இடமும் தன்னிச்சையாக நினைவு வரும்.


'பிரக்ஞையின்மை' பெரும்பாலும் படு 'பிஸி'யான நபர்களிட காணப்படுகிறது. இவர்கள் கவனம் முழுதும் வேறு விஷயங்களி இருப்பதால் சராசரி, தினசரி விஷயங்களான கார் சாவி, கண்ணா போன்றவற்றின்பால் இவர்கள் கவனமே செலுத்துவதில்லை.

ஆனால் இத்தகைய கவனமின்மையே வழக்கமாகிப் போவதா நாளாவட்டத்தில் 'பிஸி'யாக இல்லாத சமயத்திலும் இவர்கள் பிரக்ஞை யுடன் செயல்படுவதில்லை. சின்னச் சின்ன விஷயங்கள் மறப்பதா இவர்களுடைய செயல்பாடு தடைப்படுகிறது. அவஸ்தைப்படுகி றார்கள். கொஞ்சம் மனோதிடம் (will power) மட்டும் இருந்தா இவர்கள் தங்களை முற்றிலுமாக மாற்றிக் கொண்டு விட முடியும்.

மனத்தில் பதிய வைத்த தகவலை உபயோகிக்காமல் துருப்பிடிக் அனுமதிப்பது மறதிக்கு இரண்டாவது காரணமாகச் சொல்லப்பட்டது

இந்தப் பிரச்னையை வெல்வதற்கு ஒரு வழி, புதிதாக அறிந் விஷயத்தை மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்ப்பது; திரும்பத் திரும்ப சொல்லிப் பார்ப்பது. இவ்வாறு செய்வதால் புதிய விஷயங்க எளிதாகப் புரிவதோடு மனத்திலும் பதிகின்றன என்கின்றனர் ஆராய்ச் யாளர்கள். திரும்பச் சொல்லிப் பார்ப்பதில் சில விதிகளைக் கடை பிடிக்கச் சொல்லி அறிவுறுத்துகிறார்கள் மனோதத்துவ நிபுணர்கள் பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு இந்த விதிகள் மிகவும் உ யோகமாய் இருக்கும் :

- சொல்லும் விஷயத்தைப் புரிந்து கொண்டு சொல்லுங்கள்.
- ஒரே சமயத்தில் ஏராளமாகப் படிக்காமல் இடைவெளி விட் விட்டுச் சிறிது சிறிதாகப் படித்து, மீண்டும் சொல்லிப் பாருங்கள்.
- உங்களுக்கு நீங்களே புதிய விஷயத்தை உரக்கச் சொல்லி கொள்ளுங்கள்.
- அந்த விஷயம் மனத்தில் பதிந்து விட்டது என்று உறுதியா பின்னரும் துளியும் கவனம் குறையாமல் மீண்டும் சில முறைக சொல்லிப் பாருங்கள்.
- புதிதாக அறிந்த ஒரு விஷயத்தை முழுவதுமாகச் சொல்லி பார்க்காமல் பகுதி பகுதியாகப் பிரித்து, நினைத்துப் பார்த்து, உரக்க சொல்லுங்கள்.
- என்னால் முடியும் - நினைவிருக்கும். மறக்காது - என் அடிக்கடி உங்களுக்கு நீங்களே சொல்லிக் கொள்ளுங்கள்.
- வித்தியாசமாக, வேறுபட்டு நிற்கும் விஷயங்களை நினைவி வைத்துக் கொள்வது எளிது. புத்தகத்திலிருந்து படிக்கையில் முக்கி மான வார்த்தைகளை அடிக்கோடிட்டுக் கொண்டால் அவை தனித் நிற்கும். மனத்தில் பதியும்.
- ஒரு விஷயத்தை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்த்து சொல்வதால் அது நமது குறுகிய காலநினைவுப் பெட்டகத்திலிருந் நீண்ட கால நினைவுப் பெட்டகத்துக்குப் போய்ப் பொருந்திக் கொ கிறது.





ஓர் அனுபவத்தில் மற்றொன்று தலையிடுவதன் காரணமாக மறதி விளைகிறது என்பது மூன்றாவதாகக் கூறப்பட்ட காரணம். முக்கியமான புதிய விஷயத்தை அறிந்து கொள்ளும் முன்னரும் பின்னரும் மனத்துக்கும் மூளைக்கும் சுமையான விஷயங்களைத் திணிக்காமல் இருப்பது நல்லது.

படிக்கும் மாணவர்கள், மனத்தில் பதிந்த பாடங்களுடன் படுக்கச் சென்று காலையில் எழுந்ததும் மீண்டும் ஒருமுறை அப் பாடங்களை நினைவுகூர்வது மிகவும் நல்லது. இவ்வாறு செய்வதால் வேறு அனுபவங்களின் குறுக்கீடு இன்றிப் பாடம் மனத்தில் பதிந்து ஸ்திரப்பட்டுப் போகிறது.

புதிதாகக் கற்கும் விஷயங்களை வேண்டுமானால் இவ்வாறு பிற அனுபவங்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியும்.

ஆனால் ஏற்கெனவே அறிந்த பல விஷயங்கள் மறந்து போவதற்கும் மனத்தை அழுத்தும் அனுபவங்கள் காரணமாகின்றன. உதாரணமாக, அந்தப் பெயர் நாக்கு நுனியில் இருக்கு, வர மாட்டேன் என்கிறது...' என்று நாம் எல்லோருமே ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவஸ்தைப் பட்டிருக்கிறோம். இத்தகைய அழுத்தத்தை வெல்ல வேண்டுமானால் மனத்தை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும். பல சந்தர்ப்பங்களில், ஒரு நல்ல தூக்கம் போட்டு எழுந்தால் இறுக்கம் தளர்ந்து மறந்த விஷயம் நினைவுக்கு வந்து விடும். மறந்து போன விஷயத்துடன் தொடர்பு உள்ள வேறு விஷயங்களை எண்ணிப் பார்ப்பதன் மூலமும் ஒரு தீர்வு பிறக்கலாம். ஒரு விஷயத்தை நினைவில் அமர்த்திக் கொள்ளும்போதே, அதனை வேறொன்றுடன் தொடர்புபடுத்தி வைத்துக் கொள்வது பேருதவி. (கட்டுரை ஆரம்பத்தில் உள்ள பயிற்சி). இவ்வாறு தொடர்புபடுத்தும் விஷயம் ஒத்ததாக இருக்கலாம் :

உதாரணமாக சந்திரா என்ற பெயரை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்.

சந்திரா - சந்திரன் - Moon என்ற ஆங்கிலச் சொல் என ஒத்த விஷயங்களை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்.

அல்லது

சந்திரா - சந்திரன் - சூரியன் என்று முற்றிலும் வேறுபட்டதை எண்ணிப் பார்க்கலாம்.

அல்லது

இரவு, நிலவு, சந்திரன் - சந்திரா எனச் சங்கிலித் தொடரான அம்சங்களை நினைத்துப் பார்த்து மனத்தில் இறுத்திக் கொள்ளலாம்.

இவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கடைப்பிடியுங்கள்.

அவரவருக்குத் தைத்த ஆடை போல அவரவருக்கு மட்டுமே பொருந்தக்கூடிய வழிமுறைகள் இருக்கின்றன. அவற்றைச் சற்றுப் பொறுமையுடனும் விருப்பமுடனும் ஆராய்ந்து தேர்வு செய்து ஞாபக சக்தியை வளர்த்துக் கொண்டால் வாழ்க்கை எளிதாகவும் நிறைவாகவும் இருக்கும்.

கடைசியாக ஒன்று : ஞாபக மறதி ஜோக்குகளை நம்பாதீர்கள். அவை சிரிக்க மட்டுமே. ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்ள உங்களால் முடியும் - நம்புங்கள். நம்பிக்கையே வெற்றியின் அஸ்திவாரம்.



இத்துறையில் நிபுணர்களான நாராயணன் - சுமதி தம்பதி கூறியவற்றின் தொகுப்பு.

கட்டுரை வடிவம் : சீதா ரவி

படம் : ரமணன்

☚ சுமதி - நாராயணன்



இன்று லீவு போட்டாச்சு. இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே ஒரு நாள் கிரிக்கெட் மாட்ச். ஸ்ரீகாந்த் வேறு ஆடறார்.

செல்லையாவுக்குக் காலையில் எழுந்திருக்கையிலேயே அந்த பரபரப்பு மனத்தில் இருந்தது. ஸ்ரீகாந்த் என்ன மாதிரி 'பாட்ஸ்மன்'. இம்ரான் கான் ஒருமுறை ஸ்ரீகாந்தைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார். எந்த பீல்டிங் அமைப்பும் ஸ்ரீகாந்த் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாது என்றல்லவா?

ஸ்ரீகாந்த் ஆட்டத்தைப் பார்க்க ஆஸ்திரேலியாவில் போன முறை முன்னூறு நானூறு கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து வந்தார்களாம். 'டாஷிங் ஓப்பனர்' என்று எவ்வளவு பாராட்டு!

இரண்டு மாட்சுகளுக்கு முன்புதான் நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் விளையாடத் தேர்வு செய்தார்கள். ஆனால் என்னவோ தெரியவில்லை, ஆஸ்திரேலிய பிட்சுகள் காரணமோ என்னவோ ஸ்ரீகாந்த் சரியாக ஆடவில்லை.

சினிமா உலகம் போல கிரிக்கெட் உலகமும் சாதனைகளைச் சீக்கிரம் மறந்து விட்டுப் புதியவர்களைக் கொண்டாடுகிறதே என்று செல்லையா வருத்தப்பட்டான்.

இந்த மாட்சிலும் சரியாக ஆடா விட்டால் டீமிலிருந்து எடுத்து விடுவார்கள். ஸ்ரீகாந்த் விளையாடாத போது இந்தியா தோற்றால் 'நல்லா வேணும்' என்றுதான் செல்லையாவுக்கு நினைக்கத் தோன்றும்.

''...சீத்தா...... கரெக்டா பதினோறுமணிக்கு மாட்ச். ஆரம்பித்துவிடும். அதுக்கப்புறம் என்னைக் கூப்பிடக் கூடாது. மாட்ச் முடியுற வரைக்கும் ஏதும் செய்ய மாட்டேன். கடைக்குப் போறது....... அது இது எல்லாம் இப்பவே சொல்லிடு.... ஆமாம்.''

ஸ்ரீகாந்த் ஆட்டத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இன்று லீவு எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்தான்.

சீதாவுக்குத் தெரியும். மாட்ச் ஆரம்பித்த பிறகு டீவியை விட்டு அசைய மாட்டானென்று.

''இன்று வெள்ளிக்கிழமை, நான் கோவிலுக்குப் போகணும். சைக்கிள் பங்சராக இருக்கு. அதை ஒட்டிக்கிட்டு வந்திடுங்க. அப்புறம்......''

ஸ்ரீகாந்த்

சோம. வள்ளியப்பன்



மாட்ச் ஆரம்பமாகும் வரை என்ன வேண்டுமானாலும் செய்வாரென்று தெரியுமாதலால் விடுவிடுவென்று அடுக்கிக் கொண்டே போனாள்.

அடுத்த இரண்டு மணிநேரத்தில் செல்லையா பரபரவென்று வெளியில் போவதும் வருவதுமாய் எல்லாவற்றையும் முடித்து விட்டான்.

மணி பத்தேமுக்காலாகியது. மாட்ச் ஆரம்பிக்க இன்னும் கால்மணிநேரம் இருந்தது. சீதாவும் அவர்கள் பெரிய பெண்ணை ஸ்கூலுக்கு அனுப்பிவிட்டு சின்னவன் மகேஷைக் கூட்டிக்கொண்டு கோவிலுக்குப் போய்விட்டாள். தொந்திரவு ஏதுமில்லை.

சின்னவன் மகேஷ் மீது செல்லையாவுக்குக் கொள்ளைப் பிரியம். அவனுக்

அமெரிக்காவில்...

❑ வி. ஸி. ஆர். திருட்டுப் போகாமல் பாதுகாக்க ஒரு புதிய கண்டுபிடிப்பு. காஸெட் டேப் வடிவத்திலேயே அமைந்துள்ள அந்தச் சாதனத்தை வி. ஸி. ஆருக்குள் நுழைத்துவிட வேண்டும். இந்த காஸெட் உள்ளே இருக்கும் போது யாரேனும் வி. ஸி. ஆரைத் தொட்டு நகர்த்தினால் சைரன் ஒலிக்க ஆரம்பித்துவிடும். மின் இணைப்பைத் துண்டித்தாலும் இந்தச் சாதனம் இயங்கும்.

நன்றி : நியூஸ்வீக்

கும் அம்மாவை விட அப்பாவிடம்தான் ஒட்டுதல் அதிகம். ''டாச்சு... டாச்சு....'' என்றுதான் அப்பாவைக் கூப்பிடுவான்.

டீவியை 'ஆன்' பண்ணிவிட்டு நாற்காலியை முருகர் படம் மாட்டியிருக்கும் சுவருக்கு அருகில் போட்டுக் கொண்டு அமர்ந்தான் செல்லையா.

நீலநிற உடைகளில்..... ஆங்.... இதோ ஸ்ரீகாந்த். சரி, இந்தியாதான் முதலில் பாட்டிங். செல்லையாவை அறியாமல் அவன் முகம் முருகர் படத்தைப் பார்த்துத் திரும்பியது. ஸ்ரீகாந்த் இன்று ஒரு அம்பது ரன்னாவது எடுக்க வேண்டுமென்ற படபடப்பு ஸ்ரீகாந்த்தைவிட செல்லையாவுக்கு அதிகமிருந்தது போலிருந்தது.

ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் பந்தை விடாமல் தேய்த்து, தேய்த்து மெருகேற்றி வீசிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று ஸ்ரீகாந்தின் ஆட்டத்தில் ஒரு தன்னம்பிக்கை தெரிந்தது.

ஐந்து, ஆறாவது ஓவர்களில் ஸ்ரீகாந்த் தன் வழக்கமான 'ஸ்டைலுக்கு' வந்து விட்டது போலிருந்தது.

ஸ்ரீகாந்த் ஸ்கோர் இருபது. இருந்த இடத்தைவிட்டு செல்லையா அசையவில்லை. ஸ்ரீகாந்த் ஒவ்வொருமுறை மட்டை பிடித்துப் பந்தை எதிர் நோக்கும் பொழுதும் செல்லையா தவறாது, தன்னையறியாது முருகர் படத்தைத் திரும்பிப் பார்த்தான்.

ஸ்ரீகாந்த் ஒரு பந்தை ஓங்கி அடித்தார். அது மேலெழும்பி வானத்தில் பறந்த பொழுது அது பிடிக்கப்பட்டு 'ஸ்ரீகாந்த் அவுட்டோ என்ற படபடப்பு செல்லையாவைத் தாக்கி, விரல் நகங்களை வாயில் திணித்துக் கடித்துக் கொண்டிருந்தான். வாவ்.... அது ஒரு ஸிக்ஸர்... செல்லையாவுக்கு மீண்டும் மூச்சு வந்தது.

அடுத்து, அடுத்து விளாசித்தள்ளி ஆஸ்திரேலிய வீரர்களின் பந்துவீச்சைக் கேலி பண்ணிக் கொண்டிருந்த ஸ்ரீகாந்த் ஒரு அடி அடித்தவுடன் ''பெருமாளே'' என்பது போல சட்டைக்குள்ளிருக்கும் டாலரை தொட்டுக் கொண்டும், சூரியனைப் பார்த்துக் கொண்டும் இருந்தது தெரிந்தது.

டிங்..... டாங். வாசல் மணி அழைத்தது. உடன் ''டாச்சு.....'' என்ற செல்லையாவின் செல்லமகனின் அழைப்பும் காதில் விழுந்தது. வந்துவிட்டார்கள். இனி ஒழுங்காய்ப் பார்க்க விடமாட்டார்கள் என்று சலித்துக் கொண்டே வாசல் கதவைத் திறந்தான்.

சீதாவும், மகன் மகேஷும்தான். என்ன, ஏது என்றுகூடக் கேட்காது திரும்பி வந்து 'டக்'கென்று அதே நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு டீவியை உற்றுக் கவனித்தான்.

உள்ளே வந்த சீதா, டீவி இருந்த மேஜைமேல் கோவில் அர்ச்சனைக் கூடையை வைத்துவிட்டு மகனைக் கீழே இறக்கி.....

''ஏய் இங்க ஒருத்தன் உட்கார்ந்து டீவி பார்கறது கண்ணுக்குத் தெரியலையா, குறுக்க வந்து நிக்கிறா....'' கடித்துத் துப்புவது போல் கத்தினான்.

''ஏன், சேரை நகர்த்திப் போட்டுக்கிட்டு உங்க மாட்சை விடாமல் பார்கறது. அர்ச்சனைக் கூடையை மேசை மேல வைக்காம வேற எங்க வைக்கணுமாம்?''

இறக்கி விடப்பட்ட மகேஷ் ''டாச்சு.... டாச்சு....'' என்று கொஞ்சிக் கொண்டே அப்பாவின் மடிக்குத் தடுமாறி ஏறி விட்டான்.

சீதா சொல்லிக் கொண்டே நகர்வதற்குள், 'த பால் இஸ்.... அப் இன் த ஏர் அண்டு ஹி இஸ் கோயிங் டுபி அவுட்.....'' என்று வர்ணனையாளர் கத்த, மகனைக் கீழே உதறிவிட்டு எழுந்து ஓடிவந்து சீதாவை நெட்டித் தள்ளினான் செல்லையா. ''ஒரு மாட்ச் பார்க்க விடுவீங்களா என்னை?... போச்சு போச்சு ஸ்ரீகாந்த் அவுட்டா?''

டீவி அருகில் எழுந்து நின்று பார்த்தான். ஒரு கையை மற்றொரு கைக் கக்கத்தில் வைத்து 'வெடுக்'கென்று கையுறைகளை உருவிவிட்டு, தப்பு மட்டையின் மேல்தான் என்பதுபோல மட்டையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டே வந்து கொண்டிருந்தது: ரவிசாஸ்திரி. அப்பாடா! அவுட்டானது அப்ப ஸ்ரீகாந்த் இல்லை. இருந்தாலும் ஒரு ஆள் அவுட்டாச்சே!

''இவ்வளவு நேரம் நல்லா ஆடிக்கிட்டு இருந்தானுக. மகேஷ் வந்து என் மடியில் ஏறினான் ஒரு ஆளு அவுட்'' செல்லையா அழுது கொண்டிருந்த மகேஷை முறைத்தான்.

அடுத்து வந்த சஞ்சய் மஞ்ரேக்கர் ஸ்ரீகாந்துடன் ஜோடி சேர்ந்து ஆட ஆரம்



''எது சொன்னாலும் காதுல போட்டுக்க மாட்டேங்கறேன்னு வீட்டுக்காரி கிட்ட புகார் சொன்னது தப்பாப் போச்சு....''

''என்ன சொன்னா?''

''ஹியரிங் எய்டு சேர்த்துப் புது ஃபாஷன் தோடு வந்துருக்காம்,வாங்கித் தரச் சொல்லுறா!''

– எஸ். கோவிந்தன்

பித்து விட்டிருந்தார். ஸ்ரீகாந்த் பந்தை அடிக்க மட்டையை ஓங்க, அது பந்தில் படவில்லை. பந்து காலில் பட்டது. ஸ்ரீகாந்த் அவுட் என்று ஆஸ்திரேலிய வீரர்கள் கத்தினார்கள். ஏதும் முடிவு சொல்லாது, நடுவர் நான்கு வினாடிகள் விட்டு, பின்பு 'அவுட் இல்லை' என்று சொல்வதற்குள் செல்லையாவுக்கு மூஞ்சி செத்துவிட்டது.

''ஸ்ரீகாந்த் ஆடி முடிக்கிறதுக்குள்ள உங்களுக்கு ரத்தக் கொதிப்பு வந்திடப் போகுது..... சரி ஏங்க காப்பி போடவா...?'' கரிசனமாய்க் கேட்டாள் சீதா.

''காப்பியும் வேணாம் ஒண்ணும் வேணாம். உன் பிள்ளையை ஒப்புக் கொள்ளு போதும்.''

அப்பா காலுக்குப் பக்கத்தில் தரையில் அமர்ந்து, சிறுநீர் கழித்து அதில் அன்றையத் தபாலில் வந்திருந்த போஸ்டு கார்டை நனைத்து மகேஷ் விளையாடிக் கொண்டிருந்தான்.

ஸ்ரீகாந்த் நாற்பத்தி எட்டு ரன்கள். ஆவி பறக்கும் காப்பியைக் கொண்டு வந்து நீட்டிய சீதாவைத் திரும்பிக் கூட பார்க்காது கையை மட்டும் நீட்டினான்.

''அப்படி என்ன ஒரு நிமிஷத்தில் கெட்டுடப் போவுது..... காப்பியைக் கூட குடிக்காம.....'' என்று சொல்லிக் கொண்டே விடுவிடுவென்று போய் டீவியை 'ஆப்' செய்துவிட்டாள்.

''இந்த விளையாட்டெல்லாம் வச்சுக் காதே ஆமாம்'' என்று அவளை நெட்டி ஒரு தள்ளு தள்ளிவிட்டான். சீதா கையிலிருந்த காப்பி மொத்தமும் தரையில் கொட்டியது.

டீவியை 'ஆன்' பண்ணிவிட்டு தன் இடத்துக்குப் போக நகர்ந்த செல்லையாவின் காதில் ''அண்ட் தட்ஸ் த பிப்டி ஆப் ஸ்ரீகாந்த்....'' என்ற வார்த்தைகள் தேனாய்ப் பாய்ந்தன.

'ஸ்ரீகாந்த் அவ்வளவுதான்... இனி பழைய மாதிரி விளையாட முடியாது' என்றெல்லாம் கேலி பேசினார்களே இப்ப என்ன ஆச்சு? என்று செல்லையாவின் மனசு கேள்வி கேட்டு சந்தோஷப்பட்டுக் கொண்டது.

'கொழ கொழ' வென்று சீதாவின் அன்பின் கெட்டியை வெளிபடுத்திக் கொண்டு தரையில் கொட்டிக் கிடந்த காப்பிக்கு நகர்ந்து, நான் இதைத் 'தப்படிக்க' அனுமதி உண்டா என்பதுபோல சந்தேகமாகத் தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே மெல்ல நெருங்கினான் மகேஷ்.

''அப்பா.... தம்பி... நம்மகிட்ட வராதப்பா சாமி, ஏதோ ஸ்ரீகாந்த் ஆடிக்கிட்டிருக்கார் அதையும் கெடுத்திடாதப்பா'' என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கொண்டே நகர்ந்து நகர்ந்து மகன் மகேஷை விட்டு விலகினான் செல்லையா.

''பிள்ளைக்குன்னு வச்சிருந்த பால்ல தண்ணி கூட ஊத்தாம உங்களுக்குக் காப்பி போட்டுக் குடுத்தா கொட்டி விட்டு, பிள்ளையையும் விரட்டுறீகளே நான் காப்பியைத் துடைக்கணும், அவன் அதில புரண்டுடாம தூக்கி வைச்சுக்கிட்டே பாருங்க உங்க பாழாப்போன கிரிக்கெட்ட....'' பொரிந்தாள் சீதா.

தான் வேண்டாமென்று சொல்லியும் பிரியமாய் அவள் போட்டுக் கொண்டு வந்த காப்பியை தான் கொட்டி விட்ட குற்ற உணர்வு காரணமாய் மகனைத் தூக்கிப் பட்டும் படாமலும் மடியில் வைத்துக் கொண்டு டீவி பார்க்க ஆரம்பித்தான்.

அடுத்து பந்து வீச வந்தவர் ஒரு சுழற்பந்து வீச்சாளர். ஐம்பதுக்கு மேல் அடித்துவிட்ட ஸ்ரீகாந்துக்குச் சுழற்பந்தெல்லாம் அல்வா சாப்பிடறது மாதிரி.


மெதுவாக வீசப்பட்ட அடுத்த பந்தை அடித்து விளாச, துள்ளிக் குதித்து மட்டையைச் சுழற்ற அது மட்டையில் படாது சுழன்று ஸ்டெம்பில் பட்டு - ஸ்ரீகாந்த் 'அவுட்'.

''அப்பா... டாச்சு....'' என்று அழைத்து, செல்லையாவின் முகவாய்க் கட்டையைப் பிஞ்சுக் கைகளால் திருப்பிய குழந்தை மகேஷைத் தூக்கிக் கீழே தரையில் 'தொப்'பென்று உட்கார வைத்துவிட்டு ''இந்தச் சனியனை ஏன் என் மடியில உட்காரச் சொன்ன.... ஸ்ரீகாந்த்தும் அவுட் டாயிட்டான்'' என்று கத்தினான் செல்லையா.

''வீல்'' என்று கத்திக் கொண்டே அதிர்ச்சியும் வருத்தமுமாய்க் குழந்தை மகேஷ் அம்மாவிடம் ஓடினான்.

அவசரப்பட்டிருக்கக் கூடாது என்பது போல தலையைப் பக்கவாட்டில் மீண்டும் மீண்டும் ஆட்டிக் கொண்டே ஸ்ரீகாந்த் திரும்பிப் பெவிலியனுக்கு வந்து கொண்டிருந்தது டீவியில் ஓடிக் கொண்டிருந்தது.

மீண்டும் தொட்டிலுக்கு...



குளத்து மேட்டில் உட்கார்ந்திருந்த ராஜப்பனின் பார்வை முருகன் கோயிலுக்கு முன்னும் பின்னும், விளைந்தும் கரம்பு மாய் இருந்த நிலங்களின் மீது ஓடியது. விர்ரென்று வீசிய காற்று, விளைந்த கதிர் களை அசைத்து விளையாடிக் கொண் டிருந்தது.

எங்கும் பசுமை விரிந்திருக்க வேண் டிய காலம் இது. இப்பொழுது கிணற்றுப் பாசனக் கழனிகள் மட்டுமே விளைந் திருக்கின்றன.

மூன்றாம் வருஷம் ஹோவென்று ஓயாத மழை. பகல், இரவு எப்பொழுதும் நிற்காத மழை. இரண்டு நாள் மழைக்குப் பிறகு குடையுடன் ஏரி மீது நடந்து போய் ஆர்வமாகக் கலங்கலைப் பார்த்தவர்கள் அசந்து போனார்கள். எந்த வருஷமும் காணாத அதிசயமாய் ஆறடி உயரம் தண்ணீர் விழுந்தது.

ஆச்சர்யப்பட்டார்கள்.

ஆனால் - அடுத்த நாளும் மழை விடா மல் பெய்த போது அச்சப்பட்டார்கள்.

மீண்டும் போய் கரை ஏறினார்கள். கரையை எட்டிப் பிடிக்கிற அளவுக்குத் தண் ணீர் மட்டம். அங்கங்கே விரிசல்கள் தென் பட்டன.

கொட்டும் மழையில் ஆட்கள் இறங்கிக் கரையை அடைத்தார்கள்.

பி. டபிள்யூ. டி. எஞ்சினீயர், சப்-கலெக்டர், எம்.எல்.ஏ. எல்லோரும் வந்து பார்த்தார்கள்.

அடைத்த இடத்தை விட்டுப் புதிய இடங்களில் விரிசல். மதகுகள் திறந்த படியே இருந்தன. கலங்கல் விழுந்து கொண்டே இருந்தது. ஆனாலும் - மழை நிற்கவில்லையே!

மழை நின்றால் கூட உடனே அபாயம் அகன்று விடாது. மேற்கிலிருந்து திரண்டு வரும் தண்ணீரெல்லாம் இந்த ஏரியில்தான் விழும்.

கலெக்டர் வந்தார். அவரிடம் முறை யிட்டார்கள். ஊரைக் காக்க உடனே ஏதா வது செய்தாக வேண்டும். கரையின் கீழே முப்பதாயிரம் உயிர்கள், அவர்களின் உடை மைகள்.

நிலைமையை விவாதித்து, தீர்மா னத்துக்கு வந்து, உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும்.

கொட்டும் மழையில் நிற்க முடியாமல் கார்கள் புறப்பட்டன. பயணியர் மாளிகை யில் ஆலோசித்தார்கள்.

ஜன்னலின் வழியே 'ஹோ'வென்று

— எஸ். உமர்



கதாசிரியர் : என் கதை அறுவையாக இருக்கட்டும்; அதுக்காக இப்படியா பிறந்தநாள் கேக் கொண்டு வர்றது?
– வேதாரண்யம் வேதமூர்த்தி

கலங்கலில் விழும் தண்ணீரின் இரைச்சலும் அது அளவற்றுப் புரண்டு ஓடும் கிளியாற்றின் நீர் மட்டமும் அச்சுறுத்திக் கொண்டிருந்தன.

முன்பொருமுறை இதே சூழ்நிலையில் வெள்ளைக்கார கலெக்டர் கையைப் பிசைந்து நின்ற போது -

ராமபிரான் கோதண்டத்துடன் வந்து அம்பெய்திக் கரையைக் காத்ததாக ஸ்தல வரலாறு.

இப்பொழுதும் அப்படி ஒரு அதிசயம் நடந்தாக வேண்டும்.

பிரார்த்தனையை மட்டுமே நம்பியிருக்காமல் மனித யத்தனமும் தொடர்ந்தது.

இறுதியில் அந்த முடிவு எடுக்கப்பட்டது. ஊரைக் காக்கும் முயற்சியில் சில கிராமங்கள் பாதிக்கப்படும் என்றாலும் பேரூரின் இழப்பைக் காட்டிலும் அவற்றின் பாதிப்பு அளவில் குறையும்.

கலங்கலின் சுவர் வெடி வைத்துத் தகர்க்கப்பட்டது. சீற்றத்துடன் தண்ணீர் பாய்ந்தது. கிளியாற்றின் மட்டம் மேலும் உயர்ந்து ஓடியது.

ரயில்வே பாலம், கிராமங்கள், கால் நடைகள், அபூர்வமாய் ஒன்றிரண்டு மனித உயிர்கள் - எல்லாமே வெள்ளத்தில் போயின.

ஏரி முற்றிலுமாக வடிந்து போயிற்று.

அதற்குப் பிறகு கலங்கல் சுவர் செப்பனிடப்பட்டது. ஏரியின் கரையும் உயர்த்தப்பட்டது.

மழைதான் பெய்யவில்லை.

புத்தகங்களில் வரும் வடகிழக்கு, தென்மேற்குப் பருவ மழைகளைக் காணோம். பருவம் விட்டுப் பெய்தன. பற்றாக்குறையாக.

மழை மாதங்களில் வெயில் தகித்தது. இரவுகளில் பனி! எல்லாமே மாறிப் போய் விட்டன.

"என்ன ராஜப்பா, யோசனை?"

"ஒண்ணுமில்லே, தங்கவேலு. ரெண்டு வருஷமா இப்படி மானங் காஞ்சிப் போச்சேன்னு நினைச்சிட்டிருந்தேன்."

"அவ்வளவுதான்! விவசாயத்துக்கு இனி காலமில்லே, ராஜப்பா."

சுரீரென்றது. தம்பி கந்தப்பனும் இதைத்தான் எழுதியிருந்தான்.

வீட்டுக்குத் திரும்பினான்.

"நிலந்தான் தரிசாக் கிடக்குதே! நேரத்துக்கு வந்து சாப்பிடறதுக்கென்ன?" என்று கேட்டாள், கமலா.

பதில் பேசாமல் கையைக் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்தான்.

தட்டில் இட்டிலியும் சட்டினியும் வைத்தாள்.

"இதென்ன வேர்க்கடலை சட்டினியா?"

"ஏன், சாப்பிட்டா தெரியலியா?"

"எங்கே தெரியுது? அம்மோனியால விளையற கடலை ரொம்பப் பெரீசாத்தான் இருக்கு. ஆனா ருசி இல்லையே! இட்டிலி கூடத்தான் மாறிப் போச்சி."

"நான் எப்பவும் போலத்தான் செய்யறேன்."

"நான் உன்னைக் குறை சொல்லலே. கை பாகம் அப்படியேதான் இருக்கு. ஆனா மண்ணு மாறிடுச்சே!"

"ஆமாம், எப்ப உங்க தம்பியைப் பார்க்கப் போறீங்க?"

"அதான் லெட்டர் போட்டிருக்கானே! நாளைக்குப் போகலாம்னு இருக்கேன்."

"என்ன முடிவு பண்ணீங்க?"

"........"

"எனக்கென்னவோ உங்க தம்பியோட அபிப்பிராயம்தான் சரின்னு படுது. நமக்கென்ன பிள்ளையா, குட்டியா? நிலத்தையும் தோட்டத்தையும் வித்து பேங்க்ல போட்டு, வட்டியைச் சாப்பிட்டுட்டுப் போகலாம்."

"சரி, யோசிக்கலாம்."

சுவர்க்கோழியும் ராஜப்பனும் மட்டுமே விழித்திருந்தார்கள். புரண்டு படுத்தாலும் தூக்கம் வரவில்லை. மனசு கிடந்து அலைந்தது.

கந்தப்பன்.

தங்கவேலு.

கமலா.

எல்லோருமே அப்படித்தான் சொல்கிறார்கள். இனி விவசாயத்திற்கு கால

மில்லையா? இனி இங்கே பிழைக்க முடியாதா? நிலத்தையும் தோட்டத்தையும் விற்று விட... முடியுமா? மண்வாசனையை மறந்து... புரண்டு, புரண்டு யோசித்தான்.

பின் - தூங்கிப் போனான்.

தம்பியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த போது அவன் மனைவி அங்கயற்கண்ணி தான் வீட்டில் இருந்தாள்.

''வாங்க, மாமா. லெட்டர் போட்டிருந்தா ஸ்டேஷனுக்கு வந்திருப்போமே!''

''நான் என்ன சின்னப்பிள்ளையா? தன்னால வந்துட்டுப் போறேன்.''

''உட்காருங்க.''

ஹார்லிக்ஸ் கொண்டு வந்து கொடுத்தாள்.

பத்து நிமிஷம் சுபாவமாய்ப் பேசிக் கொண்டிருந்தாள்.

''இலை போடறேன். கை கழுவிட்டு வாங்க.''

''பிள்ளைங்க வருவாங்களா?''

''இல்லை, காலையில டப்பாவில போட்டுக் கொடுத்துடுவேன். ஸ்கூல்லியே சாப்பிட்டுட்டு, சாயங்காலம்தான் வருவாங்க.''

கையைக் கழுவிக் கொண்டு வந்து உட்கார்ந்தான். மந்தாரை தையல் இலை. கழுவினாள். சோறு போட்டாள்.

''இவ்வளவு சூடா இருக்கே!''

''ஹாட் பேக்ல வச்சது.''

ஆவி பறந்தாலும் சோற்றில் வாசமில்லை.

பருப்புப் பொடியை வைத்து நெய் ஊற்றினாள்.

முருங்கைத் துளிர் போட்டுக் காய்ச்சும் போதும் சோற்றில் விழுந்து உருகும் போதும் மணக்குமே, அந்த மணம் எங்கே?

துவையல் கூட ருசியில் ஒரு மாற்று குறைந்திருந்தது.

''சாப்பாடு பரவாயில்லையா?''

''ம்... உங்க அக்கா மாதிரி உனக்கும் நல்ல கைபக்குவம்மா. ஆனா.. இப்பல்லாம் நாம சாப்பிடற சாப்பாட்டில ருசி கம்மிதான்! அதுக்கு நீங்க ஒண்ணும் பண்ண முடியாது.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''விஞ்ஞானம் நம்மை ரொம்பத்தான் முன்னேத்திடுத்து. உலகத்தைப் புரிஞ்சிக்கவும் வேகமா போட்டி போடவும் உதவுது. இந்த ரசாயன உரம் வந்த புதுசில மகசூலெல்லாம் பிரமாதமா வந்தது! ஆனா... எத்தனை புதுவகைப் பூச்சிங்க! எத்தனை பயிர் நோய்ங்க!... அந்தக் காலத்தில கடை மடக்குவோம். தழை போட்டு உழுவோம். சம்பா விதைப்போம். கிச்சடிச் சம்பா



''தமிழ் வாத்தியார் தன் பையன் கல்யாணத்தில மொய் வாங்கப் போற தைக் கல்யாணப் பத்திரிகையிலேயே இலக்கிய நயத்தோடு குறிப்பிட்டிருக் காரு...!''

''என்னன்னு?''

'''மொய்ப் பொருள் காண்ப தறிவு'ன்னு போட்டிருக்காரு!''

- தங்காடு போஜூ

ருசியை இப்ப நினைச்சாலும் எச்சி ஊறு தும்மா....''

மாலையில் குழந்தைகள் வந்ததும் அங்கை பால் கொடுத்தாள்.

பிஸ்கட்களைப் பிரித்து வைத்தாள்.

சின்னவன் சாப்பிட முரண்டு பிடித் தான்.

''ஏன் ராஜா, மத்தியானம் சாப்பிட்டது தானே! பசிக்கலியா?''

''இல்லை, பெரியப்பா. வயிறு வலிக்குது.''

''இவன் இப்படித்தான் அடிக்கடி கஷ்டப்படறான். அந்த அலமாரியில இருக் கிற மருந்து, மாத்திரையெல்லாம் அவ னுடையதுதான்!''

ராஜப்பன் அலமாரியில் இருக்கும் மாத் திரைகளை எடுத்துப் பார்த்தார். அன்ட்டா சிட் மாத்திரைகள்! கிராமத்தில் மீன் குழம் பும் கருவாட்டுக் குழம்பும் சாப்பிடும் கிழவர்களுக்குத்தான் அபூர்வமாக இப்படி வயிறு வலிக்கும். சாராயம் குடிப்பவர் களுக்கு நாற்பது வயசில் அல்சர் வரும்.

இங்கே இந்தப் பிஞ்சுக்கு வயிற்றுவலி! அதற்கு அன்ட்டாசிட் மாத்திரைகள்.

காலம்....! தாய்ப்பாலில் ரசாயனம் கலந்திருக்கும் காலம்!

கந்தப்பன் வந்தவுடன் பொதுவான ஊர் நிலவரம், குடும்பநலம் விசாரித்தான்.

வெளியே காய்கறி வாங்கக் கிளம்பி னான்.

''வரீங்களாண்ணே? வெளியே போய்ட்டு வரலாம்.''

''இல்லே தம்பி. அலுப்பா இருக்கு.''

''அவன் கடைக்குப் போய்த் திரும்பி வந்த பின்பு - எல்லோரும் ஒன்றாக உட் கார்ந்து சாப்பிட்டார்கள்.

வெற்றிலை போட்டுக் கொண்டு, கந்தப்பன் மொட்டை மாடிக்கு வந்தான். ராஜப்பனும் எதிரே உட்கார்ந்தான்.

''லெட்டர் கிடைச்சுதா?''

''அதைப் பார்த்துட்டுத்தான் வந்திருக் கேன்.''

''இனிமே விவசாயத்துக்குக் கால மில்லே, அண்ணே! அங்கே கரம்பாக் கிடக் கிற நிலத்தையும் அரையும் குறையுமா விளையறதையும் வித்துட்டு இங்கே வந்துடுங்க. ரெண்டு ஆட்டோவை வாங்கி விட்டுப் பிழைச்சிக்கலாம். இப்படியே செட்டில் ஆயிடலாம். கிராமத்து வாழ்க் கையை விட இது வசதியா இருக்கும்.''

''நிஜம்தான்! ஆனா....''

''ஆனா என்ன?''

''காலம் காலமா கிராமத்திலேயே இருந்தாச்சு. சொந்த நிலம், தோட்டம், விவ சாயம்தான் தொழில்னு பழகிப் போயி டுச்சி.''

''அண்ணே, இந்த சென்ட்டிமெண்ட் எல்லாம் நம்ம முன்னேற்றத்துக்குத் தடை.''

''சென்ட்டிமெண்ட் மட்டுமில்லே தம்பி, சுயநலமும்தான்!... உனக்கு ஞாபகம் இருக்கா? நம்ம அம்மா கலவங்கிரையைப் பறிச்சி சமைப்பாங்களே! அந்த ருசியை இப்ப நம்மால அனுபவிக்க முடியுதா?''

''..........''

''ஆத்தூர் கத்தரிக்காயை வாங்கிச் சமைப்பாங்களே... அதோட டேஸ்ட்டே தனி. இப்ப அந்த ருசி கிடைக்குமா?''

''அது சரி, நாம நிலத்தை விக்க லேன்னா இதெல்லாம் மாறிடுமா?''

''அப்படிச் சொல்லலே. எவ்வளவு தான் முன்னேற்றம் தேடிப் போனாலும் இயற்கையையும் அதன் மூலம் கிடைக் கக்கூடிய இன்பங்களையும் புறக்கணிச் சிட்டா வாழ்க்கை அர்த்தமற்றுப் போகுது. ஓடி ஓடி ஆயிரம் ஆயிரமாச் சம்பாதிச்சாலும் அதை ஒரு நாளாவது உட்கார்ந்து அனுபவிச்சாத்தான் சந்தோஷம். நம்ம நிலம் அப்படியே கரம்பா கிடந்துடாது. மழை பெஞ்சா... மேற்கு மூலையில இருக் கிற துண்டில இயற்கை உரங்களைப் போட் டுக் கிச்சடி சம்பா விதைக்கலாம். தோட் டத்தில கத்தரியும் கீரையும் பயிரிடலாம்.''

''பழைய 'ப்ரீட்' விதைங்க கிடைக் குதா?''

''கிடைக்கும். இப்பவும் பெருந்தனக் காரங்கள்ளாம் அவங்க பண்ணையில சொந்த உபயோகத்துக்குன்னு இப்படி பயிர் வச்சிட்டுத்தான் இருக்காங்க.''

ஆத்தூர் கத்தரி, பேட்டைக் கீரை, கலவங்கீரை, கிச்சடிச் சம்பாச் சோறு, உருக்கு நெய்யின் மணம் எல்லாம் மனசில் வர -

''உங்க விருப்பப்படியே செய்யுங்க, அண்ணே'' என்று கந்தப்பன் அவன் கை களைப் பற்றினான்.



பட்டணத்துவாசிகளைப் பொறுத்த வரை கிராம தேவதைகள் என்பன பஸ் பிரயாணத்தின் போது கிராமப்புறங்களில் தென்படும் பிரும்மாண்டமான சிலைகள்; அல்லது அந்தஸ்து மிக்கோர் உணவருந்தச் செல்லும் ஹோட்டல்களில் காணப்படும் அலங்காரக் காட்சிப் பொருள்கள். ஆனால் இதே அய்யனார், சிலைகள்தாம் கிராம வாசிகளின் வணக்கத்துக்குரிய காவல் தெய்வங்கள். வெட்டவெளியில், மழையில் நனைந்து, வெயிலில் காய்ந்தபடியே இந்த கிராம தேவதைகள் காத்தருள்கிறார்கள். பல கோவில்களில் இன்னின்ன தினங்களில் தான் பொங்கலிட வேண்டும் என்ற கட்டுப்பாடு கூட கிடையாது. சௌகரியப்பட்ட நாளில் பொங்கலிட்டுப் பூஜை செய்யலாம். சில கோவில்களில் சிலைகள் கூட இருப்பதில்லை. அடையாளமாக நடப்பட்ட சிறு கல்லையே வழிபடுகிறார்கள்.

மக்களின் ஆழமான நம்பிக்கையையே அஸ்திவாரமாகவும் அவர்களுடைய பய பக்தியையே கோபுரமாகவும் கொண்டுள்ள கிராம தேவதைக் கோயில்களின் பின்னே நெக்குருகி மெய்சிலிர்க்க வைக்கும் கதைகள் எப்பொழுதும் உண்டு. கழுவில் ஏற்றிக் கொல்லப்பட்ட காத்தவராயன் என்ற வீரன் புதைக்கப்பட்ட இடத்தில், அவன் நினைவு நாளன்று இளநீர் படையலிட்டு வந்தார்கள். நாளாவட்டத்தில் இவன் கதை ஊர் ஊராகப் பரவி தெய்வ நிலைக்கு இவன் உயர்ந்தான். கோயில்கள் எழுந்தன.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெய்வாசல் கிராம மக்கள் சிலர் இடம்பெயர்ந்து, வெள்ளாற்றைக் கடந்து திருச்சி மாவட்டம் சன்னாசிநல்லூருக்குப் பிழைப்பு தேடி வந்தார்கள். தங்கள் ஊர் தெய்வத்தையும் அவர்கள் 'அழைத்துக்' கொண்டு வந்தார்கள். இவ்வாறு இடம் பெயரும் போது சொந்த ஊர்க் கோயிலிலிருந்து ஒரு பிடி மண் அல்லது ஒரு கல்லை எடுத்து வந்து புதிய இடத்தில் வைத்துக் கோயில் அமைக்கும் வழக்கம் உண்டு. எதிர்ப்பதியம், பிடிமண் கோயில் என்று இதைச் சொல்கிறார்கள். பச்சையம்மனுக்கு இவர்கள் எடுப்பித்த கோவில் நாளடைவில் விரிவடைந்து பூமலையப்பர் கோயில் என்று ஆகி, திட்டக்குடி சுற்றுவட்டாரத்தில் மிகுந்த நம்பிக்கைக்குரிய காவல் தேவதையின் கோயிலாகத் திகழ்கிறது.

✱ வாழு முனி, சடாமுனி; நடுவில் செம்மலையப்பர்



செம்படவர் சிலைகள்

இக் கோயிலின் தல வரலாறு என 1910 இல் நடந்த ஒரு நிகழ்ச்சியை எழுதி வைத்திருக்கிறார்கள். அருள்மிகு பூமலையப்பர் சமேத முத்துக் கருப்பையா சாமி, வெள்ளாறும் சின்னாறும் சங்கமிக்கும் கூட்டாற்று மூலையில் வேட்டைக்குச் சென்றார். அந்த நேரத்தில் யாரும் எதிர்ப்படக் கூடாது என அவர் விதித்த ஒழுங்கை மீறி எதிரில் ஏழு செம்படவர்கள் வந்து விட்டார்களாம். இதனால் அந்த ஏழு பேரும் தெய்வக் குற்றத்துக்கு ஆளாகிக் கண் பார்வை இழந்து விட்டனர். மீண்டும் பார்வையைப் பெற மனமுருகி வேண்டி, தங்கள் எழுவர் சிலைகளையும் வடித்து வைத்து பலிகொடுத்தார்களாம். பூமலையப்பர் அருளால் பார்வை திரும்பி விட்டது.

'ஸ்ரீவலைக்காரர்கள்' என்ற பெயரில் ஏழு செம்படவர்களின் சிலைகளும் சுதை மண் சிற்பங்களாகப் பூமலையப்பர் கோயிலில் காணப்படுகின்றன. ஏழு பேருக்கும் பொதுவாக ஒரே மீன் பிடிவலை மாலை! மன்னித்தருளும் பாவனையில் கம்பீரமாய் நிற்கின்றன பெரிய பூமலையப்பர் மற்றும் சிறிய பூமலையப்பர் சிலைகள். இவர்கள் இருவருக்கும் நடுவே தாடி; சடாமுடியுடன் ஒரு குறுமுனிவரின் சிலை. இவரைப் பூமலையப்பரின் ஆதி குரு என்கிறார்கள். பூமலையப்பருக்கு எதிராக யானை வீரன், குதிரை வீரன் சிலைகள். முத்துக் கருப்ப சாமி, கொங்காணிக் கருப்பன், ஆதி பூமலையப்பர், வாழுமுனி, சடாமுனி, செம்மலையப்பர் என இன்ன பிற தெய்வங்களும் அச்சுறுத்தும் அழகோடு காட்சி தருகி

கிராம



தேவதைகள்

களுக்கு அதி தேவதை - பெயரிலேயே பசுமையைக் கொண்டவளல்லவா...! ஆடிப் பட்டம் தேடி விதைத்து விட்டு விவசாயிகள் ஆவணியில் பச்சையம்மனைத்தான் நாடி வந்து பயிர்காக்க வேண்டி, பொங்க விடுகிறார்கள். முத்துக்கருப்பு சிலை எதிரில் முள் செருப்பில் நின்றபடி பூசாரி

றார்கள். எதிர்ப்பக்கத்தில் தனியாகப் பச்சையம்மன் கோயில். அவளுக்குத் துணையாய்ப் பூங்காய் அம்மனும் காத்தாயி அம்மனும்...

விவசாயிகளுக்குப் பூமலையப்பர்பால் அளவுகடந்த பக்தி. பச்சையம்மன் இவர்



☛ கூரைப்பேட்டை அய்யனார் கோயிலில் தோட்டி சிலை

குறிசொல்வதுமுண்டு.

தீப்பாய்ந்த நாச்சியார்!

தந்தை ஜமதக்னி முனிவரின் ஆணையின்படி மகன் பரசுராமரால் வெட்டிச் சாய்க்கப்பட்டார் அவர் தாயார் ரேணுகா தேவி. இந்தத் துயர நிகழ்ச்சி நெஞ்சை உருக்க, ரேணுகா தேவியின்பால் மக்கள் கொண்ட கனிவு மெள்ள பக்தியாக, அவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்தியுள்ளது. ரேணுகா தேவிக்குப் பூஜை செய்பவர்கள் மஞ்சள் துணியால் வாயை மூடிக் கொண்டு செய்ய வேண்டும் என்று ஒரு கட்டுப்பாடு. இதற்கான காரணமோ விளக்கமோ பெற இயலவில்லை.

ரேணுகா தேவியைப் போல், மகாபாரதத்தில் தீயர் அவையில் துகிலுரிக்கப்பட்ட துரோபதையும் அம்மனாகப் பல இடங்களில் வழிபடப்படுகிறாள். விருத்தாசலம் சுற்று வட்டாரத்தில், தீப்பாய்ந்த நாச்சியார் கோயில்கள் என்று ஆறேழு இடங்களிலாவது உள்ளன. தீப்பாஞ்சாயி, தீப்பாஞ்சாள் என்றெல்லாம் குறிப்பிடப்படும் இந்த தெய்வங்கள், தீயில் விழுந்து உயிர்துறந்த பெண்களின் நினைவுக் குறியீடுகள்தான்.

கிராம தேவதைகளைப் பற்றி டாக்டர் பட்டத்துக்காக ஆராய்ச்சி செய்துவரும் பேராசிரியர் த. வாசுதேவன், திட்டக்குடி வட்டாரத்தில் மட்டும் ஐந்து ஊர்களில் விளங்கும் வெவ்வேறு தீப்பாய்ந்த ஆயியரைப் பட்டியலிடுகிறார். தீப்பாய்ந்த ஆயியரின் நினைவாகக் குழந்தைகளுக்கு 'நல்லம்மாள்' என்று பொதுப் பெயர் இடும் வழக்கமும் உள்ளது.

பாதுகையைச் சுற்றி நவகிரகங்கள்

சிதம்பரம் வட்டாரத்தில் உள்ள சேத்தியார் தோப்பைச் சேர்ந்த தாமோதர சேத்தியாரின் குடும்பத்தில் பல தலைமுறைகளுக்கு முன்னர் வாழ்ந்த பெண்மணி தீப்பாய்ந்ததன் நினைவாக ஒரு புங்க மரத்தின் அடியில் சிறிய கல் நடப்பட்டது. அதனை அக் குடும்பத்தாரே வழிபட்டு வந்தார்கள். அக் குடும்பத்துக்கு எங்கிருந்தோ வந்து சேர்ந்த ஒரு சிறு பெண் குடும்பத்தில் ஒருத்தியாய் வளர்ந்து வந்தாள். அவ் வீட்டின் பெரியவர் ஒருவர் இறந்த போது தானும் உயிர் விட முனைந்த அப் பெண்ணைத் தடுத்திருக்கிறார்கள். அவளோ, ''நீங்கள் நினைப்பது போல் நான் சாதாரண பெண் அல்ல. மஞ்சள், பூ, குங்குமம், எலுமிச்சம் பழம் ஆகியவற்றை மடியில் கட்டிக் கொண்டு தீயில் இறங்குகிறேன். அவை கருகியிருந்தால் நான் ஏமாற்றுக்காரி என்று எண்ணி அலட்சியப்படுத்தலாம்'' எனக் கூறித் தீயில் இறங்கினாளாம். மஞ்சள், பழம், குங்குமம் அப்படியே இருக்க, அப் பெண் மட்டும் கரைந்து போய் விட்டதாகச் சொல்கிறார்கள்.

தாமோதர சேத்தியார் குடும்பத்தைச் சேர்ந்த பூ. தா. ஜெயராமன் தமது மகனின் படிப்பு சம்பந்தமாய் இடையூறுகள் ஏற்பட்டுக் கலங்கி நின்ற போது, அவர் கனவில் தோன்றி தனக்குச் சின்னஞ்சிறு கோயில் எழுப்புமாறு கேட்டுக் கொண்டாளாம் இந்தத் தீப்பாய்ந்த ஆயி. வழிவழியாக ஸ்ரீ ராம பக்தியில் ஈடுபாடுடைய குடும்பம் என்பதால், அக்னிப் பிரவேசம் செய்த சீதா தேவியையே கோயில் கட்டிக் குடியேற்றி விட்டார்கள். பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இக் கோயில், முன்னர் வழிபட்டு வந்த புங்க மரத்தடி கல்லையொட்டியே அமைந்திருக்கிறது.

கையில் தாமரை மலருடன், நின்ற நிலையில் அருள்பாலிக்கும் சீதா லட்சுமிக்கு விமானம், சுற்றுச்சுவருடன் கூடிய ஆலயம் இருக்கிறது. உற்சவ தேவதையாக ராம - லக்ஷ்மணர்களுடன் காட்சி தருகிறாள் சீதா தேவி. நித்திய பூஜைகள் உண்டு. ஸ்ரீ ராமரின் பாதுகையைச் சுற்றிலும் நவக்கிரகங்கள் நின்று வழிபடும் புதுமையான சிலையழகு காணப்படுகிறது.

சிதம்பரம் வட்டாரத்தில் மிகவும் சக்திவாய்ந்ததாக, நம்பிக்கைக்குரியதாகக் கருதப்படுகிறது இந்தத் தீப்பாய்ந்த நாச்சியார் கோயில்.

அருள்பாலிக்கும் மணியோசை!

விருத்தாசலம் - கடலூர் சாலையில் சுமை வண்டிக்காரர்களும், கால்நடையாகப் போவோர் வருவோரும் நின்று, கற்பூரம் ஏற்றி வணங்கி விட்டுப் போகிற சுழட்டி



☛ ஏ. குமாரமங்கலம் அய்யனார்

அய்யனார் கோயில் இருக்கிறது.

''ஆடி மாசம் பூசை போடுவோம்... அன்னைக்குச் சாயங்காலத்துக்குள்ளாற மேகமெல்லாம் சுழட்டிக்கிட்டு வந்து நாலு தூறலாச்சும் போடும்'' என்று இக் கோயில் பற்றி வெகு உற்சாகமாகக் கூறுகிறார் ஓர் உள்ளூர் அன்பர். மேகங்களைச் சுழட்டி மழை பொழியச் செய்வதால் சுழட்டி அய்ய னார் என்ற பெயர் வந்ததோ...?

சுழட்டி அய்யனாரைப் போலவே, வழிப்போக்கர்களிடையே மிகவும் பிரபல மாகி விட்ட இன்னொரு கோயில் ஏ. குமார மங்கலத்து அய்யனார் கோயில். உளுந்தூர் பேட்டை- சேலம் சாலையில் ஏழாவது கிலோ மீட்டரில் மிகவும் விரிவான சுற்றுச் சுவர் பரப்புக்கு இடையே உள்ளது இக் கோயில். இருபத்து நான்கு மணி நேரமும் இவ்வழியே செல்லும் சாரிசாரியான பஸ், லாரிகள் இங்கே நின்று சூடமேற்றி விட்டுத்தான் செல்லும். இறங்க நேரமில் லாத அவசரக்காரர்களுக்குப் பூசாரி மணி யடித்துக் கடவுளின் அருள் கிடைக்கப் பண்ணுகிறார்.

இக் கோயிலில் நோய் தீர வேண்டிக் கொண்டவர்கள் நேர்த்திக் கடனாகச் செய்து வைத்த ஏராளமான பொம்மைகளைக் காண்கிறோம்.

போலீஸ்காரருக்கும் சிலை!

பல கிராம தேவதைக் கோயில்களில் அய்யனார், குதிரை வீரன் சிலைகளுடன், தோட்டி, முனி, பாம்பாட்டி, காவலாள் என அன்றாட வாழ்க்கையோடு இயைந் துள்ள நபர்களுக்கும், நாய், மாடு போன்ற உதவிகரமான விலங்கினங்களுக்கும் சிலை கள் எடுத்து வழிபடுகிறார்கள். துப்பாக்கி, லத்தியுடன் நிற்கும் போலீஸ்காரர்களின் சிலைகள் கூட தென்னார்க்காடு மாவட்டத் தில் நிறைய உண்டு. இந்த வழிபாட்டு முறைகள் எளிய மக்களின் மேன்மையான உள்ளப் பாங்குக்குச் சான்றுகளாக விளங்கு கின்றன.

இக் கோயில்களை ஊர் எல்லையில் அமைத்ததற்குக் காரணமும் சொல்லப்படு கிறது : உரல், உலக்கையால் இடிபடும் ஓசை கேட்காத தொலைவில் இவை இருக்க வேண்டும் என்று ஒரு சாத்திரம்.

மாலை நேரங்களில் வீட்டுப் பெண்கள் உரலில் இடிக்கவோ, அரைக்கவோ கூடாது என்று சொல்வார்கள். போக்குவரத்து மற்றும் இதர நவீன ஓசைகளற்ற அமைதி யான கிராமப்புறங்களில் ஊரடங்கிய பின் இடித்தால் இந்தக் கோயில்கள் வரை அவ்வோசை கேட்கும் என்பதே இதற்குக் காரணமாயிருக்க வேண்டும்.

இதே பயபக்தியுடனான நம்பிக்கை காரணமாகத்தான் தங்கள் குலதெய்வமான கிராம தேவதைகளுக்குத் திருமண அழைப் புக்களில் முதலிடம் தருகிறார்கள் பலர். சாதி வேறுபாடு இன்றிச் சில ஊர்க்காரர்கள் 'தடிகொண்ட அய்யனார் துணை' என்றோ, 'வீரபத்திரசாமி துணை' என்றோ அழைப் பிதழின் முகப்பில் அச்சிடுகிறார்கள். திரு மணம் முடிந்ததும் மாலையும் கழுத்து மாகக் கோயிலுக்கு ஓடோடி வருகிறார்கள். அபுதாபிக்கோ, அமெரிக்காவுக்கோ குடி பெயர்ந்தாலும் பிறக்கும் குழந்தைக்கு முதல் முறை முடியிறக்கக் குலதெய்வமான கிராம தேவதையின் கோயிலுக்கு வருகி றார்கள்.

நகருக்குள் வந்த கிராம தேவதைகள்

கிராமத்திலிருந்து பட்டணத்துக்குக் குடிபெயர்ந்தாலும் தங்கள் வாழ்வின் ஓர் அங்கமாகி விட்ட தேவதைகளின் நினை வைச் சுமந்து சென்று தாங்கள் குடியேறும் பகுதியில் கோயில் அமைக்கிறார்கள். சென்னை மாநகரில், தமிழ்நாட்டின் எல்லா கிராம தேவதைகளுக்கும் இதைப் போன்ற எதிர்ப்பதியக் கோயில்கள் ஏற்பட்டு விட்டன.

வசதியும் மனப்போக்கும் அடையும் மாற்றத்தைப் பொறுத்து கிராம தேவதை கோயில்களுக்குக் கோபுரம், சுற்றுச் சுவர் என்று 'வசதிகள்' ஏற்பட்டு விடுகின்றன. இதனை 'மேல்நிலையாக்கம்' என்று குறிப் பிடுகிறார்கள்.

மிகப் பழமையான விருத்தாசலம் விருத்தீசுவரர் ஆலயத்தின் சுற்றுப் பிராகா ரத்தில், உருட்டச் சிவக்க விழித்துக் கொண்டு, கையில் ஏராளமான ஆயுதங்க ளுடன் வீரபத்திர சாமியின் சுதைச் சிற்பம் இருக்கிறது. வீரபத்திரருக்கு ஒரு மண்டப மும் கட்டுவித்திருக்கிறார்கள். கிராம தேவ தையை நகரத்துக்குள் கொண்டு வந்திருக் கிற அழகுக்கு இது ஒரு சான்று.

கட்டுரை, புகைப்படங்கள்:
சுப்ரபாலன்
வண்ணப்படம் : தம்பையா

கனவு கண்ட காவலன்

விடை : ராம்சிங்தான் கனவு கண்டவர். அவர்தான் இறந்து விட்டாரே. அவர் கண்ட கனவு நமக்கு எப்படித் தெரியவரும்?

ஆதாரம் : 'புதிர்கள்' என்ற நூல்

எமது புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

காஞ்சியின் அழைப்பு...

புண்ணிய நகரம்... பிருதிவித்தலம்... சர்வக்ஞபீடம்...
பல்லவ, சோழ, விஜயநகர சிற்பக் கருவூலங்கள்...!
காஞ்சிபுரம் யாத்திரீகர்கள், உல்லாசப் பயணிகள் கலை அன்பர்கள் அனைவரையும் ஒருங்கே கவருவதில் வியப்பில்லை...!

உங்களை அன்புடன் உபசரிக்கும் :

ஸ்ரீ ராமா லாட்ஜ்

(பஸ் நிலையம் அருகில்)
காஞ்சிபுரம் - 631 502. போன் : 3195, 3995



1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட கயிலாசநாதர் ஆலயம்



1. A.C. மற்றும் சாதாரண அறைகள்
2. கலர் டெலிவிஷன்/வீடியோ/டெலிபோன்
3. A.C. ஸைவ உணவகம்

அழகு மிளிரும் அடர்த்தியான கூந்தலுக்கு

நம்பகமான ஒரே கூந்தல் தைலம்

குணு
கூந்தல் தைலம்



தலைமயிர் உதிர்தல், செம்பட்டை நிறம், பருவத்திற்கு முன் ஏற்படும் பித்த நரை மாறும். தினசரி கூந்தலுக்குத் தடவி வந்தால் தலைமயிர் நீண்டு கறுத்து அடர்த்தியாய் வளரும். தலை அரிப்பு, பொடுகு, மண்டையில் சொரிந்தால் செதில் உதிர்தல் குணமாகும். பெண்கள், ஆண்கள் அனைவரும் விரும்பி உபயோகிக்கின்றனர்.

1 பாட்டில் (120 ml) விலை ரூ. 17-50
VPP உண்டு. தபால் செலவு தனி

நவசக்தி வைத்தியசாலை,
தபால் பெட்டி எண் 7, சேலம் 636 001

எல்லா மருந்து மளிகை மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கிறது.



சொல்லாமல்

வாசலில் வண்டி வந்து நின்ற சப்தம் கேட்டு விரைந்து போய்க் கதவைத் திறந்தாள் கோமதி.

எதிர்பாராத மகிழ்ச்சி.

மாப்பிள்ளை உமேஷ் வீணாவுடன் வந்திருந்தார். வீணாவின் அப்பா மூர்த்தி இன்னும் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. மகள் வந்திருக்கும் செய்தியை வாயிற்படியிலிருந்தே உரத்த குரலில் அஞ்சல் செய்தாள் கோமதி.

மதுரையைச் சுற்றி உமேஷுக்குப் பத்து நாள் அலுவலகச் சுற்றுப் பிரயாணத் திட்டம் இருந்தது. வீணாவும் தன் வீட்டாருடன் இருக்கட்டும் என்ற எண்ணத்தில் அவளையும் கூட்டி வந்திருந்தான்.

மாப்பிள்ளை குளித்துச் சாப்பிட்டு விட்டு வெளியே போய்விட்டார். தான் இரவு திரும்புவது நிச்சயமில்லை என்பதால் தனக்காக யாரும் காத்திருக்க வேண்டாம் எனச் சொல்லி விட்டுப் போயிருந்தார்.

பகல் சாப்பாட்டிற்குப் பிறகு கோமதி பெண்ணிடம் அவள் புக்ககத்தைப் பற்றி விசாரித்தாள். முக்கியமாக அவள் மாமியாரைப் பற்றி.

''அதைப் பற்றித்தான் நானே உன்னிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன்!'' எனத் தொடங்கினாள் வீணா.

''கல்யாணமாகி அந்த வீட்டிற்கு நான் போய் ஒரு வருஷம் ஆகப் போகிறது. நானும் பொறுத்துப் பொறுத்துப் போய் விட்டேன். இனிமேல் என்னால் முடியாது.''

''என்னடி சொல்கிறாய்! உன்னை ரொம்பவும் கோபித்துக் கொள்கிறார்களா?''

''அதை எப்படிச் சொல்வது என எனக்குத் தெரியவில்லை. நம் வீட்டைப் போல இல்லை. அங்கே எல்லாம் நேர் எதிர். தலைகீழ், என் மாமனார் மாமியாருக்குச் 'சலாம்' போடாத குறை ஒன்றுதான். எதற்கெடுத்தாலும் 'எஸ் மேடம்' தான். காலையில் 'ஷேவ்' செய்து கொள்ளக்கூட மாமியாரிடம் கேட்டுக் கொண்டு தான் செய்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளேன்.''

கோமதி சிரித்தாள்.

''சிரிக்காதே அம்மா.... எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. உன் மாப்பிள்ளை இருக்கிறாரே - நான் அவர் அம்மாவைப் பற்றி ஏதாவது சொல்ல ஆரம்பித்தால் காது செவிடாகப் போகும், முகத்தில் கொஞ்சம் கூட மாறுதல் இருக்காது.

''உன் மாமியார் அப்படி உன்னை என்னம்மா செய்கிறாள்? பார்ப்பதற்கும் பழகுவதற்கும் நன்றாகத்தானே தெரிகிறார்?''

''அதெல்லாம் நாலு பேருக்கு எதிரே... தனியா இருக்கும் போது...''

''ஏதாவது கண்டபடி பேசுகிறாளா?''

''பேசினால் சும்மா இருப்பேனா! பதிலுக்குப் பதில் கொடுத்து விடுவேன்!''

''அப்புறம்!''

''நான் என்ன செய்தாலும் திருப்தி இல்லை. ஒரு காப்பி டம்ளரை அலம்பி வைத்தாலும் சரியாக இருக்கிறதா என எடுத்துப் பார்க்கிறார். இடுப்பு ஒடிய வீடு துடைத்தால் எங்கோ ஒரு மூலையில் கொஞ்சம் விட்டுப் போய்விட்டது என்று.....''

''சொல்லிக் காட்டுகிறாளா?''

''அப்படிச் செய்தால் தேவலையே. நானே போய் ஓர் இழுப்பு இழுத்துவிட்டு வந்து விடுவேனே. தான் போய் உட்கார்ந்து அதைத் துடைத்துவிட்டு என்னை ஒரு மாதிரியாகப் பார்க்கிறார். அதைத்தான் தாங்க முடியவில்லை.''

''இதெல்லாம் சின்னச் சின்ன சமாசாரம் வீணா. பத்து விரலும் ஒரு மாதிரியா இருக்கும்?''

''என்ன சின்ன சமாசாரம்! நீ சுலபமாகச் சொல்லி விட்டாய்! ஒவ்

சால்வை

வொரு வேலையும் செய்து முடித்த பிறகு மாமியார் குற்றம் கண்டுபிடிக்காமல் இருக்க வேண்டுமே எனப் பயந்து பயந்து சாக வேண்டியிருக்கு. சின்ன வயசிலே - பள்ளிக் கூடத்திலே வாத்தியாரம்மாவிடம் ஸ்லேட்டைக் கொடுத்து விட்டுக் கையைக் கட்டிக் கொண்டு நிக்கறது மாதிரி. சே!''

''பாவம்டி... அவளுக்கும் வயதாகி விட்டது. இன்னும் எத்தனை நாள்...''

''ஏம்மா! நான் மட்டும் என்ன அப்படியே குமரியாக இருந்து விடப் போகிறேனா? நான் என்ன அடிமையா? என்னை விலைக்கு வாங்கி விட்டார்களா?''

''கோபப்படாதே அம்மா! இதெல்லாம் வீட்டுக்கு வீடு சகஜம்! உன் பாட்டிகிட்ட நான் கேட்காத பேச்சா! வாங்காத திட்டா?''

''அதெல்லாம் அந்தக் காலம் அம்மா... நான் இப்போ ஒரு முடிவோடு தான் புறப்பட்டு வந்திருக்கிறேன்.''

''என்னடி என்னென்னவோ சொல்லிப் பயமுறுத்துகிறாய்?''

''உன் மாப்பிள்ளை அங்கே தனிக்குடித்தனம் செய்ய வீடு பார்க்க வேண்டும். இல்லா விட்டால் வேறே ஊருக்கு மாற்றல் கேட்க வேண்டும்? அது வரை நான் திரும்பிப் போகப் போவதில்லை.''

''அவரிடம் சொல்லி விட்டாயா?''

''உம்... பூம் பூம் மாடு போல் தலையாட்டி இருக்கிறார். என்ன செய்கிறார் பார்க்கலாம்!''

''அவசரப்படாதே வீணா! அவ்வளவு தான் நான் சொல்வேன்!'' என்றாள் கோமதி பெருமூச்சு விட்டபடி.

மகளைப் பற்றிக் கவலைப்பட்டதாலோ என்னவோ கோமதிக்கு இரவு கடும் தலைவலி. காலையில் நல்ல ஜுரம். எழுந்து நிற்கக் கூட முடியவில்லை.

'மாப்பிள்ளை வேறு வந்திருக்கிறார். நான் படுத்து விட்டால் எப்படி?' என எழுந்திருக்க முயன்றாள் கோமதி. உடல் தள்ளாடியது.

வீணா தாயைக் கட்டாயப்படுத்திப் படுக்க வைத்தாள். ''நீ அலட்டிக் கொள்ளாமல் இரு. நான் எல்லாம் பார்த்துக் கொள்கிறேன்'' என்றாள்.

காலை முதல் மாலை வரை அவள் பம்பரமாகச் சுழன்றாள். வீட்டைத் துடைத்துப் பெருக்கி, ஒரு பொட்டு தூசி கூட இல்லாமல் சுத்தமாக்கினாள். அத்தனை துணிகளையும் துப்புரவாகத் தோய்த்துப் பிழிந்து, சுருக்கம் இல்லாமல் உதறி உலர்த்தி, பின்னர் பெட்டி போட்டு மடித்து வைத்தாள். ஜன்னல், கதவு நிலைகளுக்குப் புதுத் திரைச் சீலை மாற்றினாள். கழற்றியதை ஊற வைத்துத் தோய்த்து உலர்த்தினாள். மாட்டப்பட்டிருந்த படங்கள் - ஸ்வாமி அலமாரி, ஷோகேஸ் பொம்மைகள் எல்லாவற்றையும் புதிது போல் துடைத்து வைத்தாள். வெள்ளிக் குத்து விளக்கை மெருகேற்றியது போல் தேய்த்து விளக்கேற்றினாள்.

அப்பாவுக்கும் கணவனுக்கும் பிடித்த சிற்றுண்டி தனித்தனியாகத் தயார் செய்


''நடடா ஸ்டேஷனுக்கு, திருட்டு ராஸ்கல்.''

''சினிமாவுல, வர்ற மாதிரி, 'யூ ஆர் அண்டர் அரெஸ்ட்'ன்னு' காது குளிர சொல்லுங்களேன் எசமான்...''

- ஆர். வசந்தகுமார்



அன்னம்



தாள். நடுநடுவே காப்பிக் கொட்டை அறைக்க, கறி காய் வாங்க, லாண்டிரிக்குத் துணி போட போய் வந் தாள்.

இதைத் தவிர காலையில் எழுந்து காப்பி போடுவதி லிருந்து இரவு சாப்பாடு முடிந்து சமையல் அறை யைக் கழுவி விடுவது வரை தானே செய்தாள். இத்தனை செய்தும் நெற்றி குங்குமம் வியர்வையில் கலைய வில்லை. முகத்தில் சோர்வு தெரியவில்லை.

மூர்த்தி கூடக் கோமதி யிடம் வேடிக்கை யாகச் சொன்னார். ''கோமதி... இன்னும் கொஞ்ச நாள் படுக்கையி லேயே இரு. உன் சமையல் அலுத்துப் போச்சு.. இந்த மாதிரி வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டு எத்தனை நாள் ஆச்சு!''

ஐந்தாம் நாள். காலை. கோமதி எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

மறுநாள் மாப்பிள்ளை ஊர் திரும்ப வேண்டும். ''ஸ்வீட்'' செய்து கொடுக்க வேண்டாமா? சமையற்கார அம்மாளுக்குச் சொல்லி அனுப்பினாள்.

''அதெல்லாம் வேண் டாம். நான் செய்து தரு கிறேன்'' என்றாள் வீணா.

அரைமணி நேரத்தில் வாயில் கரையும்படி மைசூர்பாகு!

அன்றிரவு.

கோமதி மெதுவாக மக ளிடம் கேட்டாள்.

''அப்போ... நாளைக்கு மாப்பிள்ளை மட்டும்தான் ஊருக்குப் போகிறாரா?''

''ஆமாம். நான்தான் அன் றைக்கே தீர்மானமாகச் சொல்லி விட்டேனே.''

''சரி... வீணா... நான் ஒன்று சொல்லட்டுமா?''

''ஒன்று என்ன? நூறு வேண்டுமானாலும் சொல்... மாமியாரு டன் ஒத்துப் போ என்பது மட்டும் வேண்டாம்!''

''சரி அம்மா! உன் குடும்ப சமாசாரம்... நான் எதற்குத் தலையிடப் போகி றேன்? நீ கல்யாணம் ஆகிப் போவதற்கு முன் ஒருநாள் காப்பி போட்டிருக்கிறாயா? ஒருநாள் சமைத்திருப் பாயா? வீட்டைப் பெருக் கித் துடைத்திருப்பாயா? காலேஜ், படிப்பு, சிநேகிதி பட்டாளம் - இதுதானே?''

''ஆமாம்.. அதற் கென்ன?''

''ஆனால் இந்த ஐந்து நாட்களாக நான் இல்லா மல் தனியாக எல்லோரும் மெச்சற மாதிரி வீட்டைப் பார்த்துண்டியே... அது எப் படி?''

வீணா மௌனம் சாதித் தாள்.

''காரணம் உன் மாமியார் தாண்டி, அசடே! உனக்கு எல்லாம் நல்லபடியாகச் சொல்லிக் கொடுத்திருக் கிறாள். நாளைக்கு யார் உதவியும் இல்லாமல் ஒரு குடும்பத்தை நிர்வாகம் பண்ணக் கத்துக் கொடுத்தி ருக்கா. ஏன் நீ அவளை அந்நியமா யாரோன்னு நெனைக்கிறே. அது உன் வீடு என்கிற மனோ பாவத்தை நீ வளர்த்துக் கலே...''

''அம்மா...''

''வீணா! பள்ளிக்கூடப் படிப்பை வைத்துக் கொண்டு மட்டும் காலம் தள்ள முடியாது. அனுபவ அறிவு வேண்டும். அதைக் கற்றுக்கப் பொறுமையும் வேண்டும். உன் மாமியார் உன்னைத் தரக் குறைவாகப் பேசியோ, ஏசியோ வேறு விதமாக அவமானப்படுத் தியோ இருந்தால், உனக் காக வாதாட நான்தான் முத லில் நிற்பேன். ஆனால் இப் போது உன் மாமியாரை நினைத்து நான் பெருமைப் படுகிறேன்.''

வீணா பதில் சொல்ல வில்லை. செயலில் காட்டி னாள். மறுநாள் உமேஷு டன் ஊருக்குப் புறப்பட்டுப் போனாள்.

அவளை ரயிலேற்றி விட்டு வந்த பிறகு மூர்த்தி கோமதியிடம் மெதுவாகக் கேட்டார்.

''ஒரு சந்தேகம் கோமதி... நிஜமாகவே உனக்கு உடம்பு முடிய லியா?''

கோமதி சிரித்தாள். ''நிஜத்தைச் சொல்லப் போனா முதல் நாள் மட்டும் தான் முடியலே... அப்பு றம்...''


''எனக்குத் தெரியும்... அதனால்தான் கேட்டேன்!'' என்றார் மூர்த்தி.

''கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செஞ்சுக் கிட்டவரோட ஆவி ஒன்னு உங்க வீட்டில் சுத்திக்கிட்டிருந் துச்சே!''

''ஊம்... அதெல்லாம் முன்னாடி; ஈட்டிக்காரரோட படத்தை ஃபிரேம் போட்டு மாட்டினதும் நடமாட்டம் நின்னுடுச்சு!''

- வேதபுரி. எஸ். ரமேஷ்





கென்னடி ஏன் கொல்லப்பட்டார்?

"ஜே. எஃப். கே." என்ற திரைப் படம் அமெரிக்காவில் பெரிய சர்ச்சையை உண்டாக்கியிருக்கிறது.

கென்னடி எப்படி, யாரால் கொல்லப் பட்டார் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், 'ஏன் கொல்லப் பட்டார்?' என் பதற்கு இதுவரை சரியான விளக்கம் கிடைக்கவில்லை. 26 ப கு தி க ளை க் கொண்ட வாரன் கமிஷன் அறிக்கையில் கூட இதற்குப் பதில் இல்லை.

'ஆஸ்வால்டு தன்னிச்சையாகக் கென் னடியைக் கொன்று விட்டான்; இதில் சதித் திட்டத்துக்கு இடமில்லை' என்ற கருத்தை அமெரிக்கர்கள் பலர் ஏற்கவில்லை. ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தியதில் 'சதித் திட்டம்' என்று நி னை ப் ப வ ர் 59 சதவீதம் என்று தெரியவந்தது!

சதித் திட்டம் என்ற கருத்திலேயே கடந்த பல ஆண்டுகளில் பலவிதமான விளக்கங்களோடு பல நூல்கள் எழுதப்பட் டுள்ளன. தொலைக்காட்சிப் படங்களும் வந்திருக்கின்றன. இப்போது "ஜே. எஃப். கே." என்ற இந்தத் திரைப்படமும் வெளி யாகியிருக்கிறது.

படம் ஒரு சதித் திட்டத்தை மையமா கக் கொண்டு, 'ஏன் கொல்லப்பட்டார்? என்பதற்கு விளக்கம் அளிக்க முயற்சி செய் கிறது. இதுதான் இன்று ஒரு பெரிய சர்ச் சையைக் கிளப்பியுள்ளது.

படத்தை இயக்கியவர், இதுவரை மூன்று ஆஸ்கார் பரிசுகளைப் பெற்றுள்ள ஆலிவர் ஸ்டோன். பிரபல ஹாலிவுட் ஹீரோ கெவின் காஸ்ட்னர் ஒரு முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்கிறார். படம் மூன்று மணி நேரம் உஷா வேகத்தில் ஓடுகிறது. உண்மையையும் கற்பனையையும் கலந்து சொல்கிறது.

இதனால்தான் வந்தது வம்பு. பல பத்திரிகைகள் இவ்வாறு சமீபத்திய சரிதத் தில் கற்பனை கலந்து எழுதுவதால் இதுவே உண்மை என்று மக்கள் கருத - குறிப்பாக இளையதலைமுறை - வாய்ப்பு ஏற்படும் என எண்ணுகின்றன. திரைப்படம் சரித்தி ரத்தைத் திரித்து விட்டது எனச் சாடு கின்றன. ஆலிவர் ஸ்டோன் பொறுப்பில் லாமல் நடந்து கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றன.

ஆலிவர் ஸ்டோன் என்ன சொல் கிறார்? 'இப்படித்தான் நடந்தது என்று நான் உறுதி கூறவில்லை. ஆனால் சதித் திட்டம் நடக்க வாய்ப்பிருந்திருக் கிறது; முழு உண்மைகளையும் அறிய மக்களுக்கு உரிமை இருக்கிறது, எனவே அரசுக்கு இது விஷயத்தில் இன்னும் தீவிர கவனம் செலுத்த வேண்டிய கடமை இருக் கிறது. இதை வலியுறுத்துவதே என் நோக் கம்' என்கிறார். 'அரசைத் தட்டிக் கேட்க நான் கையாளும் முறை இது.'

ஆலிவர் ஸ்டோன் சதித் திட்டத்தில் யாரையெல்லாம் சம்பந்தப்படுத்துகிறார்? சில அமெரிக்கத் தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, போலீஸ் அதிகாரிகள், ஸி. ஐ. ஏ., எஃப். பி. ஐ., முப்படை அதிகாரிகள் ஆகியோருக்கெல்லாம் கூடத் தொடர்பு உண்டு என்கிறார் தமது திரைக் கதையில்! கென்னடியின் முற்போக்கு எண்ணங்களை வெறுத்ததால், சதி செய்து அவர் ஆட்சியை வீழ்த்தத் திட்டமிட்டு, அது படுகொலை யில் முடிந்ததாகச் சொல்கிறார்.

மக்களைச் சிந்திக்க வைக்க எடுக் கப்பட்ட படம் நிறையவே சிந்தனையைத் தூண்ட, எதிர்ப்பும் கணிசமாகவே இருக் கிறது. ஆனால் இதெல்லாவற்றையும் விட அடிப்படையான, பாராட்டுக்குரிய அம் சம், அமெரிக்க மக்களுக்கும் கலைஞர் களுக்கும் உள்ள கருத்துச் சுதந்திரம்; அத னைத் தைரியமாக வெளியிடும் சுதந்திரம்.

– வாஷிங்டன் ஸ்ரீதரன்

சத்ய சாயி சிறப்பு மலர் நடுப்பக்கத்தில் தனிப் புத்தகமாக இருக்கிறது... - ஆர்

புகழ்பெற்ற வில்லுப்பாட்டுக் கலைஞர் கவிஞர் சுப்பு ஆறுமுகத்தை, இளம் பரதநாட்டியக் கலைஞர் பவித்ரா பிரசாத் சந்திக்கிறார்:

பவித்ரா : நீங்கள் ஆரம்பத்திலிருந்தே வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள்தான் நடத்திக் கொண்டு வருகிறீர்களா?

சுப்பு : நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த என்னை, வில்லுப்பாட்டுக்காகத் தான் கலைவாணர் என். எஸ். கே. சென்னைக்கு அழைத்து வந்தார். ஆயினும் கூடவே சினிமா கதை வசனமும் எழுதிக்

வில்லுப் பாட்டு: எல்லோரையும் கவரும் கிராமக் கலை!

கொடுத்துக் கொண்டிருந்தேன். 'உலகம் இவ்வளவுதான்', 'அன்னை அபிராமி' எல்லாவற்றுக்கும் நகைச்சுவைப் பகுதியை நான் அமைத்துக் கொடுத்திருக்கிறேன். 64-ல் காஞ்சிபுரத்தில் பெரியவர் நடத்திய ஆகம சில்ப சதஸ்ஸில், திருநாவுக்கரசர் கதையை வில்லுப்பாட்டில் சொன்னேன். பெரியவர் 'இதையே நீ ஏன் தொடர்ந்து செய்து வரக் கூடாது?' என்று கேட்டார்கள். பிறகுதான் சினிமாத் துறையை முழுமையாக விட்டு விட்டு, இதிலேயே முழுமூச்சாக இறங்கி விட்டேன்!

பவித்ரா : சினிமா ஒரு சக்திவாய்ந்த சாதனம் அல்லவா? அதிலுள்ள புகழும், பணமும், பப்ளிசிடியும் அலாதி அல்லவா?

சுப்பு : உண்மைதான். ஆனால் இதில் கிடைக்கிற மரியாதை, மனத்திருப்தி அதில் கிடைக்கவில்லையே!

பவித்ரா : எதை வைத்து அப்படிச் சொல்லுகிறீர்கள்?

சுப்பு : லட்சம் பேர் சினிமா பார்க்கிறார்கள். அதில் சொல்லப்படும் நல்ல விஷயங்களைக் கேட்டு நூறு பேராவது திருந்துகிறார்களா? இல்லையே? ஆனால் வில்லுப்பாட்டில் ஆயிரம் பேர் ஒரு சமயத்தில் கதை கேட்டால் கூட, இரண்டு பேராவது மனம் திருந்தியிருக்கிறார்கள். அதில்தான் திருப்தி.

பவித்ரா : அப்படி ஏதாவது ஒரு நிகழ்ச்சி சொல்லுங்களேன்?

சுப்பு : திருத்தணி பக்கத்தில் வளர்புறம் என்றொரு இடத்தில் தாய் பக்தி பற்றி நிகழ்ச்சி செய்து கொண்டிருந்தேன். 22-23 வயதுள்ள ஓர் இளைஞன், நான் கதை சொல்லச் சொல்ல, குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டே இருந்தான். பட்டினத்தார், ஆதி சங்கரர் போன்ற துறவிகளுக்குக் கூட விட்டுப் போகாத பந்தம் தாய்ப்பாசம் என்றேன். கதை முடிகிற போது விடிகாலை மூணு மணி. நான் வண்டியில் ஏறிப் புறப்பட்ட போது, அந்த இருட்டில் ஓடி வந்து ஒரு கடிதம் தந்தான். 'இதை ஊர் எல்லை தாண்டின பிறகுதான் பிரித்துப் பார்க்கணும்' என்றான். அவ்வாறே பார்த்த போது, 'ஐயா தயவு செய்து தாயைப் பற்றி இன்று சொன்னதை எல்லாம் தமிழ்நாடெங்கும் சொல்லுங்கள்' என்று அதில் எழுதியிருந்தது! அந்த இளைஞன் ஓர் ஆசிரியர் என்றும், தாயை வெறுத்து ஒதுக்கியவன் என்றும் பிறகு தெரிந்து கொண்டேன்.... சினிமாவில் நல்லதை எடுத்துச் சொல்வதானால் கூட எத்தனை டயலாக், எத்தனை லட்சம் செலவு... மலையைக் குடைந்து எலியைப் பிடிப்பது மாதிரி அல்லவா அது? வில்லுப்பாட்டில் குறைந்த செலவுதானே? இத்தனை குறைச்சலான செலவில், நிறையப் பேருக்குச் சொல்லித் திருத்த முடிகிறதே!

பவித்ரா : சின்ன வயதிலேயே வில்லுப் பாட்டு கற்றுக் கொண்டீர்களா?

சுப்பு : எங்கள் ஊர் திருநெல்வேலி. எப்படி கர்நாடக இசை தஞ்சாவூரில் காதில் விழுந்து கொண்டே இருக்குமோ, அப்படி திருநெல்வேலியில் வில்லுப்பாட்டுக் கேட்காமல் வளர முடியாது! அதிலும் சத்திர புதுக்குளம் என்கிற எங்கள் ஊரில் இந்தக் கலை பிரபலம்.... 'கொடை விழா' என்ற பெயரில் எங்கள் மாவட்டத்தில் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் கலை இது.

பவித்ரா : எங்களுக்குப் பரதநாட்டியத்தில் தஞ்சை நால்வர், பாபநாசம் சிவன், சுவாதித் திருநாள், மதுரை கிருஷ்ணன் போன்றவர்களது சாகித்யங்கள் உதவுகின்றன. அது போல உங்களுக்கு ஏற்கெனவே யாரோ எழுதி வைத்த பாடல்கள் ஏதானும் உண்டா? அதைத்தான் பாடுவீர்களா?

சுப்பு : இல்லை. என்னைப் பொறுத்த வரை நானே பாடல்கள் எழுதி விடுவேன். நான் சொல்லும் கதைகளுக்கு வேறு ஒருவர் எழுதி வைக்க முடியாது. ராமாயணக் கதையை வில்லுப்பாட்டில் சொன்னால் கூட, கம்பன் - வால்மீகி - ஆனந்த ராமாயணம் இவற்றோடு என் கற்பனையையும் சேர்த்து, அப்போது என்ன தோன்றுகிறதோ

அதைப் பாடுவேன். எனக்குள்ளே இருக்கிற ராமன் அப்படி வெளிப்படுவான்!

பவித்ரா : அப்படியானால் அந்தப் பாட்டெல்லாம் அப்போது 'இன்ஸ்ட்டன்ட்'டாக உருவாகுமா?

சுப்பு : ஆமாம். நான் என்ன ராகம் என்று கூட யோசித்துப் பாடுவதில்லை. நான் பாட ஆரம்பித்த பிறகு என் மகள் பாரதி சொல்லுவாள், ''அப்பா, இது நாத நாமக் கிரியை...'' என்று. அவள் கர்நாடக இசை படித்தவள். சொல்லுகிற இடத்துக்குப் பொருத்தமாக அந்தப் பாட்டும், மெட்டும் அமையும்.... சாமா, கல்யாணி, சிந்துபைரவி என்று வில்லுப்பாட்டுக்கு ஏற்றவாறு அவ்வப்போது வந்து சேர்ந்து கொண்டு விடும்!

பவித்ரா : அப்படியானால் முன்பு வில்லுப்பாட்டுப் பாடல்களே இல்லையா?

சுப்பு : நான் சிறு வயதாக இருந்த போது அம்மனைப் பற்றியும், முருகனைப் பற்றியுமான வில்லுப் பாடல்களை மட்டும் தான் கேட்டிருக்கிறேன். பிறகுதான் தோவாளை சுந்தரம் பிள்ளை, சாத்தூர் பச்சைக்குட்டி, கலைவாணர், கொத்த மங்கலம் சுப்பு போன்றோரால் புராணக் கதைகளை விட்டு வெளியில் வந்து வ. உ. சி. பற்றியும், காந்தி மகான் பற்றியும் வில்லுப்பாட்டில் சொல்லப்பட்டது.

பவித்ரா : ரொம்பப் பண்டிதத் தமிழாக இல்லாமல், ரொம்ப சிம்பிளாக இருக்கிறது நீங்கள் பாடுவதும், கதை சொல்லுவதும்...

சுப்பு : அதில் நான் கவனமாக இருப்பேன். என் கதையைப் பாமரனும் கேட்டு ரசிக்கிறான் என்றால் அதுவும் ஒரு காரணம். பரதன் ராமனிடத்தில், 'பாதுகையைத் தாருங்கள்; பாதரட்சையைத் தாருங்கள்; அதை வைத்து நீங்கள் வரும் வரை நாடாளுகிறேன்' என்று சொல்வதோடு நிறுத்த மாட்டேன். பாதுகை, பாதரட்சை என்பதெல்லாம் சாதாரண பாமரனுக்குப் புரியாமல் போகலாம். எனவே, மூன்றாவதாக 'உங்கள் செருப்பைத் தாருங்கள் அண்ணா' என்று பரதன் கேட்டான் என்றும் சொல்லுவேன். ஒருசிலர் ராமனின் பாதுகைகளைப் போய் செருப்பு என்று சொல்வது ஏதோ அதன் புனிதத்துக்குப் பங்கம் ஏற்படுவது போல் நினைத்தாலும், கலை, கலைக்காக அல்ல; கலை என்பது மக்களுக்காக என்பதால் ரொம்பவும் சென்டிமென்ட் பார்க்கக் கூடாது என்று கருதுபவன் நான்.

பவித்ரா : எங்களுக்கு ஒரு நடன நிகழ்ச்சி என்றால் நட்டுவாங்கத்துக்கு ஒருவர், வயலினுக்கு ஒருவர், மிருதங்கத்துக்கு ஒருவர் என்று வேண்டியிருக்கிறது. உங்கள் நிகழ்ச்சிக்கு எப்படி?

சுப்பு : இந்த வில்லு முக்கியம். அப்புறம் உடுக்கையும் ஹார்மோனியமும். தபலா இருந்தால் வைத்துக் கொள்ளுவேன். இல்லை என்றாலும் பரவாயில்லை.



பவித்ரா : இந்த ஜெனரேஷனைச் சேர்ந்தவர்களுக்கு எல்லாம் சயன்டிஃபிக் ஆக இருக்கணும். இந்தப் பின்னணியில், உங்கள் கலை எதிர்காலத்திலும் செழித்து விளங்க யாராவது இளைஞர்கள், இளைய தலைமுறையினர் உங்களிடம் வில்லுப் பாட்டு கற்றுக் கொள்ள வருகிறார்களா?

சுப்பு : இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இந்தக் கலையைப் பாடத் திட்டத்தில் சேர்க்க திரு. ஆறு அழகப்பன் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறார். அப்படி முறையாகச் சொல்லிக் கொடுக்கும் வகை ஏற்படும் போது, இந்தக் கலையின் எதிர்காலம் சிறப்பாகவே இருக்கும். கவலையே இல்லை. என் மகள் பாரதி, நான் வில்லுப்பாட்டு பற்றி எழுதிய நூலை, தனது எம்ஃபில் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டு, தீஸிஸ் எழுதி, சென்னைப் பல்கலைக் கழகத்தில் எம்ஃபில் பட்டம் பெற்றதை நான் பெருமையுடன் சொல்லுவேன்.

பவித்ரா : புராண, இதிகாசம் மற்றும் காந்தியடிகள் பற்றிய வில்லுப்பாட்டு தவிர, வேறு என்னென்ன நிகழ்ச்சிகள் பண்ணியிருக்கீங்க?

சுப்பு : ஒ. என். ஜி. சி. நிறுவனத்துக்காக நரிமணம் திட்டம் பற்றி ஒரு வில்லுப் பாட்டு பண்ணியிருக்கேன். டீவி யிலே கூட போட்டிருக்காங்க. இருபதம்சத் திட்டத்துக்

காக நிறைய பண்ணியிருக்கேன். ஏழு மணிக்கு நிகழ்ச்சின்னா, நான்கு மணிக்குத் தான் சொல்லுவாங்க - சில சமயத்துலே! அத்தனை குறுகிய காலத்திலும் சிறப்பாகச் செய்து விடுவேன் என்கிற நம்பிக்கை அவர்களுக்கு! குடும்பநலத் திட்டம் என்று தனியான நகிழ்ச்சிகள் செய்யத் தேவையே யில்லை. புராணக் கதை சொல்லும் போது கூடவே குடும்ப நலத்தையும் சேர்த்துச் சேர்த்துச் சொல்லுவேன்! முருகன் - வள்ளி திருமணத்தைக் கலப்புத் திருமணம் பற்றிய பிரசாரமாகவும் எடுத்துச் சொல்லலாமே! சமுதாயமும் சமயமும் வேறு வேறல்ல.

பவித்ரா : உங்கள் காலண்டரில் பாதிக்கு மேல் நிகழ்ச்சிகள் தேதி நிரம்பி விட்டதே? இந்தத் தொழிலில் உங்களுக்கு இதே செக்யூரிடி இருக்கும் என்று நம்புகிறீர்களா?

சுப்பு : நானாக நிகழ்ச்சிகள் கேட்பதே இல்லை. அது பாட்டுக்கு வரும். கல்யாணங்களில் கூட இப்போது சிலர், இசைக் கச்சேரிகளுக்குப் பதில் எனது வில்லுப் பாட்டுக் கச்சேரியை வைக்கிறார்கள். தியாகராஜ உற்சவத்திற்குக் கூட எனக்கு அழைப்பு வந்திருப்பது, இந்தக் கலைக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன். இதெல்லாம் அன்னை காமாட்சியின் அருள்... ஆனால் செல்வம் மட்டுமே இதில் முக்கியமில்லை. ஒருமுறை நிகழ்ச்சி முடிந்து கிளம்பும் போது, சுண்ணாம்பு அரைக்கிற ஓர் அம்மாள், மூணு மணி நேரக் கதை கேட்டு விட்டு, தன் சுருக்குப் பையிலிருந்த இரண்டு ரூபாயைக் கொடுத்து விட்டு, 'இதைக் கோயில் உண்டியலில் போடாதீர்கள். நீங்கள் மூணு பேரும் பால் வாங்கிச் சாப்பிடுங்கள். ரொம்ப அன்பாக் கதை சொன்னீர்கள்' என்று நெகிழ்ந்து போய்ச் சொன்னார்... அந்த அன்பு முக்கியமில்லையா? சரி என் கதை இருக்கட்டும்! நீங்கள் நிறையப் பரிசுகள் எல்லாம் வாங்கியிருப்பீர்களே, சொல்லுங்களேன்?

பவித்ரா : எண்பத்தாறிலே, சங்கராபரணம் விழாவிலே ருக்மிணி அருண்டேல் பரிசு, 88ல் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் பரிசு, பத்மா சேஷாத்ரி பால பவன் பரிசு, 89ல் யுவகலா பாரதி விருது; அப்புறம் அதே வருடம் மெரினா ஜேஸீஸ் விருது, போன வருடம் மியூசிக் அகாடமியில் டாக்டர் எம். ஜி. ஆர். பரிசு, ஃபைன் ஆர்ட்ஸ் ஃபவுண்டேஷன் அவார்டு. இந்த வருடம் கிருஷ்ண கான சபாவில் பாலசரசுவதி பரிசு...

சுப்பு : அடேயப்பா! நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன். நடனக் கலை ஒரு புராதனக் கலை. வில்லுப்பாட்டும் அப்படித்தான்.... பரதநாட்டியத்துக்கு கர்நாடக இசை தேவையாயிற்றே? அதுவும் படிக்கிறீர்களா?

பவித்ரா : அன்னபூரணி வைத்தியநாதனிடம் கற்றுக் கொள்ளுகிறேன்.

சுப்பு : நடனம் கற்றுக் கொள்ளும் ஆசை எப்படி வந்தது?

பவித்ரா : தில்லியில் முன்பு இருந்த போது, பள்ளிக்கூட விழாக்களில் சின்னச் சின்ன நடன வகைகள் ஆடியிருக்கிறேன். நிறைய நடன நிகழ்ச்சிகள் பார்த்தும் இருக்கிறேன். அம்மாவும் அப்பாவும் ஊக்கம் கொடுத்தார்கள். முதலில் மாஸ்டர் அரவிந்த், பிறகு திருமதி ராதா; இப்போது என் குரு நிர்மலா ராமச்சந்திரனிடம் கற்றுக் கொண்டு வருகிறேன்.

சுப்பு : நடனக் கலையில் நீங்கள் பெரும் புகழ் பெற்று விளங்க அன்னை காமாட்சியைப் பிரார்த்திக்கிறேன்.

பவித்ரா : மிக்க நன்றி.

தொகுப்பு : சாருகேசி

பின் அட்டை வண்ணப்படம் : உத்ரா

பொன்விழா ஆண்டு : : தங்கநகைப் பரிசுத் திட்டம் - 14

பட்ஜெட் சிரிப்பு!



பொங்கல் ஆச்சு; குடியரசு தினமும் முடிந்தது. இதோ பட்ஜெட் வந்து கொண்டே இருக்கிறது. இவ்வாண்டு மிகக் கடுமையாக இருக்கும் என்றும் கருதப் படுகிறது. பட்ஜெட்டின் சோகத்தைச் சமாளிக்கக் கிண்டலாக ஒரு ஜோக் எழுதுங்களேன்! 'பட்ஜெட்' என்ற சொல் அதில் இடம்பெற வேண்டும் என்று மட்டுமே நிபந்தனை. ஒரு தபால் கார்டில் ஒருவர், ஒரு ஜோக் மட்டுமே எழுதலாம். முதல்தர ஜோக்குக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள தங்கநகைப் பரிசு. பிரசுரமாகும் இதர ஜோக்குகளுக்குச் சன்மானம். "பட்ஜெட் சிரிப்பு" என்று தலைப்புத் தந்து, "கல்கி காரியாலயம், சென்னை - 600 032" என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதி அனுப்பக் கடைசித் தேதி : 3.2.92.



அழகான புருஷன்

ஆத்மிதா

கடைவீதியில் கத்தரிக்காய் வாங்கிக் கொண்டிருக்கும் போது அவள் பெயரைச் சொல்லி யாரோ அழைப்பதைக் கேட்டுத் திரும்பினாள் மாலா.

''அட ஜெயந்தி!'' என வியந்தாள் மாலா.

மாலாவும் ஜெயந்தியும் ஒன்றாகப் படித்தவர்கள்.

''என்னடி மாலா எப்படி இருக்கே... குடும்ப வாழ்க்கை சொர்க்கமா இருக்கா..?''

''அதெல்லாம் நல்லா இருக்குடி.... என் கல்யாணத்துக்குத்தான் உனக்குத் தகவல் தர முடியலையடி!'' என்றாள் மாலா.

''எனக்கும்தானடி.... திடுதிடுப்புன்னு மேரேஜ் அரேன்ஜ் பண்ணிட்டாங்க...''

''பரவாயில்லே.. விடுடி... வீடு பக்கத் துலதான் இருக்கு, வாடி...'' என அழைத் தாள் மாலா.

''ஆமாம் ஒரு விசயம் உனக்கு ஞாப கம் இருக்குதா...?''

''என்ன...?'' என்றாள் மாலா.

''நாம படிக்கும் போது, நமக்கு எப்படிப்பட்ட கணவன் கிடைக்கணும்னு பேசிக்கிட்டோமே ஞாபகம் இருக்கா...?'' என்றாள்.

மாலாவுக்கு ஞாபகத்திற்கு வந்தது. அப்போது ஜெயந்தியும் மாலாவும்தான் அந்தரங்க சினேகிதிகள். அப்போது தத்தம் வருங்கால கணவனைப் பற்றி இருவரும் பேசிக் கொள்வார்கள். சினிமா நடிகனைப் போல் அழகாய் இருக்க வேண்டுமென்று.

மாலாவுக்கு உற்சாகம் தொலைந்து போயிற்று. முகம் இருண்டது.

''என்னடி பேச்சையே காணோம்...''


''அ... அது... ஒண்ணுமில்லே...''

''இன்னைக்கு உன் ஹஸ்பண்டை எனக்கு அறிமுகப்படுத்துவியா...?'' என் றாள் ஜெயந்தி.

''சரி...'' என்ற போது, மாலாவின் கண்கள் கலங்கி விட்டன. மேலும் பேச முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

இதைக் கவனிக்காமல் எது எதுவோ பேசிக் கொண்டே மாலாவைப் பின் தொடர்ந்தாள் ஜெயந்தி.

வாடகை வீடாக இருந்தபோதிலும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருந்தாள் மாலா. கடற்கரையில் கிளிஞ்சல் பொறுக்கி அழகாய்க் கோத்து வாசல்புறத்தில் தொங்க விட்டிருந்தாள்.



''அட... எங்க வாங்கினடி... இது மாதிரி எனக்கும் வேணும்.''

''இது வாங்கல... நானே செய்தேன்!'' என்றாள் பெருமையாக.

''ரொம்ப நல்லா இருக்கு...!'' என மனந்திறந்து பாராட்டினாள் ஜெயந்தி.

மாலாவுக்கோ எப்படியாவது சீக்கிரமாக ஜெயந்தி இடத்தைக் காலி பண்ணினால் தேவலை என்ற எண்ணமே நினைவில் நின்றது.

''ஆமா... லேட்டாச்சுன்னா உன் வீட்டுக்காரர் உன்னைத் தேட மாட்டாரா...?'' என்றாள் மாலா.

''தேடுவாருதான்... உன் ஹஸ்பண்டைப் பார்த்திட்டு ஓடிடலாம்னு நினைச்சேன்...''

''எப்பவுமே கரெக்ட் டயத்துக்கு வந்திடுவாருடி.. உனக்கு லேட்டாச்சுன்னா போயிட்டு... இன்னொரு நாள், நாள் முழுக்க தங்கி இருந்திட்டுப் போற மாதிரி வாடி'' என்றாள் மாலா.

''ஆமா... உன் ஹஸ்பண்ட் எப்படி...? அன்பா உன்னை வச்சிருக்காரா?''

''அதிலெல்லாம் ஒண்ணும் குறைச்சலில்லையடி... ஆனா...'' என்றவளுக்கு மேலே பேச முடியாமல் கண்ணீர் பொங்கி வந்தது.

''என்னடி... என்ன...?'' பதறி விட்டாள் ஜெயந்தி.

''அ... அவரு... அழகில்லேடி.... கறுப்பு.. எடுப்பான பல்லு...'' என அழுது கொண்டே சொன்னாள் மாலா.

''சரி, உன் கணவர் குடிக்கிறாரா... சீட்டு விளையாடுறாரா... வேத்து பொம்பளை கூட சகவாசம் வச்சிருக்கறாரா...?''

''அதெல்லாம் கிடையாது... என் கிட்டே கோபமா ஒரு வார்த்தை கூடப் பேசினதில்லே...''

''அதான்டி அழகு. நல்ல குணம்தான் அழகு. அழகுன்னா என்னான்னு புரியாத வயசுல நாம பேசிக்கிட்டது... வெறும் உடலழகை உயர்வான அழகுன்னு தப்பா நினைச்சிட்டோம்டி... என் கணவர் அழகானவருதான். வெறும் உடலழகு மட்டும் தான். குடிக்கிறார், கோபம் வந்தா அடிக்கிறார்... வேத்துப் பெண்ணோட சகவாசம் வச்சிக்கிட்டுருக்காரு... நீ கொடுத்து வச்சவடி...!''

ஜெயந்தி பேசப் பேச மாலாவுக்கு ஒரே பெருமையாகவும் சந்தோசமாகவும் இருந்தது. ஜெயந்திக்கு அறிமுகப்படுத்த, தன் கணவன் வந்துவிட மாட்டானா என்று வாசலைத் துழாவ ஆரம்பித்தன அவளது கண்கள்.

மாதம் ஒரு நகரம்



திருநெல்வேலிக்கு வருகிறோம்!

கல்கியின் 'மாதம் ஒரு நகரம்' திட்டத்தின் நான்காவது நகரமாகத் திருநெல்வேலிக்கு வரப் போகிறோம். அங்குள்ள குறைகள், நிறைகள், சாதனைகள் மற்றும் மக்களின் அன்றாடப் பிரச்னைகள் பற்றி அலசி ஆராய்ந்து எழுதப் போகிறோம்.

எனவே, திருநெல்வேலிவாசிகள், தங்களுக்குள்ள குறைகள், நிறைகள், தனிமனித சாதனைகள், அரசு செய்ததும், செய்யத் தவறியதும் மற்றும் இளைஞர் அமைப்புகளின் ஆக்கப் பணிகள் என்று பல கோணங்களிலும் எங்களுக்குச் சுருக்கமாக எழுதியனுப்ப வேண்டுகிறோம்.

உங்கள் கடிதங்களைத் தொடர்ந்து, நாங்கள் பிப்ரவரி 2, 3, 4, 5 ஆகிய தேதிகளில் திருநெல்வேலிக்கு நேரில் வந்து, எல்லாவற்றையும் நேரில் பார்த்து ஆராய்வோம். குறுகிய நாட்களே உள்ளதால் உடனடியாக எழுதியனுப்புங்கள்.

திருநெல்வேலிவாசிகளான உங்கள் கடிதங்கள் கல்கி அலுவலகத்துக்கு வந்து சேர வேண்டிய கடைசித் தேதி : 31.1.92.

உறையின் மேல் 'மாதம் ஒரு நகரம் - திருநெல்வேலி' என்று மறக்காமல் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

- ஆசிரியர்


உயர்ந்த கொம்பில் மலரும் பூ!

நீங்கள் விடுதலைப் புலியா?..... ஸாரி! விடுகதைப் புலியா? எங்கே... இ ந் த விடுகதைகளுக்கெல்லாம் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!



1. உயர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ. அது என்ன?

2. பக்கமுள்ள பட்டினத்தை எட்டிப் பார்க்க முடியவில்லை. அது என்ன?




3. உச்சிக்கிளையில் ஒரு முழக்குச்சி ஊசலாடுது. அது என்ன?

4. வெயிலில் மலரும்; காற்றில் உலரும். அது என்ன?

5. அகன்ற காட்டின் நடுவே ஒரு பாதை. அது என்ன?

6. ஓடையில் ஓடாத நீர்; ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?



7. ஓடியாடி கத்தும்; உடலைத் தேடிக் குத்தும். அது என்ன?

8. கொளுத்திய பின் கோடி கும்பிடு அது என்ன?

9. வயிறு புடைக்கத் தின்றால், நிமிர்ந்து நிற்பான். அது என்ன?



10. குதிரை ஓட ஓட வால்குறையுது. அது என்ன?

11. தொப்பையனுக்கு ஒரு வாசல்; தோளனுக்கு இருவாசல். அது என்ன?

12. தரையில் முட்டிடும்; விரலில் ஒட்டிடும். அது என்ன?



13. மரமேறும் மங்காத்தாளுக்கு முது கிலே மூணு சூடு. அது என்ன?

14. அறைகள் அறுநூறு; அத்தனையும் ஒரே அளவு. அது என்ன?



விடைகள் :

1) குடை, 2) முதுகு, 3) முருங்கைக் காய், 4) வியர்வை, 5) தலை வகிடு, 6) கண்ணீர், 7) கொசு, 8) கற்பூரம், 9) கோணிப்பை, 10) ஊசி, நூல், 11) சட்டை, 12) மெட்டி, 13) அணில், 14) தேன் கூடு.

தொகுப்பு : கௌதம்ராப்

நன்றி : விடுகதைகள்

வெளியீடு : அநுராகம்

காரணம் என்ன?

! காவிக் கலர் கொடி நிறைய வருகிற தாம்; அதனால் சிவப்புக் கொடி காட்ட வேண்டுமாம்!

● நா. இரகுநாதன், சின்னாங்குப்பம்.

? இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்ற வர்கள் ஊராட்சி மன்றம் முதல் நாடாளு மன்றம் வரை தேர்தலில் நிற்கத் தடை வரும்போலிருக்கிறதே?

! அரசியலுக்கு வருவோர் மக்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டாமா? இத்துடன் சேர்த்து, ஒரு மனைவிக்கு மேல் உள்ளவர்களும் போட்டியிடத் தடை விதிக்கலாம்! ஆனால் இங்கே இப்படி யெல்லாம் நல்ல காரியங்கள் நடக்காது!

● ஏ. எம். பழனிசாமி, கோவை.

? அடிக்கடி போராட்டத்தை அறிவிப்பது டாக்டர் ராமதாஸுக்கு அழகா?

! டாக்டர் ராமதாஸுக்கு அது அழகல்ல என்பது தெரியும்! ஆனால் அரசியல்வாதி ராமதாஸுக்கு அது அழகாகத் தோன்று கிறதே! அதுதான் சங்கடம்!

● ஸி. சுபாஷ் சந்திரபோஸ், செட்டிகுளம்.

? பந்த் என்ற தலைப்பில் ஒரு ஹைகூ?

! சாலையில் கிரிக்கெட்; சரியுது பொரு ளாதார மார்க்கெட்!

● எஸ். நாரம்புநாதன், சுரண்டை.

? நரசிம்மராவின் பலம் என்ன? பலவீனம் என்ன?

! காங்கிரஸில் எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தலைவராக வேறு ஒருவர் இல்லாதது அவர் பலம். சுறுசுறுப்பாக முடிவுகள் எடுக்காமல் எந்தப் பிரச்னையும் தானே தீர்ந்து விடும் என்று கருதுவது போல ஆறப் போடுவது பலவீனம். ஆறப் போடுவது என்பது சில விஷயங்களுக்குத் தான் பலன் தரும்.

● ப. தினேஷ்குமார், சென்னை - 7.

? சமீபத்தில் ரசித்துப் படித்த புத்தகம்?


! ''வேடந்தாங்கல்'' - பறவைகள் சரணா லயம் பற்றிய நூல் அல்ல. வளர்கின்ற பரு வத்தில் ஓர் இளைஞனுக்கு ஏற்படுகிற பாதிப்புக்கள் அவனை எப்படியெல்லாம் உருவாக்கும் அல்லது அழிக்கும் என்பது பற்றிய கதை. கதாசிரியர் : ம. வே. சிவ குமார். வெளியீடு : ஞானச்சேரி

● கல்கி ப்ரியா, திருவெண்ணெய் நல்லூர்.

? தடா சட்டத்தின் கீழ் முன்னாள் தி.மு. க. அமைச்சர் சுப்புலட்சுமியையும் அவர் கணவரையும் கைது செய்தது பற்றி?

! தடதடாவென்று நடக்கும் காரியங்கள், பழி வாங்கப்படுவது போன்ற எண்ணத்தை உருவாக்குவதில் வியப்பில்லை. அன்று நடந்தவையெல்லாமே அன்றைய மத்திய - மாநில அரசுகளின் நம்பிக்கைகளின் அடிப் படையில் எழுந்த கொள்கைளின் செயல் பாடுகள். இன்று தொழில் வர்த்தகத் துறை களில் சர்வ சுதந்திரங்களை வழங்க முன் வருகிறார், ப. சிதம்பரம் என்பதால், இதற்கு முன் இருந்த வர்த்தகத் துறை அமைச்சர்களை பெர்மிட்-லைசென்ஸ் - கோட்டா முறை ஆட்சிக்காகப் பழிவாங்க முடியுமா? அன்றே, 'விடுதலைப் புலிகளை இங்கு அண்ட விடுவதில்லை, ஒழித்துக் கட்டுவது' என்பதில் மத்திய அரசு உறுதி யாக இருந்திருந்தால் இங்குள்ள அமைச் சர்களும் தயவு தாட்சண்யம் காட்டியிருக் கவே முடியாது.

ஒத்திப் போடுவதில் வெற்றி



☐ ரூ 25 பரிசு பெறுபவர் :
டி. எஸ். சீதாராமன்,
48, கே. ஜி. கே. தெரு,
கும்பகோணம் - 612 001.



☛ பலம்? பலவீனம்?

அண்ணனுக்குக் கல்யாணம்

"ரமேஷ், புது பேண்ட், சட்டை அமர்க்களமாய் இருக்கே! ரெடிமேடா?'' என்று கேட்ட மாமாவிடம் பெருமையுடன் தலையாட்டினான்.

''அண்ணன் கல்யாணத்துக்கு வாங்கின தாக்கும். அடுத்த மாப்பிள்ளை நீதானே, ஜமாய்!'' என்று அவர் கண்ணைச் சிமிட்ட வும் வெட்கப் புன்னகையுடன் நகர்ந்தான்.

இன்று ரமேஷின் அண்ணனுக்குத் திரு மணம்.

சொந்தக்காரர்களை வரவேற்றபடி, அவ்வப்போது தன் புது பேண்ட், சட்டை யை ஹாலில் இருந்த நிலைக்கண்ணாடியில் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டான்.

நல்ல துணியில் ரெடிமேட் உடை வாங்க வேண்டும் என்பது அவனது நீண்ட நாளைய கனவு. படிக்கும் காலத்தில் குமார் அண்ணனின் உடைகளையே அணிய வேண்டிய சூழ்நிலை.

சாதாரண குமாஸ்தாவாக பிரைவேட் கம்பெனியில் வேலை பார்க்கும் அவன் அப்பாவின் சம்பளத்தில், ஆறு ஜீவன்கள் வயிற்றைக் கழுவ வேண்டிய கஷ்ட ஜீவனம்.

புது உடை என்பது தீபாவளிக்கு மட்டும் கிடைக்கும். அதுவும் சாதாரண விலையில், மலிவான ரகத்தில்தான் இருக்கும்.

அண்ணன் காலேஜ் போக ஆரம்பித்த தும் வருடா வருடம் பாலியெஸ்டர் துணி யில் குமார் அண்ணனுக்குத் துணி எடுப்பார் அப்பா. அதுவும் காரணமாகத்தான். அது கொஞ்சம் பழசானதும் இவனுக்கு வந்து சேரும். உடையில்தான் என்றில்லை. அண்ணனின் புத்தகங்கள், பேனா, பென் சில் எல்லாம் உபயோகப்படுத்தியதாகத் தான் கிடைக்கும்.

'அடுத்த பிறவியிலாவது இப்படி தம்பி யாய், அதுவும் நடுத்தரக் குடும்பத்தில் பிறக்கக் கூடாது' என்று பலமுறை நினைத் துக் கொள்வான்.

குமார் அண்ணன் வேலைக்குப் போக ஆரம்பித்ததும் கூட அதே நிலைதான். அண்ணனின் பழைய சைக்கிள், டிபன் பாக்ஸ் எல்லாம் இவனிடம் கை மாறின.

ரமேஷும் ஒருவழியாய் காலேஜ் முடித்த உடனே போன மாதம் நல்ல வேலையும் கிடைத்தது. இதிலாவது அதிர்ஷ்டம் வந்து சேர்ந்ததே என்று சந் தோஷப்பட்டான்.

முதல் மாதச் சம்பளத்தில் தன் நெடுநாள் கனவான, நல்ல ரெடிமேட் பேண்ட், ஷர்ட் வாங்க முடிவு செய்திருந்தான். அண்ண னின் திருமணமும் முடிவாகப் புது உடை வாங்கச் சௌகரியமாகி விட்டது. விலை கிட்டத்தட்ட அறுநூறு ரூபாய், இரண்டும் சேர்த்து. கொஞ்சம் அதிகம்தான்.

திடீரென அண்ணன் தங்கியிருக்கும் அறையிலிருந்து சத்தம் கேட்கவே புரியா மல் திரும்பினான்.

அண்ணனின் குரல்தான்! உரத்து, கோப மாய்க் கேட்கவே அங்கு விரைந்தான்.

''அப்பா, இந்த சம்பந்தம் வேண்டாம்!''

''அதுதான் ஏன்னு சொல்லுடா. தாலி கட்டுற நேரத்துல இப்படி குதிக்கறே?'' என்றாள் அம்மா தவிப்பாய்.


''சீர்வரிசையில் ஏதாவது குறையா மாப்பிள்ளை? நான் சரி பண்ணிடறேன், சொல்லுங்க!'' என்றார் பெண்ணின் அப்பா பரிதாபமாய்.

''சீர்ல குறை இருக்கறது கிடக்குது. உங்க பெண்ணிடமே குறை இருக்கே. எப்படிச் சரி பண்ணப் போறீங்க?''

''மாப்பிளே...'' என்று அலறினார் பெண்ணின் அப்பா.

''என்னடா சொல்றே குமார்?''

''இதைப் படிச்சுப் பாருங்கப்பா. இவர் பொண்ணு ஏற்கெனவே ஒருத்தனைக் காதலிச்சிருக்கா. பொண்ணு எழுதின கடி தத்தையும் சேர்த்து அனுப்பிச்சிருக்கான்



அந்தக் காதலன்...'' என்று கோபமாய்க் கடிதத்தை நீட்டினான் குமார்.

பெண்ணின் அப்பா அதைக் கண்டு அதிர்ந்து போய் உறைந்து நின்றார்.

அதற்குள் மணப்பெண்ணே அங்கு வந்து விட்டாள்.

''என்னம்மா இதெல்லாம்'' - அவள் அப்பா தழுதழுத்தார்.

''அப்பா என்னை மன்னிச்சுடுங்க. நடந்ததை அப்படியே சொல்றேன். நான் காலேஜ்ல படிக்கும் போது ஒருத்தன் என்னையே சுற்றிச் சுற்றி வந்தான். முதலில் நான் சட்டை செய்யலே. ஆனால் அவன் பிடிவாதமாய்ச் சுற்றவும் மனசு சஞ்சலப்பட்டது உண்மைதான். ஆனால் காதலிக்க ஆரம்பிச்ச ஒரு மாசத்துலேயே அவன் ஒரு பொம்பளை பொறுக்கின்னு தெரிஞ்சு போச்சு. நான் விலகிட்டேன். என் ஒரே தப்பு அவன் காதலை முதலில் அங்கீகரிச்சது மட்டும்தான். வேற எதுவும் நடக்கலே. இதுதான் உண்மை.''

''இதை ஏனம்மா இத்தனை நாளாச் சொல்லலே?''

''என் மனசிலிருந்தே அழிச்சிட்ட ஒரு கெட்ட கனவை உங்களிடமும் சொல்லி ஏன் குழப்பணும்னுதான் அப்பா.''

''இப்ப கடிதம் எழுதிட்டானே!''

''நான் அவன் வலையில் விழுந்து ஏமாறாத கோபமாய் இருக்கும். ஆனால் சத்தியமாச் சொல்றேன். அந்தப் பொறுக்கியை என்னிக்கோ மறந்துட்டேன். என் இதய வாசலை வரப் போகும் கணவனுக்காக மட்டுமே திறந்து வைச்சிருக்கேன்...'' என்று சொல்லித் தலைகுனிந்து நின்றாள்.

''மாப்ளே, என் பொண்ணு விளக்கம் கொடுத்துட்டா. தயவுசெஞ்சு அவளை ஏத்துக்குங்க.''

யோசனையுடன் குமார் பெற்றோரைப் பார்த்தான். ''இதோ பாருங்க. வெள்ளையா இருந்த என் மனசுல ஒரு கறுப்புப் புள்ளி விழுந்துடுச்சு. இது மாதிரி வேற ஏதாவது கதை இருக்குமோ உங்க பெண்ணைப் பற்றின்னு புத்தி சந்தேகப்படுது. அப்படி ஒரு சந்தேகம் உருவானப்புறம் உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்னால நிம்மதியாக் குடும்பம் நடத்த முடியாது. மன்னிச்சுடுங்க!'' என்றான் குமார் தீர்மானமாய்.

''சம்பந்தி...'' என்று கண்ணீர் வழிய ரமேஷின் அப்பாவுடைய கையைப் பிடித்துக் கெஞ்ச ஆரம்பித்தார்.

''விருப்பமில்லாத மனசோட எப்படிங்க என் பையனைத் தாலி கட்டச் சொல்றது? ஆனால் உங்க நிலையும் பாவமா



யிருக்கு. என்ன செய்யறதுன்னே புரியலியே...'' என்று குழப்பத்துடன் பார்த்தார் ரமேஷின் அப்பா.

''வழி இருக்குப்பா'' என்று குறுக்கிட்ட ரமேஷை அனைவரும் ஆவலுடன் பார்த்தனர்.

''எப்ப தன் பழைய காதலனைப் பொறுக்கின்னு இந்தப் பொண்ணு திட்டினாளோ, அப்பவே அவ மனசுல களங்கம் இல்லைன்னு அர்த்தம். நம்ம குடும்பத்துக்கு இந்தப் பெண்ணை நிர்க்கதியாய் கைவிட்ட பாவம் வரக் கூடாது. அதனால...''

''அதனால?''

''நானே இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறேன்.''

''என்னடா சொல்ற? அண்ணனுக்குப் பார்த்த பெண்ணை தம்பி கல்யாணம் செஞ்சுக்கறதா?''

''என்னோட ராசியே அதுதானேப்பா. சின்ன வயசிலேயிருந்து அண்ணனோட சட்டை, டிராயர், புத்தகம், சைக்கிள்னு எனக்குக் கிடைச்சது. இப்ப அண்ணனுக்கு நிச்சயம் செஞ்ச பொண்ணு எனக்கு மனைவியாகப் போறா.''

''டேய் ரமேஷ்...'' என்று ஆரம்பித்த அம்மாவைச் சைகையால் நிறுத்தினான்.

''அம்மா, நீயும் ஒரு பெண்தான். உனக்கும் கூட கல்யாண வயசுல பொண்ணு இருக்கு. இப்படிக் கடைசி நிமிஷத்துல என் தங்கச்சி கல்யாணம் நின்னு போனா நம்ம மனசெல்லாம் எவ்வளவு வேதனைப்படும். யாரு அப்புறம் அந்தப் பொண்ணைக் கல்யாணம் பண்ணிப்பாங்கன்னு யோசிச்சுப் பாரு. நான் முடிவு பண்ணிட்டேன். நான் ஆசைப்பட்டு வாங்கின முதல் பேண்ட், சட்டை என் கல்யாணத்துக்கே உபயோகப்படுது. ராசியான உடைதான் போலிருக்கு...'' என்று சொன்னவனைக் கையெடுத்துக் கும்பிட்டனர் மணப்பெண்ணும், அவள் தந்தையும்.

கிருஷ்ணா

டாக்டர் பதில்கள் :

சாப்பிட்டுக் கொண்டே டீ.வி. பார்க்கலாமா?

● வி. எல். வெங்கடேசுவரன், வாளாடி

குழந்தைகள் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டால் படிப்பு வராது என்று பெரியவர்கள் கூறுகிறார்களே? இது உண்மையா?

●● டாக்டர். பி. ஆர். சுப்பிரமணியம், சென்னை - 18

பாக்கு உடலுக்குக் கெடுதல். வெற்றிலை-பாக்கு என்று ஆரம்பித்து, பிறகு புகையிலைப் பழக்கமும் தொற்றிக் கொண்டு விடும். புகையிலை இன்னும் கெடுதலானது. இதைத் தடுக்கவும், இப் பழக்கத்துக்கு உள்ளாகாமல் இருக்கவும், முன் ஜாக்கிரதையாகப் பெரியவர்கள் இப்படி எச்சரித்திருக்கிறார்கள். இதற்கும் படிப்புக்கும் சம்பந்தமில்லை.

● பி. ஞானபாஸ்கர், திருச்சி - 1

பலர் சாப்பிட்டுக் கொண்டே டெலிவிஷன் பார்க்கிறார்கள். இது ஏதாவது பாதிப்பை ஏற்படுத்துமா?

●● சாப்பிடும் போது உணவில் கவனம் தேவை. வாசனை, ருசி, போன்றவை அமிலம் உற்பத்தியாக உதவுபவை. அமிலம் உற்பத்தியாகும் போதுதான் ஜீரணம் முழுமையாக இருக்கும். டீவி பார்க்கும் போது ஏற்படும் கவனச் சிதைவு, வயிற்றில் அமில உற்பத்தியைத் தடுக்கிறது. எனவே ஜீரணமாகாமல் பிறகு அவதியுற நேருகிறது. அதனால்தான் சாப்பிடும் போது மௌனமாகச் சாப்பிட வேண்டும் என்று கூறுகிறார்கள். 'மௌனேன, சுகேன, போக்தவ்யம்' என்று மந்திரத்தில் வலியுறுத்து வதும் இதற்காகத்தான்!

● அ. முஸ்தபா, தக்கோலம்

பயணம் செய்யும் போது மட்டும் சிலருக்கு வாந்தி வருவது ஏன்? அப்போது எலுமிச்சைச் சாற்றைப் பிழிந்து வாயில் ஊற்றுவது ஏன்?


●● பயணத்தின் போது வாந்தி வருவதற்குக் காரணம், காதில் உள்ள வெஸ்டிபுலர் அபேரடஸ் என்னும் பாகம் பாதிக்கப் படுவதுதான். அந்த உறுப்புத்தான் நம்முடைய 'பாலன்ஸ்'க்குக் காரணம். அது பாதிக்கப்படுகிற போது தலை சுற்றல், தொடர்ந்து வாந்தி ஏற்படுகிறது. இதற்கு 'மோஷன் ஸிக்நெஸ்' என்று பெயர். இந் நோய்க்கு எலுமிச்சம்பழச் சாறு எந்த அளவுக்கு உதவும் என்று தெரியாது. ஆனால் ஆங்கில வைத்தியத்தில், ஸ்டெமெடில், மார்ஸின், அவோமின் போன்ற மாத்திரைகளில் ஏதேனும் ஒன்றை, பிரயாணத்துக்கு முன்பு ஒரு மாத்திரை மட்டும் சாப்பிடுமாறு சொல்லுவது உண்டு. வாந்தி வராது தடுக்கும் இவை.


● மு. இரவிச்சந்திரன், சேலம் - 9


'சோரியாஸிஸ்' என்னும் செதிள் உதிரும் தோல் வியாதி எதனால் வருகிறது? ஆங்கில மருத்துவத்தில் ஏன் நிரந்தரமாக இதைக் குணப்படுத்த முடியவில்லை?


●● சோரியாஸிஸ் நோயின் காரணத்தைக் கண்டறிந்தவர் யாரும் இல்லை. கண்டறிவோர் கட்டாயம் நோபல் பரிசு பெறுவர்! ஜெனடிக்ஸ் பாதிப்பினால் இந் நோய் வருவதாகக் கருதுகிறார்கள். இது சில காலம் குணமாகும். பிறகு சில காலம் தீவிரமாய்த் தாக்கும். கால் முட்டி, கை முட்டி, தலை இவற்றில் வெகுவாக வரும். ஒரு குச்சியால் சுரண்டினால், மெல்லிய துணி (மெம்பரேன்) போல் உதிரும். இதற்குத் தற்சமயம் ஆங்கில வைத்தியம் இல்லை. ஆனால் கார்ட்டிசோன் மருந்தை உபயோகித்துப் பார்க்கிறார்கள். இப்படி உபயோகிப்பவர்களுக்கு ஆர்த்தரைடிஸ் வரலாம். எந்த மருந்தையும் டாக்டரை நேரில் கலந்தாலோசிக்காமல் சாப்பிடக் கூடாது.

தொகுப்பு : எஸ். வி. என்.









50

போட்டிக்
கவிதை

தோட்டம் நுழைந்த நரிகள்

வேலிக்கு அப்பால் நின்று
ஓலமிட்டன நரிகள்,
''சிச்சி! இது
விலக்கப்பட்ட கனி.''

எப்படியோ படல் விலக்கித்
திரைப்படத் தோட்டத்தில்
நுழைந்தது ஒன்று,
தொடர்ந்தன சில;

ஏழையின் வியர்வையைப் பாட
ஏ. ஸி. கேட்கின்றன;
எக்ஸ்ட்ராக்களின் இறுக்கத்தில்
இலக்கிய எவரெஸ்ட்டைத்
தேடுகின்றன;


குடிசையின் அவலங்கூற
நட்சத்திர ஹோட்டலின்
உச்சி மாடி வாசம்;
மதுவை ஒழிக்கக்
குடித்தால்தான் முடியுமாம்!

புகழப்படுபவனே வெட்கப்பட
வார்த்தைகளால் செய்யும் ஜாலம்
வாத்ச்யாயனர் தோற்றார்!

''முக்கனியின் முழுச்சுவையும்
பெற்ற பொற்கனி''யைத்
தின்ற பின்பு பெற்ற ஞானம்,
''ஆஹா! அவிழ்த்தெறிவோம்
தன்மான ஆடைகளை!''
என்னே, புதிய ஆதாம்கள்!

- தெ. சுந்தரமகாலிங்கம்.





மறு கல்யாணம்



"மாப்பிள்ளை வூட்டுக்கு ஒரு தரம் போயிட்டு வந்தர்லாமின்னு இருக்கேன்...."

லீலா கணவனைப் பார்த்தாள். அவள் பார்வையில் எந்த மாப்பிள்ளை வீடு, இன்னமும் அவர்கள் மாப்பிள்ளை தானா, உறவு கொண்டாட முடியுமா என்ற கேள்விகள் தொக்கி நின்றன.

"என்ன இன்னமும் ஒறவைக் கொண்டாடிட்டு இருக்கன்னு பாக்கறயா....?"

"தேவையான்னு ஒரு நெனப்பு. அவ்வளவுதான்!"

"போகலாமுன்னு தோணிச்சு...."

"அவரு மறு கல்யாணம் பண்ணாதவரைக்கும் நெருடலோ, உறுத்தலோ இல்லாம போயிட்டு வரலாம். மறு கல்யாணம் பண்ணிட்டப்புறம் எந்தவித ஒறவும் இல்லை..."

சமீப நாட்களாகவே போய் வரவேண்டும் என்ற எண்ணம் கோபாலனுக்கு வலுத்துக் கொண்டிருந்தது. ஜெயா இறந்து ஆறு மாதங்களாகி விட்டன. கடைசியாய் நகைகளை வாங்கி வரச் சென்றதுதான். இப்போதும் நகைக்காகத்தான் செல்ல வேண்டும் என்பது ஏனோ அவருக்குச் சங்கடமளித்தது.

சென்ற முறை நகைகளைத் திருப்பிக் கொடுத்தபோது இரு கைவளையல்கள் குறைந்திருந்தன. வளையல்களை எண்ணிப் பார்க்கவில்லை கோபாலன். இருந்தாலும் மாப்பிள்ளையின் அம்மாவே சொன்னாள். "ரண்டு கை வளையல்கள் கொறையுது. எங்க பொண்ணு ரேணுகா போட்டிட்டிருக்கா. அடுத்த தரம் அவ இங்க வந்தப்புறம் வாங்கி வெச்சுக் குடுக்கறோம். நாங்களே கொண்டுட்டு வந்து தந்திடறோம். கொஞ்சம் பொறுத்துக்கணும்." கோபாலன் எதுவும் பேசவில்லை. அவர்களாகவே சொல்கிறபோது மாற்று வார்த்தை தேவையில்லை என்றுதான் பட்டது.

"ஜெயாவுக்குப் பெரிய மனசு. தாராளம். பிச்சைக்காரங்க சோத்து நேரத்தில வந்து 'அம்மா'ன்னு சத்தம் போட்டுட்டா தட்டுலே இருக்கற சோத்தையும் அள்ளிப் போட்டுடற மனசு. புருஷன் வீட்டிலிருந்து ரேணுகா வந்து இங்க தங்கியிருக்கறப்பவெல்லாம் அவளோட நகைகளை ஒண்ணுரெண்டு கழட்டி ரேணுகா கழுத்திலெ போட்டுடுவா. ஏதாச்சும் விசேஷத்துக்குப் போகணும்ன்னா எதுக்கு வெறுங்கையோட போறேன்னு வளையல்களைப் போட்டுட்டுப் போகச் சொல்லுவா. பெரிய மனசுதான். பெரிய மனசும், இரக்கமுமா இருக்கறவங்கதான் ரொம்ப நாள் இந்த உலகத்திலே இருந்துட முடியாதே...."

ஜெயா விபத்துக்கு முன் - ரேணுகா ஊர் வந்தபோது வெளியில் போகிற சமயம் வாய்த்தபோது அவளின் இரு கைவளையல்களைக் கழற்றிக் கொடுத்துப் போடச் சொல்லி வற்புறுத்தினாள். ரேணுகாவும் கண்ணாடி வளையல்களைக் கழற்றிவிட்டுப் போட்டுக் கொண்டாள். ஜெயாவின் விபத்து. மரணம். வளையல்களைத் தராமல்

சுப்ரபாரதி மணியன்

ரேணுகா புருஷன் வீட்டுக்குப் போய் விட்டாள்.

இந்த ஆறு மாத இடைவெளியில் அம்மா வீட்டிற்கு ரேணுகா வந்திருக்க மாட்டாளா. அவர்களே கொண்டு வந்து கொடுப்பதாய்ச் சொன்னார்கள். காணோம். கேட்காத கடன் பாழ் என்கிற விதமாய்ப் பாழாகப் போய்விடக் கூடாது. தாமதம், கேட்கத் தடையாய் பல விஷயங்களைக் கொண்டு வந்து நிறுத்தி விடலாம். எதற்கும் சென்று கேட்டு விடலாம் என்று முடிவு செய்தார்.

''எதுக்கும் இன்னம் ரெண்டு பேர்த்தே கூட்டிட்டுப் போங்களேன்!'' என்றாள் மனைவி.

''எதுக்கு?''

''தனியாப் போயி அவங்க ஏதோ சொல்ல, நீங்க தடுமாற... மத்தியஸ்த்துக்கு யாராச்சும் இருந்தா நல்லாத்தானே இருக்கும்.''

''இப்போ பிரச்னைன்னு ஒண்ணுமில்லியே. இதிலே மத்தியஸ்தம் எங்கிருந்து வருது. கொண்டுட்டு வந்து தர்றோம்னாங்க. காணோம். போயி ஒரு வார்த்தை என்னன்னு கேட்டுட்டு மொகம் பாத்துட்டு வர்றது தானே...''

''எனக்கென்னமோ சங்கட மாத்தான் இருக்கு.''

''நம்ம பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்குடுத்து அவ ரெண்டு வருஷம் வாழ்ந்து, அப்புறம் சாகற வரைக்கும் எந்தப் பிரச்னையும் வந்ததில்லே. இதிலே இப்ப மட்டும் என்ன வரப் போறது... பாக்க லாம்....''

''பெண்ணே போயிட்டா... இதிலே இந்த ரெண்டு வளையல்க என்ன பெரிசு....''

''எதுக்கும் ஒரு வார்த்தை கேட்டுட லாமே... சின்னப் பொண்ணுக்காச்சும் ஆகுமில்லியா... ரெண்டு வளையல்க ஒன்றரை பவுனாச்சும் சேரும். நமக்கு இன்னொரு பொண்ணு இல்லாமெ இருந்தா இதெல்லாம் நெனைக்க வேண்டியது இல்லைதான்.''

கோபாலனுக்கு பஸ்ஸை விட்டு இறங்கி நடக்கையில் சற்று பதற்ற மாகத்தான் இருந்தது. இதெல்லாம் எதுக்கு என்று மனசு கேட்டுக் கொள்கிற பதற்றம்.



நடை தொய்வாகவே இருந்தது. இதே வீதிகளில் ஜெயாவின் சிரிப்பும், வார்த்தை களுமாய் எத்தனை சந்தோஷத்தை அனுப வித்திருக்கிறோம் என்றிருந்தது.

வீட்டுக் கதவு ஓரத்தில் சிறு தூண் போல இளைத்து நின்றிருந்தாள் மாப்பிள்ளையின் அம்மா. ''வாங்க சம்பந்தி வாங்க'' என்றாள். அவள் முகம் பிரகாசம் அடைந்து, மீண்டும் கறுத்தது. முக ரேகைகள் ஆறு மாதக் கஷ்டங்களைச் சொல்லின.

''யாருமில்லியா?''

''அவரு வெளிய போனாரு... பையன் ஆபீஸ் போயிருக்கான்.''

ஜெயாவின் படம் மாட்டியிருந்தது முன் அறையில். பிளாஸ்டிக் மாலையொன்றைச் சாத்தியிருந்தார்கள். அழகான பிரேம் ஜெயாவின் முகத்தைப் பிரகாசம் கொள்ளச் செய்திருந்தது. இன்னும் வீட்டில் ஜெயா வின் போட்டோவை மாட்டாதது நினைவு வந்தது.

''என்ன தேஜஸ் பாருங்க மொகத் திலே.... மகாலட்சுமி... இருந்த வரைக்கும்

மகாலட்சுமியாவே இருந்துட்டுப் போனா....''

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள். ஈரமினுமினுப்பு கண்களில் தெரிந்தது. கோபாலனுக்கு ஆறுதல் வார்த்தைகளும், நெகிழ்வான நினைவுகளும் கலந்து மௌனத்தை உண்டு பண்ணும், ஜெயாவைப் பற்றிப் பிறர் பேசுகையில். மீண்டும் மீண்டும் பொறுக்கியெடுத்த வார்த்தைகளைத்தான் சொல்ல வேண்டும். எதிர்ச் சுவரைப் பார்த்துக் கொண்டிருந்தார். வார்த்தைகளுக்காய்க் கண்கள் சுவரில் துழாவுவது போலிருந்தது.

''அவரு இருப்பாருன்னு நெனச்சு வந்தேன்.''

''வெளியே போனாரு. சாயங்காலம் ஆகுமுன்னாரு.''

''தம்பி எப்பிடியிருக்கு....''

''இருக்கான். சில சமயம் பேசறதேயில்லை. மௌனமாயிடறான். அவன் ரொம்பவும் நாளாகும் மீள்றதுக்கு....

''இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோன்னு பலபேரு நச்சரிக்கறாங்க. பொண்ணைப் பெத்தவங்க பொண்ணைக் கரையேத்திட்டாப் போதும்ன்னு வர்றாங்க. அவன் எதுக்கும் ஒத்துக்கலே. தெடமாத்தான் இருக்கான்...''

பேசுவதற்கு எதுவும் இல்லை என்பது போல் கோபாலன் உட்கார்ந்திருந்தார். வந்த விஷயத்தைச் சொல்வதற்குக் கூச்சமாக இருந்தது. எதிரில் இருப்பது ஆண் என்றால் சுலபமாக இருந்திருக்குமோ என நினைத்தார்.

''தம்பி ஆபீசுக்குப் போகணும்ன்னா எப்படி?''

''பாக்கணும்ன்னு இருக்கா. போன் பண்ணி சீக்கிரம் வரச் சொல்றேன்.''

''வேண்டாம். வரப்போ வரட்டும். தம்பி பஸ்லதான் போறாரா....''

''ஆமாங்க... ஏதாச்சும் வாங்கணும் சின்னதா டி.வி.எஸ். - 50 மாதிரியாச்சுன்னு சொல்லிட்டிருக்கான். போன மாசம் சின்னதா ஆக்சிடண்ட் வேற.. பத்து நாள் வீட்லே கெடந்தான். எதுவும் வாங்க முடியலே.... அவன் சம்பாதனை பொண்ணுக்குப் பண்றதுக்கே சரியாயிருக்கு.....''

''கல்யாணம் பண்ணி வருஷத்துக்கு மேலே இருக்குமே....''

''இரண்டு வருஷமாகப் போகுது. ஜெயா வந்த நாலாம் மாசம். இன்னமும் அதைக் கொண்டா இதைக் கொண்டான்னு புருஷன் தொரத்திட்டிருக்கான்.''

ரேணுகாவின் மெலிந்த முகம் மனத்தில் வந்தது கோபாலனுக்கு. சோகை படிந்த உருவமாய்த்தான் அவள் உலாவி இருப்பதாய்ப் பார்த்த ஞாபகம்.

''பண்ணிப் பண்ணிச் சோர்ந்து போயிட்டம். எத்தனைதான் பண்றது...? மூணு மாசத்துக்கு முன்னே வந்தப்போ ஜெயாவோட வளையல்களைக் குடுன்னு கேட்டேன். கழட்டிக் குடுத்துட்டுப் போயிட்டா. போனா புருஷன் தொரத்துறான். இத்தனை நாளாப் போட்டிருந்தியா... உன்னதுதான்னு இருந்தேன். இப்ப இல்லீங்கறியே. போயி வாங்கிட்டு வான்னு தொரத்திட்டான். வேற வழியில்லாம அதைப் போட்டு அனுப்புனோம்.''

அவர் எதேச்சையாய் முகத்தைத் திருப்பி அவளைப் பார்த்தார். அவள் கைகள் கூப்பியிருந்தன. கண்களில் ஈர மினுமினுப்பு. உடம்பில் ஒரு வகையான நடுக்கம்.

''நாலஞ்சு மாசம் பொறுத்துக்கோங்க. பையன் எப்படியோ சம்பாதிச்சோ, கடன் வாங்கியோ வேற வளையல்க வாங்கிக் குடுத்துருவான். அதுவரைக்கும் பொறுத்துக்கணும். இதைச் சொல்றதுக்கு எப்படி அங்க வர்றதுன்னு மூணு மாசமாத் தத்தளிச்சுட்டு இருக்கோம். எப்படியும் திருப்பிக் கொடுத்துடுவோம்.''

''பரவாயில்லே... நான் அதைக் கேக்கறதுக்கு வர்லே.... சும்மா பாத்துட்டுப் போவோமுன்னுதான்....''

''வளையல்களுக்காக வந்துட்டீங்கன்னு ஒரு நெனப்பு மனசிலே வந்துருச்சு. சின்னப் பெண்ணுக்கு ஏதாச்சும் காரியம் ஏற்பாடு பண்ணிட்டீங்களோ என்னமோன்னு நெனச்சேன். இதுவும் தேவையாயிருக்குமில்லையான்னு....''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. அவ இன்னமும் ரொம்பவும் சின்னவதான்.''

நின்று கொண்டிருந்தவள் ஆசுவாசப் படுத்திக் கொள்வது போல் நாற்காலியின் முனையில் உட்கார்ந்தாள்.

''ரேணுகா வாழ்க்கைதான் சொகப்படலே.... அவ புருஷன் அதைக் கொண்டா இதைக் கொண்டான்னு சிரமப்படுத்தறான். பையன் சம்பாத்யத்துல பெருசா அவளுக்குப் பண்ண முடியலே. சாகாமே நடமாடிட்டிருக்கான். பையனுக்கு இன்னொரு கல்யாணம் பண்றதுனாலே வர்ற பணம், நகைய வெச்சாச்சும் ரேணுகாவைக் கரையேத்தணும்கற எண்ணம் அவருக்கும் அப்பப்போ வந்திட்டிருக்கு....''

மறுகல்யாணம் செய்வதற்காக அவள் சொன்ன காரணம் துயரம் தருவதாக இருந்தது. இனியொருமுறை இந்த வீட்டிற்கு வர அவசியம் இருக்காது என்று நினைத்துக் கொண்டார்.

''என்ன கருத்து மாறுபாடு?'' என்று பரபரப்புடன் வினவினார் ராஜேந்திர குமார்.

''நஸ்ரானா படம் சம்பந்தப்பட்ட பணிகள் ஆரம்பமான சில நாட்களில், பாடல்கள் இடம்பெறும் கட்டங்களை சங்கர் - ஜெய்கிஷனுக்கு விவரமாக எடுத்துரைக்க நண்பர் ஒருவரை அனுப்பி வைத்தேன். அந்தக் கட்டங்களுக்கு ஏற்ப மியூஸிக் போட்டுத் தரும்படி கோரிக்கை அனுப்பியிருந்தேன். அதற்கு அவர்கள் சொல்லி அனுப்பிய பதில் என் கோபத்தைக் கிளறியது...''

''அப்படி கோபப்படும்படி என்ன சொன்னார்கள்?''

''தமிழ்ப் படத்தில் பாடல்கள் இடம் பெற்ற கட்டங்கள் என்பதற்காக அதே சிசுவேஷனுக்கு அவர்களும் மியூஸிக் அமைக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கக் கூடாது என்றும், படத்தைப் பார்த்துவிட்டுப் பாடல்கள் இடம்பெற வேண்டிய கட்டங்களை அவர்களே தேர்ந்தெடுப்பார்கள் என்றும் சொல்லி அனுப்பினார்கள்.

''இதை என்னால் ஏற்க முடியவில்லை. ''கல்யாணப் பரிசு'' தமிழ், தெலுங்கு இரண்டிலும் சூப்பர் ஹிட் ஆன படம். இன்று ஹிந்தியில் விரும்பி நடிப்பவரோ ஹிந்தி சினிமா உலகின் முடிசூடா மன்னர் ராஜ்கபூர். இவ்வாறிருக்க, இசையமைப்பாளர்கள் எனக்குக் கண்டிஷன் போடுவதா? அது நியாயம் அல்ல என்பதுடன், எனக்குத் தன்மானப் பிரச்னை.

''நான் கூறும் பாடல் காட்சிகளுக்கு அவர்கள் இசையமைப்பதானால் சரி; இல்லையென்றால் அவர்கள் என் படத்துக்கு இசையமைக்கவே வேண்டாம்'' என்று நான் கண்டிப்பாகக் கூறி விட்டேன். அவர்களும் தங்கள் நிலையில் பிடிவாதமாக இருக்கவே, கடைசியில் ஒப்பந்தமானவர் ரவி. பாட்டுக்கள் ஒவ்வொன்றும் ஹிட்.''

நடந்ததையெல்லாம் கேட்டுக் கொண்ட ராஜேந்திரகுமார், ''இப்போது நெஞ்சில் ஓர் ஆலயத்துக்கு அவர்களை அணுக நீங்கள் தயங்குவது நியாயம்தான். எனக்குப் புரிகிறது. ஆனாலும் கேட்கிறேன், அவர்கள் சம்மதம் அளித்தால் நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா? அவர்கள் என் நெருங்கிய நண்பர்கள். அவர்களைச் சம்மதிக்க வைப்பது என் பொறுப்பு'' என்றார்.

''அவர்கள் ஆற்றலை நான் நன்கு



☛ மீனா குமாரி

உணர்ந்தவன். அதனால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ஒன்று, நான் தேர்ந்தெடுக்கும் சிசுவேஷன்களில்தான் பாடல்கள் இடம்பெறும்'' என்றேன் உறுதியாக.

அடுத்த முறை நான் பம்பாய் சென்ற போது, ராஜேந்திரகுமார் எனக்கும் ஜெய்கிஷனுக்கும் இடையே ஒரு சந்திப்பை ஏற்படுத்தினார். பழைய சம்பவத்தை ஜெய்கிஷன் மறந்துவிடத் தயாரானது மட்டுமல்ல, அதற்காக வருந்தவும் செய்தார். ''நஸ்ரானாவில் பணியாற்ற முடியாமல் போனது எங்கள் துரதிர்ஷ்டம்தான். இப்போது இந்தப் படத்துக்கு உங்களுக்கு எங்கெங்கே, எப்படிப்பட்ட பாடல் காட்சிகள் அமைய வேண்டும், சொல்லுங்கள். அதற்கேற்ப இசை அமைத்துத் தருகிறோம்'' என்றார்.

அந்தக் கணத்தில் ஜெய்கிஷன் என் நெருங்கிய நண்பரானார். கலகலப்பாகப் பேசிய அந்தத் தங்கமான மனிதர், காலனால் கவரப்படும் வரை என் இனிய நண்பராகவே திகழ்ந்தார்.

ஆயினும் கூட, இதே ''நெஞ்சில் ஓர் ஆலயம்'' ஹிந்தி படப்பிடிப்பின்போதே ஜெய்கிஷனுடன் மறுபடியும் மோத வேண்டிய நிர்ப்பந்தமும், நாற்பத்தெட்டு மணி நேரம் கெடு வைக்க வேண்டிய கட்டாயமும் எனக்கு ஏற்பட்டது!

அது என்ன நாற்பத்தெட்டு மணி நேரக் கெடு? அதைத் தெரிந்து கொள்ள 168 மணி நேரம் நீங்கள் காத்திருக்க வேண்டியதுதான்! பிளீஸ் வெய்ட்!

பல்லவனிலிருந்து இறங்கியவருக்குச் சுமார் எழுபது வயதிருக்கலாம். மெலிந்த உருவம். கயிற்றால் காதில் மாட்டப்பட்ட மூக்குக் கண்ணாடி. கதர்ச் சட்டை - வேட்டி. அந்தப் பதினான்கு மாடிக் கட்டடத்தை நோக்கி மெதுவாக நடந்தார்.

வேலை கிடைக்காதோர் சங்கத்தின் கூட்டம் உழைப்பாளர் சிலையின் நிழலில் கூடியது. அவர்கள் மத்தியில் சங்கத்தின் தலைவன் ராஜா எழுந்து பேசத் தொடங்கினான், 'மைக்' இல்லாமலே அவன் குரல் கணீரென்று கேட்டது.

''நண்பர்களே! வெற்றிகரமாக எழுபத்தைந்தாவது நேர்முகத் தேர்வைச் சந்தித்துத் தோல்வியைத் தழுவி வந்திருக்கும் நமது பேரன்பிற்கும், பரிதாபத்திற்கும் பாத்திரமான மணிக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் இந்தக் கூட்டத்தைத் துவக்குகிறேன். நாட்டில் நமக்கு மட்டும்தான் வேலை இல்லையா அல்லது யாருக்குமே இல்லையா என்ற கேள்வி என் அடிமனத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. அதற்கு விடை, மணி சென்று வந்த நேர்முகத் தேர்வின் மூலம் கிடைத்தது. நம்மைப் போன்ற நேர்மையாளர்களுக்குத்தான் நாட்டில் வேலை இல்லை. லஞ்சம் கொடுப்பவருக்கும், சிபாரிசு உள்ளவருக்கும் நிச்சயம் வேலை உண்டு!''

''ஷேம்! ஷேம்!'' என்று கூட்டத்திலிருந்து கூக்குரல் எழுந்தது.

''**அ**வுட் ஆப் ஆர்டர்'' போர்டுடன் இளித்த லிப்டை ஆதங்கத்தோடு பார்த்தவர் மெதுவாகப் படிகளில் ஏறத் தொடங்கினார். முதல் மாடியைக் கடப்பதற்குள் அவருக்கு மூச்சு வாங்கியது. ஆசுவாசப்படுத்திக் கொண்டு இரண்டாவது மாடியை அடைந்த போது ரொம்பவும் தளர்ந்து போயிருந்தார்.

''வரதன் இண்டஸ்ட்ரீஸ்'' கண்ணாடிக் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே போனவரை ஏ.சி. காற்று தாக்கியது. சிலிர்த்துக் கொண்டு கம்பள விரிப்பில் அடிமேல் அடி வைத்து ரிஸப்ஷனிஸ்ட் மேஜையை எட்டினார்.

''......எம். டி. வரதனைப் பார்க்கணும்....''

''யுவர் நேம்?''

''சிதம்பரம்னு சொல்லும்மா......''

நண்பர்களே! இனி பொறுமையாக இருப்பதில் பயனில்லை. அ ட ங் கி ப் போனால் நம்மை ஏமாளி ஆக்கிவிடுவார்கள். போர்க் கொடி உயர்த்துவோம். நம்மை வேலைக்கு அமர்த்தாதவர்கள் அலுவலகம் முன் மறியல் செய்வோம். அவர்கள் கொட்டத்தை அடக்குவோம். சிபாரிசு, லஞ்சம் இத்யாதிகள்தான் வேலை கிடைக்க அடிப்படைத் தேவை என்ற காலம் மாறி, திறமைக்கு வேலை என்ற காலம் வரும் வரை போராடுவோம்! இதனால் நமக்குப் பலன் கிடைக்கா விட்டாலும் நம்மைப் போன்ற மற்றவர்களுக்காவது இது நன்மை பயக்கட்டும். கிளம்புங்கள், வீர நடை போட்டு மறியல் போராட்டத்தை நடத்துவோம்!''

அனைவரும் அடிபட்ட சிங்கங்களைப் போல் கர்ஜித்துக் கொண்டு எழுந்தனர்.

சிவசிதம்பரத்தைப் போலவே வரதனும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்தான். பாதை தான் வேறு.

சுதந்திரம் கிடைத்த பிறகு வரதன் பெரிய தொழிற்சாலை உருவாக்குவதில் முனைந்து வெற்றியும் கண்டார். இன்று நாடே போற்றும் பெரிய தொழிலதிபர்.

தம் அறையை விட்டு வெளியே வந்து சிவசிதம்பரத்தை ஆரத் தழுவி வரவேற்றார் வரதன்.

''என்னப்பா, எப்படி இருக்கே? பார்த்து எவ்வளவு வருஷங்களாச்சு?''

பழைய நிகழ்சிகளை நினைவு கூர்ந்து, பொது விஷயங்களை அலசி இறுதியாகச்

பையனுக்கு

சிவசிதம்பரம் விஷயத்துக்கு வந்தார்.

''வரதா! உதவி கேட்டு நம்ம நட்பைக் கொச்சை படுத்தக் கூடாதுன்னுதான் பார்த்தேன். ஆனா.....''

''என்ன தயக்கம் சிவா? தைரியமாச் சொல்லு!''

''வந்து... உன் கம்பெனியில வேலைக்கு ஆள் எடுக்கறதா விளம்பரம் பார்த்தேன். வேலை கிடைக்காம இருக்கிற பையனுக்கு.....''

''இதுக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டியா? நீ சொல்லி நான் இல்லைன்னு சொல்றதா? கவலைப்படாதே, உன் பையனுக்கு நிச்சயம் வேலை கொடுக்கறேன்!''

இண்டர்காமை உசுப்பி, பர்ஸோனல் மானேஜரை அழைத்தார். சில வினாடிகளில் ஒரு துடிப்பான இளைஞன் உள்ளே வந்தான்.

நாணு

''ரமேஷ்! இன்னைக்குத் தானே கிளரிகல் போஸ்ட் இன்டெர்வியூ?''

''எஸ்ஸார். காலைலயே முடிஞ்சு போச்சு.''

''இவர் பெரிய தியாகி. என் நெருங்கிய நண்பர். இவர் பையனை ஒரு வேகன்ஸில போட்டுருங்க!''

ரமேஷ் சற்று தயங்கினான்.


பக்கத்து அறையிலிருந்து துரித கதியில் ஒரு பெண் வந்தாள்.

''ஸார், ஒரு கான்பிடென்ஷியல் மெஸேஜ் வந்திருக்கு. கொஞ்சம் வரீங்களா?''

சிவசிதம்பரத்தைக் கொஞ்சம் காத்திருக்கச் சொல்லி விட்டு அந்தப் பெண்ணைத் தொடர்ந்தார் வரதன். கூடவே ரமேஷும் ஓடினான்.

''வாட்ப்ராப்ளம் ரமேஷ்?''

''ஸார், இருக்கிறது மூணு வேகன்ஸி. ஒண்ணு



வேலை

மினிஸ்டர் சிபாரிசு. தட்ட முடியாது. ரெண்டாவது நம்ம முக்கிய கிளைன்ட் வேலாயுதம் அனுப்பின ஆளு. வேலை கொடுக்கலைன்னா மனக்கசப்பு வந்து பிரச்னைகள் உருவாகலாம். ஏற்கெனவே வேலாயுதத்தை நம்ம காம்படீடர் முகர்ஜி இழுக்க முயற்சி பண்ணறதாக் கேள்வி. மூணாவது ரிஸப்ஷனிஸ்ட். ஹி...... ஏற்கெனவே ஒரு லேடியை.....''

''ஐ ஸீ.... இதுல இவ்வளவு சிக்கல் இருக்கும்னு எதிர்பார்க்கலை!''

''எனக்கும் வந்திருக்கிறவரைப் பார்த்தாப் பாவமாகத்தான் இருக்கு. சொல்லப்போனா அவர் நிலமை ரொம்ப மோசம். தியாகிகள் பென்ஷன்லயும், இவர் எடுக்கிற ட்யூஷன்லயும்தான் குடும்பம் ஓடிட்டிருக்கு!''

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நான் இருக்கிற தெருவிலேதான் இவர் குடிசையும் இருக்கு.''

''இப்ப எப்படி சிவா கிட்டே நேரிடையா வேலை இல்லைன்னு சொல்றது?''

வரதன் குழம்பிப் போனார்.

''அடிக்காதே! அடிக்காதே!''

''எங்கள் வயிற்றில் அடிக்காதே!''

''நடத்தாதே! நடத்தாதே!''

''இன்டெர்வியூ நாடகம் நடத்தாதே!''

''கொடு! கொடு! வேலை கொடு!''

''திறமைசாலிக்கு வேலை கொடு!''

''தோழர்களே! மணியின் கனவுக் கோட்டையைத் தகர்த்தெறிந்த எழுபத்தைந்தாவது அலுவலகம் இதுதான். இங்கிருந்தே நமது மறியல் போராட்டத்தைத் துவக்குவோம்!''

''போராடுவோம்!''

''வெற்றி பெறுவோம்!'' என்று கோஷமிட்டுக் கொண்டிருந்தபோது, சம்பந்தமில்லாத சில விஷமிகள் கூட்டத்தில் கலந்தனர். அந்த கட்டடத்தின் கண்ணாடிக் கதவுகளைக் கற்களால் பதம் பார்த்தனர்.

''அமைதி! அமைதி!'' என்று கத்திய ராஜாவின் குரலை அவர்கள் அலட்சியம் செய்தனர்.



பாழடைந்த பள்ளிக்கூடம்

இது ஏதோ இராக்-குவெய்த் யுத்தத்தின் போது குண்டு விழுந்த கட்டடம் அல்ல.

திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்தான் இது! நம்புங்கள் - மாணவர்களும், மாணவிகளுமாகக் கிட்டத்தட்ட 1200 பேர் படிக்கும் பள்ளிக்கூடம்.

கூச்சல் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த ரமேஷின் முகத்தில் சந்தோஷ அலை படர்ந்தது.

''ஸார்! வழி கிடைச்சாச்சு! வேலை இல்லைன்னு சொல்ல வழி கிடைச்சாச்சு!''

''என்ன சொல்றீங்க?''

''கீழே ஒரு கும்பல், பயங்கர கலாட்டாவுல ஈடுபட்டிருக்கு. அதுக்குத் தலைவனா உங்க நண்பருடைய மகன்!''

வரதன் சந்தோஷமாகச் சொன்னார். ''சிவா! உன் பையனுக்கு அபாயின்மென்ட் ஆர்ட்ர் டைப் பண்ணச் சொல்லிடறேன். உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்லு!''

''ரொம்ப நன்றி வரதா. நான் எப்படி.....''

பேசமுடியாமல் சிதம்பரத்தின் குரல் கம்மியது.

ரமேஷ் பதற்றமாக உள்ளே வந்தான்.

''ஸார், வெளில ஒரே கலாட்டா. குண்டர்கள் கூட்டம் கண்ணாடிகளை உடைச்சு ஆர்பாட்டம் பண்றது!''

அப்போதுதான் அதைக் கேள்விப்பட்டவர் போல் வரதன் கலவரப்பட்டார்.

''அப்படியா? அவங்களுக்கு என்ன வேணும்னு கேளுங்க... இல்லை அவங்க லீடரை இங்கே கூட்டிட்டு வாங்க!''

உடனே வெளியேறினான் ரமேஷ்.

''இந்தக் காலத்துல எதுக்குத்தான் ஆர்பாட்டம் பண்றதுன்னே இல்லை. தேசத்தைக் காக்க நாம அன்னிக்குப் பண்ணின ஆர்ப்பாட்டங்களுக்கெல்லாம் மதிப்பே இல்லாமப் போச்சு!''

அலுத்துக் கொண்ட வரதன், ''போகட்டும் சிவா, நாளைக்கே உன் பையனை வரச் சொல்லு. ஆர்டரைக் கொடுத்துடறேன்!'' என்றார்.

கதவைத் திறந்து கொண்டு ரமேஷ் வந்தான்.

''ஸார்! அந்த லீடரை கூட்டி வந்திருக்கேன்!''

''வரச்சொல்லுங்க!''

ரமேஷ் குரல் கொடுக்க ராஜா உள்ளே வந்தான். அவனைப் பார்த்து சிவசிதம்பரம் திடுக்கிட்டார். ராஜாவுக்கும் சற்றே அதிர்ச்சி.

வரதன் தான் அங்கு நிலவியிருந்த மௌனத்தைக் கலைத்தார்.

''என்ன சிவா, என்னாச்சு?''

''வந்து... இவன் யாருமில்லை. என் மகன்!''

''வாட்? உண்மையாகவா?''

வேதனையோடு தலையசைத்தார் சிவசிதம்பரம்.

வரதன் கவலையாக முகத்தை வைத்துக் கொண்டு சொன்னார்.

''என்னை மன்னிச்சுடு சிவா. நீ சொன்னதுனால ஏற்கெனவே செலக்ட் பண்ணியிருந்த ஒரு கேண்டிடேட்டை நிராகரிச்சு, உன் மகனுக்கு வேலை தர முடிவு பண்ணினேன். ஆனால் இதுபோல ஆர்ப்பாட்டக்காரன்தான் உன் மகன்னு இப்பத் தெரிஞ்சு போச்சு. இவனை வேலைக்குச் சேர்த்தா நாளைக்கு எதுக்கெடுத்தாலும் கொடி பிடிப்பான். கோஷம் போடுவான். இதுபோல பிரச்னைகள் எதுவுமில்லாம அமைதியான சூழ்நிலைல என் கம்பெனி நடந்திட்டிருக்கு. அதைக் கெடுத்துக்கச் சொல்லாதே!''

பேசி முடித்த வரதனை ஆச்சர்யத்தோடு பார்த்தார் சிவசிதம்பரம்.

''உனக்கு அப்படியொரு சங்கடத்தை என்னிக்குமே நான் தரமாட்டேன் வரதா!''

''என்ன சொல்றே?''

''இவன் என் மகன்னுதான் சொன்னேன். இவனுக்குத்தான் வேலை கேட்டேன்னு சொன்னேனா? இவனுடைய வன்முறைப் போக்கு எனக்குப் பிடிக்காம இவனை நான் என்னிக்கோ தலை முழுகியாச்சு?''

''அப்ப வேலை.....''


திகிலோடு கேட்டார் வரதன்.

''எங்கிட்டே டியூஷன் படிச்ச ஒரு பையனுக்குத்தான். நல்ல பையன். திறமைசாலி. நீ சொன்ன மாதிரி நாளைக்கு அவனை இங்கே அனுப்பி வைக்கறேன். வரட்டுமா?''

வரதன் முகத்தில் ஈயாடவில்லை!

மனக்கதவே திறந்தருள்வாய்

கோ.அங்கயற்கண்ணி



திறந்தருள்வாய் மனக்கதவே
திருநீற்றீசன் அழைக்கின்றான்
தேடித் திரியும் இன்பமதை
திருவருட் பெருமான் அளிக்கின்றான்
தீதில்லா தொரு மறுபிறப்பைத்
திரும்பவும் பிரம்மன் கொடுக்கின்றான்
தீங்கெதையும் தீண்டாமல்
திருக்கதவே திறந்திடுவாய்!

மாதாவும் உன்னிடத்தில்
மனமுருகி நிற்கின்றார்
பிதாவும் பிள்ளையிடத்தில்
பிச்சைகேட்டு வருகின்றார்
ஏழையுனை ஏந்திநிற்க
ஏசுபெருமான் ஏங்குகின்றார்
என்னருமை மனக்கதவே
ஈவிரக்கம் காட்டாயோ!

அன்புள்ளம் ஒன்றையே
அல்லாவும் தேடுகின்றார்
எம்மதமாய் இருந்தாலும்
சம்மதமாய்ச் சேர்க்கின்றார்
ஏகாந்த இதயத்திலே
இருளனைத்தும் போக்குகின்றார்
இனியும் என் இதயமே
ஏன் திறக்க மறுக்கின்றாய்?

மனக்கதவின் பூட்டுக்கு
மதச்சாவி மூன்று கொண்டு
மூவருமே அழைக்கின்றார்
மூடிக் கொண்ட மனக்கதவே
முழுவதுமாய்த் திறவாயோ!

நகைச்சுவையுணர்வு உள்ளவர் எவராயிருந்தாலும் அந்த பிரம்மாண்டமான சினிமா பேனரைப் பார்த்தால் பொசுக்கெனச் சிரித்து விடுவார்கள். பானுசூர்யாவிற்குச் சிரிக்கத் தோன்றவில்லை. நாயகி, யானைக்குட்டி காதில் ஏதோ ரகசியம் சொல்கிற மாதிரியான பேனர். பார்க்கப் பார்க்க ஆத்திரம் அலை அலையாய்ப் பொங்கியது.

இதென்ன அபத்தம். இ ப் ப டி யு ம் நடிக்கத்தான் வேண்டுமா? நடிப்பு எத்தனை உணர்வுபூர்வமானது? அகிலமெங்கும் சென்றடையக்கூடிய சாதனமல்லவா கனவுத் தொழிற்சாலை. அத்தனை சக்தி வாய்ந்த நுட்பத்தைப் புனிதத்தோடும், பொறுப்புணர்ச்சியோடும் அணுக வேண்டாமா? அந்த உத்வேகம் ஏன் பிறப்பதில்லை?

தனக்குள் ஜனித்து, நாளுக்கு நாள் அக்கினிக்குஞ்சாய் அந்த வேகம் வெறியாய் விஸ்வரூபமெடுத்ததில், அ டை யா று திரைப்படக் கல்லூரியில் நடிப்புப் பிரிவில் சேர்ந்தாள்.

அக்கம்பக்கம் நைச்சியமாய்ப் பரிகசித்தது. உறவினர் குழாம் மூக்கும் முழியுமா பொண்ண பெத்தது, இப்படி சினிமால வுட்டு சீரழிய விடறதுக்குத்தானாவென்று அவள் அம்மாவிடம் சொல்லிக்குமைந்தது. அப்பா இதுகுறித்த கருத்து சொல்வதற்குச் சந்தர்ப்பம் வைக்காமல் இவளுக்குப் பத்து வயது நிறைவதற்குள் இறந்து போனார். அம்மா எதுவும் பேசவில்லை. அவளுக்குச் சூர்யாவைத் தெரியும். ஒரு விஷயத்தில் தீர்மானமாய் இருக்கிறாளென்றால் அதில் யாரும் குறுக்கிட முடியாது. அவள் அப்படி.

அவளுக்குள் ஒரு புள்ளியை இட்டுக்கொண்டு அதை எட்டிப் பிடித்தே தீர்வது என்கிற கங்கணத்தோடு பிரயத்தனப்பட்டவள். நடிப்பில் ஒரு மைல் கல்லைத் தொட்டு விட வேண்டும். நமது சாதனை நமக்குப் பிறகும் நிற்க வேண்டும். உணர்வுகளை விழிகளில் கொப்பளிப்பதில் ஒரு ஸ்மீதாபாடீல், நொடிப் பொழுது சிரிப்பில் நூறு பாவம் காட்டுவதில் ஒரு பானுப்ரியா, இதயத்தில் எடை கரைந்து காற்றாய் மிதக்க விடுகிறதில் ஒரு சாவித்திரி, உருகும் பனிமலையாய் மனத்தில் சுகம் பிரவாகமெடுக்க வை க் கி ற ராதிகா, எரிமலையும் பனிமலையும் இமைக்கிற நேரத்தில் மாறி மாறி உதிக்கிற விந்தையை முகபாவத்தில் காட்டுகிற மௌனப் புயல் ரேவதி. ஏற்றுக் கொண்ட பாத்திரத்தில் வாழ்ந்து காட்டியதோடு நில்லாமல் சமூகசேவையிலும் சமூகப் போராட்டங்களிலும் தன்னை இணைத்துக் கொண்ட ஷபனா என்று விஸ்வரூபமெடுக்க வேண்டும். ஏற்கிற பாத்திரமாகவே வாழ்ந்து, கலையரசியாய்ப் பவனி வந்து, மக்கள் மனத்தில் விழிப்புணர்ச்சியைப் பதிக்க வேண்டும். இல்லையென்றால் நெஞ்சில் அதற்காக வளர்க்கிற யாகத்திலேயே கரைந்து போக வேண்டுமென்கிற நினைப்பில் உறுதியாயிருந்தாள்.

அதற்கேற்ற மாதிரி நடிப்புப் பிரிவில் அந்த ஆண்டின் சிறந்த மாணவிக்கான தங்கப் பதக்கம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து பிரபல இயக்குனர் இயக்கிய படமொன்றில் நடித்தாள். முதல் படமே பெர்லின் திரைப்பட விழாவில் பங்கெடுத்து அவளுக்குப் பரிசைப் பெற்றுத் தந்தது. தமிழ்நாட்டில் இன்னும் ரிலீசாகவில்லை. பரிசு கிடைத்ததால்.

காத்திருந்தாள். நேரம் வரும் என்று. பொறுத்துப் பொறுத்து அதன் உச்சம் சென்று வீழ்கிற பொழுதில் ஒருவழியாய்ப் படம் ரிலீசானது. சென்னையில் ஒரு காட்சியாய் ஐம்பது நாள் தம்பிடித்து ஓடியது. எனினும் இவளுக்கு நல்ல பெயர் கிடைத்தது.

பத்திரிகைகள் 'ப ளி ச்' செ ள ஃபோட்டோ எடுத்து, பேட்டி வெளியிட்டிருந்தன. நிறையத் தயாரிப்பாளர்கள் கையில் அட்வான்ஸோடு வந்தார்கள். கதை பற்றிக் கேட்டதற்குத் தயாராகிறது என்றார்கள்.

ஒரு கனாபெண்

டி.குலசேகர்

அவர்களையெல்லாம் கூசாமல் நிராகரித்தாள்.

பிரபல நாவல் ஒன்றை மையமாக வைத்து அந்தப் படம் தயாரித்தார்கள். நல்ல டீம். பணம், எதையும் கருத்தில் கொள்ளாமல் மிகுந்த ஈடுபாட்டோடு ஒன்றிப் போய் நடித்தாள். இருந்தும் அன்றைய நிகழ்ச்சி அவளுடைய வளர்ச்சியையே ஆட்டம் காட்டுகிற அளவு பூதாகாரப்படுத்தப்படும் என்று யாருமே நினைத்திருக்க முடியாது.



ஆரம்பம்

நாயகன் கிட்டத்தட்ட புதுமுகம். முதல் படம் ரிலீசாகி இப்போதுதான் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. காட்சிப்படி ஆபரேஷன் தியேட்டருக்குள் செல்லப் போகிற மனைவியை நாயகன் பாசத்தோடு தழுவிக் கொள்ள வேண்டும்.

டைரக்டர் ஸ்டார்ட் சொன்னதும் காமிரா இயங்க ஆரம்பித்தது. தத்ரூபமாகப் பாத்திரத்தோடு ஐக்கியமாகி, ஆறுதலாய்க் கணவனைத் தழுவிக் கொண்ட போது நாயகனின் கை தேவையில்லாமல் முதுகிலிருந்து இறங்கி இடுப்பில் படர்ந்து....

அடுத்த கணம் பளாரென அறைந்தாள். மொத்த யூனிட்டே ஸ்தம்பித்துப் போனது. அம்மா வைதாள். வளருகிற நடிகைக்கு இத்தனை திமிர் ஆகாதென்றாள். அன்று இரவு புரண்டு புரண்டு படுத்தும் தூக்கம் வரவில்லை.

நினைக்க நினைக்க மனம் கசந்தது. ஒருநேரம் நாயகன் மீது பாவமாய்க் கூட இருந்தது. ஏன்? ஏன் இப்படி? நிறைய யோசித்ததில் நிறைய குழப்பங்கள் நம்மிடையே அலுங்காமல் ஆசனம் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

பத்திரிகைகள் சில அந்த விஷயத்தை நன்றாகவே ஊதி விட்டன. கிசுகிசு என்கிற பெயரில் காசு பார்த்தன. அந்த யூனிட்டில் வேலை பார்த்த யாரோ ஒரு உதவி இயக்குனர் மட்டும் பானுவிற்குப் பரிந்து பேட்டி தந்திருந்தான்.

சம்பந்தப்பட்ட நாயகனோடு நடிக்க ஒப்பந்தமாகியிருந்த இரண்டு படங்களிலிருந்தும் உடனே தூக்கப்பட்டாள். இது குறித்த சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொள்ள வேண்டி ஒரு வாசகன் ஒரு பத்திரிகையில்

கேட்ட கேள்விக்கு இப்படி பதில் வந்தது. 'கலைச் சேவை புரிய மட்டுமே அவதரித்த கற்புக்கரசி. இரண்டாம் கண்ணகி'. இப் படிப் பலவிதங்களில் கொச்சைத்தனமான உவமைகளுடன் வர்ணித்து, வாசகர்களின் யூகங்களுக்கு நிறையவே தீனி போடப் பட்டது.

சக நடிகைகளில் சிலர், 'இவளுக எல் லாம் நடிக்க வரலேனு யார் அழுதது? நடிக்க வந்த பிறகு இதென்ன பிகு?' என்று காட்டமாய்ப் பேட்டி கொடுத்ததில், உல கமே தனக்கு எதிராய்த் திரும்பிக் கொண்டு விட்ட மாதிரி இருந்தது. மனத்தின் அடி நாதத்தில் எழுகிற கதறல்களை இவர்கள் புரிந்து கொள்ளவே மாட்டார்களா?

பத்திரிகைகள்தான் எழுதுகின்றன என் றால் ஒரு கூட்டம் அதை விழுந்து விழுந்து படிக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? நடிகை என்றால், தங்களுக்குள் அமுத்தி வைக்கப்பட்டிருக்கிற வக்கிர உணர்வுகளை இஷ்டம் போல் கொட்டுவதற்காக ஆன குப்பைத் தொட்டியா என்ன? யார் என்ன கேட்கப் போகிறார்கள் என்கிற கோழைத் தனத்தில் தரம் தாழ்ந்து, தரம் தாழ்த்திப் பேசுகிறவர்களும், எழுதுகிறவர்களும், எழுதுகிறதைப் படிக்கிறவர்களும், ஏன் இதை மட்டும் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறார்கள். நானும் மனுஷிதானே. மான அவமானம், ஆசாபாசம் இதெல்லாம் எனக் கும் இருக்காதா? இப்படி எதையாவது எழுதுகிறதையெல்லாம் படித்து விட்டு சந்தோஷிப்பதென்பது கொடூரமில்லையா? சம்பந்தப்பட்டவர் மனது எப்படியெல் லாம் புண்படும் என்பதை ஏன் உணர முடியவில்லை?

அம்மாவின் நினைப்பு கூட ரொம்ப விலகி விடவில்லை. 'பிழைக்கத் தெரியா திருக்கிறாளே? பான்கேக் பூசினால் மட் டுமே பார்க்க சகிக்குமென்கிற முகரைக் கட்டைகளெல்லாம் கார், பங்களா என்று மினுக்குகிற போது இவள் மட்டும் ஏன் இப்படி அபஸ்வரமாய் நடந்து கொள்ள வேண்டும்' என்று சலித்துக் கொண்டாள்.

சிந்தனையினூடே எதனாலோ உந்தப் பட்டு, 'எதிர்ப்புக்கிடையில் எதிர்நீச்சல் போடறதுதான் வீரியம்... அசந்துறாத.. உன் னால முடியுண்டி.. விடாத... இரண்டுல ஒண்ணு பாத்துருவோம்...' என்று நாசிகள் விரியச் சொல்லிக் கொண்டாள்.

எ ன் ன தா ன் பிரயாசைப்பட்டும் தொடர்ந்து வெளியான ஒருசில படங்களும் சொல்லிக் கொள்கிற மாதிரி அமைய வில்லை. சொன்னது ஒன்று எடுத்தது ஒன்று என்று பலவிதங்களில் சறுக்கி விட்டன. மிஞ்சியது 'ராசியில்லாதவள்' என்கிற

❑ டெலஸ்கோப் தெரியும். கெலிடாஸ் கோப் தெரியும். போரோஸ்கோப் (Boroscope) என்றால் என்ன, தெரியுமா உங்க ளுக்கு? குளுகுளு கட்டிடங்களில் தூய்மை செய்யப்பட்ட காற்றை Duct என்று அழைக் கப்படும் குழாய்கள் மூலம் கட்டிடத்தின் பல பகுதிகளுக்கு அனுப்புவார்கள். இந்த Duct-ல் உள்ள காற்றின் தூய்மையை போரோஸ்கோப் கண்டுபிடித்துச் சொல்லும். காற்றில் கலந்து விட்ட அசுத்தங்களின் அளவை இந்தக் கருவி மூலம் அறியலாம். இதை இங்கிலாந்து கம்பெனி ஒன்று அறிமுகப்படுத்தியுள்ளது. ஆஸ்பத்திரி போன்ற கட்டிடங்களுக்கு மிக வும் பயன்படும்.


ஆதாரம் : ஏர்கண்டிஷனிங் ஜர்னல்
தகவல் : எஸ். தியாகராஜன்

கொட்டாங்குச்சிகள் ஸ்பெயினுக்குப் போகின்றன!

❑ அடுத்த ஒலிம்பிக் பந்தயம் ஸ்பெயினிலுள்ள பார்ஸிலோனாவில் நடக்கவிருக்கிறதல்லவா? அங்கே ஐஸ் கிரீம் விற்க உரிமை பெற்ற வியாபாரி ஒருவர், கொட்டாங்குச்சி என்றழைக்கப்படும் தேங்காய் ஓடுகளை ஐஸ்கிரீம் கோப்பைகளாக உபயோகிக்கப் போகிறாராம். இதற்காக இரண்டு லட்சம் தேங் காய் ஓடுகள் தேவையென்று ஆர்டர் தர, கேரள மாநிலத்தில் எர்ணாகுளத்தைச் சேர்ந்த முனம்பம் கிராமத்துக்காரர் பொறுப்பை ஏற்றார். ஒரே மாதிரியான அளவு, வடிவம் கொண்ட தேங்காய் ஓடுகளைத் தரம் பிரித்து அனுப்பும் வேலை யில் இவர் ஈடுபட்டிருக்கிறார்!

இங்கே நாம் பிளாஸ்டிக்குக்கு மாறிக் கொண்டிருக்கும் இக்காலத்தில், சுற்றுச் சூழல் பற்றிய அக்கறை மிகுந்துள்ள காரணத்தால் ஸ்பெயின் நாட்டினர் பிளாஸ்டிக்கைப் புறக்கணிக்க, நமது கொட்டாங்குச்சிக்கு அடித்தது யோகம்!

ஆதாரம் : ஹிந்து
தகவல் : வசந்தா சாரி



பட்டம் மட்டுமே. யதார்த்தத்தின் கசப்பில் நினைப்பெல்லாம் குமட்டியது. தேக்கி யிருக்கிற இலட்சியக் கனவு வற்றிப் போய்த் தேய்ந்து விடுகிற பயம் மனத்தில் சாட்டையாய்ச் சொடுக்கியது. உளைச்சலில் மனது கனம் ஏறிக் கொண்டது.

பானுசூரியா தூக்கம் பிடிக்காமல் வதைபட்டுப் போனாள். இரவின் இடையே வந்த அரைத் தூக்கமும் முசுக் முசுக்கெனக் கலைந்து போகும். வெகு நேரம் இருளுக்குள் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பாள்.

அந்தக் குழப்பமான நேரத்தில்தான் அப்படியொரு சந்தர்ப்பம் வீடு தேடி வந்தது. தன் திரைவாழ்வில் சரிவை ஏற்படுத்திய அதே படத்தில் உதவி இயக்குனராய் வேலை பார்த்த வசந்தன் வந்தான். முதல் முதல் இயக்கப் போகும் படத்தில் நீங்கள்தான் நடித்துத் தர வேண்டும் என்று தன்னம்பிக்கையோடு வந்தான். அவன் சொன்ன கதை கேட்டதும் அச்சாய் மனத்தில் ஒட்டிக் கொண்டது. யோசிக்காமல் ஒப்புக் கொண்டாள்.


படம் வேகமாக வளர்ந்தது. சிறு இடைவேளைக்குப் பிறகு இந்தப் படம் மூலம் மறுவாழ்வு எப்படியும் கிடைக்கும் என்கிற நம்பிக்கையோடு நடித்தாள். மறு நாள் நடிக்க வேண்டிய காட்சியை முந்தின நாளே கண்ணாடி முன் நின்று திருப்தி வருகிற வரை நடித்துப் பார்த்தாள். அழுது பார்த்தாள். திருப்தியாய் வராத போது

அருள்வாக்கு

பிரம்மா ஹம்ஸரூபமாகப் போய்ப் பார்த்தும் சிவபெருமானின் சிரஸ் அகப்படவில்லை என்றும், விஷ்ணு வராக ரூபமாகப் போயும் பாதம் அகப்படவில்லை என்றும் சொல்வதன் தாத்பர்யம் என்னவென்றால், பரமாத்மா ஆதி அந்த ஹீனமான வஸ்து என்பதுதான். சிருஷ்டி, பரிபாலனம் எல்லாவற்றையும் கடந்த வஸ்து அது என்பதுதான். இப்படி அடி முடி தேடி பிரம் மாவும் விஷ்ணுவும் பெற முடியாத வரையே, 'என் சாமர்த்தியத்தால் அறிய முடியும்' என்கிற அகங்காரமில்லாமல், அன்போடு பக்தி செய்து உருகினால், வெகு சுலபத்தில் அவர் நமக்கு அகப்பட்டு விடுவார். அன்பினாலே மிக மிக விரைவில் திருப்தி பெற்று அனுக்கிரகிப்பவர் 'சிவபெருமான்' என்பதாலேயே அவருக்கு ஆசுதோஷி என்று ஒரு பெயர் இருக்கிறது. 'ஆஷுடோஷ் முகர்ஜி' என்று ஒரு சீர்திருத்த (reformist) முக்கியஸ்தரைச் சொல்வார்கள். ஆசுதோஷிதான் 'ஆஷுடோஷ்' என்றாயிற்று. 'ஆசுகவி' என்றால் கேட்டவுடனே கவி பாடுகிறவர் அல்லவா? இப்படியே ஸ்மரித்த மாத்திரத்தில் சந்தோஷித்து அநுக்கிரகம் பண்ணுகிற வள்ளல்தான் ஆசுதோஷி.

சகல பிரபஞ்சமும் அடங்கியிருக்கிற லிங்க ரூபமானது ஆவிர்பவித்த சிவராத்திரி மகா சதுர்த்தசியிரவில் அவரை அப்படியே ஸ்மரித்து ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும். அதைவிட ஆனந்தம் வேறில்லை.

–ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



சீத்தலைச்சாத்தனார் மாதிரி தன்னைத் தானே நறுக்கெனக் குட்டிக் கொண்டாள்.

எல்லோரின் கணிப்பையும் மிஞ்சிப் படம் பிய்த்துக் கொண்டு ஓடியது. உடனே எங்கிருந்தோ ராசி வந்து ஒட்டிக் கொண்டது. போதும் போதும் என்கிற அளவு தயாரிப்பாளர்கள் வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டார்கள். கேட்ட தொகைக்கு ஒப்பந்தம் செய்யத் தயாராயிருந்தார்கள். அபவாதம் கற்பித்தத் தயாரிப்பாளர்கள் கூட அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டு நயமுடன் அணுகினர். பானு தனது பாத்திரத்தைத் தேர்ந்தெடுப்பதில் மட்டும் எப்போதும் போல் தெளிவாக இருந்தாள். ஆர்க்லேம்ப் வெளிச்சத்தில் நின்று மூன்று ஷிஃப்ட் நடித்ததில் உடம்பு சோர்ந்தாலும், மனத்தில் உற்சாகம் கூடிக் கொண்டே போனது.

அடுத்தடுத்து வெற்றியை ஸ்தாபித்ததும் முன்னணி கதாநாயகர்கள் கூட பானுவோடு நடிக்க ஆர்வம் காட்டினார்கள். பானுவைப் பழித்துப் பேசிய நடிகைகளெல்லாம் இப்போது பானுவுக்கு அக்காவாக, ஏன் அம்மாவாகக் கூட நடித்தார்கள்.

பானுவுக்கு ஒவ்வொரு படமும் ஒரு புது அனுபவமாய்த் தெரிந்தது. வைக்கிற ஒவ்வொரு அடியையும் அழுத்தத்தோடும், நிதானத்தோடும் வைக்க வேண்டியிருந்தது. பல்மொழிகளிலும் நடிப்பதற்குத் தேடி வந்ததில், கூடிய சீக்கிரமே பானுவைத் தெரியாதவர்கள் இல்லை என்றாயிற்று.

அன்று அந்த விஷயம் கேள்விப்பட்டதும் மனசு முழுக்க ஒருவித நடுக்கம். பதற்றமா? சந்தோஷமா? உயர்த்தப்பட்டிருக்கிற பொறுப்புணர்ச்சியின் அழுத்தமா? எதனாலோ உடம்பெல்லாம் சிலிர்த்துக் கொண்டது அந்த சேதி கேட்டதும். டெலிஃபோனில் வசந்தன்தான் பேசினான்.

''பானு... ஒரு குட் நியூஸ்... இந்த வருஷத்தைய இந்தியாவின் சிறந்த நடிகை விருது உங்களுக்குக் கிடச்சிருக்கு...'' என்றதும், ஒரு நிமிஷம் அப்படியே உறைந்து போய் உட்கார்ந்து விட்டாள். கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர். வார்த்தைகள் சிக்கிக் கொண்டு வெறும் காற்று மட்டும் வெளிக் கிளம்ப, ஜென்ம பிரயத்தனப்பட்டு, ''நிஜமாவா?'' என்றாள். ''நிஜம்... நிஜம்... நிஜம்...'' என்று படபடத்தவன் ஒரு நொடி நிதானித்து, ''ஒங்க லட்சியம் நிறைவேறிடுச்சு இல்லையா?'' என்றதற்கு, ''இல்லை. இப்பத்தான் நிறைவேற ஆரம்பிச்சிருக்கு...'' என்றாள்.





"இந்து - இங்கே பாரேன்!''

கடற்கரைச் சாலை சந்திப்பில் நின்று கொண்டிருந்தது அந்த டவுன் பஸ். மாலை நேரத்துக் கூட்டம் நிரம்பி வழிய, கண்டக்டர் 'ரைட்' கொடுக்காமல்; எல்லோருக்கும் டிக்கட்டைப் பரபரப்பாகக் கிழித்துக் கொண்டிருக்க.....

ஜன்னல் ஓரமாய் உட்கார்ந்து சாவகாசமாய் வாரப்பத்திரிகை ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த இந்து - மௌனமாகத் திரும்பி, பக்கத்தில் இருந்த தன் ஆபீஸ் தோழி தேவகியைப் பார்த்தாள்.

''அங்கே பார்.''

தேவகி சுட்டிக்காட்டிய திசையில் திரும்பிப்பார்த்த இந்துவுக்குத் திடீரென்று ஆயிரம் வாட்ஸ் மின்சாரம் தாக்கிய அதிர்ச்சி!

எதிர்பாராமல் சூடுபட்டது போல உடம்பும் மனசும் பதறியது!

''இது... இது... உன் தங்கை உமா இல்லை?''


தேவகியின் கேள்விக்கு மௌனமாகத் தலையசைத்து ஆமோதித்தாள்! முகம் ஒரு கணத்தில் வெட்கத்திலும், வேதனையிலுமாய் இறுகிப் போயிற்று!

அவள் தர்மசங்கடம் உணர்ந்த தேவகி, 'சட்'டென்று அவள் கைகளை எடுத்துத் தன் கைக்குள் வைத்துக் கொண்டு ''டேக்கிட் ஈஸி இந்து.... டோன்ட் கெட் அப்செட்!'' என்றாள்!

பஸ் கிளம்புமுன், இந்து மீண்டும் வெளியே பார்த்தாள்.. சந்தேகமே இல்லை! தங்கை உமாதான்! பாதை ஓரத்து 'கூல்டிரிங்ஸ்டால்' முன் - யாரோ ஒருவனுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள் உமா! கையில் கோல்ட் ஸ்பாட் பாட்டில். நல்லவேளை இருவரும் தனித்தனி பாட்டில்கள் தனித்தனி ஸ்ட்ராக்கள். இன்னும் ஒரே பாட்டிலில் ரெண்டு ஸ்ட்ராக்களைப் போட்டுத் தலையை இடித்துக் கொண்டு சாப்பிடும் அளவுக்கு

உமாவா இப்படி...?

அரவிந்தன்



நெருக்கம் வரவில்லையோ!'' என்று நினைத்துக் கொண்டாள் இந்து!

மனத்துக்குள் கசப்பான உணர்வுகள்.

முப்பது வயதைத் தொட்டுவிட்ட பிறகும் தனக்கென்று கல்யாணம், கார்த்தி - குடும்பம் - குழந்தை - என்று எந்த சிந்தனையும் இல்லாமல் அந்தக் குடும்பத்துக்காகத் தானும் ஓர் இயந்திரமாக உழைத்துக் கொண்டிருக்கும் தன்னுடைய இவ்வளவு நாளின் கனவுகளும், தியாகங்களும் அந்த ஒரு நொடியில் அனாவசியங்களாய், அர்த்தமற்றவைகளாய் விழுந்து நொறுங்கிப் போக, இந்து உடைந்து போனாள்!

அவளுக்குப் பதினெட்டு வயதாகும் போதே அவளையும் அவளோடு சேர்த்து இரண்டு தங்கைகள் - ஒரு தம்பியையும் - நோயாளியான தன் மனைவியையும் விட்டுவிட்டுக் கண்ணை மூடி விட்டார் அவள் அப்பா!

அப்போது அந்தக் குடும்பத்தில் ஓரளவு விவரம் தெரிந்தவர்கள் என்ற நிலையில் இந்துவும் அவள் அம்மாவும்தான்! மற்றவர்கள் எல்லோரும் இரண்டும் கெட்டான் வயதில்....!

இந்துவுக்குள் எங்கிருந்துதான் அப்படி ஒரு தைரியமும் மன உறுதியும் வந்ததோ தெரியாது! அவள்தான் முதன் முதலில் எழுந்து நின்றாள்! அந்தக் குடும்பத்தைத் தன் மென்மையான தோள்களில் தாங்கிக் கொண்டாள்.

அவள் அப்பா வேலை பார்த்த ஆபீஸிலேயே அவளுக்கு ஒரு வேலை கிடைத்தது. காலேஜ் படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, கையில் டிபன் பாக்ஸுடன் வேலைக்குக் கிளம்பினாள் இந்து!

அன்றைக்குக் கிளம்பியவள்தான். இன்றைக்கு முப்பது வயதாகப் போகிறது. அவள் நடையும் தளரவில்லை. அவள் மனமும் தளரவில்லை.

தனக்கென்று ஒரு புடைவை வேண்டும், நகை வேண்டும் என்றெல்லாம் அவள் ஆசைப்பட்டதே இல்லை. கிடைத்த பணம் எல்லாமே அவள் குடும்பத்துக்கே செலவாயிற்று!

இரண்டு தங்கைகள் - தம்பி - எல்லோரும் நன்றாகப் படித்தார்கள். தன்னால் காலேஜ் படிப்பை முடிக்க முடியாமல் போன ஏக்கம் அவளுக்குள் நிறையவே இருந்தது. ஆகவே தங்கைகள் எவ்வளவு படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ அவ்வளவும் படிக்கட்டும் என்று படிக்க வைத்தாள்.

அவர்களுக்கு ஒரு சின்ன விஷயத்தில் கூட ஏக்கமோ, மனக்குறையோ வரக்கூடாது என்பதற்காகத் தனக்கு எவ்வளவு சிரமம் இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அவர்கள் தேவையை எல்லாம் நிறைவேற்றினாள்!


தன் ஆபீஸ் தோழிகள் காலேஜ் சிநேகிதிகள், கூடப்படித்த பெண்கள் அவர்கள் தங்கைகள் - என்று ஒவ்வொருத்தருக்காய்க் கல்யாணம் ஆனபோது அபூர்வமாகச் சில சமயங்களில் அவள் மனமும் ஒரு கணம் அந்தக் கல்யாணச் சடங்குகளைப் பார்த்து - ''நமக்கும் இப்படி ஒன்று....'' என்று இலேசாக ஏக்கப்படும். ஆனால் நாளடைவில் அதுவும் போய், சலனமற்றவளாகிவிட்டாள்.

தங்கை உமாவுக்கு ரொம்ப அதிர்ஷ்டம்!

அவள் காலேஜ் படிப்பை முடிக்கும் முன்பே அவளுக்கு நல்ல வேலை வாய்ப்புகள் வரத்துவங்கிவிட்டன!

''வேலை கிடைக்குமா? என்ற நிலை போய், கிடைத்த வேலையில் எதைத் தேர்ந்தெடுப்பது?'' - என்ற அளவுக்கு அவளுக்கு நல்ல நல்ல வேலையாகவே வந்து அமைந்தது.

அவள் வேலைக்குப் போக ஆரம்பித்த பிறகுதான் இந்துவுக்குச் சற்று நிம்மதியாக மூச்சு விட முடிந்தது!



ஆயிற்று - இவள் ஒரு நாலைந்து வருஷம் இந்தக் குடும்பப் பாரத்தைச் சுமக்கத் தனக்கு உதவி செய்தால் அதற்குள் அடுத்தவள் படிப்பை முடித்து - அவளும் வேலைக்கு வந்து விடுவாள். அந்த சமயத்தில் உமாவுக்குக் கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டால் பிறகு சின்னவளும், தம்பியும் தான்; தம்பியை எப்படியும் பி.ஈ. படிக்க வைக்க வேண்டும்! அவனும் படித்து ஒரு நல்ல நிலைமைக்கு வந்து விட்டால் சின்னவளுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணி அனுப்பி விடலாம்! அதன் பிறகு.... தம்பிக்கும் ஒரு கல்யாணம் - அப்புறம் அம்மாவும் நானும்.... ரெண்டுபேர் மாத்திரம்.... போதும், இந்தச் சம்பளம் போதும். அதற்குள் எனக்கும் வயதாகிவிடும். ரிடையர்மென்ட் கூட

வந்துவிடும். நானும் தலையெல்லாம் நரைத்து, தங்கைகள் - தம்பி குழந்தைகளை எல்லாம் எடுத்துக் கொஞ்சியபடியே என் காலத்தைப் போக்கிவிடுவேன்....''

தனக்குள்ளாகவே அடுக்கடுக்காகக் கற்பனைக் கோட்டைகளை, அடுக்கிக் கொண்டிருந்தாள் இந்து.

இன்று உமாவைக் கடற்கரையில் பார்த்த பிறகு கோட்டைகள் நொறுங்கி விட்டன! உமா... உமா-வா இப்படி? - எவ்வளவு நல்ல பெண்? எவ்வளவு குடும்பப் பொறுப்போடு பேசுவாள்!

வேலைக்குப் போகத் துவங்கி இன்னும் ஆறுமாசம் கூட ஆகவில்லை. அதற்குள் - அதற்குள்....

ஆயிற்று -

இன்னும் இரண்டு மாசத்தில் தைரியமாக எதிரே வந்து நின்று - ''நான் இவரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறேன்'' என்பாளோ?

''குடும்பத்தைப் பற்றியும்; அதன் நிலைமை பற்றியும் அதற்காகத் தான் இவ்வளவு நாளும் செய்திருக்கும் தியாகங்களையும் பற்றிச் சொன்னால்....''

''அது உன் தலைவிதி - நீ இருக்கிற மாதிரியே நானும் இருக்க வேண்டுமா?'' - என்பாளோ?

சொல்வாள். நிச்சயம் சொல்வாள்! ஒரு ஆளோடு பழக்கம் வந்துவிட்டால் எல்லாமும் சொல்கிற தைரியமும் கூடவே வந்துவிடும்!

இந்து தன்னை எவ்வளவுதான் கட்டுப்படுத்திக் கொண்டாலும் அவளையும் மீறி அழுகை வந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

வீட்டை நெருங்கும் வரை அவள் மனம் அலைபாய்ந்து கொண்டேதான் இருந்தது. வாசல்படியை மிதித்த அந்த கணத்தில் மனம் உறுதிப்பட்டது.

மௌனமாக உள்ளே சென்றாள். மௌனமாகவே பையை மேஜை மீது வீசிவிட்டுப் பின்பக்கம் போய், கைகால் முகட் கழுவிக் கொண்டு வந்தாள்.

ஸ்வாமி விளக்கை ஏற்றி வைத்து எதிரில் கண்களை மூடி நின்ற போது - மனம் சலனங்களை உதிர்த்துவிட்டு, உன்னால் முடியும், உன்னால் முடியும்!'' என்று திரும்பத்திரும்ப மந்திரம் போல உச்சரித்தது!

மாலையில் இருந்த படபடப்பும், அதிர்ச்சியும் கொஞ்சம் குறைந்தமாதிரி இருந்தது!

''அக்கா'' - உமாதான் கூப்பிட்டாள்.

''அக்கா - நீ சாப்பிட்டு விட்டு மாடிக்கு வா!''

நாம்தான் சரியாகப் படிக்க முடியலை நம்ம குழந்தைகளாவது நன்றாகப் படிக்கட்டுமே என்று எனது குழந்தை களை கான்வெண்டில் சேர்த்தேன்.

இங்லீஷ் ஈஸி





சுஜா!..

கொஞ்சநாள் வரைக்கும் என் கணவர், குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து அவர்கள் ஹோம் ஓர்க் செய்ய மிகவும் உதவியாக இருந் தார். ஆனால் அவருக்கு, ஆபீஸ் வேலை அதிகமாக இருந்ததால் அவரால் குழந்தைகளுக்கு ஹெல்ப் பண்ண முடிய வில்லை.

குழந்தைகள் ஹோம் ஓர்க் செய்ய எனது உதவியை நாடும் போது எனக்கு மிகவும் வேதனையாக இருக்கும். அதுவும் இங்கிலீஷ்கிராமர் சம்மந்தமாக அவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு பதில் சொல்ல முடியாமல் திண்டாடி னேன்.

எனக்கு இங்கிலீஷ் தெரியாது என்பதை குழந்தைகளிடம் சொல்லிக் கொள்ளவும் முடியவில்லை.

வாரப் பத்திரிக்கை ஒன்றைப் புரட்டும் போது "வீட்டிலிருந்தபடியே இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம்" என்ற விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

ட்ரை பண்ணிப் பார்க்கலாமே என்று, அவரது சம்மதத்துடன் விவேகானந்தா கல்வி நிலையத்தில் சேர்ந்தேன்.

முதல் மூன்று மாதங்களில் வாக்கியங் களை அமைக்கப் பழகி, ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டேன்.

அடுத்த மூன்று மாதங்களில் அவர்கள் சொல்லியிருந்தபடி பயிற்சி களைச் செய்து பழகி "ஸ்போக்கன் இங்கிலீஷைக்" கற்றுக்கொண்டேன்.

இப்பொழுது குழந்தைகளுக்கு, என்னால் இங்கிலீஷ் கிராமரை அவர் களுக்குப் புரியும் வகையில் சொல்லிக் கொடுக்க முடிகிறது.

குழந்தைகளோட சேர்ந்து நானும் இங்கிலீஷில சரளமாகப் பேசும் போது எனக்கே ரொம்ப பெருமையா இருக்கு!

—Mrs. ஜானகி சுந்தர்

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில், தபால் மூலம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்.

"நேர்முகப் பயிற்சியும் உண்டு"

கீழ்க்கண்ட முகவரியில் இன்றே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
9, நடேசன் தெரு, தி.நகர்,
சென்னை 600 017.

NAGA

இந்து அவளை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தாள்.

''ஆமாம் - சாப்பிட்டு விட்டு மாடிக்கு வா... உன்கிட்டே கொஞ்சம் தனியாகப் பேசணும்!''

'நாளைக்கோ, எப்போதோ நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்த அந்த விபரீதம் இன்றைக்கே நடக்கப்போகிறது!' என்று அவள் உள் மனம் எச்சரித்தது!

அவள் என்ன சொன்னாலும் அதை எதிர்கொள்கிற மன உறுதியுடன் இந்து அப்போதே எழுந்து மொட்டை மாடிக்குப் போனாள்.

உமா - பின்னாலேயே வந்தவள், ''அக்கா - நான் ஒண்ணு, சொல்வேன். கோபப்படாம கேக்கணும்!'' என்றாள்.

இந்துவின் இதயத்தில் குதிரையோட்டம்!

''அக்கா. என் ஆபீஸிலே விசு விசுன்னு ஒருத்தர். ஆள் நல்ல வாட்ட சாட்டமா சிவப்பா இருப்பார். சிரிச்சா கன்னத்திலே குழி விழும். உன்னைவிட ஒருவயசோ ரெண்டு வயசோ அதிகம் இருக்கும். ரொம்ப நல்லவர். அவரை அவரை....''

இந்து அருகில் இருந்த கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டாள். உமா சொல்லப் போவதைத் தாங்கிக் கொள்கிற மனோதைர்யம் இல்லாதவளாய் அவளைப் பார்த்தாள்.

''அவரை - நீ கல்யாணம் பண்ணிக்கணும் அக்கா!''


''உமா!'' - இந்து கூவினாள்.

''ஆமாம் அக்கா. இவ்வளவு நாளும் நீ இந்தக் குடும்பத்துக்காக ஓடி ஓடி உழைச்சாச்சு! போதும் அக்கா! இனிமே இந்தக் குடும்பத்தை நான் பார்த்துக்கறேன். ....அவர் ரொம்ப நல்லவர் அக்கா. நான் உன்னைப் பத்தி அவர்கிட்டே நிறைய சொல்லி இருக்கிறேன். அவருக்கும் தங்கைகள் ரெண்டுபேர். அவங்களுக்குக் கல்யாணம் பண்ணிவிட்டுத்தான் தான் பண்ணிக்கணும்னு காத்திருந்ததாலேதான் இவ்வளவு லேட் ஆயிடுச்சு. இன்னிக்குத்தான் பீச்சுலே தனியா பேசிச் சம்மதம் கேட்டேன். அவர் ஓகே சொல்லி விட்டார். நீயும் ஓகே என்றால்....!''

உமா பேசிக் கொண்டே இருந்தாள்.

இந்துவுக்கு ஒரு கணத்தில் எண்சாண் உடம்பும் ஒரு ஜாணாய்க் குறுகிவிட்டதைப் போலாயிற்று!


'சட்'டென்று உமாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்! அவள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் உமாவின் முதுகை நனைத்துக் கொண்டிருந்தது! - அந்த அழுகைக்கு உண்மை காரணம் அறியாத உமா, அக்காவை ஆதரவுடன் தட்டிக் கொடுத்தாள்.



''கவலைப்படாதீங்கப்பா! எம்.பி.பி.எஸ். சீட் கிடைக்கலேன்னா என்ன? எப்படியாவது இந்த மாநிலத்தின் முதல்வர் ஆகி, 'டாக்டர்' பட்டம் வாங்கி உங்க ஆசையை நிறைவேத்தறேன்!''

- என். பாலகிருஷ்ணன்

ஏவுகணை சோதனைக்கு வளமான பூமி எதற்கு?



ஒரிஸ்ஸா, பாலாஸ்ஸோர் மாவட்டத்தில், பாலிபால் அருகே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் National Test Range என்ற ராணுவத்தின் ஏவுகணைத் திட்டம் நிறுவப்பட இருக்கிறது. இந்த இடம் ஒரிஸ்ஸாவிலேயே மிகவும் செழிப்பான விளைச்சல் நிலமும் காடுகளும் நிறைந்தது. லட்சக்கணக்கான மக்கள் தங்கள் விவசாயம், வாழ்வு இவைகளை இழந்து இந்த இடங்களிலிருந்து கட்டாயமாகத் துரத்தப்பட இருக்கிறார்கள். இதற்காக இவர்கள் மத்திய மாநில அரசுகளை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். நமது நாட்டிற்குத் தேவையான வெற்றிலையில் எழுபது சதவீதம் பாலியபாலில்தான் உற்பத்தியாகிறது. ராணுவத்தின் ஏவுகணை பரிசோதனைக் களன் நிறுவுவதற்கு வேறு வறண்ட பிரதேசமாகத் தேர்ந்தெடுக்கக் கூடாதோ?

ஆதாரம் ஹிந்து

தகவல் எஸ். அனந்தராமன்



'டீ.வி.பட்டிமன்றத்துக்கு ஒரு தலைப்பு!'

இந்த வருடம் பொங்கலன்று என்ன பட்டிமன்றம் வைத்துக் கொள்ளலாம் என்று சென்னைத் தொலைக்காட்சி நிலைய அதிகாரிகள் மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தனர்.

ஓர் அதிகாரி, 'பெண்களுக்கு அழகு நீண்ட முடியா அல்லது சுருண்ட முடியா?' எப்படி என் தலைப்பு' என்றார்.

அடுத்த அதிகாரி அவரை முறைத்தார். ''யோ! உமக்கு எப்போதுமே முடியைப் பத்திதான் கவலை. உமக்கு ஆண்டவன் தலையில மூளையும் வைக்கல, முடியும் வைக்கல'' என்றார்.

முடியைப் பற்றிச் சொன்ன அதிகாரி கப்பென வாயை மூடிக் கொண்டார்! பள பளவென்றிருந்த தன் மொஸைக் தலையை வருடிக் கொண்டார்!

''நான் ஒரு ஐடியா சொல்றேன்'' என்றார் வேறு ஒரு அதிகாரி. அவர் முகத்தில் 'சே! என்னமா தலைப்பு நம்ம மண்டையில உதிக்குது' என்ற பிரகாசம் தெரிந்தது.

மற்ற அதிகாரிகள் அவரைச் சுற்றிக் கொண்டார்கள்.

''சொல்லுங்க... சொல்லுங்க'' என்று சந்தோஷமாகக் கத்தினர்.

''நடையில் சிறந்தவள் கண்ணகியா, மாதவியா?'' என்றார் பெருமை பொங்க.

உடனே முதுகில் தாக்கப்பட்டார். ''டேய்! தலைப்பா சொல்ற...! கண்ணகி யின் நடையையும் மாதவியின் நடையை

அருண்



"நம்ம படத்தில் வரும் வில்லன் காரெக்டருக்கு ஒரு பயங்கரமான பேர் வைக்கணும். என்ன பேர் வைக்கலாம்?"

"இதென்ன ஸார் பிரமாதம்?"

"பங்காரப்பா"ன்னு வைச்சுட்டாப் போச்சு!"

- தேவேந்திரன்

யும் யார் பார்த்தது... தலைப்பு சொல்ல வந்திட்டான்'' என்றவர் ''நான் ஒரு தலைப்பு சொல்றேன்'' என்றார்.

முதுகில் அடிபட்டவர் முதுகைத் தடவிக் கொண்டே அடித்தவரைப் பார்த்தார். (முறைத்தார்) இவன் மட்டும் நல்ல தலைப்பு சொல்லிக் கிழிச்சிடப் போறான்...' என்று மனத்தில் கறுவினார்.

முதுகில் தட்டிய அதிகாரி யோசித்தார். சிறிது நேரம் அண்ணாந்து கூரையைப் பார்த்தார். கைகளையும் வலிப்பு வந்தவர் போல ஆட்டிக் கொண்டார்.

அதைப் பார்த்த மற்ற அதிகாரிகள் பயந்து விட்டனர். 'ஐயோ! தலைப்பை யோசித்து யோசித்து இவருக்கு மூளை கலங்கி விட்டதா' என்று பயந்தனர்.

ஆனால் அந்த அதிகாரி பேச ஆரம்பித்தார். ''...பொங்கல் நிகழ்ச்சி மிகவும் சிறப்பா இருக்கணும். பார்க்கிற வன் பயங்கரமா பாராட்டணும்... அப்படிப் பட்ட தலைப்பா இருக்கணும். அதனால... தலைப்பு ரொம்ப கவர்ச்சியா இருக்கணும். எனவே... 'ஆண்களை வதைப்பது சின்ன வீடா அல்லது பெரிய வீடா...' எப்படி நம்ம தலைப்பு?'' என்றார்.

அத்தனை அதிகாரிகளும் சிவபெருமானாக மாறி தங்கள் நெற்றிக் கண்களைத் திறக்க, அதிர்ந்து போன அந்த அதிகாரி.... ''ம்... எனக்கு வயத்தைக் கொஞ்சம் கலக்குது...'' என்று நைசாக நழுவினார்.

ஒவ்வொருவரும் தலைப்புக்காகத் தங்கள் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்க...

அப்போதுதான் அந்த அறைக்குள் நுழைந்தார் அவர்களின் உயர் அதிகாரி.

''என்ன இங்கே கலாட்டா? என்ன எல்லாம் கூடி கூடிப் பேசிட்டிருக்கீங்க... போங்க... போய் 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' சிலைடை எடுத்துத் தயாரா வையுங்க. போங்க....'' என்றார்.

கூடியிருந்த அதிகாரிகள் தங்கள் மேல் அதிகாரியைத் தயக்கத்துடன் பார்த்தனர்.

''....சார்! 'தடங்கலுக்கு வருந்துகிறோம்' சிலைடு எப்பவுமே நம்ம ஸ்டுடியோவில தயாரா இருக்கும்... ஆனா...'' என்று இழுத்தார் ஒரு அதிகாரி.

''என்ன மேன் ஆனா...?'' என்றார் உயர் அதிகாரி அதிகாரத்துடன்.

''...இந்த பொங்கல் நிகழ்ச்சியைப் பத்தி அலசிட்டிருந்தோம்... இந்த வருஷம் புதுமையா நிகழ்ச்சியை அமைக்கணும்னு இருக்கோம்...''

''வெரி குட்!'' மகிழ்ந்து போனார் உயர் அதிகாரி. ''என்ன செய்யப் போறீங்க?'' என்றார்.

''ஒரு பட்டிமன்றம் நடத்தலாம்னு...'' என்று இழுத்தார் ஒரு குட்டி அதிகாரி.

உயர் அதிகாரியின் முகம் மலர்ந்தது. ''ஆகா! மிகவும் புதுமையான நிகழ்ச்சி. இது ஒரு நல்ல கருத்தாகத் தோன்றுகிறது... ஆனால் பாருங்கள்... நிகழ்ச்சியை நீட்ட முடியாது... ஏன் என்றால் நேரம் பற்றாக் குறை...'' என்றார் அதிகாரி எதிரொலி நினைப்பில்.

''சார்! நாம இப்ப எதிரொலி நிகழ்ச்சில இல்லை'' என்று நினைப்பூட்டினார் மற்றொரு அதிகாரி.

''ஓ! ஆமாம்'' என்ற அந்த உயர் அதிகாரி, ''பொங்கலுக்குப் பட்டிமன்றமே வைச்சிடலாம்'' என்றார்.

''அதற்குத்தான் ஒரு நல்ல தலைப்பைத் தேடிட்டிருக்கிறோம்'' என்றனர் அதிகாரிகள்.

''சே! இதுக்கா இவ்வளவு கஷ்டப் படுறீங்க... நான் ஒரு நல்ல தலைப்பா சொல்றேன்... பொங்கல் என்பது விவசாயத்தைப் பற்றியது. அதுவும் மாட்டுப் பொங்கல் என்பது மிகவும் முக்கியமானது. அதனால மாடு, எருமை, இப்படி - இவைகளைச் சம்பந்தப்படுத்தித் தலைப்பு வைச்சா நல்லா இருக்கும்...''

உடனே குட்டி அதிகாரிகள் பலமாகக் கைதட்டினர். ''அபாரமான ஐடியா'' என்றனர்.

அந்த உயர் அதிகாரி தன்னைச் சுற்றிலும் இருந்த குட்டி அதிகாரிகளைப் பெருமையாகப் பார்த்துக் கொண்டார். ''நான் தலைப்பைச் சொல்றேன்... எழுதிக்கிங்க'' என்றவர் மிக உற்சாகத்துடன் சொன்னார் :

''கருப்பில் சிறந்தது டெல்லி எருமையா அல்லது சென்னை எருமையா?'' எப்படி தலைப்பு என்றார்.

''தூள் சார்! கொன்னுட்டிங்க!'' என்றனர் குட்டி அதிகாரிகள். அவர்களின் உற்சாகக் கை தட்டு வானைப் பிளந்தது.

ஒரு ஷெட்யூல் முடிந்ததும் நானும் சிவாஜியும் படத்தின் 'ரஷ்' போட்டுப் பார்த்தோம். பின்னர் இருவரும் ஒரே காரில் வீடு திரும்பினோம். வழியில் சிவாஜியிடம் நான் ஒரு கருத்தை வெளியிட்டேன் : ''ரஷ் பார்த்த பிறகுதான் தெரிகிறது; படத்தில் உங்க சிகை அலங்காரம் திருப்தியாய் அமையவில்லை. கேரக்டருக்குப் பொருந்தவில்லை. அதில் சில மாற்றங்கள் செய்தால் நல்ல கெட்-அப் கிடைக்கும். ஒரு ஷெட்யூல் முடிந்து விட்டாலும் பாதகமில்லை. ஹேர் ஸ்டைல் மாற்றி உங்கள் சம்பந்தப்பட்ட காட்சிகளை மட்டும் ரி-ஷூட் பண்ணி விடலாம். பிரமாதமாக அமையும்....''

சிவாஜி பதில் ஏதும் கூறா விட்டாலும் என் கருத்தை ஆமோதிப்பவர் போல் தலையசைத்தார்.



☛ நெஞ்சம் மறப்பதில்லை படத்தில் ஒரு காட்சி

இது நடந்த சில நாட்களில் நான் 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்தின் ஷூட்டிங் ஷெட்யூலுக்காகத் திருப்பூர் சென்று விட்டேன். சென்னை திரும்பி வந்த மறுதினம் வேலுமணி என்னிடம், ''நான், 'யாருக்காக அழுதான்' படத்தை எடுக்கும் திட்டத்தைக் கைவிடுவதாக இருக்கிறேன்'' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

''ஏன்? ஏன்?'' என்று நான் திடுக்கிட்டுக் கேட்டேன்.

''சிவாஜிக்கு விக் சரியில்லைன்னு சொல்லிட்டீங்களாம். அதிலே அவருக்கு மனவருத்தம். படம் பண்ண வேண்டாம்னு நெனைக்கிறார்...'' என்றார்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'சிவாஜியின் சிகை அலங்காரம் கேரக்டருக்குப் பொருத்தமாய் இன்னும் சிறப்பாக அமைய முடியும்' என்று நான் தெரிவித்ததை அவர் எப்படி தவறாகப் புரிந்து கொண்டார்?

இன்றுவரை எனக்கு அது மர்மமாகவே இருக்கிறது. இத்தனைக்கும் அது சிவாஜிக்கும் எனக்கும் இடையே நேரடியாக நடந்த பேச்சு. மூன்றாவது மனிதர் எதோ திரித்துக் கூறி விட்டார் என்று சொல்வதற்கில்லை. இந்த விஷயத்தை மேலும் கிளறாமல் அப்படியே விட்டு விட்டேன்.

என் குணம் அப்படி. அடுத்தவர் மனம் புண்படும்படி நான் நடந்து கொண்டிருந்தால் வருத்தம் தெரிவிக்கச் சிறிதும் தயங்க மாட்டேன். ஆனால் என் மீது தவறு ஏதும் இல்லாத போது, வலியச் சென்று, தன்னிலை விளக்கம் தருவது எனக்கு உடன்பாடில்லாத விஷயம்.

சிவாஜியும் நானும் அந்தச் சம்பவத்துக்கு முன்னும் பின்னும் இன்றுவரை நெருங்கிய நண்பர்களே. ஆனால் இன்று வரை நாங்கள் ஒரு தடவை கூட அந்தச் சம்பவம் பற்றிப் பேசியது கிடையாது. அந்தச் சம்பவம் அன்றோடு முடிந்து போயிற்று. அவ்வளவுதான்!

''நெஞ்சம் மறப்பதில்லை''யைத் தொடர்ந்து 'சித்ராலயா' பானருக்குச் சொந்தப் படம் எடுக்கத் தீர்மானித்தோம். உடனடியாக டைட்டில் மனத்தில் உதயமாயிற்று. ''காதலிக்க நேரமில்லை!'' கதை என்ன? நடிகர்கள் யார்? ஒன்றும் தெரியாது! தலைப்பு மட்டும் முந்திரிக் கொட்டையாகத் துருத்திக் கொண்டு நின்றது! இதைவிடவும் பெரிய அதிசயம் ஒன்று என்னவென்றால், ஒருவழியாகக் கதை உருவாகி, ஒரு ஷெட்யூல் ஷூட்டிங்கும் முடிந்த பிறகு, நான் பார்ட்னர்களை அழைத்து, ''படத்தை மேலும் தொடராமல் இத்துடன் நிறுத்தி விடலாம்'' என்று சொன்னதுதான்! ஏன் என்று கேட்கிறீர்களா? அடுத்த வாரம் சொல்கிறேனே!

படம் உதவி :

பிலிம் நியூஸ் ஆனந்தன்

டைரக்டர் ஸ்ரீதர்

வீட்டு வேலை

கோபி, தங்கை யமுனாவை ரயிலேற்றி விட ஸ்டேஷனுக்கு வந்திருந்தான். ரயில் அரைமணி நேரம் தாமதமாக வருவதாக அறிவிக்கப்பட்டதால், பிளாட்பாரத்து ஓரமாகப் போடப்பட்டிருந்த பெஞ்சில் இருவரும் உட்கார்ந்தார்கள்.

''கோபி... நான் ஒன்று சொன்னால் தப்பாக எடுத்துக் கொள்ள மாட்டாயே...'' எனத் தொடங்கினாள் யமுனா.

''என்னிடம் பேச என்ன தயக்கம்... சொல்லேன்!'' என்றான் கோபி.

''நானும் இந்தப் பத்து நாட்களாகக் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன். சித்ரா தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கிறாளே தவிர, அம்மாவுக்கு உதவியாக ஒரு துரும்பு கூட எடுத்துப் போடுவதில்லை.''

கோபி பதிலே பேசவில்லை.

''பார்த்தாயா! நான் சொன்னதைத் தப்பாக எடுத்துக் கொண்டு விட்டாய்...'' எனக் குறைப்பட்டுக் கொண்டாள் யமுனா.

''தப்பாக இல்லை யமுனா... எனக்கு இத்தனை நாள் தெரியாமல் போய் விட்டதே என்றுதான் யோசிக்கிறேன்.''

''நீ வீட்டுக்குப் போனவுடன் சித்ராவிடம் இதைப் பற்றி ஒன்றும் கேட்காதே... அனாவசியமாக எங்களுக்குள் மனத்தாங்கல் வரும். நீயே இரண்டு நாள் கவனி. உனக்கே தெரியவரும்.''

மறுநாள் இரவு.

''சித்ரா...'' என அழைத்தான் கோபி.

''உம்...''

''இப்போதெல்லாம் வேலைக்குப் போற பொண்ணு ஒண்ணும் அபூர்வம் இல்லை. எல்லா வீட்டிலேயும் இருக்கா. வேலைக்குப் போறதுக்கு முந்தியும் அத்தனை வேலையும் வீட்டிலே செய்யறா. சாயங்காலம் திரும்பி வந்ததும் ஒய்ந்து போய் உட்கார்ந்துடறதில்லே. மறுபடியும் தன் வீடுங்கற நெனைப்பிலே எல்லா வேலையும் அவாளே செய்யறா. துணைக்கு, உதவிக்குன்னு யாரையும் தேடறதில்லே.''

''எதுக்குச் சுத்தி வளைச்சுப் பேசறேள்...? நான் வீட்டு வேலை எதையும் செய்யறதில்லேன்னுதானே சொல்லிக் காட்டறீங்க?''

''நோ. நோ. உன்னை நான் குற்றம் சொல்லலே. என் மனசிலே பட்டதைச் சொன்னேன். நான் சொன்னதை நீயே யோசித்துப் பாரு. உனக்கே சரின்னு தோணும்!''

மறுநாள் காலை ஆறு மணி.

வழக்கம் போல் கண்களைத் திறக்காமல் பக்கத்துப் படுக்கையைத் துழாவினான். காலியாக இருந்தது.

சித்ரா என்ன இருந்தாலும் புத்திசாலி. ஒரு கோடி காட்டியதும் சட் என்று புரிந்து கொண்டு விட்டாளே.

அறைவாசலில் சித்ரா. தலைக்குக் குளித்து விட்டு ஈரம் போகத் துண்டைச் சுற்றிக் கொண்டு, நெற்றியில் குங்குமத்துடன் ''பளிச்'' என நின்று கொண்டிருந்தாள்.

''எழுந்திருங்கள்... காப்பி ரெடி.''

அறையை விட்டு வெளியே வந்த கோபி, அம்மா பூஜையறையில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

கோபி பல்லைத் தேய்த்து விட்டுக் காப்பி குடித்து முடித்த பிறகு, கையில் பேப்பருடன் உட்கார்ந்தான்.

பேப்பரில் தலைப்புச் செய்திகளைப் படித்து முடித்தான்.

பாத்ரூமில் ஷேவிங் செட், வெந்நீர், டெட்டால் எதையுமே காணோம். சித்ராவிற்கு என்ன ஆயிற்று?

''சித்ரா, ஷேவிங் செட்.''

''ப்ளீஸ்.. கொஞ்சம் நீங்களே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். நான் அரிசி களைந்து கொண்டிருக்கிறேன். அடுப்பில் உலை கொதிக்கிறது.''

சித்ரா உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள்.

''அப்படியே உங்கள் துணிகளைக் கொஞ்சம் கசக்கி உலர்த்தி விடுங்கள். நான் பகல் டிபன் எடுத்து வைத்துக் கொண்டு இருக்கிறேன்.''

குளித்து விட்டுத் தோய்த்ததால் உடம்பெல்லாம் வியர்வை எடுத்தது. குளித்து விட்டு வந்த புத்துணர்வு அறவே இல்லை.

எப்படியோ இரண்டு பேரும் ஆபீஸிற்குப் புறப்பட்டார்கள்.

சித்ரா அவனிடம் ஒரு ஜாபிதாவைக் கொடுத்தாள்.

''டவுன் ஹால் ரோட்டில் கண்டி கலைமகள் ஸ்டோர்ஸுக்கு எதிரில் உள்ள வெண்ணெய்க் கடையில் அரைக் கிலோ வெண்ணெய் வாங்கிக் கொள்ளுங்கள். அம்மன் சந்நிதியில் மீனாட்சி அப்பளம் ஸ்டோர்ஸில் மிளகு அப்பளம் என்று கேட்டு ஒரு பாக்கெட் வாங்கிக் கொள்ளுங்கள். அப்படியே ஆர்ய வைத்திய சாலையில் அம்மா மூட்டு வலிக்குத்



தைலம்....''

''என்னால இதெல்லாம் முடியாது. ஆபீஸ் வேலை முடிந்தால் எப்படா வீடு வந்து சேரலாம் என அடித்துப் போட்டது போல் இருக்கும். நான் அலைய மாட்டேன்.''

''வேறே யார் செய்வார்கள்? ஆபீஸ் முடிந்தவுடன் வீடு திரும்பினால்தானே ராத்திரி சமையலை ஆரம்பிக்க முடியும்! நாளைக்கு டிபனுக்கு மாவு அரைக்க வேண்டும்! துணிகளை மடித்து வைத்து இஸ்திரி போட்டு வைக்க வேண்டும்...''

கோபி அன்று வீடு திரும்பும் போது மணி ஒன்பது. வீடு திரும்பியவனுக்கு ஏக எரிச்சல்.

அவன் தாய் நாற்காலியில் உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருக்க, சித்ரா உள்ளே ஏதோ வேலையாக இருந்தாள்.

''சித்ரா... சித்ரா'' என அழைத்தான்.

''காலை அலம்பிக் கொண்டு வாருங்கள். சமையல்கட்டில் கீழே உட்கார்ந்து சாப்பிட்டு விடலாம். எனக்கும் எடுத்துப் போட வசதியாக இருக்கும்.

''இன்றைக்கு உனக்கு என்ன ஆயிற்று சித்ரா. காலையிலிருந்து என்னையே ஏவிக் கொண்டிருக்கிறாய்?''

''என்னப்பா பண்ணறது? என்னை நகரக் கூடாதுன்னு உத்தரவு போட்டுட்டுத் தானே எல்லாம் செய் யறா! எதுக்கு நீ இப்போ அலுத்துக்கறே?''

தன் அறைக்குத் திரும்பிய கோபிக்குத் தலை சுற்றியது.

''இதோ பாருடா கோபி... ஒரு வீட்டில் சமைப்பது பெரிய வேலையாகத் தெரிகிறது. ஏன்னா சாப்பாடு முக்கியம்கிறதுனாலே. வருடக்கணக்கா சமைக்கிறவாளுக்கு இந்தக் காலத்திலே நின்ன இடத்திலே ஏற்றி, இறக்கிச் சமைக்கிறது பெரிய காரியம் இல்லை. அதைத் தவிர வீட்டுலே எத்தனை சுற்றுக் காரியம் இருக்கு! வெளி வேலை எத்தனை இருக்கு! அதைப் பார்க்கறதுதான் சிரமம். உன்னைச் சொல்லிக் குத்தம் இல்லே. எத்தனையோ வீட்டுலே பெரியவர்களுக்கே இது தெரியறதில்லே. தான் ஏதோ பெரிதாகக் கஷ்டப்படறாப் போலே மாஞ்சு போறா. குடும்பம்னா ஒருத்தருக்கொருத்தர் அனுசரணையாப் போறதுதான் பெரிசு. நீயா, நானா எனப் போட்டி போடறது இல்லே. நேற்று வரைக்கும் சித்ரா சும்மா இருக்கறதாத்தானே நெனைச்சே... இப்போ புரியறதா எத்தனை வேலை செய்யறான்னு... உன் சௌகரியத்தைக் கவனிக்கிறதே பெரிய வேலைடா அவளுக்கு.''

''உம்'' என ஒப்புக் கொண்டான் கோபி.

மறுநாள் காலை சமையலறையிலிருந்து காப்பிப் பொடியில் சுடுநீர் ஊற்றும் மணம் நாசியை வந்து வருடியது.

அம்மாதான்!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்...

கல்கி மார்ச் 1, 1942

பிறவிக் கலைஞர்

இக்காலத்தில் நடனக் கலைஞர்கள் அநேகர் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுக்கும் உதய சங்கருக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் நடனக் கலையைப் பயின்று கலைஞர்கள் ஆகிறார்கள். ஆனால் உதயசங்கரை நடனக் கலையே தேடிச் சென்று அடைந்திருக்கிறது. குயிலுக்கு இசை எப்படி இயற்கையோ, அப்படியே உதய சங்கருக்கு நடனக் கலை இயற்கையாகும்.



இப்படிப் பிறவியிலேயே நடனக் கலைஞராயிருக்கிறபடியால்தான் உதய சங்கருடைய நடனத்தை நமது பாரத தேசத்திலே மட்டுமன்றி அமெரிக்கா முதலிய மேனாடுகளிலும் பார்த்தவர்களெல்லாம் போற்றுகிறார்கள்.

நடனம் ஆடிப் பணம் சம்பாதிப்பதுடன் உதயசங்கருடைய கலைப் பிரேமை நின்று விடவில்லை. வெண்பனி சூழ்ந்த இமயமலையின் அடிவாரத்தில் அல்மோரா என்னுமிடத்தில் அவர் ஒரு கலைஞான க்ஷேத்திரத்தை ஏற்படுத்திச் சிறப்பாக நடத்தி வருகிறார்.

உதய சங்கருக்கு நாளது மார்ச் மீ 3ஆ யன்று திருமணம் நடக்கும் செய்தி அறிந்து கலைப்பிரியர்கள் எல்லாம் தத்தமக்கே கல்யாணம் வருவது போல் மகிழ்ச்சியடைவார்கள். மணப்பெண், உதய சங்கரின் நடன கோஷ்டியைச் சேர்ந்தவரான ஸ்ரீமதி அமலா நந்தி பி.ஏ. தமிழ் மக்களின் சார்பாக இந்த நடன கலைத் தம்பதிகளுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

- அட்டைப் பட விளக்கம்

பதவி ஏற்பு

புதிதாக மந்திரி சபையில் பதவி ஏற்றவர்களில் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் முக்கியமானவர். யுத்தத்துக்கு முன்னால் இவர் இங்கிலாந்தில் எல்லா அரசியல் கட்சிகளாலும் ஒதுக்கப்பட்டிருந்தார். ருஷியாவுடன் பிரிட்டன் சிநேகமாயிருக்க வேண்டுமென்றும், இந்தியாவுக்கு சுயராஜ்யம் கொடுக்க வேண்டுமென்றும் இவர் வற்புறுத்தியது ஒருவருக்கும் பிடிக்கவில்லை. யுத்தத்தின் கடுமை அதிகமாக ஆக, இவருடைய உதவி பிரிட்டிஷ் மந்திரி சபைக்குத் தேவையாயிருந்தது. ருஷியாவுக்கு இவரைத் தூதராக அனுப்பினார்கள். இவருடைய முயற்சியினால்தான் பிரிட்டனும் ருசியாவும் யுத்தத்தில் ஒத்துழைத்து ஜெர்மனியுடன் போரிடுவது சாத்தியமாயிற்று. ருஷியாவில் தமது வேலை முடிந்து விட்டதென்று இங்கிலாந்துக்குத் திரும்பினார்; திரும்பியதும் பிரிட்டிஷ் யுத்த முயற்சிகள் தூங்கி விழுவது பற்றிக் காரசாரமாய்ப் பேசியதுடன், ''இந்தியர்களின் ஒத்துழைப்பை யுத்த முயற்சிக்குப் பெற வேண்டும்'' என்றும் வற்புறுத்தினார். ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் வெகு திறமைசாலி என்றும், ''வருங்கால பிரதம மந்திரி'' என்றும் சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் அவரைப் புகழ்ந்தன.

இப்போது அவருக்கு யுத்த மந்திரி சபையில் பதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

- என்ன சேதி

திருச்சி ரேடியோ

சென்னை ரேடியோவில் நடக்கும் கச்சேரிகளில் பலவற்றை, இப்போது திருச்சியில் அஞ்சல் செய்கிறார்கள்.

சென்னை ரேடியோ பல பாஷைக்காரர்களுக்குப் பொதுவாக இப்போது நடந்து வருகிறது. தமிழ் ஸாஹித்யங்களுக்குப் பிரதான்யம் கொடுக்கும்படி சென்னை ரேடியோவை இப்போதைக்குக் கேட்க முடியாது. திருச்சி ரேடியோதான் இதைச் செய்ய வேண்டும். சென்னைக் கச்சேரிகளை அஞ்சல் செய்யும் முறை இதற்குப் பெரும் இடைஞ்சலாகும்.

திருச்சி நிலையத்துக்கென்றே கச்சேரிகளை ஏற்படுத்தினால்தான், தமிழ் ஸாஹித்யங்களுக்கு முக்கியம் கொடுத்துக் கச்சேரிகளை அமைக்க முடியும்.

- கர்நாடகம்

அப்பு கட்சி Vs அலமு கட்சி

வைஷாலி வருவதை முதலில் பார்த்தவன் அப்புதான். "சீச்சி!" என்று கத்தியபடி அருகில் ஓடினான். சித்திக்கு அவன் வைத்திருக்கும் பெயர் சீச்சி.

"அட என் அப்புக் குட்டித் தங்கம்!" என்று குனிந்து அவனை முத்தமிட்டாள் வைஷாலி. அவனின் மூக்குச் சளி முழுவதும் அவளின் கன்னத்தில்.

சீச்சியின் கைப் பையைப் பிடுங்கிக் கொண்டு ஹவுசிங் போர்டு குடியிருப்பு மாடிப்படி ஏறினான். "சீச்சி வந்தாச்சு, அம்மா, சீச்சி...." என்ற கும்மாளம் வேறு.

"என்னடா அதிசயம்? தினமும்தான் உன் சீச்சி வர்றா" என்றாள் எதிர்ப் பகுதி பிரேமா.

"அய்! சீச்சி ஜெம்ஸ் வாங்கி வந்திருக்கா!"

"டே, அவ கைப் பையைத் திறக்கக் கூடாது. அவ பழைய சீச்சி இல்ல. அவளைச் சித்தப்பாக் கைல பிடிச்சுக் குடு தாச்சு...." என்றாள் பர்வதம்.

"சீ, ஏங்க்கா அப்படிப் பிரிச்சுப் பேசற அவன் சமத்து. என் செல்ல வளர்ப்பு. நீ எ பையைத் திறக்கலாம்டா...." என்றா வைஷாலி.

"தோசை எடுத்துக்கோயேண்டி சூடா சட்னியும் இருக்கு...."

"குடு அக்கா, கேள்வி என்ன? உன் கை மணமே தனி."

"சீச்சி, நான் உன் வீட்டுக்கு வரவா பூதம் பாட்டி திட்டாமப் பாத்துக்கிறியா?"

"தாராளமா வா. உன் சீச்சி வீட்டுக்கு ந வரத் தடை ஏது?"

"பூதம் பாட்டி எப்பப் பார் திட்டும். டே, டீ.வில என்ன விஷமம்? லைட் சுவிச்சை ஏண்டா போட்டுப் போட்டு அணைக்கற? ஹேர் ஆயில் பாட்டிலை எடுத்து என்ன பார்வை? அய்யோ, பிள்ளை வளர்த்திருக்கா பாரு!..." — பூதம் பாட்டியின் குரலை அப்பு 'மிமிக்ரி' செய்ய அக்காவும், தங்கையும் சிரித் தனர்.

பூதம் பாட்டி, வைஷாலி யின் மாமியார். நரைத் தலை. முன் கீழ் வரிசைப் பற்கள் இரண்டு விழுந்து, பெரும் இடைவெளி இருக் கும்.



கண்ணன் மகேஷ்

''ஷ்! மாப்பிள்ளை வர்றார்....'' என்றாள் பார்வதம்.

வைஷாலியின் கணவன் சாம்பு, ஸ்கூட்டரைத் தெருவில் நிறுத்தி, படி ஏறி வந்தான்.

கதவுக்குப் பின்னால் இருந்து ''பே!'' என்று கத்தி, அப்பு, ''சித்தப்பா!'' என்று முழங்காலைக் கட்டினான்.

போச்சு வெள்ளை பேன்ட்!

''டே, டேய்!'' என்று விலக்கி விட்டான் சாம்பு. ''போகலாமாடி இவளே?...''

''தோசை சாப்பிடுங்க மாப்பிளே!'' - பார்வதம், கை ஒடிந்த நாற்காலி மீது கிடந்த துணிகளை அகற்றினாள்.

''வேண்டாம்...'' என்று அமர்ந்தான் சாம்பு, அழுக்காகி விட்ட வெள்ளை பேன்டைக் கைக்குட்டையால் துடைத்தபடி.

''ஏங்க, அப்பு எவ்வளவு புத்திசாலி தெரியுமா? அஞ்சு வயசுல இப்படி ஒரு மூளை! ஆகாய விமானம் மேல மேல போய் மேகத்துக்குள்ள போயிட்டுதாம்!'' என்றாள் வைஷாலி.

''அவன் மானத்துல கையைக் காமிச்சான். அப்படிச் சொன்னான்னு நீ சொல்ல ஆரம்பிச்சுட்ட!'' என்று காப்பி ஆற்றினான் சாம்பு.

''அப்புவை நம்ம கூடக் கூட்டிப் போவமா? முன்னால நிறுத்தி வெச்சுப் பிங்களாம்....''

''ஸ்கூட்டர்ல த்ரிபிள்ஸ் போகக் கூடாது. இளம்பு....'' என்று படி இறங்கினான் சாம்பு.

வீட்டு வாசலில் 'இரிக், இரிக்' என்று ஹாரன் அடித்தான் சாம்பு. ''அய்! மாமா வந்தாச்சு!'' என்று ஓடி வந்தாள் சிறுமி அலமு.

''க்ரீம் பிஸ்கட்தான் வேணும்னு அடம் பிடிக்கற. சொன்னா கேட்டாத்தானே? பல் எல்லாம் சொத்தை ஆகட்டும், தின்னு வை!'' என்று பிஸ்கட் பாக்கெட்டை நீட்டினான் சாம்பு.



நேரம் ஒதுக்குங்கள்!

சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்,
அஃது இதயத்துக்கு அழகு.
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்,
அஃது அறிவுக்கு அழகு.
விளையாட நேரம் ஒதுக்குங்கள்,
அஃது இளமைக்கு அழகு.
நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்,
அஃது உறவுக்கு அழகு.
உழைப்புக்கு நேரம் ஒதுக்குங்கள்,
அஃது உயர்வுக்கு வழி!

(கல்லூரி சஞ்சிகை ஒன்றிலிருந்து)
- நல்லாலம் சு. இராமசெயம்

''போ மாமா, எனக்கு பிஸ்கட் வேணாம்...'' - அலமு பிஸ்கட் பாக்கெட்டை ஸ்கூட்டர் சீட் மீது வைத்துவிட்டு வீட்டினுள் ஓடினாள்.

''அடடா, விளையாட்டுக்குச் சொன்னேன்டி கண்ணு, கோபமா? ப்ளீஸ், இதை வாங்கிக்கோடி...'' வீட்டினுள் வந்து அலமுவின் கன்னத்தை நிமிண்டினான் சாம்பு.

''என்ன, வந்ததும் வராததுமா மாமனும், மருமாளும் கொஞ்சல்?'' என்றாள் சாம்புவின் அம்மா.

'ஆமாம். அஞ்சாம் கிளாஸ் படிக்கிற பாப்பான்னு நினைப்பு. கழுதைக்கு தினம் தினம் இங்கே என்ன வேலை? அடுத்த தெருவில் தானே இவளின் அப்பாவும், அம்மாவும் இருக்கிறார்கள்? அங்கேயே கிடக்க வேண்டியது தானே?' என்று எரிச்சலுற்றாள் வைஷாலி.

''அட, இன்னிக்கு பிப்ரவரி இருபத்தி ஆறு! நம் அலமுவுக்குப் பன்னிரண்டு முடிந்து பதிமூன்று துவங்குகிறது. எங்க கண் எதிர அன்றொரு நாள் கையையும், காலையும் உதைத்து இத்தனூண்டா கிடந்த குட்டி இன்னிக்கு என்னை மடக்கு மடக்குன்னு மடக்குது! காலம் ஜெட் வேகத்துல பறக்குது!...''

''மாமி உன்னைக் கல்யாணம் பண்ணிண்டும் ரெண்டு வருஷம் ஓடிப் போச்சு மாமா....''

''அ? ரெண்டு வருஷப் பழசுங்ற? எனக்கு என்னவோ கல்யாணநாள் இறுகிறுப்பு இன்னும் அப்படியே இருக்கு.....'' என்று அடுத்த அறைக்குச் சென்றான் சாம்பு உடை மாற்ற.

சாம்பு பிஸ்கட்டும், டீயுமாக நாற்காலியில் அமர, பின்னால் வந்து அவன் கழுத்தைக் கட்டினாள் அலமு. ''ஒரு உதவி மாமா. கம்ப்யூட்டர் பிராப்ளம்ஸ் நடத்தின அன்னிக்கு நான் ஸ்கூல் போகலை. இந்த சம்ஸ் என்னைக் குழப்புது. சொல்லிக் குடு மாமா.''

''மாமிதான் ஸ்கூல்ல கம்ப்யூட்டர் மிஸ். பிரமாதமாச் சொல்லித் தர்றான்னு சகமிஸ்கள் புகழறா. நீ மாமியைப் பிடி....''

''நீங்க வேற, சும்மா இருங்க. நான் சயன்ஸ் மிஸ்தான்.....''

''சரி கொண்டா என்ன பொல்லாத கணக்கு? நாமே நொறுக்கித் தள்ளிடுவோம்....'' என்று கணக்குப் போட அமர்ந்தான் சாம்பு.

ஒரு மணி நேரம் வீண்.

''புரியலியே! பைநரி சிஸ்டத்துல கூட்டலும், கழித்தலும் ஏதோ மாய வித்தையா இருக்கே! சரி, நீ புறப்படு. பிறகு நான் மாமி கிட்ட கேட்டு வெக்கறேன். ஸ்கூட்டர்ல உன்னை வீட்ல கொண்டு விடறேன்...'' என்று புறப்பட்டான் சாம்பு.

வீட்டு வாசலில் கிரிக், கிரிக்! சாம்புதான் அலமுவைக் கொண்டு விட்டுத் திரும்பி இருந்தான். வாசல் கதவை எவரும் வந்து திறக்கவில்லை. சாம்புவே திறந்து உள்ளே வந்தான்.

டி.வியில் ஒரு பெண்மணி ஸ்வெட்டர் பின்னுவது பற்றி விளக்கினாள். வைஷாலி தரையில் அமர்ந்து மாணவ நோட்டுகள் திருத்தினாள். அம்மா சமையலறையில் சப்பாத்தித் தயாரிப்பில்.

''இப்ப திருத்தறியே, சயன்ஸ் நோட்டுகளா?''

''இல்ல. கம்ப்யூட்டர்.''

''அப்ப ஏன் அலமு கேட்டதுக்கு?....''

''அதுக்கு என்ன இப்ப?....''

''ஏய், என்ன பேசற நீ? எதுக்கு அந்தக் குழந்தை மேல வெறுப்பைக் காட்ற? இந்த வீட்ல வளர்ந்த குழந்தை அது. நாங்க அது மேல உசிரையே வைச்சிருக்கோம்....''

வைஷாலி அமைதியாக நோட்டுத் திருத்தினாள்.

''அலமு உங்கிட்டயும் பிரியமாத்தானேடி இருக்கா? அவளை நீ வெறுக்கக் காரணம் என்ன?...''

''நீங்க ஏன் எங்க அப்புவை உதாசீனம் பண்றீங்க? அவன் என் செல்லம்....''

''அந்த மூக்கு ஒழுகிப் பையன்? அப்ப, நினைச்சாலே குமட்டுது!''

''இவ மட்டும் என்ன? தலை முழுக்க ஈரும் பேனும். பார்க்கவே பிடிக்கல.''

''இன்னொரு தடவை நீ அலமுவை அலட்சியம் பண்ணினா, நடக்கிறதே வேற.''

''அவளை எனக்குப் பிடிக்கல. அவ இனி இங்கே வரவேண்டியது இல்ல.''

''உன் முகத்தைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கல. எங்கிட்ட நீ பேசவே வேண் டாம்.''

''ரொம்ப நல்லது!''

மூன்று நாட்கள் ஆயின வைஷாலியும், சாம்புவும் நேருக்கு நேர் பேசி. தனிச் சாப்பாடு, படுக்கை. அவன் ஆபீசுக்கு ஸ்கூட்டரில் போய் வர, அவள் பஸ்ஸில். அம்மா இவர்களுக்கு மௌன சாட்சி. மேலும் இரு நாட்களுக்குப் பிறகு.... வைஷாலியின் அக்கா பர்வதம் வந்தாள். கூடவே வால்போல் ஒட்டிக் கொண்டு அப்பு.

''ஹை! அப்புக்குட்டி என்று வைஷாலி குதூகலத்துடன் வாசலுக்கு ஓடியதைப் பார்த்துச் சாம்புவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

''குடுடா'' என்று பர்வதம் அப்புவின் கையில் ஒரு பொட்டலத்தைத் திணிக்க,

''சித்தப்பா, உங்களுக்காகத்தான் வாங் கினோம்'' என்று அதை நீட்டினான் அப்பு.

வெல்லம் கசிந்த கடலை உருண்டை பொட்டலத்தை வேண்டா வெறுப்பாக வாங்கிக் கொண்டான் சாம்பு.

ச ற் று நே ர ம் அசௌகரியமான மௌனம்.

வைஷாலி காப்பி கலக்க உள்ளே போக, பர்வதம் பின்தொடர்ந்தாள்.

''சித்தப்பா! கட்ல உண்ட பிடிக் காதா....? தின்னு....'' அப்பு சாம்புவிடம் நெருங்கி ஒட்டினான்.

வைஷாலியின் மேலிருந்த கோபத் தையும் சேர்த்துக் குவித்துக் கொண்டு அப்புவின் கையை இரும்புப் பிடியாகப் பிடித்தான் சாம்பு.

''ஆ! வலிக்குது சித்தப்பா....'' என்று அப்பு இனம்புரியாத பயத்துடன் அலற குட்டிப் புயல் போல் கூடத்துக்குள் நுழைந் தாள் வைஷாலி.

புயல் சீறுவதற்குள்.....

''மாமா! அட! இது யாரு அப்புக் குட்டியா....? எப்போ வந்தே....?'' என்ற படி சாம்புவின் பிடியிலிருந்து அவனுக்கு விடுதலை பெற்றுத்தந்தாள் உள்ளே வந்த அலமு.

''மாமா உன் கைல என்ன? கட்ல உண் டையா? கொண்டா - அப்புக்குட்டிக்குக் குடுக்கலாம்...'' என்று அவன் கைப் பொட்டலத்திலிருந்து ஒரு உருண்டையை எடுத்து அப்புவின் வாயில் போட்டாள்.

''எங்கே, அக்காவுக்கு ஒரு கிஸ் குடு பார்க்கலாம்'' என்று அவள் குனிந்து மொழு மொழு கன்னத்தை நீட்ட.....

அப்பு அவசர அ வ ச ர மா க க் கடலையுருண்டையை வாய் ஓரத்தில் ஒதுக்கிக் கொண்டு ஈர உதடுகளால் அழுத்தி முத்தமிட்டான்.

மூக்குச் சளி ஒழுக, கடலையுருண் டையால் உப்பிய கன்னத்துடன் அப்பு அலமுவுக்கு முத்தம் தருவதைப் பார்த்தாள் வைஷாலி.

சட்டென்று குற்ற உணர்வு ஆட் கொள்ள, சாம்புவை ஏறிட்டாள். அவள் பார்வையைச் சந்தித்த கணத்தில் அவ னுள்ளும் ஒரு பிடிவாதம் உ டை ந் து நொறுங்கியது.

''நீங்க சொன்னதைக் கேட்டு ரேஷன் கடையில் எல்லாரும் சிரிச் சாங்களாமே...! அப்படி என்ன சொன்னீங்க?''

''கொஞ்சம் எடையைச் சரியாப் போட்டுக் கொடுங்கன்னு கேட் டேன்...!''

- சீர்காழி வி. ரேவதி



''நீங்க எழுதிப் பிரசுரமான கதைக்கு அன்பளிப்பாக ஆசிரியர் 25 கிராம் காப்பிப் பொடியா அனுப் பிச்சார்?''

''அது காப்பியடிச்ச கதைங்கிற சங்கதி தெரிஞ்சு போச்சு போலிருக்கு.''



பிஞ்சுக் குழந்தைகளை வதைக்கும் பள்ளிகள்!

வருணின் வயது : மூன்றரை. அவனுக்கு அடிக்கடி கடுமையான வயிற்று வலி வருகிறது. இரவில் துர்ச்சொப்பனம் கண்டு அலறுகிறான். அவன் கண்கள் உணர்ச்சியின்றி நிலைகுத்தி நிற்கின்றன....

''இந்தக் குழந்தைக்கு என்ன கோளாறு என்றே முதலில் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை....'' என்கிறார் குழந்தை மருத்துவர் டாக்டர் குலாடி. ''பெற்றோரிடம் தூண்டித் துருவிப் பேசியதில் அவனைப் 'பெரிய பள்ளியில்' சேர்க்க முன் முயற்சிகள் எடுத்து வருகிறார்கள் என்று தெரிந்தது.''

வருணின் தினப்படி வாழ்க்கைமுறை என்ன தெரியுமா....?

காலை ஐந்து மணிக்குப் படுக்கையிலிருந்து எழுப்பப்படுகிறான். பால் புட்டியை வாயில் திணித்து, அவன் அதைக் குடித்து முடிப்பதற்குள் அவசர அவசரமாக உடை மாற்றி, ஐந்தே முக்கால் மணிக்கு அவனை ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றிவிடுகிறார்கள் பெற்றோர்.

பன்னிரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பள்ளியிலிருந்து மதியம் பன்னிரண்டரை மணிக்குத் திரும்புகிறான் வருண்.. மாலை நான்கு முதல் ஆறு மணி வரை டியூஷன். அதன் பின்னர் ஒரு மணி நேரத்துக்கு அவன் அம்மாவுடன் பாடங்கள் படிக்க வேண்டும். பிறகு டி.வி. சீரியல் பார்த்துவிட்டுத் தூங்கலாம். மீண்டும் மறு நாள் காலை ஐந்து மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். அட்டவணைத் திட்டப்படி வாழ்க்கை... இப்பொழுது முதலே இப்படிப் படித்தால்தானே 'பெரிய ஸ்கூலில்' அட்மிஷன் கிடைக்கும்!

''வருணைக் கடைசியில் மன நல நிபுணரிடம் அனுப்பி வைக்க வேண்டியதாயிற்று...'' என்று வருத்தத்துடன் கூறுகிறார் டாக்டர் குலாடி. ''அவன் வயிற்று வலிக்கும் சோகத்துக்கும் துர்ச்சொப்பனங்களுக்கும் காரணம் அவன் மனத்தில் நிலவிய பய உணர்ச்சியே! இப்படித்தான் பல பெற்றோர்கள் குழந்தைகளின் பால்யத்தைத் திருடிக் கொள்கிறார்கள்'' என்று குற்றம் சாட்டுகிறார்.

இந்தியாவைப் பொறுத்தவரை பிறப்பு, திருமணம், இறப்பு என்ற வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் வரிசையில் நான்காவதாக இடம் பெறுகிறது பள்ளி அட்மிஷன்.

கடந்த சில வருடங்களாக இரண்டு, மூன்று வயதுக் குழந்தைகளிடையே அபூர்வமான தொற்று நோய்கள் காணப்பட்டு வருகின்றன என்கிறார்கள் குழந்தை மருத்துவர்கள். அவர்கள் பிஞ்சுப் பருவத்திலேயே பள்ளிக்கு அனுப்பப்படுவதால் வரும் கொடுமை இது என்கிறார்கள்.

Indian Academy of Paediatricians என்ற குழந்தை மருத்துவர்கள் அமைப்பு இந்தக் கொடுமையை எதிர்த்துக் குரல் கொடுத்திருக்கிறது. 'உங்கள் குழந்தைகளைச் சுதந்திரமாக விடுங்கள்; இல்லாவிட்டால் அவர்கள் அழிவுக்கு நீங்களே காரணம் ஆவீர்கள்' என்று பெற்றோரை எச்சரித்திருக்கிறது.

புது டெல்லி பள்ளிக்கூடங்களைப் பற்றிய இக்கட்டுரை, தமிழ்நாட்டின் அனேகம் பள்ளிகளுக்கும் பொருந்துவதே.....

பெரிய பிரபலமான பள்ளிகளில் சேருவதற்கான அட்மிஷன் டெஸ்டுகளுக்குக் குழந்தைகளைத் தயார் செய்வதாகக் கூறும் பள்ளிகள் வேறு! புற்றீசல் போல் கிளம்பும் இவை எத்தகையன.....? அவற்றைக் கட்டுப்படுத்தும் சட்டங்கள் எதுவும் கிடையாது. யார் வேண்டுமானாலும் அப்பள்ளிகளை ஆரம்பிக்கலாம். ஒரு சில பால பள்ளிகள் விளையாட்டு பொழுது போக்கு நிலையங்களாக உள்ளன. ஆனால் பெரும்பாலானவை, குழந்தைகளைச் சிறிய அறைகளில் அடைத்து வைத்து எண்ணையும் எழுத்தையும் சிறிய மூளைகளுக்குள் திணிக்கின்றன. மாதிரிப் பரீட்சைகள் வைத்து, குழந்தைகளைப் 'பெரிய பள்ளி'ப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துகின்றன!

சுமார் இருநூற்றைம்பது ஜதை பெற்றோரைப் பேட்டி கண்டதில் அவர்களுள்



சதவிகிதத்தினர் தங்கள் குழந்தைகளை இத்தகைய Pre-School களுக்கு அனுப்பி வருகிறார்கள் என்பது வெளியாயிற்று.

இவர்களது குழந்தைகளுள் 82 சதவிகி தத்தினர் காலைக் கடன் கழிக்கக் கூட நேர மின்றிப் பள்ளிக்கு அவசரமாக அனுப்பப் பட்டனர். 22 சதவிகிதம் குழந்தைகள் காலை உணவுக்கு நேரமில்லாததால், தூங் கியபடியே புட்டிப்பால் அருந்தி விட்டுப் பள்ளிக்குத் தயாரானார்கள். கனமான புத்தக மூட்டைகளைத் தூக்கியதில் பல குழந்தைகளுக்குத் தோள், முதுகு, கால் வலி இருந்தது.

இ ன் னு ம் பல குழந்தைகளுக்குத் திரும்பத் திரும்ப A B C எழுதியதில் கை வலி இருந்தது. 'அம்மா ஏன் என்னைக் கைவிட்டு விட்டாள்' என்ற ஏக்கம் இருந் தது.

''இவ்வாறு குழந்தைகளைத் துன்புறுத் தும் பெற்றோர்களின் எதிர்பார்ப்பு, 'தன் தோட்டத்துச் செடிகள் வேகமாக வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்' எ ன் று விரும்பும் தோட்டக்காரனுடையதைப் போன்றது'' எனக் கூறுகிறார் லேடி இர்வின் கல்லூரி இயக்குனர் டாக்டர் அனந்தலக்ஷ்மி. ''இந்தப் பருவத்தில் குழந் தைகளுக்குத் தேவை ABC அல்ல TLC அதாவது Tender Loving Care.....'' என்கி றார்.

இத்தனை கஷ்டங்களுக்கிடையே பெரிய பரீட்சைக்குத் தயாராகும் குழந் தையைப் பெரிய பள்ளிகள் இன்னும் அதிக மாக வதைக்கின்றன.

பல பள்ளிகளில் நுழைவுத் தேர்வின் போது முழுக்க முழுக்க ஆங்கிலத்தில் உரையாட வேண்டும் என்று எதிர்பார்க் கிறார்கள். நிறங்கள், வடிவங்கள் தெரிந் திருப்பதோடு குழந்தைக்கு மூன்றெழுத்துச் சொற்கள் இரு மொழிகளில் தெரிந்திருக்க வேண்டும்! 'இந்திய கிரிக்கெட் ஆட்டக் காரர்களின் பெயர் என்ன?' 'நமது ஜனாதி பதி யார்?' 'உலக வரை படத்தில் இந்தியா எங்கே என்று சுட்டிக்காட்ட முடியுமா....?' போன்ற கேள்விகள் எல்.கே.ஜி. அட் மிஷன் சோதனையில் கேட்கப்பட்டுள்ளன.

''குழந்தைகள் வெவ்வேறு இயல்பு உடையவர்கள். இயற்கையிலேயே வெட் கமோ, பயமோ அதிகம் படைத்த குழந் தைகளை இப்படி பதினைந்து இருபது நிமிடங்கள் கேள்வி கேட்டு அவர்கள் திற மையை அளவிட்டுவிட நிச்சயமாக முடி யாது'' என்கிறார் லேடி இர்வின் கல்லூரி யின் 'Child Development' துறை விரிவுரை யாளர் டாக்டர் நீரஜா ஷர்மா.

''மூன்று வயதுக் குழந்தையால் மூன்று நிமிடங்களுக்குத்தான் ஒரே விஷயத்தில் கவனம் செலுத்த முடியும். முன்பின் தெரி யாதவர்கள் மிரட்டும் தொனியில் கேட்கும் கேள்விகளுக்கு எதற்காகப் பதில் சொல்ல வேண்டும் என்பதே குழந்தைகளுக்குப் புரி யாது'' என்கிறார் டாக்டர் நீரஜா.

பெற்றோர்களைப் ப ரி சோ தி த் து, அவர்கள் 'பாஸ்' ஆன பிறகு குழந்தை களைப் பரிசோதிக்கும் பள்ளிகளும்

உண்டு. கணவன் மனைவியிடம் ஒ
வினாத்தாள் அளிக்கப்பட்டு அவர்க
அதைத் தனித்தனியே, குறிப்பிட்ட நே
துக்குள் பூர்த்தி செய்யும்படி பணிக்க
படுகிறார்கள். இருவர் விடைகளும் ஒத்து
போனால் அடுத்த கட்டமாகக் குழ
தைக்குப் பரீட்சை. இல்லாவிட்டால் குழ
தையின் அப்ளிகேஷன் நிராகரிக்கப்ப
கிறது!

"பரீட்சை வைத்து, சிறந்த, புத்தி
சாலிக் (நாம் புத்திசாலி என்று நினைக்கும்)
குழந்தைகளை மட்டும் தேர்வு செய்து
சேர்த்துக் கொண்டு பள்ளி நடத்துவதில்
பெருமை கிடையாது" என்கிறார் ரஜனி
குமார். இவர் டைரக்டராக உள்ள ஸ்ப்ரிங்
டேல்ஸ் பள்ளியில் அட்மிஷன் தேர்வுகள்
கிடையாது. எத்தகைய குழந்தையானாலும்
அவனைப் பயிற்சி மூலம் சிறந்த மாண
வனாக உருவாக்குவதில்தான் ஆசிரியரின்
சாமர்த்தியம் இருக்கிறது...." என்கிறார்.

ஆனால் பெரும்பாலான பள்ளிகளில்
இந்த சித்தாந்தம் கிடையாது. மூன்று வயதி
லேயே ஒரு பிஞ்சுக் குழந்தையைப் பரி
சோதித்து, அவர்களது அளவு கடந்த எதிர்
பார்ப்புகளை அவன் பூர்த்தி செய்யா விட்
டால் 'ஃபெயில்' என்ற முத்திரை குத்தி
நிராகரிப்பதே நடைமுறையாக உள்ளது.

இவ்வாறு நிராகரிக்கப்படும் குழந்தை
யின் மனநிலை அதீதமான பாதிப்புக்கு உள்
ளாகும். மாறி மாறிப் பல தேர்வுகள் எழுதி,
மீண்டும் மீண்டும் நிராகரிக்கப் படும்
போது குழந்தைக்குக் கடுமையான மனச்
சோர்வு உண்டாகும். மலர வேண்டிய
மொட்டு சூம்பிப் போகும். குழந்தையின்
இயல்பான கல்வியார்வமே மடிந்துவிடும்.
ஒன்பது அல்லது பத்து வயதுக்குள்
எதிலுமே நாட்டமின்றிச் சோர்ந்து விடு
வான்.

இப்பிரச்னைக்குத் தீர்வு என்ன?
National Progressive Schools Conference
என்ற கருத்தரங்கில் இதைப் பற்றி விவா
தம் நடந்தது. பல்வேறு குடும்பப் பின்
னணிகளிலிருந்தும் ஒரே வட்டாரத்திலிருந்
தும், மாணவர்களுக்கு அட்மிஷன் தரலாம்
எனவும், சீட்டுக் குலுக்கல் முறையில் அட்
மிஷன் தரலாம் என்றும் மனஇயல் நிபு
ணர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். ஆனால்
போதுமான பள்ளிகள் இல்லாததால் இப்
பிரச்னையை எளிதில் தீர்க்க முடிய
வில்லை.

– டைம்ஸ் ஆஃப் இந்தியாவில்
சிம்ரன் பார்கவா எழுதிய
கட்டுரையின் தமிழ் வடிவம்

மௌன விலங்கு

மாமனார் பால் பாத்திரத்தைக் கொண்டு வந்து சமையலறையில் வைத்துவிட்டுப் போனார். அவனுக்குப் பிடித்த பால் பாயசம் செய்வதற்காக இன்று இரண்டு லிட்டர் பால் அதிகப்படியாக சொல்லி வைத்திருந்தாள். பால் காய்ந்ததும் காப்பி போட்டுக் கொண்டு வந்து மாமனாரிடம் கொடுத்தாள்.

இன்னும் அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மல்லாந்து கால்களையும் கைகளையும் நன்றாக விரித்துக் கொண்டு லேசாக வாய் திறந்து தூங்கிக் கொண்டிருந்த விதத்திலேயே அவனது ஆளுமை தெரிந்தது. படுக்கையில் சுவரை ஒட்டினாற்போல காலியாக இருந்த மிகச்சிறிய இடத்தில் தூங்கிப் பழகிப் போய்விட்டது அவளுக்கு. தூங்கும் போது அவளது கையோ காலோ தற்செயலாகப் படுவதுகூட அவனுக்குப் பிடிப்பதில்லை.

காப்பியை ஸ்டூலின் மீது வைத்துவிட்டு அவனது தோளைத் தொட்டு எழுப்பினாள். தூக்கம் கலைந்தும் கலையாமலும் லேசான, விரோதத்தோடு அவளைப் பார்த்தான். அவளது மிதமிஞ்சிய புன்னகை அவனை ஆசுவாசப் படுத்தியது போல திரும்பிப் படுத்துக் கொண்டான். அவள் லேசான ஏமாற்றத்தோடு மீண்டும் அவனை உசுப்பி, ''காப்பிங்க'' என்றாள். அவன் எழுந்து உட்கார்ந்து வாங்கிக் கொண்டான். அவளும் அவனது பக்கத்தில் உட்கார்ந்தாள். அவனது கழுத்தில் ஸ்டிக்கர் பொட்டு ஒட்டியிருந்ததைத் துடைத்து விட்டாள். காப்பி தம்ளரை ஸ்டூலில் வைத்து விட்டு மறுபடியும் படுக்கையில் கவிழ்ந்து கொண்டான்.

''எழுந்திருங்களேன்..... ப்ளீஸ்'' என்றாள்.

''என்ன அவசரம்? ஏழு மணிதானே ஆச்சு? அதுக்குள்ள



ஏன் எழுப்பிவிட்டுக்கிட்டிருக்க?''

''இன்னிக்குப் பால்பாயசம் பண்ணட்டுமாங்க?''

''எதுக்கு?''

''இந்தப் பக்கம் திரும்பித்தான் கேளுங்களேன்.''

அவன் திரும்பாமல் பொதுவாக, ''எதுக்கு?'' என்றான்.

அவள் எதுவும் சொல்லாமல் எழுந்து உள்ளே போனாள். தண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. அவன் குளிப்பதற்காக பக்கெட்டில் நிறைத்து வைத்தாள்.

அவள் தண்ணீர் பிடித்து முடித்ததும் மாமனார் 'ஹோஸை' செருகி, தோட்டத்துக்குத் தண்ணீர்ப் பாய்ச்சத் துவங்கி னார்.

இன்றைக்கு ஆஃபிஸ் போவதில்லை என்று நேற்றே தீர்மானித்திருந்தாள். அக்கவுண்டண்டிடம் சொல்லக்கூட செய்தாயிற்று. அக்கவுண்டண்ட் மிகையாக வழிகிற ஆசாமி தான். என்ன விஷயம்? மாமி, மாமனார் வீட்ல இல் லையா?'' என்றார் ஏதோ குறும்பாகக் கேட்பது போல்.



ஏதாவது சூடாகச் சொல்ல வேண்டுமென்று தோன்றியதைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''வீட்ல வேலை இருக்கு சார்'' என்றாள்.

இன்று மட்டுமில்லை. எப்போதுமே இப்படித்தான். கோபத்தையும் துக்கத்தையும் அடக்கி அடக்கியே பழகிப் போய் விட்டது. அப்படிக் கோபத்தை வெளிக்காட்டினால் கூட செயற்கையாக, வெறும் நடிப்புமாதிரி கேலியை ஏற்படுத்திவிடுமோ என்ற மாதிரியான பயம் கூட ஏற்பட்டுப் போய் விட்டது.

ஆஃபிசில் அவளுடைய ஒரே சிநேகிதன் விஷ்ணு மட்டுந்தான். அதற்குக் கூட அவள் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருந்தது. அவன் நாற்பது வார்த்தை பேசினால் அவளிடமிருந்து நான்கு வார்த்தைகள்தான் வரும். ஆரம்பத்தில் மற்றவர்களின் மேல் இருந்தது போன்ற கோபம் அவன் மீதும் இருந்தது. அவன் மிகவும் அபத்தமாகவும், அசட்டுத்தனமாகவும் பேசுவதாக அவள் நினைத்துக் கொண்டிருந்தாள். அது களங்கமின்றி இருப்பதாக மெல்ல மெல்ல, பின்னாளில் உணரத் துவங்கியபோது அவன் மீது ஒரு ஈர்ப்பும் வந்துவிட்டது. லோன்ஸ் செக்ஷனில் வேலை பார்க்கும் யவனிகாவை அவன் விரும்புவதாகத் தெரிந்து கொண்ட பிறகு மெல்ல மெல்ல அவனிடமிருந்து தன்னை விலக்கிக் கொண்டு விட்டாள். ஆனால் அவன் அவளைத் தேடி வந்து பேசுவதை நிறுத்தவில்லை. அவள் ஒரு நாளும் அவனைத் தேடிச் சென்றதில்லை. ஒரு நாள் ஆஃபிஸ் வராவிட்டால் கூட அடுத்த நாள் அவளது சீட்டுக்குப் போய், ''ஏன் லீவு?'' என்று கூடக் கேட்டதில்லை. மறுபடியும் அவனாக அவளிடத்திற்கு வரும் போதுதான் அதுபற்றி விசாரிப்பான். அது குறித்து அவளுக்கும் வருத்தம்தான்.

''டெத் பெட்ல கெடந்தாக் கூட நான்தான்

அஷோக்ரா

உங்களைத் தேடி வரணும் இல்லையா?'' என்றான்.

அவள் மௌனமாக இருந்தாள்.

''இப்படி நீங்க இருக்கறதுக்கு ரெண்டே ரெண்டு காரணந்தான் இருக்க முடியும். என்மேல உங்களுக்கு நம்பிக்கை இல்லை. இல்லாட்டி உங்கமேலயே உங்களுக்கு நம்பிக்கை இல்லை.''

''எப்படி வேணும்னாலும் நெனச்சுக்குங்க. என்னால அது முடியாது. எனக்குப் பிடிக்கல.''

''ஆல் ரைட். என்னையும் வர வேண்டாம்னு சொல்லிடுங்க. ஒன்ஸ் ஃபார் ஆல்.''

அவள் அதிர்ச்சியோடு அவனைப் பார்த்தாள்.

அவன் சீட்டுக்குப் போய் தனது பையை எடுத்துக் கொண்டு அக்கவுண்டண்டிடம் பர்மிஷன் சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

அதன் பிறகு அவன் அவளைத் தேடி வருவதை நிறுத்திக் கொண்டான். அவளை எதிரில் பார்க்க நேர்ந்தால் கூடப் பார்க்காதது போல காட்டிக் கொண்டான். அவளோடு நேரிடையாகப் பேசுவதைத் தவிர்த்து, ஆஃபிஸ் சம்பந்தமான எல்லா விஷயங்களையும் பியூனிடம் சொல்லி அனுப்பினான். அப்போதெல்லாம் அவளுக்குத் தன் பேரிலேயே கோபம் பிறந்தது. தன்னுடைய மௌனம் நிறைந்த பிடிவாதமான அமைதியின் மீது, எதையும் வெளியிடத் தெரியாத, தனக்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கிற தன் மனோபாவத்தின் மீது, வெறுப்பாக இருந்தது. அவன் முற்றிலுமாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டு விட்ட பிறகு அந்த மௌனமே அந்த வருத்தத்திலிருந்து அவளை மீண்டு வரச் செய்தது. கூடவே பிறந்துவிட்ட இந்த சுபாவத்தை அத்தனை எளிதாக மாற்றிக் கொண்டு விட முடியாதென்று நினைத்துக் கொண்டாள்.

அந்தச் சமயத்தில்தான் அவளுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. அவளுக்கு வரப்போகிறவனைக் குறித்து நிறையக் கனவுகள் இருந்தன. அவளது கணவன் உயரமாக, விரிந்த தோள்களோடு, திரண்ட கால்களோடு ஒரு கால்பந்து வீரனைப் போல இருக்க வேண்டுமென்று நினைத்திருந்தாள்.

அவளுக்குப் பார்த்த கணவன் ஏறக்குறைய அவளது உயரமே இருந்தான். கறுப்பாகவும், குண்டாகவும் இருந்தான். தடித்த கண்ணாடி அணிந்து, சட்டைக்கு மேலே தொந்தி கூடத் தெரிந்தது. இவை எல்லாவற்றையும் 'எல்.ஐ.சி. டெவலப்மெண்ட் ஆஃபிசர்' என்கிற தகுதி அடித்துக் கொண்டு போய்விட்டது. அவளுக்கு ஃபோட்டோவைக் காட்டி அறிமுகப்படுத்தியபோது கூட அதைத்தான் சொன்னார்கள். அவள் ஏமாற்றத்தோடு அந்தப் புகைப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். கல்யாணம் பாதி முடிந்துவிட்ட மாதிரி அவளருகே பெருமையோடு அம்மாவும், அண்ணனும் நின்று கொண்டிருந்தார்கள். அண்ணன்கூட, 'அதுதான் கல்யாணத்துக்கப்புறம் பாத்துகிட்டே இருக்கப் போறியே இப்ப எங்களைக் கொஞ்சம் பாரும்மா' என்றான். அவன் சொன்னவிதம் அவள் திருமணத்திற்குச் சம்மதித்து விட்டதைப் போலத்தான் இருந்தது. முதலில் 'பிடிக்கவில்லை' என்று சொல்ல நினைத்தவள் எதுவும் சொல்லாமல் ஃபோட்டோவைத் திருப்பிக் கொடுத்துவிட்டு உள்ளே போனாள். அம்மா பின்னாலிருந்து,

''அவ சுபாவந்தான் உனக்குத் தெரியுமே. இதுக்கு ஏன் கவலைப்படறே?'' என்று அண்ணனைச் சமாதானப்படுத்துவது அவளுக்கும் கேட்டது.

திருமணத்திற்குத் தனது செக்ஷனுக்கு மட்டுமே அழைப்பிதழ் கொடுத்தாள். விஷ்ணுவுக்குத் தருவது பற்றி இரண்டு நாட்கள் யோசனையில் இருந்துவிட்டு மூன்றாம் நாள் மனம் பொறுக்காமல் அவனை முதன் முறையாகத் தேடிச்சென்று பத்திரிகையை நீ ட் டி னா ள். விஷ்ணு வெளிப்படையாகவே மகிழ்ந்து போனான். பக்கத்தில் இருந்த நாற்காலியை இழுத்துக்



மறக்க வேண்டியவை

❑ ''நீங்கள் முக்கியமாக இரண்டு செய்கைகளை மறந்து விட வேண்டும். ஒன்று, நீங்கள் பிறருக்குச் செய்த உதவி. மற்றொன்று, பிறர் உங்களுக்குச் செய்த தீங்கு.''

- ஸ்ரீ சத்யசாயி பாபா


அனுப்பியவர் : டி. கே. பானு

கொண்டு வந்து அவளை அமரச் சொன்னான். மாப்பிள்ளையைப் பற்றியும், அவனது குடும்பம், குணநலன்கள் பற்றியும் திருமண வேலைகளைக் குறித்தும் நிஜமான அக்கறையோடு விசாரித்தான். விஷ்ணு அவளது மதிப்பில் வெகுவாக உயர்ந்து போனான். ஆஃபிசிலிருந்து யாரும் வராத மாப்பிள்ளை அழைப்புக்குக் கூட விஷ்ணு தனியாக வந்திருந்தான்.

அவளது திருமணத்திற்குப் பிறகு விஷ்ணு முன்போலவே அவளைத் தேடி வந்து பேசிக் கொண்டிருந்தான். அவளை உரிமை எடுத்துக் கொண்டு கல்யாணத்தை ஒட்டி கலாட்டா செய்தான். 'ஒரு ஆணின் பிரச்னைகள் அவனைச் சார்ந்தவை; ஒரு பெண்ணின் பிரச்னைகளோ சமூகத்தையும் சார்ந்தவை. அத்தனை எளிதாக ஒரு பெண்ணின் பிரச்னைகளை வரையறுத்து விட முடியாது' என்று ஒரு தத்துவம் போல மீண்டும் அவளோடு பேச ஆரம்பித்ததற்கான காரணத்தைச் சொன்னான். அது போன்ற பிரச்னைகள் எதுவும் அவளுக்கு இல்லாமற் போனாலும் அவன் அப்படிச் சொன்னது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

அவளுக்குக் குழந்தைகள் குறித்து நிறைய ஆசைகள் இருந்தன. வீடு முழுக்கக் குழந்தைகளாய்த் திரிகிற ஒரு கற்பனை உலகை அவள் சிருஷ்டித்து வைத்திருந்தாள். முதல் குழந்தை பிறந்ததும் வேலையை ராஜினாமா செய்துவிடவும் நினைத்திருந்தாள். குழந்தையின் சின்னச் சின்ன, மனத்தைக் கொள்ளை கொள்ளும் அசைவுகளில் சிலிர்த்து, தன்னுடைய பிரதியைத் தானே வடிவமைத்துக் கொள்கிற மாதிரி, தனது சிலையைத் தானே செதுக்கிக் கொள்கிற மாதிரி பார்த்துப் பார்த்து வளர்க்க வேண்டுமென்று தீவிர ஆசையோடிருந்தாள். திருமணம் பற்றிய அவளது எதிர்பார்ப்பு எதுவும் நிறைவேறாமற் போனாலும் அவன் தரப்போகிற குழந்தையைக் குறித்து மனம் நிறையப் பூரிப்பும் உற்சாகமும் இருந்தது.

ஆனால் திருமணமான முதல் வாரத்திலேயே அவன் அவளுக்கு மாத்திரைகள் வாங்கிவந்து கொடுத்தான். கனவுகளெல்லாம் உடைந்து சிதறின. மிகுந்த அதிர்ச்சியோடும் கண்ணீரோடும் அவள் அதை மறுத்தாள். தன்னிலை மறந்து கெஞ்சிப் பார்த்தாள். விவாதித்தால் அவனது பிடிவாதம், அதிகமாகுமென்று அந்த ஒரு வாரத்திற்குள் அவனைப் பற்றிப் புரிந்தே வைத்திருந்தாலும் தன் உணர்வுகளைப் புதைத்துக்கொள்ள முடியாமல் விவாதித்தாள். அப்பா இறந்த போதும் அழுதிராதவள் - அழுவது இழிவு - என்று எண்ணி



போலீஸ்காரர் : என்னைப் போலவே என் மகனும் காவல் துறைக்குத்தான் வருவான்னு எப்படி சார், சொல்றீங்க?

ஆசிரியர் : மாமல்லபுரம்னு எழுதச் சொன்னால், மாமூல்புரம்னு எழுதுறானே...!

- தி. ராஜு

யிருந்தவள் அன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுதாள். அவன் அதைப் பற்றி எதுவும் கவலைப்படவில்லை. குழந்தை பிறப்பதைத் தள்ளிப் போடுவது அவள் தீர்மானிக்கக் கூடிய விஷயமில்லை என்பது போல நடந்து கொண்டான்.

அவளது கணவனும், அத்தையும் விழித்துக் கொண்டுவிட்டார்கள். காப்பியைச் சூடாக்கி அத்தைக்குக் கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வந்தாள். அவள் இன்னமும் குளிக்காமல் இருந்ததை அவளது கணவன் ஆச்சர்யமாகப் பார்த்தான்.

''இன்னுமா குளிக்கலை? ஆஃபிஸ் போ வேணாம்?''

''இன்னிக்கு லீவு போட்டிருக்கேங்க.''

''வீட்ல இருந்துகிட்டு என்ன பண்ணப் போறே?''

''நீங்க லீவு போடலையாங்க?''

''எதுக்கு?''

''இன்னிக்கு நம்ம கல்யாண நாள்ங்க.'' நெற்றியைச் சுருக்கி யோசித்துப் பார்த்துவிட்டு,

''ஆமாம். இல்லே?'' என்றான்.

''லீவு போடுங்களேன். கோயிலுக்குப் போய்ட்டு வருவோம்.''

''அதெல்லாம் சாயங்காலம் பாத்துக்கலாம். இன்னிக்கு ஆஃபிஸ் போயே ஆகணும். எனக்கு ஹீட்டர் போட்டு வச்சிருக்கியா?''

''இன்னிக்குப் பால் பாயசம் பண்ணட்டுமாங்க?''

''டயமிருந்தா பண்ணு. லீவெல்லாம்

அனாவசியமா வேஸ்ட் பண்ணாத. அப்பு றம் குழந்தை பொறந்தா தேவைப்படும்.''

சொல்லிவிட்டுக் குளிக்கப் போனான். அவள் கடிகாரத்தைப் பார்த்தாள். இப் போது கிளம்பினால் ஆஃபிசுக்குப் போய் விடலாம். தான் தன் உணர்வுகளை மிகைப் படுத்திக் கொண்டு விட்டது போல ஒரு குற்ற உணர்வு தோன்றிற்று. பெரிதான ஒட்டுதல் எதுவுமில்லாமல் அப்படி ஒட்டு தல் இருப்பதாகத் தானே கற்பனை செய்து கொண்டு விட்ட மாதிரி தோன்றிற்று. அவனோடு கோயிலுக்குப் போனாலும் அவன் வாங்கித் தருகிற அவளுக்குப் பிடிக் காத மல்லிகையைத்தான் வைத்துக் கொள்ள வேண்டும். அவனோடு ஹோட்ட லுக்குப் போனால் அவளது விருப்பம் பற்றி கவலையின்றி, அவன் ஆர்டர் செய் வதைத்தான் சாப்பிட வேண்டும். இவை யெல்லாம் இந்த நாளுக்குப் பெரிய மாற் றம் எதுவும் ஏற்படுத்தித் தந்துவிடப் போவ தில்லை. சாதாரணமாக நடந்து முடிந்து விடுகிற ஒரு நிகழ்ச்சிக்கு - நிகழ்ச்சி என்றுகூட சொல்லிவிட முடியாது - ஒரு நாளுக்கு ஏன் இத்தனை அலட்டிக் கொண் டோம் என்பதை நினைத்து ஆச்சர்யமாக இருந்தது.

திருமணநாளில் அவனுக்குப் பரிசளிப் பதற்காக வாங்கி வைத்திருந்த 'லஞ்ச் பேக்' கைக் கொடுப்பதா வேண்டாமா என்று குழம்பினாள். கடைசியில் பரிசளிப்பது போல் இல்லாமல் அவனாக எடுத்துக் கொள்வது போல இருக்கட்டுமென்று எண்ணி பீரோவில் மறைத்து வைத்திருந்த பையை எடுத்து டேபிள் மீது வைத்து விட்டுக் குளிக்கப் போனாள். அவள் குளித்துவிட்டு வரும்போது பையைக் காட்டி அவன் தயாராக அந்தக் கேள்வி யைக் கேட்டான்.

''ஏது இது?''

''வாங்கினேங்க. உங்களுக்கு லஞ்ச் எடுத்துக்கிட்டு போக....''

''மாரேஜ் டே கிஃப்டா?''

அவன் சற்று இகழ்ச்சியாகக் கேட்டது போல இருந்தது.

''வாழ்க்கை முழுசும் சேர்ந்துதான் இருக்கப் போறோம். ஒவ்வொரு வருஷ மும் இதுமாதிரி குடுத்துக்கிட்டிருக்கப் போறியா? நமக்கு நாமளே வாழ்த்து சொல் லிக்கறது, பரிசு குடுத்துக்கறது இதெல்லாம் அபத்தமா இல்லையா உனக்கு? பண வேற வேஸ்ட்டு...''

அவள் பெருமூச்சோடு உடை மாற்ற சென்றாள். இன்று புதுப்புடைவை கட்டி கொள்ள வேண்டியிருக்குமென்று நேற்ற கற்பனை செய்து வைத்திருந்ததை நினைத் துக் கொண்டாள். அவளுக்குப் பிடித்த சாம் பல் வண்ணப் புடைவையை பீரோவி லிருந்து எடுத்தவள் - சற்று தயக்கத்திற்குப் பிறகு அவள் ரொம்ப நாளாகக் கட்டப் பிடிக்காமல் வைத்திருந்த மஞ்சள் வண்ண ஷிஃபானைக் கட்டிக் கொண்டாள். உறை குத்தி வைத்திருந்த தயிரைத் தாளித்து இரண்டு டிஃபன் பாக்ஸ்களிலும் சாதத்தை நிறப்பி ஊற்றினாள். பால் பாயசம் செய் வதற்காக வைத்திருந்த பாலிலும் உறை குத்தி வைத்தாள்.

பஸ்ஸின் நெருக்கத்தில் கசங்கிப் போய்க் கொண்டிருந்த போது அவளுக்கு விஷ்ணுவின் ஞாபகம் வந்தது. இன்று அவ ளுடைய திருமணநாள் என்று அவனுக்குத் தெரியும். நேற்றே அது பற்றி லேசாகச் சொல்லி வைத்திருந்தான்.

''இன்னிக்கு நைட்லேந்தே நான் சாப்பிடாம இருக்கப் போறேங்க.''

''ஏன்?''

''ஏன்னு உங்களுக்கே தெரியும். நாளைக்கு உங்க டிஃபனை ஒரு வெட்டு வெட்டப் போறேன்.''

''அப்படின்னா உங்களை ஆஸ்பத் திரிலதான் வந்து பாக்க வேண்டியிருக் கும்.''


''ஏன்? உங்க டிஃபன் அவ்ளோ மோச மாவா இருக்கும்?''

''அதில்லை. நாளைக்கு நான் லீவு. ஒருநாள் முழுசும் சாப்பிடாம இருந்தா உங்க உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''சரி. நாளைக்கு இல்லாட்டி நாளைக்கு மறுநாள். வேலையை விட்டுட்டா போயிடப் போறிங்க?''

விஷ்ணு நிச்சயம் அவளைத் தேடி வரு வான். அவளது டிஃபன் பாக்ஸை ஆவ லோடு திறந்து பார்ப்பான். அவனிடம் பேசுவது போல பஸ்ஸுக்குள்ளேயே மானசீகமாக வருத்தத்தோடு சொல்லிக் கொண்டாள்.

''ஸ்பெஷல் ஐட்டம் எதுவும் பண் ணலை விஷ்ணு. கோயிலுக்குக் கூடப் போக முடியல. நேத்து நைட்டெல்லாம் அவருக்கு 'ஹை டெம்ப்ரேச்சர்.''



ஒருவர் : லஞ்சம் வாங்குங்க அதுக்காக இப்படி ஒப்பனா அதை ஊக்குவிக்கணுமா?

நண்பர் : என்ன சொல்றீங்க?

முதல் ஆசாமி : 'லஞ்சத்துக்கு ஏற்ற கவனிப்பு. இதுவே எங்கள் தனிச் சிறப்பு'னு போர்டு எழுதி மாட்டியிருக்கீங்களே அதைத்தான் சொல்றேன்!

- எஸ். முகம்மது யூசுப்





நரசிம்மன்

வீதிக்குப்போன டிரை கிளீனிங் வீட்டுக்கே வருகிறது!

தெருவுக்கு இரண்டு டிரை கிளீனிங் கடைகள் இருந்த காலம் மாறிவிட்டது. சென்னை நகரின் பிரபல உலர் சலவை நிறுவனங்கள் கூட தங்கள் கிளைகள் பலவற்றை இழுத்து மூடிவிட்டன. இந்த நிலை உருவாகக் காரணம் என்ன....?

''டிரை கிளீனிங் தேவைப்படாத செயற்கை இழைத் துணிகள் பெருகிவிட்டதுதான் காரணம்'' என்கிறார் முன்பு தமது உலர் சலவைத் தொழிலின் பத்து கிளைகளைச் சென்னையில் நடத்தி வந்த ஒருவர். வியாபாரம் நொடித்ததால் தற்போது இரண்டு கிளைகளை மட்டுமே இயக்கிக் கொண்டு ரியல் எஸ்டேட்டில் இறங்கியுள்ளார். தமது பெயரை வெளியிட விரும்பாத அந்த நபர் மேலும் கூறுகிறார்:

''டிரை கிளீனிங்குக்குக் கட்டணம் அதிகம். இப்போது பெரிய பெரிய துணிகளைக் கூட வீட்டிலேயே சலவை செய்ய வசதியாக வாஷிங் மெஷின்கள் உள்ளன; வகை வகையான துணிகளுக்கு ஏற்ற சோப்புத் தூள், கட்டி, வில்லை, சொட்டு நீலம்... எல்லாம் கிடைக்கின்றன. உலர்ந்த துணிகளை உடனுக்குடன் இஸ்திரி போட வீட்டு வாசலிலேயே நடமாடும் இஸ்திரி நிலையம் இருக்கிறது. எனவே முன்பு போல் யாரும் உலர் சலவைக்குத் துணிகளைத் தருவதில்லை.

''பெரிய பெரிய கம்பளிகளையும் கோட்-சூட்களையும்தான் வீட்டில் துவைக்க முடியாது. ஆனால் சென்னையில் இவற்றைப் பயன் படுத்துவோர் அரிது.....

''உலர் சலவை செய்வதற்கு mineral turpentine பயன்படுத்த வேண்டும். இதைத் துணிகளில் இட்டு இயந்திரத்தில் சலவை செய்வோம். ஆனால் போலிகள் பலர் தோன்றி உலர் சலவை என்ற பெயரில் நனை சலவையே செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் துணிகள் பாழானதோடு தரமான உலர் சலவையாளர் பெயரும் பாழாகிப் போனது!..... இருந்தாலும், எங்கள் மெய்யான தரம் அறிந்த வாடிக்கையாளர்கள் இன்னமும் எங்களைத் தேடி வருகிறார்கள்'' என்று முடித்தார் மனம் நொந்து போன அந்த வர்த்தகர்.

''வீட்டிலேயே டிரை கிளீனிங் செய்ய முடியும்'' என்று கூறுபவர் நரசிம்மன். Quickeez என்ற பெயரில் ஒரு கிரீமைத் தயாரித்துள்ள இவர், அதைக் கொண்டு சிறந்த உலர் சலவை செய்யலாம் என்கிறார்.

விஞ்ஞான பட்டதாரியான நரசிம்மன், பல ஆண்டுகள் சோதனை செய்து, அமிலம், வாஷிங் சோடா, காஸ்டிக் சோடா போன்ற எதையுமே பயன்படுத்தாமல், துணிகளின் தரத்தையும் பளபளப்பையும் பாதிக்காத Petro chemical fatty alcohol ஐக் கொண்டு quickeez ஐத் தயாரித்துள்ளார்.

''1984 இல் இத்தொழிலை ஆரம்பித்தேன். இத் தயாரிப்பை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பது என் லட்சியம்'' என்கிறார் நரசிம்மன்.

– கீதா மோஹன்

படம் : யோகா

மூன்று நாட்களாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தபால் வந்து சேர்ந்தது. இருபது நாட்கள் டெல்லியில் டிரெயினிங். நான்காயிரத்துச் சொச்ச தொழிலாளர்களுள், தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிரண்டு நபர்களில் பிரபுவும் ஒருவன்.

நவீன 'மானேஜ்மென்ட் டெக்னிக்ஸ்' பற்றிய பயிற்சி.

இந்தப் பயிற்சிக்காக ஒவ்வொருவருக்கும் சுமார் எழுபது எண்பதாயிரம் ரூபாயைக் கம்பெனி செலவு செய்கிறது. 'நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். செலவழித்த ஒவ்வொரு பைசாவும் உபயோகமே என்று என்னைத் தேர்வு செய்த மேலதிகாரி நினைக்குமாறு வந்தபின் பணியாற்ற வேண்டும்' எனப் பிரபு நினைத்தான்.

கடிதத்தை மீண்டும் ஒருமுறை

மன ஊஞ்சல்

படித்தான். புதுதில்லியில் 'குதுப்' ஓட்டலில் கான்பரன்ஸ் ஹாலில்தான் பயிற்சி. ஏழாம் தேதி துவங்கி இருபத்தி ஆறு முடிகிறது. நாளொன்றுக்குத் தங்கும் வசதிக்காக மட்டும் ஒவ்வொருவருக்கும் ரூபாய் நானூறு கம்பெனி கொடுக்கும்.

லெட்டரை எடுத்துக் கொண்டு அம்மாவிடம் சென்றான். அவனுக்கு இன்னும் திருமணமாகவில்லை. மத்திய சர்க்கார் கம்பெனியில் நல்ல வேலை. உடன் பிறப்பாக ஓர் அக்காள் மட்டும். அவளுக்கு மணமாகி ஏழு, எட்டு வருடங்களாகிறது. மாயவரத்தில் இருக்கிறாள். பிரபு, பெற்றோருக்குக் காலம் தாழ்ந்து பிறந்த பிள்ளை. தந்தையாருக்கு வயது எண்பதுக்கு மேல். படுத்தபடிதான் எல்லாம். நாடி ஓடிக் கொண்டிருக்கிறது, ஞாபகம் பிசகவில்லை என்பது தவிர வேறு ஒரு அசைவும் இல்லை. வயது அதிகமாகி விட்டதால் சும்மா வேப்பெண்ணெய் தடவுவது தவிர, வைத்தியத்தில் அதிகம் முயற்சிக்கவில்லை.....

அம்மாவிடம் விஷயத்தைச் சொன்னதும்,

'நீ போனால் நான் என்னடா செய்வேன்? ஒண்டிக்கட்டையாய்' என்று கேள்விக்குறி பார்வை பார்த்தாள்.

சிறிது நேரம் மௌனம் நிலவியது.

''நடுவில வந்துட்டுப் போக முடியுமாடா?''

''ஏம்மா.... டில்லி போக இரண்டு ராத்திரி ஒரு பகலாயிடும். அங்க தொடர்ச்சியா பயிற்சி இருக்கும். ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள்ல வந்துட்டுப் போக முடியுமா? இதை எத்தனைவாட்டிதான் சொல்றது?'' அவன் குரல் சற்று உயர்ந்துதான் விட்டது.

''ஏண்டா கோச்சுக்கற...? இதைப்பத்தி கேட்டாலே உனக்குக் கோபம் வருது.'' பாக்யத்தம்மாள் குரல் உடைந்துவிட்டது. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

''ஏம்மா எனக்கு மட்டும் உன்னையும், அப்பாவையும் விட்டுவிட்டுப் போய் இருக்கணும்ன்னு ஆசையாம்மா? கஷ்டப் பட்டுப் படிச்சு, திறமையினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வாழ்கையில ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. போகாம இருக்கவாம்மா? இந்த டிரெயினிங் முடிந்ததும்



என்னை செக்ஷன் மாற்றி நல்ல உசந்த வேலை கொடுத்தாங்கன்னா உனக்கும் சந்தோஷம் தானேம்மா.''

அவன் முகத்தையே கலங்கிய கண்களுடன் நம்பிக்கையோடு பார்த்துக் கொண்டிருந்த பாக்யத்தம்மாளுக்கு அவன் சொல்லுவதும் வாஸ்தவம் என்றே பட்டது.

''சரிப்பா... நல்லபடியா போய்ட்டு வா... கடவுள்விட்டபடி பிழைச்சுக் கிடப்போம். என்ன ஆகிடப் போறது. பல்லைக் கடிச்சிக்கிட்டு இருந்திடுறேன்.''

காய்கறி தவிர அம்மாவுக்கு மற்றதெல்லாம் ஒரு மாதத்துக்கு வாங்கிக் கொடுத்து விட்டான். வியாழன் காலை அனைத்தும் தயார். வெள்ளி இரவு டிரெயின். தமிழ்நாடு எக்ஸ்பிரஸ். ஞாயிறு காலை டில்லி போய்விடும். திங்கள் முதல் டிரெயினிங்.


சுமார், ஒன்பதுமணி வாக்கில் டிபன் சாப்பிட்டுவிட்டு கிளம்பி 'ராம்மோகன் சார்' வீட்டுக்குப் போனான். டெல்லியில் அவனுக்கு ஏதும் பொருட்கள் வாங்க உதவுவதற்காக 'ராம்மோகன் சார்' டெல்லியில் இருக்கும் அவர் அண்ணனுக்கு ஒரு லெட்டர் தருவதாகச் சொல்லியிருந்தார்.

லெட்டரை வாங்கிக் கொண்டு, தன் வீட்டுத் தெரு முனை திரும்பும்போது அவனுக்கு ஏதோ விசித்திரமாகப்பட்டது. தன் வீட்டு வாசலில் பக்கத்துவீட்டு நாயுடு அம்மாவும் ஈர்க்குச்சி மாமியும் நின்று கொண்டிருப்பது போலிருந்தது. வீட்டிற்கு வந்த பின்புதான் இன்னும் சிலரும் உள்ளே நிற்பது தெரிந்தது. இவனைப் பார்த்ததும் வேகமாக விலகி வழிவிட்டது இவனுக்குச் சிறிது பதைபதைப்பாக இருந்தது. சிலர் அழும் குரலும் ஊதுபத்தி வாசனையும்.... மேலும் ஹாலில் நாலைந்து பேர். ரூமில் தந்தை கட்டிலருகே அம்மா அமர்ந்திருந்தாள். தலை கட்டிலில் அப்பாவின் காலருகில் புதைந்திருந்தது.

புரிந்துவிட்டது! ஐந்து வருடமாக இழுத்துக் கொண்டிருந்த ஜீவன் தனக்கு டிரெயினிங் வாய்ப்புக் கிடைத்த சமயத்தில் போய் விட்டதே என்றுதான் அவனுக்கு முதலில் தோன்றியது.

டிரெயினிங் போகவே முடியாதா? நாளை இரவல்லவா கிளம்ப வேண்டும். அதற்குள் எல்லாம் முடிக்க முடியுமா? அவன் மனம் வேகமாகக் கணக்குப் போட்டது. நல்ல வேளை. நாளை

சோம. வள்ளியப்பன்



போகாமல் இன்றே போனதே.... சீச்சீ... அப்பா இறந்தால் ஒரு மகன் இப்படியா நினைப்பது? என்று எதிர்க் கேள்வியும் அதுவே கேட்டு நல்லவனாக்கப் பார்த்தது.

மெதுவாக அம்மா பக்கத்தில் அமர்ந்தான். இதமாக, அழுத்தமாகத் தோளைத் தொட்டான். நிமிர்ந்து பார்த்தாள்.

ஐந்து வருடமாகவே தெரிந்ததுதானென்றாலும் இழப்பை எதிர்கொள்ள முடியாது தாயார் தவிப்பதை உணர்ந்தான். முந்தானையால் வாய்பொத்தி அழுத அம்மாவைப் பார்த்தான். என்ன சொல்ல முடியும்?

அம்மாவுடன் பேச வேண்டும். இன்று மாலையே எடுத்துவிடலாம். அக்கா சரோஜா மாயவரத்திலிருந்தும், தாய்மாமன் சித்தூரிலிருந்தும் வந்தால் போதும். வேறு ஒன்றும் சொந்தமில்லை. நாளை இரவு தானே டிரெயின். அம்மாவை வேண்டுமானால் அக்கா சரோஜாவுடன் அனுப்பி வைக்கலாம். ஒரு மாறுதலாகவும் இருக்கும், துணையாகவும் இருக்கும்.

ஒத்துக் கொள்ள வேண்டுமே. பின் என்ன செய்ய? அம்மாவால் தனியாகவா இருக்க முடியும்? பிரபுவுக்குள் பலதரப்பட்ட எண்ணங்கள் ஓடின.....

கிசுகிசுப்பான குரலில் அம்மாவின்



''எல்லாப் பத்திரிகையிலும் ஏராள மான ஜோக்ஸ் எழுதித் தள்ளுறீங்களே, உங்க குறிக்கோள் என்ன?''

''சாகறதுக்குள்ளே ஒரே ஒரு ஜோக் காவது சொந்தக் கற்பனையில எழுத ணும்கிறதுதான்!''

- நீலமேகம்



''என்னங்க.. ஒரு மாசமாகுது நம்ம பையனைக் காணலியே... பேப்பர்ல விளம்பரம் கொடுக்கப்படாதா?''

''அவன் எங்கேடி பேப்பர் படிக்கப் போறான்? வேணும்னா சினிமா தியேட்டரில ஸ்லைடு போட்டுப் பார்க்க லாம்...''

- ஆர். வசந்தகுமார்

''சார்! என்னை இந்த மாதிரி போட்டு அடிக்கிறீங்களே, எங்க அப்பாவை அடிக்க உங்களுக்குத் தைரியம் இருக்கா...?''

''நான் ஏண்டா உங்க அப்பாவை அடிக்க ணும்?''

''அவர்தானே வீட்டுக் கணக்குகளைத் தப்புத் தப்பா போட்டுக் கொடுக்கறது!''

- தி. ராஜு



காதருகே எட்டிக் கேட்டான். ''சரோஜா வெங்கு மாமா ரெண்டு பேருக்கும் சொல் லிடவா. சாயந்திரம் எடுத்திடலாமில் லையா?'' கேட்டதில் சற்று ஆர்வமும் அழுத்தமும் இருப்பதாகத் தெரிந்தது.

''என்னம்மா... கேக்கறதுக்கு ஒண் ணும் சொல்லமாட்டேங்குறே?''

''ஆமான்டா.... எதுக்கும் கொஞ்சப் டயம் வேண்டாமா? அவுங்க சாயங்காலத் துக்குள்ள வந்திட முடியுமான்னு தெரிய லையே'' என்று இழுத்தவாறு சொன்னாள்.

''அதெல்லாம் வரத்தான் வேணும்.'' அவன் குரலில் முரட்டுத்தனம் தெரிந்தது.

மாமனும் அக்காளும் அக்காள் குழந் தைகளும் இரவுதான் வந்தார்கள். அவரை மறுநாள் காலைதான் எடுத்தார்கள். அதற் குள் எடுப்பதுபற்றி தாயாருக்கும் மகனுக் கும் கருத்து வேறுபாடுகள்.

மயானத்திலும் பிரபு பரபரப்பா யிருந்தான். தலைமுடியும் மீசையும், சவரம் செய்து கொள்ளத் தயங்கிபோது, குறுக் கிட்டவர்களை 'உங்களைத் தெரியாதா....' என வைதான். யாரும் அவனிடம் பேச யோசித்தார்கள். கடைசியில் அவன் நண்பன் கார்த்திக் சொன்னது கேட்டு மீசை மட்டும் மழித்தான்.

சரோஜா பயணப்பட ஆயுத்தம் செய்து கொண்டிருந்தாள்.

''ஏன்டா... இவள் கிளம்பரா ளாமேடா....'' அம்மாவின் குரல் மிகவும் கம்மியிருந்தது.

''யார் செத்தா அவளுக்கென்ன... யார் இருந்தா அவளுக்கென்ன? கட்டிக் குடுத் திட்டல்லம்மா..... விட்டிடு. நான் ஒருத் தன் இருக்கேன்ல எல்லாத்துக்கும். சரோஜா அவ புருஷன் வீட்டுக்குப் போகட்டும்.'' நெருப்புத்துண்டங்களாய் வந்து விழுந்தன வார்த்தைகள்.

நிலைப்படியைப் பிடித்துக் கொண்டு பாக்யத்தம்மாள் உட்கார்ந்து விட்டாள்.

''என்னைப் பார்த்து எல்லாரும் பொறாமைப்படுறீங்க. நான் ஒருத்தி நல்லா யிருக்கிறது உங்களுக்கெல்லாம் கண்ணை உருத்துது'' என்று சொல்லிவிட்டு விசும்ப ஆரம்பித்தாள் சரோஜா.

நிலைமை வேறுவிதமாகத் திரும்பு வதை உணர்ந்த பிரபு தன் கைப்பையை எடுத்துக் கொண்டு ''அவ போறதுன்னா போகட்டும், இருக்கிறதுன்னா இருக்கட் டும். எனக்கு அக்கறை இல்லை. நான் இன்னைக்கு டெல்லி கிளம்புறேன், அம்மா... சாயங்காலம் வரேன்'' என்று சொல்லிவிட்டு வெளியில் கிளம்பினான்.

நேராகப் 'பெரியவர்' கடைக்குப் போனான். வெயில் கண்ணைக் கூசியது.



''பத்மா! பக்கத்து விட்டுப் பையங்க வந்திருக்காங்க... காப்பி எடுத்து வா!''

''என்னங்க திடீர்னு இத்தனை பாசம், பரிவு?''

''வேற வழி? நம்ம காரை இரண்டு கிலோ மீட்டர் தள்ளிக்கிட்டு வந்திருக் காங்களே.''

- கே. வி

உள்ளம் குற்ற உணர்வால் தத்தளித்தது. டெல்லி போகாவிட்டால் என்ன? இவ ளெல்லாம் என்னைப் பேசுவதுமாதிரி ஆகி விட்டதே! கல்யாணம் ஆன பிறகு ஒரு லெட்டராவது போட்டிருப்பாளா?

பிரபுவின் மனம் கொதித்தது. டெல்லி போகக் கூடாதாம். போறவரு போய்ட் டாரு. எல்லாக் காரியமும் ஆச்சு. இங்க இருந்து என்ன பண்ணுவதாம்? என்ன விளையாடவா போறேன் டெல்லிக்கு.

கடையில் வெளியில் கிடத்தியிருந்த மரபெஞ்சில் உட்கார்ந்து கொண்டான். ஒரு 'லெமன்' சோடா கேட்டு வாங்கிக் கொண்டான். மெதுவாய் உறிஞ்சினான்.

'வயசு முப்பதாகுது. இன்னும் கல்யா ணம் பண்ணிக்கலை. நம்ம வயசுக்காரனுக் கெல்லாம் இப்ப இரண்டு பிள்ளை இருக்கு. ஆபீஸ் விட்டா வீடு. வீடுவிட்டா ஆபீஸ். வீட்டிலோ அம்மாவிற்கும் அப்பா விற்கும் மாடா உழைக்கணும். ஹூம். ஏதோ செலக்ஷன் ஆகியிருக்கு. டெல்லி வரைக்கும் போகலாம், மதிப்பா இருக் கும். ஏசி ரூம், பெரிய ஓட்டல்களில் சாப் பாடு, பெரிய விஷயமெல்லாம் டிரெயி னிங் என்று பார்த்தால்..... கிளம்ப விடாதே நம்ம விதி....

'....ஏன் கிளம்பாமல்? நாமதான் சரோஜா கிட்ட சொல்லிட்டு வந்திட் டோமே! கிளம்பிட வேண்டியதுதான்.'

குளிர்ச்சியான சோடா உள்ளிறங்கி யதும் அயர்ச்சி சிறிது குறைந்த மாதிரி இருந்தது..

'அதுக்காக அப்பா செத்த ஒரே நாள்ல கிளம்புறதா? அம்மாவைத் தவிக்க விட் டுட்டு போகலாமா?' - பிரபு இரு வேறு மனிதர்கள் பேசுவது போல அவனுக்குள் ளேயே கேள்வியும் பதிலுமாய்ச் சிந்தித் தான்.

'என்னதான் கொஞ்ச காலமா தெரிஞ்சு போய் மனசு மெல்ல மெல்ல ஒத்துக்கிட்ட விஷயம்னாலும் அப்பாவை இழந்தது நம்மைப் பாதிக்கலையா? நமக்கு இந்த சமயத்தில் டெல்லிக்கு டிரெயினிங்குக் காகப் போறது குற்றமாகவே தெரிய லையா?'

'கிடைக்காத சந்தர்ப்பம் கிடைச் ருக்கு. விட்டிடணுமா?'

'ஏன்... என் படிப்புக்காகவே அடிக்க மாற்றல் வேண்டாமென்று ஆபீஸராகா லேயே அப்பா கிளார்க்காகவே ரிட்டய ஆகலியா...'

'ஏன்?... எனக்காக மட்டும்தா தியாகம் செய்தார்களா? சக்திக்கு மீறி இடத்தைச் சரோஜாவுக்குப் பார்த்திட் சரோஜாவுடைய பேராசையால விடமுடி யாம அப்பாவுடைய 'பிஎப்' பணம் வீட் மேல கடன், வெளியில கடன்னு ஏகப் பட்டது செலவு பண்ணி அவளைக் கட்டிக் கொடுக்கலையா? அவளுக்கு மட்டும் அப்பா அம்மா தியாகம் பண்ணலையா? அவள் மாயவரத்திலிருந்து கார்லேயே வந்திட்டு உடனே நலுங்காம திரும்பிப் போகணும். நான் எனக்கு ஏகதேசமா வர்ற சந்தர்ப்பங்களையும் விட்டிட்டு அம்மா வோட கிடக்கணும்.'

'கிடக்கறதா...? நான் 'காஷ்' டிப் பார்ட்மெண்டில் வேலை செய்த பொழுது காணாமல் போன ரூபாய் ஒன்பதாயிரத் தையும் ஒரு வாரத்துக்குள் கட்டாவிட்டால் வேலையை விட்டு 'டெர்மினேட்' பண்ணி விடுவதாகக் கம்பெனியிலிருந்து நான்கு வருடம் முன்பு ஆர்டர் வந்த பொழுது, அப்பா தன் முதல் சம்பளத்திலிருந்து அம்மாவுக்கு வாங்கிப் போட்ட நாலு தங்க வளையலையும் பிடிவாதமா விற்றுப் பணம் கட்டக் கொடுத்தாளே அம்மா, அவ ளோடு இருப்பதையா 'கிடக்கணும்'என்னு நினைக்கிறோம்.'

நெஞ்சு கனக்க ஆரம்பித்தது. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது. அவனுள் குழப்பம் குறைந்தமாதிரி இருந்தது. கடை மரபெஞ்சை விட்டு எழுந்தான். வீடு நோக்கி விடு விடுவென்று நடந்தான்.

வாசலில் காரைக் காணோம். சரோஜா கிளம்பிப் போய்விட்டிருந்தாள்.

பிரபு உள்ளே வந்த சத்தம் கேட்டு, பாக்யத்தம்மாள் மெதுவாக நிமிர்ந்து பார்த் தாள். நேற்றிலிருந்து சாப்பிடவில்லை. காப்பி மட்டும்தான். களைத்திருந்தாள். உடலைவிட மனத்தால் அதிகம் சோர்வுற் றிருந்தாள்.

அருகில் போய் அமர்ந்தான் பிரபு. அம்மாவின் தோள்களை இறுகப் பற்றி னான். கண்களில் நீர் கோர்த்துக் கொண்டு தளும்பியது.

''நான் போகலம்மா... நான் போக லம்மா உங்களைத் தனியா விட்டுட்டு இனி எங்கயும்....'' பேச முடியாது அழுகையை அடக்க முயற்சி செய்த பிள்ளையைக் கட்டிக் கொண்டு பாக்யத்தம்மாளும் அழுதாள்.



வேலூர்: சிப்பாய்க் கலகத்தின் முன்னோடி!

வே ல
ரங்கள் நிறைந்
திருந்த காட்டுப்
பகுதியில் உரு
வான ஊர் என்ப
தால் இதற்கு
வேலூர் என்று
பெயர் வழங்கலா
யிற்று. இன்று
மாவட்டத் தலை
நகராக விளங்கும்
வேலூர் 1920-ல்
கூட ஒரு கிராமமா
கத்தான் இருந்தி
ருக்கிறது. ஆமாம்; வேலூரிலுள்ள லாங்கு பஜாரில் 1920-ல் கட்டப்பட்டிருக்கும் மணிகோபுரத்தில், '1914 முதல் 1919 வரை நடைபெற்ற முதல் உலகப் போருக்கு இக் கிராமத்திலிருந்து 277 பேர் சென்றனர். அவர்களில் 14 பேர் தங்கள் உயிரை ஈந்தனர்' என்று பொறிக்கப்பட்டிருப்பதே அதற்குச் சான்று.

அப்போது கிராமம்தான் என்றாலும் வேலூரிலுள்ள கோட்டை மிகவும் பிரசித்தி பெற்றது. தென்னிந்தியக் கோட்டைகளிலேயே மிகச் சிறந்த ராணுவக் கட்டுமானத்தோடு கட்டப்பட்ட கோட்டை இது. 16-ம் நூற்றாண்டில் இதைக் கட்டியவர், விஜயநகரப் பேரரசைச் சேர்ந்த பொம்மி ரெட்டி.

பிற்காலத்தில் கோட்டை கர்நாடக நவாபுகள் வசமான போது, ராபர்ட் கிளைவ் சூழ்ச்சியால் மெல்ல மெல்ல வேலூர்க் கோட்டை ஆங்கிலேயரின் பாசறையாகி விட்டது!

நான்காம் மைசூர்ப் போரில் திப்பு சுல்தான் வீழ்ச்சியுற்ற போது, அவருடைய உறவினர்களைப் பிடித்து வந்து வேலூர்க் கோட்டையில் சிறைவைத்தனர் ஆங்கிலேயர்கள். அவர்கள் சிறைக்குள் சும்மா இருக்கவில்லை! சிப்பாய்க் கலகத்தைத் தூண்டி விட்டனர்! எப்படி?

1806 ஏப்ரல், மே மாதங்களில் வேலூர்க் கோட்டையிலிருந்த சிப்பாய்களுக்குப் புதிய சீருடையை அமல்படுத்தினர் ஆங்கிலேயர். ஆனால் வேலூர்ச் சிப்பாய்களுக்கு அத்னை ஏற்க மனமில்லை என்பதால் அவர்களைக் கடுமையாக நடத்தினர் வெள்ளை அதிகாரிகள். இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, திப்புவின் உறவினர்கள் வேலூர்ச் சிப்பாய்களின் மனத்தில் கிளர்ச்சி விதைகளைத் தூவி விட்டனர்!

அதன் காரணமாக 1806-ம் ஆண்டு ஜூலை 10-ம் தேதி உதயமாகிக் கொண்டிருந்த போது, கோட்டைக்குள்ளிருந்த பல வெள்ளை அதிகாரிகள், சிப்பாய்களால் கொல்லப்பட்டனர். கோட்டை புரட்சியாளர்களின் கைக்கு வந்து விட்டது. ஆயினும் புரட்சியின் நோக்கத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாததால், அல்லது வழிநடத்திச் செல்ல சரியான தலைமை இல்லாததால், இந்தியச் சிப்பாய்கள் புரட்சியை மறந்து விட்டுக் கொள்ளையடிப்பதில் தீவிரம் காட்ட ஆரம்பித்தனர்.

இந்தச் சூழ்நிலையால், வெளியிலிருந்து வந்த ஆங்கிலேயர் படை இந்தியச் சிப்பாய்களைச் சுலபமாகக் கொன்று, புரட்சியை முறியடித்து வேலூர்க் கோட்டையில் தங்களாட்சிக்கு முழுமையாக வித்திட்டனர்.

ஆக, இந்தியாவில் 1857-ல் ஏற்பட்ட சிப்பாய்க் கலகத்தின் முன்னோடி, வேலூரில் நடந்த சிப்பாய்களின் கலகம் தான்!

– சாங்கிருத்தியாயன்

உலகக்

உலகக் கோப்பை அரை இறுதி ஆட்டம்... ஐம்பத்தைந்தே ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தாலும், நியூசிலாண்ட் நம் ஆட்களை ஆட விடாமல் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது. ஸ்ரீகாந்திலிருந்து ஆரம்பித்து ஸ்ரீநாத் வரை ஆடியும் இருபதுக்கு மேல் ரன்கள் அசைந்து கொடுப்பதாக இல்லை. மார்டின் குரோவிடம் மாட்டிக் கொண்டு இந்தியா தவிக்க, இருப்பதோ ஒரு ஓவர். எடுக்க வேண்டியதோ முப்பத்தாறு ஓட்டம்...

இந்த கொடுமையான நிலையில் மைதானத்தில் 'பேட்'டும் கையுமாக, குஷியாகக் குதித்துக் கொண்டு குடியாத்தம் குப்புசாமி (நான்தான் சார்!) நுழைகிறேன். ரசிகர்களின் ஏளனக் கூச்சல், கும்மாளங்கள். எப்படியும் நியூசிலாண்ட் ஜெயிப்பது உறுதி எனத் தீர்மானித்து, படம் முடியுமுன்பே முடிவை ஊகித்து விட்டு, தியேட்டரை விட்டு வெளியேறும் கூட்டம் போல் பலர் வெளியேற ஆரம்பிக்க, தீபக் படேல் வீசிய பந்தை, படேலென விளாசுகிறேன். கண் இமைக்கும் நேரத்தில் காணாமல் போன பந்து, எழுந்து செல்ல யத்தனித்த ஒருவரின் மண்டையைப் பதம் பார்க்க... ஆகா ஸிக்ஸர்!

தீபக் தொடையில் பாலிஷ் ஏற்றப்பட்ட அடுத்த பந்தையும் ஓர் அலட்சிய பாவத்துடன் தூக்குகிறேன். காட்டாறாய்ப் புரண்டு புறப்பட்ட பந்து போன இடம் தெரியவில்லை... அடுத்த ஆறு!

குரோ முகத்தில் ஈ ஆடவில்லை. வியூகத்தை மாற்றுகிறார். கிரேட் பேட்ச், லாதம், ஜோன்ஸ், ஸ்மித் எல்லோரும் என்னைப் பிடுங்கித் தின்னக் காத்திருக்கின்றனர். எல்லோர் முகத்திலும் மூன்றாம் பேஸ்து வழிய, அந்த மூன்றாவது பந்து நான் அடித்த அடியில் எங்கோ ஒரு மூலையில் போய் விழுகிறது. எல்லோரும் விரலை முதலில் மூக்கில் வைத்து, அடுத்தடுத்து நான் அடித்த ஸிக்ஸர்களுக்கு, நெற்றி, தலை என்று கையை வைத்துக் கொண்டே போய், கடைசிப் பந்தில் நான் அடித்த வின்னிங் ஸிக்ஸரில் முடியைப் பிய்த்துக் கொள்கின்றனர்!

நான், ஆறு பந்தில் முப்பத்தாறு அடித்ததில், அரை இறுதி ஆட்டத்தில் இந்தியா அட்டகாசமாக வெற்றிவாகை சூடுகிறது.

இங்கிலாந்துடன் இறுதி ஆட்டம்.

குடியாத்தம் குப்புசாமியான என் மேல் அபாரமான நம்பிக்கையில் ஓபனராக ஆடச் சொல்கிறார் அசார். அதற்குள் ஆஸ்திரேலியாவின் அத்தனை கிரிக்கெட் ரசிகர்களும் 'குப்புசாமி ரசிகர் மன்றம் ஆரம்பிக்காத குறைதான்...' ஸிக்ஸர் கிங் குப்பு', 'குப்பு - சூப்பர்மேன் ஆஃப் தி மேட்ச்', 'World cup says 'Take ME Kuppusamy'!' என்று எல்லாத் திசைகளிலும் பேனர்கள் பிடித்து ரசிகர்கள் குஷிப்படுத்த, நான் யாரையும் சட்டை செய்யாதவன் போல் மட்டையுடன் நிற்கிறேன்.

என்னைப் பார்த்ததில் வெலவெலத்துப் போன கிரஹாம் ஒருவித உதறலோடு வீசிய பந்து, அதே உதறலோடு என் மட்டையில் பட்டுத் தெறிக்க, ஓ...வென்று சுற்றிலும் சப்தம்... அட தெரிந்த கதைதானே,



கோப்பையிலே
ன் குடியிருப்பு!

க்ஸர் விழுந்திருக்கும் என்று அலட்சிய
ாகத் திரும்பியவன், அதிர்ச்சியடைகி
றன். விழுந்திருப்பது ஸிக்ஸர் அல்ல,
ரண்டு ஸ்டம்புகள்! எனக்குச் சாதகமாக
ம்பயர் ஏதாவது சொல்வாரா என அல்ப
ார்வை பார்க்கிறேன். 'ஒழிஞ்சு போ கண்
றைவாய்' என்ற பாவனையில் அம்பயர்
ன்னை நோக்க, புஸ் புஸ் என்று பெரு
ச்சு விட்டபடி பெவிலியனை நோக்கி
கர்கிறேன். . அசார் என்னை அடிக்காத



குறையாக முறைக்கிறார். கபில் முகம் கடுப்பேறுகிறது. என் மேல் இருக்கும் ஆத்திரத்தைப் பந்தின் மேல் எல்லோரும் காட்டியதில் ரன்கள் குவிகின்றன.

இங்கிலாந்துக்காரன் என்ன இளிச்ச வாயனா சொல்லுங்கள். மடமடவென அவர்களுக்கும் ரன்கள் குவிய, ஒரே ஒரு ரன் எடுத்தால் வின் என்கிற நிலைமை. வீழ்த்த வேண்டியதோ ஆறு விக்கட்டுக்கள். விக்கித்துப் போய் வீசிக் கொண்டிருக்கும் ராஜூவிடம் போய்ப் பந்தைப் பறித்துக் கொள்கிறேன். அடுத்த ஓவரை காடு வெட்டி மீசைக்கார முனியையும் (எங்க ஊர் காவல் தெய்வம்) பாக்யம் பக்கிரி பெற்ற சனியையும் (என் தர்மபத்தினி) நினைத்தபடி ஆரம்பிக்கிறேன். ஒரு துளி ரன்தானே என்ற அலட்சியத்தில் ரீவ் நிற்க, என் பந்து அவரை நோக்கிப் பறக்க, அரக்கப் பரக்க அதை அவர் தடுக்கத் தடுமாறியதில் 'கிளீன்-போல்ட்'. 'பாத்தீங்களா பாத்தீங்களா' என்று என் டி-ஷர்ட்டின் தம்மாத்தூண்டு காலரை எடுத்து விட்டுக் கொண்டு நான் நிற்க, சக ஆட்டக்காரர்கள் என்னிடம் வந்து இரு கைகளையும் விரித்துக் கும்மி அடித்து விட்டுப் போகிறார்கள்.

அடுத்தது லூயிஸ்! ஃபாஸ்டா, ஸ்பின்னா, என்னவென்று இனம்காண முடியாத என் பந்தை எதிர்கொண்ட லூயிஸ், எக்குத் தப்பாகத் தூக்க நானே ஓடி வந்து லபக்கென்று கவ்வுகிறேன். விண்ணே அதிர்கிறது - அத்தனை உற்சாகச் சப்தங்கள்... திரும்பவும் எல்லோரும் வந்து கும்மியடிக்கிறார்கள்.

ஸ்மால் வந்து நின்றவுடன் டமால்...!

திரும்பவும் கும்மி!

இல்லிங்வொர்த் வந்து நின்ற போது ஃபீல்டிங் பற்றி யாரும் கவலைப்படாமல் கும்மியடிக்க என்னைச் சுற்றிக் குழுமி விட்டனர். அடித்தும் ஆயிற்று.

அகிலா கார்த்திகேயன்



''தலைவர் ரொம்ப சந்தேகப் பேர் வழியா இருக்காருப்பா....''
''எப்படிச் சொல்றே...?''
''குண்டு துளைக்காத மேடை அமைச்சிருக்கோம்னு சொல்லியும் ஏ. கே. 47 கொண்டு போய் டெஸ்ட் பண்ணுங்கறாரு!''
- எம். ஜே. ஆர்.

பரமபதசோபன ஆட்டத்தில் ஒரே ஒரு தாயம் விழாதா எனத் தத்தளிக்கிற கணக்காய், இங்கிலாந்துக்காரர்களை இழுத்தடித்துக் கொண்டிருந்தேன்.

செமை உதறலுடன் டிஃப்ரெட்டஸ் கடைசி ஆளாக வந்து நிற்கிறார். ஆனாலும் விக்கட் கீப்பர் கிரன்மொரேவுக்கு இப்படி ஓர் அலட்சியம் ஆகாது. பின்னே என்ன கையுறைகளைக் கழற்றி எறிந்து விட்டு, விக்கெட்டைக் காக்காமல் அவருமா கும்மியடிக்க என்னிடம் வந்து நின்று கொள்ள வேண்டும்? இந்த சூப்பர் அலட்சியத்தில் டிஃப்ரெட்டஸ் சுருண்டிருக்க வேண்டும்... அதனால்தானோ என்னவோ என் பந்து பாதி தூரத்தில் பறக்கும்போதே பீதியடைந்தவராய் ஒரே ஓட்டம் எடுத்து விடுகிறார், பெவிலியனை நோக்கித்தான்!

ஆக... உலகக் கோப்பை இந்தியாவின் கையில்... என் கையில் இந்தியா!

சீக்ரெட் ஆப் மை எனர்ஜி எது என்று புரியாத ஜனத்திரள், மைதானத்தில் மொய்க்க, நான் சிக்கிக் கொண்டு தவிக்கையில், யாரோ இங்கிலாந்து அனுதாபி என் மண்டையில் ஏதாலோ தாக்க, ''ஆ ஐயோ.. மண்டை, மண்டை போச்சு'' என்று அலறியபடி திடுக்கிட்டு எழுகிறேன்.

சேரில் உட்கார்ந்தபடி டீ.வி. பார்த்துக் கொண்டே கண் அயர்ந்து விட்ட என்னை நிஜமாகவே தாக்கி விட்டுக் கீழே விழுந்திருந்த அந்த வஸ்துவைப் பார்க்கிறேன். கரண்டி! 'போலர்' பூமா அடுப்படியிலிருந்து கத்துவது காதில் விழுகிறது.

''ராத்திரி பன்னிரண்டு மணி, விடிகார்த்தால மூணு மணின்னு என்ன எழவு கிரிக்கெட்டோ தெரியலே எப்பப் பார்த்தாலும்... இதிலே பித்தம் தலைக்கேறி தூக்கத்திலே பெனாத்தல் வேறயா...! சகிக்கலை...! எழுந்து பல்லைத் தேய்ச்சிட்டுப் போய், பாலை வாங்கிட்டு வர்ற வழியைப் பாருங்க.''

அடிப்பாவி! இந்தியனைக் கனவு காணக் கூட விட மாட்டேன் என்கிறாயே!